ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சங்கர ராமாநுஜ நீலகண்ட பாஷ்யங்களை

அநுசரித்த பதவுரை கூடிய

ப்ரஹ்மஸூத்ர

த்ராவிடபாஷ்யம்.

இது,

தர்க்கதீர்த்தரான வித்வான்

ஸ்ரீமாந், உ-வே, சிங்கப்பெருமாள்கோவில்

மாடபூசி-ராமாநுஜாசார்ய ஸ்வாமிகளால்

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

மேல்படியாராலும்,

அத்வைதப்ரவீணரான

வித்வன் - ஸீதாராமஶாஸ்த்ரியாராலும்

பரிசோதிக்கப்பட்டு,

அனந்தாசாரியரால்

சென்னை :

சாஸ்த்ர சஞ்சீவிநி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1905ஸு.

இதன் விலை ரூபா - 3.

புஸ்தகம் கிடைத்தபடியால் அதைக்கடையில் அச்சுப்போட்டு பயிண்டுசெய்து யிருக்கிறது.

புஸ்தகம் வேண்டுமேவர்கள் அ. அனந்தாசாரியர், நெ 18, வேங்கிடராயர் தெருவு, பயிராகிமடம் பக்கத்தில் சென்னை: (மதராஸ்) என்று எழுதி வி. பி. மூலமாய் வாங்கிக்கொள்ளலாம். (தபால்சார்ஜு ப்ரத்தியேகம்.)

4. அணுவுக்குக் குறைந்த வி. பி. கிடையாது.

	ரூபா.	அணா
தசாவதாரப்ரபாவம் பத்து அவதாரம் எடுத்த ஸ்ரீமந்நாராயணனுடைய ஒவ்வொரு அவதார விஷயத்தைப்பற்றி விவரமாய் ஸம்ஸ்க்ருத்திலிருந்து தமிழில் வசனமாக அச்சிடப்பட்டது.	க	0
வ்யாஸர்செய்த ப்ரஹ்ம ஸூத்ரம் (அதாவது வேதாந்த ஸூத்ரம். கிரந்த எழுத்திலும், தமிழ் எழுத்திலும், ஸூத்ரம். இதற்கு அவ்வவபாஷ்யங்களை அனுசரித்த ப்ரதிபதத்துடன் சங்கர ராமாநுஜ நீலகண்ட பாஷ்யத்தை ஸம்ஸ்கிருதத்திலிருந்து அனைவர்க்கு மெளிதில் தெரியும்படி தமிழில் வசனமாக மொழிபெயர்க்கப்பட்ட வேதாந்த சாஸ்த்ரம்.	௩	0
பராசரஸ்ம்ருதி இதில் ஶ்லோகங்களை கிரந்தத்திலும் தமிழிலும் அச்சிட்டிருக்கிறது. இதின் பொருளை பலருமறியும்படி தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டது. இதில் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர், முதலானவர்களுக்கு ஆசாரம், ப்ராயச்சித்தம், ஸூதகம் முதலானவைகளை சொல்லப்பட்டு இருக்கிறது.	க	உ
தசோபநிஷத், கிரந்தத்தில் ஶ்ருதி, சங்கர, ராமாநுஜ, மத்வபாஷ்யங்களை ப்ரதிபதத்துடன் தமிழில் மொழிபெயர்ப்பு நல்லகாகிதம்.	௬	0
யஜுர், ஸாம, ருக், ஸந்த்யாவந்தநம் கிரந்தத்தில் மூலம் புருஷ ஸூக்தம் ஸ்ரீஸூக்தம், பூஸூக்தம், நீளாஸூக்தம், நாராயணஸூக்தம். சங்கர, ராமாநுஜ, மத்வ, பாஷ்யங்களை ப்ரதிபதத்துடன் தாத்பர்யமும் ௩-வேதத்தாரும் செய்யவேண்டிய தர்ப்பணங்கள், திருவாராதனம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ப்ரஹ்மயஞ்யம் முதலானது.	க	ச
பகவத்கீதை கிரந்தசுலோகம் தமிழ்சுலோகம் தமிழ் அர்த்தம்.	0	கஉ
பகவத்கீதை கிரந்தசுலோகம் தமிழ்சுலோகம் ப்ரதிபதத்துடன் சங்கர ராமாநுஜ மத்வபாஷ்யத்தை தமிழ் மொழிபெயர்ப்பு.	க	ச
கல்கிபுராணம், (தசாவதாரத்தில் கடைசி அவதாரம்) ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழ் வசனமாய் கலியுக விசித்திரத்தையும் அக்ரமத்தையும் மநுஷ்ய ம்ருகம் முதலான ஜந்துக்கள் வயிற்றில் விசித்திரமானஸ்ருஷ்டியும் இன்னும் அநேகமான அக்ரமத்தைசொல்லுகிறது.	0	கஉ
தைத்திரீய உபநிஷத், கிரந்தத்தில்மூலம் ப்ரதிபதம் சங்கர ராமாநுஜ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு.	க	அ
ஸஹஸ்ரநாமபாஷ்யம் ப்ரதிபதத்துடன் தமிழ்மொழிபெயர்ப்பு.	க	அ
அஷ்டாதச ரகஸ்யம்.	க	ச
நித்தியாநுஸந்தானம் படத்துடன்	0	அ
ஷை மட்டபயிண்டு.	0	௬
திருமாலை ப்ரதிபதவ்யாக்கியானத்துடன்.	0	கஉ
திருவாய்மொழி ப்ரதிபதம்	உ	அ
நாலாயிர ப்ரபந்தம் திக்கு.	உ	0
ஷை மட்டம் தின்.	க	அ
சுந்தரகாண்டம் கிரந்த சுலோகம் ப்ரதிசுலோகத்துக்கு தமிழ் அர்த்தம்.	க	அ
தென்கலை குருபரம்பராப்ரபாவம் (ஆழ்வார் ஆசாரியர் சரித்திரம்)	க	0
பகவத்கீதை தமிழ் வசனம்.	க	ச
க0அ. உபநிஷத் கிரந்தலிபி மூலம்.	ச	0,
ஶிவாநந்தலஹரி ப்ரதிபதத்துடன் தாத்பர்யமும்.	0	அ

ஹிந்துமதத்திற்கு வேண்டிய புத்தகம் கிரந்த எழுத்திலும், தமிழ் எழுத்திலும் புராணம், ஸ்ம்ருதி, இதிஹாஸம், பலவிதமான புஸ்தகம் விலைக்கு அகப்படும்.

ப்ரஹ்மஸூத்ரம்

க்ரந்த எழுத்து தெரியாதவர்களுக்கு

தமிழ் எழுத்தில் ஸூத்ரம் அச்சிடப்பட்டது.

முதல்அத்தியாயம்.

முதல்பாதம்.

௧ அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா
௨ ஜந்மாத்யஸ்யயத:
௩ ஶாஸ்த்ரயோநித்வாத்
௪ தத்துஸமந்வயாத்
௫ ஈக்ஷதேர்நாஶப்தம்
௬ கௌணஶ்சேந்நாத்மஶப்தாத்
௭ தந்நிஷ்டஸ்யமோக்ஷோபதேஶாத்
௮ ஹேயத்வாவசநாச்ச
௯ ப்ரதிஜ்ஞாவிரோதாத்
௧0 ஸ்வாப்யயாத்
௧௧ கதிஸாமாந்யாத்
௧௨ ஶ்ருதத்வாச்ச
௧௩ ஆநந்தமயோப்யாஸாத்
௧௪ விகாரஶப்தாந்நேதி சேந்நப்ராசுர்யாத்
௧௫ தத்தேது வ்யபதேஶாச்ச
௧௬ மாந்த்ரவர்ணிகமேவசகீயதே
௧௭ நேதரோநுபபத்தே:
௧௮ பேதவ்யபதேஶாச்ச
௧௯ காமாச்சநாநுமாநாபேக்ஷா
௨0 அஸ்மிந்நஸ்யசதத்யோகம்ஶாஸ்தி
௨௧ அந்தஸ்தத்தர்மோபதேஶாத்
௨௨ பேதவ்யபதேஶாச்சாந்ய:
௨௩ ஆகாஶஸ்தல்லிங்காத்
௨௪ அத ஏவப்ராண:
௨௫ ஜ்யோதிஶ்சரணாபி தாநாத்
௨௬ சந்தோபிதாநாந்நேதிசேந்நததாசேதோர்பணநிகமாத்ததாஹிதர்ஶநம்
௨௭ பூதாதிபாதவ்யபதேஶோபபத்தேஶ்சைவம்
௨௮ உபதேஶபேதாந்நேதிசேந்நோபயஸ்மிந்நப்யவிரோதாத்
௨௯ ப்ராணஸ்ததாநுகமாத்
௩0 நவக்துராத்மோபதேஶாதிதிசேதத்யாத்ம ஸம்பந்த பூமாஹ்யஸ்மிந்
௩௧ ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத்
௩௨ ஜீவமுக்யப்ராணலிங்காந்நேதி சேந்நோபாஸாத்ரைவித்யாதாஶ்ரிதத்வாதிஹதத்யோகாத்

முதல் அத்தியாயம்.

இரண்டாவது பாதம்.

௩௩ ஸர்வத்ரப்ரஸித்தோபதேஶாத்
௩௪ விவக்ஷிதகுணோபபத்தேஶ்ச
௩௫ அநுபபத்தேஸ்து நஶாரீர:
௩௬ கர்ம கர்த்ரு வ்பதேஶாச்ச
௩௭ ஶப்த விசேஷாத்
௩௮ ஸ்ம்ருதேஶ்ச
௩௯ அர்பகௌகஸ்த்வாத்தத்வ்யபதேஶாச்சநேதிசேந்ந நிசாய்யத்வாதேவம்வ்யோமவச்ச
௪0 ஸம்போகப்ராப்திரிதிசேந்நவைஶேஷ்யாத்
௪௧ அத்தாசராசரக்ரஹணாத்
௪௨ ப்ரகரணாச்ச
௪௩ குஹாம்ப்ரவிஷ்டா வாத்மா நௌஹிதத்தர்ஶநாத்
௪௪ விசேஷணாச்ச
௪௫ அந்தர உபபத்தே:
௪௬ ஸ்தாநாதிவ்யபதேஶாச்ச
௪௭ ஸுகவிஶிஷ்டாபிதாநாதேவச
௪௮ அதஏவச ஸப்ரஹ்ம
௪௯ ஶ்ருதோபநிஷத்ககத்யபிதாநாச்ச
௫0 அநவஸ்த்திதேரஸம்பவாச்சநேதர:
௫௧ அந்தர்யாம்யதிவைதவாதிலோகாதிஷு தத்தர்மவ்யபதேஶாத்
௫௨ நசஸ்மார்த மதத்தர்மாபிலாபாச்சாரீரச்ச
௫௩ உபயேபிஹிபேதேநைநமதீயதே
௫௪ அத்ருஶ்யத்வாதிகுணகோதர்மோக்தே:
௫௫ விசேஷணபேதவ்யபதேஶாப்யாஞ்சநேதரௌ
௫௬ ரூபோபந்யாஸாச்ச
௫௭ வைஶ்வாநரஸ்ஸாதாரணஶப்தவிஶேஷாத்
௫௮ ஸ்மர்யமாணமநுமாநம்ஸ்யாதிதி
௫௯ ஶப்தாதிப்யோந்த:ப்ரதிஷ்டாநாச்சநேதிசேந்நததாத்ருஷ்ட்யுபதேஶாதஸம்பவாத்புருஷமபிசைநமதீயதே.
௬0 அதஏவநதேவதாபூதஞ்ச
௬௧ ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:

௬௨ அபிவ்யக்தேரித்யாஶ்மரத்ய: [ஶயதி

௬௩ அநுஸ்ம்ருதேர்பாதரி:

௬௪ ஸம்பத்தேரிதிஜைமிநி ஸ்ததாஹிதர்

௬௫ ஆமநந்திசைநமஸ்மிந்

முதல் அத்தியாயம்.

மூன்றாவது பாதம்.

௬௬ த்யுப்வாத்யாயதநம் ஸ்வஶப்தாத்

௬௭ முக்தோபஸ்ருப்யவ்யபதேசாச்ச(ச

௬௮ நாநுமாநமதச்சப்தாத்ப்ராணப்ருச்

௬௯ பேதவ்யபதேஶாச்ச

௭0 ப்ரகரணாத்

௭௧ ஸ்தித்யதநாப்யாஞ்ச

௭௨ பூமாஸம்ப்ரஸாதாதத்யுபதேஶாத்

௭௩ தர்மோபபத்தேஶ்ச

௭௪ அக்ஷரமம்பராந்தத்ருதே:

௭௫ ஸாசப்ரஶாஸநாத்

௭௬ அந்யபாவவ்யாவ்ருத்தேச்ச

௭௭ ஈக்ஷதிகர்மவ்யபதேஶாத்ஸ:

௭௮ தஹர உத்தரேப்ய: [லிங்கஞ்ச

௭௯ கதிஶப்தாப்யாம் ததாஹித்ருஷ்டம்

௮0 த்ருதேச்சமஹிம்நோஸ்யாஸ்மிந்நுப
லப்தே:

௮௧ ப்ரஸித்தேச்ச [ஸம்பவாத்

௮௨ இதரபராமர்ஶாத்ஸ இதிசேந்நா

௮௩ உத்தராச்சேதாவிர்பூதஸ்வரூபஸ்து

௮௪ அந்யார்தச்சபராமர்ச:

௮௫ அல்பஶ்ருதேரிதிசேத்ததுக்தம்

௮௬ அநுக்ருதேஸ்தஸ்யச

௮௭ அபிஸ்மர்யதே

௮௮ ஶப்தாதேவப்ரமித: [ரத்வாத்

௮௯ ஹ்ருத்யபேக்ஷயாது மநுஷ்யாதிகா

௯0 ததுபர்யபிபாதராயணஸ்ஸம்பவாத்

௯௧ விரோத:கர்மணீதிசேந்நாநேகப்ரதி
பத்தேர்தர்ஶநாத்

௯௨ ஶப்த இதிசேந்நாத:ப்ரபவாத்ப்ரத்
யக்ஷாநுமாநாப்யாம்

௯௩ அதஏவ சநித்யத்வம்

௯௪ ஸமாநநாமரூபத்வாச்சாவ்ருத்தாவப்
யவிரோதோதர்சநாத்ஸ்ம்ருதேச்ச

௯௫ மத்வாதிஷ்வ ஸம்பவாத் நதிகாரம்
ஜைமிநி:

௯௬ ஜ்யோதிஷிபாவாச்ச

௯௭ பாவந்துபாதாராயணோஸ்திஹி

௯௮ ஶுகஸ்யததநாதர ச்ரவணாத்தா
த்ரவணாத்ஸூச்யதேஹி

௯௯ க்ஷத்ரியத்வகதேச்ச

௧00 உத்தரத்ரசைத்ரரதேநலிங்காத்

௧0௧ ஸம்ஸ்காரபராமர்ஶாத்த தபாவா
பிலாபாச்ச

௧0௨ ததபாவநிர்தாரணேசப்ரவ்ருத்தே:

௧0௩ ச்ரவணாத்யயநார்தப்ரதிஷேதாத்

௧0௪ ஸ்ம்ருதேச்ச

௧0௫ கம்பநாத்

௧0௬ ஜ்யோதிர்தர்சநாத்ச

௧0௭ ஆகாசோர்தாந்தரத்யாதிவ்யபதே
சாத் (தேந

௧0௮ ஸுஷுப்த்யுத்க்ராந்த்யோர்பே

௧0௯ பத்யாதிஶப்தேப்ய:

முதல் அத்தியாயம்.

நாலாவதுபாதம்.

௧௧0 ஆநுமாநிகமப்யேகேஷாமிதி சேந்
ந ஶரீர ரூபக விந்யஸ்த க்ருஹீ
தேர்தர்ஶயதிச

௧௧௧ ஸூக்ஷ்மந்துதர்ஹத்வாத

௧௧௨ ததீநத்வார்தவ

௧௧௩ ஜ்ஞேயத்வாவசநாச்ச ணாத

௧௧௪ வததீதிசேந்நப்ராஜ்ஞோஹிப்ரகர

௧௧௫ த்ரயாணாமேவசைவமுபந்யாஸ:ப்ர

௧௧௬ மஹத்வச்ச (ஶ்நச்ச

௧௧௭ சமஸவதவிசேஷாத

௧௧௮ ஜ்யோதிருபக்ரமாது ததாஹ்யதீய
தஏகே [விரோத:

௧௧௯ கல்பநோபதேஶாச்ச மத்வாதிவத

௧௨0 நஸஞ்க்யோபஸங்க்ரஹாதபிநாநா
பாவாதவிசேஷாச்ச

௧௨௧ ப்ராணாதயோவாக்யஶேஷாத்

௧௨௨ ஜ்யோதிஷைகேஷாமஸத்யந்நே

௧௨௩ காரணத்வேநசாகாஶாதிஷு ய
தாவ்யபதிஷ்டோக்தே:

௧௨௪ ஸமாகர்ஷாத்

௧௨௫ ஜகத்வாசித்வாத்

௧௨௬ ஜீவமுக்ய ப்ராணலிங்காந்நேதிசே
த்தத் வ்யாக்யாதம்

௧௨௭ அந்யார்தந்து ஜைமிநி:ப்ரச்நவ்யாக்
யாநாப்யாமபிசைவமேகே

௧௨௮ வாக்யாந்வயாத்

௧௨௯ ப்ரதிஜ்ஞாஸித்தேரித்யாச்மரத்ய:

௧௩0 உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாதித்
தௌடுலோமி:

௧௩௧ அவஸ்திதேரிதிகாஶக்ருத்ஸ்ந:

௧௩௨ ப்ராக்ருதிச்சப்ரதிஜ்ஞாத்ருஷ்டா
ந்தாநுபரோதாத்

௧௩௩ அபித்யோபதேசாச்ச.

௧௩௪ ஸாக்ஷாச்சோபயாம்நாநாத்

௧௩௫ ஆத்மக்ருதே:

௧௩௬ பரிணாமாத்

௧௩௭ யோநிஶ்சஹிகீயதே (யாதா:

௧௩௮ ஏதேநஸர்வேவ்யாக்யாதா:வ்யாக்

இரண்டாவது அத்தியாயம்.

முதல்பாதம்.

௧௩௯ ஸ்ம்ருத்யநவகாசதோஷப்ரஸங்க
இதிசேந்நாந்யஸ்ம்ருத்ய நவகாச
தோஷப்ரஸங்காத்

௧௪0 இதரேஷாம்சாநுபலப்தே:

௧௪௧ ஏதேநயோக:ப்ரத்யுக்த:

௧௪௨ நவிலக்ஷணத்வாதஸ்ய ததாத்வம்ச
சப்தாத் [illegible]நு கதிப்யாம்

௧௪௩ அபிமாநிவ்யபதேசஸ்து விசேஷா

கசச த்ருச்யதேது (வாத்
கசரு அஸதிதிசேந்நப்திஷேதமாத்ரத்
கசசு அபிதௌதத்வப்ரஸங்காதஸமஞ்
கசஎ நீதுத்ருஷ்டாந்தபாவாத் (ஜஸம்
கசஅ ஸ்வபக்ஷதோஷாச்ச
கசகூ தர்காப்ரதிஷ்டாநாதபி
கருO அந்யதாநுமேயமிதிசேதேவமப்ய
நிர்மோக்ஷப்ரஸங்க: (யாதா:
கருக ஏதேநசிஷ்டபரிக்ரஹா அபிவ்யாக்
கருஉ போக்த்ராபத்தேரவிபாகச்சேத்
ஸ்யால்லோகவத்
கருந ததநந்யத்வமாரம்பணசப்தாதிப்ய:
கருச பாவேசோபலப்தே:
கருரு ஸத்வாச்சாபரஸ்ய
கருசு அஸத்வயபதேசாந்நேதி சேந்நதர்
மாந்தரேண வாக்யசேஷாத்யுக்
தேச்சப்தாந்தராச்ச
கருஎ படவச்ச
கருஅ யதாசப்ராணா:
கருகூ இதரவ்யபதேசாத்திதாகரணாதி
தோஷப்ரஸக்தி:
கசுO அதிகந்துபேதநிர்தேசாத்
கசுக அச்மாதிவச்சததநுபபத்தி:
கசுஉ உபஸம்ஹார தர்சநாந்நேதிசேந்
நக்ஷீரவத்தி
கசுந தேவாதி வதபிலோகே
கசுச க்ருத்ஸ்நப்ரஸக்திர்நிரவயவத்வச
ப்தகோபோவா
கசுரு ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்
கசுசு ஆத்மநிசைவம் விசித்ராச்சஹி
கசுஎ ஸ்வபக்ஷதோஷாச்ச
கசுஅ ஸர்வோபேதாசதத்தர்சநாத்
கசுகூ விகரணத்வாந்நேதி சேத்ததுக்தம்
கஎO நப்ரயோஜநவத்வாத்
கஎக லோகவத்து லீலாகைவல்யம்
கஎஉ வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸா
பேக்ஷத்வாத்ததாஹிதர்சயதி
கஎந நகர்மாவிபாகாதிதி சேந்நாநாதித்
வாதுபபத்யதேசாப்யுபலப்யதேச
கஎச ஸர்வதர்மோபபத்தேச்ச

இண்டாவது அத்தியாயம்.

2 - வது பாதம்.

கஎரு ரசநாநுபபத்தேச்ச நாநுமாநம்ப்
ரவ்ருத்தேச்ச
கஎசு பயோம்புவச்சேத்தத்ராபி
கஎஎ வ்யதிரேகாநவஸ்திதேச்சாநபே
க்ஷத்வாத்
கஎஅ அந்யத்ராபாவாச்சநத்ருணாதிவத்
கஎகூ புருஷாச்மவதிதி சேத்ததாபி
கஅO அங்கித்வாநுபபத்தேச்ச
கஅக அந்யதாநு மிதௌ சஜ்ஞசக்திவி
யோகாத்
கஅஉ அப்யுபகமேப்யர்தாபாவாத்
கஅந விப்ரதிஷேதாச்சாஸமஞ்ஜஸம்
கஅச மஹத்தீர்கவத்வாஹ்ரஸ்வபரிமண்
டலாப்யாம்
கஅரு உபயதாபி நகர்மாதஸ்ததபாவ:
கஅசு ஸமவாயாப்யுபகமாச்ச ஸாம்யாத
நவஸ்திதே:
கஅஎ நித்யமேவச பாவாத்
கஅஅ ரூபாதிமத்வாச்ச விபர்யயோதர்
சநாத்
கஅகூ உபயதாசதோஷாத்
ககூO அபரிக்ரஹாச்சாத்யந்தமந பேக்ஷா
ககூக ஸமுதாய உபயஹேதுகேபி ததப்
ராப்தி:
ககூஉ இதரேதர ப்ரத்யயத்வாதுபபந்நமி
திசேந்ந ஸங்காத பாவாநிமித்த
த்வாத் (த்
ககூந உத்தரோத்பாதேச பூர்வநிரோதா
ககூச அஸதிப்ரதிஜ்ஞோபரோதோயௌ
கபத்யமந்யதா
ககூரு ப்ரதிஸங்க்யாப்ரதிஸங்க்யாநிரோ
தாப்ராப்திரவிச்சேதாத்
ககூசு உபயதாபிதோஷாத்
ககூஎ ஆகாசேசாவிசேஷாத்
ககூஅ அநுஸ்ம்ருதேச்ச
ககூகூ நாஸதோத்ருஷ்டத்வாத்
உOO உதாஸீநாநாமபிசைவம்ஸித்தி:
உOக நாபாவஉபலப்தே:
உOஉ வைதர்ம்யாச்சநஸ்வப்நாதிவத்
உOந நபாவோநுபலப்தே:
உOச ஸர்வதாநுபபத்தேச்ச
உOரு நைகஸ்மிந்நஸம்பவாத்
உOசு ஏவம்சாத்மா கார்த்ஸ்ந்யம்
உOஎ நசபர்யாயாதப்ய விரோதோவிகா
ராதிப்ய:
உOஅ அந்த்யாவஸ்திதேச்சோபயநித்யத்
வாதவிசேஷ:
உOகூ பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்
உகO அதிஷ்டாநாநுபபத்தேச்ச
உகக கரணவச்சேந்நபோகாதிப்ய:
உகஉ அந்தவத்வமஸர்வஜ்ஞதாவா
உகந உத்பத்யஸம்பவாத்
உகச நசகர்து:கரணம் [த:
உகரு விஜ்ஞாநாதிபாவேவாததப்ரதிஷே
உகசு விப்ரதிஷேதாச்ச

இரண்டாவது அத்தியாயம்.

மூன்றாவது பாதம்.

உகஎ நவியதச்ருதே:
உகஅ அஸ்திது
உககூ கௌண்யஸம்பவாச்சப்தாச்ச
உஉO ஸ்யாச்சைகஸ்யப்ரஹ்மசப்தவத்
உஉக ப்ரதிஜ்ஞாஹாநிரவ்யதிரேகாத்
உஉஉ சப்தேப்ய: [கவத்
உஉந யாவத்விகாரம்து விபாகோலோ
உஉச ஏதேநமாதரிச்வாவ்யாக்யாத:
உஉரு அஸம்பவஸ்துஸதோநுபபத்தே:

௨௨௬ தேஜோதஸ்தாஹ்யாஹ
௨௨௭ ஆப:
௨௨௮ ப்ருதிவீ
௨௨௯ அதிகாரரூபசப்தாந்தரேப்ய: [ஸ:
௨௩௦ ததபித்யாநாதேவது தல்லிங்காத்
௨௩௧ விபர்யயேண து க்ரமோத உபபத்யதேச
௨௩௨ அந்தராவிஜ்ஞாநமநஸீக்ரமேண தல்லிங்காதிதிசேந்நாவிசேஷாத்
௨௩௩ சராசரவ்யபாச்ரயஸ்துஸ்யாத்தத்வ்யபதேசோ அபாக்தஸ்தத்பாவபாவித்வாத் [ய:
௨௩௪ நாத்மாச்ருதேர்நித்யத்வாச்சதாப்
௨௩௫ ஜ்ஞோத ஏவ
௨௩௬ உத்க்ராந்திகத்யா கதிநாம்
௨௩௭ ஸ்வாத்மநாசோத்தரயோ:
௨௩௮ நாணுரதச்ருதேரிதிசேந்நேதராதிகாராத்
௨௩௯ ஸ்வசப்தோந்மாநாப்யாம்ச
௨௪௦ அவிரோதச்சந்தநவத்
௨௪௧ அவஸ்திதிவைசேஷ்யாதிதிசேந்நாப்யுபகமாத்த்ருதிஹி
௨௪௨ குணாத்வாலோகவத் [யதி
௨௪௩ வ்யதிரேகோகந்தவத்ததாஹிதர்ச
௨௪௪ ப்ருதகுபதேசாத்
௨௪௫ தத்குணஸாரத்வாத்தத்வ்யபதேச: ப்ராஜ்ஞவத்
௨௪௬ யாவதாத்மபாவித்வாச் சநதோஷஸ்தத்தர்சநாத்
௨௪௭ பும்ஸத்வாதிவத்தஸ்யஸதோபிவ்யக்தியோகாத்
௨௪௮ நித்யோபலப்த்யநுபலப்திப்ரஸங்கோந்யதரநியமோவாந்யதா
௨௪௯ கர்தாசாஸ்த்ரார்தவத்வாத்
௨௫௦ உபாதாநாத்விஹாரோபதேசாச்ச
௨௫௧ வ்யபதேசாச்சக்ரியாயாம்ந ?சந்நிர்தேசவிபர்யய:
௨௫௨ உபலப்திவதநியம:
௨௫௩ சக்திவிபர்யயாத்
௨௫௪ ஸமாத்யபாவாச்ச
௨௫௫ யதாசதக்ஷோபயதா
௨௫௬ பராத்துதச்ச்ருதே:
௨௫௭ க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்துவிஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய:
௨௫௮ அம்சோநாநாவ்யபதேசாதந்யதா சாபிதாசகிதவாதித்வமதீயதஏகே
௨௫௯ மந்த்ரவர்ணாத்
௨௬௦ அபிஸ்மர்யதே
௨௬௧ ப்ரகாசாதிவத்துநைவம்பர:
௨௬௨ ஸ்மரந்திச
௨௬௩ அநுஜ்ஞா பரிஹாரௌ தேஹஸம்பந்தாத்ஜ்யோதிராதிவத்
௨௬௪ அஸந்ததேச்சாவ்யதிகர:
௨௬௫ ஆபாஸஏவச
௨௬௬ அத்ருஷ்டாநியமாத்
௨௬௭ அபிஸந்த்யாதிஷ்வபிசைவம் (வாத்
௨௬௮ ப்ரதேசபேதாதிதி சேந்நாந்தர்பா

இரண்டாவது அத்தியாயம்.

நான்காவது பாதம்.

௨௬௯ ததாப்ராணா: [ருதேச்ச
௨௭௦ கௌண்ய ஸம்பவாத் தத்ப்ராக்ச்
௨௭௧ தத்பூர்வகத்வாத்வாச:
௨௭௨ ஸப்தகதேர்விசேஷித த்வாச்ச
௨௭௩ ஹஸ்தாதயஸ்துஸ்திதேதோநைவ
௨௭௪ அணவச்ச (ம்
௨௭௫ ச்ரேஷ்டச்ச
௨௭௬ நவாயுக்ரியேப்ருதகுபதேசாத்
௨௭௭ சக்ஷுராதிவத்துதத்ஸஹசிஷ்ட்யாதிப்ய:
௨௭௮ அகரணத்வாச்சந தோஷஸ்ததாஹிதர்சயதி [யதே
௨௭௯ பஞ்சவ்ருத்திர்மநோவத்வ்யபதிச்
௨௮௦ அணுச்ச
௨௮௧ ஜ்யோதிராத்யதிஷ்டாநம்துததாமநநாத்ப்ராணவதாசப்தாத்
௨௮௨ தஸ்யசநித்யத்வாத்
௨௮௩ தஇந்த்ரியாணிதத்வ்யபதேசாதந்யத்ரச்ரேஷ்டாத்
௨௮௪ பேதச்ருதேர்வைலக்ஷண்யாச்ச
௨௮௫ ஸம்ஜ்ஞாமூர்திக்லிப்திஸ்துத்ரிவ்ருத்குர்வதஉபதேசாத்
௨௮௬ மாம்ஸாதி பௌமம்யதாசப்தமிதரயோச்ச (து:
௨௮௭ வைசேஷ்யாத்துதத்வாதஸ்தத்வா

மூன்றாவது அத்தியாயம்.

முதல்பாதம்.

௨௮௮ ததந்தரப்ரதிபத்தௌரம்ஹதிஸம்பரிஷ்வக்த: ப்ரச்நநிரூபணாப்யாம்
௨௮௯ த்ர்யாத்மகத்வாத்துபூயஸ்த்வாத்
௨௯௦ ப்ராணகதேச்ச
௨௯௧ அக்ந்யாதிகதிச்ருதேரிதிசேந்நாபாக்தத்வாத்
௨௯௨ ப்ரதமேச்ரவணாதிதிசேந்நதா ஏவஹ்யுபபத்தே:
௨௯௩ அச்ருதத்வாதிதி சேந்நேஷ்டாதிகாரிணாம்ப்ரதீதே:
௨௯௪ பாக்தம்வாநாத்ம வித்வாத்ததாஹிதர்சயதி
௨௯௫ க்ருதாத்யயேநுசயவாந்த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம்யதேதமநேவம்ச
௨௯௬ சரணாதிதிசேந்நததுபலக்ஷணார்தேதிகார்ஷ்ணாஜிநி: [த்
௨௯௭ ஆநர்தக்யமிதிசேந்நததபேக்ஷத்வா
௨௯௮ ஸுக்ருததுஷ்க்ருத ஏவேதிதுபாதரி:
௨௯௯ அநிஷ்டாதிகாரிணாமபிசச்ருதம்
௩௦௦ ஸம்யமநேத்வநுபூயேதரேஷாமாரோஹாவரோஹௌதத்கதிதர்சநாத்

ஹ்யர்யே
௩௮௨ சந்தத உபயாவிரோதாத்
௩௮௩ கதேரர்தவத்வமுபயதாந்யதாஹி விரோத:
௩௮௪ உபபந்நஸ்தல்லக்ஷணர் தோபலப் தேர்லோகவத் [காணும்
௩௮௫ யாவததிகாரமவ ஸ்திதிராதிகாரி
௩௮௬ அநியமஸ்ஸர்வேஷாமவிரோதச்ச ப்தாநுமாநாப்யாம்
௩௮௭ அக்ஷரதியாம்த்வவரோதஸ்ஸாமா ந்யதத்பாவாப்யாமௌபஸதவ த்ததுக்தம்
௩௮௮ இயதாமநநாத்
௩௮௯ அந்தராபூதக்ராமவத்ஸ்வாத்மநோ ந்யதாபேதாநுபபத்திரிதிசேந்நோ பமேசவத் (த்
௩௯0 வ்யதிஹாரோவிசிம்ஷந்தி ஹீதரவ
௩௯௧ ஸைவஹிஸத்யாதய: [ய:
௩௯௨ காமாதிதரத்ரதத்ரசாயதநாதிப்ய:
௩௯௩ ஆதராதலோப:
௩௯௪ உபஸ்திதேதஸ்தத்வசநாத்
௩௯௫ தந்நிர்தாரண நியமஸ்தத்த்ருஷ் டே:ப்ருதக்க்யப்ரதிபந்த:பலம்
௩௯௬ ப்ரதாநவதேவததுக்தம் [பி
௩௯௭ லிங்கபூயஸ்த்வாத்தத்திபலீயஸ்தத
௩௯௮ பூர்வவிகல்ப: ப்ரகரணத்ஸ்யாத்க் ரியாமாநஸவத்
௩௯௯ அதிதேசாச்ச
௪00 வித்யைவது நிர்தாரணத்தர்சநாச்ச
௪0௧ ஶ்ருத்யாதி பலீயஸ்த்வாச்சநபாத:
௪0௨ அநுபந்தாதிப்ய: ப்ரஜ்ஞாந்தரப்ரு தக்த்வ வத் த்ருஷ்டஶ்சததுக்தம்
௪0௩ நஸாமாந்யா தப்யுபலப்தேர்ம்ருத் யுவந்நஹி லோகாபத்தி:
௪0௪ பரேணச சப்தஸ்யதாத்வித்யம்பூய ஸ்த்வாத்வநுபந்த:
௪0௫ ஏக ஆத்மநச்சரீரேபாவாத்
௪0௬ வ்யதிரேகஸ்தத்பாவ பாவித்வாந்ந தூபலப்திவத் [ப்ரதிவேதம்
௪0௭ அங்காவபத்தாஸ்து நசாகாஸுஹி
௪0௮ மந்த்ராதிவத்வா அவிரோத:
௪0௯ பூம்ந: க்ரதுவஜ்ஜ்யாயஸ்த்வம்ததா ஹிதர்சயதி
௪௧0 நாநாசப்தாதிபேதாத்
௪௧௧ விகல்போவிசிஷ்டபலத்வாத்
௪௧௨ காம்யாஸ்துயதாகாமம்ஸமுச்சீ யேரந்நவாபூர்வஹேத்வபாவாத்
௪௧௩ அங்கேஷுயதா ச்ரயபாவ:
௪௧௪ சிஷ்டேச்ச
௪௧௫ ஸமாஹாராத்
௪௧௬ குணஸாதாரண்யச்ருதேச்ச
௪௧௭ நவாதத்ஸஹபாவாச்ருதே:
௪௧௮ தர்சநாச்ச

மூன்றாவது அத்தியாயம்.

நான்காவதுபாகம்.

௪௧௯ புருஷார்தோதஶ்சப்தாதிதி பாத ராயண:
௪௨0 சேஷத்வாத்புருஷார்தவாதோய தாந்யேஷ்விதிஜைமிநி:
௪௨௧ ஆசாரதர்சநாத்
௪௨௨ தச்ச்ருதே:
௪௨௩ ஸமந்வாரம்பணாத்
௪௨௪ தத்வதோவிதாநாத்
௪௨௫ நியமாச்ச
௪௨௬ அதிகோபதேசாத்து பாதராயணஸ்யைவம்தத்தர்சநாத்
௪௨௭ துல்யம்துதர்சநம்
௪௨௮ அஸார்வத்ரிகீ
௪௨௯ விபாகச்சதவத்
௪௩0 அத்யயநமாத்ரவத:
௪௩௧ நாவிசேஷாத்
௪௩௨ ஸ்துதயே நுமதிர்வா
௪௩௩ காமகாரேணசைகே
௪௩௪ உபமர்தம்ச
௪௩௫ ஊர்த்வரேதஸ்ஸுச்சப்தேஹி
௪௩௬ பராமர்சம் ஜைமிநிரசோதநாச்சா பவததிஹி [யச்ருதே:
௪௩௭ அநுஷ்டேயம் பாதராயணஸ்ஸாம்
௪௩௮ விதிர்வாதாரணவத்
௪௩௯ ஸ்துதிமாத்ரமுபாதா நாதிதிசேந் நாபூர்வத்வாத்
௪௪0 பாவசப்தாச்ச [தத்வாத்
௪௪௧ பாரிப்லவார்தா இதிசேந்நவிசேஷி
௪௪௨ ததாசைகவாக்யோபபந்தாத்
௪௪௩ அத ஏவசாக்நீந்தநாத்யநபேக்ஷா
௪௪௪ ஸர்வாபேக்ஷாசயஜ்ஞாதிச்ருதேரச் வவத்
௪௪௫ சமதமாத்யுபேதஸ்ஸ்யாத்ததாபிது தத்விதேஸ்ததங்கதயா தேஷா மப்யவச்யாநுஷ்டேயத்வாத்
௪௪௬ ஸர்வாந்நாநுமதிச்சப்ராணத்யயே தத்தர்சநாத்
௪௪௭ அபாதாச்ச
௪௪௮ அபிஸ்மர்யதே
௪௪௯ சப்தச்சாதோகாமகாரே
௪௫0 விஹிதத்வாச்சாச்ரமகர்மாபி
௪௫௧ ஸஹகாரித்வேந
௪௫௨ ஸர்வதாபி த ஏவோபயலிங்காத்
௪௫௩ அநபிபவம்சதர்சயதி
௪௫௪ அந்தராசாபிது தத்த்ருஷ்டே:
௪௫௫ அபிஸ்மர்யதே
௪௫௬ விசேஷாநுக்ரஹச்ச
௪௫௭ அதஸ்த்விதரஜ்ஜ்யாயோலிங்காச்ச
௪௫௮ தத்பூதஸ்யது நாதத்பாவோஜைமி நேரபிநியமாத்த த்ரூபாபாவே ப்ய:
௪௫௯ நசாதிகாரிகமபி பதநாநுமாநாத்த

தயோகாத்
சஙு0 உபபூர்வமபீத்யோகேபாவமசநவ த்ததுக்தம்
சஙுக பஹிஸ்தூபயதாபிஸ்ம்ருதேராசா ராச்ச
சஙுஉ ஸ்வாமிந:பலச்ருதேரித்யாத்ரேய:
சஙுங ஆர்த்திஜ்யமித்யௌடுலோமிஸ்தஸ் மைஹிபரிக்ரீயதே
சஙுச ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேணத்ரு தீயம் தத்வதோவித்யாதிவத்
சஙுரு க்ருத்ஸ்நபாவாத்துக்ருஹிணோப ஸம்ஹார:
சஙுஙு மௌநவதிதரேஷாமப்யுபதேசாத்
சஙுஙு அநாவிஷ்குர்வந்நந்வயாத்
சஙுஅ ஐஹிகமப்ரஸ்துதப்ரதிபந்தேதத்த ர்சநாத்
சஙுக ஏவம்முக்திபலாநியமஸ்ததவஸ்தா வத்ருதேஸ்ததவஸ்தாவத்ருதே:

நான்காம் அத்தியாயம்.

முதல்பாகம்.

சஎ0 ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்
சஎக லிங்காச்ச
சஎஉ ஆத்மேதிதூபகச்சந்திக்ராஹயந்திச
சஎங நப்ரதீகேநஹிஸ:
சஎச ப்ரஹ்மத்ருஷ்டிருத்கர்ஷாத் (தே:
சஎரு ஆதித்யாதி மதயச்சாங்க உபபத்
சஎஙு ஆஸீநஸ்ஸம்பவாத்
சஎஎ த்யாநாச்ச
சஎஅ அசலத்வம் சாபேக்ஷ்ய
சஎக ஸமரந்திச
சஅ0 யத்ரைகாக்ரதாதத்ராவிசேஷாத்
சஅக ஆப்ரயாணாத்தத்ராபிஹித்ருஷ்டம்
சஅஉ தததிகமஉத்தர பூர்வாகயோரச் லேஷவிநாசௌதத்வ்யபதேசாத்
சஅங இதரஸ்யாப் யேவமஸம்ச்லேஷ: பாதேது [தவதே:
சஅச அநாரப்தகார்யே ஏவதுபூர்வேத
சஅரு அக்நிஹோத்ராதிது தக்கார்யா யைவதத்தர்சநாத் (யோ:
சஅஙு அதோந்யாபிஹ்யேகேஷாமுப
சஅஎ யதேவவித்யயேதிஹி
சஅஅ போகேநத்விதரேக்ஷபயித்வா அத ஸம்பத்யதே

இரண்டாவது பாகம்.

சஅக வாங்மநஸிதர்சநாச்ச
சகூ0 அதஏவஸர்வாண்யநு
சகூக தந்மந: ப்ராணஉத்தராத்
சகூஉ ஸோத்யக்ஷதுபகமாதிப்ய:
சகூங பூதேஷு தச்ச்ருதே:
சகூச நைகஸ்மிந்தர்சயதோஹி
சகூரு ஸமாநாசாஸ்ருத்யுபக்ரமாதம்ருத த்வம்சாநுபோஷ்ய
சகூஙு ததாபீதேஸ்ஸம்ஸாரவ்யபதேசாத்
சகூஎ ஸூக்ஷ்மம் ப்ரமாணதச்சததோப லப்தே:
சகூஅ நோபமர்தேநாத:
சகூக அஸ்யைவசோபபத்தேரூஷ்மா
ரு00 ப்ரதிஷேதாதிதிசேந்நசாரீராத்ஸ் பஷ்டோஹ்யேகேஷாம்
ரு0க ஸ்மர்யதேச
ரு0உ தாநிபரேததாஹ்யாஹ
ரு0ங அவிபாகோ வசநாத்
ரு0ச ததோகோக்ரஜ்வலநம்தத்ப்ரகாசி தத்வாரோ வித்யா ஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகா ச்சஹார்தாநுக்ருஹீதச்சதாதிக
ரு0ரு ரச்ம்யநுஸாரீ (யா
ரு0ஙு நிசிநேதிசேந்நஸம்பந்தஸ்யயாவத் தேஹபாவித்வாத்தர்சயதிச
ரு0எ அதச்சாயநேபிதக்ஷிணே
ரு0அ யோகிந:ப்ரதிஸ்மர்யேதேஸ்மார் தேசைதே

நான்காவது அத்தியாயம்.

மூன்றாவது பாகம்.

ரு0க அர்சிராதிநாதத்ப்ரதிதே: (யாம்
ருக0 வாயுமப்தாதவிசேஷவிசேஷாப்
ருகக தடிதோதிவருணஸ்ஸம்பந்தாத்
ருகஉ ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத்
ருகங வைத்யுதேநைவததஸ்தச்ச்ருதே:
ருகச கார்யம்பாதரிரஸ்யகத்யுபபத்தே:
ருகரு விசேஷிதத்வாச்ச
ருகஙு ஸாமீப்யாத்துதத்வ்யபதேச:
ருகஎ கார்யாத்யயேததத்யக்ஷேணஸஹா த: பரமபிதாநாத்
ருகஅ ஸ்ம்ருதேச்ச
ருகக பரம்ஜைமிநிர்முக்யத்வாத்
ருஉ0 தர்சநாச்ச
ருஉக நசகார்யேப்ரத்யபிஸந்தி:
ருஉஉ அப்ரதீகாலம்பநாந்நயதிதிபாதரா யணஉபயதாசதோஷாத்தத்க்ர
ருஉங விசேஷம்சதர்சயதி (துச்ச

நான்காவது அத்தியாயம்.

நான்காவது பாகம். [த்

ருஉச ஸம்பத்யாவிர்பாவஸ்ஸ்வேநசப்தா
ருஉரு முக்த: ப்ரதிஜ்ஞாநாத்
ருஉஙு ஆத்மாப்ரகரணாத்
ருஉஎ அவிபாகேநத்ருஷ்டத்வாத்
ருஉஅ ப்ராஹ்மேணஜைமிநிருபந்யாஸா திப்ய: [த்தௌடுலோமி:
ருஉக சிதிதந்மாத்ரேணததாத்மகத்வாதி
ருகூ0 ஏவமப்யுபந்யாஸாத் பூர்வபாவாத விரோதம் பாதராயண:
ருகூக ஸங்கல்பாதேவதச் ச்ருதே:
ருகூஉ அதஏவசாநந்யாதிபதி:
ருகூங அபாவம்பாதரிராஹ்யேவம்
ருகூச பாவம்ஜைமிநிர்விகல்பாமநநாத்
ருகூரு த்வாதசாஹவதுப்யவிதம் பாத ராயணோத:

௫கூ௬ தந்வபாவேஸந்த்யவதுபபத்தே:
௫கூ௭ பாவேஜாக்ரத்வத் (யதி
௫கூ௮ ப்ரதீபவதாவேஶஸ் ததாஹிதர்ச
௫கூ௯ ஸ்வாப்யஸம்பத்யோரந்யதராபே
க்ஷமாவிஷ்க்ருதம்ஹி
௫௭௦ ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாத
ஸந்நிஹிதத்வாச்ச [தி
௫௭௧ ப்ரத்யக்ஷோபதேஶாதிதிசேந்நா

காரிகமண்டலஸ்தோக்தே:
௫௭௨ விகாராவர்திசததா ஹிஸ்திதிமாஹ
௫௭௩ தர்சயதச்சைவம்ப்ரத்யக்ஷாநுமா
நே
௫௭௪ போகமாத்ர ஸாமயலிங்காச்ச
௫௭௫ அநாவ்ருத்திஶப்தாதநாவ்ருத்தி
ஶப்தாத்.

ப்ரஹ்மஸூத்ரம் முற்றிற்று.

சங்கரபாஷ்ய அவதாரிகை.

அநாதிமாயையாகிற அந்தகாரத்தினால் மூடப்பட்டு வழிகெட்டுத்திரிகிற இவ்வுலகிலுள்ளவர்களுடையஹ்ருதயத்தில் தத்வஜ்ஞாநமாகிறவொளியையுண்டாக்கி யவர்களை நல்வழியில நடக்குமகைக்காக ஸ்ரீ சங்கராசார்யாவதரித்து,உபநிஷதர்த்தத்தை வெளியிடுகைக்காக வேதவ்யாஸபகவான்செய்தப்ரஹ்ம ஸூத்ரத்தின் கருத்தையறியாமல், ந்யாயவைசேஷிக ஸாங்க்ய பாதஞ்சலாதி சாஸ்த்ரங்களைப்போல் இவ்வேதாந்த சாஸ்திரத் திற்கும் த்வைத ஸித்தாந்தத்தில் கருத்தைவர்ணித்து, முன்புள்ள த்வைத வாஸனாரூபமான அஜ்ஞானத்தைப் பெருக்கின அபஸித்தாந்தங்களைத் துணித்து, அநேகஸம்ப்ரதாயங்களையும பராசரபகவான் முதலிய மஹாரிஷிகளுடைய அபிப்ராயங்களையும், தர்மஸம்ஸ்தாபநார்த்தமாக ஸ்ரீக்ருஷ்ணரூபியாயவதரித்த பரப்ரஹ்மத்தினால தக்வார்த்தப் பிரகாசகமாக வெளியிடப்பட்ட கீதையினுட் கருத்தையும நன்றாகப் பரிசீலித்து இந்த ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பூர்வோத்தராவிரோதமின்றிக்கே பாஷ்யமசெய்து அத்வைதஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார்.

அத்வைதஸித்தாந்த ப்ரக்ரியை,

உபநிஷத்துக்களில்,“ஏகமேவாத்விதீயம்”இத்யாதிவாக்யங்களினால்ஜ்ஞாநஸ்வரூபமான பரப்ரஹ்மத்திற் காட்டிலும் ஜீவனென்றொரு வஸ்துவில்லையென்றும, “தத்த்வமஸி” இதயாதி வாக்யங்களினால், ஜீவப்ராஹ்மங்களுக்கு பேதமில்லை. அபேதமேயுள்ளதென்றும,“அதோऽந்யதார்த்தம்” இத்யாதியினால் இந்த ப்ரஹ்மத்திற்காட்டில் வேறாய் வஸ்துவாகக் காண்கிறவை யெல்லாம் அஸத்யமென்றும், “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம” இத்யாதிகளினால், அந்த ப்ரஹ்மஸ்வரூபம் அவிநாசியாய் ஸ்வயம் ப்ரகாசமான ஜ்ஞானரூபமாய் ஆநந்த ரூபமாயிருக்குமென்றும், “நிர்குணம்” இத்யாதிகளினால் அநதப்ராஹ்மம். நிர்குணம, அதாவது குணசூர்யமென்றும், “ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்”இத்யாதிகளில்அந்தஜ்ஞாநாநந்தரூபமானப்ரஹ்மஸ்வரூபம் அநாதிமாயையினால்மூடப்பட்டு தன்ஸ்வரூபத்தையறியாமல் தான் தேவனென்றும் மனுஷ்யனென்றும், சொல்லுகையினாலும், இவற்றுக்கு உபப்ராஹ்மணங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களிலும் இவ்வர்த்தங்களையே த்ருடப்படுத்திச் சொல்லுகையாலும்,இப் ப்ரமாணங்களாலும் ஸத் யுக்திகளாலும் நிர்ணயிக்கப்பட்ட அர்த்தமானது.—

ப்ரஹ்மமொன்றுமேபரமார்த்தஸத்யம். மற்றவை அஸத்யங்கள். மற்றவையாவன,—ஜீவனும், ஜடமாய் ப்ரக்ருதியின் விகாரமாய் காணப்படும் ம்ருத்துபாஷாணம் முதலியவைகளும், "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதி உபநிஷத் வாக்யங்களிற் சொல்லப்பட்ட பரப்ரஹ்மத்தினிடத்திலுள்ள ஜ்ஞாநம்முதலியகுணங்களுமாகிய இவை. ஆகையினால் ப்ரஹ்மஸ்வரூபம்ஸஜாதீயவிஜாதீய ஸ்வகதபேதசூந்யமெனப்படும். ஸஜாதீய பேதசூன்யமாவது—ஜ்ஞாந ஸ்வரூபமான தன்னைப்போன்ற மற்றொரு ஜீவஸ்வரூபமில்லையென்பது. விஜாதீயபேதசூன்யமாவது—ஜடமாய்க்காண்கிற ம்ருத்துபாஷாணம் முதலியவைகளில்லையென்பது. ஸ்வகதபேதசூன்யமாவது—தன்னிடத்திலோர்குணங்களில்லையென்பது. இவ்விதமானப்ரஹ்மம் அநாதி மாயையினால்ஆவரிக்கப்பட்டு தேவமனுஷ்யாதிகளாய்த் தோற்றுகிறது. மாயையாவது-ஸத்துமன்று, அஸத்துமன்று. ஸத்தாவது—எப்போதும் தோற்றுவது. அஸத்தாவது- ஒருகாலும் தோற்றாதது. இம்மாயையும், இம்மாயையினாலுண்டான ஜகத்தும், இப்போது தோற்றுகையால் அஸத்தென்று சொல்லப்போகாது. முக்திதசையில் தோற்றாமையால் ஸத்தென்று சொல்லப்போகாது. இவ்விரண்டுவிதமன்றி ஸதஸத் விலக்ஷண மெனப்படும். ஸத்தென்பது-வ்யாவஹாரிகஸத்யம், ப்ராதிபாஸிகஸத்யம், பாரமார்த்திகஸத்யமென்று மூன்றுவகையாயிருக்கும். வ்யாவஹாரிகமாவது - அநாதிமாயையினால் ஸம்ஸார தசையில்உள்ளதுபோல்தோற்றி, பராமர்சிக்கில்உண்மை யற்றதாயிருக்கிற இஜ்ஜகத்து. ப்ராதிபாஸிகமாவது-ஒருகயிற்றைப்பார்த்து அதின்ஸ்வரூபத்தையறியாமல் இது பாமபு என்று தோற்றுவது. பாரமார்த்திகமாவது-எப்போதும்பாதையில்லாத ப்ரஹ்மஸ்வரூபம். அஸத்தென்பது ஒரேவகை. அதின்ஸ்வரூபம்-குதிரைக்கொம்பு, ஆமைப்பால், முதலியஎப்போதும்காணப்படாதவஸ்துக்கள். கயிற்றின் ஸ்வரூபத்தை யறியாமல் அஜ்ஞாநத்தினால் பாம்பென்று ப்ரமித்தவன், அதின்ஸ்வரூபத்தையறிந்த மற்றொருவன்வந்து "இதுபாம்பன்று, இது கயிறு" என்றுணர்த்தினால் தனக்குள்ள அஞ்ஞானம் போய் உள்ளபடியறிகிறான், இவன் பாம்பென்றறியும்போது அக்கயிற்றில் ப்ராதிபாஸிகமான பாம்பு உண்டாகிறது. இந்த ப்ராதிபாஸிகம், வ்யாவஹாரிகஸத்யமான வஸ்துக்களைப்போல் ஒருகார்யத்திற்கு உபயோகப்படமாட்டாது. பயம் முதலியவற்றை யுண்டாக்குவதுமாத்ரமே இதுக்கு பலம். இது ஆதாரமாகிய ரஜ்ஜுமுதலானவற்றின் அஞ்ஞானத்தினாலுண்டாகிறது. ஆதாரஸ்வரூபஜ்ஞாநத்தினால் நசிக்கிறது. அதுபோலவே இந்த ஜகத்தும், ப்ரஹ்மஸ்வரூபத்தை யறியாததினால் அந்தப்ரஹ்மஸ்வரூபத்தில் தோற்றி "தத்வமஸி" இத்யாதி வேதாந்தவாக்யத்தினாலுண்டான அபேதஜ்ஞாநமுண்டானபிறகு நசிக்கையாலே இதை ஸத்யமெனப்படாது. ஆயினும், உறங்குகிறவன் ஸ்வப்நத்தில் தன்னை யரசனாகவும், அநேக விசித்ரமான மாளிகை முதலியவைகளுள்ளனவாகவும் சற்றுநேரம்பார்த்து மகிழ்ந்து தியங்குவதுபோல் இவ்வுலகையும் நெடுநேரம்பார்த்து ஸுகதுக்காதிகளை அந்தப்ரஹ்மமேயநுபவிக்கிறது.

சங்கரப்ராஷ்ய அவதாரிகை.

•சிலர் ஜீவனை, ப்ரஹ்மத்தின் சாயையென்றும், ப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பமென்றும், ஒவ்வொருவனுக்குண்டான ஸுகதுக்கங்கள் வெவ்வேறுவ்லைகளாகையால் அவற்றுக்குக் காரணங்களாகிய அஜ்ஞானங்கள் புருஷபேதத்தினால் வேறுபட்டு அநந்தமாயிருக்குமென்றும், மாயையினாலாவரிக்கப்பட்டவன் ஈஶ்வரன், அவித்யையினாலாவரிக்கப்பட்டவன் ஜீவனென்றும், இப்படி அநேகவிதமாக ஸித்தாந்தித்தபோதிலும் அத்வைதமென்கிற முக்யமான அம்சத்தில் பேதமில்லை. இம்மதங்களில் சங்கராசார்யர் அநேகதூஷணங்களைச்சொல்லி இவற்றையெல்லாம் கண்டித்து, அவித்யையென்றும், மாயையென்றும் பேர்படைத்தவஸ்துவொன்றே; ஆனால் இவ்வொன்றுக்கே ஆச்சாதிகாவித்யை, விக்ஷேபிகாவித்யையென்று இரண்டவஸ்தையுண்டு. அதாவது—ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைத்தல், உலகத்தைக்காண்பித்தலென்பது, •இந்த அஜ்ஞானம் "தத்வமஸி" இத்யாதி வேதாந்தவாக்யஜந்ய ஜீவப்ரஹ்மாபேத ஜ்ஞானத்தினால் நசிக்கிறது. அந்த அபேதஜ்ஞானமும், கலங்கின நீரிலுரைத்த தேத்தான்கொட்டை அந்நீரிலுள்ள அழுக்கையும் போக்கிப் பின்புதானும் நசிப்பதுபோல் இவ்விதமான ப்ராந்திக்குக் காரணமாகிய அநாதிமாயையையும் போக்கித்தானும் உடனே நசித்துவிடுகிறது. குயவன் சக்கரத்தைத்திருப்பிவிட்டபிறகும்கூட அந்தவேகத்தினால் அந்தச்சக்கரம் சிறிதுநேரம் சுற்றிக்கொண்டிருப்பதுபோல் தத்வஜ்ஞானம்பிறந்து அவித்யை நசித்தாலும், முன்வாஸனையினால் ஸம்ஸாரம் சிறிதுகாலம் அநுவர்த்தித்துக்கொண்டிருக்கும். அவ்வாஸனை நிவ்ருத்தமானபிறகு அந்த ஸ்வரூபம் ப்ரஹ்மஸ்வரூபத்தில லயித்து நிர்குணமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய்விளங்கும். இந்த மோக்ஷத்தையே பரமபுருஷார்த்தமென்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. ஆகையால் இவ்விதமான பரமபுருஷார்த்தத்தை லபிக்கைக்காக வேதாந்தவிசாரம் செய்யக்கடவதென்பது.

இங்குசொல்லவேண்டிய அநேகவிஷயங்களை அங்கங்கு ஸூத்ரவ்யாக்யாநங்களில் கண்டுகொள்ள.

சங்கரபாஷ்ய அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ராமாநுஜபாஷ்ய அவதாரிகை.

ஸ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன், ஸகலஸம்ஸாரி சேதனரும் கர்ப்ப ஜந்மபால்ய யௌவந வார்த்தகமரண நரகங்களென்கிற ஸப்தாவஸ்தாரூபமான ஸம்ஸார சக்ரத்தில் அநாதிகால ஸஞ்சித கர்ம பரவசராய் உழன்றுகொண்டு, வேறொரு புருஷார்த்தமுளதென்றும், அதற்குபாயமின்னதென்றுமறியாமல் தேகமே ஆத்மாவென்றும் அதின் போஷணமே பரமபுருஷார்த்தமென்றும் நினைத்து, அதற்காகமேன்மேலும் ஸம்ஸாரத்தில் ப்ரவர்த்தித்து காமக்ரோத மோஹலோப மதமாத்ஸர்யயுக்தராய், க்ருத்யாக்ருத்யவிவேக ஶூந்யராய், ஆத்யாத்மிகாதிபௌதிகாதிதைவிகங்களாகிற தாபத்ரயங்களினால் நோவுபட்டுக்கொண்டு, புத்ரேஷணா வித்தேஷணா லோகேஷணைகளென்கிற ஈஷணாத்ரயயுக்தராய், தன்துக்கமேயன்றிக்கே தனதுபுத்ரகளத்ராதிகளையும் தனக்காப்தர்களாக ப்ரமித்து அவர்கள் துக்கத்தையும் தானேயேற்றுக்கொண்டு ஒருக்ஷண மாத்ரமும் ஸுகமின்றிக்கே கரைகாணாத் துயரக்கடலில் மூழ்கிக்கரையேற யோக்யதையற்றவர்களாயிருக்குமிருப்பைக்கண்டு, ஐயோ! நித்யமாய் ஜ்ஞாநாநந்த ரூபமான தனதுஸ்வரூபத்தையும், தனக்கு நித்யாநுபவ யோக்யமான நிரதிசயப்ரஹ்மாநந்தத்தையும் மறந்து, மாம்ஸசோணிதாதி ஸப்ததாதுநிர்மிதமாய், மலமூத்ர பித்தஶ்லேஷ்ம பூரிதமாய், அதிநிஹீநமாய், அநந்ததுக்காகரமான சரீரத்தை அபிமாநித்துக்கொண்டு, அவித்யாகர்ம வாஸநாருசி பரவசனாய் அதிலே ரமித்துக்கொண்டு க்ஷுத்ரஸுகமென்று பேர்பெற்ற நரகப்ராயமான மஹத்தான துக்கத்தை யநுபவிப்பதே! என்று இவர்கள் பக்கல் இரக்கமுற்றவனாய், இவர்களை இப்பெருந்துன்பத்தினின்றும் விலக்கிக்கரையேற்றக்கருதி, தான் ஹம்ஸம் முதலிய அநேகாவதாரங்களையெடுத்தும், சதுர்முக ப்ரஹ்மா, நாரதர், ஸநகாதிகள், மநு முதலியவர்களைக் கொண்டும் ஜ்ஞாநத்தை க்ருதயுகத்தில் ப்ரவர்த்திப்பித்தருளினான். அந்த ஜ்ஞாநம் க்ரமக்ரமமாக த்வாபரயுகாந்தத்தில் க்ஷீணதசையையடைந்து அஜ்ஞாநாந்தகாரத்தினால் மூடிக்கிடந்த இவ்வுலகினைக்கண்டு ப்ரஹ்மாதிதேவர்கள் ஸ்ரீமந்நாராயணனிடம் சென்று "ஸ்வாமீ! தேவரீர் ஜ்ஞாநப்ரதாநம்செய்து இவ்வுலகினை உத்தரிப்பித்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க அவனும் அப்ப்ரார்த்தனையை அங்கீகரித்து. ஸ்ரீபராசர பகவானுடைய கர்ப்பத்தில் வேதவ்யாஸரூபியாய் அவதரித்தான். பின்பு வேதவ்யாஸரும், வேதஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பித்து அநந்தரம் வேதார்த்த நிர்ணயம் செய்யக்கருதி, தம்முடைய முக்ய சிஷ்யரான ஜைமினி மஹர்ஷியைக்கொண்டு வேதத்தில் பூர்வபாகமான கர்மகாண்ட தேவதாகாண்டங்களின் அர்த்தத்தைப் பூர்வமீமாம்ஸையென்னும் சாஸ்த்ரத்தைவிட்டுத்தெளிவித்து, உபநிஷத்துக்களை

ன்று வழங்குகிற உத்தரபாகமான ப்ரஹ்மகாண்டத்தி னர்த்தத்தை உத்தர மீமாம்ஸையென்று வழங்குகிற ப்ரஹ்ம ஸூத்ரமென்னும். வேதாந்த சாஸ்த்ரத்தினால் வெளியிட்டருளினர்.

இந்த சாஸ்த்ரத்தில் அத்யாயம் ௪. அதில் முதல் அத்தியாயத்தில், மோக்ஷத்தை விரும்பின புருஷனுக்குத் த்யாநம் செய்யத்தக்கதாக வேதாந்தங்களில் சொல்லப்பட்ட ஜகத்காரண மானவஸ்து, நிகிலஜிதசித்விலக்ஷணமானபரப்ரஹ்மமென்று நிரூபிக்கப்பட்டது. அந்தபரப்ரஹ்மம் கதிஸாமாந்யந்யாயத்தினாலே மஹோபநிஷத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட அகிலஹேயப்ரத்ய நீகஸமஸ்த கல்யாண குணாகரனை ஸ்ரீமந்நாராயணனென்று கண்டு கொள்க.—இரண்டாவது அத்யாயத்தில்--ஜ்ஞாந சூந்யமாய், உத்பத்தி விநாசங்களை யுடையதாயுள்ள அசித்தத்வமான மூலப்ரக்ருதி யென்ன, அல்ப ஜ்ஞானனாய், அல்பசக்தி யுடையனான சித்தத்வமென்கிற ஜீவனென்ன, இவ்விரண்டைக் காட்டிலும் விலக்ஷணமாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தி யுக்தனாய், ஸர்வாந்தர்யாமியாய், சித் அசித் என்கிற இரண்டு தத்வங்களையும் தனக்கு சரீரமாக உடையனான ஈஸ்வரதத்வமென்கிற பரப்ரஹ்மமே ஜகத்காரண மென்று வேதத்தின் தாத்பர்யத்தைக்கொண்டு முதல் அத்யாயத்திற் சொல்லப்பட்ட அர்த்தம், குத்ருஷ்டிகளுடைய குயுக்திகளினால் மந்தமதிகள் கலங்காமைக்காக அவர்கள்சொல்லும் யுக்திகளைக்கண்டித்து ஸ்தாபிக்கப்படுகிறது. மூன்றாவது அத்யாயத்தில் கீழ்ச்சொன்ன ப்ரஹ்மப்ராப்திக்குபாயமான பக்திஸ்வரூபம் சொல்லுகிறது-நாலாவது அத்யாயத்தில், அந்த பக்திக்கு அர்சிராதி மார்கமாக பரப்ரஹ்ம ப்ராப்தியே பலமென்று சொல்லப்படுகிறது. இந்நாலு அத்யாயங்களில் அதிகரணங்கள் - ௧௫௬. ஸூத்ரங்கள் - ௫௪௫. விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், ஸித்தாந்தம், ப்ரயோஜநம், இவ்வைந்து மடங்கியது அதிகரணமாம்.

ஸ்ரீவேதவ்யாஸ ப்ரணீதமான இந்தப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு, அவருடைய அபிப்ராயங்களையறிந்த போதாயநரென்கிற ருஷி, வ்ருத்தி என்று ஒரு வ்யாக்யாநம் செய்தார். அவ்வ்யாக்யாநம் மிகப்பெரிதாகையால் அற்பபுத்தியுள்ள மநுஷ்யர்களுக்கு அதைக்கற்று அர்த்தம்தெரிந்து கொள்ளயோக்யதையற்றிருப்பதை யாலோசித்து, பின்புள்ள டங்கர், த்ரமிடர், குஹதேவர், என்கிற ருஷிகள் போதாயந வ்ருத்தியிலுள்ள அர்த்தங்களைச் சுருக்கியெடுத்து ப்ரஹ்மஸூத்ரத்தி னர்த்தத்தைப் ப்ரகாசிப்பித்தனர். அவர்களுடைய க்ரந்தங்கள் மிகச்சுருங்கியிருக்கையால், அவற்றிலுள்ள கம்பீரார்த்தங்களையறியச் சக்தியற்றவர்களுக்கு போதமாகும்படி அதிகவிஸ்தாரமும் அதிகஸங்க்ஷேபமுமின்றி கீழ்ச்சொன்ன பூர்விகர்களின் மதத்தையநுஸரித்து ஸ்ரீபகவத் ராமாநுஜாசார்யரென்கிற திருநாமமுள்ள சேஷாம்சமான உடையவர் அந்த ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு பாஷ்யம் செய்தருளினர்.

ப்ரஹ்மஸூத்ரத்துக்கு சங்கரபாஸ்கர யாதவர்கள், போதாயாதி பூர்விகர்கள் மதத்தையநுஸரியாமல் தங்கள்மனதில் தோற்றினபடி வேறுவேறு

அர்த்தங்களைக்கற்பித்தும் உபநிஷத்துக்களில் ஸகுணபரமான வாக்யங்கள் அபரமார்த்த ப்ரங்களென்றும், நிர்குணவாக்யங்களே பரமார்த்த ப்ரஹ்ம போத கங்களென்றும், அவ்வவாக்கியங்களும் ஸாக்ஷாத்தாக ப்ரஹ்ம ப்ர திபாதகங்க ளாகமாட்டா; லக்ஷணையினால் ப்ரதிபாதிக்கின்றன வென்றும், ஸூத்ரஸ் வாரஸ்யமும், உபநிஷத் ஸ்வாரஸ்யமும், ந்யாயஸ்வாரஸ்யமுமின் றிவ்யாக்யாநங்களைச்செய்து வாஸ்த வார்த்தத்தை உலகினில் மறைத்து விட, இவர்தாம், பூர்வாசார்யாபிமதமான அர்த்தங்களை உத்தரிப்பிக்கக் கோலி, அதற்காக போதாயநவ் ருத்தியைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளம்பற்றி, அது இங்கெங்கு மகப்படாமையால் சாரதாபீடத்துக் கெழுந்தருளி அங்கு ஸரஸ்வதிதேவி, எடுத்துக் கொடுத்தபோதாயநவ்ருத்தியை ஒருதரம் விமர்சித்துப் பிறகு அந்தக்ரந்த தாத்பர்யத்தை யநுஸரித்து ஸ்ரீபாஷ்யம் செய்தருளினார். சிலகாலம் கழித்து திக்விஜயத்துக்காக எழுந்தருளும் போது அங்கங்குள்ளஸகல வித்வான்களையும் ஜயித்துக்கொண்டு க்ரமமாக சாரதாபீடத்துக் கெழுந்தருள, ஸரஸ்வதிதேவி வாசலில் ப்ரத்யக்ஷமாய், "தஸ்யய தாகப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ" என்கிற ஶ்ருதிக்கு அர்த் தம்சொல்லுமென்று உடையவரைக்கேட்க, உடையவரும், "கம்" என்றால் ஜலம், "கபி" என்றால், அந்த ஜலத்தைக் கிரணங்களினால் பாநம்செய்கிற ஸூர்யன், "கப்யாஸம்" என்றால், அந்தஸூர்யனால்மலர்ந்த தாமரைபுஷ்பம்; அதுபோன்ற நேத்ரங்களை யுடையவன் ஸூர்யமண்டலமத்ய வர்த்தியான ஸ்ரீமன்நாராயணன் என்று அந்த ஶ்ருதி வாக்யத்துக்கு அர்த்தம்ஸாதித்தார். ஸரஸ்வதிதேவி அதைக்கேட்டு, சிலகுத்ருஷ்டிகள் இந்தஶ்ருதிக்குக் குரங் கினுடைய ப்ருஷ்ட பாகம்போன்ற கண்ணென்று ஹேயமான அர்த்தங்க ளைச் சொன்னார்கள். நீர் இப்போது இந்தஶ்ருதிக்கு வாஸ்தவமான அர்த் தத்தைச் சொன்னபடியால், உமக்குஸ்ரீபாஷ்ய காரரென்று திருநாமமாயி டுகவென்றும் இவர்ஸாதித்த ஸ்ரீபாஷ்யத்தைத் தான்சிரசில் வைத்துக்கொ ண்டு இதற்கு ஸ்ரீபாஷ்யமென்று திருநாமமாயிடுகவென்றுமளித்தார்; ஆகை யால் விஶிஷ்டாத்வைத பாஷ்யத்துக்கு ஸ்ரீபாஷ்யமென்று திருநாமமா யிற்று.

———o———

விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரக்ரியை.

இந்த ஸித்தாந்தத்தில், சித்து அசித்து, ஈஶ்வரன் என்று தத்வம் மூ ன்று. சித்தாவது-ஜீவாத்மா. அது, ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய், ஸ்வயம்ப்ரகா சமாய், அணுவாய், பரமாத்மாவுக்கு சேஷபூதமாய், நித்யமாய், ப்ரதிசரீரம் பிந்நமாயிருக்கும். இது, அணுவாய் சரீரத்தில் ஒருபாகத்தி லிருந்த போதி லும், ஓரிடத்தில்தீபமிருக்க அதின்தேஜஸ்ஸு மற்றவிடங்களில் வ்யாபித்து அங்குள்ள வஸ்துக்களுக்கு ப்ரகாசகமாயிருக்குமதுபோல், தீபத்திற்கு ப்ர

பைபோல் ஜீவனிடத்திலுள்ள ஜ்ஞாநமானது சரீரமெங்கும் வ்யாபித்து சரீரத்தில் கால்முதல்தலைவரையிலுள்ள அந்தந்த அவயவங்களிலுண்டாகிற சந்தநாதி ஸ்பர்சத்தினாலுண்டான ஸுகத்தையும், அக்நிமுதலியவற்றின் ஸ்பர்சத்தினாலுண்டானதுக்கத்தையும் க்ரஹிக்கிறது. பீஜாங்குரந்யாயத்தினால் இந்த ஜீவனுக்கு அநாதியாயுள்ள புண்யபாபரூப கர்மத்தினால் இந்த ஸம்ஸாரத்தில் ஜீவன் ஜந்மாதிகளை யடைகிறான். கர்மமாவது - ப்ராரப்தமென்றும், ஸஞ்சிதமென்றும், ஆகாமி என்றும் மூன்று வகைப்பட்டிருக்கும். ப்ராரப்தமாவது- இந்த ஜந்மத்தில் அநுபவிக்கத்தக்க ஸுகதுக்கங்களுக்குக்காரணமாய், ஸஞ்சிதகர்மத்தில்நின்றும் பிரித்தெடுத்து ஈஸ்வரனால் ஏற்படுத்தப்பட்ட கர்மம். ஸஞ்சிதமாவது-பூர்வ பூர்வஜந்மங்களில் செய்யப்பட்டு கும்பலாய்ச் சேர்ந்திருக்கிற கர்மம். ஆகாமியென்பது - புத்திபூர்வமாகச்செய்யப்பட்டவையென்றும், அபுத்தி பூர்வமாகச் செய்யப்பட்டவையென்றும் இரண்டுவிதம். இவ்விதமான கர்மங்களினால் ஸம்ஸாரம். இவை நிவ்ருத்தித்தால் மோக்ஷம்.

அசித்தாவது.—கீழ்ச்சொன்ன ஜீவாத்மாக்கள் செய்தபுண்யபாபரூப கர்மங்களின்பலமான ஸுகதுக்கங்களை அவர்களநுபவிக்கைக்கு உபகரணமாய், சரீரவஸந ஸ்ரக்சந்தந க்ருஹக்ஷேத்ராராமஸ்வர்க்கநரகாதிரூபமாய்ப் பரிணமித்துக் காண்கின்ற ஜடமானவஸ்து. இது - ப்ரக்ருதி, மஹத்து, அஹங்காரம், பஞ்சதந்மாத்ரை, பஞ்சமஹாபூதங்கள், ஏகாதசேந்த்ரியங்கள், என்று இருபத்துநாலு விதமாயிருக்கும். ப்ரக்ருதியாவது - கடசராவாதிகளுக்குக் காரணமாகிய ம்ருத்பிண்டம்போல், இஜ்ஜகத்துக்குக் காரணமாயிருப்பதொருவஸ்து. இதுக்கு மாயை, அஜை இத்யாதிநாமாந்தரங்களுமுண்டு. மஹத்தாவது - ப்ரக்ருதியில்நின்று முண்டான புத்திதத்வம். அதில் நின்று முண்டான அஹங்காரதத்வமானது - ஸாத்விகாஹங்காரமென்றும், ராஜஸாஹங்காரமென்றும், தாமஸாஹங்காரமென்றும் மூன்று வகையாயிருக்கும். தாமஸாஹங்காரத்தில் நின்றும் பஞ்சதந்மாத்ரைகளும், ராஜஸாஹங்காரத்திலிருந்து இந்த்ரியங்களு முண்டாகின்றன. ஸாத்விகாஹங்காரம் இவ்விரண்டுக்கும் ஸஹகாரியாயிருக்கும். தந்மாத்ரையாவது - பால்கெட்டுத் தயிராகாமல் பாலுக்கும் தயிருக்கும் நடுவிலுள்ள அவஸ்த்தைபோல் அஹங்காரஸ்வரூபம்மாறி ப்ருதிவ்யாதி தத்வங்களாகாமல் இவ்விரண்டுக்கும் நடுவிலுள்ள அவஸ்த்தை. பஞ்சபூதங்களான ப்ருதிவீ, ஜலம், தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம் ஆகிய இவைகள் தந்மாத்ரைகளில் நின்று முண்டாகின்றன. ஜ்ஞாநேந்த்ரியமென்றும், கர்மேந்த்ரியமென்றும் இந்த்ரியம் இரண்டுவிதம். ஸ்ரோத்ரம் (காதிற்குளுள்ளது), த்வக் (சர்மத்திலுள்ளது), சக்ஷுஸ்ஸு (கண்ணின் கருவிழியிலுள்ளது), ஜிஹ்வை (நாவின் நுனியிலுள்ளது). க்ராணம் (மூக்கின் நுனியிலுள்ளது); என்கிற பாஹ்யமான இவ்வைந்தும், அந்தரிந்த்ரியமான மநஸ்ஸும், ஜ்ஞாநேந்த்ரியங்களெனப்படும். வாக்கு (தால்வாதி ஸ்தாநங்களிலுள்ளது), பாணி (கைத்தலங்களிலுள்ளது), பாதம் (காலிலுள்ளது), பாயு (குதத்தி

ளுள்ளது); உபஸ்த்தம் (ஆண்குறி பெண்குறிகளிலுள்ளது) ஆகிய இவ்வைந்தும் கர்மேந்த்ரியங்களெனப்படும். கீழ்ச்சொன்ன ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் க்ரமமாக சப்தஸ்பர்சரூபரஸ கந்தங்களாகிய ஆகாசாதி குணங்களை க்ரஹிக்கும். சொல்லுதல், எடுத்தல், நடத்தல், மலத்தை விடுதல், காமபோகத்தை யநுபவித்தலாகியஇவைகளுக்குக் கர்மேந்த்ரியங்கள் ஸாதகமாயிருக்கும்.மநஸ்ஸு ஸகலஜ்ஞாநோத்பத்திக்கும்ஸஹாயமாயிருக்கும். இப்படி இருபத்துநாலு ஜடவஸ்துக்களும், ஜீவனும், ஈஸ்வரனுமாக இருபத்தாறு தத்வங்களாகவும் பிரிக்கப்படும். ஜீவன்,பத்தனென்றும், முக்தனென்றும், நித்யனென்றும் மூன்றுவகை. பத்தராவார் - ப்ரஹ்மாதி பிபீலிகாந்தமாயுள்ள ப்ரக்ருதிவஸ்யரானவர்கள். முக்தராவார்-கர்மஜ்ஞாநபக்திகளை ஸாங்கமாக அநுஷ்டித்து பகவத்ப்ரஸாதம் பெற்று இந்த ஸம்ஸாரத்தைக் கடந்து ஆவிர்ப்பூதஸ்வஸ்வரூபராய் நித்யவிபூதியில் சென்றுபகவத்கைங்கர்யநிரதராயிருக்கிற சுகவாமதேவாதிகள். நித்யராவார்-ஸர்வேஸ்வரனுடைய நித்ய ஸங்கல்பத்தினால் எப்போதும் ஸம்ஸாரகந்தமற்றவர்களாய் பரமபதத்திலேயே யிருந்து பகவத்கைங்கர்யைக நிரதராயிருக்கிற அநந்தகருடவிஷ்வக்ஸேநாதிகள் ஈஸ்வரனாவான். ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய், விபுவாய்,ஸகல ஜகத்துக்கும் காரணமாய், ஸர்வவஸ்துக்களுக்கு மந்தர்யாமியாய்,ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய், ஸகல ஜகத்ரக்ஷகனாய், ஸ்வாமியாய், ஸகல ஹேய ப்ரத்யநீகனாய், ஸகல கல்யாண குணாகரனாயிருக்கிற ஸ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணன். காரணமாவது - உபாதாநமென்றும், நிமித்தமென்றும் ஸஹகாரியென்றும் மூன்றுவகை. ஜகத்துக்கு மூன்றுவிதமானகாரணமும் ஈஸ்வரனே. அதெப்படியெனில்,சிதசித்துகள் ஸூக்ஷ்மரூபமென்றும், ஸ்த்தூலரூபமென்றும் இரண்டுவகை. ஸூக்ஷ்மசித்தாவது, ஜ்ஞாநஸங்கோசத்தையுடையஜீவன். ஜ்ஞாநவிகாஸமுள்ள அவனுக்கே ஸ்த்தூலசித்தென்றுபெயர். விகாரசூந்யமாயிருக்கிற ப்ரக்ருதி ஸூக்ஷ்ம அசித்து. விகாரத்தையடைந்த ப்ரக்ருதி ஸ்த்தூல அசித்து எனப்படும். சித் அசித் என்கிற இரண்டு பதார்த்தங்களும் ஸர்வேஸ்வரனுக்கு ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் சரீரமாயிருக்கும். காரணமாவது - பரிணாம சூந்யமான வஸ்து. கார்யமாவது - பரிணாமத்தையடைந்தவஸ்து. கடமென்று சொல்லப்படுகிற வாயும் வயிறுமாய்க்காண்கிற ஆகார பரிணாமத்தையுடைய வஸ்து கார்யமென்றும், இவ்வாகார பரிணாமசூந்யமாய் ம்ருத்பிண்டமாகியவஸ்து காரணமென்றும் சொல்லப்படும். அதுபோலவே, ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனான ஈஸ்வரன் காரணம். இவ்விதமான ஈஸ்வரனே, ம்ருத்பிண்டம் கடமாகப் பரிணமிப்பதுபோல், ஸ்த்தூல சிதசித்விசிஷ்டனாய் ஜகதாகாரனாய்ப் பரிணமிக்கையாலே அவனே கார்யமெனப்படுவான். சைத்ரனென்கிற ஒருவன் அவிகாரியாகிய ஆத்மஸ்வரூபனாயிருந்தபோதிலும், அவனுடைய சரீரம் பரிணமிப்பதைக்கண்டு, சைத்ரன்பாலனானவன், யுவாவானான் என்று சொல்வது லோகஸித்தம். ஆகிலும் அவனுடைய சரீரத்திலுள்ள பரிணாமவிகாரம் ஆத்மாவில் சேராது. அதுபோல் சரீரமாகிய சித்.

தும், அசித்தும் ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் பரிணமித்தாலும் இவை களைச் சரீரமாக உடைய சரீரியான பரமாத்மாவுக்கு இப்பரிணாமம் ஸம்ப வியாது. ஆகையாலேதான் இந்த ஸித்தாந்தத்திற்கு விஶிஷ்டாத்வைத மென்றுபெயர். அதாவது விஶிஷ்டமென்கிற பதத்தை இரண்டாவ்ரு த்தி அநுஸந்தித்துக்கொண்டு, அதில் ஒரு விசிஷ்டபதத்துக்கு ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்டமாகிய காரண ப்ரஹ்மமென்றும், மற்றொரு விஶிஷ்டபத த்திற்கு ஸ்தூல சிதசித் விசிஷ்டமாகிய கார்யப்ரஹ்மமென்றும், இப்படி கார்யகாரணரூபமாகிய ப்ரஹ்மத்திற்கு, அத்வைதம்-அபேதம், பேதமில்லை. கார்யகாரணரூபமாகிய ப்ரஹ்மம் ஒன்றேயென்று அதற்கு அர்த்தம். இந்த ஈஶ்வரனுக்கு இந்தஜகத்து ஆவதழிவதாய், லீலார்த்தமாகக் கற்பிக்கப்பட்ட தாகையால் லீலாவிபூதியென்றும், ப்ராக்ருதிமண்டலத்தைத் தாண்டி விரஜா நதிக்கப்பாலுள்ள அப்ராக்ருதமான திவ்யலோகம் போகார்த்தமாய் நித்யமாக இருக்கிறதாகையால் அது நித்யவிபூதியென்றும் சொல்லப்படும். ஜீவனானவ ன் இந்த துக்கரூபமான ஸம்ஸாரத்தைக் கடந்து மோக்ஷமென்று சொல்லப் பட்ட ஸ்ரீவைகுண்டதிவ்யநகரத்திற்கு அர்ச்சிராதிமார்க்கமாகப்போய் அங்கு திருமாமணிமண்டபத்தில் ஶ்ரீபூநீளாஸமேதனாய், அநந்தகருடவிஷ்வக்ஸே நாதிபரிஜநங்களினால் அநவரதம் ஸம்ஸேவ்யனாயிருந்துள்ள ஸ்ரீமந்நாராயண னைக்கிட்டி ஆவிர்பூதஸ்வரூப ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய்க்கொண்டு பரமபுரு ஷ பரிசரண நிரதனாகுகையே பரமபுருஷார்த்தம். இவ்விதமான புருஷார்த் த ப்ராப்திக்கு, பரமபுருஷயாதாத்ம்ய ஜ்ஞாநஜந்ய தத்விஷயக பக்தி காரண ம் ஆகையால் மோக்ஷேச்சுவானவன், ஸம்ஸாரத்தில் விரக்தனாய், ஸதாசார் யனையடைந்து ஸ்வஸ்வரூபத்தையும் பரமபுருஷஸ்வரூபத்தையும், தத்ப்ரா ப்திக்குக் காரணமாகிய பக்தி ப்ராப்திஸ்வரூபத்தையும், பல ஸ்வரூபத் தையும் இதற்கு விரோதியாகிய ப்ரக்ருதிஸ்வரூபத்தையும் அறிந்து அநவரதம் தத்தேகநிஷ்டனாயிருக்கக்கடவன். இவ்விடத்திற் சொல்லவேண்டிய அம சங்களை அங்கங்கு ஸூத்ர வ்யாக்யாநங்களிலும் க்ரந்தாந்தரங்களிலும் கண்டுகொள்க.

மத்வபாஷ்யப்ரக்ரியை.

இந்தமதத்தில் ஜீவப்ரஹ்மங்களுக்கு பரஸ்பரம்பேதமும், ஜீவர்களுக்கு பரஸ்பரம் பேதமும், இவ்விதமான பேதஜ்ஞாநமின்றிமோக்ஷம் கிடையா தென்றும், ஜீவப்ரஹ்மங்களினுடைய அபேதஜ்ஞாநம்மோக்ஷவிரோதியென் றும், பரமாத்மோபாஸநமேமோக்ஷஸாதநமென்றும் உபாஸநாபேதத்தாலே மோக்ஷத்திலும் ஆநந்ததாரதம்யமுண்டென்றும், ஜகத்துக்குப் பரமாத்மா வான விஷ்ணு நிமித்தகாரணமென்றும், ப்ரக்ருதி உபாதாநகாரணமென்றும், அந்தபரமாத்மா ஸகலாந்தர்யாமியென்றும், பரமாத்மாவுக்கும் அவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி குணங்களுக்கும் பேதமில்லையென்றும், உபநிஷத்துக்க ளில் பேதஶ்ருதி முக்யமென்றும், அபேதஶ்ருதி கௌணமென்றும், ஜீவர்

களுக்கு பஞ்சாயுததாரணம் ஆவஶ்யகமென்றும் ஸித்தாந்தித்தார்கள். இதிலுள்ளமற்ற பேதங்கள் அங்கங்கு ஸூத்ரவ்யாக்யாநங்களில் கண்டுகொள்வது.

சைவசித்தாந்தம்.

நீலகண்டபாஷ்யத்தில் பரமசிவனையே ப்ரஹ்மமென்று வேதாந்தங்கள் சொல்லுகின்றனவென்றும், முத்ரிகாஷ்டகதாரணம் முதலானவை மோக்ஷஸாதனங்களென்றும் சைவாகமமே முக்யப்ரமாணமென்றும் பேதவாதம் காரணவாதம் முதலானவைகள் நிழ்தகரித்த விஶிஷ்டாத்வைதஸித்தாந்தின் படியே ஸித்தாந்திக்கப் பட்டதென்றும், இதற்குசைவவிசிஷ்டாத்வைதமென்று இம்மாத்ரமே பேதமென்றும் சொல்லுகிறார்கள். மற்ற பேதங்கள் பாஷ்யத்தில் கண்டுகொள்ள.

இன்னும் த்வைதாத்வைதமென்றும் சுத்தாத்வைதமென்றும் இத்யாதியான அநேகஸித்தாந்தங்களும் அவ்வவஸித்தாந்தங்களுக்குத் தக்கபடி ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யங்களும் அநேகமாயிருக்கின்றன. ஆகிலுமவை இத்தேசத்தில் அதிகப்ரசாரமில்லாமையால் இங்குவிவரிக்கவில்லை. சங்கரபாஷ்யத்துக்கும் ராமாநுஜபாஷ்யத்துக்கும் அனேக பேதமிருக்கிற படியால் பாஷ்யம் எழுதப்பட்டது. நீலகண்டபாஷ்யத்துக்கும் ராமாநுஜபாஷ்யத்துக்கும் சிலது பேதங்கள் இருக்கின்றன; அர்த்தபேதங்கள் பதஉரையில் எழுதப்படுகின்றன.

சம்பூர்ணம்.

விசேஷ குறிப்பு.

சில ஸூத்ரத்திற்கு விசேஷார்த்தமில்லாமையால் சுருக்கமாய் ஆசார்யர்கள் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். அதற்கு ப்ரதிபதத்தில் பாஷ்யத்தினுடைய அர்த்தத்தை யெழுதப்பட்டிருக்கின்றன, அதற்கு ப்ரதிபதபாஷ்யமென்று பெயர். இந்த ஸூத்ரபாஷ்யத்திலுள்ள வேதாந்தபரிபாஷா பதங்களின் அர்த்த விவரணமால சஞ்சிகைகளுடசியி லச்சிட்டனுப்பப்படும்.

ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம்.

அதிகரணம் - க. ஸூத்ரம்-க.

—* அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா. *—

ப—(ப்ரதிபதம்.) அத - சமதமாதியான ஸாதநபூர்த்தி யுண்டானபிறகு, அத: - கர்மங்களின் பலங்கள் அநித்யங்களென்றறிகையாலே, ப்ரஹ்மஜிஜ்ஞாஸா - ப்ரஹ்மஜ்ஞாநத்திற்காக விசாரம் (செய்யலாம்). க.

சங்கரபாஷ்யம்.

ப்ரஹ்ம விசாரம் செய்கைக்கு * அதிகாரியில்லாமையால் வேதாந்த சாஸ்த்ரம் வ்யர்த்தம் என்னும் பூர்வபக்ஷத்திற்கு, இந்தலோகத்தில் யஜ்ஞ யாகாதிகளைச் செய்து பெறத்தக்க ஐஸ்வர்யாதிகளும், ஸ்வர்க்காதிகளும் அநித்யமென்றறிந்து சமதமாதி குணங்களையுடையனாய், அநித்யமாகிய இப்பலங்களில் வைராக்யத்தையடைந்து மோக்ஷத்தில் இச்சையுள்ளவனே அதிகாரி, ஆகையால் அவன் ப்ரஹ்மஜ்ஞாநத்திற்காக ப்ரஹ்மவிசாரம் செய்யலாம் ஆகையால் வேதாந்தசாஸ்த்ரம் வ்யர்த்தமன்று என்று ஸூத்ரகாரராகிய வ்யாஸபகவான் இந்த ஸூத்ரத்தினால் ஸமாதாநம் சொல்லுகிறார்.

பா—(ப்ரதிபதம்.) அத - வேதத்தின் பூர்வபாகமாகிய கர்மகாண்டங்களினர்த்தத்தை விசாரித்தபிறகு, அத: - கர்மபலங்கள் அர்பமென்றும் அஸ்த்திரமென்றும் ஜ்ஞாநமுடையவனாகையால், ப்ரஹ்மஜிஜ்ஞாஸா-அநந்த

* விஷயம், ப்ரயோஜநம், ஸம்பந்தம், அதிகாரி என்கிற இந்த நாலுக்கும் அநுபந்த சதுஷ்டயமென்று பெயர். க்ரந்தத்தினாதியில் இந்நாலையும் நிரூபிக்கவேண்டும். இவற்றை யறியாதவர்கள் அக்க்ரந்தத்தைக் கேட்க முயலார்கள். இவற்றை நிரூபித்தால், விஷயம் இன்னதென்று அறிந்து அதினால்வரும் ப்ரயோஜநத்தைப்பெற இச்சையுள்ளவன் அதைக்கேட்க முயலுவன். ஸம்பந்தமாவது—கீழுக்கும் மேலுக்குமுண்டான ஸந்தர்ப்பம். அதைச்சொல்லாவிடில், பைத்தியம் பிடித்தவன்போல ஸந்தர்ப்பமின்றி தோற்றினதைச் சொல்லுகிறானென்று கேட்கமுயலார்கள் ஆகையால் ஸம்பந்தம் சொல்லவேணும். அப்படியே நாமிதுக்கு அதிகாரிதான் என்று தெரியாவிடில் கேளான். ஆகையால் அதிகாரி இன்னானென்றும் சொல்லவேணும். இந்தசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட விஷயமாவது—ப்ரஹ்மம்; இதை யறிந்தால்வரும் ப்ரயோஜநம்—மோக்ஷம்; ஸம்பந்தமாவது அநந்த அதிகரணங்களினாதியில் சொல்லப்படுமது, அதிகாரி - சமதமாதிகளை யுடையனாய் மோக்ஷத்தை விரும்புமவன்.

ஸ்த்திரபலமான ப்ரஹ்மத்தினுடைய விசாரத்தில் இச்சை, (கதாசித்ரா செய்யவேண்டும்).

ராமாநுஜபாஷ்யம்.

இந்த ஸூத்ரத்திற்கு, "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத், நாஸ்த்யக்ருத: க்ருதேந, தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்" என்கிறது. விஷயவாக்யம். இதில்,ஜ்யோதிஷ்டோமம் முதலிய கர்மங்களைச்செய்து ஸ்வர்க்காதி லோகங்களை யடைந்தவன் அங்கு சிலகாலம் அதி ஸ்வல்பமான ஸுகத்தை யநுபவித்துப் பின்பு அங்குநின்று பூலோகத்தில்விழுகிறான்.என்னு மர்த்தத்தைச் செவ்வையாய் கர்மகாண்டங்களை விசாரித்துத்தெரிந்துகொண்டு, அந்த அல்பஸுகத்தில் வைராக்யமுடையவனாய், அநந்தமாயும் சாஸ்வதமாயுமுள்ள பலமான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தையும, அதற்குபாயத்தையும் விசாரித்தறிகைக்காக ஆசார்யனிடம் செல்லவேணுமென்று சொல்லிற்று.—இவ்வாக்யத்திற் சொல்லியபடி வேதாந்த வாக்யங்களைக்கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யலாமா, செய்யக்கூடாதா வென்று ஸம்சயம்.—வேதாந்தவாக்யம் ஸித்தமான பரப்ரஹ்மத்தை போதிப்பிக்கு மென்கிற நிஸ்சயமிருந்தால் செய்யலாம்; அந்தநிஸ்சய மில்லாததினால், செய்யக்கூடாதென்று பூர்வபக்ஷம். ஏனென்றால்,—ப்ரஹ்ம சப்தத்திற்கு அர்த்தமறியக்கூடுமாகில், இப்பதத்திற்கு இது அர்த்தமென்பது தெரிந்துகொள்ளலாம். சப்தத்திற்கு அர்த்தமறியும் விதமாவது—பெரியோர்களுடைய வ்யவஹாரத்தைக்கொண்டு இந்த சப்தத்திற்கு இது அர்த்தமென்று நிஸ்சயிப்பது லோகத்தில் அநுபவஸித்தமா யிருக்கிறது. அதெப்படியெனில்,— "அஸ்வம்" என்கிற பதத்திற்கு அர்த்த மறியாதவன் ஓரிடத்திற்குச்செல்ல, அங்குள்ள ஒருவன் மற்றொருவனைப்பார்த்து "அஸ்வத்தைக்கொண்டுவா, அஸ்வத்தைக்கொண்டுபோ, அஸ்வத்தைக்கட்டு" என்று பலவாறு அஸ்வபதத்தினால் வ்யவஹரிக்க,அதைக்கேட்டு மற்றொருவன் குதிரையைப்பற்றியே அந்தந்த க்ருத்யங்களைச் செய்ய, அவன் சொன்னதையும், இவன் செய்ததையும் பார்த்திருந்த இவன் "அஸ்வம் என்ற" சொல் கொண்டுவருதல் கொண்டுபோதல் முதலிய க்ரியையோடு ஸம்பந்தித்த இவ்வாகாரமான [illegible] என்று அஸ்வபதத்திற்கு அர்த்தம் தெரிந்துகொள்ளுகிறான்; இவ்விதமொழிய சப்தத்திற்கு அர்த்தம்தெரிந்துகொள்ள வேறுஉபாயமில்லை.கீழ்ச்சொல்லிய இவ்வித வ்யவஹாரம் எடுத்தல்,பிடித்தல்,வைத்தல் முதலிய க்ரியைகளோடு ஸம்பந்தித்த கார்ய வஸ்துக்களைப்பற்றியே காண்கிறது; ஆகையால் அவ்விதமான வஸ்துக்களே சப்தத்தினாலறியத்தக்கது. ஸித்தரூபமான ப்ரஹ்மம் இவ்வித கார்யங்களுக்கு யோக்யமல்லாததாகையால், வேதாந்தவாக்யத்தினா லறியக்கூடுமென்கிற நிச்சயம் கிடையாது. ஆகையால் வேதாந்த விசாரம் செய்யக்கூடாது.——ஸித்தாந்தம். சப்தார்த்த மறிவதற்கு வ்ருத்தவ்யவஹாரமேயன்றி ஆப்தவாக்யமும் காரணமாகக்காண்கிறது. எங்ஙனேயெனில்,—பெரியோர்கள் பாலர்களை யெடுத்துக்கொண்டு "இதுபசு,இதுபக்ஷி, இதுமரம்" என்று தன் சுட்டுவிரலினால் அவ்வவ வஸ்துக்களைக் காட்டிச்சொல்ல, பாலர்களும், பசு என்கிற பதத்திற்கு இது அர்த்தம்; பக்ஷி என்கிற பதத்திற்கு இது அர்த்தமென்று தெரிந்துகொண்டு பிறருக்கு அவ்வஸ்துவை யறிவிக்கைக்காக அந்தந்த சப்தங்களை ப்ரயோகிக்க, அவர்களுமந்த சப்தத்தைக்கேட்டு அவ்வர்த்தத்தை யறியக்கண்டு "இந்தசப்தம் இவ்வர்த்தத்தை போதிப்பிக்கிறதென்று நிஸ்சயித்துக் கொள்ளுகை லோகாநுபவ ஸித்தமாகையால் வேதாந்தங்களிலும் பெரியோர்கள் சொல்லுவதைக்கேட்டு அர்த்தம் தெரிந்துகொள்ளக்கூடுமாகையால் வேதாந்த வாக்யங்களைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யலாம் என்று.

அதி - ௨, ஸூ - ௨.

—* ஜந்மாத்யஸ்ய யத:. *—

(ப-பா-வ்ரு.) அஸ்ய - இந்தஜகத்திற்கு, ஜந்மாதி - உத்பத்திஸ்திதி லயங்கள், யத: - எதினிடத்தில் நின்றுமோ; (அது ப்ரஹ்மம்). ஜகஜ்ஜந்மாதிகாரணத்வம் ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் என்று பொருள். ௨.

(ஸ - ஸா.) ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டுமென்றால் ப்ரஹ்மத்திற்கு இதுலக்ஷணமென்று முதலறியவேண்டும்; ஆகையால் இந்த ஜகத்தினுடைய உத்பத்திஸ்திதிலயங்களுக்குக் காரணமாகிய வஸ்துவே பரப்ரஹ்மமென்று இந்த ஸூத்ரத்தினால் லக்ஷணம் சொல்லுகிறார். ௨.

(பா - ஸா.) ப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் சொல்லுகிற "யதோவா இமானி பூதானி ஜாயந்தே" இத்யாதிவாக்யம் இந்த ஸூத்ரத்திற்கு விஷயம்.—பூர்வஸூத்ரத்தில் ப்ரஹ்மவிசாரம் செய்யலாமென்றுசொல்லிற்று அந்த ப்ரஹ்மம் "யதோவாஇமானி" இத்யாதி வாக்யத்திற்சொன்ன ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் என்கிற லக்ஷணத்தினால் அறியக் கூடுமென்று இந்த ஸூத்ரத்திற் சொல்லுகிறது.—இங்கு, (ஜகஜ்ஜந்மாதி) இவ்வாக்யத்திற் சொன்ன காரணத்வம் ப்ரஹ்மத்திற்கு லக்ஷணமாகுமா? ஆகாதா? வென்று ஸம்சயம்.—ஆகாதென்று பூர்வபக்ஷம்.—ஏனென்றால், "இது வெட்டுண்டது, இது பூர்ணமாயுள்ளது" என்றால், வெட்டுண்கை, பூர்ணமாயிருக்கையாகிற இரண்டு விசேஷணங்களும் ஓரிடத்திலிருக்கமாட்டாவாகையால் இவ்விரண்டு விசேஷணங்களுக்கு ஆச்ரயம் இரண்டு வ்யக்திகளாகவேணுமென்று இரண்டு வ்யக்திகள் தோற்றுவதுபோல், இங்கும் ஜகஜ்ஜந்மாதி காரணமென்றால், ஜந்மகாரணத்வமும், ஸ்திதிகாரணத்வமும், லயகாரணத்வமுமாகிய இந்தமூன்று விசேஷணங்களும் தனித்தனியே மூன்று வ்யக்திகளிலிருக்குமல்லது ஒருவ்யக்தியிலிருக்கமாட்டாவாகையால் மூன்றுவ்யக்திகளே தோன்றும். மூன்று விசேஷணங்களையுடைய அப்ரத்யக்ஷமான ப்ரஹ்மவ்யக்திதோற்றாதென்று. —ஸித்தாந்தம். தேவதத்தனென்பவன், கறுத்திருக்கிறான், யௌவநமுடையவன், குண்டலமணிந்தவன், என்றால் இம்மூன்று விசேஷணங்களையுமுடைய ஒருபுருஷனேதோற்றுவது அநுபவஸித்தமாயிருக்கிறது. அதுபோல் இங்கும் மூன்று விசேஷணங்களையுடைய ஒரு ப்ரஹ்ம வ்யக்தி தோற்றலாம், விசேஷணம் வெவ்வேறானால் அவற்றுக்கு ஆச்ரயமும் வெவ்வேறாக வேண்டுமென்கிற நியமமில்லையாகையால் ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ப்ரஹ்மத்திற்கு லக்ஷணமாகலாமென்று. ௨.

அதி-௩, ஸூ-௩. —* சாஸ்த்ரயோநித்வாத், *—

(ப - வ்ரு.) சாஸ்த்ரயோநித்வாத் - வேதசாஸ்த்ரத்துக்கும் காரணமாகையாலே (ப்ரஹ்மம் ஸகல ஜகத்காரணமாகும்.)

(ஸ - ஸா.) ஜகத்து என்றால் அதற்குள் வேதமும் அடங்கியிருக்கிறது. அது ஒருவரால் செய்யப்பட்டதன்று; நித்யம்; அதற்கு அழிவில்லை, ஆகையால் ப்ரஹ்மத்தை ஜகத்திற்கெல்லாம் காரணமென்று சொல்லக்கூடாது. அப்படியாகில் வேதம் அநித்யமாய்விடும் என்கிற பூர்வபக்ஷத்திற்கு,—சாஸ்த்ரயோநித்வாத்-வேதசாஸ்த்ரத்திற்குங்காரணமாகையாலே ப்ரஹ்மம் ஸகல ஜகத்திற்கும் காரணமென்று சொல்லலாம். அதெப்படியெனில்,-எவனொருவன் முதலில் ஓரர்த்தத்தையறிந்து அதைப்பிறரறியும்படி பிறகு தகுந்த சப்தங்களை ஆலோசித்துச் சேர்த்து ஸந்தர்ப்பத்தை

செய்கிறானே; அவனால் செய்யப்பட்ட அந்த க்ரந்தமே யநித்ய மெனப்படும் இங்கு அப்படியன்றி, வேதார்த்தங்களையும், பூர்வகல்பத்திலிருந்த வேதத்தினுடைய பூர்வியையும் ஏககாலத்தில் அறிந்து அந்தவேதத்தை ப்ரஹ்மாதிகளுக்கு உபதேசித்தபடியால் வேதமும் அநித்யமாகமாட்டா. அதற்கு ப்ரஹ்மமும் கர்த்தாவாகலாம். ஆகையால் ஜகத்காரணத்வம் ப்ரஹ்மத்திற்கு லக்ஷணமாகக்கூடும்:—

ஒருவனொன்றை ஸ்ருஷ்டிக்கும்போது அவ்வஸ்துவை யவனறிந்தவனாகவேண்டும். அப்படியே ஸகலஜகத்தையும் ஸ்ருஷ்டிக்கிற ப்ரஹ்மம் ஸர்வஜ்ஞ சக்தியையுடைத்தாகவேண்டுமேயென்னில், ஸகலார்த்தங்களையு மறிவிப்பிக்கிற வேதசாஸ்த்ரத்திற்குக் கர்த்தாவாகையால் ப்ரஹ்மத்திற்கு அந்த சக்தியுண்டென்னத் தட்டில்லை என்றும் இந்தஸூத்ரத்திற்குத் தாத்பர்யமுண்டு.

ப்ரஹ்மம் ஜகத்காரணமென்றால் இதற்குப்ரமாணம் என்னவென்கிற சங்கைக்கு, இதற்கு வேதசாஸ்த்ரமே ப்ரமாணமென்று இந்த ஸூத்ரத்தினால் ஸமாதானம் சொல்லுகிறார் என்றும் ஒருதாத்பர்முண்டு. இவ்வர்த்தத்தில், ஶாஸ்த்ர யோநித்வாத்—சாஸ்த்ரத்தைப் ப்ரமாணமாக உடையவனாகையால் என்று அர்த்தம். ௩.

(ஶ்ரீ-வ்ரு.) ஶாஸ்த்ரயோநித்வாத்-(ப்ரஹ்மம்)சாஸ்த்ரத்தையே(வேதாந்தவாக்யங்களையே)காரணமாக (ப்ரமாணமாக)உடையதாகையால், ("யதோவா இமாநி" இத்யாதிவாக்யம் ப்ரஹ்மத்தை போதிப்பிக்கும்). ஶாஸ்த்ரமொழிய ப்ரத்யக்ஷம் - அநுமாநம் முதலிய மற்ற ப்ரமாணாந்தரங்களுக்கு ப்ரஹ்மம் விஷயமல்லாமையால் வேதாந்தவாக்யம் ப்ரஹ்மத்திற்கு போதகமாகுமென்று தாத்பர்யம். ௩.

(ஶ்ரீ-ஹா. இந்த ஸூத்ரத்திற்கும் "யதோவா இமாநி" என்கிறவாக்யமே விஷயம். இவ்வாக்யம் ப்ரஹ்மபோதகமாகுமா? ஆகாதா? வென்று ஸம்ஶயம்.—ஆகாது; ஏனென்றால்,-உத்பத்தி விநாசசாலியான கடாதிபதார்த்தங்கள் ஒருவனால்ஸ்ருஷ்டிக்கப்படுவதுபோல்.உத்பத்தி விநாஶஶாலியான இஜ்ஜகத்தும் ஒருவனால்ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கவே வேண்டும். இதை ஸ்ருஷ்டிக்க அல்பஜ்ஞராய் அல்பஶக்திகளாயுள்ள ஜீவர்களால் முடியாதாகையால் இதற்குக்கர்த்தாவானவன் ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியாயுள்ளவனாகவேணும்; அவனே ப்ரஹ்மமெனப்படுவான் என்று அநுமாநத்தினால், ஸர்வஜ்ஞனாய்,ஸர்வஶக்தியாயுள்ள ஈஶ்வரனொருவன் ஜீவ விலக்ஷணனாய் ஸித்திக்கிறான் ஆகையால் அநுமாநபோதிதமான ப்ரஹ்மத்தை, ப்ரமாணாந்தரா ப்ராப்தமான வஸ்துவையே போதிப்பிக்கவல்ல ஶக்தியுடைய ஶாஸ்த்ரம் போதிப்பிக்கமாட்டாது என்று பூர்வபக்ஷம்—ஸித்தாந்தம்—உத்பத்தி விநாஶஶாலியான இஜ்ஜகத்துக்கு கர்த்தாவை அநுமாநத்தினால்கொள்ளினும், விஶ்வாமித்ராதிகளைப்போல் ஶக்திமான்களான ஜீவர்களால் ஒவ்வொருபாகம் ஒவ்வொருகாலத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்று கொள்ளுகை யுக்தமாயிருக்க இவர்களைக்காட்டிலும் அதிரிக்தனாகிய ஒரு ஈஶ்வரன் இவ்வநுமாநத்தினால் ஸித்திப்பதரிது; ஆகையால் ப்ரமாணாந்தரா விஷயமான ப்ரஹ்மத்துக்கு இவ்வாக்யம் போதகமாகுமென்று.

௩௰ - ௨ ஸூ - ௪. —* தத்து ஸமந்வயாத். *—

(ஶ்ரீ-வ்ரு.) ஸமந்வயாத் - அகண்டமான ப்ரஹ்மஸ்வரூபத்தில் வேதஶாஸ்த்ரத்திற்குத் தாத்பர்ய முண்டாகையாலே, தத் - அந்த ப்ரஹ்மம், (வேதப்ரமாணஸித்தமாகும்).

(ஸ - ஹா) வேதவாக்யங்களில் ஜ்யோதிஷ்டோமம் முதலியகர்மங்களை விதிக்
கிற விதிவாக்யங்களே முக்யப்ரமாணங்களென்றும், அத்துடன் சேர்ந்த மந்த்ரங்கள்
அந்தகர்மத்திற்கு வேண்டிய அர்த்தங்களை வ்யக்தமாகச் சொல்லுகையாலும், அர்
த்தவாத வாக்யங்கள் அதை ஸ்தோத்ரம் செய்கையாலும் ப்ரமாணங்களென்றும்,
மற்றவாக்யங்கள் அப்ரமாணங்களென்றும் மீமாம்ஸகர்கள் கொள்ளுகிறார்கள். இப்
படியிருக்க, வேதாந்த வாக்யங்களும் ப்ரமாணமாகவேண்டுமாகில், விதிவாக்யத்திற்
சொன்ன யாகாதிகளைச்செய்கிற ஜீவனை ஸ்தோத்ரம்செய்கிறதென்றே சொல்லவே
ண்டுமாகையால் அவைகள் ப்ரஹ்மத்தை போதிப்பிக்கமாட்டா. மேலும் இவ்வா
க்யங்கள் விதிவாக்யங்களுடன் சேர்த்தியின்றி வெகுதூரத்திலிருக்கிறபடியால் அ
வைகளுடன் அந்வயிக்கவும் மாட்டா, ப்ரமாணங்களுமாகமாட்டா, மேலும் சாஸ்
த்ரங்கள் ஒருபலத்தை யறிவிப்பிக்கைக்காக உண்டாயிருக்கிறது. பலமென்பது
ஸுகமென்றும், துக்கநிவ்ருத்தியென்றும் இரண்டுவிதம். அதில் ஸுகம் யாகாதி
கர்மங்களில் ப்ரவ்ருத்தியினாலும், துக்கம் பரதாரகமநாதிகளில் நின்றும் நிவ்ருத்தி
யினாலும் உண்டாகின்றன; ஆகையால் ஸாதநங்களாகிய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச்
சொல்லி அவ்வழியாலே ஸுகாதிபலங்களைச் சொல்லுகையாலே "யஜேத" "நபர
தாராந் கச்சேத்" இத்யாதி வாக்யங்களே ப்ரமாணங்கள், வேதவாக்யங்கள் ப்ரவ்ரு
த்தி நிவ்ருத்திகளி லொன்றையும் சொல்லாமையால் அவைகள் ப்ரமாணங்களேயாக
மாட்டா. மேலும், கலசாதிகளான ஸித்த வஸ்துக்கள் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணாந்த
ரகோசரங்களாகையால் அவற்றிற்போல் ஸித்தமாகிய ப்ரஹ்மத்தினிடத்திலும் சாஸ்
த்ரங்கள் ப்ரமாணங்களாகமாட்டா, இத்யாதி சங்கைகளுக்கு: இந்தப்ரஹ்மம் கர்ம
ஹீநமென்று சொல்லுகையாலே பூர்வகாண்டத்தில் கர்த்தாவாகச் சொல்லப்பட்ட
வனன்று. உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலிய ஆறுவிதமான தாத்பர்ய லிங்கங்கள்
இருக்கையாலே இவ்வாக்யங்கள் ப்ரஹ்மப்ரதிபாதகங்களாகத்தட்டில்லை. ப்ரமாணங்
களாகவும் குறையில்லை. இவ்வாக்யங்களை விதிவாக்யங்களுடன் அந்வயித்து அவ்
வர்த்தங்களுக்கு உபபாதகங்களென்னக்கூடாது. ஏனெனில், அவ்வாக்யத்திற்கு
விதிசேஷமென்று பெயர். அந்த விதிசேஷமானது ப்ரத்யக்ஷாதிகளினால் ஸித்த
மாகிய யூபஸ்தம்பம் புரோடாசம் முதலிய வஸ்துக்களுக்கு,விதிக்கப்பட்ட கர்மங்க
ளுடன் ஸம்பந்தத்தைச் சொல்லும். இவ்வாக்யங்கள் அப்படி யன்றி ப்ரஹ்மஸ்வ
ரூபத்தையே அறியவேண்டுமென்று சொல்லுகிறது ஆகையால் விதிசேஷமன்று,
ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஒன்றுமில்லாத ப்ரஹ்மஸ்வரூபத்தை அறிந்தமாத்ரத்தினாலே
யே அஜ்ஞானத்தில் நின்றும் விடுபட்டுப் பரமாநந்தத்தை யடைகிறானென்று சொல்
லுகையாலே பலத்தை போதிப்பிக்கிற தென்னுமதிலும் தடையில்லை. இத்யாதி
ஸமாதானங்களை மனதிற்கொண்டு இந்தஸூத்ரத்தைச் சொன்னார். து-என்று இவ்
விதமான சங்கைவேண்டாமென்கிறது. ஸம் - என்று ப்ரஹ்மத்தின் அகண்டரூபத்
தைக் காட்டுகிறது. அந்வயாத் - தாத்பர்யவிஷயமாகையாலே, அகண்டரூபமாகிய
ப்ரஹ்மம் வேதாந்தவேத்யமாகலாம் என்று ஸூத்ரத்திற்கு அர்த்தம்.

(ரா-வ்யா.) ஸமந்வயாத்-(ஆநந்தரூபமானப்ரஹ்மத்தில் சாஸ்த்ரங்கள்)
ஸாக்ஷாத் அந்வயிக்கையாலே, தத்- சாஸ்த்ரப்ரமாணகத்வம். (ப்ரஹ்மத்து
க்குக்கூடும்) என்கிறது - ப்ரஹ்மத்துக்கு சாஸ்த்ரப்ரமாண கத்வம்
கூடாதென்கிற சங்கையை நிவர்த்திப்பிக்கிறது·—புருஷார்த்த போதக
ங்களாக வேதாந்தவாக்யங்கள் ஆநந்தரூபமான ப்ரஹ்ம ப்ரதிபாதகங்க
ளாகையாலே இவ்வாக்யங்களினால் ப்ரஹ்மம் போதிக்கப்படும் என்று
அர்த்தம்.

[illegible] முனைவரையம ஆதக்கும் விஷயம். இவ்வாக்யத்திலும் ப்ரஹ்மம் போதிதமாகுமா? ஆகமாட்டாதா? வென்று ஸம்ஶயம். “யஜேத ஸ்வர்க்ககாமஃ” “ந கலஞ்ஜம் பக்ஷயேத்” [illegible] என்கிற வாக்யங்கள் புருஷனுடைய ஸத்கர்மப்ரவ்ருத்தி அஸத்கர்மநிவ்ருத்திகளைச் சொல்லி, அந்தப்ரவ்ருத்தி நிவ்ருத்தித்வாரா ஸ்வர்க்கப்ராப்த்யாதிரூப புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கையாலே ப்ரமாணங்களாகின்றன; ப்ரஹ்மபோதகமான வாக்யம் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச் சொல்லாமையால் தத்வாரா ப்ரஹ்மபோதகமுமன்று; ப்ரஹ்மம் புருஷார்த்தரூபமல்லாமையால் “இங்கு நிதியிருக்கிறது” என்கிற வாக்யத்தைப்போல் ஸாக்ஷாத்தாகவும் ப்ரஹ்மபோதகமன்று. ஆகையால் இவ்வாக்யத்திலும் ப்ரஹ்மம் போதிதமாகாதென்று பூர்வபக்ஷம்.—ஸித்தாந்தம் “ஆநந்தோ ப்ரஹ்ம” “ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்” “ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்” இத்யாதி வாக்யங்கள், பரப்ரஹ்மம் நிரதிசயாநந்த ஸ்வரூபமென்று ப்ரதிபாதிக்கின்றன. ஆகையால் நிரதிசயாநந்தரூபமான ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்கள் ஸாக்ஷாத் புருஷார்த்த போதகங்களாகையால் பரம்பரயா புருஷார்த்த போதகமான “யஜேத” இத்யாதிவாக்யங்களைக் காட்டிலும் ப்ரமாணதமமான இவ்வாக்யத்திலும் ப்ரஹ்மம் போதிக்கக்கூடுமென்று.

கயி-ரு. ஸூ-ரு. —* ஈக்ஷதேர்நாஶப்தம். *—

(ஸூ-வ்யா.) ஈக்ஷதே:-(ஜகத்காரணத்திற்கு) ப்ரத்யக்ஷஜ்ஞாநமுண்டென்று சொல்லுகையினாலே, அஶப்தம் - (அசேதநமான) மூலப்ரக்ருதியானது, ந - ஜகத்காரணமாகமாட்டாது. ரு.

(ஸ-ஹா.) இப்படி ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட வஸ்து நீங்கள் சொல்லுகிற ப்ரஹ்மமன்று. அசேதநமுமாய் பரிணாமியுமாகிய இஜ்ஜகத்துக்கு அசேதநமும் பரிணாமியுமான மூலப்ரக்ருதியே காரணமாகவேண்டும். ஒருவிதமான பீஜத்தில் நின்றும் மற்றொருவிதமான பலம் காணுகையாலே கார்யஸஜாதீயமாகவே காரணம் கொள்ளவேண்டுமாகையால் சைதந்யரூபமாகிய ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறான மூலப்ரக்ருதியே காரணமாகவேண்டும். ஸத்வகுணமுடையவர்கள் ஜ்ஞாநிகளென்பது ப்ரஸித்தமாகையாலே ஸத்வகுணமுடைய இந்தமூலப்ரக்ருதியும் ஸர்வஜ்ஞமென்று சொல்லக்கூடும். ஜ்ஞாநஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாநம்கூடாமையாலே ப்ரஹ்மம் காரணமாகில் அது ஸர்வஜ்ஞமென்பது கூடாது என்கிற சங்கைக்கு,—“ததைக்ஷத” ஸத் என்கிற சப்தத்தினால் சொல்லப்பட்ட அந்த காரணவஸ்து ஸகலத்தையும் ஸாக்ஷாத்கரித்ததென்று சொல்லுகையால், அது அசேதநமாகிய ப்ரக்ருதிக்குக் கூடாமையால் ஸத் என்கிற காரணவாசகபதத்தினால் ப்ரதாநம் சொல்லப்படமாட்டாது; ஆதலால் அதுகாரணமாகமாட்டாது. மேலும் ஸத்வகுணத்தை உடைத்தாகையாலே ஸர்வஜ்ஞமாவதுபோல் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் உடைத்தாகையாலே அல்பஜ்ஞமுமாகவேண்டும். ப்ரகாச ஸ்வரூபனான ஸூர்யன் ப்ரகாசிக்கிறானென்பதுபோல் ஜ்ஞாநஸ்வரூபமான ப்ரஹ்மமும் ஸர்வஜ்ஞமென்று சொல்லத்தட்டில்லை என்று இந்தஸூத்ரத்தினால் ஸமாதானம்சொல்லுகிறார்.

(ஶா-வ்யா.) ஈக்ஷதே:-ஈக்ஷிதாத்வர்த்தமான ஸங்கல்பத்தினாலே, (ஜகத்காரணமானது தான் இவ்விதமாக ஸ்ருஷ்டிக்கப்போகிறேனென்று ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்ருஷ்டிக்கிறதென்றுசொல்லியிருக்கிறபடியால்); அஶப்தம் - சப்தமாத்ரத்தையே ப்ரமாணமாக உடைத்தாகாத (அநுமாநத்

நிறுவநியத்தக்கதான) (அசேதநமான) [illegible], [illegible] ணமட்டாது. ஸங்கல்பிக்கை சேதநதர்மமாகையால் அந்த [illegible] யுடைய ஜகத்காரணம் அசேதநமான மூலப்ரக்ருதி யாகமாட்டாதென்று பொருள்.

(ஸ்ரீ-பா.) "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யாதி வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.— இவ்வாக்யத்தில் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டது ஸாங்க்யர்கள் சொல்லும் மூலப்ரக்ருதியா, அல்லது நிரவதிகாநந்த ரூபமான பரப்ரஹ்மமா வென்று ஸம்சயம்.—ஸத்வ ரஜஸ் தமோமயமாய், பரிணாமியாய், அசேதநமாய், விகாராஸ்பதமான இஜ்ஜகத்துக்கு, கடத்துக்கு ம்ருத்பிண்டம்போலே, ஏதத்ஸஜாதீயமாய், இக்குணங்களையுடைய அசேதநமே காரணமாகவேணும். அதற்கு மூலப்ரக்ருதி யென்று பெயர். அதையே இவ்வாக்யம் ப்ரதிபாதிக்கிறது. "யேநாச்ருதம்" இத்யாதி வாக்யத்திலும் அந்த மூலப்ரக்ருதியை யறிந்தால் ஸகலம் அறிந்ததேயாம், என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, அதெப்படியெனில்,— ம்ருத்பிண்டத்தையறிந்தால் தத்கார்யமான கட சராவாதிகளும், ஸ்வர்ணபிண்டத்தை யறிந்தால் தத்கார்யமான கடகமகுடாதிகளும் அறிந்ததேயாமாப்போலே என்று த்ருஷ்டாந்தம் சொல்லுகையாலே, ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்த கடிதமான ஸாங்க்யர் சொல்லுகிற அநுமாநப்ரக்ரியை தோற்றுகையால் இவ்வாக்யத்திற்சொன்ன ஜகத்காரணம்மூலப்ரக்ருதியேயென்று பூர்வபக்ஷம்.—ஸித்தாந்தம்.—இதற்குமேல் வாக்யத்தில் "ததைக்ஷத பஹுஸ்யாம் - அந்தஜகத்காரணம், 'நான் அநேகவிதமாக ஆகப் போகிறேன்' என்று முன்னம் ஸங்கல்பித்தது" என்று சொல்லுகையாலே, அந்தஸங்கல்பம் அசேதநமான மூலப்ரக்ருதிக்குக் கூடாமையாலே அதையுடைய நிரவதிகாநந்தரூபமான பரப்ரஹ்மமே இவ்வாக்யத்தில் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டது. * ஸாங்க்யர்சொல்லுகிற அநுமாநப்ரக்ரியையும் ஹேது சொல்லாமையால் இங்குத் தோற்றுகிறதில்லை. இதையறிந்தால் மற்றெல்லா மறிந்ததாகுமென்று சொன்னபின், இதெப்படி ஸம்பவிக்குமென்கிற சிஷ்யனுடைய ஸம்சயத்தைப் போக்குகைக்காக ஸ்வர்ணம் முதலிய த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டதென்று.

ஸூ-௬. கௌணச்சேந்நாத்மசப்தாத்.

(ஸூ-வ்யா.) கௌணஶ்சேத்.(ஜகத்காரணத்திற்குச் சொன்ன ப்ரத்யக்ஷம்) கௌணமென்றால், ஆத்மசப்தாத் - (ஜகத்காரணத்தைச் சேதநவாசியான) ஆத்மபதத்தினாற் சொல்லுகையாலே, ந - அசேதநமாகிய ப்ரக்ருதி காரணமாகமாட்டாது.

(ஸ்ரீ-பா) "தத்தேஜ ஐக்ஷத" என்று பஹுவாக்யங்களில் தேஜஸ்ஸு முதலிய அசேதநங்கள் ஸாக்ஷாத்கரிக்கிறதென்று சொல்லுகையாலே அவற்றுக்கு சேதநதர்மமான ஸாக்ஷாத்காரம் கூடாமையால் அந்த ஸாக்ஷாத்காரம் கௌணமென்றுகொள்வதுபோல் இங்கும் ஸத் என்பதற்குச்சொன்ன ஸாக்ஷாத்காரம் கௌணமாகக்கொண்டோமாகில், அது மூலப்ரக்ருதியென்று கொள்ளக்குறையில்லை என்

---

* ஆநுமாநிகர்கள் வாக்யமாகில் ப்ரதிஜ்ஞை, ஹேது, உதாரணம், உபநயம், நிகமநம், என்று ஐந்துவாக்யமுண்டாயிருக்கவேணும். இங்கு இரண்டே இருக்கையால் இது அநுமான ப்ரக்ரியை யன்றென்று தாத்பர்யம்.

னில்,—ஜகத்காரணமாகிய ஸத்தை ஆத்மாவென்று சேதநவாசியான ஆத்மசப்தத்தி ஞல் சொல்லுகையாலே அது அஸங்கதமாய்விடும்; ஆகையால் மூலப்ரக்ருதி காரண மென்று சொல்லக்கூடாது.

(ரா-வ்ய.) மளணஃவெசஃ - கௌணரூபமான (ஸ்ருஷ்ட்யுந்முகஸ்வரூப மான) ஸங்கல்பமே இங்குசொல்லிற்று (ஆகையால் அதையுடைய மூலப்ர க்ருதியே ஜகத்காரணம்) என்னில், ஆத்மஶப்தாத் - (இந்தஜகத்காரணத்தை சேதநவாசகமான) ஆத்மசப்தத்திஞல் சொல்லுகையாலே, ந - மூலப்ரக் ருதி யாகமாட்டாது.

(ஶ்ரு - பா.) இதற்குமேல் வாக்யங்களில் "தத்தேஜ ஐக்ஷத" "அப ஐக்ஷந்த - ஸங்கல்பித்தது" "தாஆப ஐக்ஷந்த அந்தஜலம் ஸங்கல்பித்தது" என்று அசேதநமான ஜலதேஜஸ்ஸுக்களுக்கும் ஸங்கல்பம் சொல்லுகையாலே அது சேதந தர்மமான ஸங்கல்பமன்று; *ஸ்ருஷ்ட்யுந்முகத்வரூபமான அசேதநகதஸங்கல்பமென்று கொள் ளவேணும். அதுபோல் அதோடு ஸமாநமான இந்தஸங்கல்பமும் கௌணமென்றே கொள்ளவேணும். இந்த கௌணஸங்கல்பம் அசேதநத்திலும் ஸம்பவிக்குமாகையால் மூலப்ரக்ருதியே இங்கு ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டதென்று பூர்வபக்ஷம்,— "கௌணஶ்சேந்நாத்மஶப்தாத்" என்று ஜகத்காரணமான வஸ்துவை சேதநவாசகமான ஆத்ம சப்தத்திஞல் சொல்லுகையால் அசேதநமான ப்ரதாநம் இங்கு ப்ரதிபாதிக்கப்படமாட்டாது. 'தத்தேஜ ஐக்ஷத' இத்யாதி வாக்யங் களிலும்; அந்ததேஜஸ்ஸை சரீரமாகஉடைய பரமாத்மா ஸங்கல்பித்தான் என்று சொல்லுகையாலே சேதநதர்மமான முக்யஸங்கல்பத்தையே சொல்லிற்ருகையால் அதுவும் கௌணஸங்கல்பமாகமாட்டாது என்று ஸித்தாந்தம்.

ஸூ - ஏ. தந்நிஷ்஠ஸ்ய மோக்ஷோபதேஶாத்.

(ஶ்ரு - வ்ய.) தந்நிஷ்஠ஸ்ய - அந்த ப்ரஹ்மத்தில் ஜீவனுடைய ஐக்ய ஜ்ஞாந முடையவனுக்கு, மோக்ஷோபதேஶாத் - மோக்ஷமுண்டாகு மென்று சொல்லுகையாலே, (ப்ரதாநம் காரணமன்று.) ஏ.

(ஶ்ரு-பா.) ஆத்மா என்று தனக்கு அத்யந்தம் உபகாரியாகிய வஸ்துவையும் சொல்வதுண்டு. எங்ஙனேயென்னில்,—அரசன் தனக்குமிகவும் வேண்டியவனுயிரு க்கிற வேலைக்காரனைப்பார்த்து இவன் எனக்கு ஆத்மா; அதாவது-எனக்குப்ராணன் என்று சொல்லுகிறுன். அதுபோல் இங்கும் ஆத்மாவுக்கு போகமோக்ஷரூபமாகிய மஹோபகாரத்தைப்பண்ணுகிற மூலப்ரக்ருதியையே ஆத்மா வென்று சொல்லுகி றது என்னில்,—"தத்வமஸி" என்கிறமேல்வாக்யம், ஆத்மா என்று சொல்லப்பட்ட வஸ்துவே நீயென்று உபதேசித்து இப்படி நினைக்கிறவனுக்கு மோக்ஷமுண்டாகும் என்று சொல்லுகிறது. ஆத்மசப்தம் மூலப்ரக்ருதியைச் சொல்லுமாகில் அதை அநு ஸந்தித்தவனுக்கு மோக்ஷங்கூடாமையால் அது அஸங்கதமாகும். ஏ.

(ரா - வ்ய.) தந்நிஷ்஠ஸ்ய - அந்தப்ரஹ்மத்தை உபாஸநம்செய்கிறவ னுக்கு, மோக்ஷோபதேஶாத் - (இந்த ப்ராரப்தசரீரம் கழிந்தவாறே) மோக்ஷப்ராப்தி சொல்லுகையாலே, (ஸச்சப்தவாச்யமான ஜகத்காரணம் ப்ரதாநமன்று.) ஏ

---

* ஜகத்ரூபமாகப் பரிணமிக்கைக்கு அடுத்த பூர்வக்ஷணத்திலுள்ள அவஸ்தையை யே இங்கு ஸங்கல்பமெனப்படும், என்று தாத்பர்யம்.

(ஸ்ரீ-பா.) "தத்வமஸி" என்று மேல்வாக்யத்தில், ஜீவாத்மாவை ஸச்சப்தவா ச்யமான ஜகத்காரணவஸ்துவுக்கு சரீரமாக அநுஸந்திக்கிறவன் "தஸ்ய தாவதேவ சிரம்" இத்யாதி வாக்யத்தினுல் இந்த சரீரங்கழிந்தவுடனே மோக்ஷத்தை யடைகிறு னென்று சொல்லிற்று. அசேதநமான ப்ரதாநம் ஜகத்காரணமாகில் ததாத்மகத்வாநு ஸந்தாநம் ஸம்ஸாரஹேது வாகுமல்லது மோக்ஷஹேது வாகாது. ஆகையால் ப்ரதா நத்தைக்காட்டிலும் விலக்ஷணமான பரமசேதநனே ஜகத்காரணமென்று கொள்ள வேண்டும். எ.

ஸூ - அ. ஹேயத்வாவசநாச்ச.

(ஸு-பா-வ்ய.) ஹேயத்வாவசநாச்ச-(மூலப்ரக்ருதிக்கு) ஹேயத்வம் சொல்லவில்லை யாகையாலேயும், (மூலப்ரக்ருதி ஜகத்காரணமன்று.) அ.

(ஸு-பா.) ஆத்மாவே நீயென்றுசொன்னபிறகு ச்ரத்தாளுவாகிய ச்வேதகேது இந்த உபதேசத்தைநம்பி அப்படியே செய்வனென்று அதைத்தவிர்க்கைக்காக ஆத்ம சப்தவாச்யமான ப்ரக்ருதி ஸ்வரூபமே உன்ஸ்வரூபமென்று நினைக்கை ஹேயமெ ன்று சொல்லவேண்டும்; அப்படி சொல்லாமையால் ஆத்மாவென்றது மூலப்ரக்ருதி யன்று. அ.

(ஸ்ரீ - பா.) ஜகத்காரணம் மூலப்ரக்ருதியாகில் அது மோக்ஷவிரோதி யாகை யால் ஹேயமென்று சொல்லவேண்டும்; அப்படிச் சொல்லாமையாலும் ப்ரதானம் ஜகத்காரணமன்று.

ஸூ - கூ. ப்ரதிஜ்ஞாவிரோதாத்.

(ஸு-பா-வ்ய.) ப்ரதிஜ்ஞாவிரோதாத்-காரணஜ்ஞாநத்தினுல் மற்ற வையெல்லாம் ஜ்ஞாதங்களாய்விடும் என்றுசெய்த ப்ரதிஜ்ஞைக்கும் விரோ தம்வருகையாலே (ப்ரதாநம்ஜகத்காரணமன்று.) கூ.

(ஸு-பா-பா.) "யேநாச்ருதம்" என்கிற வாக்யம் எதையறிந்தால் அறியாதவை யெல்லாம் அறிந்ததாய்விடுமோ? அது ஜகத்காரணமென்று சொல்லிற்று. காரணம் ஜ்ஞாதமானுல் மற்றவையெல்லாம் தத்கார்யமாகையால் ஜ்ஞாதங்களாய்விடுமென்று தாத்பர்யம். ப்ரதாநம் ஜகத்காரணமாகில், அது ஜீவனைக்குறித்துக் காரணமாகாமை யால், ப்ரதாநஜ்ஞாநத்தினுல் சேதநன்ஜ்ஞாதனுகமாட்டான் ஆகையால் முன்செய்த ப்ரதிஜ்ஞையோடு விரோதிக்கும்; ஆதலால் ப்ரதாநம் ஜகத்காரணமன்று. கூ.

ஸூ - க0. ஸ்வாப்யயாத்.

(ஸு-பா-வ்ய.) ஸ்வாப்யயாத்-(ஜீவன் உறங்கும்போது) தனக்குக்கார ணமாகிய ஜகத்காரணத்தில் லயிக்கிறுனென்று சொல்லுகையாலே ப்ரதாந ம் ஜகத்காரணமன்று. க0.

(ஸு-பா.) இந்தஸூத்ரத்தில் "ஸ்வ" என்று ஆத்மாவைச்சொல்லுகிறது. உற ங்கும்போது அந்த ஆத்மாவில் லயத்தையடைகிறுனென்று சொல்லியிருக்கிறது. ஆத்மா என்பது மூலப்ரக்ருதியானுல், அசேதநமாகிய அதில் சேதநனுக்கு லயம் கூடாமையால் அது மூலப்ரக்ருதி யாகமாட்டாது. க0.

(ஸ்ரீ - பா.) "ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி" என்கிறவாக்யம் ஜீவன் ஸுஷுப்தி காலத்தில் ஸச்சப்தவாச்யமான ஜகத்காரணத்தில் லயிக்கிறுன் என்று சொல்லுகிறது. லயமாவது,—ஸ்வகாரணத்தோடு ஏகீபவித்திருக்கை ப்ர

தாநம், ஜகத்காரணமாகில் அது ஜீவனுக்குக் காரணமல்லாமையால் அதில் ஜீவனுக்கு லயம் சொல்வது சேராது ஆகையால் ப்ரதாநம் ஜகத்காரணமன்று. க௦.

ஸூ - கக. கதிஸாமாந்யாத்.

(ஶ்ரு-ரா-வ்யா.) கதிஸாமாந்யாத் - இதரமான உபநிஷத்துகளுக்கு என்ன கதியோ, (என்ன ந்யாயமோ?) அது இந்த உபநிஷத்துக்கும் ஸமமாக மாகையாலே (ஒத்திருக்கையாலே) (ப்ரதாநம் ஜகத்காரணமன்று). கக.

(ஶ்ரு - ஸா.) மற்ற உபநிஷத்துக்களிலெல்லாம் சேதநனையே காரணமாகச் சொல்லியிருக்கிறது. அதுபோலவே இங்கும் அங்கீகரிக்க வேண்டுமாகையால் ப்ரதாநம் ஜகத் காரணமன்று. கக.

(ரா - ஸா.) "ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத்" "ஏகோ ஹவை நாராயண ஆஸீத்" இத்யாதியான ஐதரேயோபநிஷத்வாக்யங்களில் ஸர்வஜ்ஞனான புருஷோத்தமனே ஜகத்காரணமென்று சொல்லுகையாலே, அந்த புருஷோத்தமனே இங்கும் ஜகத்காரணமாகச் சொல்லவேண்டியிருக்கையாலே ப்ரதாநம் ஜகத்காரணமாகச் சொல்லப்படமாட்டாது. கக.

ஸூ - கஉ. ஶ்ருதத்வாச்ச.

(ஶ்ரு-ரா-வ்யா.) ஶ்ருதத்வாச்ச - (இந்த உபநிஷத்திலும் ஸச்சப்தவாச்யத்துக்கு ஆத்மத்வம்) கேட்கப்படுகையாலும் (ப்ரதாநம் ஜகத்காரணமன்று). கஉ.

(ஶ்ரு-ஸா.) ஶ்வேதாஶ்வதரம் முதலிய உபநிஷத்துக்களில் ப்ரஹ்மமே காரணமென்று சொல்லுகையாலே அவ்வர்த்தமே இங்கும் ஸ்வீகரிக்கவேண்டும் ஆகையால் மூலப்ரக்ருதி ஜகத்காரணமன்று ;ப்ரஹ்மமே ஜகத்காரணம். கஉ.

(ரா - ஸா.) "ஆத்மநஏஷ ப்ராண:" என்று இந்த உபநிஷத்திலும் ஸத்சப்தவாச்யமான ஜகத்காரணம் சேதநவாசியான ஆத்ம ஶப்தத்தாலே சொல்லப்படுகையாலே ப்ரதாநம் ஜகத்காரணமன்று. ஸர்வஜ்ஞனுமாய் புருஷோத்தம ஶப்தவாச்யமான பரப்ரஹ்மமேஜகத்காரணம் என்று. கஉ.

அதி. ௬. ஸூ. கங. ஆநந்தமயோ(அ)ப்யாஸாத்.

(ஶ்ரு-வ்யா.) ஆநந்தமய:-ஆநந்தமய வாக்யத்திலிருக்கிற ப்ரஹ்மபதம், (ப்ரதாநமாக) ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது. அப்யாஸாத்-மேல் வாக்யங்களில் ப்ரஹ்ம பதத்திற்கு அப்யாஸம், காண்கையாலே. கங.

(ஶ்ரு - ஸா.) மேற்சொல்லிய பரப்ரஹ்மம் ஸகுணமென்றும் நிர்குணமென்றும் இரண்டுருவமுள்ளதாயிருக்கும். எந்த உருவத்தை உபாஸநம் செய்யச்சொல்லியிருக்கிறதோ, அது ஸகுணம். எந்த உருவத்தை யறிந்தால் மோக்ஷமுண்டாகுமென்று சொல்லியிருக்கிறதோ; அது நிர்குணம் என்று ஸித்தாந்தம்.—இனி மோக்ஷத்துக்கு ஸாக்ஷாத்காரணமாகிய ஜ்ஞாநத்தின் விஷயமானது ஸகுணமா, நிர்குணமா, என்று விசாரிக்கப்படுகிறது.

"ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா" என்கிற விடத்தில் 'ப்ரஹ்மம் ஒன்றுக்கு அங்கமாகச் சொல்லப்பட்டதா; அல்லது, அதுவே ப்ரதாநமாகச் சொல்லப்பட்டதா என்கிற சங்கையில், புச்சமென்று சொல்லுகையால், புச்சம், அதாவது

வால், ஒன்றுக்கு அங்கம் என்றே சொல்லப்பட்டது என்கிற பூர்வபக்ஷத்திற்கு—
இது ப்ராதாந்யமாகவே சொல்லப்பட்டது. "[illegible]" "[illegible]"
என்கிற மேல்வாக்யங்களில் ப்ரஹ்ம பதத்திற்கே ஆவ்ருத்தி காண்கிறது. ஒன்றுக்கு
அங்கமானால், அதாவது - இதனுடைய ஜ்ஞானம் ஸாக்ஷாத் மோக்ஷஸாதநமாகாவிட்
டால் அதை ஆவ்ருத்தி செய்ய உபயோகமில்லை ஆகையால் இது அங்கமாகச்சொல்
லப்படவில்லை என்று ஸமாதாநம் சொல்லுகிறார்.

(ஶ்ரீ - வ்யா.) [illegible] - ஆனந்தமயநிஷ்டமான ஆநந்தத்தை ஜீவா
நந்தந்தொடங்கி நூறு நூறு மடங்காக குணித்திருக்கிறபடியால், [illegible]
[illegible] :- ஆநந்தமயஶப்தத்தினால் சொல்லப்பட்டவன், (பரமாத்மா). கங.

(ஶ்ரீ - பா.) கீழ் அதிகரணத்தில் ஜகத்காரணம் அசேதநத்தைக் காட்டிலும்
விலக்ஷணமென்று சொல்லிற்று. இந்த அதிகரணத்தில் ஜீவனைக் காட்டிலுங்கூட
விலக்ஷணமென்கிறது.—அசேதநத்திற்கு ஸங்கல்பம் கூடாமையால் ஜகத்காரண
மாகாவிடினும் ஸங்கல்பமுடைய ஜீவன் ஜகத்காரணமாகலாமென்று ஶங்காஸங்கதி.
"[illegible]"
என்கிற வாக்யம் இந்தஸூத்ரத்திற்கு விஷயம்.— "[illegible]
[illegible]" என்றுதொடங்கி "[illegible]" என்று
ஜகத்காரணமாகச்சொல்லப்பட்ட ஆநந்தமயன், ஜீவாத்மாவா, பரமாத்மாவாஎன்று
ஸம்சயம்.— "[illegible]" என்று ஆநந்தமயனுக்குஶரீ
ரஸம்பந்தம் சொல்லியிருக்கிறது.ஶரீரஸம்பந்தம்புண்யபாபகர்மானுகுணம்.அதுஜீவ
னுக்கே யுள்ளதாகையால்ஜீவாத்மாவேஎன்றுபூர்வபக்ஷம்.—ஸித்தாந்தம்—"[illegible]
[illegible]" என்று ஆநந்தமயனுடைய ஆநந்தத்தைவிசாரிப்
பதாகத் தொடங்கி மநுஷ்யாநந்தத்தை முதலில்சொல்லி, அதைக்காட்டிலும் நூறு
மடங்கு மநுஷ்யகந்தர்வாநந்தம், அதைக்காட்டிலும் நூறுமடங்கு "தேவகந்தர்
வாநந்தமென்று இவ்வரிசையில் இந்த்ரன் ப்ருஹஸ்பதி சதுர்முகப்ரஹ்மா இவர்க
ளுடைய ஆநந்தங்களைக் கணக்கிட்டுச்சொல்லி, அதற்குமேல் ப்ரஹ்மாநந்தத்தைத்
சொல்லி, "யதோவாசோ நிவர்த்தந்தே" என்று அது வாங் மநஸ்ஸுக்களுக்கு
விஷயமன்றாகையால் அபரிச்சிந்நமென்று சொல்லிற்று. இந்த அபரிச்சிந்நமான
ஆநந்தம் அல்பஸுகமுடையஜீவனிடத்தில் ஸம்பவியாதாகையால் அவ்வாநந்தத்தை
யுடைய ஜகத்காரணனான ஆநந்தமயன் ஜீவனைக்காட்டிலும் பிந்நனான பரமாத்மா
வென்று கொள்ளவேணும். கர்மாதீநமான சரீரஸம்பந்தம் பரமாத்மாவுக்கு இல்
லாவிடினும், சித்துக்களெல்லாம் அவனுக்கு சரீரமாகையால் நிருபாதிகமான
சரீர ஸம்பந்தம் அவனுக்குஉண்டு ஆகையால் அவனே ஜகத்காரணனென்று ஸித்தா
ந்தம். கங.

ஸூ. கச. [illegible]

(ஸூ-வ்யா.) [illegible]-விகாரம் என்றால் அசைதல் முதலிய விகா
த்தை யுடைகிற அவயவம். அவயவமாக, அதாவது-புச்சமாகச்சொல்லுகை
யால், க-ப்ரதாநமாகச்சொல்லப்படவில்லை, உ. [illegible]-என்றால், க-அப்படி
யன்று. [illegible]-புச்சப்ராயம் என்கிற அபிப்ராயத்தாலேசொல்லு
கையாலே.

(ஸூ - ஸா.) * புச்சமென்கிற அவயவமாக ப்ரஹ்மத்தைச் சொன்னபடியால் ப்ரதாநமாகச் சொல்லப்படவில்லை என்னில், புச்சமென்பதில் தாத்பர்யமில்லை. புச்ச ப்ராயமென்று தாத்பர்யம். அதாவது,— கேட்கிறவர்களுக்கு ஸுலபமாகத் தெரிவிக்கைக்காக பக்ஷிபோலவும் அதின் அவயவங்கள்போலவும் கற்பித்துச் சொல்லிற்று

(பா-வ்ய.) விகாரசப்தாத்-விகாரார்த்தகமான மயட் ப்ரத்யயம் கேட்கப்படுகையாலே, ந-ஆநந்தமயன் பரமாத்மாவாகமாட்டான்; இதிசேத்- என்றால், ந - அப்படியன்று; ப்ராசுர்யாச் - மயட்ப்ரத்யயம் ப்ராசுர்யார்த்தகமாகையாலே, பரமாத்மாவே ஆநந்தமயன். ௧௩.

(பா - ஸா.) "ஆநந்தமய:" என்று ஆநந்த பதோத்தரமிருக்கிற மயட் ப்ரத்யத்துக்கு விகாரம் அர்த்தம், ஆக ஆநந்தமயபதத்துக்கு, ஆநந்த விகாரன், அதாவது ஆநந்தத்தினுடைய பரிணாமம் என்றர்த்தம். பரமாத்மா பரிணாமாதி விகாரசூந்யனாகையால் ஆநந்தமயபதம் பரமாத்மாவைச் சொல்லாது என்று பூர்வபக்ஷம். மயட் ப்ரத்யத்துக்கு விகாரம் அர்த்தமாகில் ஜீவனும்விகாரசூந்யனாகையால் அவனையும் சொல்லாது. ஆகையால். இந்தமயட் ப்ரத்யயத்திற்கு ப்ராசுர்யம் அர்த்தம். "ஆநந்தமய:" என்றால் ஆநந்தத்தினால் நிறைந்தவன் - அதிகமான ஆநந்தத்தை யுடையவன் என்று அர்த்தமாகையால் இந்தபதம் பரமாத்மாவைச் சொல்லத்தட்டில்லை என்று ஸித்தாந்தம். ௧௪.

ஸூ. ௧௫. தத்ஹேதுவ்யபதேசாச்ச.

(ஸூ - வ்ய.) தத்ஹேதுவ்யபதேசாச் - (ப்ரஹ்மத்தை) ஆநந்தமயத்துக்குக் காரணமாகச் சொல்லுகையாலே, (தான் அவயவமாக மாட்டாது).

(ஸூ - ஸா.) "இதம் ஸர்வமஸ்ருஜத" இந்தப்ரஹ்மம் ஆநந்தமயம் முதலிய ஸமஸ்தஜகத்தையும் ஸ்ருஷ்டித்தது என்று சொல்லுகையாலே தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஆநந்தமயத்திற்கு ப்ரஹ்மம் அவயவமாகமாட்டாது. ௧௪.

(பா-வ்ய.) தத்ஹேதுவ்யபதேசாச்ச - (ஆநந்தமயனை) ஜீவனுடைய ஆநந்தத்துக்குக் காரணமாகச் சொல்லுகையாலும், (ஆநந்தமயசப்த வாச்யன் ஜீவனன்று). ௧௫.

(பா - ஸா.) "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்று ஆநந்தமயன் ஜீவனை ஆநந்திப்பிக்கிறான் என்று சொல்லுகையாலே இந்த ஆநந்தமயன் ஜீவாத்மாவைக் காட்டில் வேறொருவனேயாகவேண்டும். ௧௫.

ஸூ. ௧௬. மாந்த்ரவர்ணிகமேவ ச கீயதே.

(ஸூ - வ்ய.) மாந்த்ரவர்ணிகம் ஏவ - மந்த்ர வர்ணத்திற் சொல்லப்பட்ட ப்ரஹ்மமே, கீயதே - இங்கும் சொல்லப்படுகிறது.

(ஸூ - ஸா.) † "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்-ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம". என்கிறவாக்யங்களில் ப்ரஹ்மத்தினுடைய எந்த ஸ்வரூபத்தை யறிதல் ஸாக்ஷாத்

* புச்சமென்றால் வாலுக்குப்பெயர். அது ஒருபக்ஷியின் அவயவன். அது முக்யமன்று. இத்தவால் எதினுடையதோ அதுவே முக்யமாகவேணும். ஆகையால். ப்ரஹ்மத்தை ஆநந்தமயத்திற்கு வாலாகச்சொன்னபடியால் ஆநந்தமயமே இவ்வாக்யத்திற்கு முக்யார்த்தம் என்றுதாத்பர்யம்.

† இரண்டிடத்திலும் ப்ரஹ்மபதத்தினால் வ்யக்தியை நிர்தேசிக்கையால். இரண்டிடத்திலும் சொல்லப்பட்ட வஸ்து ஒன்றேயாகவேணுமென்று தாத்பர்யம்.

மோக்ஷஸ்தானமென்று சொல்கிறது; அந்த ஸ்வரூபமே "ப்ரஹ்ம புச்சம்" என்கிற வாக்யத்தில் ப்ராஹ்ம பதத்தினால் சொல்லப்பட்டது. ஆகையால் இது அங்கமன்று.

(ஸ்ரீ.வ்யா.ஸா.) மாந்த்ரவர்ணிகமேவ ச கீயதே- "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கிற மந்த்ரவர்ணத்தில் சொல்லப்பட்ட பரப்ராஹ்மமே "அந்யோऽந்தர ஆத்மாநந்தமய:" என்கிற இடத்திலும் ஆநந்தமய சப்தத்தினால் சொல்லப்பட்டதாகையால் ஜீவனைக்காட்டிலும் வேறாய் பரப்ராஹ்ம சப்த வாச்யனான புருஷோத்தமனே ஆநந்தமய சப்தத்தினால் சொல்லப்படுகிறான். ௧௬.

ஸூ. ௧௭. நேதரோऽநுபபத்தே:.

(ஸு-வ்யா.) அநுபபத்தே: - ஜகத்ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்கள் இல்லாமையால், இதர: - ஆநந்தமய பதத்தினால் சொல்லப்பட்ட ஜீவன், ந - ப்ரஹ்மமாகமாட்டான். ௧௭.

(ஸு - ஸா.) ஆநந்தமயபதத்தினால் சொல்லப்பட்ட ஜீவனுக்கு ஜகத் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரமில்லாமையால் அவனிங்கு சொல்லப்படவில்லை. ௧௭.

(ரா - வ்யா.) அநுபபத்தே: - ஸத்யஸங்கல்பத்வாதி குணங்கள் முக்தனிடத்தில் ஸம்பவியாதாகையால், இதர:-பரமாத்மாவைக் காட்டிலும் வேறான முக்த புருஷனும், ந - ஆநந்தமயசப்த வாச்யனன்று. ௧௭.

(ரா - ஸா.) இந்தஸூத்ரத்தில் முக்த புருஷனுங்கூட ஆநந்தமய சப்தத்துக் கர்த்த மன்றென்கிறது - எனெனில், ஆநந்தமயனுக்கு "விபச்சிதா" என்று ஸத்ய ஸங்கல்பத்வம் சொல்லி யிருக்கிறது. இந்த $ நிருபாதிகமான ¶ ஸத்யஸங்கல்பத்வம், முன் ஸம்ஸாரியாயிருந்து பின்பு மோக்ஷமடைந்த முக்தனுக்கும் ஸம்பவியாதாகையால் அவனும் ஆநந்தமயனாகமாட்டான். ௧௭.

ஸூ. ௧௮. பேதவ்யபதேசாச்ச.

(ஸு - வ்யா.) பேதவ்யபதேசாச்ச - (ஆநந்தமயனைக் காட்டிலும் ப்ரஹ்மத்தை) வேறாகச்சொல்லுகையாலே, (ஆநந்தமய பதத்திற்கு ப்ரஹ்மம் அர்த்தமன்று.) ௧௮.

(ஸு - ஸா.) "ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி"--இந்தஆநந்தமயன் ரஸஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத்தையடைந்து ஆநந்தத்தை யடைகிறான் என்று ஆநந்தமயனாகிய ஜீவனைக்காட்டிலும் ப்ரஹ்மத்தை வேறிட்டுச்சொல்லுகையாலே இந்த ப்ரஹ்மம் ஆநந்தமயனென்று சொல்லப்பட்ட ஜீவனன்று. ௧௮.

(ரா - வ்யா.) பேதவ்யபதேசாச்ச - ஜீவாத்மாவைக் காட்டிலும் ஆநந்தமயன் வேறானவன் என்று சொல்லுகையாலும் ஆநந்தமயன் ஜீவனாகமாட்டான். ௧௮

$ நிருபாதிகமாவது - நடுவேவந்த தன்றிக்கே எப்போது முள்ளது.

¶ ஸத்ய ஸங்கல்பத்வமாவது - தான் நினைத்தகார்யத்தைக் குறைவின்றி அப்போதே நிறைவேற்ற வல்ல சக்தி.

(ரா - பா.) "தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத், அந்யோऽந்தர ஆத்மாऽऽநந்தமய:" என்று விஜ்ஞாநமயனென்று சொல்லப்படுகிற ஜீவாத்மாவைக் காட்டிலும் ஆநந்தமயன் அந்யன் என்று சொல்லுகையாலே ஆநந்தமயன் ஜீவாத்மாவாக மாட்டான். கஎ.

ஸூ. கஅ: காமாச்ச நாநுமாநாபேக்ஷா,

(ஶ - வ்ரு.) காமாத் - (ப்ரஹ்மத்தை கீழ்) ஆநந்தபதத்தினால் சொல்லுகையால், அநுமாநாபேக்ஷா - இங்கும் ஆநந்தமயபதத்தினால் அதையே சொல்லவேணுமென்கிற அநுமாநாபேக்ஷை, ந - இல்லை. கஅ.

(ஶ - பா.) காமமென்றால் ஆசைப்படத்தகுந்தது. அதாவது - ஆநந்தம். ப்ருகு வல்லியில் ஆநந்தத்தை ப்ரஹ்மமென்று சொல்லுகையாலே இங்கு சொல்லப்பட்ட ஆநந்தமய பதத்திலும் ப்ரஹ்மமே அர்த்தமென்று கொள்ளவேண்டும் என்கிற யுக்தியை, ஆநந்தமயனென்றால் ஆநந்தத்தின் விகாரமென்றர்த்த மாகையால் ப்ரஹ்மம் விகாரமற்றதாகையால் ஆநந்தமய பதத்திற்கு ப்ரஹ்மம் அர்த்தமாகமாட்டாதென்று நிரஸநம் செய்கிறார். கஅ.

(ரா - வ்ரு.) காமாத்ச-ஸங்கல்பத்தினாலேயே, (ஆநந்தமயன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்று சொல்லியிருக்கிறது.) அநுமாநாபேக்ஷா - மூலப்ரக்ருதியினுடைய அபேக்ஷையும் (ஸஹாயமும்) ந - சொல்லவில்லை.

(ரா - பா.) ஜீவன்ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது மூலப்ரக்ருதியின் ஸஹாயம்வேண்டும். ஆநந்தமயன் அந்த ஸஹாயமில்லாமலே ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்றுசொல்லியிருக்கிறபடியால் ஆநந்தமயன் ஜீவாத்மாவன்று. கஅ.

ஸூ. உ0. அஸ்மிந்நஸ்ய ச தத்யோகம் ஶாஸ்தி.

(ஶ - வ்ரு.) அஸ்மிந் - புச்சப்ரஹ்மத்தில் (சேர்ந்த), அஸ்ய - இந்த ஆநந்தமயனுக்கு, தத்யோகம் - அந்த புச்சப்ரஹ்மத்தோடு அபேதத்தை, ஶாஸ்தி - சாஸ்த்ரம் சொல்லுகிறது. (ஆகையால் ஆநந்தமயன் ப்ரஹ்மமன்று.) உ0.

(ஶ - பா.) "ப்ரஹ்மபுச்சம்" என்று சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தோடு தன்னுடைய ஆத்மாவுக்கு எவன் ஐக்யம் நினைக்கிறானோ, அவன் அந்த ப்ரஹ்ம ஸ்வரூபியாகிறானென்று சொல்லுகையாலே இந்த வாக்யம் ப்ரஹ்மத்தை ப்ரதாநமாகவே சொல்லிற்று. ஸகுண ப்ரஹ்மத்தை யறிந்தால் அவனுக்கு ஸாக்ஷாத் மோக்ஷம் கிடையாது. நிர்குண ப்ரஹ்மத்தை யறிந்தவனுக்கு ஸாக்ஷாத் மோக்ஷமுண்டென்று இந்த அதிகரணத்திற்குத் தாத்பர்யம். உ0.

(ரா - வ்ரு.) அஸ்மிந் - இந்த ஆநந்தமயனிடத்தில் (சேர்ந்தால்) அஸ்ய - இந்த ஜீவனுக்கு, தத்யோகம் - ஆநந்த ப்ராப்தியை. ஶாஸ்தி ச. சாஸ்த்ரம் சொல்லுகிறது. உ0,

(ரா - பா.) "ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி" என்று ஆநந்தஸ்வரூபனான ஆநந்தமயனை யடைந்து ஜீவாத்மாவும் ஆநந்தத்தையுடையவனாகிறான் என்று சொல்லுகிறது. எவனையடைந்தால் எவனுக்கு ஆநந்தமுண்டாகிறதோ, அவன் அவனைக்காட்டிலும் வேறாகவேண்டும்; ஆகையா

ல் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட ஆநந்தமயன் ஜீவனன்று. பரப்ரஹ்ம மான புருஷோத்தமன், உ௦.

ஸூ. உக. —* [illegible] *—

(ஸூ-ரா-வ்யா.) [illegible]-ஸூர்ய மண்டல மத்யவர்த்தியான புருஷன் [illegible].(அந்தபுருஷனுக்குப்) பரமாத்மாஸாதாரணதர்மங்களைச் சொல்லுகையால். (ப்ரமாத்மா). உக.

(ஸூ-ஸா.) மேல் அதிகரணத்தில் ஆநந்தமயனுக்கு சரீர ஸம்பந்தம் சொல்லியிருக்கையால் அவன் ப்ரஹ்ம மன்று; ஜீவன் என்று சொல்லிற்று அதுபோல், "யஏஷோந்தராதித்யே ஹிரண்மயః புருஷோத்ருஶ்யதே" என்கிற வாக்யத்திலும் ஸூர்யமண்டல மத்யவர்த்தியான புருஷனுக்கும் சரீரஸம்பந்தம் சொல்லியிருக்கையால் இவனும் ஜீவனாகலாமென்கிற சங்கைக்கு. * அபஹத பாப்மத்வம் முதலிய குணங்கள் சொல்லியிருக்கையால் அக்குணங்களையுடையவன் ஜீவனாகமாட்டான், உபாஸநார்த்தமாக ஸகுணமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே சொல்லிற்றென்று ஸமாதாநம். உக.

(ரா-ஸா.) "[illegible]" என்கிறவாக்யம் இந்தஅதிகரணத்திற்கு விஷயம். இதில் ஸூர்யமண்டல மத்யவர்த்தியாய் ஸ்வர்ணமய திவ்ய விக்ரஹ முடையவனாகச் சொல்லப் பட்டவன் ஜீவாத்மாவா, பரமாத்மாவா என்று ஸம்சயம் "[illegible]" என்று, அந்தபுருஷனுக்கு சரீராவயவங்கள் சொல்லியிருக்கின்றன. சரீரமானது, கர்மபலபோகார்த்தமாக ஜீவனுக்கேயுள்ளது ஆகையால், அந்தபுருஷன் ஜீவாத்மா வென்று பூர்வபக்ஷம்; "[illegible]" என்று * அபஹத பாப்மத்வாதி கல்யாண குணங்களையுடையவனென்று சொல்லியிருக்கையால், இக்குணங்கள் ஜீவனிடத்தில் அஸம்பவங்களாகையாலே ஸூர்யமண்டல மத்யவர்த்தியான அந்தபுருஷன் ஜீவனில்வேறான பரமாத்மா, அவனுக்கு ஜ்ஞாநாதி குணங்கள்போல் அப்ராக்ருத திவ்ய விக்ரஹமும் உண்டு என்று ஸித்தாந்தம். உ,

ஸூ. உஉ. —* [illegible] *—

(ஸூ-ரா-வ்யா.) [illegible] - ஜீவனைக்காட்டிலும் ஸூர்ய மண்டல மத்யவர்த்தியான புருஷனை வேறாகச்சொல்லி யிருக்கையாலும், [illegible] - ஜீவனைக்காட்டிலும் வேறுபட்டவன் பரமாத்மா. உஉ,

(ஸூ-ஸா.) ஸூர்யமண்டலத்திற்கு அதிஷ்டாந தேவதையா யிருக்கலா மென்னும் சங்கைக்கு "ஆதித்யா தந்தரః" என்று அதைக்காட்டிலும் வேறென்று சொல்லுகையால். அந்த தேவதையு மன்று. இந்த பரமாத்மா. உஉ.

---

* அபஹத பாப்மத்வம் முதலிய குணங்களாவன - பாபம், கிழத்தனம், மரணம், துன்பம், பசி, தாஹம், முதலிய துர்குணங்க ளற்றிருக்கையும், எல்லாவற்றையு மறியவல்ல ஜ்ஞாநம், நினைத்ததை நிறைவேற்றவல்ல சக்திமுதலிய ஸத் குணங்களையுடைத்தாகையும்

(ரா - ஹா.) "ய ஏஷோ(அ)ந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:" என்று.—அந்தபுருஷன் ஸூர்யனிடத்தில் எழுந்தருளியிருக்கிறவன்; ஸூர்யனைக்காட்டிலும் வேறானவன் என்று சொல்லியிருக்கையால். அவன் ஸூர்யரூபியான ஜீவனாகமாட்டான் பரமாத்மாவேயாகவேணும். ௨௨.

அதி. அ. —ஸூ. ௨௩. ஆகாஶஸ்தல்லிங்காத்.—

(ஶ-ரா-வ்யா.) தல்லிங்காத் - பரமாத்மலக்ஷணஞ் சொல்லுகையால், ஆகாஶ: - ஆகாச சப்தவாச்யன், (பரமாத்மா). ௨௩.

(ஶ - ஹா.) "அஸ்ய லோகஸ்ய கா கதிரித்யாகாஶ இதி ஹோவாச" என்கிறவிடத்தில் ஆகாசபதத்திற்கு பூதாகாசம் அர்த்தம். வாயுமுதலிய பூதங்களுக்குக் காரணமாகையால் மேல் சொல்லப்போகிற ஜகத்காரணத்வம் இதற்கும் உண்டு என்கிற சங்கையை, ஸகலபூதங்களுக்கும் காரணமென்று சொல்லுகையால் ஸகலபூதங்களுக்குள்ளடங்கிய ஆகாசம் தனக்குத்தான் காரணமல்லாமையால் இந்த ஆகாசபதத்திற்கு இது அர்த்தமன்று. சிந்து - பரமாத்மா அர்த்தம் என்று ஸமாதானம்சொல்லுகிறார். ௨௩.

(ரா - ஹா.) "அஸ்ய லோகஸ்ய கா கதிரிதி, ஆகாஶ இதி ஹோவாச" என்கிற வாக்யம் விஷயம். இதில், ஆகாசம் ஜகத்காரணம் என்று சொல்லிற்று. இங்கு ஆகாச சப்தத்திற்கு அர்த்தம் பஞ்சபூதங்களில் எண்ணப்பட்ட ஆகாசமா, பரமாத்மாவா என்று ஸம்சயம்,—ஐந்தாவது தத்வமான ஆகாசமே உலகத்தில் ஆகாசமென்று வழங்குகையாலே பஞ்சபூதங்களில்சேர்ந்த ஆகாசமே இங்கு ஜகத்காரணமென்று சொல்லிற்று. என்று பூர்வபக்ஷம்.— "ஸர்வாணி ஹவா இமானி பூதானி" என்று * ப்ரஸித்தமாகச் சொல்லியிருக்கையாலே, அந்த ஜகத்காரணத்வ ப்ரஸித்தி, ஶ்ருத்யந்தரங்களில் "ஏகோ ஹவை நாராயண ஆஸீத்" என்று பரமபுருஷனுக்கே உண்டாகையாலே அந்த பரம புருஷனே ஜகத் காரணமாகச் சொன்ன ஆகாசபதார்த்தம் என்று ஸித்தாந்தம் - ஆகாச: என்றால் நன்றாய் விளங்குகிற தென்றர்த்தம். ௨௩.

அதி - ௯. ஸூ. ௨௪. —அத ஏவ ப்ராண:.—

(ஶ-ரா-வ்யா.) அத ஏவ-இந்த ஹேதுவினாலேயே, ப்ராண:-ப்ராண சப்தவாச்யன். (பரமாத்மா). ௨௪.

(ஶ - ஹா.) †"கதமா ஸா தேவதேதி ப்ராண இதி ஹோவாச" என்கிறவிடத்தில் ப்ராணபதத்திற்கு வாயுரூபமாகிய முக்ய ப்ராணன் அர்த்தம். உறங்கும்போது ப்ராணனிடத்தில் ஸகலேந்திரியங்களும் லயிக்கின்றனவென்றும், எழுந்திருக்கும்போது ப்ராணனிடத்திலிருந்து ஸகலேந்த்ரியங்களும் உண்டாகின்றனவென்றும் வேதத்திற் சொல்லுகையாலும் ப்ரத்யக்ஷத்தில் அப்படியே காண்கையாலும் மேற்சொல்லுகிற ஜகத்காரணத்வமும், அதற்கே ஒத்திருக்கும் என்கிற சங்கையை, "ப்ராணஸ்ய ப்ராண:" இங்கு சொல்லப்பட்ட ப்ராணன் ப்ராணனுக்கும் ப்ராணனென்று சொல்லுகையாலும், இந்திரியங்கள் தவிர மற்ற பூதங்களுக்கு ப்ராணனிடத்தில் லயமும் அதிலிருந்து உத்பத்தியும் காணாமையாலே ஸகலஜகத்காரணத்வம் கூடாமையாலும் முக்ய ப்ராணனிங்கு சொல்லப்படவில்லை - பரமாத்மாவே சொல்லப்பட்டானென்று போக்குகிறார். ௨௪.

---

* ப்ரஸித்தமாகச் சொல்லுகையாவது - இந்த ஸகல பதார்த்தங்களும் ஆகாசத்தில் நின்றுமே யுண்டாயிற்றன்றோ என்று சொல்லுகை.

† இதற்கர்த்தம் - ஜகத்காரணமாகிய தேவதை யார் என்று ஒருவன் கேட்க, ப்ராணன் என்று குருசொன்னானென்று.

(ஶ்ரீ - பா.) "ஸர்வாணிஹவா இமாநி பூதாநி, ப்ராணமேவாபிஸம்விசந்தி" என்கிற வாக்யம் விஷயம். இங்கு ப்ராணன் ஜகத்காரணனென்று சொல்லிற்று.‡ அந்த வாயுரூபமான ப்ராணனா, பரமாத்மாவா என்று ஸம்சயம். சரீரத்தில் ப்ராணனுள்ளவ்வளவில் மனுஷ்ய பசுபக்ஷ்யாதிகள் ஜீவிக்கின்றன. ப்ராணன் பிரிந்தால் நசிக்கின்றன; ஆகையால், ஜீவமயமான ஜகத்துக்குக் காரணம் வாயுரூபமான ப்ராணனே, அதுவே இங்கு சொல்லப்பட்டதென்று பூர்வபக்ஷம். ஜகத்துக்குள் அடங்கிய மரம், கல்முதலிய அசேதநங்கள் ப்ராணவாயு ஸம்பந்தமற்றவையாயினும் அழிவின்றி காணப்படுகின்றன ஆகையால் சேதநா சேதநமயமான ஜகத்துக்குப் ப்ராணன் காரணமென்று சொல்லக்கூடாது. கிந்து. முன்போலவே இங்கும் "ஸர்வாணி ஹவா இமாநி பூதாநி" என்று ப்ரஸித்தமாகச் சொல்லுகையால், அந்த காரணத்வ ப்ரஸித்தி பரமபுருஷனுக்கே யுள்ளதாகையால் இங்கும் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட ப்ராணன் பரமாத்மா, என்று ஸித்தாந்தம். உச.

கயி - கo. ஸூ. உடு.—*ஜ்யோதிஶ்சரணாபிதாநாத்.*—

(ஶ்ரு.பா.-ப்ர.) சரணாபிதாநாத்-(இங்குசொன்ன ஜ்யோதிஸ்ஸுக்கு ஸமஸ்த பூதங்களும்) பாதமென்றுசொல்லுகையாலே, ஜ்யோதி:-ஜ்யோதிஶ்சப்தத்தால் சொல்லப்பட்டவன் (பரமாத்மா). உடு.

(ஶ - பா.) "அதயதத:பரோதிவோஜ்யோதி:" என்கிறவாக்யத்தில் ஜ்யோதி: என்கிறபதத்திற்கு ஸூர்யாதிகளா, பரமாத்மாவா அர்த்தம் என்கிற ஸம்சயத்தில், இவ்வாக்யத்தில் பரமாத்மலக்ஷணம் காணாமையாலும், இப்பேர் ஸூர்யாதிகளில் ப்ரஸித்தமாகையாலும் பரமாத்மா இப்பதத்திற்கு அர்த்தமன்று, கிந்து ஸூர்யன் என்கிற பூர்வபக்ஷத்தை, இவ்வாக்யத்தில் பரமாத்மலக்ஷண மில்லாவிடினும் பூர்வவாக்யத்தில்ஸர்வபூதங்களையும் பாதமாக உடைய எந்த பரமாத்மாவைச்சொல்லுகிறதோ, இவ்வாக்யத்தில், "யத்" என்றபதம் முன்வாக்யத்தில் சொல்லப்பட்ட அந்த பரமாத்மாவையே சொல்லுகிறது. ஆகையால் அந்த "யத்" என்கிற பதத்தோடு ஸமாநாதிகரணமாகிய ஜ்யோதி: பதமும் அந்த பரமாத்மாவையே சொல்கிறதென்று நிச்சயிக்கிறார். உடு.

(ஶ்ரீ - பா.) "அதயதத:பரோதிவோஜ்யோதிர்தீப்யதே" என்கிற வாக்யம் விஷயம்.— இவ்வாக்யத்தில் நிரவதிகதேஜோ விசிஷ்டனாகச்சொல்லப்பட்டவன் ஸூர்யன் அக்நி முதலியதேஜஸ்ஸிலொன்று, அல்லதுபரமபுருஷனுவென்று ஸம்சயம்.— "இதம்வாவதத்யதிதமஸ்மிந்நந்த: புருஷேஜ்யோதி:" என்றுஉதரத்திலிருக்கிற $ஜடராக்நியோடுஐக்யம்சொல்லியிருக்கிறபடியாலும்,¶இவ்

‡ ப்ராணன் என்றால் பிழைப்பிக்கிறவன் என்றர்த்தம். பிழைப்பித்தல் ப்ராணவாயுவுக்கும் பரமாத்மாவுக்கு முண்டாகையால் இருவரையும் சொல்லக்கூடுமென்று இதற்கு தாத்பர்யம்.

$ ஜடராக்நியோடு ஐக்யம் சொல்லுகையாவது - இங்குசொன்ன ஜ்யோதிஸ்ஸு ஜடராக்நி என்னு இரண்டையும் ஒன்றாகச்சொல்லுகை.

¶ இரண்டுவஸ்துக்களைக சொல்லும்பதம் ஒருவாக்யத்திலிருந்தால் அவ்வாக்யத்தில் பதத்திற்கு அவ்விரண்டில் எதை அர்த்தமாகக்கொள்ளவேணுமென்னில், அந்தப்ரகரணம் முழும்மேதும் யாரை அனுஸரித்திருக்கிறதோ, அதில் யாருக்கு லக்ஷணம்காண்கிறதோ, அவ்வஸ்துவை அங்கு அர்த்தமாகக் கொள்ளவேணுமென்று கருத்து.

வாக்யத்தில் பரமபுருஷலக்ஷணம் சொல்லாமையாலும், இந்த ஜ்யோதிஸ்ஸப்தத்திற்கு அக்நிமுதலிய தேஜஸ்ஸுக்களில் ஒன்று பொருளாகக் கொள்ளவேண்டும் என்று பூர்வபக்ஷம். முன்வாக்யத்தில் "பாதோஸ்ய விஶ்வா பூதாநி" என்று ஸமஸ்தபூதங்களையும் பரமபுருஷனுக்குப்பாதமாகச்சொல்லி, இந்த வாக்யத்தில் "அத யதத꞉" என்று அந்த பரமபுருஷனையே ஜ்யோதிஸ் சப்தத்தினால் சொல்லுகிறது. ஸமஸ்தபூதங்களும் அக்நி முதலியவைகளுக்குப் பாத மாகாமையால் அவைகளைப் பாதமாகவுடைய பரமபுருஷனே இங்கு ஜ்யோதிஸ் சப்தத்திற்கு அர்த்தம். அவனை ஜடராக்நி சரீரகனாய் உபாஸனம் செய்யவேண்டுமென்கைக்காக ஜடராக்நியுடன் ஐக்யம் சொல்லியிருக்கிறதென்று ஸித்தாந்தம். ௨௫.

ஸூ - ௨௬. —*சந்தோபிதாநாந்நேதி சேந்ந ததா சேதோர்ப்பண நிகதாத்ததா ஹி தர்ஶநம்.* —

(ஸ-ரா-வ்ரு.) சந்தோபிதாநாத்-(பூர்வவாக்யத்தில் சந்த(ஸ்ஸு)ஸ்ஸைச்சொன்னபடியால், ந - (அவ்வாக்யத்தில் சொல்லப்பட்டவன்) பரமபுருஷனன்று, இதி சேத்-என்றால், ந-அப்படியன்று. ததா - (பூர்வவாக்யத்தில்) அந்தகாயத்ரீரூபமாக, சேதோர்ப்பண நிகதாத்-(பரமபுருஷனை) மனஸ்ஸினால் த்யாநிக்கவேண்டுமென்று நிஶ்சயிக்கிறபடியால் (அவன் பரமபுருஷனே.) ததா ஹி - நாலுபாதங்களையுடையதாகவும், தர்ஶநம்-(காயத்ரீ) காணப்படுகிறது. ௨௬.

(ஸ - பா.) "காயத்ரீ வா இதம் ஸர்வம்" என்று பூர்வவாக்யத்தில் காயத்ரீயே சொல்லப்பட்டதாகையால் இவ்வாக்யமும் காயத்ரியையே சொல்லுமல்லது பரமாத்மாவைச் சொல்லாது என்று சங்கிக்கவேண்டாம். அந்தவாக்யத்திலும்காயத்ரியென்று காயத்ரிக்குகாரணமாகிய பரமாத்மாவே சொல்லப்பட்டான். இவ்விதமாகவே சார்யவாசகபதத்தினால் காரணத்தை வேறிடங்களிலும் சொல்லுவதுண்டு ஆகையால் இங்குபரமாத்மாவே அர்த்தம். ௨௬.

(ரா - பா.) பூர்வவாக்யத்தில் (காயத்ரீ வா இதம் ஸர்வம்) என்று காயத்ரியைச் சொல்லுகையால் அனந்தரம் சொல்லப்பட்ட "பாதோஸ்ய விஶ்வா பூதாநி" என்கிறவாக்யத்திலும் அந்த காயத்ரியை விஷயமாகக்கொள்ள வேணுமேயொழிய அப்ரஸ்துதனான பரமபுருஷனை விஷயமாகக்கொள்ளக்கூடாது என்று பூர்வபக்ஷம்.—பரமபுருஷனை காயத்ரியைப்போல் நாலுபாதங்களையுடையவனாகத்யாநிக்கவேண்டுமென்கைக்காக காயத்ரீசப்தத்தினால் பரமபுருஷனைச் சொல்லிற்றென்று கொள்ளவேண்டும். இப்படி கொள்ளாவிடில் ஸமஸ்த பூதங்களையும் பாதமாகவுடைத்தாகை காயத்ரிக்குச்சேராமையால் அந்த ‡ஶ்ருதி அபார்த்தமாய்விடும். காயத்ரிக்கு மூன்றுபாதங்களேயுண்டு; நாலுபாதங்களில்லையென்று நினைக்கவேண்டாம். காயத்ரிக் "இந்த்ரஶ்ஶசீபதி꞉, பலேந பீடித꞉, துஶ்ச்யவநோ வ்ருஷா, ஸமித்ஸு ஸாஸஹி꞉" என்று நாலுபாதங்களும் உண்டு என்று ஸித்தாந்தம். ௨௬.

‡ அபார்த்தமாவது - ஸகலபூதங்களையும் பாதமாக உடைத்தாகாத காயத்ரியை, அவற்றைப் பாதமாக உடையதாக, இல்லாத அர்த்தத்தைச் சொல்லுகை.

ஸூ - உஎ. —தஂதாதிவாதநஂவஸெ ஸாவஸெக்ஷெ ஹெவஂ—

(ஶ்ரீ-பா-வ்யா.ஸா.) ஸூததாதிவாதநவஸெ ஸாவஸெத்தெ-பூதம், ப்ருதிவி, சரீரம், ஹ்ருதயம், என்கிற இந்நாலையும் "ஸெஷா சதஷ்பதா" என்று காயத்ரிக்கு நாலு பாதங்களாகச் சொல்லியிருக்கையால் இது யுக்தி யுக்தமாகவேண்டுமானாலும், ஸூவஂ-இவ்விதமாகவே (காயத்ரீ பதத்துக்கு அர்த்தம் ப்ரஹ்மமென்றே) அங்கீகரிக்கவேணும். உஎ.

ஸூ - உஅ. *—உபதெஶஹெதாநெதி செந்நாஸயஸ்நவ்ய விரோயாக்*—

(ஶ்ரீ-பா-வ்யா.) உபதெஶஹெதாஂ-உக்திபேதத்தினாலே, ந-(இவ்வாக்யத்தில்) பரப்ரஹ்மம் தோன்றுகிறதில்லை. இதிஶெஸ-என்றால், ந-அப்படியென்று. உஸயஸ்நநவி-இரண்டுவிதமான உக்தியிலும், அவிரோயாக்-விரோதமில்லாமையாலே, (பரப்ரஹ்மம் தோற்றுவதில் பாதகமில்லை). உஅ.

▲ (ஶ்ரீ-பா-ஸா) கீழ்ச்சொன்ன யுக்திகளினால் பூர்வவாக்யத்தில் காயத்ரீசப்தத்திற்கு பரமபுருஷன் அர்த்தமாயினும், இவ்வாக்யத்தில் அந்தபரமபுருஷன் தோற்றமாட்டான். ஏனென்றால், அவ்வாக்யத்தில் "திவாதமாந்ருதம் திவி" என்று ஆகாசத்தை ஜ்யோதிஸ்ஸுக்கு அதிகரணமாகச் சொல்லிற்று, இவ்வாக்யத்தில் "திவஃபரோஜ்யோதிஃ" என்று ஆகாசத்தை எல்லையாகச்சொல்லிற்று இப்படி அங்கு மிங்கும் வெவ்வேறு விதமாகச் சொல்லியிருக்கிறபடியால் பூர்வவாக்யத்திற் சொன்னதை இவ்வாக்யத்தில் ஜ்யோதி ப்ஶப்தத்திற்கு அர்த்தமாகக் கொள்ளக்கூடாதென்று பூர்வபக்ஷம்.—மரத்தின்மேல் சந்திரனென்றாலும், மரத்தைக்காட்டிலும் மேலே சந்திரனென்றாலும் ஒரேவிதமான அர்த்தம் தோற்றுமாப்போல், ஆகாசத்தில் என்ற பூர்வ வாக்யத்திலும், ஆகாசத்தைக்காட்டிலும் என்ற இந்தவாக்யத்திலும் ஓரர்த்தத்தையே கொள்ளுகை யுக்தமாகையால் இவ்வாக்யத்தில் ஜ்யோதி ப்ஶப்தத்திற்கு பூர்வவாக்யத்தின் காயத்ரீ பதார்த்தத்தையே பொருளாகக் கொள்ளவேணும் என்று ஸித்தாந்தம். உஅ.

அதி - கக. ஸூ. —*ப்ராணஸ்ததாநுமாக்*—

(ஶ்ரீ-பா-வ்யா.) ப்ராணஃ-ப்ராணஶப்தவாச்யன், ததா-அப்படி, (ப்ரஹ்மகுணங்களிலே) அநுமாக்-அநுவர்த்திக்கையால் (அக்குணங்களுக்கு அதிகரணமாகச் சொல்லுகையால்) (பரமபுருஷனாகிறான்) உக.

(ஶ்ரீ-ஸா.) "ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம்மாமாயுரம்ருதமித்யுபாஸ்ஸ்வ" என்றவிடத்தில் ப்ராணபதம் பரமாத்மாவைச் சொல்லுகிறதா, அல்லது முக்யப்ராணன் முதலியவற்றி லொன்றைச் சொல்லுகிறதா என்னும் ஸம்சயத்தில், இந்த்ரனுக்கும், ப்ராணவாயுவுக்கும், இவ்வாக்யத்தில், சிலலக்ஷம் தோற்றுகையால் அவற்றிலொன்றே சொல்லப்பட்டது என்ற பூர்வபக்ஷத்திற்கு, இவ்வாக்யத்தில் அடிமுதல் கடைவரையிலுள்ள வாக்யங்கள் பரமாத்மலக்ஷணங்களையே சொல்லுகின்றன அந்தலக்ஷணங்கள் மற்றவிடங்களில் ஸம்பவியாது. அவையாவன - பரமபுருஷார்த்

தத்வம், ஜ்ஞாநஸ்வரூபியாகை, மோக்ஷத்தையளிக்கை, புண்யபாப ரூபகர்மங்களைப்போக்குகை முதலியவை. ஆகையால் இவ்வாக்யத்திலுள்ள ப்ராணபதம், பரமாத்மாவையே சொல்லுகிறதென்று ஸமாதாநம் சொல்லுகிறார். ௨௯.

(பா - ஸா.) "ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாமாயுரம்ருதமித்யுபாஸ்வ" என்கிற வாக்யம் இந்த ஸூத்ரத்திற்கு விஷயம். இங்கு மோக்ஷார்த்தமாகச் சொல்லப்பட்ட ப்ராணோபாஸநத்தில் விஷயமானவன் ஜீவாத்மாவா, பரமாத்மாவாவென்று ஸம்சயம்,—இது இந்த்ரன் சொல்லிய வாக்யம். இந்த்ரனென்று ஒரு ஜீவனுக்குப் பேராயிருக்கிறது. அவன் "நான் ப்ராணனாகிறேன், என்னை மோக்ஷார்த்தமாக உபாஸநம்செய்" என்று சொல்லுகையால், இந்த ப்ராணசப்தத்துக்கு இந்த்ரனாகிய ஜீவனே அர்த்தமென்று பூர்வபக்ஷம்,—இப்ப்ரகரணத்தில் இந்த்ரனென்றும் ப்ராணனென்றும் சொல்லப்பட்டவனுக்கு மேல்வாக்யத்தில் நிருபாதிகாநந்தம், விகாரமற்றிருக்கை, மோக்ஷமளிக்கை, முதலிய குணங்களைச் சொல்லுகையாலே, அவைகள் ஜீவனுக்குச் சேராவாகையால் இந்த்ரப்ராண சப்தத்தினால் சொல்லப்பட்டவன் பரமாத்மாவென்று ஸித்தாந்தம். ௨௯.

ஸூ - ௩௦. —*ந வக்துராத்மோபதேசாதிதி சேதத்யாத்மஸம்பந்தபூமா ஹ்யஸ்மிந்*—

(ஸ-பா-ஸ.) வக்து:-சொல்லுகிற இந்த்ரனுடைய, ஆத்மோபதேசாத் - ஆத்மாவை உபாஸநம்செய்யச் சொல்லுகையால், ந - ப்ராணசப்தார்த்தம் பரப்ரஹ்மமன்று, இதிசேத் - என்றால், அஸ்மிந் - இந்தப்ரகரணத்தில், அத்யாத்மஸம்பந்தபூமா ஹி - பரமாத்மாவுக்கேயுள்ள குண ஸம்பந்தாதிக்யம் (இருக்கையால்) இந்த்ர ப்ராணசப்தங்களுக்குப் பரமாத்மாவே அர்த்தம். ௩௦.

(ஸ - ஸா.) "மாமேவ விஜாநீஹி" என்று சொல்லுகிற இந்த்ரன் தன்னையே உபாஸநம் செய்யென்றும், நானே ப்ராணனென்றும் சொல்லுகையாலே அவனே இங்கு அர்த்தமாகவேண்டும் என்னில், இப்ப்ரகரணத்தில், ஆயுஸ்ஸைக் கொடுக்கிறானென்றும் அபஹரிக்கிறானென்றும், ஸகல ஜகத்துக்கும் ஆதாரபூதனென்றும் இத்யாதியாக இந்த்ரனுக்கு அஸம்பாவிதமான பரமாத்மலக்ஷணங்கள் அநேகமாகச் சொல்லுகையால் இந்தபதம் இங்கு பரமாத்மாவையே சொல்லவேண்டும். ௩௦.

(பா - ஸா.) "முதலில் த்ரிசீர்ஷாணம் த்வாஷ்ட்ரமஹநம்" என்று நான் வ்ருத்ராஸுரனைக்கொன்றேன் என்று சொல்லுகையால் சொல்லுகிறவன் வ்ருத்ராஸுரவதம் செய்த இந்த்ரனாகிய ஜீவன் என்கிறது ஸித்தம். அவன். "மாமுபாஸ்வ" என்னை உபாஸநம்செய் என்றும் "ப்ராணோஸ்மி" நான் ப்ராணனாகிறேன் என்றும் சொல்லுகையால் இங்கு உபாஸ்யனாகச் சொல்லப்பட்ட இந்த்ர ப்ராணசப்தவாச்யன் பரப்ரஹ்மமன்று என்று பூர்வபக்ஷம்.—முதல்வாக்யத்தில் இந்த்ரனென்று தோற்றினாலும், "ஏஷ ஏவ ஸாது கர்ம காரயதி" என்று தொடங்கி இவனே ஸகல கர்மங்களையும் செய்விக்கிறானென்றும், "தத்யதா ரதஸ்யாரேஷு நேமிரர்பிதா" என்று தொடங்கி, இவனே ஸகலஜகத்துக்கும் ஆதாரபூதனென்றும், "ஏஷ லோகாதிபதி:" இத்யாதிகளாலே ஸர்வலோகாதிபதித்வம்

முதலிய குணங்களையுடையவனென்றும் இத்யாதியாக இப்ப்ரகரணம்முழுதும் பரமாத்மகுணங்களையே ப்ரதிபாதிக்கையால் இந்த்ரப்ராண சப்தங்களுக்குப் பரமபுருஷனே அர்த்தம் என்று ஸித்தாந்தம். ௩௦.

—ஸூ-௩௧. ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத்—

(ஶ-ப்ர-வ்ய.) வாமதேவவத் - வாமதேவனைப்போல், உபதேஶ:- (இவ்விதமான) உபதேசமானது, ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா-சாஸ்த்ரத்தினர்த்தத்தை அறிகையினாலே (கூடும்.)

(ஶ - பா) ஆனால் இந்த்ரன் "நான்ப்ராணன்" என்று சொல்லுகைக்கடியென்னென்னில், இந்த்ரன், தன்னுடைய ஆத்மஸ்வரூபமே பரமாத்மஸ்வரூபமென்று சாஸ்த்ரத்தினாலறிந்தவனாகையால், "நான்மனு, நான்ஸூர்யன்" என்று அத்வைதஜ்ஞானமுடைய வாமதேவர் சொல்லியதுபோல் இவனும் "நான்ப்ராணன்" என்று சொன்னான். ௩௧.

(ஶ்ரு - பா.) இந்த்ர ப்ராண சப்தங்களுக்கு ப்ரமாத்மா அர்த்தமானால் இந்த்ரன் என்னை உபாஸநம்செய் என்று சொல்லக் கூடுமோவென்னில்,—பரமாத்மாவுக்கு ஜீவாத்மா சரீரமென்றும், சரீரத்தைச்சொல்லும் சப்தங்கள் அந்த சரீரத்தையுடைய ஆத்மாவையேசொல்லுமென்று அறிந்தவனாகையால், எனக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை உபாஸநம்செய் என்கிற அர்த்தத்தை என்னை உபாஸநம்செய் என்கிற சப்தத்தினாலும், எனக்கு அந்தர்யாமியானவனே ப்ராணனுக்கும் அந்தர்யாமி என்கிற அர்த்தத்தை நான் ப்ராணன் என்கிற சப்தத்தினாலும் சொல்லுவதில் ஒருபாதகமுமில்லை. இப்படியே ப்ரஹ்மவித்தானவாமதேவரும் "அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச" நானேமநுவாகிறேன், ஸூர்யனுமாகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த்ர ப்ராண சப்தங்களுக்குப் பரமாத்மாவே அர்த்தம். ௩௧.

ஸூ - ௩௨ - —ஜீவமுக்யப்ராணலிங்காந்நேதி சேந்நோபா ஸாத்ரைவித்யாதாஶ்ரிதத்வாதிஹ தத்யோகாத்.

(ஶ - வ்ய.) ஜீவமுக்யப்ராணலிங்காத் - ஜீவலக்ஷணமும் முக்ய ப்ராணலக்ஷணமும் காண்கையால் (பரமாத்ம லக்ஷணமும் சொல்லியிருந்தாகில்), உபாஸாத்ரைவித்யாத் - மூன்றுவிதமான உபாஸநம்விதித்ததாகுமாகையால், ந - பரமாத்மலக்ஷணமுண்டென்றங்கீகரிக்கக் கூடாது, இதிசேத் - என்றால், ந - அப்படியன்று. ஆஶ்ரிதத்வாத் - (வேறிடங்களில்) ப்ராணாதிபதங்களுக்கு பரமாத்மாவையே அர்த்தமாகக்கொள்ளுகையால், இஹ - இங்கு, தத்யோகாத்-அப்படிக்கொள்ளுகை யுக்தமாகையாலே. (பரமாத்மோபாஸநமே விதிக்கப்பட்டது).

(ஶ்ரு- பா.) இவ்வாக்யத்தில் ஜீவலக்ஷணமும் முக்யப்ராணலக்ஷணமும், சொல்லியிருக்கிறது. இத்துடன்பரமாத்மலக்ஷணமும்சொல்லியிருக்கிறதென்றங்கீகரித்தால்மூன்றுவிதமான உபாஸநம்விதித்ததாகுமென்று சங்கிக்கவேண்டாம். ஏனென்றால், வேறிடங்களிலும், பரமாத்மலக்ஷணமிருந்தால் அங்குள்ள ப்ராணசப்தத்திற்குப் பரமாத்மாவே அர்த்தமென்று நிஶ்சயிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணனுடைய லக்ஷணம் பரமாத்மாவினிடத்திலும் அந்வயிக்கத்தட்டில்லை. அதுபோல் இங்கும் ஹிததம

த்வம் முதலிய கீழ்ச்சொல்லிய பரமாத்ம லக்ஷணம் பலவகைக் காண்கையாலே இக் குள்ளப்ராண சப்தமும் பரமாத்மாவையே சொல்லிற்றாகக் கொள்ளவேணும். ௩௦.

(ஶ்ரீ - ஸூ.) ஜீவமுக்யப்ராணலிங்காந் - (இவ்வாக்யத்தில்) ஜீவனை இந்த்ரனுடையவும், முக்யப்ராணனென வாயுவினுடையவும் லக்ஷணங்காண் கையாலே, ந - பரமாத்மகுண ஸம்பந்தம் அதிகமாகக்காண்கிற தென்கிற தில்லை; இதிசேத் - என்றால், ந - அப்படியன்று; உபாஸாத்ரைவித்யாத் - மூன்றுவிதமான உபாஸநங்களைச்சொல்லுகைக்காக (அந்தந்தலக்ஷணங்களையுடைய இந்த்ராதிபோதக சப்தங்களினால் பரமாத்மாவைச்சொல்லிற்று). ஆஶ்ரிதத்வாத் - (வேறிடங்களிலும்) மூன்றுவிதமான உபாஸநம் ஆஶ்ரயிக்கப்பட்டிருக்கையால் (சொல்லியிருக்கையால்), இஹ - இங்கும், தத்யோகாத் - அம்மூன்றுவிதமான உபாஸநமும் கூடுகையால் (அந்தந்த சப்தங்களினால் பரமாத்மாவைச்சொல்லிற்று. ௩௧.

(ஶ்ரீ-பா.) "த்ரிஶீர்ஷாணம் த்வாஷ்ட்ரமஹநம்" வ்ருத்ராஸுரனைக் கொன்றேன் என்று இந்த்ரலக்ஷணம் சொல்லுகையாலும், "யாவத்த்யஸ்மிந் ஶரீரே ப்ராணோ வஸதி தாவதாயு:" இச்சரீரத்தில் எதுவரையில் ப்ராணன்வஸிக்கிறதோ! அதுவரையில் ஆயுஸ்ஸு என்று முக்யப்ராணலக்ஷணம் சொல்லுகையாலும், இவைகளை அநாதரித்து பரமாத்மலக்ஷணங்களையேகொண்டு பரமாத்மாவே இதில் சொல்லப்பட்டானென்று கொள்ளுகை யுக்தமன்று என்று பூர்வபக்ஷம்.—இதில் சேதனனாகிய இந்த்ரனுக்கும், அசேதநமாகிய ப்ராணனுக்கும், பரப்ரஹ்மமாகிய பரமபுருஷனுக்கும் லக்ஷணம் எதுக்காகக் காண்கிறதென்னில்,—பரமபுருஷனை, தத்ஸ்வரூபகுண விஶிஷ்டனாகவும், ஜீவாந்தர்யாமியாகவும், ப்ராணாந்தர்யாமியாகவும் உபாஸனம்செய்யச்சொல்கைக்காக-இவ்விதமாக தைத்திரீயோபநிஷத்திலும், "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று பரமாத்ம ஸ்வரூப குணங்களையும், "ஸச்ச" என்று ஜீவவாசகசப்தத்தினால் ஜீவாந்தர்யாமித்வத்தையும், "த்யச்ச" என்று அசேதநவாசக சப்தத்தினால் அசேதநாந்தர்யாமித்வத்தையும். உடைய பரமாத்மாவைச் சொல்லியிருக்கிறது. அதுபோல இங்கும் "மாமுபாஸ்வ" என்று ஜீவாந்தர்யாமித்வத்தையும், "ஆநந்தோऽஜரோऽம்ருத:" என்று ஆநந்தத்வாதிபரப்ரஹ்ம குணங்களையும் உடைய பரமபுருஷனே சொல்லப்பட்டானாகையால் இங்கு இந்த்ர ப்ராணசப்தங்களுக்குப் பரமபுருஷனே அர்த்தம் - என்று ஸித்தாந்தம், ௩௧.

முதல் அத்யாயத்தில் முதல்பாதம் ஸம்பூர்ணம்.

இரண்டாம் பாதம்.

அதி - ௧௨, ஸூ - ௩௨. ஸர்வத்ர ப்ரஸித்தோபதேஶாத்.

(ஶ்ரீ-பா.-ஸூ.) ப்ரஸித்தோபதேஶாத் - ஜகத்துக்கு உற்பத்தி ஸ்திதி லயங்களுக்குக் காரணமாக ப்ரஸித்தனானவனையே (இங்கு அந்தர்யாமியாக * ஸமா

* ஸமாநாதிகரண சப்பதமாகத விசேஷணத்தைச்சொல்லும் பதமும் விசேஷ்யத்தைச்சொல்லும் பதமும் ஒரே விபக்தியாயிருக்கை,

நாதிகரண சப்தத்தாலே) சொல்லுகையாலே, ஸர்வம் - "ஸர்வம் ஸமிதம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்திலுள்ள ஸர்வசப்தத்திற்கு அர்த்தமான ஜகத்தில், (அஜ்ஜகத்துக்கு அந்தர்யாமியாக அப்பதத்தோடு ஸமானாதிகரணமான ப்ரஹ்மசப்தத்தினாலே சொல்லப்பட்டவன் பரமாத்மா.) ௧௧.

(ஶ்ரு - ஹா.) "ஸர்வம் ஸமிதம் ப்ரஹ்ம" என்கிறவாக்யத்தில் "மநோமய: ப்ராணஶரீர:" என்று மநோமயத்வாதிகுணங்களையுடையவனை உபாஸநம் செய்யவேண்டுமென்று சொல்லிற்று. அப்படி சொல்லப்பட்டவன் ஜீவனா, பரமாத்மாவா என்கிற ஸம்சயத்தில், மநோமயனென்றால் மநஸ்ஸோடு ஸம்பந்தமுடையவன். அந்த ஸம்பந்தம் ஜீவனுக்கேயுள்ளது "அமநா:" என்று சொல்லுகையாலே பரமாத்மாவுக்குக் கிடையாது. ஆகையால் ஜீவனே சொல்லப்பட்டான் என்கிறபூர்பக்ஷிகளுக்கு, ஸகலவேதாந்தங்களிலும் ஜகத்காரணமென்று ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்ட பரப்ரஹ்மத்தை உபாஸிக்க வேண்டும் என்று இங்கு சொல்லிற்றாகையால் இங்குசொல்லப்பட்டவன் பரமாத்மாவே என்று உத்தரம் சொல்லுகிறார். ௧௧

(ரா - ஹா.) "ஸர்வம் ஸமிதம் ப்ரஹ்ம" என்கிறவாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—இங்கு ப்ரஹ்ம பதத்திற்கு அர்த்தம் ஜீவாத்மாவா, பரமாத்மாவா வென்று ஸம்சயம்.—ஸர்வமும் ப்ரஹ்மம் என்று சொல்லுகையால் + ப்ரஹ்மாமுதல் த்ருணபர்யந்தமான ஜகத்ரூபமாகப் பரிணமிக்கை கர்ம பரவசனான ஜீவனுக்கே கூடுமாகையால் ஜீவனே ப்ரஹ்ம சப்தத்திற் கர்த்தமென்று பூர்வபக்ஷம்.—ஸர்வமும் ப்ரஹ்மம் என்றால், ஸர்வமும் ப்ரஹ்மாத்மகம் - ப்ரஹ்மத்தை ஆத்மாவாகவுடையது; என்றர்த்தம். இதற்கு ப்ரஹ்மம் எப்படி ஆத்மாவாகுமென்றால், "தஜ்ஜலாநிதி" இந்த ஜகத்தினுடைய உத்பத்திலயஸ்திதிகளுக்குப் ப்ரஹ்மம் ஹேதுவாகையால் இதுப்ரஹ்மாத்மகமே என்று, ஜகதுத்பத்தி ஸ்திதிலய ஹேதுவானவனே இதற்கு ஆத்மாவென்று சொல்லிற்று. ஜகதுத்பத்தி ஸ்திதிலய ஹேதுவானவன் யாரென்றால்,—ஶ்ருதிவாக்யங்கள் "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்" என்று அவன் ஶ்ரீமந்நாராயணனென்று சொல்லிற்று. ஆகையால் அவனே இங்கு ஸகலாந்தர்யாமியாக ப்ரஹ்மசப்தத்தினால் சொல்லப்பட்டவன் என்று ஸித்தாந்தம். ௧௧.

ஸூ - ௧௨. விவக்ஷிதகுணோபபத்தேஶ்ச.

(ஸூ-வ்யா-ஹா.) விவக்ஷிதகுணோபபத்தேஶ்ச-("மநோமய: ப்ராணஶரீரோ பாரூப:" ராகத்வேஷாதி களற்ற மநஸ்ஸினால் க்ரஹிக்கத்தக்கவன், ப்ராணனுக்கு ஆதாரமானவன், நிரவதிக தேஜஸ்ஸையுடையவன் என்று மேல்வாக்யங்களில் இந்த ப்ரஹ்மத்திற்கு) சொல்லப்பட்ட குணங்கள் பரமாத்மாவினிடத்திலேயே கூடுகையாலும் (ப்ரஹ்மசப்தத்திற்குப்பரமாத்மாவே அர்த்தம். ௧௨.

(ஶ்ரு - ஹா.) இவனுக்கு ஸத்யஸங்கல்பத்வம் முதலியகுணங்கள் சொல்லியிருக்கிறது. ஸத்யஸங்கல்பத்வ மாவது ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களைத் தடையின்றிச்செய்கை. இவை பரமாத்மாவுக்கே சேர்ந்திருக்கும். ௧௨.

ஸூ - ௧௫. அநுபபத்தேஸ்து ந ஶாரீர:.

(ஶ.ப்ர-பா-ப்ர.ஸா.) அநுபபத்தே:(முன்வாக்யத்திற்சொல்லிய * ஸர்வகர்ம ஸமாராத்யத்வாதி குணங்கள்) கூடாமையாலே, ஶாரீர:- (முன்) சரீரஸம்பந்தமுடைய, (ஸம்ஸாரியாயிருந்த) முக்தனும், (ப்ரஹ்ம சப்தத்திற்கு அர்த்தமன்று) "இத" என்கிறது முக்தனைச்சொல்லலாமோ என்கிற சங்கையைத் தவிர்க்கிறது. ௧௫.

(ஶ° - ஸா.) இக்குணங்கள் ஜீவனுக்குச் சேராதாகையால் இங்குசொல்லப்பட்டவன் ஜீவனன்று. ௧௫.

ஸூ - ௧௬. கர்மகர்த்ருவ்யபதேஶாச்ச.

(ஶ-பா-ப்ர-ஸா.) கர்மகர்த்ருவ்யபதேஶாச்ச - ("இத: ப்ரேத்யாபிஸம்பவிதாஸ்மி" ஸம்ஸாரத்தில்நின்றும் விடுபட்டவனாய் இந்த ப்ரஹ்மத்தை அடைகிறேன் என்று) † ப்ராஹ்மத்தை ப்ராப்தி கர்மமாகவும் (ப்ராப்யமாகவும்), ஜீவனை ப்ராத்திகர்த்தாவாகவும் (ப்ராப்தாவாகவும்) சொல்லுகையாலும் (ப்ராப்தாவான ஜீவன் ப்ராப்யமான ப்ரஹ்மபதார்த்தமாக மாட்டான்.) ௧௬.

ஸூ - ௧௭. ஶப்தவிஶேஷாத்.

(ஶ-ப்ர-பா-ப்ர-ஸா.) ஶப்தவிஶேஷாத்.("ஏஷ ம ஆத்மாந்தர்ஹ்ருதயே" என்னுடைய ஹ்ருதயத்திற்குள் இந்த ப்ரஹ்மபதார்த்தமான ஆத்மா இருக்கிறான் என்று) என்னுடைய என்று ஆறும் வேற்றுமையுள்ள பதத்தினால் உபாஸநம்செய்கிறஜீவனையும், இந்தஆத்மா என்று முதல்வேற்றுமையுள்ள பதத்தினால் $ உபாஸ்யமான ப்ரஹ்மபதார்த்தத்தையும் சொல்லுகையால் (உபாஸகனான ஜீவன் உபாஸ்யனான ப்ரஹ்மபதார்த்தமாக மாட்டான்.) ௧௭.

(ஶ° - ஸா.) "அந்தராத்மந்" என்று உபாஸ்யனை ஏழாம்வேற்றுமையாலும் "புருஷோ ஹிரண்மய:" என்று ஜீவனை முதல் வேற்றுமையாலும் சொல்லுகையாலே இந்த உபாஸ்யன் ஜீவனன்று. ௧௭.

ஸூ - ௧௮. ஸ்ம்ருதேஶ்ச.

(ஶ.ப்ர-பா-ப்ர.ஸா.) ஸ்ம்ருதேஶ்ச-("ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:" எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நான்வாஸம் செய்கிறேன் என்று)

---

* ஸர்வகர்மஸமாராத்யனானையாவது - யஜ்ஞயாகம்முதலிய எல்லாக்கர்மங்களும் அவனுடைய ஆராதநரூபமாயிருக்கையாலே இக்கர்மங்களினாலாராதிக்கப்படுகை.

† ப்ராப்தா - எவன் அடைகிறானோ அவன் (ஜீவன்). ப்ராப்யன் - எவனை அடையப்படுகிறானோ அவன் (ப்ரஹ்மம்.)

$ உபாஸ்யன் - பக்தி எவனைக்குறித்துச் செய்யப்படுகிறதோ - அவன் ப்ரஹ்மம்.)

ஜீவனை பக்திபண்ணுகிறவனாகவும், பரமாத்மாவை பக்தியில் தோற்றுகிற வனாகவும் ஸ்ம்ருதி சொல்லுகையாலும் (ஜீவன் ப்ரஹ்மபதார்த்தமான பரமாத்மாவாக மாட்டான். ௩-அ.

(ஸ - ஹா.) " ஈஶ்வரஃ ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேঽர்ஜுந திஷ்டதி" என்று பரமாத்மாவை ஸமஸ்த ப்ராணிகளுடைய ஹ்ருதயத்திலிருக்கப்பட்டவனாக் கீதையில் சொல்லுகையாலே இங்குஹ்ருதயத்தி லிருக்கப்பட்டவனாகச்சொல்லப்பட்டவன் பரமாத்மா. ௩-அ.

ஸூ. ௩-௪, அர்ப்பகௌகஸ்த்வாத் தத்வ்யபதேஶாச்ச நேதி சேந்ந நிசாய்யத்வாதேவம் வ்யோமவச்ச.

(ஸ-பா-வ்யா.) அர்ப்பகௌகஸ்த்வாத்-அல்பஸ்தாநத்தையுடையவனாகையாலும், தத்வ்யபதேஶாச்ச-ஸூக்ஷ்மரூபியென்று சொல்லுகையாலும், ந-(பரமாத்மா)ப்ரஹ்மபதார்த்தமன்று; இதிசேத்.என்றால், ந-அப்படியன்று, நிசாய்யத்வாத் - உபாஸ்யனாகையாலே (த்யாநம்செய்கைக்காக), ஏவம்-இப்படி சொல்லிற்று. வ்யோமவச்ச-ஆகாசத்தைப்போலவே (பெரியஆகாசத்தை ஸூக்ஷ்ம ஸ்தாநத்தில் சிறிதாக அநுஸந்திக்கிறது போலவேஇங்கும் கண்டு கொள்வது.) ௩-௪.

(ஸ - ஹா.) "ஏஷ ம ஆத்மாந்தர்ஹ்ருதயே" ஹ்ருதயத்திற்குள்ளிருக்கிறான் என்றுசொல்லியிருக்கிறது. இவன் பரமாத்மாவாகில் ஸர்வவ்யாபியான அவனுக்கு இந்த மிகச்சிறிதாகிய ஹ்ருதயம் ஸ்தாநமாகக் கூடாது. "அணீயாந்" என்றுஸூக்ஷ்மரூபியென்றும் சொல்லியிருக்கிறது; அதுவும் கூடாது ஆகையால் இவன் அணுஸ்வரூபியாய் அல்ப ஸ்தாநத்தில் இருக்கத்தக்கவனாகிய ஜீவனேயாகவேண்டும் என்னில், ஸகலதேசாதிபதியான ஸ்ரீராமனை அயோத்யாபதியென்று சொல்வதுபோல் ஸர்வவ்யாபியான பரமாத்மாவை ஹ்ருதயத்தில் த்யாநம்செய்கைக்காக இப்படிச்சொல்லுகையும், அந்த ஸ்தாநத்தளவாக அணுவென்று சொல்லுகையும் கூடும். ஆகாசம் ஸர்வ வ்யாபியாயினும் கலசாதிகளில் சிறியதாகக் காணப்படுவதுபோல் இங்கும் கண்டுகொள்வது. இங்கு ஆகாசத்தைத் த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே ஆகாசம்போல். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் வாஸ்தவபேத மில்லையென்று தாத்பர்யம். ௩-௪.

(ரா - ஹா.) "ஏஷ மே ஆத்மாந்தர்ஹ்ருதயே" என்று ஸூக்ஷ்மமாகிய ஹ்ருதயத்தி லிருக்கிறவனாகவும், "அணீயாந்" என்று ஸூக்ஷ்ம ஸ்வரூபியாகவும் ப்ரஹ்மத்தைச் சொல்லி யிருக்கிறது. இது ஸர்வ வ்யாபகனாக பரமாத்மாவுக்குக் கூடாது ஆகையால் அணுஸ்வரூபியானஜீவனே ப்ரஹ்மசப்தத்திற்குஅர்த்தம் என்று பூர்வபக்ஷம்.—ஸர்வவ்யாபியானபரமாத்மாவையே ஹ்ருதயத்தில்த்யாநிக்கவேண்டுமென்கைக்காக ஸூக்ஷ்மமான ஹ்ருதயத்தை ஸ்தாநமாகவும், அதில் அடங்கத் தக்க அளவாக அவனுடையஸ்வரூபத்தை ஸூக்ஷ்மமாகவும்சொல்லிற்று. மேல்அவனையே ஜ்யாயாந்ப்ருதிவ்யா:" என்று பெரியதினில் பெரியன் என்று சொல்லுகிறது. ஆகாசம் பெரிதாயினும் அதைச்சிறிதாகிய கலசாதிகளில் அவ்வளவாகப்பரிச்சேதித்துக்காணப்படுகிறதுபோல் இங்கும் கண்டுகொள்ளவேணும். இது உபாஸநார்த்தம் சொல்லிற்று. என்று ஸித்தாந்தம். ௩-௪.

ஸூ - ௮. ஸம்போகப்ராப்திரிதி சேந்ந வைசேஷ்யாத்.

(ப-வ்ய-பா-வ்ய-ஸா.) ஸம்போகப்ராப்தி:- (ஜீவனைப்போல்பரமாத்மாவையும்சரீரத்திற்குள் இருக்கிறானென்றுஒப்புக்கொண்டால்ஜீவனுக்குப்போல் பரமாத்மாவுக்கும்) ஸுகதுக்கானுபவம் ஸம்பவிக்கும்; இதி சேத்-என்றால், ந - அப்படியன்று; வைசேஷ்யாத்-(ஸுகதுக்கானுபவத்திற்கு) புண்யபாப ரூபகாரண விசேஷமுண்டாகையாலே. (சரீரஸம்பந்தமாத்ரமே ஸுகதுக்கானுபவத்துக்குக் காரணமன்று; புண்யபாபமும்வேணும் அவைபரமாத்மாவுக்குக் கிடையாமையால் ஸுகதுக்கானுபவமில்லையென்று கருத்து). ௮.

(ப - ஸா.) ஜீவன் ஹ்ருதயத்தி லிருக்கிறபடியால் அவனுக்கு ஸுகதுக்கானுபவமுண்டு. பரமாத்மாவும் ஹ்ருதயத்திலிருந்தால் இவனுக்கும் ஸுகதுக்கானுபவம் வரவேண்டியிருக்கும். என்னில்,—ஜீவன் புண்யபாபங்களைப்பண்ணுகையாலும் ஸுகதுக்கங்களை யனுபவிக்கிறான். பரமாத்மா அவைகளைச் செய்யாமையாலும் அஜ்ஞானசூன்யனாகையாலும் அவனுக்கு ஸுகதுக்கங்கள் கிடையாது. இதுவே இருவர்க்கும் விசேஷம். ஜீவேஶ்வரர்களுக்கு இவ்விதமான பேதம் மாயை அவித்யை என்கிற உபாதியைப்பற்றினதென்று கண்டுகொள்வது. ௮.

அதி. ௩. ஸூ. ௯. அத்தா சராசரக்ரஹணாத்.

(ப-பா - வ்ய.) சராசரக்ரஹணாத் (ப்ரஹ்மக்ஷத்ர சப்தத்தினாலே ப்ராஹ்மண க்ஷத்ரியரோடுகூடிய ஸமஸ்த) ஜங்கமஸ்தாவரங்களையும் க்ரஹிக்கையாலே (சொல்லுகையாலே), அத்தா-புஜிக்கிறவனாகச் சொல்லப்பட்டவன், (பரமாத்மா.) ௯.

(ப - ஸா.) பரமாத்மாவுக்கு ஸுகதுக்கானுபவமில்லையாகில் கடவல்லியில் ப்ரஹ்ம க்ஷத்ரங்களாகிற அன்னத்தை புஜிக்கிறானென்று சொல்லப்பட்டவன் பரமாத்மாவாகக்கூடாது. ஜீவனேயாகவேண்டும் அல்லது ஸகலங்களையும் பக்ஷிக்கிற அக்னியாகவேண்டுமென்னில்,—இங்குப்ரஹ்மக்ஷத்ரங்களென்று ஸகல சராசரங்களையும் சொல்லிற்று; அவற்றை புஜிக்கையாவது - கர்மாதீனமான போஜநமன்று; ஜகத் ஸம்ஹாரரூபம்; அது பரமாத்மாவுக்கே யுள்ளதாகையால் அங்குசொல்லப்பட்டவன் பரமாத்மா. ஜீவனும் அக்நியு மன்று என்று தாத்பர்யம். ௯.

(பா - ஸா.) "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் சோபே பவத ஓதந:" இத்யாதி வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—ம்ருத்யுவை உபஸேசமாகக் கொண்டு ப்ரஹ்ம க்ஷத்ரங்களை எவன் புஜிக்கிறானோ என்று சொல்லப்பட்ட அவன் ஜீவனா, பரமாத்மாவா என்று ஸம்சயம்.—புஜிக்கை $ கர்மாதீநமாகையாலே இவன்கர்மத்தை யுடைய ஜீவனென்று பூர்வபக்ஷம்.—ம்ருத்யுவை உபஸேசநமாகச் சொல்லுகையாலும், ப்ரஹ்ம க்ஷத்ரபதங்களுக்கு ப்ராஹ்மண க்ஷத்ரியர்களை அர்த்தமாகக்கொள்ளில் அவர்களை மாத்ரம் புஜிக்கிறவனொருவன் ஸித்தனல்லாமையால் அப்பதங்களுக்கு ஸமஸ்த சராசரங்களை அர்த்தமாகக் கொள்ளுகையாலும், சராசரரூபமான இந்த அன்னத்தை புஜிக்கை கர்மாதீநமான போஜநமன்று; ஜகத் ஸம்ஹாரரூபமே

$ கர்மாதீநமாவது - முன்ஜன்மத்தில் புண்யமாவது பாபமாவது செய்திருந்தால் அதின்பலமாக இப்போது நேரிடுமது.

ன்று கொள்ளவேணும். இந்த ஸம்ஹாரம் ஜீவனுக்குக் கூடாமையால் இங்கு சொல்லப்பட்டவன் பரமாத்மாவென்று ஸித்தாந்தம். உபஸேசநமாவது.—வேறொருஅந்நாதிகளுடைய போஜநத்திற்கு ஸாதகமாய்க்கொண்டு தானும் புஜிக்கப்படுகை. யமனை ஸாதநமாகக்கொண்டு சராசரங்களை ஸம்ஹரித்து அநந்தரம் யமனையும் ஸம்ஹரித்துவிடுகிறான் என்று தாத்பர்யம். ௪௧.

ஸூ. ௪௨. ப்ரகரணாச்ச.

(ஸூ.ப்ர.பா-ப்ர.ஸா.) ப்ரகரணாச்ச - ("மஹாந்தம் விபுமாத்மாநம் மத்வா தீரோ ந ஶோசதி" என்றும் "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய:" என்றும் இது) பரமாத்மாவைச் சொல்லுகிற ப்ரகரணமாகையாலும், (இப்ப்ரகரணத்தில் சொல்லப்பட்டவன்ஜீவாத்மாவன்று.) ௪௨.

(ஸூ - ஸா.) இது பரமாத்மாவைச் சொல்லுகிற ப்ரகரணமாகையாலும் பரமாத்ம லக்ஷணங்காண்கையாலும் இங்கு பரமாத்மாவே ப்ரதிபாதிக்கப் பட்டவனாக வேண்டும். ௪௨.

ஸூ. ௪௩. குஹாம்ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்ஶநாத்.

(ஸூ.பா-ப்ர.) தத்தர்ஶநாத் "(இப்ப்ரகரணத்தில் ஜீவ பரமாத்மாக்களுக்கே ஹ்ருதயமாகிற குஹையிலிருப்புக்காண்கையாலே, ஆத்மாநௌ - ஜீவாத்மாவும் பரமாத்மாவுமே, குஹாம்ப்ரவிஷ்டௌ - ஹ்ருதயகுஹையைப் ப்ரவேசித்திருக்கிறவர்களாகச் சொல்லப்பட்டவர்கள் ஹி - ஆகையால், (பரமாத்மாவே இங்கு புஜிக்கிறவனாகச் சொல்லப்பட்டவன்). ௪௩.

(ஸூ - ஸா.) இங்கிப்படியாயினும். "குஹாம்ப்ரவிஷ்டௌ" என்கிற விடத்தில் ஹ்ருதயமாகிறகுஹையை அடைந்தவர்களாகச் சொல்லப்பட்டவர்கள் புத்தியும் ஜீவனுமா, ஜீவனும் பரமாத்மாவுமா; முதல்பக்ஷத்தில் புத்தியைக்காட்டிலும் விலக்ஷணனான ஜீவன் ப்ரதிபாதிக்கப்பட்டவனாவான்; இரண்டாம் பக்ஷத்தில் ஜீவனைக்காட்டிலும் விலக்ஷணனான பரமாத்மா ப்ரதிபாதிக்கப்பட்டவனாகிறான்; ஆகையால் எந்தபக்ஷத்தைக்கொள்ளலாமென்னில்,—குஹை என்று சரீரத்தைச் சொன்னாலும் ஹ்ருதயத்தைச் சொன்னாலும் அவற்றிலிருக்கப்பட்டவர்கள் புத்தியும் ஜீவனுமேயாகையால் அவர்களையேசொல்லிற்றென்னும் பூர்வபக்ஷத்திற்கு,—ஸங்க்யை, அதாவது எண் சொல்லப்பட்ட விடங்களிலெல்லாம் ஸஜாதீயர்களையே சொல்லும். இந்தபசுவுக்கு இரண்டாவது தேடு என்றால் அதற்கு ஸஜாதீயமான வேறொரு பசுவையே தேடுகிறார்களல்லது மற்றொரு பக்ஷிமுதலிய வற்றைத் தேடுகிறதில்லை. அதுபோல இங்கு கர்மபலத்தை புஜிக்கிறவர்களென்று சொன்னால் அதில் ஒருவன் ஜீவனேயாக வேண்டும். மற்றொருவனும் அவனுக்கு ஸஜாதீயனாய் சேதநனாகிய பரமாத்மாவேயாகவேண்டுமல்லது விஜாதீயமான அசேதநமான புத்தியாகமாட்டாது.பரமாத்மா கர்மபலத்தை புஜியாவிடினும் ஜீவனுக்கு புஜிப்பிக்கிறானாகையால், சமையல்செய்விக்கிறவனையும் சமையல் செய்கிறானென்று சொல்வதுபோல்புஜிக்கிறானென்று சொல்லிற்று. இப்ரகரணத்தில் பரமாத்மாவுக்கும் கூட "குஹாஹிதம்" என்று ஹ்ருதயகுஹையில் ப்ரவேசம் சொல்லியிருக்கிறது ஆகையால்இங்கு பரமாத்மாவே சொல்லவேண்டும் விஷயம்.

(ரா-ஹா.) "ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ" என்கிற மேல் வாக்யத்தில் ஹ்ருதய குஹையி லிருந்துகொண்டு கர்மபலத்தை அநுபவிக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது; கர்மபலாநுபவம் பரமாத்மாவுக்குக்கூடாமையால், அங்கு ஜீவனையும் அந்தஃகரணத்தையும் சொல்லிற்றென்று கொள்ளவேண்டும். அந்தஃகரணத்திற்குக் கர்மபலாநுபவ மில்லாவிடினும், ஜீவனுடைய கர்மபலாநுபவத்திற்கு ஸாதநமாகையால் அதையும் * போக்தாவாக உபசரித்துச்சொல்லிற்று. அந்த கர்மபல போக்தாவான ஜீவனே இங்கும் ப்ரஹ்ம ஸூத்ர போக்தாவாகச் சொல்லப்பட்டவன் என்று பூர்வபக்ஷம். இப்ப்ரகரணத்தில் "குஹாஹிதம் கஹ்வரேஷ்டம்" என்று பரமாத்மாவுக்கும், "குஹாம் ப்ரவிஶ்ய திஷ்டந்தீ" என்று ஜீவாத்மாவுக்குமே ஹ்ருதய குஹையில் ப்ரவேசம் சொல்லியிருக்கிறது. அந்தஃகரணத்துக்காவது மற்றொன்றுக்காவது சொல்லவில்லை. ஆகையால் ஹ்ருதய குஹையைப் ப்ரவேசித்துக் கர்மபலத்தை புஜிக்கிறவர்களாக மேல்வாக்கியத்திற்சொல்லப்பட்டவர்கள் ஜீவாத்ம பரமாத்மாக்களே; பரமாத்மாவுக்குக் கர்மபலாநுபவமில்லையாயினும் ஜீவனுடைய கர்மபலாநுபவத்திற்குப் † ப்ரயோஜகனாகையால் அவனையும் கர்மபல போக்தாவாகச்சொல்லிற்று; ஆகையால் இவ் வாக்யத்திலும் ப்ரஹ்மஸூத்ர போக்தாவாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மா வென்று கொள்ளுகையில் ஒருபாதகமுமில்லை. சக.

ஸூ. சச. விஶேஷணாச்ச.

(ஶ-ரா-வ்ய.ஹா.) விஶேஷணாச்ச (இப்ப்ரகரணத்தில் ஜீவாத்ம பரமாத்மாக்களையே உபாஸகனென்றும் உபாஸ்யனென்றும், § ப்ராப்தாவென்றும் ப்ராப்யனென்றும்) விசேஷிக்கையாலும், (மற்ற அந்தஃகரணாதிகளுக்கு இப்ப்ரகரணத்தில் ப்ரவேசமில்லை) "ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே" என்று பரமாத்மாவை உபாஸ்யனாகவும ஜீவனை உபாஸகனாகவும், "ஸோऽத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்" என்று பரமாத்மாவை ப்ராப்யனாகவும், ஜீவனை ப்ராப்தாவாகவும் சொல்லிற்று. ஆகையால். இங்குசொல்லப்பட்ட போக்தா பரமாத்மா. சச.

(ஶ - ஹா.) இப்ப்ரகரணத்தில் "ஆத்மாநம் ரதிநம் வித்தி" என்றுதொடங்கிசரீரமாகிற தேரையுடைய ஜீவனை ப்ராப்தாவென்றும், "தத் விஷ்ணோ: பரமம் பதம்" என்று பரமாத்மாவை ப்ராப்யனென்றும் வேறிட்டுச்சொல்லுகையாலும் இதுபரமாத்மப்ரகரணமாகையாலும் இங்கு பரமாத்மாவே சொல்லப்படுகிறான். சுக.

---

* போக்தா என்றால் போஜனம் செய்கிறவன். அசேதநமாகிய அந்தஃகரணம் போஜநம் செய்யாவிடினும் ஜீவன்புஜிப்பதற்கு ஸாதநமாகையால் அதையும் போக்தாவென்னலாம் போஜநம் செய்யாமல் அதற்கு ஸாதநமானதை போஜநம் செய்கிறதாகச் சொன்னால் உபசரித்துச் சொல்லுகை என்று பெயர்.

† ப்ரயோஜகனாகையாவது - அவனுக்குவேண்டிய § பலன்களை அவ்வவகாலங்களில் ஏற்படுத்திக் கொடுக்கை.

அதி - ௧௪. ஸூ - ௧௫. அந்தர உபபத்தே:.

(ஶ்ரீ-ரா - வ்ய.) உபபத்தே:-(மேற்சொல்லிய குணங்கள் பரம்புருஷனிடத்திலேயே) அந்வயிக்கையாலே, அந்தர:- நேத்ரத்திற்குள் சொல்லப்பட்டவன், (பரமாத்மா). ௧௫.

(ஶ்ரீ-ரா-ஹா.) "ய ஏஷோக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே" இத்யாதி வாக்யம் இவ்வதிகரணத்திற்கு விஷயம்.—நேத்ரத்திற்குள் எந்தபுருஷன் காணப்படுகிறானோ, இத்யாதியாகச் சொல்லப்பட்ட புருஷன், ப்ரதிபிம்பரூபனோ, ஜீவனோ, நேத்ரத்திற்கு அதிஷ்டாநதேவதையான ஸூர்யனோ, அல்லது பரமாத்மாவா என்று ஸம்சயம்.—நேத்ரத்தில் காணப்படுகிறானென்று ப்ரத்யக்ஷமாகச்சொல்லுகையாலே ப்ரதிபிம்பமாகலாம்; அதவா—கண்திறப்பதைப்பார்த்து மரணகாலத்தில்சரீரத்தில் ஜீவனிருக்கிறதாக நிஶ்சயிக்கிறார்கள் ஆகையால் ஜீவனுக்கு நேத்ரத்தில் விசேஷஸாந்நித்யம்உண்டு. ஆகையால் ஜீவனுமாகலாம்; அதவா—சக்ஷுரதிஷ்டாந தேவதையானஸூர்யன் நேத்ரத்தில்ப்ரதிஷ்டிதனாயிருக்கிறானென்று "ரஶ்மிபிரேஷோ ஸ்மிந் ப்ரதிஷ்டித:" என்கிற ஶ்ருதி சொல்லுகையாலே அவனுமாகலாம் என்று பூர்வபக்ஷம்.ஸகலாபீஷ்ட பரிபூர்ணன், பக்தாபீஷ்டபலப்ரதன், § நிரதிசய தீப்தியுக்தன் என்று மேல்சொல்லப்போகிறகுணங்கள் கீழ்ச்சொன்னவைகளில்கிடையாது; பரமாத்மாவினிடத்திலேயே யுண்டு ஆகையால் இவன் பரமாத்மா என்று ஸித்தாந்தம். ௧௫.

ஸூ. ௧௬. ஸ்தாநாதிவ்யபதேஶாச்ச.

(ஶ்ரீ-ரா-வ்ய.-ஹா.) ஸ்தாநாதிவ்யபதேஶாச்ச-"யஶ்சக்ஷுஷி திஷ்டந்" எவன்கண்ணில் இருக்கிறானோ, அவன் ஸர்வாந்தர்யாமியான பரமாத்மாவென்று பரமபுருஷனுக்கே) (நேத்ரத்திலே) ஸ்திதிமுதலிய குணங்களை சொல்லுகையாலும், (இவன் பரமாத்மா). யோகிகளுக்கு காண்கையாலே காணப்படுகிறானென்று ப்ரத்யக்ஷமாகச்சொல்லிற்று. ௧௬.

ஸூ. ஸுகவிஶிஷ்டாபிதாநாதேவ ச.

(ஶ்ரீ-ரா.-வ்ய.) ஸுகவிஶிஷ்டாபிதாநாதேவ-ப்ராணோ ப்ரஹ்ம ("கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" என்று) அபரிச்சிந்த ஸுகமுடையவனான பரமபுருஷனையே நேத்ரத்தில் உபாஸிக்க வேண்டுமென்கைக்காக ("ய ஏஷோக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே" என்று) சொல்லுகையினாலேதானேயே, (இங்குசொல்லப்பட்டவன் பரமாத்மா) பரமாத்மாவென்று நிஶ்சயிக்கைக்கு இதுவொன்றே போருமென்று கருத்து. ௧௭.

(ஶ்ரீ-ரா-ஹா.) "ப்ராணோ ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" என்று இவ்வாக்கியத்தின்முதலில் அநந்த ஸுகமுடைய, ப்ரஹ்மத்வதைச்சொல்ல ஆரம்பித்திருக்கையால், அந்த ப்ரஹ்மத்திற்கு நேத்ரத்தை ஸ்தாநமாகச் சொல்லிற்றுகையால் அக்ஷியிலிருக்கப்பட்ட புருஷனும் பரமாத்மாவே. ௧௭.

ஸூ. ௧௮. அத ஏவ ச ஸ ப்ரஹ்ம.

(மூ-பா-வ்யா.) அத ஏவ ச-அபரிச்சிந்ந ஸுகமுடையனுன பரமபுருஷனைச்சொல்லுகையிஞலேயே, ஸ: - (ஸ)சப்தத்தினல் சொல்லப்பட்ட ஆகாசம், ப்ரஹ்ம - பரப்ரஹ்மமே. ௧௮.

(மூ-பா-ஹா.)ஸம்ஸாரதாபங்களைக்கண்டுபயந்து ஸம்ஸாரத்தைவிட்டு மோக்ஷத்தையடைய விரும்பின உபகோஸலன் ப்ரஹ்மஸ்வரூபத்தைக்கேட்க, அவனுக்கு உத்தரம்சொன்ன "யத்வாவ கம் ததேவ கம் யதேவ கம் ததேவ கம்" என்கிறவாக்யத்தில், எதுகம்மோ, அதுவே கம்,எது கம்மோ, அதுவே கம் என்று ஒன்றுக்கொன்று ‡ வ்யாவர்த்தகமா, அளவற்றஸுகஸ்வரூபமான பரப்ரஹ்மத்தைச்சொல்லி "கம் தத்ராகாசமூசது:" என்று இதையே ஆகாசமென்றும் சொல்லுகிறார்கள் என்று சொல்லுகையாலே, அவ்வாக்யத்திலுள்ள "கம்" என்கிறபதத்திற்கு பூதாகாசம் அர்த்தமன்று, பரப்ரஹ்மமே அர்த்தம். ௧௮.

ஸூ. ௧௯. ச்ருதோபநிஷத்கக த்யபிதாநாச்ச.

(மூ-பா-வ்யா.) ச்ருதோபநிஷத்கக த்யபிதாநாச்ச-கேட்கப்பட்டப்ரஹ்மஸ்வரூபத்தையுடையவ(பரமாத்மஸ்வரூபத்தையறிந்த உபாஸகர்களாலே அடையத்தகுந்த (அர்ச்சிராதி) மார்க்கத்தை(கண்ணிலுள்ளபுருஷனையறிந்தவனுக்கும்) சொல்லுகையாலும், (கண்ணிலுள்ளபுருஷன் பரமாத்மா). ௧௯.

ஸூ. ௨0. அநவஸ்திதேரஸம்பவாச்ச நேதர:.

(மூ-பா-வ்யா-ஹா.) அநவஸ்திதே: - (ப்ரதிபிம்பமும் ஜீவனும், ஸூர்யனும் ஸர்வகாலத்திலும் நேத்ரத்தில்) இல்லாமையாலும், அஸம்பவாச்ச-(முன்சொல்லிய குணங்கள் அவைகளில்) ஒவ்வாமையாலும், இதர: - பரமாத்மாவைக் காட்டிலும்வேறான ஜீவனும்ஸூர்யனும் ப்ரதிபிம்பமும்,ந. கண்ணிலுள்ளவனுகச் சொல்லப்பட்ட புருஷனுகமாட்டார்கள். ௨0.

அதி. ௫. ஸூ. ௨௧. அந்தர்யாம்யதிதைவாதிலோகாதிஷு தத்தர்ம வ்யபதேசாத்.

(பா-வ்யா.) அதிதைவாதிலோகாதிஷு:-அதிதைவ அதிலோகாதிபதங்களையுடைய வாக்யங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட, அந்தர்யாமி-அந்தர்யாமியானவன், தத்தர்மவ்யபதேசாத் - பரமாத்மாவுக்கேயுள்ள தர்மங்களைச் சொல்லுகையாலே, (பரமாத்மா). ௨௧.

(மூ - ஹா. "ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்" என்று ஆரம்பித்து "ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:" என்று பூமிமுதலியவற்றுக்கு அந்தர்யாமிஎன்று சொல்லப்பட்டவன் தேவதையா, அல்லது அணிமாதி ஸித்தியையுடையயோகியா, பரமாத்மாவா, அல்லது வேறொருவனு என்கிற ஸம்சயத்தில், இந்த சப்தம் அபூர்வமாயிருக்கிறபடி

‡ வ்யாவர்த்தகமாகையாவது-அவ்வஸ்துவை மற்றவைகளைக் காட்டில் வேறுபடுத்துகை.

யால் இது அபூர்வமான வ்யக்தியையே சொல்லவேணும். யோகமஹிமையினால் ஜீவ னுக்கும் ஒரு வஸ்துவுக்குள் ப்ரவேசம் கூடுமாகையால் அப்படிப்பட்ட யோகியா வது ஆகவேண்டும். தேவதையாவது ஆகலாம். பரமாத்மாவுக்கு சரீரமில்லாமை யால் அதடியான நியமனாதிகள் கூடாமையால் பரமாத்மாவாகமாட்டான். என்கிற பூர்வபக்ஷத்தை--ப்ருதிவீ முதலியவற்றின் தேவதைகளுக்கும் ஜீவனுக்கும் தெரியா தவனாய் அவர்களுக்கும் அந்தர்யாமியா யிருக்கிறானென்று சொல்லுகையாலே இவன் ஜீவனுமன்று; தேவதையுமன்று. அந்தர்யாமி என்கிற பதத்திற்கு உள்ளே நுழைந்து நியமிக்கிறானென்று அர்த்தமாகையால் இப்பதம் அபூர்வமல்லாததால் அபூர்வார்த்தத் தையும் சொல்லாது. பரமாத்மாவுக்கு வேறு சரீரமில்லாவிடினும் ப்ருதிவ்யாதிகளை யே சரீரமாகக்கொண்டு நியமிக்கவும்கூடும். ஆத்மத்வம் அம்ருதத்வம் முதலிய குண ங்களும் அவனுக்கே உபபந்நமாயிருக்கும் ஆகையால் இப்படி சொல்லப்பட்டவன் பரமாத்மா என்று நிரஸநம் செய்கிறார். ருக.

(வி-வா.) "யஃ ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரஃ" இத்யாதி வாக் யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம். இங்கு அந்தர்யாமியாகச்சொல்லப்பட்டவன் ஜீவாத்மாவா பரமாத்மாவாஎன்று ஸம்சயம்.—"த்ரஷ்டா ஶ்ரோதா" பார்க்கிறான் கேட்கிறான்என்றுஇந்த்ரியாதீநஜ்ஞாநம் சொல்லுகையாலும், "நாந்யோதோஸ்தி த்ரஷ்டா" என்று இவனைக்காட்டிலும் வேறொருத்ரஷ்டா இல்லையென்று சொல் லுகையாலும் * இவன் ஜீவாத்மா என்று பூர்வபக்ஷம். பூமிமுதலிய ஸகலதத்வங்களை யும் செலுத்தவல்லவனாய், அவைகளால் காணப்படாதவனாய்,பரமபோக்யனாய்,மோ க்ஷத்தை யளிக்குமவனாயிருக்கிறானென்று சொல்லுகையாலே, இக்குணங்கள் ஜீவா த்மாவுக்குச்சேராமையாலே இங்கு அந்தர்யாமியாகச்சொல்லப்பட்டவன்பரமாத்மா "பஶ்யத்யசக்ஷுஃ" என்று கண்ணில்லாமலே பார்க்கிறான், காதில்லாமலேகே ட்கிறான் என்று சொல்லுகையாலே,இங்குச்சொன்னது இந்த்ரியங்களினாலுண்டான ஜ்ஞாநமன்று. ஸ்வாபாவிகமான ஜ்ஞாநம்; இது இவனுக்கேயுள்ளது. வேறொரு த்ர ஷ்டா இல்லையென்று சொன்னதுக்கும்-ப்ருதிவ்யாதிகளுக்குக் காணப்படாதவனை தான் அவற்றுக்கு அந்தர்யாமியானாற்போல், அவனுக்கும் காணப்படாதவனாய் அவ னுக்கும் வேறொரு அந்தர்யாமி இல்லையென்று அர்த்தமாதையாலே அதுவும் உப பந்நம் என்று ஸித்தாந்தம். ருக

ஸூ. ருஉ. ந ச ஸ்மார்த்தமதத்தர்மாபிலாபாச்சாரீரஶ்ச.

(ஸூ-பா-வ்யா.) அதத்தர்மாபிலாபாத் - மூலப்ரக்ருதிக்கும் ஜீவ னுக்கும் சேராத நியந்த்ருத்வாதி குணங்களைச் சொல்லுகையாலே, ஸ்மா ர்த்தம்-கபிலஸ்ம்ருதியில் ஜகத்காரணமாகச்சொல்லப்பட்ட மூலப்ரக்ருதி யும், ஶாரீரஶ்ச - சரீரஸம்பந்த யோக்யனான ஜீவனும், ந - அந்தர்யாமி யாகமாட்டா. சங்கரபாஷ்யத்தில் "ந ச ஸ்மார்த்தமதத்தர்மாபிலாபாத்"என்று இதுவரையிலுமே ஸூத்ரம். ருஉ.

(ஶ-ஸ.) இங்கு அந்தர்யாமி அத்ருஶ்யன், அதாவது - காணப்படாதவன் என் று சொல்லுகையால், ரூப சூந்யமாகையாலே கபிலர் சொல்லுகிற ப்ரக்ருதியும் கா ணப்படா தாகையால் அதுவே அந்தர்யாமி யாகலாமே யென்னில், "த்ரஷ்டா"

---

* பரமாத்மாவுக்கு கண் முதலியவை இல்லாமையால் பார்ப்பதும் கேட் பதும் அவனுக்கிசையாதென்று கருத்து.

என்று இந்த அந்தர்யாமி பார்க்கிறவனென்று சொல்லுகையாலே பார்க்கிற குணம் அசேதநமாகிய ப்ரக்ருதிக்குக் கிடையாதாகையால் அதாகமாட்டாது.

(ரா-ஸா.) எல்லாவற்றையும் தன் செங்கோலால் நடத்தவல்ல சக்தி முதலிய குணங்கள் மூலப்ரக்ருதிக்குச் சேராவாகையால் மூலப்ரக்ருதி அந்தர்யாமியாகா தாப்போலே, அக்குணங்கள் ஜீவனுக்கும் சேராவாகையால் ஜீவனும் அந்தர்யாமி யாகமாட்டான். ருஉ

ஸூ. ருக. உமயெவிஹிமெஹெ வெநநெயேயெதெ.

(ஶ - ரா - வ்ரு.) உமயெகவி காண்வர்களும் மாத்யந்திநர்க ளும், வனநு - இந்த அந்தர்யாமியை, மெஹெந - ஜீவனைக்காட்டிலும் வேறாக, கயீயஹெதஹி - சொல்லுகிறார்களென்று. சங்கரபாஷ்யத்தில் “ஶாரீ ரஶ்ரோமயெவிஹிமெஹெவெநநெயீயதெ” என்று ஸூத்ரம். ருக.

(ஶ-ஸா.) பார்க்கிற குணம் சேதநனாகிய ஜீவனுக்கு உண்டாகையாலே இந்த அந்தர்யாமி ஜீவனாகலாமே யென்னில்,—காண்வசாகையில் “யொவிஜ்ஞாநெதிஷ்டந்” என்றும், மாத்யந்தின சாகையில் “ஆத்மநிதிஷ்டந்” என்றும் ஜீவனைக்காட்டிலும் பரமாத்மாவை பிந்நமாகச் சொல்லுகையாலே இவன் ஜீவனுமாகமாட்டான். “விஜ்ஞாநே” என்றும் “ஆத்மநி” என்றும் ஜீவனிடத்தில் என்று அர்த்தம் “திஷ்டந்” என்று இருக்கிறான் என்றர்த்தம்.

(ரா-ஸா.) “யஆத்மநிதிஷ்டந் யொவிஜ்ஞாநெதிஷ்டந்” இத்யாதி வாக்ய ங்களினால் ஜீவனை அதிகரணமாகவும் நியாம்யனாகவும், பரமபுருஷனை *ஆதேயமாக வும் நியந்தாவாகவும் பிரித்துச்சொல்லுகையாலே அந்தர்யாமி ஜீவனன்று இங்கு பரமாத்மா. ருஉ

அயி. கச. ஸூ. ருச. அத்ருஶ்யத்வாதிகுணகொயமொக்தெஃ.

(ஶ - ரா - வ்ரு) யமொக்தெஃ - ஸர்வஜ்ஞத்வாதிகுணங்கள் சொல் லுகையாலே, அத்ருஶ்யத்வாதிகுணகஃ - அத்ருஶ்யத்வம் (கண்ணுக்ககப் படாமை) முதலியகுணங்களையுடையவன், (பரமாத்மா.) ருச.

(ஶ-ரா-ஸா.) “யத்தத்ரெஶ்யமக்ராஹ்ய” மித்யாதி “அக்ஷராத்பரதஃ பரஃ” என்கிற வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—“அத்ரெஶ்ய” இத்யாதியினால் ப்ரக்ருதியும், “அக்ஷராத்பரதஃபரஃ” என்று ஜீவனும் சொல் லப்பட்டனவா, அல்லது-இரண்டுவாக்கியங்களினாலும் பரமாத்மாவே ப்ரதிபாத்யனா என்று ஸம்சயம். “அத்ரெஶ்ய” இந்த்ரியங்களுக்கு அகப்படாமையென்றுஅசேத நங்களுக்குள்ள இந்த்ரியகோசரத்வத்தைத் தவிர்க்கையால் அதற்கு ஸஜாதீயமான ப்ரதாநமே சொல்லிற்றாகவேணும். “அக்ஷராத்பரதஃபரஃ” பரமானஅவ்யா க்ருதத்தைக்காட்டிலும் பரனானவன் என்கையாலே மூலப்ரக்ருதிக்குப் பரனாய் அத ற்கு அதிஷ்டாதாவான ஜீவன், ப்ரதிபாதிதனாகவேண்டும் என்று பூர்வபக்ஷம்.

---

* இருப்பிடம் ஆதாரம், இருக்கிறவஸ்து ஆதேயமெனப்படும் - அவ்விரண்டும். இனையும் அதில் உட்கார்ந்த பக்ஷியும்போல் ஒன்றாகமாட்டாது.

மேல்வாக்யத்தில், "யஸ்ய ப்ருஜஸ்ய ஸ்விஸ" என்றும், "தஸ்ரா தேதஸ்ய நர ஶராமவழஹுமஜாயதெ" என்றும், காணப்படாததாகச் சொல்லப்பட்ட வஸ்துவும் "அக்ஷராத்பரதஃபரஃ" என்கிற வஸ்துவும் ஸர்வத்தையு மறியவல்லது ஸகல ஜகத்துக்கும் காரணமானது. என்று சொல்லுகையால் அக்குணங்கள் ஜீவனுக்கும் ப்ரக்ருதிக்கும் சேராமையால் அவ்விரண்டு வாக்கியங்களிலும் அக்குணங்களையுடைய பரமாத்மாவே சொல்லப்பட்டான் என்று ஸித்தாந்தம். ௨௧

ஸூ. ௨௨. விஶேஷணபேதவ்யபதேஶாப்யாஞ்சநேதரௌ.

(ஶ்ரீ-பா-வ்யா.) விஶேஷணபேதவ்யபதேஶாப்யாம் - ("கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி" எதையறிந்தால் இதெல்லாமறிந்ததாகுமோ என்று) விசேஷிக்கையாலும், ("அக்ஷராத்பரதஃ பரஃ" என்று ப்ரக்ருதியைக்காட்டிலும் பரனான ஜீவனைக் காட்டிலும் பரன் என்று ஜீவனைக்காட்டிலும்) பேதம்சொல்லுகையாலும், இதரௌ - ஜீவனும் ப்ரக்ருதியும், ந - இந்தவாக்யங்களுக்கு அர்த்தமாகமாட்டா. ௨௨

(ஶ்ரு-ப்ர-ஸா.) காரணமான ம்ருத்பிண்டத்தை யறிந்தால் அதிலின்றுமுண்டான கலசசராவதிகள் அறிந்தனவாகிறப்போலே அத்ருஶ்யமென்று சொல்லப்பட்ட வஸ்துவையறிந்தால் ஸமஸ்தமும் அறிந்ததாகுமென்று சொல்லிற்று. இப்படி, கலசாதிகளுக்கு ம்ருத்பிண்டம்போல் ஸமஸ்த ஜகத்துக்கும் அத்ருஶ்யமாகச் சொல்லப்பட்ட வஸ்து காரணம் என்று விசேஷித்துச் சொல்லுகையால் அவ்வாக்யம் ஸகல ஜகத்காரணனான பரமபுருஷனையே சொல்லவேண்டுமே யொழிய ஸகல ஜகத்காரணமல்லாத மூலப்ரக்ருதியைச் சொல்லாது. அக்ஷரம் என்றால் மூலப்ரக்ருதி; "பரதஃ" என்று அதைக்காட்டிலும் பரனான ஜீவனைச்சொல்லுகிறது; 'பரஃ' என்று அவனைக்காட்டிலும் பரன் என்று சொல்லுகையாலே ஜீவனைக்காட்டிலும் பரனான பரமபுருஷனே அவ்வாக்யத்தில் சொல்லப்பட்டவனென்று அங்கீகரிக்க வேண்டும். ௨௨

ஸூ. ௨௩. ரூபோபந்யாஸாச்ச.

(ஶ்ரீ-பா-வ்யா-ஸா.) ரூபோபந்யாஸாச்ச - ("அக்நிர்மூர்தா" இத்யாதி வாக்யம் அத்ருஶ்யமாகச் சொல்லப்பட்டவனுக்கு ஸகலஜகத்தையும்) சரீரமாகச்சொல்லுகையாலும் இவன் பரமாத்மாவே யாகவேண்டும்.

அதி. ௭. ஸூ. ௨௪. வைஶ்வாநர ஸாதாரணஶப்தவிஶேஷாத்.

(ஶ்ரீ-பா-வ்யா.) ஸாதாரணஶப்தவிஶேஷாத் - அக்நி, அக்நிக்கு அதிஷ்டானதேவதை, ஜடராக்நி, பரமாத்மா, இவைகளில் ஸாதாரணமான (இவைகளுக்கு வாசகமான) வைஶ்வாநரசப்தத்தைப் பரமாத்மாவுக்கேயுள்ள குணங்களாலே விசேஷிக்கையாலே, வைஶ்வாநரஃ - வைஶ்வாநரனென்று சொல்லப்பட்டவன், (பரமாத்மா.) ௨௪.

(ஶ்ரு-ஸா.) "யஸ்த்வேதமேவம் ப்ராதேஶமாத்ரமபிவிமாநமாத்மாநம் வைஶ்வாநரமுபாஸ்தே" என்கிற விடத்தில் வைச்வாநர பதத்திற்கு அர்த்தம் ஜட-

ராக்நியா, அக்நிதேவதையா, அக்நியா, அல்லது பரமாத்மாவா என்கிற ஸம்சயத்தில் புருஷனுடைய சரீரத்திற்குள் இருக்கிறதென்று சொன்னபடியால் இது ஜடராக்நியே யாகவேணும். அல்லது முதல் மூன்றிலும் அந்தந்த ப்ரகரணங்களில் வைச்வாநர பதப்ரயோகம் காண்கையாலே அம்மூன்றில் ஏதாவதொன்றாகவேண்டும். அல்பபரிமாணமுடையவனாகச் சொல்லியிருக்கிறபடியால் பரமாத்மா வாகமாட்டான் என்று சொன்ன பூர்வபக்ஷிகளை - இப்ப்ரகரணத்தில் இந்த வைச்வாநரனுக்கு த்யுலோகம் முதலியவைகளை சிரஸ்ஸு முதலிய அவயவங்களாகச் சொல்லியிருக்கிறது. ஜகத்ஸ்வரூபியாகிய பரமாத்மாவுக்கு அதிலேக தேசமாகிய ஒவ்வொன்று ஒவ்வொரு அவயவமாகலாம். மற்ற முதல் மூன்றுக்கும் ஸம்பவியா தாகையாலும், உபக்ரமத்தில் "கோ ந ஆத்மா கிம் ப்ரஹ்ம" என்று ஆத்மா எது, ப்ரஹ்மம் எது என்று கேட்டிருக்கிறபடியாலும் அதற்குத்தரமாகச் சொல்லப்பட்ட வைச்வாநரன் ஆத்மாவாகிய பரப்ரஹ்மமே யாகவேண்டும். இந்த லக்ஷணங்களில்லாத மற்றவையாசமாட்டாவென்று நிரஸிக்கிறார். ௫௭.

(ஸா-ஹா.) "ஆத்மாநமேவேமம் வைச்வாநரமுபாஸ்தே" இத்யாதி "ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸ்வந்நமத்தி" என்கிற வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம். இங்கு வைச்வாநர சப்தத்திற்கு அர்த்தம் பரமாத்மா வென்று நிச்சயிக்கலாமா கூடாதா என்று ஸம்சயம். வைச்வாநர என்ற அக்நிக்கும் அக்நிதேவதைக்கும், ஜடராக்நிக்கும், பரமபுருஷனுக்கும் பேராக வேதங்களில் வழங்குகிறது. இந்நாலுக்கும் இப்ப்ரகரணத்தில் லக்ஷணமும் காண்கிறது. ஆகையால் நிச்சயிக்கக்கூடாதென்று பூர்வபக்ஷம்—"கோ ந ஆத்மா கிம் ப்ரஹ்ம" ஜீவாத்மாக்களான நமக்கு ஆத்மா ஆர்? ப்ரஹ்மம் என்கிறது எது! என்று ஆரம்பித்து மேல்வாக்யங்களில் "ஆத்மாநமேவ வைச்வாநரம்" என்று, ப்ரஹ்மசப்தம் சொல்லவேண்டும் ஸ்தானத்தில் வைச்வாநர சப்தம் சொல்லுகையாலும், அந்த வைச்வாநரன் ஜீவாத்மாவுக்கும் அந்தராத்மாவென்று சொல்லுகையாலும் ப்ரஹ்ம சப்தத்தினால் சொல்லப்பட்ட ஸகலாந்தர்யாமியான பரமாத்மாவே வைச்வாநர சப்தத்திற்கு அர்த்தமென்று நிச்சயிக்கலாமென்று ஸித்தாந்தம். ௫௮

ஸூ. ௫௯. ஸ்மர்யமாணமநுமாநம் ஸ்யாதிதி.

(ஸ - ஸா - வ்ய.) இதி - இவ்விதமாக, (வைச்வாநரனுக்கு அவயவமாக) ஸ்மர்யமாணம் - தோற்றுகிற (ஆகாசாதிகளின் ரூபம்), அநுமாநம் - (வைச்வாநரன் பரமாத்மா என்னுமதில்) ஹேதுவாக, ஸ்யாத்-ஆகும். ௫௯.

(ஸ-ஸா-ஹா.) "த்யௌர்மூர்த்தா" என்று தொடங்கி ஆகாசம் முதல் பூமி பர்யந்தமாயுள்ள ஸகல பதார்த்தங்களையும் இந்த வைச்வாநரனுக்கு சிரஸ்ஸு முதலிய அவயவங்களாகச் சொல்லியிருக்கையால், இவ்விதமான ரூபம் மற்றவைகளுக்குக் கூடாமையால் வைச்வாநரன் பரமாத்மா என்பது ஸித்தம். ௫௯.

ஸூ. ௬௦. சப்தாதிப்யோऽந்த: ப்ரதிஷ்டாநாச்ச நேதி சேந்ந ததா த்ருஷ்ட்யுபதேசாதஸம்பவாத் புருஷமபி சைநமதீயதே.

(ஸ - ஸா - வ்ய.) சப்தாதிப்ய: - (வைச்வாநரசப்தத்தோடு ஸமாநாதிகரணமான) அக்நிசப்தம் முதலியவைகளினாலும், அந்த: - சரீரத்திற்குள், ப்ரதிஷ்டாநாச்ச - இருப்பதாகச் சொல்லுகையாலும், ந - வைச்

வாநரன் பரமாத்மாவன்று, உதிவெங-என்றால், கயா-அப்படி, ஜ்ருஷ்டு-வஷெமாக - உபாஸநம் சொல்லுகையாலும் (ஜடராக்நி சரீரகனுகப் பரமாத்மாவை உபாஸிக்கவேணு மென்கைக்காக அப்படிச் சொல்லுகையாலும்), அஸம்ஹவாக - ஜடராக்நிக்கு ஆகாசாதிகள் அவயவங்களாகக்கூடாமையாலும், ந : வைச்வாநரன் பரமாத்மாவன்றென்று சொல்லக்கூடாது. வைநழ் - இந்த வைச்வாநரனை, புருஷவிய - புருஷனென்றும், அயியதெவ - அத்யயநம் பண்ணுகிறார்கள் (சொல்லுகிறார்கள்) ௫௬.

(ஸ-ரா-ஹா.) "அநிரெவ-ஷ்வாநரஃ" என்று வைச்வாநரன் அக்நியென்று சொல்லுகையாலும், "ஹ்ருதயஂமாஹவதஂ: ஶெநாநாஹாயவெ வநஃ, ஆஸ்யாஹவநீயஃ" என்று ஹ்ருதயம் முதலிய இடங்களிலுள்ள இந்த அக்நிக்கு *த்ரேதாக்நி ஸ்வரூபம் சொல்லுகையாலும் சரீரத்திற்குள் இருக்கிறதென்று சொல்லுகையாலும், இந்த விசேஷணங்களையுடைய வைச்வாநரன் ஜடராக்நியே என்று நிச்சயிக்க வேண்டுகையாலே இவன் பரமாத்மா அன்றென்று பூர்வபக்ஷம்.—†பரமாத்மாவை ஜடராக்நிசரீரகனுக உபாஸிக்கவேண்டுமென்கைக்காக ஜடராக்நி லக்ஷணங்களைக்கொண்டு வைச்வாநரனுகிய பரமாத்மாவைச் சொல்லிற்று. வெறும் ஜடராக்நியையே சொல்லும் பக்ஷத்தில் அதற்கு மேல்வாக்யங்களிற் சொல்லியபடி ஆகாசம் முதலியவை அவயவங்களாகக்கூடாது. "அநிஃரெவஷ்வாநரொயஃபுருஷஃ" என்று இந்த வைச்வாநரன் புருஷனென்று சொல்லிற்று, புருஷனென்று பரமாத்மாவுக்கே நாமமாகப் புருஷஸூக்தாதிகளில் ப்ரஸித்தமாயிருக்கிறது, ஆக இந்த ஹேதுக்களினுல் வைச்வாநரன் பரமாத்மாவென்றே நிச்சயிக்கப்படும் என்று ஸித்தாந்தம். ௫௬.

ஸூ. ௨௦. அதஎவ நதெவதாஹூதஞ்.

(ஸ-ரா-வ்ய-ஹா.) அதஎவ - இந்த கீழ்ச்சொன்ன ‡ஹேதுக்களினுலேயே, தெவதா - அக்நிதேவதையும், ஹூதஂ - பஞ்சபூதங்களிற்சேர்ந்த அக்நியும், ந - வைச்வாநரசப்தத்திற்கு அர்த்தமன்று. ௨௦.

ஸூ - ௨க. ஸாக்ஷாதவ்யவிரொயஂஜைமிநிஃ

(ஸ-ரா-வ) ஸாக்ஷாக்அபி - ஸாக்ஷாத்தாகவும், அவிரொயஂ - பரமாத்மாவைச் சொல்லுகையில் விரோதமில்லாமையை, ஜைமிநிஃ - ஜைமிநி என்கிற ஆசார்யர் சொல்லுகிறார். ௨க

---

* த்ரேதாக்நிகளாவன - கார்ஹபத்ய ஆஹவநீய தக்ஷிணுக்நிகளென்று பேருள்ள மூவகையான அக்நிகள்.

† ஓரதிகாரியினிடத்தில் கார்யம் கொள்ளப்போகையில் அவனுடைய நிஜரூபமிருக்க அவ்வதிகாரத்தி லிருக்கும்போதுள்ள ரூபங்களைச்சொல்லிப் புகழ்ந்து அதுக்குத்தக்க பலம் பெறுமாபோலே இங்கும் காண்பது.

‡ கீழ்ச்சொன்ன ஹேதுக்களாவன - புருஷனென்றும், ஆகாசாதிகளை அவயவங்களாக உடையவனென்றும் சொல்லுகை. ப்ரஹ்ம சப்தம் சொல்லவேண்டுமிடத்தில் வைஶ்வாநரபதம் சொல்லுகை.

(ஸ-ஹா.) மேல் ஐம்பத்தொன்பதாவது ஸூத்ரத்தில், பரமாத்மாவை ஜடராக்நி ஸ்வரூபமாகவாவது, அல்லது ஜடராக்நிரூபவுபாதிவிசிஷ்டஸ்வரூபத்தைப்பரமாத்மா வாகவாவது உபாஸிக்கவேண்டுமென்கைக்காக வைச்வாநர சப்தவாச்யனான பரமாத்மாவுக்கு ஜடராக்நிலக்ஷணம் சொல்லிற்றென்று சொன்னார். இதில், ஜடராக்நிக்கு லக்ஷணமாவது "புருஷேऽந்த:ப்ரதிஷ்டிதம்" என்று சரீரத்திற்குள் இருக்கிறானென்று சொன்னது. உள்ளே இருக்கையாவது மத்யஸ்தனாயிருக்கை; அதாவது - ஸாக்ஷியாயிருக்கை. அது ஸாக்ஷிஸ்வரூபியாகிய பரமாத்மாவுக்கே சம்பவிக்கும். இதுக்கு இப்படி யர்த்தமென்று நிச்சயித்தபின்பு மற்ற பதங்களுக்கும் இதுக்கநுகுணமாக அர்த்தம்சொல்லவேண்டும் என்று ஜைமினி சொல்லுகிறாரென்றது. சக.

(ரா-ஹா.) வ்யாஸபகவான், அக்நிபதத்திற்கு அக்நியை சரீரமாக உடைய பரமாத்மாவென்று சரீரத்வாரா பரமாத்மாவை அர்த்தமாகச்சொன்னார். அப்படி சொல்லுகையன்றிக்கே * ஸாக்ஷாத்தாகவே பரமாத்மாவை அர்த்தமாகச்சொல்லலாம், அதெப்படியெனில், வைச்வாநர பதத்திற்கு ஸகல மநுஷ்யர்களையும் நியமிக்கிறவன் என்கிற அவயவார்த்தத்தைக்கொண்டு பரமாத்மா அர்த்தமென்று ஸ்வீகரிப்பது போல், அக்நி சப்தத்திற்கும் முன்புள்ள தேசத்தை, அதாவது - ஊர்த்வலோகத்தை அடைவிப்பிக்கிறவன் என்கிற அவயவார்த்தத்தைக்கொண்டு சொல்லலாம் என்று ஜைமினிமதம். சரு.

ஸூ - சஉ. அபிவ்யக்தேரித்யாச்மரத்ய:

(ஸ-ரா-வ்யா.) அபிவ்யக்தே:-(உபாஸகனுக்குமநஸ்ஸில்) விஷயமாகைக்காக, (பரமபுருஷனை ஆகாசாதி ப்ரதேசத்தளவாக அளவிட்டுச் சொல்லிற்று), இதி - என்று, ஆச்மரத்ய:. ஆச்மரத்யரென்கிற ஆசார்யர் சொல்லுகிறார்.

(ஸ-ஹா.) ஆனால் "ப்ராதேசமாத்ரம்" என்று அல்பபரிமாணமுள்ளவனாகச் சொல்லுவானேனென்னில்,—உபாஸநம் செய்கிறவர்களுக்கு அவர்களுடைய ஹ்ருதயத்தில் அவ்விதமாகக்காண்கையால் அப்படிசொல்லிற்றென்று ஆச்மரத்யர் சொன்னார். சஉ.

(ரா-ஹா.) "அபரிமிதன்" அளவிறந்தவன்,என்று சொல்லப்பட்ட பரமபுருஷனை "யஸ்த்வேதமேவம் ப்ராதேசமாத்ரம்" என்று $ பரிச்சின்னமாகச்சொல்லுகை எப்படி கூடுமென்னில்,—பரமாத்மா அபரிச்சின்னனாயினும் அந்த ஸ்வரூபம் உபாஸகனுடைய புத்திக்கு விஷயமாகைக்காக இப்படி அளவிட்டுச் சொல்லிற்றென்று கருத்து.

ஸூ - சங. அநுஸ்ம்ருதேர்பாதரி:

---

* பங்கஜம் என்றால் சேற்றில் உண்டானதென்றர்த்தம். ஆயினும் அந்த பதம் தவளை முதலியவைகளைச் சொல்லாது - இப்பங்கஜம் ஆயிரம்பொன் விலையுள்ளதென்றால் தாமரைக்கு அத்தனை விலை தகாததாகையால் அப்போது சேற்றிலுண்டான மாணிக்கத்தையே சொல்லும் அதுபோல் இங்கும் ஆகாசாதிகளை அவயவமாக உடைய அக்நி பரமாத்மாவாவான் என்று பொருள்

$ அளவுள்ளதாக.

(ஸ-ரா-வ்யா.) அநுஸ்ம்ருதே:-உபாஸநம் செய்கைக்காக (ஆகாசாதிகளை அவயவங்களாகச் சொல்லிற்றென்று) பாதரி:-பாதரி என்கிற ஆசார்யர் சொன்னார். ௬௩.

(ஸ-ஸா.) அல்பபரிமாணமாகிய ஹ்ருதயத்திலிருக்கிற மனதினால் த்யானிக்கப்படுகிறப்படியால் அவனை அல்ப்பரிமாண முடையவனாகச் சொல்லிற்றென்று பாதரி என்கிறரிஷிசொன்னார். ௬௩.

(ரா-ஸா.) ஆகாசாதி ப்ருதிவீபர்யந்தமான பதார்த்தங்களைப் பரமாத்மாவுக்கு அவயவமாகச் சொல்லுவானேனென்னில்,—மோக்ஷார்த்தமாக இப்படி உபாஸிக்கவேண்டுமென்கைக்காக அந்த பதார்த்தங்களை பரமாத்மாவுக்கு சிரஸ்ஸு முதல் பாதபர்யந்தமான தேஹாவயவங்களாகச் சொல்லிற்றென்று தாத்பர்யம். ௬௩.

ஸூ - ௬௪. ஸம்பத்தேரிதி ஜைமிநிஸ்ததா ஹி தர்சயதி.

(ஸ-ரா-வ்யா.) ஸம்பத்தே:-ப்ராணாஹுதிக்கு அக்நிஹோத்ரத்வஸித்யர்த்தம், (உபாஸகனுடைய ஹ்ருதயம் முதலிய அவயவங்களை கார்ஹபத்யம் முதலிய அக்நி ஸ்வரூபங்களாகக் கல்பித்திருக்கிறது), இதி - என்று, ஜைமிநி: - ஜைமிநி என்கிற ஆசார்யர் சொன்னார். ததாஹி - அப்படியே, தர்சயதி- (ஸ்ருதி) காண்பிக்கிறது. ௬௪.

(ஸ-ஸா.) இந்த உபாஸகன் தன்னுடைய சிரஸ்ஸு முதலியஅவயவங்களை, பரமாத்மாவுக்கு சிரஸ்ஸு முதலிய அவயவங்களாகச் சொல்லப்பட்ட த்யுலோகம் முதலியவைகளாக த்யானிக்கவேண்டுமென்று சொல்லுகையாலே, உபாஸகனுடைய சரீர பரிமாணத்தைப்பற்றி பரமாத்மாவை அல்பபரிமாணனென்று சொல்லிற்றென்று ஜைமிநி சொன்னார். ௬௪.

(ரா-ஸா.) "உர ஏவ வேதிர்லோமாநி பர்ஹி:" என்று உபாஸகனுடைய மார்பு முதலிய அவயவங்களை * வேதி முதலிய அக்நிஹோத்ரோபகரணங்களாகச் சொல்லுகைக்குப் ப்ரயோஜநமென்னென்னில்,—வைச்வாநரவித்யைக்கு, உபாஸகன் தன்னுடைய சரீராவயவங்களை அக்நிஹோத்ரோபகரணங்களாக நினைத்து அதில் ப்ராணாஹுதியை ஹோமம் செய்கிறதாக நினைக்கை அங்கமாகையாலே அந்த அங்கத்தை விவரித்து "ய ஏதமேவம் வித்வாநக்நிஹோத்ரம் ஜுஹோதி" என்று இந்த ஸ்ருதியும், உபாஸகன் தான்செய்கிற ப்ராணாஹுதியை அக்நிஹோத்ரமாக நினைக்கவேண்டுமென்று சொல்லுகிறது. இங்கு அந்தந்த ஆசார்யர்கள் சொன்னார்களென்பது இவ்வர்த்தம் ப்ரமாணமென்கைக்காக. ௬௪.

ஸூ. ௬௫. ஆமநந்தி சைநமஸ்மிந்.

(ஸ-ரா-வ்யா.) ஏநம் - இந்த வைச்வாநரனை, அஸ்மிந்-இந்த உபாஸகனுடைய சரீரத்தில், ஆமநந்தி - (ப்ராணாஹுதி வேளையில்) அநுஸந்திக்கச் சொல்லுகின்றன. ௬௫.

(ஸ-ஸா.) ஜாபாலோபநிஷத்திலும் பரமாத்மாவைக் கீழ்ச்சொன்னபடி த்யானிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆகையால் இங்கு வைச்வாநரனென்று சொல்லப்பட்டவன் பரமாத்மாவென்று ஸித்தாந்தம். ௬௫.

(ஶா - ஸா.) "தஸ்ய ஹ வா ஏதஸ்யாத்மநோ வைச்வாநரஸ்ய மூர்தைவ ஸுதேஜா:" இத்யாதி வாக்யங்கள், வைச்வாநரோபாஸகன் தன்னுடைய சிரஸ்ஸு முதல் பாதபர்யந்தமான அவயவங்களை வைச்வாநரனுக்கு அவயவங்களாகச் சொல்லப்பட்ட ஆகாசம் பூமிபர்யந்தங்களாக அநுஸந்தித்துக்கொண்டு ப்ராணாஹுதியாகிற அக்நிஹோத்ரத்தினால் வைச்வாநரனை ஆராதிக்கவேண்டுமென்று சொல்லுகிறது. ஆகையால் வைச்வாநரன் பரமாத்மாவென்று ஸித்தம்.

உ - வது பாதம் ஸம்பூர்ணம்.

மூன்றாவது பாதம்.

அதி-௧௮. ஸூ. ௬௬. த்யுப்வாத்யாயதநம் ஸ்வசப்தாத்.

(ஶ-ரா-வ்யா.) ஸ்வசப்தாத் - தனக்கு (பரமாத்மாவுக்கு) அஸாதாரணமாகிய சப்தத்தைக்கொண்டு சொல்லுகையால், த்யுப்வாத்யாயதநம் - ஸ்வர்க்கலோகம் பூலோகம் முதலியவைகளுக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டவன் (பரமாத்மா). ௬௬.

(ஶ-ஹா.) "யஸ்மிந் த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷமோதம் மந: ஸஹ ப்ராணைச்ச ஸர்வை: தமேவைகம் ஜாநத ஆத்மாநமந்யா வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேது:" என்கிற வாக்கியத்திற்கு, எந்த வஸ்துவில், பூமியும் அந்தரிக்ஷலோகமும் ப்ராணன்களுடனும் மற்றும் ஜீவன் முதலிய ஸகல வஸ்துக்களுடனும் கோக்கப்பட்டிருக்கிறதோ, அந்த ஆத்மாவாகிய வஸ்து ஒன்றையே அறியுங்கோள். மற்றைப்பேச்சை விடுங்கோள். இது மோக்ஷத்திற்கு ஸேது-அணை-அதாவது - மோக்ஷத்தை அடைவிப்பிக்கிறது என்றர்த்தம். பூமி முதலானவைகளுக்கு ஆதாரமாகிய வஸ்துவை யறியென்று தாத்பர்யம்.—இவ்வாக்யத்தில், அப்படி ஸகல வஸ்துக்களுக்கு மாதாரமாகச்சொல்லப்பட்டது. ப்ரஹ்மமா, அல்லது வேறொன்றா என்னில்,—இதை ஸேதுவென்று சொல்லிற்று, ஸேதுவாவது அணை. அது இக்கரையிலிருந்து அக்கரைக்குத் தாண்டிப்போக ஸாதநமாயிருக்கும். ப்ரஹ்ம மென்பது, ஸம்ஸாரமாகிய இக்கரையில் நின்றும் ஸேதுவழியாய்ப்போய் அடையத்தக்க அக்கரையிலுள்ள வஸ்து. வழியிலுள்ள அணையும், அணைக்கப்புறம் அக்கரையிலுள்ள வஸ்துவும் ஒன்றாகமாட்டாது. ஆகையால் இங்கு சொல்லப்பட்டது ப்ரஹ்மமன்று. மற்றது ஏதுவாகக்கூடுமென்னில், பானைசட்டி முதலியவைகளுக்கு ஆதாரம் அவற்றுக்குக் காரணமாகிய மண் ஆகிறாற்போல், பூமிமுதலிய கார்யவஸ்துக்களுக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டன - அவற்றுக்குக் காரணமாகிய ஸாங்க்யர்கள் சொல்லுகிற மூலப்ரக்ருதி யாகவேண்டும், அல்லது வாயுவை எல்லாவற்றுக்கும் ஆதாரமாகச் சொல்லியிருக்கையால் வாயுவாவது ஆகவேண்டும், அல்லது - பூமி முதலியவை ஜீவர்களால் தங்கள் தங்கள் புண்ணியபாபங்களுக்குத்தக்கபடி அநுபவிக்கத்தக்கவையாகையால், அநுபவிக்கிற ஜீவர்களாவது அவற்றுக்கு ஆதாரமாகவேண்டும். இம்மூன்றையும் காட்டில் வேறாகிய ப்ரஹ்மம் ஆகக்கூடாதென்கிற பூர்வபக்ஷத்தை—பூமி முதலியவற்றிக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்ட வஸ்துவை "ஆத்மா" என்று இவ்வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. மூலப்ரக்ருதியும் வாயுவும் ஜடமாகையால் ஆத்மாவாகமாட்டாது. ஆகையால் ஸ்வயம்ப்ரகாசமாகிய ஆத்மாவான ப்ரஹ்மமே இங்

கு ஸகலத்துக்கும் ஆதாரமாகச் சொல்லப்பட்டது. ‘ஸதாயதநா:’ என்று வேறிடங்களிலும் இந்தப்ரஹ்மத்தையே ஸகலத்துக்கும் ஆதாரமாகச்சொல்லியிருக்கையால் அதையே இங்கும் அர்த்தமாக ஒப்புக்கொள்ள வேண்டியது நியாயமாயிருக்கிறது. காணப்படுகிற ஸர்வமும் ப்ரஹ்மம் என்று சொன்னதின்பேரில், ஒருமரம் வேராயும் கிளையாயும் அடியாயும் நாநாரூபமாயிருப்பதுபோல், ப்ரஹ்மமும் தேவனென்றும் மநுஷ்யனென்றும் இப்படி நாநாரூபமாயிருக்குமென்று தோற்றுகையாலே இப்படி நாநாரூபமாகிய ப்ரஹ்மஸ்வரூபமே அறியத்தக்கதாக வேதாந்தங்களில் சொல்லிற்றென்கிற ப்ரமத்தைப்போக்குகைக்காக, ப்ரஹ்மஸ்வரூபத்தை தேவன் மநுஷ்யன் முதலாகிய நாநாரூபமுள்ளதாக அறிகை, ஸம்ஸாரத்திற்குக் காரணம், மோக்ஷத்திற்கு விரோதியாகையால் அந்த நாநாரூபத்தைவிட்டு அந்த ரூபங்களுக் காதாரமாகிய ஸச்சிதாநந்த ரூபமான அத்வைத ப்ரஹ்மஸ்வரூபத்தையே மோக்ஷத்தை அடைய நினைக்கிறவன் அறியக்கடவன் என்று இவ்வாக்யம் சொல்லுகிறது. தேவதத்தன் நிற்கும் ஆஸநத்தை யெடுத்துவாவென்றால் தேவதத்தனைவிட்டு அந்த ஆஸநத்தை மாத்திரம் எடுத்துவருவதுபோல் பூமி முதலியவற்றுக்கு ஆதாரமாகிய ப்ரஹ்மஸ்வரூபத்தை யறியென்றால் அவற்றைவிட்டு ப்ரஹ்மஸ்வரூபமே அறியத்தக்கதாகச் சொல்லிற்றென்று இவ்வாக்யத்தின் கருத்து. இங்கு ஸேதுவென்று சொன்னதும்- ஸேதுபதத்திற்கு தரிக்கை, அதாவது-ஆதாரம் அர்த்தம்; அதுவும் ப்ரஹ்மத்திற்கொக்கும் ஆகையால் இவ்வாக்யத்தில் சொல்லப்பட்டது ப்ரஹ்மமேயென்று நிரஸநம் செய்கிறார். கசு.

(𑌭𑌾.𑌹𑌾.) இந்த அதிகரணத்திற்கு, “𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌮𑍋𑌤𑌂 𑌮𑌨𑌃 𑌸𑌹 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌸𑍍𑌤𑌮𑍇𑌵𑍈𑌕𑌂 𑌜𑌾𑌨𑌥 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌾 𑌵𑌾𑌚𑍋 𑌵𑌿𑌮𑍁𑌞𑍍𑌚𑌥 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍇𑌤𑍁𑌃” என்கிறது விஷயவாக்யம்-இதில் பூம்யந்தரிக்ஷத்யுலோகங்களுக்கு ஆதாரமாகச்சொல்லப்பட்டவன்ஜீவனா, பரமாத்மாவாஎன்று ஸம்சயம்.—இங்கு இவனை மநஸ்ஸு ப்ராணன் முதலியவைகளுக்கு ஆதாரமாகச் சொல்லியிருக்கிறபடியால் “𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌹𑍍𑌯𑌮𑌨𑌾𑌃” என்று பரமாத்மாவுக்கு மநஸ்ஸும் ப்ராணனும் இல்லையென்றிருக்கிறபடியால் இவன் ஜீவனென்று பூர்வபக்ஷம்.—“𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍇𑌤𑍁𑌃”என்று அணையானது இக்கரையிலிருந்து அக்கரையை அடைகைக்கு ஸாதநமாயிருப்பதுபோல் இவன் ஸம்ஸாரத்திலிருந்து மோக்ஷத்தை யடைகைக்கு ஸாதநமாயிருக்கிறானென்று சொல்லியிருக்கையாலும் ‘𑌆𑌤𑍍𑌮𑌾’ என்று தான் நியந்தாவாய் எல்லாவற்றிலும் வ்யாபிக்கிறானென்று சொல்லுகையால் இக்குணங்கள் ஜீவனுக்கில்லாமையால் இப்படி சொல்லப்பட்டவன் பரமாத்மா. ஸகல ஜகத்துக்கும் ஆதாரமானவன் மநஸ்ஸு முதலியவைகளுக்கும் ஆதாரமாகக் குறையில்லை. இங்கு * கர்மாதீநமான ஆதாரம் சொல்லவில்லை; அகர்மவஶ்யனான ஈஶ்வரன் தன் ஸங்கல்பத்தினால் ஸகலத்தையும் தரிக்கிறானென்று சொல்லிற்று. என்று ஸித்தாந்தம். கசு.

𑌸𑍂. கஎ. 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌪𑌸𑍃𑌪𑍍𑌯𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍.

(𑌸𑍂-𑌭𑌾-𑌵𑍍𑌯𑌾.) 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌪𑌸𑍃𑌪𑍍𑌯𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚 (இவனை) முக்தனுக்கு ப்ராப்யனாகச் சொல்லுகையாலும், (இவன்) பரமாத்மா. கஎ.

---

* கர்மாதீநமாக ஆதாரமாகையாவது-முன்ஜந்மங்களில் பண்ணின புண்யபாபங்களின் பலமான ஸுகதுக்கங்களை யநுபவிக்கைக்கு ப்ராணன் முதலியவற்றை ஸாதநமாக் கொள்ளுகை.

(ஶ்ரு-ஹா.) அவித்யையாவது ஆத்மாவல்லாத பதார்த்தத்தை ஆத்மாவாக நினைக்கை. அந்த அவித்யையினால், தன்தேகத்தைப் பழிப்பவனிடத்தில் கோபம், துதிப்பவனிடத்தில் ப்ரீதி, அதற்குக் கெடுதி நேரிடுமோவென்கிற பயம், முதலிய ராகத்வேஷாதி தோஷங்கள் உண்டாகின்றன. இவற்றினால் ஸம்ஸாரம் பெருகி அனர்த்தத்தை யடைகிறான். ஆகையால், இந்த ஸம்ஸாரத்திற்கு ஆதிகாரணமாகிய தேஹாத்மாபிமானமாகிற அவித்யையைப்போக்கி மோக்ஷத்தை யடைய நினைத்தவன், இவ்வாக்யத்திற் சொல்லிய பூமிமுதலியவற்றுக்குக்கு ஆதாரமாகிய ப்ரஹ்மஸ்வரூபத்தையறிந்தால் அதினால் தேஹாத்ம ப்ரமமும், அந்த ப்ரமத்தினாலுண்டாகிய ராகத்வேஷாதிகளும், புண்யபாபங்களும் ஸம்ஸாரமும் நீங்கி இந்த ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைகிறான் என்று சொல்லியிருக்கையாலும், மோக்ஷம் வேண்டியவன் மூலப்ரக்ருதியை த்யாகம் செய்யவேண்டுமென்று எங்கும் சொல்லாமையாலும் இங்கு சொல்லப்பட்ட வஸ்து ப்ரஹ்மமே என்று ஸித்தாந்தம். ௨௬.

(ரா-ஹா.) "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" இவனை உபாஸநம் செய்தவன் புண்யபாபங்களை உதறிவிட்டு முக்தனாய் இவனோடு ஸாம்யத்தை யடைகிறானென்றும், 'பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்' ஸர்வோத்க்ருஷ்டனான இந்த புருஷனை முக்தன் அடைகிறானென்றும் சொல்லுகையாலே இவன் பரமாத்மா. ப்ரக்ருதி ஸம்ஸார தசையிலடையத்தக்கதொழிய மோக்ஷதசையிலடையத்தக்கதுமன்று அதுக்குப் புருஷனென்ற பேரும் கிடையாது. ௨௭.

ஸூ. ௨௮. நாநுமாநமதச்சப்தாத்.

(ஶ்ரு-வ்ரு.) அதச்சப்தாத் - மூலப்ரக்ருதியைச் சொல்லுகிற சப்தமில்லாமையாலே, அநுமாநம் - மூலப்ரக்ருதி, ந - சொல்லப்படவில்லை. ௨௮

ஸூ. ப்ராணப்ருச்ச.

சங்கரபாஷ்யத்திற்கு இது இரண்டு ஸூத்ரமாக இருக்கும்.

(ஶ்ரு-வ்ரு.) ப்ராணப்ருச்ச-ஜீவனும், (பூமி முதலியவற்றுக்கு ஆதாரமாக இங்குச் சொல்லப்படவில்லை). ௨௮.

(ரா-ஹா-வ்ரு.) அதச்சப்தாத் - (இங்கு) மூலப்ரக்ருதியைச் சொல்லுகிற சப்தமில்லாமையால், அநுமாநம்-மூலப்ரக்ருதி,(யதா) ந- (எப்படி இங்கு) சொல்லப்படவில்லையோ, (அப்படியே ஜீவவாசக சப்தமில்லாமையால்) ப்ராணப்ருச்ச - ஜீவனும், ந - (இங்கு) சொல்லப்படமாட்டான்.

(ஶ்ரு-ஹா.) இந்த ப்ரகரணம் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறதென்பதற்கும், பூமி முதலியவற்றுக்கு ஆதாரமாக இங்குச்சொல்லப்பட்ட வஸ்து ப்ரஹ்மமென்பதற்கும் ஹேது, இவ்வஸ்துவுக்கு "*ஸர்வஜ்ஞன்" என்ற இதுமுதலிய அநேகமாகிய சேதநனுக்குள்ள தர்மங்கள் சொல்லியிருப்பாலும்,மூலப்ரக்ருதிக்குள்ள குணங்களை இவ்வஸ்துவுக்குச் சொல்லாமையாலும். அதைச்சொல்லும் சப்தம் இப்ப்ரகரணத்தில் காணாமையாலும் இங்கு மூலப்ரக்ருதி சொல்லப்படவில்லை.

(ரா-ஹா.) மூலப்ரக்ருதி அசேதநமாகையால் ஆத்மா என்கிற பதம் அதைச் சொல்லாவிட்டாலும், சேதநனாகிய ஜீவன் ஆத்மாவென்பதற்கு அர்த்தமாகக்கூடும், அவன் ஸர்வஜ்ஞனுமாகலாமாகையால் இங்கு அவனைச் சொல்லலாமேயென்னில், அல்பசக்தியான ஜீவனும் பூமி முதலியவற்றுக்கு ஆதாரமாகக் கூடாதாகையால் அவனுமாகமாட்டான்.

* எல்லாமறிந்தவன்.

ஸூ. கசு. பேதவ்யபதேசாச்ச.

(ஸூ-பா-வ்.) பேதவ்யபதேசாச்ச - (ஜீவனைக்காட்டிலும் இவ னை) பிந்நமாகச்சொல்லுகையாலும், (இவன்பரமாத்மா.) கசு.

(ஸூ - ஸா.) இங்கு அந்த "ஆத்மாவை" அறியுங்கோள் என்று அறியவேண்டும் வஸ்துவாகிய ஆதாரத்தை "ஆத்மாவை" என்று இரண்டாம் வேற்றுமையாலும், அறி கிற ஜீவர்களை "அறியுங்கோள்" என்றுமுதல் வேற்றுமையாலும் சொல்லுகையாலே, அதாவது - ஜீவனை ஜ்ஞாநத்திற்கு ஆஶ்ரயமாகவும், ஆத்மாவை அந்த ஜ்ஞாநத்திற்கு விஷயமாகவும். பூமி முதலியவற்றுக்கு ஆதாரமாகிய வஸ்துவைக்காட்டிலும் ஜீவனை வேறாகச் சொல்லுகையாலே இவன் ஜீவனன்று. கசு.

(பா-ஸா.) "அநீஶயா ஶோசதி முஹ்யமாந: ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶம்" என்று ப்ரக்ருதி பரவசனாய் மோஹித்துக்கிடக்கிற ஜீவன், தன் னைக்காட்டிலும் பிந்நனாய் அகர்மவஶ்யனாயிருக்கிற பரமாத்மாவையும் அவனுடைய மாஹாத்ம்யத்தையும் எப்பொழுது அறிகிறானோ, அப்போது சோகமோஹங்களை விடுகிறான் என்று இவனை ஜீவனைக்காட்டிலும் பிந்நமாகச் சொல்லி யிருக்கையாலே இவன் பரமாத்மா. கசு.

ஸூ. எ. ப்ரகரணாத்.

(ஸூ-பா-வ்.) ப்ரகரணாத்-இது பரமாத்மாவை ப்ரதிபாதிக்கிற ப்ரகரணமாகையாலே, (இங்குசொல்லப்பட்டவன் ஜீவனன்று) எ௦.

(ஸூ-பா-ஸா.) இது ஜீவனைச்சொல்லுகிற ப்ரகரணமன்று, ப்ரஹ்மத்தைச் சொல்லுகிற ப்ரகரணம். ஆகையால் இப் ப்ரகரணத்தில் சொல்லப்பட்டவன் ஜீவனாகமாட்டான். எ௦.

ஸூ. எக, ஸ்தித்யதநாப்யாஞ்ச.

(ஸூ-பா-வ்.) ஸ்தித்யதநாப்யாஞ்ச - (ஒருவனுக்கு) உத்தமமான இருப்பையும், (மற்றொருவனுக்கு அவ்விருப்பின்றிக்கே) கர்ம பலபோ த்தையும் சொல்லுகையாலும், (ஜீவனைக்காட்டிலும் பரமாத்மா பிந்நனெ ன்று தோற்றுகையாலே இங்கு சொல்லப்பட்டவன் ஜீவனாக மாட்டான்).

(ஸூ-ஸா.) மேலும் பூமி முதலியவற்றுக்கு ஆதாரமாகிய வஸ்துவை புண்யபாப பலமாகிய ஸுகதுக்கங்களை யநுபவியாமல் உதாஸீநனாயிருக்கிறானென்றும், ஜீவனை, ஸுகதுக்கங்களை யநுபவிக்கிறானென்றும் சொல்லுகையாலே ஸுகதுக்கங்களையுடை ய ஜீவன் எப்போதும் ஸுகதுக்கங்களற்ற வஸ்துவாகமாட்டான் ஆகையால் இங்குச் சொல்லப்பட்டவன் ஜீவனுமன்று, மூலப்ரக்ருதியுமன்று, வாயுவுமன்று, ப்ரஹ்மமே சொல்லப்பட்டதென்று ஸித்தாந்தம். எக

(பா-ஸா.) "தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" அவ்விருவரி லொருவன் கர்மபலத்தை புஜிக்கிறான், மற்றவன் அதில்லாதவ னாய் விளங்குகிறான் என்று ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பேதம் சொல்லுகையா லே, இங்கே மோக்ஷ ஹேதுவாகச் சொல்லப்பட்டவன் ஜீவனாகமாட்டான் எக

அதி. கக. ஸூ-எஉ. பூமாஸம்ப்ரஸாதாதத்யுபதேஶாத்.

(ஶ - வ்ரு.) ஸம்ப்ரஸாதாதத்யுபதேஶாத் - ப்ராணனைக்காட்டிலும் மேலாக, உபதேஶாத் - சொல்லுகையாலே, பூமா - பூமா என்று சொல்லப்பட்டவன் (பரமேஶ்வரன்). ௭௨.

(ரா - வ்ரு.) ஸம்ப்ரஸாதாதத்யுபதேஶாத் - ஜீவனைக்காட்டிலும் மேலாக, உபதேஶாத் - சொல்லுகையாலே, பூமா - பூமா என்று சொல்லப்பட்டவன், (பரமாத்மா). ௭௨,

(ஶ-பா.) "பூமாத்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய:" மோக்ஷத்துக்காக பூமாவென்பதையே யறியவேண்டும் என்று சொல்லி, அதேது என்றால், "யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா" என்று சொல்லிற்று. இதற்கு பூர்வபக்ஷி சொல்லு மர்த்தமாவது யத்ர - எந்த ப்ராணனில் (உறங்கும்போது இந்த்ரியங்கள் லயித்தவளவில்) நாந்யத்பஶ்யதி - வேறொன்றையும் ஜீவன் பார்க்கிறதில்லையோ, பூமா - அது பூமாவெனப்படும், என்று ஸித்தாந்தி சொல்லு மர்த்தமாவது - யத்ர - எந்த நிர்குண ப்ரஹ்மத்தில் (ஜீவன் லயித்தவளவில்) நாந்யத்பஶ்யதி - அஸத்யரூபமான வேறொன்றை, அதாவது - ஜகத்தை, ப்ராந்தியினால் முன்போல பார்க்கிறதில்லையோ, ஸ பூமா - அந்த நிர்குண ப்ரஹ்மமே பூமாவெனப்படும் என்று. பூர்வபக்ஷிக்கு ப்ராணன் அர்த்தம். ஸித்தாந்திக்கு நிர்குண ப்ரஹ்மம் அர்த்தம்.—ஸ பூமா என்கிற விடத்தில் பூமாவென்பதற்கு அதிகம் என்றர்த்தம். அதிகமென்று ஸாமாந்யமாக இருக்கையாலே ஓரர்த்தம் நிஶ்சயிக்கப்போகாது. அதற்காக வேறொரு பதத்தோடு அந்வயித்து இதனுடைய அர்த்தத்தை நிஶ்சயிக்கவேண்டும். இப்பதத்தை யந்வயிப்பதற்கு இரண்டிடமுண்டு அதாவது - இப்பதத்திற்கு ஸமீபத்திலுள்ள "ப்ராணோவா ஆஶாயா பூய:" என்று ஆசையைக்காட்டிலும் மேலாகச்சொல்லப்பட்ட ப்ராணனிடத்தி லந்வயிக்கலாம். அல்லது - இப்ப்ரகரணத்தி னாதியில் "தரதி ஶோகமாத்மவித்" ஆத்மாவையறிந்தவன் ஸம்ஸார துக்கத்தைத் தாண்டுகிறான் என்று சொல்லப்பட்ட ஆத்மாவோடாவது அந்வயிக்கலாம். இவ்விரண்டில் எது உசிதமென்றால், இப்ப்ரகரணத்தில், நாமத்தைக்காட்டிலும் வாக்குமேலானது, வாக்கைக்காட்டிலும் மனஸ்ஸு மேலானது என்று மேல் மேல் சொல்லிக்கொண்டுபோய் ப்ராணனை எல்லாவற்றுக்கும் மேலாகச்சொல்லி முடித்துவிட்டது. இதற்கு மேலாக ஒன்றையும் சொல்லவில்லை. ஆகையால் எல்லாவற்றுக்கும் மேலாய், இப்பதத்திற்கு ஸமீபத்திலுள்ள ப்ராணபதத்தினால் சொல்லப்பட்ட ப்ராணனேஇங்கு "பூமா" வென்பதிற்கு அர்த்தம். 'யத்ர நாந்யத்பஶ்யதி' என்பதும், உறக்கத்தில் ப்ராணனிடத்தில் ஸகலேந்த்ரியங்களும் லயித்து அப்போது ஜீவன் ஸகல வ்யாபாரங்களையும் விட்டு ஸுகமாக உறங்குகையாலே இதற்கு விரோதமில்லை. இப்ப்ரகரணத்தி னாதியில் ஆத்மா என்பதற்கும் 'ப்ராணோ ஹ பிதா' ப்ராணனே பிதா மாதா என்று சொல்லுகையாலே விரோதமில்லை. ஆகையால் இங்கு பூமாவென்று ப்ராணனுக்குப்பெயர் என்கிற பூர்வபக்ஷத்தை,—ப்ராணனைக்காட்டிலும் இந்த பூமாவை மேலாகச்சொல்லியிருக்கையால் இது ப்ராணனாகமாட்டாது. எப்படியெனில், 'ஏஷ து வா அதிவததி யஸ்ஸத்யேநாதிவததி' என்று ப்ராணனை உபாஸநம்செய்து அதை எல்லாவற்று

க்கும் மேலாகத் துதிக்கிறவனை எல்லோரிலு முயர்ந்தவனாகச்சொல்லி, பின்பு, அவனைக்காட்டிலும் மேலானவனுண்டு, அவன்யாரெனில், ஸத்யம் என்கிற ப்ரஹ்மத்தை உபாஸனம்செய்து, அதை எல்லாவற்றுக்கும் மேலாகப் புகழுகிறவன் அவனைக்காட்டிலு முயர்ந்தவனென்று சொல்லிற்று, ப்ராணனை உபாஸநம் செய்கிறவனைக்காட்டிலும் ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்கிறவன் மேலென்றால், ப்ராணனைக்காட்டிலும் ப்ரஹ்மம் மேலென்பது ஸித்தமே. ஆகையால் அந்த ப்ரஹ்மமே இங்கு பூமாவாகச் சொல்லப்பட்டது. மேலும் மோக்ஷத்திற்கு ப்ரஹ்மஜ்ஞானத்தைக் காட்டிலும் வேறுபாயமில்லையென்று "நாந்ய: பந்தா வித்யதே(அ)யநாய" இத்யாதி அநேக வாக்யங்களில் சொல்லுகையாலே இங்கு மோக்ஷத்திற்காக அறியத்தக்கதாகச் சொன்ன பூமாவென்பது ப்ரஹ்மமே யாகவேண்டும் என்று நிரஸநம் செய்கிறார். எஉ.

(ரா-ஸா.) "இந்த அதிகரணத்திற்கு, "யத்ர நாந்யத்பஶ்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா" என்கிறது விஷயவாக்யம், — இதில், 'ஸ பூமா'-நிரதிசய ஸுகஸ்வரூபி என்று சொல்லப்பட்டவன் ஜீவனு, பரமாத்மாவா என்று ஸம்சயம். ஆத்மோபதேசம்பண்ணுகிற இவ்விடத்தில் நாமாதியாக மேல் மேல் சொல்லிக்கொண்டுபோய் இந்த உபதேசத்தை ஜீவனிடத்தில் ஸமாப்தி செய்தபடியால், "அவன் நிரதிசய ஸுகஸ்வரூபி" என்று சொல்லப்பட்டவன் ஜீவனே யாகவேண்டும் என்று பூர்வபக்ஷம். — "ஏஷ து வா அதிவததி யஸ்ஸத்யேநாதிவததி" தானுபாஸநம் செய்கிற ஸத்ய சப்த வாச்யனான பரமாத்மாவை எவன் ப்ரலாபநம் செய்கிறானோ, ஜீவோபாஸகனைக்காட்டிலும் பின்னனான இவனே* அதிவாதம் செய்கிறவன் என்று ஜீவோபாஸகனைக் காட்டிலும் பரமாத்மோபாஸகனை பின்னனாய் உத்தமனாகச்சொல்லி அங்கே ஆத்மோபதேசத்தை ஸமாப்தி செய்திருக்கிறது; இதற்கு முன்பு ஜீவனிடத்தில் ஆத்மோபதேசம் ஸமாப்தியாகவில்லை. ஆகையால் ஸமாப்தியிற்சொன்ன பரமாத்மாவே இங்கு 'ஸ:' அவன் என்று சொல்லி 'பூமா' நிரதிசய ஸுகரூபி என்று சொல்லிற்று ஆகையால் இப்படி இங்கு சொல்லப்பட்டவன் பரமாத்மா என்று ஸித்தாந்தம். எஉ.

ஸூ. எ௩. தர்மோபபத்தேஶ்ச.

(ரா-வ்யா-ஸா.) தர்மோபபத்தேஶ்ச-மேற்சொல்லிய குணங்கள் பரமாத்மாவினிடத்திலேயே அந்வயிக்கையாலும், (இவன் பரமாத்மா). எ௩.

(ஶ-ரா-ஸா.) இப்ப்ரகரணத்தில் பூமாவுக்குச் சொல்லிய தர்மங்கள் ப்ரஹ்மத்திற்கேயுள்ளன. அவையாவன, — அழிவற்றிருக்கை, தன் மஹிமையினால்தான் விளங்குகை, எங்கும் பரந்திருக்கை முதலியவை. இவை மற்றொன்றுக் கொவ்வாமையால் இந்த பூமாப்ரஹ்மமே. மேலும் பேதவாஸனையும் அதற்கடியான அவித்யையும் நசித்த பிறகு நிர்குண ப்ரஹ்மத்தில் லயிக்கிறவன் ப்ரஹ்மஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறான ஜகத்தைப் பார்க்கமாட்டானாகையால் 'யத்ர நாந்யத்பஶ்யதி' என்கிற வாக்யமும் நிர்குண ப்ரஹ்ம பரமாயே யிருக்கிறதென்று ஸித்தாந்தம். எ௩.

அதி-உ௦-ஸூ-எச. அக்ஷரமம்பராந்தத்ருதே:

(ஶ-வ்யா.) அம்பராந்தத்ருதே: - ஆகாசம் வரையிலுள்ள ஜகத்தைதரிக்கையாலே, அக்ஷரம்-அக்ஷரமென்று சொல்லப்பட்டதுபரப்ரஹ்மம். எச.

(ரா - வ்யா.) அம்பராந்தத்ருதே:-ஆகாசத்துக்குக்காரணமாகிய மூல

* அதிவாதம் செய்கையாவது - தான் உபாஸநம்செய்யும் தேவதையைப்புகழுகை

ப்ரக்ருதியை தரிக்கையாலே, அக்ஷரம் - அக்ஷரம் என்று சொல்லப்பட்டவன், (பரமாத்மா). ௭௪.

(ஸ-ஸா.) "ஏதத்³வை தத³க்ஷரம் கா³ர்கி³ ப்³ராஹ்மணா அபி⁴வத³ந்தி" என்கிற வாக்யத்தில், பூமிக்காதாரம் ஜலம், ஜலத்திற்காதாரம் அக்நி; அக்நிக்காதாரம் வாயு, வாயுவுக்காதாரம் ஆகாசம், ஆகாசத்திற்காதாரமெது என்று கேட்டவனுக்கு அதற்கு ஆதாரம் இந்த அக்ஷரம் என்று சொல்லப்பட்டது. அக்ஷரமென்றால் எழுத்துக்கும் ப்ரஹ்மத்திற்கும் பெயர். இங்கு எதைச்சொல்லலாமெனில், அக்ஷரமென்பது எழுத்துக்குப் பெயராகவே உலகினில் அதிகமாய் வழங்கிவருகையாலும், 'ஓங்கார ஏவேத³ம் ஸர்வம்' என்று ஓம் என்கிற ப்ரணவரூபமான எழுத்தே இந்த ஜகத்து என்று ஓம் என்கிற எழுத்தை ஸகல ஜகத்துக்கும் ஆதாரமாய் மோக்ஷார்த்தியினால் உபாஸகம் செய்யத்தக்கதாகச் சொல்லுகையால் ஓம்என்கிற எழுத்தை இங்கு ஸகல ஜகத்துக்கு மாதாரமாகச்சொல்லிற்று என்கிற சங்கையை,—எழுத்து ஜகத்துக்கு ஆதாரமென்பது ஸம்பவியாது. கீழ் உதஹரித்த வசனமும், ஓம் என்பது ப்ரஹ்மத்திற்கு வாசகமாகையால் அவ்வெழுத்தினால் ப்ரஹ்மத்தைச்சொல்லி அந்த ப்ரஹ்மமே ஸகல ஜகத்துக்கும் ஆதாரமென்று அர்த்தமுள்ளதாயிருக்கும், ப்ரணவத்தைத் துதிக்கைக்காகவும் அப்படி சொல்லலாம். வேதங்களிலும் அநேக இடங்களில் அக்ஷரமென்று ப்ரஹ்மத்தைச் சொல்வதாக ப்ரஸித்தியுண்டு. ஆகையால் இங்குள்ள அக்ஷர பதத்திற்கு எழுத்து அர்த்தமல்ல. ப்ரஹ்மமே அர்த்தமென்று நிரஸநம் செய்கிறார். ௭௪.

(ரா-ஸா.) "ஏதத்³வை தத³க்ஷரம் கா³ர்கி³" இத்யாதி வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—இங்கு அக்ஷரமென்று சொல்லப்பட்டவன் ஜீவனா, மூலப்ரக்ருதியா, பரமாத்மாவா என்று ஸம்சயம்.— "கஸ்மிந்நு க²ல்வாகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்ச" என்று ஆகாசத்திற்கு ஆதாரம் எது என்று கேட்டதற்கு இந்த வாக்யம் உத்தரமாகையாலே ஆகாசத்திற்கு ஆதாரமாகச்சொல்லப்பட்டது அதற்குக் காரணமாகிய மூலப்ரக்ருதியே யாகவேண்டும். ஜீவனும் ப்ருதிவ்யாத்ய சேதந வஸ்துவுக்கு ஆதாரமாகையால் ஆகாசத்திற்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டவன் ஜீவனுமாகலாம். பரமாத்மாவுக்கு அசித்ஸம்பந்த மில்லாமையால் இவன் பரமாத்மாவன்று என்று பூர்வபக்ஷம்.—த்ரிகாலவர்த்தியாகிய ஸகல வஸ்துக்களுக்கும் ஆதாரமாகிய ஆகாசத்திற்கு ஆதாரம் எது என்கிற ப்ரச்நவாக்கியத்தில், இந்த பூதாகாசம் அந்த ஸகலவஸ்துக்களுக்கும் ஆதாரமல்லாமையால் அப்படிப்பட்ட மூலப்ரக்ருதியே ஆகாசம் என்று சொல்லப்பட்டது—அதற்கு ஜீவனும் மூலப்ரக்ருதியும் ஆதாரமல்லாமையால் இங்கு மூலப்ரக்ருதியாகிய ஆகாசத்திற்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மா என்று ஸித்தாந்தம். ௭௪.

ஸூ. ௭௫. ஸா ச ப்ரஶாஸநாத்.

(ஸ-ரா-வ்யா.) ஸா ச-அந்த தரிக்கையும், ப்ரஶாஸநாத்-ப்ரக்ருஷ்டமான (அப்ரதிஹதமான) ஆஞ்ஞையினாலே, (என்று சொல்லுகையாலே இவன் பரமாத்மா). ௭௫.

(ஸ-ஸா.) பூமிக்காதாரம் ஜலம் என்கிற வரிசையில் அவ்வவ வஸ்துக்களுக்கு ஆதாரம் அவற்றுக்குக் காரணமாகிய தத்வம் என்று சொல்லிக்கொண்டுவந்து ஆகாசத்திற்கு அக்ஷரம் ஆதாரமென்றால் ஆகாசத்திற்குக் காரணமாகிய மூலப்ரக்ருதி

யே அக்ஷரபதத்திற்கு அர்த்தமாகு மல்லது ப்ரஹ்ம மர்த்தமாகாதென்கிற சங்கை யை,—“ ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே ” என்கிற மேல்வாக்யத்தில் இந்த அக்ஷரத்தினுடைய ஆஜ்ஞையினால் ஸூரியசந்திரர்கள் அந்தரத்தில் நிற்கிறார் கள் என்று சொல்லுகையால், ஆஜ்ஞையிடுவது அசேதநமாகிய மூலப்ரக்ருதிக்குக் கூடாமையால் அது இங்கு அர்த்தமன்று என்று பரிஹரிக்கிறார். ௭௧.

(ரா-ஹா.) “ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:” இந்த அக்ஷரத்தினுடைய ஆஜ்ஞையிலே ஸூர்ய சந்த்ரர்களும் மற்றும் ஸமஸ்தவஸ்துக்களும் தரிக்கப்பட்டிருக்கின்றன என்று ஸமஸ்த வஸ்துக்களையும் தன்னுடைய ஆஜ்ஞையினால் தரிக்கிறானென்று சொல்லுகையாலே இந்த அக்ஷரன் பரமாத்மா. ௭௨.

ஸூ. ௧௨. அந்யபாவவ்யாவ்ருத்தேஶ்ச.

(ஸு-ரா-வ்ய.) அந்யபாவவ்யாவ்ருத்தே: ச - வேறொன்றாயிருக்கை யைத்தவிர்க்கையாலேயும், (இவன் பரமாத்மா). ௭௩.

(ஸு-ஹா.) அந்யபாவமாவது-அசேதநமாயிருக்கை. அதைஶ்ருதி தவிர்க்கிறதெ ன்று சப்தார்த்தம். இந்த அக்ஷரத்தை, ‘அத்ருஷ்டம் த்ரஷ்ட்ரு அஶ்ருதம் ஶ்ரோத்ரு’ இத்யாதி வாக்யங்களாலே பார்க்கிறதில்லை, பார்க்கிறது, கேட்கிறதில்லை, கேட்கிறது என்று சொல்லிற்று. மூலப்ரக்ருதிக்கு பார்க்கிறதில்லையென்பது சேர்ந்தாலும் அசே தநமாகிய அதற்குப்பார்க்கிறதென்பது சேராது. ஜீவனைச்சொல்லுவோமென்றால் இந்த அக்ஷரம் “அசக்ஷுஷ்கமஶ்ரோத்ரம்” கண் காது முதலிய இந்த்ரியங்களில் லாததென்கையாலே ஜீவனுமர்த்தமாகக்கூடாது. உபாதியுள்ள ஜீவனுக்கு இந்த்ரி யங்களுள்ளது. உபாதியற்ற ஜீவனுக்கவையில்லாமையால் அவனைச்சொல்லலாமென் றால், உபாதியற்றவன் ஜீவனென்கிற பெயரை யுடையவனாகான். அந்த ஸ்வரூபம் நிர்குண ப்ரஹ்மஸ்வரூபம் ஆகையால் அதையே இங்கு அக்ஷரமென்று சொல்லிற் றென்று ஸித்தாந்தம். ௭௪.

(ரா-ஹா.) வாக்யசேஷத்தில் “அத்ருஷ்டம் த்ரஷ்ட்ரு” என்று இந்த அக்ஷரம் ஒருவனுடைய கண்ணுக்கு விஷயமன்று. இது எல்லாவற்றையும் பார்க்கிறது என்று சொல்லுகையால் இக்குணங்கள் ஜீவனுக்கும் ப்ரக்ருதிக்கும் இல்லாமையால் இவன் பரமாத்மா. ௭௫.

அதி-௩-ஸூ-௧௩. ஈக்ஷதிகர்மவ்யபதேஶாத் ஸ:.

(ஸு-வ்ய.) ஈக்ஷதிகர்மவ்யபதேஶாத்-தர்சநத்திற்கு விஷயமாகச் சொல்லுகையால். ஸ: - (ய: புந: என்கிற வாக்யத்திற் சொல்லப்பட்ட வன்) பரமேஶ்வரன். ௭௬.

(ரா-வ்ய.) வ்யபதேஶாத் - (பரமாத்மாஸாதாரண தர்மங்களைச்) சொல்லுகையாலே, ஈக்ஷதிகர்ம - ‘பராத்பரம் புருஷமீக்ஷதே’ என்கிற விட த்திலிதர்சநத்துக்கு விஷயமாகச் சொல்லப்பட்டவன், ஸ: - அந்த பர மாத்மா. ௭௭.

(ஸு-ஹா.) “ய: புநரேதம் த்ரிமாத்ரேணோமித்யேதேநைவாக்ஷரேண பரம் புருஷமபித்யாயீத” எவனொருவன் இந்த பரமபுருஷனை மூன்று மாத்ரையுள்ள ஓம் என்கிற ப்ரணவத்தை அவலம்பித்துக்கொண்டு உபாஸ

நம் செய்கிறுனே என்று இவ்வாக்யத்திற்கு அர்த்தம்.—இதற்கு முன் வாக்யத்தில் ஸத்யகாமனென்பவனைக்குறித்து பிப்பலாதனென்கிற ருஷிசொன்னதாவது.-"ஏதத்வை ஸத்யகாம பரம் சாபரம் ச ப்ரஹ்ம யதோங்காரஃ" என்று மூர்த்தியில் விஷ்ணு ஸ்வரூபத்தை த்யானிப்பதுபோல் ஓங்காரத்தில் பரமான நிர்குண ப்ரஹ்மத்தையாவது, அபரமான ஸகுண ப்ரஹ்மத்தையாவது த்யானிக்கலாம், நிர்குணத்தை த்யானித்தவன் நிர்குணப்ரஹ்மத்தை யடைகிறுன். ஸகுணப்ரஹ்மத்தைத் த்யானித்தவன்ஸகுணப்ரஹ்மத்தை யடைகிறுன் என்று ஸகுணப்ரஹ்மோபாஸநமும் நிர்குண ப்ரஹ்மோபாஸநமும் சொல்லிற்று. "யஃபுநஃ" என்கிற வாக்யத்தில் ஸகுணமென்றும் நிர்குணமென்றும் சொல்லாமல் பொதுவாக பரமபுருஷனை உபாஸநம் செய்யவேண்டுமென்று சொல்லிற்று. ஆகையால் இவ்வாக்யம் எந்த ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்யச்சொன்னதாக நிர்ணயிக்கலாமென்னில், இதற்கு மேல்வாக்யத்தில் 'இந்த உபாஸநத்திற்கு பலமாக, "ஸ தேஜஸி ஸூர்யே ஸம்பந்நஃ" இத்யாதியினுல், இப்படி உபாஸநம் செய்தவன் ஸூர்யனிடம் சென்று அவ்வழியாய் ப்ரஹ்மலோகத்திற்குப்போய் அங்கு பரமாத்மாவைப் பார்க்கிறுனென்று சொல்லிற்று. ஸகுணப்ரஹ்மத்தை உபாஸநம் செய்தவன்தான் வைகுண்டமென்கிற லோகத்தை யடைந்து ப்ரஹ்மாநுபவம் செய்வான். நிர்குண ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்தவன் இங்கிருந்தே நிர்குணப்ரஹ்மத்தை யநுபவிப்பான். இங்குசொன்ன உபாஸநத்திற்கு பலமாக ஒருலோகத்திற்சென்று செய்யவேண்டும் ப்ரஹ்மாநுபவத்தைச் சொல்லுகையால் இங்கு ஸகுணப்ரஹ்மோபாஸநமே யாகவேண்டும் என்கிற சங்கையை, இவ்வாக்யத்திற் சொல்லிய அர்த்தத்தை விவரித்துச் சொல்லுகிற வாக்யசேஷத்தில் "பராத்பராத் புரிஶயம் புருஷமீக்ஷதே" என்று இப்படி உபாஸநம்செய்தவன் பரமோத்தமனுன புருஷனைப்பார்க்கிறுனென்று சொல்லிற்று. ஒருவிதமான வஸ்துவை மற்றொருவிதமாக த்யாநம் செய்யலா மல்லது ஒன்றை மற்றொன்றாகப் பார்ப்பது அஸம்பவம். புற்றினருகில் கிடந்த கயிற்றைப் பாம்பாகப்பார்ப்பது ப்ராந்தியாகுமல்லது உண்மையான பார்வையன்று, கயிறென்று பார்ப்பதே உண்மையானபார்வை. இங்கு நிர்குண ப்ரஹ்மத்தைப் பார்க்கிறுனென்று சொல்லிற்று. அது நிர்குணப்ரஹ்மோபாஸநத்திற்கே பலமாகையால் இவ்வாக்யத்தில் சொல்லப்பட்டது நிர்குணேபாஸநமேயென்று பரிஹரிக்கிறுர். ௭௭.

(ரா-ஸா.) "யஃ புநரேதம் த்ரிமாத்ரேணோமித்யேதேநைவாக்ஷரேண பரம் புருஷமபித்யாயீத" எந்த புருஷன் மூன்று மாத்ரையை யுடைய ஓம் என்கிற அக்ஷரமாகிய ப்ரணவத்தினுல் இந்த பரமபுருஷனை உபாஸநம் செய்கிறுனே, என்றுதொடங்கி, 'பராத்பராத் புரிஶயம் புருஷமீக்ஷதே' பராத்பரனுன புருஷனை ஸாக்ஷாத்கரிக்கிறுன் என்கிற விடத்தில், சதுர்முக ப்ரஹ்மாவா, பரமாத்மாவா ஸாக்ஷாத்காரத்துக்கு விஷயமாகச் சொல்லப்பட்டவன் என்று ஸம்சயம்.—ஒரு மாத்ரையையுடைய ப்ரணவத்தை உபாஸித்தவனுக்கு மனுஷ்ய லோக முண்டென்றும், இரண்டுமாத்ரையை யுடைய ப்ரணவத்தை உபாஸித்தவனுக்கு அந்தரிக்ஷலோக முண்டென்றும் சொல்லி மூன்று மாத்ரையையுடைய ப்ரணவத்தை உபாஸித்தவனுக்கு ப்ரஹ்மலோகத்திலிருக்கிற புருஷதர்சநம் உண்டாகுமென்று சொல்லுகையாலே, அந்தரிக்ஷலோகத்திற்கு மேல்பாகத்திலுள்ள ப்ரஹ்மலோகத்திலிருக்கிற சதுர்முகப்ரஹ்மாவே இங்கு ஸாக்ஷாத்கார விஷயமாகச் சொல்லப்பட்டான் என்று பூர்வபக்ஷம்.—ஸாக்ஷாத்காரவிஷயமாகச்சொல்லப்பட்ட புருஷனுடைய மஹிமையைச் சொல்லுகிற மேல்வாக்யத்தில் "ஸாமபிருந்நீயதே"

என்று காமக்ரோதாதிகளில்லாதவன், ஜநநமரணாதி விகாரமில்லாதவன், பரமபோக்ய பூதன் என்று சொல்லுகையாலே ஸ்வதஸ்ஸித்தமாகிய இக்குணங்கள் சதுர்முக ப்ரஹ்மாவுக்குக் கூடாமையால் இவன் பரமாத்மா. இவனுக்கு வாஸஸ்தாநமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மலோகம் த்ரிபாத்விபூதியான பரமபதம் என்று ஸித்தாந்தம்.

அதி. ௨௨-ஸூ-௭௮. தஹர உத்தரேப்ய:

(ஶ்ரீ-ஸூ.-வ்யா.) உத்தரேப்ய: - உத்தரவாக்யத்திற் சொல்லிய பரமாத்மாவின் அஸாதாரண குணங்களாலே, தஹர:-தகராகாசமென்று சொல்லப்பட்டவன், (பரமாத்மா என்று நிஸ்சயிக்கவேண்டும்.) ௭௮.

(ஶ்ரீ-பா.) "அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஶ்ம தஹரோऽஸ்மிந்நந்தராகாஶ:" ப்ரஹ்மபுரமென்று சரீரத்திற்குப்பேர். இந்த சரீரத்தில் சிறிதாகிய ஹ்ருதயகமலமுண்டு; அதில் சிறிய ஆகாசமுண்டு, அதைத் தேடவேண்டும் என்று இதற்கு அர்த்தம்.—இங்கு ஆகாசமென்று, ஐம்பூதங்களிற்சேர்ந்த ஆகாசத்தையா, ஜீவனையா, அல்லது ப்ரஹ்மத்தையா சொல்லுகிறது: எதைச் சொன்னால் யுக்தமாயிருக்குமென்னில்,—ஆகாசமென்று ஐம்பூதங்களில் சேர்ந்த ஆகாசத்திற்கே பெயராக உலகத்தில் வழங்குகையால் அதைச்சொல்லுவது யுக்தம்; அல்லது,—ப்ரஹ்மமென்றால் ஜீவன், அவன் வாஸம் செய்யுமூர், அதாவது இடம். ஆகையால் சரீரத்திற்கு ப்ரஹ்மபுரமென்று பெயர். ஜீவனாவது - மனஸ்ஸு என்கிற உபாதியினால் மூடப்பட்ட ப்ரஹ்மத்தினுடைய ஒருபாகம். அந்த ஜீவன் முக்கியமாய் ஹ்ருதயத்திலேயிருக்குமாகையால்,சிறிய ஆகாசம்போல் சிறியனாயிருக்கிற ஜீவனையே இவ்வாக்யத்தில் ஹ்ருதயத்திலுள்ள தகராகாசமென்று சிறிய ஆகாசமாகச் சொல்லிற்றாகலாமென்பதும் யுக்தமே என்கிற சங்கையை,—ஐம்பூதங்களிலொன்றான ஆகாசத்தைச் சொல்வது அயுக்தம். ஏனென்றால், மேல் இவ்வாகாசம் ஆகாசம் போன்றதென்று சொல்லுகிறவாக்யம் அர்த்தமற்றதாயிருக்கும். மநுஷ்யன் மனுஷ்யன் போன்றவன், எருது எருது போன்றது என்று த்ருஷ்டாந்தம் சொல்வது கிடையாது. இந்த புருஷன் மந்மதன் போன்றவன் என்று ஒன்றுக்கு மற்றொன்றையே உபமானமாகச் சொல்வது ப்ரஸித்தம். இவ்வாகாசம் ஐம்பூதங்களிலொன்றான ஆகாசம் போன்றதென்றால், இவ்வாகாசம் ஐம்பூதங்களிலொன்றான ஆகாசமாகக்கூடாது, வேறொரு வஸ்துவாகவே யாகவேண்டு மாகையால் இது பூதாகாசமன்று. மேல் வாக்யங்களில் இந்த தகராகாசத்தை ஸகல லோகங்களுக்கும் ஆதாரமாகவும் அபஹத பாப்மத்வம் முதலிய குணங்களையுடையதாகவும் சொல்லுகையால் பரமாத்மாவுக்கே உள்ள இவை ஜீவனுக்கும் கிடையாதாகையால் இவ்வாகாச பதத்தினால் ஜீவனைச் சொல்லுவதும் யுக்தமன்று. ஆகாசம் அளவிட வொண்ணாதாகிலும் கடாகாசம் மடாகாசம் என்று சிறிதாய் அளவிட்டுக் காணும்படியு மிருப்பதுபோல் ஸகுண ப்ரஹ்மஸ்வரூபம், பக்திசெய்யு மவனுடைய ஹ்ருதயத்தில் சிறியவடிவுடன் இருக்குமாகையால் மேல் கூறப்படும் குணங்களையுடைய ஸகுண ப்ரஹ்மமே இங்கு சொல்லப்பட்டது. இதை உபாஸநம் செய்து இவ்வழியாய் நிர்குணப்ரஹ்மத்தையடையக் கடவனென்று இவ்வாக்யத்திற்குத் தாத்பர்யமென்று பரிஹரிக்கிறார். ௭௮.

(ஶ்ரு-ப்ர.) "அத யதிதமஸ்மிந்" இத்யாதி "தஹரோऽஸ்மிந்நந்தராகாஶஸ் தஸ்மிந் யதந்தஸ் ததந்வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம்" என்கிறது இந்த அதிகரணத்திற்கு விஷயவாக்யம்.—இவ்வாக்யத்தில், ஹ்ருதயபுண்டரீக மத்யவர்த்தியாக தகராகாசசப்தத்தினாற் சொல்லப்பட்டவன் ஜீவனா,பூதாகாசமா, பரமாத்மாவா

என்று ஸம்சயம். ஆகாசமென்கிற பதம் பூதாகாசத்தில் அதிகமாக வழங்குகிறபடியால் அதுவே இங்கு சொல்லப்பட்டது. மேல் இந்த தகராகாசத்திற்கு அபஹதபாப்மத்வாதி குணங்கள் சொல்லுகையால் அக்குணங்கள் பூதாகாசத்திற்குக் கூடாமையால் பூதாகாசமாகாது, ஆயினும், அக்குணங்கள் ஜீவனுக்கு ப்ரஜாபதி வாக்யத்தில் சொல்லப்பட்டன ஆகையால் அந்த ஜீவனே அக்குணங்களையுடையவனாக இங்கு தகராகாசமென்று சொல்லப்பட்டவன் என்று பூர்வபக்ஷம்.—ப்ரஜாபதி வாக்யத்தில் முன் அநாதிமாயையினால் மூடப்பட்டு பரமாத்மாவை யடைந்தபின் அபிவ்யக்தமான அபஹதபாப்மத்வாதி குணங்களையுடைய ஜீவன் சொல்லப்பட்டான். இவ்வாக்யம் மேலே, ஸர்வதா பாஸமானமான அபஹதபாப்மத்வாதிகுணங்கள் தகராகாசத்திற்குச் சொல்லியிருக்கிறது. ஆகையால் ப்ரஜாபதி வாக்யத்திற் சொல்லப்பட்ட ஜீவனைக் காட்டிலும் பிந்நனாகிய பரமாத்மாவே தகராகாசசப்தத்திற்கு அர்த்தமென்று ஸித்தாந்தம். எஅ.

ஸூ. எகூ. கதிஶப்தாப்யாம் ததா ஹி த்ருஷ்டம் லிங்கம் ச.

(ஶ-வ்யா.) கதிஶப்தாப்யாம் - (உறங்கும்போது ஜீவர்களுடைய கமநத்தினாலும் ப்ரஹ்மசப்தத்தினாலும், (இந்த ஆகாசம் பரப்ரஹ்மம்) ததா ஹி. அப்படி ப்ரஹ்மத்தினிடத்தில் ஜீவனுறங்கும்போது சேருகை, த்ருஷ்டம் லோகத்தில் காணப்பட்டது. லிங்கம் ச - (ப்ரஹ்மலோகமென்கிறபதத்திற்கு ப்ரஹ்மமாகிய லோகமென்று அர்த்தம் சொல்லுகைக்கு இதுவே) ஹேது.

(ரா - வ்யா.) கதிஶப்தாப்யாம். (ஜீவர்களுடைய) கமநத்தினாலும் (ப்ரஹ்ம) சப்தத்தினாலும், (தஹராகாசம் பரமாத்மாவென்று நிஶ்சயிக்கப்படுகிறது). ததா ஹி - அப்படியே ஜீவர்களுக்குப் பரமாத்மாவிடத்தில் கமநம், த்ருஷ்டம் - காணப்பட்டிருக்கிறது. லிங்கம் ச - (இவ்வாக்யத்தில் சொல்லியிருக்கிற கமநமே தஹராகாசம் பரமாத்மாவென்பதற்கு) ஹேது வாகிறது. எகூ.

(ஶ-ஸா.) "இமா: ஸர்வா: ப்ரஜா அஹரஹர்கச்சந்த்ய: ஏதம் ப்ரஹ்மலோகம் ந விந்தந்தி" என்று தினந்தோறு முறங்கும்போது ஜீவர்கள் தஹராகாசமென்று சொல்லப்பட்ட இந்த ப்ரஹ்மலோகமென்கிற ப்ரஹ்மஸ்வரூபத்தை யடைகிறார்கள் என்று சொல்லிற்று. லோகத்தில், "இவனுறங்கும்போது ப்ரஹ்மமாய்விட்டனன் என்று ப்ரஹ்மத்தில் சேர்ந்ததாகச்சொல்லுகிறார்களல்லது ஆகாசத்தில் சேர்ந்ததாகச் சொல்லுகிறதில்லை. உலகமொழியிருக்க வேதத்திலும் மற்ற அனேக இடங்களில் உறக்கத்தில் ஜீவன் ப்ரஹ்மத்தில் லயிக்கிறதாகவே சொல்லியிருக்கிறது. இப்படி லோகவேத ப்ரமாணங்களினாலும், இவ்வாகாசத்தை ப்ரஹ்மலோகமென்று ப்ரஹ்மமாகச் சொல்லுகையாலும் இந்ததஹராகாசம் ப்ரஹ்மமேயாகவேண்டும். ப்ரஹ்மலோகமென்றால் சதுர்முகப்ரஹ்மாவினுடைய லோகமென்று அர்த்தம் சொல்லாமல் ப்ரஹ்மஸ்வரூபமென்று அர்த்தம் சொல்லுகைக்குக் காரணமென்னென்னில், இந்த ப்ரஹ்மலோகத்தை ஜீவர்கள் உறக்கத்தில் அடைகிறதாகச் சொல்லுகையால், இப்படி அடைவது பரப்ரஹ்மஸ்வரூபத்தையே அடைவதாக மற்ற ப்ரமாணங்கள் சொல்லுகையால் இதற்கு இதுவே அர்த்தமாகக்கடவது. எகூ.

(ரா-ஸா.) உள்ளிருக்கிற பணத்தை யறியாமலே அந்த பூமிமேல் ஜநங்கள் ஸஞ்சரிப்பதுபோல் தினந்தோறும் ஸுஷுப்தி காலத்தில் பரமாத்மாவை அடைந்

தம் நான் பரமாத்மாவை அடைந்தேனென்று ஜநங்களறிகிறதில்லை என்றுப்ரகரணாந்தரங்களில் ஸுஷுப்திகாலத்தில் ஜீவன்கள் பரமாத்மாவை அடைகிறார்களென்று சொல்லுகையாலே ஸுஷுப்திகாலத்தில் ஜீவர்களா லடையப்பட்டவன் பரமாத்மாவாகிறான். இப்ப்ரகரணத்தில் தகராகாசத்தை ஸுஷுப்திகாலத்தில் ஜீவர்கள் அடைகிறார்கள் என்று சொல்லியிருக்கையாலே இந்த தகராகாசம் பரமாத்மா என்னக் குறையில்லை. மேலும் இந்த தகராகாசத்தை ப்ரஹ்மலோகமென்று சொல்லியிருக்கிறது. ப்ரஹ்மலோக மாகிறது. ப்ரஹ்மமாகிய லோகம் ப்ரஹ்மமென்றர்த்தம். இந்த விசேஷணத்தினாலும் தகராகாசம் பரமாத்மாவென்று நிஸ்சயிக்கப்படும். ௰௯

ஸூ. ௨௦. த்⁴ருதேஶ்ச மஹிம்னோऽஸ்யாஸ்மின்னுபலப்³தே⁴:.

(ஸு-வ்ரு.) அஸ்ய - இந்த, த்⁴ருதே: - தரிக்கையாகிய, மஹிம்ன: - மாஹாத்ம்யத்திற்கு, அஸ்மின் - இந்த தகராகாசமாகிய பரப்ரஹ்மஸ்வரூபத்தில், உபலப்³தே⁴: - காண்கையுண்டாகையால், (இது ப்ரஹ்மம்.) ௨௦.

(ரா-வ்ரு.), அஸ்ய - இந்த பரமாத்மாவினுடைய, த்⁴ருதே: - ஜகத்தை தரிக்கையாகிற, மஹிம்ன: - மாஹாத்ம்யத்துக்கு, அஸ்மின் - இந்ததகராகாசத்தில், உபலப்³தே⁴ஶ்ச - உபலப்தியிருக்கையாலும், (தகராகாசம் பரமாத்மா).

(ஶ்ரு-பா.) "ஏஷ ஸேதுர்வித⁴ரண ஏஷாம் லோகானாமஸம்பே⁴தா³ய" என்று, உலகத்தில் பயிர் முதலியவற்றில் வெள்ளம்வழிந்து அவை யழிந்து போகாமற்படி அணையானது ஜலத்தைத்தடுத்து நிறுத்துவதுபோல், இந்த தகராகாசமாகிய பரமாத்மாவானவன் வர்ணாஸ்ரமாதி தர்மங்கள் ஒன்றுக்கொன்று கலந்து போகாமற்படி காக்கிறானென்கிற இம்மஹிமை மற்றொன்றுக் கொவ்வா தாகையால் இது பரமாத்மஸ்வரூப மெனப்படும். ௨௦.

(ரா-ஹா.) ப்ரகரணாந்தரங்களில் பரமாத்மாவே இந்த ஜகத்தை தரிக்கிறானென்று சொல்லுகிறது. இங்கு தகராகாசம் ஜகத்தை தரிக்கிறதென்று சொல்லியிருக்கையாலே இந்த தகராகாசம் பரமாத்மாவென்று நிஸ்சயிக்கப்படும். ௨௦.

ஸூ. ௨௧. ப்ரஸித்³தே⁴ஶ்ச.

(ஸு-ரா-வ்ரு.) ப்ரஸித்³தே⁴ஶ்ச - ஆகாச சப்தத்திற்குப்பரமாத்மாவினிடத்திலும் ப்ரஸித்தியிருக்கையாலும், (தகராகாசம் பரமாத்மா). ௨௧.

(ஸு-ஹா.) ஆகாசமென்று ஐம்பூதங்களிலொன்றான ஆகாசத்திற்கே பெயராயிருக்குமென்கிற நியமமில்லை. "ஆகாஶோ ஹ வை நாம ரூபயோர்நிர்வஹிதா" என்று நாமரூபங்களைப்படைத்த பரமாத்மாவை வேதத்தில் ஆகாசமென்று சொல்லுகையால் அவனுக்கும் ஆகாசமென்று பெயருண்டு. ௨௧.

(ரா-ஹா.) 'ஆகாஶஸ்தல்லிங்கா³த்' இத்யாதியாகப் பலவிடங்களில் ஆகாசபதம் பரமாத்ம வாசகமாக ப்ரயோகித்திருக்கிறது. ஆகையால் ஆகாசமென்று பரமாத்மாவுக்கும் பேருண்டு. ஆனால் பரமாத்மாவையும் பூதாகாசத்தையும் இரண்டையும் சொல்லுகிற ஆகாசபதம் இங்கு யாரைச்சொல்வதாக நிஸ்சயிக்கவேண்டுமென்னில், இங்கு தகராகாசத்திற்குப் பரமாத்மகுணங்கள் விசேஷித்துச்சொல்லியிருக்கையாலே பரமாத்மாவையே சொல்வதாக நிச்சயிக்கவேண்டும். ௨௧.

ஸூ. ௨௨. இதரபராமர்ஶாத் ஸ இதி சேன்னாஸம்ப⁴வாத்.

(ஸூ-ரா-வ்யா.) இதரபராமர்சாத்-பரமாத்மாவைக்காட்டிலும் பின்னனை ஜீவனையும் (இப்ப்ரகரணத்தில்) சொல்லுகையாலே, ஸ:-அந்தஜீவன், (தஹராகாசபதத்திற்கு அர்த்தம்,) இதிசேத்-என்றால், அஸம்பவாத்-இவனுக்குச் சொல்லப்பட்ட குணங்கள் ஜீவனுக்கு ஸம்பவியாதாகையால், ந-ஜீவன் தஹராகாசமன்று. அஉ.

(ஸூ-ஹா) இப்ப்ரகரணத்தில் "ஏஷஸம்ப்ரஸாத:" என்று ஜீவனையும் சொல்லுகையாலே தஹராகாச சப்தத்திற்கு ஜீவனை அர்த்தமாகச்சொல்லாமல் பரப்ரஹ்மத்தையே சொல்லுவானென்னென்னில்; லோகங்களுக்கு ஆதாரமாகை முதலிய குணங்கள் ஜீவனுக்குக் கிடையாமையால் அவனிங்கு அர்த்தமாகமாட்டான் ()

(ரா-ஹா.) இவ்வாக்யத்தில் ஜீவனை ப்ரஸ்தாவித்திருக்கிறபடியால் அவனே தகராகாசத்திற்கு அர்த்தமாகலாமென்கிற சங்கை வேண்டாம். ஏனென்றால்,—இந்த தஹராகாசத்திற்குச் சொல்லிய அபஹதபாப்மத்வாதி குணங்கள் பரமாத்மாவுக்கே உள்ளதொழிய ஜீவனுக்கு ஸம்பவியாது. ஆகையால் தஹராகாசம் ஜீவனன்று. ஙஉ.

ஸூ. அங. உத்தராச்சேதாவிர்பூதஸ்வரூபஸ்து.

(ரா-வ்யா) உத்தராச்சேத் - மேல்வாக்யத்தினால் (அபஹதபாப்மத்வாதி குணங்களையுடைய ஜீவன் தோற்றுகிறானென்றால், ஆவிர்பூதஸ்வரூபஸ்து - அபிவ்யக்தமான ஸ்வரூபத்தையுடைய ஜீவனே அவ்வாக்யத்தில்தோற்றுகிறான். அங.

(ஸூ-ஹா.) கீழ்,தஹராகாசபதத்தினால் சொல்லப்பட்டவனை, ஆகாசம்போல் ஸர்வவ்யாபி என்றும் புண்யபாபங்களற்றவனென்றும் சொல்லுகையால் இக்குணங்கள் ஜீவனுக்குக் கிடையாமையால் இப்பதத்திற்குப் பரமாத்மாவே அர்த்தமென்றது. இதில் இக்குணங்கள் ஜீவனுக்கு முண்டாகையால் இப்பதத்திற்கு ஜீவனுமர்த்தமாகலாமென்கிறது.—மேல் ப்ரஹ்மா இந்த்ரனுக்கு உபதேசம் செய்யும்போது ஜீவனை புண்யபாபங்களறுகை முதலிய குணங்களையுடையனாக உபதேசித்தாராகையால் தஹராகாசமென்பவன் ஜீவனாகலாமென்ற பூர்வபக்ஷத்தை,—அவ்வாக்யத்தில் ஜீவன்சொல்லப்படவில்லை, ஆவிர்ப்பூதஸ்வரூபமே, அதாவது - பரமாத்மஸ்வரூபமே சொல்லப்பட்டது. முதல் ஜீவனுடைய ஜாக்ரதவஸ்தையைச்சொல்லி, இந்த விழித்திருக்கும் தசை பலவிதமான ப்ராந்திக்குக் காரணம், ஸ்வப்னதசையில் இந்த்ரியங்கள் வெளியில் போக்கற்று ஜீவனுடன் உள்ளுக்குள் மாத்ரம் ஸஞ்சரிக்கையால் இவ்வளவு ப்ராந்தி கிடையாது. சிறிது ப்ராந்தியே யுண்டாகுமாகையால் ஸ்வப்னதசை ஜாக்ரதவஸ்தையைக்காட்டிலும் மேலானதென்று அதை நிரூபித்து, பிறகு உறங்கும் தசையில் ஸகலகரணகளேபராபிமானங்களுமற்று எவ்விதப்ராந்தியுமின்றியே யிருக்கிறானென்று சொல்லிற்று. அக்காலத்திலுள்ள ஸ்வரூபமே ஆவிர்ப்பூதஸ்வரூபமென்பது. அது பரப்ரஹ்மஸ்வரூபம். ப்ரஹ்மஸ்வரூபமே அவித்யை என்கிற உபாதியோடு சேர்ந்திருந்தால் ஜீவனாகிறது; அப்போது ப்ரஹ்மத்துக்குள்ள குணங்கள் ஸம்பவியாது. அந்த ஸ்வரூபமே உபாதியற்றால் ப்ரஹ்மமாகிறது. அக்குணங்கள் அப்போது கூடும் உபாதியினால் நிஜமான குணங்கள் மறைந்து விடுகையும், அதற்றால் பிரகாசிக்கையும் எங்கேகாணலாமென்னில், ஸ்ப்படிகமணி வெளுப்பாயினும் அசோகம்பூ அருகிலிருந்தால் அதின் நிறமாகிய சிவப்பேகாணுமல்லது நிஜமான வெண்மை காணப்படாது. அதுபோல் அவித்யையுள்ளவனாயில் ப்ரஹ்மகுணம் காணப்படாது. அது கழிந்த

ஸ்வரூபத்திற்கே அக்குணங்கள் மேல்வாக்யத்தில் சொல்லப்பட்டது ஆகையால் இங்குச்சொல்லப்பட்டவன் ஜீவனுகான். ௮௩.

(ரா-ஹா.) மேல் ப்ரஜாபதி வாக்யத்தில் அபஹதபாப்மத்வாதி குணங்கள் ஜீவனுக்கு முண்டென்று தோற்றுகையாலே அக்குணங்களையுடையதாகச் சொல்லப்பட்ட தஹராகாசமும் ஜீவனே யாகலாமென்று சங்கிக்கவேண்டாம். ஏனென்றால்,—அங்கு ஜீவனுக்குப் புண்யபாபரூப கர்மங்கழிந்தால் பிறகு அபஹதபாப்மத்வாதி குணங்கள் அபிவ்யக்தங்களாகிறதென்று சொல்லிற்று. இங்கு தஹராகாசத்திற்கு இக்குணங்கள் ஸர்வதா அபிவ்யக்தங்களாகச் சொல்லிற்று, ஆகையால் அபஹதபாப்மத்வாதி குணங்களையுடையதாகச் சொல்லப்பட்ட தஹராகாசம் ஜீவனன்று. ௮௩.

ஸூ. ௮௪. அந்யார்த்தஶ்ச பராமர்ஶ:.

(ஸு-ரா-வ்ரு.) பராமர்ஶ:-இங்கு ஜீவனைச்சொல்லுகிறது, அந்யார்த்தஶ்ச - வேறு ப்ரயோஜநத்தை யுடையது. ௮௪.

(ஸு-ஹா.) ஆகில் அவ்வாக்யத்தில் "ஸம்ப்ரஸாத:" என்று ஜீவனைச்சொல்லுவானென்னென்னில், எந்த ஜ்யோதிஸ்ஸ்வரூபத்தை யடைந்தால் ஜீவன் தன்னுடைய நிஜஸ்வரூபத்தை யடைவனே, அதை இஜ்ஜீவன் பராமர்சிக்கக்கடவன் என்கைக்காகச் சொல்லிற்றல்லது கீழ்ச்சொன்ன அபஹதபாப்மத்வாதி குணங்களையுடையனுகவும் உபாஸ்யனுகவும் சொல்லவில்லை. ௮௪.

(ரா-ஹா.) ஆனல் இப்ப்ரகரணத்தில் ஜீவனைச்சொல்லுவானென்னென்னில், திரோஹித ஸ்வரூபனுன ஜீவன் தஹராகாசசப்த வாச்யனுன பரமாத்மாவை யடைந்து ஸ்வஸ்வரூபாவிர்பாவத்தை யடைகிறுன் என்று, தஹராகாசத்திற்கு ஜகதாதாரத்வம்போல் ஜீவஸ்வரூபாவிர்பாவ காரணத்வமுமுண்டென்று சொல்லுகைக்காக இப்ப்ரகரணத்தில் ஜீவனைச்சொல்லிற்று. அவ்வளவு சொன்னமாத்திரத்திலேயே ஜீவனே தஹராகாசமென்று நிஶ்சயிக்கக்கூடாது. ௮௪.

ஸூ. ௮௫. அல்பஶ்ருதேரிதி சேத்தது க்தம்.

(ஸு-ரா-வ்ரு.) அல்பஶ்ருதே:-(தஹராகாசம்) அல்பபரிமாண முடையதென்று சொல்லுகையாலே, (அப்பரிமாணமுடைய ஜீவனே யாகவேண்டும்; மஹத்பரிமாணமுடைய பரமாத்மாவாகக்கூடாது), இதிசேத - என்றால், தத் - இப்பூர்வபக்ஷத்திற்கு உத்தரம், உக்தம் - (மஹத்பரிமாண முடையபரமாத்மாவுக்கும் அல்பபரிமாணம் த்யாநார்த்தமாகச் சொல்லிற்றென்று முன்னமே) சொல்லப்பட்டது. ௮௫.

(ஸு-ரா-ஹா.) தஹராகாசத்தைச் சிறிதாகச்சொல்லிற்று. ப்ரஹ்மஸ்வரூபமெல்லைகடந்தது ஆகையால் இதுஜீவனே யாகவேணுமென்னில்,—மஹத்தான ப்ரஹ்மஸ்வரூபத்தையே த்யாநிக்கைக்காகச் சிறியஅளவுள்ளதாகச்சொல்லிற்று. இது "அர்ப்பகௌகஸ்த்வாத்" இத்யாதி ஸூத்ரத்தில் விவரிக்கப்பட்டது. ௮௫.

ஸூ. ௮௬. அநுக்ருதேஸ்தஸ்ய ச.

(ரா-வ்ரு-ஹா.) தஸ்ய-அந்த பரமாத்மாவினுடைய, அநுக்ருதே:-ஸாம்யத்தையடைகிறதினுல், (ஜீவன் ஆவிர்பூதஸ்வரூபனுய் அபஹதபாப்மத்வாதி குணங்களையுடையவனுகிறுன் என்று சொல்லுகையாலே, தஹராகாசத்தோடு ஸாம்யத்தையடைகிற ஜீவன் தஹராகாசமாகமாட்டான்.

(ஶ்ரு-ஹா.) "ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்" என்று தொடங்கி, "தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி" என்கிற வாக்யத்திற்கு, அந்த வஸ்து ப்ரகாசிக்கும்போது ஸூர்யன் சந்திரன் நக்ஷத்திரங்கள் மின்னல் அக்கினி இவைகள் பிரகாசிக்கமாட்டா, அவ்வஸ்துவை யநுஸரித்தே ஸூர்யாதிகள் பிரகாசிக்கின்றன, என்று பூர்வபக்ஷத்தில் அர்த்தம். அந்த வஸ்துவினுடைய பிரகாசத்தினுல் ஸூர்யன் முதலிய இஜ்ஜகத்து பிரகாசிக்கிறது. அவ்வஸ்து இல்லாவிடில் இஜ்ஜகத்து பிரகாசிக்கமாட்டாது என்று ஸித்தாந்தத்திலர்த்தம் இவ்வாக்யத்தில் அவ்வஸ்துவென்று சொல்லப்பட்டது, தேஜஸ்ஸா, அல்லது பரப்ரஹ்மமா என்று, இந்த சப்தம் இரண்டுக்கும் பொதுவாயிருக்கையால். உண்டாகும் ஸம்சயத்தில்,—லோகத்தில் தேஜோரூபியான ஸூர்யன் இருந்தால் அதின்முன் மற்றதேஜோரூபியாகிய சந்திரன் நக்ஷத்திரம் மின்மினி முதலிய தேஜோரூபியான வஸ்துக்கள் காண்கிறதில்லையென்பது அநுபவஸித்தமாயிருக்கிறது. ஆகையால் ஸூர்யன் முதலிய தேஜஸ்ஸுக்களை மறைக்கத்தக்கவஸ்து தேஜஸ்ஸாகவே யாகவேணும். ஒன்றை ஒன்று அநுஸரிக்கிறதென்றால் அவ்விரண்டு வஸ்துவும் ஒரு ஜாதியாகவே யாகவேண்டுமாகையால் ஸூர்யாதிகளினு லநுஸரிக்கப்படுகிற அவ்வஸ்து ஸூர்யாதிகளைப்போல் தேஜஸ்ஸேயாகவேணும், பரமாத்மா வாகக்கூடாது என்று பூர்வபக்ஷி சொன்னான்.—அது பிரகாசிக்கில் ஜகத்து பிரகாசிக்கும், அதில்லாவிடில் ஜகத்து பிரகாசியாது என்கையால் அப்படிப்பட்ட வஸ்து பரப்ரஹ்மமே யாகவேணும். மேலும் ஒன்றை ஒன்று அநுஸரிக்கும்போது இரண்டும் ஒரு ஜாதியாகவேணுமென்கிற நியமமில்லை. காய்ச்சின இரும்பு அக்கினியைப்போல் பிரகாசிக்கிறது. அவையிரண்டும் ஒரு ஜாதியன்று; வாயுவை தூள் அநுஸரிக்கிறது வாயுவும் தூளும் ஒரு ஜாதியல்ல. அப்படி நியமமொப்புக்கொள்ளினும் பாதகமில்லை. அநுஸரிக்கிற ஸூர்யன் முதலியவைகளைப்போல ப்ரஹ்மமும் தேஜஸ்ஸென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையாலும் அந்த வஸ்து ப்ரஹ்மமென்பது ஸித்தம் என்று ஸூத்ரகாரர் சொல்லுகிறார். அசு.

ஸூ. அஎ. அபி ச ஸ்மர்யதே.

(ரா - வ்ரு - ஹா.) ஸ்மர்யதே அபி- (ஜீவன்பரமாத்மோபாஸநத்தினுல் பரமாத்மாவோடுஸாம்யத்தை அடைகிறானென்று "இதம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா:" என்று) கீதையிலும் சொல்லப்படுகிறது. அஎ.

(ஶ்ரு-ஹா.) இந்த ஶ்ருதிவாக்யத்தி னர்த்தத்தை கீதையிலும் "ந தத்பாஸயதே" இத்யாதி ஶ்லோகத்தினுல் சொல்லப்பட்டது. அதற்குத் தாத்பர்யம். அவ்வஸ்து ஸூர்ய சந்த்ரர்களுடைய அபேக்ஷையின்றியே பிரகாசிக்கிறது. ஸூர்யாதி மற்ற வஸ்துக்களின் பிரகாசமெல்லாம் அவ்வஸ்துவின் பிரகாசாதீநமாயிருக்கிறது. என்று. ஆகையால் இப்படிப்பட்ட அவ்வஸ்து பரமாத்மாவேயாகவேணும். பௌதிகமான தேஜஸ்ஸு ஆகமாட்டாது. அஎ.

கயி-உங-ஸூ-அஅ. ஶப்தாதேவ ப்ரமித:

(ஶ-ரா-வ்ரு.) ஶப்தாத் - பரமாத்மவாசக சப்தத்தினுல், ப்ரமித:- அங்குஷ்டமாத்ரப்ரமாணமாகச் சொல்லப்பட்டவன், பரமாத்மாவென்று நிஶ்சயிக்கப்படுவன்). அஅ.

(ஶ்ரு-ஹா.) கடவல்லியில் "𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌧𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿" இத்யாதி வாக்யத்தில், அங்குஷ்ட பிரமாணமுள்ள புருஷன் சரீரத்தின் மத்தியில் இருக்கிறான். அவனே கீழ்க்கடந்தவைக்கும் மேல்வருமவைக்கும் பிரபு நீ கேட்டவஸ்து இதுதான்;என்று சொல்லப்பட்டவன் ஜீவனா பரமாத்மாவா வென்கிற ஸம்சயத்தில்,—விரலளவாகச்சொல்லப்பட்டவன்,ஸர்வவ்யாபியான பரமாத்மாவாகமாட்டான். ஜீவனாகில் உபாதி ஸம்பந்தத்தினால் விரலளவாக இருக்கலாம். ஸ்ம்ருதியில் அங்குஷ்டமாத்ரமாயுள்ள புருஷனை சரீரத்திலிருந்து யமனிழுக்கிறானென்று சொல்லுகிறது; அது பரமாத்மாவுக்குச்சேராது.ஆகையால் இவன் ஜீவன் என்று பூர்வபக்ஷி சொன்னான்,--இந்தபுருஷன் கடந்தவைவருமவைகளுக்கெல்லாம் பிரபு என்று மேற்கூறிய குணம் ஜீவனுக்குச் சேராது. மேலும், ப்ரஹ்மஸ்வரூபம் எது என்று கேட்டதற்கு, அந்த ஸ்வரூபம் விரலளவாகச் சொல்லப்பட்ட இதுதான் என்கையாலே இந்த உத்தரம் ப்ரஶ்நவாக்யத்திற்குத் தக்கபடி பரமாத்மாவையே ப்ரதிபாதிக்கவேண்டும் ஆகையாலிவன் பரமாத்மாவென்று ஸித்தாந்தி சொன்னார். அஅ.

(ரா-ஹா). "𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌧𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 । 𑌈𑌶𑌾𑌨𑍋 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯" இத்யாதி வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம். இங்கு பெருவிரலளவாகச்சொல்லப்பட்டவன்ஜீவனா,பரமாத்மாவா என்றுஸம்சயம், ஸ்பஷ்டமாக்ஜீவபரமான "𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌧𑌿𑌪𑌸𑍍𑌸𑌞𑍍𑌚𑌰𑌤𑌿 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃" என்கிற வாக்யத்தில் ஜீவன் பெருவிரலளவாகச் சொல்லப்பட்டிருக்கையால் ஜீவபரமாக அஸ்பஷ்டமான இந்தவாக்யத்திலும் பெருவிரலளவாகச் சொல்லப்பட்டவன் ஜீவனே என்று பூர்வபக்ஷம்.— '𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌧𑌿𑌪𑌸𑍍𑌸𑌞𑍍𑌚𑌰𑌤𑌿 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃' தன்னுடைய புண்யபாபரூபகர்மங்களினால் ப்ராணாதிபன் ஸஞ்சரிக்கிறான் என்கிறவிடத்தில் தன்னுடைய கர்மங்களினால் என்கிற அடையாளத்தைக்கொண்டு அவ்வாக்யத்திற் சொல்லப்பட்டவன் ஜீவன் என்று நிஶ்சயிப்பதுபோல், '𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃' என்கிற வாக்யத்தில், '𑌈𑌶𑌾𑌨𑍋 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯' த்ரிகாலவர்த்தியான ஸகல வஸ்துக்களுக்கும் நியாமகன்என்று பரமாத்மாவினுடைய லக்ஷணம் சொல்லியிருக்கையாலே இந்த லக்ஷணத்தைக்கொண்டு இவ்வாக்யத்தில் பெருவிரலளவாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மாவென்று நிஶ்சயிக்க வேண்டுமென்று ஸித்தாந்தம். அஅ.

ஸூ. அகூ. 𑌹𑍃𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌤𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍.

(ஶ்ரு-ரா-வ்ரு.) 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍-(ஶாஸ்த்ரம்) மநுஷ்யனுக்கு உபாஸநத்தை விதிக்கைக்காக ப்ரவர்த்தித்ததாகையாலே, 𑌹𑍃𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌤𑍁 - (மநுஷ்யர்களுடைய) ஹ்ருதயாநுகுணமாகவே. (பரமாத்மாவைப் பெருவிரலளவாச் சொல்லிற்று). அகூ.

(ஶ்ரு-ஹா.) ஆகில் ஸர்வவ்யாபியான பரமாத்மாவை அங்குஷ்ட விரலளவாகச் சொல்லலாமோவென்னில், மநுஷ்யர்கள் தங்கள் ஹ்ருதயத்தில் அவனை த்யாநத்தினால் இருத்துகிறார்கள். அவர்களுடைய ஹ்ருதயம் அங்குஷ்டத் தளவாகவேயிருக்கும். அதிலிருக்கு மவனும் அவ்வளவு பிரமாணமுள்ளவனாகவே யிருக்கவேண்டு மாகையால், த்யேயஸ்வரூபியான அப்பரமாத்மாவை அங்குஷ்டத்தளவாகச் சொல்லிற்று. தேவாதிகளுடைய ஹ்ருதயம் அங்குஷ்டத்தைக் காட்டிலு மதிகவிசால முள்ளதாயினும் த்யாநாதிகாரம் மநுஷ்யர்களுக்கே யாகையால் இப்படி சொல்லிற்று. இவ்வாக்

யம் உபாஸகபரமாகில் இவ்வர்த்தம்கொள்வது—ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும்அபே தம் சொல்வது இவ்வாக்யத்திற்குத் தாத்பர்யமாகில்,—அங்குஷ்ட்டத்தளவாகச்சொ ல்லப்பட்டவன் ஜீவனே. அந்த ஜீவன்தான் ஸகலவஸ்துக்களுக்கும் பிரபுவாகிய பர மாத்மா வாகிறான் என்று அவ்வாக்யத்திற்கு அர்த்தம் கொள்க. ௨௫.

(ரா-ஹா.) பரமாத்மா அபரிச்சின்னனாயிருக்க அவனைப்பெருவிரலளவாகச்சொ ல்லக்கூடுமோவென்னில்,—சாஸ்த்ரம் மநுஷ்யர்களுக்குப் பரமாத்மோபாஸநத்தை விதிக்கிறது. உபாஸநமாவது. ஹ்ருதயத்தில் த்யாநிக்கை. மநுஷ்யர்களுடைய ஹ்ரு தயம் பெருவிரலளவானபடியால் அவ்வளவு ஹ்ருதயத்தில் அவ்வளவான ஸ்வரூபத் தையே த்யானிக்கக் கூடுமோகையால் பரமாத்மாவைப் பெருவிரலளவாகச் சொல் லக்கூடும் என்று ஸித்தாந்தம். ௨௫.

௧அ-௩-ஸூ-௨௬. தது³பர்யபி பா³த³ராயண꞉ ஸம்ப⁴வாத்,

(ஸ-ரா-வ்.) ஸம்ப⁴வாத் - உபாஸநஸாமக்ரி யுண்டாகையாலே, தது³ பர்யபி - மநுஷ்யர்களுக்கு மேலுள்ள தேவதைகளுக்கும், (உபாஸநத் தில் அதிகாரமுண்டென்று) பா³த³ராயண꞉-பாதராயணர், (சொல்லுகிறார்)

(ஸ-ஹா.) பாதராயண ரென்கிற ஆசார்யர், மநுஷ்யர்களுக்கு த்யாநம் செய்ய அதிகாரமுண்டென்று சொல்லிற்றல்லது தேவர்களுக்கில்லையென்று சொல்லவில்லை. த்யாநம் செய்கைக்குக் காரணமாகிய சரீரம் முதலியவை தேவர்களுக்குமுண்டென் பது வேதங்களிலும் இதிஹாஸபுராணங்களிலும் ப்ரஸித்தம். தேவதைக்கொரு தேவ தையில்லை என்று தகர வித்யையில் சொல்லுகையால் அவர்கள் யாரை எதுக்காக த்யாநம் செய்யக்கூடுமென்னில், இந்த்ரனுகவேணுமென்றால் இந்த்ரனை த்யாநம்செ ய்யவேண்டும். இந்த்ரன்தான் இந்த்ரனுயே யிருக்கிறபடியால் அவன் அந்த இந்த்ரப தவிக்காக இந்த்ரனை த்யாநம் செய்யவேண்டியதில்லை என்று அந்த வாக்யத்திற்கு அர்த்தமொழிய மோக்ஷத்திற்காகப்பரமாத்மாவை த்யாநம் செய்யக்கூடாதென்பது அர்த்தமன்று, - இப்படி தேவர்களுக்கு த்யாநாதிகாரமுண்டாயினும் அவர்களுடைய ஹ்ருதயம் அவர்களுடைய அங்குஷ்டத்தளவாகவேயிருக்கும். ஆகையால் அங்குஷ் ட்ட ப்ரமாணமுள்ளவனென்பது அவர்களுடைய அங்குஷ்டத்தளவென்று அர்த்த மாய் பரமாத்மாவையே சொல்லுகிறதென்று சொன்னார். ௨௦.

(ரா-ஹா.)கீழ் மநுஷ்யனுக்கே பரமாத்மோபாஸநத்தை சாஸ்த்ரம் விதித்ததெ ன்று சொல்லிற்று. ஆனால் தேவதைகளுக்குப்பரமாத்மோபாஸநத்தில் அதிகாரமுண் டா, இல்லையா என்று ஸம்சயம்.—நித்யகர்மாநுஷ்டாநத்தினால் ராகத்வேஷாதிகள் நசித்து நிர்மல சித்தனானவனுக்கு உபாஸநத்தில் அதிகாரமுண்டு, தேவதைகளுக்கு சரீரமில்லை யாகையால் நித்யகர்மாநுஷ்டாந யோக்யதையும், அதடியான சித்தநைர் மல்யமும் இல்லை ஆதலால் அவர்களுக்கு உபாஸநத்தில் அதிகாரமில்லை என்று பூர்வ பக்ஷம்.—ஸ்ருஷ்டி ப்ரகரணத்தில் தேவதைகளுக்கும் சரீரமுண்டென்று சொல்லு கையாலே அவர்களுக்கும் நித்யகர்மாநுஷ்டாநமும் சித்த நைர்மல்யமும், அதடியான உபாஸநமும்கூடும். உபாஸநத்திற்கு, பரமாத்மஸ்வரூப ததுபாஸந ப்ரகாரஜ்ஞாநம், அர்த்தித்வம், சரீரவத்வம், இம்மூன்றும் ஸாமக்ரீ. தேவதைகளுக்கு, பூர்வம் உத்பந்ந மான பரமாத்மஸ்வரூப ததுபாஸநப்ரகாரஜ்ஞாநத்திற்கு மறப்பில்லை யாகையால் ஜ்ஞாநமும்,*தாபத்ரயாபிகாதமும் பரமாத்மஜ்ஞாநமு முண்டாகையால் அர்த்தித்வ மும், கீழ்ச்சொன்னபடி சரீரமும் உண்டாகையாலே அவர்களுக்கும் அதிகாரம் உண் டென்று ஸித்தாந்தம். ௨௦.

* தாபத்ரயாபிகாதமாவது - ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்களென் கிற மூன்றுவிதமான துக்கங்களினால் வருந்துகை.

ஸூ. ௯௧. விரோத꞉ கர்மணீதி சேந்நாநேக ப்ரதிபத்தேர் தர்சநாத்.

(பா-வ்ய) கர்மணி - (தேவர்களுக்கு சரீரம் ஒப்புக்கொண்டால்) யாகாதிக்ரியையில், விரோத꞉ - அநுபபத்தி (ஸம்பவிக்கும்) இதிசேத் - என்றால், அநேக ப்ரதிபத்தே꞉ - (தேவர்களுக்கு) அநேகசரீர பரிக்ரஹத்தை, தர்சநாத் - காண்கையாலே, ந - அந்த விரோதம் வாராது. ௯௧.

(ஸ-ஸா.) இந்த்ராதி தேவர்களுக்குச் சரீரமுண்டென்று கீழ்சொல்லிற்று. ஆகில் யாகங்களில் ஹோமம் செய்கிற ருத்விக்குக்கள் எப்படி யாகத்திற் கருகிருந்தே நடத்துகிறார்களோ, அப்படியே தேவர்களும் யாகத்துக்கருகில் வந்தே இவர்கள்கொடுக்கும் ஹவிஸ்ஸை வாங்கவேண்டும்; ஒரு காலத்தில் அனேகம் இடங்களில் யஜ்ஞம்செய்தால் ஒரு சரீரத்துடன் இந்த்ராதிகள் அவ்வெல்லா விடங்களுக்கும் எப்படிப்போவார்கள்? ஆகையாலவர்களுக்குச் சரீரமொப்புக்கொள்ளக்கூடாது என்கிற பூர்வபக்ஷத்திற்கு,-ஒருதேவதைக்கே ஒரேகாலத்தில் அநேகம்சரீரங்களுண்டென்று சாகல்ய யாஜ்ஞவல்க்ய ஸம்வாதத்தில் வேதம் சொல்லுகையால் அவர்கள் ஒவ்வொரு சரீரத்துடன் ஒவ்வொருஇடத்திற்குப்போய் ஹவிஸ்ஸை வாங்கலாம். மநுஷ்யர்களே யோகஸித்தியினால் அணிமாதி அஷ்டைச்வர்யத்தை யுடையராய் அனேக சரீர மெடுக்கிறார்களென்று சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்க, தேவர்கள் தங்களுக்கிஷ்டமான அனேக சரீரங்களை ஒரே காலத்தி லெடுப்பது ஓராச்சர்யமன்று. மேலும், சரீரமுடையராயினும், ஒருவனுக்கு அனேகம்பேர் அந்நமிட அவன் ஒரு சரீரமுடையனாயே புஜிப்பது போலவும், அனேகம் நமஸ்காரம் செய்யில் அவர்களுக்கெல்லாம் ஒருவனே வந்தநம் செய்வது போலவும், ஒரேகாலத்தி லனேகர்கள் ஒருவனை உத்தேசித்து ஹோமம் செய்வதிலும் அத்தேவர்கள் அதை அங்கீகரிப்பதிலும் பாதகமில்லை. அவர்களை உத்தேசித்து ஹோமம் செய்யவேண்டு மல்லது அவர்கள் அங்கு வரவேணுமென்கிற நியமமில்லை யென்று தாத்பர்யம். இப்படி தேவர்களுக்குச் சரீர முண்டாகையால் உபாஸநத்தி லதிகாரமுண்டு. ௯௧.

(ரா-ஸா.) தேவதைகளுக்கு சரீரம் ஒப்புக்கொண்டால், ஒரேகாலத்தில் அநேக இடங்களில் யாகம் செய்யும்போது அந்தந்த இடங்களுக்கு ஹவிஸ்ஸை வாங்குகைக்காகப் போகவேண்டி வருகையில் ஒருசரீரத்தோடு அவ்வளவிடங்களுக்கும் போக முடியாது ஆகையால் அவர்களுக்கு சரீரம் ஒப்புக்கொள்ளக்கூடாது என்றுவரில்,— தபோமஹிமையுடைய ஸௌபரி முதலியவர்களும் அநேக சரீரம் ஒரே காலத்தில் பரிக்ரஹிக்கக் காண்கையாலே, அதுபோல் தேவதைகளும் ஒரே காலத்தில் அநேக சரீரங்களை யெடுத்துக்கொண்டு அநேக இடங்களுக்குப் போகலாமாகையால் இதில் ஒரு அநுபபத்தியுமில்லை. ௯௧.

ஸூ. ௯௨. சப்த இதி சேந்நாத꞉ ப்ரபவாத் ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்.

(ஸ-ரா-வ்ய.) சப்தே-(சரீரம்ஒப்புக்கொண்டால்) வைதிக சப்தத்தில், (விரோதம்வரும்) இதிசேத் - என்றால், அத꞉ ப்ரபவாத் - (இந்த்ராதிகள்) இந்த வேதசப்தத்தில் நின்று முண்டாகையாலே, ந - அந்த விரோதமுமில்லை. ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம் - ச்ருதிஸ்ம்ருதிகளினாலே, (இந்த்ராதிகள் வேதசப்தத்தினா லுண்டாகிறார்களென்று நிச்சயிக்கப்படுகிறது. ௯௨.

(ஸ-ஸா.) தேவர்களுக்குச் சரீர மொப்புக்கொள்ளில் வேதம் அநித்யமாய் அப்ராமாணிகமாய்விடும். அதெப்படியெனில், சப்தம் நித்யமாகும்போது அதினால் சொல்லப்படுகிற அர்த்தமும் நித்யமாகவேண்டும். தேவர்கள் சரீரமும் நம்முடைய சரீரம்

போல் ஜநநமரணங்களோடேகூடி அநித்யமாயேயிருக்குமாகையால் அதைச் சொல்லுகிற வேதமும் அநித்யமாய்விடும் என்கிற சங்கையை,—வேதம் நித்யமே, அதிலிருந்தே தேவர்கள் உண்டாகிறார்கள். அதாவது - ஆதிஸ்ருஷ்டியில் ப்ரஹ்மா இந்த்ரனைச் செய்ய நினைத்து, அவனை இன்னபடி செய்யவேணுமென்றறியாமல், வேதத்தில் இந்த்ரனுடைய ஸ்வரூபஸ்வபாவங்களைச் சொல்லுகிற வாக்யத்தை பர்யாலோசநம்பண்ணி அதிற்சொல்லியபடி ஸ்ருஷ்டிக்கிறான். சப்தத்திற்கு, ஜநநமரணங்களோடுகூடிய ஒருசரீரம் அர்த்தமன்று, அம்மாதிரியான அநேக சரீரங்களிலுள்ள ஆகாரமேசப்தார்த்தம். அது நித்யம். ஆகையால் வேதமும் நித்யமென்றுதாத்பர்யம். ஒரு கலசமுடைந்தால் அவ்வாகாரமுள்ள மற்றொரு கலசமுண்டாவதுபோல் ஓரிந்த்ரன் நசித்தால் அவ்வண்ணமுள்ள மற்றோரிந்த்ர னுண்டாகிறானென்று பொருள். இவ்வர்த்தம்வேதத்திலும், மநு முதலிய தர்மசாஸ்த்திரங்களிலும் சொல்லியிருக்கிறது என்றுபரிஹரிக்கிறார். ௨௮.

(ரா-ஹா.) தேவர்களுக்கு ஏககாலத்தில் அநேக சரீரமொப்புக்கொள்ளுகையாலே கீழ்ச்சொன்ன அநுபபத்தி தப்பினாலும் வேதம் அர்த்த சூந்யம் என்கிற அநுபபத்தி தப்பாது. அதெப்படியெனில்,—அவர்களுக்கு சரீரம் ஒப்புக்கொண்டால் அந்த சரீரம் ஸாவயவமாகவேண்டும். அப்போது அது அநித்யமாகும். இப்படியானால் அந்த சரீரம் உண்டாகைக்கு முன்பும் அது நசித்தபிறகும் ஸர்வதாநித்யமான வேதம், தனக்கு அர்த்தமாகிய இந்த சரீர மில்லாமையால் நிரர்த்தகமாய்விடும். அல்லது தான் அநித்யமாகவேண்டும் என்றுவரில், இந்த்ரனென்று ஒருவனுக்கே பெயரன்று. கலசம்என்றால் அந்த ஆகாரத்தையுடைய ஸகலவஸ்துக்களுக்கும் பெயராயிருப்பதுபோல், இந்த்ரனென்றால் அந்த அதிகாரத்தையுடையவனாய் அந்த ஸ்தாநத்தில் வந்தவனுக்கெல்லாம் பேராயிருக்கும். முன்னுள்ள இந்த்ரன் நசித்தபிறகு, இந்த்ராதிகளுடைய ஆகாரவிசேஷவாசகமாகிய இந்த்ராதி சப்தங்களை ஆலோசித்து அதின்படியே வேறொரு இந்த்ரனை முன்புள்ள இந்த்ரன்போல் ப்ரஹ்மாஸ்ருஷ்டிக்கிறார் ஆகையால் அவ்வாக்யம் நிரர்த்தகமாகமாட்டாது. இவ்விஷயத்தில் வேதமும் தர்மசாஸ்த்ரங்களுமே ப்ரமாணம். ௨௮.

ஸூ. ௨௯. அத ஏவ ச நித்யத்வம்.

(ஸு-ரா-வ்யா) அத ஏவ- ஆகையாலேயே, நித்யத்வம்-(வேதங்களுக்கு) நித்யத்வம் ஸித்திக்கிறது. ௨௯.

(ஸு-ஹா.) நித்யமான ஆகார வாசகமான வேதத்தைப் பரிசீலித்து அவ்வாகாரமுள்ள ஜகத்தைப் பிரமன் ஸ்ருஷ்டிக்கையினாலேயே வேதம் நித்யமெனப்படும். ௨௯.

(ரா-ஹா.) இந்த்ராதி வேதசப்தங்களைக்கொண்டே அதிற்சொல்லிய ஆகாரவிசிஷ்டனான இந்த்ராதிகளை ஸ்ருஜிக்கிறானென்று அங்கீகரிக்கையினாலேதான், ஆதுநிகர்களான விஶ்வாமித்ராதிகளைச் சொல்லுகையாலே இந்த வேதம் அவர்களுக்கு பிற்பட்டே உண்டாயிருக்கவேண்டும் என்கிற சங்கையும்போய் வேதம் நித்யம் என்று நிஶ்சயிக்கப்படுகிறது. ப்ரளயாநந்தரம் ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மா, 'விஶ்வாமித்ரஸ்ய ஸூக்தம் பவதி' இத்யாதியான வேதவாக்யங்களை ஆலோசித்து, அத்யயநம் செய்யாமலே ஸ்வரவர்ணங்கள் தப்பாமல் வேதத்தில் சிலபாகங்களை ஸாக்ஷாத்கரிக்கத்தக்க சக்தியுடைய ஜீவன்களைப் பராமர்சித்து விஶ்வாமித்ராதிகளாக ஸ்ருஷ்டிக்கிறான். அவர்களும் அந்த வேதபாகங்களை அத்யயநமின்றியே யதாவத்தாக அறிகிறார்கள். அவர்களறிந்த பாகமாகையால் அதில் அவர்கள் பெயர் விளங்குகிறது.

இப்படி அஸாதிஸித்தர்களான அதிகாரி விசேஷங்களைச் சொல்லுகையாலே விச்வா மித்ராதிபத கடிதமான வேதங்கள் அநித்யங்களாகமாட்டா. ௨௯.

ஸூ. ௩௰. ஸமாந நாம ரூபத்வாச்சாவ்ருத்தாவப்யவிரோதோ தர்சநாத் ஸ்ம்ருதேச்ச.

(ஶ்ரு-பா-வ்ரு.) ஆவ்ருத்தௌ அபி- அவ்யாக்ருதாதிகளுடைய புநஸ்ஸ்ருஷ்டியிலும்; ஸமாந நாம ரூபத்வாத் ச - பூர்வகல்பத்திற் பதார்த்தங்களோடு ஸமானமான பெயர்களையும் ஆகாரங்களையும் உடைத்தாயிருக்கையினாலேயும், அவிரோத: - (வேதநித்யத்வத்தில்) விரோதமில்லை. தர்சநாத்-இவ்வர்த்தம் வேதத்தினாலும், ஸ்ம்ருதே: ச - ஸ்ம்ருதியினாலும் (நிச்சயிக்கப்படுகிறது). ௩௰.

(ஶ்ரு-ஹா.) ஒரு கலசமுடைந்தால் உடனே அதுபோன்ற மற்றொரு கலசம், அதுடைந்தால் வேறொன்று; இம்மாதிரி இடையின்றி உண்டாவதுபோல் ஜகத்தும் தேவர்களும் இடையின்றி உண்டானால் நீங்கள் சொல்வதுசரியாகும். மஹாப்ரளயத்தில் எல்லாமழிந்து வெகுநாள் ஜகத்து இல்லாமலே இருக்கிறது. மறுபடி ஆதி ஸ்ருஷ்டியில் ஜகத்தைப்புதிதாக உண்டாக்குகிறனென்று வேதமும் ஸ்ம்ருதிகளும் சொல்லுகையால், இந்த ஸ்ருஷ்டியில், முன்புள்ள ஆகாரம் மஹாப்ரளயத்தில் நசித்து மற்றோராகார முண்டானபடியால், அவ்வாகாரத்தைச் சொல்லுகிற இப்போது முள்ள வேதத்திற்கு இப்பொழுது விஷயமில்லாமையால் வேதம் அநித்யமாயேவிடும் என்கிற சங்கைக்கு, ப்ரளயம் கழிந்தபிறகு ஸ்ருஷ்டிக்கும் போதும் ப்ரஹ்மா முன்போலவே ஸ்ருஷ்டிக்கிறார், வேறுவிதமாக ஸ்ருஷ்டிக்கிறதில்லை. முன்கல்பத்தில் நடந்தது மற்றவர்களுக்கு மறந்துபோய் விடினும் பரமாத்மாவி னநுக்ரஹத்தினல் ப்ரஹ்மாவுக்கு அவ்வாகாரம் மறக்கிறதில்லை. முன்புள்ள விதமாகவே இப்போதும் ஸ்ருஷ்டிக்கிறா ரென்பதற்கு "யதாபூர்வமகல்பயத்" இத்யாதி ஶ்ருதியும் தர்மசாஸ்த்ரங்களும் ப்ரமாணம். இந்த ப்ரமாணங்களினல் முன்புள்ள ஆகாரமே இப்போது முண்டாகையால் அதைச் சொல்லுகிற வேதமும் நித்யமேயாகக் குறையில்லை என்று ஸமாதானம் சொல்லுகிறார். ௩௰.

(ரா-ஹா.) அவாந்தர ப்ரளயத்தில் ப்ரஹ்மாவும் இன்னும் சில பதார்த்தங்களுமுண்டு ஆகையால் அப்போது வேதமிருந்தாலும், ஸர்வமும் நசித்துப்போன மஹாப்ரளயத்திற்குப்பின் ஸ்ருஸ்டியுண்டாகும்போது வேதமில்லை யாகையால் அது எப்படி நித்யமாகுமென்னில்,—அக்காலத்திலும் பரமபுருஷன் பூர்வ கல்பங்களிலுள்ள பதார்த்தங்கள்போலவே ஸகல பதார்த்தங்களையும் ஸ்ருஜித்து அவற்றுக்கு அந்த நாமத்தையே இட்டு, முன்புள்ள ஆநுபூர்வீப்ரகாரமே வேதத்தை ப்ரஹ்மாவுக்கு உபதேசிக்கிறான் என்று ஶ்ருதிஸ்ம்ருதிகள் சொல்லுகையாலே வேதத்தை நித்யமென்று அங்கீகரிக்கத்தட்டில்லை, வேதம் நித்யமென்றால், முன் எவ்விதமான ஆநுபூர்வியிருந்ததோ அவ்விதமான ஆநுபூர்வியுடன் அத்யயநம்செய்கை.—ஆக இவ்வளவால் தேவர்களுக்கு சரீரமுண்டென்று ஸ்தாபிக்கையாலே அவர்களுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரமுண்டென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ௩௰.

அதி-௯. ஸூ-௩௧. மத்வாதிஷ்வஸம்பவாதநதிகாரம் ஜைமிநி:

(ஶ்ரு-பா-வ்ரு.) அஸம்பவாத்-உபாஸ்யரான வஸ்வாதிகளுக்கு உபாஸகத்வம் ஸம்பவியாதாகையால், மத்வாதிஷு - மதுவித்யை முதலானவற்றில், அநதிகாரம் - (தேவர்களுக்கு) அதிகாரமில்லாமையை, ஜைமிநி: ஜைமினி சொன்னார். ௩௧.

(ஸ-ஹா.) ப்ரஹ்மவித்யையில் தேவர்களுக்கு அதிகாரமுண்டானால் மதுவித்யை யிலும் அதிகார முண்டாகவேண்டும். அது தேவர்களுக்கு ஸம்பவியாது,—எப்படி யெனில்,—மது என்பது ஸூர்யனுடைய சில கிரண விசேஷங்களே. அவற்றை யுடைய ஸூர்யனை உபாஸநம் செய்ய வேண்டும். அதற்கு பலம் தேவர்களா கப்பிறப்பது. ஸூர்யன் தன்னைத்தான் உபாஸிக்கச்சேராது. இப்போதே தேவர்க ளானவர்களுக்கு, அதற்கு பலமான தேவப்பிறப்பும் ஸித்தித்திருக்கிற படியால் அவ் வுபாஸநம் நிஷ்பலமாயிருக்கும் ஆகையால் மதுவித்யையில் அவர்களுக்கு அதிகார மில்லை. அதுபோலவே ப்ரஹ்மவித்யையிலு மதிகாரமில்லை, என்றார் ஜைமினி. ௩௧.

(ஶ்ரீ-பா.) "அஸௌ வா ஆதித்யோ தேவமது" இத்யாதிவாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்,—ருக் யஜுஸ் ஸாமவேதங்களிற் சொல்லிய யாகாதிக ளினாலுண்டான ரஸம் ஸூர்யனிடத்திற் சேருகிறது. ஸூர்யன் அந்த ரஸஸ்வரூபி யாயிருக்கிறான். அந்த ரஸஸ்வரூபனான ஸூர்யனை ஒவ்வொரு பக்கங்களை வஸு ருத்ர ஆதித்யமருத்ஸாத்யர்களென்கிற ஐந்து கூட்டத்தார் புஜிக்கிறார்கள். அவர்களா லே புஜிக்கப்படுகிற அந்த பாகத்தை உபாஸநம் செய்யவேண்டும். அந்த அம்சம் வஸுவினால் புஜிக்கப்படுகிறதென்று உபாஸநம் செய்தவன் வஸுஸ்வரூபியாகிறான் (இப்படியே மற்ற உபாஸகர்களையும் கண்டுகொள்வது) என்று இந்த வாக்யத்திற்கு அர்த்தம்,—இந்த உபாஸநத்தில் வஸ்வாதிகளுக்கு அதிகார முண்டா இல்லையா என் று ஸம்சயம்,—தான் தன்னை உபாஸநம் செய்யக்கூடாதாகையாலே, இந்த அம்சம் வஸ்வாதிகளினால் புஜிக்கப்படுகிறதென்கிற வஸ்வாதிவிஷயமான உபாஸநத்தை வஸ்வாதிகள் செய்யக்கூடாதாகையால் அவர்களுக்கு இந்த உபாஸநத்தில் அதிகார மில்லை. மேலும் தான் இப்போது வஸுவாயிருக்கையாலே வஸுவாகைக்காக இப் படி உபாஸநம் செய்யவேண்டியது மில்லை. என்ற பூர்வபக்ஷியான ஜைமினி மதம் இது பூர்வபக்ஷம். ௩௧.

ஸூ. ௩௨. ஜ்யோதிஷி பாவாச்ச.

(ஶ-ரா-வ்ரு-ஸா.) ஜ்யோதிஷி-ஜ்யோதிச்சப்தவாச்யனான பரமாத்ம விஷயத்தில், பாவாச்ச-தேவமநுஷ்யர்களிருவருக்கும் அதிகாரம் உண்டா கையாலும், இப்படி அதிகாரமுண்டா யிருக்கச்செய்தே, ஜ்யோதிஸ்வரூ பிகளுக்குள் ஜ்யோதிஸ்வரூபியான பரப்ரஹ்மத்தை தேவர்கள் உபாஸிக்கி றார்கள் என்று "தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" என்கிற வாக்யம் சொல்லுகிறது. இதில் தேவர்கள் என்றதுக்கு வஸ்வாதி தேவர்கள் அர்த் தம். அவர்களுக்கு இந்த வாக்யத்தில் தனியாக உபாஸநம் சொல்லி யிருக் கையாலே இந்த உபாஸநத்தில் அதிகாரமில்லை) என்று பூர்வபக்ஷம்). ௩௨.

(ஸ-ஹா.) மேலும் ஸ்வர்க்கம் ஸூர்யமண்டலம் முதலியவைகளை தேஜஸ்ஸெ ன்று அசேதநமாகச் சொல்லுகிற படியால் அது ப்ரஹ்மத்தை உபாஸிக்க சேதனமு மன்று, அதற்கு சரீரமும் கிடையாது. ஆகையாலு மதிகாரமில்லை யென்றார். ௩௨.

ஸூ. ௩௩. பாவம் து பாதராயணோऽஸ்தி ஹி.

(ஶ-ரா-வ்ரு.) பாதராயண:-பாதராயணர், பாவம்-இந்த உபாஸந த்தில் வஸ்வாதிகளுக்கும் அதிகாரமுண்டென்பதை, (ஒப்புக்கொண்டார்). அஸ்தி ஹி - அவர்களுக்கு உபாஸ்யத்வமும் ப்ராப்யத்வமும்) உண்டன்றோ.

(ஶ்ரு-ஹா.) மநுஷ்யரில் ப்ராஹ்மணர்களுக்கு ராஜஸூயயாகத்தில் அதிகாரமி ல்லாவிடினும் மற்றயஜ்ஞங்களி லதிகாரமுண்டு. அதுபோல் தேவர்களுக்கு மதுவித் யையி லதிகாரமில்லாவிடினும் ப்ரஹ்மவித்யையி லதிகாரமுண்டு.ப்ரஹ்மத்தை உபா ஸநம் செய்து தேவர் வேண்டிய பலத்தை யடைந்ததாக வேதங்களில் சொல்லியிரு க்கிறது. ஸூர்யாதி மண்டலம்.தேஜோமயமாகிலும் "ஸூர்யன் புருஷவேஷங்கொ ண்டு குந்தியைப்புணர்ந்தான்" இத்யாதியைச் சொல்லுகிற ப்ரமாணங்களினால் அம் மண்டலத்திற்கு அதிஷ்டான தேவதையாக ஒருசேதனனுண்டு; அவனுக்கும் அவனை ப்போன்ற மற்றத்தேவர்களுக்கும் கீழ்ச்சொன்னபடிப்ரஹ்மவித்யையி லதிகாரமுண் டு என்று பாதராயண பகவான் கூறினர். ௩௧.

(ஶ்ரு-ஹா.) கீழ்ச்சொன்ன ஜைமினி மதத்தைக்கண்டிக்கிற பாதராயணருடைய மதத்தை இந்த ஸூத்ரத்திற் சொல்லுகிறார். தன்னை "நான்" என்று உபாஸிக்கக்கூ டாவிடிலும்*ப்ரஹ்மாத்மகன் என்று உபாஸநம் கூடுமாகையாலே உபாஸகரான வஸ் வாதிகளுக்கு உபாஸ்யத்வமும்கூடும். இந்த கல்பத்தில் தாங்கள் வஸுக்களாயிருந்தா லும் மேல் கல்பத்தில் தாங்கள் வஸுக்களாகைக்காகவும் இப்படி உபாஸநம் செய்யக் கூடுமாகையால் வஸ்வாதிகளுக்கும் இந்த வித்யையில் அதிகாரமுண்டு என்று, இது ஸித்தாந்தம். ௩௧.

௩௨-உ௩-ஸூ-௩௪. ஶுகஸ்ய ததநாதரஶ்ரவணாத் ததாத்ரவணாத் ஸூச்யதே ஹி.

(ஶ்ரு-ரா-வ்ய.) ததநாதரஶ்ரவணாத்-ஹம்ஸத்தினுடையஅநாதரவா க்யத்தைக் கேட்கையாலே, ததா - அப்போது, ஆத்ரவணாத் - (ப்ரஹ் மோபதேசத்திற்காக) ஓடுகையால், அஸ்ய - இந்த ஜாநஶ்ருதிக்கு, ஶுக் - துக்கம், ஸூச்யதே - ஸூசிப்பிக்கப்படுகிறது. ஹி - அக்காரணத்தினால், (அவனை சூத்ரா! என்று ரைக்வர் அழைத்தார்.) ௩௪.

(ஶ்ரு-ரா-ஹா.)ப்ரஹ்மவித்யையில் சூத்ரர்களுக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்று ஸம்சயம்,—அவர்களுக்கும் தேஹேந்த்ரியாதிகள் உண்டாகையால் பரமாத் மோபாஸநத்திற்கு வேண்டிய ஸாமர்த்யமும்,மோக்ஷேச்சையும் உண்டு.வேதாத்யயந த்தில் அதிகாரமில்லாவிடினும் புராணாதிஶ்ரவணங்களில் அதிகாரமுண்டாகையாலே அதினாலேயே பரமாத்மோபாஸநத்திற்கு வேண்டிய பரமாத்மஸ்வரூபதத்ப்ராப்த்யு பாயஜ்ஞாநங்களுண்டாகலாம். சூத்ரஜாதியிற்பிறந்த விதுராதிகளுக்கும் ப்ரஹ்மவித் யை உண்டென்று பலவிடங்களிலும் சொல்லுகிறது."ஆஜஹாரேமா: ஶூத்ர"என் று ஓ சூத்ரனே! நீ இவைகளைக்கொண்டுவா; இவற்றை நானங்கீகரித்து உனக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கிறேன் என்று வேதத்திலும் ஜாநஶ்ருதியைக்குறித்து ரைக்வர் சொன்னதாகக் காண்கிறது. ஆகையால் சூத்ரர்களுக்கும் ப்ரஹ்மவித்யை யில் அதிகாரமுண்டென்று பூர்வபக்ஷம்,—வேதாத்யயநம்செய்து அதினுடைய அர்த் த்தத்தைப் பராமர்சித்து அதினாலுண்டான ஜ்ஞாநமே பரமாத்மோபாஸநத்திற்கு ஹேதுவாகிறது. புராணஶ்ரவணாதிகளினாலுண்டான ஜ்ஞாநம் பாபக்ஷயத்துக்கு ஹேதுவாகுமல்லது உபாஸநத்திற்கு ஹேதுவாகமாட்டாது. விதுராதிகளுக்கு ஜந் மாந்தரத்தில் வேதாத்யயநம்செய்து அதினாலுண்டான ஜ்ஞாநம் மறவாமலிருந்து அதினால் இந்த ஜந்மத்தில் பக்தி உண்டாயிற்றென்று கொள்ளவேண்டும். இரண்டு ஹம்ஸங்கள் வந்து அதில் ஒன்று ஜாநஶ்ருதியை ஸ்தோத்ரம்செய்ய, மற்றொன்று ப்ரஹ்மஜ்ஞாநமில்லாத இவனை என்ன ஸ்தோத்ரம் செய்கிறது என்று இவனு

* தன்னைத்தான் த்யாநம் செய்யக்கூடாதாகிலும் தன்னுடைய அந்தர்யாமியான பரமாத்மாவை த்யானிக்கக்கூடுமென்று கருத்து.

கு அவமானமாகும்படி சொல்ல, அதை ஜாநஶ்ருதி கேட்டு எனக்குப்ப்ரஹ்மஜ்ஞானமில்லையே யென்கிற வ்யஸநத்தையறிந்து, ஓ சூத்ரா! என்று கூப்பிட்டார். சூத்ரன் என்பதற்கு சூத்ரஜாதியில் பிறந்தவன் என்று அர்த்தமன்று. தனக்குப்ரஹ்மவித்யை இல்லையென்று துக்கப்படுகிறவன் என்று அர்த்தம். ஆகையால் வேதத்திலும் சூத்ரனுக்கு ப்ரஹ்மவித்யோபதேசம் சொல்லவில்லை. ஆதலால்சூத்ரனுக்கு ஸாமர்த்யமும் மோக்ஷேச்சையுமிருந்த போதிலும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லை என்று ஸித்தாந்தம். ௯௮.

ஸூ. ௯௯. க்ஷத்ரியத்வாவகதேஶ்ச.

(ரா-வ்ய.) க்ஷத்ரியத்வாவகதேஶ்ச - (ஜாநஶ்ருதிக்கு) க்ஷத்ரியதர்மம் காண்கையாலும், (இவன் சூத்ரனன்று). ௯௯.

(ஶ்ரு-வ்ய-ஸா.) சங்கரபாஷ்யத்தில் "க்ஷத்ரியத்வாவகதேஶ்சோத்தரத்ர சைத்ரரதேந லிங்காத்" என்கிற வரையிலும் ஒரே ஸூத்ரம். இதுக்கர்த்தம்—உத்தரத்ர - ஸம்வர்க்கவித்யையின் மேல்வாக்யத்தில், சைத்ரரதேந - சித்ரரதனென்கிறவனுடைய வம்சத்திலுண்டான அபிப்ரதாரியோடேகூட (ச்சொல்லுகையாகிற), லிங்காத்-ஹேதுவினாலே, க்ஷத்ரியத்வாவகதே: - (ஜாநஶ்ருதி) க்ஷத்ரியனென்பது அறியப்படுகையினால், (ஜாநஶ்ருதி சூத்ரனன்று). இந்த வித்யையில்ஜாநஶ்ருதியுடன்கூட சொல்லப்பட்ட அபிப்ரதாரியென்பவன் க்ஷத்ரியன். இருவருக்கு ஒரு வித்யையில் ப்ரஸ்தாவம் வந்தால் அவ்விருவரும் ஒரு ஜாதியிற் பிறந்தவர்களே யாவார்களாகையால் ஜாநஶ்ருதியும் க்ஷத்ரியன். சூத்ரனன்று. அபிப்ரதாரி க்ஷத்ரியனென்பதற்கு ப்ரமாணமென்னென்னில், காபேயரென்கிற ப்ராஹ்மணர் சித்ரரதனென்கிற க்ஷத்திரியனுடைய வம்சத்திற்பிறந்த அரசர்களுக்குப் புரோஹிதர்கள் அந்த ப்ராஹ்மண வம்சத்திற்பிறந்த ஒருவன் அபிப்ரதாரிக்குப் புரோஹிதனென்று இங்குச் சொல்லியிருக்கிறது. ஆகையால் இவனும் அந்த ராஜவம்சத்திலுண்டானவனென் றறியப்படும். ௯௯.

(ரா-ஹ்ரு.) இவன் அனேக க்ராமங்களைக் கொடுக்கிறானென்றும், பக்வாந்நதானம் செய்கிறானென்றும் இதுமுதலான க்ஷத்ரியதர்மம் காண்கையாலே இவன் க்ஷத்ரியனே யாகவேண்டும். ௯௯.

ஸூ. ௧௦௦. உத்தரத்ர சைத்ரரதேந லிங்காத்.

(ரா-வ்ய.) உத்தரத்ர - மேல்வாக்யத்தில், சைத்ரரதேந-சைத்ரரதனோடு (காபேயனைக் கூட்டிச்சொல்லுகையாகிற), லிங்காத் - ஹேதுவினாலே (இந்த வித்யையில் ப்ராஹ்மண க்ஷத்ரியர்களுக்கே அந்வயம் காண்கிறது). ௧௦௦.

(ரா-ஹ்ரு.) இப்ப்ரகரணத்தில் ப்ராஹ்மண க்ஷத்ரியர்கள் தவிர மற்றவரைச் சொல்லவில்லை. "அத ஹ ஶௌநகஞ்ச காபேயமபிப்ரதாரிணஞ்ச" என்ற, இவ்வாக்யத்தில், சௌநகர் ப்ராஹ்மணன், அபிப்ரதாரி சைத்ரரதனென்கிற க்ஷத்ரியன், இவன் க்ஷத்ரியனென்கைக்கு அடையாளமென்னவென்றால், ப்ரகரணாந்தரத்தில் காபேயனோடே ஸஹசாரியாயிருக்கிறவனை சைத்ரரதன் என்கிற க்ஷத்ரியனென்று

சொல்லிற்று. இங்கு அபிப்ரதாரியைக் காபேய ஸஹசாரியாகச்சொல்லிற்று ஆகை யால் இவன் க்ஷத்ரியன். ௧௦௦.

ஸூ. ௧௦௧. ஸம்ஸ்காரபராமர்ஶாத் ததபாவாபிலாபாச்ச.

(ஶ்ரு-பா-ப்ர-ஸா.) ஸம்ஸ்காரபராமர்ஶாத் - (வித்யோபதேசத்திற்கு அங்கமாக) உபநயநாதி ஸ்ம்ஸ்காரத்தைச்சொல்லுகையாலும், ததபாவாபிலாபாச்ச - (சூத்ரனுக்கு) ஸம்ஸ்காரமே இல்லையென்று சொல்லுகையாலும், (ப்ரஹ்மவித்யையில் சூத்ரனுக்கு அதிகாரமில்லை). ௧௦௧.

ஸூ. ௧௦௨. ததபாவநிர்தாரணே ச ப்ரவ்ருத்தே:.

(ஶ்ரு-பா-ப்ர-ஸா.) ததபாவநிர்தாரணே ச - (ஜாபாலிக்கு) சூத்ரத்வம் இல்லையென்று நிஶ்சயம் உண்டானபிறகுதான், ப்ரவ்ருத்தே: - (ப்ரஹ்மவித்யோபதேசத்தில்) ப்ரவர்த்திக்கையாலே, (சூத்ரனுக்கு இந்த வித்யையில் அதிகாரமில்லை. ௧௦௨

ஸூ. ௧௦௩. ஶ்ரவணாத்யயநார்த்தப்ரதிஷேதாத்.

(பா-ப்ர.) ஶ்ரவணாத்யயநார்த்தப்ரதிஷேதாத் - (சூத்ரனுக்குவேதத்தைக்) கேட்கவும், அத்யயநம் செய்யவும், யாகாதிகளைச் செய்யவும் கூடாதென்று நிஷேதிக்கையாலே, (வேதத்தைக் கேட்காமல் அதடியான ஜ்ஞாநமுண்டாகாதாகையால் அவனுக்கு இந்த வித்யையி லதிகாரமில்லை.

ஸூ. ௧௦௪. ஸ்ம்ருதேஶ்ச.

(ஶ்ரு-பா-ப்ர-ஸா.) ஸ்ம்ருதேஶ்ச - "அத ஹாஸ்ய வேதமுபஶ்ருண்வதஸ்த்ரபுஜதுப்யாம் ஶ்ரோத்ரப்ரதிபூரணம் உதாஹரணே ஜிஹ்வாச்சேதோ தாரணே ஶரீரபேத:" என்று சூத்ரன் வேதத்தைக் கேட்டால் அவனுடைய காதுகளில் ஈயத்தை உருக்கிவிட வேணுமென்றும், அத்யயநம் செய்தால் நாக்கை அறுக்கவேணுமென்றும், ஹ்ருதயத்தில் தரித்தால் அந்த ஹ்ருதயத்தைக் கிழிக்கவேணுமென்றும் சொல்லுகையாலேயும். (சூத்ரனுக்கு இதில் அதிகாரமில்லை). ௧௦௪

ஸூ. ௧௦௫. கம்பநாத்.

(ஶ்ரு-பா-ப்ர.) கம்பநாத் -(இந்த அங்குஷ்டமாத்ரனை புருஷனிடத்தில் பயந்து ஸகலஜகத்துகளும்) நடுங்குகையாலே, (அங்குஷ்டப்ரமிதனை புருஷன் பரமாத்மா). ௧௦௫.

(ஶ்ரு-ப்ர-ஸா.) 'யதிதம் கிஞ்ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நி:ஸ்ருதம் மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி" என்கிறவாக்யத்திற்குத்தாத்பர்யம். ஜகத்தெல்லாம் ப்ராணனை அவலம்பித்திருக்கிறது. இதைக்கண்டால் இடியைக்கண்டால்போல லோகம் பயப்படுகிறது. இந்த ப்ராணனை யறிந்தவன் முக்தியடைவான்என்று-இப்படிசொல்லப்பட்டவஸ்து, ப்ராணனோ அல்லது பரமாத்மாவாவென்று ஸம்சயம். ப்ராணனென்கிற பதம் ப்ராணவாயுவிலேயே லோகத்தில் வழங்குகையாலும், ப்ராணவாயுவினால் லோகம் பிழைப்பது, அதில்லாவிடில் நசிப்பது என்பது ப்ரத்யக்ஷமாகக்காண்கிறது ஆகையாலும், ஜகத்துக்கு ஆதாரம் ப்ராணவாயுவே. வாயுவினை

லேயே இடியுண்டாகிற தாகையால் லோகத்துக்குபயஜநகமாயுமாகிறது. ஆகையாலி ங்குச்சொல்லப்பட்டது.ப்ராணவாயுவேயென்று பூர்வபக்ஷம்.—இது பரமாத்ம ப்ரக ரணமாகையாலும் வஜ்ராயுதத்தை யெடுத்தால்,இது நம்தலையி லென்கேவிழுகிறதோ வென்று ஜநங்கள் பயப்படுகிறது - "பீஷாஸ்மாத்வாத:பவதே" என்று அப்பர மாத்மாவுக்கேஸூர்யாதிகள் பயப்படுகிறார்க ளாகையாலும், "ப்ராணஸ்ய ப்ரா ண:" ப்ராணனுக்கும் ப்ராணன் என்று ப்ராணபதம் பரமாத்மாவி னிடத்திலும் வழங்குகையாலும், 'தமேவவிதித்வாதிம்ருத்யுமேதி' என்று பரமாத்மாவையே

ஸகல ஜகத்துக்கு மாதாரமாகச் சொல்லுகையாலும், மோக்ஷத்துக்கு பரமாத்ம ஜ்ஞாநமேகாரண மாகையாலும் இங்குச் சொல்லப்பட்டவன் பரமாத்மாவே யெ ன்று ஸித்தாந்தம். கoடு.

ஸூ. கoசு. ஜ்யோதிர்தர்சநாத்.

(ரா-ப்ர-ஸா.) ஜ்யோதிர்தர்சநாத் - இப்ப்ரகரணத்தில், ஸகல தேஜ ஸ்ஸுக்களுக்கும் ஆச்சாதகமாய்) நிரவதிக தேஜோரூபியான பரமாத்மா வை (ஓதக்) காண்கையாலே, (இந்தபுருஷன் பரமாத்மாவேயாகவேண்டும்)

(ஸ-ஸா.) "ஏஷஸம்ப்ரஸாதோஸ்மாச்சரீராத்ஸமுத்தாயபரம்ஜ்யோ திருபஸம்பத்யஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" இதற் கர்த்தம்—இந்த ஜீவன் இச்சரீரத்திலிருந்து கிளப்பி மேலான ஜ்யோதிஸ்ஸை யடைந்து தன்ஸ்வரூப த்துடன் சேருகிறான் என்று. இங்கு ஜ்யோதிஸ்ஸென்று இருளைப்போக்கும் தேஜஸ் ஸையா, பரமாத்மாவையா சொல்லுகிறதென்று ஸம்சயம்—இப்பதம் தேஜஸ்ஸிலே வழங்குகையாலும், இப்ப்ரகரணம் பரமாத்மாவைச் சொல்லுகிற ப்ரகரணமென்பத ற்குக் காரணம் காணாமையாலும், ஜீவன் ஸூர்யனென்கிற தேஜஸ்ஸை யடைந்த பிற கு முக்தியடையும்போது அடைகிறானென்று சொல்லுகையாலும், இப்பதம் பரமாத் மாவைச் சொல்லாதென்று பூர்வபக்ஷம்,—இப்ப்ரகரணத்தில் அபஹதபாப் மத்வம் முதலிய பரமாத்மகுணங்களைச் சொல்லுகையாலும், இந்தஜ்யோதிஸ்ஸைவிமர்சிக்க வேணுமென்றும் அறியவேண்டுமென்றும் சொல்லுகையாலும், ப்ரத்யக்ஷமாகக் கா ண்கிற ஸூர்யனை இப்படி சொல்வது கூடாமையாலும், சரீர மறுகைக்காக ஜீவன் இந்த ஜ்யோதிஸ்ஸை யடைகிறானென்கையாலும், அதுபரமாத்மப்ராப்தியாலல்லது மற்றொன்றாலுண்டாகாதாகையாலும், இந்த ஜ்யோதிஸ்ஸை 'உத்தம:புருஷ:' என்று உத்தமபுருஷனாகச் சொல்லுகையாலும் இவன் பரமாத்மாவே யாகவேண்டு மென்று ஸித்தாந்தம். கoசு.

சுபி-உஎ-ஸூ-கoஎ. ஆகாசோர்த்தாந்தரத்வாதிவ்யபதேசாத்.

(ஸ-ரா-ப்ர.) அர்த்தாந்தரத்வாதிவ்யபதேசாத் - ஜீவாத்மாவைக் காட் டிலும் வேறான பரமாத்மாவுக்கு அஸாதாரணங்களான நாமரூப நிர்வாஹம் முதலிய தர்மங்களை (இவனுக்குச்) சொல்லுகையாலே, ஆகாச: - ஆகாச பதப்ரதிபாத்யன் (பரமாத்மா). கoஎ.

(ஸ-ஸா.) "ஆகாசோஹவைநாமரூபயோர்நிர்வஹிதா"

சப்தங்களையும் அர்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்கிறவன் ஆகாசம் என்று இதுக்கு அர்த் தம். இங்கு ஆகாசபதத்திற்கு பூதாகாசமா, ப்ரஹ்மமா அர்த்தமென்று ஸம்சயம். ஆ காச பதம் பூதாகாசத்தில் வழங்குகையாலும், சப்தங்களுக்கும் அர்த்தங்களுக்கும்

இடம் கொடுக்குமதாகையால் அதைப்பற்றி ஸ்ருஷ்டிக்கிறதென்று சொல்லக்கூடுமென்றும், ப்ரஹ்மமென்பதற்கு ஹேது காணுமையாலும் இது பூதாகாசமென்று பூர்வபக்ஷம்,—ப்ரக்ருதியினிடத்தில் நின்று ருண்டாய், நாமரூபங்களையடைந்திருக்கிற ஆகாசம் நாமரூபங்களுக்குக் கர்த்தாவாகக் கூடாமையாலும், அது பரமாத்மாவுக்கேயுள்ளதென்று "[Grantha]" என்கிற ஶ்ருதியில் சொல்லுகையாலும், இது பூதாகாசமின்று - பரமாத்மா என்று ஸித்தாந்தம். ௪௦௭.

(ரா-ஸா.) "[Grantha]" இத்யாதி வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம், இங்கு ஆகாசமென்று சொல்லப்பட்டவன் முக்தபுருஷனு, பரமாத்மாவா என்று ஸம்சயம்,—மேல்வாக்யத்தில் முக்தனைச்சொல்லி யிருக்கையாலே இவ்வாக்யத்திலுள்ள ஆகாச பதத்திற்கும் முக்தனே அர்த்தமென்று பூர்வபக்ஷம்,—நாமரூபங்களினுல் அஸ்ப்ருஷ்டனுய் அவைகளுக்கு நிர்வாஹகனுய் ப்ரஹ்மத்வம் முதலிய தர்மங்களையுடையனு யிருக்கிருனென்று முக்தனுக்கு அஸம்பாவிதமான இக்குணங்களையுடையன் என்று ஆகாசத்தை விசேஷிக்கையாலே இவன் முக்தனைக்காட்டிலும் பின்னனை பரமாத்மா என்று ஸித்தாந்தம். ௪௦௭.

௪௦௫-வது ஸூத்திரத்திற்கு ராமாநுஜபாஷ்யம் விட்டுபோனபடியால், இவ்விடம் போடப்பட்டது.

(ரா-ஸா.) இப்படி நடுவில் வந்த சங்கைகளுக்கு ஸமாதானம் சொல்லிவிட்டு அங்குஷ்டமாத்ரனை புருஷன் பரமாத்மா என்று முன்சொன்ன அர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காக இன்னும் சில ஹேதுக்கள் சொல்லுகிருர். அங்குஷ்ட ப்ரமித புருஷ ப்ரகரணத்தில் "[Grantha]" இத்யாதி வாக்யங்களினுல் இந்த புருஷனிடத்தில்பயந்து ஜகத்தெல்லாம் நடுங்குகிறதென்று சொல்லுகையாலே இந்த புருஷன் பரமாத்மாவேயாக வேண்டும். ௪௦௫.

ஸூ. ௪௦௮. [Grantha]

(ஶ-ரா-வ.) [Grantha]-நித்ரை செய்யும்போதும், மரண காலத்திலும், [Grantha] - ஜீவனைக்காட்டிலும் வேருக, [Grantha] - (பரமாத்மாவைச்) சொல்லுகையாலே) (ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்யமில்லை). ௪௦௮.

(ஶ - ஸா.) ப்ருஹதாரண்யத்தில், "[Grantha]" என்று தொடங்கி மேல்பகுவாக ஆத்மாவை நிரூபணம்செய்தது. அங்குசொல்லப்பட்ட ஆத்மா, ஜீவாத்மாவா, பரமாத்மாவா என்று ஸம்சயம். ஆதியில் "[Grantha]" ஹ்ருதயத்தி லிருக்கிறுன் என்று இப்புருஷனை சரீரமுள்ளவனுகச் சொல்லுகையாலும், அந்தத்திலும் "[Grantha]" என்று ப்ராணஸம்பந்தமுள்ளவனுகச் சொல்லுகையாலும்; நடுவிலும் ஜாக்ரதவஸ்த்தையை - அதாவது - விழித்துக்கொள்வதைச் சொல்லுகையாலும், சரீரமும் ப்ராணனும் விழித்துக்கொள்கையும் பரமபுருஷனுக்குக் கிடையாதாகையாலும், இப்படி இவ்வாக்யத்தினடியிடை முடிவுகளில் ஜீவன் தோற்றுகையால் ஜீவனேஇங்கு புகழப்பட்டானென்று பூர்வபக்ஷம்.—உறக்கத்தில் "[Grantha]

த்மநா ஸம்பரிஷ்வக்த: ந பாஹ்யம் கிஞ்சந வேத நாந்தரம்" ஸர்வஜ்ஞனான பரமாத்மாவோடு இவ்வாத்மா சேர்ந்தவனாய் உள்ளும் வெளியு முள்ளவைகளை யொன்றையுமறிகிறதில்லை என்று ஸர்வஜ்ஞனான பரமாத்மாவை அஜ்ஞனான ஜீவனைக் காட்டிலும் வேறாகச்சொல்லுகையாலும், விழிக்கும்போதும், "ப்ராஜ்ஞேநாத்மநாந்வாரூட:" என்று ஸர்வஜ்ஞனான பரமாத்மாவினால் அதிஷ்டிக்கப்பட்டவனாக ஜீவ பரமபுருஷர்களுக்கு பேதம் சொல்லுகையாலும் இவன் பரமாத்மாவே யாக வேண்டும்.—ஆத்யந்தங்களில் சரீரஸம்பந்தமுள்ள ஜீவனைச்சொல்லி பிறகு அஜ்ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் சொல்லிற்று ஆகையால் உபக்ரமோபஸம்ஹார விரோதமில்லை. இடையில் விழித்துக்கொள்கை முதலிய அவஸ்தைகளைச் சொன்னதும் இவ்வவஸ்தைகள் ஜீவனுக்கொழிய இவ்வாத்மாவுக்குக் கிடையாதென்று சொல்லிற்றொழிய அவை இவனுக்குண்டென்று சொல்லவில்லையாகையால் அவ்விரோதமும் கிடையாது ஆகையாலிவ்வாக்யம் பரமாத்மபரமென்றுஸித்தாந்தம். கoஅ

(ஸா-ஸா.) "நேஹநாநாஸ்தி" ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பேதமில்லையென்கையாலும், "தத்வமஸி" என்று ஜீவனும் பரமாத்மாவும் ஒன்றென்று சொல்லுகையாலும், முக்த புருஷனைக் காட்டிலும் பரமாத்மா பின்னனென்று சொல்லக்கூடாது என்கிற சங்கைக்கு ஸமாதானம் சொல்லுகிறார். ஸுஷுப்திகாலத்திலும் உத்க்ராந்தி காலத்திலும் "ப்ராஜ்ஞேநாத்மநாஸம்பரிஷ்வக்த:" ப்ராஜ்ஞேநாத்மநாந்வாரூட:" என்று மூடனாயிருக்கிற ஜீவனைச்காட்டிலும் அப்பேதே பரமபுருஷனை ஸர்வஜ்ஞனாகச்சொல்லுகையாலே, ஒரேகாலத்தில் ஒருவனே அஜ்ஞனாகவும் ஸர்வஜ்ஞனாகவும் ஆகக்கூடாமையாலே, இவ்விருவருக்கும் ஐக்யம் சொல்லக்கூடாது. இவர்களுக்கு பேதமில்லையென்று சொன்னதுக்கு, குணம் த்ரவ்யத்தைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டாதுபோல் ஜீவனும் பரமாத்மாவைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டானென்று தாத்பர்யம். கoஅ.

ஸூ. கடகூ. பத்யாதிசப்தேப்ய:.

(ஸ-ஸா-ப.) பத்யாதிசப்தேப்ய: - ("ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: ஸர்வஸ்யாதிபதி:" இத்யாதிகளாலே ஆகாசசப்தவாச்யனை) பதிமுதலிய சப்தங்களினால், (விசேஷிக்கையாலே, ஸர்வத்திற்கும் அதிபதியாகிய இவன் பரமாத்மாவேயாகவேண்டும்.) கoகூ.

(ஸ-ஸா-ஸா.) இவ்வாக்யத்தில் "ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந:" இத்யாதியாக இவ்வாத்மாவை ஸர்வஸ்வாமியாகச் சொல்லுகையால் இவன் ஜீவனைக் காட்டிலும் வேறான பரமாத்மாவாகக்கடவன். கoகூ.

ந - வதுபாதம் ஸம்பூர்ணம்,

ச-வது பாதம்.

ஸூ. ககo. ஆநுமாநிகமப்யேகேஷாமிதி சேந்ந ஶரீரரூபகவிந்யஸ்தக்ருஹீதேர் தர்ஶயதி ச.

(ஸ-ரா-வ்யா.) ஏகேஷாம் - ஒருவருடைய, (சாகையில்), ஆநுமாநிகம் - (ஸாங்க்யர் சொல்லுகிற) ப்ரதாநமும், (ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டது), இதிசேத் - என்றால், ஶரீரரூபகவிந்யஸ்தக்ருஹீதே: - சரீரமாகிற ரூபகஸ்தாநத்தில் (ரதமாகச்) சொல்லப்பட்டதை க்ரஹிக்கையாலே, ந - ப்ரதாநம் ஜகத்காரணமாகச்சொல்லப்படவில்லை தர்ஶயதிச - ஸ்ருதியும் அப்படியே சொல்லுகிறது. ககo.

(ஸ-ஹா.) கீழ் - மோக்ஷார்த்தி ப்ரஹ்மத்தை யறியக்கடவனென்று சொல்லி அதற்கு லக்ஷணமும் சொல்லி, அந்த ஜகத்காரணமாகிய ப்ரஹ்மம் ஸாங்க்யர் சொல்லுகிற மூலப்ரக்ருதியாகலாமென்று சங்கித்து, ஜகத்காரணமாகிய வஸ்து ஸங்கல்ப ரூபஜ்ஞாநமுள்ளதாகச் சொல்லுகையால் அக்குணம் ஜடமான மூலப்ரக்ருதிக்குக் கிடையாதாகையால் வேதாந்தத்தில் மூலப்ரக்ருதி காரணமாகச்சொல்லப்படவில்லை என்று நிர்ணயித்தார்,—இங்கு கடவல்லியில் மூலப்ரக்ருதியைச் சொல்லுகையால் அதுவே ஜகத்காரணமாகலாம் என்கிற சங்கைக்கு, அதுவும் ப்ரஹ்மபரமென்று உத்தரம் சொல்லுகிறார். மற்ற அர்த்தம் ராமாநுஜபாஷ்யத்தில் காண்க. ககo.

(ரா-ஹா.) "இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்த்தா:" என்று தொடங்கி "மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத்புருஷ: பர:, புருஷாந்ந பரம் கிஞ்சித்" என்கிறவாக்யம் இந்தஅதிகரணத்திற்கு விஷயம்.—இங்கு அவ்யக்தமென்று ஸாங்க்யர் சொல்லுகிற ப்ரக்ருதியைச்சொல்லுமா, சொல்லாதா என்று ஸம்சயம்.—ஸாங்க்யர் சொல்லுகிற ஸ்ருஷ்டிக்ரமம் தோற்றுகையால் இந்த அவ்யக்தபதத்திற்கு அவர்கள் சொல்லுகிற ப்ரதாநமே அர்த்தமென்று பூர்வபக்ஷம்.—முன்வாக்யத்தில் சரீரத்தை ரதமாகவும் இந்த்ரியத்தைக் குதிரைகளாகவும் மநஸ்ஸைக் கடிவாளமாகவும் சொல்லி, இவ்வாக்யத்தில் இந்த்ரியாதிகளை அந்தந்தபதங்களினாலே சொல்லி, சரீரமென்று சொல்லவேண்டிய இடத்தில் அவ்யக்தம் என்று சொல்லுகையாலே அவ்யக்தபதத்திற்கு சரீரம் அர்த்தம் என்று ஸித்தாந்தம். ககo.

ஸூ. கஉ. ஸூக்ஷ்மம் து ததர்ஹத்வாத்.

(ஸ-ரா-வ்யா.) ஸூக்ஷ்மம்-அவ்யக்தமே, (அவஸ்த்தாந்தரத்தை அடைந்து சரீரமாகிறது) ததர்ஹத்வாத் - அந்தசரீரத்துக்கே உபாஸநா நியோக்யதை உண்டாகையாலே, (காரணவாசி சப்தத்தினால் கார்யத்தைச் சொல்லுகிறது.) கஉ.

(ஸ-ஹா.) அவ்யக்தம் என்றால் வ்யக்தமாகாதது, அதாவது கண்ணுக்ககப்படாதது என்று அர்த்தம். இவ்வர்த்தமுள்ள பதம் ஸ்த்தூலமாய்க் காண்கிற சரீரத்தை எப்படி சொல்லுமெனில் - சரீரம் அவ்யக்தமென்று சொல்லப்பட்ட மூலப்ரக்ருதியின் கார்யமாகையால் காரணத்தைச்சொல்லுகிறசப்தத்தினால் இங்கு கார்யம் சொல்லப்பட்டது "கோபி: ஸ்ரீணீத மத்ஸரம்" என்கிறவிடத்தில் பசுவைச்சொல்லுகிற கோபதத்திற்கு பசுவினிடத்தில் நின்றுமுண்டானபால் அர்த்தமாவதுபோல் இங்கும்

அவ்யக்தத்திலின்று முண்டான சரீரம் அவ்யக்தபதத்திற் கர்த்தமென்று கண்டு கொள்க. "ஸோமஹி" இத்யாதிவாக்யத்திற்கு - பாலினால் ஸோமலதையைப் பாகம் செய்யக்கடவன் என்றர்த்தம். கககு.

(ரா-ஹா.) அவ்யக்தமென்றால் மூலப்ரக்ருதிக்குப் பேராயிருக்க அந்தசப்தம் சரீரத்தை எப்படிச்சொல்லுமென்னில், சரீரம் அந்த மூலப்ரக்ருதியில் நின்று முண்டாகையாலே காரணவாசக சப்தத்தினால் கார்யத்தைச் சொன்னபடி. சரீரமே ப்ரக்ருதத்திற்சொல்லிய உபாஸநாதி கர்மங்களுக்கு யோக்யமாகையாலே வசீகார்யங்களைச் சொல்லுகிற இப்ப்ரகரணத்தில் சரீரத்தையே சொல்லவேண்டும். கககு.

ஸூ. ககஉ. ததயீநத்வாதர்த்தவத்.

(ஶ்ரு-ரா-வ்யா.) ததயீநத்வாத் - (சரீராதிகள்) அந்த பரமபுருஷாதீநமாகையாலே, அர்த்தவத் - (இங்கு அவனைச்சொல்லுகை) ப்ரயோஜநமுடையதாயிருக்கும். ககஉ.

(ஶ்ரு-ஹா.) அவ்யக்தத்திலிருந்து சரீரமும் மற்றுஜகத்தும் உண்டாகிறதென்று நீங்களே ஒப்புக்கொண்டீர்கள். அதினால் ஜகத்துக்கு மூலப்ரக்ருதியே காரணமென்று நாங்கள் சொல்லுகிற அர்த்தமேஸித்தித்தது. இனியதை நீங்கள் தூஷித்தபடியென்னென்னில், அவ்யக்தம் ஜகத்காரணமென்பது ஸத்யம், ஆயினும் உங்களைப்போல் அந்த அவ்யக்தத்தை ஸ்வதந்த்ரமாக ஒப்புக்கொள்ளவில்லை. அது ஈஶ்வரனுடையசக்தி. அந்தசக்தியோடு கூடினவனாய் ஈஶ்வரன் ஸ்ருஷ்டிக்கிறான். முக்தியையடைந்தவனுக்கு தத்வஜ்ஞாநத்தினால் அந்தசக்தி நசித்தபடியால் அவன் ஸ்ருஷ்டிக்கிறதில்லை இதுவே ஆகாசமென்றும் அக்ஷரமென்றும் மாயையென்றும் இப்படி பலவிதமாகச் சொல்லப்படும். இதனால் அவ்யக்தம் ஈஶ்வரனுக்குப் பராதீநமாய் ஜகத்காரணமாகிறதென்று சொல்லப்பட்டது. ககஉ.

(ரா-ஹா.) ஆனால் இப்ப்ரகரணத்தில் "புருஷாந்ந பரம் கிஞ்சித்" என்று பரமபுருஷனைச் சொல்லுவானென்னென்னில், சரீரம் இந்த்ரியம் ஆத்மா முதலிய ஸமஸ்தமும் அந்தர்யாமியான பரமபுருஷாதீநமாகையாலே அவனை வசீகரியாவிடில் உபாஸநம் நிறைவேறாதாகையால் அவனையும் வசீகரிக்க வேண்டுமென்கைக்காக பரமபுருஷனை இங்குச்சொல்லிற்றென்று தாத்பர்யம். ககஉ.

ஸூ. ககங. ஜ்ஞேயத்வாவசநாச்ச.

(ஶ்ரு-ரா-வ்யா.) ஜ்ஞேயத்வாவசநாச்ச - (மூலப்ரக்ருதியை) அறியவேண்டுகையாகச் சொல்லாமையாலும், (இது மூலப்ரக்ருதியன்று.) ககங.

(ஶ்ரு-ஹா.) அவ்யக்தத்தை யறிகை மோக்ஷஸாதகமென்றும் அதை உபாஸநம் செய்கை அணிமாதியான ஸித்திகளுக்கு ஸாதகமென்றும் ஸாங்க்யர்கள் சொல்லுகிறார்கள். அப்படியிங்கு அதையறியவேணுமென்றாவது உபாஸிக்கவேணுமென்றாவது சொல்லவில்லை. இந்த அவ்யக்தமென்கிற தேஹரை வசப்படுத்தினால் விஷ்ணுபதத்தை யடைவான் என்றே சொல்லிற்று ஆகையால் இது அவர்கள்சொல்லும் மூலப்ரக்ருதியன்று. ககங.

(ரா - ஹா.) அவ்யக்தமென்பது இங்கு மூலப்ரக்ருதியானால் ஸாங்க்யர்கள் மோக்ஷார்த்தமாக அதை அறியவேண்டுமென்று சொல்லுகையாலே, இங்கும் அப்படியே சொல்லவேண்டும். இங்கு அப்படிச்சொல்லாமையாலே இது ஸாங்க்யர் சொல்லுகிற மூலப்ரக்ருதியன்று. ககங.

ஸூ. ககச. வடீதீதிவெஹ ப்ராஜ்ஞொஹிப்ரகரணாஜ்.

(ஶ்ரு-ரா-ப்ர.) வடிதி - (மூலப்ரக்ருதிக்கு ஜ்ஞேயத்வம் மேல்வாக்யத்தில்) சொல்லுகிறது, ஐதிவெசு - என்றால், ந - அப்படியன்று, ப்ரகரணாசு - ப்ரகரணத்தினால், ப்ராஜ்ஞோஹி - ஸர்வஜ்ஞனான பரமபுருஷனே சொல்லப்படுகிறான். ககச.

(ஶ்ரு-ரா-ஸா.) “ மஹதஃபரம்வ்யக்தம் நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே” என்கிற மேல்வாக்யத்தில் மஹத்தத்வத்தைக் காட்டிலும் மேலான மூலப்ரக்ருதியை அறிந்து பின்பு ஸம்ஸாரத்தினின்றும் விடப்படுவான் என்று மூலப்ரக்ருதிக்கும் ஜ்ஞேயத்வம் சொல்லியிருக்கையாலே இங்கு அவ்யக்தமென்று சொல்லுகிறது மூலப்ரக்ருதியே யாகவேணுமென்னில், அந்தமேல்வாக்யம் “புருஷ” என்று தொடங்கி பரமாத்மாவைச் சொல்லுகிற ப்ரகரணமாகையாலே அந்தப்ரகரணத்தில் மூலப்ரக்ருதியைச் சொல்லமாட்டாது, ஆகையால் அங்கு பரமாத்மாவே சொல்லப்பட்டான். ககச.

ஸூ. ககரு. த்ரயாணாமேவசைவமுபந்யாஸஃ ப்ரஶ்நஶ்ச.

(ஶ்ரு-ரா-ப்ர.) த்ரயாணாமேவ - உபாஸகன் உபாஸநம் உபாஸ்யன் இம்மூன்றுக்குமே, ஏவம் - இப்படி, உபந்யாஸஃ - (இப்ப்ரகரணத்தில், உபந்யாஸமும், ப்ரஶ்நஶ்ச - ப்ரஶ்நமும், (காண்கிறது.) ககரு.

(ஶ்ரு-ஹா.) இந்த ப்ரகரணத்தில் அக்நி, ஜீவன், பரமாத்மா இம்மூவர் விஷயமாகவே நசிகேதா என்பவர் கேட்டார். அவ்யக்தத்தைச் கேட்கவில்லை. ஆகையால் அதற்கு உத்தரம்சொல்லும்போதும் அம்மூன்றையுமே நிரூபிக்கவேண்டுமல்லது அவ்யக்தத்தைச்சொல்ல ப்ரஸக்தியேயில்லை. பரமார்த்தத்தில் ஜீவப்ரஹ்மங்களுக்கு பேதமில்லாவிடினும் வ்யவஹாரதசையில் பேதமுண்டாகையால் அதைப்பற்றி வெவ்வேறாகக் கேட்டாரென்றறிக, ககரு,

(ரா - ஹா.) இப்ப்ரகரணத்தில், உபாஸகனான ஜீவன், உபாஸநமான பக்தி, உபாஸ்யனான பரமபுருஷன் இம்மூவரின் ஸ்வரூப ஸ்வபாவங்களை சிஷ்யன் கேட்கவும், அதற்கு குரு உத்தரம்சொல்லவும் காண்கிறது. மூலப்ரக்ருதிக்கு ப்ரஶ்நமும் உத்தரமும் காணவில்லை, ஆகையால் இங்கு ஜ்ஞேயனாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மா. ககரு.

ஸூ. ககசு. மஹத்வச்ச.

(ஶ்ரு-ரா-ப்ர.) மஹத்வசு - மஹத்தத்வத்தைப்போலவே, (அவ்யக்தமும் சொல்லப்படுகிறதில்லை. ககசு.

(ஶ்ரு - ஹா.) ஸாங்க்யர்கள் எந்த சப்தத்தினால் எவ்வஸ்துவைக் கூறுகிறார்களோ, வேதத்திலும் அந்தசப்தம் அவ்வஸ்துவையே கூறுமென்று நியமமில்லை. மஹத்து என்றால், அவ்யக்தத்தில் முதல்பரிணாமமாகிய நிர்விகல்பக ஜ்ஞானமென்று சொல்லுகிறார்கள். வேதத்தில், “மஹாந்தம்விபுமாத்மாநம்” என்று ஈச்வரனைச் சொல்லுகிறது. அதுபோல் இங்கும் அவ்யக்தமென்றாலும் அவர்கள் சொல்லுகிற ப்ரதாநமாகமாட்டாது ஆகையால் இங்கு ப்ரதாநம் சொல்லப்படவில்லை. ககசு.

(ரா - ஸா.) ,,ஸௌஹஸா தாஜஹாநுவாஸ°" என்கிறவாக்யத்தில் மஹா மென்பதை சேதநவாசியான ஆத்மசப்தத்தினால் விசேஷிக்கையாலே அந்தமஹத் சப்தம் அசேதநமான மஹத்தத்வத்தைச் சொல்லமாட்டாது. அதுபோலவே அவ்ய க்தசப்தமும் ஸாங்க்யர்கள் சொல்லுகிற மூலப்ர்க்ருதியாகமாட்டாது. ககசு.

அயி.உசூ. ஸூ. ககஎ. வமஸவ உவிஶெஷாக.

(ஶ.ரா-வ்ரு.) வமஸவக - சமஸபதத்திற்குப்போல், அவிஶெஷாக- விசேஷஹேதுவில்லாமையாலே, (,,அஜா" என்கிறபதம் மூலப்ரக்ருதியை ச்சொல்லாது.) ககஎ.

(ஶ.ரா-ஸா.) ,,அஜாமேகாம்லோஹித ஶுக்லக்ருஷ்ணாம் பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம்ஸரூபா:" என்கிற வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம். சிவப்பும் வெளுப்பும் கறுப்புமாய், அதாவது - ஸத்வரஜ ஸ்தமோமயமாய் தனக்கு ஸஜாதீயங்களான அநேகம் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கிறதுமான உத்பத்தியில்லாத ப்ர க்ருதியை ஒருவனடைகிறான் மற்றொருவன்விடுகிறான் என்று' அர்த்தம். இதில் "அஜா என்கிறபதம் ஸாங்க்யர்சொல்லுகிற ப்ரஹ்மாத்மகமல்லாத ப்ரக்ருதியைச் சொல்லுமா சொல்லாதா என்று ஸம்சயம்.—"அஜா" என்று உத்பத்தியில்லை யென் றும், அநேகம் ப்ரஜைகளைத் தானே ஸ்வதந்த்ரமாக ஸ்ருஷ்டிக்கிறதென்றும் சொல் லுகையாலே ஸாங்க்யர் சொல்லுகிற அப்ரஹ்மாத்மகமான மூலப்ரக்ருதியே அஜா சப்தத்திற் கர்த்தமென்று பூர்வபக்ஷம். அஜா என்றால் உத்பத்தி யில்லாதது என்று அர்த்தம். உத்பத்தியில்லாத வஸ்துக்கள் அநேகமாயிருக்க அவற்றிலொன்றான மூல ப்ரக்ருதியையே இந்த சப்தம் சொல்லுகிறதென்று நிஶ்சயிக்கக்கூடாது. இவ்வித மான சப்தங்களுக்கு யௌகிகசப்தங்களென்று பெயர், அதாவது - தான் ஓரர்த்தத் தைச் சொல்லும்போது அதின்குணங்களைக்கொண்டு சொல்லுகை. இவ்விதமான சப்தங்கள் வ்யக்திவிசேஷங்களையே சொல்லத்தகுந்த மற்றொரு ஹேதுக்களில்லா விடில் ஸ்வயமாக ஒருவ்யக்தியைக்காட்டாது. $ அதெப்படியென்றால்,—"அர்வாக் பிலஶ்சமஸ ஊர்த்வபுத்ந:" என்கிற வாக்யத்திற்கு கீழ்ப்புறம் த்வாரமுள்ளதும் மேல்பெருத்து மிருக்கிறது சமஸம் என்று அர்த்தம். சமஸமாவது - பக்ஷண ஸாதந மானது. இதில் சமஸசப்தத்திற்கு கீழ்ச்சொன்ன லக்ஷணங்களையுடைய பக்ஷண ஸாதநமான தெதுவென்னில் "இதம் தச்சிர:" என்று மேல்வாக்யத்தில் இந்த சமஸத்தை சிரஸ்ஸு என்று சொல்லுகையாலே அந்தஹேதுவைக்கொண்டு இந்த சமஸசப்தத்திற்கு சிரஸ்ஸு அர்த்தமென்று நிஶ்சயிக்கப்படுகிறது. அதுபோல் ப்ர க்ருதத்தில் அஜாசப்தத்திற்கு விசேஷஹேது ஒன்றும் காணாமையாலே இது அப்ர ஹ்மாத்மகமான மூலப்ரக்ருதியென்று நிஶ்சயிப்பது அரிது. மேலும் இது அநேகம் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கிறதென்று சொல்லிற்றல்லது ஸ்வதந்த்ரமாக ஸ்ருஷ்டிக்கிற தென்று சொல்லவில்லை. இந்தஸ்ருஷ்டி வேதாந்திகள் சொல்லுகிறபடி ப்ரஹ்மாத் மகமான ப்ரக்ருதிக்கும் கூடும் ஆகையால் இதனாலும் நிஶ்சயிக்கமுடியாது என்று ஸித்தாந்தம். ககஎ.

ஸூ. ககஅ. ஜ்யோதிருபக்ரமாத்து ததா ஹ்யதீயத ஏகே.

$ இதற்கு லோகத்ருஷ்டாந்தம்—பாசகன்-அதாவது சமையல் பண்ணுகிறவன் என்றால் இவ்வளவினால் இத்தொழிலையுடையவன் ஏற்படுகிறானல்லது இன்னானென்று ஏற்படான். பாசகன் ராமனென்றால் இன்னானென்றேற்படுவன் அதுபோலிக்குமறிக.

(ஸூ-வ்யா.) ஜ்யோதிருபக்ரமா - தேஜஸ்ஸை ஆதியாக உடைய. அக்நி ஜல அந்நங்கள் (அஜா - அதாவது ப்ரக்ருதியென்று சொல்லப்படுகிறது). ததாஹி - அப்படியே, ஏகே - ஒருசாகையை அத்யயனம்செய்பவர்கள், அதீயதே - அத்யயனம் செய்கிறார்கள். (ஒருசாகையில் இம்மூன்றையுமே ப்ரக்ருதியென்று சொல்லுகிறதென்று தாத்பர்யம். ௧௧அ.

(ஸ்ரீ : வ்யா.) ஜ்யோதிருபக்ரமாது - (இங்கு சொல்லப்பட்ட ப்ரக்ருதி) பரமாத்மாவைக் காரணமாகஉடைய ப்ரஹ்மாத்மகமான ப்ரக்ருதியே சொல்லப்படுகிறது.) ததாஹி - அப்படியே, ஏகே - ஒருத்தர் (தைத்திரீயர்), அதீயதே - அத்யயனம் செய்கிறார்கள் (சொல்லுகிறார்கள்)

(ஸூ-ஹா.) வாக்யசேஷத்தினால் சமஸபதத்திற்கு சிரஸ்ஸு என்றறிந்தோம் இங்கு அஜாசப்தத்திற்கு வாக்யசேஷத்தில் அர்த்தம் இன்னதென்று தோற்றுமை. யால் எதைக்கொண்டு இந்த அஜாபதத்திற்கு அர்த்தம் தெரிந்துகொள்ளலாமென்னில், சாந்தோக்யத்தில் "யதக்நே ரோஹிதம்ரூபம் தேஜஸஸ்தத்ரூபம் யச்சுக்லம் தத்பாம் யத்க்ருஷ்ணம் தத்அந்நஸ்ய" என்கிறவாக்யத்தில், சிகப்பு வெளுப்பு கறுப்பு, இம்மூன்றுகுணங்களையும் க்ரமமாக உடையது அக்நி ஜலம் அந்நம் இம்மூன்றும் என்று சொல்லிற்று. "அஜாமேகாம்லோஹிதசுக்லக்ருஷ்ணாம்" என்கிற வாக்யத்திற்கு சிகப்பு வெளுப்பு கறுப்பு இம்மூன்று குணங்களையுமுடையது அஜை என்று அர்த்தம். சிகப்பு வெளுப்பு கறுப்பு என்பது ரஜோகுண ஸத்வகுண தமோ குணங்கள். இம்மூன்றையுமுடையது மூலப்ராக்ருதி என்று ஸாங்க்யமதம். சிகப்பு வெளுப்பு கறுப்பு என்பது லோகத்திலும் வேதத்திலும் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில் வழங்கக் காணவில்லை மூன்றுவிதமாக ரூபங்களிலேயே வழங்கிவருகிறது. அம்மூன்று ரூபங்களையுமுடையது ப்ருதிவீ ஜல தேஜஸ்ஸுக்களென்று சாந்தோக்யத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லுகையாலே அதைக்கொண்டே இவ்வாக்யத்திற்கும் அர்த்தம் நிஸ்சயிக்கவேண்டும். ஆகையால் இங்கு அஜையென்பது மூலப்ரக்ருதியன்று. ௧௧அ.

(ஸ்ரீ-ஹா.) இங்கு சொல்லப்பட்ட ப்ரக்ருதி பரமாத்மாவினிடத்தில் நின்றும் பிறந்ததாய் ப்ரஹ்மாத்மகமாக வேதாந்திகள் சொல்லுகிற ப்ரக்ருதியே என்று நிஸ்சயிக்கப்படுகிறது. அதெப்படியெனில்,—தைத்திரீயசாகையில் "ஸர்வேநிமேஷா:" என்றுதொடங்கி ஸகலவஸ்துக்களும் பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பந்நங்களாகையாலே அவற்றை ப்ரஹ்மாத்மகமாக அநுஸந்திக்கவேண்டுமென்று சொல்லுகிற ஸமயத்தில் "அஜாமேகாம்" என்று ப்ரக்ருதியைச்சொல்லுகையாலே இந்தப்ரக்ருதியையும் ப்ரஹ்மாத்மகமாக அநுஸந்திக்கவேணுமென்றே நிஸ்சயிக்கப்படுகிறது. அதுபோலவே அம்மந்த்ரத்தோடு ஸமாநமாகிய இம்மந்த்ரத்திலும் அந்த ப்ரஹ்மாத்மகமான ப்ரக்ருதியேயாகவேண்டும் என்று நிஸ்சயிக்கப்படுகிறது ஆகையால் ஸாங்க்யர்சொல்லுகிற ப்ரஹ்மாத்மகமல்லாத ப்ரக்ருதி இங்கு சொல்லப்படவில்லை. ௧௧அ.

ஸூ. ௧௧௯. கல்பநோபதேசாச்ச மத்வாதிவதவிரோத:

(ஸூ-வ்யா.) மத்வாதிவத் - மதுமுதலானவைகளைப்போல், கல்பநோபதேசாச்ச - (ஆடாகக்) கற்பித்துச் சொல்லுகையாலே, அவிரோத: விரோதமில்லை. ௧௧௯.

(ரா-ப்ர.) கல்பநோபதேசாச்ச - உத்பத்தியை உபதேசிக்கையாலும், மத்வாதிவத்- (ஸூர்யனுக்கு) மதுஸ்வரூபம்போலே, அவிரோத:- (இந்த ப்ரக்ருதி உத்பந்நமென்றும் உத்பந்நமல்லவென்றும் சொல்வதில் விரோதமில்லை. ககக.

(ஶ்ரு-ஹா.) அஜை என்கிற பதத்திற்கு ஜந்மமில்லாதது என்று அர்த்தமாயிருக்க அது ப்ருதிவீஜல தேஜஸ்ஸுக்களைச் சொல்லும்வகை யென்னென்னில், அஜைஎன்றால் பெண்ஆடு. அந்தோடொத்தது என்று அர்த்தம். சிகப்பு வெளுப்பு கறுப்பு இம் மூன்று ரூபங்களை யுடைய ஒருபெண் ஆடு எப்படி அநேகமான ஆடுகளை உண்டாக்குகிறதோ, அப்படியே ப்ருதிவீஜல தேஜஸ்ஸுக்களும் கீழ்சொன்ன மூன்று ரூபங்களையுடையதாய் அனேகமான வஸ்துக்களை உண்டாக்குகிறதென்று இந்தவாக்யத்திற்குத் தாத்பர்யம். ஆகில் ஆட்டோடொத்ததென்று சொல்லவேண்டாவோ வென்னில், மதுஸ்வரூபியல்லாத ஸூர்யனை மதுவென்றும், வாக்கை காமதேநுவென்றும் த்ரிலோகத்தை அக்நியென்றும் அவ்வவகுணங்களைப்பற்றிச் சொல்வதுபோல் ஆட்டின் குணத்தைப்பற்றி இவற்றை ஆட்டைச்சொல்லுகிற சப்தத்தினால் சொல்லிற்று ஆகையால் இவ்வாக்யத்தில் ஸாங்க்யர்சொல்லுகிற மூலப்ரக்ருதி காரணமாகச் சொல்லப்படவில்லை என்று ஸித்தாந்தம். ககக.

(ரா-ஹா.) ஆனால் இந்தப்ரக்ருதி "அஜா" என்று உத்பத்தி யில்லாததென்றும், "ஜ்யோதிருபக்ரமா" என்று பரமாத்மாவினிடத்திலிருந்து உண்டாயிற்றென்றும் சொல்லுகை பரஸ்பரவிருத்தமன்றோவென்னில், ப்ரளயகாலத்தில் இந்த ப்ரக்ருதி அதிஸூக்ஷ்மமாய் காரணாவஸ்த்தையை அடைந்து பரமாத்மாவுக்கு சக்திரூபமாயிருக்கிறதாகையால் அந்த அவஸ்த்தையைப்பற்றி இது உத்பத்தியற்றதென்றும், ஸ்ருஷ்டிகாலத்தில் முன் ஸூக்ஷ்மமாயிருந்த ப்ரக்ருதியை ஸ்தூலரூபமாகப் பரமாத்மாரு ஸ்ஜிக்கையால் அந்த கார்யாவஸ்த்தையைப்பற்றி பரமாத்மாவினிடத்தில் நின்று உண்டாயிற்றென்றும் அவஸ்த்தா பேதங்களைப்பற்றிச் சொல்லுகையாலே விரோதமில்லை. இதற்கு த்ருஷ்டாந்தம்.—ஸூர்யனை மது என்று சொல்லியிருக்கிறது. மதுவாவது - வஸ்வாதிகள் அநுபவிக்கிற ரஸத்துக்கு ஆதாரமாயிருக்கை. மற்றோரிடத்தில் அந்த ஸூர்யனையே உதயாஸ்தமயங்களும் நாமரூபங்களும் இல்லாதவனென்று சொல்லியிருக்கிறது; இப்படி ரஸாஸ்ரயமான ரூபமுடையவனென்றும் ரூபமில்லாதவனென்றும் பரஸ்பரவிருத்தமாகச் சொல்லியிருக்கிறதற்குத் தாத்பர்யம், கார்யாவஸ்த்தையில் ரஸாதாரனென்றும், காரணாவஸ்த்தையில் நாமரூபங்களில்லாதவனென்றும் சொல்லிற்றென்று கொள்ளுகிறார்கள். அதுபோலவே இங்கும் கண்டுகொள்வது. ககக.

அ-1-பா-4. ஸூ. 120. ந ஸங்க்யோபஸங்க்ரஹாதபி நாநாபாவாததிரேகாச்ச.

(ரா-ப்ர.) ஸங்க்யோபஸங்க்ரஹாதபி - ("பஞ்சபஞ்சஜநா:" என்கிறவாக்யத்தில் இருபத்தைந்து என்கிற) ஸங்க்யை அர்த்தமாகக்கொண்டாலும், நாநாபாவாத் - (ஸாங்க்யர் ப்ரக்ரியையைக் காட்டிலும்) வேறுவிதமான ப்ரக்ரியை காண்கையாலும், அதிரேகாச்ச - இருப்பத்

றைக்காட்டிலும் அதிகமான தத்வம் சொல்லுகையாலும், ந-(அந்தவா க்யத்தில்) இருபத்தைந்து தத்வங்கள் சொல்லப்படவில்லை. · ௧௨௦.

(ஶ்ரீ-பா-ஸா.) "யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா ஆகாஶஶ்ச ப்ரதிஷ்டித:" இத்யாதி வாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—இந்தவாக்யத்தில் "பஞ்ச பஞ்சஜநா:" என்று ஸாங்க்யர் சொல்லுகிற இருபத்தைந்து தத்வங்கள் சொல்லப்படுகிறதா இல்லையா · என்று ஸம்சயம்.—பஞ்சஜநா: என்றால் ஐந்து ஐந்து பேர்களாய்ச் சேர்ந்த கூட்டங்கள். அந்த கூட்டங்கள் ஐந்து என்றால், இருபத்தைந்து என்று அர்த்தம். இது மோக்ஷப்ரகரணமாகையால் இங்கு சொல்லப்பட்ட இருபத்தைந்து-ஸாங்க்யர் சொல்லுகிற இருபத்தைந்து தத்வங்களேயாக வேண்டும் என்று பூர்வபக்ஷம்.—இங்கு "பஞ்ச பஞ்சஜநா:" என்பதற்கு இருபத்தைந்து என்று அர்த்தமன்று. அப்படி யங்கீகரித்த போதிலும் "யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா: ஆகாஶஶ்ச" எந்த ப்ரஹ்மத்தினிடத்தில் ஐந்தான பஞ்சஜநங்களும் ஆகாசமும் இருக்கிறதோ, (அந்தபரப்ரஹ்மத்தைத்யானித்து முக்தியையடைகிறான்) என்று ஐந்தான பஞ்சஜநங்களும் பரமாத்மாவை ஆதாரமாக உடையதென்று சொல்லுகையாலே ஸாங்க்யர் சொல்லுகிற ப்ரக்ரியை தப்பிவிட்டது ஆகையால் இங்கு ப்ரஹ்மாத்மகமானவற்றைச் சொல்லிற்றொழிய ஸாங்க்யர் சொல்லுகிற அப்ரஹ்மாத்மகமான இருபத்தைந்து தத்வங்கள் சொல்லப்படவில்லை. மேலும், அவர்கள் ஒப்புக்கொண்டது இருபத்தைந்து தத்வம். இங்கு அவற்றைக்காட்டிலும் அதிகமாய் அவற்றுக்கு ஆதாரமாக ஒன்றும், ஆகாசமும் சொல்லுகையாலே இது அவர்கள் சொல்லுகிற இருபத்தைந்து தத்வங்களாகமாட்டாது. ௧௨௦.

ஸூ. ௧௨௧. ப்ராணாதயோ வாக்யஶேஷாத்.

(ஶ்ரீ-பா-ப்ர.) வாக்யஶேஷாத்-வாக்யசேஷத்தினால், ப்ராணாதய:-ப்ராணன் முதலானவைகள் (பஞ்சஜநபதத்திற்கு அர்த்தமென்று நிஸ்சயிக்கப்படுகிறது.) ௧௨௧,

(ஶ்ரீ-பா-ஸா.) முன்ஸூத்ரத்தில் "பஞ்ச பஞ்சஜநா:" என்கிற பதங்களுக்கு இருபத்தைந்து தத்வங்கள் அர்த்தமன்று. ஆனால் - பஞ்சஜநா: - பஞ்சஜநன் என்று பெயருடையவர்கள் ஐந்துபேரென்று அர்த்தமென்று சொன்னார். அவர்கள் யாரென்னில் "ப்ராணஸ்ய ப்ராணம்" என்கிற மேல்வாக்கியத்தினால், ப்ராணன், சக்ஷுஸ், ஶ்ரோத்ரம், அந்நம், மநஸ்ஸு, ஆகிய இவ்வைந்துக்கும் பஞ்ச ஜநங்களென்று பெயர்; இவைகள் ஐந்து. "ஸப்த ஸப்தர்ஷய:" என்பதுபோல் சொல்லிற்றென்று நிர்ணயித்தார். ௧௨௧,

ஸூ. ௧௨௨. ஜ்யோதிஷைகேஷாமஸத்யந்நே.

(ஶ்ரீ-பா-ப்ர.) ஏகேஷாம்-ஒருவருடைய(காண்வர்களுடைய), (பாடத்தில்), அந்நே - அந்நம், அஸதி - இல்லாவிடினும், ஜ்யோதிஷா - ஜ்யோதிஶ்ஶப்தத்தினால், (பஞ்சஜநா: என்று சொல்லப்பட்டவைகள் இந்த்ரியங்களென்று நிஸ்சயிக்கப்படுகிறது.) ௧௨௨.

(ஶ்ரீ-ஸா.) காண்வபாடத்தில் அந்நத்தைத்தவிர்த்து மற்றநாலையுமே சொல்லுகையாலே ப்ராணன் முதலியவை ஐந்தென்று எப்படி சொல்லக்கூடுமென்னில்,

அம்மந்த்ரத்தில் ஐந்தாவதைச் சொல்லாவிடினும் அதற்குமுன் மந்த்ரத்தில் "தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" என்று சொல்லியிருக்கிற தேஜஸ்ஸையும் சேர்த்துக்கொண்டு ஐந்தாக எண்ணவேணுமாகையால் பாதையில்லை ௧௨.

(ரா-ஸா.) காண்வபாடத்தில் இவ்வாக்யத்தில் அந்நத்தைச் சொல்லாமல், மற்ற நாலையுமே சொல்லியிருக்க பஞ்சஜந பதத்திற்கு இந்த்ரியங்களென்று எப்படி அர்த்தநிஶ்சயம் பண்ணப்படும் என்னில், ஆரம்பத்தில் "தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" என்று ப்ரகாசகங்களுக்கெல்லாம் ப்ரகாசகனானவன் பரமாத்மா என்று சொல்லி, அங்குப்ரகாசகங்களென்று சொல்லப்பட்டவை எவையென்னில் "பஞ்சபஞ்சஜநா:" என்று ஸாமாந்யமாகச்சொல்லிப் பின்பு "ப்ராணஸ்யப்ராணம்" என்று விவரித்தது. முன்ப்ரகாசகங்களென்று சொல்லி அநந்தரம் அவை ஐந்தென்று விவரிக்கையால் பஞ்சேந்த்ரியங்களுமே ரூபாதிகளுக்கு ப்ரகாசகங்களாகையால் ப்ரகாசகவாசகமான ஜ்யோதிஶ்சப்தத்தினுல் பஞ்சஜநபதத்திற்கு இந்த்ரியங்கள் அர்த்தமென்று நிஶ்சயிக்கப்படுகிறது. ப்ராணமென்றால் த்வகிந்த்ரியம், அந்நமென்றால் க்ராணேந்த்ரியமும் ரஸநேந்த்ரியமும். ௧௨.

அ. ௧. பா. ௪. ஸூ. ௧௩. காரணத்வேந சாகாஶாதிஷு யதாவ்யபதிஷ்டோக்தே:.

(ஸு-வ்ய.) ஆகாஶாதிஷு - ஆகாசம்முதலிய கார்யவஸ்துக்களின் ஸ்ருஷ்டியில் (பேதமுண்டாயினும்), யதாவ்யபதிஷ்டோக்தே: - அப்படிப்பட்ட குணங்களையுடையவனையே மற்றவாக்யங்களிலும காரணமாகச்சொல்லுகையாலே, காரணத்வேந - காரணத்வத்தில், ந - விவாதமில்லை. ௧௩.

(ரா-வ்ய.) ஆகாஶாதிஷு - ஆகாசாதி பதங்களையுடைய வாக்யங்களில், காரணத்வேந - காரணத்வவிசிஷ்டமாக, யதாவ்யபதிஷ்டோக்தே: - ஸர்வஜ்ஞத்வாதி குணவிசிஷ்டனையே சொல்லுகையாலே, (வேதாந்தவாக்யங்கள் பரமாத்ம பரங்கள்.) ௧௩.

(ஸு-ஸா.) வேதாந்த வாக்யங்களில் ஓரிடத்தில் முன்னம் ஆகாசஸ்ருஷ்டியையும் மற்றோரிடத்தில், முன்னம் ப்ராணஸ்ருஸ்டியையும், வேறோரிடத்தில் முன்னம் ஜகத்ஸ்ருஷ்டியையும் இப்படி ஸ்ருஷ்டிக்ரமத்தில் ஒன்றுக்கொன்று விரோதமாகச் சொல்லியிருக்கையால் அவ்வாக்யங்கள் ப்ரமாணங்களாகமாட்டா. ஆகையால் அவற்றில் ப்ரஹ்மம் காரணம் என்று சொன்னதும் ப்ரமாணமாகமாட்டாது என்றுபூர்வபக்ஷம் ஸ்ருஷ்டிக்ரமத்தில் ஒருவாக்யத்திற் கொருவாக்யம் விரோதமிருந்தாலும் ஸர்வஜ்ஞனை ஸர்வேஶ்வரனே ஜகத்காரணமென்று ஒருமிடறாக பரஸ்பரவிரோதமின்றி எல்லாவாக்யங்களிலும் சொல்லப்பட்டது. வேதாந்தத்திற்கு ப்ரஹ்மம் ஜகத்காரணம் என்று சொல்வதிலேயே முக்யதாத்பர்யம். ஜகத்ஸ்ருஷ்டிசொல்வது முக்யதாத்பர்யமில்லை. முக்யமான அர்த்தத்தில் விரோதமுண்டாகில் அப்ரமாணமாகுமொழிய, அமுக்கியமான அர்த்தத்தில் விரோதமுண்டானாலும் அப்ரமாணமாகமாட்டாது. ஸ்ருஷ்டிக்ரமத்திலும் விரோதமில்லையென்பதையும் மேலே ஸூத்ரகாரர் சொல்லப்போகிறார். ஆகையால் வேதாந்தங்கள் அப்ரமாணங்களாகமாட்டா வென்று ஸித்தாந்தம். ௧௩.

(ரா-ஸா.) வேதாந்த வாக்யங்கள் ப்ரதாநத்தை ஜகத்காரணமாகச் சொல்லுகிறதா, பரமாத்மாவை ஜகத்காரணமாகச் சொல்லுகிறதா என்ற ஸம்சயம்.—

"தஸ்மாத் ஏதத் ப்ரஹ்ம நாமரூபமந்நம் ச ஜாயதே" என்று முதலில் அவ்யாக்ருத மிருந்ததென்றும், அதுவே நாமரூபங்களை யடைந்து ஜகத்ரூபமாகப் பரிணமித்ததென்றும் சொல்லுகிறது அவ்யாக்ருதமென்றால் ப்ரக்ருதி. மற்றும் சிலவிடங்களில், "அஸதேவேதமக்ர ஆஸீத்" "அஸத்வா இதமக்ர ஆஸீத்" என்று அஸத்தேமுதலிலிருந்தது என்று சொல்லுகிறது. இங்குச்சொல்லுகிற அஸத்பதத்துக்கு அர்த்தமேதுவென்னு மாகாங்க்ஷையில், முன்வாக்யத்தில் அவ்யாக்ருதமென்று சொன்ன ப்ரக்ருதியே யென்று நிஸ்சயிக்கப்படுகிறது. மற்ற ஸ்ருஷ்டி வாக்யங்களும் இவ்வாக்யங்களோடு ஸமாநார்த்தகங்களாக வேண்டுகையாலே அவ்வாக்யங்களிலும் இவற்றில் சொன்ன ப்ரக்ருதியே ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டதென்று பூர்வபக்ஷம் — "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று தொடங்கி "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" இத்யாதிவாக்யங்களில் ஸர்வஜ்ஞத்வ ஸத்யஸங்கல்பத்வாதி குணங்களையுடைய பரமபுருஷனே ஜகத்காரணமென்று சொல்லுகையாலே மற்றவாக்யங்களிலும் அக்குணங்களையுடைய பரமபுருஷனே ஜகத்காரணமாக ப்ரதிபாதிக்கப்பட்டானென்று நிஸ்சயிக்கப்படுகிறது. அவ்யாக்ருதமென்றாலும் அஸத் என்றாலும் நாமரூப விபாகங்களில்லை என்று அர்த்தம். காரணாவஸ்த்தையில் அந்த பரமபுருஷனுக்கு தேவாதிநாமரூப விபாக ஸம்பந்தமில்லாமையாலே அவனை அப்போது அஸத் என்றும் அவ்யாக்ருதம் என்றும் சொல்லுகிறது. ஆகையால் ஸகலகாரண வாக்யங்களும் பரமாத்மபரமென்று ஸித்தாந்தம். கஉரு.

ஸூ. கஉ௬. ஸமாகர்ஷாத்,

(ஶ்ரு.ப்ர.வ்ய.) ஸமாகர்ஷாத் - (முன் ஸத்யஸங்கல்பனுகச் சொல்லப்பட்ட பரமபுருஷனையே இங்கு), ஆகர்ஷணம்பண்ணிக்கொள்ளுகையாலே, ("அஸத்வா" என்கிறவிடத்திலும் பரமாத்மாவேசொல்லப்படுகிறான்.) கஉ௬

(ஶ்ரு-ஸா.) ஸ்ருஷ்டிக்ரமத்தில் பேதமிருந்தாலும் காரணவாதத்தில்பேதமில்லை யென்றது கீழ்; இதில் காரணவாதத்திலும் பேதமுண்டென்று சங்கித்து அதை நிரஸநம்செய்கிறார். ஓரிடத்தில் "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" என்று ஸத்திலிருந்தும் ஜகத்துண்டாயிற்றென்றது மற்றோரிடத்தில் "அஸத்வா இதமக்ர ஆஸீத்" என்று அஸத்திலிருந்து ஜகத்துண்டாயிற்றென்றது; ஆகையால் காரணவாதத்திலும் விரோதமுண்டென்னில் கீழ்ச்சொன்ன ஸத்ரூபமான ப்ரஹ்மத்தையே இங்கு அஸத்தென்று சொல்லுகிறது; "அஸத்வா" என்கிற வாக்யம் கீழ்ச்சொன்னதின் விவரணமாகையால் அதற்கு இப்படியே அர்த்தம் சொல்லவேண்டும். அஸத்என்றால் இல்லையென்று அர்த்தமன்று. பேருமுருவு மற்றதென்று அர்த்தமாய் ஸ்ருஷ்டிக்குமுன்புள்ள ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது ஆகையால் விரோதமில்லை யென்கிறார். கஉ௬.

(ஶா-ஸா.) ஆனால், "அஸத்வா இதமக்ர ஆஸீத்" என்று யாரைச்சொல்லுகிறதென்னில், "ஸோ காமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய" என்று பூர்வம் "நான் நாநாரூபியாயாகக்கடவேன்" என்ற ஸங்கல்பமுள்ளவனுகச் சொல்லப்பட்ட பரமபுருஷனையே அநந்தரத்திலுள்ள இவ்வாக்யத்திலும் ஆகர்ஷித்துக்கொள்ளுகையாலே இங்கும் அவனையே சொல்லுகிறது. கஉ௬.

அதி. ௧௨. ஸூ. ௧௫. ஜகத்வாசித்வாத்.

(ஸு-ரா-வ்ய.) ஜகத்வாசித்வாத் - (கர்மபதம்) ஜகத்துக்கு வாசகமாகையாலே, அறியத்தக்கவனாகச்சொல்லப்பட்டவன் பரமபுருஷன்.) ௧௫.

(ஸு-ரா-ஸா.) "யோ வை பாலாக ஏதேஷாம் புருஷாணாம் கர்த்தா யஸ்ய வை ஏதத் கர்ம ஸ வை வேதிதவ்ய:" என்கிறவாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—இவ்வாக்யத்தில் அறியத்தக்கவனாகச் சொல்லப்பட்டவன் ஜீவனா, பரமபுருஷனா என்று ஸம்சயம்.—"யஸ்ய வை ஏதத் கர்ம" இந்த புண்யபாப ரூப கர்மம் எவனுக்கு உள்ளதோ, அவன் வேதிதவ்யன் என்று சொல்லுகையாலே புண்யபாபங்கள் பரமபுருஷனுக்கில்லாமையாலே அவற்றையுடைய ஜீவனே வேதிதவ்யனாகச் சொல்லப்பட்டான் என்று பூர்வபக்ஷம்.—கர்மம் என்றால் செய்யப்பட்டது. அதாவது லோகம், இப்படிச்சொல்லாவிடில் இந்தகர்மம் என்கைக்கு ப்ரயோஜனமில்லை. கர்மம் என்றாலேபோரும். ஆக, இந்தஜகத்து எவனுடைய ஸ்ருஷ்டியோ, அவன் என்று அந்தவாக்யத்துக்கு அர்த்தம் இந்த ஜகத்ஸ்ருஷ்ட்ருத்வம் ஜீவனுக்குக் கூடாமையாலே அதையுடைய பரமபுருஷனே இங்கு வேதிதவ்யனாகச் சொல்லப்பட்டவன் என்று ஸித்தாந்தம். ௧௫.

ஸூ. ௧௬. ஜீவமுக்யப்ராணலிங்காந்நேதி சேத் தத்வ்யாக்யாதம்.

(ஸு-ரா-வ்ய). ஜீவமுக்யப்ராணலிங்காத் - (இவ்வாக்யத்தில்) ஜீவபோதகமான லிங்கமும் முக்யப்ராணபோதகமான லிங்கமும் காண்கையாலே, ந-(இங்கு) பரமாத்மாவைச்சொல்லவில்லை, இதி சேத் - என்றால், தத் - அந்தவிஷயம், வ்யாக்யாதம் - (முன்னமே) சொல்லப்பட்டது.

(ஸு-ரா-ஸா.) "ஸமேதஸ்ய க்ஷுத்ராத்மஸம்ஸ்பர்ஶே" என்று இவன் புஜிக்கிறானென்று சொல்லுகிறது. போஜனம் ஜீவனுக்கேயல்லது பரமாத்மாவுக்குக் கிடையாது. "அதாஸ்மிந் ப்ராண ஏவ" என்று இவனைப் ப்ராணனாகவும் சொல்லியிருக்கிறது. இந்தஹேதுக்களாலே இவன் ஜீவனாவது ஆகவேண்டும், அல்லது ப்ராணனாவது ஆகவேண்டும், பரமாத்மா வாகக்கூடாது என்றால்,—பூர்வாபரவாக்ய ஸந்தர்ப்பங்களினால் இவன் பரமாத்மாவென்று நிஸ்சயித்தபிறகு ஜீவாதிவாசக சப்தங்களும் ஜீவாதிசரீரகனான பரமாத்மாவையே சொல்லுகிறதென்று இவ்வர்த்தம் முன்னமே வ்யாக்யாநம் செய்யப்பட்டது. இங்கும் அவ்விதமாகவே கொள்ளவேண்டும்.

ஸூ. ௧௭. அந்யார்த்தம் து ஜைமினி: ப்ரஶ்நவ்யாக்யாநாப்யாமபி சைவமேகே.

(ஸு-ரா-வ்ய.) அந்யார்த்தம் து - வேறு ப்ரயோஜனத்துக்காகவே, (இங்கு ஜீவனைச்சொல்லுகிறது). ப்ரஶ்நவ்யாக்யாநாப்யாம் அபி - ப்ரஸ்னோத்தரங்களினாலேயும் (இவ்வர்த்தம் நிஸ்சயிக்கப்படுகிறது). (என்று), ஜைமினி: - ஜைமினிமஹர்ஷி சொன்னார். ஏகே - சிலர் (வாஜஸநேயிகள்), ஏவம் - இவ்விதமான அர்த்தத்தையே) ஸ்பஷ்டமாகச்சொன்னார்கள்.

(ஸு-ரா-ஸா.) பாலாகியும் அஜாத சத்ருவும், தூங்குகிற புருஷனிடம் சென்று ப்ராணனுடைய பேரைச் சொல்லிக்கூப்பிடுதல், தடியினால் தட்டுதல் இவைமு

தலான வ்யாபாரங்களினால் சரீரேந்த்ரியாதிகளைக் காட்டிலும் அதிரிக்தனான ஜீவனொருவனிருக்கிறானென்று ப்ரதிபாதிப்பதாக இவ்வாக்யம் தோற்றுகையாலே பரமாத்மபரமாக மாட்டாதென்கிற பூர்வபக்ஷத்தில், சரீராதிகளைக்காட்டிலும் அதிரிக்தனாக ஜீவனிருப்பது போல், அவனைக்காட்டிலும் அதிரிக்தனாக பரமாத்மா ஒருவனுண்டென்றுபதேசிக்கைக்காக இவ்வாக்யத்தில் ஜீவனைச்சொல்லிற்று. இதையெப்படியறிகிறதென்றால்,—ப்ரச்நமும் உத்தரமும் பரமாத்மவிஷயமாகவே காண்கிறது. "க்வைஷ ஏதத் பாலாகே புருஷோऽசயிஷ்ட" என்று இதுவரையில் இந்தஜீவன் எங்கேபோய் படுத்துக் கொண்டிருந்தான் என்றது ப்ரச்நம். "அதாஸ்மிந் ப்ராண ஏவைகதா பவதி" என்று இதுவரையில் இந்தஜீவன் ஸகலப்ராணிகளுடைய ஜீவநஹேதுவான பரமாத்மாவினிடத்தில் ஏகீபவித்திருந்தான் என்றது உத்தரம். இந்த ப்ரச்நப்ரதிவசநங்களினால் இவ்வாக்யம் பரமாத்மபரமென்றே நிச்சயிக்கப்படுகிறது. இந்தஸம்வாதத்திலேயே வாஜஸநேயிகள் இவ்வாக்யத்தை "ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாச:" என்று பரமாத்மபரமென்று ஸ்பஷ்டமாகச்சொல்லிற்று. இவ்வர்த்தம் ஜைமினி முதலான பெரியோர்களுக்கும் ஸம்மதமானது. ௧௨௭.

அதி - ௨௨. ஸூ. ௧௨௮. வாக்யாந்வயாத்.

(ஸூ-ரா-வ்யா.) வாக்யாந்வயாத் - பூர்வாபர ஸகலவாக்யங்களும் பரமாத்மாவினிடத்திலே அந்வயிக்கையாலே, (த்ரஷ்டவ்யனாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மா). ௧௨௮.

(ஸூ-ரா-ஸா.) "ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி" இத்யாரப்ய "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:" இத்யாதிவாக்யம் இந்த அதிகரணத்திற்கு விஷயம்.—இங்கு த்ரஷ்டவ்யனாகச் சொல்லப்பட்டவன் ஜீவனா, பரமாத்மாவா என்று ஸம்சயம்.—பதிஜாயா புத்ரபச்வாதிகள் ஆத்மாவுக்கு ப்ரியங்களாகிறதென்று சொல்லி அநந்தரம் அந்த ஆத்மாவை த்ரஷ்டவ்யனாகச் சொல்லுகையாலே பதிஜாயாதிகள் பரமாத்மாவுக்கு ப்ரியங்களாகாமையாலே இவன்ஜீவனேயாகவேண்டும்; அவனையே மேலும் த்ரஷ்டவ்யனாகச்சொல்லுகிறதென்று பூர்வபக்ஷம்.—எவனுடைய ஸங்கல்பத்தினாலே பதிஜாயாதிகள் பத்யாதிகளுக்கு ப்ரியமாக ஆகிறார்களோ, அவன் த்ரஷ்டவ்யனென்று அந்தவாக்யத்துக்கு அர்த்தம். ஸர்வேச்வரன் அவரவர்கள் கர்மாநுகுணமாக சிலவஸ்துக்களைப் ப்ரியமாகவும் சிலவஸ்துக்களை அப்ரியமாகவும் கற்பிக்கிறான். இவைகள் ப்ரியமாகுகை அவனுடைய ஸங்கல்பத்தினாலேயாகையாலே அந்த ஸர்வேச்வரனே த்ரஷ்டவ்யனென்று சொல்லப்பட்டவன். இப்படிசொன்னால் தான் பூர்வோத்தரஸகலவாக்யங்களும் ஸரஸமாக அந்வயிக்கும் என்று ஸித்தாந்தம். ௧௨௮.

ஸூ. ௧௨௯. ப்ரதிஜ்ஞாஸித்தேர்லிங்கமாச்மரத்ய:.

(ஸூ-ரா-வ்யா.) ப்ரதிஜ்ஞாஸித்தே:- ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞாஸித்த்யர்த்தமாக, (ஜீவவாசகசப்தத்தினால் பரமாத்மாவைச் சொல்லிற்று) இதி - என்று, ஆச்மரத்ய: - ஆச்மரத்யர் சொன்னார். ௧௨௯.

(ஸூ-ரா-ஸா) ஆனால் இப்ப்ரகரணத்தில் ஜீவனைச் சொல்லுவானேனென்னில், பரமாத்மஜ்ஞாநத்தினால் ஜீவாதி ஸகலவஸ்துக்களும் ஜ்ஞாதங்களாய்விடும்

கன் என்று ப்ரதிஜ்ஞைபண்ணுகையாலே, ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பேதமில்லாமையாலே ஜீவவாசக சப்தத்தினுல் பரமாத்மாவையே சொல்லிற்றென்று ஆஶ்மரத்யர் மதம். கஉக.

ஸூ. கஉ௦. உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி:.

(ஶ்ரு.ரா.வ்யா.) உத்க்ரமிஷ்யத: - (ஸம்ஸாரத்தில்நின்றும்) கிளம்பிப் போகப்போகிறவனுக்கு, ஏவம்பாவாத் - ப்ரஹ்மபாவம் உண்டாகையாலே, (ஜீவவாசகசப்தத்தினுல் பரமாத்மாவைச் சொல்லிற்று), இதி-என்று ஔடுலோமி: - ஔடுலோமி சொன்னார். கஉ௦.

(ஶ்ரு-ரா ஹா.) ஸம்ஸாரத்திலிருக்கும் வரையில் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பேதமிருந்தாலும் முக்திதசையில் பேதமில்லையாகையாலே அந்த அபேதத்தைப் பற்றி ஜீவவாசகசப்தத்தினுல் பரமாத்மாவைச் சொல்லிற்றென்று ஔடுலோமி மதம். கஉ௦.

ஸூ-கஉக. அவஸ்திதேரிதி காஶக்ருத்ஸ்ந:.

(ஶ்ரு.ரா-வ்யா.) அவஸ்திதே: - (ஜீவனிடத்தில் பரமாத்மா அந்தர்யாமியாய்) இருக்கையாலே, ஜீவவாசகசப்தத்தினுல் பரமாத்மாவைச் சொல்லிற்று), இதி - என்று, காஶக்ருத்ஸ்ந: - காசக்ருத்ஸ்நர் சொன்னார். கஉக.

(ஶ்ரு ஹா.) பரமாத்மாவே ஜீவரூபியாயிருக்கையால் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் சொல்லிற்று என்று காசக்ருத்ஸ்நர் சொன்னார். இதுவே ஸூத்ரகாருடைய ஸித்தாந்தமாகக்கடவது. சஉக.

(ரா-ஹா.) ஜீவாத்மாவுக்குப் பரமாத்மா சரீரியாகையாலே தேவதத்தாதி சரீரவாசகசப்தங்கள் அந்த சரீரமுள்ள ஆத்மாவைச் சொல்லுவதுபோல் ஜீவவாசகசப்தமும் ஜீவசரீரியான பரமாத்மாவைச் சொல்லுகிற தென்றபிப்ராயத்தினுல் ஜீவவாசகசப்தத்தினுல் பரமாத்மாவைச் சொல்லிற்றென்று காசக்ருத்ஸ்நமதம் இதுவே ஸூத்ரகாராபிமதம். சஉக.

அதி-௫ச. ஸூ. கஉஉ. ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்.

(ஶ்ரு ரா-வ்யா.) ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத் (ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந) ப்ரதிஜ்ஞைக்கும் த்ருஷ்டாந்தத்துக்கும் விரோதம் வாராமைக்காக ப்ரக்ருதிஶ்ச - உபாதாநகாரணமும், (பரமபுருஷனே). என்றங்கீகரிக்கவேணும். கஉஉ.

(ஶா-ஹா.) ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் "பஹு ஸ்யாம்" நானே ஜகத்ரூபியாக ஆகக்கடவேனென்று ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்ருஷ்டித்தது என்கையாலே அசேதநமாகிய மூலப்ரக்ருதிக்கு இவ்விதமான ஸங்கல்பங்கூடாதாயினும் ஸத்வரஜஸ்தமோமயமாய் ஜடமாகக்காண்கிற இஜ்ஜகத்திற்குக் காரணம் இத்தோடு ஸஜாதீயமேயாகவேண்டும் சைதன்யமுள்ள ப்ரஹ்மத்திற்கு இக்குணங்கள் கிடையாது. லோகத்தில் கடகலசாதிகளுக்கு அத்தோடு ஸஜாதீயமான ம்ருத்பிண்டம் முதலியவை உபாதாநமாகவும் சைதந்யமுள்ளவன் நிமித்த காரணமாகவும் காண்கிறது. அதுபோல ஜகத்துக்கும் நிமித்தகாரணமீஶ்வரனாயினும் உபாதாநகாரணம் மூலப்ரக்ருதியேயென்

று சொன்னஸாங்க்யனைக்குறித்து,—ப்ராஹ்மஜ்ஞானத்தினால் உலகமெல்லாம் அறிந்ததாய்விடும் என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, அது எப்படி கூடுமெனில், ம்ருத்பிண்டத்தையறிந்தால் அதிலின்று முண்டான கடகலசாதிகள் ம்ருத்விகாரங்களென்று அறியப்படுவதுபோல் என்று உதாஹரணம் காண்பித்தது ச்ருதி. இதனால் கடத்துக்குமிருத்துப்போல் ஜகத்துக்கு ப்ரஹ்மம் உபாதானகாரணமுமாகிறது என்று அங்கீகரிக்கவேண்டும் என்று உத்தரம் சொல்லுகிறார். ௧௨௨.

(பா-ஹ்ரு.) ஸர்வேச்வரன் ஜகத்துக்குநிமித்தகாரணமாத்ரமா, உபாதானகாரணமாகவும் ஆகிறானா என்று ஸம்சயம்—கடசராதிகார்யங்களுக்கு உபாதானமாகிய ம்ருத்திகாகளுக்கும நிமித்தகாரணமாகிய தண்டசக்ராதிகளுக்கும் அபேதம் காணாமையாலே ஒருகார்யத்துக்கு நிமித்தோபாதானங்கள் வெவ்வேறாகவேயாகவேண்டும். ஜகத்துக்கும் ஈச்வரன் நிமித்தமாத்ரமேயாகிறான். உபாதானமானால் பரிணாமாதி தோஷங்களும் ஸம்பவிக்கும்; இப்பரிணாமாதிகள் நிர்விகாரனான ஸர்வேச்வரனுக்கு ஸம்பவியாது ஆகையால் இவன் நிமித்த மாத்ரமே யென்று பூர்வபக்ஷம்.—ம்ருதாதிகளுக்கு ஸர்வஜ்ஞத்வமும் குலாலாதிகளுக்கு ஸர்வசக்தியுமில்லாமையாலே அவைகள் ப்ருதயேகம் இருவகையான காரணங்களாகவிடினும், ஸமஸ்தவஸ்து விலக்ஷணனாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தனாய், சிதசித்சரீரகனாய் சாஸ்த்ரைகவேத்யனான ஸர்வேச்வரனுக்கு நிமித்தோபாதானகாரணத்வங்களிரண்டும் கூடும். தேவதத்தாதிகள் பாலனாயும் யுவாவாயும் வ்ருத்தனாயும் பரிணமித்தாலும் அந்தபால்யயௌவனாதிகள் சரீரமாத்ரத்திலேயாய் ஆத்மாவுக்குத்தஸம்பந்த மில்லாதாப்போலே ஸூக்ஷ்மசிதசித் சரீரகனான ஸர்வேச்வரன் உபாதானமாகையால் இவன் ஜகதாகாரமாகப்பரிணமிக்கும்போது, அப்பரிணாமம் தன்சரீரமாகிய சிதசித்வஸ்துகதமாகையால் நிர்விகாரனாகிய தனக்கு பரிணாமாததோஷமும் ஸம்பவியாது. மேலும் பரமாத்மஜ்ஞானத்தினாலே ஸர்வமும் ஜ்ஞாதமாகிறதென்று சொன்னப்ரதிஜ்ஞையும் ம்ருத்கடாதித்ருஷ்டாந்தமும் இவ்வர்த்தத்திலேயே ஸங்கதமாகும். அதெப்படியெனில், நிமித்தமான குலாலாதிஜ்ஞானத்தினால் கலசாதிகார்யங்கள் இன்னஸ்வரூபமென்றறியப்படமாட்டா. உபாதானமான ம்ருத்பிண்டஜ்ஞானத்தினால் கலசாதி கார்யங்கள் மண்ணென்றறியப்படுகின்றன. அதுபோலவே ஈச்வரன் உபாதானமானாலே இவனுடைய ஜ்ஞானத்தினால் ஜகத்தும் ஜ்ஞாதமாகும் ஆகையால் ஜகத்துக்கு ஸர்வேச்வரன் உபாதானகாரணமுமாகிறானென்று ஸித்தாந்தம். ௧௨௨.

ஸூ. ௧௨௩. அபித்⁴யோபதே³ஶாச்ச.

(ஶ்ரீ-பா-வ்யா-ஸா.) அபித்⁴யோபதே³ஶாச்ச - ("ப³ஹு ஸ்யாம்") என்று பரமபுருஷனே தானே ஜகதாகாரமாக பஹுவிதமாகப் பரிணமிக்கிறேன் என்று) ஸங்கல்பித்துக்கொண்டானென்று சொல்லுகையாலும் (உபாதானகாரணமாகிறான்.) ௧௨௩.

ஸூ. ௧௨௪. ஸாக்ஷாச்சோப⁴யாம்நாநாத்.

(ஶ்ரீ-பா-வ்யா.) ஸாக்ஷாத் - நேராகவே, உப⁴யாம்நாநாச்ச - நிமித்தோபாதான காரணத்வங்களாகிற இரண்டும் (பரமாத்மாவுக்குச்) சொல்லுகையாலும், (உபாதானகாரணமாகிறான்.) ௧௨௪.

(ஶ்ரீ-ஸா.) "ஸர்வாணி ஹ வா இமாநி பூ⁴தாந்யாகாஶாதே³வ ஸமுத்பத்³யந்தே ஆகாஶம் ப்ரத்யஸ்தம் யந்தி" என்று ஸகலவஸ்துக்களும் ஆகாசமென்

கிற ப்ரஹ்மத்தினிடத்தினின்று முண்டாகிறது கடைசியில் அதிலே லீநமாய் விடு கிறதென்று சொல்லிற்று. லோகத்தில் தாங்யம் முதலியவைகள் மண்ணினின்றுமு ண்டாய் மண்ணிலேயே கடைசியில் லீனமாய்ச்சேருகின்றன. ஆகையால் அவற்று க்கு மண் 'உபாதானமாகிறது; அதுபோலவே' ஜகத்தின் உத்பத்திலயங்களுக்கு ஆதார மாகிய ப்ரஹ்மமே உபாதாந காரணமாகக்கடவது. கூசு.

(ரா-ஹா.) "கிம்ஸிஜநடு" என்று தொடங்கி இந்த ஜகத்துக்கு உபாதாந காரணமெது, நிமித்தகாரணமெது என்று கேட்டதற்கு; "ஹுஹவவநடு" என்று தொடங்கி, பரப்ரஹ்மமே உபாதாநமும் நிமித்தமும் என்று சொல்லுகையாலே பர மபுருஷன் உபாதாந மாகக்குறையில்லை. கூசு.

ஆத்மக்ருதே:-வரிணாமாத்.

(ஸ - வ்ய.) ஆத்மக்ருதே:- தனக்கேகர்த்ருத்வம் சொல்லுகையாலே (ப்ரஹ்மம் உபாதாநகாரணம். அதெப்படி சேருமெனில்), வரிணாமாத் - (ஜகத்ரூபமாகத் தன்னைப்) பரிணமிப்பிக்கையாலே. • (கூரு-கூசு)

(ஸ-ஹா.) இந்த பாஷ்யத்திற்கு "ஆத்மக்ருதே: வரிணாமாத்" என்பது ஒரேஸூத்ரம்—"தடிாத்மாநம்ஸ்வயமகுருத" என்று ப்ரஹ்மம் தன்னையே ஜக த்ரூபமாகத்தானே செய்தது என்கையாலேதானே ஜகத்துக்கு உபாதாநமும் நிமித்த மும் ஆகிறது. ஆனால் லோகத்தில் ம்ருத்ஸுவர்ணம் முதலியவை கடமாகவும் குண் டலமாகவும் பரிணமிப்பது மற்றொருவன் செய்கையினால் இங்கு மற்றொருவன் செய் கையன்றியே ப்ரஹ்மம் ஸாமர்த்யமுள்ளதாகையால் தன்னைத்தானே இவ்விதமாகப் பரிணமிப்பித்தது "ஆத்மக்ருதே:" என்பது ஒருஸூத்ரமும், "வரிணாமாத்" என்பது வேறுஸூத்ரமுமாகலாம், அப்போது முதலுக்கு முன்போலவே அர்த்தம் இரண்டாம் ஸூத்ரத்திற்கு விகாரியாகிய இஜ்ஜகத் ஸ்வரூபமாக ப்ரஹ்மமாயிற்று என்று "ஸச்சத்யச்சாபவத்" என்கிறவாக்கியத்திற் சொல்லுகையாலும் ஜகத்து க்கு ப்ரஹ்மம் உபாதாநகாரணமென்பது ஸித்தம் என்று. (கூரு-கூசு.)

ஸூ. கூரு. ஆத்மக்ருதே:.

(ரா - வ்ய - ஹா.) ஆத்மக்ருதே: - "தடிாத்மாநம் ஸ்வயமகுருத" என்று தன்னையே (ஜகத்ரூபமாகச்) செய்கிறானென்று சொல்லுகையா லும் (உபாதாநகாரணமாகிறான்.) கூரு.

ஸூ. கூசு. வரிணாமாத்.

(ரா - வ்ய.) வரிணாமாத் - (சிதசித்வஸ்து சரீரகனான பரமபுருஷ னே ஜகத்ரூபமாகப்) பரிணமிக்கையாலே, (ஜகத்கததோஷம் பரமபுருஷ னுக்கு ஸம்பவியாது.) கூசு.

(ரா-ஹா.) பரமபுருஷனே ஜகத்ரூபமாகப் பரிணமித்தால் அவனுக்குள்ள அந வதிகாதிசயஜ்ஞானாநந்தாதி குணங்கள்போய் ஜகத்கதமான துக்கம் அஜ்ஞானம் முத லிய தோஷங்கள் சம்பவிக்குமே யென்னில், ப்ரஹ்மம் அவித்யையினால் ஆவரிக்கப் பட்டு ஜகத்ரூபமாகப்பரிணமிக்கிறதென்று சொல்லுகிற அத்வைதமதத்தில் இத்தோ ஷங்கள் ஸம்பவிக்கும். நாமரூப மற்றதாய் ஸூக்ஷ்மமாயிருக்கிற சிதசித்சரீரகனான பரமபுருஷன் ஸ்தூலசிதசித் விசிஷ்டனாகப் பரிணமிக்கிறானென்று வேதாந்திகள்

மதம். இம்மதத்தில் துக்கம் அஜ்ஞானம் முதலிய தோஷங்கள், சித்சித்துக்களுக்கே புள்ளது. சரீரத்திலுள்ள கறுப்பு வெளுப்புமுதலிய வர்ணங்கள் ஆத்மாவுக்குஸம்பவி யாததுபோலே இத்தோஷங்கள், இவற்றுக்கு ஆத்மாவான ஸகலகல்யாணகுணாகரனான பரமபுருஷனுக்கு ஸம்பவியாது. கங.

ஸூ. கஎ. யோநிஶ்ச ஹி கீயதே.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) ஹி - எந்தகாரணத்தினால், யோநிஶ்ச - உபாதாநகா ரணமாகவும், கீயதே - சொல்லப்படுகிறனே, (அக்காரணத்தினால் பரம புருஷன் உபாதாநகாரணமாகிறான்.) கஎ

(ஶ்ரு ப்ர-ஸா.) "யத்பூதயோநிம்" என்றும் "கர்த்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம்" என்றும் இவனை ஐகதுபாதாநமாகச் சொல்லுகையாலேயும் இவன் உபாதாந காரணமாகவு மாகிறான். யோநி யென்று உபாதாநகாரணம். கஎ.

அதி-ரு. ஸூ. கஅ. ஏதேந ஸர்வே வ்யாக்யாதா வ்யாக்யாதா꞉,

(ஶ்ரு-ப்ர.வ்யா.) ஏதேந-இந்த ந்யாயஸமுதாயத்தினாலே, ஸர்வே- ஸகலவேதாந்த வாக்யங்களும், வ்யாக்யாதா꞉ - வ்யாக்யாநம் செய்யப் பட்டன. கஅ.

(ஶ்ரு-ஸா.) இந்த ப்ரதாந காரணவாதம் கபிலர்முதலிய சிலபெரியோர்களினால் அங்கீகரிக்கப்பட்டும், அதற்குத்தக்கபடி வேதாந்தமாகிய உபநிஷத்துக்களில் இந்த மூலப்ரக்ருதியைக் காரணமாகச்சொல்வதுபோல் சிலஆபாஸ யுக்திகள் காண்கையா லும் அல்பபுத்திகளுக்கு அம்மதம் நம்பக்கூடியதாயிருக்குமென்று ஸூத்ரகாரர் மற்ற மதங்களை விட்டு இம்மதத்தையே பருவாகக்கண்டநம் செய்தார். இதைப்போலவே பரமாணுகாரணவாதம் முதலியவைகளும் வேதங்களிலெங்கும் சொலல்ப்படாமையால் அம்மதங்களும் நமபத்தக்கவைகளல்லவென்று இதில் மற்றஅவைதிகமதங்களை யெல் லாம் நிரஸநம் செய்கிறார். கஅ.

(ப்ர-ஸா.) "ஜந்மாத்யஸ்ய யத꞉" என்று தொடங்கி இதுவரையிற் சொ ன்ன ந்யாயகலாபங்களைக்கொண்டே இங்கு விசாரம்செய்யாத ஸகலவேதாந்த வாக் யங்களும் பரமபுருஷப்ரதிபாதகங்களென்று அர்த்தநிர்ணயம் செய்துகொள்ளவே ண்டியது. "வ்யாக்யாதா꞉" என்கிறபதத்தை இரண்டாவ்ருத்திசொன்னது, அத் யாயம் முடிந்ததென்று ஸூசிப்பிக்கைக்காக. கஅ.

முதல் அத்தியாயத்தில் நாலாவது பாதம் முடிந்தது.

ப்ரதமாத்யாயம் ஸம்பூர்ணம்.

௨ - வது அத்யாயம்.

௧ - வது பாதம்.

அதி - ௪௬. ஸூ - ௧௩௬. ஸ்ம்ருத்யநவகாசதோஷப்ரஸங்க இதி சேந்நாந்யஸ்ம்ருத்யநவகாசதோஷப்ரஸங்காத்.

(ப-ரா-வ்ய.) ஸ்ம்ருத்யநவகாசதோஷப்ரஸங்கா - (கபிலஸ்ம்ருதியை உபப்ரும்ஹணமாகக் கொள்ளாவிடில்) அந்தஸ்ம்ருதிக்கு (அதைக்கொண்டு அர்த்தநிர்ணயம் பண்ணுகையாகிற) அவகாசமின்மையாகிய தோஷம் ப்ரஸங்கிக்கும் (வரும்). இதிசேத் - என்றால், ந அந்யஸ்ம்ருத்யநவகாசதோஷப்ரஸங்காத் - வேறான (மற்றாதி) ஸ்ம்ருதிகளுக்கு அவகாசமின்மையாகிற தோஷம் ப்ரஸங்கிக்கையாலே, ந-கபிலஸ்ம்ருதியை உபப்ரும்ஹணமாகக்கொள்ளக்கூடாது. ௧௩௬.

(பா-ஹா.) முதல் அத்யாயத்தில் ஜகத்ஜந்மஸ்திதிலயகாரணமும் ஸர்வஜ்ஞமான பரப்ரஹ்மமென்று நிர்ணயித்து மூலப்ரக்ருதி முதலியவற்றுக்கு ஜகத்காரணத்வம் இல்லையென்று நிரஸநம் செய்யப்பட்டது இதில் மூலப்ரக்ருதி முதலியவற்றை ஜகத்காரணமென்று சொல்லுகிற ஸாங்க்யாதி மதங்களிலுள்ள தோஷங்களை வெளியிடாவிடில் மந்தமதிகளான ஜனங்கள் அம்மதத்தை நம்பி அதையநுஸரித்தே வேதங்களுக்கும் அபார்த்தங்களைச் சொல்லிக்கெட்டுப் போவார்களென்று அம்மதங்களில் தோஷத்தை தர்சிப்பிப்பாராக முயன்ற ஸ்ரீவேதவ்யாஸபகவான், முதலில் ஜைநபௌத்தாதி மதங்களைப்போல் கேவலம் வேதபாஹ்யமன்றியே வேதஸம்மதமான சிலஅர்த்தங்களைச்சொல்லுமதாய் சிஷ்டபரிக்ருஹீதமாய், இந்தஹேதுக்களினால் இம்மதம் வைதிகமென்கிற ப்ரமஜநகமாயிருக்கிற ஸாங்க்யபாதஞ்சலமதஸ்தர்களுக் குத்தரம் சொல்லுகிறார் ஸாங்க்யர்கள் வேதார்த்தம் மந்தமதிகளினால் நிர்ணயிக்கப்போகாது, ஸ்ம்ருதிகளைக்கொண்டே அவ்வர்த்தங்களை அறியவேணும், ஆகையால் வேதத்தில் ஸர்வஜ்ஞமானப்ரஹ்மம் ஜகத்காரணமென்று மேலெழுந்தோற்றிலும் அவ்வர்த்தம், ஸர்வஜ்ஞராய் ஶ்ருதிஸ்ம்ருதிகளில் அவதாரமாகச்சொல்லப்பட்ட ஆப்ததமரான கபிலமஹர்ஷிவேதார்த்தத்தை நிர்ணயிக்கைக்காகச்செய்த ஸாங்க்யமதத்தைக்கொண்டே நிர்ணயிக்கத்தக்கது. அம்மதத்தில் மூலப்ரக்ருதியே ஜகத்காரணமென்று கூறையிடுகிறது, ஆகையால் இதற்கநுகுணமாகவே வேதார்த்தத்தையறுதியிட்டு வேதத்திற்கும் ப்ரதாநகாரணவாதத்திலே தாத்பர்யமென்றங்கீகரிக்கவேண்டும், மற்றமந்வாதி ஸ்ம்ருதிகளில் ப்ரஹ்மமேகாரணமென்று சொல்லியிருக்கினும், அந்த ஸ்ம்ருதிகளில் வர்ணாஶ்ரமாசாரங்களையும் மற்றுமுள்ளதர்மங்களையும் சொல்லியிருக்கையால் அவ்வர்த்தங்களில் அவைகள் ப்ரமாணமாய் ப்ரயோஜநவத்தாகக்கடவன, இந்த கபிலஸ்ம்ருதி அப்படியன்றியே கேவலமோக்ஷத்தைப்பற்றியே சொல்லுகிறதாகையால் அவ்விஷயத்திலும் இதப்ரமாணமாகில் இதுண்டானதற்கு ப்ரயோஜநம் காணாமையால் வ்யர்த்தமாய்விடும், அதற்காக இவ்வர்த்தத்தில் மற்ற ஸ்ம்ருதிகளைவிட்டு இதையே அவலம்பிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்பூர்வபக்ஷத்தை, இரண்டு ஸ்ம்ருதிகளில் ஒன்றுக்கொன்று விரோதம்தோற்றினால் அவற்றில் எந்தஸ்ம்ருதிவேதத்துக்கிணங்கிருக்கிறதோ அதையே யங்கீகரிக்கவேண்டும், ஆகையால் வேதார்த்தத்

தோடு விரோதித்த கபிலஸ்ம்ருதியினர்த்தம் அங்கீகரிக்கத்தக்கதன்று. மேலும் இதொன்றுமே ப்ரதாநகாரணவாதம் சொல்லுகிறது; இதொன்றுக்காக, பரமாத்மகாரணவாதம் சொல்லுகிற மற்றுமுள்ள அநேகம்ஸ்ம்ருதிகள் இதிஹாஸங்கள் புராணங்கள் பகவத்கீதையாகிய இவ்வளவுக்கும் அப்ராமாண்யம் சொல்வதுசரியன்று. மேலும் வேதத்தில் ஆப்ததமராகச் சொல்லப்பட்டகபிலர், ஸகரபுத்ரர்களை நீறாக்கின வாஸுதேவாவதாரமானகபிலரொழிய அக்நயவதாரமாகிய இக்கபிலர் சொல்லப்படவில்லை, மேலும் இந்த ஸ்ம்ருதிப்ரமாணம், மற்றவை அப்ரமாணமென்றால், மற்றவை ப்ரமாணம் இதே அப்ரமாணமாக ஏன்கூடாது, ஆகையால் இவ்வர்த்தம் ப்ராமாணிகமாக நம்பத்தக்கதன்று என்று நிரஸித்தார். ௧௩௯.

(ரா-ஹா.) முதல்அத்யாயத்தில் ப்ரஹ்மமேஜகத்காரணமென்று சொல்லிற்று இந்தஅத்யாயத்தில் அதின்மேல்வரும் சங்கைகளைப்பரிஹரித்து அத்தையேத்ருடீகரிக்கிறது. கபிலஸ்ம்ருதியில் மூலப்ரக்ருதி ஜகத்காரணமென்று சொல்லிற்று. அந்த யுக்திகளினால் ப்ரஹ்மகாரணத்வவாதம்சலிக்குமா சலியாதாவென்று ஸம்சயம். வேதார்த்தம் மந்தமதிகளுக்கு தார்க்ரஹமாயிருக்கிறதென்று அதற்குவ்யாக்யானரூபமாய்கேவலதத்வபரமாய் கபிலஸ்ம்ருதிப்ரவர்த்தித்தது. அதைப்ரமாணமாகக்கொள்ளாவிடில் அது வ்யர்த்தமாய்விடும் ஆகையால் அதிற்சொல்லிய ப்ரதாநகாரணவாதமே வேதஸம்மதமென்று அங்கீகரிக்கவேண்டுமென்று பூர்வபக்ஷம். வேதார்த்த நிஸ்சயத்திற்கு உபப்ரும்ஹணம் வேண்டியிருந்தாலும், வேதார்த்தத்திற்கு விருத்தமல்லாத மந்வாதிஸ்ம்ருதிகளையே உபப்ரும்ஹணமாகக் கொள்ளவேண்டும். ஒரு கபிலஸ்ம்ருதிக்காக மந்வாதிஸ்ம்ருதிகளை உபப்ரும்ஹணங்களாகஸ்வீகரியாவிடில், அந்த அநேக ஸ்ம்ருதிகளுக்கு வையர்த்யம் ஸம்பவிக்கும். அவைகள் தத்வத்தையும் தர்மத்தையும் ப்ரதிபாதிக்கையாலே தத்வாம்சத்தில் அப்ரமாணமானாலும் தர்மப்ரதிபாதநாம்சத்தில் ப்ரமாணமாகையால் அவைகளுக்கு வையர்த்யமில்லையென்னக்கூடாது. தர்மமாவது பரப்ரஹ்மாராதநரூபம். பரப்ரஹ்மம் ஸித்தியாவிடில் அதின் ஆராதநரூபமானதர்மமும் ப்ரமாணமாகமாட்டாது. ஆகையால் அவற்றுக்கு வையர்த்யம் ஸித்தம், அது வாரணைக்காக அவைகளை ப்ரமாணமாகக்கொண்டு ப்ரஹ்மகாரணவாதமே வேதஸம்மதமென்று அங்கீகரிக்கவேண்டும் என்று ஸித்தாந்தம். ௧௩௯.

ஸூ - ௧௪௰. இதரேஷாஞ்சாநுபலப்தே:

(ஶ-வ்யா.) இதரேஷாம் - மஹத்துமுதலியவற்றுக்கு, அநுபலப்தே: - காரணத்வம் (ஜகத்தில் ப்ரஸித்தமாகக்) காணாமையாலே, (இது வைதிகமன்று.) ௧௪௰.

(ரா-வ்யா.) இதரேஷாம்-மற்றமந்வாதிகளுக்கு, அநுபலப்தேஶ்ச-(ப்ரதாநகாரணத்வத்துக்கு) உபலப்தியில்லாமையாலும், (அது வேதஸம்மதமன்று). ௧௪௰.

(ஶ - ஹா.) இம்மதத்தில் மஹத் அஹங்காரம் பஞ்சதந்மாத்ரைகள் சொல்லியிருக்கின்றன, இவை லோகத்திலும் ப்ரஸித்தமாகக்காணவில்லை, வேதத்திலுமில்லையாகையால் இம்மதம் அங்கீகரிக்கத்தக்கதன்று. ௧௪௰.

(ரா-ஹா.) அப்ரத்யக்ஷங்களான ஸகலவஸ்துக்களையும் ஸாக்ஷாத்கரிக்க வல்ல யோகமஹிமையுடைய கபிலமஹாமுனிக்கு ப்ரஹ்மகாரணத்வம் கோசரமாகாமையால் ப்ரஹ்மகாரணத்வபக்ஷம் ப்ராமாணிகமன்றென்னில், வேதார்த்த வித்துக்களில் தலைவர்களாய், ப்ராமாணிகர்களாக ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளில் ப்ரதிபாதிக்கப்ப

ட்டவர்களாய், ஸகலாதீந்த்ரியார்த்தவேத்தாக்களான மந்வாதிகளுக்கு ப்ரதாநகாரண த்வம் தோற்றாமையாலே ப்ரதாநகாரணத்வபக்ஷம் ப்ராமாணிகமன்று. வேதாந்தவிரு த்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற கபிலஸ்ம்ருதி, கபிலருடைய ப்ராந்தியினால் கற்பிக்கப்பட்டதென்று நிஸ்சயிக்கப்படும். கக0.

அதி - கூஎ. ஸூ - ககக. ஏதேந யோக: ப்ரத்யுக்த:.

(ஸ - ரா - வ்யா.) ஏதேந - வேதாந்தார்த்த விரோதத்தினாலே, யோக: - யோகஸ்ம்ருதியும், ப்ரத்யுக்த:- நிரஸநம்செய்யப்பட்டது. ககக.

(ஸ - ஹா.) ஸாங்க்யமதம் வேதத்திலில்லாதவற்றைச் சொல்லுகையால் அப்ரா மாணிகமாயினும், பாதஞ்சலமதத்தில் வேதத்தில் சொல்லிய பரமாத்மஸாக்ஷாத்கார ஹேதுவான யோகமும் ஆஸநக்ரமங்களும் சொல்லியிருக்கையால் வேதஸம்மதமான இந்தமதம் ப்ராமாணிகமாகலாம், ஆகில் இதிலும் ப்ரதாநகாரணவாதமே சொல்லு கையால் இந்தவாதம் அங்கீகரிக்கத்தக்கதென்று சொன்னவர்களுக்கு, யோகசாஸ்த் திரத்தில் எந்தஅம்சம் வேதத்தோடொத்திருக்கிறதோ, அதேப்ரமாணம், அதற்கு விருத்தமானஅம்சம் அப்ரமாணமேயாகையால் இந்தப்ரதாநகாரணவாதம் சரி யன்று. ககக.

(ரா ஹா.) யோகஸ்ம்ருதி வேதார்த்தத்துக்கு உபப்ரும்ஹணம் ஆகுமா, ஆகமாட் டாதா என்று ஸம்சயம். யோகஸ்ம்ருதியை ஸகல வேதப்ரவர்த்தகனான ப்ரஹ்மா ப்ர வர்த்திப்பிக்கையாலும், அந்த ஸ்ம்ருதியில் ஈஸ்வரனை ஒப்புகொள்ளுகையாலும் அதைக்கொண்டு ப்ரதாநகாரணவாதத்தில் வேதாந்தார்த்தத்தை நிஸ்சயிகலாமென்று பூர்வபக்ஷம். கபிலஸ்ம்ருதியைப்போல் இதுவும் வேதாந்தார்த்த விருத்தமாகையாலே இதையும் ப்ராமாணிகமாகக்கொள்ளக்கூடாது. ப்ரஹ்மாவேதப்ரவர்த்தகனாயினும் அவனும் ஸம்ஸார ஸம்பந்தமுள்ளவனாகையாலே ப்ரமாதம் ப்ராந்தியுண்டு, அவனு டைய ப்ராந்தியினால் கற்பிக்கபட்டதென்று அங்கீகரிக்கவேணும் என்று ஸித்தாந்தம்.

அதி - கூஅ. ஸூ. ககஉ. நவிலக்ஷணத்வாதஸ்ய ததாத்வஞ்ச ஸப்தாத்.

(ஸ-ரா-வ்யா.) அஸ்ய - இந்த ஜகத்துக்கு, விலக்ஷணத்வாத் - (ப்ர ஹ்மத்தைக்காட்டிலும) வைலக்ஷண்யமுண்டாகையாலே, ந - ப்ரஹ்மகா ரணத்வ ப்ரதிபாதநம் கூடாது. ததாத்வஞ்ச - அந்த வைலக்ஷண்யமும், ஸப்தாத் - சப்தத்தினால் (வேதவாக்யத்தினால்) (அறியப்படுகிறது.) ககஉ.

(ஸ-ரா-ஹா.) வேதாந்தவாக்யம் ப்ரதாநத்தைக்காரணமாகச்சொல்லுகிறதா, ப்ர ஹ்மத்தைக் காரணமாகச்சொல்லுகிறதா என்று ஸம்ஸயம். ஜ்ஞாநசூந்யமாய் ஜட மானகலசாதிகளும் ம்ருத்தும் ப்ரக்ருதிவிகாரங்கள்போல காரணகாரியங்கள் ஏகத் ரவ்யமாய் ஏகரூபமாயிருக்கவேண்டும். ஜகத்தைக்காட்டிலும் ஸர்வஜ்ஞனாய் சேதந னான ஸர்வேஸ்வரன் விலக்ஷணனாய் பிந்நத்ரவ்யமாகையாலே ஸர்வேஸ்வரன் கார ணனாகமாட்டான்; ஜகத்தும் ப்ரக்ருதியும் ஜடமாய் ஏகரூபமாயிருக்கையாலே அந்தப் ரக்ருதியே ஜகத்காரணமாகவேண்டும். ஜகத்து ஈஸ்வரனைக்காட்டிலும் விலக்ஷணமெ ன்பதை ,,விஜ்ஞாநஞ்சாவிஜ்ஞாநஞ்ச'' என்கிற ஸ்ருதியேசொல்லுகிறது. ,,அவிஜ்ஞ நம்'' என்றால் ஜ்ஞாநசூந்யமான ஜகத்து. ஆகையால் வேதாந்தம் ப்ரதாநத்தைய காரணமாகச்சொல்லுகிறது. என்று பூர்வபக்ஷம். ககஉ.

ஸூ - கசுரு. அபிமாநிவ்யபதேசஸ்து விசேஷாநுகதிப்யாம்.

(ஶ்ரீ - பா - வ்ய.) விசேஷாநுகதிப்யாம் - (தேவதையென்கிற) விசேஷணத்தினாலும் (சக்ஷுராதிகளில்) ப்ரவேசிப்பதினாலும், அபிமாநி வ்யபதேச: - (ப்ருதிவ்யாதிபதங்கள்) ப்ருதிவ்யாதிகளுக் கபிமாநிகளான தேவதைகளுக்கு வ்யபதேசமா யிருக்கிறது. கசுரு.

(ஶ்ரீ-பா-ஸா) "ஆபோவா ஏகாகாமயந்த - ஜலம் இச்சித்தது" "தேவா வ்யப்ரவீத் - அதைக்குறித்து ப்ருதிவி சொல்லிற்று" இத்யாதியாக ப்ருதிவ்யாதிகளுக்கும் ஜ்ஞாநமுண்டென் பதாகச் சொல்லுகைபாலே அவைகளும் சேதநங்களாய், சேதநனை ஈஶ்வரனுக்கு ஸஜாதீயமாய் இருக்கையாலே அவைகளுக்கு ப்ரஹ்மம் காரணமாகலாமே யென்னில், ப்ருதிவீ சொல்லிற்றென்னும்போது ப்ருதிவியென்றால் ஜடமான இந்த ப்ருதிவியைச் சொல்லுகிறதன்று. அதற்கபிமாநியான தேவதையைச்சொல்லுகிறது. அப்படியே ஜலாதிபதங்களிலும் கண்டுகொள்வது. அந்த தேவதைகள் ஜ்ஞாநவத்துக்களானாலும் காண்கிற ப்ருதிவ்யாதிகள் ஜடங்களாகையாலே இவற்றைக்குறித்து விஜாதீயனான ஈஶ்வரன் காரணமாகமாட்டான். ப்ருதிவ்யாதிபதங்களுக்கு அவற்றுக்கபிமானி தேவதைகளர்த்தமென்று சொல்லுகைக்கு ஹேது வென்னென்னில், "ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா: இந்தமூன்றுதேவதைகள்" என்று தேவதாசப்தத்தினால் ப்ருதிவீ ஜல தேஜஸ்ஸுக்களைச் சொல்லுகையாலும், "அக்நிர் வாக்பூத்வா முகம் ப்ராவிசத் - அக்நி வாக்தேவதையாய்க்கொண்டு முகத்தில் ப்ரவேசித்தது இத்யாதியாக அக்ந்யாதிகளுக்கு ப்ரவேசம் சொல்லுகையாலும், இவ்விரண்டும் அசேதநமான இந்தப்ருதிவ்யாதிகளுக்குச் சேராமையால் அப்பதங்களுக்கு அபிமானிதேவதைகளே அர்த்தமென்று நிஶ்சயிக்கப்படுகிறது. ஆகையால் ப்ரதாநகாரணவாதமே வேதாந்தஸம்மதம் என்று பூர்வபக்ஷம். கசுரு.

ஸூ - கசுச. த்ருஶ்யதே து.

(ஶ்ரீ - பா - வ்ய.) த்ருஶ்யதே து - (விலக்ஷணவஸ்துவில் நின்றும் அதைக்காட்டிலும் விலக்ஷணவஸ்துவுக்கு உத்பத்தி) காணப்படுகிறதன்றோ.

(ஶ்ரீ-பா-ஸா.) இந்தபூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார். விலக்ஷண வஸ்துக்களுக்குக் கார்யகாரணபாவமில்லையென்கிற நியமமில்லை. தேனடையில் நின்றும் அனேகம் புழுக்களும் கோமயத்தில் நின்றும் தேளும் உண்டாகக்காண்கிறது. அதுபோலவே சேதநனாய் விலக்ஷணனான ஈஶ்வரனிடத்தில் நின்றும் அசேதனமான ஜகத்து உண்டாகலாம் ஆகையால் ப்ரஹ்மகாரணவாதம் உபபந்நமாகிறது. வேதாந்தமும் இப்பக்ஷத்தையே ப்ரதிபாதிக்கிறது என்று ஸித்தாந்தம். கசுச.

ஸூ - கசுரு. அஸதிதி சேந்ந ப்ரதிஷேதமாத்ரத்வாத்.

(ஶ்ரீ-பா வ்ய.) அஸத் - (இப்பக்ஷத்தில் கார்யோத்பத்திக்குப் பூர்வம்) காரணம் அஸத்தாய் (இல்லாததாய்) இருக்கும், இதி சேத் - என்றால், ப்ரதிஷேதமாத்ரத்வாத் - (கார்ய காரணங்கள் ஏகரூபங்களாயே யாகவேண்டும என்கிற நியதத்துக்கு) ப்ரதிஷேதமாத்ரம் சொல்லுகையாலே, ந - அஸத்கார்யவாதமில்லை. கசுரு.

(ஶ்ரீ - ஸா.) கார்யம் காரணத்தைக்காட்டிலும் விலக்ஷணமாகில் கார்யம் உண்டாவதற்கு முன்காரணரூபமாயிருந்ததென்று சொல்லப்போகாது, ஆகையால் அஸத்

கார்யவாதம் ஒப்புக்கொண்டதாகும் என்னில், கார்யம் மித்யாரூபமாகையால் உத்பத்திக்கு முன்பு எப்படி அஸத்தோ, இப்போதும் அப்படியே அஸத்தாயேயிருக்கிறது என்பது ஸித்தாந்தம். கார்யமொன்று உண்மையாயுண்டென்று ஒப்புக்கொண்டால் அவனுக்கே இவ்வாபத்தி ஸம்பவிக்குமொழிய எங்களுக்கு ஸம்பவியாதென்று கருத்து. ௧௪௭.

(ஶ்ரா-ஹா.) கார்யமான கடமும் காரணமான ம்ருத்தும் ப்ருதிவியே; கடம் உண்டாவதற்கு முன்பு ம்ருத்பிண்டத்தில் லீனமாயிருக்கிறது, பிற்பாடு உண்டாகிறது. உண்டாகையாவது-நாமரூபங்களையடைகை. முன் இல்லாதது இப்போது உண்டாகிறதென்றர்த்தமன்று. இல்லாதவஸ்து உண்டானால் குதிரைக்கொம்பும் உண்டாகவேண்டிவரும். பிண்டமாயிருந்தால் ம்ருத்து என்றும், அந்த அவஸ்தையைவிட்டு வேறுவிதமாய் வாயும் வயிறுமான ஆகாரத்தையடைந்தால் கடமென்றும் வ்யவஹரிக்கப்படுகிறது. இதற்கு ஸத்கார்யவாதமென்று பெயர். இதுவே வேதாந்திகளுக்கு அபிமதமானது. இப்போது கார்யமான ஜகத்துக்கு விலக்ஷணமான ப்ரஹ்மம் காரணமானால், இவ்விரண்டும் ஏகத்ரவ்யமல்லாமையால் ஜகத்து உண்டாவதற்கு முன்பு ப்ரஹ்மத்தில் லீநமாயிருக்கிறதென்று அங்கீகரிக்கக்கூடாது. ஒருஜாதிவஸ்துவில் மற்றொருஜாதிவஸ்து லீநமாகவும்மாட்டாது. ஆகையால் ஜகத்து உண்டாவதற்குமுன் இல்லையென்று கொள்ளவேண்டும். அஸத்கார்யவாதம் ஸித்திக்கும். இந்தகடம் ம்ருத்து என்றுசொல்வதுபோல் இந்த ஸகலஜகத்தும் ப்ரஹ்மம் என்று சொல்லுகிற "ஸர்வம் க²ல்விதம் ப்³ரஹ்ம" என்கிற ஶ்ருதியும் அபார்த்தகமாகுமேயென்னில்; நாங்கள் கார்யகாரணங்கள் ஏகரூபமாயேயிருக்கவேணுமென்கிற நியமமில்லையென்றே சொன்னோம்; கார்யகாரணங்கள் ஏகத்ரவ்யமென்பது எங்களுக்கு இஷ்டமே. ஒருத்ரவ்யமே காரணாவஸ்தையைவிட்டுக் கார்யாவஸ்தையையடையும்போது காரணதசையோடு ஸமானலக்ஷணத்தையுமடையலாம், அதைக்காட்டிலும் விலக்ஷணமாயுமாகலாமென்றே நாங்கள் சொன்னது. ஆகையால் நீங்கள்சொன்ன தோஷங்களுக்கு அவகாசமில்லை என்று ஸித்தாந்தம். ௧௪௮.

ஸூ - ௪௯. அபீதௌ தத்வத்ப்ரஸங்காத³ஸமஞ்ஜஸம்.

(ஶ-ரா-வ்ய.) அபீதௌ - (ஜகத்து ப்ரஹ்மத்தினிடத்தில்) லயிக்கும்போதும் (அங்கிருந்து உத்பந்நமாகும்போதும்), தத்வத் - ம்ருத்த்ரவ்யம்போலே, ப்ரஸங்காத் - (கார்யகுணங்கள் காரணத்தில்) ப்ரஸங்கிக்கையாலே, அஸமஞ்ஜஸம் - (வேதாந்தவாக்யம்) சரியான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிறதாகமாட்டாது. ௧௪௯.

(ஶ-ஹா.) இவ்விகாராத்மகமான ஜகத்து ப்ரளயத்தில் ப்ரஹ்மத்தில்லயிக்கிறதென்றால், கார்யரூபமான இஜ்ஜகத்திலுள்ள புண்யபாபஸுகதுக்கஜ்ஞானசூன்யத்வஸாவயவத்வபரிணாமித்வாதி ஸகலதோஷங்களும் ப்ரஹ்மத்திற்குண்டாகும்: மேலும்ப்ரஹ்மத்தோடு ஒன்றாய்லயித்ததையடைந்தபிறகு மறுஸ்ருஷ்டியில் ஒருவன் மேன்மையையுடையனாகவும் ஒருவன் கீழ்மையையுடையனாகவும் பிறக்கைக்குக்காரணம்சானது. மேலும் ப்ரஹ்மத்தோடு சேர்ந்துவிட்டஜகத்துக்கு மறுபடிஸ்ருஷ்டி ஒப்புக்கொண்டால் முக்தியையடைந்தவனும் மறித்து ஸம்ஸாரியாகவேண்டிவரும். ஆகில் ப்ரளயத்தில் ஜகத்து ப்ரஹ்மத்திலலயிக்கிறதில்லை, வேறுபட்டேயிருக்கிறது என்றால், அப்போது ஜகத்துக்கு ப்ரஹ்மம் காரணமென்றே ஏற்படவில்லை இத்யாதி தோஷங்கள் ப்ரஹ்மகாரணவாதத்திலுண்டு. என்று பூர்வபக்ஷம். ௧௫௦.

(ரா·ஹா.) காரணமான ப்ரஹ்மமே கார்யமான ஜகத்தாய்ப் பரிணமிக்கிறதென்னில், ம்ருத்துக்குக் காரணாவஸ்தையிலுள்ள பிண்டாகாரமும், கார்யாவஸ்தையிலுள்ள கடாகாரமும் ஸம்பவிப்பதுபோல், தோஷகந்தரஹிதமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான ப்ரஹ்மத்துக்கு ஜகத்திலுள்ள உத்பத்திவிநாசங்களும் துக்க ஜ்ஞாநங்களும் சேருமென்று ஒப்புக்கொள்ளவேணும். ப்ரஹ்மம் ஜடம் அஜடம் ஸாக்ஷி த்ருஷ்டம் நிர்த்ருஷ்டம் என்கிற விருத்தார்த்தங்களைச் சொல்லுகையாலே வேதாந்தவாக்யம் அப்ரமாணமென்று கொள்ளவேண்டிவரும் என்று பூர்வபக்ஷம். கசசு.

ஸூ கசஎ. ந து த்ருஷ்டாந்தபாவாத்.

(ஸு-ரா-வ்ரு.) த்ருஷ்டாந்தபாவாத் - (பரிணாமத்தில் குணதோஷங்கள் வ்யவஸ்திதங்களென்பதில்) த்ருஷ்டாந்த முண்டாகையாலே, ந - (ப்ரஹ்மத்திற்கு ஜகத்திலுள்ள தோஷங்கள்) ஸம்பவியாது. கசஎ.

(ஸு-ஹா.) இந்தஸூத்திரத்தில், கீழ்ச்சொன்னதோஷங்களொன்றும் ப்ரஹ்மத்திற்குத் தட்டாதென்கிறது, அதாவது-ஸுவர்ணம் கடகமகுடகுண்டல ரூபமாகக் கார்யாவஸ்தையையடைந்து மரித்து ஸுவர்ணபிண்டமாய் காரணாவஸ்தையை யடையும்போது அக்காரணத்தில் முன்கார்யாவஸ்தையிலுள்ள கடகமகுடாத்யாகாரங்கள் காணகிறதில்லை; அதுபோல காரணமாகிய ப்ரஹ்மத்திலும் கார்யமான ஜகத்திலுள்ள தோஷங்கள் ஸம்பந்திக்கமாட்டா. ப்ரளயத்தில் ஜகத்து ப்ரஹ்மத்தில்லயித்தபோதிலும் ப்ரஹ்மத்தினுடைய அந்தர்ந்த அம்சத்துக்கு அவித்யையின் ஸம்பந்தத்தினாலுண்டான ஜீவபாவமும் அதினாலுண்டான புண்யபாப ரூபகர்மங்களும் உண்டு, அவை நசிக்கிறதில்லை, மறுஸ்ருஷ்டியில் அந்தபுண்யபாபங்களின் வைஷம்யங்களைப்பற்ற ஒருவருக்கொருவர் தேவன் மனுஷ்யன் தனிகன் தரித்திரன் புத்திமான் மூடன் முதலிய உயர்வு தாழ்வுகளையுடைய ஜன்மங்களையடைகிறார்கள். முக்தியையடைந்தவனுக்கு தத்வஜ்ஞானத்தினால் அவித்யை நசித்துவிட்டபடியால் அவனுக்கு மறுபடி ஜன்மங்கிடையாது. இப்படி நீங்கள் சொல்லுகிற எவ்விதமாகிய தோஷமுமில்லையாகையால் இந்த ப்ரஹ்மகாரணவாதமே ஸரியென்று ஸித்தாந்தம். கசஎ.

(ரா-ஹா.) இந்தஸூத்திரத்தில் ஸமாதாநம் சொல்லுகிறார். ஒருமனுஷ்யன் பாலனாயிருந்து யுவாவாய்ப்பின்பு வ்ருத்தனாய்ப் பரிணமியாநின்றாலும், பால்ய யௌவனவார்த்தகங்களென்கிற அவஸ்தைகள் அவனுடைய சரீரத்திலேயேயிருக்கும், ஆத்மாவுக்கு ஸம்பவியாது அதுபோல் சிதசித்துக்களை சரீரமாகவுடைய ஈச்வரன் ஜகத்ரூபமாகப்பரிணமித்தால் அந்தஜகத்திலுள்ள உத்பத்தி விநாசாதிதோஷங்கள் சரீரபூதங்களான சிதசித்துக்களிலேயேயிருக்கும்; அவற்றுக்கு அந்தராத்மாவான ஸர்வேச்வரனிடத்தில் ஸம்பவியாது அவனுடைய ஸ்வரூபம் நித்யாநந்தரூபமாயேயிருக்கும், ஆகையால் அந்த ஈச்வர ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிற வேதத்திற்கு அப்ராமாண்யமும்வராது. கசஎ.

ஸூ - கசஅ. ஸ்வபக்ஷதோஷாச்ச.

(ஸு-ரா-வ்ரு.) ஸ்வபக்ஷதோஷாச்ச - தங்கள்பக்ஷத்தில் தோஷமிருக்கிறபடியாலும் (அப்பக்ஷத்தைவிட்டு இந்தவேதாந்திமதத்தையே பரிக்ரஹிக்கவேணும்.) கசஅ.

(ஸா-ஹா.) இத்தோஷங்கள் ஸாங்க்யருக்குமுண்டு. அதாவது காரணம் மூலப்ரக்ருதியென்றும், கார்யம் இஜ்ஜகத்தென்றும், கார்யகாரணங்களுக்கு பேதமில்லையென்றும் அவர்கள் அங்கீகரித்தார்கள், அதில் காரணமாகிய மூலப்ரக்ருதியில் சப்த

ஸ்பர்சரூபரஸம் முதலிய குணங்கள் கிடையாது, கார்யமாகிய இஜ்ஜகத்திலுண்டு. இஜ்ஜகத்து ப்ரளயத்தில் மூலப்ரக்ருதியில் லயிக்கும்போது இதின் குணங்கள் காரணத்தில் ஸம்பந்திக்கமாட்டாது. இப்படி கார்யகாரணங்களுக்கு பேதமுண்டாகையால் அவ்விரண்டும் ஒருவஸ்துவாகமாட்டா. மேலும் ப்ருதிவ்யாதிகள் மூலப்ரக்ருதியில்லயித்தபின் மறுஸ்ருஷ்டியில் இந்தத்ரவ்யம் இந்தபுருஷனுடைய போகத்துக்கென்றும் மற்றொன்று மற்றொருவனுக்கென்றும்சொல்லுகைக்குஹேதுகாணவில்லை; இவ்விதமானநியமமில்லையென்னில், சிலத்ரவ்யங்கள் முக்தபுருஷனுக்கு ஏன்போகத்தைஉண்டுபண்ணமாட்டாது. இத்யாதிதோஷங்கள் கண்டுகொள்க. ௧௪௮.

(பா-ஹா.) வேதாந்திமதத்தை யவலம்பிக்கைக்குக் காரணம் இப்பக்ஷத்தில் தோஷமிலலாமையேயன்று; கபிலபக்ஷத்தில் தோஷங்களுமுண்டு, அவையாவன-ஆத்மா நிர்மலஸ்வரூபன்; அவனுக்குப்ரக்ருதிஸாந்நித்யமும் அதினால் ஆத்மாவில் ப்ரக்ருதி தர்மாத்யாஸமு முண்டானால் இந்தஜகத்து உண்டாகிறதென்று அவர்கள் பக்ஷம். அதின் ப்ரக்ருதி ஸாந்நித்யமாவது—ப்ரக்ருதியினுடைய ஸத்பாவம், அதாவது-இருக்கையேயானால் இவ்விதமான ஸாந்நித்யம் முக்தனுக்கு முண்டாகையால் அவனுக்கும் ஸம்ஸாரப்ரஸங்க முண்டாகும். விகாரத்தை யடைந்த ப்ரக்ருதியின் ஸத்பாவந்தான் ப்ரக்ருதிஸாந்நித்யமென்றால், அத்யாஸத்திற்கு, அதாவது-ப்ரக்ருதியிலுள்ள கர்த்ருத்வ போக்த்ருத்வகுணங்கள் ஆத்மாவில் ப்ரதிபலிக்கைக்கு ப்ரக்ருதியின் விகாரம் காரணமென்றாயிற்று. விகாரத்தைக்குமிந்த அத்யாஸம் காரணமென்று முன்சொல்லிற்று. இப்படி பரஸ்பரவிருத்தங்களாயிருக்கிறபடியால் அம்மதம் தோஷயுக்தமாய் அஸங்கதமாயிருக்கும், ஆகையால் அதைவிட்டு இம்மதத்தையே யாஶ்ரயிக்கவேண்டும். ௧௪௮.

ஸூ - ௧௪௯. 𑌤𑌰𑍍𑌕𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌪𑌿.

(பா - வ்ய.) 𑌤𑌰𑍍𑌕𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍 𑌅𑌪𑌿 - யுக்திக்கு ஓரிடத்தில் நிலையில்லாமையாலும். (அப்பக்ஷம் அநாதரணீயம்.) ௧௪௯.

(பா - ஹா.) நாஸ்திகர்களுடைய யுக்திகளினால் காபிலர்கள் யுக்தி பாதிதமாகையாலும், யுக்திக்கு ஓரிடத்தில் நிலையில்லாமையாலும், யுக்தியையே முக்யமாகக் கொண்ட காபிலமதம் ஸமீசீநமன்று. ௧௪௯.

ஸூ-௧௫௦. 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌮𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌦𑍇𑌵𑌮𑌪𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃.

(ஸூ-பா-வ்ய.) 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 - வேறுவிதமாக, 𑌅𑌨𑍁𑌮𑍇𑌯𑌂 - ஊஹிக்கத்தக்கது, 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 - என்றால், 𑌏𑌵𑌮𑌪𑌿 - இப்படி ஊஹித்தாலும், 𑌅𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃. (யுக்திக்கு) முடிவில்லாமைப்ரஸங்கிக்கும். ௧௫௦.

(ஸூ-ஹா.) இந்த பாஷ்யத்திற்கு "𑌤𑌰𑍍𑌕𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌮𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌦𑍇𑌵𑌮𑌪𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃" என்று இதுவரையில் ஒரு ஸூத்ரம். இதற்கர்த்தம்- வேதாந்தத்தைவிட்டுத் தங்கள்யுக்தியினாலொன்றைச்சொல்லில் இவனைக்காட்டிலும் புத்திமானொருவன் பிறந்து இதை தூஷிக்கலாம், அதையும் மற்றொருபுத்திமான் தூஷிக்கலாம், இப்படிஸித்தாந்தம் ஓரிடத்தில் நில்லாமலே போய்விடும், கபிலர்போன்ற மஹாபுத்திமான்கள் சொல்லுக்கு ஒருதூஷணம் வாராதாகையால் அதையங்கீகரிக்கலாமென்னில்; அதுவும் அவரைப்போன்ற மஹாபுத்திமான்களான கணாதாதிகளினால், தூஷிக்கப்பட்டது. யுக்தியைக்கொண்டு ஒன்றைநிர்ணயிக்கக்கூடாதென்று சொல்லக்கூடாது. லோகத்தில் சிலர் ஒருகார்யத்தைச்செய்து

அதினல் அவர்கள் அடைகிற ஸுகதுக்கங்களைக்கண்டு பின்புள்ளார் இக்கார்யம் நன்று இக்கார்யம்தீதென்று தங்கள்யுக்தியைக்கொண்டு நிர்ணயித்துத்தாங்களுமக்கா ரியங்களைச்செய்து ஸுகதுக்கங்களையடைகிறார்கள். ஆகையால் யுக்தியென்பது மோர் ப்ரமாணமுண்டு. மூலப்ரக்ருதி ஜகத்காரணமென்பதற்குச் சொன்னயுக்திகள் தோஷமுடையவைகளாயினும் தோஷமற்ற மற்றயுக்திகளைக்கொண்டு அங்கதஸ்த்தா பிக்கிறோமென்னில்; லோகத்தில் யுக்தியினுல் சிலவஸ்துக்களை நிர்ணயிக்கும்போது அவ்வஸ்துக்களைச் சிலவிடங்களில்கண்டு அதின் ஹேதுக்களையும்கண்டு பிறகு காலாந் தரத்தில் முன்கண்ட ஹேதுக்களோடு துல்யமான ஹேதுவை ஓரிடத்தில்கண்டு, இத ஞல் முன்கண்டவஸ்துவோடு துல்யமானது இங்கிருக்கலாமென்று ஊஹிக்கிறுர்கள் ப்ரஹ்மவிஷயத்தில் அப்படிப்பட்ட ப்ரத்யக்ஷம் எப்போதும் கிடையாதாகையால் இதை யுக்தியைக்கொண்டு நிர்ணயிக்கமுடியாது. ப்ரத்யக்ஷமூலமல்லாதயுக்திகள் மேல்மேல் தூஷிதங்களாயேயிருக்கும் ஆகையால் யுக்தியைவிட்டு வேதாந்தங்களில் சொன்னவர்த்தத்தையே அங்கீகரிப்பது நலம். கசக கடுo.

(ரா-ஹா.) இப்போதுள்ள யுக்திகள் நாஸ்திகர்களின் யுக்திகளினுல் பாதிக்க ப்பட்டிருந்தபோதிலும், இனி அவர்களின் யுக்திகளினுல் பாதிக்கப்படாமல் வேறுவித மான யுக்திகளைக்கொண்டு இம்மதத்தை ஸ்தாபிக்கிறோமென்னில், இப்போதுள்ள யுக்திகளுக்கு மேலாக நீ யுக்திசொன்னபோதிலும், இனியொருவன் உன்னைக்காட் டிலும் புத்திமானுய்ப்பிறந்து உனக்குமேல் யுக்திசொன்னுல் அப்போது உன்யுக்தி நில்லாது. இப்படி மேன்மேல் யுக்திசொல்லிக்கொண்டுபோனுல் அதற்கொருநாளும் முடிவுகப்படாது. ஆகையால் அம்மதத்தை விடவேண்டியது. கடுo.

அதி - கக. ஸூ - கடுக. ஏதேந ஶிஷ்டாபரிக்ரஹா அபி வ்யாக்யாதா:.

(ஶ - ரா - வ்ய.) ஏதேந - யுக்திக்கோரிடத்தில் நிலையில்லாமை யாலே, ஶிஷ்டாபரிக்ரஹா: அபி - மற்றுமுள்ளனவாய் (ஶிஷ்டர்களால்) அங்கீகரிக்கப்படாதவையுமான மதங்களும், வ்யாக்யாதா: - (நிரஸ்தங்க ளென்று) வ்யாக்யானம் செய்யப்பட்டதுகள். கடுக.

(ஶ-ஹா.) வ்யாஸபராசரர் முதலிய பெரியோர்கள் அங்கீகரியாத பரமாணு காரணவாதாதிமதங்களும் யுக்திமூலங்களாகையால், அந்தயுக்திகளும் கீழ்ச்சொன்ன படியே நிலைநிற்கத் தக்கவைகளல்லாமையால் அம்மதங்களும் இதனுலேயே நிராக ரிக்கப்பட்டன. கடுக,

(ரா-ஹா.) மற்றுமுள்ள வைசேஷிகமதம்முதலானவையும்யுக்திமாத்ரத்தையே ப்ரதானமாகக்கொள்ளுகையாலே கீழ்ச்சொன்ன ஹேதுவினுலேயே நிரஸநஞ்செய் யப்பட்டதுகளென்றறியவும். கடுக,

அதி - சo. ஸூ - கடுஉ. போக்த்ராபத்தேரவிபாகஶ்சேத் ஸ்யால்லோகவத்.

(ஶ-ரா-வ்ய.) போக்த்ராபத்தே: - (ஈஶ்வரனுக்கும்) ஸுகதுக்கானு பவம் ப்ரஸங்கிக்குமாகையால், அவிபாக: - ஜீவேஶ்வரபேதம் ஸம்பவி யாது; சேத் - என்றால், லோகவத் - லோகத்திற்போலவே, ஸ்யாத் - ஜீவேஶ்வரபேதம் ஸம்பவிக்கும். கடுஉ.

(ஸ-ஹா.) பரப்ரஹ்மம் சக்ஷுராதி இந்திரியங்களுக்கு விஷயமல்லாமையால் அதையுக்தியைக்கொண்டு நிர்ணயிக்கமுடியாதென்பது ஒப்புக்கொள்ளத்தக்கதே; ஆயினும், ப்ரஹ்மமும்ஜகத்தும் ஒன்றேயென்பது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. ஏனெனில், ஜகத்தில், போக்தாவென்றும் போக்யமென்றும் இருவகைவஸ்துக்களுண்டு, அதாவது புஷ்பம் பழம் முதலியவைகளையநுபவித்து ஸுகம்பெறுகிறவன். போக்தா, அவனுடைய ஸுகத்துக்குக் காரணங்களாகிய புஷ்பபலாதிகள் போக்யம். இவையிரண்டும் ப்ரஹ்மமேயாகில், ஜீவன் போக்தாவாகவும் புஷ்பாதிகள் போக்யமாகவும் ஆவதுபோல் புஷ்பாதிகள் போக்தாவாகவும் ஜீவன் போக்யமாகவும் ஏனாகக் கூடாது. ஆகையால் இவ்விரண்டும ப்ரஹ்மஸ்வரூபமென்று ஒப்புக்கொள்ளக்கூடாதென்று பூர்வபக்ஷம். ஸமுத்திரத்திலுள்ள அலைநுரைகுமிழிகள் ஜலத்தின் விகாரமேயாயினும் அலைகளில் ஒன்று மற்றொன்றாக ஆவதுமில்லை, ஒன்றைமற்றொன்றாக வ்யவஹரிப்பதுமல்லை. அதினால் அவைகள் ஜலத்தைக்காட்டில் வேறுவஸ்துவுமாக மாட்டாது. அதுபோல் இவை ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறுவஸ்துக்களாகவுமாகமாட்டாஎன்று ஸித்தாந்தம். கருஉ.

(ஸா-ஹா.) கர்மவச்யனும் துக்கியான ஜீவனைக்காட்டிலும் நிரதிசயாநந்த ஸ்வரூபனான ஈச்வரன் விலக்ஷணனென்று ஸித்தாந்தம். ஈச்வரனுக்கும் ஜீவசித்துக்களாகிற சரீரமுண்டாகையால் சரீரமுள்ளவளவும ஜீவனுக்குப்போல் அவனுக்கும் ஸுகதுக்கநுபவமொக்குமாகையால் ஜீவனைக்காட்டிலும் ஈச்வரனை விலக்ஷணனாகப் பிரித்துச் சொல்லமுடியாதென்று பூர்வபக்ஷம். "ஸவாகயாஸவதி" என்று முக்தனுக்கும் சரீரமுண்டென்று சொல்லுகையாலே, அவனுக்கு துக்காநுபவமில்லாமையாலே, துக்காநுபவத்திற்கு சரீரஸம்பந்தமாதரமே ஹேதுவன்று. சாஸ்த்திரத்தில் வதித்தவிதக்கு உட்பட்டவனாயிருந்து அந்த விதியைச்செய்யாமல் அதிக்ரமித்தால் அதுவே துக்காநுபவத்திற்குஹேது. ஈச்வரன் சாஸ்திரவிதிக்குட்பட்டவனன்றாகையால், சரீரவரனானாலும் அவனுக்கு துக்காநுபவம் ஸம்பவியாது லோகத்தில் ராஜாவினுடைய உத்திரவை அதிக்ரமித்தால் ஜனங்களுக்கு தெண்டனையுண்டு; ராஜாவுக்கு அதில்லை. அதுபோலவே இங்கும் கண்டுகொள்வது. ஆகையால் ஈச்வரனுக்கு எவ்விதத்திலும் துக்காநுபவம் ஸம்பவியாது. இதைக்கொண்டுஜீவேச்வரர்களுக்கு வைலக்ஷண்யம் ஸம்பலிக்குமென்று ஸித்தாந்தம். கருஉ

கூயி-சக. ஸூ - கருங. ததநந்யத்வமாரம்பணசப்தாதிப்ய:.

(ஸ-ஸா-வ்ய.) ஆரம்பணசப்தாதிப்ய: - ஆரம்பணசப்தத்தை ஆதியாக உடைய வாக்யங்களினால், ததநந்யத்வம் - பரமாத்மாவைக் காட்டிலும் (ஜகத்துக்கு) அபேதம், (ஸித்திக்கிறது). கருங.

(ஸ - ஹா.) கீழ்ஸூத்ரத்தில் வ்யாவஹாரிக பேதத்தை யொத்துக்கொண்டு ஸமாதானம்செய்தார். இதில் பரமார்த்தமாக பேதம்கிடையாது. ஆகாசம் முதலிய கார்யரூபமான ஜகத்துக்கும், இவற்றுக்குக்காரணமாகிய ப்ரஹ்மத்துக்கும் அபேதமே தோற்றுகிறது. இதற்குப்ரமாணம் "யதாஸோம்யைகேந ம்ருத்பிண்டேந" என்று தொடங்கி "வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்" என்கிற சாந்தோக்யத்தின்வாக்யம். இதின் கருத்து—கார்யமாகப் பரிணமிப்பதற்குமுன் பிண்டாகாரமாயிருக்கும் ம்ருத்து, அதாவது மண், அதை யறிந்தால் அதின் விகாரமாகிய கடம் (பானை) சராவம் (மடக்கு) முதலிய கார்யங்க

ளும் மண்ணென்று அறியப்படும். அதாவது - கார்யமும் மண், காரணமும் மண், இரண்டுக்கும் பேதமில்லை. வாயும் வயிறுமான ரூபமும் கடம் என்கிற பேரும்வெறு மனே வழங்குகிறது, நிரூபித்தால் அதொன்றும் உண்மையானதன்று. மண்ணென்பதே உண்மையானது. அதுபோல் ஆகாசம் வாயு அக்நிமுதலிய ரூபங்களையுடைய வஸ் துக்களடங்கிய ஜகத்தும் இதன்பேரும் உண்மையாகமாட்டாது. இதற்குக்காரணமா கிய ப்ரஹ்மமென்பதே ஸத்யமென்று இந்தப்ரமாணத்தைக்கொண்டு ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் பேதமில்லையென்று கொள்ளவேணும். கஞ்ட.

(பா-ஹா.) பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பந்நமான ஜகத்து பரமாத்மாவை க்காட்டிலும் வேறு, அன்று என்று ஸம்சயம். கார்யகாரணங்களுக்கு பேதமுண்டா இல்லையா என்று பலித்தது.—கார்யகாரணங்களுக்குபேதமில்லையாகில் காரணத்தைப் போலவே கார்யமும் முன்னமே இருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும், அப்படியா னல், ஒருகார்யத்திற்காக லோகத்திற் செய்கிறயத்நம் வ்யர்த்தமாம். காரணத்தில் ம்ருத்து என்றும் கார்யத்தில் கடமென்றும் வெவ்வேறுவிதமான வ்யவஹாரம்காண் கிறது, அதுவுமில்லாமற் போகவேணும் - ஆகையால் இவ்வநுபபத்திகள் வாராதபடி கார்யகாரணங்களுக்கு பேதமேயங்கீகரிக்கவேணும் என்று பூர்வபக்ஷம். "வாசாரு ம்ணம்விகாரோ நாமதேயம்" "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யாதி வாக்யங்கள் ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் அபேதத்தையே சொல்லுகையாலேகார் யகாரணங்களுக்கு அபேதமேயுள்ளது. காரணமான ம்ருத்த்ரவ்யமே பிண்டமான அவஸ்தையைவிட்டு கடரூபமான அவஸ்தையை அடைகையாலே கார்யகார ணங்களில் வெவ்வேறுவிதமான வ்யவஹாரங்கள் காண்கிறது. அந்த அவஸ்தா ப்ராப்திக்காகவே லோகத்தில் யத்நம் செய்கிறார்கள். ஆகையால் கீழ்ச்சொன்ன அநுப பத்திகளொன்றும் ஸம்பவியாது. மேலும், காரணாவஸ்தையிலுள்ள ம்ருத்தே கார்யா வஸ்தையிலுள்ள கடத்திலும் காண்கையாலே அதைவிட்டு, காணாத வேறொருத்ரவ் யம் கற்பிக்கை அநுசிதம்; ஆகையால் கார்யகாரணங்களுக்கு பேதமில்லை. கஞ்ட.

ஸூ-கருச. ஸாவேசோபலம்பே:॥

(ஸ - வ்ரு) ஸாவே - (காரணம்) இருக்கும்போதே, உபலம்பே: (கார்யம்) காண்கையாலே, கார்யமும் காரணமும் ஒன்று).

(ஸ-ரா-வ்ரு.) ஸாவே - கார்யத்திலும், உபலம்பே: - (காரணம்) காண்கையாலே, (கார்யகாரணங்கள் ஏகமே). கருச.

(ஸு-ஹா.) மேலும், காரணமிருந்தால் கார்யம் காண்கிறது. அதாவது - நூலி ருந்தால் வஸ்த்திரம் காண்கிறது அதில்லாவிடில் வஸ்த்திரமுமில்லை. ஆகையால் நூலும் அதினாலுண்டான வஸ்திரமும் ஒன்றே, வேறன்று. ஒன்றில்லாவிடினும் மற் றொன்று காணுமாகில் அவ்விரண்டுக்கும் பேதமுண்டு. அதாவது—வஸ்திரம் நெய்கிற வன் இல்லாவிடினும் வஸ்திரம் காண்கையால் நெய்கிறவனைக்காட்டிலும் வஸ்திரம் வேறுபட்டிருக்கும். நூலும் வஸ்திரமுமப்படியன்று, ஆகையால் அவ்விரண்டுக்கும் பேதம் ஒப்புக்கொள்ளக்கூடாது. அதுபோலவே, ஜகத்துக்குக்காரணமாகிய ப்ரஹ் மத்திற்கும் ஜகத்துக்கும் பேதம் ஒப்புக்கொள்ளக்கூடாது. கருச

(பா-ஹா.) கடாதிகார்யத்திலும் காரணமான ம்ருத்த்ரவ்யமே காண்கையாலே கார்யகாரணங்களுக்கு பேதமில்லை. கருச

ஸூ-கருரு. ஸத்வாச்சாவரஸ்ய॥

(ஶ-ரா-வ்யா.) அஸத்வாத் - கார்யத்துக்கு, ஸம்பந்தாபாவ - (காரணத்தின் ஸம்பந்தம் இல்லாததினாலும், (கார்யகாரணங்கள் அபின்நங்கள்) கடு௬.

(ஶ்ரீ-ஶ .) "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்கிற வாக்யம்—இஜ்ஜகத்து ஸ்ருஷ்டிக்கு முன்னும் ஸத்ரூபியாய்க்கொண்டு ஸத்தினிடத்திலேயிருந்ததென்று சொல்லுகிறது. ஸத்தென்பது - ப்ரஹ்மம், எதுவென்று உருவம்கொண்டு என்றேயிருக்கிறதோ, அவ்வண்ணமே வஸ்துவும் ஒன்றெனப்படும். ஜகத்து ஸத்ரூபியாயக் கொண்டு ஸ்ருஷ்டிகாலத்திற்குமுன்பு ப்ரஹ்மத்திலில்லாவிடில், ஸ்ருஷ்டிகாலத்தில் அந்தப் ப்ரஹ்மத்திலின்றும் ஜகத்துண்டாகமாட்டாது. அதெப்படியெனில்,—மணலில் எண்ணை கிடையாது. ஆகையால் மணலிலின்றும் எண்ணை உண்டாகிறதில்லை. அதுபோல் கண்டுகொள்க. கடு௬.

(ரா - ஹா.) ஒருவனொரிடத்திற்குப்போகும்போது வழியில் ம்ருத்பிண்டத்தைக்கண்டு, மறுபடியும் திரும்பிவரும்போது அதில்நின்றுமுண்டான கலசாதிகளைப் பார்த்து, இந்த கலசாதிகள் இதற்குமுன் ம்ருத்பிண்டமாயிருந்தது என்று சொல்லுகிறான்; இதனால்காரணத்திலேகார்யமும் இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேணும்; ஆகையால் கார்யகாரணங்களுக்கு பேதமில்லை. கடு௬.

* ஸூ-கடு௭. அஸத்வ்யபதேஶாந்நேதிசேந்ந தர்மாந்தரேண வாக்யஶேஷாத்யுக்தேஶ்ஶப்தாந்தராச்ச.

(ஶ-ரா.வ்யா.) அஸத்வ்யபதேஶாத் - (காரணவஸ்த்தையில் கார்யம்) இல்லையென்று சொல்லுகையாலே, ந - கார்யம் முன்னில்லை, இதிசேத் - என்றால், ந - அப்படியன்று, தர்மாந்தரேண - அவஸ்த்தாந்தரத்தோடு கூடியிருக்கையாலே, (இல்லையென்று சொல்லுகிறது). வாக்யஶேஷாத் - மேல்வாக்யத்தினாலும், யுக்தே: - யுக்தியினாலும், ஶப்தாந்தராச்ச-(ஸமானப்ரகரணத்திலுள்ள) வேறுசப்தத்தினாலும், (கார்யம் முன்னிருக்கிறதென்றே ஸித்தமாகிறது). கடு௭.

(ஶ-ஹா.) "அஸதேவேதமக்ர ஆஸீத்" என்கிற வாக்யம், இந்த ஜகத்து ஸ்ருஷ்டிக்குமுன் அஸத்தாயிருந்தது. அதாவது—இல்லாமலிருந்ததென்று சொல்லுகிறது; ஆகையால் ஸ்ருஷ்டிக்குமுன் காரணரூபியாயிருந்ததென்று சொல்லக்கூடாதென்னில்,—இல்லை என்பதாகு இந்த ஆகாரங்களுடனும் இப்பெயர்களுடனுமில்லை என்றே அர்த்தம், வஸ்துவே இல்லை என்று அர்த்தமன்று. இதற்குஹேது-அஸத்என்கிற இந்தபதம், வாக்யத்திலுதியிலிருக்கிறது. இத இரண்டுவிதமான அர்த்தத்தைக் கொடுக்கினும் இவ்வாக்யத்தின் கடைசியில் "ஸத்" என்று இந்தஜகத்து ஸத்தாயேயிருந்ததென்று ஸம்சயமறச்சொல்லுகிறது. ஆகையால் கீழ்ச்சொன்னபடியே அர்த்தம்கொள்ளவேணும். கடு௭.

(ஶ-ஹா.) ஸ்ருஷ்டிக்குமுன் காரணத்தில் கார்யமிருந்ததென்பதற்கு யுக்தியுமுண்டு. அதாவது—தயிருக்குக்காரணம் பால், வஸ்த்திரத்திற்குக்காரணம் நூல். தயிர்பாலிலும் வஸ்த்திரம்நூலிலுமிருப்பதினாலேயே அவ்வவை வேண்டினவன் பாலைத்தோய்ப்பதிலும் நூலை நெய்வதிலும் யத்னம்செய்கிறான் அவையவற்றிலில்லாவிடில் மற்றொன்றைவிட்டு அதிலேயே ப்ரவ்ருத்தி செய்யக்கூடாது; தேன் மண் முதலிய மற்றொன்றில் க்ருஷிசெய்தும் அக்காரியங்களை லபிக்கலாம். ஆகையால் தயிர் தேனி

* இதுசங்கரபாஷ்யத்திற்கு இரண்டுஸூத்ரமாயிருக்கும்.

லும் வஸ்திரம் மண்ணிலுமில்லையென்றும் பாலிலும் நூலிலுமிருந்ததென்று மொப்புக்கொள்ளவேண்டும். தயிர் பாலிலில்லாவிடினும் தயிரையுண்டாக்கும் ஸ்வபாவம் பாலுக்கேயுள்ளது, தேனுக்குக்கிடையாது. ஆகையால் தேனில்நின்றும் தயிருண்டாகிறதில்லையென்னில், நாங்கள் ஸ்தூலாகாரமாகிய தயிர் முன்னம் ஸூக்ஷ்மாகாரமாய் பாலிலிருந்ததென்கிறோம், நீங்கள் அந்த ஸூக்ஷ்மாகாரத்தையே ஸ்வபாவமென்றீர்கள், உங்களுக்கும் எங்களுக்கும் சப்தபேதமொழிய அர்த்தபேதமில்லை. அதுபோல் ஜகத்தும் காரணரூபியாகிய ப்ரஹ்மத்திலிருந்ததென்பது ஸித்தம். இதற்கு வேதவாக்யமும் ப்ரமாணமுண்டு. அதாவது— "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இந்த ஜகத்துஸ்ருஷ்டிக்குமுன் ஸத்தாயேயிருந்ததென்பது. கீழ்ச்சொன்னயுக்தியும் இந்த வேதவாக்யமும் அஸத்கார்யவாதத்திற்கு விரோதமாகையாயால் அந்தவாதம் ப்ராமாணிகமன்று. ௧௫.

(ரா - ஸா.) "அஸதேவேதமக்ர ஆஸீத்" என்று இந்தகார்யம் முன்னம் இல்லையாயிருந்தது என்று சொல்லுகையாலே கலசாதிகார்யம் முன்னமே ம்ருத்பிண்டாதிகாரணத்திலிருந்ததென்று சொல்லுகை ஸம்பவியாதென்னில், அதற்குக்காரணம்— அப்போது கலசாவஸ்த்தையைவிட்டு பிண்டரூபமான வேறுஅவஸ்த்தையையடைந்திருக்கையாலே அதை இல்லையென்றுசொல்லிற்று. அதெப்படியறிகிறதென்றால், மேல்வாக்யத்தில் அந்த அஸத்து ஸங்கல்பித்ததென்று சொல்லுகையாலே, சூன்யமாயிருந்தால் ஸங்கல்பம் கூடாமையாலே முன்னமேயிருக்கிறதென்றே நிஸ்சயிக்கப்படுகிறது. யுக்தியும் அப்படியே காண்கிறது. அதாவது—கடம் இருக்கிறதென்றும் இல்லையென்றும் சொன்னால் முன்பொரு அவஸ்த்தையையும் பின்பொருஅவஸ்த்தையையும் அடைந்திருக்கிற வஸ்த்துவே காண்கிறதொழிய வஸ்துசூன்யமாகக்காண்கிறதில்லை. மேலும் இவ்வாக்யத்தோடு ஸமானப்ரகரணத்தில், இங்கு அஸத்துஎன்று சொன்னவிடத்தில் அங்கு ஸத்துஎன்று சொல்லுகையாலே இங்கும் அவஸ்த்தாந்தராபந்நமானவஸ்துவே சொல்லிற்றென்று நிஸ்சயிக்கவேண்டும். ஆகையால் கார்யம் காரணாவஸ்த்தையிலுமிருக்கிறதென்று ஸித்தாந்தம். ௧௬.

ஸூ-௧௭. படவச்ச.

(ஸூ-ரா-வ்ய.) படவச்ச - (நூல்) வஸ்த்ர மாகிறாப்போலவும், (ப்ரஹ்மம் ஜகத்தாகிறது.) ௧௭.

(ஸூ-ஸா.) வஸ்திரம் மடித்துவைத்திருக்கும்போது இதுவஸ்திரமோ அன்றோ என்று ஸம்சயிக்கும்படியாயிருக்கிறது. அதை விரித்துக்காட்டினால் முன் மடித்து வைத்திருந்தது வஸ்த்திரந்தான் என்று நிஸ்சயிக்கப்படுகிறது. மடித்தபோது ஒரவஸ்த்தையையும் விரித்தபோது ஒரவஸ்த்தையையும் அடைந்திருக்கும். அவஸ்த்தையில் பேதமொழிய வஸ்துவில் பேதமில்லை. அதுபோல் ஜகத்திலும்காண்க. ௧௭.

(ரா - ஸா.) நூல்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்தால் படம் என்கிற பேரையும் வேறுவிதமான ஆகாரத்தையும், அடைந்து உடுத்திக்கொள்ளல் முதலிய கார்யங்களுக்கும் உபயோகிக்கிறாப்போலே ப்ரஹ்மமும் ஜகத்ரூபமாகப் பரிணமித்து நாமரூபங்களையடைகிறது. ௧௭.

ஸூ-௧௮. யதா ச ப்ராணா:.

(ஸூ-ரா-வ்ய.) யதா-எப்படி, ப்ராணா: - ப்ராணன்கள் (வெவ்வேறு வ்ருத்திகளை யடைகிறதுகளோ, அப்படியே ப்ரஹ்மமும்). ௧௮.

(ஶா-ஹா.) ப்ராணனை வெளியில்வரவொட்டாமல் உள்ளே யடக்கிவிட்டால் போவதுவருவதாகிற வ்யாபாரமற்றதாய் ஜீவிப்பதற்குமாத்திரம் உபயோகப்பட்டிருக்கும். அடக்காமல் விட்டுவிட்டால் போவதுவருவதாகிற வ்யாபாரத்தையுடைத்தாயிருக்கும். அவ்வளவே பேதமுள்ளது. ப்ராணவாயு என்பதற்கு இரண்டுகாலஞ் சனிலும் ஸம்சயமில்லை. அதுபோல் ஜகத்திலும்காண்க. ௧௯௮.

(ரா-ஹா.) சரீரத்திலிருக்கிற ஒருப்ராணனே வ்ருத்திவிசேஷத்தினால் வெவ்வேறு நாமங்களை யெப்படி யடைகிறதுகளோ, அப்படியே ப்ரஹ்மமும் ஜகத்ரூபேண பரிணமித்து வெவ்வேறு நாமரூபங்களையடைகிறது; ஆகையால் ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் பேதமில்லை. ௧௯௮.

அபி ௭-௨. ஸூ-௧௯௯. இதரவ்யபதேஶாத்தி தாகரணாதி தோஷப்ரஸக்தி꞉.

(ஶ-ரா-வ்ய.) இதரவ்யபதேஶாத் - (பரமாத்மாவை) இதரனை ஜீவனாகச் சொல்லுகையாலே, ஹிதாகரணாதிதோஷ ப்ரஸக்தி꞉ - (பரமாத்மா ஜகத்தைஸ்ருஷ்டித்தால்) (தனக்கு) நன்மையைச் செய்துகொள்ளாமை முதலிய தோஷங்கள் ஸம்பவிக்கும். ௧௯௯.

(ஶ - ஹா.) ப்ரஹ்மம் ஜகத்காரணமாகில் வேறொரு தோஷம் சொல்லப்படுகிறது. அதாவது—"தத்த்வமஸி" முதலான வாக்யங்கள் ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றென்று சொல்லுகின்றன. ஜகத்து, ஜீவனுக்கு பிறப்பு இறப்பு பிணி மூப்புமுதலிய அநேகமான துயரங்களை விளைக்குமதாயிருக்கிறது. ஸமர்த்தனானவன் தனக்குத் துயரத்தை விளைத்துக்கொள்ளான். ஆகையால்ப்ரஹ்மம் ஜகத்காரணமாகக்கூடாது மூலப்ரக்ருதியே காரணமாகவேண்டுமென்று பூர்வபக்ஷம். ௧௯௯.

(ரா - ஹா.) கீழேசிதசித்ரூபமான ஜகத்துக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதமில்லையென்று சொல்லிற்று. "தத்த்வமஸி - அந்த பரப்ரஹ்மமே நீயாகிறாய்" "அயமாத்மா ப்ரஹ்ம - இந்த ஜீவாத்மா ப்ரஹ்மஸ்வரூபன்" என்று சொல்லுகிற வாக்யங்களைக்கொண்டு இந்த ஜகத்திற்சேர்ந்த ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதமில்லையென்று ஒப்புக்கொண்டால், அந்தப்ரஹ்மத்தை ஜகத்காரணமாகக்கொள்ளக்கூடாது. ஏனென்றால், இந்தஜகத்து ஜீவர்களுக்கு மிகவும் துக்கஜநகமாயிருக்கையாலே ப்ரஹ்மத்துக்கும் துக்கஜநகமாயேயிருக்கும், தான் ஸர்வஜ்ஞனாய், நினைத்தபடி பண்ணவல்ல ஸத்யஸங்கல்பனாயிருந்து தனக்குஸுகஜநகமான ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டியிருக்க அதைவிட்டு, தனக்கு அத்யந்த துக்கஜநகமான ஜகத்தை ஸ்ருஷ்டிக்கை அநுசிதம் இத்யாதியான அநுபபத்திகள் உண்டாகையால் ப்ரஹ்மம் ஜகத்காரணமன்று என்று பூர்வபக்ஷம். ௧௯௯.

ஸூ-௨௦௦. அதிகம் து பேதநிர்தேஶாத்.

(ஶ-ரா-வ்ய) பேதநிர்தேஶாத் - ஜீவப்ரஹ்மங்களுக்கு (வேதத்தில்) பேதம் (உண்டென்று) சொல்லுகையாலே, அதிகம்து - ஜீவனைக் காட்டிலும் ப்ரஹ்மம் வேறுபட்டதே. ௨௦௦

(ஶ-ஹா.) "ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி" உறங்கும்போது ஜீவன் ப்ரஹ்மத்தோடுபோய் சேருகிறானென்று ஜீவனைக்காட்டிலும் ஜகத்காரணமாகிய ப்ரஹ்மத்தைப்பிரித்துச்சொல்லியிருக்கையால் கீழ்ச்சொன்ன தோஷம்வாராது.

ஆனல் அத்வைதமில்லையோவென்ன, பாரமார்த்திகதசையில், அதாவது - மோக்ஷ தசையில் அத்வைதந்தான். அப்போது ஜீவனென்றொருவனில்லை. ஸ்ருஷ்டியுங்கிடை யாது. ஸம்ஸாரதசையில் பேதமுண்டு. இப்போது இவ்விதமாக ஸ்ருஷ்டிக்கையில் பாதகமில்லையென்று ஸித்தாந்தம். கக0.

(ரா.- ஹா.) இந்த சங்கைக்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—"கரணாதி பாதிபஃ - இந்த்ரியங்களுக்கு யஜமானனான ஜீவனுக்கும் யஜமானன்" "ப்ரதான க்ஷேத்ரஜ்ஞபதிஃ - மூலப்ரக்ருதிக்கும் ஜீவனுக்கும் ஸ்வாமி" இப்படிப்பட்டவன் பரமாத்மா என்று இதுமுதலான வாக்யங்களினால் ஜீவனைக்காட்டிலும் பரப்ரஹ்மம் வேறென்று சொல்லுகையாலே ஜீவப்ரஹ்மங்களொன்றாகாது. அந்தப்ரஹ்மம் ஜீவ னுடைய கர்மாநுகுணமாகவும் தன்னுடைய லீலார்த்தமாகவும் ஜகத்தை ஸ்ருஷ்டிக் கிறதென்று ஒப்புக்கொள்வதில் ஒருதோஷமுமில்லை. கீழ்ஜீவப்ரஹ்மங்களுக்கு பேத மில்லையென்று சொன்னது-ஜீவன் ப்ரஹ்மத்திற்கு சரீரமாகையால், இவன் சேதன னென்கிறவிடத்தில் கண்ணால்காண்கிறஜடமான சரீரத்தைக்காட்டி அதைச்சேதனனா கச்சொன்னால் இந்தசரீரத்தை யுடையவன் சேதநன் என்று அர்த்தமாய் அந்த சரீ ரத்திற்கும் சேதநனுக்கும் அபேதமாக வ்யவஹார முண்டாகிறாப்போல், இங்கும் ஜீவனை சரீரமாக உடையது ப்ரஹ்மம் என்று அர்த்தமாய் அவ்விரண்டும் அபேத மாக வ்யவஹரிக்கப்படுகிறது ஆகையால் அதிலுமொரு அநுபபத்தியில்லையாகையால் ப்ரஹ்மம் ஜகத்காரணமாகலாம் என்று ஸித்தாந்தம். கக0.

ஸூ-கககூ. அச்மாதிவச்ச தத நுபபத்திஃ.

(ஸூ-ரா-வ்யா.) அச்மாதிவச்ச -கல்முதலானவைகளுக்குப்போலவே, ததநுபபத்திஃ-ஜீவனுக்கும்ப்ரஹ்மத்தோடு அபேதம்ஸம்பவியாது. கககூ

(ஸூ - ஹா.) லோகத்தில் மண்ணின் விகாரமாகிய கற்கள் சில விலையுயர்ந்த ரத்நங்களாகவும், சில நடுத்தரமான ஸூர்யகாந்த சந்த்ரகாந்தமணிகளாகவும், சில வெறும் கற்களாகவும் காண்கின்றன. அதுபோல் ப்ரஹ்மத்தினின்றுமுண்டாகிய ஜகத்தும் ஜடம் அஜடம் இத்யாதி நாநாவிதபேதங்களையுடையனவாக ஆகலாமென்று தாத்பர்யம். கககூ.

(ரா - ஹா.) ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதம் கூடாதென்பதில் யுக்தியுமுண் டென்கிறார். அதாவது—ஜடமான சிலாகாஷ்டாதிகள் ஸ்வயம்ப்ரகாசமான ப்ரஹ மஸ்வரூபம் எப்படியாகாதோ, அப்படியே துக்கியான ஜீவனுக்கும் ஆநந்தரூபியான ப்ரஹ்மத்துக்குங்கூட அபேதம் ஸம்பவியாது. கககூ.

அதி-சுசு. ஸூ-கஉ0. உபஸம்ஹாரதர்சநாந்நேதி சேந்ந க்ஷீரவத்தி.

(ஸூ-ரா-வ்யா.) உபஸம்ஹாரதர்சநாத் - (ஸ்ருஷ்டிக்கிறவனுக்கு ஸாமக்ரிகளின்) சேர்கை காண்கையாலே, ந - (அதில்லாதப்ரஹ்மம்) ஜகத் காரணமாகாது, இதி சேத் - என்றால், ந - இந்தசங்கைகூடாது, க்ஷீரவத் ஹி - பால்போலே (ஜகத்காரணம் ஸம்பவிக்குமென்பது) ப்ரஸித்தமன்றோ

(ஸூ-ரா-ஹா.) லோகத்திலொருவனொரு கார்யத்தைச்செய்யும்போது அதற் வேண்டிய அநேகமான ஸாமக்ரிகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு ஸ்ருஷ்டிக்கி றான். அதுபோலவே பரமாத்மாவும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது அநேக ஸாமக் களை யுடையவனாயே ஸ்ருஷ்டிக்கவேண்டும். "ஸதேவஸோம்ய" என்கி

ஶ்ருதியில், ஜகத்ஸ்ருஷ்டிக்குமுன் பரமாத்மா ஒரு உபகரணமுமில்லாதவனாயிருந்தா னென்று சொல்லுகையாலே உபகரணமில்லாத அந்த பரமாத்மாவுக்கு ஜகத்கார ணத்வம் கூடாதென்று பூர்வபக்ஷம். கார்யத்தைச்செய்யும்போது அநேக ஸாமக்ரி வேண்டுமென்கிற நியமம் கிடையாது. அதெப்படியென்றால், பால் தயிராகும் போது ஒரு ஸாமக்ரியுமில்லாமல் தானேதயிராய்விடுகிறது; அதுபோலவே பரமாத்மா வும் ஸாமக்ரி ஶூந்யனாய் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கலாமென்று ஸித்தாந்தம். ௧௬௨.

ஸூ-௧௬௩. தேவாதிவதபி லோகே.

(ஶ-பா-வ்யா-ஸா) லோகே - (தங்கள் தங்களுடைய) லோகத்தில், தேவாதிவதபி - (இந்த்ராதி) தேவதைகள் (தங்களுடைய ஸங்கல்பத்தி னாலேயே தங்களுக்கு வேண்டிய பதார்த்தங்களை ஸாமக்ரிஶூந்யராய்க் கொண்டு ஸ்ருஷ்டிக்கிறது) போலவும், (ஸாமக்ரீஶூந்யனான பரமாத்மா வும ஸங்கல்பத்தினாலேயே ஜகத்தை ஸ்ருஷ்டிக்கலாம்). ௧௬௩.

அதி. ௪௪. ஸூ-௧௬௪. க்ருத்ஸ்னப்ரஸக்திர்நிரவயவத்வஶப்தகோபோ வா.

(ஶ-பா-வ்யா.) க்ருத்ஸ்னப்ரஸக்தி:-நிரவயவமான (ப்ரஹ்மத்தினுடைய) ஸம்பூர்ணஸ்வரூபமும் ஜகத்ரூபமாக உபயோகிக்கவேண்டிவரும். நிரவய வத்வஶப்தகோபோ வா - (இதற்காக ப்ரஹ்மம் ஸாவயவமென்றால்) ப்ரஹ் மம் நிரவயவம் என்கிற சப்தத்திற்கு பாதைவரும். ௧௬௪.

(ஶ-பா-ஸா.) ப்ரஹ்மம் நிரவயவமாகையால் அவயவரூபமான அம்சமில்லை யாகையால் ஜகத்ரூபமாகப் பரிணமிக்கும்போது இந்தஅம்சம் ஜகத்ரூபமாகப் பரிண மித்தது. மற்ற அம்சம் நித்யவிபூதியில் இருக்கிறதென்று சொல்லமுடியாது. ஸம்பூர் ணஸ்வரூபமும் ஜகத்ரூபமாய்ப் பரிணமித்துவிட்டது என்று கொள்ளவேணும். ஆனால் நித்யவிபூதியில் ப்ரஹ்மம் இல்லாமல்போகவேண்டிவரும். இந்த அநுபபத்திக் காக ப்ரஹ்மம்ஸாவயவம் என்று அங்கீகரித்து அதினுடைய சில அம்சம் ஜகத்ரூபமா கப்பரிணமித்து சிலஅம்சம் நித்யவிபூதியிலிருக்கிறதென்று அங்கீகரித்தால் ப்ரஹ்மம் நிரவயவம் என்று சொல்லுகிற ஶ்ருதிகளந்வயியாது. ஆகையால் ப்ரஹ்மம் ஜகத் காரணமாகமாட்டாது என்று பூர்வபக்ஷம். ௧௬௪.

ஸூ-௧௬௫. ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத்.

(ஶ-பா-வ்யா.) ஶ்ருதே: - (இந்தவிஷயத்தில்) வேதம் ப்ரமாணமா கையாலே (இந்தசங்கைக்கு அவகாசமில்லை). ஶப்தமூலத்வாத் - வேதவாக் யமே (ஈஶ்வரஸத்பாவத்தில்) ப்ரமாணமாகையாலே, (அந்த ஈஶ்வரன் லோகவிஜாதீயனாகையாலே நிரவயவனான அவன் ஜகத்காரணனாகலாம்.)

(ஶ-பா-ஸா.) இதற்கு ஸமாதானம்.—லோகத்ருஷ்டாந்தத்தைக்கொண்டு இப் படி சங்கிக்கக்கூடாது. ப்ரஹ்மமுண்டென்பதில் வேதமேப்ரமாணம். இதரப்ரமா ணம் கிடையாது ஆகையால் அது லோகவிஜாதீயம். லோகத்தில் நிரவயவவஸ்து விஷயமாக உண்டாகவேண்டிய சங்கையை லோகவிஜாதீயமான ப்ரஹ்மத்தின் விஷயத்தில் செய்யக்கூடாது. இது நிரவயவமாயினும் ஜகத்ரூபமாகப்பரிணமிக்கிற தென்பதிலும் வேதமே ப்ரமாணமாகையாலே ப்ரஹ்மத்தை ஒப்புக்கொண்டாற் போல் இதையும் ஒப்புக்கொள்ளவேணும் ஆகையால் ப்ரஹ்மம் ஜகத்காரணமாகமாட் டாதென்கிற சங்கையில்லை என்று ஸித்தாந்தம். ௧௬௫.

ஸூ-கககூ. ஆத்மநிசைவம் விசித்ராஸ்சஹி.

(ஸ-ரா-வ்.) ஆத்மநிச - ஜீவாத்மாவினிடத்திலும், ஏவம் - (விஜாதீயமாகையாலே) அசேதநதர்மங்கள் (ஜடத்வாதிகள்) ப்ரஸங்கியாது, விசித்ராச்சஹி-(அசேதநங்களான அக்ந்யாதிகளிடத்திலும்) விசித்ரசக்திகள் காண்கின்றனவன்றோ. ககூகூ.

(ஸ-ரா-ஹா.) ஜீவனிடத்தில் ப்ரக்ருதிதர்மம் ஏன் ஸம்பவிக்கவில்லையென்றால் ப்ரக்ருதியைக்காட்டிலும் ஜீவன் விஜாதீயனாகையாலேயென்று சொல்லவேண்டும். அப்படியே ஈஸ்வரனும் விஜாதீயனாகையாலே நீங்கள் சொல்லுகிற சங்கைக்கு அவகாசமில்லை. அசேதநங்களான ஜலம் தேஜஸ்ஸு முதலியவையும் பரஸ்பரம் விஜாதீயமான சைத்யம் உஷ்ணமுதலிய குணங்களையுடையவைகளாய்க் காண்கின்றன. அதுபோலவே விஜாதீயனான ஈஸ்வரனிடத்திலும் விஜாதீயசக்திகள் உண்டாகலாம். ககூகூ.

ஸூ-ககூஎ. ஸ்வபக்ஷதோஷாச்ச.

(ஸ-ரா-வ்.) ஸ்வபக்ஷதோஷாச்ச - தங்கள் (காபிலர்) பக்ஷத்தில் தோஷமிருக்கிறபடியாலும், (ப்ரஹ்மகாரணவாதமே ஒப்புக்கொள்ள வேணும்.) ககூஎ.

(ஸ-ரா-ஹா.) ப்ரதாநகாரணவாதபக்ஷத்தில் ப்ரதாநம் லௌகிகவஸ்து ஸஜாதீயமாகையாலே லௌகிகவஸ்துக்களை த்ருஷ்டாந்தமாகக்கொண்டு நீங்கள் சொல்லுகிற தோஷங்கள் ப்ரதாநத்திற்கு ஸம்பவிக்கும் ஆகையால் ப்ரதாநத்தைக் காரணமாகக் கொள்ளக்கூடாது. ககூஎ.

ஸூ. ககூஅ. ஸர்வோபேதாச தத்தர்சநாத்.

(ஸ-ரா-வ்.) தத்தர்சநாத்-(ஈஸ்வரன் ஸர்வசக்தியுள்ளவன் என்று ப்ரதிபாதிக்கிற) வேதம்காண்கையாலே, ஸர்வோபேதாச - ஈஸ்வரன் ஸர்வசக்தியை யுடையவனாகிறான். ககூஅ.

(ஸ - ரா - ஹா.) ஈஸ்வரன் ஸகலவஸ்து விஜாதீயனென்று அவனிடத்தில் சக்தியை யொப்புக்கொள்ளவேண்டுமென்று. "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே" என்று வேதமும் அவனுக்கு ஸர்வ சக்திகளுண்டென்று சொல்லுகிறது. ககூஅ.

ஸூ - ககூகூ. விகரணத்வாந்நேதிசேத்தது க்தம்.

(ஸ-ரா-வ்.) விகரணத்வாத் - (ஈஸ்வரனுக்கு) உபகரணமில்லாமையாலே, ந - (அவன்) ஜகத்காரணமாகமாட்டான். இதிசேத் - என்றால், தது க்தம் - இதற்கு ஸமாதாநம் (முன்னமே) சொல்லப்பட்டது: ககூகூ.

(ஸ-ரா-ஹா.) ஈஸ்வரனுக்குக் கரணம், அதாவது-ஸாமக்ரி யில்லாமையாலே ஸ்ருஷ்டி ஸாமர்த்தியம் அவனுக்குக் கிடையாதென்றால் இதற்கு ஸமாதாநம்-ககூ௫-ககூகூ - ஸூத்ரங்களிற் சொல்லப்பட்டது - இங்கு மறுபடியும் சங்கித்தது - இந்த அர்த்தத்தை சிஷ்ய புத்தியில் ஊன்றிவைக்கைக்காக. ககூகூ.

அதி - ௯. ஸூ-கஉ0. நப்ரயோஜநவத்வாத்.

(ஸ-ரா-வ்.) நப்ரயோஜநவத்வாத்-(கார்யமெல்லாம்) ப்ரயோஜநத்தை யுடைத்தாகையினாலே, ந - (பரிபூர்ணனான ஈஸ்வரனுக்கு ப்ரயோஜநமில்லாமையால்) ஜகத்காரணத்வம்கூடாது. கஉ0.

(ஸ-ரா-ஹா.) ஒருவனொரு கார்யத்தைச் செய்யும்போது ஒருப்ரயோஜநத்தை யுத்தேசித்தே செய்கிறான். அதாவது—தானொரு பலத்தை யடையவேணுமென்றாவது, மற்றொருவனுக்கு நன்மையைச் செய்யவேணுமென்றாவது செய்கிறான். ஈஶ்வரன் அவாப்த ஸமஸ்த காமனாகையால், தனக்கொரு பலத்திலுமபேக்ஷையில்லையாகையால், தன்னுடைய ப்ரயோஜநத்துக்காக ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்று சொல்லக்கூடாது, இந்த ஸம்ஸாரம் ஜீவன்களுக்கு நரகவாஸம் முதலிய அநந்த துக்கங்களுக்குக் காரணமாயிருக்கையால் ஜீவன்களுக்கு இஸ்ஸம்ஸாரம் நலமாகமாட்டாது; ஆகையால் அவர்களுடைய ப்ரயோஜநத்துக்காகச் செய்கிறானென்றும் சொல்லமுடியாது. இப்படி இருவகையான ப்ரயோஜநமுமில்லாமையால் ஈஶ்வரனுக்கு ஜகத்ஸ்ருஷ்டி ஸம்பவியாது என்று பூர்வபக்ஷம். கஎ0.

ஸூ. கஎக. லோகவத்து லீலாகைவல்யம்.

(ஸ-ரா-வ்யா.) லீலாகைவல்யம் – கேவலம் லீலையே ஜகத்ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநமாகிறது. (அதெப்படியென்றால்), லோகவத் - லோகத்தில் ராஜாக்களுக்குப் பந்தாடுகிற வ்யாபாரம்போலே. கஎக.

(ஸ-ரா-ஹா.) இந்த சங்கைக்கு ஸமாதாநம் சொல்லுகிறார்.—லோகத்தில் ராஜாவானவன் ஸமஸ்தகாம பரிபூர்ணனாயிருந்தாலும் விநோதார்த்தமாகப் பந்தாடுகை, வேட்டையாடுகைமுதலிய வ்யாபாரங்கள் செய்வதுபோல், இந்த ஜகத்ஸ்ருஷ்டியில் ஈஶ்வரனுக்கு மற்றொரு ப்ரயோஜநமில்லாவிடினும் லீலார்த்தமாகவே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்று ஸித்தாந்தம். கஎக.

ஸூ - கஎ௨. வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததா ஹி தர்சயதி.

(ஸ-ரா-வ்யா.) வைஷம்ய நைர்க்ருண்யே - (ஈஶ்வரன் ஜகத்ஸ்ரஷ்டாவானால் அவனுக்கு) வைஷம்யமும் நிர்தயத்வமும் ப்ரஸங்கிக்கும் (என்றால்), ந - அவைஸம்பவியாது. (ஏனென்றால்), ஸாபேக்ஷத்வாத் - சேதநர்களுடைய கர்மஸாபேக்ஷனாயிருக்கையாலே, ததா ஹி - அப்படியே, தர்சயதி - (வேதவாக்யம்) காண்பிக்கிறது. கஎ௨.

(ஸ-ரா-ஹா.) இந்த ஜகத்துக்கு ஈஶ்வரன் கர்த்தாவென்று ஒப்புக்கொண்டால், சிலரை ஜாதி குணம் வித்யைஸம்பத்து முதலானவைகளினால் ஸுகிகளாய் உயர்ந்தவர்களாகவும், சிலரை ஜாதிகுண வித்யாஸம்பத்து முதலானவை யற்றவர்களாய் துக்கிகளாய்த் தாழ்ந்தவர்களாகவும், இப்படி விஷமமாக ஸ்ருஷ்டிக்கையால் அவனுக்கு வைஷம்யம்வரும். ஜீவன்களை இந்த துக்கமயமான ஸம்ஸாரத்தில் ஸ்ருஷ்டிக்கையாலே அவன் நிர்தயனுமாவான், ஆக இவ்விரண்டு தோஷமும் ஸம்பவிக்குமாகையால் அவனுக்கு ஜகத்காரணத்வம் கூடாது என்று பூர்வபக்ஷம்—ஈஶ்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது, ஜந்மாந்தரத்திற் செய்த அந்தந்த சேதநர்களுடைய புண்யபாபரூப கர்மங்களைப்பார்த்துத் ததநுகுணமாகப் புண்யவான்களை உயர்ந்தவர்களாகவும், பாபிகளைத் தாழ்ந்தவர்களாகவும் ஸ்ருஷ்டிக்கிறான். இந்த உயர்வும், தாழ்ச்சியும், துக்காநுபவமும் சேதநர்களுடைய கர்மாநுகுணமாகையால் ஈஶ்வரனுக்கு வைஷம்யமும் நிர்தயத்வமும் ஸம்பவியாது- என்று ஸித்தாந்தம்.—வேதத்திலும், "ஸாது காரீ ஸாதுர்பவதி பாபகாரீ பாபோ பவதி - புண்யத்தைப் பண்ணினவன்

புண்யவானாய்ப் பிறக்கிறான், பாபத்தைப் பண்ணினவன் பாபியாய்ப் பிறக்கிறான்"
என்று அவரவருடைய கர்மமே அவரவருடைய ஸுகதுக்கங்களுக்குக் காரணமெ
ன்று சொல்லுகிறது. ளஎஉ·

ஸூ-ளஎ௩. நகர்மாவிபாகாதிதிசேந்நாநாதித்வாத்
உபபத்யதே சாப்யுபலப்யதே ச.

(ஶ-ஸா-வ்யா.) அவிபாகாத் - (ஸ்ருஷ்டிக்குமுன்) ஜீவன் என்கிற
விபாகமில்லாமையாலே, கர்ம - புண்யபாப ரூபகர்மமும், ந - இல்லை;
இதிசேத் - என்றால், ந - அப்படியில்லை. (ஏனென்றால்), அநாதித்வாத் -
(ஜீவனும் கர்மமும்) அநாதியாகையாலே, உபபத்யதே - (ஜீவன்
அநாதியானாலும் ஸ்ருஷ்டிக்குமுன் விபாகமில்லையென்பதும்) உபபந்நமாகி
றது. உபலப்யதே ச - (ஜீவன் அநாதியென்பது ஶ்ருதிஸ்ம்ருதிகளிலும்)
காணப்படுகிறது. ளஎ௩.

(ஶ-ஸா.) இந்த பாஷ்யத்திற்கு இது இரண்டு ஸூத்ரம் "நகர்மாவிபா
காதிதிசேந்நாநாதித்வாத்" என்கிறவரையில் ஒரு ஸூத்ரம் "உபபத்யதே
சாப்யுபலப்யதே ச" என்கிறவரையில் வேறொரு ஸூத்ரம். ஜந்மாந்தரத்தில்
பண்ணின புண்யபாபங்களினால் இந்தஜந்மத்தில் ஸுகியாகவும் துக்கியாகவும் ஜீவன்
களைப் பிறப்பித்தபோதிலும் ஆதிஸ்ருஷ்டிக்குமுன் கர்மமில்லாமையால் அந்த ஆதி
ஸ்ருஷ்டியில் ஒருவனை சுசியாகவும் மற்றொருவனை அசுசியாகவும் பிறப்பிக்கக் காரண
மென்னெனில்;—ஆதிஸ்ருஷ்டி யென்பது கிடையாது. இந்த ஸம்ஸாரம் அநாதி.
நீங்கள் எதை ஆதியாக நினைக்கிறீர்களோ, அதுக்குமுன்னும் ஸம்ஸாரமுண்டு; அப்
போது செய்த கர்மங்களினால் பின் இப்படிஸ்ருஷ்டிக்கிறானென்று முதல் ஸூத்தி
ரத்திற்குத் தாத்பர்யம்—ஸம்ஸாரத்தை அநாதியென்றொப்புக்கொள்வதே யுக்தமா
னது. அல்லாதபக்ஷத்தில் முன் ஸம்ஸாரமில்லாமலிருந்து புதிதாக ஸம்ஸாரமொப்
புக்கொள்ளில் முக்தியையடைந்தவனுக்கும் ஸம்ஸாரத்தில் பிறப்புண்டாகவேண்டி
வரும். இதுமுதலாக அநேக தோஷங்களுண்டாம். ஆகையால் அப்பக்ஷம் அங்கீ
கரிக்கக்கூடாது. வேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் ஸம்ஸார மநாதி
யென்றே சொல்லப்படுகிறது. ளஎ௩.

(ரா-ஸா.) "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்று இந்த ஜகத்ஸ்ருஷ்
டிக்குமுன் சிதசித்துக்களொன்றுமில்லை, பரமாத்மா ஒருவனே யிருந்தானென்று
சொல்லுகையாலே, ஸ்ருஷ்டிக்குமுன் ஜீவனில்லை; அவனில்லாதபோது அவனு
டைய புண்யபாபரூப கர்மமுமில்லை யாகையால், அந்த கர்மத்தைபற்றி விஷமமாக
ஸ்ருஷ்டிக்கிறானென்று சொல்லக்கூடாதென்று பூர்வபக்ஷம்—ஜீவனை அநாதியாக
ஒப்புக்கொள்ளாவிட்டால், ஜீவன் முன்செய்யாத புண்யபாபங்களை இப்போது
அநுபவிக்கிறானென்றும், இப்போது செய்கிற புண்யபாபங்களை அநுபவிக்கப்போகிற
தில்லை என்றும் இத்யாதி தோஷங்கள் வரும். முன் செய்யாததை இப்போது அநுப
வித்தால் எல்லாருமே ஸுகியாவது, எல்லாருமே துக்கியாவது ஆகவேண்டுமல்லது
ஒருவன் ஸுகியாகவும் ஒருவன் துக்கியாகவு மாகக்கூடாது. இப்போது செய்கிற
கர்மத்தை அநுபவியாமற்போனால் "அவஶ்யமநுபோக்தவ்யம்"—செய்த கர்மத்தை
அநுபவித்தே தீரவேணுமென்கிற சாஸ்த்ரம் வ்யர்த்தமாய்விடும். ஆகையால் ஜீவ
னும் அவனுடைய கர்மமும் அநாதியென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். "ஜ்ஞாஜ்ஞௌ

ஸாவஜ்ஞ—ஸர்வஜ்ஞனான ஈஸ்வரனும் அஜ்ஞனான ஜீவனும் இவ்விருவரும் உத்பத்திருந்யர், என்று வேதத்தில் அநேக இடங்களிற் சொல்லுகிறது.—ஜீவனுதியாயிருந்தாலும் ஸ்ருஷ்டிக்குமுன் தேவமநுஷ்யாதி நாமரூபங்களொன்றுமில்லாமல்ஸூக்ஷ்மாவஸ்தையை யடைந்து இல்லையென்னலாம்படி யிருக்கையால், ஈஸ்வரனொருவனே யிருக்கிறனென்று சொல்லிற்று; ஆகையா வ்வாக்யத்திற்கும் விரோதமில்லை என்று ஸித்தாந்தம். ௧௬௩.

ஸூ - ௧௬௪. ஸர்வதர்மோபபத்தேஶ்ச.

(ஶ-ரா-வ்யா.) ஸர்வதர்மோபபத்தேஶ்ச - (காரணத்வோபயோகியான) ஸகலதர்மமும் (ஈஸ்வரனிடத்தில்) உபபந்நமாகையாலேயும் (ப்ரஹ்மகாரணவாதம் உபபந்நம்.) ௧௬௪.

(ஶ-ரா-ஸா.) பரமாணுக்களும் ப்ரதாநமும் ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான சக்தியற்றவையாகையால் ஜகத்காரணங்களாகமாட்டா. பரமாத்மா ஸமஸ்த சக்தியுக்தனாகையால் அவனே ஜகத்காரணம் என்று ஸித்தாந்தம், ௧௬௪.

2 - வது அத்யாயம் ௧ - வது பாதம் ஸம்பூர்ணம்.

உ-வது அத்யாயம் உ-வது பாதம்.

அதி-௪௬. ஸூ-௧௬௫. ரசநாநுபபத்தேஶ்ச நாநுமாநம்

ப்ரவ்ருத்தேஶ்ச.

(ஶ-ரா-வ்யா.) ரசநாநுபபத்தேஶ்ச - (ப்ரதாநத்திற்கு) ஸ்ருஷ்டிக்கையி லநுபபத்தியினாலும், ப்ரவ்ருத்தேஶ்ச - (ஸ்ருஷ்டியில்) ப்ரவ்ருத்தியினுடைய, (அநுபபத்தியினாலும்), அநுமாநம் - மூலப்ரக்ருதி, ந - ஜகத்காரணமாகமாட்டாது. ௧௬௫.

(ஶ-ஸா.) இந்த பாஷ்யத்திற்கு "ரசநாநுபபத்தேஶ்ச நாநுமாநம்" என்று ஒரு ஸூத்ரமும், "ப்ரவ்ருத்தேஶ்ச" என்பது வேறு ஸூத்ரமுமாக இருக்கும் அர்த்த பேதம் கிடையாது. ௧௬௫

(ஶ-ரா-ஸா.) இந்த பாதத்தில் பரபக்ஷங்களிலுள்ள தோஷங்களை சொல்லுகிறார்.—ப்ரதாநம் ஜகத்காரணமாகுமா, ஆகாதா வென்று இந்த அதிகரணத்தில் விசாரிக்கப்படுகிறது—ஜகத்துஸுகதுக்க மோஹாத்மகமாயிருக்கிறது. அதில்ஸுகம் ஸத்வகுணத்தினுடையவும், துக்கம் ரஜோகுணத்தினுடையவும் மோஹம் தமோகுணத்தினுடையவும் கார்யங்களாகையாலே, ஜகத்தும் ஸத்வரஜஸ்தமோமயமாயிருக்கும்; இவ்விதமான ஜகத்துக்கு இதுக்கநுரூபமான வஸ்துவே காரணமாக வேண்டும். ம்ருண்மயமான கடாதிகளைக்குறித்து அதுக்கநுரூபமான ம்ருத்பிண்டமே காரணமாகிறாப்போலே இந்த ஜகத்துக்கும் இதுக்கநுரூபமாய் ஸத்வரஜஸ்தமோரூபமான ப்ரக்ருதியே காரணமாகவேண்டும் என்று பூர்வபக்ஷம்—க்ருஹம் தேர் முதலியவை செய்கைக்குக் கட்டைகாரணமாயினும், அது அசேதநமாகையால் ஒரு புருஷனுடைய ப்ரயத்நமின்றிக்கேதானே க்ருஹாதிகளைச் செய்ய ஸமர்த்தமாகிறதில்லை, அதுபோ

லவே, ப்ரதாநமசேதநமாகையால் ஒரு புருஷனபேக்ஷையின்றி இந்த விசித்ரமான ஜகத்தை ஸ்ருஷ்டிக்க ஸமர்த்தமாகமாட்டாது ஆகையால் ப்ரக்ருதி ஜகத்காரணமாகமாட்டாதென்று ஸித்தாந்தம். ௧௭௫.

ஸூ-௧௭௬. பயோம்புவச்சேத்தத்ராபி.

(ஸு-ரா-வ்யா.) பயோம்புவத்சேத் - பால்போலவும் ஜலம்போலவும் (ப்ராக்ருதியும் ஜகத்தைஸ்ருஷ்டிக்கும்) என்றால், தத்ராபி - அந்த பால் ஜலங்களிலும், (பரமபுருஷன் அதிஷ்டித்திருக்கிறான்.) ௧௭௬.

(ஸு-ஸா.) பால் பசுவின் முலையிலிருந்து தானே வழிவதுபோலும், நீர்தானே ஓடுவதுபோலும் ஒருவனுடையவபேக்ஷையின்றியே ப்ரதாநமும் தானே ஜகத்ரூபமாகப்பரிணமிக்கிறதென்று பூர்வபக்ஷம். பாலைப்பசு, கன்றினிடமிரக்கும்போதே பெருகச்செய்கிறது; அன்றியே கன்று ஊட்டுகையாலும் பால் முலையில்நின்றும்ஒழுகுகிறது. இவ்விரண்டு காரணமுமின்றித் தானே பெருகுகிறதில்லை. நீர் பெருகுகைக்கும் தாழ்ந்ததேசமென்பதொரு காரணமுண்டு. அதுவுமன்றி அந்தர்யாம்யதிகரணத்தின்படி பாலிலும் நீரிலும் பரமாத்மா இருந்து அவற்றைப் பெருகச்செய்கிறானென்பது ஸித்தம். அவ்வித காரணமில்லாமையால் ப்ரக்ருதி ஜகத்காரணமாகமாட்டா. ௧௭௬.

(ரா-ஸா.) ஒரு புருஷப்ரயத்நமின்றியிலே பால் தயிராகவும், ஜலம் மதுரமான இளநீராகவும், புளிப்பான எலுமிச்சரஸமாகவும் பரிணமிக்கிறாப்போல் ப்ரக்ருதியும் ஜகத்ரூபயாகத்தானே பரிணமிக்கலாமேயென்னில், "யோப்ஸு திஷ்டந்" என்றுஜலம்முதலானவற்றிலும் பரமபுருஷன் அந்தர்யாமியாயிருக்கிறானென்றுசொல்லுகையாலே, ஜலாதிகளும் பரமபுருஷ ப்ரயத்நத்தினாலேயே இளநீர் முதலானவையாகப் பரிணமிக்கிறதென்றே கொள்ளவேண்டுமாகையால் அவை த்ருஷ்டாந்தமாகமாட்டா. ௧௭௬.

ஸூ-௧௭௭. வ்யதிரேகாநவஸ்திதேஶ்சாநபேக்ஷத்வாத்.

(ஸு-ரா-வ்யா.) அநபேக்ஷத்வாத் - புருஷாபேக்ஷையில்லாமையாலே, வ்யதிரேகாநவஸ்திதேஶ்ச - ஸ்ருஷ்டியில்லாம லிருக்கக்கூடாதென்கிற தோஷம் வருகையாலும், (அது ஜகத்காரணமாகாது.) ௧௭௭.

(ஸு-ஸா) ஜீவர்களுடைய கர்மமே ப்ரக்ருதியைப் பரிணமிக்கச் செய்கிறதென்னக்கூடாது. ஜீவன் நிர்லிப்தன், அவனொரு கார்யத்தில் ப்ரவர்த்திக்கமாட்டான். இப்படியிருக்க, ஸாம்யாவஸ்த்தையை யடைந்திருக்கிற ஸத்வரஜஸ்தமோ குணங்களின் ஸமுதாயமாகிற ப்ரக்ருதி ஒன்றற்கொன்றுப்ராதிக பாவத்தை யடைந்து ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறதென்பது அநுபபந்நமாயிருக்கும். ஸாம்யாவஸ்தையில் ப்ரக்ருதி யென்றும், வைஷம்யாவஸ்தையில் மஹதாதிகளென்றும் ஸாங்க்யர்கள் வ்யவஹரிக்கிறார்கள். ௧௭௭.

(ரா-ஸா.) புருஷனானால் அவன் தனக்கு இச்சையிருந்தபோது ஸ்ருஷ்டிக்கவும், இல்லாதபோது தவிரவும் கூடும். அசேதநமான ப்ரதாநத்திற்கு இச்சையில்லாமையாலே, இதுவே ஜகத்காரணமென்றபக்ஷத்தில் எப்போதும் ஸ்ருஷ்டித்துக்கொண்டே யிருக்கவேணும். அல்லது எப்போதும் ஸ்ருஷ்டிக்காமலே யிருக்கவேணும் இத்யாதி தோஷம் வரும். ௧௭௭.

ஸூ-௧௭௮. அந்யத்ராபாவாச்ச ந த்ருணாதிவத்.

(ஸ-ரா-வ்யா.) ந ந்ருத்ரு - எருதுதின்ற புல்லில், க்ஷீரவாக்யபாலா கப்பரிணமிக்கை யில்லாமையாலும், த்ருணாதிவத் - புல் பாலாகிருப்போ லே, (ப்ரதானம் ஜகத்தாகிறதென்றது), ந-கூடாது. கஎஅ.

(ஸ-ரா-ஹா.) பசு புல்லைத் தின்றால் அப்புல் தானாகவே பாலாய்ப் பரிண மிக்கிறது. அதற்கு ஒரு புருஷனுடையவும் ப்ரயத்னம் காண்கிறதில்லை; அது போலவே ப்ரக்ருதியும் ஸ்வதந்த்ரமாய் ஜகத்ரூபமாகப் பரிணமிக்கலாமே யென் னில், அப்புல்லையே எருது தின்றால் அது பாலாகப் பரிணமிக்கிறதில்லை. ஆகை யால் பசு தின்ற புல்லையும் பரமபுருஷனே பாலாகப் பரிணமிப்பிக்கிறனென்று அங் கீகரிக்கவேண்டுமோகையால் அதுவும் த்ருஷ்டாந்தமாகாது. கஎஅ.

ஸூ-கஎக. புருஷாச்மவதிதி சேத்ததாபி.

(ஸ-ரா-வ்யா.) புருஷாச்மவத் - குருடனை காலுள்ளபுருஷனைப் போலவும், இரும்பைப்போலவும், (ஜீவன் ப்ரக்ருதியைப் பரிணமிப்பிக்கி றான்) இதிசேத் - என்றால், ததாபி - அப்படியும்கூட; ப்ரதானம் ஜக த்ஸ்ருஷ்டியில் ப்ரவர்த்தியாது.) கஎக.

(ஸ-ரா-ஹா.) காந்தத்தை ஸமீபத்தில் வைத்தால் அசேதனமான இரும்பு இப்பால் சலிக்கத் தொடங்குகிறது, காலுள்ள ஒரு குருடன் தானே ஓரிடத்திற் குப் போக அஸமர்த்தனாயினும், கண்ணுள்ள ஒரு நொண்டி தானே ஓரிடம் போகச் சக்தியற்றவனாயினும், இந்த நொண்டி அந்த குருடன்மேலேறிக்கொண்டு இப்படி போவென்று சொன்னால் அந்த குருடன் போகிறான்; அதுபோலவே இந்த ப்ரக் ருதிக்குத் தானே ஸ்ருஷ்டிக்க சக்தியில்லாவிடினும் ஜீவன் வ்யாபாரசூன்யனாயிருந் தாலும் இந்த ஜீவன்தான் கிட்ட இருந்து அசேதனமான ப்ரக்ருதியை ஜகத்ஸ்ருஷ் டியிலேவுகிறான். எவுகையாவது சமீபத்திலிருக்கையே. அதினால் ப்ரக்ருதி ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறதென்று சொல்லலாமென்னில் —காந்தம் ஏதோ ஒரு வேளைதான் இரும்பின் கிட்ட இருக்கும்; அப்போது அதின் ஸம்பந்தத்தினால் இரும்பு சலிக் கிறது. அதில்லாதபோது சலிக்கிறதில்லை. நொண்டி ஏதோ ஒரு வேளையில்தான் வழி காட்டுகிறான்; அப்போதுதான் குருடன் போகிறான்; மற்றபோது போகிற தில்லை. இங்கு புருஷன் எப்போதும் ப்ரக்ருதிக்கு ஸமீபத்திலே யிருக்கையாலே ப்ரக்ருதி எப்போதும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டும்; ப்ரளய காலம் வரக்கூடாது ஆகையால் அவையிரண்டும் இவ்விடத்திற்கு த்ருஷ்டாந்தமாகமாட்டா. கஎக.

ஸூ - கஅ௦. அங்கித்வாநுபபத்தேச்ச.

(ஸ-ரா-வ்யா) அங்கித்வாநுபபத்தேச்ச - அங்கித்வம் கூடாமையா லும், (ப்ரக்ருதிஜகத்காரணமாகாது). கஅ௦.

(ஸ-ரா-ஹா.) ப்ரளயத்தில் ஸத்வரஜஸ்தமோ குணங்கள் ஸமமாயிருக்கிற தென்றும், ஸ்ருஷ்டிகாலத்தில் வைஷம்யத்தையடைந்து ஒன்று அதிகமாகவும் மற் றவை குறைந்தும் இருக்கிறதென்றும் இந்த விஷமாவஸ்தையே ஸ்ருஷ்டிக்குக் காரணமென்றும் சொன்னால், ப்ரளயத்தில் ஸமமாயிருந்த ப்ரக்ருதி ஸ்ருஷ்டிகாலத் தில் விஷமாவஸ்தையை யடைகைக்குக் காரணமில்லாமையால் அப்போது ஸ்ருஷ்டி க்கக்கூடாது. (அங்கியாவது—மூன்று குணங்களில் எது அதிகமாயிருக்கிறதோ அது அங்கியென்றும் குறைந்திருக்கிற மற்றையிரண்டும் அங்கமென்றும் பெயர்.) ஆகையால் ப்ரக்ருதிக்கு ஜகத்காரணத்வம் ஸம்பவியாது.

ஸூ-௧௮௧. அந்யதா²நுமிதௌ ச ஜ்ஞஶக்திவியோகா³த்.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) அந்யதா² - வேறுப்ரகாரமாக, அநுமிதௌ ச - ஊஹித்திலும், ஜ்ஞஶக்திவியோகா³த் - புருஷனுடைய ஜ்ஞாநசக்தியில்லாமையாலே, (கீழ்ச்சொன்ன தோஷங்கள் ஸம்பவிக்கும்.) ௧௮௧.

(ஶ்ரு-ஸா.) இப்போது சொன்ன யுக்திகளைவிட்டு வேறுவிதமான யுக்தியினால் ப்ரதாநம் ஜகத்காரணமென்று ஊஹித்தாலும், அதற்கு அப்போதும் ஜ்ஞானமில்லாமையாலே ஜகத்ஸ்ருஷ்டி ஸம்பவியாது. ௧௮௧.

ஸூ-௧௮௨. அப்⁴யுபக³மேঽப்யர்தா²பா⁴வாத்.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) அப்⁴யுபக³மேঽபி - (ப்ரதாநத்தை) ஒப்புக்கொண்டாலும், அர்தா²பா⁴வாத் - (அதினால்) ப்ரயோஜநமில்லாமையாலே, (அது ஸித்தியாது.) ௧௮௨.

(ஶ்ரு-ஸா.) இந்த ஸூத்ரம் சங்கரபாஷ்யத்தில் "புருஷாஶ்மவத்" என்கிற ஸூத்ரத்திற்குமுன் இருக்கிறது.—இப்படியொரு ப்ரக்ருதியென்பதை யங்கீகரித்ததினால் என்னப்ரயோஜனம். ஜீவன் எப்போதும் நிர்லிப்தனாகையால் அவனுக்கு இதனால் ஸம்ஸாரபோகமும் கிடையாது. அவன் எப்போதும் முக்தனாகையால் இதனால் அவனுக்கு உண்டாகவேண்டிய முக்தியும் கிடையாது. இப்படி ப்ரயோஜநமற்ற ப்ரக்ருதியை ஒப்புக்கொள்வது அநுசிதம். ௧௮௨.

(ப்ர-ஸா.) ஜீவனுக்கு ஸம்ஸாரமோக்ஷங்கள் ஸித்திக்கைக்காகப் ப்ரக்ருதியொப்புக்கொள்ளவேணும். நிர்விகாரனான ஜீவனுக்கு ப்ரக்ருதி ஸந்நிதாநத்தினால் ப்ரக்ருதியினுடைய தர்மங்கள் ஜீவனில் பிரதிபலிக்கிறது. இதுவே ஸம்ஸாரம். ப்ரக்ருதி புருஷவிவேகம்பண்ணி பின்பு யோகாப்யாஸத்தினால் ப்ரக்ருதி தர்மம் ஜீவனில் ப்ரதிபலியாமலிருக்கை மோக்ஷம் என்று கொண்டார்கள். ஸம்ஸாரம் இவ்விதமானால், ப்ரக்ருதியும் ஜீவனும் இரண்டும் நித்யமாய் ஸர்வகதமாகையாலே இரண்டுக்கும் ஸந்நிதாநமும் நித்யமாகையால் நித்யஸம்ஸாரமே ப்ரஸங்கிக்கும்; மோக்ஷமேயுண்டாகாது. மோக்ஷத்துக்கும் இந்தஸந்நிதாநமே காரணமானால் ஸம்ஸாரம் ஸித்தியாது; ஆகையால் ப்ரக்ருதியை ஒப்புக்கொண்டும் ஜீவனுக்கு ஸம்ஸாரமோக்ஷங்கள் ஸித்திக்காது. ஆகையால் இதை ஒப்புக்கொள்வதிலொரு ப்ரயோஜநமுமில்லை. ௧௮௨.

ஸூ-௧௮௩. விப்ரதிஷேதா⁴ச்சாஸமஞ்ஜஸம்.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) விப்ரதிஷேதா⁴ச்ச - பரஸ்பரவிருத்தமாகையாலும், அஸமஞ்ஜஸம் - (இம்மதம்) ஸமீசீநமன்று. ௧௮௩.

(ஶ்ரு-ஸா.) ஸாங்க்யமதத்தில் சில இடங்களில். ஏழு இந்த்ரியங்கள், மஹானிலிருந்து தந்மாத்ரைகளுக்கு உத்பத்தி, மூன்று அந்தஃகரணங்கள் சொல்லப்பட்டன; மற்றோரிடத்தில், பதினொரு இந்த்ரியங்கள், அஹங்காரத்திலிருந்து தந்மாத்ரைகளுக்கு உத்பத்தி, ஒரு அந்தஃகரணம் சொல்லப்பட்டது. இப்படி ஒன்றுக்கொன்று விருத்தமாயிருக்கையால் அம்மதம் ப்ரமாணமாகமாட்டாது. ௧௮௩.

(ப்ர-ஸா.) ப்ரக்ருதி, ஜீவனுடைய ஸம்ஸாரமோக்ஷங்களுக்காகஇருக்கிறது. அதினுடைய ஸந்நிதாநத்தினால் ஜீவன் கர்த்தாவாயும் போக்தாவாயும் ஆகிறான். அதின் ஸந்நிதாநத்தையே ஹேதுவாகக்கொண்டு முக்தனாகிறான் என்றும், ஜீவன்

நிர்விகாரன், இவன் கர்த்தாவாகவும் போக்தாவாகவுமாகிறதில்லை; இவனுக்கு ஸம்ஸாரபந்தமும் மோக்ஷமும் கிடையாது; நித்யமுக்தன் என்றும் பரஸ்பரவிருத்தமாகச் சொல்லுகையாலே இம்மதம் ஸயுக்திகமன்று. கஅக.

அபி-கஎ. ஸூ-கஅச. மஹத்தீர்க்கவத்வா ஹ்ரஸ்வபரிமண்டலாப்யாம்,

(ஸ-பா-வ்.) ஹ்ரஸ்வபரிமண்டலாப்யாம் - த்வ்யணுகத்தினாலும் பரமாணுவினாலும், மஹத்தீர்க்கவத்வா. மஹத்வதீர்க்கத்வ குணங்களையுடைய த்ர்யணுக (த்வ்யணுக) ங்களுடைய உத்பத்தியைப்போல் மற்றவையும் (ஸயுக்திகமன்று.) கஅச.

(ஸ-ஹா) ப்ரதாநகாரணவாதத்தில் உபாதாநகாரணமாகிய ப்ரதாநத்திலுள்ள ஸுகாதிகள் ஜடாத்மகமான ஜகத்தில் காணுகையால் ப்ரதாநம் ஜகத்காரணமாகமாட்டாதென்று தூஷணம் சொல்லில், இதற்கு ஸாங்க்யர் சொல்லுகிறார்கள்—ப்ரஹ்மம் ஜகத்துக்கு உபாதாநகாரணமென்கிற பக்ஷத்திலும், ப்ரஹ்மத்திலுள்ள சைதந்யம் ஜகத்தில்காணுகையால் ப்ரஹ்மமும் ஜகத்காரணமாகமாட்டாதென்கிற இத்தோஷம் ஸமாநமே என்று. இதற்கு ஸமாதானமாவது—இரண்டு பரமாணுக்கள் த்வ்யணுகத்துக்கு உபாதாநகாரணம். பரமாணுக்களிலுள்ள சுக்லம் முதலிய ரூபங்களும் மதுரம் முதலிய ரஸங்களும் இப்படியே மற்றுமுள்ள குணங்களுமே த்வ்யணுகத்திலுள்ள சுக்லம் முதலிய ரூபங்களுக்கும் மதுரம் முதலிய ரஸங்களுக்கும் மற்றுமுள்ள குணங்களுக்கும் காரணமாகிறது. பரமாணு ஒரு ரூபமாயிருக்கில் த்வ்யணுகம் மற்றொரு ரூபமாயாகமாட்டாது. அப்படியே த்வ்யணுகம் த்ர்யணுகத்துக்கும், த்வ்யணுகத்திலுள்ள ரூபாதிகள் த்ர்யணுகத்திலுள்ள ரூபாதிகளுக்கும் காரணமாகின்றன. ஆயினும் பரமாணுவிலுள்ள பாரிமாண்டல்யமென்கிற பரிமாணம் த்வ்யணுகத்திலுள்ள ஹ்ரஸ்வத்வ பரிமாணம் த்ர்யணுகத்திலுள்ள மஹத்வ தீர்க்கத்வங்களென்கிற பரிமாணங்களை உண்டாக்குகிறதில்லை. அதுபோலவே ப்ரஹ்மத்திலுள்ள சைதந்யமும் ஜகத்தில் சைதந்யத்தை யுண்டாக்குகிறதில்லை யென்று தாத்பர்யம். கஅச.

(ஸ-பா-ஹா.) இவ்வதிகரணத்தில் காணாதர்களை நிரஸிக்கிறார்—நாநா அவயவங்கள் சேர்ந்தால் அவயவியென்றொரு வஸ்து உண்டாகிறது. அந்த அவயவங்கள் அதிகமாகச் சேர்ந்தால் மேருவைப்போல் பெரியவஸ்துவும், அற்பமாகச்சேர்ந்தால் கடுகைப்போல் சிறியவஸ்துவும் உண்டாகிறது. இப்படி அவயவங்கள் குறையக் குறைய அதற்கு ஓரிடத்தில் எல்லை சொல்லி நிறுத்தவேண்டும். அந்த எல்லையான அவயவம் பரமாணு. அப்பரமாணுக்கள் ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தினால் ஒன்றுக்கொன்று சேர்ந்து த்வ்யணுகம் முதலாக ஜகத்உண்டாகிறது. என்று காணாதர் சொன்னார்கள். இது அஸங்கதம்—ஏனென்றால்,—ஒரு அவயவத்திற்கு நாலு திக்கில் நாலும் மேலும் கீழுமாக இரண்டும் ஆக ஆறு பக்கங்கள், அவ்வாறுபக்கங்களோடுசேர்ந்து (நூல்)முதலிய அவயவங்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்து படம்(வஸ்த்ரம்) முதலிய அவயவியுண்டாகிறது. அதுபோலவே த்வ்யணுகமுண்டாகும்போதும் பரமாணுக்கள் தன்னுடைய ஆறு பக்கங்களோடு ஒன்றுக்கொன்று சேர்ந்து த்வ்யணுகத்தை உண்டாக்குகிறதுகள் என்று அங்கீகரிக்கவேணும். பரமாணு நிரவயவமானால் அவை ஆயிரம் சேர்ந்தாலும் ஒரு பெரிய வஸ்து உண்டாகமாட்டாதாகையால் அவற்றுக்கும் அவயவம் ஒப்புக்கொள்ளவேணும். இப்படியே அவற்றினவயவத்திற்கும். இந்த யுக்தியினால் அவயவத்துக்குக் கீழ் எல்லை இருந்ததென்று ஏற்படாது. ஆகையால் பரமாணுக்கள் ஜகத்காரணங்களாகமாட்டா. இதுபோலவே அவர்களொப்புக்கொண்ட மற்றவையும் அஸங்கதங்களாகையால் அம்மதம் சரியன்று.

கஅ

ஸூ-௧௮௫. உபயதாபி ந கர்மாதஸ்ததபாவ:.

(ஸ - வ்ய.) உபயதா-ப்ரயத்னத்தினாலும், அபிகாதத்தினாலும், கர்ம ந-சலநமுண்டாகாது, அத: - ஆகையினால், ததபாவ: - பரமாணுஸம்யோகமில்லை.

(ரா - வ்ய.) உபயதாபி - அத்ருஷ்டரூப கர்மத்தைச் சேதநனிடத்தி லொப்புக்கொண்டாலும் பரமாணுவிடத்தி லொப்புக்கொண்டாலும், கர்ம - அத்ருஷ்டமானது, ந - காதாசித்கமாகக்கூடாது; அத: - ஆகையினால், ததபாவ:-கர்மத்தினால் பரமாணுஸம்யோகம்கூடாது.௧௮௫.

(ஸ-பா.) இதில் பரமாணுகாரணவாதிகள் நிரஸிக்கப்படுகிறார்கள். அவர்கள் லோகத்தில் வஸ்த்திரம்நெய்கிறவன் நெய்கைக்குப்பிரயத்தினம்செய்ய, அவனுடைய ப்ரயத்தினத்தினால் நூல்களில் சலநமுண்டாய் அதினால் ஒருநூல் மற்றொருநூலுடன் சேர்ந்து வஸ்த்திரம் உண்டாகிறது. அதுபோலவே லோகத்திலுள்ள மண், நீர், தீ, காற்று, என்கிற நாலுவிதமான வஸ்துக்களும் உண்டாவது நசிப்பதாய்க் காண்கையாலே, அவைகள், அவற்றுக்குக்காரணமாகிய அவயவங்களில் க்ரியையுண்டாய்ப்பின்பு ஸம்யோகமுண்டாய் அது மூலமாக உண்டாகின்றனவென்று நிர்ணயிக்கப்படுகிறது. வஸ்திரத்துக்கு நூல்போலே பெரிதுக்கு சின்னது அவயவமாகும். இவ்வவயவ பரம்பரை கீழ் கீழ்போய் ஓரிடத்தில் நில்லாவிடில் அநவஸ்த்தைவரும். ஆகையால் அதைப் பரமாணுவில்நிறுத்தி அப்பரமாணுக்கள் நித்யங்களென்று அங்கீகரிக்கவேணும். ஆதியில் ஸ்ருஷ்டியுண்டாகும்போது கீழ்ச்சொன்னவிதம் பரமாணுக்களில் சலநமுண்டாய் அவை ஒன்றோடொன்று சேர்ந்து, த்வ்யணுகம் முதலாகக் கார்யங்களை உண்டுபண்ணுகின்றனவென்று சொல்லுகிறார்கள்; ஆகையால் பரமாணுக்களே ஜகத்காரணமாயிருக்க ப்ரஹ்மம் ஜகத்காரணமாகக்கூடாதென்று பூர்வபக்ஷம். அதை தூஷிக்கிற விதமாவது—கிரியை - அதாவது - சலநம், ஒருவனுடைய பிரயத்தினத்தினாலாவது அபிகாதத்தினாலாவது உண்டாகவேணும். ஜீவனுடைய ப்ரயத்தினத்தினால் சரீரத்தில் சேஷ்டையும், ஒருவனசைப்பதினால் மரம் முதலியவற்றில் சலநமுமுண்டாகக்காண்கிறோம். மற்றப்படி சலனம் காணவில்லை. ஆதிஸ்ருஷ்டியில் பரமாணுக்களில் சலனமுண்டாம்போது எதினாலுண்டாயிற்று. ப்ரயத்நம் முதலியவை ஜகத்ஸ்ருஷ்டிக்குப் பின்பு உண்டாகப்போகிறதாகையால் அப்போதவை கிடையாது. அவையில்லாமல் சலநமுண்டாகாது, ஆகையால் பரமாணுகாரணவாதம் யுக்தியுக்தமன்று. ௧௮௫.

(ரா-பா.) இதுமுதல் அவர்களுடைய அஸங்கதியைச் சொல்லுகிறது. அத்ருஷ்டம் பரிபக்வமானால் பரமாணுவில் க்ரியை உண்டாகிறது. அதினால் ஜகத்து உண்டாகிறது என்றார்கள், அந்த அத்ருஷ்டம் ஜீவனிடத்திலாவது இருக்கட்டும் பரமாணுவிலாவது இருக்கட்டும். எங்கேயிருந்தாலும் அது நித்யமாகையால் இதற்குமுன் அந்த அத்ருஷ்டத்தினால் பரமாணுக்கள் சேர்ந்து ஜகத்து ஏன் உண்டாகவில்லை. அது இப்போதுதான் பரிபக்வமாயிற்றென்றால் இவ்வளவு ஜீவன்களுடைய அத்ருஷ்டம் ஒரேகாலத்தில் பரிபக்வமாயிற்றென்பதில் என்னப்ரமாணம்; ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தினால் பரமாணுவில் க்ரியை உண்டாயிற்றென்றால் உங்களுடைய அநுமானத்தினால் ஈச்வரன் ஸித்திக்கமாட்டானாகையால் அவனுடைய ஸங்கல்பத்தினாலுண்டாகிறதென்பதும் கூடாது, ஆகையால் பரமாணுவில் க்ரியையுண்டாகைக்குக் காரணமில்லாமையால் ஜகத்ஸ்ருஷ்டி ஸித்தியாது. ௧௮௫.

ஸூ-௧௮௬. ஸமவாயாப்யுபகமாச்ச ஸாம்யாதநவஸ்திதே:.

(ஶ்ரு-ரா-வ்யா.) ஸமவாயாப்யுபகமாச்ச - ஸமவாயமென்கிற ஸம்பந்த மொப்புக்கொள்ளுகையினாலும், ஸாம்யாத் - (ஸமவாயத்திற்கு மொரு ஸம்பந்தம் வேண்டுமென்கிற) ஸாம்யத்தினால், அநவஸ்திதே: - அநவஸ்த்தா ப்ரஸங்கம் வருமாகையால், (இம்மத மஸமஞ்ஜஸம்.) கஅசு.

(ஶ்ரு-ஸா.) த்வ்யணுகாதிகள் பரமாணுவாதிகளில் ஸமவாயஸம்பந்தத்தினா லிருக்கிறதென்று அவர்கள்மதம். அப்போது ஸமவாயம் கடாதிகளில் இருக்கும்போது அதற்கொரு ஸம்பந்தம் வேணும், அப்படியே அந்த ஸம்பந்தத்துக்குமொரு ஸம்பந்தம் வேணும் என்று அநவஸ்த்தை வருமாகையால் அம்மதம் சரியன்று. கஅசு.

(ரா-ஸா.) கடாதிகள் பூதலத்திலிருக்கும்போது அவையிரண்டுக்கும் ஸம்யோகமென்றொரு ஸம்பந்தம் காணப்படுகிறது. அதினால், ஒன்று மற்றொன்றிலிருக்கும் போது அவையிரண்டுக்கும் ஒரு ஸம்பந்தம் வேணும். அது ஸம்யோகமென்றும் ஸ்வரூபமென்றும் பலவிதமாயிருக்கும். ஸம்யோகமென்பது எந்தத்ரவ்யம் முன்பு ஓரிடத்திலிருந்து பின்பு எந்த இடத்தில் வந்து சேருகிறதோ அவையிரண்டுக்கு முண்டான ஸம்பந்தம். அது மற்றொன்றுக்கு ஸம்பந்தமாகமாட்டாது. அப்படியே, ரூபாதி குணங்களுக்கும் த்ரவ்யத்திற்கு மொரு ஸம்பந்தம் வேண்டுமென்று ஸமவாயமென்றொரு ஸம்பந்த மங்கீகரித்தார்கள். இப்படியானால் ஸமவாயத்திற்கும் த்ரவ்யத்திற்குமொரு ஸம்பந்தம்வேண்டுமாகையால் அதற்காக வேறொரு ஸம்பந்த மங்கீகரிக்க வேணும். அதற்கு மப்படியே யென்று அநவஸ்த்தைவரும். ஸமவாயத்திற்கு ஸ்வரூபமே ஸம்பந்தமென்றால் ரூபாதிகளுக்குங்கூட ஸ்வரூபமே ஸம்பந்தமென்று சொல்லவமையுமாகையால் ஸமவாயம் ஸித்தியாது. கஅசு.

ஸூ-கஅஎ. நித்யமேவ ச பாவாத்.

(ஶ்ரு-ரா-வ்யா.) நித்யமேவ - நித்யமாகவே, பாவாச்ச - (குணகுணிகள்) இருக்கையாலும் (கார்யகாரணபாவம் ஸித்தியாது). கஅஎ.

(ஶ்ரு-ஸா.) மேலும், பரமாணுக்களுக்கு ஸ்ருஷ்டிக்கை ஸ்வபாவமா, அல்லது ஸ்ருஷ்டியாமலிருக்கையா, இரண்டுமா, இரண்டுமற்றிருக்கையா, ஸ்ருஷ்டிக்கை அவற்றுக்கு ஸ்வபாவமாகில் அது நித்யமேயுள்ளதாகையால்நித்யம் ஸ்ருஷ்டியுண்டாகட்டும்; இரண்டாம்பக்ஷத்தில் ஸ்ருஷ்டியே உண்டாகாமற்போகவேண்டிவரும்; மூன்றாம்பக்ஷத்தில், இரண்டு ஸ்வபாவமொன்றுக்குக் கூடாமையால் அது சொல்லக் கூடாது. நாலாம்பக்ஷத்தில் காரணமுள்ளபோது ஸ்ருஷ்டியும், அதில்லாதபோது ப்ரளயமுமென்று ஏற்படுகிறது. அக்காரணம் ஜீவன்களுடைய அத்ருஷ்டமாகவேணும். அவை நித்யமாகையால் முன்சொன்ன தூஷணங்களே வருமாகையால் அப்பக்ஷம் கூடாது. கஅஎ.

(ரா-ஸா.) ஸமவாயமென்கிற ஸம்பந்தம் நித்யமானால் அது நிராஶ்ரயமாயிராதாகையால்அதற்காஶ்ரயமான அவயவாவயவிகளாகிற கடகபாலங்களும்நித்யமாகவேணும். அப்போது ஒன்று காரணமென்றும் ஒன்று கார்யமென்றும்ஸித்தியாது. கஅஎ.

ஸூ-கஅஅ. ரூபாதிமத்வாச்ச விபர்யயோ தர்ஶநாத்.

(ஶ்ரு-ரா-வ்யா.) ரூபாதிமத்வாத் - (ப்ருதிவீஜல தேஜோவாயு பரமாணுக்கள்) ரூப ரஸ கந்த ஸ்பர்சவத்துக்களாகையாலே, தர்ஶநாச்ச - (ரூபாதிமத்தான கடாதிகள் அநித்யமாகக்) காண்கையாலும், விபர்யய: (பரமாணுக்களுக்கும்) அநித்யத்வம்வரு கஅஅ

உ-வது அத்தியாயம் உ-வது பாதம்

(ஶ்ரு-ப்ர-ஹா.) கடம்முதலியரூபவத்தான வஸ்துக்கள் அநித்யமாகக் காண்கை யாலே, தத்நுகுணமாக ரூபவத்துக்களெல்லாம் அநித்யங்களென்று வ்யாப்தி ஸித்திக் கையாலே ரூபவத்தான பரமாணுவும் அநித்யமாக வேண்டும். கஅஅ.

ஸூ-கஅகூ. உபயதா ச தோஷாத்.

(ஶ்ரு ப்ர-வ்ய:) உபயதா ச - ரூபாதிகளைப் பரமாணுக்களில் ஒப்புக் -காண்டாலும் ஒப்புக்கொள்ளாமற்போனாலும், தோஷாத் - தோஷம் ஸம்பவிக்கையால் (இம்மத மஸங்கதம்.) கஅகூ.

(ஶ்ரு-ஹா.) மேலும், ப்ருதிவியில், ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம் என்கிற நாலு குணங்களும், ஜலத்தில் கந்தம்தவிர்த்து மற்றமூன்றும், தேஜஸ்ஸில், ரூபஸ்பர்ஶங்க ளும், வாயுவில் ஸ்பர்சமும் ஒப்புக்கொண்டார்கள். இம்மாதிரி அவ்வவபரமாணுக்களி லும் ஒப்புக்கொண்டால் ப்ருதிவீபரமாணு வாயுபரமாணுவைக்காட்டிலும் பெரிதா கக்காணவேணும். எது எதைக்காட்டிலும் அதிககுணமுள்ளதோ, அது அதைக்கா ட்டிலும் பெரிதாயே லோகத்தில் காண்கிறது. ஒருபலம் சந்தனத்தில் கொஞ்சம் வாசனையும், பத்துபலம் சந்தனத்தில் அதிகவாசனையும் இதுக்கு த்ருஷ்டாந்தம். அப் படி ஒப்புக்கொள்ளாமல் நாலுவிதமான பரமாணுக்களிலும் நாலுகுணங்களு மூன் றென்றாவது, ஒரேகுணமுண்டென்றாவது, அல்லது குணமே இல்லையென்றாவது ஒப்புக்கொண்டால் முதல்பக்ஷத்தில் ப்ருதிவ்யாதி வாயுபர்யந்தமான கார்யங்களி லும் அந்நாலுகுணங்களும் இருக்கவேணும். இரண்டாம்பக்ஷத்தில் எல்லாக்கார்யங்க ளும் ஒரேகுணமுள்ளதாகவேணும், மூன்றாம்பக்ஷத்தில் கார்யங்கள் நிர்குணமாக வேண்டும். ஆகையால் அம்மதம் சேராது. கஅகூ.

(ப்ர-ஹா.) நூல் வெளுப்பாகில் அதினாலுண்டான வஸ்த்திரம் வெளுப்பாகவும், கறுப்பாயிருந்தால் கறுப்பாகவும் காண்கையாலே, காரணத்தில் எந்த குணமிருக்கிற தோ, அதேகுணம் கார்யத்திலுமுண்டாகிறது; மற்றொரு குணமுண்டாகாது. இப்படி யிருக்க, கார்யமான ஜகத்தில் ரூபம் காண்கையாலே அதற்குக் காரணமாகப் பரமா ணுக்களில் ரூபம் ஒப்புக்கொள்ளவேணும். அப்படி பரமாணுக்களில் ரூபாதிகளொ ப்புக்கொண்டால் கீழ்ச்சொன்ன வ்யாப்தியாலே அவை அநித்யமாம். அதற்காக அவற்றில் ரூபாதிகளை யொப்புக்கொள்ளாமற் போனால், காரணம் ரூபசூந்யமானால் கார்யமும் ரூபசூந்யமாகுமாகையால் பரமாணு கார்யமான ஜகத்தும் ரூபசூந்யமாக வேண்டிவரும். இப்படி இரண்டுவிதத்திலும் தோஷம் தவிராது. கஅகூ.

ஸூ-ககூ0 அபரிக்ரஹாச்சாத்யந்தமநபேக்ஷா.

(ஶ்ரு-ப்ர-வ்ய.) அபரிக்ரஹாச்ச - (இம்மதத்தை சிஷ்டர்கள்) பரிக் ரஹியாமையாலும், அத்யந்தமநபேக்ஷா - அத்யந்த முபேக்ஷைசெய்ய வேண்டியது. ககூ0.

(ஶ்ரு-ப்ர-ஹா.)ஸாங்க்யமதத்தில் வேதவிருத்தார்த்தங்களிருந்தாலும் ஸத்கார்ய வாதம் முதலிய சிலஅர்த்தம் வைதிகஸம்மதமாயிருந்தது. இதில் எல்லாம் வேதவி ருத்தமாகையால் இதை வைதிகர்கள் கொஞ்சமும் ஆதரிக்கக்கூடாது. ககூ0.

அதி-ச அ. ஸூ ககூக. ஸமுதாய உபயஹேதுகேऽபி ததப்ராப்தி:.

(ஶ்ரு-ப்ர-வ்ய.) உபயஹேதுகேऽபி - பரமாணுக்களை [illegible] வாக உடையதும் ப்ருதிவ்யாதிகளை ஹேதுவாக உடையதுமான, [illegible]

உபயே - ப்ருதிவ்யாதி ஸமுதாயத்திலும் சரீரேந்த்ரியாதிஸமுதாயத்திலும், தத்ப்ராப்தி: - ஸமுதாயத்வ ப்ராப்தி (ஜகத்ரூபமான ஸமுதாயோத்பத்தி) ஸம்பவியாது. ககூக.

(ஸ - ஸ்ரீ.) ப்ருதிவீ பரமாணு ஜலபரமாணு தேஜ:பரமாணு வாயுபரமாணுவென்று பரமாணுக்கள் நான்குவிதமாயிருக்கும், ப்ருதிவியென்று வேறோரவயவியிடையாது. ப்ருதிவீ பரமாணுக்களின் கூட்டமே ப்ருதிவியெனப்படும்; இவ்வண்ணமே ஜலாதிகளிலும் காண்க. பரமாணுக்களின் ஸமுதாய ரூபமாயிருக்கிற ப்ருதிவீ ஜலம் தேஜஸ்ஸு வாயுவென்கிற பூதங்களில்நின்றும் சரீராதிகளும் இந்த்ரியங்களும் ஆத்மாவென்கிற ஆலய விஜ்ஞானமும், ஸுகது:கானுபவமும், வஸ்துக்களையறியும் ஜ்ஞானமும், ராகத்வேஷமோஹ தர்மாதர்மங்களு முண்டாகின்றன. இவ்வளவினாலேயே லோகவ்யவஹாரம் நடந்து வருகிறது, ஆகையால் இதைவிட வேறுவஸ்துவில்லையென்றார்கள் வைபாஷிகர். அவர்களுக்குத்தரமாயிருக்கிற திந்த ஸூத்ரம். பரமாணுக்கள் ஜடமாகையால் ஒருவன் சேர்க்காமல் தானே ஒன்றுக்கொன்று சேர்ந்து ஸமுதாயமாக மாட்டாது. ஆலயவிஜ்ஞானமென்பது, பரமாணுக்கள் ஸமுதாயமானபிறகு அதில்நின்று உண்டாகிறதாகையால் அது ஸமுதாயத்துக்குக் காரணமாகாது. இவற்றைக்காட்டிலும் வேறாய், இவற்றைச் சேர்க்கவல்ல ஒருசேதநனை நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. சேதநனன்றியே தானே சேரும்படியான ஸ்வபாவமவற்றுக்கொப்புக்கொள்ளில், அவை எப்போதும் சேர்ந்துக்கொண்டேயிருக்கவேணும். ப்ரளயத்திலு மொழியக்கூடாது. மேலும் இவை உண்டான மறுக்ஷணத்தில் நசிக்கிறவைகளாகையால், இவை முதலிலுண்டாய், அதற்குமேல் இவற்றில் வ்யாபாரமுண்டாய், அதற்குமேல் மூன்றாம்க்ஷணத்தில் சேருமளவும் மூன்றுக்ஷணமிருக்கிறனவென்றொப்புக்கொள்ளாமையாலும் ஸமுதாயமுண்டாகமாட்டாது. ஆகையாலம்மதம் நிலைபெற்றதன்று. ககக

(ஸ்ரீ-ஸா.) இவ்வதிகரணத்தில் வைபாஷிகனையும் ஸௌத்ராந்திகனையும் நிரஸிக்கிறார்—இவ்விருவரும், ப்ருதிவீஜலதேஜோவாயுவென்கிற நாலுவிதமான பரமாணுக்களுண்டு. அவை கும்பலாய்ச்சேர்ந்தால், ப்ருதிவ்யாதி நாலுபூதங்களுண்டாகின்றன. அந்தநாலுபூதங்களும்சேர்ந்தால் சரீரேந்த்ரியாதிகளுண்டாகின்றன. ஜ்ஞாநபரம்பரையே ஆத்மா. இவையெல்லாம் முதல்க்ஷணத்திலுண்டாய் இரண்டாம்க்ஷணத்தில் நசிக்கின்றனவாகையால் க்ஷணிகங்களாம். என்றார்கள். இது அஸங்கதம். ஏனென்றால்— பரமாணுக்கள் முதல்க்ஷணத்தில் உத்பந்நமாய் இரண்டாம்க்ஷணத்தில் சேர்ந்து மூன்றாம்க்ஷணத்தில் ப்ருதிவ்யாதியாய், அதற்குமேல் அதைக்காரியத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளவேணும். பரமாணுக்களும் ப்ருதிவ்யாதிகளும் க்ஷணிகமானால் அவை ஒன்றோடொன்று சேரவேண்டிய ஸமயத்திலேயே நஷ்டமாய்விட்டபடியால் அவைகளால் ப்ருதிவ்யாதிகளும், அவைகளால் சரீராதிகளும் உண்டாகமாட்டா. ககக.

ஸூ-கக௯, இதரேதரப்ரத்யயத்வாதுபபந்நமிதி சேந்ந
ஸங்காதபாவாநிமித்தத்வாத்.

(ஸ-ரா-வ்ய.) இதரேதரப்ரத்யயத்வாத் - அவித்யைமுதல் ப்ருதிவ்யாதிபர்யந்தமான பதார்த்தங்கள் ஒன்றுக்கொன்று காரணமாக உடைத்தானதாகையாலே, உபபந்நம் - (ஜகதுத்பத்தி) உபபந்நமாகிறது. இதி சேத் - என்றால், ஸங்காதபாவாநிமித்தத்வாத் - (அவித்யைக்கு) ஸமுதா

யத்தின் கார்யமான வ்யவஹாரங்களைக் குறித்துக் காரணத்வமில்லாமை யாலே, ந - (அதுவும்) ஸம்பவியாது. ௧௯௨.

(ஶ-ஹா.) இந்தபாஷ்யத்துக்கு ,,இதரேதரப்ரத்யயத்வாதிதி சேந்நோத்பத்திமாத்ரநிமித்தத்வாத்" என்று ஸூத்ரபாடம். இதற்கர்த்தம்—அவித்யை முதலானவற்றினால் ஸமுதாய முண்டாகிறது. மறுபடி அந்தஸமுதாயத்தினால் அவித்யை முதலானவை யுண்டாகிறது என்று ஒப்புக்கொள்ளக் கூடாது, ஏனென்றால் முன்புண்டான அவித்யை முதலானவை மேல்மேலுண்டாகும் பரமாணுக்களுக்குக் காரணமென் றொப்புக்கொள்ளினும் அவற்றின் ஸமுதாயத்திற்குக் காரணமாகமாட்டாது என்று. மேலும் பீஜாங்குரம் போல் அவித்யையினால் ஸமுதாயம், ஸமுதாயத்தினால் அவித்யை என்று இவ்விதமான உத்பத்தியை அநாதியென் றொப்புக் கொள்ளினும், இந்தஸமுதாயம் எவனுடைய போகத்திற்காக உண்டாகிறதோ, இதுண்டானபிறகு இதை யபேக்ஷித்து இதனால் ஸுகம் பெறத்தக்க ஒரு ஸ்த்திரமான ஆத்மாவைக் காணவில்லை· அவனநுபவிக்கும் வரையில் இந்த ஸமுதாயமும் ஸ்திரமாக· இருக்கிறதில்லை யாகையால். இதனால் லோகவ்யவஹாரம் நடக்காது. ௧௯௨.

(ரா-ஹா.) பரமாணுக்கள் க்ஷணிகமாயினும் ஜகதுத்பத்திஸம்பவிக்கும் - எப்படியென்றால்,—அஸ்திரமான ப்ருதிவ்யாதிகளில் ஸ்திரமென்ற அவித்யை. அதாவது அஜ்ஞானம். அந்த அவித்யையினால ராகத்வேஷாதிகள், அவற்றால் சித்தாபிஜ்வலந மென்கிற விஜ்ஞாநம, அதினால் த்ரவ்யோத்பத்தி, அதினால் இந்த்ரியோத்பத்தி. அதினால் சரீரோத்பத்தி, அதினால் ஜ்ஞாநம், அதினால் மறுபடியும் அவித்யை, இந்தமாதிரி சக்கிரம்போல் இவையே மாறி மாறி உண்டாகின்றன வாகையால் ஜகதுத்பத்தியில அநுபபத்தியில்லை யென்றால். ஆயினும். அஸ்திரத்தில் ஸ்திரம் என்கிற அவித்யையினால அஸ்த்திரமான ஜகத்து ஸ்த்திரமாக மாட்டாது. அதினால் ஒருகார்யமும் ஸாதிக்கமுடியாது. ஆத்மாவும அநித்யமாகையால ஜ்ஞாநம் பிறந்த இரண்டாம க்ஷணத்தில் நசித்துப்போகையால அதினால ராகத்வேஷாதிகள் யாருக்கு உண்டாகும்? ஆகையாலிம்மதம் சரியன்று. ௧௯௨

ஸூ-௧௯௩. உத்தரோத்பாதே ச பூர்வநிரோதாத்.

(ஶ-ரா-வ்ர.) உத்தரோத்பாதே-உத்தரக்ஷணம் உண்டாகும் ஸமயத்தில், பூர்வநிரோதாச்ச - பூர்வக்ஷணம் நசிக்கையாலும், (ஜகதுத்பத்தி கூடாது.) ௧௯௩.

(ஶ-ரா-ஹா.) மேலும் கடம் உண்டாகைக்குக் காரணமெது? அதற்குமுன் க்ஷணம் காரணமென்று சொன்னால், அந்தக்ஷணம் கடமுண்டாகும்போது நசித்துப்போனபடியால் கடமுண்டாகக்கூடாது. பூர்வக்ஷணாபாவமே ஹேதுவென்றால், இந்த அபாவம் எல்லாவற்றுக்கும் ஸமானமாகையாலே கடமுண்டாகும்பேரது மற்ற எல்லா வஸ்துக்களு முண்டாகவேணடிவரும். கடாதிகரண பூர்வக்ஷணாபாவ ரூபகாரணத்தினால் கடஜாதியேயுண்டாகிறதென்றால், தேசாந்தரத்திலிருக்கிறகடமும் இங்கு உண்டாகவேண்டும். ஒருவ்யக்தியே யுண்டாகிறதென்றால், எந்தவ்யக்தி யுண்டாகிறதோ அதைச்சொல்லவேணும். எந்ததேசத்தில் எந்தவ்யக்தி யிருந்ததோ, அந்ததேசத்தில் தத்தேசஸம்பந்தியான வ்யக்தியே யுண்டாகிறதென்னில், பூர்வோத்தரக்ஷணங்களிலொருதேசத்தை ஸ்த்திரமாகக் கொள்ளாமையாலே இதுவும் ஸம்பவியாது. ௧௯௩.

ஸூ-௧௧௪. அஸதி ப்ரதிஜ்ஞோபரோதோ யௌகபத்யமந்யதா.

(ஸூ-ரா-வ்யா.) அஸதி - காரணமில்லாமலே கார்யமுண்டாகிறதென்னில். ப்ரதிஜ்ஞோபரோத: - (இந்த்ரியம், ப்ரகாசம், விஷயம் முதலிய காரணங்களினால் பதார்த்த தர்சனாதி கார்யமுண்டாகிறதென்கிற உங்களுடைய) ப்ரதிஜ்ஞைக்கு விரோதம் வரும். அந்யதா - இந்த அநுபபத்தி போகைக்காக, பூர்வகடத்துக்குக்காரணமான க்ஷணமே இந்தகடோத்பத்தி வரையில் இருக்கிறதென்று ஒப்புக்கொண்டால், யௌகபத்யம் - பூர்வ கடக்ஷணமும் இப்போதுண்டானக்ஷணமும் ஒரேகாலத்தில் தோற்றவேண்டிவரும். (அப்படிதோற்றுகிறதில்லை, ஆகையால் இந்த கார்யகாரணபாவம் சரியன்று.) ௧௧௪.

ஸூ-௧௧௫. ப்ரதிஸங்க்யாப்ரதிஸங்க்யா நிரோதாப்ராப்திரவிச்சேதாத்.

(ஸூ-ரா-வ்யா.) அவிச்சேதாத்-(ம்ருத்பிண்டாதிகளுக்கு) நாசம் காணாமையாலே, ப்ரதிஸங்க்யா ப்ரதிஸங்க்யா நிரோதாப்ராப்தி: - ஸ்தூல விநாசமும் ஸூக்ஷ்மவிநாசமும் ப்ராபியாது (ஸம்பவியாது). ௧௧௫.

(ஸூ-ஹா.) ப்ரதிஸங்க்யையாவது - இதை அழிப்பேன் என்கிறபுத்தி, அதினால் உண்டாகும் நாசத்துக்கு, ப்ரதி ஸங்க்யா நிரோத மென்று பெயர். அதைக்காட்டிலும் வேறானது, அப்ரதிஸங்க்யா நிரோத மெனப்படும். புத்தி பூர்வகமாக அழிக்க அழிகை ப்ரதிஸங்க்யா நிரோதமென்றும், ஒருவனழிக்காமல் தானேயழிகை அப்ரதிஸங்க்யாநிரோத மென்றும் தாத்பர்யம். இவ்விரண்டுவிதமான நாசமும் கூடாது; ஏனென்றால், ஸ்தூலத்திலிருந்து வேறொருஸ்தூலமும், ஸூக்ஷ்மத்திலிருந்து வேறொருஸூக்ஷ்மமும். உண்டாம் பக்ஷத்தில் அவற்றுக்கு மேல்மேல் ஸஜாதியான வஸ்துக்களை உண்டாக்குகை ஸ்வபாவமாயிருக்க, அந்தஸ்வபாவத்திற்கு அழிவையொப்புக்கொண்டு இனிமேல் அந்த வஸ்து வேறொன்றை உண்டாக்குகிறதில்லை யென்று முடித்து விடுவது என்பது சேராது. ஆகையாலும் இப்பக்ஷம் நன்றன்று. ௧௧௬.

(ரா-ஹா.) கடாதிகள் தண்டம் முதலானவைகளினால் அடிபட்டு உடைந்தால் அந்த நாசத்திற்கு ப்ரதிஸங்க்யாநிரோதமென்றும், ப்ரதிக்ஷணம் உண்டாகிற கடநாசத்திற்கு அப்ரதிஸங்க்யா நிரோதமென்றும் பெயர். முதலாவது - ஸ்தூலநாசம்; இரண்டாவது ஸூக்ஷ்மநாசம். இவ்விரண்டுவிதமான நாசமும் த்ரவ்யத்திற்கு ஸம்பவியாது. ஏனென்றால், விநாசமாவது த்ரவ்யத்திற்கு ஓரவஸ்த்தையென்றும், அது த்ரவ்யத்தை யாஸ்ரயித்திருக்கிறதென்றும் எங்களைப்போல் நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. விநாசமென்கிற அவஸ்தைக்கு ஆஸ்ரயமே இல்லையென்கிறீர்கள். நாங்கள் இதற்குமுன்னமே ஆரம்பணாதிகரணத்தில் உத்பத்திவிநாசங்கள் அவஸ்த்தா விசேஷங்களென்றும், அவை ஒருத்ரவ்யத்தை யாஸ்ரயித்தேயிருக்குமென்றும் ஸ்தாபித்திருக்கிறோம். ஆகையால் நீங்கள்சொல்லுகிற நிரன்வயவிநாசம்ஸம்பவியாது. ௧௧௬.

ஸூ - ௧௧௬. உபயதா ச தோஷாத்.

(ஸூ-வ்யா.) உபயதா ச - அஜ்ஞானம் ஜ்ஞானத்தினால் நசிக்கிறதென்றாலும் தானே நசிக்கிறதென்றாலும், தோஷாத் - தோஷமுண்டாகையால். (அம்மதம் சரியன்று.)

...) உபயபாவி - துச்சத்திலிருந்து ஜகத்து உண்டா ...ம், உத்பந்நமான ஜகத்து துச்சமென்றாலும் ...தோஷம் ஸம்பவிக்கையாலே, இம்மதமஸங்கதம்.) கககூ.

(ஶ-ஹா.) மேலும் அஜ்ஞானம் நசிக்கும் போது அது, ஒளியினால் இருள் போல், ஜ்ஞானத்தினால் நசிக்கிறதா, அல்லது தானே நசிக்கிறதா, ஜ்ஞானத்தினால் நசிக்குமாகில், காரணமின்றியே நசிக்கிறதென்று நீங்களொப்புக்கொண்டது விரோதிக்கும். தானே நசிக்குமாகில், வழிதெரியாத குருடனுக்கு வழியறியாமையாகிற அஜ்ஞானத்தைப் போக்குகைக்காக வழிகாட்டுகை வீணாய்விடும். இப்படி இருவழியிலும் உங்கள் மதத்தில் தோஷமுண்டென்கிறார்கள். ககரு.

(ரா-ஹா.) துச்சமென்பது - குதிரைக்கொம்புபோல் இல்லாதவஸ்துவை. ஜகத்து உனக்கும் காண்கையாலே அதைத் துச்சமென்னவொண்ணாது. துச்சத்தில் நின்றும் ஜகத்து உண்டாகிறதென்று நீ கீழ்ச்சொன்னபடி ஒப்புக்கொண்டால், ம்ருத்தில் நின்று ம்ருண்மயமான கடம், ஸுவர்ணத்தில் நின்றும் ஸுவர்ணமயமான் மகுடாதிகளே உண்டாகக்காண்கையாலே துச்சத்தில் நின்றுமுண்டான ஜகத்தும் துச்சமேயாம். அதினால் ஒருப்ரயோஜநமும் ஸித்தியாது. ககசு.

ஸூ - ககஎ. ஆகாஶே சாவிஶேஷாத்.

(ஶ-ரா-வ்ய.) அவிஶேஷாத் - மற்றபதார்த்த ஜ்ஞாநத்திற்காட்டில் ஆகாசஜ்ஞாநத்திற்கு விசேஷமில்லாமையாலே; ஆகாஶே ச - ஆகாசத்திலும், (துச்சஸ்வரூபத்வம் ஸம்பவியாது.) ககஎ.

(ஶ-ஹா.) ஆகாசமும் மற்றவஸ்துக்களைப்போல் ஒருவஸ்துவாக லோகத்தில் வ்யவஹாரம் காண்கையால் அம்மதத்தில் ஆகாசமில்லை யென்பதும் சரியன்று. லோகவ்யவஹாரம் தப்பென்றாலும் காதினால்கேட்பது சப்தமென்றொரு குணமுண்டு, அதற்காதாரம் ப்ருதிவி முதலிய மற்றவஸ்துக்களாக மாட்டாவாகையால் அதற்காதாரமாகிய ஒருவஸ்து ஒப்புக்கொள்ள வேணும். அதேஆகாசமெனப்படும்.

(ரா-ஹா.) ஆகாசம் இல்லையென்று நீ சொன்னது சரியன்று. ஏனென்றால், அங்கே உயரப்பருந்து பறக்கிறதென்றால் அங்கே என்கிறபதத்திற்கு அர்த்தம் இன்னதென்று சொல்லவேணும். அது ப்ருதிவீ ஜல தேஜோவாயுக்களாக மாட்டாது ஆகையால் அங்கே இங்கே என்று ப்ரத்யக்ஷமாகக் காண்கிற தேசவிசேஷமான ஆகாசமும், ப்ரத்யக்ஷமாய்க் காண்கிற ப்ருதிவ்யாதிகளைப்போல் ஒப்புக்கொள்ளவே வேண்டும். ககஎ.

ஸூ - ககஅ. அநுஸ்ம்ருதேஶ்ச.

(ஶ-ரா-வ்ய.) அநுஸ்ம்ருதேஶ்ச - ப்ரத்யபிஜ்ஞையினாலும் (கடாதிகளை க்ஷணிகமென்னவொண்ணாது. ககஅ.

(ஶ-ரா-ஹா.) நான்முன்னே பார்த்தவஸ்துவை இப்போதுபார்க்கிறேனென்று லோகத்திற் சொல்லுகிறார்கள். கடமும் பார்க்கிறவனும் க்ஷணிகமானால் முன்னே பார்த்த உடனே அந்த கடமும் பார்த்தவனும் நசித்துப்போனபடியால், அதையிப்போது பார்க்கிறேனென்று சொல்லக்கூடாது. தீபம் ப்ரதிக்ஷணம்நசித்துப் போனாலும் முன்பார்த்ததீபமே இதுவென்று சொல்லுகிறார்கள் அதற்குக்காரணம் இத்தீபம் அத்தீபத்தோ டொத்திருக்கை. அதுபோலவே இங்கும் ஸாம்யத்தைக் கொ

ண்டு அதுவே இதுவென்கிறார்கள் என்றால், ஆகிலும் அப்போது பார்த்தவன் இப்போதும் இருக்கவேண்டுகையாலே உன்மதத்தி லதில்லாமையாலே அஸங்கதமாகிறது. ககஅ.

ஸூ-ககக. நாஸதோऽத்ருஷ்டத்வாத்.

(ஶ்ரு-ரா-வ்யா.) அத்ருஷ்டத்வாத் - (நசித்தவஸ்துவின் தர்மம் வேறொன்றில் ஸங்க்ரமிக்கக்) காணாமையாலே, அஸத: - இல்லாதபதார்த்தத்தினுடைய, (தர்மம்), ந - ஜ்ஞாநத்தில் ஸங்க்ரமியாது. ககக.

(ஶ்ரு-ஹா.) பீஜம் நசித்தபின் முளை உண்டாவது போலவும், பாலின் ஸ்வபாவம் மாறினபின் தயிர் உண்டாவது போலவும், அபாவத்திலிருந்தே ஜகத்து உண்டாகிறது என்றார்கள். அதாவது இதுக்கிது கார்ணமென்கிற நியமமில்லை என்று சொல்லிற்றும். ஆகில், பாலில்நின்றும் தயிரும் நூலில்நின்றும் வஸ்த்ரமும், மண்ணில்நின்றும் கலசமும் உண்டாவதுபோல் இக்கார்யங்களை மற்றோரிடத்தில் நின்றும் ஏனுண்டாகக்கூடாது. மேலும், மண்ணினு லுண்டானது மண்ணையும், பொன்னினு லுண்டானது பொன்னையும் காண்பதுபோல், அபாவத்தினு லுண்டான ஜகத்தும் அபாவமேயாய், அதாவது ஒன்றும் இல்லாததாகவே யாகவேணும், அப்படியன்றி வஸ்துவாகக்காண்கையால் அந்தயுக்தி ஸாரமன்று. பாலினவஸ்த்தைமாறித் தயிராகிறதென்பதும் கிடையாது. பாலே தயிராகவும், வித்தே முளையாகவும் ஆகிறதாகையால் உங்களது உதாஹரணமும் சரியன்று. ககக.

(ரா-ஹா.) ஸௌத்ராந்திகன், கடாதிபதார்த்தங்கள் நசிக்கும்போது தன்னுடைய நீலம்,பீதம்,ப்ருதுபுத்நோதரம்முதலிய ஆகாரங்களை ஜ்ஞானத்திற் தொற்றிவைத்துப் போகிறதுகள். அதினால் ஜ்ஞானம் அவ்வாகாரங்களை யடைந்து ஒன்றுக்கொன்று விலக்ஷணமாயிருக்கிறது ஜ்ஞானம் விலக்ஷணமாயிருக்கைக் கடியாக விஷயங்கள் விலக்ஷணங்களாய் முன்புண்டாயிருக்கவேணும். என்று ஜகத்தை யுண்டென்று அநுமித்தான். அவனுக்கு ஜகத்து ப்ரத்யக்ஷ ஸித்தமன்று.' அவன் மதத்தை நிரஸிக்கிறார்.— கடாதிகள் நசித்தால் அவற்றினுடைய ரூபாதிகள் மற்றொன்றில் ஸங்க்ரமிக்கக் காணாமையாலே கடம் நசிக்கும்போது அதினுடைய நீலாத்யாகாரம் ஜ்ஞானத்தில் ஸங்க்ரமிக்கிறதென்பது அஸங்கதம். ககக.

ஸூ - உ௦௦. உதாஸீநாநாமபி சைவம் ஸித்தி:.

(ஶ்ரு-ரா-வ்யா.) ஏவஞ்ச - இப்படியானால், உதாஸீநாநாமபி - ப்ரயத்நம் செய்யாதவர்களுக்கும், ஸித்தி: - பலம் ஸித்திக்கவேண்டிவரும்.

(ஶ்ரு-ஹா.) காரணமின்றியே கார்யமுண்டாகுமாகில் ஒருவனொரு பலத்தைக்குறித்து முயற்சிசெய்யவேண்டுவதேயில்லை. அவனுக்கும் தன்னடையே பலம்கைபுகுரக்காணலாம். அதாவது - குயவன் மண்ணைப்பிசைவது, கைக்கோளன் நூலை நெய்வது, தொழிலாளி ஏருழுவது முதலிய இவை வீண்முயற்சியாய்விடும் ஆகையாலும் அம்மதம் சரியன்று. உ௦௦

(ரா-ஹா.) இது வைபாஷிக ஸௌத்ராந்திகர்களிருவர்க்கும் தூஷணம்.— எல்லாம் க்ஷணிகமானால், ஒருப்ரயோஜநத்தைக் குறித்து ப்ரயத்னம் செய்தவன் உடனே நசித்துப்போனான் அவன்யத்நித்தப் பிரயோஜநத்தை இப்போது மற்றொருவன் ப்ரயத்நமில்லாமலே அடைகிறான் என்று ஒப்புக்கொள்ளவேணும். இப்படியானால், ஒருப்ரயோஜநத்தைக் குறித்து ப்ரயத்நம் செய்கைவ்யர்த்தமாய் ப்ரயத்நமில்லாமலே ஸர்வர்க்கும் ஸமஸ்தப்ரயோஜநங்களும் ஸித்திக்க வேண்டிவரும். உ௦௦.

ஸூ - சகூ. ஸூ - உ௦க. நாபாவஉபலப்தே:.

(ஸ-ரா-வ்யா.) உபலப்தே: - (ஜ்ஞானம் ஸகர்மகமாயும் ஸகர்த்ருக மாயும்) காண்கையாலே, அபாவ: - ஜ்ஞாநாதிரிக்தமான வஸ்துக்களின் அபாவம், ந - ஸித்தியாது. உ௦க.

(ஸ-ஸா.) ஜ்ஞாநமாவது அறிவு. மரம் செடி முதலியவற்றைப்பார்த்து "இது மரம், இது செடி" என்றே உலகத்தார் அறிகிறார்கள்; அல்லது "இது அறிவு" என்று ஒருவரும் சொல்வதில்லை. கண்ணால்காண்கிற வஸ்துக்களை இல்லையென்பது ஒருவன் பசிதணியபுஜித்து, "நான் புஜிக்கவுமில்லை, என்பசி தணியவுமில்லை" என்பது போல் இருக்கிறது. உ௦க.

(ரா-ஸா.) இதில் யோகா சாரனை நிரஸிக்கிறார்.— அவன், ஜ்ஞாநம் மாத்ர மேயுள்ளது. அதைக்காட்டிலும் அதிரிக்தமான பதார்த்தங்கள் கிடையாது, அந்த ஜ்ஞானமே நீலபீதாதி ஸமஸ்தாகாரங்களையு முடையது. அந்த ஆகாரத்தை யுடைய ஹ்ருதயத்திலிருக்கிற ஜ்ஞாநமே வெளியில் கடாதி பதார்த்தங்கள் போல் ப்ரமத்தினால் காண்கிறது. கடாதிகளை ஒப்புக்கொண்டவனும், ஜடங்களான அவை தானே ப்ரகாசிக்க மாட்டா வாகையால் அவை ப்ரகாசிகைக்காக ஜ்ஞானம் அங்கீ கரிக்கவேண்டும். அப்போது, பதார்த்தம் ஜ்ஞாநம் என்று இரண்டு அங்கீகரிப்பதைக் காட்டிலும் ஜ்ஞாநமொன்றே அங்கீகரிப்பது உசிதம். அதினாலேயே ஸகலவ்ய வஹாரங்களும் நடக்கிறது என்றான்.— நான் இதை அறிகிறேன் என்னும்போது நான் என்று ஜ்ஞாநத்துக் காஶ்ரயமாக கர்தாவும், இதை என்று அதற்கு விஷய மான கர்மமும் ஜ்ஞானத்தைக் காட்டிலும் வேறாகத் தோற்றி, அறிகிறேன் என்று ஜ்ஞாநமும் வேறாகத்தோற்றிக் கொண்டிருக்க அம்மூன்றில் ஒன்றை யங்கீகரித்து, ப்ரத்யக்ஷமாகக் காண்கிற மற்ற இரண்டையும் இல்லை யென்றது அநுசிதம். ஆகை யால் இந்த மதம் ஸயுக்திகமன்று. உ௦க.

ஸூ - உ௦உ. வைதர்ம்யாச்ச நஸ்வப்நாதிவத்.

(ஸ-ரா-வ்யா.) வைதர்ம்யாச்ச - ஸ்வப்நத்திற்காண்கிற பதார்த்தங் களைக்காட்டிலும் இப்பதார்த்தங்கள் விஜாதீயமாகையாலே, ஸ்வப்நாதிவத்- ஸ்வப்நத்திற்காண்கிற பதார்த்தங்களைப்போல், ந - (இப்பதார்த்தங்கள்) ஆகமாட்டா. உ௦உ.

(ஸ-ரா-ஸா.) இல்லாதபதார்த்தங்களே ஸ்வப்நத்தில் ப்ரமத்தினால் காண் கிறதுபோல், இல்லாதபதார்த்தங்களே நமக்கிப்போது ப்ரமத்தினால் காண்கின் றன, அவை வாஸ்தவமல்ல வென்னில், அதற்கு மிதற்கும் பேதமுண்டு. ஸ்வப்நத் திற்கண்ட பதார்த்தங்கள் விழித்தெழுந்தபின் காணாமையாலே, உறக்கத்திலுண் டான இந்த்ரியதோஷத்தினால் அஸத்யமானவையே நம்மால் ஸத்யம்போல் காண ப்பட்டனவென்று அங்கீகரிக்கிறோம். இங்கு பார்க்கிறபதார்த்தங்கள் ஸ்திரமா கக் காண்கையாலும், அவ்விதமான தோஷங்களொன்று மில்லை யாகையாலும் அவற்றைப்போல் இப்பதார்த்தங்களை அஸத்யமாக ஸ்வீகரிக்கக்கூடாது. உ௦உ.

ஸூ - உ௦௩. நபாவோ நுபலப்தே:.

(ஸ-ரா-வ்யா.) அநுபலப்தே:-ப்ரத்யக்ஷமில்லாமையாலே, பாவ: வைசித்ர்யத்தை, ந - உபபந்நமாகாது. உ௦௩.

(ரா-ஹா.) ஜ்ஞாநாதிரிக்தவஸ்து வில்லையாகில் அந்த ஜ்ஞாநம் ஏகரூபமாயே யிருக்கவேணும், அப்படியன்றியே ஜ்ஞாநம் "இது மண், இது மரம்" என்று அனேகவிதமாகக் காண்கிறது. அதற்குக்காரணமாக மண் மரம் முதலிய வஸ்துக்களையும் ஒப்புக்கொள்ளவேணும் என்ற கேள்விக்கு; ஜ்ஞாநத்தில் வாஸனையென்பதொன்றுண்டு; அதாவது - ஸம்ஸ்க்காரம். அந்த வாஸனை அனேகவிதமாயிருக்கும் ஆகையால் அந்த வாஸனைக்கு ஆதாரமாகிய ஜ்ஞாநமும் அனேகவிதமாகக் காண்கிறது, அவ்வளவேயன்றி, மற்று மண் மரம் முதலிய வஸ்துக்களினாலன்று என்று உத்தரம் சொன்ன நாஸ்திகருக்கு உத்தரமாயிருக்கிறது இந்தஸூத்ரம்.— வாஸனையாவது - ஒன்றைக் கண்ணால் பார்த்தாவது காதினால் கேட்டாவது மற்றும் வேறுவிதமாயாவது அறிந்தபின் அதினாலுண்டான ஸம்ஸ்காரம். வஸ்து அனேகவித மாகையால் அதையறியும் ஜ்ஞாநமு மனேகவிதமாய் அதினாலுண்டான ஸம்ஸ்காரமும் அனேகவிதமாயிருக்கும். நாஸ்திகர் ஜ்ஞாநத்தைக்காட்டிலும் வேறான ஒரு வஸ்துவை ஒப்புக்கொள்ளவேயில்லை. இப்படியிருக்க, வாஸனை அனேகவிதமென்றும் அதினால் ஜ்ஞாநமும் அனேகவிதமா யிருக்கிறதென்றும் சொல்லி லோகவ்யவஹாரத்தை நிர்வஹிக்க முடியாது. ௨௦௫.

(ரா-ஹா.) ப்ரத்யக்ஷஸித்தமாய் அபாதிதமான விஷயங்களை ஒப்புக்கொள்ளாமல் அப்ரத்யக்ஷமான ஜ்ஞாநத்தை அங்கீகரித்தல் யுக்திமத்தன்று. ௨௦௬.

ஸூ. க்ஷணிகத்வாச்ச.

(ஶ - வ்ய.) க்ஷணிகத்வாத் - (ஆலயவிஜ்ஞாநம்) க்ஷணிகமாகையால், (ந - வாஸனைக்கு ஆதாரமாகமாட்டாது. இந்தபாஷ்யத்தில் இந்தஸூத்ரம் அதிகமாக இருக்கிறது.

(ஶ-ஹா.) நாஸ்திகமதத்தில் ஆலயவிஜ்ஞாந மென்றொன்றுண்டு, அதே ஆத்மா என்பது; வாஸனையென்பது-அவ்வாலய விஜ்ஞாநத்திலிருந்து நாநாவிதமான ஜ்ஞாநத்திற்குக் காரணமாகிறதென்றார்கள். அந்த ஆலயவிஜ்ஞாநமென்பது க்ஷணந்தோறும் உண்டாய் நசிக்கிறதென்றும் சொன்னார்கள். அதற்கு தூஷணமாயிருக்கிறது இந்த ஸூத்ரம். ஆதாரமானது முன்னே உண்டாய் அதற்குப்பின் அதில் குணம் உண்டாகவேணும். அப்படிக்கன்றியே, வாஸனையும் அதற்கு ஆதாரமாகச்சொல்லுகிற ஆலயஜ்ஞாநமும் ஒரே க்ஷணத்திலுண்டாகிறது. மறுக்ஷணத்தில் கூடவே நசிக்கிறது என்று சொல்லுகிற அம்மதத்தில் ஆலயவிஜ்ஞாநம் வாஸனைக்கு ஆதாரமாகமாட்டாது. ஒருபசுவின் தலையில் இரண்டுகொம்புகள் ஒரே காலத்தில் முளைக்கும்போது அதில் ஒன்று ஆதாரமாயும் மற்றொன்று அதில் முளைத்ததாயு மாகமாட்டாது. அதுபோலவே இங்கும் கண்டுகொள்வது.

௬ அதி - ௫௦. ஸூ - ௨௦௮. ஸர்வதாநுபபத்தேஶ்ச.

(ஶ-ரா-வ்ய.) ஸர்வதா-ஸர்வப்ரகாரத்தாலும், அநுபபத்தே: - உபபத்தியில்லாமையாலே, (மாத்யமிகமத மஸங்கதம்.) ௨௦௮.

(ஶ-ஹா.) நாஸ்திகர்கள் எவ்விதமான யுக்திகளைச்சொன்னபோதிலும் அந்த யுக்திகளெல்லாம் ஒன்றோடொன்று பொருத்தமற்றதாகையால், மணலினால் கட்டின அணைபோல் பிளர்ந்தேபோமல்லது அம்மதத்தை நிலைநிறுத்த உபயோகிக்க மாட்டாது. ௨௦௮.

(ரா-ஹா.) இதில் மாத்யமிகனை நிரஸிக்கிறார்.— அவன், ஜ்ஞாநம், ஜ்ஞேயம், ஜ்ஞாதாவென்கிற பதார்த்தங்களொன்றுமேகிடையாது. ஸர்வமும் ப்ராந்தியினால்

தோற்றுகிறது. பதார்த்தங்களை ஒப்புக்கொண்டால் அவற்றுக்கு உத்பத்தி சொல்ல வேணும். அந்த உத்பத்திக்குக் காரணம் பாவமென்றும் அபாவமென்றும் சொல்ல முடியாது. பாவத்தினுண்டாகிறதென்றால், ம்ருத்து பிண்டமாயிருக்கும்போது கடமாகமாட்டாது. அதைத்துகைத்தபின்பே கடமாகிறது. அப்போது ம்ருத்பிண்டம் நசித்ததாகையால் பாவத்திலிருந்து கடோத்பத்தியில்லை; அபாவத்திலிருந்து உத்பந்நமாகிறதென்றால், அபாவத்திலிருந்து உத்பந்நமானது அபாவமாயே யாய் விடும். கார்யம் அபாவமானால் அது ஒருப்ரயோஜநத்துக்குபயோகிக்காது. இப்படி பதார்த்தோத்பத்தி நிரூபிக்கமுடியாமையாலே ஸர்வம் சூந்யமென்றே ஸித்தித்ததென்றான்.—பாவமென்றும் அபாவமென்றும் பதார்த்தத்தினுடைய அவஸ்தா விசேஷங்கள். பாவமென்று அப்போதிருக்கிற அவஸ்த்தையைச் சொல்லுகிறது. அபாவமென்று காலாந்தரத்திலிருக்கிற அவஸ்த்தையைச் சொல்லுகிறது. நீ பாவமென்றாலும் அபாவமென்றாலும் அந்தந்த அவஸ்த்தைகளையுடைய ஒரு தர்மிரூபபதார்த்தம் ஸித்திக்கும் அல்லது நீ சொல்லுகிற ஸர்வசூன்யம் ஸித்தியாது. ஆகையால் உன் மதம் அஸங்கதமென்கிறார். உ0ச.

ஸூ - ருக. ஸூ - உ0ரு. நைகஸ்மிந்நஸம்பவாத்.

(ஶ்ரீ.ரா-வ்ய.) நைகஸ்மிந் - ஒருவஸ்துவில், அஸம்பவாத் - விருத்த தர்மங்கள் ஸம்பவியாமையால், ந - (ஜைநமதம்) ஸமீசீநமன்று. உ0ரு.

(ஶ்ரீ-ரா-ஹா.) இதில் ஜைநமதத்தை நிரஸிக்கிறார்.—அவர்கள், கார்யகாரணரூபமான இந்த ஜகத்து ஏகமாயு மநேகமாயும் நித்யமாயு மநித்யமாயும், பிந்நமாயு மபிந்நமாயு மிருக்கிறது. காரணரூபமாவது-ம்ருத்து. அது கார்யாவஸ்த்தையிலும் காரணாவஸ்த்தையிலும் காண்கையாலே, நித்யமாய், ஏகரூபமாய் அபிந்நமாயிருக்கும். கார்யரூபமாவது - கடாவஸ்த்தை அது. சிலபோது கண்டும் சிலபோது காணாமையாலே அநித்யமாய், கடம், சராவம் என்று வெவ்வேறாகக் காண்கையாலே அநேகமாய் பிந்நமாயிருக்கும். இப்படியே ஸகலவஸ்துக்களும் பரஸ்பரவிருத்த தர்மயுக்தங்களா யிருக்குமென்றார்கள். காரணரூபேண, அதாவது-த்ரவ்யரூபேண நித்யம் ஏகம் அபிந்நமென்றும், கார்யரூபேண, அதாவது-அவஸ்த்தாரூபேண அநித்யம் அநேகம் அபிந்நம் என்றும் சொன்னது கூடாது. அநித்யமாவது உத்பத்தி விநாசங்களையுடையது. நித்யமாவது உத்பத்தி விநாசங்களில்லாதது. பிந்நமாவது. விருத்த தர்மத்தையுடையது. அபிந்நமாவது விருத்ததர்மமில்லாதது. பரஸ்பரவிருத்தங்களான இவை இருளுமொளியும்போ லோரிடத்திற் சேராது. தர்மியான த்ரவ்யம் நித்யமேகமபிந்நமென்றும், அதில் விசேஷணமான அவஸ்த்தை அநித்ய மநேகமபிந்நமென்றும் சொன்னால் ஓரிடத்தில் விருத்ததர்மங்கள் எப்படி சேர்ந்தது? இப்படி அர்த்த பர்யாலோசனை யில்லாமற் சொல்லுகிற இம்மதம் ஸயுக்திகமன்று.

ஸூ - உ0சு. ஏவம் சாத்மாகார்த்ஸ்ந்யம்.

(ஶ்ரீ.ரா-வ்ய.) ஏவம் - இப்படியே, ஆத்மாகார்த்ஸ்ந்யம் - ஆத்மாவுக்கு அபூர்த்தியும் (அம்மதத்தில் வருகிறது.) உ0சு.

(ஶ்ரீ-ரா-ஹா.) ஆத்மா சரீரமளவாக இருக்கிறதென்றார்கள்—ஆனால், ஆனையின் சரீரத்திலிருந்தபோது அவ்வளவு பெரிதாயிருந்த ஆத்மா அதைவிட்டு எறும்பின் சரீரத்தில் ப்ரவேசித்தால் அவ்வளவு பெரிய ஆத்மா எறும்பின் சரீரத்திலடங்காதாகையால் எறும்பின் சரீரத்தில் ஆத்மா பூர்ணமாக இல்லையென்று [illegible] க்க வேண்டிவரும்.

ஸூ. ௨௦௭. ந பர்யாயாதப்யவிரோதோ விகாராதிப்ய꞉.

(ஶ்ரு - ரா - வ்யா.) பர்யாயாதபி - ஆத்மா அல்பபரிமாணத்தை யடைந்தாலும், விகாராதிப்ய꞉ - விகாரம்முதலியவை ஸம்பவிக்கையாலே, அவிரோத꞉ - விரோதமில்லையென்கிறது, ந - இல்லை.

(ஶ்ரு-ரா-ஹா.) ஆத்மாகஜசரீரத்தைவிட்டுப் பிபீலிகாசரீரத்தில் ப்ரவேசிக்கும் போது பிபீலிகா சரீரமளவாக ஸூக்ஷ்மமாய் விடுகிறதென்னில், ஸ்தூலஸூக்ஷ்மாவஸ்த்தைகளை யடைகிறதென்று ஒப்புக்கொண்டால் கடாதிகளுக்குப்போல் உத்பத்தி விநாசாதி தோஷங்கள் ப்ரஸங்கிக்கும். ௨௦௭.

ஸூ. ௨௦௮. அந்த்யாவஸ்திதேஶ்சோபயநித்யத்வாதவிஶேஷ꞉

(ஶ்ரு-ரா-வ்யா.) அந்த்யாவஸ்திதே꞉ - கடைசியில் (மோக்ஷத்தில்) உண்டாகிற பரிமாணத்துக்கு(ப்பின்பு எப்போதும் ஏகரூபமான) ஸ்த்திதி யுண்டாகையாலே, உபயநித்யத்வாச்ச - அந்தபரிமாணமும் ஆத்மாவும் நித்யமாயிருக்கையாலும், அவிஶேஷ꞉ - (பூர்வாவஸ்த்தையிலும்) விசேஷம் கிடையாது. (முன்னமும் அந்த பரிமாணத்தையே அங்கீகரிக்கலாமென்று தாத்பர்யம். ௨௦௮.

(ஶ்ரு-ஹா.) ஸம்ஸார தசையிலிருந்த ஜீவன் மோக்ஷத்தை யடைந்தானாகில் அவனுக்கு மறுபடியும் ஸம்ஸாரத்தில் ஜந்மமில்லை யாகையால் அப்போது அந்த ஜீவனுக்குள்ள பரிமாணமும் நசிக்கிறதில்லை, நித்தியமாயிருக்கும். அதே ஆத்மாவுக்கு ஸம்ஸார தசையில் அவ்வவசரீரத்தளவான பரிணாமமுண்டென்றும், அப்பரிமாணம் அவயவங்களின் சேர்த்தியினாலும் பிரிவினாலும் உத்பத்தி விநாசங்களை யுடைத்தாயிருக்குமாகில், ஒரு வஸ்துவில் இருளு மொளியும்போல் நித்யபரிமாணமும் அநித்யபரிமாணமும் சேரமாட்டா தாகையால் ஸம்ஸாரதசையிலுள்ள பரிமாணமும் நித்யமென்றே ஒப்புக்கொள்ளவேணும். இம்மாதிரி விரோதங்களுண்டாகையால் ஜைந மதம் சரியன்று. ௨௦௮.

(ரா - ஹா.) ஜீவனுக்கு ஸம்ஸாரதசையில் சரீரந்தோறும் சரீராநுகுணமான பரிமாண மங்கீகரித்தாலும் மோக்ஷமுண்டான பின்பு அப்போதுண்டான பரிணாமத்திற்குப் பிற்பாடு நாசமில்லாமையால் நித்யமாகையாலே அதே பரிமாணமே முன்னமு மங்கீகரிக்க வேண்டியிருக்க இப்போது வெவ்வேறு பரிணாம மங்கீகரிப்பது அயுக்தம். ௨௦௮.

அதி. ௩௨. ஸூ. ௨௦௯. பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்.

(ஶ்ரு-வ்யா.) அஸாமஞ்ஜஸ்யாத் - தோஷவத்தாகையால், பத்யு꞉ - ஸர்வேஶ்வரனுக்கு, (நிமித்தகாரணத்வமாத்ரம்ஸம்பவியாது.) ௨௦௯

(ரா-வ்யா.) பத்யு꞉ - பசுபதியினுடைய (மதம்), அஸாமஞ்ஜஸ்யாத் - (விருத்தார்த்த ப்ரதிபாதகமாய்) அஸமஞ்ஜஸமாகையாலே, ந - ஆதரணீயமன்று. ௨௦௯.

(ஶ்ரு-ஹா.) இந்த அதிகரணத்தில், கடகத்துக்கு ஸுவர்ணம்போல், ஈஶ்வரன் ஜகத்துக்கு உபாதாந காரணமன்று, கடகத்துக்குத் தட்டான்போல் நிமித்தகாரணமாகமாத்திரமாயிருன், என்றமதம் தூஷிக்கப்படுகிறது.ஸாங்க்யர்களும்பாசுபதர்களும் தார்க்கிகர்களும் ஈஶ்வரன் ஜகத்தைஸ்ருஷ்டிக்கும்போது ஜகத்துக்கு உபாதா

ககாரணமாகிய மூலப்ரக்ருதிக்கும் பரமாணுக்களுக்கும் அதிஷ்டாதாவா யிருந்து, ஸ்ருஷ்டிக்கிறனென்றார்கள். அப்படி சொல்லும் பக்ஷத்தில், ஐச்வர்யத்தினுலும் புத்தியினுலும் வித்யையினுலும் பலத்தினுலும் மற்றுமுள்ள ஆயுஸ்ஸு முதலானவை களினுலும் ஒரு ஜீவனை யுயர்ந்தவனுகவும் மற்றொருவனைத் தாழ்ந்தவனுகவும் ஸ்ருஷ்டிக்கக்கூடாது. உயர்ந்தவனுக ஸ்ருஷ்டிக்கைக்கு ப்ரீதியும் தாழ்ந்தவனுக ஸ்ருஷ்டிக்கைக்கு அவனிடத்தில் த்வேஷமும் காரணமாகையால். இம்மாதிரி இன்னு மனேக தோஷங்கள் ஈச்வரனிடத்தில் ஒப்புக்கொள்ள வேண்டிவரும். உயர்வு தசழ்வுகளுக்கு அவரவர்களுடைய புண்ய பாபங்கள் காரணமென்றுல், அவற்றைச்செய்விக்கிறவனு மீச்வரனுகையால் அந்த தோஷம் தவருது. ஆகையால் அம்மதம் சரியன்று. உ0க.

(ரா - ஸூ.) இதில் பாசுபதனை நிரஸிக்கிறர். பசுபதியான ருத்ரன் ஸர்வஜ்ஞனுகையாலும், அவன், மோக்ஷஸ்வரூபத்தையும் தத்ஸாதநஸ்வரூபத்தையும் அறிவிக்கைக்காகவே இந்த ஆகமத்தை யுபதேசிக்கையாலும். இம்மதம் எல்லாருக்கு மாதரணீயமாயிருக்குமென்று பூர்வபக்ஷம்—அபௌருஷேயமாய் நித்ய நிர்தோஷமாய் ஸ்வதஃப்ரமாணமான வேதத்திற் சொன்ன வர்த்தங்களைக் காட்டிலும் இந்த ஆகமத்தில் விருத்தமான அர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. அவையாவன—ஈச்வரன் ஜகத்துக்கு நிமித்த காரணம், ப்ரக்ருதி உபாதாநகாரணம், ஸதாசிவன் பரதத்வம், ஸமாரம்ப ஸ்தாபநம், அதில் பரதேவதார்ச்சநம் முதலியவை மோக்ஷஸாதநம், இத்யாதிகள். ஆகையால் இம்மதத்தை சிஷ்டர்கள் அங்கீகரிக்கக்கூடாது என்று ஸித்தாந்தம். உ0க.

ஸூ. ஸம்பந்தாநுபபத்தேஶ்ச.

(ஸ - வ்யா.) ஸம்பந்தாநுபபத்தேஶ்ச- ஸம்பந்தம் சரிப்படாதாகையாலும், (ஈச்வரன் நிமித்தகாரணமன்று) இந்தபாஷ்யத்தில் இந்தஸூத்ரம் அதிகமாகக் காண்கிறது.

(ஸ-ஸா.) மேலும், ஈச்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது, குயவன் மண்ணைத்தொட்டுப் பானையைச் செய்வதுபோல் மூலப்ரக்ருதியையும் ஜீவர்களையும் தொட்டுச்செய்யவேண்டும். மூலப்ரக்ருதிக்கும் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் மண்ணையும் குயவனையும்போல் ஓருருவில்லை யாகையால் அப்படி தொட்டுச் செய்ய முடியாது.

ஸூ. உ௧0. அதிஷ்டாநாநுபபத்தேஶ்ச.

(ஸ-ரா-வ்யா.) அதிஷ்டாநாநுபபத்தேஶ்ச - (ஈச்வரன் ப்ரதாநத்திற்கு) அதிஷ்டாநம் என்பது அநுபபந்நமாகையாலேயும், (இம்மதம் ஸமீசீநமன்று.) உ௧0.

(ஸ-ஸா.) மேலும் கண்ணுல் காணத்தகுந்த ஸுவர்ணம் முதலானவற்றைக் கொண்டு தட்டான் முதலிய வேலைக்காரர்கள் கடகம் முதலிய வஸ்துக்களைச் செய்கிறர்கள். ரூபமில்லாத மூலப்ரக்ருதியும் ஜீவனும் கண்ணுக்குக் காணமாட்டாவாகையால் அவற்றைக்கொண்டு ஈச்வரன் ஜகத்தைச் செய்யமுடியாது. உ௧0.

(ரா-ஸா.) ஜகத்காரணமான ப்ரதாநம் அசேதநமாகையால் தானே ஜகத்தை ஸ்ருஷ்டிக்க ஸாமர்த்யமுடையதன்று. ஒரு புருஷனே அதைக்கொண்டு ஜகத்தை ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்ற அநுமாநத்தினுல் ஈச்வரனை ஒப்புக்கொண்டு அவன் ஜகத்ஸ்ருஷ்டிக்காக ப்ரதாநத்தை யதிஷ்டிக்கிறனென்றார்கள். லோகத்

தில் கடாதிகளுக்குக் கர்த்தாக்களான குலாலாதிகள் சரீரமுடையவர்களாய்க் கொண்டே ம்ருத்பிண்டாதிகாரணங்களை யதிஷ்டித்து ஸ்ருஷ்டிக்கிறார்கள். அதுபோலவே ப்ரதாநத்தை யதிஷ்டிக்கிற ஈஸ்வரனுக்கும் சரீரம் ஸித்திக்கும். அவனுக்கு சரீரம் ஒப்புக்கொண்டால் அது நித்யமென்றும் அநித்யமென்றும் சொல்லக்கூடாது. என்று கீழே தூஷணம் சொல்லியிருக்கிறது. சரீரம் ஒப்புக்கொள்ளாமற்போனால் ப்ரதாநத்திற்கு அதிஷ்டாநமாகமாட்டான் ஆகையால் அம்மதம் யுக்தியுக்தமன்று.

ஸூ. ௨௧௧. கரணவச்சேந்ந போகாதிப்ய:

(ஶ்ரு-ரா-வ்யா-ஸா) கரணவச்சேத்-இந்த்ரியத்துக்கும் சரீரத்திற்கும் அசரீரியான ஜீவன் அதிஷ்டாநமாகிறாப்போலே அசரீரியான ஈஸ்வரன் ப்ரதாநத்திற்கு அதிஷ்டாநமாகலாம் என்றால், போகாதிப்ய: - புண்யபாபாநுபவம் முதலானவை ப்ரஸங்கிக்கையாலே, ந - அப்படி ஈஸ்வரனுக்கு ஸம்பவியாது. (அதாவது - ஜீவனுக்குக் கர்மாநுபவத்துக்காக இந்த்ரியாத்யதிஷ்டாநமுண்டு. ஈஸ்வரனுக்குக்கர்மாநுபவமில்லாமையால் அது கூடாது. ஒப்புக்கொண்டால் ஜீவனைப்போலவே கர்மாநுபவம்முதலானவையு மொத்துக்கொள்ளவேண்டிவரும்.) ௨௧௧.

ஸூ. ௨௧௨. அந்தவத்த்வமஸர்வஜ்ஞதா வா.

(ஶ்ரு ரா-வ்யா.) அந்தவத்த்வம் - விநாசத்தை யுடைத்தாகையும், அஸர்வஜ்ஞதா வா-ஸர்வவிஷயஜ்ஞாநமில்லாமற்போகையும், (ப்ரஸங்கிக்கும்.) ௨௧௨.

(ஶ்ரு-ஸா.) மேலும், தார்க்கிகர் ஜீவர்களையும் ஈஸ்வரனையும் எங்கும் நிறைந்தவர்களாகச் சொல்லுகிறார்கள். ஈஸ்வரன், அவர்களை அளவற்றவர்களாக அறிகிறானில், அவை அளவுபட்டிருக்கவேணும். அளவுடைய கடாதி வஸ்துக்கள் உத்பத்திவிநாசவத்துக்களாகக் காண்கையாலே, ஜீவேஸ்வரர்களும் அப்படியே உத்பத்திவிநாசமுடையவர்களாவர்கள். இது இவ்வளவென்று அவற்றினளவை ஈஸ்வரனறியானில், அவனை நீங்கள் ஸர்வஜ்ஞன்-அதாவது - எல்லாமறிந்தவன் என்று சொல்வது பொய்யாம் ஆகையாலும் அம்மதங்கள் சரியன்று. ௨௧௨.

(ரா-ஸா.) ஈஸ்வரனுக்கு ப்ரதாநாதிஷ்டாநம் ஸித்திக்கைக்காக சரீரமும், அந்த சரீரம் ஸித்திக்கைக்காக புண்யபாபங்களும் ஒப்புக்கொண்டால், ஜீவனைப்போலே ஈஸ்வரனும் ஜந்மமரணங்களை யுடையவனாவன். இப்படி கர்மபரவசனானபின் அவனுக்கு ஸர்வஜ்ஞத்வமும் ஸித்தியாது. இத்யாதி தோஷங்களுண்டாகையாலே இம்மதம் ஸமீசீநமன்று. ௨௧௨.

அதி. ௮. ஸூ. ௨௧௩. உத்பத்த்யஸம்பவாத்.

(ஶ்ரு-ரா-வ்யா.) உத்பத்த்யஸம்பவாத்-(ஜீவனுக்கு) உத்பத்திஸம்பவியாமையாலே, (ஜீவோத்பத்தி சொல்லுகிற பாஞ்சராத்ரம் ப்ரமாணமாகமாட்டாது.) ௨௧௩.

(ஶ்ரு-ஸா.) கீழ் பாசுபத மதத்தை நிரஸித்து இவ்வதிகரணத்தில் பாஞ்சராத்ராகமத்தைத் தூஷிக்கிறார். பாஞ்சராத்ரத்தில் வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று நாலு வ்யூஹங்கள் சொல்லப்பட்டது. அதில், வாஸுதேவன் ஷாட்குண்ய பரிபூர்ணனான பகவான். ஸங்கர்ஷணன் - ஜீவன், ப்ரத்யும்நன் - மனஸ், அநிருத்தன் அஹங்காரம். வாஸுதேவனிடத்திலிருந்து ஸங்கர்

ஷணனென்கிற ஜீவனுண்டாகிறான், ஸங்கர்ஷணனிடத்திலிருந்து ப்ரத்யும்னன், ப்ரத்யும்னனிடத்திலிருந்து அநிருத்தன் என்று இப்படி உத்பத்தி சொல்லியிருக்கிறது. ஜீவனுக்கு உத்பத்தி கிடையாது. அவன் நித்யன் என்று வேதத்தில் சொல்லியிருக்க அதற்கு விருத்தமான ஜீவோத்பத்தியை ப்ரதிபாதிக்கையாலும், ஜீவனுக்கு உத்பத்தி ஒத்துக்கொள்ளில் விநாசமும் ஒப்புக்கொள்ள வேண்டுகையாலே மோக்ஷமில்லா தொழிகை முதலான தோஷங்கள் வருகையாலும், ஸூத்ரவிரோத முண்டாகையாலும் அம்மதம் சரியன்று. ௨௧௩.

(ரா-ஹா.) இவ்வதிகரணத்தில் பகவத்ப்ரோக்தமான பாஞ்சராத்ரம் வேதம் போலே ப்ரமாணதமமென்று ஸ்தாபிக்கிறார்.—அதற்காக முதலில் பூர்வபக்ஷத்தைக்காண்பிக்கிறார்.—ஸாங்க்யஸ்ம்ருதிபோலவும் சைவாகமம்போலவும், பாஞ்சராத்திரத்திலும்சிலவேதவிருத்தார்த்தங்கள்ப்ரதிபாதிக்கப்படுகின்றன. அவையாவன- "வாஸுதேவாத் ஸங்கர்ஷணோ நாம ஜீவோ ஜாயதே" என்று ஸங்கர்ஷணனென்கிற ஜீவன் உண்டாகிறானென்று சொல்லிற்று. இது, "ந ஜாயதே ம்ரியதே" என்று ஜீவனுக்கு உத்பத்திவிநாசங்களில்லையென்று சொல்லுகிற வேதத்தோடு விரோதிக்கிறது. மேலும், நாலுவேதங்களிலும் பரமபுருஷார்த்த மின்னதென்று கப்படாமல் பின்பு இப்பாஞ்சராத்ரத்தைக் கற்றானென்று வேதத்தையநாதரித்துச் சொல்லிற்று; ஆகையால் இவ்வாகமமும் அப்ரமாணமென்று பூர்வபக்ஷம். ௨௧௩.

ஸூ. ௨௧௪. ந ச கர்து: கரணம்.

(ஸூ-ரா-வ்யா) கர்து: - கர்த்தாவான ஜீவனிடத்தில்நின்றும், கரணம் - இந்த்ரியமானமனஸ்ஸு (உண்டாயிற்றென்பது வேதவிருத்தமாகையால்), ந - ஸம்பவியாது. ௨௧௪.

(ஸூ-ஹா.) மேலும்; ஒரு மரத்தை வெட்டுகைக்குக் கர்த்தா-தச்சன், அதுக்குக் கரணம்-கோடாலி, இந்த கரணம் அந்த கர்த்தாவினிடத்திலிருந்து உண்டாகிறதில்லே. இங்கு, கர்த்தாவாகிய ஜீவனிடத்திலிருந்து கரணமாகிய மநஸ்ஸுக்கு உத்பத்தி சொல்லியிருக்கிறது. அதுவும் அநுபவவிருத்தமாகையால் அம்மதம் சரியன்று

(ரா-ஹா)மேலும்,"ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்நஸம்ஜ்ஞோ மந உத்பத்யதே" ஸங்கர்ஷணனிடத்திலிருந்து ப்ரத்யும்நனென்கிற மனசு உண்டாகிறதென்றுசொல்லிற்று. வேதத்தில் "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந:" என்று இந்த பரமாத்மாவினிடத்திலிருந்து மநஸ்ஸு உண்டாகிறதென்று சொல்லுகையாலே இதுவும் வேதவிருத்தம்ஆகையால் இவ்வாகமமும் ப்ரமாண மாகமாட்டாதென்று பூர்வபக்ஷம்.

ஸூ. ௨௧௫. விஜ்ஞாநாதிபாவே வா தத்ப்ரதிஷேத:.

(ஸூ-ரா-வ்யா.) விஜ்ஞாநாதிபாவே வா- (ஸங்கர்ஷணாதிகளுக்கு) ஜ்ஞாநஸ்வரூபனாய் ஜகத்காரணனான பரமாத்மஸ்வரூபத்வம் ஸித்தித்தவளவில், தத்ப்ரதிஷேத: - (பாஞ்சராத்ரத்துக்கு) ப்ராமாண்யப்ரதிஷேதம் கிடையாது. ௨௧௫.

(ஸூ-ஹா.) கீழ்ச்சொன்ன நாலு வ்யூஹங்களும் ஜ்ஞாநஸ்வரூபியான பரமாத்மாவேயாகையால் ஜீவோத்பத்தி அங்கு சொல்லவில்லேயேயென்னில், ஆனலும் வாஸுதேவனிடத்திலிருந்து மற்ற மூவர்க்கும் உத்பத்தி சொல்லுவதும் அஸங்கத

தான். ஸூவர்ணத்திலிருந்து உண்டான கடகம அதைககாட்டிலும விலக்ஷணமான அவஸ்த்தையை யடைந்திருக்கிறது. இங்கு அதுபோல் நால்வர்க்கும் கொஞ்சமும் பேதம் ஒப்புக்கொள்ளவில்லை. ஏக ரூபமானவர்களென்கிறார்கள். மேலும், ஒரு ஈஸ்வரனே ஜகத்தினுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களுக்குப் போருமாயிருக்க நாலுஈஸ்வரர்களையொப்புக்கொள்வதும் சரியன்று. உகூ.

(ரா-ஹா.) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.—ஸங்கர்ஷண நிருத்தாதிகள் பரப்ரஹ்மமான வாஸுதேவஸ்வரூபர்கள். ஆகையால் ஸங்கர்ஷணாதிகளுக்குச் சொன்ன உத்பத்தி "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்று கர்மாதீநமான உத்பத்தியன்றிக்கே ஸ்வேச்சையினால் ஜகத்ரக்ஷணத்துக்காகப்பண்ணின அவதாரமாகையால் நீங்கள் சொன்ன தோஷம் வாராது. ஸங்கர்ஷண னென்றொரு ஜீவனுக்குப் பேரிடையாது. ப்ரத்யும்நனென்றும் ஒரு மநஸ்ஸுகிடையாது. அவ்வாக்யங்களுக்கர்த்தம் - ஜீவனுக்கு அதிஷ்டாதாவான ஸங்கர்ஷணனும், மநஸ்ஸுக்கு அதிஷ்டாதாவான ப்ரத்யும்நனும் அவதரித்தார்கள் என்றர்த்தம். கீழ் வேதத்தை யநாதரித்துச் சொன்னது, அநுதிதஹோமத்தை ஸ்தோத்ரம் செய்யும்போது உதிதஹோமத்தை நிந்தித்தாற்போல் வேதத்தை நிந்திப்பதில் தாத்பர்யமில்லை. இவ்வாகமத்தில் ப்ராமாண்யஜ்ஞாந முண்டாகைக்காக அப்படிசொல்லிற்று. ஆகையால் வேதத்துக்கு விருத்தமான அம்சங்களொன்றும் இதில் சொல்லாமையாலும் வேதத்திற்சொன்னபடி ஜகத்துக்கு உபாதாநநிமித்தகாரணங்களும் ப்ராப்யனும், பரதத்வமும் பரமபுருஷனை ஸ்ரீமந்நாராயணனென்றும், அவன்விஷயமாக கர்மஜ்ஞாநபக்திபூஜைகள் செய்யவேண்டியதென்றும் சொல்லுகையாலும் பாஞ்சராத்ரம் முக்யப்ரமாணமாகக்கடவது என்று ஸித்தாந்தம். உசுா.

ஸூ. உகசு, விப்ரதிஷேதாச்ச.

(ஶ - வ்ய.) விப்ரதிஷேதாச்ச - (வேதத்தை) நிந்திக்கையாலும், (இம்மதம் சரியன்று).

(ரா - வ்ய.) விப்ரதிஷேதாச்ச - (பாஞ்சராத்ரத்தில்) ஜீவோத்பத்தியை நிஷேதிக்கையாலும், (இது ப்ரமாணதமம்.) உகசு.

(ஶ-ஹா.) சாண்டில்யமுனி, நாலுவேதங்களிலும் க்ஷேமகரமாகச் சொல்லப்பட்ட தொன்றைக் காணாமல் இந்த பாஞ்சராத்ரத்தை அத்யயநம் செய்தாரென்று வேதத்தை நிந்தித்திருக்கையாலும் அந்த ஆகமம் சரியன்று. உகக.

(ரா-ஹா) இவ்வாகமத்தில் "ஸஹ்ருந்நாதிர நந்தஸ்ச" என்று ஜீவனுக்கு உத்பத்தி விநாசங்களில்லையென்று சொல்லுகையாலே ஸங்கர்ஷணனுண்டானானென்றுசொன்னது ஜீவோத்பத்தியைச் சொன்னதன்று. பரமபுருஷனுடைய அவதாரவிசேஷத்தைச் சொன்னது ஆகையால் இதில் வேதவிருத்தார்த்தமொன்றும் கிடையாது; இதுவேதம்போல் ப்ரமாணதமமென்று ஸித்தாந்தம். உகக.

இரண்டாம் அத்தியாயத்தில் இரண்டாம்பாதம்

ஸம்பூர்ணம்.

உ-வது அத்யாயம் ௩-வது பாதம்.

அதி-௫௪, ஸூ - உகஎ· நவியதஶ்ருதே:.

(ஶப-ரா-வ்யா.) வியத் - ஆகாசம், ந - உண்டாகிறதில்லை. (நித்யம்) அஶ்ருதே: - (அஸம்பாவிதமான அர்த்தத்துக்கு) ஶ்ரவணம் கூடாதாகை யாலே, (ஶ்ருதியிற்சொன்ன ஆகாசோத்பத்தி கௌணம்.) உகஎ.

(ஸ-ஹா.) பரமதங்களில் பூர்வாபர விரோத முண்டாகையால் அம்மதங்கள் சரியன்றென்று சொல்லப்பட்டது. இனி; உபநிஷத்துக்களிலும் பூர்வோத்தர விரோத முண்டாகையால் அம்மதமும் சரியன்று என்று சங்கித்துப் பரிஹாரம் செய்கிறார்.

சாந்தோக்யத்தில் ஸ்ருஷ்டிக்ரமம் சொல்லும்போது முதல் தேஜஸ்ஸு உண் டாயிற்று, பிறகு ஜலம், பின்பு ப்ருதிவி உண்டாயிற்றென்று சொல்லியிருக்கிறது. ஆகாசமுண்டானதாகச் சொல்லவில்லை. ஆகையால் ஆகாசமும் ப்ரஹ்மத்தைப் போல் நித்யமாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேணும். இப்படியாகில் ப்ரஹ்மத் தைக்காட்டிலும் வேறாகிய ஆகாசமொன்றுண்டாகையால், ப்ரஹ்மமொன்றே, மற் றொருவஸ்து வில்லையென்கிற அத்வைதமதம் சரியன்று என்று பூர்வபக்ஷம். உகஎ.

(ரா-ஹா.) இந்தபாதத்திலும் மேல்பாதத்திலும் வேதாந்த வாக்யங்களுக் குப் பரஸ்பரம் விரோதமில்லை யென்று ஸமர்த்திக்கிறார் — கீழ்ஜீவனுக்கு உத்பத்தி யில்லை யென்று சொல்லிற்று; ஜீவனைப்போலவே ஆகாசமும் நிரவயவமாகையா லும், லோகத்தில் ஸாவயவமான பதார்த்தங்களுக்கே உத்பதிகாண்கிறே மாகை யாலும் ஆகாசத்திற்கும் உத்பத்தி கூடாது "ஆகாஶஸ்ஸம்பூத:" என்கிற வேதவாக்யம், ஆகாசத்திற்கு இல்லாத உத்பத்தியைச் சொல்லமாட்டாதாகை யால், ஜீவனுண்டாகிறானென்று சொல்வதுபோல் ஆகாசமுண்டாகிற தென்பதும் கௌணமாகவே அங்கீகரிக்கப்படும். அதாவது—ஸூக்ஷ்மமாயிருந்த ஆகாசம் ஸ்தூ லாவஸ்தையை யடைந்த தென்றதற் கர்த்தம் என்று பூர்வபக்ஷம். உகஎ.

ஸூ - உகஅ. அஸ்தி து.

(ஶப-ரா-வ்யா.) அஸ்தி து - (ஆகாசத்திற்கும் உத்பத்தி) உண்டு. உகஅ.

(ஸ-ஹா.) சாந்தோக்யத்தில் சொல்லாவிடினும் "ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" என்று தைத்திரீயத்தில் ஆகாசோத்பத்தி சொல்லியிருக்கையால் அத்வைத மதம் சரியென்று ஸமாதாநம். உகஅ.

(ரா-ஹா.) அதீந்திரியமான அர்த்தங்களைப்ப்ரதிபாதிக்கிற வேதத்தில் ஆகா சோத்பத்தி சொல்லியிருக்கையாலே ஆகாசமுண்டாகிறதென்றங்கீகரிக்கவேணும். ப்ரபலப்ரமாணமான வேதத்திற்சொல்லிய அர்த்தத்திற்கு விருத்தமாக, நிரவயவமா கையால் ஆகாசத்திற்குத்பத்தி கூடாதென்கிறயுக்திப்ரவர்த்தியாது. ஆத்மாவுக்கும் உத்பத்தி யில்லையென்றங்கீகரிப்பது வேதத்திற் சொல்லுகையாலே. யுக்தியினு லன்று என்று ஸித்தாந்தம். உகஅ.

ஸூ-உ௨௯. கௌண்யஸம்பவாத்ஶப்தாச்ச.

(ஶப-ரா-வ்யா.) அஸம்பவாத் - (தேஜஸ்ஸு உண்டானதின் பிறகு ஆகாசோத்பத்தி) கூடாமையாலேயும், ஶப்தாச்ச - (ஆகாசத்துக்கு நாச

மில்லையென்று சொல்லுகிற) வசனத்தினாலேயும், மளணீ - (வேதத்திற் சொல்லிய ஆகாசோத்பத்தி) கௌணமேயாகவேணும். உகக.

(ஶ-ஹா.) ஆகிலும், ஓரிடத்தில், ப்ரஹ்மம் ஆகாசம் முதலாக ஸ்ருஷ்டித்த தென்றும், மற்றோரிடத்தில் தேஜஸ்ஸு முதலாக ஸ்ருஷ்டித்ததென்றும் சொல்லி யிருக்கையால், ஆகாசமுண்டான பிறகு வாயு, அதன்பிறகு தேஜஸ்ஸு உண்டா யிற்று என்கிற தைத்திரீயத்துக்கும், தேஜஸ்ஸே முதலி லுண்டாயிற்றென்கிற சாந் தோக்யத்துக்கும் சேர்த்தியில்லாமையால் அம்மதம் சரியன்று, மேலும் கடகத்து க்கு ஸுவர்ணம்போலவும், வஸ்திரத்துக்கு நூல்போலவும், கலசத்துக்கு மண்போ லவும், ஆகாசத்திற்கு மற்றோ ருபாதாநகாரண மில்லாமையால் அதற்கு உற்பத்தி சொல்லமுடியாது. ஆகையால் "இவ்விடத்தில் முன் சிலவஸ்துக்கள் வைத்திருந்து ஆகாசமில்லாமலிருந்தது, இப்போது அவைகளை எடுத்துவிட்டபடியால் ஆகாச முண்டாயிற்று" என்ற லோகவ்யவஹாரம்போலவே ஆகாச முண்டாயிற்றென்ப தை முக்யமாகக்கொள்ளக்கூடாது. கௌணமாகக் கொள்ளவேணும் இப்போது உபநிஷத்துக்களுக்கு விரோதமில்லை. ஆகிலும் அத்வைதமதம் மாத்திரம் சரியன்று என்று பூர்வபக்ஷம்.

(ஶ-ஹா.) இந்த பாஷ்யத்துக்கு "ஶ஬ாரவ" என்பது வேறு ஸூத்ரம், "வா யுஶ்சாந்தரிக்ஷம் சைததம்ருதம்" என்கிற ஶ்ருதி ஆகாசம் நித்யமென்றே சொல்லுகிறது. மற்றோரிடத்தில் "ஆகாஶவத்ஸர்வகதஶ்ச நித்ய:" ப்ரஹ்மம் ஆகாசம்போல் ஸர்வவ்யாபியும் நித்யமுமாயிருக்குமென்று சொல்லுகிறது. இதனா லும் ஆகாசம் உத்பத்தியற்றதென்று ஏற்படுகிறது. ஆகையால் இதனாலும் அத்வைத மதம் சரியன்று. உகக.

(ரா-ஹா.) சாந்தோக்யத்தில், ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது முதலிலே தேஜஸ்ஸு உண்டாயிற்றென்று சொல்லிற்று. ஆகாசமுத்பந்நமானால் அதற்குமுன் னமே அதினுத்பத்தியைச் சொல்லவேணும். அப்படி சொல்லவில்லை தேஜஸ்ஸு க்கு ஆதிகாரணமாகிய ஆகாசம் அதற்கநந்தரம் உத்பந்நமாகிறதென்று சொல்லக் கூடாது. மேலும் "வாயுஶ்சாந்தரிக்ஷம் சைததம்ருதம்" என்று ஆகாசத்திற்கு நாசமில்லையென்றும் சொல்லியிருக்கிறது. எதுக்கு நாசமில்லையோ அதுக்கு உத் பத்தியுமில்லை; ஆகையால், ஆகாசமுண்டாகிறதென்று சொன்ன ஶ்ருதிக்கு ஸூக்ஷ் மமாயிருந்த ஆகாசம் ஸ்தூலாவஸ்த்தையை யடைகையாகிற கௌணமான உத்ப த்தியையே சொல்லிற்றென் றங்கீகரிக்கவேணும் என்று பூர்வபக்ஷம். உகக.

ஸூ-உஉ0. ஸ்யாச்சைகஸ்ய ப்ரஹ்மஶப்தவத்.

(ஶ-ரா-வ்ரு.) ப்ரஹ்மஶப்தவத் - ப்ரஹ்ம சப்தத்திற்குப்போலே, ஏகஸ்ய - ஒரு ஸம்பூதசப்தத்திற்கே, ஸ்யாச்ச - (கௌணோத்பத்தியும் முக்யோத்பத்தியும்) அர்த்தமாகலாம். உஉ0.

(ஶ-ரா-ஸா.)ஆனல் "ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" என்ற வாக்யத்திலிருக் கிற ஸம்பூதசப்தத்தையே "வாயோரக்நி:" இத்யாதி மேல்வாக்யங்களில் வைத் துக்கொள்ள வேண்டுகையாலே, அந்த ஒருஸம்பூதபதத்திற்கே ஓரிடத்தில் கௌ ணோத்பத்தியும், "வாயோரக்நி:" இத்யாதி மற்ற இடங்களில் முக்யோத்பத்தி யும் அர்த்தமாகக்கூடாதேயென்னில், "தபஸா சீயதே ப்ரஹ்ம தஸ்மாதந்நமபிஜா ஜாயதே" என்கிறவிடத்தில் ப்ரஹ்மசப்தத்திற்கு மூலப்ராக்ருதியர்த்தமும், அதே

ப்ரகரணத்திலுள்ள "தவலோவீயமெத்ஸ்ர ஹ" என்கிற வாக்கியத்திலுள்ள ப்ரஹ்மசப்தத்திற்குப் பரமாத்மா அர்த்தமுமாய், இப்படி ஒருப்ரகரணத்திலுள்ள ஒருசப்தத்திற்கு இரண்டர்த்தமானாற்போலே இங்கும் ஒருஸம்பூத சப்தத்திற்கு இரண்டுவிதமான உத்பத்தியு மர்த்தமாகலாமென்று பூர்வபக்ஷம். உஉ௦.

ஸூ-உஉக. ப்ரதிஜ்ஞாஹாநிரவ்யதிரேகாத.

(ஸ-ப்ர-வ்ய.) அவ்யதிரேகாத - (ஆகாசம் ப்ரஹ்மத்தினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களைக் காட்டிலும்) அதிரிக்த மாகாமையினாலே, ப்ரதிஜ்ஞாஹாநி: - (ப்ரஹ்மஸ்வரூபத்தை யறிந்தால் ஸர்வமும் அறிந்ததாகுமென்கிற) ப்ரதிஜ்ஞைக்கு ஹாநிவராது. உஉக.

(ப்ர-ஸா.) அந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார். "யெநாஶ்ருதம்" என்று தொடங்கி பரப்ரஹ்மத்தை யறிந்தால் மற்ற ஸகலபதார்த்தங்களும் அறியப்பட்டதாம் என்று முதலில் சொல்லிற்று. அதெப்படியென்றால் காரணமான ம்ருத்பிண்டத்தை யறிந்தால் அதின் கார்யமாகிய கடஸ்வரூபமும் அறியவருமாப்போலே, ஸகல ஜகத்துக்கும் ப்ரஹ்மம் காரணமாகையாலே அதையறிந்தால் ஸகலமும் அறிந்ததாமென்றர்த்தம். அதில், ஆகாசம் ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து உத்பந்நமாகாமற்போனால் இது ப்ரஹ்மகார்ய மல்லாமையாலே ப்ரஹ்மஜ்ஞாநத்தினால் ஆகாசஸ்வரூபம் அறியப்படமாட்டாது. அதினால் முன்சொன்ன ப்ரதிஜ்ஞை கெட்டுப்போகும். அது கெட்டுப்போகாமைக்காக ஆகாசமும் ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து உத்பந்நமாயிற்றென்று அங்கீகரிக்கவேணும் என்று ஸித்தாந்தம். உஉக.

ஸூ உஉஉ. ஶப்தேப்ய:

(ஸ ப்ர-வ்ய.) ஶப்தேப்ய: - சப்தங்களினாலும் (ஆகாசோத்பத்தியங்கீகரிக்கவேணும்.) உஉஉ.

(ஸ-ஸா.) இந்த பாஷ்யத்துக்கு "ப்ரதிஜ்ஞாஹாநிரவ்யதிரேகாச்சப்தேப்ய:" என்று ஒரே ஸூத்ரம். இதனால் கீழ் பூர்வபக்ஷத்துக்கு ஸமாதாநம் சொல்லுகிறார். "யெநாஶ்ருதம் ஶ்ருதம்" என்று தொடங்கி ப்ரஹ்மத்தை யறிந்தால் ஸகல பதார்த்தங்களு மறிந்ததாம். என்று சொல்லிற்று. அதாவது - காரணவஸ்துவை யறிந்தால் அதின் கார்யங்களையெல்லா மறியலாமென்றபடி, ஆகாசம் நித்யமாகில் அது ப்ரஹ்மத்தின் கார்ய மல்லாமையால் ப்ரஹ்மத்தை யறிந்தபோதிலும் ஆகாசமறிந்ததாகமாட்டாது—ஆகாசமென்பது ப்ரஹ்மம்போல் நித்யமாய் ஸர்வவ்யாபியாகையால் ப்ரஹ்மத்தோடு ஸஜாதீயமாய் ப்ரஹ்மத்துடன் கலந்தே எங்குமிருக்கையால் ப்ரஹ்மத்தை யறிந்தபோதே ஆகாசமுமறிந்ததாகலாம் எதுபோலவென்னில், பாலில் நீர்கலந்திருந்தால் அப்பாலையறிந்தபோதே அத்துடன்சேர்ந்த நீரு மறிந்ததாமாப்போலே, என்றுசொல்லக்கூடாது. மேலே உதாஹரணம் காண்பிக்குமிடங்களில், ம்ருத்து, கடம், ஸுவர்ணம், கடகம், என்று இம்மாதிரி உபாதாந காரணத்தையும் கார்யத்தையுமே காண்பித்திருக்கையால் ஆகாசமும் அம்மாதிரியான கார்யமென்றே ஒப்புக்கொள்ளவேணும். மேலும் "ஐததாத்ம்யமிதம் ஸர்வம்" என்கிற வாக்யங்களும் ஆகாசம் முதலிய ஸகலவஸ்துக்களும் ப்ரஹ்மஸ்வரூபமென்றே சொல்லுகிறது. ஆகையால், ஆகாசம் ப்ரஹ்மத்தில் நின்று முண்டாகிறதென்கிற வேதாந்திமதமே சரியானது. உஉக உஉஉ.

(ரா-ஹா.)ஸ்ருஷ்டிக்குமுன் ப்ரஹ்மம் ஒன்றேயிருந்ததென்றும், இவையெல்லாம் ப்ரஹ்மஸ்வரூபமேயென்றும் சொல்லுகையாலே முன் ஆகாச மில்லையென்றும் பிற்பாடு உண்டாயிற்றென்றும் ஸ்பஷ்டமாகத் தோற்றுகிறது. சாந்தோக்யத்தில் ஆகாசோத்பத்தி சொல்லாமல் தேஜஸ்ஸினுத்பத்தியை முதலில்சொல்லியிருந்தாலும் அது தைத்திரீயத்தில் ஆகாசோத்பத்தியைச் சொல்லுகிற வாக்கியத்திற்கு பாதகமாகாதென்று தாத்பர்யம். உஉஉ

ஸூ-உஉ௩. யாவத்விகாரந்து விபாகோ லோகவத்.

(மூ-ரா-வ்யா.) லோகவத் - லோகத்திற்போலே, யாவத்விகாரம் - ஆகாசம் முதலிய ஸகலவஸ்துக்களும் ஜந்யம், (என்று அங்கீகரிக்கையாலே) விபாக: - உத்பத்தி (சொல்லப்பட்டது). உஉ௩.

(மூ-ஹா.) லோகத்தில் விகாரத்தையடைந்த வஸ்துக்களே வளையென்றும், குண்டலமென்றும், கலசமென்றும், மடக்கென்றும், ஊசியென்றும், சாலென்றும் வேறுபட்டுக்காண்கிறது. விகாரமில்லாவிடில் ஸுவர்ணமென்றுவது மண்ணென்றுவது, இரும்பென்றுவது ஒரேவிதமாய்க் காணப்படுகிறது. அதுபோல் ஆகாசமும் ப்ருதிவி ஜலம் தேஜஸ்ஸுக்களைக் காட்டிலும் வேறுபட்டுக் காண்கையால் இதுவும் ப்ரஹ்மத்தின்விகாரமாயே யாகவேணும். ஆகையால் ஆகாசத்துக்கு உத்பத்தியங்கீகரிக்கவேணும். உஉ௩.

(ரா-ஹா.) லோகத்தில், இவர்கள் நால்வரும் தேவதத்தனுடைய புத்திரர்கள் என்று சொல்லி அதில் இருவருடைய பிறப்பின் வகையைச்சொல்லி மற்றிருவர்க்கும் சொல்லாமற்போனாலும் அவ்விருவரும் தேவதத்தனுக்குப் புத்திரரன்றென்று தோற்றமாட்டார்கள்; அதுபோலவே "ஐததாத்ம்யம்" என்று இதெல்லாம் பரமாத்மகார்யமென்று சொல்லுகையாலே ஆகாசத்திற்குப்பிரித்து உத்பத்தி சொல்லாமற்போனாலும் பரமாத்மாவினிடத்திலிருந்து உண்டாயிற்றென்று வித்திப்பதில் தடையில்லை. உஉ௩.

ஸூ - உஉ௪. ஏதேந மாதரிஶ்வா வ்யாக்யாத:.

(மூ - ரா - வ்யா.) ஏதேந - இந்தயுக்தியினுலேயே, மாதரிஶ்வா (விநாசமில்லாதவனென்று சொல்லப்பட்ட) வாயுவும், வ்யாக்யாத: (பரமாத்மாவினிடத்திலிருந்துண்டானெனென்று) வ்யாக்யானம் செய்யப்பட்டான்.

ஸூ-உஉ௫. அஸம்பவஸ்து ஸதோ(அ)நுபபத்தே:.

(மூ-வ்யா.) அநுபபத்தே: - உபபத்தியில்லாமையாலே, ஸத: ப்ரஹ்மத்துக்கு, அஸம்பவ: - உத்பத்திஸம்பவியாது. உஉ௫.

(ரா-வ்யா-ஹா.) ஸத: - பரமாத்மாவுக்கே, அஸம்பவ:-உத்பத்யபாவம் (உத்பத்தியில்லையென்று சொல்லப்பட்டது) அநுபபத்தே: - (பரமாத்ம ஜ்ஞானத்தினால் ஸகலவஸ்துவிஷயக ஜ்ஞானம் உண்டாகிறதென்பது, இவை பரமாத்மாவி னிடத்திலிருந்து உத்பந்நங்களாகாமற்போனால்) சேராதாகையாலே, (இவை பரமாத்மகார்யங்களென்றே சொல்லப்பட்டன.) உஉ௫.

(மூ-ஹா.) வாயு முதலிய வஸ்துக்கள் விகாரியான ஆகாசாதிகளில் நின்றுமே உண்டானதாகக் காண்கிறது. அதுபோல் ஆகாசமும் விகாரியான ப்ரஹ்மத்தில் நின்றுமே உண்டாயிற்றென்று சொன்னவேண்டுகையால், ப்ரஹ்மமும் விகாரியெ

ன்று கொள்ளவேண்டிவரும் என்கிற சங்கையைப் பரிஹரிக்கிறூர். ஸந்மாத்ரஸ்வரூபியாகிய ப்ரஹ்மத்துக்கு உத்பத்தி சொல்லும்போது அதற்குக்காரணமாகிய வஸ்துவும் ஸந்மாத்ரஸ்வரூபியாகில் அந்த காரணவஸ்துவுக்கும் இந்த ப்ரஹ்மத்துக்கும் ஒரு விசேஷமுமில்லாமையால் அந்த வஸ்து காரணமாகமாட்டாது. லோகத்தில் ஓராகாரமில்லாமல் பிண்டமாயிருக்கிற மண் ஸுவர்ணம் முதலியவற்றில் நின்றும் பானை குண்டலம் முதலியவை வாயும் வயிறும் உருட்சி நீட்சி முதலிய ஆகாரங்களையுடையதாய் உண்டாகையாலே காரணத்தைக்காட்டிலும் கார்யத்தில் சில விசேஷங்கள் ஒப்புக்கொள்ளவேணும். இந்த ப்ரஹ்மம் நிர்விசேஷமாகையால் இது ஒன்றில்நின்று முண்டாயிற்றென்று சொல்லமுடியாது. மேலும், இப்படியே, இந்த ப்ரஹ்மத்திற்குக் காரணமாகிய வஸ்துவுக்கும் மற்றொன்று காரணமொப்புக்கொள்ளவேணும். அதுக்கு மப்படியே. இம்மாதிரி அநவஸ்தைவரும். மேலும், ஆகாசத்துக்குச் சில விடங்களில் உத்பத்தி சொல்லியிருக்கிறது. ப்ரஹ்மத்திற்கு அப்படி சொல்லவில்லை. எல்லாவிடங்களிலும் ப்ரஹ்மம் நித்யமென்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ப்ரஹ்மத்திற்கு உத்பத்தி சொல்வது உபபந்நமன்று. ௨௨௰.

௩௰-ஙு, ஸூ-௨௨௧. தேஜோऽதஸ்ததாஹ்யாஹ.

(ஶ்ரு-ரா-வ்யா.) அத꞉ - இந்த வாயுவினிடத்தில் நின்றும், தேஜ꞉ - தேஜஸ்ஸு (உண்டாயிற்று.) ததாஹி - அப்படியே, ஆஹ-சொல்லிற்று.

(ஶ்ரு-ஸா.) உபநிஷத்துக்களில் சில விடங்களில் "தத்தேஜோऽஸ்ருஜத" என்று எல்லாப்பதார்த்தங்களையும் ப்ரஹ்மமே படைத்ததாகச் சொல்லுகிறது. சில விடங்களில், "ஆகாஶாத்வாயு꞉ | வாயோரக்நி꞉" இத்யாதியினால் ஆகாசத்தில் நின்றும் வாயுவும், அதில் நின்றும் தேஜஸ்ஸு முண்டானதாகச் சொல்லுகிறது. இப்படி யொன்றுக்கொன்று விருத்தமாயிருக்கிற வேதவாக்யங்களில் எதை உண்மையாக நம்பவேண்டியதென்னில்; ஆகாசத்தில் நின்றும் வாயு அதில் நின்றும் தேஜஸ்ஸு இம்மாதிரியாக ஒரு பூதத்தில் நின்றும் மற்றொரு பூத முண்டாகிறதென்பதையே உண்மையாக நம்பவேண்டியது. தகப்பனிடத்திலிருந்து பிள்ளை, அவனிடத்திலிருந்து அவன் பிள்ளை இம்மாதிரி ஸந்ததியுண்டானபோதிலும், இந்த ஸந்ததியெல்லாம் அந்த மூலபுருஷனிடத்தில் நின்று முண்டாயிற்றென்று சொல்லுவதுபோல், ஸகலவஸ்துக்களுக்கும் ஸாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது ப்ரஹ்மமே மூலகாரணமாகையால் ஜகத்துக்கெல்லாம் ப்ரஹ்மமே காரணமென்கிற ஶ்ருதிவாக்யத்திற்கும் விரோதமில்லை. என்று ஸித்தாந்தம். ௨௨௧.

(ரா-ஸா.) இவ்வதிகரணத்தில் தேஜஸ்ஸு முதலிய பதார்த்தங்களுக்கும் பரமாத்மாவே காரணமென்கிறூர். "வாயோரக்நி꞉" என்றுவாயுவினிடத்திலிருந்து அக்நி உண்டாயிற்றென்று வேதத்தில் சொல்லுகையாலே அக்நிக்கு வாயுவேகாரணம்; பரமாத்மாவன்று "தத்தேஜோऽஸ்ருஜத" என்கிறவாக்யத்தில் பரமாத்மாவை இதற்குக்காரணமாகச் சொல்லியிருந்தாலும் தேஜஸ்ஸுக்குக் காரணமாகிய வாயுவுக்குக் காரணமாகிய ஆகாசத்திற்குக் காரணமாகையால் பரம்பரயா காரணமென்றபிப்ராயத்தினால் பரமாத்மாவைக் காரணமாகச் சொல்லிற்று என்று பூர்வபக்ஷம். ௨௨௧.

ஸூ-௨௨௭. ஆப꞉.

(ஶ்ரு-ரா-வ்யா.) ஆப꞉ - ஜலம், (அத꞉ - இந்ததேஜஸ்ஸில் நின்றுமுண்டாயிற்று.) ததாஹி - அப்படியே ஆஹ - சொல்லிற்றுவேதம்.) ௨௨௭.

(ஶ்ரு-ஹா.) ஜலமும் தேஜஸ்ஸில்நின்றுமே யுண்டாகிறது, ப்ரஹ்மத்தினிடத்தில் நின்றும் ஸாக்ஷாத் உண்டாகிறதில்லை. "அக்³நேராப꞉" என்கிற வாக்யமும் இவ்வர்த்தத்தையே சொல்லுகிறது. என்று ஸித்தாந்தம். உஉஎ.

(பா-ஹா.) அப்படியே "அக்³நேராப꞉" என்று அக்நியினிடத்தில் நின்றும் ஜலம் உண்டாயிற்றென்று சொல்லுகையாலே ஜலத்திற்குக் காரணம் தேஜஸ்ஸேயாகிறது. பரமாத்மாவாகிறதில்லை. என்று பூர்வபக்ஷம். உஉஎ.

ஸூ-உஉஅ. ப்ருதி²வீ.

(ஶ்ரு-பா-வ்ரு.) ப்ருதி²வீ-பூமி, (அத்³ப்⁴ய꞉ இந்தஜலத்தில் நின்றும் உண்டாயிற்று) ததா² ஹ்யாஹ - அப்படியே வேதம்சொல்லிற்று.) உஉஅ.

(பா-ஹா.) "தா அந்நமஸ்ருஜந்த" அந்தஜலம், அந்நமென்று சொல்லப்பட்ட ப்ருதிவியைஸ்ருஷ்டித்ததென்று சொல்லுகையாலே ப்ருதிவிக்கு ஜலமேகாரணம்; பரமாத்மா காரணமன்று என்று பூர்வபக்ஷம். உஉஅ.

ஸூ-உஉகூ. அதி⁴காரரூபஶப்³தா³ந்தரேப்⁴ய꞉.

(ஶ்ரு-பா-வ்ரு.) அதி⁴காரரூபஶப்³தா³ந்தரேப்⁴ய꞉ - ப்ரகரணத்தினாலும், (மேற்சொல்லுகிற) வர்ணத்தினாலும், (ஸமாநப்ரகரணஸ்த்த) சப்தத்தினாலும், (அந்நசப்தத்திற்கு ப்ருதிவி அர்த்தமென்று நிஶ்சயிக்கப்படுகிறது.

(ஶ்ரு-ஹா.) இந்த பாஷ்யத்துக்கு "ப்ருதி²வ்யதி⁴காரரூபஶப்³தா³ந்தரேப்⁴ய꞉" என்று ஒரேஸூத்ரம் "தா அந்நமஸ்ருஜந்த" அந்த ஜலம் அந்நத்தை ஸ்ருஷ்டித்தது என்கிற வாக்யத்தில் அந்நமென்றுசொல்லப்பட்டது தான்யமா, அல்லது ப்ருதிவியாவென்று ஸம்சய முண்டாகும். அதற்குப்பூர்வபக்ஷி சொல்லுகிறான்— அந்நமென்று லோகத்தில் நெல் முதலிய தான்யங்களிலேயே வழங்கிவருகிறது. மழையினால் தான்யம் விளைகையால், ஜலம் அந்நத்தை ஸ்ருஷ்டித்ததென்று சொல்லப்படுகிறது என்றான். இது ஆகாசம் வாயு முதலிய பூதங்களின் காலாவது பூதமாகிய ஜலத்திற்குப்பின் ஐந்தாவதான ப்ருதிவியைச்சொல்லவேண்டியிருக்க அதை விட்டு தான்யத்தைச்சொல்வது ப்ரகரணத்திற்குச் சேராதாகையாலும், இந்த அந்நம் க்ருஷ்ணவர்ணமென்று சொல்லுகையாலும், அந்த வர்ணம் ப்ராயிகமாக ப்ருதிவிக்கேயுள்ள தாகையாலும், "அத்³ப்⁴ய꞉ ப்ருதி²வீ" என்ற வாக்யம் ஜலத்தில் நின்றும் ப்ருதிவியுண்டாயிற்றென்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகையாலும், இங்கு ப்ருதிவிதான் அந்நமென்று சொல்லப்பட்டது என்று ஸித்தாந்தம். உஉஅ. உஉகூ.

(பா-ஹா.) அந்நமென்றால் ப்ருதிவிக்கு எப்படி பேராகுமென்னில், பஞ்சபூதங்களைச்சொல்லுகிற இந்தப்ரகரணத்தில் மற்றவைகளைச் சொல்லிப்ருதிவியைச் சொல்லவேண்டிய இடத்தில் அந்நமென்று சொல்லிற்று. மேல்வாக்யத்தில், ப்ருதிவிக்குண்டானக்ருஷ்ண வர்ணத்தை "யத் க்ருஷ்ணம் தத³ந்நஸ்ய" என்று அந்நத்திற்குச் சொல்லிற்று. இத்தோடு ஸமாநமான மற்றொரு ஸ்ருஷ்டி ப்ரகரணத்தில் "அத்³ப்⁴ய꞉ ப்ருதி²வீ" என்று ஜலத்தில்நின்று ப்ருதிவி உண்டாயிற்றென்று ஸ்பஷ்டமாகச்சொல்லிற்று. ஆக இந்தஹேதுக்களைக் கொண்டு இங்குள்ள அந்நசப்தத்திற்குப்ருதிவியே அர்த்தமென்று நிஶ்சயிக்கப்படும். என்று பூர்வபக்ஷம். உஉகூ.

ஸூ-௨௩௦. தத³பி⁴த்⁴யாநாதே³வ து தல்லிங்கா³த்ஸ꞉.

(ஶ-ரா-வ்ரு.) **தல்லிங்கா³த்** - அவற்றின்ஸ்ருஷ்டிக்கு ஹேதுவாய், **தத³பி⁴த்⁴யாநாத்** . பரமாத்மாவினுடைய ஸங்கல்பத்தைச் சொல்லுகையாலே, **ஸ꞉ ஏவ**- அந்தபரமாத்மாவே,(அவற்றுக்குக்காரணம்)(ரா) **து**-என்கிறது கீழ்ச்சொன்ன பூர்வபக்ஷத்தைக் காட்டிலும் வேறான ஸித்தாந்த ரூபார்த்தத்தைச் சொல்லுகிறதென்கைக்காக. ௨௩௦.

(ஶ-ஹா.) ஆகாசம்முதலிய பூதங்கள், தனக்குப் பின்புள்ள வாயுமுதலிய பூதங்களைத் தாங்களே ஸ்ருஷ்டிக்கின்றனவா, அல்லது அவற்றில் பரமாத்மா அந்தர்யாமியாயிருந்து இவற்றை ஸ்ருஷ்டிக்கிறானென்று உதித்த ஸம்சயத்துக்குப் பூர்வபக்ஷி, "ஆகாஶாத்³வாயு꞉ - வாயோரக்³நி꞉" என்று ஒருபூதத்தில் நின்றும், மற்றொருபூதமுண்டானதாகச் சொல்லுகையாலே, பின்புள்ள வாயுமுதலிய பூதங்களை முன்புள்ள ஆகாசம்முதலிய பூதங்களே ஸ்ருஷ்டிக்கிறனவென்றான். "ய꞉ ப்ருதி²வ்யாம் திஷ்ட²ந்" என்றுதொடங்கி ப்ருஹதாரண்யத்திலும் மற்றும் அனேகஉபநிஷத்துக்களிலும் ப்ருதிவீமுதலிய ஸமஸ்தவஸ்துக்களும் ஸர்வேஶ்வரனுக்குச்சரீரமாக இருக்கிறதென்கையாலும், "தா ஆப ஐக்ஷந்த" இத்யாதி வாக்யங்கள் ஜலம்முதலிய பூதங்கள் ப்ருதிவிமுதலியபூதங்களை ஸ்ருஷ்டிப்பதாக ஸங்கல்பித்துக்கொண்டுஅவற்றைஸ்ருஷ்டித்ததாகச் சொல்லுகையாலும் இப்படிஸங்கல்பிக்கை அசேதநமாகிய ஆகாசாதிபூதங்களுக்குக் கூடாமையாலும், ஸர்வேஶ்வரனே ஆகாசாதிகளைச் சரீரமாகக்கொண்டு அந்தந்த பூதஸ்வரூபமாயிருந்து ஸ்ருஷ்டிக்கிறானென்பது ஸித்தாந்தம். ௨௩௦.

(ரா-ஹா.) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.—"தத்தேஜ ஐக்ஷத-ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய"என்று அந்ததேஜஸ்ஸு ஸங்கல்பித்தது, அநந்தரம் ஜலத்தைஸ்ருஷ்டித்தது என்று சொல்லுகையாலே அசேதநமான தேஜஸ்ஸுக்கு சேதநதர்மமான ஸங்கல்பம் கூடாமையாலே அப்படி ஸங்கல்பித்தவன் தேஜஸ்ஸை சரீரமாக உடையபரமாத்மா,அவனே தேஜ꞉பதத்தினுல் சொல்லப்பட்டவன்;ஆகையால்வெறும்தேஜஸ்ஸு ஜலத்திற்குக் காரணமாகச்சொல்லவில்லை, அதைச்சரீரமாக உடைய பரமாத்மாவே காரணமாகச் சொல்லப்பட்டானுகையால் அவனே ஜலாதிகளுக்குக்காரணமென்று ஸித்தாந்தம். ௨௩௦.

ஸூ-௨௩௧. விபர்யயேண து க்ரமோ(அ)த உபபத்³யதே ச.

(ஶ-வ்ரு.) **அத꞉** - இந்த ஸ்ருஷ்டிக்ரமத்தைக் காட்டிலும், **விபர்யயேண** - விபரீதமாக, **க்ரம꞉** - ப்ரளயக்ரமமானது, (இருக்கிறது). **உபபத்³யதே ச** - (இதுவே) உபபந்நமாயிருக்கிறது. ௨௩௧.

(ரா-வ்ரு.) **அத꞉** - பரமாத்மாவினிடத்தில் நின்றும் ஜலாதிகளுண்டாகையினுலேயே, **விபர்யயேண** - (இங்குச்சொன்ன க்ரமத்தைக்காட்டிலும்) வேறுவிதமாகச்சொல்லப்பட்ட, **க்ரம꞉** - (ஸ்ருஷ்டி) க்ரமம், **உபபத்³யதே** - உபபந்நமாகிறது. ௨௩௧.

(ஶ-ஹா.) இதுவரையில் ஸ்ருஷ்டிக்ரமம் சொல்லியாயிற்று. இனி ப்ரளயக்ரமம் சொல்லப்படுகிறது. ஆகாசத்தில் நின்றும் வாயு,வாயுவில் நின்றும், அக்நி,அக்

யில்நின்றும் ஜலம்,ஜலத்தில்நின்றும் ப்ருதிவி உண்டாயிற்றென்று ஸ்ருஷ்டிக்ரமம். லயிக்கும்போது முதல் வாயு ஆகாசத்தில் லயித்து பின்பு வாயுவில் தேஜஸ்ஸு லயித்து அதன்பின்பு தேஜஸ்ஸில் ஜலம் இம்மாதிரியாக பூதங்கள் தன் தன் காரணத்தில் லயிக்கிறதா, அல்லது ப்ருதிவி ஜலத்தில் லயித்து, பின்பு அது தேஜஸ்ஸில் லயித்து அதன்பின்பு அது வாயுவில்லயித்து இம்மாதிரி லயிக்கிறதா, அல்லது இவ்விரண்டுவிதமுமின்றிக்கே இப்படி அப்படி என்கிற நியமமுமின்றிக்கே இஷ்டமானபடி லயிக்கிறதாவென்னில், லோகத்தில், ஒருவன், மேலே யேறும்போது கீழ்ப்படியிலிருந்து மேல்படி வரைக்குமேறி உயரப்போகிறான், இறங்கும்போது கடைசியாக ஏறின மேல்படியிலிருந்து க்ரமக்ரமமாகக் கீழ்ப்படியளவும் இழிந்து வருகிறான். அதுபோலவே, ஆகாசம் முதல் ப்ருதிவி யாளவாக உண்டான வஸ்துக்கள் லயிக்கும்போது,ப்ருதிவி ஜலத்தில்,அது தேஜஸ்ஸில் இம்மாதிரி தலைகீழாகவே லயிக்கிறது. மேலும், குண்டலமிருக்கும்போது ஸுவர்ணம் நசிக்கிறதில்லையாகையால் கார்யமழிந்தபிறகே காரணமழிகிறதென்று சொல்லவேண்டுகையாலும் இந்த லயக்ரமமே சரியானது. உகக.

(ரா-ஸா.) ஸமஸ்தவஸ்துக்களுக்கும் பரமாத்மாவே காரணமென்று ஒப்புக்கொள்ளுகையில், ஆகாசத்தில் நின்றும் வாயு அதில்நின்றும் அக்நி அதில்நின்றும் ஜலம் அதில் நின்றும் ப்ருதிவி உண்டாயிற்றென்று சொன்ன ஸ்ருஷ்டிக்ரமத்திற்கு விபரீதமாக "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச, கம் வாயு:" இத்யாதிவாக்யத்தில் பரமாத்மாவினிடத்திலிருந்தே ப்ராணன் மநஸ்ஸு இந்திரியம் ஆகாசம் வாயு அக்நி முதலியவை உண்டாயிற்றென்று சொன்னதும் உபபந்நமாகிறது. ஆகையால் பரமாத்மாவே இவற்றுக்குக் காரணம். உகக.

ஸூ-உகஉ. அந்தரா விஜ்ஞாநமநஸீ க்ரமேண தல்லிங்காதிதி சேந்நாவிசேஷாத்.

(ஸ-வ்ரு.) தல்லிங்காத் - ஸ்ருஷ்டிவாக்யரூபமான ஹேதுவினால், அந்தரா - ஆத்மாவுக்கும் ஆகாசத்திற்கும் நடுவே, விஜ்ஞாநமநஸீ - ஜ்ஞாநம் மநஸ்ஸு (முதலிய கரணங்கள் உண்டாகின்றனவென்று நிச்சயிக்கப்படுகிறதாகையால்), க்ரமேண - (முன்சொன்ன) ஸ்ருஷ்டிக்ரமத்தோடு, (வேறுபட்டிருக்கிறது). இதி சேத் - என்றால், அவிசேஷாத் - (பூதோத்பத்திக்ரமத்தைக்காட்டில் இந்த்ரியோத்பத்தி க்ரமத்துக்கு) விசேஷமில்லாமையால், ந-விரோதமில்லை. உகஉ.

(ரா-வ்ரு.) தல்லிங்காத் - இந்தக்ரமமாக லயம் தோற்றுகையாகிற ஹேதுவினாலே, அந்தரா - தந்மாத்ரைகளுக்கும் ஆகாசத்திற்கும் நடுவில், க்ரமேண - க்ரமமாக, விஜ்ஞாநமநஸீ - இந்த்ரியங்களும் மநஸ்ஸும், (உண்டாகிறதென்று இவ்வாக்யத்திற்கு அர்த்தம்) இதிசேத்-என்றால், அவிசேஷாத் - (ப்ராணசப்தத்திற்கும் ஆகாசவாசக சப்தத்திற்கும், தத்தச்சரீரகனான பரமாத்மாவே அர்த்தமென்று சொல்லவேண்டுகையாலே, "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண:" என்பதற்கும் "ஏதஸ்மாதாத்மந ஆகாச: ஸம்பூத:" என்பதற்கும் விசேஷமில்லாமையாலே, ந - அப்படி சொல்லக்கூடாது. இவ்வாக்யம் ஸாக்ஷாத் பரமாத்மகாரணபரமென்றே ஸ்வீகரிக்கவேணும். உகஉ.

(ஶ்ரு-ஹா) தைத்திரீயத்தில் "ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" என்று தொடங்கி, ஆத்மாவில் நின்று மாகாசம், அதில் நின்றும் வாயு இம்மாதிரி உத்பத்தி க்ரமம் சொல்லப்பட்டது. அதர்வணோபநிஷத்தில் "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச| கம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதிவீ" என்று ஆத்மாவில் நின்றும் ஆகாசமுண்டாவதற்கு முன்னமே இந்த்ரியோத்பத்தி சொல்லியிருக்கிறது; இப்படி ஒன்றுக்கொன்று விருத்தங்களாயிருக்கிற இவ்விரண்டு ஶ்ருதிகளில் எதை நம்பவேணுமென்னில்; இந்த்ரியங்களெல்லாம் பஞ்சபூதங்களினாலுண்டானதாகையால், முதல் ஆத்மாவில் நின்றும் ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களுண்டாய், அதன்பின் அந்த பஞ்சபூதங்களினால் இந்த்ரியங்களுண்டாயிற்றென்று கொள்வதே யுக்தமாகையால், தைத்திரீயத்தில் சொன்ன க்ரமமே சரி. மற்றோருபநிஷத்தில் ஆத்மாவினிடத்தில் நின்றும் இந்த்ரியங்களும் பூதங்களுமுண்டாயிற்றென்று மொத்தமாகச் சொல்லிற்றல்லது உத்பத்தி க்ரமம் சொல்லவில்லை. ௨௩௨.

(ரா-ஹா.) ப்ரளயக்ரமத்தில் ஆகாசம் இந்த்ரியங்களிலும் அவை தந்மாத்ரைகளிலும் லீநமாகிறதென்று சொல்லிற்று. லயக்ரமம்போலவே ஸ்ருஷ்டிக்ரமமாகையால் க்ரமமாக தன்மாத்ரைகளில் நின்றும் இந்த்ரியங்கள் அவற்றில் நின்றும் ஆகாசம் உண்டாயிற்றென் றங்கீகரிக்கவேணும். அந்த க்ரமத்தையே "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண:" இத்யாதி வாக்யம் சொல்லுகிறது. எல்லாம் பரமாத்மாவினிடத்தி லிருந்துண்டாகிறதென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யமன்றென்று பூர்வபக்ஷம்—ஸ்ருஷ்டிக்ரமம் இவ்விதமாக ஒப்புக்கொண்டாலும் ஆகாசவாய்வாதி சப்தங்கள்போலே இந்த்ரியமந:ப்ராண சப்தங்களும் அவற்றைச்சரீரமாக உடைய பரமாத்மாவுக்கே வாசகங்களாகையால், அவ்வவைகளைச் சரீரமாக உடைய பரமாத்மாவினிடத்தில்நின்றும் அந்தந்த பதார்த்தங்களுண்டாயிற்றென்றே அங்கீகரிக்கவேணும். ஆதலால் இவ்வாக்யம் ஸர்வவித்திற்கும் பரமாத்மா காரணமென்றதென்பதிற் குறையில்லையென்று ஸித்தாந்தம். ௨௩௨.

ஸூ-௨௩௩. சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத் தத்வ்யபதேஶோ பாக்தஸ்தத்பாவபாவித்வாத்.

(ஶ்ரு-வ்ய.) தத்வ்யபதேஶ:- ஜந்மமரணமுள்ளதாகச் சொல்லுகை, சராசரவ்யபாஶ்ரயஸ்து - ஜங்கமஸ்த்தாவர விஷயமானதே, (முக்யம்). தத்பாவபாவித்வாத் - சரீரமுண்டாகும்போதே ஜீவனுண்டானானென்கிற வ்யவஹாரமுண்டாகையாலே, பாக்த: - (ஜீவனிடத்தில் ஜநநமரண வ்யவஹாரம்) கௌணம். ௨௩௩.

(ரா - வ்ய) தத்பாவபாவித்வாத் - (பரமாத்மா) அவைகளில் ஆத்மாவாக அநுப்ரவேசித்திருக்கையாலே, சராசரவ்யபாஶ்ரய: - ஜங்கமஸ்த்தாவரங்களை ஆஶ்ரயித்திருக்கிற (சொல்லுகிற) தத்வ்யபதேஶ: - தேஜஸ்ஸு வாயுமுதலியசப்தம், அபாக்த: - (பரமாத்மாவினிடத்தில்) முக்யமாக, ஸ்யாத் - ஆகும். ௨௩௩.

(ஶ்ரு-ஹா.) பூதங்களினுடைய உத்பத்தி க்ரமம் சொன்னபின், "தேவதத்தன் பிறந்தான், இறந்தான்" என்று ஜீவாத்மவிஷயமாகவும் உத்பத்திவிநாச வ்யவஹாரம் காண்கையாலே இவனுக்கும் உத்பத்திவிநாசங்களுண்டோவென்னில்; மநுஷ்ய பசுபக்ஷி முதலிய ஜங்கமங்களும், கொடிசெடி முதலிய ஸ்த்தாவரங்களுமே உண்டாகின்றன, நசிக்கின்றன. அவற்றைச் சரீரமாக உடைய ஆத்மா நசிக்கிறதில்லை. ஆகிலும்

அவனுடைய சரீரம் போனமையால் அவன் போனனென்று சொல்லுகிறார்கள். அது முக்யமான வ்யவஹாரமன்று. சரீரமுண்டாம்போது, "உண்டானன்" என்றும் அது நசித்தபோது, "நசித்தான்" என்றும் சொல்லுகையால் அந்த வ்யவஹாரத் துக்கு இப்படியே உபபத்தி சொல்லவேணும். இல்லையாகில். ஆத்மாநித்யமென்கிற வசநங்களோடு விரோதம்வரும். உகரு.

(பா-ஹா.) லோகத்தில் தேஜஸ்ஸு வாயு முதலியவற்றுக்கு வாசகங்களாக ப்ரஸித்தமாயிருக்கிற சப்தங்கள் பரமாத்மாவுக்கு வாசகங்களாக எப்படியாகும் என்னில்,—ஸகல பதார்த்தங்களிலும் பரமாத்மா அந்தர்யாமியாய் ப்ரவேசித்து அவற்றுக்கு ஆத்மாவாக இருக்கிறான், அவனுக்கு இவ்வெல்லாம் சரீரமாயிருக் கிறது. சரீரத்தைச் சொல்லுகிற சப்தங்கள் அந்த சரீரத்தோடுகூடிய ஆத்மாவை யே சொல்லு மாகையால் ஸகல சப்தங்களும், அவற்றுக்கர்த்தமாகிய வஸ்துக்களுக் கந்தர்யாமியாகிய பரமாத்மாவைச் சொல்லத்தட்டில்லை. உகரு.

கய-ருக. ஸூ-உகச. நாத்மா ஶ்ருதேர்நித்யத்வாச்ச தாப்ய:.

(ஸ-பா-வ்யா.) ஶ்ருதே:- ஜீவனுக்கு உத்பத்தியில்லையென்று சொல் லுகையாலும், தாப்ய: - அந்த வேதவாக்யங்களினாலே, நித்யத்வாச்ச - நித்யத்வம் தோற்றுகையாலும், ஆத்மா - ஜீவன், ந - உண்டாகிறதில்லை.

(ஸ-பா-ஹா.) இதில் ஜீவாத்மாநித்யனென்று ஸ்தாபிக்கிறார்.—ஜீவாத்மாவு க்கு உத்பத்தி ஒப்புக்கொள்ளாமற்போனால் அவ்வாத்மா ப்ரஹ்மஸ்ருஷ்டியிற் சேரா மையாலே ப்ரஹ்மஜ்ஞாநத்தினால் ஜீவாத்மஜ்ஞாநமுண்டாகாதாகையால் முன்சொ ன்ன ஏகவிஜ்ஞாநத்தினால் ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞைக்கு பங்கம்வரும். மேலும் "தாபிர் ஜீவாந் வ்யஸஸர்ஜ" ஜலத்துடன்கூட ஜீவன்களை பூமியில்விட்டான் (ஸ்ருஷ்டித்தான்) என்றும், "ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத" ப்ரஹ்மா ப்ரஜை களை ஸ்ருஷ்டித்தானென்றும் சொல்லுகிறது. ஆகையால் ஜீவனுக்கும் உத்பத்தி ஒப்புக்கொள்ளவேணும். ஜீவன் நித்யனென்று சொல்லுகிற வாக்யங்களுக்கு பஹு காலமிருக்கிறானென்று கௌணமாக அர்த்தம் சொல்லவேணும் என்று பூர்வபக்ஷம். "ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்" என்று ஜீவனுக்குஉத்பத்தி விநாசங்களில்லை யென்று சொல்லுகையாலும், ஜீவனை அநித்யனென்று ஒப்புக்கொண்டால் அவன் உண்டான உடனே அநுபவிக்கிற ஸுகதுக்கங்களுக்கு புண்யபாபரூப ஹேதுக்க ளில்லை யாகையால் காரணமில்லாமலே கார்யமுண்டாயிற்றென்ற தோஷமும், அவன் நசிக்கைக்கு முன்செய்த புண்யபாபங்களுக்கு பலமில்லாமற் போகையும், ஈஶ்வரன் காரணமில்லாமலே ஒருவனை அதிகமாகவும் மற்றொருவனைக்குறையவும் ஸ்ருஷ்டிக்கையாகிற அவனுக்கு வைஷம்யமும், துக்கரூபமான இந்த ஸம்ஸாரத்தில் ஸ்ருஷ்டிக்கையாகிற நிர்தயத்வமும் ஸம்பவிக்கையும் ஆக இந்த தோஷங்கள் வரு கையாலும் இப்பக்ஷத்தைவிட்டு "நித்யோ நித்யாநாம்" என்று வேதத்திற் சொல்லியபடி ஜீவன்நித்யனென்றே அங்கீகரிக்கவேணும் என்றுஸித்தாந்தம். உகச.

கய-ருஎ. ஸூ-உகரு. ஜ்ஞோத ஏவ.

(ஸ - வ்யா.) அத ஏவ - நித்யனாகையாலே (பரமாத்ம ஸ்வரூபியா கையாலே) ஜ்ஞ: (ஜீவன்) சித்ஸ்வரூபமானவன். உகரு.

(பா - வ்யா.) அத: - இந்த வேதத்தினாலே. ஜ்ஞ ஏவ - (ஜீவன்) ஜ்ஞாநாஶ்ரயனாயே ஆகிறான். உகரு.

(ஸ- ஹா.) இந்த ஜீவனுக்குச் சைதந்யம் எப்போது முள்ளதா, அல்லது சில காலங்களிலே யுள்ளதாவென்னில்; உறங்கும்போதும் மூர்ச்சையடைந்திருக்கும்

போதும் சைதந்யத்தைக் காணுமையாலும், தெளிந்தெழுந்தபின் அவனைக்கேட் டால், நான் இதுவரையில் ஒன்று மறியேன் என்று சொல்லுகையாலும், சைதந்யம் சிலகாலங்களிலேயே யுள்ளதென்று தார்க்கிகர் சொன்னார்கள். இந்த ஜீவனுக்கு உத்பத்தியில்லாமையாலே, பரப்ரஹ்மமே அநாதியாகிய அஜ்ஞாநத்தினுல் இப்படி ஜீவனுயிருக்கிறனென்று ஜீவனை ப்ரஹ்மஸ்வரூபமாகச் சொல்லுகையாலும், அந்த ப்ரஹ்மம் "விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம" என்று ஸ்வயம் ப்ரகாசமாய் ஜ்ஞாநஸ்வரூபி யென்று சொல்லுகையாலும், ஜீவன் ஸ்வயம்ப்ரகாசமான சித்ஸ்வரூபியா யிருக்கி றன். உறங்கும்போது அறியவேண்டிய விஷயமொன்றும் எதிரிலில்லாமையால் ஜ்ஞாநம் உண்டாகிறதில்லை. ஸ்வஸ்வரூபஜ்ஞாநம் மாத்திரம் அப்போது முண்டெ ன்று ஸித்தாந்தம்.   உ௩.

(ரா-ஸா.) ஜீவன் ஜ்ஞாநஸ்வரூபனு, அல்லது - ஜடஸ்வரூபனுய் காலவிசே ஷங்களிலேயே ஜ்ஞாநத்தையுடையவனு, அல்லது-எப்போதும் ஜ்ஞாநத்தையுடை யவனு என்று ஸம்சயம்.—"விஜ்ஞாநம்யஜ்ஞம் தநுதே" ஜ்ஞாநஸ்வரூபனை ஆத்மா யஜ்ஞத்தைச்செய்கிறன் என்றும், "விஜ்ஞாநே திஷ்டந்" ஜ்ஞாநஸ்வரூபனை ஜீவா த்மாவில் பரமாத்மா இருக்கிறன் என்றும், இத்யாதி அநேகவசநங்கள் இருக்கை யாலே ஜீவன் ஜ்ஞாநஸ்வரூபனுகலாம்; உறக்கத்திலும் மூர்ச்சையிலும் ஜ்ஞாநமில் லாமையாலும், "நப்ரேத்யஸம்ஜ்ஞாஸ்தி" என்று முக்தியில் ஜ்ஞாந மில்லையெ ன்று சொல்லுகையாலும், ஜீவனனவன் ஜடஸ்வரூபனுய் சிலகால விசேஷங்களில் ஜ்ஞாநமுள்ளவனுகிறன் என்றும் சொல்லவாம்; எப்போதும் ஜ்ஞாநாஸ்ரயனென் பது கூடாது. என்று பூர்வபக்ஷம்.—"அயமேவாஹமஸ்மீதி வேத்யாணீதி விஷ்ணு" என் வாஸனை மோருகிறேனென்கிறனே; அவனே ஜீவன் என்று ஸம்ஸாரதசை யிலும், "ஸர்வம் ஹ பச்ய: பச்யதி" என்று ஸர்வவிஷயகஜ்ஞாந முடையவனெ ன்று முக்திதசையிலும் ஜீவனை ஜ்ஞாநமுள்ளவனுகச் சொல்லுகையாலே எப்போ தும் ஜ்ஞாநமுடையவனேயாகிறன். உறக்கத்திலும் மூர்ச்சையிலும் ஜ்ஞாநம் இருந் தாலும் அப்போது ஸங்கோசத்தை யடைகிற தாகையால் ப்ரகாசிக்கவில்லை. அவ் வளவுமாத்திரத்தினுல் ஜடஸ்வரூபனுய் சில காலங்களில் ஜ்ஞாநமுடையவன், மற்ற காலங்களில் ஜ்ஞாநமில்லாதவனென்று சொல்லக்கூடாது. ஜ்ஞாநத்தைப்போல் ஆத்மாவும் ஸ்வயம் ப்ரகாசமாகையாலும், ஜ்ஞாநம் ஜீவனுக்கு முக்யகுணமாகையா லும் ஜீவனைஜ்ஞாநஸ்வரூபனென்கிறது. அது கௌணம். முக்தியில்ஜ்ஞாந மில்லை யென்றதுக்கு ஸம்ஸாரஜ்ஞாநமில்லையென்றர்த்தம். ஆகையால் முன்பக்ஷங்களைத்த விர்த்து எப்போதும் ஜ்ஞாநமுடையவனென்றே அங்கீகரிக்கவேணுமென்று ஸித் தாந்தம்.   உ௩.

ஸூ—உ௩௩. உத்க்ராந்திகத்யாகதீநாம்.

(ஸு-ரா-வ்ய.) உத்க்ராந்திகத்யாகதீநாம் - சரீரத்தைவிட்டுப் புறப் படுகை லோகாந்தரம் போகை அங்கிருந்து வருகை இவைகளை, ஜீவனுக்கு வேதம் சொல்லுகையாலே ஜீவன் விபுவன்று.   உ௩௩.

(ஸு-ஸா.) ஜீவன் அணுஸ்வரூபியா, விபுஸ்வரூபியாவென்றசங்கையில் அணு ஸ்வரூபியென்று, இதுமுதல் பத்து ஸூத்ரங்களினுல் பூர்வபக்ஷ யுக்தியைச்சொல்லி அதன்பின், ஜீவன் அணுஸ்வரூபியன்று, இவன் பரப்ரஹ்மமாகையால் விபுஸ்வரூபி யென்று ஸித்தாந்தம் செய்கிறர். ராமாநுஜபாஷ்யத்துக்கு ஜீவன் அணுவென்றுமத மாகையால், ஜீவன் அணுவென்பதற்குத்தக்க யுக்திகளைச்சொல்லுகிற இச் ஸூத்

ரங்கள் ஸித்தாந்த ஸூத்ரங்கள். இந்த பாஷ்யத்துக்கு இவை பூர்வபக்ஷ ஸூத்ரங்களாயிருக்கின்றன.—மரணகாலத்தில் ஜீவன் சரீரத்தைவிட்டுக் கிளம்பிப்போகிறுனென்றும், ஸ்வர்க்க நரகாதிகளில்நின்றும் வருகிறுனென்றும் சொல்லுகையாலே ஜீவன் விபுவாகில் அவனுக்கு வெளிக்கிளம்புகை போக்குவரவுகூடாமையால் ஜீவன் அணுவென்று பூர்வபக்ஷம். உகசு.

(ரா-ஹா.) இந்தஅதிகரணத்தில் ஜீவன் விபுவன்றென்கிறுர்.—"ஸ யதாஸ்மாச்சரீராதுத்க்ராமதி" இந்த ஜீவாத்மா வெளிக்கிளம்புகிறுன் என்றும், "யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி" இத்யாதியில் இந்த லோகத்திலிருந்து சந்த்ரலோகம் முதலியவற்றுக்குப் போகிறுனென்றும், "தஸ்மால்லோகாத் புநரைதி" அந்தலோகத்திலிருந்து திரும்பி யிங்கே வருகிறுனென்றும் சொல்லுகையாலே, ஜீவன் விபுவாளுல் இவைகள் ஸம்பவியா வாகையால் அணுஸ்வரூபனென்றே ஒப்புக்கொள்ளவேணும்.

ஸூ-உ௯எ. ஸ்வாத்மநா சோத்தரயோ:.

(ஸ-ரா-வ்ய.) உத்தரயோ: - பிற்பட்டதான கமநாகமநங்களுக்கு, ஸ்வாத்மநா ச - தன்ஸ்வரூபத்தினுலேயே, (ஸம்பவம் சொல்லவேண்டும்.)

(ஸ-ஹா.) முன் ராஜாவாயிருந்தவன், அந்த ராஜ்யாதிகாரம் போனவாறே, அவனந்த ராஜ்யத்திலேயே யிருந்தபோதிலும், "அவன் ராஜ்யத்தைவிட்டு வெளிக்கிளம்பினுன்" என்பதுபோல், ஜீவன் சலியாமலிருக்கச்செய்தேயும் மரணகாலத்தில் இந்த தேகத்தி லபிமாநத்தை விட்டுவிடுகிறுனுகையால் இதைவிட்டு வெளிக்கிளம்பினுனென்கிறது. இது அணுவென்பதற்கு ஸாதகமாகாதே யென்னில், ஆயினும், போக்குவரத்துக்கள் அணுஸ்வரூபிக்கேயுள்ள தர்மமாகையால் அவ்விரண்டினுல் ஜீவன் அணுஸ்வரூபியாகிறுனென்று பூர்வபக்ஷம். உ௯எ.

(ரா-ஹா.) கீழ்ச்சொன்ன மூன்றில் முதலதான உத்க்ராந்தியாவது சரீர நாசமே என்று ஒப்புக்கொண்டு அதற்கு ஒருவிதமான ஸமாதாநம் சொன்னுலும், அநந்தரம் சொன்ன போக்கு வரத்துக்கள் ஆத்மாவினுலேயே நடக்கவேண்டிய தாகையால் ஆத்மா விபுவானுல் அவை ஸம்பவிக்காது. உ௯எ.

ஸூ-உ௯அ. நாணுரதச்ச்ருதேரிதி சேந்நேதராதிகாராத்.

(ஸ-ரா-வ்ய.) அதச்ச்ருதே: - (ஜீவனை) அணுபின்னமான மஹானென்று சொல்லுகையாலே, அணு: - அணுஸ்வரூபனுக, ந - ஆகமாட்டான், இதி சேத் - என்றுல், இதராதிகாராத் - இதரனை பரமாத்மாதிகாரமாகையாலே, ந - அப்படியன்று. உ௯அ.

(ஸ-ஹா.) "ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா" இந்த ஆத்மா மிகவும் பெரியவன், விபுவானவன் என்று சொல்லிற்றேயென்னில், அவ்வாக்யம் பரமாத்மாவைச் சொல்லுகிற ப்ரகரணத்திலிருக்கையால் அது பரமாத்மவிஷயம், ஜீவவிஷயமன்று.

(ரா-ஹா.) ஜீவனைச்சொல்லுகிற ப்ரகரணத்தில் "மஹாநஜ ஆத்மா" என்று கீழ்ச்சொன்ன ஜீவனை மஹாந் அதாவது - விபு என்று சொல்லுகையாலே அவன் அணுவாகமாட்டானென்னில். இவ்வாக்யத்திற்கு முன்னமேஜீவப்ரகரணம்முடிந்து அநந்தரம் ஆரம்பித்தபரமாத்மாதிகரணத்தில் இவ்வாக்யமிருக்கிறதாகையால் இவ்வாக்யத்தில் விபுவென்று பரமாத்மாவையே சொல்லிற்று. ஜீவனைச் சொல்லவில்லை.

ஸூ-உகக. ஸ்வசப்தோந்மாநாப்யாம் ச.

(ஸ-ரா-வ்ய.) ஸ்வசப்தோந்மாநாப்யாம் ச - அணுவென்கிற சப்தத்தினாலும் வாரிநெல்லின் நுனியை த்ருஷ்டாந்தமாகவெடுத்து அதின் பரிமாணத்தை ஜீவனுக்குச்சொல்லுகையாலும் (ஜீவனணு) உகக.

(ஸ-ஹா.) “ஏஷோऽணுராத்மா சேதஸா வேதிதவ்ய: | யஸ்மிந் ப்ராண: பஞ்சதா ஸம்விவேச” எவனிடத்தில் பஞ்சப்ராணன்கள் சேர்ந்திருக்கிறதோ அந்த ஆத்மா அணுஸ்வரூபியென்று சொல்லுகையால், ப்ராணஸம்பந்தமுள்ளவன் ஜீவனே யாகையால் ஜீவன் அணுஸ்வரூபியாகிறன். மேலும், “வாலாக்ரசதபாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச | பாகோ ஜீவ: ஸ விஜ்ஞேய:” நெல்லின்வால் நுனியில் பதினுயிரத்தி லொருபங்குபோல் ஜீவன் அணுஸ்வரூபியாயிருக்கிறன் என்று சொல்லுகையாலும் ஜீவன் அணுஸ்வரூபியாகிறன். உகக.

(ரா-ஹா.) “ஏஷோऽணுராத்மா” இந்த ஜீவாத்மா அணுஸ்வரூபனென்றும் “ஆராக்ரமாத்ர:” வாரிநெல்லியின் நுனியவ்வளவே யிருக்கிறனென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லுகையாலே ஜீவன் அணுஸ்வரூபன். உகக.

ஸூ-உசO. அவிரோதச்சந்தநவத்.

(ஸ-ரா-வ்ய.) சந்தநவத் - சந்தநம்போலே. அவிரோத: - விரோதமில்லை. உசO.

(ஸ-ரா-ஹா.) ஆத்மா அணுவானல் சரீரத்திலோரிடத்திலிருக்கவேணும்; அப்போது சரீரத்தில் இதராவயவங்களில்பிறக்கிற ஸுகதுக்கங்களை எப்படி யநுபவிக்கிறனென்னில், சந்தநத்தை ஒரிடத்தில் பூசிக்கொண்டபோதிலும் அது சரீராத்யந்தம்ஸந்தோஷ ஜநகமாகிறப்போலே, ஆத்மா ஓரிடத்தி லிருந்தாலும் சரீராத்யந்தமுள்ள ஸுகதுக்கங்களை யநுபவிக்கிறனென்று சிலர்சொன்னர்களென்கிறர்.

ஸூ-உசக. அவஸ்திதிவைசேஷ்யாதிதி சேந்நாப்யுபகமாத் ஹ்ருதி ஹி.

(ஸ-ரா-வ்ய-ஹா.) அவஸ்திதிவைசேஷ்யாத்-(சந்தனம்) சரீரத்திலொருஸ்தலத்திலிருக்கையாலே அது ஆபாதமஸ்தகம் ஸுகஜநகமாகலாம். ஆத்மா அப்படி ஓரிடத்திலில்லாமையால் இவன் ஆபாதமஸ்தகம் ஸுகதுக்காநுபவம் செய்யக்கூடாது). இதி சேத் - என்றல். ஹ்ருதி - (“ஹ்ருதி ஹ்யேஷ ஆத்மா” என்று ஜீவனுக்கும்) ஹ்ருதயத்தில் அப்யுபகமாத்-(ஸ்தி) ஒப்புக்கொள்ளுகையாலே. ந - அந்த அநுபபத்தியில்லை. உசக.

ஸூ-உசஉ. குணாத்வா லோகவத்.

(ஸ-வ்ய.) லோகவத் - லோகத்தில் (மணிமுதலியவற்றின் காந்தி) போல். குணாத்வா - (ஜ்ஞான) குணத்தினலேயாவது. (ஜீவன் ஸகலசரீரவ்யாபியாகிறன்.) உசஉ.

(ரா - வ்ய.) ஆலோகவத்-வெளிச்சம்போலே. குணாத்வா-(தன்) குணமான ஜ்ஞானத்தினலேயே (ஸுகதுக்கங்களை யநுபவிக்கிறன்). உசஉ.

(ஸ-ஹா.) கீழ் ஸூத்ரத்தில், ஜீவன் அணுவாயினும் அவனேடு ஸம்பந்தித்த த்வகிந்த்ரியம் ஸகலசரீரவ்யாபியாகையால் அவ்வழியாக இவன்ஸகலாவயவங்களிலு

முள்ள ஸுகதுக்கங்களை யறிகிறானென்று சொல்லி இதிலப்படியில்லாவிடினும், லோகத்தில் மணி முதலியவை யோரிடத்திலிருக்க அவற்றினொளி யெங்கும்பரவி அங்கங்குள்ள பதார்த்தங்களைக் காட்டுமாப்போலே, ஜீவனோரிடத்தி லிருந்தபோதிலும் ஜீவனுடைய குணமாகிய ஜ்ஞாநம் உடம்பெங்கும் வ்யாபித்திருக்கையால் அங்கங்குண்டாகிற ஸுகதுக்கங்களை யறிகிறானென்றான் பூர்வபக்ஷி. உ௨௨.

(ரா-ஹா.) இதில் தன்மதத்தைச்சொல்லுகிறார்.—தீபம் முதலியவற்றினொளி தீபமோரிடத்திலிருக்கத் தான் மற்றவிடங்களில் வ்யாபித்து அங்கங்குள்ள பதார்த்தங்களைப் ப்ரகாசிப்பிக்கிறாப்போலே ஆத்மாஓரிடத்திலிருந்தாலும் அதின் ஜ்ஞாநம் மற்றசரீராவயவங்களில் வ்யாபித்து ஸுகதுக்கங்களை யநுபவிப்பிக்கிறது. உ௪௨.

ஸூ-உ௪௩. வ்யதிரேகோ கந்தவத் ததா ஹி தர்சயதி.

(ஶ-வ்யா.) கந்தவத் - பரிமளம்போல், வ்யதிரேகஃ - (ஜ்ஞாநம் ஜீவனைவிட்டுப்) பிரிந்திருக்கை (கூடும்.) ததாஹ - அப்படியே. தர்சயதி (ஶ்ருதி) காண்பிக்கிறது. உ௪௩.

(ரா-வ்யா.) கந்தவத் - கந்தம்போலே, வ்யதிரேகஃ - பேதம். (அங்கீகரிக்கவேணும்.) ததாஹி -அப்படியே. தர்சயதி-ஶ்ருதிசொல்லுகிறது.

(ஶ-ஹா.) இந்த பாஷ்யத்திற்கு, "வ்யதிரேகோ கந்தவத்" என்று வரையில் ஒரு ஸூத்ரம். "ததாஹி தர்சயதி" என்பது வேறு ஸூத்ரம். ஜ்ஞாநம் குணமாகில் அது தனக்காஶ்ரயமான ஆத்மாவைவிட்டு மற்றோரிடத்திலிராது. ஆகையால், அம்மூலமாக ஸகலாவயவங்களிலுமுள்ள ஸுகதுக்கங்களை அணுவாகிய ஆத்மா அறிகிறானென்பது கூடாதென்னில்; ரூபம் ரஸம் முதலிய குணங்கள் வஸ்திரம் சர்க்கரை முதலிய ஆஶ்ரயத்தைவிட்டு மற்றோரிடத்தில் இல்லாவிடினும். புஷ்பமோரிடத்திலிருக்க, அதின் பரிமளம் மற்றோரிடத்திலு மிருக்குமாப்போலே, ஆத்மா ஓரிடத்திலிருந்தபோதிலும் அதின்குணமாகிய ஜ்ஞாநம் மற்றோரிடத்திலும் வ்யாபித்திருக்கலாம்.

(ஶ-ஹா.) "ஆலோமப்ய ஆநகாக்ரேப்யஃ" என்கிற ஶ்ருதியும், அணுரூபியாய் ஹ்ருதய தேசத்திலிருக்கிற ஆத்மா தன்னுடைய ஜ்ஞாநத்தினால் கால் முதல் தலைவரையில் வ்யாபிக்கிறானென்று சொல்லுகிறது. உ௪௩.

(ரா-ஹா.) விஜ்ஞாநமயஜ்ஞாநாதே" இத்யாதி வாக்யங்களில் ஆத்மாவை ஜ்ஞாநஸ்வரூபமாகச் சொல்லுகையாலே அப்படியே அங்கீகரிக்கவேணுமாகையால், ஆத்மா ஓரிடத்திலிருக்கிறதென்றும் அதினுடைய குணமாய் அதைக்காட்டிலும் வேறான ஜ்ஞாநம் எங்கும் வ்யாபிக்கிறதென்றும் சொல்லவொண்ணாதென்னில், வாஸனையுடையது சந்தநம் என்றால் சந்தநத்தைக்காட்டிலும் வாஸனை பின்னமாகத் தோற்றுமாப்போலே, நானறிகிறேன் என்கிற விடத்திலும் நான் என்று ஆத்மாவும், அவனைக்காட்டிலும் பின்னமாக ஜ்ஞாநம், அதாவது அறிகை ஒன்றும் தோற்றுகையாலும், "ஜாநாதி" என்று வேதத்திலும் ஜீவனைக்காட்டிலும் ஜ்ஞாநத்தை வேறாகச்சொல்லுகையாலும் ஆத்மாவைக்காட்டிலும் ஜ்ஞாநம்வேறு. உ௪௩.

ஸூ-உ௪௪. ப்ருதகுபதேசாத்.

(ஶ-ரா-வ்யா-ஹா.) ப்ருதகுபதேசாத்-("நஹி விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே" ஜ்ஞாதாவான ஆத்மாவினுடைய ஜ்ஞாநத்தி

ற்கு மாசமில்லையென்று ஆத்மாவையும் அதினுடைய ஜ்ஞானத்தையும்] பரா
தச்சொல்லுகையாலே (ஆத்மாவைக்காட்டிலும் ஜ்ஞாநம் வேறு.) உசங

ஸூ-உசஙி. தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேசஃ ப்ராஜ்ஞவத்.

(ஸ்ரீ-வ்ய.) ப்ராஜ்ஞவத் - பரமாத்மாவைப்போல், தத்குணஸா ரத்வாத் - அந்த புத்தியினுடைய குணத்தைப் ப்ரதாநமாக உடைத்தாயிருக்கையினால், தத்வ்யபதேசஃ - அணுவென்கிற வ்யவஹாரம். உசஙி

(ரா-வ்ய.) தத்குணஸாரத்வாத் - ஜ்ஞாநமாகிற குணத்தைஸாரமாக உடையவனாகையாலே, ப்ராஜ்ஞவத் - ஸர்வஜ்ஞனான ஈஸ்வரன் ஜ்ஞாநஸ்வரூபனென்று சொல்லப்படுகிறப்போலே, தத்வ்யபதேசஃ - ஜ்ஞாநஸ்வரூபனென்று சொல்லப்படுகிறான். உசஙி

(ஸ்ரீ-ஹா.) இந்த ஸூத்ரத்தினால் ஸித்தாந்தத்தைச் சொல்லுகிறார். ஜீவாத்ம அணுஸ்வரூபியன்று; ஜீவாத்மாவென்பவன், விபுஸ்வரூபமான பரப்ரஹ்மஸ்வரூபியகையால் இவனும் விபுஸ்வரூபியாகிறான். அணுவாகிய ஜீவன் தானொரிடத்திலிருந்து தன்னுடைய குணமாகிய ஜ்ஞாநத்தினால் ஸகல சரீரங்களையும் வ்யாபிக்கிறானென்பது சரியன்று. ஜ்ஞாநம் ஜீவனுடைய குணமாகில் அவனைவிட்டு அப்பால் போகமாட்டாது. புஷ்பத்தினுடைய பரிமளமும் ஆஸ்ரயத்தைவிட்டுப்போகிறதில்லை. புஷ்பத்தினுடைய ஸூக்ஷ்மமான பரமாணுக்கள் புஷ்பத்தில் நின்றும் புறப்பட்டுகாற்றினால் சுற்றும் வ்யாபிக்கையால் அதிலுள்ள கந்தம் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகிறது. மேலும் ஆத்மா குணியென்றும் ஜ்ஞாநம் குணமென்றும் இப்படிவிபாகமேகிடையாது. ஆகில் ஜீவனை அணுவாக வேதத்தில் சொல்லிற்றேயென்னில்; அணுத்வம் புத்தியினுடைய குணம். புத்தியிலுள்ள ஸுகதுக்கங்கள் முதலிய குணங்கள் ஆத்மாவில் அத்யஸ்தமாய் ஆத்மா ஸுகியென்றும் துக்கியென்றும் வ்யவஹரிக்கப் படுகிறான். இக்குணங்களொன்றும் ஆத்மாவுக்குக்கிடையாது. இந்த அத்யாஸமுள்ளவளவும் ஜீவனுக்கு ஸம்ஸாரம். ஸுகதுக்காதிகளைப்போலவே அணுத்வமும் ஜீவனிடத்தில் அத்யஸிக்கையால் ஜீவன் அணுஸ்வரூபி யெனப்படுகிறான். உபாதியாகிய புத்தியின் குணம் ஜீவனில் வ்யவஹரிக்கப்படுமோவென்னில்; ஸகுணப்ரஹ்மோபாஸநத்தில் "அணீயாந் வ்ரீஹேர்வா" நெல்லைக்காட்டிலும் பரமாத்மா சின்னவன் என்று த்யானிக்கிறவனுடைய ஹ்ருதயமாகிற உபாதிஸம்பந்தத்தினால் பரமாத்மாவையும் அணுவாகச்சொல்லுகிறது. அதுபோலவே இங்கும் ஜீவனும் உபாதிஸம்பந்தத்தினால் அதினுடைய குணத்தினாலேதான் அணுவென்று வ்யவஹரிக்கப்படுகிறான். ஹ்ருதயத்திலிருக்கிறதும், வெளிக்கிளம்புகிறதும், போவதும் வருவதும் எல்லாம் புத்தியே. அதை வ்யவஹரிக்கவேண்டும் வ்யவஹாரத்தினால் ஜீவன் வ்யவஹரிக்கப்படுகிறான் ஆகையால் ஜீவன் விபு என்று ஸித்தாந்தம். உசஙி,

(ரா-ஹா.) ஆனால் ஆத்மாவை ஜ்ஞாநமென்று சொல்லுவானேனென்னில். ஜ்ஞாநமே இவனுக்கு ப்ரதாநமானகுணம்; அதைப்பற்றி இவனை ஜ்ஞாநமென்கிறது. இதற்கு த்ருஷ்டாந்தம்—ஸர்வஜ்ஞனான பரமாத்மாவை "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று ஜ்ஞாநஸ்வரூபனென்று சொன்னாற்போல் இங்கும் கண்டுகொள்வது. லோகத்திலும் ஒருவன்வேதாத்யயநம் செவ்வையாகச்செய்திருந்தால் அவனை வேதமூர்த்தி யென்கிறார்கள். உசஙி.

ஸூ-உசச. யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷஸ்தத்தர்சநாத்.

(மூ-வ்யா.) यावदात्मभावित्वात्-ஜீவனுக்கு ஸம்ஸாரியா யிருக்குமளவும் புத்திஸம்பந்த மிருக்கையாலே, तद्दर्शनात् - அப்படியே ஶ்ருதி சொல்லுகையாலே, न दोषः - தோஷமில்லை. ௨௪௬.

(ரா-வ்யா.) यावदात्मभावित्वाच्च - ஜ்ஞானம் ஆத்மா உள்ளவரையில் அதைப்பற்றியிருக்கையாலும், तद्दर्शनात् - அப்படியே லோகத்தில் காண்கையாலும், न दोषः - ஜ்ஞானசப்தத்தினால் ஆத்மாவைச்சொல்வதில் தோஷமில்லை. ௨௪௬.

(மூ-ஹா.) கீழ் ஸூத்ரத்தில் ப்ரஹ்மஸ்வரூபமே புத்தியினுடைய ஸம்பந்தத்தினால் ஜீவனாகிறது. அந்த புத்தி ஸம்பந்தமுள்ள வரையில்தான்ஸம்ஸாரியாயிருக்கிறது என்று சொல்லிற்று. இப்படியாகில் புத்திஸம்பந்தம் நசித்த பின்பு ஜீவனில்லாமல் போகட்டும், அவன் ஸம்ஸாரியாகாமல் போகட்டும் என்ற சங்கைக்கு இந்த ஸூத்ரத்தினால் ஸமாதானம்சொல்லுகிறார்—புத்திக்குமாத்மாவுக்கும் ஸம்பந்தம் அஜ்ஞானத்தினா லுண்டாயிற்று. அந்த அஜ்ஞானம் தத்வஜ்ஞானத்தினா நசிக்கிறது. அப்போதுதான் புத்தியும் நசிக்கும். அதன்பின் ஜீவன் முக்தனாய்விடுகிறான். அதாவது தன்னுடைய ஜீவத்வத்தையும் ஸம்ஸாரித்வத்தையும் விட்டுவிட்டு, ஜ்ஞானாநந்தஸ்வரூபமாகிய ப்ரஹ்மஸ்வரூபத்தோடு கலந்துவிடுகிறான். இவன் முக்தியடைவதற்குமுன் எதுவரையில் ஸம்ஸாரியாயிருக்கிறானோ, அதுவரையிலும் புத்தியிருக்கிறபடியால் கீழ்ச்சொன்ன தோஷம்வாராது. "योऽयं विज्ञानमयः" என்கிற ஶ்ருதியும், புத்தியோடு ஸம்பந்தித்தவனாய்க்கொண்டு, தான்போவது வருவதுபோ லிருக்கிறானென்று இவ்வர்த்தத்தையே சொல்லுகிறது. ௨௪௬.

(ரா-ஹா.) கோ (गो) பதத்திற்குப் பசுவினுடைய ஆகாரமர்த்தமா யிருந்தாலும் அவ்வாகாரம் பசு உள்ளவரையில் அதைப்பற்றி யிருக்கையாலே பசுவையும் கோ (गो) வென்று சொல்லுகிறார்கள்; அதுபோலவே ஜ்ஞானம் ஆத்மாவை யெப்போது மாஶ்ரயித்திருக்கையாலே அவனை ஜ்ஞானமென்று சொல்லலாம்; இதில் பாதகமில்லை. ௨௪௬.

ஸூ-௨௪௭. पुंस्त्वादिवत्त्वस्य सतोऽभिव्यक्तियोगात्.

(மூ-வ்யா.) पुंस्त्वादिवत् - ஆண்தன்மை முதலானதுபோல், सतः - (ஸூக்ஷ்மமாக) இருக்கிற तस्य - அந்தபுத்திக்கு, अभिव्यक्तियोगात् - ப்ரகாசமுண்டாகையால், (உறக்கத்தில் புத்தியில்லை யென்கிறதோஷமில்லை.

(ரா-வ்யா.) सतः - இருக்கிற, अस्य - இந்த ஜ்ஞானத்திற்கு, पुंस्त्वादिवत्-பும்ஸ்த்வமென்கிற தாதுவைப்போலே, अभिव्यक्तियोगात् - அபிவ்யக்தி ஸம்பவிக்கையாலே, (ஜ்ஞானம் யாவதாத்மபாவி). ௨௪௭.

(மூ-ஹா.) ஜீவன் உறங்கும்போதும் ப்ரளயகாலத்திலும் பரப்ரஹ்மத்தில்லயித்துவிடுகிறானென்று "सता सोम्य तदा सम्पन्नो भवति" என்கிற ஶ்ருதி சொல்லுகையாலே, அப்போது புத்தி ஸம்பந்தமில்லை யென்றே ஒப்புக்கொள்ள வேணும். இப்படியாகில், இந்த ஜீவன் முக்தியை யடையும் வரையில் புத்தியோடு ஸம்பந்தித்திருக்கிறானென்பது சேராது என்கிற சங்கைக்கு ஸமாதானம்.—அக்காலங்களிலும் புத்தி ஸூக்ஷ்மமாய்க்கொண்டு ஜீவனோடு ஸம்பந்தித்திருக்கிறது. அது வே உறங்கி யுணரும்போதும் ஸ்ருஷ்டிகாலத்திலும் ப்ரகாசத்தை யடைகிறது. அவ்

வளவேயன்றி அக்காலங்களில் புத்தி நசித்துப்போகிறதென்பதில்லை. இப்படி ஸூக்ஷ்மமாயிருந்த ப்ரகாசத்தை யடையுமோவென்னில்; பால்யத்தில் பிள்ளைகளுக்கு புஸ்த்வம் ஸூக்ஷ்மமாயிருக்கிறது. அதுவே வயஸ்ஸுவந்தால் ப்ரகாசத்தை யடைகிறது. அந்தபுஸ்த்வம் பால்யத்திலில்லாமலிருந்து நல்லவயஸ்ஸில் உண்டாகிறதென்றால் நபும்ஸகனுக்கும் அம்மாதிரியே யுண்டாக வேண்டிவரும். ஆகையால் முன்பு ஸூக்ஷ்மமாயிருந்ததே பின்பு ப்ரகாசிக்கிறதென்று சொல்லவேணும். அதுபோலவே புத்தி விஷயத்திலும் சொல்லவேண்டியது. புத்தியாவது - அந்தஃகரணம்.

(ரா-ஹா.) உறக்கம் மூர்ச்சை முதலிய அவஸ்த்தைகளில் ஜ்ஞாநம் காணுமையாலே ஆத்மா உள்ளவரையில் ஜ்ஞாநமிருக்கிறதென்று எப்படி சொல்லலாமென்னில், ஜ்ஞாநம் அப்போது முண்டு; ஆனால் அப்போது ஸங்கோசத்தை யடைந்து ப்ரகாசியாமலிருக்கிறது. அதுவே விழித்தெழுந்தால் ப்ரகாசிக்கிறது. இதற்கு த்ருஷ்டாந்தம்—ரேதஸ்ஸு என்று சரீரத்தில் ஒருதாதுவுண்டு, அதையே பும்ஸ்த்வமென்பது. அந்த தாதுவில்லாவிட்டால் ஸப்ததாதுமயமான சரீரமேயாகாது. ஆகையால் சரீரத்தில் பால்யம் முதல் இருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். இருந்தாலும் பால்யத்தில் ப்ரகாசியாது; யௌவநத்தில் ப்ரகாசிக்கிறது. அதுபோலவே இங்கும் கண்டுகொள்வது. உ௩௧.

ஸூ-உ௩உ. நித்யோபலப்³த்⁴யநுபலப்³தி⁴ப்ரஸங்கோ³ऽந்யதர
நியமோ வாऽந்யதா².

(ஶ்ரு-ப்ர.) அந்யதா² - அந்தஃகரணத்தை யங்கீகரியாமல்போனால், நித்யோபலப்³த்⁴யநுபலப்³தி⁴ப்ரஸங்க³:-எப்போதும் விஷயங்களினுடைய ப்ரத்யக்ஷமாவது அப்ரத்யக்ஷமாவது உண்டாகவேண்டிவரும். அந்யதரநியமோ வா - ஆத்மா இந்த்ரியம் இவ்விரண்டிலொன்றுக்கு ப்ரதிபந்தகம் இருக்கிறதென்றாவது ஒப்புக்கொள்ளவேணும். உ௩உ.

(ரா-ப்ர) அந்யதா² - ஆத்மாஜ்ஞாநஸ்வரூபனென்றாலும் விபுவென்றாலும், நித்யோபலப்³த்⁴யநுபலப்³தி⁴ப்ரஸங்க³: - நித்யமாக ஜ்ஞாநப்ரகாசமும் அப்ரகாசமும் வரவேண்டிவரும். அந்யதரநியமோ வா - இரண்டிலொன்றே எப்போது முண்டாகவேண்டியாவது வரும். உ௩உ.

(ஶ்ரு-ஹா.) இதில் அந்தஃகரண முண்டென்பதற்கு யுக்தி சொல்லுகிறார். அந்தஃகரணத்துக்கே சித்தமென்றும் மநஸ்ஸென்றும் புத்தியென்றும் இப்படி யநேக நாமங்களுண்டு. அந்தஃகரண மெதுக்காக ஒப்புக்கொள்ள வேணுமென்னில்; ஒருபதார்த்தத்தை யறிகைக்குக்காரணம் இன்னதென்று சொல்லவேணும். ஆத்மா, இந்த்ரியம், பதார்த்தம் ஆகிய இவையேகாரணம், இம்மூன்றும் இருந்தால் வஸ்து அறியப்படுகிறது என்றால், ஒருவனுக்கு ஐந்திந்த்ரியங்களும் ஐந்து வஸ்துக்களில் ஸம்பந்தித்திருக்கும்போது ஒரேகாலத்தில் ஐந்துஜ்ஞாநங்களுண்டாகவேண்டிவரும். அப்படி யுண்டாகிறதில்லை. இம்மூன்று மிருந்தாலும் சில ஜ்ஞாநம் உண்டாகிறதில்லையென்னில், ஆனால் அது எப்போதும் உண்டாகாமலே போகட்டும். ஆத்மாவுக்காவது இந்த்ரியங்களுக்காவது ஏதாவது தோஷமிருந்தால் உண்டாகிறதில்லை யென்னில்; முன்பின் க்ஷணங்களில் அவை ஒரு தோஷமுமின்றியே ஜ்ஞாநங்களை உண்டுபண்ணுகிற்க, அந்த க்ஷணத்தில் மாத்திரம் அவற்றுக்கு தோஷம் ஸம்பவிக்கைக்குத் தகுந்தகாரணம் காண்கிறதில்லை. இவ்விதமான அநுபபத்திகளைப்பரிஹரிக்கைக்காக, மநஸ்ஸென்பதை யொப்புக்கொள்ள வேணும். இப்போது, அந்த மநஸ்ஸு எந்த

விஷயத்திலவதாநம் செய்கிறதோ, அந்த ஜ்ஞாநமுண்டாகிறது; மற்ற ஜ்ஞாநமுண்டாகிறதில்லை என்கிற நியமம் சரியாயிருக்கிறது. ஆகையால் மநஸ்ஸென்பதொன்று ஒப்புக்கொள்ளவேணும். ௨௫௮.

(ஶ்ரீ-பா.) ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனென்றால், ஆத்மா ஒருகால் ப்ரகாசித்து ஒருகால் ப்ரகாசியாமலிருக்கக்கூடாது. ஏனென்றால் ஆத்மா ப்ரகாசிக்கைக்கு ஜ்ஞாநம்காரணம், ஆத்மாவே ஜ்ஞாநஸ்வரூபமாய் அது நித்யமுமாயிற்று. ஆகையால் எப்போதும் ப்ரகாசிக்கவேண்டும். அப்படிப்ரகாசிக்கிறதில்லை ஜ்ஞாநமிருக்கும்போது ப்ரகாசியாமைக்குவேறொரு சரியான காரணம் கூடாமையால் அதுக்கும் ஜ்ஞாநமே காரணமென்று சொல்லவேண்டும். ஆகையால் நித்யமாகப்ரகாசியாமலும் இருக்கவேண்டும்.— இப்படி ப்ரகாசிக்கைக்கும் ப்ரகாசியாமைக்கும் ஒன்றே காரணமாகக் கூடாமையால் இவ்விரண்டில் ஏதோ ஒன்றுக்கே ஜ்ஞாநம் காரணமாக வேண்டுமென்னில், அப்போது ஏதோ ஒன்றே நித்யமாயிருக்கவேண்டும். மற்றொன்று எப்போதுமுண்டாகக்கூடாது. இப்படியே, ஆத்மா விபுவானால் ஸமஸ்த ஆத்மாக்களோடும் மநஸ்ஸு ஸர்வதாசேர்ந்திருக்கையால் எல்லாருக்கும் எப்போதும் ஜ்ஞாநமுண்டாகவேண்டிவரும் ஆகையால் ஆத்மாஜ்ஞாநமுமன்று விபுவுமன்று. ௨௫௮.

அதி. ௰௮. ஸூ-௨௬௯. கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்வாத்.

(ஸூ-பா-வ்யா.) ஶாஸ்த்ரார்த்தவத்வாத் - சாஸ்த்ரம் ப்ரயோஜநவத்தாகையாலே, கர்த்தா - (ஆத்மா) கர்த்தாவாகிறான். ௨௬௯.

(ஸூ-ஸா.) இதில் இன்னும் ஜீவனுக்குள்ள தர்மங்களைச்சொல்லுகிறது. யாகாதிகளைச் செய்யவேண்டியவன் அதின்ஸ்வரூபத்தையறிந்து, 'நாமிதைச்செய்வோம்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு செய்யவேணும். அந்தக்கரணம் அசேதநமாகையால் அதுக்கு இம்மாதிரி ஜ்ஞாநம் கூடாமையால் அதினால் யாகம் செய்யவொண்ணாது. ஜீவனும் செய்யாவிடில் யாகாதிகளைச் செய்யச்சொல்லுகிற சாஸ்த்ரம், செய்கிறவனில்லாமையால் வீணாய்விடும். ஆகையால் சேதநனே கர்த்தாவென்று ஒப்புக்கொள்ளவேணும். ௨௬௯.

(ஶ்ரீ-பா.) இவ்வதிகரணத்தில் ஆத்மாவுக்குக் கர்த்ருத்வமுண்டென்று ஸாதிக்கிறார்.— "அஹங்காரவிமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" ஆத்மா அஹங்காரத்தினால் மூடனாய் (யதார்த்த ஜ்ஞாநசூந்யனாய்) நான் கர்த்தாவென்றெண்ணுகிறானென்றும், "நாந்யம் குணேப்ய: கர்த்தாரம்" என்று ஸத்வரஜஸ்தமோகுணங்களைக்காட்டிலும் வேறு கர்த்தா இல்லையென்றும் சொல்லுகையாலே ப்ரக்ருதியே கர்த்தா, ஆத்மா கர்த்தாவன்றென்று பூர்வபக்ஷம்.—ஸ்வர்க்காதிலோகங்களை யடைகைக்காக யஜ்ஞயாகாதிகளைப்பண்ணு என்று சாஸ்த்ரம் விதிக்கிறது.சொன்னதையறிந்து செய்யவல்ல புருஷனைக்குறித்தே ஒரு அர்த்தத்தை சாஸ்த்ரம் விதிக்கும். ப்ரக்ருதிக்கு ஜ்ஞாநமில்லாமையால் அதைக்குறித்து விதிக்கக்கூடாது. ஆத்மாவுக்குக்கர்த்ருத்வமில்லையென்றால் இவனைக்குறித்து விதித்து உபயோகமில்லை. அப்போதுசாஸ்த்ரம் நிரர்த்தகமாய்ப் போய்விடும். அப்படிபோகாமைக்காக ஜீவாத்மா கர்த்தாவென் றங்கீகரிக்கவேணும் என்று ஸித்தாந்தம். ௨௬௯.

ஸூ-௨௭௦. உபாதாநாத்விஹாரோபதேஶாச்ச.

(ஸூ-பா-வ்யா-ஸா.) உபாதாநாத் "ஸ யதைதேஷாம் ப்ராணாநாம் க்ருஹீத்வா" இந்தஆத்மா இந்தப்ராணன்களை க்ரஹித்துக்கொண்டு

என்று ஆத்மாவுக்கு ப்ராணன்களை க்ரஹிக்கைசொல்லுகையாலும், விஹா ரோபதேசாச்ச - 'யதாகாமம்பரிவர்த்ததே' யதேச்சமாக உலாவு கிறனென்று உலாவுகை சொல்லுகையாலும், (இவ்விரண்டு கர்மங்களை யும் ஆத்மா செய்கிறனென்று சொல்லுகையாலே ஆத்மா கர்தாவென்பது ஸித்தம்). ௨௩0.

(ஸ-ஹா.) இந்த பாஷ்யத்துக்கு இரண்டு ஸூத்ரம். அதில் "விஹாரோப தேசாச்ச" என்பது முதல் ஸூத்ரம், "உபாதாநாத்" என்பது இரண்டா வது ஸூத்ரம். இவற்றினர்த்தம் - விஹாரோபதேசாச்ச - (ஸ்வப்நகாலத்தில் ஜீவன் "ஸ்வே சரீரே யதாகாமம் பரிவர்த்ததே" யதேஷ்டமாகஸஞ்சரிக்கிறனென்றும் "ஸ்வே சரீரே யதாகாமம்பரிவர்த்ததே" தன்சரீரத்தில் யதேஷ்டமாக ஸஞ் சரிக்கிறனென்றும் ஜீவனுக்கு) ஸஞ்சாரம் சொல்லுகையாலே, (ஜீவன் கர்த்தாவா கிறன். என்று முதல் ஸூத்திரத்தின் தாத்பர்யம்—உபாதாநாத்-("ப்ராணாந் க்ருஹீத்வா" இந்த்ரியங்களைக் கரணமாக அங்கீகரித்துக்கொண்டு என்று, இந்த்ரிய ங்களை) அங்கீகரிக்கிறனென்கையால் (இவன் கர்த்தாவாகிறனென்று அங்கீகரிக்க வேண்டும்). என்று இரண்டாம் ஸூத்ரத்திற்குச் தாத்பர்யம். ௨௩0.

ஸூ-௨௩௧. வ்யபதேசாச்ச க்ரியாயாம் நசேந்நிர்தேசவிபர்யய:

(ஸ-ரா-வ்ய.) க்ரியாயாம் - யஜ்ஞாதி கார்யங்களில், வ்யபதேசாச்ச - (ஆத்மாவைக் கர்த்தாவென்று) சொல்லுகையாலும், (ஆத்மா கர்தா வாகிறன். நசேத் - (இப்படி) இல்லாமற்போனல், நிர்தேசவிபர்யய:- வேறுவிதமாக (த்ருதீயாந்தமாக)ச் சொல்லவேண்டி வரும். ௨௩௧

(ஸ-ரா.) விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே' என்கிற விடத்தில் ஜ்ஞாநவானன ஆத்மா யஜ்ஞம் முதலிய கர்மங்களைச் செய்கிறனென்று சொல்லுகையாலேயும் ஆத் மா கர்த்தாவாகிறன். அவ்வாக்கியத்தில் விஜ்ஞாநபதத்திற்கு ஆத்மா அர்த்தமன்று; ஜ்ஞாநமே அர்த்தமாகையால் ஆத்மாவைக் கர்த்தாவாகச் சொல்லவில்லை என்கிற பக்ஷத்தில், ஜ்ஞாநம் ஒரு கார்யத்திற்குக் காரணம் (ஸாதநம்) ஆகுமல்லது கர்த்தா வாகமாட்டாது. அப்போது ஜ்ஞாநத்தினுல் செய்கிறனென்று சொல்லவேணும். அப்படி மூன்றும் வேற்றுமையாகச் இங்கு சொல்லாமையால்ஆத்மாவையே கர்த்தா வாகச் சொல்லிற்று. ௨௩௧

ஸூ-௨௩௨. உபலப்திவதநியம:.

(ஸ-வ்ய.) உபலப்திவத் - பார்ப்பதுபோல், அநியம: - (செய்வதி லும்) நியமமில்லை. ௨௩௨.

(ரா-வ்ய.) உபலப்திவத் - ஜ்ஞாநம்போலவே, அநியம: - போக்த் ருத்வ நியமமில்லாமற் போகவேண்டிவரும். ௨௩௨.

(ஸ-ஹா.) ஜீவன் ஸ்வதந்த்ரனுய்க் கர்த்தாவாகில் தனக்கு நன்மையையே செ ய்துகொள்ளவேணும். அப்படியன்றியே லோகத்தில் ப்ராணிகள் நன்மையைப் போல் தீமையையும் விளைத்துக்கொள்ளக் காண்கிறர்கள் ஆகையால் இவன் ஸ்வத ந்த்ரகர்த்தாவன்று என்ற சங்கைக்கு, ஜீவன் ஸ்வதந்த்ரனை போதிலும் தனக்கு

அனுகூலமானதையே பார்க்கிறனென்கிற நியமமில்லை. கண் முதலான இந்த்ரியங்கள் எதில் ஸம்பந்திக்கிறதோ, அதைப்பார்க்கிறன் என்பதுபோல், நன்மைதீமைகளைச் செய்கைக்கும், தேசமும் காலமும் மற்ற புத்தி அத்ருஷ்டம்முதலிய காரணங்களும் எதைச் செய்கைக்கு அனுகூலங்களா யிருக்கின்றனவோ, அதைச்செய்கிறன். மற்ற காரணங்களை யபேக்ஷித்தே இவன் காரியம் செய்தபோதிலும் இவன் கர்த்தாவாகைக்குத் தடையில்லை. ஒருவன் சமையல் பண்ணும்போது அனேக உபகரணங்களைக்கொண்டே செய்தபோதிலும் அவனே அதுக்குக் கர்த்தாவாகிறப்போலே இங்கும் கண்டுகொள்வது. நன்மையை விளைக்கும் என்கிற ப்ராந்தியினால் தீமையைச்செய்கிறனென்று கருத்து. உ௲௨.

(ரா-ஹா.) ப்ரக்ருதிக்குக் கர்த்ருத்வமும் ஆத்மாவுக்கு போக்த்ருத்வமும் அங்கீகரித்து அதின் ஸாந்நித்யத்தினால் ஆத்மாவுக்கு ஸுகாத்யநுபவமென் றங்கீகரித்தால், ப்ரக்ருதி ஸகலாத்மாக்களுக்கும் ஸமானமாகையாலே தத்ஸாந்நித்யமுடைய இந்த ஆத்மாவுக்குப்போலே மற்ற ஆத்மாக்களுக்கும் ஸமானமான ஸுகதுக்கங்களுண்டாகவேண்டிவரும். ப்ரக்ருதி ஸர்வஸாதாரணமாயினும் அவ்வவ ஆத்மாக்களுக்கு அஸாதாரணமான அந்தஃகரணமுண்டு. அதினுடைய ஸாந்நித்யத்தினலேயே ஸுகதுக்காநுபவம் பிறக்கிறதென்றால், ஆயினும் ஆத்மா ஸர்வவ்யாபியாகையாலே ஸகலாந்தஃகரணங்களோடும் ஸாந்நித்யம்ஸகலாத்மாக்களுக்கு முண்டாகையாலே ஸர்வர்க்கும் ஸமானமாக ஸுகாத்யநுபவம் ப்ரஸங்கிக்கும். ஆகையால்கர்த்தா ஆத்மாவேயாகவேணும். உ௲௨.

ஸூ-உ௲௩. ஶக்திவிபர்யயாத்.

(ஶ-ரா-வ்யா.) ஶக்திவிபர்யயாத் - போக்த்ருத்வ சக்திக்கு ஹானிவருகையாலே, (ஆத்மா கர்த்தாவாகவேண்டும்.) உ௲௩.

(ஶ-ஹா.) கர்த்ருத்வத்தை ஜீவனிடத்தில் ஒப்புக்கொள்ளாமல் அந்தஃகரணத்திலொப்புக்கொள்ளில், கர்த்தா கரணங்களிரண்டு மொன்றாகக் கூடாதாகையால் அந்த அந்தஃகரணத்துக்குக் கரணத்வம் நழுவும். அந்தஃகரணம் கர்த்தாவாய், அதற்கு வேறொரு கரணமொப்புக்கொள்ளில் நாங்களொப்புக்கொண்டதும் நீயொப்புக்கொண்டதும் ஒன்றே; ஆகில் நாமத்தில் பேதம் ஆகையால் ஜீவனே கர்த்தாவாகிறன். உ௲௩.

(ரா-ஹா.) எவன்புண்ய பாபங்களைச் செய்கிறனே, அவனேஅதின்பலமான ஸுகதுக்கங்களை யனுபவிக்கிறன். மற்றொருவனுக்கவ்வநுபவம் கிடையாது. புத்தி புண்யபாபங்களைச் செய்கிறதாகில் ஆத்மாஸுகாதிகளை அனுபவியாமற்போகக் கடவன். ஆகையால் ஆத்மாவேகர்த்தாவும் போக்தாவுமாகிறன். உ௲௩.

ஸூ.உ௲௪. ஸமாத்யபாவாச்ச.

(ஶ-ரா-வ்யா.) ஸமாத்யபாவாச்ச - ஸமாதிஸம்பவியாதாகையாலும், (ப்ரக்ருதிக்குக்கர்த்ருத்வம் கூடாது.) உ௲௪.

(ஶ-ஹா.) ஜீவன் கர்த்தா வாகாவிடில் "நிதி஧்யாஸிதவ்ய:" இத்யாதியினால் பரமாத்மப்ராப்திக்கு ஸாதனமாகச் செய்யச்சொன்ன த்யானம் சேதனனுக்கு ஸம்பவியாது. ஆகையாலும் சேதனனே கர்த்தாவென்பது ஸித்தம். உ௲௪.

(ரா-ஹா.) ப்ரக்ருதியைக்காட்டிலும் ஆத்மாபின்னனென்று ஏகாக்ரசித்தனாகத் யானிக்கையே மோக்ஷஸாதன மென்று சொல்லிற்று. ப்ரக்ருதியேத்யானம் செய்கிற

தென்றபக்ஷத்தில் தன்னைக்காட்டிலும் வேறாகத்தன்னைத்தான் த்யானிக்கக்கூடாதாகையால் ப்ரக்ருதிக்குக்கர்த்ருத்வம் கிடையாது. உ௰௪.

ஸூ-உ௰௫. யதா ச தக்ஷோபயதா.

(ஸ-வ்ய.) தக்ஷா தச்சன், யதா - எப்படி, உபயதா - ஸுகதுக்கங்களிரண்டையு மடைகிறானோ, (அப்படியே ஜீவனும்) உ௰௫.

(ரா-வ்ய.) தக்ஷா - தச்சன், யதா - எப்படி, உபயதா ச - செய்கைக்கும் செய்யாமைக்கும் ஸமர்த்தனாகிறானோ,(அப்படியே ஆத்மாவும்.)உ௰௫

(ஸ-பா.) இந்த அதிகரணத்தில் ஜீவனுக்குக் கர்த்ருத்வம் ஸ்வதஸ்ஸித்தமா, அல்லது வந்தேறியாவென்று விசாரிக்கப்படுகிறது.— கீழதிகரணத்தில், விதிநிஷேதசாஸ்திரங்கள் வ்யர்த்தமாகாமைக்காக ஜீவன்கர்த்தா வென்று ஒப்புக்கொள்ள வேணுமென்று சொல்லப்பட்டது. அந்தகர்த்ருத்வம்ஜீவனுக்குஸ்வதஸ்ஸித்தமன்று; ஏனென்றால், லோகத்தில் தச்சன் எதுவரையில் வாசிமுதலியவைகளைப் பிடித்துக் கொண்டுவேலைசெய்கிறானோ, அதுவரையில் அவன் துக்கியாகவேகாண்கிறான், அவனே அவ்வாயுதங்களைப் பொகட்டு விட்டு வீட்டிற்குவந்து சேர்ந்து ஒருவ்யாபாரமும் செய்யாதிருந்தானாகில் ஸுகத்தையடைகிறான்; அதுபோலவே ஜீவன்கர்த்தாவாகும்வரையில் துக்கியாயேயிருப்பன் மோக்ஷமெப்போது முண்டாகாது;அதற்காக. அந்தக்கரணத்தினுடைய ஸம்பந்தத்தினால் இவனுக்குக் கர்த்ருத்வம்வந்தேறியென்றே ஒப்புக்கொள்ளவேணும் என்கிறார். உ௰௫.

(ரா-பா.) ஆத்மா கர்த்தாவானால் தனக்கு இச்சையுள்ளபோது செய்யலாம் இல்லாதபோது தவிரலாம். அதெப்படியெனில், தச்சன் தன்னிடத்தில் ஸகல ஸாமக்ரியுமிருந்தாலும் இச்சையிருந்தால் சில்பவேலைசெய்கிறான்; இச்சையில்லையாகில் வெறுமனேயிருக்கிறான். அது போலிங்குங்கண்டு கொள்வது. புத்திக்குக் கர்த்ருத்வ மொப்புக்கொண்டால் அதுஅசேதநமாகையால் அதற்குஇச்சைபிறவாது; அப்போது ஒரு கார்யத்தைச் செய்கைக்கும் தவிருகைக்கும் இவ்விதமானவ்யவஸ்த்தைசொல்லமுடியாது. உ௰௫.

அதி-௰௬. ஸூ-உ௰௬. பராத்து தச்ச்ருதே:.

(ஸ-ரா.வ்ய.) தச்ச்ருதே: - கர்த்ருத்வம் பரமாத்மாயத்தமென்று வேதத்திற்சொல்லுகையாலே, பராத் து - பரமபுருஷனிடத்தில் நின்றுமே, (ஜீவனுக்குக் கர்த்ருத்வம் ஸித்திக்கிறது.) உ௰௬.

(ஸ-பா.) ஜீவனுக்குக் கர்த்ருத்வமுண்டென்று கீழ்சொல்லப்பட்டது. அது ஸ்வதந்த்ரகர்த்ருத்வம்மா, அல்லது ஈஸ்வராதீனமாவென்று இதில் விசாரிக்கப்படுகிறது. ஜீவன் ஒரு காரியத்தைச் செய்யும்போது ஈஸ்வரன் ஸகாயமாக வேண்டியதில்லை. வ்யவஸாயம் செய்யும்போது ஏருகலப்பை முதலிய ஸாமக்ரிகளைக்கொண்டே ஜீவன் கார்யத்தை நடத்துகிறான்; இதுபோலவே மற்றும் எக்காரியத்திலும் ஈஸ்வரனிருந்து தலைக்கட்டிவைக்கிறானென்பதில்லை. என்கிற பூர்வபக்ஷத்துக்கு,— ஜீவன் ஒருகாரியத்தைச் செய்யும்போது ஈஸ்வரனாலேயே செய்விக்கப்படுகிறான். இதற்குப்ரமாணம்,—"ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி" இந்த ஈஸ்வரனே ஸத்கர்மங்களையும் அஸத்கர்மங்களையும் செய்விக்கிறான் என்கிற வேதவாக்யம் என்று ஸமாதானம். சொல்லுகிறார்.. உ௰௬

(ரா-ஹா.) இவ்வதிகாணத்தில், கீழ்ச்சொன்ன ஜீவனுடைய கர்த்ருத்வமும் பரமாத்மாதீநமென்கிறார்.— ஜீவன்புண்ய பாபங்களைச் செய்யும்போது ஸ்வதந்த்ரனாய்ச்செய்கிறிலன். பரமாத்மாவினால் செய்விக்கப் படுகிறான் என்றால், இவன் ஸ்வபுத்தியினால் புண்யபாபங்களைச் செய்யாமையாலே ஸுகதுக்கங்களும் இவனுக்குக்கிடையாதொழிய வேணும்; மேலும் ஜீவனைக்குறித்து, இதைச்செய், இதைத்தவிரென்று சொல்லுகிற சாஸ்திரத்திற்கும் ப்ரயோஜநமில்லையாய்விடும் ஆகையால் ஜீவன் ஸ்வதந்த்ரனாயே கர்த்தாவாகிறானென்று பூர்வபக்ஷம்.—“அந்த: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா” “யஆத்மாநமந்தரோயமயதி” என்று பரமாத்மாவே உள்ளே பிரவேசித்து ஜீவனை அந்தந்தகார்யங்களில் நியமிக்கிறானென்றுசொல்லுகையாலே ஜீவன்ஸ்வதந்த்ரகர்த்தாவன்று. பரமாத்மாவினாலேவப்பட்டவனாய்ச் செய்கிறானென்று ஸித்தாந்தம். ௨௫௬.

ஸூ-௨௫௭. க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய:.

(ஸ.ரா-ப்ர.) விஹிதப்ரதிஷித்தாவையர்த்யாதிப்ய:-விதிநிஷேத சாஸ்த்ரங்களுக்கு வையர்த்யம் வாராமைக்காக, க்ருதப்ரயத்நாபேக்ஷ: - (பரமபுருஷன் ஜீவனால்)செய்யப்பட்ட ப்ரயத்நத்தையபேக்ஷித்திருக்கிறான்.

(ஸ-ஹா.) ஜீவனுடைய புண்யபாபங்களை ஈஶ்வரனே செய்வித்தானாகில், ஒருவனுக்கு ஸத்கர்மத்தைச் செய்வித்து ஸுகத்தைக்கொடுக்கையும், மற்றொருவனுக்கு துஷ்கர்மத்தைச் செய்வித்து து:கத்தைக் கொடுக்கையும் செய்தால் ஈஶ்வரன்பக்ஷபாதியாவான். நரகம் முதலியதுன்பத்தை விளைக்கையால் நிர்த்தயனுமாவான் என்கிறசங்கைக்கு ஸமாதாநம்,—ஜீவன் செய்த புண்யபாபங்களைப் பார்த்தே ஈஶ்வரன் ஜீவனுக்கு நன்மைதீமைகளை விளைக்கிறானாகையால் அவனுக்குக் கீழ்சொன்னதோஷம் வரமாட்டாது. மேகமானது பயிர் செடி கொடி முதலான எல்லாஇடங்களிலும் பெய்வதுபோல் ஈஶ்வரன் எல்லாருக்கும் ஸுகதுக்க ரூபமான பலங்களைக்கொடுக்கிறான். அந்தந்த கொடி செடிகளுக்கு அந்த விரைகாரணமாவது போல் அவரவர்களுடைய ஸுகது:க்கங்களுக்கு அவ்வவர்களது புண்யபாபங்கள் காரணம். அந்தபுண்யபாபங்களையும், ஜீவன் “இதைச்செய்யவேணும்” என்று முயன்ற பின்பு அந்த ஈஶ்வரனே அதை முற்றும் தலைக்கட்டிவைக்கிறான் இப்படி ஒப்புக்கொள்ளாமல் ஈஶ்வரனே எல்லாவற்றையும் அடியே தொடங்கி செய்விக்கிறானென்றால் “இதைச்செய் இதைத்தவிர்” என்று சொல்லுகிற சாஸ்த்ரம் வீணாய் விடும். ௨௫௭.

(ரா-ஹா.) ஆனால் விதிநிஷேதசாஸ்த்ரங்களுக்குப் ப்ரயோஜநமென்னென்னில், ஒருகார்யத்தில் முதலில் ஜீவன் ஸ்வதந்த்ரனாகவே ப்ரவர்த்திக்கிறான். இவனுக்கவ்வளவே சக்தியுள்ளது; பின்பு ஈஶ்வரன்தான் இவன், யத்நித்ததைத் தலைக்கட்டிவைக்கிறான். அதைத்தலைக்கட்டிக்கொள்ள ஜீவனுக்கு சக்தியில்லை. இப்படி ஜீவன்முதலில் நல்வழியில் முயலுகைக்காக சாஸ்த்ரங்களேற்பட்டது ஆகையால் அவை வீணாகமாட்டா. அந்த முதல்முயற்சியைப் பற்றியே இவனுக்கு ஸுகதுக்கங்களுண்டாகின்றன. அந்தப்ராதம ப்ரவ்ருத்தியையும் ஜீவனுக்கு ஈஶ்வரன் கர்மாநுகுணமாகக் கொடுக்கிறானாகையால் ஒருவிதமானபாதையுமில்லை. ௨௫௮.

அதி-௰. ஸூ-௨௫௯. அம்ஶோ நாநாவ்யபதேஶாதந்யதா சாபி தாஶகிதவாதித்வமதீயத ஏகே.

(ஶ்ரு-பா-வ்யா.) நாநா - பிந்நமாகவும், அந்யதா ச - அபிந்நமாகவும், வ்யபதேஶாத் - சொல்லுகையினாலே, அம்ஶ: - (ஜீவன் பரமாத்மாவினுடைய) ஏகதேசம். ஏகே-ஒருத்தர், (ஆதர்வணிகர்), தாஸகிதவாதித்வம் - (பரமாத்மாவுக்கு) தாசன் கிதவன் முதலான ஸ்வரூபமாயிருக்கையை, அதீயதே - அத்யயநம் செய்கிறார்கள். உருஅ.

(ஶ்ரு-ஸா.) ஜீவனுக்கு க்ரியைகளைச் செய்வித்து ஈஶ்வரன் உபகாரம் செய்கிறானென்று கீழேசொல்லிற்று. அந்த உபகாரமானது யஜமானன் வேலைக்காரனுக்குச் செய்வதுபோலாயிற்று. அப்பொழுது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறான ஜீவனுண்டென்று ஏற்பட்டது. இதனால் அத்வைதம் ஸித்திக்கவில்லையே யென்னில், ‘‘ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோந்தரோ யமயதி’’ என்று ஈஶ்வரன் ஜீவாத்மாவினுள்ளேயிருந்து அவனை அவ்வவகார்யங்களில் நியமிக்கிறானென்ற ஜீவேஶ்வரர்களுக்கு பேதமும், ‘‘ப்ரஹ்ம தாஸா:’’ ஓடக்காரன் முதலிய ஸகலப்ராணிகளும் ப்ரம்மஸ்வரூபமேயென்று ஒன்றாகவும் சொல்லுகையாலே ஜீவன்ப்ரம்மத்தினுடைய அம்சமென்று ஏற்படுகிறது. சரீரத்திலோர் பாகமாகிய கால் கைகளை ஒருகால் சரீரத்தைக்காட்டிலும் வேறிட்டு இந்த சரீரத்தின் கை கால்கள் என்பதுமுண்டு, ஆகிலும் அது சரீரத்தைக் காட்டிலும் வேறாகாது. அதுபோலவே இங்கும் ஜீவன்ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறாகானகையால் அத்வைதத்துக்குஹாநியில்லை. இதனால் பேதஶ்ருதிக்கும் அபேதஶ்ருதிக்கும் விரோதமில்லை யென்பதும் சொல்லப்பட்டது உருஅ.

(ஶ்ரு-ஸா.) ‘‘ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா’’ என் ஜீவாத்மாவைக்காட்டிலும் பரமாத்மாவை பிந்நமாக அறியவேணுமென்று இருவர்க்கும் பேதம் சொல்லுகையாலே பரமாத்மாவைக் காட்டிலும் ஜீவன் அத்யந்தம் பிந்நனென்றார்கள். சிலர் ‘‘தத்த்வமஸி’’ அந்த பரப்ரஹ்மமே நீயாகிறாயென்று ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் சொல்லுகையாலே இருவர்க்கும் பேதமில்லை. ப்ரஹ்மமே மாயையினால் அஜ்ஞாநத்தை யடைந்து ஜீவனாய்த் தோற்றுகிற தென்றார் சிலர்; அந்த ப்ரஹ்மமே பாரமார்த்தமான உபாதியோடு கூடி ஜீவனாய் பாவிக்கிற தென்றார் சிலர்; இம்மூவரையும் இவ்வதிகரணத்தினால் நிரஸிக்கிறார். ஜீவன் பரமாத்மாவைக் காட்டிலும் அத்யந்த பிந்நனென்றால அபேதம் சொல்லுகிற ஶ்ருதிக்கு, அரசனால் பரிபாலிக்கப்பட்ட ஜகத்தை ‘‘அரசனே ஜகத்து’’ என்பதுபோல் கௌணமாகஅர்த்தம சொல்லவேணும். மற்ற இரண்டு பக்ஷத்திலும் பேதஶ்ருதிவ்யாவஹாரிக தசையிலுள்ள பேதத்தைச் சொல்லுகிறதென்றுஅதுக்குஸங்கோசம்செய்யவேண்டும்.ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞாநாதிதோஷங்களும் கற்பிக்கவேண்டும்; இம்மூன்று பக்ஷங்களைக்காட்டிலும், ஜீவன்பரமாத்மாவுக்குசரீரம். இதில்ப்ரமாணம்‘‘யஸ்யாத்மா ஶரீரம்’’என்றஶ்ருதி.சரீரமானது சரீரியினுடைய ஏகதேசம், ஆகையால் ஜீவனைசரீரமாக உடைய பரமாத்மாவினுடைய ஏகதேசம அவனுக்கு சரீரமான ஜீவன் என்றபக்ஷமே ஶ்ரேஷ்டம். இப்பக்ஷத்தில், சரீரவாசகசப்தம் சரீரியைச்சொல்லுகையாலே‘‘ தத்த்வமஸி’’ ‘‘அயமாத்மா ப்ரஹ்ம’’ இத்யாதி வாக்யங்களில் ஜீவவாசக சப்தத்திற்கு ஜீவசரீரியானபரமாத்மா அர்த்தமாகையாலே அந்தஶ்ருதிகளுக்கும் விரோதமில்லை. அணுவாய் அல்பஜ்ஞனான ஜீவனுக்கும் விபுவாய் ஸர்வஜ்ஞனான பரமாத்மாவுக்கும் ஸ்வரூபஸ்வபாவங்கள் பிந்நங்களாகையாலே பேதஶ்ருதிக்கும் விரோதமில்லை. இப்படியங்கீகரிக்கையினாலே, ஸகலாத்

பதுபோல் காண்கிறதோ, ஜீவனுடையதுக்கப்ராந்தியு மப்படிப்பட்டதேயாகையால் ஜீவனுக்கு வாஸ்தவமான துக்கம் கிடையாது. அதினால் ப்ரஹ்மத்துக்கும் துக்கம் கிடையாது. - உசுக.

(ஶ்ரீ-ஹா) அம்சமாவது ஏகதேசம். சரீரத்தினோரம்சத்தில் ஒருதோஷமிருந்தால் அதுசரீரத்தின்தோஷமாகிறது. அப்படியே பரமாத்மாவினுடைய ஏகதேசமான ஜீவனிலுள்ளதோஷங்களும் பரமாத்மாவினதேயாகவேணும். அப்போது பரமாத்மா நிர்தோஷனென்கிறஶ்ருதியோடு விரோதம்வருமென்னில், காந்தியோடுகூடினமணிக்குக்காந்திஎப்படி அம்சமோ, அதுபோல் பரமாத்மாவுக்கு ஜீவன் அம்சமாகிறான். காந்திக்குஸங்கோசவிகாஸங்கள் முதலியதோஷங்கள்வந்தாலும் அத்தோஷங்கள் மணிக்குஸம்பவியாதாப்போலே ஜீவனுடையதோஷங்களும் பரமாத்மாவுக்குஸம்பவியாது. சரீரியான ஆத்மாவுக்கு சரீரம் அம்சம். சரீரத்திற்குண்டான ஜநநமரணம் முதலியதோஷங்கள் ஆத்மாவுக்கு ஸம்பவியாது. இதுமுதலான த்ருஷ்டாந்தங்கள் கண்டுகொள்வது. உசுக.

ஸூ-உசுஉ ஸ்மரந்தி ச.

(ஶ-பா-ஸா) ஸ்மரந்தி ச - "தத்ர யஃ பரமாத்மா ஹி ஸ நித்யோ நிர்குணஃ ஸ்ம்ருதஃ। ந லிப்யதே ஃபலைஶ்சாபி பத்மபத்ரமிவாம்பஸா" தாமரையிலையில் நீர் ஒட்டாததுபோல் நிர்க்குணனாகிய பரமாத்மாவினிடத்தில் புண்யபாபங்கள் சேராதென்று வ்யாஸரும்சொல்லியிருக்கிறார். உசுஉ

(ஶ்ரீ-பா-ஸா.) ஸ்மரந்தி ச - ஏகதேஶஸ்தி தஸ்யாக்நேர் ஜ்யோத்ஸ்நா விஸ்தாரிணீ யதா। பரஸ்ய ப்ரஹ்மணஃ ஶக்திஸ் ததேதம் அகிலம் ஜகத்"என்று அக்நிக்குக்காந்திபோல் பரமாத்மாவுக்கு ஜகத்து அம்சமாகிறது என்று இவ்வர்த்தத்தையே பராசராதிகளும் சொல்லுகிறார்கள். உசுஉ.

ஸூ - உசுங. அநுஜ்ஞாபரிஹாரௌ தேஹஸம்பந்தாஜ்ஜ்யோதிராதிவத்.

(ஶ-ஶ்ரீ-பா.) ஜ்யோதிராதிவத் - அக்நிமுதலிய வற்றுக்குப்போல, தேஹஸம்பந்தாத் - சரீரஸம்பந்தத்தினாலே, அநுஜ்ஞாபரிஹாரௌ - (வேதாத்யயநாதிகளில்சிலர்க்கு) அநுமதியும் (சிலர்க்கு) நிஷேதமும்கூடும்.

(ஶ-ஸா.) கீழ் ஜீவன் ப்ரஹ்மத்தினுடைய அம்சமென்று சொல்லப்பட்டது. ப்ரஹ்மம் நிரவயவமாகையால் அதுக்கு அம்சமென்பதுகூடாது. ஸாவயவமான வஸ்துவுக்கே அம்சமுண்டு. ஆகையால் ஜீவன் அம்சமென்றது-அம்சம்போலே என்றாய், ஜீவன் ஸாக்ஷாத் ப்ரஹ்மஸ்வரூபமென்றே அங்கீகரிக்கவேணும். இப்படியாகில் எல்லா ஜீவர்களும் ப்ரஹ்மஸ்வரூப மாகையால், ருதுஸ்நாநம்பண்ணினவன்று தன் பார்யையைப் புணரவேணும், யாகத்தில் பசுவதம் செய்யவேணும் என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட அந்தந்த கார்யங்களி லநுஜ்ஞையும், குருபத்நியுடன் புணரலாகாது, ஸகல பூதங்களையும் ஹிம்ஸிக்கலாகாது என்ற நிஷேதமும்கூடாது. தன்னுடைய பத்நியென்றும் குருபத்நியென்றும் பேதமாக சாஸ்த்ரம்சொன்னதுக்குத் தாத்பர்ய மென்னென்னில்,—இந்த பேதம் தேஹஸம்பந்தத்தினா லுண்டானது. அதாவது - தேஹமே ஆத்மாவென்கிற ப்ராந்தி - லோகத்தில், "நான்செய்கிறேன், நான் போகிறேன்" என்ற வ்யவஹாரமெல்லாம் தேஹாத்ம ப்ரமமூலமாயே யிருக்கிறது. தத்வஜ்ஞாநம் பிறந்தபின் பேதமில்லாவிடிலும், அது பிறப்பதற்குமுன் ஸம்ஸாரதசையில் பேதமுண்டாகையால், அக்காலத்தில் செய்யவேண்டு மவைகளுக்கு அநுஜ்ஞாபரிஹாரங்கள் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டது. தத்வஜ்ஞாநம் பிறந்த

னுக்கு இந்த அநுஜ்ஞாபரிஹாரங்கள் கிடையாது. ஆகிலும் அவனுக்கு தேஹாத்ம ப்ராந்தி யில்லாமையால், அவன் ஓருநிஷித்தகர்மங்களையும் செய்யவும் மாட்டான். இதற்கு த்ருஷ்டாந்தம்—லோகத்தில் நெருப்பு ஒன்றாயிருந்தபோதிலும், சவத்தில் பட்ட நெருப்புக்கூடாதென்றும், மற்ற நெருப்பு கூடுமென்றும், ஸூர்யகிரண மொன்றாயிருந்தபோதிலும் அமேத்யத்தில்பட்ட கிரணம் கூடாதென்றும் மற்ற கிரணம் கூடுமென்றும் லோகத்தில் காண்கிற அநுஜ்ஞாபரிஹாரங்களைப்போல் சாஸ்த்ரத்திலும் கண்டுகொள்வது. ௨-௩-௪௮.

(ரா-பா.) ஆத்மாக்களெல்லாம் பரமாத்மாவினுடைய அம்சமானால் ஒருவரதிகரென்றும் ஒருவர் ந்யூநரென்று மில்லாமையாலே எல்லார்க்கும் வேதாத்யயந யஜ்ஞயாகாதிகளில் அதிகாரம்உண்டாயிருக்க, சிலர்க்குண்டென்றும் சிலர்க்கில்லையென்றும் சொல்லும்விதமென்னென்ன, அக்நி ஒன்றேயாயினும் அது யஜ்ஞத்தில் ஸம்பந்தித்திருந்தால் பரிசுத்தமாய் ஸத்கர்மங்களுக்கு யோக்யமாயும், ஶ்மசாநத்தில் ஸம்பந்தித்திருந்தால் அசுத்தமாய் அயோக்யமாயு மாகிறாப்போலே, பரிசுத்தமான ப்ராஹ்மண சரீரமெடுத்தவன் அவற்றுக்கு யோக்யனென்றும் பரிசுத்தமில்லாத சூத்ரசரீர மெடுத்தால் அயோக்யனென்றும் சொல்லுகை உபபந்நமாகும்.

ஸூ-௨-௩-௪௯. அஸந்ததேஶ்சாவ்யதிகர:,

(ஶ்ரு-வ்யா.) அஸந்ததே: - ஸர்வசரீர ஸம்பந்தமில்லாமையால், அவ்யதிகர: - ஸுகதுஃகஸாங்கர்யமில்லை. ௨-௩-௪௯.

(ரா-வ்யா.) அஸந்ததேஶ்ச - ஜீவபரமாத்மாக்களுக்குப் பரஸ்பரம் பேதத்தினாலும், அவ்யதிகர: - (போகத்தில்) ஸம்பர்க்கமில்லை. ஸந்ததியாவது - விடாமல் ஒன்றாய் சேர்ந்திருக்கை. அதாவது அபேதம். அஸந்ததியாவது - அதுக்கெதிர்த்தட்டான பேதம். ௨-௩-௪௯.

(ஶ்ரு-பா.) ஜீவன்களெல்லாம் ப்ரஹ்மஸ்வரூபிகளாகில், ஜீவன்களுக்குப் பரஸ்பரம் பேதமில்லாமையால், ஒருவன் செய்த கர்மத்தின் பலத்தை மற்றொருவனும் அநுபவிக்கட்டும். இதனால் எல்லாரும் எல்லாபலங்களையும் அநுபவிக்க வேண்டிவரும். இவன் ஸுகி, இவன் துஃகி என்கிற பேதம் இல்லாமல் போய்விடும். அதற்காக ஜீவன்கள் ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறா யிருக்கிறார்களென்றொப்புக் கொள்ளவேணும். இப்பொழுது எந்த ஜீவன் எந்த கர்மத்தைச்செய்கிறானோ. அவன் அதின்பலத்தை யடைகிறான் என்று வ்யவஸ்த்தை யேற்பட்டிருக்கும் என்கிற சங்கைக்கு உத்தரம்—ஜீவனென்பது கேவலப்ரஹ்ம ஸ்வரூபத்தையன்று, புத்தியோடு கூடினப்ரஹ்மாம்சமே ஜீவனெனப்படும். அந்தபுத்தியென்பது அணுஸ்வரூபமாகையால்அது எல்லாசரீரத்திலுமுள்ள தொன்றன்று; அது ஒவ்வொருசரீரத்திலும் வேறுபட்டிருக்கும், ஆகையால் அந்த புத்தியோடுகூடின ஜீவனும் ஒவ்வொரு சரீரத்திலும் வேறுபட்டிருக்கையால், அந்தந்த புத்தியோடுகூடின ஜீவன் பண்ணின கர்மத்தின் பலத்தை அந்தந்த ஜீவனநுபவிக்கிறானென்கிற வ்யவஸ்த்தை கூடுமென்று.

(ரா-பா.) இப்பக்ஷத்தில், ஜீவர்கள் அணுவாய் ப்ரதிசரீரம் பிந்நராய் இருக்கையாலே ஒருவனுக்குண்டான ஸுகதுக்கங்கள் மற்றொரு ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் ப்ரஸங்கியாது. ப்ரஹ்மமே ஜீவனென்கிற பக்ஷத்தில் ஜீவனுக்குண்டான ஸகலதோஷங்களும் ப்ரஹ்மத்திற் குண்டாகும். ௨-௩-௪௯.

ஸூ-௨-௩-௫௦. § ஆபாஸா ஏவ ச.

§ ஆபாஸ ஏவ ச - ஆபாஸா ஏவ ச - என்று இரண்டு பாடமுண்டு.

(ஸ - வ்ய.) ஆபாஸஏவ-ப்ரஹ்மத்தின் அஜ்ஞாநத்திலுல் ப்ரதிபிம்பமே.

(ரா - வ்ய.) ஆபாஸஏவ வ - (ப்ரஹ்மமே அஜ்ஞாநத்திலுல் ஜீவனாகிறனென்றபக்ஷத்தில் ஸர்வஜ்ஞனான பரமாத்மாவுக்கு அஜ்ஞாநமும் ஸ்வரூபாவரணமும் கல்பிக்கவேண்டுமாகையால், அபேதஸாதகமான ஹேதுக்களெல்லாம்) தோஷயுக்தங்களாயே யிருக்கும். ப்ரஹ்மம் நிர்துஷ்டமென்கிற ஶ்ருதியும் விரோதிக்கும் உகூரு

(ஸ-ஸா.) கீழ் இதுவரையில், ஜீவனென்பவன், புத்தியென்கிற உபாதியோடு கூடின ப்ரஹ்மத்தினம்சமென்று சொல்லிக்கொண்டுவந்து, அதற்குமேல் வந்ததோஷங்களையும் பரிஹரித்தார். இதில் அப்பக்ஷம் ஸரியன்றென்கிற அபிப்ராயத்திலுல் வேறொருபக்ஷம் சொல்லுகிறார். ஜீவனென்பவன் ப்ரஹ்மத்தினுடைய ப்ரதிபிம்பமே, மற்றொன்றன்று. இப்பக்ஷத்தில் கீழ்ச்சொன்ன தோஷங்களொன்றும் வராது. எப்படியெனில்—நாலுகலசங்களில் நீரைநிறைத்து வெய்யிலில் வைத்தால் அந்நாலிலும் ஸூர்யனுடைய ப்ரதிபிம்பம் விழுகிறது. அவற்றில் ஒரு கலசம் அசைந்தால் அக்கலசத்தில் காணப்படுகிற ப்ரதிபிம்பமே யசையும். மற்றொரு கலசத்தில் காண்கிற ப்ரதிபிம்பம் அசைகிறதில்லை. அதுபோலவே, ஒவ்வொரு புத்தியிலும் ஜீவனென்று சொல்லப்படுகிற ப்ரதிபிம்பம் வெவ்வேறாகையால், ஒரு ஜீவனுக்குண்டாகிய ஸுகதுஃகங்கள் மற்றொருவனுக் குண்டாகாதென்று கண்டுகொள்க. உகூ௬.

ஸூ-உகூ . அத்ருஷ்டாநியமாத்.

(ஸ - வ்ய.) அத்ருஷ்டாநியமாத் - புண்யபாபங்களுக்கு நியமமில்லாமையாலே, (இந்ததோஷம் ஆத்மா விபுவென்பவர் பக்ஷத்தில்வரும்.) உகூகூ.

(ரா - வ்ய.) அத்ருஷ்டாநியமாத் - அத்ருஷ்டத்திலுலும் நியமம்கூடாதாகையால். (அபேதவாதம் அஸாரம்.) உகூகூ.

(ஸ-ஸா.) ஆத்மா விபுவென்றும் அநேகமென்றும் ஒப்புக்கொள்ளில், எல்லா ஆத்மாக்களும் எல்லா இடங்களிலுமிருக்கையாலே, ஒரு ஆத்மாவோடு சேர்ந்த எந்த மநஸ்ஸும் வாக்கும் காயமும் அவ்வாத்மாவினுடைய புண்யபாபங்களுக்கு ஹேதுவாகிறதோ, அந்தமனோவாக் காயங்கள் மற்றோராத்மாவோடும் சேர்ந்திருக்கையால் அதிலுலுண்டான புண்யபாபங்கள் ஒருவனுக்கேயுண்டு, மற்றொருவனுக்கு இல்லையென்கிற நியமம் சொல்லமுடியாது. உகூகூ.

(ரா-ஸா.) பாரமார்த்திகோபாதியோடுகூடின ப்ரஹ்மத்தினுடைய சிலசில அம்சங்களுக்கு ஜீவனென்று பெயர்; இந்த அம்சங்களிலுண்டான அநாதியான அத்ருஷ்டத்திலுலே உண்டான உபாதியும் அநாதியாகையால் அவ்வம்சங்களிலுண்டான தோஷங்கள் ப்ரஹ்மத்தினுடைய இதரபாகத்தில் ஸம்பவியாது. ப்ரஹ்மம் நிர்துஷ்டமென்கிற ஶ்ருதிக்கும் விரோதமில்லை. ஸுகதுக்கானுபவங்களிலும் பரஸ்பரஸம்பர்க்கமில்லை என்கிற பாஸ்கரமதத்திலும், அத்ருஷ்டாதிகளிலுல் ப்ரஹ்மத்தில் நின்றும் அம்சத்தைப் பிரித்தெடுக்க முடியாமையால் அத்ருஷ்டமும் உபாதியும் ப்ரஹ்மாஶ்ரயங்களாகையாலே தோஷங்களும் ப்ரஹ்மாஶ்ரயங்களேயாகும் ஆகையால் கீழ்ச்சொன்ன தோஷங்கள் நிவர்த்தியாது. உகூகூ.

ஸூ-உகூஎ. அபிஸந்த்யாதிஷ்வபி சைவம்.

(ஸ-வ்ய.) அபிஸந்த்யாதிஷ்வபி - அபிஸந்திமுதலானவற்றிலும் கூட, ஏவம் - இப்படியே. உகூஎ.

(ரா-ப்ர-பா.) அபிஸந்த்யாதிஷ்வபி- (அத்ருஷ்டத்திற்குக்காரணமாக ஒப்புக்கொண்ட) ஸங்கல்பம் (அநுஷ்டாநம்) முதலியவைகளிலும், சைவம் - இப்படியே. (இவைகளும் ப்ரஹ்மத்தையே ஆஶ்ரயிக்குமென்று கருத்து) உசுஎ.

(ஶ்ரு-பா.) எந்த ஜீவன் "இக்காரியத்தை நான் செய்யக்கடவேன்" என்று ஸங்கல்பித்துக்கொண்டு எக்காரியத்தைச் செய்கிறானோ, அதினாலுண்டான புண்ய பாபங்களை அந்த ஜீவனே அடைகிறான் என்று ஒப்புக்கொள்ளுகிறோமென்னில்,— ஸங்கல்பமாவது ஒருவிதமான ஜ்ஞாநம், அது எந்த ஆத்மாவோடு மநஸ்ஸு சேர்ந்தால் அந்த ஆத்மாவிலுண்டாகிறதென்று சொல்லவேணும். எல்லா ஆத்மாக்களும் எங்கும் நிறைந்திருக்கையால், இந்த ஆத்மாவோடு மநஸ்ஸு சேரும்போது மற்ற எல்லா ஆத்மாக்களோடும் சேருமாகையால், இவ்வாத்மாவிற்போல் மற்ற ஆத்மாக்களிலும் இந்த ஸங்கல்பம் ஏன் உண்டாகக்கூடாது. அதினாலுண்டான புண்ய பாபங்கள்தான் மற்ற ஆத்மாக்களுக்கு ஏன் ஸம்பவியாது. ஆகையால் ஆத்மாவிபு அனேகம் என்ற மதம் சரியன்று. உசுஎ.

ஸூ-உசுஅ. ப்ரதேஶாதிதி சேந்நாந்தர்பாவாத்

(ஶ்ரு-ப்ர.) ப்ரதேஶாத் - சரீரமாகிற ப்ரதேசபேதத்தினால் (நியமம் ஸம்பவிக்கும்), இதி சேத் - என்றால், அந்தர்பாவாத் - (அந்தசரீரத்தில் மற்ற எல்லா ஆத்மாக்களும்) அந்தர்ப்பவித்திருக்கையாலே, ந - (அந்நியமம்) சரிப்படாது. உசுஅ.

(ரா-ப்ர-பா) ப்ரதேஶாத்-உபாதியுக்தப்ரதேசத்தைக்காட்டிலும் அதில்லாத ப்ரஹ்மப்ரதேசம் பிந்நமாயிருக்கையால், (அதுக்குக் கீழ்ச் சொன்ன தோஷங்கள் வாராது), இதி சேத் - என்றால், அந்தர்பாவாத் - (அப்ப்ரதேசமும்) உபாதியுக்த ப்ரதேசத்திற்குள் அந்தர்பவிக்கையாலே, ந - அப்படிசொல்லக்கூடாது. (ப்ரஹ்மம் விபுவாகையால் அதுசலியாது உபாதியேபோகவேண்டும். அது உபாதியில்லாத ப்ரஹ்மப்ரதேசங்களிலுங் கூடப்போமாகையாலே கீழ்ச்சொன்னவிபாகம் வாராதென்று தாத்பர்யம்.)

(ஶ்ரு-பா.) ஆத்மாக்கள் விபுவாயினும் அனேகமாயினும், ஒவ்வொரு ஆத்மாவுக்கும் சரீரம் வேறுவேறாயிருக்கும். எந்த சரீரத்துக்கு எந்த ஆத்மாவோ, அந்த சரீரத்திற்குள் அந்த ஆத்மாவோடு மநஸ்ஸு சேர்ந்தால் அவ்வாத்மாவுக்கு ஜ்ஞாநமுண்டாகிறதென்று ஒப்புக்கொள்ளினும், எங்குமுள்ள ஆத்மாக்கள் அந்த சரீரத்திற்குள்ளுமிருக்கையாலே அம்மநஸ்ஸு அந்த சரீரத்திற்குள் அவ்வாத்மாவோடு ஸம்பந்திப்பதுபோல் மற்ற ஆத்மாக்களோடும் ஸம்பந்தித்தேயிருக்குமாகையால், அவ்வாத்மாவுக்கே ஜ்ஞாநமுண்டாகிறது, மற்ற ஆத்மாவுக்கு உண்டாகிறதில்லை என்கிற நியமம் சரிப்படாது. இப்படி ஆத்மா விபுவென்கிற பக்ஷத்தில், புண்யபாப வ்யவஸ்தையில் எவ்விதமான யுக்தியும் சரிப்படாதாகையால் அத்வைத ஸித்தாந்தப்படி அணுஸ்வரூபியான புத்தியென்னும் அந்தக்கரணத்தினால் அவச்சேதிக்கப்பட்ட ப்ரஹ்மாம்சமாத்மாவென்றாவது, அல்லது, அந்தபுத்தில் ப்ரதிபலிக்கிற ப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பமாத்மாவென்றாவது ஒப்புக்கொள்ளவேணும்.

உ-ம் அத்யாயத்தில் ங-ம் பாதம் முற்றிற்று.

சு - வது பாதம்.

அதி-௧. ஸூ உ௬௧. ததா ப்ராணா:.

(ஸ-ர-வ்ய.) ப்ராணா: - ப்ராணன்கள், ததா - அப்படியே, (ஜீவனைப்போலே நித்யங்கள்). ௨௬௧.

(ஸ-பா.) இந்த பாதத்தில் இந்த்ரியஸ்வரூபம் நிஷ்கர்ஷிக்கப்படுகிறது—உப நிஷத்தில் சிலவிடங்களில், "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மன: ஸர்வேந்த்ரியாணி ச" என்றுஆகாசாதிகளைப்போல் இந்த்ரியங்களும் ஸ்ருஷ்டிகாலத்தி லுண்டாகின்றன வென்று சொல்லப்பட்டது. சிலவிடங்களில் 'அஸத்வா இதமக்ர ஆஸீத், ததாஹு: கிம் தத் அஸதாஸீத் ருஷயோ வாவ தேக்ரே அஸதாஸீத், ததாஹு: கே தே ருஷய இதி ப்ராணா வா ருஷய:" என்று ஸ்ருஷ்டிக்குமுன் ருஷிகளிருந்தார்களென்றும். ருஷிகளென்று ஆரைச்சொல்லுகிறதென்றால், இந்த்ரியங்களைச் சொல்லுகிற தென்றும், இப்படி இந்த்ரியங்கள் ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்தனஎன்று சொல்லுகையாலே, அவற்றுக்கு உத்பத்தியில்லை, ஆத்மாவைப்போல் நித்யங்களென்று தோற்றுகிறது. இவ்விரண்டில் எதை ஸித்தாந்தமாகக் கொள்ள வேணுமென்னில், ஆகாசாதிகளைப்போல் இந்த்ரியங்களு முண்டாகின்றன வென்பதேஸித்தாந்தம் "ப்ராணா:" என்பது - இந்த்ரியங்களை. ௨௬௧.

(ரா-பா.) இவ்வதிகரணத்தில் இந்த்ரியங்களும் உத்பத்தி விநாசங்களையுள்ளவையென்று ஸ்தாபிக்கிறார்.—"அஸத்வா இதமக்ர ஆஸீத் ... ருஷயோ வாவ தேக்ரே அஸதாஸீத் ... ப்ராணா வா ருஷய:" ஜகத்ஸ்ருஷ்டிக்குமுன்னே ருஷிகளிருந்தார்கள். அவர்கள் யாரென்றால் ப்ராணன்கள் என்று, இந்த்ரியங்கள் ப்ரளயகாலத்திலும் இருந்ததாகச் சொல்லுகையாலே அவையும் ஆத்மாவைப்போல் நித்யங்கள் என்று பூர்வபக்ஷம். ௨௬௧.

ஸூ உ௬0. கௌண்யஸம்பவாத் தத்ப்ராக் ச்ருதேஸ்ச.

(ஸ-வ்ய.) கௌண்யஸம்பவாத் - இந்த்ரியங்களுக்கு கௌணோத்பத்தி கூடாமையாலும்.

(ஸ-வ்ய.) தத்ப்ராக் - (இந்த்ரியவாசகமான) ப்ராணசப்தத்திற்குமுன், ச்ருதே: - "ஜாயதே" என்கிற சப்தம் கேட்கப்படுகையாலே, (இந்த்ரியங்கள் அநித்யங்கள்.) ௨௭0.

(ரா-வ்ய.) தத்ப்ராக்ச்ருதே: - அந்த பரமாத்மாவுக்கே ஸ்ருஷ்டிக்கு முன் ஸ்த்திதி சொல்லுகையாலே,(இந்த்ரியங்களநித்யங்கள்). அஸம்பவாத். (ப்ரளயத்தில்) அனேகவஸ்து வில்லாமையால், கௌணீ - (பஹுவசநம்) கௌணம். ௨௭0.

(ஸ-பா.) பூர்வபக்ஷி,இந்த்ரியங்களுக்கு உத்பத்தியில்லையென்று ஸித்திரப்படுத்திக்கொண்டு, சில இடங்களில் இந்த்ரியங்களுக்கு உத்பத்தி சொல்லியிருந்தபோதிலும், அதை கௌணமாகக் கொண்டான். இதில் அதை நிரஸிக்கிறார்.—"கௌண்யஸம்பவாத்" இந்த்ரியங்களுக்குக் கௌணமான உத்பத்தி ஸம்பவியாமையாலே,• இந்த்ரியங்களுத்பந்நங்களென்கிற ச்ருதியே முக்யம். ஏனென்றால், இந்த்ரியங்கள் ப்ரஹ்மத்தினிடத்தில் நின்றும் உண்டாகாவிடில், அவை ப்ரஹ்மத்தின் விகாரங்களல்லாமையால்ப்ரஹ்மத்தையறிந்தால் இந்த்ரியங்களறிந்ததாகமாட்டாது.

இப்படியாகில், "கஸ்மிந்நு ஹவிஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி" என்று ப்ரஹ்மத்தையறிந்தால் மற்ற ஸகலபதார்த்தங்களு மறிந்ததாமென்கிற ஶ்ருதியோடு விரோதம் வரும், ஆகையால் உத்பத்தியை ஸித்தாந்தமாகக்கொண்டு, ஸ்ருஷ்டிக்குமுன் இந்த்ரியங்க ளிருந்தன வென்பதற்கு, அவாந்தர ஸ்ருஷ்டிக்குமுன் அவாந்தரப்ரளயத்திலிருந்ததென்று அர்த்தம் சொல்லவேணும்; இப்படி சொல்லில் ஆதிஸ்ருஷ்டிக்குமுன் மஹாப்ரளயத்திலிருந்ததாக ஏற்படாமையால் ஶ்ருதிவாக்யங்களுக்கு விரோதமில்லை. அவாந்தர ஸ்ருஷ்டியாவது-சதுர்முகப்ரஹ்மா, தன்னுடைய ஒவ்வொரு தினத்திலும் ஸ்வர்க்கபூமி பாதாளாதி லோகங்கள் ஸமுத்ரஜலத்தினால் முழுகிப்போக, அந்த அவாந்தர ப்ரளயத்திற்குப்பின் தன்னுடைய மறுதினத்தில் படைக்கிற படைப்பு. ஆதிஸ்ருஷ்டியாவது - சதுர்முகப்ரஹ்மாவுங்கூட அழிந்திருக்கிற மஹாப்ரளயத்திற்குப்பின் பரப்ரஹ்மம் மற்றொரு சதுர்முக ப்ரஹ்மாவைப் படைக்கிற படைப்பு. ௨௭௦.

"ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண:" (இந்த ப்ரஹ்மத்தில் நின்றும் ப்ராணன் மநஸ்ஸு இந்த்ரியங்கள் ஆகாசம் முதலிய பஞ்சபூதங்கள் இவையெல்லா முண்டாயிற்றென்று சொல்லிற்று) என்ற இவ்வாக்யத்தில் ஆகாசாதிகளைப்போல் இந்த்ரியங்களு முண்டாயிற்றென்று சொல்லியிருக்க, அவற்றில், இந்த்ரியங்களைவிட்டு மற்றவையுண்டாயிற்றென்றும், இவைமாத்திர முண்டாகவில்லை யென்றும் சொல்வது சரியன்றாகையால் அவைகளைப்போலவே இந்த்ரியங்களும் உண்டாயிற்றென்று அங்கீகரிக்கவேணும். இந்தபாஷ்யத்திற்கு "கௌணீ அஸம்பவாத், தத்ப்ராக் ஶ்ருதேஶ்ச" என்று இரண்டு ஸூத்ரம்.

(ஶா-ஹா.) இதில் ஸித்தாந்தம் சொல்லுகிறார்—"ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்" என்று ப்ரளயகாலத்தில் ஸ்ரீமந்நாராயணனொருவனே இருந்தானென்கையாலே இந்த்ரியங்கள் இல்லை என்று ஸித்தம். மேலும் ஆத்மாவுக்கு உத்பத்தி விநாசங்களில்லையென்று சொன்னாற்போற் இந்த்ரியங்களுக்குச் சொல்லவில்லை. முன் சொன்ன வாக்யத்தில் ப்ராணனென்று பரமாத்மாவையே சொல்லிற்று. ருஷி என்றால் கண்ணுக்கெட்டாதவைகளை யறிகிறவனென்றர்த்தம். அறிகை அசேதநமான இந்த்ரியங்களுக்குக் கூடாதாகையால் அவையங்குசொல்லவில்லை. "ப்ராணா:" என்று பஹுவசநமாகச்சொன்னது - ப்ரளயத்தில் அநேகர் இல்லாமையால் அந்த பஹுவசநத்திற்கு பஹுத்வம் அர்த்தமன்று. ஆகையால் இந்த்ரியங்களநித்யங்களென்று ஸித்தாந்தம். ௨௭௦.

ஸூ - ௨௭௧. தத்பூர்வகத்வாத் வாச:.

(ஶ - ஸூ.) வாச: - வாகிந்த்ரியத்துக்கு, தத்பூர்வகத்வாத் - தேஜஸ்ஸை முன்னமுடைத்தாகையினால், (இந்த்ரியங்களினுத்பத்தி சொல்லப்பட்டது.) ௨௭௧.

(ஶா-ஸூ.) வாச: - நாமதேயத்துக்கு, தத்பூர்வகத்வாத் - ஆகாசம் முதலிய பதார்த்தங்களை முன்னாக உடையதாகையாலே, (ப்ராணபதத்திற்குப் பரமாத்மாவே அர்த்தம்.) ௨௭௧.

(ஶ-ஹா.) சாந்தோக்யத்தில் ஸ்ருஷ்டிக்ரமம் சொல்லும்போது ஆதியில் "தத்தேஜோऽஸ்ருஜத" என்று தொடங்கி தேஜஸ்ஸு ஜலம்ப்ருதிவீ இவைகளுக்கே உத்பத்தி சொல்லிற்று, இந்த்ரியங்களினுத்பத்தி சொல்லவில்லை. ஆயினும்

,,ஜநயேஷஹிஜெஸாரீநஃ' என்று தொடங்கி அந்த உபநிஷத்திலேயே, ப்ருதிவி பரிணமமாகிய அன்னத்தில்நின்றும் மநஸ்ஸும், ஜலத்தில் நின்றும் ப்ராணனும், தேஜஸ்ஸில்நின்றும் வாகிந்திரியமுமுண்டாயிற்றென்கையால், ஓரிந்த்ரியத்துக்குத்பத்தி சொன்னது ஸகலேந்த்ரியோத்பத்திக்கு முபலக்ஷணமாய், ஸகலேந்த்ரியங்களுமுத்பத்திமத்துக்கள் என்பதே அந்த உபநிஷத்துக்கும் தாத்பர்யமாயிருக்கிறது. உஎக.

(ரா-ஹா.) ஸ்ருஷ்டிகாலத்தில் முதலில் ஆகாசாதிகளை ஸ்ருஷ்டித்து அநந்தரம் அவைகளுக்கு நாமகரணம் செய்ததாகச் சொல்லுகையாலே ஆகாசாதிகளுண்டானபோதே அவற்றுக்கு வாசகங்களான நாமங்களுண்டு. ப்ரளயத்தில் அவையில்லாமையால் அவற்றின் நாமங்களுமில்லையாகையால் அப்போது ப்ராணனென்று, அப்போதுள்ள பரமாத்மாவையே சொல்லிற்று. அப்போதில்லாத வாயுவிகாரணமான ப்ராணனைச் சொல்லவில்லை. உஎக.

கயி-சூஉ. ஸூ-உஎஉ. ஸப்த கதேர்விஶேஷிதத்வாச்ச.

(ஸூ-வ.) கதேஃ - ஜீவனோடுகூடப் போகையாலும், விஶேஷிதத்வாச்ச - ஏழென்றே குறித்திருக்கையாலும், ஸப்த - (இந்த்ரியங்கள்) ஏழு. உஎஉ.

(ரா-வ.) கதேஃ - (ஏழுக்கே ஜீவனுடன்) கமநம் சொல்லுகையாலும், விஶேஷிதத்வாச்ச - (அவற்றின்) பேரைக்குறித்துச் சொல்லுகையாலும், ஸப்த - (இந்த்ரியங்கள்) ஏழு. உஎஉ.

(ஸூ-ஹா.) இந்த அதிகரணத்தில் இந்த்ரியங்களின் ஸங்க்யை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த்ரியங்கள் ஏழென்றும், பதினொன்றென்றும், பலவிடங்களில் பலவாறாகச் சொல்லியிருக்கையால் எது ஸித்தாந்தமென்னும் சங்கையில்,—ஜீவன் இந்த சரீரத்தைவிட்டுப் போம்போதும்கூட எவை கூடப்போகிறனவோ, அவையே இந்த்ரியங்களெனப்படும், ,,ஸப்தகதேர் விஶேஷிதத்வாச்ச'' என்று தொடங்கி சக்ஷுஸ்ஸு, ஶ்ரோத்ரம், த்வக், ஜிஹ்வை, க்ராணம், மநஸ்ஸு, புத்தி என்றிவ்வேழையும்சொல்லி, பின்பு, ,,தேந ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி'' என்று கீழ்ச்சொன்ன ஸகல இந்த்ரியங்களும், ஜீவன் இச்சரீரத்தைவிட்டு வெளிக்கிளம்பிப் போகும்போது அவனுடன்கூடப் போகிறனவென்று இவ்வேழுக்குமே ஸஹகமநம் சொல்லுகையாலே இந்த்ரியங்களேழேயென்று பூர்வபக்ஷி சொன்னான். உஎஉ.

(ரா-ஹா) இந்த்ரியங்கள் எத்தனையென்றால் ,,ஸப்த ப்ராணாஃ ப்ரபவந்தி' என்று ஏழு இந்த்ரியங்களுக்கே ஜநநமரணங்களில் ஜீவனுடன் ஸஞ்சாரம் சொல்லுகையாலும் ',,பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ | புத்திஶ்ச'' என்று ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்கள் மநஸ்ஸு புத்திகளாகிற இவை இந்த்ரியங்களென்று இவைகளைப் பேரிட்டுச்சொல்லி மற்றவையைச்சொல்லாமையாலும் இந்த்ரியங்கள் ஏழு என்று பூர்வபக்ஷம். உஎஉ.

ஸூ-உஎங. ஹஸ்தாதயஸ்து ஸ்திதே(அ)தோ நைவம்.

(ஸூ-வ.) ஹஸ்தாதயஃ - கைமுதலானவைகளும் (உண்டு). ஸ்திதே - (ஏழிந்த்ரியங்களைக்காட்டிலு மதிகம்) உண்டாயிருந்தவளவில், (ஏழே என்னப்போகாது). அதஃ - ஆகையால், நைவம் - இப்படியன்று. உஎங.

(ரா-வ்ருத்.) ஹஸ்தாதயஃ - கை முதலானவைகளும், ஸ்திதே (சரீரம்) இருக்குமளவில், (ஜீவனுக்கு உபகரணங்களாகின்றன). அத: ஆகையால் - ஸப்த - இந்த்ரியங்கள் ஏழுஎன்கிறபடி, ந - அன்று. உஎங.

(ஸ்ரு-ஹா.) எந்த ஜந்மத்திலும் விட்டுப்பிரியாமல் கூடவேயிருந்து ஜீவனுக்கு வேண்டுமுபகாரங்களைச் செய்கிறவைகளே இந்த்ரியங்களெனப்படும். ஜீவனை ஸம்ஸாரத்தில் நின்றும் போகவொட்டாமல் ப்ரதிபந்தகங்களானவை இந்த்ரியங்களென்று தாத்பர்யம். வேதத்தில் மற்றோரிடத்தில் "தஶேமே புருஷே ப்ராணா: ஆத்மைகாதஶ" என்று, த்வக், சக்ஷுஸ், ஶ்ரோத்ரம், ஜிஹ்வை, க்ராணம்; என்கிற ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களும், வாக், பாதம், பாணி, பாயு, உபஸ்த்தம், என்கிற ஐந்து கர்மேந்த்ரியங்களும், ஆத்மாவென்று சொல்லப்பட்ட மநஸ்ஸும் ஆகிய பதினொரு இந்த்ரியங்களுண்டென்றுசொல்லுகையாலும், 'ஹஸ்தௌ வை க்ரஹ:' என்று தொடங்கி, கர்மேந்திரியங்களும் எல்லா ஜந்மங்களிலும் ஜீவனுடன் கூடவேயிருந்து அவனை ஸம்ஸாரத்தில் பந்திப்பிக்கிறன வென்கையாலும், இந்த்ரியங்கள் ஏழேயன்று, பதினொன்று என்று ஸித்தாந்தம். இவற்றைக்காட்டிலும் அதிகமாக, பன்னிரண்டு பதின்மூன்று உண்டென்பது, அவையும் இவற்றின் அவாந்தர பேதமாகையால் விரோதமில்லை. ஜ்ஞானத்துக்கு ஸாதகமானவை ஜ்ஞானேந்த்ரியமென்றும் க்ரியைக்கு ஸாதகமானவை கர்மேந்த்ரியமென்றும் சொல்லப்படுகிறது. இப்பத்தும் வெளியிலே யிருக்கிறவையாகையால் பாஹ்யேந்த்ரியமென்றும, மநஸ்ஸு உள்ளே இருக்கிறதாகையால் அதுக்கு ஆந்தரிந்த்ரியமென்றும் பெயர். உஎங.

(ரா-பா.) "தஶேமே புருஷே ப்ராணா: ஆத்மைகாதஶ" ஜீவனிடத்தில் பத்து இந்த்ரியங்கள், மநஸ்ஸுபதினோராவது என்றும். "இந்த்ரியாணி தஶைகம்" இந்த்ரியங்கள் பதினொன்றும் என்று வேதத்திலும் கீதையிலும் பதினொரு இந்த்ரியங்களைச் சொல்லுகையாலும் த்வக்சக்ஷுஶ்ஶ்ரோத்ர ஜிஹ்வாக்ராணங்களாகிற ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்கள்போல், வாக் பாத பாணி பாயூபஸ்த்தங்களாகிற ஐந்து கர்மேந்த்ரியங்களும் ஜீவனுக்கு உபகரணங்களாகையாலும, வாக் பாதாதிகளையும் இந்த்ரியங்களாக அங்கீகரித்து ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்து கர்மேந்த்ரியங்கள் மநஸ்ஸு ஆக இந்தரியங்கள் பதினொன்று என்பது ஸித்தாந்தம்— த்வச்சக்ஷுராதிகள் ஜ்ஞானேந்த்ரியங்களைந்தும் ஆதமாவினுடைய ஜநந மரணங்களில் அத்துடன் போவது வருவதாயிருக்கும்; கர்மேந்த்ரியங்களைந்தும் சரீரத்தோடுண்டாய் அத்துடன் நசித்தபோதிலும் சரீரமிருக்குமளவும் ஜீவனுக்குபகாரகங்களாகையால் அவற்றையும் இந்த்ரியங்களாகச் சொல்லத்தட்டில்லை. உஎங.

அபி சூங ஸூ-உஎச அணவஶ்ச

(ஸு-வ்ரு.) அணவ: ச - இந்த்ரியங்கள் கண்ணால் பார்த்தறியத்தக்க ரூபங்களற்றவையாய், அளவுபட்டவையுமா யிருக்கின்றன. உஎச.

(ரா-வ்ரு.) அணவ: ச - (இந்த்ரியம்) அணுவாயுமிருக்கும் உஎச.

(ஸ்ரு-ஹா.) இந்த்ரியங்கள் "இவ்வளவு அவ்வளவு" என்று பரிமிதியற்றவையாய் ஸகலதேச வ்யாபியாயிருக்குமென்று ஸாங்க்யர் சொன்னது சரியன்று. அப்படியாகில், அணுஸ்வரூபியாகிய ஆத்மாவுக்கு விபுவாயிருக்குமது கரணமாக மாட்டாது. பரமாணுவைப்போல் மிகவும் சிறியதென்ற தார்க்கிகர் பக்ஷத்தில், த்வகிந்த்ரியம் சரீரமெங்கும் வ்யாபித்திருக்கக்கூடாது. அதுசரீரமெங்கும் வ்யாபித்து அங்கங்குண்டான ஸுகதுக்கங்களை யறிகைக்கு ஸாதகமாயிருக்கையால், சரீரத்தளவுள்

டென்று ஒப்புக்கொள்ளவேணும். ஆகில், அது சரீரத்தைவிட்டுக் கிளம்பிப்போகும் போது அருகேயுள்ளவர்களுக்கு ஏன் தெரிகிறதில்லையென்னில்; பிறர் காண்கைக் குரிய ரூபம் அதிலில்லாமையால் காண்கிறதில்லை என்று வேதாந்திமதம். உஎச.

(ஶ்ரா-ஹா.) இந்த்ரியங்கள் விபுவா; அணுவா என்னில், "ஸவெ-ஃநஷா:" இந்த்ரியங்கள் எல்லாம் அவதியற்றவைகளென்று சொல்லுகையாலே விபுக்கள் என்று பூர்வபக்ஷம்—"ப்ராணமநூத்க்ராமந்தம் ஸவெ-ப்ராணா அநூத்க்ராமந்தி" என்று ப்ராணன் சரீரத்தைவிட்டுக் கிளம்பும்போது அத்துடன் ஸகலேந்த்ரியங்களும் கிளம்பிப்போகின்றனவென்று சொல்லுகையாலே விபுவுக்கு கமனம் ஸம்பவியாமையால் விபுவன்று; கண்ணுக்குக் காணாமையால் நடுத்தரமுமன்று; இதனால் அணுவென்பது ஸித்தம். அவதியில்லையென்பதுக்கு - அதை உபாஸித்தால் அவனுக்குப் பலம் நிரவதிகமாகக்கிடைக்குமென்றர்த்தம்; ஆகையால் அந்த ஶ்ருதிக்கும் விரோதமில்லை என்று ஸித்தாந்தம். உஎச.

ஸூ - உஎரு. ஶ்ரேஷ்ட்ஶ்.

(ஶ-ஶ்ரா-வ்யா.) ஶ்ரேஷ்ட்ஶ்ச - ஶ்ரேஷ்ட்டப்ராணனென்ற ப்ராண வாயுவும்(உத்பத்தியையுடையது.) உஎரு.

கயி-சுஜ. ஸூ - உஎசு. ந வாயுக்ரியெ ப்ருத²கு³பதே³ஶாத்.

(ஶ-ஶ்ரா வ்யா.) ப்ருத²கு³பதே³ஶாத் - (வாயுவைக்காட்டிலும்) வேறாகச்சொல்லுகையாலே, வாயுக்ரியெ ந - (ப்ராணன்) கேவலம் வாயுவாகவும், கேவலம் க்ரியையாகவும் ஆகமாட்டாது. உஎசு.

(ஶ-ஶ்ரா-ஹா.)ப்ராணனென்பது வாயுவா, அல்லது வாயுவின்க்ரியாவிசேஷமா, அல்லது - வாயுவிசேஷமா என்றுஸம்சயம். "ய: ப்ராண: ஸ வாயு:" என்று ப்ராணனென்பது வாயுவென்று சொல்லுகையாலே வாயுவே ப்ராணனென்று சிலரும், மற்ற வாயுக்களில் ப்ராணனென்கிற வ்யவஹாரமில்லாமையாலும், மூச்சுவாங்குவது விடுவதாகிற வாயுவின்க்ரியையையே ப்ராணனென்று வ்யவஹரிக்கையாலும் வாயுவின் க்ரியையே ப்ராணனென்று சிலரும்பூர்வபக்ஷித்தார்கள்—இதை நிரஸிக்கிறார். "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச... வாயு:" என்று பரமபுருஷனிடத்திலிருந்தும் ப்ராணனும்வாயுவும் உண்டாகிறதென்று வாயுவையும் ப்ராணனையும் வெவ்வேறாகச் சொல்லுகையாலே ப்ராணனென்பது கேவல வாயுவன்று. வாயுவின் க்ரியையாகலாமென்னில், மேல்தேஜஸ்ஸு முதலியவற்றைச்சொல்லி, அநந்தரம் அவற்றின் க்ரியையும் உண்டாகிறதென்று சொல்லாமையாலே தேஜஸ்ஸைச்சொன்னபோதே அவற்றின்க்ரியையும் ஸித்தமென்பதுபோல இங்கும் வாயுவைச்சொன்னமாத்ரமே போருமாயிருக்க அதின் க்ரியையான ப்ராணனைச் சொல்லவேண்டியதில்லை. இப்படியிருக்க இங்கு வேறாகச் சொன்னது ப்ராணன் வாயுவின் க்ரியையன்றென்பதை ஸ்தாபிக்கிறது. ஆகையா லவ்விரண்டுபக்ஷமுமன்று; உச்வாஸ நிச்வாஸ ரூபவ்யாபாரத்தையுடைய வாயு விசேஷமே ப்ராணனென்பது ஸித்தாந்தம். உஎசு.

ஸூ-உஎஎ. சக்ஷுராதி³வத்து தத்ஸஹஶிஷ்ட்யாதி³ப்⁴ய:.

(மூ-வ்யா.) தத்வ்யபதேசாத் - அந்த நயநேந்த்ரியம் முதலான வற்றோடுகூட சொல்லியிருக்கையாலே, சக்ஷுராதிவத் - (ப்ராணனும்) நயநேந்த்ரியம் முதலானவைகளைப்போலே (ஜீவனுக்குக்காரணம்) • உஎஎ.

(ரா-வ்யா.) தத்வ்யபதேசாத்-அந்தசக்ஷுராதிகளுடன் சொல்லுகையாலே, சக்ஷுராதிவத் க-சக்ஷுராதிகளைப்போலே, (ப்ராணனும் ஜீவனுக்குபகரணம்.) உஎஎ

(மூ-ஹா.) மற்ற இந்த்ரியங்கள் ஜீவனுக்கு ஆட்பட்டிருப்பதுபோல் இந்தப்ராணனும் ஜீவனுக்கு ஆட்பட்டேயிருக்கும். அவைகள் ஜீவனுக்கு, ராஜாவுக்கு மற்ற பரிஜநங்களைப்போலிருக்கும். அவ்விந்த்ரியங்களுக்கெல்லாம் இந்த முக்ய ப்ராணன் ப்ரதாநமாகையால் ஜீவனுக்கு, ராஜாவுக்கு மந்த்ரியைப்போலிருக்கும். இது மற்ற இந்த்ரியங்களைப்போல் ஆட்பட்டிருக்குமோவென்னில்; உபநிஷத்துக்களில் அவற்றுடன்கூடவே இதையும் சொல்லியிருக்கிறது. எங்கும் கூடச்சொல்லப்படுகிற வஸ்துக்களிரண்டும் ஒரு தர்மத்தை யுடைத்தாயிருக்கு மாகையால், இந்த்ரியங்களைப்போல் ப்ராணனும் ஜீவனுக்கு ஆட்பட்டிருக்கு மென்று நிஸ்சயிக்கப் படுகிறது. உஎஎ.

(ரா-ஹா.) ஆனால் ப்ராணன், வாயுவைக்காட்டிலும் பின்னமாய் ஆகாசாதிகளைப்போல் வேறு பூதமாகுமோவென்னில், ஆகாது. ப்ராணனென்பது - பஞ்ச பூதங்களிலொன்றான வாயுவில் சேர்ந்ததே.அவ்வாயுவே, உச்வாஸ நிஸ்வாஸரூபக்ரியையை யுடைத்தாய் ஜீவனுக்கு சக்ஷுராதிஇந்த்ரியங்கள்போல உபகரணமாயிருக்கிறது. ப்ராணனுக்கும் உபகரணங்களாகிற மற்ற இந்த்ரியங்களுக்கும் நடந்தஸம்வாதத்தைச் சொல்லுகிற ப்ரகாணத்தில் ப்ராணனே இந்த்ரியங்களோடொக்கச் சொல்லுகையாலே இதுவும் ஜீவனுக்கு உபகரணமென்பது ஸித்தம். உஎஎ

ஸூ - உஎஅ. அகரணத்வாச்ச ந தோஷஸ்ததாஹி தர்சயதி.

(மூ-வ்யா.) அகரணத்வாச்ச-காரணமல்லாமையினால் நேரிடும், தோஷ:- தோஷமானது. ந - கிடையாது, ததா - அப்படியே, தர்சயதிஹி - வேதம் சொல்லுகிறதன்றோ. உஎஅ.

(ரா - வ்யா.) அகரணத்வாச்ச - ஜீவனுக்கு உபகாரம் செய்கையாகிற வ்யாபாரத்தை யுடைத்தாகாமையால், (உண்டான), தோஷ: - (ப்ராணன் ஜீவனுக்கு உபகரணமன்றென்கிற) தோஷம், ந - வாராது, ததாஹி - ஜீவனுக்கு ப்ராணன் உபகாரம் செய்கிறதென்பதை, தர்சயதி - வேதம் சொல்லுகிறது. உஎஅ

(மூ-ஹா.) எந்த வஸ்து எவ்விதத்தினாலாவது ஜீவனுடைய போகத்துக்குஸாதகமாகிறதோ, அவ்வஸ்துவே ஜீவனுக்குக் கரணமாகிறது. த்வக் ஸ்பர்சங்களையும், சக்ஷுஸ்ஸு ரூபாதிகளையும், ஸ்ரோத்ரம், சப்தத்தையும், ஜிஹ்வை ரஸத்தையும், க்ராணம் கந்தத்தையும் அறிகைக்கு ஸாதகங்களாயிருந்து அதினாலுண்டான ஸுகத்தை ஜீவனுக்கு விளைக்கின்றன. பாதம் ஸஞ்சரிக்கைக்கும், பாணி ஒன்றை எடுக்கைக்கும், வாக்கு சப்தத்தைச் சொல்லுகைக்கும், பாயு மலத்தை விடுகைக்கும், உபஸ்த்தம் ஸ்த்ரீபுருஷர்களுடைய சேர்த்தியினாலுண்டான ஸுகத்துக்கும், மாநஸ வஸ்துக்களை நினைக்கைக்கும் காரணமாயிருந்து ஜீவனுக்கு அதினாலுண்டான போ

கத்தை விளக்கின்றன. ஜீவனுடைய போகத்துக்கு இவையொழிய வேறொருவி ஷயமில்லாமையால், இந்த்ரியங்களைக் காட்டிலும் அதிகமாக ப்ராணனென்றொரு உபகரணம் அங்கீகரிப்பதில் ப்ரயோஜநமில்லை. ஆகையால் ப்ராணன் ஜீவனுக்கு உபகரணமாகமாட்டாதென்கிற சங்கையைப் பரிஹரிக்கிறார்.—ப்ராணன் ஜ்ஞாநத்துக்கும் கர்மத்துக்கும் ஸாதநமாயிருந்து ஜீவனுடையபோகத்துக்கு உபகரணமாகாவிடிலும், ப்ராணனுள்ளவளவுமே மற்ற இந்த்ரியங்கள் தங்கள் தங்கள் கார்யங்களை ஸாதிக்கின்றன. ப்ராணன் கிளம்பிப்போனால் ஒரு இந்த்ரியமும் ஒரு காரியமும் செய்யாது. மேலும் ஒரு இந்த்ரியம்போனால் அதினுடைய கார்யமே நின்றுவிடும். ப்ராணன்போனால் எல்லாக்காரியங்களும் நின்றுவிடும். சரீரமும் அழிந்துவிடும், இப்படி சரீரதாரணத்துக்கு ப்ராணன் முக்யமானதாகையால், மற்ற இந்த்ரியங்களைப் போல் ஜீவனுக்கு உபகரணமாகையேயன்றிக்கே அவற்றைக்காட்டிலும் முக்யமான உபகரணமாயிருக்கும். "யஸ்மிந்நுத்க்ராந்தே இதம் ஶரீரம் பாபிஷ்டதரமிவ த்ருஶ்யதே" எது வெளிக்கிளம்பினால் இந்த சரீரம் விகாரமாய்க் காண்கிறதோ வென்று உபநிஷத்தும் இவ்வார்த்தையேசொல்லி இதுக்கு உபகரணத்வத்தை ஸ்தாபிக்கிறது. ௨௭அ.

(ஶா-ஸா.) சக்ஷுராதிகள் ஜீவனுக்கு ஜ்ஞாநத்தையுண்டாக்குகிறது. வாகாதிகள் அவனுக்கு சப்தத்தை உச்சரித்தல் கமனம்செய்தல் முதலிய வ்யாபாரங்களைச்செய்விக்கிறது. அதுபோல ப்ராணன் ஆத்மாவுக்கு ஒரு ப்ரயோஜநத்தையும் செய்யாமையால் இது உபகரணமாக மாட்டாதென்னில், ஜீவனுக்கு உபகரணங்களாகிய சரீரமும் இந்த்ரியமும் ப்ராணவாயுவினாலேயே தரித்திருக்கிறது; ப்ராணன் இல்லாவிடில் சரீரமும் இந்த்ரியமும் நசித்துவிடும்; ஆகையால் அவைகளைக்காட்டிலும் ப்ராணன் ஆத்மாவுக்கு விசேஷமான உபகாரத்தைச் செய்கையால் இது உபகரணமாகக் குறையில்லை. 'யஸ்மிந்நுத்க்ராந்த இதம் ஶரீரம் பாபிஷ்டதரமிவ த்ருஶ்யதே' என்று எது எழுந்துபோனால் சரீரம் விகாரத்தை யடைகிறதோவென்று ப்ராணனே சரீரதாரகமாக வேதத்திலும் சொல்லிற்று. ௨௭அ.

ஸூ-௨௭௯. பஞ்சவ்ருத்திர்மநோவத் வ்யபதிஶ்யதே.

(ஶ-வ்ரு.) மநோவத் - மநஸ்ஸைப்போல், பஞ்சவ்ருத்தி: - ஐந்துவ்யாபாரங்களை யுடைத்தானதாக, வ்யபதிஶ்யதே - சொல்லப்படுகிறது. ௨௭௯.

(ஶா-வ்ரு.) பஞ்சவ்ருத்தி: - ஐந்துவிதமான வ்யாபாரங்களையுடைய ப்ராணனே, மநோவத் - மநஸ்ஸைப்போலே, வ்யபதிஶ்யதே - (ஐந்துவிதமாகச்) சொல்லப்படுகிறது. ௨௭௯.

(ஶ-ஸா.) மநஸ்ஸானது எப்படி காமமென்றும் ஸங்கல்பமென்றும் அநேகவிதமான வ்யாபாரங்களினால் ஜீவனுக்கு போகஸாதகமாகிறதோ அப்படியே ப்ராணனும் ப்ராண அபாந வ்யாந உதாந ஸமாநங்களென்கிற ஐந்து வ்யாபாரங்களினால் ஜீவனுக்கு அப்யந்தரோபகாரகங்களாயிருக்கின்றனவென்று உபநிஷத்துக்களில் சொல்லப்படுகிறது. ப்ராணனென்பது மூச்சை வெளியில்விடுகைக்கும், அபாநமென்பது மூச்சை இழுக்கை முதலானவற்றுக்கும், வ்யாநம் தைர்யமாக ஒரு கார்யம் செய்கைக்கும், உதாநம் மேலே கிளம்புகைக்கும், ஸமாநம் சரீரமெங்கும் வ்யாபித்து அந்த ரஸத்தை எல்லாவிடங்களிலும் அடைவிப்பிக்கைக்கும் ஸாதகமாயி

ருக்கையால் இதில்லாவிடில் இக்காரியங்கள் கடவாமையால் சரீரம் தரிப்பதரிதாகையால் இதுவே ஜீவனுக்கு முக்யமான உபகரணம். ௨௭௧.

(ர-ஹா.) அபானம் வ்யானம் முதலிய வாயுக்களும் இந்த ப்ராணவாயுவிலேயே சேர்ந்தது. இதக்கு, ப்ராணனம், அபானனம், வ்யானனம், ஸமானனம், உதானனம், அதாவது-மூச்சைவிடுதல், இழுத்தல், ஸ்தம்பித்தல், சரீரமெங்கும் பரவுதல், மேற்கிளம்பல்என்கிற ஐந்துவிதமான வ்யாபாரங்களுண்டு. அவற்றில் ஒவ்வொரு வ்யாபாரத்தையடையும்போது ஒவ்வொருநாமத்தை யடைகிறது. இதற்குத்ருஷ்டாந்தம்—மநஸ்ஸு ஒன்றேயாகிலும் அது ஒவ்வொரு விகாரத்தை யடையும்போது காமம், ஸங்கல்பம், இத்யாதி நாமங்களை யடைகிறது. அதுபோலவே இங்கும். ௨௭௧.

௩யி-௩௫. ஸூ-௨௮௦. ௩ணு௵.

(ஸ-ர-வ்ரு.) ௩ணு௵வ - (ப்ராணன்) அணுவாயுமாகிறது. ௨௮௦.

(ஸ-ஹா.) மற்ற இந்த்ரியங்களைப்போல் ப்ராணனும் பரமாணுவைப்போல் அணுவும் ஆகாசத்தைப்போல் விபுவுமன்றிக்கே சரீரத்தளவாய், பிறர் காணத்தக்க ரூபமற்றதாயிருக்கும். ௨௮௦

(ர-ஹா.) இந்த ப்ராணன் அநந்தம், அதாவது அவதியற்றது என்று சொல்லுகையாலே இது விபுவென்று சிலர் பூர்வபக்ஷித்தார்கள். — "வ்ராணோ நமூக்ராமதி" என்று ஜீவன் சரீரத்தில் நின்றும் புறப்படும்போது ப்ராணனும் புறப்படுகிறதென்று சொல்லுகையாலே விபுவானால் புறப்படுகை கூடாமையால் ப்ராணன் அணுஸ்வரூபமென்பது ஸித்தாந்தம். ௨௮௦.

௩யி-௩௬. ஸூ-௨௮௧. ஜ்யோதிராத்யதிஷ்டாநம் தஸாமநநாத் வ்ராணவதா ஸஜ்ஜாத்.

(ஸ-வ்ரு.) தஸாமநநாத் - அப்படியே வேதத்தில் சொல்லுகையாலே, ஜ்யோதிராத்யதிஷ்டாநம் - அக்நிமுதலானவற்றுக்கு அதிஷ்டாநதேவதைகளினால் அதிஷ்டிக்கப்பட்டதாய்க்கொண்டு (இந்த்ரியங்கள் தங்கள் தங்கள் கார்யங்களைச் செய்கின்றன.)

(ஸ-வ்ரு.) ஸஜ்ஜாத் - வேதவாக்யத்தினால், வ்ராணவதா - ஜீவனோடே, (இந்த்ரியங்களுக்கு ஸம்பந்தம் சொல்லப்படுகிறது.) ௨௮௧.

(ரா-வ்ரு.) தஸாமநநாத் - அந்த பரமாத்மாவினது ஸங்கல்பத்தினால், வ்ராணவதா - ப்ராணனுக்கு அதிஷ்டாதாவான ஜீவனோடுகூட, ஜ்யோதிராத்யதிஷ்டாநம் - அக்ந்யாதிகளுக்கும் இந்த்ரியாதிஷ்டானம், (உண்டு), ஸஜ்ஜாத் - வேதவாக்யத்தினால், (இவ்வர்த்தம் நிஸ்சயிக்கப்படுகிறது.) ௨௮௧.

(ஸ-ஹா.) இந்த பாஷ்யத்துக்கு இது இரண்டு ஸூத்ரமாயிருக்கிறது. சக்ஷுஸ்ஸு முதலான இந்த்ரியங்கள் தங்கள் தங்கள் ஸாமர்த்யத்தினால் பார்க்கை கேட்கை முதலான கார்யங்களைச் செய்கின்றனவா, அல்லது - ஒரு தேவதையினால் ஆவேசிக்கப்பட்டு அத்தேவதை எவ அதின் மஹிமையினால் செய்கின்றனவா வென்

னில்; தேவதை இந்த்ரியங்களை ஆவேசித்து எவக் கார்யம் நடக்குமாகில், அதினு லுண்டான ஸுகதுக்கங்கள் அத்தேவதைக்கு உண்டாகவேண்டிவரும், ஜீவனுக்கு இல்லாமல் போய்விடும் ஆகையால் இந்த்ரியங்கள் தங்கள் ஸாமர்த்தியத்தினாலே யே கார்யம்செய்து தங்களுக்கு ஸ்வாமியாகிய ஜீவனுக்கு ஸுகதுக்கங்களையுண்டா க்குகின்றனவென்று பூர்வபக்ஷி சொன்னான். உபநிஷத்துக்களில் "அக்நிர்வாக்பூத்வா முகம் ப்ராவிசத்" என்று தொடங்கி அக்நிவாகிந்த்ரியமாய்க்கொண்டு, அதா வது வாகிந்திரியத்துக்கு அதிஷ்டாதாவாய்க்கொண்டு முகத்தில் ப்ரவேசித்தது என்று இம்மாதிரி ஸகலேந்த்ரியங்களுக்கும் ஒவ்வொரு அதிஷ்டாந தேவதை யைச் சொல்லுகையாலே, இந்த்ரியங்கள் அக்நி முதலிய அதிஷ்டாந தேவதைக ளினு லேவப்பட்டதாய்க்கொண்டே கார்யம் செய்கின்றன. இந்த்ரியங்களுக்கே கார்யம் செய்ய சக்திஉண்டான போதிலும், தேசாந்தரம் போகவல்ல வண்டி எரு துகளினு லிழுக்கப்பட்டே எப்படி போகிறதோ; அப்படியே தேவதையினு லதிஷ் ட்டிக்கப்பட்டே காரியம் செய்கின்றன என்று ஸித்தாந்தம்.

(ஶ்ரு-ஹா.) இந்த்ரியங்களுக்கு அக்நி முதலானவர்கள் அதிஷ்டாதாக்களா கில் அதினுலுண்டான ஸுகதுக்கங்களை அவர்களே யடைவார்களென்கிற சங்கை க்குஸமாதானம்—'அத யோவேதேதம் ஜிக்ராணீதி ஸ ஆத்மா கந்தாய க்ராணம்' இத்யாதி உபநிஷத்துக்கள், இந்த்ரியங்களின் செயலினுலுண்டான ஸுகதுக்கங் கள் ஜீவனுக்கேயுள்ளதென்று சொல்லுகிறது. மேலும், ஒவ்வொரு இந்த்ரியத்துக்கு மொவ்வொரு தேவதையாய் அநேக தேவதைகளுண்டாகையால் அவையெல்லா வற்றுக்கும் போக்த்ருத்வம் கூடாமையால் ஒரு ஜீவனுக்கே அதை யொப்புக்கொ ள்ளவேணும். உஅக.

(ரா-ஹா) "யோ(அ)க்நௌ திஷ்டந் அக்நிமந்தரோ யமயதி" என்று பரமாத்மா அக்நி முதலியவற்றிலிருந்து அவ்வவகார்யங்களில் நியமிக்கிறுனென்று சொல்லு கையாலே, ஜீவனும் அக்ந்யாதிகளும் பரமாத்ம ஸங்கல்பத்தினுலேயே இந்த்ரியங்க ளுக்கு அதிஷ்டாந மாகின்றனவென்று நிஶ்சயிக்கப்படுகிறது. ஜீவனும் அக்ந் யாதி தேவதைகளும் இந்த்ரியங்களுக்கு அதிஷ்டாநமாம்போது பரமாத்மாவின் நியமநத்தினுலாகிறுர்களல்லது தாங்களே ஸ்வதந்த்ராய்க்கொண்டு இந்த்ரியங்களை அதிஷ்டிக்க சக்தரல்லரென்று தாத்பர்யம். உஅக.

ஸூ-உஅஉ. தஸ்ய ச நித்யத்வாத்.

(ஶ்ரு-வ்ய.) தஸ்ய-அந்த போக்த்ருத்வத்துக்கு, நித்யத்வாத் - (ஜீவ னேடு) எப்போதும் ஸம்பந்தமுண்டாகையால், (ஜீவனேபோக்தா). உஅஉ.

(ரா-வ்ய-ஹா.) தஸ்ய ச - அந்த பரமாத்மநியமநத்துக்கும், நித்யத்வாத் - நித்யத்வமுண்டாகையாலே, (பரமாத்மா இவற்றை நியமிப்பது அவனுக்கு ஸ்வபாவஸித்தமாகையாலே மற்ற கார்யங்களும் அவன் நியமநத் தினுலேயே நடக்கிறதென்பது ஸித்தமென்று கருத்து) உஅஉ.

(ஶ்ரு-ஹா.) ஜீவனுடைய புண்யபாபங்களினுல் அவனுக்கு ஸுகதுக்காநுபவார் த்தமாக ஏற்பட்ட சரீரத்திலுள்ள இந்த்ரியங்களின் செயல்கள் அவனுக்கே ஸுக துக்கங்களை விளைக்கின்றன. இந்த்ரியங்களை தேவதைகள் ஆவேசித்து எவுவதும், வண்டியோட்டுகிற வண்டிக்காரன் செயல்போன்றனவாயிருக்கும். ஜீவன் இருக் கும்போதுகூட இருந்தும் வெளிக்கிளம்பி லோகாந்தரம் சரீராந்தரம் போகும்போ

.தும் கூடவே போகுமவைகளாகையால் இந்த்ரியங்கள் ஜீவனுக்கே எப்போதும் கரணமாயிருந்து போகத்தை விளைக்கும். உஅஉ.

சுயி-சுசா ஸூ உஅக. தஇந்த்ரியாணி தத்வ்யபதேசாத் .

அந்யத்ர ஶ்ரேஷ்டாத்.

(ஶ-வ்.) தத்வ்யபதேசாத் - அப்படி (ப்ராணனைக்காட்டிலும் வேறாகச்) சொல்லுகையினால், ஶ்ரேஷ்டாதந்யத்ர-முக்யப்ராணனைக் காட்டிலும் வேறாய், தே-அந்தசக்ஷுராதிகளே, இந்த்ரியாணி-இந்த்ரியங்கள் உஅக

(ரா-வ்.) ஶ்ரேஷ்டாத் - ஶ்ரேஷ்டமான ப்ராணவாயுவைக் காட்டிலும், அந்யத்ர - வேறான இந்த்ரியங்களிலேயே, தத்வ்யபதேசாத் - இந்த்ரியவ்யவஹாரம் காண்கையாலே, தே - ப்ராணவாயுவைக்காட்டிலும் பிந்நமானவையே, இந்த்ரியாணி - இந்த்ரியங்கள். உஅக

(ஶ-ஹா.) இந்த்ரியங்கள், ப்ராணாபாநாதிகளைப்போல் முக்யப்ராணனுடைய அவஸ்த்தாபேதமா, அல்லது வேறு தத்வமாவென்கிற சங்கையில். இந்த்ரியங்களையும் முக்ய ப்ராணனையும் "ப்ராணன்" என்று ஒருசப்தத்தினால் சொல்லுகையாலே அவையும் முக்யப்ராணனிற் சேர்ந்தவையே, வேறு தத்வமன்று என்றும் பூர்வபக்ஷ. "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரியாணி ச" பரமாத்மாவில் நின்றும் ப்ராணன் மநஸ்ஸு இந்த்ரியங்கள் உண்டாயிற்றின என்று முக்ய ப்ராணனைக் காட்டிலும் வேறாக இந்த்ரியங்களைச் சொல்லுகையாலே இந்த்ரியங்கள் ப்ராணனைக்காட்டிலும் வேறு தத்வங்கள். இந்த்ரியங்களைக்காட்டிலும் மநஸ்ஸை வேறாக இவ்வாக்யத்தில் சொல்லியிருந்தபோதிலும் மற்றும் அநேக இடங்களில் மநஸ்ஸைப் பதினோராவது இந்த்ரியமாகச் சேர்த்திருக்கிறது. ப்ராணனை அப்படி யெங்கும் சேர்க்கவில்லை. இந்த்ரியங்களை ப்ராணனென்று சொல்லுவது - ப்ராணனுண்டான போதே அவைகள் கார்யகாரிகளாய் அதில்லாதபோது அல்லாதவைளாயிருக்கையாலே அவையெல்லாம் ப்ராணனுக்குக்கீழ்ப்பட்டதென்ற அர்த்தத்தைக்கொண்டு ப்ராணனென்று சொல்லப்படுகின்றன என்று ஸித்தாந்தம். உஅக

(ரா-ஹா.) ப்ராணனென்று சொல்லப்பட்டவை யெல்லாம் இந்த்ரியந்தானோ, அவற்றில் சிலதே இந்த்ரியமா என்று ஸம்சயம். ப்ராணனென்கிற சப்தமெல்லாம் ஏகரூபமாகையாலே அந்தசப்தத்தினாற் சொல்லப்பட்ட சக்ஷுராதிகளும் வாகாதிகளும் மநஸ்ஸும் முக்யப்ராணனுமாகிய இவையெல்லாம் இந்த்ரியங்களென்று பூர்வபக்ஷம்.—ப்ராணவாயுவைவிட்டு மற்ற சக்ஷுராதிகளிலேயே இந்த்ரிய வ்யவஹாரமுண்டாகையாலும், இந்த்ரியங்கள் பதினொன்று என்று கணக்கிட்டிருக்கையாலும் ப்ராணவாயுவுக்கு இந்த்ரியமென்கிற பேரில்லையென்று ஸித்தாந்தம்.உஅக.

ஸூ-உஅச. பேதஶ்ருதே: வைலக்ஷண்யாச்ச.

(ஶ-வ்.) பேதஶ்ருதே: - (வேதத்தில் ப்ராணனை இந்த்ரியங்களைக் காட்டிலும்) வேறாகச் சொல்லுகையாலும், (ப்ராணன் இந்த்ரியங்களைக் காட்டிலும் வேறு.)

(ஶ-ஹா.) இந்த பாஷ்யத்துக்கு இது இரண்டு ஸூத்ரம். வேதங்களில் இவ்விடமேயன்றிக்கே மற்று மனேக இடங்களிலும் இந்த்ரியங்களைக்காட்டில் ப்ராணனை வேறாகச்சொல்லுகையாலேயும் ப்ராணன் இந்த்ரியமன்று.

(ஶ்ரு-ஹா) “வைலக்ஷண்யாச்ச” இந்த்ரியங்களைக்காட்டிலும் ப்ராணன். விலக்ஷண மாகையாலும் ப்ராணன் இந்த்ரியமன்று. அதாவது - ப்ராணன் சரீரத்துக்கு தாரகம், இந்த்ரியங்க ளப்படியல்ல. இந்த்ரியங்கள் ஜ்ஞாநத்துக்கு ஸாதகங்கள். ப்ராணனப்படிப்பட்டதல்ல. உறங்கும்போது இந்த்ரியங்களுறங்கிவிடும்; ப்ராணன் மாத்திரம் அப்போதும் தன் கார்யத்தைச் செய்யும். இம்மாதிரி அனேக பேதங்களுண்டாகையால் ப்ராணன் இந்த்ரியமன்று. உ௪௪.

(ஶ்ரீ-ப்ர-ஹா.) ஹேதுஶ்ருதேः-(“ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந ஸ்ஸர்வேந்த்ரியாணி ச” என்று இந்த்ரியங்களையும் ப்ராணனையும்) வெவ்வேறாகச் சொல்லுகையாலும், வைலக்ஷண்யாச்ச - (உறக்கத்தி லிந்த்ரியங்களொழிந்தாலும் ப்ராணனிருக்கையாலே இந்த்ரியவ்யாபாரங்களைக் காட்டிலும் ப்ராணனுடைய வ்யாபாரம்) விலக்ஷணமாகையாலும், (ப்ராணன் இந்த்ரியங்களைக்காட்டிலும் வேறு). உ௪௪.

௬யி-௬௮. ஸூ-உ௪௫. ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்திஸ்து த்ரிவ்ருத்குர்வத உபதேஶாத்.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) த்ரிவ்ருத்குர்வதः - த்ரிவ்ருத்கரணம் பண்ணுகிறவனுக்கே, உபதேஶாத் - நாமரூபங்களைப்பண்ணுகை சொல்லுகையாலே, ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்திः - நாமரூபங்களைச் செய்கை (வ்யஷ்டிஸ்ருஷ்டி) (பரமாத்மாவினாலேயே செய்யப்பட்டது.) உ௪௫.

(ஶ்ரு-ப்ர-ஹா.) ஸமஷ்டிஸ்ருஷ்டியென்றும் வ்யஷ்டி ஸ்ருஷ்டியென்றும் ஸ்ருஷ்டி இரண்டுவிதம். ப்ரக்ருதியில் நின்றும் மஹத் அஹங்காரம் பஞ்சதந்மாத்ரை ஆகாசாதி மஹாபூதங்கள் இவைகளை ஸ்ருஷ்டிக்கை ஸமஷ்டிஸ்ருஷ்டி. அண்டத்தினுள்ள தேவமநுஷ்யாதிகளை ஸ்ருஷ்டிக்கை வ்யஷ்டி ஸ்ருஷ்டி இதுவரையில் ஸமஷ்டி ஸ்ருஷ்டியைப்பரமாத்மா செய்கிறானென்று சொல்லிற்று. இதில் வ்யஷ்டிஸ்ருஷ்டியும பரமாத்மாவே செய்கிறானென்றுசொல்லுகிறது.—“அநேந ஜீவ நாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி” என்று, நாமரூபங்களை (வ்யஷ்டி ஸ்ருஷ்டியை)ச்செய்கிறேன். அதற்காகப் பஞ்சபூதங்களையும் பஞ்சீகரணம் பண்ணுகிறேனென்று சொல்லுகையாலே பஞ்சீகரணம் செய்தவனும் ஜகத் ஸ்ருஷ்டி செய்தவனும் ஒருவனே என்று தோற்றுகிறது. இங்கு த்ரிவ்ருத்கரணம் சொன்னது பஞ்சீகரணத்திற்கும் உபலக்ஷணம். பஞ்சீகரணம்செய்தவன் யாரென்னில், பஞ்சபூதங்களை ஸ்ருஷ்டித்தபின் அவைகள் ஒரு கார்யத்தைச்செய்ய யோக்யதையற்றிருந்ததைக்கண்டு, அநந்தரம் பஞ்சீகரணம் செய்து அதினால் அண்டத்தையும் அதில் ப்ரஹ்மாவையும் ஸ்ருஷ்டித்தான் பரமபுருஷன், ஆகையால் அந்த பரமபுருஷனே ஜீவனான ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய்க்கொண்டு ஜகத்தை ஸ்ருஷ்டித்தானென்று ஸித்தாந்தம். உ௪௫.

ஸூ உ௪௬. மாம்ஸாதி பௌமம் யதாஶப்தமிதரயோஶ்ச.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) மாம்ஸாதி-மாம்ஸம் முதலானது, பௌமம் - பூமியினாலே வ்ருத்தியடைவிக்கப்பட்டது. இதரயோஶ்ச-மற்ற இரண்டுக்கும், யதாஶ

ஸூ-("குலவீதாः"இத்யாதியாகச்சொன்ன) சப்தப்ரகாரம், (ஜலத்திலும் தேஜஸ்ஸிலும் வ்ருத்திசெய்விக்கப்படுகை என்று அறிக.) உஅசு

(ஶ்ரு-பா-ஸா) "அந்நமஶிதம் த்ரேதா விதீயதே" என்று தொடங்கி, புஜிக்கப்பட்ட அந்நத்தில் ஸ்தூலபாகம் மலமாகவும், மத்யமபாகம் மாம்ஸமாகவும், ஸூக்ஷ்மாம்சம் மநஸ்ஸாகவும், ஜலத்தில் ஸ்த்தூலாம்சம் மூத்ரமாகவும், மத்யமாம்சம் ரக்தமாகவும், ஸூக்ஷ்மாம்சம்ப்ராணனாகவும், தேஜஸ்ஸில் ஸ்த்தூலபாகம் எலும்பாகவும் மத்யமபாகம் மஜ்ஜையாகவும், ஸூக்ஷ்மபாகம் வாக்காகவும் பரிணமிக்கிறதென்று, ப்ரஹ்மாஸ்ருஷ்டித்த இந்த லோகத்திலுள்ள பதார்த்தங்களிலேயே த்ரிவ்ருத்கரணம் சொல்லுகையாலே இந்தத்ரிவ்ருத்கரணம் ப்ரஹ்மாவுக்குங்கூடுமாகையால் இந்த ஜகத்தையும் ப்ரஹ்மாவே ஸ்ருஷ்டிக்கலாமென்னில், இங்கு த்ரிவ்ருத்கரணம் சொல்லவில்லை த்ரிவ்ருத்கரணம் செய்த பதார்த்தங்கள் புஜித்தால் மூன்றுவிதமாகப் பரிணமிக்கின்றனவென்றுசொல்லிற்று. இதே த்ரிவ்ருத்கரணமானால் அந்நம் ஜலம் தேஜஸ்ஸு இவைகளை மூன்றாகப் பிரித்தபோது அவைகளில் ஸ்த்தூலபாகமெல்லாம்ப்ருதிவியாகவும், மத்யமபாகமெல்லாம்ஜலமாகவும், ஸூக்ஷ்மமாகமெல்லாம் தேஜோம்சமாகவும் ஆகவேண்டிவரும். அவ்வாக்யத்தில்ப்படிசொல்லாமல் மலமாம்ஸ மநஸ்ஸுக்களை அந்நமாகவும், இப்படியே மேலிரண்டையும் சொல்லுகையாலே இது த்ரிவ்ருத்கரணமன்றென்பது ஸித்தம். ஆகையால் இதற்கு முன்னதே த்ரிவ்ருத்கரணம்; அதுக்குக் கர்த்தாவான பரமபுருஷனே ஜகத்துக்கும் கர்த்தாவென்று ஸித்தம். உஅசு.

ஸூ-உஅஎ. வைஶேஷ்யாத்து தத்வாதஸ்தத்வாதः.

(ஶ்ரு-பா-வ்யா.) வைஶேஷ்யாத் - அதிகபாகமிருக்கையாலே, தத்வாதः- அப்படி சொல்லப்படுகிறது. உஅஎ.

(ஶ்ரு-பா-ஸா.) ஸமஸ்த வஸ்துக்களும் த்ரிவ்ருத்கரணமாயிருந்தால் ஸமஸ்தத்திலும் ப்ருதிவீ ஜலதேஜஸ்ஸுக்கள் மூன்றுமிருக்கையாலே, ஒன்றை ப்ருதிவியென்றும் ஒன்றை ஜலமென்றும் சொல்லுகிறவிதம் எப்படியென்னில், ப்ருதிவீ ஜல தேஜஸ்ஸுக்களை ஒவ்வொன்றையும் நாலு நாலு பாக மாக்கி அவற்றில் இரண்டிரண்டு பாகத்தை யெடுத்து ஒவ்வொரு பாகத்தை மற்ற இரண்டு தத்வங்களிலும் சேர்க்கை த்ரிவ்ருத்கரணமாவது. இப்படி செய்தால் ப்ருதிவியில் ப்ருதிவீ பாகம் இரண்டும் ஜலபாக மொன்றும் தேஜோபாக மொன்று மிருக்கிறது. இப்படியே மற்றவைகளிலும். இனி ப்ருதிவியில் அந்தபாக மதிகமாயிருக்கிறபடியாலே ப்ருதிவி யென்று சொல்லப்படும். இப்படியே மற்றவைகளிலும் கண்டுகொள்வது. இங்கு "தத்வாதः" என்று இரண்டாம்தரம் சொன்னது அத்யாயம்முடிந்ததென்று தெரிகைக்காக.உஅஎ.

இரண்டாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.

மூன்றாவது அத்யாயம் - முதல்பாதம்.

௩-௧-௧. ஸூ-உ௮௮. ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி
ஸம்பரிஷ்வக்த: ப்ரஶ்நநிரூபணாப்யாம்.

(பத - ராம - வ்ரு.) ததந்தரப்ரதிபத்தௌ - (ஜீவன்) சரீராந்தரத்தை யடையும்போது, ஸம்பரிஷ்வக்த: - (சரீரத்துக்குக் காரணங்களான பூதங்களுடைய ஸூக்ஷ்மாம்சங்களோடு) சூழப்பட்டவனாய், ரம்ஹதி-போகிறான். ப்ரஶ்நநிரூபணாப்யாம் - ப்ரஶ்நத்தினாலும், அதற்குத்தரம்சொன்ன வாக்யத்தினாலும் (இவ்வர்த்தமறியப்படுகிறது.) உ௮௮.

(ஸு-ஹா. இப்பொழுது ஜீவனுடைய வைராக்யோத்பத்திக்காக சாந்தோக்யத்தில் சொல்லப்பட்ட பஞ்சாக்நிவித்யை நிரூபிக்கப்படுகிறது. கீழ்பாதத்தில் ஜீவன் இந்த சரீரத்தைவிட்டுப் போம்போது ப்ராணன் மநஸ்ஸு இந்த்ரியங்கள் ஆகிய இவைகளும் அவனுடன்கூடவே போகின்றனவென்று சொல்லப்பட்டது. அதுபோல் இவனுடைய சரீரத்துக்கு உத்பாதகங்களான ஸூக்ஷ்மமாயுள்ள பஞ்சபூதங்களும் கூடவே போகிறதென்று இங்கு சொல்லப்படுகிறது. ஜீவனுக்கு இந்த்ரியாதிகளைப்போல் சரீரமும் ஸாதகமாகையால், "அவ்விந்த்ரியாதிகள் மாத்திரம் போகின்றன, இந்த சரீரஹேதுவான பஞ்சபூதங்களும் ஸூக்ஷ்மமாய்க்கொண்டு போகிறதில்லை" என்பதுசரியன்றாகையால் இவையும்கூடவே போகிறதென்று சொல்லப்படுகிறது. ஆகிலும், அவ்வாக்யத்தில் இந்த்ரியாதிகள் மாத்திரமே கூடப்போவதாகச் சொல்லப்பட்டது. பூதஸூக்ஷ்மங்கள் போவதாகச் சொல்லவில்லை. இதனால் இவையும் போகிறதா இல்லையாவென்று ஸம்சயமுதிக்கிறது.)

(ரா-ஹா. கீழ் இரண்டு அத்தியாயங்களினால் பரமாத்மஸ்வரூபத்தை அபாதிதமாக நிரூபித்து இந்த மூன்றாமத்யாயத்தினால் அந்த பரமாத்மப்ராப்திக்கு ஹேதுவான பக்த்யுபாயத்தை நிரூபிக்க ஆரம்பிக்கிறார். அதில் முன்னம், பக்திக்கு விஷயாந்தர வைராக்யம் காரணமாகையால் அந்தவைராக்யம் பிறக்கைக்காக இப்பாதத்தில் ஸம்ஸாரஸ்வரூபத்தை நிரூபிக்கிறார்.—ஜீவன் மரணமடைந்தபின், இங்குச்செய்த புண்யபாபகர்மங்களின் பலத்தை யநுபவிக்கைக்காக ஸ்வர்க்கநரகங்களுக்குப்போய் அங்கு அவ்வநுபவத்துக்குத் தகுதியான சரீரமெடுக்கிறான். அந்த சரீரங்களுக்கும் பூதஸூக்ஷ்மங்களே காரணம். அந்த காரணமாகிய பூதஸூக்ஷ்மங்கள் அந்தலோகங்களிலேயிருக்கிறதா, அல்லது, ஜீவனிந்த சரீரத்தைவிட்டுப் போம்போதுதனக்கு ஸ்வர்க்கநரகங்களில் சரீரமுண்டாகைக்காக இந்தசரீரத்தைக்கடைந்தெடுத்த பூதஸூக்ஷ்மங்களோடுகூடினவனாய்ப்போகிறானாவென்று ஸம்சயம்.—இவ்வுலகினிற்போல் லோகாந்தரங்களிலும் அவ்வசரீரங்களுக்குக் காரணமாகிய பூதஸூக்ஷ்மங்களுண்டாகையாலே அவற்றினாலேயே அங்குச்சரீரமுண்டாகிறது. அதற்காக இங்குள்ள பூதஸூக்ஷ்மங்களுடன் போகவேண்டியதில்லை என்று பூர்வபக்ஷம். சாந்தோக்யத்தில் பஞ்சாக்நிவித்யையில் ஶ்வேதகேதுவை ப்ரவாஹணரென்கிற ராஜா "வேத்த யதா பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி" ப்ருதிவ்யாதிகளோடுகூடின ஜலம், ஸ்வர்க்கலோகம், மேகம், பூமி, புருஷன் ஆகிய இந்த நாலு அக்நிகளிலும் ஹோமம்பண்ணப்பட்டு ஸ்த்ரீயாகிற ஐந்தாவதான அக்நியில் ஹோமம் செய்யும்போது நாமரூபங்களை யுடைத்தாய் புருஷனாகிறவிதம் தெரியுமாவென்று ப்ரஶ்நம் செய்ய, ஶ்வேதகேது அதையறியாமல் தன்தகப்பனாரான உத்தாலகனிடம் சென்று கேட்க, அவருமறியாமல் அந்த வரசனிடம்சென்று கேட்க

அப்போதந்த ருஷிக்கு அவ்வரசன் "இதி து பஞ்சம்யா மாஹுதாவாப: புருஷ வசஸோ பவந்தி" இவ்விதமாக ஸ்த்ரீயின் கர்ப்பத்தில் ப்ரவேசித்தலாகிற ஐந்தாவது ஆஹுதியில் ப்ருதிவ்யாதிகளோடுகூடிய ஜலம் புருஷனென்று வ்யவஹரிக்கப்படுகிறது என்று உத்தரம் சொன்னார். இங்கு ஜலம் என்று பூதஸூக்ஷ்மங்களோடு கூடின ஜீவனுக்குப்பெயர். இந்த ப்ரச்ந ப்ரதிவசநங்களில் ஜலம் என்று சொல்லப்பட்ட பூதஸூக்ஷ்மங்களோடே கூடினவனையே அக்நியாக நிரூபிக்கப்பட்ட ஸ்வர்க்கத்தில் ப்ரவேசிக்கிறானென்று சொல்லுகையாலே ஜீவன் சரீரத்தை விட்டுப் போம்போது பூத ஸூக்ஷ்மங்களோடு கூடினவனையே போகிறானென்று ஸித்தாந்தம். உ.அ.

ஸூ-உ௲. த்ர்யாத்மகத்வாத்து பூயஸ்த்வாத்.

(ஸ-ரா-வ்ய.) த்ர்யாத்மகத்வாத் - (ஜலம் த்ரிவ்ருத்கரணம் செய்யப்பட்டு) ப்ருதிவிஜலம் தேஜஸ்ஸு என்கிற த்ரிதயஸ்வரூபமாயிருக்கையாலே (ஜலபதத்திற்கு ப்ருதிவீஜலம் தேஜஸ்ஸுக்கள் அர்த்தம்.) பூயஸ்த்வாத் - (ஜலபாகம்) அதிகமாகையினாலே, (ஜலமென்றுசொல்லப்படுகிறது) உ.அக.

(ஸ-ஹா.) சரீரத்தில் ரக்தம் சவுர் முதலிய ஜலபாக மதிகமாயிருந்த போதிலும் அந்த பாகம் ப்ருதிவீபாகத்தைவிடக் குறைந்தேயிருக்கும். ஆயினும் ப்ருதிவி தவிர மற்ற பூதங்களைக்காட்டிலும் ஜலபாக மதிக மாகையால் அதையுட்கொண்டு சரீராரம்பகங்களானபூதஸூக்ஷ்மங்கள் ஜலமென்றசப்தத்தினால் சொல்லப்பட்டது.

(ரா-ஹா.) கீழ் ப்ரச்னோத்தர வாக்யங்களில் "ஆப:" என்று ஜலத்தையே சொல்லிற்று. இப்படியிருக்க ப்ருதிவீ ஜலதேஜஸ் ஸூக்ஷ்மங்களோடு போகிறதாகச் சொன்னவித மெப்படி சேருமென்னில், த்ரிவ்ருத்கரணம் பண்ணும்போது ஜலத்தில் ப்ருதிவீபாகமும் தேஜோபாகமும் சேர்ந்திருக்கையாலே அவற்றின் ஸூக்ஷ்மாம்சங்களோடும் கூடப்போகிறானென்பது ஸித்தம். சரீரத்தில் ரக்தம் முதலியவை ஜலபாகம். இந்த பாகமே சரீரத்தி லதிகமாகையால் அதுக்குக்காரணமாகிய பூதஸூக்ஷ்மங்களிலும் ஜலபாக மதிகமென்று அம்மூன்றையும் ஜலமென்று சொல்லிற்று. உ.அக

ஸூ-உகூ0. ப்ராணகதேச்ச.

(ஸ-ரா-வ்ய.) ப்ராணகதேச்ச - இந்த்ரியங்களுடைய கமநம்சொல்லுகையாலும், (ஜீவன் பூதஸூக்ஷ்மங்களோடே போகிறான்.) உகூ0

(ஸ-ரா-ஹா.) "தமுத்க்ராமந்தம் ப்ராணோ அநூத்க்ராமதி ப்ராணமநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி" என்று ஜீவன் சரீரத்தைவிட்டுப் புறப்படும்போது அவனுடன் ப்ராணனும், அத்துடன் இந்த்ரியங்களும் புறப்படுகிறதுகள் என்று சொல்லிற்று. இந்த்ரியங்களுக்கு ஆச்ரயமான ஸூக்ஷ்ம சரீரம் போகாமல் இந்த்ரியங்கள் போகாதாகையால் பூதஸூக்ஷ்மங்களும்கூடவே போகின்றன என்று ஒப்புக்கொள்ளவேணும். உகூ0.

ஸூ - உகூக. அக்ந்யாதிஷு கதிச்ருதேரிதி சேந்ந பாக்தத்வாத்.

(ஸ-ரா-வ்ய.) அக்ந்யாதிஷு கதிச்ருதே: - அக்நிமுதலியவற்றில் வாக்குமுதலிய இந்த்ரியங்களுக்கு கமநம்சொல்லுகையாலே, (இந்த்ரியங்கள் ஜீவனோடுபோகிறதில்லை), இதி சேத் - என்றால், பாக்தத்வாத் - (வாக்குமுதலிய பதங்கள்) அமுக்யங்களாகையாலே, ந-அப்படியன்று. உகூக.

(ஸ்ரு-ப்ர-ஸா.) "அக்நிம் வாகப்யேதி" என்று தொடங்கி ஜீவன் மரணமடைந்த பின் வாகிந்த்ரியம் அக்நியில் லயிக்கிறதென்று தொடங்கி ஒவ்வொரு இந்த்ரியமும் ஒவ்வொரு தேவதையில் லயிக்கிறதென்று சொல்லுகையாலே ஜீவனுடன் போகிற தென்பது எப்படி சேருமென்னில், அங்கு வாகிந்த்ரியமென்றால் வாகிந்த்ரியத்து அதிஷ்டாதாவான தேவதைக்குப்பேராய் அந்த தேவதை அக்நியில் லயிக்கிறது என்று சொல்லிற்று. இப்படியே மேலும் காண்க. அந்த வாக்யத்திலேயே "ஓஷதீர் லோமாநி வநஸ்பதீந் கேசா:" என்று மயிர் முதலானவை புருஷனுடைய மரணகாலத்தில் இவனைவிட்டுப் பிரிந்துபோய் ஓஷதிமுதலானவற்றை அடைகிற தென்று சொல்லிற்று. அவைகள் எப்படிப்போவதாகக் காணவில்லை. இங்கே பஸ்மமாயாவது மண்ணாயாவது ஆய்விடுகிறது. ஆகையால் அங்கு அவற்றின் அதிஷ்டானதேவதை போகிறதென்றே சொல்லவேணும். அதுபோல் விடங்களிலும் கண்டுகொள்க. ஆகையால் இந்த்ரியங்கள் ஜீவனோடு போகிறதென்பதில் பாதையில்லை.

ஸூ-௨௯௨, ப்ரதமேऽச்ரவணாதிதி சேந்ந தா ஏவ ஹ்யுபபத்தே:

(ஸூ-பா-வ்யா.) ப்ரதமே -(ஐந்து ஆஹுதியில்) முதலாவதான ஸ்வர்க்கமாகிற அக்நியிற்செய்யப்பட்ட ஆஹுதியில் (ஸ்வர்க்கப்ரவேசத்தில்), அச்ரவணாத் (ஜலத்துக்கு) ச்ரவணமில்லாமையாலே, (ஜீவனுடன் பூதஸூக்ஷ்மங்கள் போகிறதில்லை), இதி சேத் - என்றால், ந - அப்படியன்று. உபபத்தே: - ப்ரஶ்நோத்தராங்க ளுபபந்நமாகையாலே, தா ஏவ - "ஆப:" என்று சொல்லப்பட்ட ஜலமே, (அங்கும் சொல்லப்பட்டதென்று நிச்சயிக்கப்பட்டது.) ௨௯௨.

(ஸ்ரு-ஸா.) மேல் "ச்ரத்தை" யென்பது ஒரு ஜ்ஞாநவிசேஷம். அதை ஹோமம்செய்கிறார்களென்றே சொல்லிற்று. ஜலத்தைச் சொல்லவில்லையேயென்னில் அந்தச்ரத்தை ஜீவனிடத்திலுள்ளது. அதை ஜீவனைவிட்டுப் பிரித்தெடுத்து ஹோமம் செய்யமுடியாது. ஆகையால்ச்ரத்தையென்பதற்கு அங்கு ஜலமேயர்த்தமாகக் கொள்ளவேணும். ஆகில் ஜலபாகத்துக்கு ச்ரத்தை யென்ற பெயர் வருவானேனென்னில், ஜீவன்ச்ரத்தையோடு யஜ்ஞயாகாதிகளைப் பண்ணினால் அதினால் தேவாதி சரீரமுண்டாகையால், அதற்கு ச்ரத்தை காரணமாயிற்றென்று கார்யத்லத லக்ஷணையாகக் காரணவாசி சப்தத்தினால் சொல்லுகிறது. ஸிம்ஹம்போன்ற வீர்யமுடையவனைப்பார்த்து இவன் ஸிம்ஹம் என்று சொல்வது லோகப்ரஸித்தமாயிருக்கும். ௨௯௨.

(ப்ர - ஸா) "தஸ்மிந்நேதஸ்மிந் தேவா: ச்ரத்தாம் ஜுஹ்வதி" இந்த த்யுலோகத்தில் ப்ராணன்கள் ச்ரத்தையை ஹோமம் பண்ணுகிறதுகள். அதாவது— அதில் ப்ரவேசிப்பிக்கிறதுகள் என்று சொல்லிற்று. ச்ரத்தையாவது ஜீவன். இதனால் ஜீவனுக்கே ஸ்வர்க்கலோக ப்ரவேசம் சொல்லிற்று. பூதஸூக்ஷ்மங்களுக்குச் சொல்லவில்லையே யென்னில், "ஆப:" என்று சொல்லப்பட்ட ஜலத்தினுடைய ஐந்து ஆஹுதியின் விஷயமாகச்செய்த ப்ரஶ்நத்திற்கு உத்தரம் "தஸ்மிந்நேதஸ்மிந்" என்று கீழ்ச்சொன்ன வாக்யம். இவ்வாக்யத்திற்கு ப்ரஶ்நவாக்யாநுகுணமாக அர்த்தம் சொல்லவேணுமாகையால் உத்தரவாக்யத்திலுள்ள ச்ரத்தாபதத்திற்கு "ஆப:" என்ற பதத்தினாற் சொல்லப்பட்ட பூதஸூக்ஷ்மங்களே அர்த்தம் ஆகையால் முதலிலும் பூதஸூக்ஷ்மங்கள் சொல்லப்பட்டன. ௨௯௨.

ஸூ-௨௯௩. அஶ்ருதத்வாதிதி சேந்நேஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே:.

(ஸூ-பா-வ்ய.) அஶ்ருதத்வாத் - (ஜீவன்) கேட்கப்படாமையாலே (த்யுலோகாதிகளுக்கு ஜீவன்போகிறதில்லை), இதி சேத் - என்றால், இஷ்டாதிகாரிணாம் - (மேல்வாக்யத்தில்) யஜ்ஞம் முதலியவை செய்கிறவர்களுடைய, ப்ரதீதே: - ப்ரதீதியினாலே, ந - அப்படிசொல்லக்கூடாது ௨௯௩.

(ஸூ-ஹா.) அப்பு என்கிற ஜலபாகம் ஐந்தாவது ஆஹுதியில் புருஷாகாரத்தையடைகிறதென்று ஒப்புக்கொள்ளலாம். அத்துடன் சேர்ந்தே ஜீவன் போகிறானென்று எங்கும் சொல்லாமையால் அது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று என்கிற பூர்வபக்ஷத்துக்கு ஸமாதானம்—அக்நிஹோத்ர தர்சபூர்ணமாஸாதி கர்மங்களில் ஆஹவநீயாக்நியில் ஹோமம் செய்யப்படுகிற தயிர் பால் நெய் முதலியவை அதிஸூக்ஷ்மரூபங்களையடைந்து ஹோமம் செய்கிற யஜமானனுடைய சரீரத்தோடெய்ந்து சேர்த்திருக்கிறதுகள். பின்பு அந்த யஜமானன் மரித்தபின் அவனுடையசரீரத்தை இங்குள்ளவர்கள் “இவனுக்கு இந்த சரீரம் ஸ்வர்க்கலோகத்தில் ஸுகபோகத்துக்கு ஸாதநமாக ஆகக்கடவது” என்று மந்த்ரத்தைச்சொல்லி தஹநம்செய்கிறார்கள். அப்பொழுது அந்த யஜமாநனுடைய சரீரத்துடன் சேர்ந்திருந்த முன்கூறிய ஜலபாகமானது ஸ்வர்க்கலோகத்தில் அவனுக்கு ஸுகத்தை யுண்டுபண்ணுகைக்காக அந்த ஜீவாத்மாவுடனே சேர்ந்துபோய் ஸ்வர்க்கலோகத்தில் அவனுக்குச் சரீரமாகப் பரிணமித்து அவனுக்கு ஸுகத்தை உண்டுபண்ணுகிறதுகள். இப்படிச் சொல்லுகைக்குக்காரணம்—ஸ்வர்க்கத்தில் இந்த ஆஹுதி ஸோமராஜனாக ஆகிறதென்று, முன்கூறிய ஜலபாகத்துக்கு ஸோமராஜனாக ஆகுகையைச் சொல்லிற்று. அதன்பின் வாக்யசேஷத்தில், இஷ்டாபூர்த்தங்களைச்செய்த இந்தயஜமானன் தூமாதிமார்க்கமாக ஸ்வர்க்கலோகமடைந்து அங்கே ஸோமராஜனாயாகிறானென்று முன்சொல்லிய அர்த்தத்தை விவரித்தது. ஆஹுதி ஸோமராஜனாகுகையாவது, ஆநந்தகரமான சரீரமாகப் பரிணமிக்கை, யஜமானன் ஸோமராஜனாகுகையாவது, ஆநந்தகரமான சரீரத்தையுடையனாகை, இதனால், ஹோமம் செய்யப்பட்ட முற்கூறிய ஜலபாகமே இவனுக்கு ஸ்வர்க்கலோகத்தில் சரீரமாக ஆகிறதென்று தோற்றுகையால், அவை இங்கிருந்தே ஜீவனுடன் சேர்ந்தே ஸ்வர்க்கலோகம் போகிறதென்ற அர்த்தம் கிடைக்கிறது. ௨௯௩.

(ரா-ஹா.) கீழ்ப்ரஶ்நோத்தர வாக்யங்களில் “ஆப:” என்று சொல்லப்பட்ட ஜலமே த்யுலோகம் முதலியவற்றில் போகிறதென்று சொல்லிற்று. ஜீவன்போவதாகச் சொல்லவில்லை. ஆகையால் ஜீவன் மரணாநந்தரம் த்யுலோகாதிகளுக்குப் போகிறதில்லை என்று பூர்வபக்ஷம்—கீழ்வாக்யங்களில் ஜீவனைச் சொல்லாவிடினும், மேல், “அத ய இமே க்ராம இஷ்டாபூர்த்தே தத்தமித்யுபாஸதே” இத்யாதியால் யாகாதிகள் செய்கிறவனும் கோவில் குளம் தோப்பு முதலியவைகளை நிர்மிக்கிறவனும் தானம் செய்கிறவனும் த்யுலோகத்தை யடைகிறானென்று சொல்லுகையாலே, அவ்வர்த்தத்துக்கநுகுணமாக கீழ்வாக்யத்தில் “ஆப:” என்கிற பதத்திற்கு பூதஸூக்ஷ்மங்களோடுகூடின ஜீவனே அர்த்தமென்றங்கீகரித்து அவனுக்கே லோகாந்தரங்களில் ஸஞ்சாரம் சொல்லிற்றென்று ஸ்வீகரிக்க வேணுமென்று ஸித்தாந்தம். ௨௯௩.

ஸூ-௨௯௪. பாக்தம் வாநாத்மவித்த்வாத்ததா ஹி தர்ஶயதி.

(ஸூ-பா-ஸா) அநாத்மவித்த்வாத் - பரமாத்மஸ்வரூப மறியாதவனாகையாலே, (அவனை தேவர்கள் புஜிக்கிறார்களென்பது), பாக்தம் - கௌணம். ததா ஹி - அப்படியே, தர்ஶயதி - ஶ்ருதிசொல்லுகிறது.

(ஶ்ரு-பா.) ஆஹவநீயாக்நியில் ஹோமம் செய்யப்பட்ட பால் தயிர் முதலானவை ஸூக்ஷ்மரூபமாய்ச்சென்று ஸ்வர்க்கலோகத்தில் சரீரமாகப் பரிணமித்து யஜமானனுக்கு ஸுகத்தை விளைக்கின்றனவென்று கீழே சொன்னது சரியன்று. "தே வா ஸோமம் பக்ஷயந்தி" இங்கிருந்து போனவனை அங்குள்ள தேவர்கள் பக்ஷிக்கிறார்களென்று சொல்லியிருக்கிறது. அப்படி இவனை பக்ஷித்தால் இவனுக்கென்ன ஸுகமுண்டாகும்? புலி முதலியவை மநுஷ்யனைப் பிடுங்கித்தின்னும்போது அந்த மநுஷ்யனுக்கு ஒரு ஸுகத்தையும் காணோம். அவன் துக்கத்தையே அநுபவிக்கிறதாகக் காண்கிறோமென்கிற சங்கைக்கு ஸமாதானம்—அந்நம் என்றால் சோற்றுக்கே பெயரன்று, ஸுகபோகத்துக்கு ஸாதகமாகிய பெண்டாட்டி பிள்ளை தநம் வீடு சரீரம் வேலைக்காரன் முதலிய பரிஜநங்கள் இவை யெல்லாவற்றையும் அந்ந மென்கிற பதம் சொல்லும். பக்ஷிக்கிறார்களென்றால் புலி முதலியவற்றைப்போல் பிடுங்கித்தின்று விடுகிறார்களென்றே அர்த்த மன்று. இவனைப்பார்த்தும் தொட்டும் இவனிடத்தில் தங்களுக்குரிய வேலைகளைச்செய்வித்துக் கொண்டும் தாங்கள் ஸுகிக்கிறார்கள் என்றர்த்தம். ஆகையால் இங்கிருந்து போகிறவன் அங்குள்ள தேவர்களுக்கு வேலைக்காரனாயிருந்து அவர்களிட்டவேலையைச்செய்து அவர்களுக்கு ஆநந்தத்தை யுண்டுபண்ணுகையால் இவனை அந்நமென்றும் அங்குள்ளவர்கள் இவனை பக்ஷிக்கிறார்களென்றும் சொல்லுகிறது. அரசனுடைய வேலைக்காரன் அவனுக்கு வேலைசெய்தபோதிலும் தன்வீட்டிலகப்படாத அங்குள்ள சந்தநம் தாம்பூலம் முதலிய வஸ்துக்களைக்கொண்டு தானும் ஸுகத்தை யநுபவிப்பதுபோல், இந்த யஜமானனும் அவர்களுக்குத் தொழிலாளியா யிருந்தபோதிலும் தானும்ஸுகத்தை யநுபவிக்கிறான். இவன் பரமாத்மாவைக்குறித்து யாகம் செய்யாமல் கேவலம் இந்த்ராதிகளைக் குறித்தே செய்கையால் இவனை தேவர்கள் தங்களுக்குத் தொழிலாளியாக்கிக்கொள்ளுகிறார்கள். "யதா பஶுரேவம் ஸ தேவாநாம்" என்று வேதமே இவ்வர்த்தத்தை வெளியிடுகிறது. உகச.

(ஶா-பா.) "தேவாநாமந்நம் தம் தேவா பக்ஷயந்தி" என்று "ஸோம:" என்றுசொல்லப்பட்டவஸ்து தேவலோகத்திற்போய் தேவர்களுக்கு அந்நமாகிறது. அதை தேவர்கள் புஜிக்கிறார்கள் என்று சொல்லிற்று; ஜீவன் நித்யனாகையால் அவனை புஜிக்கக்கூடாதாகையால் கீழ் ஜீவனைச்சொல்லவில்லை என்று பூர்வபக்ஷம்.— "தேவாநாமந்நம்" என்றகீழ்வாக்யத்தில் தேவதைகளிவனை புஜிக்கிறார்களென்று சொல்லவில்லை. இந்த ஜீவன் பரமாத்மயாதாத்ம்ய மறியாதவனாகையால் இவனைக்கொண்டு அவர்கள் தங்கள் கார்யங்களைச் செய்வித்துக்கொள்ளுகிறார்களென்றே சொல்லிற்று. மற்றோரிடத்திலும் "யதா பஶுரேவம் ஸ தேவாநாம்" என்று பசுவைப்போல்தேவர்களுக்கு இந்த ஜீவன்உழைக்கிறானென்றேசொல்லிற்று ஆகையால் ஜீவனை இங்கு சொல்வதி லொருபாதகமில்லையென்று ஸித்தாந்தம். உகச.

கயி-எஎ, ஸூ-உகரு. க்ருதாத்யயே நுஶயவாந் த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் யதேதமநேவம் ச.

(ஸூ-பா-வ்.) க்ருதாத்யயே - முன்செய்த புண்யகர்மம் (ஸ்வர்க்காநுபவத்தினால்) நசித்தவளவில், அநுஶயவாந் - (ஜீவன்) அநுபவித்து மிகுந்த கர்மசேஷத்தை யுடையவனாய், (பூலோகத்திற்குத் திரும்புகிறான்). த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் - வேத வாக்யத்தினாலும் ஸ்ம்ருதி வாக்யத்தினாலும், (இவ்வர்த்தம் நிஶ்சயிக்கப்படுகிறது). யதேதம் - எவ்வழியினால் ஸ்வர்க்

கத்தை யடைகிருனே அவ்வழியினுலும், ஏவெதம் வா - வேறுவழியினுலும்.
(திரும்புகிருன்.) உகரு,

(ஸு-ரா-ஸா) புண்யம்செய்தவன் தேவலோகத்திற்குப்போய் புண்யபலமான ஸுகமநுபவித்துத் திரும்பும்போது எல்லாபுண்யத்தையும் ஸம்பூர்ணமாக அநுபவித்துத் திரும்புகிருனு, அல்லது கொஞ்சம் புண்யசேஷமுடையவனுகத் திரும்புகிருனு என்று ஸம்சயம். "வ்ருத்தாந்தகம் ஸீ்ணா:" என்று புண்யத்தைக் கடைசிவரையிலநுபவித்துத் திரும்புகிருனென்று சொல்லுகையாலே கொஞ்சமும் புண்ய சேஷமில்லாதவனுயே திரும்புகிருனென்று பூர்வபக்ஷம். "ரமணீயசரணா: அப்யாஸோ ஹ யத்தே ரமணீயாம் யோநிமாபத்யேரந்". என்று புண்யமுடையவன் உயர்ந்த ஜந்மத்தை யடைகிருனென்று வேதத்திலும், "ததஃபரிவ்ருத்தள கர்மபலசேஷேண ஜாதிம்" என்று அங்கிருந்து திரும்பும்போது புண்ய சேஷத்தினுல் ஜாதி ரூபம் முதலியவற்றில் உயர்ந்த பதவியை யடைகிருனென்று ஆபஸ்தம்பரும் சொல்லுகையாலே புண்யசேஷ முடையவனுயே திரும்புகிருன். "வ்ருத்தாந்தகம் ஸீ்ணா:" என்று கீழ்ச்சொன்னதற்கு எந்தபுண்யம் ஸ்வர்கத்தில் பலத்தைக் கொடுக்குமோ, அதைப்பூர்ணமாக அநுபவித்து என்று அர்த்தமாகையால் விரோதமில்லை. பூலோகத்திற்கு இறங்கும்போது, ஏறும்போது எவ்வழியால்ஏறினுனே அவ்வழியாகச சிலவிடங்களிலும் வேறுவழியாகச் சில விடங்களிலும் இழிகிருன். அதாவது சந்தரலோகத்திலிருந்து ஆகாசத்திலிழியும்போது போனவழியே இழிகிருன், வாய்வாதிகளிலிழியும்போது வேறுவழியாக இழிகிருன் என்று விஸ்தாரம். உகரு.

ஸூ உகசு சரணாதிதி கார்ஷ்ணாஜிநி: ஸுக்ருதலக்ஷணார்த்தா இதி

காஷ்ணாஜிநி:.

(ஸு-ரா வ்ரு.) சரணாத் - ஆசாரத்தைச்சொலலுகையாலே, (புண்யத்தைச்சொல்லவில்லை.) இதிசேத் - என்ருல், ந - அப்படியன்று, ஸுக்ருதலக்ஷணார்த்தா - (சரணபதம்) புணயத்திற்கும் உபலக்ஷகமாகிறது, இதி - எனறு, கார்ஷ்ணாஜிநி: - கார்ஷ்ணாஜிநி என்பவர் சொன்னுர் உகசு.

(ஸு-ரா-ஸா.) கீழ்சொன்ன "ரமணீயசரணா:" என்கிறவாக்யத்தில் சரணமென்று ஸந்த்யாவந்தனுதியான நல்ல ஆசாரததிற்குப்போய் நல்லொழுக்கமுடையவன் உயர்ந்தஜாதியாகிருனென்றே சொல்லிற்று; புண்யததைச சொல்லவில்லையென்னில், புண்யத்தையும் சொல்லவேணுமென்கிற அபிப்ராயத்தினுலேயே அங்கு நல்லொழுக்கத்தைச் சொல்லிற்று. ஆகையால் புண்யவானே உயர்ந்தவனுய்ப்பிறக்கிருனென்று கார்ஷ்ணாஜிநியென்பவர் சொன்னுர். உகசு.

ஸூ-உகஎ. ஆநர்த்தக்யமிதி சேந்ந ததபேக்ஷத்வாத்.

(ஸு-ரா-வ்ரு.) ஆநர்த்தக்யம் - ப்ரயோஜநமில்லாமை, (ப்ரஸங்கிக்கும்), இதிசேத் - என்ருல், ததபேக்ஷத்வாத் - (புணயமும்) ஆசாராபேக்ஷையுடையதாகையாலே, ந - வையர்த்யம் வாராது. உகஎ.

(ஸு-ரா-ஸா.) ஸந்த்யாவந்தனுதி நல்லொழுக்கத்தினுல் உயர்ந்தபதவி கிடையாவிட்டால் அவ்வாசாரம் வீணுய்விடுமேயென்னில், ஸந்த்யாவந்தனம் முதலிய நல்லொழுக்க மில்லாதவன் ஒருகர்மத்திற்கும் யோக்யதையற்றவனுகையால் அது வீணுகமாட்டாது- உகஎ.

ஸூ·உகூ அ· ஸாக்ருதது-ஷ்க்ருதே ஏவேதி து-பாதரி:.

(ஶ்ரீ-பா-வ்ரு.) ஸுக்ருதது-ஷ்க்ருதே ஏவ - புண்யபாபங்களே, (சரணசப்தத்தினுற் சொல்லப்பட்டது), இதி - என்று, பாதரி:- பாதரியென்பவர் சொன்னர், உகூஅ.

(ஶ்ரீ-பா-ஸா.) "ரமணீயசரணா:" "கபூயசரணா:" என்ற விடங்களில் சரணசப்தம் கர்மத்திற்குப்பேராய் புண்யபாபங்களைச் சொல்லுகையால அவையே உயர்வுதாழ்வுகளுக்குக் காரணமகளென்று அவ்வாக்யங்களிற் சொல்லிற்று என்று பாதரிசொன்னா. இதுவேஸித்தாந்தம்· உகூஅ.

கயி-௭௧. ஸூ உகூகூ. அநிஷ்டாதிகாரிணாமபி ச ஶ்ருதம்.

(ஶ்ரீ-பா-வ்ரு.) அநிஷ்டாதிகாரிணாம் அபி - யாகம் முதலிய புண்யகர்மங்களைச் செய்யாதவர்களுக்கும், ஶ்ருதம் - (சந்த்ரலோகப்ராப்தி) வேதத்திற் சொல்லப்பட்டது· உகூகூ.

(ஶ்ரீ-பா-ஸா.) பாபிகள் மரணமடைந்தபின் புண்யவான்களைப் போல் சந்த்ரலோகத்திற்குப் போகிறார்களா இல்லையா என்றால்,— "யேவைகேசாஸ்மாத்லோகாத்ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி" இங்கிருந்து மரித்துப்போகிறவர்களெல்லாம் சந்த்ரலோகத்திற்குப் போகிறார்களென்று சொல்லுகையாலே அவர்களும் போகிறார்களென்று பூர்வபக்ஷம். உகூகூ

ஸூ ௩௦௦· ஸம்யமநேத்வநுபூயேதரேஷாமாரோஹாவரோஹௌ தத்கதிதர்ஶநாத்.

(ஶ்ரீ - பா - வ்ரு.) தத்கதிதர்ஶநாத் - பாபிகளுக்கு யமலோககமநம் வேதவசநத்தில் காணுகையாலே, இதரேஷாம் - பாபிகளுக்கு, ஆரோஹாவரோஹௌ - சந்த்ரலோகத்திற்கு ஏறுகையும் அங்கிருந்து இறங்குகையும், ஸம்யமநே - யமனுடைய ஆஜ்ஞையில், அநுபூய - (நரகங்களை) அநுபவித்து, (அநந்தரமுண்டாகிறது.) ௩௦௦

(ஶ்ரீ-ஸா.) பாபம்செய்தவனும் ஸ்வர்க்கத்தையடைந்து ஸுகத்தை யநுபவித்தால் புண்யம் செய்தவனுக்கும் இவனுக்கும் ஒருபேதமில்லையாயிருக்க கஷ்டப்பட்டுப் புண்யம் என்செய்யவேணும்? அதற்காகப் பாபம்செய்தவன் ஸ்வர்க்கலோகம் போகிறானென்று சொல்லுகிறவர்களும்கூட அவனுக்கு அங்கே ஸுகாநுபவம் கிடையாதென்றே சொல்லவேணும். இப்படியாகில் இவன் ஸ்வர்க்கலோகம் போவதற்கு ஒருப்ரயோஜநமுமில்லை. ப்ரயோஜநமில்லாமல் அங்கேயேறுவது அநுசிதம். மரமேறுகிறவன் பழம்முதலியவை பறித்து அநுபவிக்கவேணுமென்றால் ஏறுகிறான். விழவேணுமென்றாவது, வெறுமனே யேறியிறங்கவேணுமென்றாவது ஏறமாட்டான் ஆகையால் பாபிக்கு ஸ்வர்க்கலோககமநம் சொல்வது அநுசிதம். ௩௦௦.

(ஶ்ரீ-ஸா·) ஆனால்பாபிகளுக்கும் புண்யவான்களுக்கும் விசேஷமென்னென்னில், "வைவஸ்வதம் ஸங்கமநம் ஜநாநாம்" என்று பாபிகளுக்கு யமலோகப்ராப்தி சொல்லுகையாலே முதல் யமலோகத்தில் பாபபலத்தையனுபவித்து அநந்தரம் சந்த்ரலோகம் போகிறார்கள் இதுவே இவர்களுக்கு விசேஷம். ௩௦௦.

ஸூ-கூ௦க. ஸ்மரந்தி ச.

(ஶ-ரா-வ்யா-ஸா) ஸ்மரந்தி ச - ("ஸர்வே ப்ரஹ்ம தேவஸம்யமநம் யாந்தி ச" என்று பாபிகளெல்லாரும் யமனுக்கு வசப்படுகிறார்களென்று) தர்ம சாஸ்த்ரங்களும் சொல்லுகிறதுகள். கூ௦க.

ஸூ-கூ௦உ. அபி ஸப்த.

(ஶ-ரா-வ்யா-ஸா.) ஸப்த அபி - (பாபிகள் அடையத்தக்க நரகங்கள்) ஏழு (என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.) கூ௦உ.

(ஶ-ரா-ஸா.) பாபம் செய்தவர்கள் ரௌரவம் முதலிய ஏழுவிதமான நரகங்களை யடைகிறதாகச் சொல்லியிருக்கையால், அவர்களுக்குச் சந்த்ரலோக ப்ராப்தி கிடையாது. கூ௦உ

ஸூ-கூ௦௩. தத்ராபி ச தத்வ்யாபாராதவிரோத:.

(ஶ-ரா-வ்யா.) தத்ர அபி - அந்த ஏழுநரகங்களிலும், தத்வ்யாபா ராத் - யமனுடைய ஆஜ்ஞை நடக்கையாலே, அவிரோத: - விரோத மில்லை. கூ௦௩.

(ஶ-ஸா.) பாபம்பண்ணினவர்கள் யமதண்டனையையடைந்து யமலோகத்தி லே வாஸம்செய்யவேண்டும். அதைவிட்டு சித்ரகுப்தன் முதலியவர்கள் அதிகாரம் செலுத்துவதாகச் சொல்லுகிற ரௌரவாதி நரகங்களுக்கு எப்படிப் போவார்களெ ன்னில்; அந்நரகங்களும் இயமனுடைய அரசாட்சிக்குட்பட்டதே, சித்ரகுப்தன் முதலியவர்களும் இயமனுடைய ஸேவகர்களாய்க்கொண்டே அந்த நரகங்களில் அதிகாரம் செலுத்துகிறார்கள். கூ௦௩

(ரா-ஸா.) பாபிகள் ரௌரவாதி ஏழுவகையான நரகங்களுக்குப் போவதாக வும் யமன்வீட்டிற்குப் போவதாகவும் இரண்டுவிதமாகச்சொன்ன வாக்யங்களெப் படி சேருமென்னில், ரௌரவாதிகளும் யமனுடைய ஆஜ்ஞைக்குட்பட்டதாகை யால் அவற்றையே யமாலயமென்று சொல்லிற்று ஆகையால் இரண்டுவாக்யங்களுக் கும் விரோதமில்லை. கூ௦௩

ஸூ-கூ௦௪. வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத்.

(ஶ-ரா-வ்யா.) வித்யாகர்மணோ: - (அர்ச்சிராதியும் தூமாதியும், வித்யைக்கும் கர்மத்துக்கும்) பலமாகச்சொல்லப்பட்டது. இதி - இவ்வித மாகவே, ப்ரக்ருதத்வாத் - இப்ப்ரகரணமுபக்ரமித்திருக்கையாலே, (இவ் வர்த்தமே கொள்ளவேணும்.) கூ௦௪.

(ஶ-ஸா.) சாந்தோக்யத்திற் சொல்லியிருக்கிற பஞ்சாக்நி வித்யையில், "வேத்த யதாஸௌ லோகோ ந ஸம்பூர்யதே" இந்த ஸ்வர்க்கலோகம் யாரால் நிறைகிறதில்லை, அதாவது—இதற்குயார்வருகிறதில்லையென்றுகேட்க, "அதை யோர் நகதரேண ச ந தானி க்ஷுத்ராண்யஸக்ருதாவர்த்தீனி பூதானி பவந்தி ஜாயஸ்வ ம்ரியஸ்வேத்யேதத் த்ருதீயம் ஸ்தானம் தேநாஸௌ லோகோ ந ஸம்பூர்யதே" ப்ராணிகளிறந்தபின் போகைக்கு தேவயாநமென்றும் பித்ருயாணமென்றும் இரண்டுவழிகளுண்டு ப்ரஹ்மவித்யையறிந்தவர்கள் தேவயாநத் தினல் போய் முக்தியை யடைகிறார்கள். அதையறியாமல் யஜ்ஞயாகாதிகளைப் பண்ணுகிறவர்கள் பித்ருயாணத்தினல்போய் ஸ்வர்க்கலோகத்தை யடைகிறார்கள். பாபிகள் இவ்விரண்டு வழிகளிலும் போகிறதில்லை; அவர்கள் புழுமுதலிய க்ஷுத்ர

ஜந்துக்களாய் அடிக்கடி பிறப்பதுமிறப்பதுமா யிருக்கிருர்கள், இவர்கள்தான் ஸ்வர்க்கலோகத்துக்குப் போகிறதில்லை என்றுத்தரம் சொல்லியிருக்கிறது. [illegible] பாபிகள் ஸ்வர்க்கலோக மடைகிறதில்லை யென்று ஸித்திக்கிறது. [illegible]

(ஶ்ரு-ஹா.) மேற்சொன்ன பூர்வபக்ஷத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— மரித்தவர்களெல்லாரும் சந்த்ரலோகத்திற்குப் போகிருர்களென்று மேற்சொன்ன ப்ரகரணத்தில், அர்ச்சிராதிமார்க்கமென்றும் தூமாதிமார்க்கமென்றும் இரண்டு, இதில் ஜ்ஞானவான்கள் அர்ச்சிராதியினுலும் புண்யவான்கள் தூமாதியினுலும் போகிருர்களென்று இவ்விருவர்க்குமே இவ்விரண்டையும் பலமாகச்சொல்லிற்று. ஆகையால்பாபிகளுக்கு தூமாதிமார்க்கத்தினுற் சென்று சந்த்ரலோகத்தை யடைகிறதில்லை. அவ்வாக்யத்தில் எல்லாரும் போகிருர்களென்றதுக்கு புண்யவான்களெல்லாரு மென்றர்த்தம் என்று ஸித்தாந்தம். ௧௯

ஸூ-௨௦. த்ருதீயே ஶப்தோபலப்தே:

(ஸ-ஶ்ரு-வ்ரு.) த்ருதீயே - பாபஜந்மத்தில், (சரீரோத்பத்திக்காக), ந - சந்த்ரலோகம்முதலிய ஐந்துஸ்த்தாநங்களில் ப்ரவேசிக்கையாகிற பஞ்சாஹூதி வேண்டியதில்லை, ததா - அப்படியே, உபலப்தே: - காண்கையாலே, (இவர்கள் தேவலோகம் போகிறதில்லை) ௨௦.

(ஶ்ரு-ஹா.) புழு முதலியவைகளாய்ப் பிறக்கிறவர்கள் ஐந்தாவது ஆஹூதியில் இப்படி பிறக்கிருர்களென்பதும் கிடையாது. பாபிகள் க்ஷுத்ரஜந்துக்களாய்ப் பிறப்பிறப்புக்களை யடைகிருர்களென்று மாத்திரமே சொல்லியிருக்கிறது. ஸ்வர்க்கலோகமடைந்தவன் மாத்திரமே ஐந்தாவது ஆஹூதியில் புருஷனுகப் பிறக்கிருனென்றும் சொல்லியிருக்கிறது. பாபிகளும் ஸ்வர்க்கம்போய்த் திரும்பிவரும்போது தங்கள் பாபத்தினுல் க்ஷுத்ர ஜந்துக்களாய்ப்பிறக்கிருர்கள், மநுஷ்யராகப்பிறக்கிறதில்லையென்று சொல்லில், ஸ்வர்க்கம்போனவர்கள் ஐந்தாவது ஆஹூதியில் புருஷர்களாய், அதாவது மநுஷ்யராய்ப் பிறக்கிருர்களென்கையால் அவர்களுக்கு இந்த புழு முதலிய க்ஷுத்ரஜந்மம் கிடையாது. இதனுலும் பாபிகளுக்கு ஸ்வர்க்கலோகமில்லையென்று ஏற்படுகிறது. ஐந்தாஹூதியாவது-புருஷன் ஶ்ரத்தையினுல் ஸ்வர்க்கத்தை யடைகிருன். பின்பு அங்குநின்றும் அழகிய தன்னுடைய சரீரம் கரைந்து மேகத்தில் வந்து சேருகிருன். அதன்பின், மழைவழியாக பூமியில்வருகிருன், பிறகு அந்நமாய்க்கொண்டு புருஷனுடைய கர்ப்பத்தில் வருகிருன். கடைசியில் அங்குநின்று ரேதஸ்ஸு வழியாக ஸ்த்ரீயின் கர்ப்பத்தில் சேருகிருன். இதே ஐந்தாஹூதி யென்பது. ஸ்வர்க்கம் மேகம் பூமி புருஷன் ஸ்த்ரீ இவைகளையே பஞ்சாக்நி யென்று சொல்லுகிறது. ௨௦.

(ஶ்ரு-ஹா.) சந்த்ரலோகம் மேகம் பூமி புருஷன் என்கிற நாலிடங்களிலும் தங்கி அநந்தரம் ஸ்த்ரீயின் கர்ப்பத்தில் ப்ரவேசித்தால் சரீரமாகிறதென்று சொல்லிற்று இந்த அத்யாயத்தினுல் பாபிகளுக்கும் சரீரமுண்டாகைக்காக சந்த்ரலோகத்தில் நிலாத் தங்கி அநந்தரம் மேற்சொன்ன மேகாதிகளிற் தங்கி [illegible] தாவஶ்யகமாகையாலே பாபிகளுக்கும் சந்த்ரலோக கமநம் ஒப்புக்கொள்ளவேணு மென்னில், வேண்டா; கேவல பாபிகளுக்குச் சரீரமுண்டாம்போது அவர்கள் சந்த்ரலோகாதிகளில் தங்கியாகவேணு மென்கிறதில்லை, "[illegible]" என்று பாபிகள் தேவலோகத்திற்குப் போகிறதில்லை [illegible] ஆகையால் பாபிகளுக்குச் சந்த்ரலோக [illegible]

ஸூ-க௦௬. ஸ்மர்யதேபிசலோகே.

(ஸ-ரா-வ்யா.) லோகே-லோகத்தில், ஸ்மர்யதேபி - ஸ்மரிக்கவும் படுகிறது. க௦௬.

(ஸ-ஸா.) கீழ் புழு முதலியவைகளாகப் பிறப்பதற்கு ஐந்தாவதாஹுதி யென்கிற க்ரமம் வேண்டியதில்லையென்று சொல்லிற்று; அப்படி ஐந்தாவது ஆஹுதியில் பிறக்கிறவன் மநுஷ்யனாயேபிறப்பன், மற்றொரு க்ஷுத்ர ஜந்துவாகப்பிறவான் என்றே நியமம்; மநுஷ்யனாகப் பிறக்கிறவனெல்லாம் ஐந்தாவது ஆஹுதியில் பிறக்கிறானென்கிற நியமமில்லை யென்கிறது. த்ரோணாசார்யர் ஸ்த்ரீயின் கர்ப்பத்தில் ப்ரவேசமில்லாமலே பிறந்தார். த்ரௌபதிமுதலியவர்கள் அக்நியில் நின்றும் பிறந்தார்கள். அவர்களுக்கு ஸ்த்ரீகர்ப்பம் புருஷகர்ப்பம் இரண்டிலும் ப்ரவேசமில்லை. இப்படியே பக்ஷிகளிலும் பலாகைகள் ஸ்த்ரீபுருஷஸம்யோக மில்லாமலே பிறக்கிறதென்று லோகத்தில் ப்ரஸித்தமாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் சரீரம் ஐந்தாவது ஆஹுதியிலேயே வருகிறதென்ற நியமமில்லை. க௦௬.

(ரா-ஸா.) கீழ்ச்சொன்ன பஞ்சமாஹுதி யில்லாமலே த்ரௌபதிமுதலியவர்களுக்குச் சரீரம் அக்நியில் நின்று முண்டாயிற்று என்பது லோகத்தில் ப்ரஸித்தமாயிருக்கிறது. க௦௬.

ஸூ-க௦எ. தர்ஶநாச்ச.

(ஸ-ரா-வ்யா.) தர்ஶநாச்ச - (பஞ்சமாஹுதியின்றி சரீரோத்பத்தி) வேதத்திற் சொல்லுகையாலும், (பாபிகளுக்குச் சந்த்ரலோக கமநமில்லை.)

(ஸ-ரா-ஸா.) "தேஷாம் த்ரீண்யேவ பீஜாநி" என்கிற ஶ்ருதியில் பேன்செடி முதலானவைகளுக்குக் கீழ்சொன்ன பஞ்சமாஹுதியில்லாமலே சரீர முண்டாகிறதென்றும் சொல்லியிருக்கிறதுகள். க௦எ.

ஸூ-க௦அ. த்ருதீயஶப்தாவரோத: ஸம்ஶோகஜஸ்ய.

(ஸ-ரா-வ்யா.) ஸம்ஶோகஜஸ்ய - வேர்வையினாலுண்டான (பேன் முதலிய) ஜந்துவுக்கு, த்ருதீயஶப்தாவரோத: - மூன்றாவதான உத்பிஜ்ஜ சப்தத்தினால் ஸங்க்ரஹம் செய்யப்பட்டது. க௦அ.

(ரா-ஸா.) அவ்வேத வாக்யத்தில் அண்டஜ மென்றும் ஜீவஜ மென்றும் உத்பிஜ்ஜமென்றும் மூன்றுவிதமான ஜந்துக்களையேசொல்லிற்று. ஸ்வேதஜமென்றொன்றைச் சொல்லவில்லையே யென்னில், மூன்றும் பதமான உத்பிஜ்ஜ சப்தத்திற்கே ஸ்வேதஜமும் அர்த்தமென்று கண்டுகொள்வது. ஆகையால், பாபிகளுக்குச் சந்த்ரலோக கமநமில்லை என்று ஸித்தாந்தம். க௦அ.

அதி-௭உ-ஸூ-க௦௯. தத்ஸ்வாபாவ்யாபத்திருபபத்தே:.

(ஸ-ரா-வ்யா.) உபபத்தே: - ஸுகதுக்காநுபவாபாவமில்லாமை உபபந்நமாகையாலே, தத்ஸ்வாபாவ்யாபத்தி: - ஆகாசாதி ஸாத்ருஶ்யப்ராப்தி, (ஜீவனுக்குள்ளது.) க௦௯

(ஸ-ஸா.) இந்த பாஷ்யத்துக்கு "ஸாஸாவ்யாபத்திருபபத்தே:" என்று பாடம். ஸாஸாவ்யாபத்தியாவது ஸமாநதர்மத்தை யுடையதாகை. சந்த்ரலோகத்தையடைந்த புண்யபுருஷன் புண்யபல மநுபவித்தபின் அங்கு நின்றும் பூலோகத்தில் விழும்போது [illegible]

[illegible]" இத்யாதியிலும், [illegible] ஆகாசமென்கு, [illegible]

அதன்பின் தூமமாகிறான். அப்புறம் அப்ரமாகிறான், மேகமாகிறான் என்று இம்மா திரியாக இறங்கும் க்ரமம் சொல்லிற்று அப்பொழுது ஆகாசமாகிறானென்பத ற்கு, ஆகாசஸ்வரூபமாய் விடுகிறானா, அல்லது அதின் தர்மத்தையடைகிறானா என்ற சங்கையில்,—ஆகாசமாகிறானென்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கையால் ஆகாச ஸ்வரூபமாயேயாய்விடுகிறானென்று பூர்வபக்ஷி சொன்னான். சந்த்ரலோகத்திலு ள்ள புண்யபுருஷனுடைய சரீரம், அவனுடைய புண்யம் கழிந்தபின் "இனி பூமியில் விழப்போகிறோமே" என்கிற துக்காக்நியினால்கரைந்து, ஆகாசம்போல் அதிஸூக்ஷ் மாவஸ்த்தையையடைகிறது, இந்த அவஸ்த்தையையே ஆகாசமாகிறானென்கிறது. ஜலதத்வம் ஆகாசதத்வமாகக் கூடாமைடால் பூர்வபக்ஷிசொன்னது அர்த்தமன்று. ஆகாசமாகிறானென்பதற்கு ஆகாசம்போலாகிறானென்றே அர்த்தம். இப்படியே, வாயுவாகிறானென்பதற்கும், அந்த சரீரத்தினுடைய ஸூக்ஷ்மபாகம் வாயுவுக்குப் பரவசமாகிறதென்றே அர்த்தம். இப்படியே மேல்வாக்யங்களிலும் கண்டுகொள் வது என்று ஸமாதானம். க0க.

(ரா-ஹா.) இதில் சந்த்ர லோகத்தி லிருந்திறங்கும்போதுள்ள விதத்தைச் சொல்லுகிறார்.— சந்த்ர லோகத்திலிருந்து பூலோகத்திற்கு ஜீவன் திரும்பும்போது ஆகாசமாகவும்பின்புவாயுவாகவும்அகாந்தரம்தூமமாகவும்மேகமாகவுமாகிறானென்று சொல்லிற்று. இங்கு ஆகாசமாகையாவது ஆகாசத்தைச் சரீரமாகக்கொள்கையா, ஆகாசத்தைப்போ லிருக்கையா என்று ஸம்சயம். சந்த்ர லோகத்தில் அம்ருத மயமான சரீரமெடுப்பதுபோல் ஆகாசமாகிறசரீரமெடுக்கையே ஆகாசமாகைஎன்று பூர்வபக்ஷம். சரீர மெடுப்பது ஸுகதுக்கானு பவத்திற்காக. ஆகாசாதிகளைச்சரீரமாகக் கொண்டு ஜீவன்ஸுகதுக்கங்களை யனுபவியாமையால் ஆகாசாதிகளைச் சரீரமாகக் கொள்ளுகையில் ப்ரயோஜநமில்லை யாகையால் ஆகாசாதிகளைச சரீரமாகக் கொ ள்ளுகிறதில்லை. ஆகாசாதிகளைப்போ லிருக்கிறானென்று ஸித்தாந்தம். க0க.

ஸூ-எக-ஸா-க்கஉ. நாதிசிரேண விசேஷாத்.

(ஶ-ரா-வ்யா.) விசேஷாத் - வ்ரீஹியில் பகுகால மாத்ரம் இருக்கிறா னென்று விசேஷிக்கையாலே, அதிசிரேண - (ஆகாசாதிகளில்) பகுகாலம் ந-இருக்கிறதில்லை. க்கஉ.

(ஶ-ரா-ஹா.) ஜீவனிறங்கும்போது ஆகாசம் வாயு முதலிய வற்றில் பகுகால மிருந்து வருகிறானா, அல்லது அங்கிருந்து சீக்கிரத்திலிறங்குகிறானா, அல்லது சிலரிப்படியும் சிலரப்படியும் வருகிறார்களா என்று ஸம்சயம். சீக்கிரத்திலிறங்குகிறா னென்றும் அங்குசிலகாலம் தங்குகிறானென்றும் சொல்லாமையாலே அதில் நியமமில்லை என்று பூர்வபக்ஷம்.— "அதோவை கலு துர்நிஷ்ப்ரபதரம்" என்று மேலே வ்ரீஹியில் (தாங்யத்தில்) நின்றும் சீக்கிரத்தில் இந்தஜீவன் வெளிக் கிளம்புகிறதில்லை யென்று சொல்லுகையாலே, அதற்குக் கீழுள்ள ஆகாசாதிகளில் சிரகாலம் தங்குகிறதில்லை யென்று நிச்சயிக்கப்படுகிறதென்று ஸித்தாந்தம். க்கஉ.

ஸூ-எச-ஸா-க்கக. அந்யாதிஷ்டிதேஷு பூர்வவதபிலாபாத்.

(ஶ.ரா-வ்யா.) பூர்வவத் - முன் (ஆகாசாதிகளில்) போலவே, அபி லாபாத் - சொல்லுகையாலே, அந்யாதிஷ்டிதே - வேறொரு ஜீவனாலதிஷ் டிக்கப்பட்ட வ்ரீஹியில், ஜீவன் ஸம்யோகத்தை மாத்ரம் அடைகிறான்.

(ஶ-ரா-ஹா.) ஜீவன் தேவலோகத்தில் நின்றும் ஆகாசம் வாயுதூமம் அப்ரம் மேகம் ஆக இவைகளின்வழியாக இறங்கி "வ்ரீஹியவா ஓஷதிவநஸ்பதயஸ்தில மாஷா ஜாயந்தே" என்று வ்ரீஹ்யாதி தாந்யங்களிலொருவனாகப் பிறக்கிறானே

ன்றுசொல்லிற்று. தாந்யாதியாகப்பிறக்கையாவது, தன்னுடைய ஸுகதுக்காநுபவ யோக்யமாக அத்தை சரீரமாகப் பரிக்ரஹிக்கிறுன், வேறொருவனால் அப்படி பரி க்ரஹித்த தாந்யத்தில் சேர்ந்திருக்கிறான் என்று ஸம்சயம்—பிறக்கிறு னென்று சொல்லுகையாலே அத்தை சரீரமாகப் பரிக்ரஹிக்கிறுனென்று பூர்வபக்ஷம்—ஆகா சாதிகளிற்போலவே தாந்யத்தில் பிறக்கைக்கும் புண்யபாப ரூபஹேது ஒன்றும் சொல்லாமையாலே தான்யத்தை சரீரமாகப் பரிக்ரஹிக்கிற தில்லே. மற்றொரு ஜீவன் பரிக்ரஹித்த தாந்யத்தில் சேர்ந்துமாத்ர மிருக்கிறுனென்று ஸித்தாந்தம்.

𑌸𑍂-௩௧௨. 𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍.

(ஶ-ரா-வ்யா.) 𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 - (யஜ்ஞாதிகள்) சுத்தமன்று,(ஹிம்ஸாரூபம்) 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 - என்றால், 𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 - (இதுஹிம்ஸையன்றென்று) வேதவாக்யம் சொல்லுகையாலே, 𑌨 - (இது) ஹிம்ஸையாகமாட்டாது. ௩௧௨.

(ஸு-ஸா.) அந்த ஜீவன் நெல்லாயிருக்கிறு னென்னும்போது, வேறொரு ஜீவ னுக்குச் சரீரமாயிருக்கிறநெல்லில்சேர்ந்திருக்கிறுனென்றுசொல்லிற்றுக்கீழ்,இதில் இவனுக்குஅந்த நெல் சரீரமாகமாட்டாது என்பது சரியன்று.நாய் முதலிய ஜந்மங் கள்மிக்கபாபத்தினுல் நேரிடுகிறது. நெல் முதலிய ஸ்த்தாவர ஜந்மம் அதைக்காட்டி லும் மிகுந்த பாபத்தினுல் நேரிடுகிறது.அவ்விதமான ஜந்மத்தை யடையத்தக்க பாப மிவனுக்குண்டு. அதாவது-யாகத்தில் பசுவைக்கொல்லுகை.அப்பாபத்தின் பலத்தை யநுபவிக்கைக்காக இப்படிநெல்லைச்சரீரமாக தரிக்கிறுனென்பதே உசிதமென்றான் பூர்வபக்ஷி.—ஒருகார்யமே தேசகால நிமித்த பேதங்களினுல் தர்மமுமாகும். அதர் மமுமாகும். யாகத்தில் தேவதைக்கு அர்ப்பணம் செய்யவேணுமென்று உத்தேசியா மல் பசுஹிம்ஸை பண்ணினுல் அதுவே அதர்மமெனப்படும். யாகத்தில் பசுஹிம்ஸை புண்யமென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே, யாகரூப நிமித்த பேதத்தினுல் அந்த ஹிம்ஸையே தர்மமாய்விடுகிறது. ஆகையால், நெல்லாகப் பிறப்பதற்குரிய பாபமிவ னுக்கில்லை யாகையால், இவன் நெல்லோடு கூடியிருக்கிறான். அப்போது அந்நெல் இவனுக்குச் சரீரமாகிறதில்லை என்று ஸித்தாந்தம். ௩௧௨.

(ரா-ஸா.) தாந்யமாகப் பிறக்க ஹேது சொல்லா விடினும் இவன்செய்த யஜ்ஞயாகாதிகளில் செய்கிற பசுஹிம்ஸை பாபமாகையாலே அப்பாபத்தை யநுப விக்கைக்காக தாந்யமாகப் பிறக்கிறுனென்று நிச்சயிக்கலாமென்னிலும், யாகாதி களில் செய்த பசுஹிம்ஸை பாபமாகாது. அந்தபசு ஸ்வர்க்கம் போய் ஸுகிக்கிற தென்று சொல்லுகையாலே. அது தாந்ய ஜந்மத்திற்கு ஹேதுவாகமாட்டாது. ௩௧௨.

𑌸𑍂-௩௧௩. 𑌰𑍇𑌤𑌃𑌸𑌿𑌗𑍍𑌯𑍋𑌗𑍋𑌽𑌥.

(ஶ-ரா-வ்யா.) 𑌅𑌥 அதற்குப்பின், 𑌰𑍇𑌤𑌃𑌸𑌿𑌗𑍍𑌯𑍋𑌗𑌃-ரேதஸ்ஸேசநம் செய்கிற புருஷனிடத்தில் சேர்கை, (ஜீவனுக்குச் சொல்லிற்று.) ௩௧௩.

(ஸு-ஸா.) மேல்வாக்யத்தில் '𑌯𑍋 𑌯𑍋 𑌹𑍍𑌯𑌨𑍍𑌨𑌮𑌤𑍍𑌤𑌿 𑌯𑍋 𑌰𑍇𑌤𑌃 𑌸𑌿𑌞𑍍𑌚𑌤𑌿" என்று,ஸ்வர்க்கத்திலின்றும் விழுந்தபுருஷன் அந்நமாய்க்கொண்டுபுருஷனு டைய உதரத்தில் போனபின் அப்புருஷன் ரேதஸ்ஸேகம் பண்ணுகிறுனென்று சொல்லுகிறது. அப்படி ரேதஸ்ஸேகம்செய்கை, வெகுகாலம் கழிந்து யௌவநம் வந்தபின் செய்யவேண்டிய வ்யாபாரம். அப்படியிருக்க, இவன் அந்நரூபியா யிருக் கச்செய்தே ரேதஸ்ஸேகம் செய்கிறுனென்பது சரியன்று. ஆகையால் ரேதஸ்ஸே கம் செய்கிற புருஷனோடு சேர்ந்திருக்கிறுனென்றே சொல்லவேணும். இப்படியே நெல்லாகிறுனென்ற விடத்திலும் நெல்லோடு கூடியிருக்கிறுனென்றே அர்த்தம் சொல்லவேணும். ௩௧௩.

(ரா-ஹா.) அதற்குப்பின், அந்த ஜீவன் சேர்ந்திருக்கிற தாந்யத்தை எவன்புஜிக்கிருனே, ஸ்த்ரீயினிடத்தில் ரேதஸ்ஸேசநம் செய்கிருனே, அந்த புருஷனிடத்தில் வந்து அந்த ஜீவன் சேருகிருன். அநந்தரம் புருஷனிடத்திலும் பூர்வம் ஆகாசாதிகளிலும் சேர்ந்திருக்கையே சொல்லுகையாலே நடுவிலுள்ள தாந்யத்திலும் சேர்ந்திருக்கிருனென்றே யங்கீகரிக்கவேணும். ௩௧௪.

ஸூ-௨௭. யொநெஶ்ஶரீரம்.

(ஸ-ரா-வ்யா.) யொநெ:-யோநியையடைந்ததற்கு (அநந்தரம்) ஶரீரம் - சரீரமுண்டாகிறது. ௩௧௫.

(ஸ-ரா-ஹா.) ஸ்த்ரீயின் கர்ப்பத்திற்சேர்ந்த பின்பே ஜீவனுக்கு சரீரமுண்டாகிறது. அந்த சரீரத்திலேயே அந்த ஜீவனுக்கு ஸுகதுக்காநுபவமுண்டாகிறது. அதற்குமுன் ஸுகதுக்காநுபவமில்லை யாகையால் இதற்குமுன்புள்ள ஆகாச வாய்வாதிகள் அந்த ஜீவனுக்கு சரீரமாகமாட்டாவென்று ஸித்தாந்தம். ௩௧௫.

௩-வது அத்யாயம் ௧-வது பாதம் ஸம்பூர்ணம்.

௩-வது அத்யாயம், ௨-வது பாதம்.

௧௰-ம். ஸூ-௧. ஸந்த்யெ ஸ்ருஷ்டிராஹ ஹி.

(ஸ-வ்யா.) ஸந்த்யெ - ஸ்வப்நத்தில், ஸ்ருஷ்டி: - ஸ்ருஷ்டியானது, (பரமார்த்தம் ஏனென்றால்,) ஆஹ ஹி - (ஶ்ருதி) சொல்லிற்றன்றோ. ௩௧௬.

(ரா-வ்யா.) ஸந்த்யெ - ஸ்வப்நத்தில் (காண்கிற பதார்த்தங்களினுடைய), ஸ்ருஷ்டி: - ஸ்ருஷ்டி, (ஜீவனால் செய்யப்பட்டது). ஆஹ ஹி - (அவனையே கர்த்தாவாக வேதம்) சொல்லிற்றன்றோ. ௩௧௬.

(ஸ-ஹா.) கீழ்பாதத்தில் பஞ்சாக்நி வித்யையைக்காட்டி ஜீவனுடைய ஸம்ஸாரத்திலிருப்பினவாந்தர பேதங்கள் சொல்லப்பட்டது. இப்பாதத்தில் இவ்விருப்பினவஸ்த்தாபேதங்கள் சொல்லப்படுகின்றன.—ஜீவனுறங்கும்போது ஸ்வப்நம் காண்கிருன். அந்த ஸ்வப்நத்தில் காண்கிற, தேர், ஊர், வீடு, முதலிய வஸ்துக்கள், விழித்துக்கொண்டிருக்கையில் காண்கிற வஸ்துக்களைப்போல் உண்மையானவைகளா-அல்லது, இந்த்ர ஜாலத்தில் காண்கிற விசித்ர வஸ்துக்களைப்போல் மாயையாவென்னில், "அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதெ" தேர்களையும் குதிரைகளையும் வழிகளையும் அந்தஸ்வப்நகாலத்தில் ஸ்ருஷ்டிக்கிருனென்று ஶ்ருதி சொல்லுகையாலே அவைகள் உண்மையானவைகளே. ௩௧௬.

(ரா-ஹா.) இந்த பாதத்தில், பரமபுருஷனிடத்தில் பக்திருசி யுண்டாகைக்காக அவனுடைய கல்யாணகுணங்களையும் ஹேயப்ரத்யநீகத்வத்தையும் சொல்லுகிறது.—"ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தாநோ பவந்த்யத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதெ" என்று தொடங்கி "ஸ ஹி கர்த்தா" என்னுமளவாக, ஸ்வப்நத்தில் ஜீவன் ரதம் முதலிய அநேக பதார்த்தங்களைப் பார்க்கிருன். அவை, அதற்குமுன் இல்லை. அப்போதே ஸ்ருஷ்டிக்கப் படுகின்றன. அவைகளை ஸ்ருஷ்டிக்கிறவனே கர்த்தாவாகிருனென்று சொல்லிற்று. இங்கு அப்பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறவன் ஜீவனு, பரமபுருஷனு என்று ஸம்சயம்.—இதற்குமுன் வாக்யத்தில் ஸ்வப்நத்தைப்பார்க்கிறவன் ஜீவன் என்று சொல்லி, இங்கு அவன் கர்த்தாவென்று சொல்லுகையாலே ஜீவனே கர்த்தாவென்று தோற்றுகிறது. அவனுக்கும்

ஸத்யஸங்கல்பத்வாதிகள் - அதாவது தான் நினைத்தபடி செய்யவல்ல ஸாமர்த்யம் உண்டென்று சொல்லுகையாலே ஜீவனே ஸ்வப்நத்தில் காண்கிற பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறானென்று பூர்வபக்ஷம். ௧௧௫.

𑌸𑍂 ௧௧௬. 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌤𑌾𑌰𑌂 𑌚𑍈𑌕𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌯𑌶𑍍𑌚.

(𑌶𑍍𑌰𑍁-𑌵𑍍𑌯.) 𑌏𑌕𑍇 - சிலர், 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌤𑌾𑌰𑌂 - (ஜீவனை) ஸ்ருஷ்டி கர்த்தாவாக, (சொல்லுகிறார்கள்) 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌯𑌶𑍍𑌚 - புத்ராதிகளும் (ஸ்வப்நத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள்). ௧௧௬.

(𑌶𑍍𑌰𑍁-𑌭𑌾.) மேலும், இந்த ஸ்வப்நவஸ்துக்களை ஸ்ருஷ்டிக்கிறானென்று சொல்லுகிறது பரமாத்மப்ரகரணமாயிருக்கிறது. ஆகையால் இவற்றைப் பரமாத்மாவே ஸ்ருஷ்டிக்கிறானென்று அந்த ஶ்ருதிக்கு அர்த்தம். ஆகையால், பரமாத்மா ஸ்ருஷ்டித்த இந்த ஜகத்து இப்போது உண்மையாயிருப்பதுபோல் அவனே ஸ்ருஷ்டித்த அதுவும் உண்மையாயே யிருக்கவேணும் என்று பூர்வபக்ஷி சொன்னான். ௧௧௬.

(𑌰𑌾-𑌭𑌾.) "𑌯 𑌏𑌷 𑌸𑍁𑌪𑍍𑌤𑍇𑌷𑍁 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌮𑌾𑌣𑌃" என்று தனக்கு இச்சாவிஷயங்களான புத்ர பசு தநாதிகளை ஜீவனை புருஷன் ஸ்ருஷ்டிக்கிறானென்றும் சொல்லுகையாலே ஜீவனே ஸ்ருஷ்டிக்கிறான். ௧௧௬.

𑌸𑍂 ௧௧௭. 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨𑌾𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾

𑌤𑍍.

(𑌶𑍍𑌰𑍁-𑌵𑍍𑌯.) 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨 - ஸம்பூர்ணமாக, 𑌅𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 - (இவ்வஸ்து தர்மங்களின்) அபிவ்யக்தியில்லாத ஸ்வரூபத்தை யுடைத்தா யிருக்கையால், 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 - ஸ்வப்நத்தில் காண்கிற வஸ்துக்கள்; கேவல மாயையே (உண்மையானவையன்று). ௧௧௭.

(𑌰𑌾-𑌵𑍍𑌯.) 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨 - ஸம்பூர்ணமாக, 𑌅𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 - (ஜீவனுடைய ஸத்யஸங்கல்பத்வம் ஸம்ஸாரதசையில்) ப்ரகடஸ்வரூபத்தை உடைத்தாகாததாகையால், 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 - ஆஸ்சர்யகரமான ஸ்வப்நபதார்த்தங்களெல்லாம், பரமபுருஷனால் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது. ௧௧௭.

(𑌶𑍍𑌰𑍁-𑌭𑌾.) இந்த பூர்வபக்ஷத்துக்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—ஸ்வப்நத்தில் காண்கிற வஸ்துக்கள் உண்மையேயன்று. அவ்வளவும் இந்த்ரஜாலம்போல் மாயைதான். ஏனென்றால்,—ஜீவன் தன் சரீரத்திற்குள் தேர் யானை குதிரை நகரம் வனம் முதலிய ஸமஸ்த வஸ்துக்களையும் காண்கிறான். அவ்வளவு பெரிய வஸ்துக்கள் இந்த அல்ப சரீரத்தில் ஒருகாலும் மடங்கமாட்டா. இவன் உறங்குகிற அந்த அல்ப காலத்திற்குள் பக்ஷுதூரம் நூறு இருநூறுயோஜனை தூரமுள்ள இடங்களுக்கு போவதாகவும் அங்கிருந்து திரும்பி வருவதாகவும் தோற்றுகிறான். அந்த அல்பகாலத்திற்குள் அவ்வளவுதூரம் போவதும் வருவதும் ஒருகாலும் இணங்காது. அப்போது காண்கிற தேர் முதலியவற்றைச்செய்ய எவ்வளவோ தினங்கள் பிடிக்கும். அவ்வளவு தினங்களில் செய்யவேண்டியவற்றை அந்த சிறிதுகாலத்திலேயே செய்து முடித்தமாய்விட்டதாகக் காண்கிறான். அதுவும் யுக்திக்குச்சேராது. ஒரு தேர் செய்யவேணுமாகில் அதற்கு மரம் உளி வாச்சி முதலிய அநேக ஸாமக்ரிகள்வேணும், அவையொன்றும் அக்காலத்தில் கிடையாது. அவையில்லாமல் உண்மையான தேரைச்

செய்யவும் முடியாது. மேலும் ஸ்வப்நத்தில் ஒரு யானையைப் பார்த்துக்கொண்டிருக்கச்செய்தேயே அந்த யானை சிறிது காலத்திற் குதிரையாகவும், இன்னும் நொடிப்பொழுதில் குரங்காகவும் மநுஷ்யனாகவும் மரமாகவும் இப்படி ஒரே வஸ்து வெவ்வேறாக மாறி மாறிக் காண்கிறது. உண்மையான வஸ்துவாகில் அப்படி மாற மாட்டாது. இப்படி உண்மையான வஸ்துக்களுக்குள்ள குணங்களொன்று மிதற்கில்லை யாகையால் இந்த ஸ்வப்நவஸ்துக்கள் உண்மையாகமாட்டா. ௩௧௭.

(ஸ்ரீ-ஹா.) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.—ஜீவனுக்கு ஸத்யஸங்கல்பத்வமிருந்தாலும் அது ஸம்ஸாரதசையில் கார்யகரமல்லாமல் மறைந்திருக்கையால், அப்பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்க ஜீவன் ஸமர்த்தனாகமாட்டான். பரமபுருஷனே ஸ்ருஷ்டிக்கிறான். இப்ப்ரகரணத்தில் உபக்ரமத்தில் "ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்தி" உறங்கும்போது எவன் விழித்துக்கொண்டிருக்கிறானோ என்றும், கடைசியில் "தஸ்மிம்ல்லோகா: ச்ரிதா:" அவனிடத்தில் ஸமஸ்தலோகங்களும் ஆச்ரயித்திருக்கிறதுகள் என்றும் பரமபுருஷனையே சொல்லுகையாலே நடுவிலுள்ள "ஸ ஹி கர்தா" என்கிற வாக்யமும் அந்த பரமபுருஷனையே கர்த்தாவாகச் சொல்லிற்றென்று ஸித்தாந்தம். ஸ்வப்நபதார்த்தங்கள் மற்றொருவனுக்குக் காணாமலும் காலாந்தரங்களிலில்லாமலும் விசித்ரமா யிருக்கையாலே மாயையென்று சொல்லிற்று. ௩௧௭.

ஸூ-ஸூசகச்ச ஹி ச்ருதேராசக்ஷதே ச தத்வித:॥

(ஸூ-வ்யா.) ச்ருதே: - வேதவாக்யத்தினால், ஸூசகச்ச ஹி - (சுபாசுபங்களுக்கு) ஸூசகமாக மாத்திரம் ஆகிறதன்றோ. தத்வித: ச - அந்த ஸ்வப்ந சாஸ்த்ரமறிந்தவர்களும், ஆசக்ஷதே - ஸ்வப்நம் சுபாசுப ஸூசகமென்று சொல்லுகிறார்கள். ௩௧௮.

(ஸ்ரீ-ஹா.) ஸ்வப்நத்திற்பார்த்த வஸ்துக்கள் பொய்யாகில், வேதத்திலும் ஸ்வப்நாத்யாயங்களிலும், ஸ்வப்நத்தில் ஸ்த்ரீ கன்னிகை பழம் பூ சித்ரம் முதலிய நல்ல வஸ்துக்களைப்பார்த்தால் சீக்கிரத்தில் இவனுக்கு ஸுகமுண்டாகுமென்றறியவேணும், கறுத்தபுருஷன் கறுத்தபற்களை யுடையவன் முதலிய கெட்டவஸ்துக்களைப்பார்த்தால் சீக்கிரத்தில் இவனுக்குத் துன்பமுண்டாகவேணுமென் றறியவேணுமென்றும் சொல்லியிருக்கிறது, அப்படியே அநுபவத்திலும் காண்கிறது, அதெல்லாம் சரிப்படாமல் போய்விடுமேயென்னில்;—வழியில் விழுந்துகிடக்கிற தகரத்தைப்பார்த்து வெள்ளியென்று ப்ரமித்து அதினால் ஆநந்தத்தை யடைகிறான். இருட்டிலுள்ள ஒரு கயிற்றைப்பார்த்துப் பாம்பென்று ப்ரமித்து பயப்படுகிறான். இவனடைகிற ஆநந்தமும் பயமும் உண்மையானபோதிலும், அவற்றுக்குக் காரணமாக நினைத்த வெள்ளியும் பாம்பும் உண்மையானதன்று, இதனால் காரணமுண்மையாகாவிடினும் ப்ராந்தியினால் உண்மையான காரியமுண்டாவது அநுபவமாயிருக்கிறதென்று ஏற்பட்டது. அதுபோலவே இங்கும், ஸ்வப்நத்தில் கண்ட வஸ்துக்கள் உண்மை யாகாவிடினும், அதைப்பார்ப்பது, உண்மையாகிய சுபாசுபங்களுக்குக் காரணமாகலாம். ஸ்வப்நவஸ்துக்களைச் சிலவிடங்களில் ஜீவன் ஸ்ருஷ்டிப்பதாகவும், சிலவிடங்களில் பரமாத்மா ஸ்ருஷ்டிப்பதாகவும் சொல்லியிருந்தபோதிலும், "இக்கலப்பைதான் என்னைக் காப்பாற்றுகிறது" என்று உலகமொழியுண்டு; கலப்பை மநுஷ்யனைக் காப்பாற்றுகையாவது, தாயானவள் பிள்ளையைக் காப்பாற்றுவதுபோலன்று, கலப்பையினால் வ்யவஸாயம் செய்தால் அதினால் பூமிவிளைந்து அதினால் இவன் சோறுண்டு பிழைக்கையாம். அதுபோலவே ஜீவன் ஸ்ருஷ்டிக்கிறானென்பதும். அதாவது - இந்த மாதிரி ஸ்வப்நம் காண்பதற்கு ஜீவனுடைய அத்ருஷ்டம் காரணமாகையால் இப்படி சொ

ல்லக்கூடும். பரமாத்மா ஸ்ருஷ்டிக்கிறானென்பதும், ஜீவன் பரமாத்மாவினுடைய அம்சமாகையால் அந்த ப்ரஸக்திக்கு மொருபாதையில்லை. ௩-௨-௪.

ஸூ. ௩-௨-௫. பராபித்யாநாத்து திரோஹிதம் ததோஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ.

(ப-வ.) திரோஹிதம்-மறைந்திருக்கிறகுணம், பராபித்யாநாத்-பரமாத்மாவின் த்யாநத்தினால், (வெளிப்படுகிறது). தத:- அந்த த்யாநத்தினால், அஸ்ய-இந்த ஜீவனுக்கு, பந்தவிபர்யயௌ-ஸம்ஸாரமோக்ஷங்கள்.

(ப-ஸா.) பெருநெருப்பிலிருந்து தெறித்த சிறுநெருப்பு நெருப்பேயாயிருப்பது போல் பரமாத்மாவினிடத்தில் நின்றுமுண்டான ஜீவன் பரமாத்மாவேயாகிறான். அவ்விருவர்க்கும் பேதமில்லையென்றது சீழ். அதுசரியன்று. பெருநெருப்பிலின்றுமுண்டான சிறுநெருப்பில் அதுக்குண்டான ப்ரகாசம் உஷ்ணம்முதலிய குணங்கள் முற்றும் காண்கிறது. ஜீவனிடத்தில் பரமாத்மாவின் குணங்களாகிய ஜ்ஞாநசக்தி முதலியவைகளொன்றும் காணவில்லையே யென்னில், சாம்பல்மூடின நெருப்பில் ப்ரகாசம் மறைந்திருப்பதுபோலவும், அரணிக்கட்டையிலுள்ள நெருப்பில் ப்ரகாசம் உஷ்ணம் முதலிய குணங்கள் மறைந்திருப்பதுபோலவும், ஜீவனுக்கும் அநாதி மாயையினால் ஜ்ஞாநசக்தி முதலான குணங்கள் காண்கிறதில்லை. அவ்வளவேயன்றி ஜீவனுக்கு இக்குணங்கள் இல்லையென்னப்போகாது. அக்குணங்கள் அந்த ஜீவனுக்கு பகவத்த்யாநத்தினால் அம்மாயைநீங்கி பின்பு ப்ரகாசத்தையடைகின்றன. இவனீஶ்வரனை யறியாமலிருப்பதே ஸம்ஸாரத்துக்கும், அவனை யறிவதே மோக்ஷத்துக்கும் காரணமாயிருக்கின்றன. இதனால், ஸ்வப்நத்தில் காண்கிற தேர் முதலியவை செய்கைக்கு மரம் உளி வாச்சி முதலிய காரணங்களில்லாவிடினும் பரமாத்மஸ்வரூபியாகிய ஜீவனே தன்னுடைய ஸத்யஸங்கல்பத்தினால் ஸ்ருஷ்டிக்கிறான், ஆகையால் ஈஶ்வரன் தன்ஸங்கல்பத்தினால் ஸ்ருஷ்டிக்கும் இவ்வஸ்துக்களைப்போல் அவையும் உண்மையாகலா மென்றதுக்கு,—ஜீவன் ஈஶ்வரனுன போதிலும் அவனுக்கு ஸம்ஸாரதசையில் ஸத்யஸங்கல்பம் மறைந்திருக்கையால் அதினாலவன் ஸ்ருஷ்டிக்க முடியாதென்று ஸமாதாநம் சொன்னதாயிருக்கிறது ௩-௨-௫.

ஸூ. ௩-௨-௬. தேஹயோகாத்வா ஸோऽபி.

(ப-வ.) ஸோऽபி - அதுவும், தேஹயோகாத்வா - சரீரஸம்பந்தத்தினாலுண்டாகிறது. ௩-௨-௬.

(ப-ஸா.) ஜீவன் ஈஶ்வராம்சமாகில் இவனுக்கு ஸத்ய ஸங்கல்பத்வாதிகள் மறைந்திருப்பானேனென்னில், ஸம்ஸாரதசையில் ப்ராக்ருத ஸம்பந்தத்தினால் அவைமறைந்திருக்கின்றன என்று ஸித்தாந்தம். ௩-௨-௬.

ஸூ. ௩-௨-௫. பராபித்யாநாத்து திரோஹிதம் ததோஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ.

(ரா-வ.) பராபித்யாநாத் - பரமபுருஷ ஸங்கல்பத்தினால், திரோஹிதம்-மறைக்கப்பட்டது, தத:-அந்த பரமாத்மாவினிடத்திலிருந்து, அஸ்ய - இந்த ஜீவனுக்கு, பந்தவிபர்யயௌ - ஸம்ஸாரமோக்ஷங்கள் (உண்டாகின்றன.) ௩-௨-௫.

(ரா-ஹா.) ஜீவனுக்கு ஸத்யஸங்கல்பத்வம் ஸ்வாபாவிகமானால் அது ஸம்ஸார தசையில் மறைந்திருப்பானென்னென்னில் இவனுடைய கர்மாநுகுணமாக பரம புருஷ ஸங்கல்பத்தினால் மறைந்துபோகிறது. இவனுடைய ஸம்ஸாரமும் மோக்ஷமும் பரமபுருஷ ஸங்கல்பத்தினாலேயே யுண்டாகிறது. ௩௧௮.

ஸூ - ௩௧௯. தேஹயோகாத்வா ஸோபி.

(ரா-வ்யா.) ஸோபி - அந்தஸத்யஸங்கல்பத்திற்குமறைவும், தேஹயோகாத் - சரீரஸம்பந்தத்தினால் (உண்டாகிறது). ௩௧௯.

(ரா-ஹா.) இப்போது இந்த சரீரமாகிற அசித்தின் ஸம்பந்தத்தினாலும் ப்ரளயத்தில் ஸூக்ஷ்மமான அசித்தின் ஸம்பந்தத்தினாலும் ஜீவனுக்கு ஸத்யஸங்கல்பத்வம் கார்யகரமல்லாமற் போய்விடுகிறது. ௩௧௯.

ஸூ. ௩௨௦. ஸூசகச்ச ஹி ச்ருதேராசக்ஷதே ச தத்விதஃ.

(ரா-வ்யா.) ச்ருதேஃ - வேதவாக்யத்தினால், ஸூசகச்ச-(ஸ்வப்நம் சுபாசுபங்களுக்கு) ஸூசகமாகவுமாகிறது. (என்று நிச்சயிக்கப்படுகிறது). தத்விதஃ - ஸ்வப்நசாஸ்த்ர மறிந்தவர்கள், ஆசக்ஷதே ச-(ஸ்வப்நம் சுபாசுப ஸூசகமென்று) சொல்லுகிறார்கள். ௩௨௦

(ரா-ஹா.) ஸ்வப்நத்தில் ஸ்த்ரீயைப்பார்த்தால் ஸம்பத்து உண்டாகிறதென்றும் கறுத்த புருஷனைப்பார்த்தால் அநிஷ்ட மூண்டாகிறதென்றும் சொல்லிற்று. ஜீவன் ஸ்வப்நபதார்த்தங்களை ஸ்ருஷ்டித்தால் தன்னுடைய நன்மைக்காக நல்ல வஸ்துக்களையே ஸ்ருஷ்டித்து அதையே பார்ப்பன். அப்போது கெட்ட ஸ்வப்நம் ஒருவனுக்கும்வரக்கூடாது ஆகையால் அப்பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறவன்பரம புருஷன்; ஜீவனன்று. ௩௨௦.

ஸுஷுப்த்யதிகரணம். ஸூ. ௩௨௧. ததபாவோ நாடீஷு தச்ச்ருதேராத்மநி ச.

(ஸு-ரா-வ்யா) தச்ச்ருதேஃ - அம்மூன்றையும் (ஸ்தாநமாகச்) சொல்லுகையாலே, ததபாவஃ - ஸ்வப்நமில்லாமை, (உறங்குகை). நாடீஷு - நாடிகளிலும், ஆத்மநி ச - ஆத்மாவிலும், (உண்டாகிறது). ௩௨௧.

(ஸு-ரா - ஹா) "ஆஸு ததா நாடீஷு ஸ்ருப்தோ பவதி" அப்போது இந்நாடிகளில் உறங்குகிறானென்றும், "புரீததி சேதே" புரீதத் என்கிற ஸ்தாநத்தில் படுக்கிறானென்றும். "ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி" அப்போது பரமாத்மாவோடு சேருகிறானென்றும், ஆக இப்படி ஜீவன் ஸ்வப்நமில்லாம லுறங்கும்போதுநாடிகளிலும், புரீதத்திலும் பரமாத்மாவிலும் உறங்குகிறானென்றுமூன்றுஸ்தாநம் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு மூன்றிடத்திலும் ஒரேகாலத்தில் உறங்குகிறானா, அல்லது, ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொன்றிலுறங்குகிறானாவென்று ஸம்சயம்.—ஒருவனொருகாலத்தில் மூன்றிடங்களிலிருக்கக்கூடாமையாலே ஒவ்வொருகாலத்தில் ஒரோரிடத்தி லிருக்கிறானென்று பூர்வபக்ஷம்—ஒருவன் உப்பரிக்கையின்மேல் கட்டிலையும் அதின்மேல், மெத்தையையும் பரப்பிக்கொண்டு அதின்மேல் படுத்திருந்தால் அவன் உப்பரிக்கையில் படுத்தான். கட்டிலில் படுத்தான், மெத்தையில் படுத்தான் என்று ஒருவனுக்கே ஒரேகாலத்தில் மூன்றிலும் படுக்கை கூடுமாகையால், அதுபோலவே இங்கும் மூன்றிலும் படுக்கிறானென்று ஸித்தாந்தம். ௩௨௧.

ஸூ-௧௨௨. அத: ப்ரபோதோऽஸ்மாத்.

(ப-ரா-வ்ய.) அஸ்மாத்-இந்த பரமபுருஷனிடத்திலிருந்து, ப்ரபோத: - விழிக்கை (சொல்லப்படுகிறது). அத: - ஆகையால், (ஜீவன் பரமாத்மாவிடத்திற் படுக்கிறான்). ௩.௨.௮.

(ப-ரா-ஸா.) "ஸத ஆகம்ய ந விது: ஸத ஆகச்சாமஹே" என்றுஜீவன் விழிக்கும்போது பரமபுருஷனிடத்தில் நின்றும் வருகிறான், ஆகிலும் நானங்கிருந்து வந்தேனென்றறிகிறதில்லை என்று சொல்லுகையாலே உறங்கும்போது அவனிடத்திற் சேராமற்போனால் விழிக்கும்போது அவனிடத்திலிருந்து வரக்கூடாமையாலே ஸுஷுப்தி காலத்தில் நியமேந பரமபுருஷனிடத்திற்போய்ச் சேருகிறானென்று நிஶ்சயிக்கப்படுகிறது. ௩.௨.௮.

அதி-௭௭-ஸூ-௧௨௩. ஸ ஏவ து கர்மாநுஸ்ம்ருதிஶப்தவிதிப்ய:.

(ப-ரா-வ்ய) கர்மாநுஸ்ம்ருதிஶப்தவிதிப்ய: கர்மாநுபவத்தினாலும். அவனே நானென்கிற ஸ்மரணத்தினாலும், முன் சரீரத்துடனே யாகிறானென்ற வாக்யத்தினாலும், மோக்ஷோபாய விதானத்தினாலும், ஸ ஏவ - அவனே, (எழுந்திருக்கிறானென்று நிஶ்சயிக்கப்படுகிறது.) ௩.௨.௯.

(ப-ஸா.) ஜீவன் உறங்கும்போது பரமாத்மாவினிடத்தில் லயித்துவிடுகிறானென்று சொல்லி, விழிக்கும்போது அவனிடத்தில் நின்று மெழுந்து வருகிறானென்று சொல்லிற்று. அப்படி எழுந்து வரும்போது இந்த ஜீவனே எழுந்து வருகிறானா, அல்லது மற்றொருவனும் எழுந்து வந்து இந்த சரீரத்தில் பிரவேசிக்கலாமாவென்னில்,—அவனே வந்து இதில் பிரவேசிக்கவேணும், மற்றொருவன் பிரவேசித்தானாகில், சரீரத்தில் நேற்றிருந்த ஜீவன் ஒரு கார்யத்தைச் செய்யத்தொடங்கி அது முடிவதற்குமுன் உறங்கிவிட இன்றைக்கு அவனல்லாத மற்றொருவன் அதின் வகையையறியானாகையால் அவனால் அக்காரியத்தை மேல்நடத்தி முடிக்கப்போகாது. தொடங்கினவனே அக்காரியத்தை முடிய நடத்தவேணும். இதனால் நேற்றிருந்தவனே இன்றும் இச்சரீரத்தில் பிரவேசித்தானென்று ஒப்புக்கொள்ளவேணும். மேலும், நேற்றுத்தான் நேரேபார்த்து அநுபவித்ததை இன்றறிகிறான். இவன் வேறுஜீவனாகில் இதுவும் சரிப்படாது. வேதமும் "த இஹ வ்யாக்ரோ வா ஸிம்ஹோ வா யத்³ப⁴வந்தி" உறக்கத்தில் பரப்ரஹ்மத்தில் லயித்திருந்த ஜீவன் மறுநாள் எழுந்திருந்துவந்து, நேற்று எப்படியிருந்தானோ, புலியாகவோ, ஸிம்ஹமாகவோ. இன்றும் அந்த புலியாக வோ ஸிம்ஹமாகவே ஆகிறான், என்று நேற்றும் இன்றும் ஒரு ஜீவனே இந்தசரீரத்தில் பிரவேசிக்கிறானென்று சொல்லுகிறது. மேலும் யாகாதிகளையும் பரமாத்மோபாஸனத்தையும் விதிக்கிற வேதங்கள், நேற்றுள்ள ஜீவனின்றைக்கு வந்தால் மாத்திரமே சரிப்படும். இல்லையாகில் உபயோகமற்றதாம். உறங்கின மாத்திரத்தில் அவன் பரமாத்மாவில்லயித்து முக்தனாய் விட்டானாகில், எல்லோருமே ஸுகமாக உறங்கி முக்தியடைவதைவிட்டு கடினமாகிய யோகாப்யாஸாதிகளை யார்தான் செய்வார்கள்? இன்றைக்கு ஒருவனுறங்கி ப்ரஹ்மத்தில்லயித்து முக்தனாய் விடுகிறான். மறுநாள், இதுவரையில் இம்மாதிரி முக்தனான மற்றொருவனெழுந்து வருகிறானென்றால், முக்தியென்பது அநித்யமாய்விடும். ஸம்ஸாரத்தை மறித்து எப்போதும் திரும்பி யடையாமற்படி யிருக்கவேணுமென்று முக்திக்கு யத்நம் செய்கிறார்கள். அந்த முக்தி இம்மாதிரியாய்விட்டால் அதை ஒருவரும் விரும்பார்கள். ஒரு குளத்

தில் ஒருதுளி நீரைவிட்டு மறுநாள் அவன் அக்குளத்தில் நீரை மொள்ளும்போது முதல்நாள்விட்ட துளியையே யெடுக்கிறனென்ற நியமமில்லை, அதுபோல், நேற்று உறங்கி ப்ரஹ்மத்தில் லயித்தவனே இன்றைக்கு வருகிறனென்ற நியமமில்லை யெ ன்னில்,—நேற்றுப்பொகட்ட நீர்த்துளியைக் கண்டுபிடிக்க இவனால் முடியாதாகை யால் அதை யெடுக்க முடியாது; இங்கு இந்தஜீவனுடைய கர்மபேதங்களையும் அவி த்யா பேதங்களையும் கண்டு ஸர்வஜ்ஞனான ஜீவன் எடுத்துவிடுகிறனாகையால் நேற் றுப்போனவனே வரலாம். பாலில் கலந்த நீரை நம்மால் பிரிக்க முடியாதபோதி லும், அதையறிந்து ஹம்ஸம் பிரித்தெடுப்பதுபோல் இந்த ஜீவனை நாமறியாவிடினும் பரமாத்மா அறிந்து எடுத்துவிடக்கூடும். ௩.௨.௯.

(ஶ்ரீ-பா.) ஸுஷுப்திக்கநந்தரம் விழிக்கும்போது பரமாத்மாவினிடத்திலி ருந்து வருகிறவன் முன்புபோய்ச் சேர்ந்தவனு, அல்லது வேறொருவனு என்று ஸம் சயம்.—முன்புள்ளவன் கரணகளேபரங்களைவிட்டு பரமாத்மாவில் லீநமாய் முக்த னைப்போலேயாய் விட்டபடியால் அவன் திரும்பி வருகிறதில்லை ஆகையால் அங்கி ருந்து அநந்தரம் வருகிறவன் வேறொருவன் என்று பூர்வபக்ஷம்—ஸுஷுப்தியில் ப்ரஹ்மத்தில் லயிக்கிற ஜீவனுக்கு தத்வஜ்ஞாநமில்லாமையாலே, அவன் முன்புசெ ய்த புண்யபாபங்களை அவனே அநுபவிக்கவேண்டுமாகையால் அதற்காக அவனே வரவேண்டும். மேலும் நானே முன் இக்காரியம் செய்தேன். பின்புறங்கினேன். இப்போது விழித்தேன் என்கிறன்; இதனாலும் அவனும்இவனு மொருவனே யாகவே ண்டும். மேலும் "ஸஇஹவ்யாக்ரோவா ஸிம்ஹோவா" இத்யாதி வாக்யத்தில் விழித்த அநந்தரம் முன்யாராயிருந்தானே,அவனேயே யாகிறனென்றும் சொல்லுகி றது. உறங்கினமாத்திரத்தில் முக்தனைப்போனல் மோக்ஷப்ராப்திக்காக உபாயங் களை விதிக்கிற சாஸ்த்ரங்கள் நிஷ்ப்ரயோஜநங்களாய்விடும். இந்த ஹேதுக்களினுல் முன்புபோய்ச் சேர்ந்தவனே திரும்பிவருகிறனென்று ஸித்தாந்தம். ஸுஷுப்தி காலத்தில் கரணகளேபரங்களை விட்டுதூங்கி டையாது விழித்திருக்கும்போது வேலை செய்து ஆயாஸமுண்டானல் அதைத்தீர்த்துக்கொள்ளுகைக்காகச் சிறிதுகாலம் வ்யாபார சூன்யனுயிருக்கிறன் ஆகையால் முக்தனைப்போலாகமாட்டான். ௩.௨.௯.

அதி-௭அ ஸூ-௩.௨.௰. முக்தேऽர்த்தஸம்பத்தி: பரிசேஷாத்

(ஸ.பா-வ்ய.) முக்தே-மூர்ச்சையடைந்தவனிடத்தில், (காண்கிற அவ ஸ்த்தை), பரிசேஷாத் - மூர்ச்சவருகை முதலியவை காண்கையாலே. அர்த்தஸம்பத்தி: (மரணத்தில்) பாதியவஸ்த்தை யாகிறது. ௩.௨.௰.

(ஸ-பா-ஸா.) மூர்ச்சாவஸ்த்தை மரணத்திற் சேர்ந்ததா, வேறானதா வென்று ஸம்சயம்.—இந்த்ரிய வ்யாபாரங்களும் ப்ராணவ்யாபாரங்களும் காணுமையாலே மரணவஸ்த்தையேயென்று பூர்வபக்ஷம்—மரணத்திற் காண்கிற விகாரம் மூர்ச்சை யில் சரீரத்திற் காணுமையாலும் கொஞ்சமாக மூச்சுவருகையாலும் மூர்ச்சை தெ ளிந்தபின் எழுந்திருக்கையாலும் இது மரணவஸ்த்தையன்று. மூச்சு ஒடுங்கியிருக் கிறபடியால் ஜாகராவஸ்த்தையுமன்று. அதைக்காட்டில் வேறானஅவஸ்த்தை என்று ஸித்தாந்தம். ௩.௨.௰.

அதி-௭௯-ஸூ-௩.௨.௧௧. ந ஸ்தாநதோऽபி பரஸ்யோபய

லிங்கம் ஸர்வத்ர ஹி.

(ஸ.வ்ய.) பரஸ்ய - பரமாத்மாவுக்கு, ஸ்தாநத:அபி - உபாதியினு லும், உபயலிங்கம்-ஸாகாரம் ஸாகார நிராகாரம் என்கிற இரண்டு லிங்கங்

களும், ந - கிடையாது, ஸர்வத்ர ஹி - வேதத்தில் எல்லா விடங்களிலும் (அப்படியே சொல்லியிருக்கிறது.) கஉரு.

(ரா - ஸூ) ஸ்தாநத: - (மநுஷ்யாதிசரீரத்தில்) ஸ்த்தியினால் (உண்டான தோஷம்), பரஸ்ய - பரமபுருஷனுக்கு, ந - ஸம்பவிக்கிறதில்லை. ஸர்வத்ர - வேதசாஸ்த்ரங்களிலெங்கும், உபயலிங்கம் - நிர்தோஷத்வம் கல்யாணகுணத்வமாகிற இரண்டு ஸ்வரூபமும் (பரமாத்மாவுக்குச் சொல்லப்பட்டது.) க-உரு.

(மு-ஸா.) ஜீவனுறங்கும்போது உபாதி கழிந்து ப்ரஹ்மத்தில் லீநமாகிறுனென்றது.—வேதத்தில்சிலவிடங்களில்,"ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ:" அந்த பரமாத்மாவாகிய ப்ரஹ்மம், ஸகலகர்மங்களையுடையது, ஸகலவிதமான போக்யவஸ்துக்களையுடையது, ஸர்வவித பரிமளங்களையுடையது, எல்லா ரஸங்களையுடையது என்று ப்ரஹ்மத்துக்குக் குணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. சில விடங்களில், "அஸ்தூலமநண்வஹ்ரஸ்வமதீர்க்கம்" அந்த ப்ரஹ்மம், மஹத்தன்று, நுண்ணியதன்று, சிறியதுமன்று, பெரியதுமன்று என்று ஸ்த்தௌல்யம் கார்ஶ்யம் முதலிய குணங்கள் ஒன்றுமே கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது; இவ்விரண்டில் எது உண்மை, எது பொய்; ஒரே ப்ரஹ்மம் குணவத்தாகவும் குணஶூந்யமாகவுமாகமாட்டாது. ஆகையால் இவ்விரண்டில் ஏதோ ஒருபடியாக இருக்கிறதென்றே சொல்லவேணும். இவ்விருவகையுமுண்மையாக மாட்டாது.—ப்ரஹ்மத்துக்கு நிர்க்குணமாயிருக்கை ஸ்வபாவம், உபாதியின் ஸம்பந்தத்தினால் அந்த ப்ரஹ்மமே ஸகுணமுமாகிறதென்னில்,—ஸ்வச்சமான ஸ்வபாவத்தையுடைய ஸ்படிகம் செகப்பு முதலிய மற்றொரு வஸ்துக்களின் ஸம்பந்தத்தினால் தன்ஸ்வபாவத்தைவிட்டு அவ்வஸ்துவைப்போல் செகப்பாக எப்படியாகாதோ, அப்படியே நிர்க்குண ஸ்வபாவமாகிய ப்ரஹ்மம், உபாதியின் ஸம்பந்தத்தினால் அந்த ஸ்வபாவத்தைவிட்டு ஸகுணமாக எப்படியாகும். ஶ்ருதி சொல்லுகிறபடியே ப்ரஹ்மத்துக்கு ஸகுணம் நிர்குணம் என்கிற இரண்டு ஸ்வபாவத்தையும் ஒப்புக்கொள்வோமென்னில். அவை ஒன்றுக்கொன்று விருத்தங்களாகையால். அவ்விரண்டு ஸ்வபாவங்களும் ஒன்றில் சேராது. ஆகையால் எந்த ஸ்வபாவத்தைவிடலாம், எந்த ஸ்வபாவத்தைக் கைக்கொள்ளலாமென்னில்,—வேதங்களில் ப்ரஹ்மம் ஸகுணம் என்கிற வாக்யங்களுங்கூட முதல் ஸகுணமென்று சொல்லிப் பின்பு நிர்க்குணமென்று சொல்லுகையாலும், மற்ற வாக்யங்கள் முதலிலே தொடங்கி நிர்க்குணமென்றே சொல்லுகையாலும் இப்படி நிர்க்குணவாக்யம் அதிகமாயிருக்கையால் ப்ரஹ்மம் நிர்க்குணமென்பதே ஸித்தாந்தம். கஉசு.

(ரா-ஸா.) ஜீவன் சரீரத்திலிருப்பதினால் தோஷவானாகிறாப்போல் ஸர்வத்திலும் அந்தர்யாமியாயிருக்கிற பரமபுருஷன் தோஷவானாகிறுனு, இல்லையா என்று ஸம்சயம்—ஸர்வாந்தர்யாமியானவன் மலாதிகளில் ஸ்வேச்சையினாலுங்கூட அந்தர்யாமியாயிருக்கை ஹேயமாகையாலே அவனுக்கு அதினால் தோஷமுண்டு என்று பூர்வபக்ஷம்—வஸ்துக்கள் அவனவனுடைய கர்மாநுகுணமாகவே ஒருவனுக்கொன்று ஹேயமாயும் மற்றொருவனுக்கு உபாதேயமாயுமாகிறது. பரமபுருஷனுக்கு அப்படிப்பட்ட புண்யபாபரூபகர்மங்களில்லையாகையால் மலாதி ஸம்பந்தம் ஹேயமாகமாட்டாது. "அபஹதபாப்மா" இத்யாதி வாக்யங்களில் பரமபுருஷனுக்கு தோஷமே கிடையாதென்றும் "ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" இத்யாதி வாக்யங்களில் அநேககல்யாண குணங்களுண்டென்றும் சொல்லுகையாலே பரமாத்மா நிர்தோஷன் என்று ஸித்தாந்தம். கஉசு.

ஸூ-௩௨௬. [Grantha text]

(ஸ-வ) [Grantha] - (உபாஸநப்ரகரணங்களில்) பேதம் சொல்லியி ருக்கையாலே, ந - ப்ரஹ்மம் நிர்க்குணமன்று, இதிசேத் - என்றால், [Grantha] - ஒவ்வொரு ப்ரகரணங்களிலும், [Grantha] - நிர்க்குணமென் கையாலே, ந - ப்ரஹ்மம் ஸகுணமன்று. ௩உ௬.

(ரா-வ) [Grantha] - ஸ்த்திதிபேதத்தினாலே, (பரமாத்மாவுக்கும் தோஷமுண்டு), இதிசேத் - என்றால், [Grantha] - ஒவ்வொரு வாக்யத் திலும், [Grantha] - தோஷசூந்யனென்று சொல்லுகையாலே, ந - தோ ஷவானாகமாட்டான். ௩உ௬.

(ஸ-ஸா) உபநிஷத்துக்களில், முப்பத்திரண்டு வித்யைகள் சொல்லியிருக்கி ன்றன. அதாவது - ப்ரஹ்மத்தை இத்தனை விதமாக உபாஸநம் செய்யவேணுமெ ன்று. அப்படி உபாஸநம் முப்பத்திரண்டு விதமாகைக்குக்காரணம் - ஒருவித்யை யில் உபாஸ்யமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மகுணங்களை மற்றொருவித்யையில் சொ ல்லாமல், அதில் உபாஸ்யமாக வேறுப்ரஹ்மகுணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த விஷயம் மேல் மூன்றும்பாதத்தில் விசதமாகும். இப்படி ஒவ்வொரு உபாஸந கட்டங்கள்தோறும் ப்ரஹ்மத்துக்கு வெவ்வேறு குணங்களைச் சொல்லுகையால், இப் படி அநேக குணமுள்ள ப்ரஹ்மத்தை நிர்க்குணமென்று சொல்லமுடியாது, ஆகை யால், ப்ரஹ்மத்தின் ஸ்வபாவம் நிர்க்குணமென்றும், ஸகுணஸ்வபாவம் உபாதியி னால் வந்ததென்று மொப்புக்கொள்ளவேண்டும்; இப்படி சொல்லாவிடில், ஸகுண மென்று சொல்லுகிற வேதங்களெல்லாம் பொய்யாய்விடும் என்னில், — ஒன்றுக்கு இரண்டாகாரம் சேராதென்பதை முன்னமேசொன்னோம்; ஸகுணமென்று சொல் வது - ப்ரஹ்மத்தை ஸகுணமாக உபாஸநம் செய்யவேணுமென்கைக்காக. ஆகையி னாலேயே, அந்தந்த உபாஸந கட்டங்களில் கடைசியில், '[Grantha]' என்றுதுடங்கி எல்லாவிடங்களிலும் ப்ரஹ்மம் ஏகாகாரமே, இரண்டாகாரம் கிடை யாது என்று முறையிடுகிறது. ஆகையால் ப்ரஹ்மம் நிர்க்குணமென்பது ஸித்தம்.

(ரா-ஸா.) ஜீவனுக்கும் தோஷஸம்பந்தம் ஸ்வபாவஸித்தமன்று, ஆயினும் தே வாதி சரீரஸம்பந்தத்தினால் தோஷவானாகிறான்; அதுபோல் ஸ்வபாவத்தினால் தோ ஷசூந்யனான ஸர்வேச்வரனுக்கும் ஸகலாந்தர்யாமியா யிருக்கையைப்பற்றி தோஷ ஸம்பந்த முண்டாகலாமென்னில், அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் ஒவ்வொரு வாக்ய த்திலும் ப்ருதிவ்யாதிகளுக்கு அந்தர்யாமியாயிருக்கிறான், அவனுக்கு தோஷஸம் பந்தமில்லை என்று சொல்லுகையாலே அந்தர்யாமியாயிருக்கை இவனுக்கு தோஷ ஹேதுவாகமாட்டாது. ௩உ௬.

ஸூ-௩௨௭. [Grantha text]

(ஸ-வ) [Grantha] - பின்னும், [Grantha] - இப்படியே, [Grantha] - ஒருசா கிகள் சொல்லுகிறார். ௩உ௭.

(ஸ-ஸா.) '[Grantha]' என்று ஒருசாகையில், ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறான இரண்டாவது வஸ்துகிடையாது. எவன் அப்படி இரண்டாவதுவஸ்து இரு க்கிறதென்றறிகிறானோ, அவன் ஸம்ஸாரத்திலேயே உழலக்கடவன் என்று, ப்ரஹ்மத் தைக்காட்டிலும் வேறாக ப்ரஹ்மகுணம் முதலானவை யுண்டென்றறிகையை நிந்தி க்கையால் ப்ரஹ்மம் நிர்க்குணமென்பது ஸித்தம். ௩உ௭.

(ரா-பா.) "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" என்கிற ஶ்ருதியில் ஜீவனும் ஈஶ்வரனும் ஒருசரீரத்திலிருக்கிறார்கள். அதில் ஜீவன் கர்மபலத்தை அநுபவிக்கிறான். ஈஶ்வரன் அநுபவிக்கிறதில்லை என்று சொல்லுகையாலே கர்மபலாநுபவரூபமான கீழ்ச்சொன்ன தோஷம் ஈஶ்வரனுக்குக்கிடையாது. ௩.௨.௭

ஸூ-௩-௨-௮. அரூபவதேவ ஹி தத்ப்ரதாநத்வாத்.

(ஶ-ப்ர) தத்ப்ரதாநத்வாத் - நிர்க்குணப்ரஹ்ம ப்ரதிபாதநத்திலே ப்ரதாநங்களாகையாலே, அரூபவதேவ ஹி - (ப்ரஹ்மம்) ரூபம் முதலானவை அற்றதென்றே நிஶ்சயிக்கப்படுகிறதன்றோ. ௩.௨.௮.

(ரா-ப்ர.) ப்ரதாநத்வாத் - நிர்வாஹகனாகையாலே, தத்-அந்தப்ரஹ்மம், அரூபவத் - ரூபசூந்யம். ௩.௨.௮.

(ஶ-ஹா.) ப்ரஹ்மம் ஸகுணமென்று சிலவாக்யங்களும் நிர்க்குணமென்று சில வாக்யங்களும் சொல்லியிருக்க, அவ்விரண்டில் நிர்க்குண வாக்யங்களையே முக்யமாக அங்கீகரிப்பானேனென்னில்,—ஸகுணவாக்யம் ப்ரஹ்மஸ்வரூபத்தைச்சொல்வதற்காக வந்ததன்று; அது உபாஸநத்தைச் சொல்வதற்காகவந்தது, ஆகையால் அதுப்ரஹ்மஸ்வரூப நிரூபணத்தில்ப்ரதாநமாகமாட்டாது. நிர்க்குணவாக்யம், அதைப்போல் வேறொன்றைச் சொல்லவந்ததன்றிக்கே, ப்ரஹ்மஸ்வரூபத்தைச் சொல்வதற்காகவே வந்ததாகையால் அந்தவாக்யமே முக்யப்ரமாணமாகக்கடவது. அதைக்கொண்டு ப்ரஹ்மம் நிர்க்குணமென்று நிஶ்சயிக்கப்படுகிறது. ௩.௨.௮.

(ரா-ஹா.) ஜீவன் சரீரஸம்பந்தத்தினால் நாமரூபங்களையடைந்து ஸுகதுக்கங்களையநுபவிக்கிறான். அதுபோல் ஈஶ்வரனும் சரீரவானாகையாலே, இவனுக்கும் நாமரூபங்களும் அதினால் ஸுகதுக்கங்களுமுண்டு என்னில்,—ஜீவன் சரீரத்தில் தன்னுடைய கர்மாநுகுணமாக ஸுகதுக்கங்களையநுபவிக்கைக்காகவிருக்கிறான். ஈஶ்வரன் ஜீவனுக்கு அக்கர்மாநுகுணமாக பலம் கொடுக்கைக்காக இருக்கிறானாகையால் கர்மாநுபவம் பண்ணிவைக்கிற இவனுக்குக் கர்மாநுபவத்துக்குக் காரணமாகிய நாமரூபங்களும் தத்ப்ரயுக்ததோஷமும் கிடையாது. ௩.௨.௮.

ஸூ-௩-௨-௯. ப்ரகாஶவச்சாவையர்த்யாத்.

(ஶ-ப்ர) ப்ரகாஶவச்ச - தேஜஸ்ஸைப்போல், அவையர்த்யாத் - (ஸகுணவாக்யங்களுக்கு) ப்ரயோஜநமில்லை யென்பதில்லை. ௩.௨.௯.

(ரா-ப்ர) அவையர்த்யாத்-(குணபோதகவாக்யங்களுக்கு) வையர்த்யம்வாராமைக்காக, ப்ரகாஶவச்ச-ப்ரகாசஸ்வரூபம்போலவே, (குணவானென்று மங்கீகரிக்கவேண்டும்.) ௩.௨.௯.

(ஶ-ஹா.) ஆகில், ப்ரஹ்மம் ஸகுணம் என்று சொல்லுகிற வாக்யங்கள் பொய்யைச் சொன்னதாய், அப்ரமாணங்களாகும், வேதத்தில் சில வாக்யங்கள் ப்ரமாணங்களென்றும் சில அப்ரமாணங்களென்றும் ஒப்புக்கொள்வது சரியன்றேயென்னில்,—நாங்கள் ஸகுணவாக்யங்களை அப்ரமாணங்களென்று சொல்லவில்லை. வேதத்தில் அப்ரமாண வாக்யங்களே கிடையாது. ஸகுணவாக்யங்கள், ப்ரஹ்மத்துக்கு ஸகுணம் ஸ்வபாவம் என்று சொல்லமாட்டாதுகள் என்றே சொன்னோம். அந்த ஸகுணமென்பது ப்ரஹ்மத்துக்கு ஸ்வபாவமாகாவிடினும், உபாதிஸம்பந்தத்தினால்

வந்தது. அது ப்ரஹ்மத்துக்கு ஸஹஜ தர்மமாகமாட்டாது. எப்படியெனில்,—வெய்யில் நிலா முதலியவை ஆகாசமெங்கும் ஏகாகாரமாகப் பரவியிருக்கிறது. அதில் குறுக்காகக் கையையாவது கட்டையையாவது பிடித்தால், கட்டை முதலியவை கோணலாயிருந்தால் அவ்விடத்தில் வெய்யிலும் கோணலாகக்காண்கிறது. அப்படி கோணலாயிருக்கை, கட்டைமுதலிய உபாதியினால்வந்தது ஆகையால் அதுவெய்யிலுக்கு ஸ்வபாவமாகமாட்டாது, அதை எடுத்துவிட்டால் முன்போல ஏகாகாரமாகவே காணும், அதுவே அதுக்கு ஸ்வபாவம். அதுபோல் இங்கும் உபாதி நசித்துவிடில் அதினாலுண்டான ஸகுணமான ஆகாரம்போய் ஸ்வாபாவிகமான நிர்க்குணமான ஆகாரமே தோற்றும் என்றே சொன்னோம். இந்த்ரஜாலத்தில் காண்கிற வஸ்துக்கள் பொய்யாயினும், இந்த இந்தவிதமாயிருக்கும், இந்த்ரஜாலத்தில் காண்கிற வஸ்துக்கள் என்கிற வாக்யம் அப்ரமாணமன்றே, அதுபோல் ஸகுணவாக்யமும் அப்ரமாணமன்று. ௰௨௧.

(ரா-வா.) "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்தில், ப்ரஹ்மத்துக்கு ஸ்வயம் ப்ரகாசமான ஜ்ஞாநமே ஸ்வரூபமென்று சொல்லியிருக்க அவனுக்குக் குணங்களை எப்படி யங்கீகரிக்கலாமென்னில், அவ்வாக்யாநுகுணமாக ஜ்ஞாநஸ்வரூபமங்கீகரித்தாற்போல் "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதியான அவனுக்கு ஜ்ஞாநாதிகுணங்களைச் சொல்லுகிற வாக்யாநுகுணமாக கல்யாணகுணமுங்கூட யங்கீகரிக்கவேண்டும். ௰௨௧.

ஸூ-௰௩. ஆஹ ச தந்மாத்ரம்.

(ம-வ்யா) தந்மாத்ரம்-(ப்ரஹ்மத்துக்கு) ஜ்ஞாநமாத்ரத்தையே (ஆகாரமாக) ஆஹ - சொல்லுகிறது (வேதம்) ௰௩௦.

(ரா-வ்யா.) தந்மாத்ரம் - ஜ்ஞாநஸ்வரூபமாத்ரத்தையே; ஆஹ ச - (ஸத்யம்ஜ்ஞாநம், என்கிற ஶ்ருதி) சொல்லிற்று. ௰௩௦.

(ம-வா.) "யதா ஸைந்தவகநோऽநந்தரோऽபாஹ்ய: க்ருத்ஸ்நோ ரஸகந ஏவைவம் வா அரேऽயமாத்மாऽநந்தரோऽபாஹ்ய: க்ருத்ஸ்ந: ப்ரஜ்ஞாநகந ஏவ" உப்பானது உள்ளே ஒரு ரஸம் வெளியில் ஒரு ரஸம் என்றில்லாமல் எல்லாம் லவணரஸமாயே எப்படியிருக்கிறதோ, அப்படியே ப்ரஹ்மமும் உள்ளே ஒருவிதம்வெளியிலொருவிதமென்றில்லாமல் உள்ளும் வெளியு மெங்கும் ஜ்ஞாநஸ்வரூபமாயே யிருக்கும் என்று உபநிஷத்தில் சொல்லியிருக்கையால், ப்ரஹ்மம் ஜ்ஞாநஸ்வரூபமே, அதில் மற்றொரு குணம் கிடையாது என்பது ஸித்தம். ௰௩௦.

(ரா-வா. "ஸத்யம்ஜ்ஞாநம்" இத்யாதி ஶ்ருதி பரப்ரஹ்மம் ஜ்ஞாநஸ்வரூபனென்று சொல்லிற்றொழிய அவனுக்குக் குணமில்லை யென்று சொல்லவில்லை யாகையால் அவனுக்குக் கல்யாணகுணங்க ளுண்டென்பதில் அந்த ஶ்ருதி பாதகமாகாது. ௰௩௦.

ஸூ-௰௪. தர்சயதி சாதோ அபி ஸ்மர்யதே.

(ம-வ்யா.) ச அபி - மேலும், (தர்சயதி - ப்ரஹ்மம் நிர்குணம் என்று) சொல்லுகிறது. ஸ்மர்யதே - (அப்படியே) ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிறது.

(ரா-வ்ய.) ஸர்வ - ஸகலவேதமும், உபயலிங்க-(பரமபுருஷன் ஹேயப்ரத்யநீகன் கல்யாணகுணாகரன் என்று) வேதம் சொல்லுகிறது. ஸ்ம்ருதேச்ச - ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிறது. ந.கூ.க.

(ஶ-ஹா.) உபநிஷத்தில் முன்னம் ப்ரபஞ்சம் முதலிய பேதத்தைச்சொல்லி, அதன்பிறகு "அதாத ஆதேஶோ நேதி நேதி" இனிப்ரஹ்மஸ்வரூபத்தை உள்ளபடி சொல்லுகிறேன். கீழ்ச்சொல்லிய ப்ரபஞ்சம் ஒன்றுமில்லையாது என்று அத்வைதத்தையே சொல்லுகிறது. "யதோ வாசோ நிவர்த்தந்தே | அப்ராப்ய மநஸா ஸஹ" ஒரு வஸ்துவைச் சொல்லவும் நினைக்கவும் வேணுமாகில் அதின்குணத்தையிட்டுச் சொல்லவேணும். ப்ரஹ்மம் நிர்க்குணமாகையால் வேதங்கள் அதின் ஸ்வரூபத்தைச் சொல்லவும் நினைக்கவும் மாட்டாமல் திரும்பிவந்து விடுகிறது கள் என்றும் சொல்லுகிறது. இம்மாதிரி அத்வைதம் சொல்லுகிற ஶ்ருதிகளுமுண்டாகையால் ப்ரஹ்மம் நிர்க்குணமென்பது ஸித்தம். ந.கூ.க

(ரா-ஹா.) "நிஷ்கலம் நிஷ்க்ரியம்" இத்யாதிவாக்யம் பரமபுருஷனை தோஷமற்றவனென்றும் "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்" இத்யாதி வாக்யம் கல்யாணகுணாகரனென்றும், இப்படியே கீதையிலும் சொல்லுகையாலே இவன் ஸகலஹேய ப்ரத்யநீகனும் ஸமஸ்தகல்யாணகுணாகரனுமிருக்கிறானென்று அங்கீகரிக்கவேணும். ந.கூ.க.

ஸூ-ந.கூ.உ. அத ஏவ சோபமா ஸூர்யகாதிவத்"

(ஶ-வ்ய.) அத ஏவ - ஆகையாலே, ஸூர்யகாதிவத் - ஸூர்யன் முதலானவற்றைப்போல் (என்று) உபமா - த்ருஷ்டாந்தம் சொல்லப்பட்டது.

(ரா-வ்ய.) அத ஏவ - ஆகையினாலேயே, ஸூர்யகாதிவத் - ஸூர்யன் முதலானவைபோல, (என்று) உபமா - உபமாநம் சொல்லப்படுகிறது.

(ஶ-ஹா.) ப்ரஹ்மம் ஜ்ஞானஸ்வரூபம், நிர்க்குணம், சொல்லவும் நினைக்கவும் போகாது. சிஷ்யனுக்கு ப்ரஹ்மஸ்வரூபத்தை உபதேசிக்கும்போது, இதுவன்று இதுவன்று என்று மற்ற வஸ்துக்களைக் கழித்தால் மிகுந்ததைப்ரஹ்மமென்றறியென்றே உபதேசிக்கவேணும்என்றும் கீழ்ச்சொல்லிற்று. இதற்கநுகுணமாகவே த்ருஷ்டாந்தமும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது—"யதா ஹ்யயம் ஜ்யோதிராத்மா விவஸ்வாநபோ பிந்நா பஹுதைகோऽநுகச்சந்" என்று தொடங்கி, ஸூர்யன் ஒருவன் ஆயினும், நீர்நிறைந்த அநேகம் கலசங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவனாய்ப் பல ஸூர்யர்களாய்க் காண்கிறான். அதுபோலவே ப்ரஹ்மமும் நிர்க்குணமாய் ஏகாகாரமாயிருக்கச்செய்தேயும், அந்தஃகரண ரூபவுபாதியின் ஸம்பந்தத்தினால் அநேகமாயும் ஸகுணமாயும்காண்கிறது என்று, இதனாலும் ப்ரஹ்மம் நிர்க்குணமென்பது ஸித்தம். ந.கூ.உ.

(ரா-ஹா.) பரமபுருஷன் ப்ருதிவ்யாதிகளிலிருந்தாலும் அதினால் எவ்விதமானதோஷமும் அவனுக்குக் கிடையாதென்பதற்கு, ஸூர்யன் ஜலத்தில் ப்ரதிபலித்தாலும் அந்த ஜலத்திலுள்ள தோஷம் ஸூர்யனுக்கு நேரிடாதாப்போலவும், எங்கும் வ்யாபித்த ஆகாசம் கடத்துக்குள்ளிருந்தாலும் அதின் தோஷமாகாசத்திற்கு ஸம்பவியாதாப்போலவும் பரமபுருஷன் ப்ருதிவ்யாதிகளிலிருந்தாலும் அவற்றிலுள்ள தோஷங்கள் இவனுக்கு ஸம்பவியாதென்று உபமானமாகச் சொல்லியிருக்கிறதும் ஸங்கதமாகிறது. ந.கூ.உ.

ஸூ-௩௩. ஜலவத்து-நக்ரஹணாந்நதயாத்வம்.

(ஸூ-வ்யா.) ஜலவத் - ஜலத்தைப்போல், அக்ரஹணாத் - க்ரஹிக்கப்படாமையால், ந ததாத்வம் - ஸூர்யனைப்போல் ஒன்றே அநேகமாகக் காண்கை யென்பது சரியன்று. ௩௩.

(ஸா-வ்யா.) ஜலவத் - ஜலத்தில் (ஸூர்யனைக்ரஹிப்பது) போல, அக்ரஹணாத் - (ப்ருதிவ்யாதிகளில் பரமாத்மாவை) க்ரஹிக்காமையாலே, ததாத்வம் - அப்படி நிர்தோஷனாயிருக்கை, ந - கூடாது. ௩௩.

(ஸூ-ஸா.) இதில் பூர்வபக்ஷம் சொல்லுகிறான்—ஜலத்தில் ஸூர்யனைப்போல் அந்தக்கரணத்தில் ப்ரஹ்மம் அநேகமாகவும் ஸகுணமாகவும் காண்கிறதென்று த்ருஷ்டாந்தம் சொன்னது சரியன்று. ஏனென்னில்,— ஸூர்யனுக்கு உருவமுண்டு, ப்ரஹ்மத்திற்கு அதில்லை. உருவமுள்ளதற்கே ப்ரதிபிம்பம் லோகத்தில் காண்கிறோம். ஸூர்யனைக்காட்டிலும் ஜலம் தூரத்திலிருக்கிறது. ப்ரஹ்மம் ஸர்வவ்யாபியாகையால் அந்தக்கரணமுள்ள விடத்திலேயேயிருக்கிறது. ஸூர்யனைக்காட்டிலும்ஜலம் வேறுபட்டது, அந்தக்கரணம் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறுபட்டதன்று. ஆகையால் அதை த்ருஷ்டாந்தமாகச் சொல்லக்கூடாது. ௩௩.

(ஸா-ஸா.) மேற்சொன்ன த்ருஷ்டாந்தம் இங்கு ஒவ்வாது. ஏனென்றால், ஜலத்திலில்லாத ஸூர்யனை ஜலத்திலிருக்கிறாப்போல ப்ரமிக்கிறார்கள். ஜலத்தில் ஸூர்யனில்லாமையால் ஜலத்திலுள்ள தோஷம் ஸூர்யனுக்கு ஸம்பவியாது. இங்கு அது போலன்றிக்கே வாஸ்தவமாகவே ப்ருதிவ்யாதிகளில் பரமாத்மா இருக்கையாலே அவற்றிலுள்ள தோஷம் இவனுக்கு ஸம்பவிக்கலா மாகையால் முன்சொன்னது த்ருஷ்டாந்த மாகமாட்டாது என்று பூர்வபக்ஷம். ௩௩.

ஸூ-௩௪. வ்ருத்திஹ்ராஸபாக்த்வமந்தர்பாவாதுபய

ஸாமஞ்ஜஸ்யாதேவம்-தர்சநாச்ச.

(ஸூ-வ்யா.) வ்ருத்திஹ்ராஸபாக்த்வம் - பெருப்பது சிறுப்பதென்கிற தர்மங்களையடைந்திருக்கை, அந்தர்பாவாத் - த்ருஷ்டாந்தத்திலும் தார்ஷ்டாந்திகத்திலும் சேர்ந்திருக்கையால், உபயஸாமஞ்ஜஸ்யாத்- த்ருஷ்டாந்ததார்ஷ்டாதிகங்கள் சரியானதாகையால்,ஏவம்-இப்படிசொல்லுகிறது.

இந்த பாஷ்யத்துக்கு "தர்சநாச்ச" என்பது வேறு ஸூத்ரம்.

(ஸூ-வ்யா.) தர்சநாத்ச-ஶ்ருதி சொல்லுகையாலும், (ப்ரஹ்மத்திற்கு உபாதி ஸம்பந்தமுண்டு.) ௩௪.

(ஸா-வ்யா.) அந்தர்பாவாத் - (ப்ருதிவ்யாதிகளில்) ஸ்த்திதியினால், (உண்டான) வ்ருத்திஹ்ராஸபாக்த்வம் - வளர்தல் குறைதல்களை யடைகை, (ஸம்பவியாது)(ஏனென்றால்),உபயஸாமஞ்ஜஸ்யாத் - இரண்டு த்ருஷ்டாந்தத்துக்கும் சேர்த்தியுண்டாகைக்காகவும், ஏவம்-இப்படி, தர்சநாத்ச - (வேறுத்ருஷ்டாந்தங்களில்) காண்கையாலும், (ப்ருதிவ்யாதிதோஷமிவனுக்கில்லையென்று நிச்சயிக்கப்படுகிறது. ௩௪.

(ஸூ-ஸா.) ரூபமற்ற ஆகாசத்திற்குப்போல் ரூபமற்ற ப்ரஹ்மத்துக்கும் ப்ரதிபிம்பம் இடையாதென்பது அநுசிதம். த்ருஷ்டாந்தத்தி லுள்ளவைகளெல்லாம் தார்ஷ்டாந்திகத்தில்வராது. ஏதாகாரமான ஸூர்யன் சிறியகலசத்தில் சிறியனாகவும்

பெரியகலசத்தில் பெரியனாகவும் உபாதிக்கதகுணமாகக் காண்பதுபோலவும், ஒருவனே அனேகமாகக் காண்பதுபோலவும் ஏகாகாரமாகிய ஒரு ப்ரஹ்மமே சரீரம் முதலிய உபாதியின் ஸம்பந்தத்தினால் அனேகமாகவும் அனேக குணங்களை யுடையதாகவும் காண்கிறதென்று சொன்னோம். இந்த தர்மங்கள் இரண்டுக்கும் ஒத்திருக்கிறது. "ஸூர்யன் ரூபவான், ப்ரஹ்மம் நிரூபம் ஆகையால் இவ்விரண்டுக்கும் ஒற்றுமை யில்லை" என்பது-கலசத்தைப்போல் வஸ்த்திரத்தையும் ஒருவன் செய்தே யிருக்கவேணுமென்னில், அவனைப்போல் இவனும் குயவனேயாகவேணும், அவனைப்போல் இவனும் குருடனேயாகவேணுமென்று கேட்பதுபோலிருக்கிறது. ஆகையால் சொன்ன த்ருஷ்டாந்தம் ஸரியானதே என்று ஸித்தாந்தி சொல்லுகிறார்.

(ஶ்ரு-ஸா.) "புரஶ்சக்ரே த்³விபத³꞉ புரஶ்சக்ரே சதுஷ்பத³꞉ புர꞉ ஸ பக்ஷீ பூ⁴த்வா புர꞉ புருஷ ஆவிஶத்" பரமாத்மா இரண்டு கால்களையுடைய மநுஷ்யன் முதலானவற்றையும், நாலுகால்களையுடைய பசு முதலானவற்றையும் ஸ்ருஷ்டித்து, அதில்தான் ப்ரவேசித்தானென்றும், "அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய" தான் ஜீவாத்மாவாய்க்கொண்டு வஸ்துக்களில் ப்ரவேசித்து அவற்றுக்கு நாமரூபங்களை யுண்டாக்கினானென்றும் ப்ரஹ்மம் சரீராதியான உபாதியில் பிரவேசித்து அந்தந்த ஸ்வரூபமாயாகிறதென்று சொல்லுகையாலே உபாதி ஸம்பந்தத்தினாலேயே ப்ரஹ்மம் ஸகுணமாகிறது அதற்கு ஸகுணமென்பது ஸ்வபாவமன்று. நிர்க்குண மென்பதே ஸ்வபாவம் என்று ஸித்தாந்தம். ௨௨௩.

(ரா-ஸா.) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.—கீழ், ஜலத்திலில்லாத ஸூர்யனையும், கடாதிகளிலுள்ள ஆகாசத்தையும் த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்று, அதிலொன்றான ஆகாசம் கடாதிகளிலிருந்தாலும் அதைப்போல் பெருத்தல் சிறுத்தல் முதலிய தோஷங்களை யடைகிறதில்லை. இந்த த்ருஷ்டாந்தமும் ப்ரக்ருதத்தில் ஸங்கதமாகைக்காக ப்ருதிவ்யாதிகளிலுள்ள ஈஶ்வரனுக்கும் அவற்றின் தோஷம் ஸம்பவிக்கிறதில்லை என்றே அங்கீகரிக்கவேணும். இரண்டாவது த்ருஷ்டாந்தமான ஸூர்யன் ஜலத்திலில்லாமற் போனபோதிலும், ஜலத்திலுள்ள தோஷம் அவனிடத்தில் ஸம்பவியாமை மாத்ரத்தைக்கொண்டே த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டான். முகம் சந்த்ரன்போன்றதென்று த்ருஷ்டாந்தம் சொன்னால் த்ருஷ்டாந்தமான சந்த்ரனிடத்திலுள்ள எல்லா குணங்களும் முகத்திலிருக்க வேண்டுமென்கிற நியமமில்லை. அதுபோலவே ஸூர்யனிடத்திலுள்ள ஜலாஸம்பந்தம் பரமாத்மாவினிடத்திலில்லாமற்போனாலும் அவனுக்கு ஜலத்தில்ப்ரதிபலித்தால் அதிலுண்டான தோஷமவனுக்கு வாராதாற்போல் ப்ருதிவ்யாதிகளிலிருப்பதினாலுண்டான ஈஶ்வரனுக்கு அவற்றின் தோஷங்கள் ஸம்பவியாதென்று ஸித்தாந்தம். ௨௨௪.

ஸூ-௨௨௫. ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேத⁴தி ததோ
ப்³ரவீதி ச பூ⁴ய꞉.

(ஶ்ரு.) ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி - கீழ்ச்சொன்ன இவ்வளவாயிருக்கையையன்றோ, ப்ரதிஷேத⁴தி - நிஷேதிக்கிறது, தத꞉ - அதன்பிறகு, பூ⁴ய꞉ - மறுபடியும், ப்³ரவீதி ச - சொல்லுகிறது.

(ரா-ப்ர.) ப்ரக்ருதைதாவத்த்வம் - கீழ்ச்சொன்ன இவ்வளவென்பதையன்றோ, ப்ரதிஷேத⁴தி - நிஷேதிக்கிறது தத꞉ - அதைக்காட்டிலும், பூ⁴ய꞉ - இன்னுமதிகமாக, ப்³ரவீதி ச - சொல்லுகிறது. ௨௨௫.

(ஶ்ரு-ஸா.) "த்³வே வாவ ப்³ரஹ்மணோ ரூபே மூர்தம் சைவாமூர்தம் ச" ப்ரஹ்மத்துக்கு மூர்த்தமென்றும் அமூர்த்தமென்றும் இரண்டுருவமுண்டு. (மூர்த்த

மாவது - உருவமுள்ள ப்ருதிவீ ஜலதேஜஸ்ஸுக்கள். அமூர்த்தமாவது - உருவமற்ற வாய்வாகாசங்கள்) என்று தொடங்கி பஞ்சபூதங்களையும்சொல்லி, இவற்றுக்கு ஆதாரம் பரமபுருஷன் என்று சொல்லி, அதன்பின் "அதாத ஆதேஶோ நேதி நேதி" இனிதத்வோபதேசம் பண்ணப்படுகிறது, கீழ்ச்சொன்ன இது தத்வமன்று இதுதத்வமன்று என்று சொல்லிற்று. இங்கு இது தத்வமன்று இது தத்வமன்றென்று, கீழ் ப்ரஹ்மத்தினுடைய இரண்டுருவமாகச் சொல்லப்பட்ட பஞ்சபூதங்களை மாத்திரம் நிஷேதித்ததா, அல்லது. அவற்றுக்கு ஆதாரமாகச்சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தையும் நிஷேதித்ததாவென்னில்,—"இதுவன்று இதுவன்று" என்று இரண்டு தரம் சொல்லுகையால், முதல் அன்றென்பதினால் ப்ரஹ்மத்தினுடைய மூர்த்தாமூர்த்த ரூபங்களை இல்லையென்று சொல்லி, இரண்டாவதான அன்றென்பதினால் ப்ரஹ்மத்தை யில்லையென்று சொல்லுகிறதென்று பூர்வபக்ஷி சொன்னான். ஆதிதொடங்கி "ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறேன்" என்று பெரிய ப்ரயத்நத்துடன், ப்ரமாணாந்தராஸித்தமான ப்ரஹ்மத்தைத் தானே சொல்லி, இப்போது அதை யில்லையென்பது அநுசிதம்; காண்கிற பஞ்சபூதங்களும் ப்ரஹ்மரூபங்களென்று சொல்லி, இதற்கெல்லாம் ஆதாரமாக அத்ருஶ்யமா யொரு ப்ரஹ்மமுண்டென்றுசொல்லி, பின்பு இப்படி காண்கிற இந்த பஞ்சபூதங்களும் தத்வமன்று என்று, லோகத்தில் ஸாதாரணமாகத் தத்வமாகக்காண்கிற இவற்றைத் தத்வமாக நினைக்கவேண்டாமென்றே சொல்லிற்று. ப்ரஹ்மமில்லையென்று சொல்லவில்லை. இந்த ஶ்ருதிக்கு இதேயர்த்தமென்பதென்கொண்டென்னில். இவ்வாக்யத்திற்குமேல், "ஸத்யஸ்ய ஸத்யம்" இவற்றைக்காட்டிலும் வேறான தத்வமொன்றுண்டென்று சொல்லுகையாலே இதேயர்த்தமென்று நிஶ்சயிக்கப்படுகிறது. என்று ஸமாதாநோத்தரம். ௨௨.

(ரா. ஸா.) "அதாத ஆதேஶோ நேதி நேதி" இத்யாதி வாக்யத்தில் கீழ்ச்சொன்ன சிதசித்துக்களெல்லாம் பரமாத்ம ஸ்வரூபங்களன்றென்று நிஷேதிக்கையாலே நிர்விசேஷ சிந்மாத்ரமே ப்ரஹ்மஸ்வரூபம் என்றங்கீகரிக்க வேணும், ஆகையால் உபயலிங்க மாகமாட்டாதென்கிற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.—சிதசித்துக்கள் பரமாத்மாவுக்கு சரீரங்களாயிருக்கிறவிதம் ப்ரத்யக்ஷாதி வேறு ப்ரமாணங்களுக்கு விஷயமாகமாட்டாது. அப்படியிருக்க கீழெல்லாம் அவை பரமாத்மாவுக்கு சரீரங்களென்று ஒருவர்க்கும் தெரியாதவற்றைத் தெரியச்சொல்லி, அநந்தரம் அவை சரீரங்களாகமாட்டாவென்று சொல்லுகை அஸங்கதமாயிருக்கும். லோகத்தில் ஹிதபரனாயிருக்கிறவன், ஒருவனுக்கு முன்புள்ள ப்ராந்தியைப் போக்குகைக்காகவே சிலவற்றை யுபதேசிக்கிறான். அவ்வளவேயல்லது, இல்லாத ப்ராந்தியைக் கற்பித்து அதைப்போக்குகைக்காக உபதேசிப்பது காணவில்லை. அதுபோலவே வேதம் ஹிதபரமாகையாலே உள்ள ப்ராந்தியையே போக்கவேண்டுமொழிய இல்லாததைக் கற்பித்துச்சொல்லி அதைப்போக்குகைக்காக யத்நம் செய்யக்கூடாது. ஆகையால் இங்கு சிதசித்துக்களை பரமாத்மாவுக்கு சரீரங்களென்று இல்லாத ப்ராந்தியை உண்டாக்கி, அநந்தரம் அதை நிஷேதிக்கிறதென்பது ஸம்பவியாது. ஆனால் இங்கு எதை நிஷேதிக்கிறதென்றால், முன்பு பரமாத்மாவினைஶ்வர்யத்தைச்சொல்லி, அநந்தரம், அவனுடைய ஐஶ்வர்யம் இவ்வளவேயன்று, இன்னும் அநந்தமாயிருக்கிறதென்று சொல்லுகைக்காக "நேதிநேதி" என்று பரமாத்மாவினுடைய ஐஶ்வர்யத்திற்கு அவதியை நிஷேதித்தது. அவனுடைய ஐஶ்வர்யத்தையே நிஷேதித்தால் மேல்வாக்யத்தில், "ஸத்யஸ்ய ஸத்யம்" இத்யாதியால், பரமாத்மாவைக்காட்டிலும் எவ்விதத்திலும் மேலானவஸ்து ஒன்றுமில்லையென்றும், அசித்தைப்போலே ஜீவனும் பரமாத்மாவுக்கு சேஷப்பட்டவனென்றும் இவற்றையெல்லாம் நிர்வஹிக்கும்படியான ஐஶ்வர்யத்தையுடையவன் பரமாத்மாவென்றும் சொல்

வது சேராது. ஆகையால் இவ்வாக்யம் ப்ரபஞ்ச நிஷேத பரமென்றே சொல்ல வேண்டும். கககூ

ஸூ- ககசு. ததவ்யக்தமாஹஹி.

(ஶ-வ்ரு.) தத் - அந்தப்ரஹ்மம், அவ்யக்தம் - இந்த்ரியத்துக்கு விஷய மாகாதது; ஆஹஹி-(வேதம் அப்படியே) சொல்லிற்றன்று. ககசு.

(ரா-வ்ரு.) தத் - அந்தப்ரஹ்மம், அவ்யக்தம் - இந்த்ரியாதிகளுக்கு விஷயமன்று (என்று), ஆஹஹி சொல்லிற்றன்று. ககசு.

(ஶ-பா.) பரப்ரஹ்மமென்றொன்றுண்டாகில் அதேன் ஒருவர்க்கும் தெரிய வில்லையென்னில்,—அது கண்ணுக்குத்தோற்றாது. இதற்குப்ரமாணம்—"நசக்ஷுஷா க்ருஹ்யதே" கண்ணினால் அந்த ப்ரஹ்மம் அறியப்படாது இத்யாதி வேத வாக்யம். ககசு.

(ரா-பா.) ஜகத்து ஸத்யமென்பதில் ப்ரமாணமில்லை. ஸ்வப்நத்திற் காணுகிறதுபோல் இவையெல்லாம் ப்ரஹ்மத்தினால் காணப்படுகிறது. பரப்ரஹ்மமொன்றே ஸத்யம். அதே ஸகலஜ்ஞாநத்திலும் தோற்றுகிறது. ஆகையால் மேலே, ப்ரமவிஷயங்களான அஸத்யபதார்த்தங்களைச்சொல்லி அநந்தரம் "நேதிநேதி" என்று அவற்றை ஸத்யங்களன்றென்று நிஷேதிக்கிறதென்று சொன்னால்,—"நஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய" என்று பரமாத்மஸ்வரூபம் இந்த்ரியாதிகளுக்கு விஷயமன்றென்று சொல்லுகையாலே ஸகல ஜ்ஞாநத்திலும் பரப்ரஹ்மம் தோற்றுகிறதென்பது அஸங்கதம். ககசு.

ஸூ-ககஎ. அபிஸம்ராதநே ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்.

(ஶ-வ்ரு.) அபி - மேலும், ஸம்ராதநே - த்யாநத்தில், (க்ருஹிக்கப் படுகிறது.) ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்-ஶ்ருதிஸ்ம்ருதிகளினால் (இவ்வர்த்தம் சொல்லப்படுகிறது) ககஎ.

(ரா-வ்ரு.) அபிச - இன்னும், ஸம்ராதநே - பக்தியில் (அடையப்படுகிறானென்று), ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்-வேதத்தினாலும் கீதையினாலும் (சொல்லப்பட்டது.) ககஎ.

(ஶ-பா.) அந்தப்ரஹ்மம் இந்த மாம்ஸ நேத்ரத்திற்குத்தெரியாவிடினும்,யோகாப்யாஸத்தினால் காமக்ரோதம் முதலிய கல்மஷங்கள்போய் நிர்மலமான மனஸைக்கொண்டு பக்திசெய்யும்போது அந்த பக்தியினால் அந்த நிர்க்குண ப்ரஹ்மத்தை யறியலாம் இதற்குப்ரமாணம்—"ஜ்ஞாநப்ரஸாதேந விஶுத்தஸத்வஸ்ததஸ்து தம் பஶ்யதே நிஷ்கலம் த்யாயமாந:" என்ற ஶ்ருதியும்,—"யோகிநஸ்தம் ப்ரபஶ்யந்தி பகவந்தம் ஸநாதநம்" என்ற ஸ்ம்ருதியும். ககஎ.

(ரா-பா.) "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய:" என்று தொடங்கி "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:" என்று வேதத்திலும், "நாஹம் வேதைர் ந தபஸா" இத்யாதி கீதாவாக்யத்திலும், வேதாத்யயநம் யாகம் முதலியவைகள் பரமாத்ம ப்ராப்திக்கு ஸாதநங்களன்றென்றும், பக்தியினாலேயே அடையத்தக்கவனென்றும் சொல்லுகையாலே ஸகலஜ்ஞாநத்திற்கும் பரமாத்மா விஷயமாகிறானென்பதஸங்கதம். ககஎ

ஸூ-௨௩. ப்ரகாசாதிவச்சாவைசேஷ்யம் ப்ரகாசச்ச கர்மண்யப்யாஸாத்.

(ஸ-வ்ய.) ப்ரகாசாதிவத் - வெய்யில்போலே, ப்ரகாசச் - ஜீவன், கர்மணி - உபாதியில் (பேதத்தையடைகிறான்.) அவைசேஷ்யம் (ப்ரஹ்மம் ஸ்வரூபம்) பேதமற்றது அப்யாஸாத் - (இவ்வர்த்தம்) அடிக்கடி சொல்லுகையினால் நிச்சயிக்கப்படுகிறது). ௩௩-அ.

(ரா-வ்ய.) கர்மணி – பக்திரூபக்ரியையில், அப்யாஸாத் - ஆவ்ருத்தியினாலே, ப்ரகாசஃ-ஜ்ஞானம், (யாருக்குண்டாயிற்றோ, அவர்களுக்கு) ப்ரகாசாதிவச்ச - ஜ்ஞானாதியைப்போல், அவைசேஷ்யம் - (ஐச்வர்யத்திற்கும்) விசேஷமில்லை (ஜ்ஞானம்போல் ஐச்வர்யமும் ப்ராமாணிகர்களான மஹர்ஷிகளுக்குத் தோற்றுகையால் அதுவும் ஸத்யமென்றர்த்தம்.)

(ஸ-ஸ.) ப்ரஹ்மம் த்யானம் பண்ணப்படுகிறதாகில், த்யானத்திற்கு விஷயமான ப்ரஹ்மம் ஒன்று. த்யானம் செய்கிறவனொருவன் என்று பேதம் ஸித்தித்தது, அபேதம் ஸித்திக்கவில்லையே யென்னில், அக்நியானது ஏகாகாரமாயிருந்தபோதிலும் கட்டையின் ஸம்பந்தத்தினால் சிலவிடத்தில் கறுப்பாகவும் சிலவிடத்தில் பசுமையாகவும் சில விடத்தில் மஞ்சளாகவும் எப்படி காண்கிறதோ, ஆகாசம் ஏகாகாரமானபோதிலும் கடம் மடம் முதலியவற்றின் ஸம்பந்தத்தினால் கடாகாசம் மடாகாசம் என்று பேதப்பட்டுக் காண்கிறதோ, அப்படியே ஜீவனும் சரீராத்யுபாதி ஸம்பந்தத்தினால் இப்படி நாநாவாகக் காண்கிறான். அவ்வளவேயன்றி ஜீவனுக்கு பேதப்பட்டிருக்கை ஸ்வபாவமன்று. இப்படி சொல்லுகைக்குக்காரணம்—"அயமாத்மா ப்ரஹ்ம" இந்த ஜீவன் ப்ரஹ்மந்தான். "தத்த்வமஸி" நீ அந்த ப்ரஹ்மமாகிறாய் என்று பலவிடங்களிலும் சொல்லுகிற வேதவாக்யம் ௩௩-அ.

(ரா-ஸா.) வாமதேவாதிகள் பக்தியினால் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கும்போது பரமாத்மாவினிடத்தில் ஜ்ஞானாநந்தாதி குணங்களும் உபயவிபூத்யைச்வர்யமும் தோற்ற, அவர்களுக்குத் தோற்றினவற்றில் பரமாத்மா ஒருவனே ஸத்யமென்றும் மற்றகுண ஐச்வர்யாதிகள் அஸத்யமென்றும் ஸ்வீகரிக்கக்கூடாது. ஆகையால் பரமாத்மா அகிலஹேய ப்ரத்யநீகனும் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனுமிருக்கிறான். ௩௩-அ.

ஸூ-௨௪. அதோऽநந்தேந ததா ஹி லிங்கம்.

(ஸ-வ்ய. ஸா.) அதஃ-பேதம் பொய்யாய் அபேதம் வாஸ்தவமாகையால் அநந்தேந - பரமாத்மாவோடு, (ஜீவன் ஒன்றாய்விடுகிறான்). ததாஹி - அப்படியேயன்றோ, லிங்கம் - ("ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி" ப்ரஹ்மத்தையறிந்தவர் ப்ரஹ்மமேயாய் விடுகிறானென்று சொல்லுகிற வேதம் இப்படி நிச்சயிக்கைக்கு) ஹேதுவாயிருக்கிறது. ௩௩௩.

(ரா-வ்ய.-ஸா.) அதஃ - ஆகையால், அநந்தேந - அஸங்க்யாதமான கல்யாணகுணங்களோடே, (பரமாத்மா கூடியிருக்கிறான்) ததாஹி அப்படியாகையால், லிங்கம் - (பரமாத்மாவுக்கு) ஹேயப்ரத்யநீகத்வகல்யாணகுணாத்மகத்வங்களாகிற உபயலிங்கம் (ஸித்திக்கிறது.) (௩௩௩.)

த்ரி.அ.பா.௨-ஸூ.௨௭. உபயவ்யபதேசாத்த்வஹிகுண்டலவத்.

(ஸு-வ்ரு, உபயவ்யபதேசாத் - பேதம் அபேதம் இரண்டையும் சொல்லுகையால், அஹிகுண்டலவத் - குண்டலாகாரமான ஸர்ப்பம்போல், (பேதம் அபேதம் இரண்டுமுண்டு.) ௨௭.

(ரா - வ.) உபயவ்யபதேசாத் - (பரமாத்மாவை அசித்தைக் காட்டிலும் பின்னமென்றும் அபின்னமென்றும்) இரண்டுவிதமாகச் சொல்லுகையாலே, அஹிகுண்டலவத் - ஸர்ப்பத்தினுடைய குண்டலாகாரம்போலே, (ஜகத்தும் பரமாத்மாவினுடைய அவஸ்தாவிசேஷமே). ௨௭.

(ஸு-ஸா.) சிலவிடங்களில் "யஸ்ஸர்வாணி பூதாந்யந்தரோ யமயதி" என்று பரமாத்மா ஸர்வ ப்ராணிகளையும் உள்ளே புகுந்து நியமிக்கிறானே, என்று இம்மாதிரியாக பரமாத்மாவை நியந்தாவாகவும் ஜீவனை நியாம்யனாகவும் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பேதம் சொல்லுகிறது. சில விடங்களில், "அஹம் ப்ரஹ்மாஸ்மி" நான் பரப்ரஹ்மமாகிறேன் என்று அபேதம் சொல்லுகிறது. இவ்விரண்டு வாக்யங்களும் ப்ரமாணங்களாகையால் அவற்றில் சொல்லியபடியே ஜீவனுக்கும் ப்ரஹ்மத்துக்கும் பேதம் அபேதம் இரண்டும் ஒப்புக்கொள்ளவேணும். ஒரு ஸர்ப்பம் சுருட்டிக்கொண்டிருந்தால் "இது முன் நீண்டு காணப்பட்ட ஸர்ப்பந்தான். ஆகிலும் இது சுருட்டிக்கொண்டிருக்கிறது என்று ப்ரதீதியையுடைய அந்த ஸர்ப்பத்துக்கும் குண்டலாகாரத்தையுடைய அந்த ஸர்ப்பத்துக்கும் இரண்டும் ஸர்ப்பந்தானென், கிற அபேதமும், அது நீண்டது, இது சுருண்டது என்று பேதமும் சொல்லுவதுபோல் இங்கும் அங்கீகரிக்கவேணுமென்று பேதாபேதவாதி சொன்னான். ௨௭.

(ரா-ஸா.) ஸ்தூலஸூக்ஷ்மங்களான அசித்வஸ்துக்கள் பரமாத்மஸ்வரூபங்களென்று சொல்லிற்றுக்கீழ். இதற்குத் தாத்பர்யமென்; ம்ருத்துகடமாகிறாப்போலே ப்ரஹ்மமே ஜகத்ரூபமாகப் பரிணமிக்கிறதா; அல்லது. அவனே இவன் என்கிறாப்போல் ப்ரஹ்மமும் ஜகத்தும் ஒருவிதமான வஸ்துவா, அல்லது இவை ப்ரஹ்மத்திற்கு சரீரங்களா என்று ஸம்சயம். "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" இதெல்லாம் ப்ரஹ்மமென்று ஜகத்தையும் ப்ரஹ்மத்தையும் ஏகமாகச் சொல்லுகையாலும், 'போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" என்றுஜகத்தையும்ப்ரஹ்மத்தையும்பின்னமாகச் சொல்லுகையாலும் இவ்விரண்டு ப்ரயோகமும் ஸரியாகும்படிக்கு ஜகத் ப்ரஹ்மங்களை ஒருவஸ்துவாகவே கொள்ளவேணும். ஆனால் ஜகத்து என்றும் ப்ரஹ்மம் என்றும் வ்யவஹாரம் வருகைக்குஹேது வென்னென்னில், ஸர்ப்பம் வட்டமாய்ச் சுற்றிக்கொண் டிருக்கும்போது குண்டலாவஸ்தையையும், ஸ்வபாவமாயிருக்கும் போது தீர்க்காவஸ்தையையும் ஆக இரண்டவஸ்தையை யடைகிறாப்போலே ப்ரஹ்மத்திற்கும் இரண்டவஸ்தையுண்டு - அதில் ஸ்வபாவாவஸ்தையில் ப்ரஹ்மமென்றும், மற்றோரவஸ்தையில் ஜகத்தென்றும் வ்யவஹரிக்கப்படுகிறதென்று பூர்வபக்ஷம். ௨௭.

ஸூ-௨௮. ப்ரகாசாச்ரயவத்வா தேஜஸ்த்வாத்.

(ஸு-வ்ரு.) தேஜஸ்த்வாத் - தேஜஸ்ஸாயிருக்கையினால், ப்ரகாசாச்ரயவத் - வெய்யிலேயும் அதுக்கு ஆச்ரயமான ஸூர்யனேயும் போலாவது (பேதாபேதம் அங்கீகரிக்கவேணும்.) ௨௮.

(ரா-வ்ரு.) தேஜஸ்த்வாத் - தேஜஸ்த்வஜாதியோகத்தினுலே, ப்ரகாஶாஶ்ரயவத் - ப்ரகாசமும் அதுக்காஸ்ரயமான தீபமும்போலே, (இரண்டும் ஒருவிதமானவஸ்து. ஒன்றன்று என்றுபாவம்.) ௩௪௧.

(ஶ்ரு-ஹா) வெய்யில் ஸூர்யன் இவ்விரண்டும் தேஜஸ்ஸாகையால் அவ்வாகாரத்தினுல் இரண்டுக்கும் அபேதமும் வெய்யிலுக்கு ஸூர்யன் ஆதாரமாகையால், ஒன்று ஆதாரம் ஒன்று ஆதேயம் என்ற ஆகாரங்களினுல் பேதமும் காண்கிறது போல் ஜீவப்ரஹ்மங்களுக்கும் பேதாபேதங்களிரண்டு மொப்புக்கொள்ள வேணும். என்றுன்.

(ரா-ஹா., ப்ரஹ்மமேஜகத்தாகப் பரிணமித்தால் ஜகத்துக்குண்டான உத்பத்திவிநாசாதி தோஷங்கள் ப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்குமாகையால் அப்படி சொல்லக்கூடா.தூ. ஒளியும், ஒளியையுடைய தீபமும் வெவ்வேருயினும் இரண்டும் ஒருவிதமானத்ரவ்யமாகையாலே இரண்டையும் தேஜஸ்ஸு என்று அபிந்நமாகச்சொல்லுகிறுப்போல், ஜகத் ப்ரஹ்மங்களும் ஒரு விதமான த்ரவ்யமாகையாலே இரண்டையும் அபிந்நமாகச் சொல்லுகிறதென்று இரண்டாம் பூர்வபக்ஷம். ௩௪௧.

ஸூ-௩௪௨. பூர்வவத்வா

(ஶ-வ்ரு.) பூர்வவத்வா - முன்சொன்னுற்போலவே (அபேதமே ஸ்வாபாவிகமென்னவேணும்.) ௩௪௨.

(ரா-வ்ரு.) பூர்வவத்வா-முன்போலவே (சரீராத்ம பாவத்தினுல் ஐக்யவ்யவஹாரம் ஸமர்த்திக்கவேணும்.) ௩௪௨.

(ஶ்ரு-ஹா) அப்பக்ஷத்தை இதில் நிரஸநம் செய்கிறுர்:—அபேதம் போல்பேதமும் ஸ்வாபாவிகம். யதார்த்தம், பொய்யன்று என்றொப்புக்கொள்ளில், பேதரூபமாகிய ஸம்ஸாரத்தை தத்வஜ்ஞானத்தினுல்நசிப்பிக்கவொண்ணுது; பொய்யான வஸ்துவே தத்வஜ்ஞாநத்தினுல் நசிக்கும். தகரத்தில் பொய்யாகக்காண்கிற வெள்ளி "இதுவெள்ளியன்று தகரம்தான்" என்ற யதார்த்தஜ்ஞாநத்தினுல் நசிக்கிறது; மெய்யானவெள்ளி நசிக்கிறதில்லை. அதுபோல் ஸம்ஸாரம் பொய்யென்கிற எங்கள் பக்ஷத்தில் ப்ரஹ்மஜ்ஞானத்தினுல் ஸம்ஸாரம் நசிக்கிறது. உங்களுக்கு அதுமெய்யாகையால் நசியாமல்போகவேண்டிவரும். தத்வஜ்ஞாநம்தவிர ஸம்ஸாரம் நசிக்கைக்கு வேறுகாரணம் காணுமையால் ஜீவனுக்கு எப்போதும் முக்தியில்லாமலேபோம். ஆகையால், பேதாபேதஶ்ருதிகளிரண்டுக்கும் நாங்கள் சொன்னபடியே அர்த்தம் சொல்லவேணும் என்று ஸித்தாந்தம். ௩௪௨.

(ரா-ஹா) இவ்விரண்டு பக்ஷங்களையும் நிரஸிக்கிறுர்:—கீழ் அம்சாதிகரணத்தில் ப்ரஹ்மத்தோடு ஜீவனை பிந்நமாகவும் அபிந்நமாகவும் சொல்லுகையாலும் ஜீவனுடைய தோஷங்கள் ப்ரஹ்மத்தில் வாராமைக்காகவும் ஜீவனை ப்ரஹ்மத்திற்கு சரீரமென்றங்கீகரித்து அவ்விரண்டு விதமான வ்யவஹாரத்தையும் ஸமர்த்தித்தாப்போல், இங்கும், அசித்தான ஜகத்து ப்ரஹ்மத்திற்கு சரீரமாகையாலே சரீராத்மபாவத்தைக்கொண்டு அபிந்நமாகவும் விஷ்க்ருஷ்டாம்சத்தைக் கொண்டு பிந்நமாகவும் சொல்லுகிறதென்று ஸித்தாந்தம். ௩௪௨.

ஸூ-௩௪௩. ப்ரதிஷேதாச்ச.

(ஶ-வ்ரு-ஹா.) ப்ரதிஷேதாச்ச - "அதாத ஆதேஶோ நேதி நேதி" என்று தத்வஸ்வரூபம்சொல்ல ஆரம்பித்து, ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேருகிய இந்த ப்ரபஞ்சமெல்லாம் பொய்யென்று சொல்லுகையா

லும், ப்ரஹ்மமே பரமார்த்தம் மற்றது அபரமார்த்தம் என்று வ்யாஸபக வான் சொல்லுகிறார். ௯௪௧.

(ரா-ப்ர-ஸா.) ப்ரதிஷேதாச்ச - (ஜகத்திலுள்ள உத்பத்தி விநாசாதிதோஷங்களை “அஜரோऽமர:” என்று ப்ரஹ்மத்திலில்லையென்று) நிஷேதிக்கையாலும், ஜகத்தும் ப்ரஹ்மமும் ஏகத்ரவ்யமென்றங்கீகரிக்கக்கூடாது.

௩பா-அ௨. ஸூ-௯௪௨. பரமத: ஸேதூந்மாநஸம்பந்தபேத
வ்யபதேசேப்ய:.

(ஶ்ரு-ப்ர.) ஸேதூந்மாநஸம்பந்தபேதவ்யபதேசேப்ய: - (ப்ரஹ்மத்தை) ஸேதுவென்கையாலும் அளவிட்டுச்சொல்லுகையாலும் ஜீவனோடு ஸம்பந்தம் சொல்லுகையாலும் வேறாகச்சொல்லுகையாலும், அத: - இந்த ப்ரஹ்மத்தைக்காட்டிலும், பரம் - வேறானவஸ்து உண்டு. ௯௪௨.

(ரா-ப்ர.) ஸேதூந்மாநஸம்பந்தபேதவ்யபதேசேப்ய: - (ஜகத்காரணனான ஸர்வேஶ்வரனை) ஸேதுவாகச்சொல்லுகையாலும் அளவிட்டுச் சொல்லுகையாலும் பலத்தையடைவிப்பிக்கிற உபாயமாகச் சொல்லுகையாலும் பிந்நனென்று சொல்லுகையாலும், அத: - ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட இந்த பரமபுருஷனைக்காட்டில், பரம் - உயர்ந்தவஸ்து (ஒன்றுண்டு.) ௯௪௩.

(ஶ்ரு-ஸா. ப்ரபஞ்சம் அஸத்யமென்று சொல்லிற்றுச்சிழ்; இப்பொழுது, ப்ரபஞ்சமஸத்யமாயிலும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறானமற்றொரு தத்வமுண்டா இல்லையாவென்று விசாரிக்கிறார்— “அத ய ஆத்மா ஸ ஸேது:” பரமாத்மா ஸேதுவென்று சொல்லியிருக்கிறது. ஸேதுவாவது இரண்டு ஜலத்திற்கும் நடுவிலுள்ள கட்டைமுதலியவற்றினால் செய்யப்பட்டப்ரதேசம். ஜலத்துக்கு அக்கரையிலும் இக்கரையிலும் ஸேதுவைக்காட்டிலும் வேறான ப்ரதேசமிருப்பதுபோல், ஸேதுவாகச் சொல்லப்பட்ட இதைக்காட்டிலும் வேறு தத்வமு முண்டென்று தோற்றுகிறது. “ஸேதும் தீர்த்வா” ப்ரஹ்மமாகிற ஸேதுவைத்தாண்டி என்கையாலே, இதைத் தாண்டி அப்பால் போகத்தக்க இடம் உண்டென்று தோற்றுகிறது. “சதுஷ்பாத் ப்ரஹ்ம ஷோடஶகலம்” ப்ரஹ்மம் நாலுகாலையுடையது, எட்டுகுளம்பையுடையது, என்று அளவிட்டுச் சொல்லுகையால் அளவில்லாத வேறொரு தத்வமுண்டென்று தோற்றுகிறது. “ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி” இந்த பரமாத்மாவோடு ஜீவன் சேருகிறானென்று சொல்லுகையாலே, ஜீவனொருவன் வேறுபட்டுண்டென்று தோற்றுகிறது. “ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:” ஸூர்யமண்டலத்தில் பரமாத்மா இருக்கிறானென்றும், “ய ஏஷோऽந்தரக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே” கண்ணினுள்ளே இருக்கிறவன்பரமாத்மாவென்றும் இரண்டு பரமாத்மாவைச் சொல்லுகையாலே இரண்டுதத்வமுண்டென்று தோற்றுகிறது. இந்த ஹேதுக்களினால் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறுதத்வமுண்டென்று நிஶ்சயிக்கவேணுமென்று பூர்வபக்ஷி சொன்னான். ௯௪௪.

(ரா-ஸா. அடியேதொடங்கி இதுவரையிற்சொல்லப்பட்ட ஜகத்காரணனான பரமபுருஷனே பரதத்வமா, அல்லது இவனைக்காட்டிலும் வேறொரு பரதத்வமிரு

க்கிறதாம் என்றுஸம்சயம்—கீழ்ச்சொன்ன இந்தபரமபுருஷனை "பருஷரைஸ" என்று ஸேதுவாகச்சொல்லி "அமருதஸ்யைஷ ஸேது:" என்று அதைத்தாண்டவேணுமென்கையாலே இவனுக்கப்பால் அடையவேண்டியவஸ்துஒன்றுண்டென்று தோற்றுகிறது. மேலும், "சதுஷ்பாத்" இந்த ப்ரஹ்மம் நாலுபாதங்களையுடையதென்றும்பதினாறுகலைகளையுடையதென்றும்அளவிட்டுச் சொல்லுகையாலே அளவில்லாதது வேறொன்றுண்டென்பது தோற்றுகிறது. மேலும், "அம்ருதஸ்யைஷ ஸேது:" என்று மோக்ஷத்தை அடைகைக்கு இந்த பரமாத்மா ஸேதுவாய் - அடைவிப்பிக்கிறவனாயிருக்கிறானென்கையாலே அடைவிப்பிக்கிறவனைக்காட்டிலும் அடையத்தகுந்த வஸ்து வேறொன்றுண்டென்று தோற்றுகிறது. மேலும், "ததோ யதுத்தரதரம்" என்று இவனைக்காட்டிலும் மேலான தொன்றுண்டென்றும் சொல்லிற்று. இந்த ஹேதுக்களினாலே இவனைக்காட்டிலும் வேறொரு பரதத்வமுண்டென்று பூர்வபக்ஷம். ௩௨௪.

ஸூ-௩௨௫. ஸாமாந்யாத்து.

(ப-வு.) ஸாமாந்யாத்-ஸமானமாயிருக்கையினால், (ப்ரஹ்மத்தை ஸேதுவாகச்சொல்லிற்று.) ௩௨௫.

(பா-வு.) ஸாமாந்யாத் - ஸாத்ருஸ்யத்தினாலே, (இவனை ஸேதுவாகச்சொல்லிற்று.) ௩௨௫.

(ஸூ-ஸா.) இந்த சங்கைக்கு ஸமாதாநம் சொல்லுகிறாரிதில்.—ஸேதுவானது இரண்டு ஜலத்தையும் ஒன்றோடொன்று சேரவொட்டாமல் காப்பதுபோல் பரமாத்மாவும் லோகத்திலுள்ள மர்யாதைகளை, (அதாவது - வர்ணாஸ்ரமதர்மங்கள், தேவ மநுஷ்ய பசு பக்ஷி முதலிய அவ்வஜாதிக்குரிய தர்மங்கள்) ஒன்றோடொன்று சேரவொட்டாமல் காத்துக்கொண்டிருக்கிறபடியால் அந்த த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு ஸேதுவென்று சொல்லிற்று. பரமாத்மாவாகிற ஸேதுவைத் தாண்டியென்றதற்கும், ஸேதுவையடைந்தென்றே யர்த்தம். "இவன் ஒரு சாஸ்த்ரத்தைத்தாண்டினான்." என்பதுபோல் இவ்விரண்டினாலும் வேறொரு தத்வமுண்டென்று ஏற்படவில்லை. ௩௨௫.

(பா-ஸா.) இந்த பரமபுருஷனை ஸேதுவாகச் சொன்னது—ஸேதுவானது எப்படி இரண்டு பக்கங்களிலுள்ள நீரை ஒன்றோடொன்று சேரவொட்டாமற் செய்யுமோ, அப்படியே இவனும் ஜகத்தில் தானேற்படுத்தின மர்யாதைகளை ஒன்றுக்கொன்று கலவாமற்படி ரக்ஷிக்கிறானென்று சொல்லிற்று. இவ்வர்த்தம் "ஏஷ ஸேதுர்விதரண ஏஷாம் லோகாநாமஸம்பேதாய" என்று மேல்வாக்யத்தில் ஸ்பஷ்டமாயிருக்கிறது, இந்த ஸேதுவைத்தாண்டி என்றது - வேதாந்த சாஸ்த்ரத்தைக் கடந்தானென்றால் அதைப்பூர்ணமாக வடைந்தானென்பதுபோல் இவனையடைந்தானென்றே யர்த்தமாகையால் இது வேறொரு பரதத்வமுள்ளதென்பதில் ஹேதுவாகமாட்டாதாகையால் இந்த பரமபுருஷனே பரதத்வமென்று ஸித்தாந்தம். ௩௨௫.

ஸூ-௩௨௬. புத்த்யர்த்த: பாதவத்.

(ப-வு.) பாதவத் - கால்போலே, புத்த்யர்த்த: - உபாஸநார்த்தம் (இப்படி சொல்லப்பட்டது.) ௩௨௬.

(பா-வு.) பாதவத் - "வாக்பாதஸ்சக்ஷு: பாத:" என்பதுபோல், புத்த்யர்த்த: - உபாஸநார்த்தம், சொல்லப்பட்டது. ௩௨௬.

(ஶ-ஹா.) ஆகார சூந்யமான ப்ரஹ்மத்தை த்யாநிப்பது அல்பபுத்திகளுக்கு அரிதாகையால், அவர்கள் புத்தியில் ஒரு ஆகாரம் தோற்றுகைக்காக, ப்ரஹ்மம் நாலு கால் எட்டு குளம்புகளையுள்ளதென்று ஓராகாரத்தையிட்டு அளவுபடுத்திச் சொல்லிற்று. லோகத்தில் கொடுக்கல்வாங்கல்முதலியவ்யவஹாரம் நடக்கைக்காக, ஒரு ரூபாய்க்கே அனேக பாகங்களை யேற்படுத்தி கால் அரைக்கால் என்று சொல்வதுபோல்இக்கும்கண்டுகொள்வது. இதனால்ப்ரஹ்மஸ்வரூபம் அளவுபட்டதென்று ஏற்படவில்லை ஆகையால் இதனாலும் வேறு தத்வம் ஸித்தியாது. கூசசு.

(ரா-ஹா.) இந்த ப்ரஹ்மத்தை நாலுபாதங்களை 'யுடையதென்று அளவிட்டுச் சொன்னது - இவ்விதமாக உபாஸநம் பண்ணவேண்டு' மென்கைக்காக. இதனால் இவன் அபரிச்சிந்நனன்றென்று தோற்றுது. கூசசு.

ஸூ-கூசஎ. ஸ்தாநவிஶேஷாத் ப்ரகாஶாதிவத்.

(ஶ-வ்யா.) ப்ரகாஶாதிவத் - வெய்யில் முதலானவற்றைப்போல், ஸ்தாநவிஶேஷாத் - உபாதிபேதத்தினால் (ஸம்பந்தமும் சொல்லப்பட்டது.)

(ரா-வ்யா.) ப்ரகாஶாதிவத் - ப்ரகாசம் முதலானவற்றைப்போல், ஸ்தாநவிஶேஷாத் - ஸ்தாநவிசேஷத்தின் ஸம்பந்தத்தினாலே, (அபரிச்சி ந்நத்தைப் பரிச்சிந்நமாக அநுஸந்திக்கலாம். கூசஎ.

(ஶ-ஹா.) ஜநங்கள் சென்று ஊரை அடைகிறார்கள் என்றால் அவ்வூர் ஸர்வ வ்யாபியன்றிக்கே அளவுபட்டதாகக்காண்கிறது. அதுபோல் ப்ரஹ்மத்தை ஜீவன் அடைகிறானென்கையால், ப்ரஹ்மமும் அளவுபட்டிருக்கும். அளவுபட்டது எல்லாவற்றுக்கும் மேலானதாகாது; ஆகையால் இதைக்காட்டிலும்மேலானதுண்டென்று பூர்வபக்ஷி சொன்னது சரியன்று. ஏனென்னில்,—வெய்யில் ஸர்வவ்யாபியாயிருக்கச்செய்தேயும், நடுவே பந்தலிட்டு வைக்கில், அங்கிரண்டாகும் அவ்வெய்யிலே வேறுபட்டுக்காண்கிறது. அப்பந்தலை யெடுத்துவிடில் "இவ்வெய்யில் அவ்வெய்யிலோடு கலந்துவிட்டதென்கிறார்கள். அங்கு வெய்யில் இப்போதாக ஒன்றும் கலக்கவில்லை. முன்னேபிடித்துக்கலந்தேயிருந்து, பந்தலினால் வேறாகத்தோற்றிற்று. அதை யெடுத்துவிடில் அந்த ப்ரமம் போய்விட்டது. அதுபோல் ஸர்வவ்யாபியான ப்ரஹ்மமே சரீராதியான உபாதிஸம்பந்தத்தினால் ஜீவனாகக் காண்கிறது. அந்த உபாதி கழிந்தால் ஜீவனென்கிற ப்ராந்தி கழிகிறது. இதையே ப்ரஹ்மத்தோடு ஜீவன்சேருகிறானென்றது. இதனால் ப்ரஹ்மம் ஊரைப்போல் அளவுபட்டிருக்கிறதென்று ஸித்திக்கவில்லை. ஸூர்யமண்டலத்திலுண்டாகச்சொல்வதும் உபாதிஸம்பந்தத்தினாலுண்டான ப்ராந்தி, கடாகாசம் மடாகாச மென்பதுபோல். ஆகையால் இதனாலும் வேறுதத்வம் ஸித்திக்கமாட்டாது. கூசஎ.

(ரா-ஹா.) ப்ரஹ்மஸ்வரூபம் அபரிச்சிந்நமானால் அதைப்பரிச்சேதித் தநுபவிக்கக்கூடாதேயென்னில், ஆகாசம் அபரிச்சிந்நமாயினும் கலசாதிகளில் பரிச்சிந்நமாகக் காண்கிறாப்போலவும், ஸூர்யகிரணம் எங்கும்பரவி வ்யாபகமாயிருந்தாலும் கவாக்ஷங்களில் ஸூக்ஷ்மமாகக் காண்கிறாப்போலவும் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் பரிச்சேதித்து உபாஸநம் செய்யலாம். கூசஎ

ஸூ-கூசஅ. உபபத்தேஶ்ச.

(ஶ-வ்யா.) உபபத்தேஃ - (இப்படிச்சொல்வதே) சரிப்பட்டிருக்குமகையால், (இதுவே பொருள்.) கூசஅ

(ரா-வ்யா.) உபலப்தேச்ச-(ஸேதுபோல் ப்ராபகனாகையாலே இவனை ஸேதுவாகச்சொன்னதும்) உபலப்தமாகையாலேயும், (இவனேபரதத்வம்.)

(ஸு-ஸா. "ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" ஜீவன் ப்ரஹ்மஸ்வரூபமாகிய தன்னைத் தானே அடைகிறான் என்று சொல்லியிருப்பது - ஜீவனுக்கும் ப்ரஹ்மத்துக்கும் பேதமில்லையென்கிற பக்ஷத்தில்தான் சரியான அர்த்தமாகும். ஆகையால் அத்வைதமே உண்மை. ௩௪அ.

(ரா-ஸா.) சேதனர்களை ஸம்ஸாரத்தைவிட்டுநீக்கித் தன்னைத்தானே அடைவிப்பித்துக் கொள்ளுகையாலே இவனை ஸேதுவாகச்சொல்லிற்று. அவ்வளவுமாத்ரத்தினால் பரதத்வம் வேறொன்றுண்டென்று நிர்ணயிக்கமுடியாது. ௩௪அ.

ஸூ-௩௪௯. ததாந்யப்ரதிஷேதாத்.

(ஸு-வ்யா.) அந்யப்ரதிஷேதாத்-வேறுவஸ்துவை இல்லையென்கையால், ததா - அப்படியே பேதமும் ஸ்வதஸ்ஸித்தமன்று. ௩௪௯.

(ரா-வ்யா.) ததா - அப்படியே, அந்யப்ரதிஷேதாத் - வேறொரு பரதத்வத்தை நிஷேதிக்கையாலே, (இவனே பரதத்வம்.) ௩௪௯.

(ஸு-ஸா.) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம நேஹ நாநாஸ்தி கிஞ்சந" எல்லாம் பரமாத்மஸ்வரூபந்தான் வேறுவஸ்து கிடையாதென்கையால்ஜீவனென்றும் ப்ரஹ்மமென்றும் இரண்டுவஸ்து இல்லையென்பதர்த்தம். இரண்டுவஸ்து இல்லாதபோது ஜீவன் ப்ரஹ்மத்தோடே சேருகையாவது - ஜீவனுகைக்குக் காரணமாகிய உபாதி நசிக்கை என்று சொல்லவேணும். இதனாலேயே பேதமும் ஸ்வதஸ்ஸித்தமன்று என்று ஸித்திக்கிறது. ௩௪௯.

(ரா-ஸா) "ததோ யதுத்தரதரம்" இத்யாதி வாக்யங்களில் இந்த பரமாத்மாவைக்காட்டிலும் மேற்பட்டவனில்லையென்று சொல்லுகையாலே இவனே பரதத்வம். ௩௪௯.

ஸூ-௩௫0. அநேந ஸர்வகதத்வமாயாமசப்தாதிப்ய:.

(ஸு-வ்யா.) அநேந - இந்த பூர்வபக்ஷத்தை நிரஸநம் செய்கையாலே, ஆயாமசப்தாதிப்ய:-வ்யாப்தி முதலியவற்றைச் சொல்லுகிற வாக்யங்களினால், ஸர்வகதத்வம் - (ப்ரஹ்மத்துக்கு) எங்குமிருக்கை ஸித்தித்தது.

(ரா-வ்யா.) அநேந - இந்த பரமாத்மாவினாலே, ஸர்வகதத்வம்-எங்கும் வ்யாபித்திருக்கை, ஆயாமசப்தாதிப்ய: - வ்யாப்தி போதக சப்தம்முதலானவைகளினால், (சொல்லப்பட்டது.) ௩௫0.

(ஸு-ஸா.) இப்படி பூர்வபக்ஷம் தள்ளுண்டவாறே "ஆகாசவத்ஸர்வகதஶ்ச நித்ய:" இத்யாதிவாக்யங்களினால் ப்ரஹ்மம்ஸர்வவ்யாபியென்று ஸித்தித்தது.

(ரா-ஸா) "யேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" இந்தபரமபுருஷனால் ஸர்வமும் நிறைந்திருக்கிறதென்றும், "அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித:" ஸ்ரீமந்நாராயணன் உள்ளும் வெளியும் வ்யாபித்திருக்கிறானென்றும், "ஸோ(அ)ந்தரேதம் ஸர்வம்" இந்த ஸகலவஸ்துவும் இந்த பரமாத்மஸ்வரூபமென்றும்இவனே ஸர்வவ்யாபகனென்கையாலேஇவனைக்காட்டிலும் வேறு பரதத்வமில்லை. ஜகத்காரணபூதனான இந்த பரமபுருஷனே பரதத்வம். ௩௫0.

அ-ய-உ. ஸூ-௩௯ ...

(ஶ-ரா-வ்யா.) உபபத்தே: - யுக்தியுக்தமாகையால், அத: - இந்தபரம புருஷனிடத்திலிருந்து, ஃபலம் - புருஷார்த்தம், (கிடைக்கிறது). ௩௰௧.

(ஶ-ரா-ஹா.) சாஸ்த்ரங்களில் ஸ்வர்க்காதி பலங்களைக்குறித்து யாகாதிகளும் மோக்ஷத்தைக்குறித்து பக்தியும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த யாகாதி கர்மம், தானே ஸ்வர்க்காதிகளைக் கொடுக்கிறதா, அல்லது அக்கர்மத்தினால் ஆராதிக்கப் பட்ட பரமபுருஷன்கொடுக்கிறானா என்று ஸம்சயம் —வேதத்தில் ஸ்வர்க்காதிகளைக் குறித்து கர்மத்தை ஸாதகமாகச சொல்லுகையாலும், லோகத்தில் பயிர், வர்த்தகம் முதலிய வ்யாபாரம் ஒருவனுடைய அபேக்ஷையின்றிக்கே தானே பலங்கொடுக்கக் காண்கையாலும் யாகாதிகர்மமே பலங்கொடுக்கிறதென்று நிச்சயிக்கப்படும். பலங் கொடுப்பது பலமுண்டாகும்போது அதற்கு அடுத்தமுன் க்ஷணத்திலிருக்கவேண் டும், யாகாதிகள் அப்படியில்லாமல் வெகுகாலத்திற்கு முன்னமே நசித்துப்போன போதிலும், யாகாதிகளினால் உண்டான புண்யம் இருக்கையாலே அநந்தரம் பல முண்டாகத் தடையில்லை என்று பூர்வபக்ஷம் —யாகம் என்கிற பதத்திற்கு தேவதா பூஜநம் அர்த்தம். இதனால் அக்கர்மத்தினால் ஆராதிக்கப்பட்ட பரமபுருஷனே பல ப்ரதனென்பது யுக்தம். மேலும "வாயவ்யம் ...'' என்று தொடங்கி மேல்வாக்யங்களில் "ஸ ஏவைநம் பூதிம் கமயதி'' என்று வாயு தேவதாகமான யாகம் செய்தால அவனுக்கு வாயுதேவதை ஐச்வர்யத்தைக்கொடு க்கிறதென்று சொல்லிற்று. "தஸ்யைவாத்மா ...'' என்று அந்த வாயுவையும் பரமாத்மஸ்வரூபமாகச சொல்லிறறு ஆக இந்த ச்லோகங்களினால் பரமபுருஷனே பலப்ரதனென்பது ஸித்தாந்தம். ௩௰௧

ஸூ-௩௰௨. ச்ருதத்வாச்ச.

(ஶ-ரா-வ்யா.) ச்ருதத்வாச்ச - வேதத்தில் பரமபுருஷனே பலப்ரத னாகச் சொல்லுகையாலும், (அவனே பலப்ரதன்) ௩௰௨

(ஶ-ரா-ஹா) "அந்நாதோ வஸுதாந:'' என்று அன்னம் ஸம்பத்து முதலிய வற்றை அவனே கொடுக்கிறானென்றும், "ஏஷ ஹ்யேவாநந்தயாதி'' என்று அவனேஜீவர்களுக்கு மோக்ஷாநந்தத்தைக் கொடுக்கிறானென்றும் சொல்லுகையா லும் அவனே பலப்ரதன். ௩௰௨.

ஸூ-௩௰௩. தர்மம் ஜைமிநிரத ஏவ.

(ஶ-ரா-வ்யா.) அத ஏவ - உபபத்தியினாலேயே, ஜைமிநி: ஜைமினி மஹர்ஷி, தர்மம் - தர்மத்தையே, (பலப்ரதமாக ஒப்புக்கொண்டார்.) ௩௰௩.

(ஶ-ரா-ஹா.) லோகத்தில் வ்யவஸாயம் வர்த்தகம் முதலிய வ்யாபாரங்கள், ஒருவனபேக்ஷையின்றியே, செய்கிறவனுக்குப் பலத்தை அடைவிப்பிக்கையாலும், யாகாதிகளை வேதத்தில் பல ஸாதநமாக விதிக்கையாலும் கர்மமே பலப்ரதமென் றார். ஜைமினி என்பவர். ௩௰௩.

ஸூ-௩௰௪. பூர்வம் து பாதராயணோ ஹேதுவ்யபதேசாத்.

(ஶ-ரா-வ்யா.) ஹேதுவ்யபதேசாத் - ஹேதுசொல்லுகையாலே, பாதராயண: -பாதராயண ரென்பவர், பூர்வம் து -முன்பக்ஷத்தையே, (அங்கீகரித்தார்.) ௩௰௪.

(ஸ.ஸா.) "ஹேதுவ்யபதேசாச்ச" என்பதற்கு "ஸர்வஸ்மாத் ...... ஈச்வரயதி" இத்யாதியினால் கர்மங்களைச் செய்விக்கிறவனும் பரமாத்மாவே யென்கையினால் பலப்ரதாதாவும் அந்த பரமபுருஷனே என்று ஸித்தம். ௩௰௪.

(ரா-ஸா.) வாயுவைக்குறித்துச்செய்த யாகத்தின் பலத்தை வாயுவே கொடுக்கிறானென்றும், அந்த வாயுவும் பரமபுருஷ ஸ்வரூபனென்றும் கீழ்ச்சொன்ன ஹேதுக்களைக்கொண்டு பரமபுருஷனே பல ப்ரதனாகிறானென்று பாதராயண மஹர்ஷி ஸ்வீகரித்தார். ௩௰௪.

௩-வது அத்யாயம், உ-வது பாதம் ஸம்பூர்ணம்.

௩-வது அத்யாயம், ௩-வது பாதம்.

ஸூ-அ௩-பா௩-௩௰௫. ஸர்வவேதாந்தப்ரத்யயம் சோதநாத்யவிசேஷாத்.

(ஸ-ரா-வ்ய.) சோதநாத்யவிசேஷாத் - விதிப்பது முதலானவற்றில் பேதமில்லாமையாலே, ஸர்வவேதாந்தப்ரத்யயம்-ஸகல வேதாந்தங்களிலேயும் தோற்றப்பட்ட தகராதிவித்யை ஒன்றே. ௩௰௫.

(ஸ-ஸா.) கீழ் இதுவரையில் ப்ரஹ்மஸ்வரூபம் நிர்ணயிக்கப்பட்டது. இதில், அந்த ப்ரஹ்மப்ராப்திரூப மோக்ஷத்துக்கு ஸாதநமாகிய அத்வைத ஜ்ஞாநம் பேதவாஸனை நசித்தபின் உண்டாகவேண்டியது. அதற்காக முதல் நிர்குண ப்ரஹ்மத்தில் மனம் செல்லாதாகையால் ஸகுண ப்ரஹ்மத்தையே ஏகாக்ரமாக த்யாநித்து மனதை மற்றோரிடத்தில் போகவொட்டாமற்படி பண்ணி மெள்ள மெள்ள பேதவாஸனையைக்கழித்து அதினால் சித்தம் நிர்மலமானபின் ஸர்வம் ப்ரஹ்மாத்மகம் என்கிற அத்வைத ஜ்ஞாந முண்டாகும். ஆகையால், இவ்விதமான அத்வைத ஜ்ஞாநத்துக்கு ஸாதநமாகிய ஸகுண ப்ரஹ்மோபாஸந ஸ்வரூபம் விசாரித்து நிர்ணயிக்கப்படுகிறது.—பஞ்சாக்நிவித்யை ப்ராணவித்யை முதலான வித்யைகள். அதாவது-உபாஸநமென்று சொல்லப்படுகிற பக்தி, வாஜஸநேய சாகை ஸாமசாகை முதலிய அனேக இடங்களில் சொல்லியிருக்கிறது. அந்த பஞ்சாக்நி வித்யையெல்லாம் ஒன்றேயா, அல்லது வெவ்வேறு, இப்படியே ப்ராணவித்யை தகரவித்யை சாண்டில்ய வித்யை முதலான வித்யைகளும் வெவ்வேறிடங்களில் சொல்லப்பட்டதாய் ஒரே பேரையுடையதான அவற்றுக்கு ஒன்றுக்கொன்று பேதமுண்டா, இல்லையாவென்று விசாரிக்குமளவில்,—பஞ்சாக்நிவித்யை என்று பெயர் ஒன்றாயிருந்தபோதிலும், வாஜஸநேய சாகையில், ஸாமசாகையிற் சொன்ன ஐந்தக்நிகளையும் சொல்லி, அதற்குமேல் ஆறாவது அக்நியும் சொல்லப்பட்டது. ஸாமசாகையில் ஐந்தே அக்நி த்யாநிக்கத்தக்கதாகச் சொல்லப்பட்டது. இப்படியேஸாமசாகையில்ப்ராணவித்யையில் பஞ்சேந்த்ரியங்களும் ப்ராணனும் மாத்ரமே சொல்லப்பட்டது. வாஜஸநேய சாகையில் ரேதஸ்ஸும் சேர்ந்துச்சொல்லப்பட்டது. இப்படி யொன்றுக்கொன்று ரூபம் பேதிக்கிறது. இப்படியே, முண்டகோபநிஷத்தை அத்யயநம் செய்கிறவர்கள் சிரஸில் அக்நிச்சட்டியை வைத்துக்கொண்டு அத்யயநம் செய்யவேணும் என்றும் மற்றவர்களுக்கு அந்த வ்ரதம் இல்லையென்றும் ஆகாரமும் பேதித்திருக்கிறது. ஆகையால் பேர் ஒன்றாயினும் வெவ்வேறிடங்களில் சொன்ன பஞ்சாக்நிவித்யை முதலிய உபாஸநம் வெவ்வேறாகவே ஆகக்கடவது என்று பூர்வபக்ஷி சொன்னான்.

இப்படி மற்ற பேதங்களிருந்தபோதிலும் பெயர் ஒன்றாயிருக்கையாலும், அந்தந்த இடங்களிற் சொல்லிய பஞ்சாக்நிவித்யைக்கெல்லாம் பலமொன்றாய், இப்படியே ப்ராணவித்யை முதலாக ஒரேபெயரையுடைய வித்யைகளுக்கெல்லாம் பலமொன்றாயே யிருக்கையாலும். "உபாஸநம் செய்யவேண்டும், பக்திசெய்யவேண்டும், அறியவேண்டும்" என்று இம்மாதிரியாக அவ்வவ உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட புருஷப்ரயத்நம் ஒரேவிதமா யிருக்கையாலும் பஞ்சாக்நிவித்யையெல்லாம் ஒன்றே, ப்ராணவித்யையெல்லாம் ஒன்றே, இப்படியே மற்றவித்யைகளையுமறிக என்று வ்யாஸபகவான் ஸித்தாந்தம் சொல்லுகிறார். ௧௫௪.

(ரா-ஹா.) இனி பரமாத்ம ப்ராப்திக்கு உபாயமான பக்தியை விசாரிக்கக் கோல் அதில் எந்தெந்த வித்யையில் எந்தெந்தகுணங்களையுடையவனாக உபாஸநம் செய்யவேணுமோ, அதை விசதமாக அறிவிப்பிக்கைக்காக, அந்தந்த ப்ரகரணங்களிற் சொன்ன வித்யைகளில் சிலவற்றுக்குப் பரஸ்பரம் பேதமுண்டென்றும் சிலவற்றுக்கு இல்லையென்றும் நிர்ணயிக்கிறார்.—தகரவித்யையென்பது சாந்தோக்யத்திலும் தைத்திரீயத்திலும் சொல்லப்பட்டது. இவ்விரண்டிடத்திலும் சொல்லப்பட்ட தகரவித்யை வெவ்வேறு, அல்லது ஒன்று என்று ஸம்சயம்.—வெவ்வேறு ப்ரகரணங்களில் சொல்லியிருக்கிறபடியால் வேறுவேறென்று பூர்வபக்ஷம்.—இரண்டிடத்திலும் சொல்லப்பட்டபோதிலும் தகரவித்யை என்று பேர் ஒன்றாயிருக்கையாலும், இவ்விரண்டுக்கும் பரமாத்ம ப்ராப்தியாகிற பலமொன்றாகையாலும், "ஏஷ ஆத்மா அபஹதபாப்மா" என்றும், "தஹ்ரம் விபாபம்" என்றும் இரண்டிடத்திலும் ஒரேவிதி ப்ரத்யயத்தினுற் சொல்லுகையாலும் இரண்டும் ஒன்றே; இப்படியே வைஶ்வாநராதி வித்யைகளிலும் கண்டுகொள்வது என்று ஸித்தாந்தம். ௧௫௫.

ஸூ-௧௫௬. பேதாந்நேதி சேந்நைகஸ்யாமபி.

(ஸ-ரா-வ்ய) பேதாத்-(ஒருபேதமின்றிக்கே இரண்டிடத்திற் சொல்லுகையாலே) பேதம் தோற்றுகையாலே (இரண்டும் ஒன்றன்று), இதி சேத்-என்றால், ந ஏகஸ்யாமபி - ஒரு வித்யையையே இரண்டுதரம் சொல்வதுண்டு. ௧௫௬.

(ஸ-ஹா.) இனி பூர்வபக்ஷியினுடைய ஒவ்வொரு யுக்தியையும் தனித்தனியே சொல்லிக் கழிக்கிறார்.—ஸாமசாகையிற் சொன்ன பஞ்சாக்நி வித்யையில், ஜீவன் ஸ்வர்க்கலோகத்தில் ஸுகமநுபவித்தபின் தன்னுடையபுண்யம்கழிந்தவாறே அங்கு நின்றும் நழுவி ஆகாசத்தில் காற்றுடன் சேர்ந்து அல்லாடுகிறான், பின்பு மேகத்தில்வந்து சேருகிறான், அதன்பின், மழை பெய்யும்போது அந்த தாரைவழியாக பூமியிலே விழுந்து தாந்யரூபமாகிறான், பிறகு அந்த தாந்யத்தை எந்த புருஷன் பக்ஷிக்கிறானோ, அவனுடைய சரீரத்தில்போய்ச் சேருகிறான், பின்பு, அவனுடைய ரேதஸ்ஸு வழியாக ஸ்த்ரீயினிடத்தில் சேருகிறான்; இப்படி ஜீவன் ஆகாசம் மேகம் பூமி புருஷன் ஸ்த்ரீ என்கிற ஐந்திடங்களில் இருக்குமிருப்பை யநுஸந்திக்கக்கடவன். இவ்வைந்திடங்களிலுமிருப்பு, அக்நியினிடையிலிருப்புப்போல் அதிதுஸ்ஸஹமாகையால் இவ்வைந்தையும் அக்நியென்று சொல்லுகிறது. இவ்விருப்பை அடிக்கடி மநநம் செய்தால் இந்த ஸம்ஸாரத்திலுள்ள பாதை நெஞ்சிற்பட்டு ஜீவனுக்கு வைராக்யம் பிறக்குமென்கைக்காக இந்த பஞ்சாக்நிவித்யையை உபாஸநம் பண்ணச்சொல்லிற்று. வாஜஸநேய சாகையில் இம்மாதிரியாகவே ஐந்தக்நிகளையும்சொல்லி "தஸ்யாக்நிரேவாக்நிர்பவதி" என்று ஆறாவதோ ரக்நியும் சொல்லப்பட்டது. இப்படி த்யாகிக்கவேண்டிய அக்நி ஒன்றில் அர்தாய் ஒன்றில் ஆறாய்விட்ட

படியால் இரண்டிடத்திற் சொன்ன பஞ்சாக்நி வித்யைகளும் ஒன்றாகமாட்டா. இப்படியே சாந்தோக்யத்திற் சொல்லப்பட்ட ப்ராணவித்யையில், ப்ராண ஸம்வா தத்தில் முக்யப்ராணன்தவிர மற்ற வாக், சக்ஷுஸ், ச்ரோத்ரம், மநஸ், என்று நாலும் த்யாநம் செய்யத்தக்கதாகச் சொல்லப்பட்டது. (அங்கு.- வாக்கு, சக்ஷுஸ், ச்ரோத்ரம், மநஸ், முக்யப்ராணன், இவ்வைந்தும் உத்தாநம் பண்ணத்தொடங்கி, முக்யப்ராணன் தவிர மற்ற நாலுக்கும் ரஜோகுணமும் தமோகுணமுமுண்டாகையால் அந்நாலும் உத்தாநம் செய்ய யோக்யதை யற்றதுகளென்றும், முக்யப்ராணனுக்கு அத்தோஷ மில்லாமையால் அதுவே உத்தாநத்துக்கு யோக்யமென்றும் சொல்லி, பின்பு வாக்கு முதலியவை, தங்களிடத்திலிருந்த வஸிஷ்டத்வம், அதாவது - நல்ல சப்தங்களை யுச்சரிக்கை முதலிய ஒவ்வொரு குணங்களையும் முக்யப்ராணனுக்குக் கொடுத்ததுகளென்றும் சொல்லியிருக்கிறதைக் கண்டுகொள்வது) வாஜஸநேய சாகையில் அந்நாலுடன் ரேதஸ்ஸையும் சேர்த்து ஐந்தாகச்சொல்லியிருக்கிறது. ஆகையாலவை யொன்றாகமாட்டா, வெவ்வேறாகவே யாகவேணும் என்று இப்படி பூர்வபக்ஷி உபாஸநங்களின் ரூபபேதங்களைச்சொல்லி அவ்வவ இடங்களிற் சொல்லிய பஞ்சாக்நிவித்யை முதலானவை வெவ்வேறென்று சொன்னான்—வித்யை ஒன்றாயிருந்தபோதிலும் அதிலே ஓரிடத்திற்கோரிடம் சில பேதங்கள் சொல்லியிருந்தபோதிலும் அந்த வித்யை வெவ்வேறாகமாட்டாது. அப்படிப்பட்ட பேதமும் இங்கேகிடையாது. சாந்தோக்யத்திற்சொன்ன ஐந்தக்நியையே வாஜஸநேய சாகையிலும் த்யாநம் பண்ணச்சொல்லிற்று. ஆறாவது அக்நி த்யாநம் பண்ணுகைக்காகச் சொல்லப்பட்டதன்று. கீழ்ச்சொன்ன இவ்வைந்தும் அக்நியைப்போலே யிருக்கையால் இவற்றையக்நியென்கிறது என்றுகீழ்ச்சொன்னதை அநுவாதம் செய்கிறது. ஆகையால் பஞ்சாக்நிவித்யையில் பேதமில்லை. ப்ராண வித்யையிலும், சாந்தோக்யத்தில் ரேதஸ்ஸைச் சொல்லாவிடிலும், வாஜஸநேயத்தில் சொன்ன அந்த ரேதஸ்ஸை இங்கும் வைத்துக்கொள்ள வேண்டியதாகையால் இரண்டு ப்ராண வித்யைக்கும் பேதம் கிடையாது. என்று ஸித்தாந்தம் பண்ணுகிறார். ௩௫.

(ஶ்ரீ-ஹா.) இரண்டிடத்திலும் சொன்ன வித்யை ஒன்றாகில், ஓரிடத்திற்சொன்னதே போதுமாயிருக்கும். ஓரிடத்தில் காட்டிலும் மற்றோரிடத்தில் அந்த வித்யைக்கு ஏதாவது விசேஷம் சொல்லியிருந்தால் ஒரேவித்யையை இரண்டிடத்தில் சொல்ல உபயோகமுண்டு. அப்படியின்றிக்கே இரண்டிடத்திலும் ஏகரூபமாய்ச் சொல்லியிருக்கையாலும் வெவ்வேறு ப்ரகரணங்களிற்சொல்லுகையாலும் இரண்டுக்கும் பேதமே தோற்று மாகையால் இரண்டுமொன்றன்று என்று பூர்வபக்ஷம். ஒரு வித்யையையே ஒருவனுக்காக ஒரு ப்ரகரணத்திலும், மற்றொருவனுக்காக ப்ரகரணாந்தரத்திலும் சொல்லக்கூடுமாகையால் இது வேறென்பதற்கு ஹேதுவாக மாட்டாது. ௩௬.

ஸூ-௩௭. ஸ்வாத்யாயஸ்ய ததாத்வேந ஹி ஸமாசாரே அதிகாராச்ச ஸவவச்ச தந்நியம:॥

(ஶ்ரீ-பா-வ்யா.) ஸ்வாத்யாயஸ்ய-வேதாத்யயநத்திற்கு, ததாத்வேந ஹி-ஸம்ஸ்கார விசேஷமுண்டாகைக்காகவன்றோ (சிரோவ்ரதம் சொல்லிற்று). ஸமாசாரே - ஸமாசாரம் என்கிற க்ரந்தத்தில், அதிகாராச்ச - சொல்லுகையினாலும், (இந்த வ்ரதம் வித்யாங்கமன்று), ஸவவச்ச - (ஸப்தஸூர்யாதி) ஹோமம்போல, தந்நியம: - அந்த வ்ரதநியமமும். ௩௭.

(ஸ்ரு-ஸா.) நீந்; வித்யைகளுக்கு ரூபபேத மில்லை யென்று சொல்லி, இதில் ஸ்வரபேதமுமில்லையென்கிருர்—ஆதர்வணிகர்களுக்கு சிரோவ்ரதம் சொல்லியிருக்கிறது. சிரோவ்ரதமாவது - தலையில் நெருப்புச்சட்டியை வைத்துக்கொள்ளுகை. மற்றவர்களுக்கு அந்த வ்ரதம் சொல்லவில்லை. இப்படி வ்ரதம் பேதித்துப்போய் விட்டபடியால், அந்த வ்ரதத்துடன் செய்யவேண்டிய உபாஸநமும் அந்தவ்ரதமின் றியே செய்யவேண்டிய உபாஸநமும் ஒன்ருக மாட்டாது. என்ருல் பூர்வபக்ஷம்— ஆதர்வணிகர்கள் தங்கள்சாகையை அத்யயநம் செய்யும்போது சிரோவ்ரத மநுஷ்ட் டிக்கவேண்டுமென்றே சொல்லிற்று அப்படி அத்யயநத்துக்கு அங்கமாகச் சொல் லப்பட்ட அந்த வ்ரதம் உபாஸநத்துக்கு அங்கமாகமாட்டா தாகையால், அவர்கள் செய்யு முபாஸநத்திற்கும் மற்றவர்கள் செய்யு முபாஸநத்திற்குப்போல் சிரோ வ்ர தம் அங்கமாக மாட்டாது. இதற்கொரு த்ருஷ்டாந்தம் — ஆதர்வணிகர்களுக்கு, ஸௌர்யாதி ஸவஹோமங்களை ஒரே அக்நியில் பண்ணச்சொல்லிற்று. மற்றவர்க ளுக்கு த்ரேதாக்நியில் பண்ணச்சொல்லிற்று. இப்படி இரண்டுவிதமாகச் சொல்லி யிருந்தபோதிலும், ஏகர்ஷி ஸம்ஜ்ஞையையுடைய அக்நி ஆதர்வணிகர்களுக்கேசொ ல்லப்பட்ட தாகையால், ஸௌர்யாதி ஹோமம் சொல்லுகிறவிடத்தில் அவர்களுக் குச் சொல்லப்பட்ட அக்நியிலேயே அவர்களுக்கு ஹோமம் செய்யச்சொல்லியிருக் கையால், அதை ஆதர்வணிகர்களே செய்யவேண்டும், மற்றவர்கள் த்ரேதாக்நியி லேயே செய்யவேண்டும் என்று நியமம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோலவே இந்த சிரோவ்ரதமும் அவர்களுடைய அத்யயநத்துக்கே வ்ரதமென்று கண்டுகொள்வது. இப்படி இரண்டிடத்திற் சொன்ன வித்யைக்கும் அங்கத்தில் பேதமில்லாமையால் அவ்விரண்டிடத்திலும் ஒரே வித்யை தான் சொல்லப்பட்டதென்று ஸித்தாந்தம்.

(ரா-ஸா.) முண்டகோபநிஷத்தில் ஆதர்வணிகர்களுக்கு அக்ஷர வித்யையைச சொல்லிக் கடைசியில் அந்த வித்யைக்கு அங்கமாக சிரோவ்ரதம் என்கிற வ்ரதத் தை அநுஷ்டிக்கச்சொல்லிற்று. வாஜஸநேயத்தில்கார்கிப்ரச்நத்திலும் அக்ஷரவித் யை சொல்லப்பட்டிருக்கிறது. முன்சொன்ன சிரோவ்ரதம் ஆதர்வணிகர்களுக் கொழிய வாஜஸநேயிமுதலிய மற்றவர்களுக்கு அநுஷ்டிக்கக்கூடாது, ஆகையால் கார்கிப்ரச்நத்திற் சொன்ன அக்ஷரவித்யைக்கு சிரோவ்ரதம் அங்கமாகமாட்டாது. ஆதலால் முண்டகோபநிஷத்திற் சொன்ன அக்ஷரவித்யையும் கார்கிப்ரச்நத்திற் சொன்ன அக்ஷர வித்யையும் ஒன்ருகமாட்டாது என்று பூர்வபக்ஷம்—முண்டகோ பநிஷத்தில் ஆதர்வணிகர் களுக்குசசொன்ன சிரோவ்ரதம் அக்ஷர வித்யைக்கு அங்கமாகச் சொல்லவில்லை. ஸப்தஸௌர்ய ஹோமங்களும், சதோதந கர்மமும் தாங் கள் செய்த வேதாத்யயநத்திற்கு ஒரு விதமான ஸம்ஸ்காரமுண்டாகைக்காகஆதர் வணிகர்களுக்கே விதித்தது. அதுபோலவே இந்த சிரோவ்ரதமும் (வேதாத்யயநத் திற்கே அங்கமாக விதிக்கப்பட்டது- இப்படியே ஸமாசாரமென்கிற க்ரந்தத்திலும் சொல்லிற்று. ஆகையால் இரண்டிடத்திற சொன்ன அக்ஷரவித்யைகளுக்கும் சிரோவ்ரதம் அங்கமன்று, ஆதலால் இரண்டிடத்திற் சொன்ன அக்ஷரவித்யையும் ஒன்று என்று ஸித்தாந்தம். (௩-௩-௭.)

ஸூ-௩-௩-அ. தர்சயதிச.

(ஸ்ரு-ரா-வ்ரு.) தர்சயதிச-வேதமும் இரண்டிடத்திற்சொன்னதுக் கும் அபேதத்தைக்காண்பிக்கிறது. ௩-௩-அ.

(ஸ்ரு-ஸா,) "ஸர்வேவேதாயத்பதமாமநந்தி" ஸமஸ்தவேதங்களும் எந்த ப்ரஹ்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறதுவோ என்று நிர்குணப்ரஹ்மஸ்வரூபமொன் றேயென ஸகலவேதங்களாலும் அறியத்தக்கதாக வேதம்சொல்லிற்று. இப்படி நி

குண ப்ரஹ்மம் ஏகரூபமாகையால் தத்விஷயமான ஜ்ஞாநமும் ஏகரூபமாயே யிருக்கும் என்று நிர்குண ப்ரஹ்மவித்யைக்யம் சொல்லி, பின்பு ஸகுணப்ரஹ்மோபாஸநம் சொல்லுகையாலே, அவ்வுபாஸநத்திலும் எல்லா விடங்களிலும் அந்த ப்ரஹ்மத்தையே அறியத்தக்கதாகச் சொல்லியிருக்கையால், அவ்வுபாஸநமெல்லாம் ஏகரூபமே, பேதமிலையாது என்பது வேதஸம்மதமா யிருக்கும். (௩௫அ)

(ரா-ஹா.) தைத்திரீயத்தில், தஹராகாசத்திற்குள்ளுள்ளவைகளை உபாஸிக்க வேண்டுமென்று ஸாமாந்யமாகச் சொல்லிற்று; சாந்தோக்யத்தில் தஹராகாசத்திற்குள்ளுள்ள அபஹதபாப்மத்வாதி குணாஷ்டகங்களை உபாஸிக்கவேணுமென்று விசேஷித்துச் சொல்லிற்று. இவ்விரண்டும் ஒன்றானால்தான் ஓரிடத்தில் ஸாமாந்யமாகவும் ஓரிடத்தில் விசேஷமாகவும் சொல்லக்கூடும். மற்றப்படி கூடாதாகையால் இரண்டுமொன்று என்றே வேதத்தினால் நிஶ்சயிக்கப்படுகிறது. ௩௫அ.

ஸூ-௩௬௧ உவஸஂஹாரொ௨஥ாஹெதாதிவி

ஶெஷவலாெநவ.

(ஶ-ரா-வ்யா:) ஸமாநவ (ஸதி) - துல்யமான (ஒன்றான) வளவில் அர்தாபேதாத் - விஷயத்துக்கு பேதமில்லாமையாலே, விதிஶேஷவத்-விதிக்கப்பட்ட வித்யைக்கு சேஷமான குணங்களைப்போல், உபஸம்ஹாரஃ - உபஸம்ஹாரம் (மற்ற குணங்களுக்கும்) செய்யவேண்டியது. ௩௬௧.

(ஶ-ஹா.) பலவிடங்களிற் சொல்லப்பட்ட பஞ்சாக்நிவித்யைக்கு (இப்படியே மற்ற எல்லாவித்யைகளுக்கும்) பேதமுண்டா இல்லையா என்று விசாரித்து நிஷ்கர்ஷம் செய்கைக்கு ப்ரயோஜநம் சொல்லுகிறார்—சாந்தோக்யத்தில் பஞ்சாக்நி வித்யையில் சொல்லப்படாமல், வாஜஸநேயசாகையில் பஞ்சாக்நி வித்யையில் சொல்லப்பட்ட குணங்களையும், வாஜஸநேயத்தில் சொல்லப்படாமல் சாந்தோக்யத்தில்சொல்லப்பட்ட குணங்களையும் எல்லாம் எல்லா பஞ்சாக்நிவித்யையில் அநுஸந்திக்கவேண்டும், அவ்விடத்திற்சொல்லவில்லை யென்றுசிலகுணங்களை விடக்கூடாது. அப்படியநுஸந்தியாவிடில், அக்குணத்தையநுஸந்திப்பதினால் அந்தஉபாஸநத்துக்கு உண்டாகிற அதிசயம்நேரிடாமற்போய்விடும். இதுவே எல்லா சாகைகளையும்ஆராய்கைக்குபலம். இதற்கு உதாஹரணம் - அக்நிஹோத்ரமென்கிற கர்மத்தை யோரிடத்திற்சொல்லி அங்கு அதுக்குச்சில அங்கங்களைச்சொல்லி, மற்றோரிடத்தில் அந்த கர்மத்தை அநுவாதம்பண்ணி முன்புசொல்லாத இன்னும் சில அங்கங்களைச்சொன்னால் அந்த அங்கங்களையும்கூட முற்கூறிய அக்நிஹோத்ரத்திற்கு அங்கமாக அநுஷ்டிப்பதுண்டு; அதுபோலவே இங்கும் கண்டுகொள்க. ௩௬௧.

(ரா-ஹா.) இப்படி நாநாவிடங்களிற் சொல்லப்பட்ட தகரவித்யைக்கும், அவ்வண்ணமாக, வைஶ்வாநரவித்யை அக்ஷரவித்யை சாண்டில்யவித்யைகளுக்கும் ஐக்யம் ஸித்தித்ததாகையால், அந்தவித்யையைச் செய்யவேணுமென்று விதிக்கிற ஒரு ப்ரகரணத்திலுள்ள வாக்யத்தில் அந்தவித்யைக்கு சேஷமாகச் சொல்லப்பட்ட குணங்கள் எப்படி அந்தவித்யையில் அநுஸந்திக்கப்படுகின்றனவோ, அப்படியே, ப்ரகரணாந்தரத்தில் அவ்வித்தையை விதிக்கிற வாக்யத்தில், முன்சொல்லப்படாத வேறு குணங்களை அநுஸந்திக்க விதித்திருந்தால் அக்குணங்களையுங்கூட அந்த வித்யையை யப்யஸிக்கிறவன் அநுஸந்திக்கக்கடவன். ௩௬௧.

ஆயி-அச. ஸூ-௩௬௨. ஆநந்தாநாஂஸ்வாதி

வெஹநாவிஶெஷாத்.

(ஸூ-ரா-வ்ய.) ஶப்தாத் - வாக்யத்தினாலே, பேதாத் - பேதம் (தோற்றுகிறது), இதிசேத் - என்றால், அவிஶேஷாத் - விஶேஷமில்லாமையினாலே, ந - (பேதம்) கிடையாது. ௩௯௦.

(ஸ்ரு-ஹா.) இவ்வதிகரணத்தில் வித்யாபேதம் காண்பிக்கப்படுகிறது.—வாஜஸநேயத்தில், "தே ஹ வாசமூசுஸ்த்வம் ந உத்காயேதி ... யாஜேதி" என்று தொடங்கி வாக்கு முதலானவற்றை ரஜோகுணத்தோடு கூடியதென்று நிந்தித்து, முக்யப்ராணனுக்கு இத்தோஷங்களொன்றுமில்லையாகையால் அதுவே ஶ்ரேஷ்டமென்று ஸ்தோத்திரம் செய்திருக்கிறது, அப்படியே சாந்தோக்யத்திலும் சொல்லியிருக்கிறது, இவ்விரண்டும் ஒன்றா அன்றா என்று விசாரிக்கில், வாஜஸநேயத்தில் ஸம்பூர்ணோத்கீதம் உபாஸிக்கத் தக்கதென்றும் அந்த உபாஸநத்துக்குக்கர்த்தா ப்ராணனென்றும் சொல்லப்பட்டது. சாந்தோக்யத்தில், உத்கீதாவயவமான ஓங்காரம் உபாஸிக்கத்தக்கதென்றும் ப்ராணனை உத்கீதமாக உபாஸிக்கவேணுமென்று ப்ராணனை உத்கீதோபாஸநத்துக்குக் கர்மமாகவும் சொல்லப்பட்டது; இப்படிவெவ்வேறு விதமாகச் சொல்லியிருக்கையால் இரண்டிடத்திலும் வெவ்வேறு வித்யையே சொல்லப்பட்டதென்று ஸித்தாந்தி சொன்னதுக்குப் பதில், இப்படிசிலபேதங்கள் காணப்பட்டபோதிலும், இரண்டிடத்திலும், தேவாஸுரயுத்தம் ப்ராணப்ரசம்ஸை, வாக்குமுதலானவற்றை நிந்திக்கை, ரஜஸ்தமோகுணங்களாகிற அஸுரரை யழிக்கவேணுமென்கிற அபிப்ராயம். உத்கீத ப்ரஸ்தாவம், ப்ராணனை அவலம்பித்து அஸுரரை ஜயிக்கை முதலிய அநேக விஷயங்கள் ஒத்திருக்கையால் சாந்தோக்யத்தில் உத்கீதபதத்திற்கு ஸம்பூர்ணோத்கீத பரமாக அர்த்தம்சொல்லியும் ப்ராணனை அங்குசொன்ன உத்கீதோபாஸநத்திலும் கர்த்தாவாக ஒப்புக்கொண்டும், இரண்டிடத்திலும் ஒரேவித்யை சொல்லப்பட்டதென்று அங்கீகரிக்கவேணும் என்று பூர்வபக்ஷி சொன்னான். ௩௯௦

(ரா-ஹா.) இப்படி ஸாமாந்யமாக வித்யைகளுக்கு அபேதத்தைச் சொல்லி. இவ்வதிகரணத்தினால், சாந்தோக்யத்திலும் வாஜஸநேயசாகையிலும் சொல்லப்பட்ட உத்கீதவித்யைகளுக்கு பேதத்தை ஸ்தாபிக்கிறார். சாந்தோக்யத்தில் உத்கீதத்தில் ப்ராணத்ருஷ்டி செய்யவேணுமென்றும், அதுக்கு பலம் சத்ருநாசமென்றும் சொல்லிற்று. வாஜஸநேயிகளும், உத்கீதத்தில் ப்ராணத்ருஷ்டி செய்யவேணுமென்றும், அதுக்கு சத்ருநாசம் பலமென்றும் சொன்னார்கள். இவ்விரண்டிடத்திலும் ஒரேவித்யை சொல்லப்பட்டதா,வெவ்வேறுவித்யையா என்று ஸம்சயம்.—சாந்தோக்யத்தில் உத்கீதத்திலும், மற்றோரிடத்தில் உத்கீதத்தை காநம் செய்கிற உத்காதாவினிடத்திலும் ப்ராணத்ருஷ்டி செய்யச்சொல்லுகையாலே இரண்டிடத்திலும் வெவ்வேறுவித்யை விதிக்கப்பட்டதென்று சங்கிக்கவேண்டா. ஆரம்பத்தில் இரண்டிடத்திலும் உத்கீதம் என்று ஆரம்பித்திருக்கையாலேயும் ப்ராணத்ருஷ்டியும், பலமும் ஒன்றாயிருக்கையாலேயும் இரண்டுமொன்றே என்றும், உத்கீதத்தையே உத்காதாவென்று லக்ஷணையாகச் சொல்லிற்றென்றும் கொள்ளவேணும் என்று பூர்வபக்ஷம். ௩௯௦.

ஸூ-௩௯௧. ந வா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்.

(ஸூ-ரா-வ்ய.) ப்ரகரணபேதாத் - (இரண்டிடத்திலும்) ப்ரகரணம் வேறாகையாலே, ந - (ஒன்றென்பது) கூடாது. பரோவரீயஸ்த்வாதிவத் - மற்றுமேதங்களைக்காட்டிலும் ஶ்ரேஷ்டனான ப்ரஹ்மாவுக்கும் ஶ்ரே

ஷ்டனுயிருக்கையாகிற குணம்முதலியவை வித்யைகளுக்கு எப்படிபேத ஜநகமாயிற்றோ?) (அப்படியே, இங்கும்கண்டுகொள்க. ௩௬௧.

(ஶ-ஸா.) பூர்வபக்ஷியினுடைய மதத்தில், சாந்தோக்யத்தில் இந்தவித்யையின் ஆரம்பத்தில் ஓங்காரத்தைப் புகழ்ந்து, உத்கீதாவயவமான அந்த ஓங்காரமாக ப்ராணனை உபாஸிக்கவேணுமென்று சொல்லுகையாலே இதைஸம்பூர்ணோத்கீத விஷயமென்று எவ்விதத்திலும் சொல்லி முடியாது. அப்படி ஒப்புக்கொள்ளில் உபக்ரமவிரோதமும், கர்மமாகச்சொன்னதைக் கர்த்தாவாகச் சொன்னால் லக்ஷணு தோஷமும்வரும்.வாஜிஸநேயத்திற்சொன்ன உத்கீதபதத்திற்கு உத்கீதாவயவமான ப்ரணவமாக அர்த்தம் சொல்லி இரண்டையும் ஒன்றாக்குவோமென்றாலும், அப்படி ஸங்கோசம் செய்யஹேது வொன்றும் காணவில்லை. மேலும், சாந்தோக்யத்தில் ஓங்காரம் உபாஸ்யம, வாஜிஸநேயத்தில் ப்ராணன் உபாஸ்யம். இப்படி பலவிதமான விரோதங்களுண்டாகையால் இரண்டும் ஒன்றாகமாட்டாது. இதற்குஉதாஹரணம்-சாந்தோக்யத்திலேயே, ஓரிடத்தில்உத்கீதாவயவமான ஓங்காரத்தை ஆகாசஸ்வரூபமாகவும், மற்றோரிடத்தில் "ஹிரண்யஶ்மஶ்ரு: ஹிரண்யகேஶ:" என்றுசொல்லப்பட்ட ஸூர்யமண்டலமத்யவர்தியான புருஷஸ்வரூபமாகவும் உபாஸநம் பண்ணச் சொல்லிற்று. அவ்விரண்டிடத்திலும் உத்கீதோபாஸநமென்ற பெயரும் உத்கீதாவயவமான ஓங்காரமும் மற்றும் அனேகதர்மங்களும் ஒன்றாயிருந்தபோதிலும், அந்த ஓங்காரத்தில் பண்ணவேண்டிய அபிஸந்தி பேதத்தினால் இரண்டு வித்யையும் பேதித்திருக்கும்.அப்படியே இங்கும்கண்டுகொள்வது.(௩௬௧)

(ரா-ஹா.) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.—முதலிலே உத்கீதத்தையே இரண்டிடத்திலும் உபாஸ்யமாகச்சொல்லியிருந்தால் அப்படி கொள்ளலாம். அதுவேஇல்லை. எனெனனில், சாந்தோக்யத்தில், உத்கீதாவயவமான ப்ரணவத்தையும், மற்றோரிடத்தில்உத்கீதத்தையும் உபாஸ்யமாகச்சொல்லுகையாலேஆரம்பத்திலேயேபேதித்துவிட்டது.—இதற்குதாஹரணம் ஒருப்ரணவத்திலேயே ஓரிடத்தில் ஹிரண்யமய விக்ரஹவிஶிஷ்ட புருஷத்ருஷ்டியும், மற்றோரிடத்தில்,பரோவரீயஸ்த்வகுணவிஶிஷ்ட புருஷத்ருஷ்டியும் விதித்தவிடங்களில் அவ்விரண்டிடமும் எப்படி வெவ்வேறுவிஷயமென்று அங்கீகரிக்கப்படுகிறதோ,அப்படியே இங்கும்ஆரம்பத்தில் ஓரிடத்தில் ப்ரணவத்தையும், மற்றோரிடத்தில் உத்கீதத்தையும் சொல்லுகையாலே அநந்தரத்திலும், ஓரிடத்தில் உத்கீதத்திலும் மற்றோரிடத்தில் உத்காதாவினிடத்திலும் ப்ராணத்ருஷ்டி விதித்ததென்று வெவ்வேறுவிஷயமாகச் சொல்வது யுக்தமாய் ப்ரகரணம் பேதித்தபடியாலே இரண்டு வித்யையும் வெவ்வேறாகக் கொள்ளவேணுமென்று ஸித்தாந்தம். ௩௬௧.

ஸூ-௩௬௨. ஸம்ஜ்ஞாதஶ்சேத்தது௧்தமஸ்தி து தத்.

(ஶ-ரா-வ்யா.) ஸம்ஜ்ஞாத: - பேரினுடைய அபேதத்தினால் (இரண்டுக்குமொரு பேராயிருக்கையால்), தத் - அந்தவித்யை ஒன்று, (என்று) உக்தம்சேத் - சொல்லப்பட்டதேயானால், தத்ஸ்தி - அந்தநாமைக்யமும், அஸ்தி - வெவ்வேறுவித்யைகளுக்கு முண்டு. ௩௬௨.

(ஶ-ஹா) நாநாஸ்தலங்களில் சொல்லப்பட்ட வித்யைகளுக்கு பஞ்சாக்நிவித்யையென்ற பெயர் ஒன்றாயிருப்பதைப்பற்றி அவ்வித்யைகளுக்கு பேதமில்லையென்றதுபோல் இங்கும் உத்கீத வித்யையென்கிற பெயர் ஒத்திருப்பதினால் இரண்டுவித்யையும் ஒன்றாகலாமேயென்னில்;—வேறுபாதகமில்லாத விடத்தில்பெயர் ஒன்றாயிருந்தால் இரண்டும் ஒன்றாகலாம். இங்குகீழ்ச்சொன்ன பலவிதமான

விரோத முண்டாகையால் ஒன்றாகக்கூடாது. தர்சபூர்ணமாஸம் அக்நிஹோத்ரம் என்கிற இரண்டுகர்மங்கள் வெவ்வேறாயிருந்த போதிலும் அவ்விரண்டுக்கும் காடகம் என்று பெயர் ஒன்றாயிருப்பது போல் இங்கும் கண்டுகொள்வது,. (௯௬உ)

(ஶ்ரீ-ஸூ.) சாந்தோக்யத்திலும் வாஜஸநேயத்திலும் இந்த வித்யையை உத்கீதமென்று நாமத்தை யிட்டுச் சொல்லுகையாலே இரண்டுமொன்றே யாகவேண்டுமென்று பூர்வபக்ஷம்.—அக்நிஹோத்ரமென்கிற கர்மம் நித்யாக்நிஹோத்ரமென்றும் அயநாக்நிஹோத்ரமென்றும் இரண்டுவிதம். நித்யாக்நிஹோத்ரமாவது - நித்யம் செய்யத்தக்கது. அயநாக்நிஹோத்ரமாவது - குண்டபாயிகள் அயனந்தோறும் பண்ணுகிறது. இவ்விரண்டுக்கும் பேர் ஒன்றாயினும் கர்மம் வெவ்வேறாயேயிருக்கிறது. சாந்தோக்யத்தில் ப்ரதமப்ரபாடகத்தில் அநேகவிதமாகச சொல்லப்பட்ட உத்கீதவித்யைகளில்பெயர் ஒன்றாயினும் பரோவரீயஸ்த்வம்முதலியகுண விசிஷ்டனான பரமபுருஷத்ருஷ்டியுக்தமான உத்கீதவித்யையும், ஹிரண்மயஶ்மஶ்ரு விசிஷ்டபுருஷத்ருஷ்டியுக்தமான உத்கீதவித்யையும் பிந்நபிந்நங்களாகின்றன. அதுபோல் இங்கும் ப்ரணவத்தில் ப்ராணத்ருஷ்டி யுக்தமான சாந்தோக்யத்திற் சொன்ன உத்கீதவித்யையும், வாஜஸநேயத்திற் சொன்ன உத்காதாவிடத்தில் ப்ராணத்ருஷ்டியுக்தமான உத்கீத வித்யையும் வெவ்வேறென்று ஸித்தாந்தம். ௯௬உ.

ஸூ-௯௬௩. வ்யாப்தேஶ்ச ஸமஞ்ஜஸம்.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) வ்யாப்தேஶ்ச - வ்யாப்தியினாலும், ஸமஞ்ஜஸம் - (கீழ்ச் சொல்லப்பட்ட அர்த்தம்) யுக்தியுக்தமாகிறது. ௯௬௩.

(ஶ்ரீ-ஸூ) "ஓமித்யேதத³க்ஷரமுத்³கீ³த²முபாஸீத" உத்கீதமாகிய ஓங்காரத்தை உபாஸநம் செய்யவேண்டியது என்று சொல்லியிருக்கிறது. உத்கீதமாகிய ஓங்காரம் என்று ஒன்றை விசேஷணமாகவும் மற்றொன்றை விசேஷ்யமாகவும் சொன்னால் இதற்கு ஸாமாநாதிகரண்யம் என்றுபெயர். அதாவது இரண்டுபதமும் சேர்ந்து ஒன்றைச்சொல்லுகிற தென்றர்த்தம். இந்தஸாமாநாதிகரண்யம் அத்யாஸம், அபவாதம், ஏகத்வம், விசேஷணம் என்றநாலிடத்திலும் வரும். அதில் அத்யாஸமாவது - இவ்வஸ்து அவ்வஸ்துவன்றென்று தெரிந்திருக்கச் செய்தேயும் இதை அவ்வஸ்து வாகபாவிக்கை; ப்ரதிமையில் விஷ்ணுவை த்யாநிக்கை அத்யாஸமாம். அபவாதமாவது-முன்னம் ப்ராந்தியினாலுண்டாய், பின் யதார்த்த ஜ்ஞாநத்தினால் பாதிக்கப்படுமது; முன்புதேகத்தையேஆத்மாவாக எண்ணியிருந்து, பின்பு சாஸ்திரத்தில் ஆத்மாவென்று வேறொருவனுண்டென் றறிந்து முன்புண்டான தேகமே ஆத்மாவென்கிற ஜ்ஞாநம்போகை அபவாதமாம். ஏகத்வமாவது-இரண்டு மொன்றே யாயிருக்கை; ப்ராஹ்மணோத்தமன் த்விஜோத்தமன் என்பது ஏகத்வமாம். விசேஷணமாவது — ஸஜாதீயமான மற்றொரு வஸ்துவில் நின்றும் வேறுபடுத்திக்காட்டுகை. சிவந்த தாமரைப்பூவைக் கொண்டுவா வென்பது விசேஷண மெனப்படும். இந்நாலில் இங்கு எதுவாக அங்கீகரிக்க வேணுமென்னில், அத்யாஸ பக்ஷத்தில், உத்கீத சப்தத்திற்கு ஓங்காரத்தில் லக்ஷணை சொல்லவேண்டுகையாலும், அபவாதபக்ஷத்தில், இரண்டில் ஏதோ ஒன்று ப்ரமமாக வேண்டுகையாலும், ஏகத்வபக்ஷத்தில், ஒரேசப்தத்தினால் சொல்லவேண்டியிருக்க இரண்டு சப்தத்தை யிட்டுச்சொல்வது வ்யர்த்தமாகையாலும். இம்மூன்று பக்ஷங்களும் சரியன்று; விசேஷணபக்ஷமே இங்கு வேண்டுவது. ஓங்காரத்தை உபாஸநம் செய்யவேணுமென்றால், ஸகல வேதங்களிலுமுள்ள ஓங்காரங்களெல்லாம் தோற்றும்; அதற்காகஅவற்றில்உத்கீதாவயவமாகிய ஓங்காரத்தை உபாஸிக்கவேணுமென்று

மற்ற ஓங்காரங்களை நீக்கி இதைமாத்திரம் சொல்ல வேண்டுமாகையால் இப்பக்ஷமே சரியானது. ௩௪௩.

(ரா-ஸ்ரீ.) சாந்தோக்யத்தில் ப்ரதமப்ரபாடகத்தில் ஆரம்பத்திலும், மேல் எல்லா இடங்களிலும் உத்கீதமென்று உத்கீதாவயவமான ப்ரணவத்தையே சொல்லுகையாலே, நடுவில் ப்ராணத்ருஷ்டிக்கு விஷயமாகச்சொல்லப்பட்ட உத்கீதமும் உத்கீதாவயவமான ப்ரணவமேயாகவேணும் ஆகையால் இரண்டிடத்திற்சொல்லப்பட்ட வித்யைகளும் பரஸ்பரம் பின்னங்களென்று ஸித்தாந்தம். ௩௪௩.

ஸூ-அ௫. ஸ௩-௩. ஸவ-ர ஸைடாடிஜ ந்யூ௩ ஹூ௫௮.

(ஸ்ரீ-ரா.ப.) ஸவராரஹைடாக - ஜ்யைஷ்ட்ய ஸ்ரைஷ்ட்யாதிஸகலாம்சங்களிலும் பேதமில்லாமையாலே, அந்யத்ர - வேறான (கௌஷீதகியிற்சொல்லப்பட்ட) ப்ராணவித்யையிலும், இமே - இந்த வஸிஷ்ட்டத்வாதி குணங்கள், (அநுஸந்தேயங்கள்.) ௩௪௪.

(ஸ்ரீ-ஸ்ரீ.) வாஜிஸநேயத்திலும் சாந்தோக்யத்திலும் ப்ராணவித்யையில்முக்ய ப்ராணனுக்குவாக்கு,ஸுகவாஸத்துக்குஹேதுவாகியவாசாலத்வமாகியதன்னுடைய வஸிஷ்ட்டத்வத்தையும்,சக்ஷுஸ்ஸு,நல்லஇடத்தில் அடிவைப்புக்குக்காரணமாகிய தன்னுடையப்ரதிஷ்ட்டாத்வத்தையும், ஸ்ரோத்ரம், ஸம்பத்துக்குக் காரணமாகிய தன்னுடைய ஸம்பத்வமென்கிற குணத்தையும்,மநஸ்ஸு,ஸர்வபோக்ய வஸ்துக்களையும் அடைகைக்குக்காரணமாகிய தன்னுடைய ஆயதநத்வமென்கிற குணத்தையும் கொடுத்ததாகச்சொல்லியிருக்கிறது.கௌஷீதகியில் சொன்ன ப்ராணவித்யையில் இதுசொல்லவில்லை. ஆகையால் இவ்விரண்டும்ஒரேவித்யையா, அல்லதுவெவ்வேறு என்று ஸம்சயமுதிக்கிறது. கௌஷீதகியில் ப்ராணனுக்குச் சில குணங்களைச் சொல்லி, பின்பு, "இவ்விதமாகவே ப்ராணனை த்யாநம் பண்ணவேணும்" என்கையால் இந்த உபநிஷத்தில் சொன்ன ப்ராணவித்யையில், மற்ற இரண்டு உபநிஷத்துக்களில் சொன்ன வஸிஷ்ட்டத்வாதி குணங்களை அநுஸந்திக்கக்கூடாதென்று ஏற்படுகிறது, ஆகையால் இந்தப்ராணவித்யை அதைக்காட்டிலும் வேறாகவேணுமென்று பூர்வபக்ஷிசொன்னன்—சக்ஷுராதிகளை நிந்திக்கை, ப்ராணனை ஸ்துதிக்கை முதலிய குணங்களெல்லாம் அங்குமிங்கும் ஒன்றாயிருக்கையாலும் இரண்டு ப்ராணவித்யையும் ஒன்றுதான். இரண்டிடத்தில் சொல்லப்பட்ட ப்ராணவித்யையும் ஒன்றானபின்,கௌஷீதகியில் ப்ராணனுக்குச்சிலகுணங்கள் சொல்லாவிடினும் அதற்கக்குணங்கள் இல்லாமற்போகாது. தேவதத்தனென்பவன் ஓரூரில் வெகு சௌர்ய வீர்யமுள்ளவனாக ப்ரஸித்தனாயிருக்கிறான். மற்றோரூரில் அவனுக்குள்ள குணங்களை யொருவருமறியார்கள்; அதினாலவனுக்கு அக்குணங்களில்லாமற் போகாது. சிலகாலம் கழிந்தபின் க்ரமக்ரமமாக அவனோடு பரிசயம்பண்ணி அக்குணங்களையறிகிறார்கள். அதுபோலவே கௌஷீதகியில் சொல்லாத குணங்களையும் சாகாந்தரங்களில் விசாரித்து ப்ராணனுக்கறியவேண்டும்,ஆகையால் வித்யாபேதம் இடையாது என்று ஸித்தாந்தம். ௩௪௪.

(ரா-ஸ்ரீ.) "ப்ராணோ ஹவை ஜ்யேஷ்டச்ச ஸ்ரேஷ்டச்ச" இத்யாதியாக சாந்தோக்யத்திலும் வாஜிஸநேயதிலும், கௌஷீதகியிலும் ப்ராணவித்யை சொல்லப்பட்டது. அவற்றில் சாந்தோக்ய வாஜிஸநேய சாகைகளில் ஜ்யைஷ்ட்யஸ்ரைஷ்ட்யகுண யுக்தமாகவும், வாகாதீந்த்ரியங்களுக்குள்ள வஸிஷ்ட்டத்வாதி குணங்களுக்கு ஹேதுவாகவும் ப்ராணனை உபாஸிக்கச்சொல்லிற்று. கௌஷீதகியில் முன்பிரண்டு குணங்களையுடையதாகவே ப்ராணனை உபாஸிக்கச்சொல்லிற்று. மூன்று

வது குணத்தைச்சொல்லவில்லை. ஆகையால் அவ்விரண்டு சாகிகள் சொல்லுகிற ப்ராணவித்யைக்கும், கௌஷீதகியிற் சொன்ன ப்ராணவித்யைக்கும் பேதமுண்டா இல்லையா என்று ஸம்சயம்.—முன்பிரண்டில் வஸிஷ்டத்வாதி குணஹேதுவாக ப்ராணனை உபாஸிக்கச் சொல்லுகையாலும், கௌஷீதகியில் இவ்விசேஷணத்தை உபாஸ்யமான ப்ராணனில் அநுஸந்திக்கச் சொல்லாமையாலும், உபாஸ்யமான ப்ராணனில் அநுஸந்தேயமான குணங்கள் ந்யூநாதிகங்களாகச்சொல்லியிருக்கையாலேஇரண்டும் பிந்நபிந்நங்களென்று பூர்வபக்ஷம். —ஜ்யைஷ்ட்யமாவது-மற்ற இந்த்ரியங்களுடைய ஸ்திதிக்கு ஹேதுவாயிருக்கை; ப்ராணனில்லாவிடில் மற்ற இந்த்ரியங்கள் தரிக்கமாட்டாமையாலே. ச்ரைஷ்ட்யமாவது -, அவற்றின் கார்யங்களுக்கு ஹேதுவாயிருக்கை; ப்ராணனில்லாவிடில் அவை ஒன்றையும்செய்ய யோக்யதையற்றவைகளாகையாலே. வாக்குக்கு வஸிஷ்டத்வமாவது - வ்யவஹாராதிரூபமான ஸ்வகார்யங்களைச் செய்கையிலுள்ள ஸாமர்த்யம், அதுக்கு ஹேதுவாவது-காரணமாயிருக்கை. ஆக-கௌஷீதகியில் ஜ்யைஷ்ட்ய ச்ரைஷ்ட்யங்களைச்சொன்னபோதே வஸிஷ்டத்வாதி ஹேதுத்வமும் சொல்லிற்றேயாம். எங்ஙனே யென்னில், அவ்வவ இந்த்ரியங்களிலுள்ள கார்ய ஜநநயோக்யதைக்குக் காரணமாயிற்றல்லது அவற்றின் கார்யங்களுக்குக் காரணமாகமாட்டாதாகையால் அவ்விரண்டையும் சொன்னபோதே இதுவும் ஸித்தமாகையால் கௌஷீதகியிலும் ப்ராணனை வஸிஷ்டத்வாதி ஹேதுவாக உபாஸிக்கச்சொல்லிற்றென்று தாத்பர்யம் கற்பிக்கவேண்டும். ஆக, சாந்தோக்யாதியிற் சொன்ன வித்யைக்கும் இதுக்கும் உபாஸ்ய விஷயத்திலும் குணவிஷயத்திலும் பேதமில்லையாகையால் இரண்டும் ஒன்றே என்பது ஸித்தாந்தம். ௩௩௰.

அதி-௬. ஸூ-௩௩௧. ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய.

(ப-ரா-வ்யா.) ப்ரதாநஸ்ய - முக்யமான (குணியான) பரமபுருஷனுக்கு, (அபேதாத் - பேதமில்லாமையால்), ஆநந்தாதய: - ஆநந்தம் முதலியகுணங்கள், (ஸர்வவித்யைகளிலும் அநுஸந்திக்கத்தக்கவைகள்) ௩௩௧

(ஸ-ஷூ.) உபநிஷத்துக்களில் பரஸ்வரூபத்தை நிரூபிக்கிற அந்தந்த இடங்களில் சிலவிடத்தில் ப்ரஹ்மம் ஆநந்தரூபமென்றும், மற்றோரிடத்தில் ஜ்ஞாநஸ்வரூபமென்றும், ஸர்வவ்யாபியென்றும், வேறோரிடத்தில், ஸர்வாத்மக மென்றும், இப்படி ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருப்ரஹ்ம தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ப்ரஹ்மமோ நிர்குணம்; அதில் ஒருதர்மமும் கிடையாது; ஆகையால் பலவிடங்களிற் சொல்லிய ஆநந்தத்வம் ஜ்ஞாநத்வம் ஸர்வகதத்வம் முதலிய குணங்களை ஒவ்வோரிடத்திலும் அநுஸந்திக்க ப்ரயோஜநமில்லை. ஆயினும் கீழ்ஸூத்திரத்தில் தேவதத்தனை த்ருஷ்டாந்தமாக்கி உபபாதித்தபடியே இங்கும் ப்ரஹ்மம் ஒன்றேயாகையால், இவ்விடத்திற் சொல்லாமல் வேறிடங்களிற் சொல்லியிருக்கிற குணங்களையுங்கூட இவ்விடத்தில் அநுஸந்திக்கவேண்டியது ந்யாயமாயிருக்கிறது. இவ்விரண்டு பக்ஷத்திலும் எது யுக்தமென்னில்;—ப்ரஹ்மம் நிர்குணமென்பது ஸத்யம், அதில் ஆநந்தத்வம் முதலிய குணங்கள் கிடையாதுதான், ஆயினும் ஆநந்தமென்றும் ஜ்ஞாநமென்றும் ஸர்வகதமென்றும் இப்படி ஒவ்வோரிடங்களிலும் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிற ஆநந்தாதிஸகல சப்தங்களையும் எல்லா விடங்களிலும் அநுஸந்திக்கவேணும். அப்போதும் ஆநந்தாதி பதங்கள் ப்ரஹ்மத்துக்கு ஆநந்தத்வாதி குணங்களைச் சொல்லுகிறதில்லை. ப்ரஹ்மம் ஆநந்தஸ்வரூப மென்பதினால் அந்தப்ரஹ்மம் துக்கஸ்வரூபமன்றென்றும், ஜ்ஞாநஸ்வரூப மென்பதினால் ஜடமன்றென்றும், ஸத்யமென்பதினால் பரிணாமியன்றென்றும், இப்படி அந்தந்த ஆநந்தாதி

தர்மங்களுக்கு விரோதியாகிய துக்கம் முதலிய தர்மங்களையுடைத்தாகாதது ஸர்வவிலக்ஷணம் என்றே தோற்றுகிறது. இப்படி ஸர்வவிலக்ஷணமென்றே ப்ரஹ்மஸ்வரூபம் எல்லாவிடங்களிலும் தோற்ற வேண்டுமாகையாலே, இப்படிவிலக்ஷணமான ப்ரஹ்மஸ்வரூபத்துக்கு ப்ரதிபாதகங்களாகிய ஸத்ய ஜ்ஞாந ஆநந்தாதி ஸகலசப்தங்களினால் சொல்லப்பட்ட கீழ்ச்சொன்ன ஸகலகுணங்களையும் ஸர்வத்ர அநுஸந்திக்கவேண்டியதென்கிறார். ௧௧

(ஸா-ஹா.) ஆநந்தத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், அமலத்வம், ஸ்ரிய:பதித்வம் ஆகிய இக்குணங்கள் ஸமஸ்தவித்யைகளிலும் உபாஸ்யனான பரமபுருஷனிடத்தில் அநுஸந்திக்கத்தக்கனா, அன்றா என்று ஸம்சயம்.—அந்தந்த வித்யாப்ரகரணங்களில் இக்குணங்களைச் சொல்லாமையாலும், அப்ப்ரகரணத்தில் சொல்லாத மற்ற எல்லாக் குணங்களையும்அநுஸந்திக்கவேண்டுமாகில் அக்குணங்கள் அநந்தமாகையாலே அநுஸந்திக்கமுடியாதாகையாலும் மற்றஅக்குணங்களோடு துல்யமான ஆநந்தத்வாதிகுணங்களும் எல்லாவித்யைகளிலும்அநுஸந்திக்கவேண்டியதில்லை என்று பூர்வபக்ஷம்—கீழ்ச்சொல்லிய இந்த நாலுகுணங்களும் ப்ரஹ்மஸ்வரூப நிரூபகங்கள், இவை தோற்றாவிட்டால் ப்ரஹ்மஸ்வரூபம் தோற்றாது. ஸமஸ்தவித்யைகளிலும் உபாஸ்யமான பரமாத்மஸ்வரூபமொன்றே யாகையாலே உபாஸ்யஸ்வரூபம் அந்தந்த வித்யைகளில் தோற்றுகைக்காக அந்தந்தப்ரகரணங்களில் அநுக்தங்களாயினும் இந்நாலு குணங்களும் அவஶ்ய மநுஸந்தேயங்கள். அப்ப்ரகரணத்திற் சொல்லாத மற்றகுணங்கள் ப்ரஹ்மஸ்வரூபநிரூபகங்களல்லாமையால் அவற்றை யநுஸந்தியாவிடினும் ப்ரஹ்மஸ்வரூபம் தோற்றத்தட்டில்லை என்று ஸித்தாந்தம். ௧௧.

ஸூ-௧௨. ப்ரியசிரஸ்த்வாத்யப்ராப்திருபசயாபசயௌ ஹி பேதே.

(ஸூ-ரா-ப்ர.) ப்ரியசிரஸ்த்வாத்யப்ராப்தி: - ப்ரியசிரஸ்த்வம் முதலிய குணங்களுக்கு (ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்க) ப்ராப்தியில்லை. பேதே - (சிரஸ்ஸென்றும் பக்ஷமென்றும்) பேதம் ப்ரஹ்மஸ்வரூபத்திற் கங்கீகரிக்கில், உபசயாபசயௌ-வ்ருத்திஹ்ராஸங்கள் ஸம்பவிக்கும். ௧௨.

(ஸ-ஹா.) இப்படி ஆநந்தாதிகளை எல்லாவிடங்களிலும் அநுஸந்தித்த போதிலும், "தஸ்ய ப்ரியமேவ சிர: | மோதோ தக்ஷிண: பக்ஷ: | ப்ரமோத உத்தர: பக்ஷ:" என்று தைத்திரீயத்தில் சொல்லப்பட்ட ப்ரியம்மோதம் ப்ரமோதம் என்கிற ஸகுணப்ரஹ்மத்தின் தர்மமாகிய இவைகள் எல்லாவிடங்களிலும் அநுஸந்திக்கப்படமாட்டாது. ப்ரியமென்பது - புத்ரதர்ஶநத்தினாலுண்டான ஸுகம். அதைக்காட்டிலும் மேலான மோதமாவது - அப்பிள்ளையினுடைய சொலவுகளையும் செய்கைகளையும் கண்டு களிக்கிற களிப்பு, அதைக்காட்டிலும் மேலான ப்ரமோதமாவது - அந்த குமாரனுடைய வித்யை புத்தி சௌர்யம் முதலிய குணங்களைக் கண்டு உண்டாகு மாநந்தம். இப்படி அக்குணங்கள் ஒன்றுக் கொன்று தாரதம்யத்தை யடைந்திருக்கும். இவ்வளவே யன்றிக்கே, ஒருவனுடைய ப்ரியமோதாதிகள் மற்றொருவனுடைய ப்ரியமோதாதிகளைக் காட்டிலும் கீழ்ப்பட்டதாகவும், வேறொருவனுடைய ப்ரியமோதாதிகளைக்காட்டிலும் மேற்பட்டதாகவுமாயிருக்கும். இப்படி தாரதம்யமுள்ள குணங்கள் ஸகுணப்ரஹ்மத்துக்கேயுள்ளது. அகண்டைகரூபமாகிய நிர்குண ப்ரஹ்மத்துக்குக்கிடையாது. இந்தகுணங்களை யநுஸந்திப்பதினால் அகண்டாகாரமாகிய நிர்குணப்ரஹ்மத்தினுடைய ஜ்ஞாநத்திற்கு யாதொரு உபயோகமுமில்லை. மேலும் இவை கோசதர்மமென்றும்

ப்ரஹ்மதர்ம மன்றென்றும் மேலே ஆநந்தமயாதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது. ஆகையால் ஆநந்தாதிகளைப்போல் ப்ரியமோதாதிகளை எல்லாவிடங்களிலு மநுஸந்திக்கவேண்டுவதில்லை. இதனால் ஸம்யத்வாமத்வாதி குணங்களும் ஸத்ய காமத்வாதி குணங்களும்கூட எல்லா இடங்களிலும்அநுஸந்திக்கவேண்டியதில்லை;எந்தவிடத்தில் எந்தகுணம் சொல்லியிருக்கிறதோ, அந்த குணத்தை அந்த வித்யையில் மாத்திரம் அநுஸந்திக்கவேணுமென்று சொல்லிற்றாயிற்று. ௧௬௬.

(ரா-ஹா.) கீழ்ச்சொன்ன நாலுகுணங்களும் ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கவேண்டியவையானாலும் சிரஸ்ஸாகவும் பக்ஷங்களாகவும் நிரூபிக்கப்பட்ட ப்ரியத்வ மோதத்வ ப்ரமோதத்வகுணங்கள் ப்ரஹ்மஸ்வரூப தர்மங்களல்லாமையாலே ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கக்கூடாது. அப்படி நிரூபித்தப்ரகாரம் சிரஸென்றும் பக்ஷமென்றும் இத்யாதி பேதங்கள் ப்ரஹ்மஸ்வரூபத்துக்கங்கீகரித்தால் பரிச்சிந்நமான சிரஸ்ஸு முதலிய அவயவங்களுக்குப்போல் அகண்டமான ப்ரஹ்மஸ்வரூபத்துக்கும் ஸங்கோசவிகாஸாதிவிகாரங்கள் ப்ரஸங்கிக்கும். அப்போது அவிகாரம் ச்ருதியோடு விரோதிக்குமாகையால் ப்ரியத்வாதிகள் ப்ரஹ்மஸ்வரூப தர்மங்களுமன்று. அவற்றை ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கவும் கூடாது. ௧௬௬.

ஸூ-௧௬௭. இதரெ த்வர்தஸாமாந்யாத்.

(ஶ்ரு-ரா வ்யா.) அர்தஸாமாந்யாத் - பரமாத்மஸ்வரூபத்தோடு துல்யமாகையாலே, இதரெ து - மற்ற ஆநந்தாதிகுணங்கள், (ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கப்படும். ௧௬௭.

(ஶ்ரு-ஹா. அகண்டாகாரமாகிய ப்ரஹ்மஸ்வரூபத்தை எல்லாவித்யைகளிலும் அநுஸந்திக்கவேண்டியதாகையால், அதுக்குப்ரதிபாதகமான ஆநந்தாதிபதங்களினால் சொல்லப்பட்ட அர்த்தங்களைமாத்திரம், ப்ரியமோதாதிகளைப்போலன்றிக்கே எல்லாவிடங்களிலும் அநுஸந்திக்கக்கடவது. ௧௬௭.

(ரா-ஹா.) ஆநந்தாதிகுணங்களுக்கும் ப்ரிய மோதாதிகளுக்கும் விசேஷமென்னென்னில், ஆநந்தாதிகள் ப்ரஹ்மஸ்வரூப நிரூபகங்களாகையாலே ப்ரஹ்மஸ்வரூபத்தோடொத்திருக்கும். ப்ரிய மோதாதிகள் ஸ்வரூபநிரூபகங்களல்லாமையால் ஸ்வரூபதுல்யங்களன்று, ஆகையால் ஆநந்தாதிகளைப்போல் ப்ரிய மோதாதிகள் ஸகலவித்யைகளிலு மநுவர்த்திக்கத்தக்கவைகளன்று ௧௬௭.

ஸூ-௧௬௮. ஆத்யாநாய ப்ரயொஜநாபாவாத்.

(ஶ்ரு-வ்யா.) ப்ரயொஜநாபாவாத் - (விஷயாத்யாநத்தில்) ப்ரயோஜநமில்லாமையால், (அவற்றைத்யாநிக்கவேண்டாம்,) ஆத்யாநாய - (ப்ரஹ்மஸ்வரூபத்தை)நன்றாக அறிகைக்காக (அவற்றைச்சொல்லிற்று.) ௧௬௮.

(ரா - வ்யா.) ப்ரயொஜநாபாவாத் - வேறுப்ரயோஜநமில்லாமையாலே, ஆத்யாநாய - த்யாநிக்கைக்காக (ப்ரியாதிகுணங்கள் சொல்லப்பட்டன.) ௧௬௮.

(ஶ்ரு-ஹா.) காடகத்தில் "இந்த்ரியெப்யஃபரா ஹ்யர்தா அர்தெப்யஶ்ச பரம் மந:" என்று தொடங்கி, இந்திரியங்களைக் காட்டிலும் விஷயங்கள் ப்ரதானங்கள், அவற்றைக்காட்டிலும், மனஸ்ஸு ப்ரதானம், அதைக்காட்டிலும் புத்திப்ரதானம், என்று இவ்வரிசையில் சொல்லிக்கொண்டுபோய் புருஷன் எல்லாவற்றுக்கும்

ப்ரதாநன் அவனுக்கு மேற்பட்டதொன்றும் கிடையாது என்றுசொல்லிற்று அங்கு இந்திரியங்களைக் காட்டிலும் விஷயங்கள் முக்யமென்றும், அவற்றைக்காட்டில் மநஸ்ஸு முக்ய மென்றும் இப்படி புருஷனளவும் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் அங்குச்சொன்னபடியே முக்யங்களாக அநுஸந்திக்க வேணுமென்று சொல்லிற்று; அல்லது - பரம புருஷனையே முக்யமாக அநுஸந்திக்கவேணுமென்ற தாத்பர்யத்தினால் சொல்லிற்று என்று விசாரிக்கில்; அங்கு விஷயாதிகளை யெல்லாவற்றையும் ஒன்றைக்காட்டிலுமொன்று முக்யமென்று சொல்லியிருக்கையால் அங்குச்சொன்ன எல்லாவற்றையுமே அங்கு சொல்லியப்ரகாரம் அநுஸந்திக்கவேணுமென்று பூர்வபக்ஷிசொன்னான்—அவற்றை யெல்லாம் அங்குச் சொன்னபடியே த்யாநிப்பதில் ப்ரயோஜநமொன்றும் கிடையாது, ஆகையால் அவற்றை த்யாநிக்கவேண்டியதில்லை. பரமாத்மாவை எல்லாவற்றுக்கும் மேலாகத்யாநிப்பதினால் மோக்ஷப்ராப்தியுண்டு, ஆகையால் அவனையே த்யாநிக்கவேண்டியது. மற்றவிஷயாதிகளை ஒன்றைக்காட்டிலு மொன்றைமேலாகச் சொன்னது, பரமாத்மா இவையெல்லாவற்றுக்கும் மேலானவனென் றறிக்கைக்காகச் சொல்லிற்று; அவற்றைத்யாநிக்கைக்காகச் சொல்லவில்லை. என்று ஸித்தாந்தம். ௩௬௮.

(ரா - ஹா.) ப்ரியமோதாதிகள் ப்ரஹ்மஸ்வரூப நிரூபகங்களாகா விட்டால் அவைகளை ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு சிரஸ்ஸாகவும் பக்ஷங்களாகவும் நிரூபித்துச் சொன்னதெதுக்காகவென்னில், அகண்டமாகிய ஒருரூபம் புத்தியில் முதலில் தோற்றுவதரிதாகையால் ஆநந்தகுணத்தினுடைய அவாந்தரபேதமான ப்ரியமோதாதிகளை ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு சிரஸ்ஸுபக்ஷம் முதலியஅவயவங்களாகப்பிரித்து த்யாநித்து அந்த பரமாத்மாவின் ஸ்வரூபத்தைத் தன்புத்தியில் க்ரமக்ரமமாக ஏற்றிக்கொண்டு த்யாநிக்கைக்காக ப்ரியமோதாதிகளைச் சொல்லிற்று. இதன்றி வேறொருப்ரயோஜநம் கிடையாது. ௩௬௮.

ஸூ-௩௬௯. ஆத்மஶப்தாச்ச.

(ஸ-வ்ரு.) ஆத்மஶப்தாச்ச . (பரமபுருஷனையே) ஆத்மாவாகச்சொல்லுகையாலேயும் (அவனே த்யாநிக்கத்தக்கவன்.) ௩௬௯.

(ரா-வ்ரு.) ஆத்மஶப்தாச்ச - ஆத்மாஎன்கிற சப்தத்தினால் ப்ரஹ்மஸ்வரூபத்தைச் சொல்லுகையாலும் (ப்ரியமோதாதிகள் ஆத்மதர்மங்களன்று). ௩௬௯.

(ஸ-ஹா.) விஷயாதிகளை அந்தஶ்ருதி ஒன்றுக்கொன்று மேலாகச் சொல்லிக்கொண்டுபோய் எல்லாவற்றுக்கும் மேலாகப்பரமாத்மாவைச்சொல்லி, "ஏஷ ஸர்வேஷு பூதேஷு கூடோத்மா ந ப்ரகாஶதே" இத்யாதியினால் அவனேஸர்வாந்தராத்மா, ஸூக்ஷ்மதர்சிகளான மஹர்ஷிகளுக்கு அவன் ஸூக்ஷ்மபுத்தியினால் காணப்படுவான் என்று அந்தபரம புருஷனையே ஆதரத்துடன் சொல்லிற்று. இதனால் மற்றவை ஆத்மாவன்றென்றும், ஆகையினால் அவைத்யாநிக்கத் தக்கவையன்றென்றும் அந்தஶ்ருதியின் தாத்பர்யம் தெரிகிறது. ௩௬௯.

(ரா-ஹா.) "அந்யோந்தர ஆத்மா ஆநந்தமய:" என்று ஆநந்தமயனான பரமாத்மாவை ஆத்மாவாகச்சொல்லுகையாலே, சரீரதர்மமான சிரஸ்ஸுபக்ஷம் முதலிய தர்மங்கள் ஆத்மாவுக்கு ஸம்பவியாது. ௩௬௯.

ஸூ-௩௭௦. ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத்.

(ஸ-வ்ரு.) உத்தராத் - மேல்சொல்லிய ஐக்யோபதேசத்தினால், இத

இதரவத் - வாஜஸநேயத்திற்போலவே, ஆத்மக்ருஹீதி:- (சாந்தோக்யத்திலும்) பரமாத்மக்ரஹணம் (யுக்தம்.) க.எ0

(ரா-வ்ரு.) உத்தராத்-(“ஸோகாமயத”என்கிற)மேல்வாக்யத்தினாலே, இதரவத் - மற்ற இடங்களில் பரமாத்மாவை ஆத்மசப்தத்தினால் சொல்வதுபோல், ஆத்மக்ருஹீதி: - (இங்கும்) ஆத்மசப்தத்தினால் பரமாத்மாவை க்ரஹணம்செய்கிறது (பரமாத்மா சொல்லப்படுகிறான்.) க.எ0.

(ஸ-ஹா) வாஜஸநேயத்தில், “கதம ஆத்மா” என்று தொடங்கி, ஆத்மாவானவன், ஜ்ஞாநஸ்வரூபன், ஹ்ருதயத்தில் வஸிக்கப்பட்டவன், ஜ்யோதிஸ்வரூபன், என்று சொல்லி, மேலே, இவ்வாத்மாவுக்கு ஸம்ஸாரஸங்கமொன்றும் கிடையாது என்று ப்ரஹ்மலக்ஷணத்தைச்சொல்லுகையாலே அங்குச்சொன்ன ஆத்மாப்ரஹ்மஸ்வரூபியென்றுதோற்றுகிறது. அந்தப்ரகரணத்தின் கடைசியிலும், “ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா” என்று தொடங்கி “[illegible]” என்று அந்த ஆத்மா மஹான், உத்பத்தியற்றவன், ஜராமரணாதிகளற்றவன், அவன்தான் ப்ரஹ்மம் என்றும் சொல்லுகையாலேயும் ஜீவனே ப்ரஹ்மமென்று அங்கு சொல்லப்பட்டது ஸித்தம். சாந்தோக்யத்தில், “ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்” என்று ஆத்மாவென்கிறசப்தத்தைச் சொல்லாமலே ஆரம்பித்து, கடைசியில், “தத்வமஸி” என்று ஜீவப்ரஹ்மங்களுக்கு ஐக்யம் சொல்லிற்று. இப்படி இவ்விரண்டிடங்களிலும் ஒரு வித்யையயே சொல்லப்பட்டதா அல்லது வெவ்வேறென்று விசாரிக்கில்,—வாஜஸநேயத்தில் ஆத்மாவென்ற சப்தத்தைச் சொல்லி ஆரம்பித்து அந்த ஆத்மாவுக்கும் ப்ரஹ்மத்துக்கும் அபேதம் சொல்லுகையாலே அங்குநிர்குண ப்ரஹ்மவித்யை சொல்லப்பட்டது, சாந்தோக்யத்தில் ஆத்மசப்தத்தைச சொல்லாமலே ஆரம்பித்து கடைசியில்மாத்திரம் ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதம் சொல்லுகையாலே அங்கு நிர்குணவித்யைசொல்லப்படவில்லை ப்ரஹ்மாத்மகோபாஸநமே சொல்லப்பட்டது ஆகையால் இரண்டும் வெவ்வேறு வித்யையென்று பூர்வபக்ஷம்—வாஜஸநேயத்தில் ஆத்ம சப்தத்தினால் ஆத்மாவைச் சொன்னதுபோல், சாந்தோக்யத்திலும், ஆத்ம சப்தமில்லாவிடினும் “ஸதேவ” என்ற ஸச்சப்தத்தினால் ஆத்மாவேசொல்லப்பட்டதாம். ஆதியில் ஸச்சப்தத்தினால் ஆத்மாவைச் சொன்னால்தான் கடைசியில் “தத்வமஸி” என்று ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதம் சொன்னது ஸங்கதமாகும். இப்படி சாந்தோக்யத்திலும் ஆதியில் ஸச்சப்தத்தினால் ஆத்மா சொல்லப்பட்டதாகையால் இரண்டிடத்திலும் நிர்குணப்ரஹ்மவித்யை யொன்றே சொல்லப்பட்டதென்று ஸித்தாந்தம் க.எ0.

(ரா-ஹா.) ஆத்மாவென்றால்பரமாத்மாவையேசொல்லுகைக்குநியாமகமென்னென்னில், “ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்” இத்யாதி இடங்களில் ஆத்மாவென்று பரமாத்மாவைச் சொல்லுகையாலும், இப்ப்ரகரணத்தில் மேல்வாக்யத்தில் “ஸோகாமயத” அவன் ஸங்கல்பிக்கிறான் என்று கீழ்ச்சொன்ன ஆநந்தமயனுக்கு சேதநதர்மமான ஸங்கல்பம் சொல்லுகையாலும் “ஆத்மாநந்தமய:” என்கிற இவ்விடத்திலும் ஆத்மாவென்று பரமாத்மாவையே சொல்லவேண்டும்.

ஸூ-௩.எக. அந்வயாதிதிசேத்ஸ்யாதவதாரணாத்.

(ஸூ-வ்ரு.) அந்வயாத் - (உபக்ரமத்தின்படியே மற்றவைகளுக்கும்) அந்வயம் சொல்லவேண்டுகையால், (உபக்ரமத்தில் ஆத்மசப்தமில்லாமையால்,

இது நிர்குணவித்யையாகாது) உதிசேத் - என்றால், அந்வயாத் - நிர்த்தாரணத்தினால், ஸ்யாத் - நிர்குணவித்யையாகலாம். ௧௭௧.

(ஸா-வ்ரு.) அந்யாத் - அசேதநத்திலும ஆத்மசப்தாந்வயம் காண்கையாலே, (இங்கு ஆத்மசப்தத்துக்கு பரமாத்மபரத்வம் நிஸ்சயிக்கும்படியென்), இதிசேத் - என்றால், அந்வயாத் - (அப்ப்ரகரணங்களிலும் சொல்லப்பட்ட ஆத்மசப்தத்துக்கும் பரமாத்மாவே அர்த்தமென்று) நிர்ணயிக்கையாலே, ஸ்யாதேவ - இதுவும் பரமாத்மபரமென்று நிர்ணயிக்கப்படும். ௧௭௧.

(ஸ-ஸா.) உபக்ரமாநுகுணமாக மேல்வாக்யங்களுக்கு அர்த்தம் சொல்லவேணும், உபக்ரமத்தில் ஆத்மாவென்று விசேஷித்துச் சொல்லுகிற சப்தமில்லை, ஸத் என்கிற ஸாமாந்ய சப்தத்திற்கு ஆத்மாவென்று விசேஷபரமாக அர்த்தம் சொல்லலாமென்னில், — அடியில் "யேநாஸ்ருதம் ஸ்ருதம் பவதி" என்று தொடங்கி, எந்தப்ரஹ்மஸ்வரூபத்தை யறிந்தால் மற்றவையெல்லாம் அறிந்ததாமோ என்று ப்ரஹ்மஜ்ஞானத்தினால் ஸர்வவிஷயகஜ்ஞான முண்டாவதாக ப்ரதிஜ்ஞை செய்து, பின்பு, இதெல்லாம்முன்பு ஸத்தாயேயிருந்ததென்று ஆரம்பித்துச்சொன்னவாக்ய ஸந்தர்ப்பங்களெல்லாம், இப்படி ஸச்சப்தத்தினால் ஆத்மாவைச் சொன்னால் மாத்திரமே ஸமஞ்ஜஸமாகும். ஸத்தென்பதற்கு ஆத்மா அர்த்தமாகாவிடில், ஸத்துவேறாய் ஆத்மாவேறாய்விடுமாகையால் ஸத்தினுடையஜ்ஞானத்தினால் ஆத்மஜ்ஞானமுண்டாக மாட்டாதாகையால், ஸர்வவிஷயகஜ்ஞானமுண்டாகுமென்கிறப்ரதிஜ்ஞைபொய்யாய்விடும். மேலும் உபக்ரமத்திலுள்ள சப்தம்ஸாமாந்யமாயிருந்தால், அந்த சப்தத்துக்கு உபஸம்ஹாரம் முதலிய இடங்களிலுள்ள விசேஷசப்தங்களைக் கொண்டு அர்த்தநிர்ணயம் பண்ணவேண்டுமேயன்றி வேறு விதமாக அர்த்தம் சொல்லக்கூடாது. உபஸம்ஹாரத்தில் ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதம் சொல்லுகையாலே ஆதியிலுள்ள ஸச்சப்தத்துக்கு ஆத்மாவென்பதே அர்த்தமாகக்கொள்ளவேணும்என்று ஸித்தாந்தம். ௧௭௧.

(ஸா-ஸா.) ஆநந்தமய வாக்யத்துக்குக் கீழ் "அந்யோந்தர ஆத்மா ப்ராணமய:" என்று அசேதநமான ப்ராணமயாதிகளையும் ஆத்மாவென்று சொல்லுகையாலே மேல்வாக்ய மாத்ரத்தைக்கொண்டு இங்குள்ள ஆத்மசப்தம் பரமாத்மபரமென்று நிஸ்சயிக்கும் விதமென்னென்னில், "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஸஸ்ஸம்பூத:" என்று ஆரம்பத்தில் ஸகலஜகத்காரணபூதனான பரமபுருஷனை ஆத்ம சப்தத்தினால் சொல்லி, அவனையே ப்ராணமய மனோமயாதிகளில் ஆத்மாவென்று சிதசிதாத்மக ஸகல ஜகத்துக்கும் அந்தர்யாமியாக ஆத்மசப்தத்தினால் சொல்லுகையாலே கீழ் வாக்யங்களிலும் ஆத்ம சப்தத்திற்குப் பரமாத்மாவே அர்த்தமாகையால் இங்குள்ள ஆத்மபதத்திற்கும் பரமாத்மாவே அர்த்தமென்று நிஸ்சயிக்கலாம். ஆகையால் சிர: பக்ஷாதிகளாக நிரூபிக்கப்பட்ட ப்ரியமோதாதிகள் பரமாத்ம தர்மங்களாகாமையால் இவை ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கக்கூடாது. ௧௭௧.

௩யி-அ௭. ஸூ-௧௭௨. கார்யாக்யாநாதபூர்வம்.

(ஸ-வ்ரு.) கார்யாக்யாநாத் - (தர்மசாஸ்த்ரத்தில் ஆசமநத்தைச்) செய்யவேண்டியதாகச் சொல்லுகையாலே, அபூர்வம் - அப்ராப்தமான வஸ்த்ரசிந்தநமே (விதிக்கப்பட்டது.) ௧௭௨.

(ஸா-ஸூ) காரு்யவுா_நாத் - (வேதத்திற்கு) அபூர்வார்த்தத்தைச் சொல்வதே ஸ்வபாவமாகையாலே, கூவ-ஷவடிழு - (இதற்குமுன், அஸித்த மான ப்ராணவாஸஸ்த்வாநு ஸந்தானம் (விதிக்கப்படுகிறது.) ௩௭௨.

(ஶ்ரு-ஸா.) சாந்தோக்யத்திலும் வாஜிஸநேயத்திலும் ப்ராணஸம்வாதத்தில், கிம் ஒவாஸஃ" என்று தொடங்கி, முக்யப்ராணன் வாக்கு முதலியவற்றைப் பார்த்து எனக்குவஸ்திரமேது என்று கேட்க, அநுக்கந்தவாகாதிகள், உனக்கு ஆசனம்பண்ணுகிற ஜலமே வஸ்திரமாகக்கடவது என்று சொல்லிற்று, அதற்குமேல் வாஜிஸ நேயத்தில், "வா தவிஃாஸெரா தி்யாஃ" என்று ஆரம்பித்து, இதையறிந்த வர்கள் போஜனத்துக்குமுன்னும் பின்னும் ஆசமநம் செய்து, அதினால் ப்ராண னைவஸ்திரமுள்ளவனாக எண்ணுகிறார்கள், இனி இப்போது ப்ராணவித்யையை உபாஸநம் செய்கிறவர்களும் அதேமாதிரி ஆசமநம்செய்யக் கடவர்கள் பின்பு அந்த ஆசமந ஜலத்தினால் ப்ராணனை வஸ்திரமுள்ளதாக த்யாநிக்கக் கடவர்கள் என்று சொல்லிற்று. அந்த ஶ்ருதி ப்ராணவித்யைக்கு அங்கமாக வேறு ஒரு ஆச மநத்தை விதிக்கிறதா, அல்லது, அதேஆசமனஜலத்தினால் ப்ராணன் வஸ்திரமுள்ள தென்று த்யாநம்செய்ய வேண்டுமென்று விதித்ததா, அல்லது இரண்டையும் விதித் ததா என்று ஸம்சயிக்குமளவில்,—இரண்டையும் விதிக்கிறதென்று சிலரும், ஆச மநத்தை மாத்திரம் விதிக்கிறதென்று சிலரும் சொன்னார்கள்—அவ்விரண்டும் சரி யன்று. ஏனென்றால், ஒருவாக்யத்தில் ஒன்றைவிதிக்கலாம். இரண்டை விதிக்கக் கூடாது, இரண்டை விதித்தால் "வாக்யபேதம்" என்று சாஸ்த்ரத்தில் ஒருதோ ஷம் சொல்லப்படும், அந்ததோஷம் வருமாகையால் இரண்டையும் விதிக்கிற தென்று சொல்லக்கூடாது—எல்லா க்ரியைகளுக்கும் முன்னும் பின்னும் சுத்திக் காக ஆசமநம் தர்மசாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இங்கு புதி தாக வேறொரு ஆசமநம் விதிக்கவேண்டுவதில்லை. அவ்விரண்டுபக்ஷமும் கழிந்தால், ஆசமநம் செய்த ஜலத்தை ப்ராணனுக்கு வஸ்திரமாக அநுஸந்திப்பதையே அங்கு ஶ்ருதிவிதித்ததென்று அங்கீகரிக்கவேணும் என்று ஸித்தாந்தம். ௩௭௨.

(ஸா-ஸா) சாந்தோக்யத்தில் "கிம் ஒவாஸோ ஸவிஷ்ய தீத்யாவஜ தி ஒஹாவாஃ" என்று ஜலம் ப்ராணனுக்கு வஸ்த்ரமென்று சொல்லிற்று. "தஸ்மா தேவம்விதஶ்ஷ்ய நாவாசேஶ்ஶிகூ வாசேஸ" என்று உபாஸ்யமாகச்சொன் ன அந்தப்ராணனுக்கு வஸ்த்ரம் ஸித்திக்கைக்காக போஜநத்திற்கு முன்னும் அநந் தரத்திலும் ஆசமநம் செய்யவேண்டுமென்று சொல்லிற்று. இங்கு ப்ராணவித்யை க்கு அங்கமாக வேறோராசமநம் விதித்ததா, அல்லது-ஶ்ருதிஸ்ம்ருதிகளிற் சொல் லப்பட்ட ஆசமநத்தின் ஜலத்தைப் ப்ராணனுக்கு வஸ்த்ரமாக த்யாநம்செய்யச் சொல்லிற்று என்று ஸம்சயம்.—"ஆவசேஸ" ஆசமநம் செய்யக்கடவன். என்று ஆசமநத்தையே விதிக்கையாலே ப்ராணவித்யாங்கமாக வேறோராசமநம் செய்யச் சொல்லிற்றென்று பூர்வபக்ஷம்.—இவ்வாக்யங்களில் ஆசமநமும், ஆசமநம் செய்யப் பட்டஜலத்தைஜ்யேஷ்டப்ராணனுக்கு வஸ்த்ரமாக அநுஸந்திக்கையும் ஆக இரண் டும் தோற்றுகின்றன. இவ்விரண்டில் ஆசமநம் ஶ்ருதிஸ்ம்ருதிகளில் சொல்லி யிருக் கிறது. அதின் ஜலத்தை வஸ்த்ரமாக அநுஸந்தித்தல் வேறோரிடத்திலும் சொல்ல ப்படவில்லை. வேதவாக்யம் முன்னமேயோரிடத்தில் விதித்ததை மற்றோரிடத்தில் மறுபடியும் விதியாது. ஆகையால் ஶ்ருதிஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டபடியால் ஆசமநத்தைத்திரும்பியும் இங்கு விதிக்கமாட்டாது. ஆகையால் ஆசமநம் செய்யப் பட்ட ஜலத்தை உபாஸநம் செய்யப்பட்ட ஜ்யேஷ்ட ப்ராணனுக்கு வஸ்த்ரமாக அநுஸந்திக்கவேணுமென்றே இங்குவிதித்தது என்று ஸித்தாந்தம். ௩௭௨.

கயி-அஅ. ஸூ கஎகூ. ஸமாந ஏவஞ்சாபேதாத்.

(ஸூ-வ்ய.) சாபேதாத் - உபாஸ்யவஸ்துவுக்கு பேதமில்லாமையால் ஸமாநே - ஒருசாகையிலும், ஏவம் - இப்படி குணோபஸம்ஹாரமுண்டு,

(பா-வ்ய.) ஸமாநே - (மநோமயத்வாதி குணங்கள் இரண்டிடத்தி லும்) துல்யமாயிருந்தவளவில், (இரண்டிடத்திற்சொல்லிய சாண்டில்யவித் தையுமொன்றே) ஏவஞ்ச - இப்படியானவளவில், சாபேதாத் - ஸத்யஸங் கல்பத்வாதிகளுக்கும் வசித்வாதிகளுக்கும் பேதமில்லாமையாலே (வித்யை க்யம் ஸித்தித்தது.)

கஎகூ.

(ஸ்ரீ-பா.) வாஜிஸநேயசாகையில் அக்நிரஹஸ்யத்தில் சாண்டில்யவித்யைசொ ல்லப்பட்டது, அங்கு "ஸ க்ரதும் குர்வீத மநோமயம் ப்ராணசரீரம்" பரிசுத்தமநஸ்வினுல்க்ரஹிக்கத்தக்கதாயும், ப்ராணனுக்குதாரகமாயும் ஜ்யோதிஸ்ஸ் வரூபமாயுமுள்ள ஆத்மாவை உபாஸநம் செய்யக்கடவன் என்று சொல்லிற்று. அதே சாகையில் ப்ருஹதாரண்யத்தில் முன்சொன்னபடியே உபாஸநத்தையும், ஆத்மா வுக்கு அந்த மநோமயத்வாதி குணங்களையும் சொல்லி, இன்னும் அதிகமாக, அங்குச் சொல்லாத "ஸர்வஸ்யேசாந: ஸர்வஸ்யாதிபதி:" என்று ஸர்வாதிபத் யம் ஸர்வநியமநம் முதலிய குணங்களையும் சொல்லிற்று இதற்கும் சாண்டில்யவித் யையென்றே பெயர். இவ்விரண்டிடத்திலும் சொன்ன வித்யை ஒன்ரு வேரு என்று பராமர்சிக்கில்,—வெவ்வேறு சாகையாகில் ஒரேவித்யையை அங்கொருவ னுக்குச்சொல்லிற்று, இங்கொருவனுக்குச் சொல்லிற்று என்று சொல்லலாம், ஒரு சாகையிலேயே ஒருவித்யையை இரண்டுதரம் சொன்னால் "பௌநருக்த்யம்" அதாவது - சொன்னதையே நிஷ்ப்ரயோஜநமாக மறுபடியும் சொல்லுகை என்கிற தோஷம்வரும் ஆகையால் இவைவெவ்வேறு வித்யைகளென்று சொன்னான் பூர்வ பக்ஷி—ஒரு வித்யையை இரண்டு சாகையிலும் சொல்வதுபோல் ஒரு சாகையிலும் ஒருவித்யையை இரண்டுதரம் சொல்லலாம். முதல் வித்யாஸ்வரூபத் தையும் அந்த வித்யையில் அநுஸந்திக்கவேண்டிய சில குணங்களையும் சொல்லி மற்ருேரிடத் தில், முன்சொன்ன வித்யையை அநுவதித்துக்கொண்டு முன்புசொல்லாத சில அபூர்வமான "ஸர்வஸ்யேசாந:" என்று ஸர்வநியந்த்ருவம் முதலிய குணங் களைச் சொல்லுகையாலே பௌநருக்த்ய தோஷமுமில்லை. ஆகில் முன்சொல்லாத குணங்களையே இங்கு சொல்லவேண்டியிருக்க, அங்குச்சொன்ன மநோமயத்வாதி குணங்களையும் இங்குச்சொல்லுவானென்னெனில், இந்தவித்யை முன்சொன்ன தே, வேறன்றென்று தெரிகைக்காகச் சொல்லிற்று. ஆகையால் அந்தசாகையில் சொல்லப்பட்ட இரண்டுசாண்டில்ய வித்யையும் ஒன்றுதான், இரண்டிடத்தில் சொன்ன குணங்களையும் ஒரிடத்தில் அநுஸந்தித்துக் கொள்ளவேணுமென்று ஸித்தாந்தி சொல்லுகிறார்.

கஎகூ

(ஸ்ரீ-பா.) வாஜிஸநேயத்திலும் ப்ருஹதாரண்யத்திலும் சாண்டில்யவித்யைசொ ல்லப்பட்டது. வாஜிஸநேயத்தில் "ஸ க்ரதும் குர்வீத மநோமயம் ப்ராண சரீரம் பாரூபம் ஆகாசாத்மாநம்" என்று மநோமயத்வாதிகுணங் களோடுகூடினவனாய், ஸத்யகாமனான பரமாத்மாவை உபாஸநம்செய்யச்சொல்லிற்று ப்ருஹதாரண்யத்தில் "மநோமயோயம் புருஷ:" என்று தொடங்கி "ஸர்வ ஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந: ஸர்வஸ்யாதிபதி: ஸர்வமிதம் ப்ரசாஸ்தி" என்று மநோமயத்வாதி குணயுக்தனாய் வசித்வாதிகுணங்களையுடையதைப் பரமாத்

மாவை உபாஸிக்கச்சொல்லிற்று. இவ்விரண்டிடத்திலும் சொல்லப்பட்ட ஶாண்டில்ய வித்யை ஒன்றா, அல்லது வெவ்வேறா என்று ஸம்சயம்.—சாந்தோக்யத்தில் வசித்வாதி குணங்களைச் சொல்லாமல் ஸத்யகாமத்வாதி குணங்களையும், ப்ருஹதாரண்யத்தில், ஸர்வஜ்ஞத்வாதிகளைச் சொல்லாமல் வசித்வாதிகளையும் உபாஸ்யமாகச் சொல்லுகையாலே இரண்டிடத்திலும் உபாஸநத்திற்கு விஷயம் ஒன்றன்று, ஆகையால் இரண்டும் பின்னங்களென்று பூர்வபக்ஷம் • மநோமயத்வாதி குணங்கள் இரண்டிடத்திலும் சொல்லப்பட்டன. ஓரிடத்தில் ஸத்யகாமத்வமும் மற்றோரிடத்தில் வசித்வமும் சொல்லியிருந்தபோதிலும், வசித்வமென்பது ஸத்யகாமத்திற்குள் சேர்ந்ததாகையால் அவ்விரண்டு குணங்களுக்கும் பேதமில்லை. ஸத்யகாமத்வமாவது. தான் நினைத்ததில் சிறிதும் சோராமல் தலைக்கட்டுகை. வசித்வமாவது-ஸகலசிதசித்துக்களையும் தனக்கு வசமாக்கிக்கொள்ளுகை. இந்த வசித்வம் ஸத்யகாமத்வத்திற்குள் அடங்கியதாகையால் ப்ருஹதாரண்யத்திற்குள் வசித்வத்தைச்சொன்னபோதே ஸத்யஸங்கல்பத்வமும் சொல்லிற்றேயாயிற்று. ஆதலால் இரண்டிடத்திலும் விஷயமொன்றாய் வித்யை ஒன்றாயிருக்குமென்று ஸித்தாந்தம். ௩௭௩.

௩௪ - அ௩௪, பா-௩-௩௭௪. ஸம்பந்தாதேவமந்யத்ராபி.

(ஶ்ரு-ப்ர.) ஏவம் - இப்படியே, அந்யத்ராபி - வேறிடத்திலும், ஸம்பந்தாத் - ஒரு வித்யையுடன் ஸம்பந்தத்தினால் (குணோபஸம்ஹாரமுண்டு.) ௩௭௪.

(ஸா-ப்ர.) ஏவம் - இப்படியே, அந்யத்ராபி - வேறிடத்திலும், ஸம்பந்தாத் - ஸ்தாநஸம்பந்தத்தினால், (வித்யாபேதமில்லை.) ௩௭௪.

(ஶ்ரு-ஸூ.) ப்ருஹதாரண்யத்தில், "ஸத்யம் ப்ரஹ்ம" என்று தொடங்கி, பரமபுருஷனை ஸூர்யமண்டல மத்யவர்த்தியாயும், நேத்ரமத்யவர்த்தியாயும் த்யானிக்கச்சொல்லி, பின்பு, முதலுக்கு "அஹ:" என்றபெயரும், இரண்டாவதுக்கு "அஹம்" என்ற பெயரும் சொல்லிற்று. இவ்விரண்டுபெயரையும் இரண்டிடத்திலுமநுஸந்தித்துக் கொள்ளவேணுமா, அல்லது, அந்தந்த இடத்தில் அந்தந்த பெயரைமாத்திர மநுஸந்திக்கவேண்டுமா என்று பராமர்சிக்கில்,—ஸூர்யனுடைய மத்தியிலும் நேத்ரத்தினுடைய மத்தியிலுமிருக்கப்பட்ட புருஷன் ஒருவனே ஆகையால், அவனுக்கு இரண்டிடத்தில் சொன்ன இரண்டு நாமங்களையும் இரண்டிடங்களிலுமநுஸந்திக்கவேணும், புருஷனொருவனாயினும் ஸ்த்தாநம் வேறுபட்டிருக்கிறதேயென்னில், ஒரு ஆசார்யன் வீட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும் அவ்விரண்டிடத்திலும் பேதமின்றியே அவனுக்கு செய்யவேண்டிய யாவத்து சிஶ்ருஷையும் செய்யுமாபோலே இங்கும் கண்டுகொள்வது என்று பூர்வபக்ஷம். ௩௭௪.

(ஸா-ஸூ.) ப்ருஹதாரண்யத்தில் "ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷோ யஶ்சாயம் தக்ஷிணேக்ஷந்" என்று தொடங்கி வலதுநேத்ரத்திலும் ஸூர்யமண்டலத்திலும் பரமபுருஷனை காயத்ரீ சரீரகனாக உபாஸநம் செய்யச்சொல்லி, அநந்தரம், இப்படி இரண்டிடத்திலும் உபாஸிக்கச்சொன்ன பரமபுருஷனுக்கு அஹம் என்றும் அஹ: என்றும் இரண்டு திருநாமம் சொல்லிற்று. இந்த இரண்டு நாமமும் ஸூர்யமண்டலத்தில் உபாஸ்யனான பரமாத்மாவுக்கும், வலது கண்ணில் உபாஸ்யனான பரமாத்மாவுக்கும் ஆக இருவர்க்கும் உள்ளதா, அல்லது - ஒருவனுக்கொரு நாமமும் மற்றொருவனுக்கு மற்றொருநாமமும் என்று வ்யவஸ்த்தையுண்டா என்று ஸம்சயம்—கீழ் அதிகரணத்தில் மநோமயத்வாதிகுண விசிஷ்டபரமாத்மா ஒருவனையே இரண்டிடத்திலும் உபாஸ்யனாகச் சொல்லிற்றாகையால் இரண்டிடத்திற் செ

ன்னவித்யைகளுக்கு அபேதம் சொன்னாற்போல், இங்கும், ஸூர்யமண்டலத்திலும் நேத்ரத்திலும் பரமாத்மா ஒருவனையே உபாஸிக்கச் சொன்னபடியால் இரண்டிடத்திற் சொன்னவித்யைகளும் ஒன்று. இரண்டுநாமங்களையும் இரண்டிடத்திலு மநுஸந்திக்கலாம் என்று பூர்வபக்ஷம். ௩௭௪.

ஸூ-௩௭௫. நவா விஶேஷாத்.

(ஶ-வ்யா.) விஶேஷாத் - (ஸ்தாந) விசேஷமுண்டாகையால், ந - குணோபஸம்ஹாரம் கிடையாது. ௩௭௫.

(ரா-வ்யா.) விஶேஷாத் - உபாஸ்யமாகச்சொன்ன பரமபுருஷனுக்கு இரண்டிடத்திலும் விசேஷமுண்டாகையால், நவா - இரண்டுவித்யையும் ஒன்றாகமாட்டாது. ௩௭௫.

(ஶ-ஹா.) இரண்டிடத்திலும் உபாஸநத்துக்கு விஷயமான புருஷனொருவனாயிருந்தபோதிலும், அவனுக்குச்சொன்ன ஸ்தாந பேதத்தினால், அவ்வவ இடங்களில் அவனுக்குச் சொன்னபெயர்களையே அநுஸந்திக்கவேண்டும். மற்றொரு பெயரை யநுஸந்திக்கக்கூடாது. ஆசார்யனொருவனாயிருந்தபோதிலும், அவனுட்கார்ந் திருக்கும்போது செய்யவேண்டிய உபசாரத்தை நிற்கும்போதும், நிற்கும்போது செய்யவேண்டிய உபசாரத்தை உட்கார்ந்திருக்கும்போதும் செய்யமுடியாது; அதுபோலவே இங்கும் காண்க என்று ஸித்தாந்தம். ௩௭௫.

(ரா-ஹா.) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்—கீழ் அதிகரணத்தில் உபாஸ்யனான பரமாத்மாவும், அவனிடத்தில் விசேஷணங்களான குணாதிகளும் இரண்டிடத்திலும் ஏகரூபமாகையால் அபேதம் சொல்லிற்று. இங்கு உபாஸ்யனான பரமாத்மாவுக்கு ஓரிடத்தில் ஸூர்யமண்டல வ்ருத்தித்வமும், மற்றோரிடத்தில் நேத்ர வ்ருத்தித்வமும் விசேஷணங்களாகச் சொன்னபடியால், அந்தவிசேஷண பேதத்தினால் வித்யைகளும் பிந்நங்கள் ஆகையால் இரண்டு நாமங்களும் ஒவ்வோரிடத்தில் வ்யவஸ்திதங்கள். ஸூர்யமண்டலவர்த்தியான பரமாத்மாவுக்கு "அஹம்" என்றும் நேத்ரவர்த்தியான பரமாத்மாவுக்கு "அஹம்" என்றும் நாமம் என்று ஸித்தாந்தம். ௩௭௫.

ஸூ - ௩௭௬. த³ர்ஶயதி ச.

(ஶ-ரா-வ்யா.) த³ர்ஶயதி ச - இரண்டுவித்யைக்கும் ஶ்ருதியும் பேதத்தைக்காண்பிக்கிறது. ௩௭௬.

(ஶ-ஹா.) "தஸ்யைதஸ்ய தத³வ ரூபம்" என்று தொடங்கி, ஸூர்யமண்டலவர்த்தி புருஷனுக்குள்ள ரூபாதிகுணங்களை நேத்ரமத்ய வர்த்தியான புருஷனுக்குள்ளதென்று சொல்லிற்று. இரண்டும் ஒரேவித்யையாயிருக்கும்பக்ஷத்தில் இப்படி சொல்லவேண்டுவதில்லை. அக்குணங்கள் தன்னடையே இங்கும் வரும். இப்படி சொன்னதினால் இரண்டும் வெவ்வேறென்றும், அதுக்குள்ள ரூபாதிகளிதுக்குண்டென்று சொன்னதுபோக மற்ற அதுக்குள்ள குணங்களை இங்கு அநுஸந்திக்கக்கூடாதென்றும் ஸித்தித்தது. ௩௭௬.

(ரா-ஹா.) "தஸ்யைதஸ்ய தத³வ ரூபம் யத³முஷ்ய ரூபம்" என்று ஸூர்யமண்டல வர்த்தியான பரமாத்மாவினுடைய ரூபமே நேத்ரவர்த்தியான பரமாத்மாவுக்கும் ரூபம்என்று ஓரிடத்தில் உபாஸ்யமாகச் சொன்ன பரமாத்மாவினுடைய ரூபத்தையே மற்றோரிடத்தில் உபாஸ்யமாகச் சொன்னபடியால்

இரண்டும் வெவ்வேறென்பது வித்தம் ஒன்றாகில் அர்த ரூபம் விரித்தமாகையால் ஏறிட்டுச் சொல்லக்கூடாது. ஆகையால் நாமமும் இரண்டிடத்திற்கும் வெவ்வேறா யிருக்கும். ௧௭௬.

சு.வி - ௯௰. ஸூ-௧௭௭. ஸம்ப்ருதித்யுவ்யாப்த்யபி சாத:.

(ஸூ-ரா-வ்ய.) அத:-ஸ்தாநவிசேஷ ஸம்பந்தம் வ்யவஸ்திதமாகையாலே, ஸம்ப்ருதித்யுவ்யாப்தி-ஜ்யேஷ்டவீர்யாதிகுண ஸம்ருத்தியும் ஆகாசவ்யாப்தியும், (எல்லாவித்யைகளிலும் அநுஸந்திக்கக்கூடாது.) ௧௭௭.

(ஸூ-ஸா.) ராணாயநீயசாகையில் கிலஸ்ருதியில் "ப்ரஹ்மஜ்யேஷ்டா வீர்யா ஸம்ப்ருதாநி ப்ரஹ்மாக்ரே ஜ்யேஷ்டம் திவமாததாந" ப்ரஹ்மத்தைக் காரணமாக உடைய பராக்ரமங்கள் ப்ரஹ்மத்தினிடத்தில் குறைவற்றிருக்கின்றன. அந்த காரணமாகியப்ரஹ்மமே தேவதைகளுண்டாவதற்கு முன் தேவலோகத்தையெல்லாம் தானே வ்யாபித்திருந்தது என்று சொல்லி யிருக்கிறது. அந்த சாகையிலுபநிஷத்திலேயே சாண்டில்யதகர உபகோஸல வித்யைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தவித்யைகளிலும், கீழ்கிலஸ்ருதியிற்சொன்னபராக்ரமஸம்ப்ருதி ஸ்வர்க்கலோகவ்யாப்தி முதலியகுணங்களை அநுஸந்திக்கவேணுமா, வேண்டாமாஎன்று கேட்கில்,—அவைகளும் ப்ரஹ்மத்தினுடைய குணங்களேயாகையால் எல்லாவித்யைகளிலு மநுஸந்திக்கவேணுமென்று தோற்றினபோதிலும், சாண்டில்ய வித்யையிலும் தகரவித்யையிலும் ப்ரஹ்மத்தை ஹ்ருதயப்ரதேசத்திலுள்ளதாகவும், உபகோஸல வித்யையில் நேத்ரத்திலுள்ளதாகவும் த்யாநிக்கும்படி, ப்ரஹ்மத்துக்கு ஆத்யாத்மிகமானஸ்தாநமும் ஆதிதைவிக ஸ்தாநமும் இப்படி வெவ்வேறு ஸ்தாநங்கள் சொல்லப்பட்டன. இப்படி ஆத்யாத்மிகஸ்தாநத்திலுள்ள ப்ரஹ்மத்துக்கு, ஆதிதைவிகமாகிய இக்குணங்களை அநுஸந்திக்கக்கூடாது என்றுசொல்லுகிறார். ௧௭௭.

(ரா-ஸா.) ப்ரஹ்மஜ்யேஷ்டா வீர்யா ஸம்ப்ருதாநி ப்ரஹ்மாக்ரே ஜ்யேஷ்டம் திவமாததாந" இத்யாதியாலே பரமபுருஷனிடத்தில் உத்க்ருஷ்டங்களான கல்யாணகுணங்கள் ஸம்பூர்ணங்கள். அந்தபரமாத்மா முன்னம் ஸ்வர்க்காதி லோகங்களை ஆக்ரமித்தான் என்று சொல்லிற்று. இங்குச்சொன்ன கல்யாணகுணங்களும் ஆகாசவ்யாப்தியும் உபாஸ்யனான பரமபுருஷனிடத்தில் ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கவேண்டுமோ இல்லையாஎன்றுஸம்சயம்-ஒருவித்யையையாரம்பித்து அந்த ப்ரகரணத்திற் சொல்லாமல் பொதுவாகச் சொல்லிற்றாகையால் ஸகலவித்யைகளிலும் அநுஸந்தேயங்களென்று பூர்வபக்ஷம்— விபுலமான ஆகாசவ்யாப்தியுடைய பரமபுருஷனை அல்பஸ்தாநமான ஹ்ருதயத்தில் அநுஸந்திக்கக்கூடாதாகையால் இவ்விதமான ரூபம் வைஸ்வாநராதி வித்யைகளிலேயே அநுஸந்திக்கவேண்டும். அந்த ஆகாச வ்யாப்தியோடுகூட சொல்லப்பட்டனவாகையால் மற்ற அக்குணங்களும் அவ்வித்யைகளிலேயே யநுஸந்திக்கவேணும். எல்லாவித்யைகளிலும் அநுஸந்திக்கக்கூடாதென்று ஸித்தாந்தம். ௧௭௭.

சு.வி. ௯௧. ஸூ-௧௭அ. புருஷவித்யாயாமிவ சேதரேஷாமநாம்நாநாத்.

(ஸூ-வ்ய.) இதரேஷாம் - இதரசாகையிற் சொல்லப்பட்டவைகளை, அநாம்நாநாத் - மற்றொருசாகையிற் சொல்லாமையாலே, புருஷவித்யாயாமிவ - புருஷவித்யையிலுங்கூட, (வித்யாபேதமுண்டு). ௧௭அ.

(ஸு-மா.) தாண்டிரஹஸ்யம் பைங்கிரஹஸ்யம் என்கிற க்ரந்தங்களில் புருஷ வித்யை சொல்லியிருக்கிறது. அதாவது - "புருஷோவாவ யஜ்ஞஸ்தஸ்ய யாநி சதுர்விம்ஶதிவர்ஷாணி" என்றுதுடங்கி, புருஷனென்பவனே யஜ்ஞம், அவனுடைய முதல் இருபத்துநாலு வயஸ்ஸு, யஜ்ஞத்திற் செய்யவேண்டிய ப்ராதஸ்ஸவநம், நடுவுள்ள நாற்பத்துநாலுவயஸ்ஸு, மத்யாந்ஹத்திற் செய்யவேண்டிய ஸவநம், கடைசியிலுள்ள நாற்பத்துநாலுவயஸ்ஸு ஸாயம் ஸவநம், இம்மாதிரியாக புருஷனுக்குள்ள குணங்களையெல்லாம் யஜ்ஞத்துக்குள்ள அங்கங்களாக நிரூபித்திருக்கிறது. தைத்திரீயத்தில், "தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா" என்று தடங்கி புருஷவித்யையினுடைய குணங்களைச் சொல்லியிருக்கிறது; அவ்விரண்டிடத்திலும் இரண்டிடத்திற் சொன்ன எல்லாகுணங்களையும் அநுஸந்திக்கவேணுமா, வேண்டாமா என்றால், இரண்டும் புருஷவித்யையாகையால் அநுஸந்திக்கவேணுமென்று தோற்றும்.—தைத்திரீயத்தில் வித்வானாகிய புருஷனுடைய யஜ்ஞத்துக்கு ஆத்மாயஜமாநன், ஶ்ரத்தைபத்நீ சரீரம் விறகு, மார்பு திண்ணை என்று இம்மாதிரியாகச் சொல்லி, இங்குச்சொன்னவைகளி லொன்றையும் அங்குச்சொல்லாமல் வெவ்வேறு விதமாகச் சொல்லிற்று. இப்படி யொன்றுக்கொன்று கொஞ்சமும் ஸம்பந்தமில்லையாகையால் இவ்விரண்டும் வெவ்வேறு வித்யைகள். அங்குச் சொன்ன குணங்களுக்கு இங்கு அநுஸந்தாநம் கிடையாது என்று ஸித்தாந்தம். (௩௭௮.)

(ரா-ஹா.) தைத்திரீயத்தில் "தஸ்யைவம்விதுஷோயஜ்ஞஸ்யாத்மா" என்று தொடங்கி புருஷவித்யை சொல்லப்பட்டது. சாந்தோக்யத்திலும் "புருஷோவாவயஜ்ஞ:" என்று தொடங்கி புருஷவித்யை சொல்லப்பட்டது. இவ்விரண்டுக்கும் பேதமுண்டா இல்லையா என்று ஸம்சயம்.—புருஷவித்யை என்கிற நாமம் இரண்டுக்கும் ஒத்திருக்கையாலும், தைத்திரீயத்திற் சொன்னபுருஷவித்யைக்கு பலம் சொல்லாமையால் இதற்குபலம் எதைக்கற்பிக்கவேண்டுமென்னு மாகாங்க்ஷையில். சாந்தோக்யத்திற் சொன்ன புருஷவித்யையினுடைய பலத்தையே இதற்கும் பலமாகக்கற்பிக்க வேண்டுகையாலே இரண்டுக்கும் பலமொன்றாகையாலும். இரண்டுக்கும் பேதமில்லை என்று பூர்வபக்ஷம்.—நாமமிரண்டுக்கு மொன்றாயினும், மற்றவிஷயங்களி லநேகபேதமுண்டு. அவையாவன—தைத்திரீயத்தில் புருஷனென்கிற யஜ்ஞத்திற்கு ஆத்மாவையஜமாநனாகவும், ஶ்ரத்தையை அவனுக்குப் பத்நியாகவும், சரீரத்தை ஸமித்தாகவும், உதயகாலம், மத்யாஹ்நம், ஸாயங்காலங்களாகிற மூன்று காலங்களையும் மூன்று ஸவநங்களாகவும் சொல்லிற்று இவற்றை சாந்தோக்யத்திற் சொல்லவில்லை. சாந்தோக்யத்தில், அசநேச்சா முதலானவற்றை தீக்ஷாதிகளாகவும், புருஷாயுஸ்ஸை மூன்றுபாகமாகப்பிரித்து அவற்றை மூன்றுஸவநமாகவும் சொல்லிற்று, இவற்றைத் தைத்திரீயத்திற் சொல்லவில்லை. ஆகையால் இவ்விரண்டுக்கும் அங்கங்கள் பிந்நங்கள். மேலும், தைத்திரீயத்திற் சொன்ன புருஷவித்யைக்குப் பலாகாங்க்ஷையுண்டானால், இப்ப்ரகரணத்துக்கு முன் ந்யாஸ வித்யாப்ரகரணத்தில் அந்த ந்யாஸவித்யைக்கு பலமாகச் சொன்ன ப்ரஹ்மப்ராப்தியையே பலமாகக் கற்பிக்கவேண்டுகையாலே பலமும் பிந்நமாகையால் இரண்டு புருஷவித்யைகளுக்கும் பேதமுண்டு என்று ஸித்தாந்தம். ௩௭௮.

அதி-௩௨. ஸூ-௩௭௯. வேதாத்யர்த்தபேதாத்.

(ஶ்ரீ-ரா-வ்ய.) வேதாத்யர்த்தபேதாத் - பிறக்கைமுதலிய அர்த்தங்களுக்குப்போலே அத்யயநரூபார்த்தத்துக்கு பேதமுண்டாகையாலே (இம்மந்த்ரம் வித்யாங்கமன்று). ௩௭௯.

(ரு-ஹா.) உபநிஷதாரம்பத்தில், ஆதர்வணிகர்கள் "ஸர்வம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய" என்று தொடங்கி, ஓதேவதையே! என்சத்ருவினுடைய ஸகலாவயவங்களையும் பிள, முக்யமாக மார்பைப்பிள, நாடிகளை அறு, தலையை உடை என்று ப்ரார்த்திக்கின்றார்கள், தாண்டிகள், "தேவஸவித: ப்ரஸுவ யஜ்ஞம்" ஓஸூர்யதேவனே! எங்களுடைய யஜ்ஞத்தையும் அதின் பலத்தையும் எங்களுக்கு நிறைவேற்றிவைக்கக்கடவாய் என்று ப்ரார்த்திக்கிறார்கள். சாட்யாயநீயர்கள் "ச்வேதாச்வோ ஹரிதநீலோஸி" ஓ இந்த்ரனே! வெள்ளைக்குதிரையுடைய நீ பச்சைமணிபோலிருக்கிறாய், எங்களுக்கு ஸுகத்தையுண்டாக்கக்கடவாய் என்பார்கள். இப்படி ஒவ்வொரு சாகையாரும் ஒவ்வொரு மந்த்ரத்தைச் சொல்வார்கள். இம்மந்த்ரங்களெல்லாம், அங்குச்சொல்லிய வித்யைகளுக்கு அங்கமாகுமா, ஆகாதா என்னில்; வித்யாப்ரதிபாதகமான உபநிஷத்துக்களினருகில் இம்மந்த்ரங்களைச்சொல்வதற்கு வேறு ப்ரயோஜநமில்லை, சாண்டில்யவித்யை முதலியவற்றில் சொல்லிய ஹ்ருதயம் முதலிய ஸ்த்தாநங்களை இம்மந்த்ரங்களிலும் சொல்லியிருக்கிறது. ஆகையால் இம்மந்த்ரங்கள் வித்யைகளுக்கு அங்கங்களாகக்குறையில்லையென்று ஒருவன் சொல்வானாகில்,—சாண்டில்யாதிவித்யைகளில் ஹ்ருதயம் முதலானவற்றை ப்ரஹ்மத்துக்கு ஸ்த்தாநமாகச்சொல்லிற்று, இம்மந்த்ரத்தில், ஹ்ருதயத்தைப் பிளக்கச் சொல்லிற்று; ஆகையால் மந்த்ரத்தினுடைய அர்த்தத்துக்கும் வித்யைக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. ஏதோஒருபதத்தினுடைய அர்த்தம் ஒத்திருந்தால்போராது. எல்லா அர்த்தங்களு மொத்திருக்கவேணும், அதிங்கில்லை. இம்மந்த்ரம் அபிசார (மாரண) கர்மத்துக்கு ஒத்திருக்கையால் அதுக்கே அங்கமாகவேண்டும் இப்படி அர்த்தம் சரிப்படாதிருக்கச்செய்தே, ஸமீபத்திலோதப்பட்டதென்பதைக்கொண்டு அங்கமாகச் சொல்லக்கூடாதென்கிறார். (௩௭௬.)

(ரா-ஹா.) "ஸந்நோ மித்ரஸ்ஸம் வருண:" என்றும் "ஸஹ நாவவது" என்றும் இம்மந்த்ரங்களைத் தைத்திரியர்கள் அத்யயநம் செய்கிறார்கள். இம்மந்த்ரங்களுக்கர்த்தம்—ஸூர்யன் வருணன் முதலியதேவதைகள் நம்மை ரக்ஷிக்கட்டுமென்றும், சிஷ்யாசார்யர்களான எங்களை ரக்ஷிக்கட்டும், நான் அத்யயநம் செய்தது வீர்யவத்தாயிடுக, என்றுமித்யாதி. இம்மந்த்ரங்கள் உபாஸநத்திற்கு அங்கங்களா அன்றா என்று ஸம்சயம்.—வித்யாப்ரகரணத்திற் சருகில் இம்மந்த்ரங்களோதப்பட்டிருக்கையால் இவைவித்யாங்கங்களென்று பூர்வபக்ஷம்—"ஸர்வம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய" என்கிற மந்த்ரம் ப்ரகரணாந்தரத்திலிருந்தாலும் தேஜிஷ்டமான சத்ருவின் ஹ்ருதயத்தைப்பிள என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற இம்மந்த்ரம் ப்ரகரணாந்தரத்திற் சொல்லப்பட்ட அபிசாரஹோமாதிகளுக்கு சேஷமாய் அந்தக்கிரியைகளில்அநுஸந்திக்கத்தக்கதானாற்போலே, நாங்களத்யயநம்செய்தவேதம் எங்களை ரக்ஷித்திடுகவென்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற "ஸஹ நாவவது" இத்யாதி மந்த்ரங்களும் அத்யயநத்திற்கே அங்கமாமல்லது வித்யைக்கு அங்கமாக மாட்டாது என்று ஸித்தாந்தம், ௩௭௬

௩௰-ஸூ௩. ஹாநௌ தூபாயநசப்தசேஷத்வாத் குசாச்சந்தஸ்ஸ்துத்யுபகாநவத்தது க்தம்.

(ரா-வ்ய.) ஹாநௌ - விநாசமாத்ரம் சொல்லப்பட்டாலும், உபாயநசப்தசேஷத்வாத் - புண்யபாபங்கள் மித்ரசத்ருக்களை யடைகிறதென்கிறவாக்யம் புண்யபாபங்கள் நசிக்கின்றனவென்கிற வாக்யத்திற்கு சேஷமா

கையாலே, (புண்யபாபங்களினுடைய விநாசஸங்க்ரமணங்களை ஸகலவித்யைகளிலும் அநுஸந்திக்கவேணும்) குசா ... என்கிற பாத்ரத்தைச்சொல்லுகிற வாக்யத்திற்கும் தேவாஸுரர்களுடைய சந்தஸ்ஸைச்சொல்லுகிற வாக்யத்திற்கும் ஸூர்யனுடைய ஸ்துதியைச் சொல்லுகிற வாக்யத்திற்கும் காநத்தைச் செய்யச்சொல்லுகிற வாக்யத்திற்கும் ப்ரகரணாந்தரத்திலுள்ள வாக்யங்கள் சேஷமாமாப்போலே (இங்கும் ப்ரகரணாந்தரத்திலுள்ள விநாசபோதக வாக்யத்திற்கு ப்ரகரணாந்தரத்திலிருக்கிற புண்யபாபஸங்க்ரமணபோதகவாக்யமும்சேஷமாகிறது.) தத்-அந்த அர்த்தம், உக்தம் - பூர்வமீமாம்ஸையில் சொல்லப்பட்டது. ௩அ௦.

(ஸ - ஸா.) ஆதர்வணிகஶ்ருதியில் ... உபாஸகன் புண்யபாபங்களைவிட்டு முக்தியை யடைகிறானென்றும், சாட்யாயந ஶ்ருதியில் ... உபாஸகன் முக்தியையடையும்போது அவனுடைய புண்யங்களை அவனுடைய இஷ்டர்களும், பாபங்களை சத்ருக்களும் அடைகிறார்களென்றும், கௌஷீதகிஶ்ருதியில் ... உபாஸகன் புண்யபாபங்களைவிட்டுவிடுகிறான். அதில் புண்யத்தை அவனுக்குவேண்டியவர்களும் பாபத்தை சத்ருக்களுமடைகிறார்களென்றும், ஓரிடத்தில் கர்மநாசத்தை மாத்திரமும், மற்றோரிடத்தில் வேறொருவ்யக்தியையடைகை மாத்ரமும், வேறோரிடத்தில் இரண்டையும் சொல்லிற்று. இரண்டையும் சொன்னவிடத்தில் ஸம்சயமேயில்லை. வேறொருவ்யக்தியை யடைகிறதென்றவிடத்திலும், ஓரிடத்தைவிட்டே மற்றோரிடத்துக்குப் போகவேண்டுகையால், அங்கு ஒன்றைச் சொன்னபோதிலும் இரண்டும் சொன்னமாதிரியேயாம். விட்டுப்போகிறதென்ற முதல்பக்ஷத்தில், ஸம்சயம். அதாவது—அங்கு கர்மநாசத்தைமாத்திர மநுஸந்திக்கவேணுமா, அல்லது, அங்குச்சொல்லாததாய் வேறுசாகையில் சொல்லப்பட்டதான வ்யக்த்யந்தரப்ராப்தியையும் அநுஸந்திக்கவேணுமா என்று—அங்குச்சொல்லாமையாலும், வேறுசாகையில் சொல்லியிருந்தபோதிலும் அதை அந்தசாகையில் சொன்னவித்யையிலேயே அநுஸந்திக்கவேண்டுமாகையாலும், கர்மத்தை விடுகிறவனொருவனும் பற்றுகிறவன் வேறொருவனாகையாலே ஒருவனுடைய க்ருத்யமல்லாமையாலும், இங்கு இரண்டாவதை அநுஸந்திக்கவேண்டாமென்று பூர்வபக்ஷிசொன்னான்,—ஒருவனைவிட்டகர்மம் ஆஶ்ரயமின்றியே இராதாகையால் மற்றொருவனை அவஶ்யம் பற்றியேயாகவேண்டுமாகையால் அதை அநுஸந்திக்கவேண்டும். இங்குச்சொல்லாமல் வேறிடத்தில் சொல்லியிருந்தபோதிலும் இங்கு ஆவஶ்யகமாகில் அதையும் அநுஸந்திக்கவேணும் இதற்கு உதாஹரணம்—"குசா வா நஸ்பதயாஃ" என்று தடங்கி பால்லவிஶ்ருதியில், நாங்கள்செய்கிற ஸ்தோத்ரத்தைக் கணக்கெண்ணுவதற்காக வைத்துக்கொண்டிருக்கிற ஓ மரக்குச்சுகளே! நீங்கள் பெரியமரத்திலின்று முண்டானீர்கள், எங்களை ரக்ஷியுங்கோள் என்று ஸாமாந்யமாக மரக்குச்சு சொல்லப்பட்டது, இன்னமரமென்று ஏற்படவில்லை. சாட்யாயநஶ்ருதியில் "ஔதும்பராஃ" அக்குச்சுகள் அத்திமரத்தினதென்று சொல்லுகையாலே அதையே இங்கும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இன்னும்—"... " என்று தொடங்கி தேவச்சந்தஸ்ஸையும் ஆஸுரச்சந்தஸ்ஸையும்

சொல்லச்சொல்லிற்று, இதுமுன், இது பின் என்று சொல்லவில்லை, மற்ருரிடத்தில், தேவச்சதஸ்ஸை முன்னதாகவும் ஆஸுரத்தை அப்புறமும் சொல்லச்சொல்லியிருக்கையால் அதேமாதிரியாகவே இங்கும் சொல்லுகிருர்கள். இன்னும், ஓரிடத்தில் ஷோடசிஸ்தோத்ரம் பண்ணச்சொல்லிற்று; இன்னகாலத்திலென்று சொல்லவில்லை. மற்ருரிடத்தில் ஸூர்யோதயகாலத்தில் செய்யவேண்டுமென்றுசொன்னபடியே இங்கும் செய்கிருர்கள். இப்படி இங்குச் சொல்லாமல் வேறுசாகையில் சொன்னதையும் அத்யாவஶ்யகமாகில் இங்கும் வைத்துக்கொள்ளவேண்டியதாகையால், இங்கும், கர்மத்துக்கு வ்யக்த்யந்தர ஸமாஶ்ரயணமும் அநுஸந்திக்கவேண்டுமென்று ஸித்தாந்தம். (௩-௮௦.)

(ரா-ஹா.) "ததா வித்வாந் புண்யபாபே விதூய" உபாஸகன் தேஹாவஸாந காலத்தில் புண்யபாபங்களை உதறிவிட்டு பரமாத்மஸாம்யத்தை அடைகிருனென்றும், "அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம்" அக்காலத்தில் குதிரைமயிர்களை உதறுவதுபோல் பாபங்களை உதறி பரமாத்மாவை அடைகிருனென்றும் சில இடங்களிலும், "தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்" உபாஸகனுடைய தேஹாவஸாநகாலத்தில் அவனுடைய தநத்தை அவன்பிள்ளைகளடைகிருர்கள், அவன் புண்யத்தை அவனுடைய மித்ரர்களும் பாபத்தை சத்ருக்களும் அடைகிருர்கள் என்றும் மற்ருரிடத்திலும், "தத் ஸுக்ருத துஷ்க்ருதே விதூநுதே தஸ்ய ப்ரியா ஜ்ஞாதய: ஸுக்ருதமுபயந்த்யப்ரியா துஷ்க்ருதம்" அக்காலத்தில் உபாஸகன் புண்யபாபங்களை உதறுகிருன். அந்தபுண்யத்தை இஷ்டர்களும் பாபத்தை சத்ருக்களும் அடைகிருர்கள் என்றும் வேருரிடத்திலும் சொல்லியிருக்கிறது. ஓரிடத்தில் புண்யபாபநாசமும், மற்ருரிடத்தில் அக்கர்மங்களுக்கு மித்ர சத்ருக்களிடத்தில் ப்ராப்தியும், வேருரிடத்தில் இவ்விரண்டும் சொல்லப்பட்டது. இம்மூன்றுவிதத்திலும் ஓரோவித்யைகளில் ஒவ்வொன்றைத் தனித்தனியாக அநுஸந்திக்கவேணுமா, அல்லது, ஸகல வித்யைகளிலும் இவ்விரண்டையும் அநுஸந்திக்கவேணுமா, வென்றுஸம்சயம்.—ஓரோரிடங்களில் ஒவ்வொன்றைத் தனித்தனியே சொன்னபடியால் ஏதாவதொன்றை யநுஸந்தித்தால்போருமென்றுபூர்வபக்ஷம்.—புண்யபாபங்கள் வேருருத்தரை யாஶ்ரயிக்கும்போது ஒருத்தனைவிட்டே வரவேணுமென்பது ஸித்தம்; ஆகையால், வேருருத்தரைப் புண்யபாபங்கள் ஆஶ்ரயித்தலை அநுஸந்திக்கும்போது அக்கர்மங்கள் ஒருவனை விட்டுவந்ததையும் அநுஸந்திக்கவேணுமென்பதும் ஸித்தம். ஆதலால் ஒருவனைவிடுகிறதென்று சொன்ன வாக்யமும் வேருருவனை ஆஶ்ரயிக்கிறதென்று சொன்னவாக்யமும் இரண்டும் சேர்ந்து ஒரே அர்த்தத்தை விதிக்கையால் ஸமஸ்தவித்யைகளிலும் இரண்டையும் அநுஸந்திக்கவேணும். இவ்விரண்டுவாக்யங்களும் வெவ்வேறு ப்ரகரணத்திலிருக்கையால் இவ்விரண்டும் சேர்ந்து ஓரர்த்தத்தைச் சொல்லுமோவென்னில், சொல்லுமென்பதற்கு த்ருஷ்டாந்தம்—'வாநஸ்பத்யோ ஜுஹூ:' யஜ்ஞத்தில் ஜுஹூ என்றுபேரையுடைய பாத்ரம் பூவில்லாமல் காய்க்கிற மரத்தினால் செய்யவேணும் என்று ஓரிடத்திற் சொல்லிற்று. இவ்விதமான மரங்களநேகமாகையால் எந்த மரத்தினுற் செய்யவேண்டுமென்னில், "ஔதும்பரீ ஜுஹூ:" அந்தஜுஹூவென்கிற பாத்ரம் அத்திமரத்தினுற் செய்யவேணுமென்று வேருரிடத்திற் சொல்லப்பட்ட வாக்யம் இவ்வாக்யத்தோடு சேர்ந்து பூவாமற்காய்க்கிற அத்திமரத்தினுல் அப்பாத்ரம் செய்யவேணுமென்று ஓரர்த்தத்தைச் சொல்லுகிறது.—"தேவாஸுராணாம் சந்தாம்ஸி" தேவாஸுரர்களுடைய சந்தஸ்ஸுக்களைச் சொல்லவேண்டுமென்று ஓரிடத்திற்சொல்லிற்று. அவற்றில் தேவர்களின் சந்தஸ்ஸா அஸுரர்களின்

சந்தஸ்ஸா முன்னே சொல்லவேண்டியதென்னும் சங்கையில் "தெவ ஜந்தாஂஸி பூவாஂ" தேவர்களின் சந்தஸ்ஸை முன்னம் சொல்லவேணுமென்று ப்ரகரணாந்தரத்திற் சொல்லப்பட்ட வாக்யம் இப்ப்ரகரணத்திலுள்ள இவ்வாக்யத்தோடு சேர்ந்து இரண்டும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறது.—"அதிராத்ரெ ஷோடஶிநஂ யஹ்ணாதி" ஷோடசி என்கிற ஸாமத்தைக்கானம் செய்யவேணுமென்று ஓரிடத்திற்சொல்லிற்று. இதை எப்போது கானம்செய்யவேணுமென்னில், "ஸமயாவிஷிதெ ஸூர்யெ ஷோடஶிநஸ்ஸ்தோத்ரமுபாகரோதி" ஸூர்யனுதித்த வநந்தரம் இந்த ஷோடசி என்கிற ஸாமத்தைக்கானம் செய்யவேணுமென்று மற்றோரிடத்திற் சொல்லப்பட்ட வாக்யம் இதோடுசேர்ந்து இரண்டும் ஒரே அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிறது— "ருத்விஜ உபகாயந்தி" ருத்விக்குக்கள் கானம்செய்கிறார்கள் என்று ஒருப்ரகரணத்தில் சொல்லிற்று "நாத்வர்யுருபகாயெத்" அத்வர்யுகானம் செய்யக்கூடாது என்று ப்ரகரணாந்தரத்திலிருக்கிற வாக்யம் இத்தோடுசேர்ந்து இரண்டும் அத்வர்யுவ்யதிரிக்தர்களான ருத்விக்குக்கள் கானம்செய்யவேணுமென்று ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறது. அதுபோலவே இவ்விரண்டுவாக்யங்களும் வெவ்வேறு ப்ரகரணத்திலிருந்தாலும் இரண்டும்சேர்ந்து ஓரர்த்தத்தைச் சொல்லக்கூடும். இவ்விதமாகவே மீமாம்ஸகர்களும் ஸமர்த்தித்திருக்கிறார்கள் என்று ஸித்தாந்தம். ௩௮௦.

ஸூ-௨௭. ஸாம்பராயெ தர்த்தவ்யாபாவா
த்தயாஹ்யந்யெ.

(ஸ-பா-வ்யா.) தர்த்தவ்யாபாவாத் - (தேகவியோகாநந்தரம்) கடக்கத்தக்க (அநுபவிக்கத்தக்க) கர்மம் இல்லாமையாலே, ஸாம்பராயெ - தேஹவியோககாலத்திலேயே, (புண்யபாபநாசங்களை த்யாநிக்கவேண்டும்) ததாஹி - சரீரநாசகாலத்திலேயே கர்மம் நசிக்கிறதென்று, அந்யெ-வேறு சாகிகளும், அதீயதெ - அத்யயநம் செய்கிறார்கள். ௩௮௧.

(ஸ-பா-ஸா.) புண்யபாபவிநாசங்களைச்சிந்திக்கும்போது, அப்புண்யபாபங்கள் சரீரவியோககாலத்திலேயே ஸம்பூர்ணமாக நசித்ததாகில் அந்தகாலத்திலே நசிக்கிறதென்றே சிந்திக்கவேண்டும். சரீரம் கழியும்போது சிலகர்மங்களும் அர்ச்சிராதிமார்க்கத்தில் போம்போது ப்ரக்ருதிமண்டலத்தைத் தாண்டிப்போம்வரையில் வழியில் கொஞ்சம் கொஞ்சமாகவும் சிலகர்மங்களும் கழிகிறதாகில் அவ்விரண்டு காலங்களிலும் சிந்திக்கவேண்டுமாகையால் அக்கர்மநாசமுண்டாகிற காலத்தை இங்கு முன்னம் நிர்ணயிக்கவேண்டும்.— புண்ய பாபங்கள் சரீரவியோககாலத்திலேயே ஸம்பூர்ணமாய் நசிக்கின்றனவா, அல்லது அப்போது சிறிதும் அர்ச்சிராதி மார்க்கத்தில் சிறிதும் நசிக்கின்றனவா என்று ஸம்சயம்.— வேதத்தில் சரீராவஸாநகாலத்தில் நசிக்கிறதென்று ஓரிடத்திலும் அர்ச்சிராதிமார்க்கத்தில்நசிக்கிறதென்று மற்றோரிடத்திலும் சொல்லியிருக்கிறது. மேலும் அர்ச்சிராதி மார்க்கமாகப் போம்போது ஸூக்ஷ்மசரீரத்தோடே புருஷன் போகிறான். சரீரமில்லாதவன் கமநம் முதலிய ஒருவ்யாபாரம் செய்கைக்கு யோக்யதையற்றவனாகையால் கமநஸாதநமாக சரீரம் ஒப்புக்கொள்ளவேணும். சரீரஸ்திதிக்குக் காரணம் புண்ய பாபரூபகர்மங்கள்; அவை சரீரவியோககாலத்திலேயே நசித்துப்போனால் ஸூக்ஷ்மசரீரமும் அப்போதே நசிக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேணும். அந்தசரீ

மில்லாவிடில் அர்ச்சிராதிமார்க்கமாக கமநம் ஸித்தியாது. அதற்காக அந்தஸூக்ஷ்ம சரீரத்துக்குக் காரணமாகிய சிலகர்மங்கள் சரீரவியோகாநந்தரத்திலும் இருக்கிற தென்றும், அவை ப்ரக்ருதி மண்டலத்தைக் கடந்துபோனபிறகு நசிக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளவேணுமென்று பூர்வபக்ஷம்.—சரீரவியோககாலத்திலேயே ஸகல கர்மங்களும் நசிக்கிறதென்று "அச்வஇவரோமாணி" என்கிற ஸ்ருதியில் சொல்லுகையால் அதற்கநுகுணமாகவே மற்றவாக்யங்களையும் அந்வயித்துக்கொண்டு சரீர வியோககாலத்திலேயே ஸகல கர்மங்களும் நசிக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். அர்ச்சிராதிகதிக்கு ஸாதநமானஸூக்ஷ்ம சரீரத்திற்குக் காரணமாகிய கர்மங்கள் நசித்துப்போனபோதிலும் இவனுடைய உபாஸந பலத்தினால் ஸூக்ஷ்ம சரீரம் நின்றிருக்கிறதென்று அங்கிகரிக்கவேணும். இவ்வர்த்தத்தையே மற்றொருசாகை யும் சொல்லுகிறது. ஆகையாலே சரீராவஸாந காலத்திலேயே ஸகலகர்மநாசங் களையும் சிந்திக்கவேணுமென்று ஸித்தாந்தம். ௩-௮௧.

ஸூ-௩-௮௨. ஛ந்தத உபயாவிரோதாத்.

(ஸூ-பத-வ்யா.) உபயாவிரோதாத் - இரண்டு ஸ்ருதிக்கும் விரோதம் வாராமற்படிக்கு, ஛ந்தத꞉ - யதேச்சமாக, (மற்றொருஸ்ருதியை அந்வயித் துக்கொள்ளவேணும்) ௩-௮௨.

(ஸூ-தா.) புண்யபாபரூபகர்மம் யமநியமாதியினால் நசிக்கவேணும். அந்தயம நியமாதிகள் இந்தசரீரமுள்ளபோதே செய்யவேணும் சரீரம் கழிந்தபின் செய்ய முடியாது. இந்தசரீரத்தோடு இருக்கும்பொழுது செய்த யமாதிகளினால் நசியாமல் சிலகர்மம் அர்ச்சிராதியமார்க்கம் போமளவுமிருக்குமாகில், அங்கேபோனபின்பு அக்கர்மம் எதினால் நசிக்கிறது. அதை நசிப்பிக்கைக்காக யமநியமாதிகள் செய்ய வேண்டியதற்கு சரீரமோஇல்லை. இந்த தோஷம் வாராமைக்காக இவன் சரீரத்தை விடும்பொழுதே கர்மம் நசிக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேணுமென்கிறார். (௩-௮௨)

(ஸா-ஸூ.) ஆனால் அர்ச்சிராதிமார்க்கத்தில் கர்மம் நசிக்கிறதென்று சொல்லுகிற ஸ்ருதிக்குவிரோதம் வாராதோவென்னில், "அச்வஇவரோமாணிவிதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய" குதிரைமயிர்களை உதறுகிறாப்போலவும் ராகுவின் முகத்தில் நின்றும் சந்த்ரன் வெளிக்கிளம்பினாற்போலவும் இந்தசரீரத்தோடேகூட கர்மங்களை யும் உதறிவிடப்போகிறான் என்கிறஸ்ருதிக்கும், "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே" இச்சரீரத்தைவிடுகிற பர்யந்தமே விளம்பம், இச்சரீரம் விடும்போது ஸகலகர் மங்களையும் விட்டுவிட்டு பரமாத்மாவை அடைகிறான் என்று சொல்லுகிற ஸ்ருதிக் கும் விரோதம்வாராமற்படி, "ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்யாக்நிலோகமாகச்சதி ஸ ஆகச்சதி விரஜாம் நதீம் தாம் மநஸைவாத்யேதி தத் ஸுக்ருதது³ஷ்க்ருதே விதூநுதே" அந்தபுருஷன் தேவ யானமார்க்கத்தை யடைகிறான். விரஜைக்குவருகிறான். புண்யபாபங்களை உதறு கிறான். என்ற ஸ்ருதியை, புண்யபாபங்களை உதறுகிறான் தேவயாநத்தை அடைகிறான் விரஜைக்குவருகிறான்என்று பதங்களைமாறுட்டி அந்வயித்துக்கொள்ள வேண்டியது. இப்படி அந்வயித்துக்கொண்டால் அந்த ஸ்ருதிக்கும்விரோதம் வாராது. ௩-௮௨.

ஸூ-௩-௮௩. கதேரர்த்தவத்த்வமுபயதா²ந்யதா² ஹி விரோத⁴꞉.

(ஸூ-வ்யா.) கதே꞉ - அர்ச்சிராதிகமநத்துக்கு, அர்த்தவத்த்வம் - ப்ரயோ ஜநத்தை யுடைத்தாயிருக்கை, (ஆகையால்) உபயதா - இருவகையும்

(அங்கீகரிக்கவேணும்). அந்யதா - இல்லாவிடில், தோஷ: - தோஷம் வரும்.

௩-அ௩.

(ரா-பா.) உபயதா - சரீரவியோககாலத்திலும் அர்ச்சிராதிமார்க்கத்திலுமாக இரண்டிடத்திலும் (கர்மம் நசிக்கிறதென்று ஒப்புக்கொண்டால்தான்,) கதே: - அர்ச்சிராதிகதியைச் சொல்லுகிறஸ்ருதிக்கு, அர்த்தவத்வம் - அர்த்தத்தையுடைத்தாகை (ப்ரயோஜநம்) ஸித்திக்கும். அந்யதா ஹி - வேறு விதமானால், விரோத: - அந்தஸ்ருதிக்கு விரோதம்வரும். ௩-அ௩.

(ஸு-ஸா. ஸகுணப்ரஹ்மோபாஸநம் சொன்னபின் அர்ச்சிராதிமார்க்கம் சொல்லியிருக்கிறது. நிர்க்குண ப்ரஹ்மோபாஸநம் சொன்னபின் அம்மார்க்கம் சொல்லவில்லை. இங்குச்சொல்லாவிடினும் அங்குச்சொன்ன அர்ச்சிராதி மார்க்கத்தை இங்கும்வைத்துக்கொள்ளவேணுமா, வேண்டாமா என்னில், தேசாந்தரம் போகவேண்டுமாகில் அர்ச்சிராதி மார்க்கமாகப் போகவேணும், அப்படிப்போகவேண்டியவன் ஸகுணப்ரஹ்மோபாஸநம் செய்தவனே. நிர்க்குணப்ரமோபாஸநம் செய்தவன் இங்கே இருந்தே அவித்யாவிநிர்முக்தனாய் ப்ரஹ்மஸ்வரூபியாய் விடுகிறான். இவனுக்கு வேறிடம் போகவேண்டியதில்லாமையால் அர்ச்சிராதிமார்க்கம் வேண்டியதில்லை. இவனும்போகிறானென்னில், "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்கிற ஸ்ருதியோடுவிரோதிக்கும். ஆகையால் ஸகுணப்ரஹ்மோபாஸகனுக்கு அர்ச்சிராதி மார்க்கமென்றும், நிர்க்குணப்ரஹ்மோபாஸகனுக்கு அதில்லை யென்றும் அங்கீகரிக்கவேண்டும். ஒரூருக்குப்போகவேண்டுமாகில் அவனுக்கு வழி வேணும், தன்சரீரத்திலுள்ள ரோகம் கழியவேண்டியவனுக்கு வழிவேண்டியதில்லை. அம்மாதிரி இங்கும் கண்டுகொள்க. என்று ஸித்தாந்தம். ௩-அ௩.

(பா-ஸா.) இதில் அநுபபத்தியை சங்கிக்கிறார் — "தேவயாநமார்க்கேண கச்சதி" அர்ச்சிராதிமார்க்கமாகப்போகிறான் என்றுஸ்ருதிசொல்லுகிறது. சரீரமுள்ளவனே தூரிடத்திற்குப்போகவல்லவன்; சரீரத்துக்குக்காரணம்புண்யபாபங்கள். புண்யபாபங்கள் சரீராவஸாநகாலத்தில் நசித்தால் அதினாலுண்டான ஸூக்ஷ்மசரீரமும் நசிக்கும், அப்போது போகவல்லமையற்றவனாகிறான். இப்படியாகில் அர்ச்சிராதிமார்க்கமாகப் போகிறவனொருவனுமில்லாமையால் இவ்வர்த்தத்தைசொல்லுகிற ஸ்ருதிநிரர்த்தசமாய்விடும் என்று பூர்வபக்ஷம். ௩-அ௩.

ஸூ-௩௧. உபபந்நஸ்தல்லக்ஷணார்த்தோபலப்தேர்லோகவத்.

(ஸு-வ்யா-ஸா.) லோகவத் - லோகத்தில் ஒருக்ராமத்துக்குப் போகவேண்டியவன் ஒருவழியைப் பிடித்துக்கொண்டு போமாபோலே, தல்லக்ஷணார்த்தோபலப்தே: - அந்த அர்ச்சிராதிகதியைக் காரணமாகஉடைய (அவ்வழியாகப்போய், பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே சேஷசாயியாகிய பரமபுருஷனை அடைகிறவனுக்கு அதை அடைகையாகிற) ப்ரயோஜநம் ஸித்திக்கைக்காக, உபபந்ந: - இப்படி அர்ச்சிராதிமார்க்கத்திற் சொல்வதே சரியானது. ௩-அ௪.

(ரா-வ்யா.) லோகவத் - லோகத்திற்போலே, தல்லக்ஷணார்த்தோபலப்தே: - அந்த லக்ஷணத்தையுடைய, (அகர்மவஸ்யமான) சரீரம் (முக்தனுக்குக்) காண்கையாலே, உபபந்ந: - புண்யபாப நாசாநந்தரத்திலும் அர்ச்சிராதிகமநம் கூடும். ௩-அ௪.

(ரா-ஹா) அந்தசங்கையைப் பரிஹரிக்கிறார்—ஸகல கர்மங்களும் நசித்து முக்தனான பிறகு "ஸஸ்ஸாஸ்ரஸதிகஸ்ஸஸெஷ்ஷ வொகெஷ்ஷகாவோ ரொஸவதி" அந்த முக்தபுருஷன் அகர்மவஶ்யனாகிறான். அவனுக்கு ஸர்வலோகங்களிலும் யதேச்சமான ஸஞ்சாரமுண்டாகிறதென்று கர்மசூன்யனுக்கும் கூட ஸங்கல்பமாத்ரத்தினால் சரீரமும் அச்சரீரத்தோடு லோகாந்தரங்களில் கமனமும் சொல்லுகிறது. அதுபோலவே சரீராவஸானகாலத்தில் ஸகலகர்மங்களின் நாசம்பிறந்தாலும் பரமாத்மோபாஸநபலத்தினால் அர்ச்சிராதி மார்க்கமாகப் போகைக்காக ஸூக்ஷ்மசரீரம் மாத்ரமிருக்கலாம். அத்துடன் அர்ச்சிராதிமார்க்கமாகப் போகலாமாகையால் அந்தஶ்ருதிக்கு விரோதமில்லை. இதற்கு த்ருஷ்டாந்தம் காண்பிக்கிறார். லோகத்தில் சக்ரவர்த்தியான ராஜாவை யாஶ்ரயித்தவர்கள் மற்ற மநுஜருக்கு அடையத்தகாத உயர்ந்தபோகங்களை அநுபவிக்குமாப்போலே ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தியான பரமாத்மாவை உபாஸநம் செய்தபுருஷன் இஷ்டமானவற்றையெல்லாம் அநுபவிக்கலாமாகையால் ஸூக்ஷ்மசரீரமும் இருக்கலாம் என்று ஸித்தாந்தம். ௩-௪-௯.

ஸூ - ௩ ௨௫ யாவஃயிகாரமவஸ்ஹிதிராயிகாரிகாணாடி.

(ஶ-ரா-வ்ய.) ஆயிகாரிகாணாடி - (லோகமர்யாதாஸ்த்தாபநத்தில்) அதிகாரத்தை யடைந்திருக்கிற வஸிஷ்ட்டாதிகளுக்கு, யாவஃயிகாரமு - (அவரவர்களுடைய) அதிகாரம் முடியுமளவும், ஃவஸ்ஹிதிஃ - இருப்பு (உண்டு - நாசமில்லை.) ௩-௨௫.

(ஶ-ஹா.) ஸகுணவித்யோபாஸகன் அர்ச்சிராதி மார்க்கத்தினால் ப்ரஹ்மலோகத்தையடைகிறானென்றும், நிர்க்குண வித்யோபாஸகன், அதாவது-அத்வைத ஜ்ஞாநமுண்டானவன் முக்தனாகிறானென்றும் கீழ்சொல்லிற்று. இதில், சிலர்க்கு அத்வைத ஜ்ஞாநமுண்டான பின்பும் இஸ்ஸம்ஸாரத்தில் ஜந்மமும் ஸ்த்தியும் புராணாதிகளினால் தெரியவருகிறதாகையால் அத்வைத ஜ்ஞாநம் பிறந்தவர்களெல்லாருக்கும் முக்தியுண்டென்னக் கூடாதென்று சங்கித்து அதைப்பரிஹரிக்கிறார்—முன்பு அவாந்தரதமா என்று பெயரையுடைய ஒரு ஜ்ஞாநாதிகரான ருஷியிருந்தார், அவர்விஷ்ணுவினுடைய கட்டளையினால் த்வாபரயுகத்தின் கடைசியில் க்ருஷ்ணத்வைபாயநராய்ப் பிறந்தார். ப்ரஹ்ம ஜ்ஞாநியாகிய ஸநத்குமாரரும் ஸ்கந்தனாய்ப்பிறந்தார் என்று இப்படி அத்வைத ஜ்ஞாநமுள்ளவர்களாக ஶாஸ்த்ரத்தில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்ட அநேகர் பிறப்பையடைந்தார்களென்று சொல்லுகையாலே, ப்ரஹ்ம ஜ்ஞாநம் பிறந்தவர்களுக் கெல்லாம் மோக்ஷமுண்டென்கிற நியமமில்லையே யென்னில்,—கீழ்ச்சொன்னவர்கள் வேதப்ரவர்த்தநாதிலோகோபகாரார்த்தமாகப் பரமபுருஷனால் ஒவ்வொரு அதிகாரத்தில் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு முதலிலேயே ஐந்தாறு ஜந்மங்கள்வரையில் அநுபவிக்கத்தக்க ப்ராரப்தகர்ம மேற்பட்டிருந்தது. அக்கர்மமுள்ளவரையில் அவ்வதிகாரத்தைச் செலுத்திப் பின்பு மோக்ஷத்தையடைவார்கள். ப்ரஹ்மஜ்ஞாநம் ப்ராரப்தகர்மத்தைக் காட்டிலும் வேறானஸஞ்சிதம் ஆகாமி என்கிற கர்மத்தையே நசிப்பிக்கும். ப்ராப்தமென்பது அநுபவித்தே தீரவேண்டும் ஆகையால் ப்ராரப்த கர்மாவஸாநத்தில் மோக்ஷமுண்டென்பது நிஶ்சயம். ௩-௨௫.

(ரா-ஹா.) பரமாத்மஸ்வரூபத்தை யறிந்த ஜ்ஞாநிகளுக்கு இச்சரீரம்கழிந்த உடனே புண்யபாபங்கள் கழிந்துவிடுகிறது, மறுஜந்மமும்கிடையாது, ஸூக்ஷ்மசரீரம் மாத்திரம் விரஜாப்ராப்தி வரையிலிருக்கிறது என்றார்கீழ். மஹாஜ்ஞாநாவென்று ப்ரஸித்தரான வஸிஷ்ட்டர் முதலானோர்மறுபிறப்புபிறந்ததாகவும் புத்ரமரணாதிகளி

றுவுண்டானது காதிகளையநுப்வித்ததாகவும் சாஸ்த்திரங்களில் காண்கிறதேயென்
னில், அர்ச்சிராதி மார்க்கத்தில் போவதற்கு அடுத்தமுன் ஜந்மத்திலுள்ள சரீரம்நசி
த்த உடனே அவனுக்கு புண்யபாபங்கள் முதலிய ஸம்ஸாரம் நசிக்கிறதென்றோம்.
வஸிஷ்டாதிகள் ஒவ்வொரு அதிகாரத்தைப் பற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு
ப்ராரப்தகர்மம் இன்னும் நசிக்கவில்லை. அவ்வதிகாரத்தின் முடிவிலேதான்நசிக்கும்
அதைதத்வஜ்ஞாநம் நசிப்பியாது. மற்ற ஸஞ்சிதாதிகர்மங்களைத்தான் நசிப்பிக்கும்
ஆகையால் அவர்களுக்கு ஸம்ஸாரம் காண்கிறதென்று சொல்லுகிறார். ௩௨.

௩௰-௩௩. ஸூ-௩-௩௩. அநியம꞉ ஸர்வேஷாமவிரோத꞉
ஶப்தாநுமாநாப்யாம்.

(ஶ்ரு-பா-வ்ய.) ஸர்வேஷாம் - எல்லா உபாஸகர்களுக்கும், (அர்ச்சி
ராதிகதியுண்டு) அநியம꞉ - (சிலர்க்குண்டு சிலர்க்கில்லையென்கிற) நியமமி
ல்லை. ஶப்தாநுமாநாப்யாம் - (இப்படிச்சொன்னால்தான்) ஶ்ருதிஸ்ம்ருதிக
ளோடு, அவிரோத꞉ - விரோதமில்லை. ௩௩.

(ஶ்ரு-பா-ஸா.) பஞ்சாக்நிவித்யை உபகோஸலவித்யை தஹரவித்யைமுதலான
சிலவித்யைகளில் அர்ச்சிராதிகதி சொல்லியிருக்கிறது, மதுவித்யை சாண்டில்யவி
த்யை முதலானவற்றில் சொல்லவில்லை. இதனால் தோற்றுகிறதென்னவென்றால்;
எந்தவித்யையில் அர்ச்சிராதிகதி சொல்லியிருக்கிறதோ, அந்தவித்யையை உபாஸ
நம் செய்கிறவனே அவ்வழியினால் போகிறான், மற்றவித்யையை உபாஸிக்கிறவன்
போகிறதில்லை. அப்படி ஓரிடத்தில் சொன்னவழியை மற்ற எல்லா இடங்களிலு
முண்டென்றேற்புக் கொள்ளில், எங்கேனுமோரிடத்தில் சொன்னதே அமைந்தி
ருக்க இரண்டுமூன்றிடங்களில் சொன்னது வ்யர்த்தமாகும் என்பதற்கு ஸமாதாந
மாவது—வாஜஸநேயத்திலும் சாந்தோக்யத்திலும், "ய ஏவமேதத்விது꞉ யேசாமீ
அரண்யே ஶ்ரத்தாꣳ ஸத்யமுபாஸதே தேऽர்சிஷமபிஸம்பவந்தி" அந்த
பஞ்சாக்நிவித்யையை இம்மாதிரியாக யாவர் சிலர்அறிகிறார்களோ, அவர்களும்,
யாவர் சிலர் ஶ்ரத்தையென்றும் ஸத்யமென்றும் சொல்லப்படுகிற பரமாத்மாவை
உபாஸிக்கிறார்களோ, அவர்களும். அர்ச்சிராதி மார்க்கமாகப்போகிறார்களென்று
பரமாத்மோபாஸநம் செய்கிறவர்களனைவர்க்கும் அர்ச்சிராதிமார்க்கமாகப் போகி
றார்களென்று சொல்லுகையாலே,பரமாத்மோபாஸநம் செய்கிறவர்களனைவர்க்கும்
அர்ச்சிராதி கதியுண்டு. ஓரிடத்தில் சொன்னதே அமைந்திருக்க பஞ்சாக்நிவித்யை
உபகோஸலவித்யை முதலான பலவிடங்களில் அம்மார்க்கத்தைச்சொன்னது அவ்
வித்யைகளில் நியமேந அம்மார்க்கத்தை த்யாநிக்கவேணுமென்று மற்றவித்யை
களில் த்யாநிக்கவேணுமென்கிற நியமமில்லையென்றும் தெரிவிக்கைக்காக ௩௩.

௩௰-௩௪. ஸூ-௩-௩௪. அக்ஷரதியாம் த்வவரோத꞉ ஸாமாந்ய
தத்பாவாப்யாமௌபஸதவத்ததுக்தம்.

(ஶ்ரு.பா-வ்ய.) ஸாமாந்யதத்பாவாப்யாம் - (உபாஸ்யமான ப்ரஹ்மம்)
எல்லா அக்ஷரவித்யைகளிலு மொன்றாகையாலும், (அஸ்தூலத்வம் முத
லானவை) அந்த ப்ரஹ்மத்துக்கு அஸாதாரணமாகையாலும், அக்ஷரதி
யாம் - அக்ஷர (ப்ரஹ்ம) ஸம்பந்தியான, அஸ்தூலத்வாதி விஷயகமான
புத்திகளுக்கு, அவரோத꞉ - உபஸம்ஹாரம் (உண்டு). ஔபஸதவத் -
உபஸதஸம்பந்தியான ஸாமம்போலே, தது꞉க்தம் - குணம் ப்ரதாநத்தை
யநுவர்த்திக்குமென்பது பூர்வமீமாம்ஸையிலும் சொல்லப்பட்டது. ௩௪.

(ஶ்ரு-ப்ர-ஹா.) அதர்வணஶ்ருதியில் "யத்தத³த்³ரேஶ்யமக்³ராஹ்யமகோ³த்ரமவர்ணம்" ப்ரஹ்மம் ப்ரத்யக்ஷத்துக்கு விஷயமென்று, மற்றப்ரமாணங்களுக்கும் விஷயமன்று, கோத்ரமும் கிடையாது, வர்ணமும் கிடையாது என்று தொடங்கிஅநேகமான ப்ராக்ருதகுணங்களை நிஷேதித்திருக்கிறது; வாஜஸநேயத்தில், "அஸ்தூ²லமநண்வஹ்ரஸ்வமதீ³ர்க⁴ம்" அந்தப்ரஹ்மம், ப்ரக்ருதி ஸம்பந்தாதீநமான பெருமன் சிறுமன் குறுகல் நெடுகல் முதலான குணங்களற்றது என்று அநேககுணங்களை நிஷேதித்திருக்கிறது. இந்த இரண்டு அக்ஷரவித்யையிலும் அங்கங்குசொல்லப்பட்ட குணநிஷேதத்தை அங்கங்கேயநுஸந்திக்கவேணுமா, அல்லது, எல்லா இடங்களிலும் சொன்னகுணநிஷேதத்தை எல்லாவிடங்களிலு மநுஸந்திக்கவேணுமா என்று விசாரிக்கில்; ஓரிடத்திற் சொன்னகுணத்தை மற்றோரிடத்திலநுஸந்திக்க ப்ரயோஜநமில்லை, அப்படியநுஸந்திக்கில், எல்லாகுணங்களையு மெல்லாவிடங்களிலநுஸந்திக்கவேண்டுகையால் வித்யாபேதமேயற்றுப் போய்விடும் என்று பூர்வபக்ஷிசொன்னன்—அக்ஷரவித்யாஸம்பந்தமாக எங்கெங்கு என்னென்ன குணங்களை நிஷேதித்திருக்கிறதோ, அதை யெல்லாம் எல்லாவிடங்களிலும் அநுஸந்திக்கவேண்டும். அநந்த ஶ்ருதிகளிற் சொன்ன அஸ்தூலத்வம் முதலியவை, அக்ஷரமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மத்தினுடைய குணங்கள். அக்ஷரமென்பது இக்குணங்களையுடையது. பரமாத்மாவை யநுஸந்திக்கும்போது அவனுடைய அஸாதாரணமான தர்மங்களைக் கொண்டு அநுஸந்திக்கவேண்டும். முன்பு, "ஆநந்தா³த³ய: ப்ரதா⁴நஸ்ய" என்ற ஸூத்ரத்தில் ஆநந்தம் முதலியவை பரமாத்மாவினுடைய குணங்களாகச் சொல்லப்பட்டது, அந்த கேவல ஆநந்தாதிகள் ஜீவனுக்கும் உண்டு. ஆகையால்அவை மாத்திரம் அவனுக்கு அஸாதாரண தர்மமாகமாட்டாது. சேதநனுக்கு யாதொருப்ராக்ருதஸம்பந்தமும் தததீநமான ஸ்தூலத்வாதி குணங்களுமுண்டு. அவற்றுடன்கலசாத ஆநந்தாதிகளே அவனுக்கு அஸாதாரண தர்மங்களாயிருக்கும். ஆகையால்அவை எல்லாஅக்ஷரவித்யைகளிலு மநுஸந்தேயமாயிருக்கும். இதற்கு த்ருஷ்டாந்தம்-ஜாமதக்ந்யயாகத்தில், உபஸதத்துக்கு மந்த்ரம் ஸாமமாய் அதை அந்த ஸாமஸ்வரத்தோடே சொல்லவேண்டியிருந்தபோதிலும் யஜுர்வேதி அதைப்பண்ணும்போதும் அந்த உபஸத்தென்கிற குணியோடு ஸம்பந்தித்த அம்மந்த்ரமாகிற குணத்தையே விநியோகப்படுத்தவேண்டும், அதுபோலிங்கும் காண்க. இந்தந்யாயம் பூர்வமீமாம் ஸாசாஸ்த்ரத்திலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது—சங்கரபாஷ்யவிஷம்—அவ்வவ இடங்களில்சொன்ன அந்தந்த குணநிஷேதங்களையே அநுஸந்திக்கில், அவைதவிர மற்றகுணங்களுடைய நிஷேதம் தோற்றுமையால் ப்ரஹ்மத்தை நிர்குணமென்றநுஸந்தித்ததாகாது ஆகையால் எல்லா குணநிஷேதங்களையு மெல்லாவிடங்களிலு மநுஸந்திக்கவேணும்—என்று ஸித்தாந்தம்.— கூஅ௭.

ஸூ - கூஅஅ. இயத³ாம்நநாத்.

(ஶ்ரு-வ்ரு) ஆம்நநாத் - (வாக்யசேஷத்தில் பரமாத்மாவைச்) சொல்லுகையாலே, இயத் - இவ்வளவென்கிற பரிச்சேதத்தையுடைய பரமாத்மாவே சொல்லப்பட்டான். கூஅஅ.

(ப்ர - வ்ரு) ஆம்நநாத் - நன் க த்யாநிக்கை நிமித்தமாக இயத் இவ்வளவுகுணமே (உபஸம்ஹாரஞ்செய்யவேண்டும்.) கூஅஅ.

(ஶ்ரு-ஹா.) ஶ்வேதாஶ்வதரத்தில், "த்³வா ஸுபர்ணா ஸயுஜா ஸகா²யா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே | தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்³வத்த்ய

ஸ்ரநந்யோ அபிசாகசீதி" இரண்டுபக்ஷிகள் ஸமானகுணத்தையுடையதுகள், தோழமையுள்ளதுகள், ஒரு சரீரமாகிற மரத்தை அடைந்திருக்கிறன. அவற்றில் ஜீவனாகிய ஒருபக்ஷி புண்யபாபங்களின் பலமான ஸுகதுக்கங்களை யநுபவிக்கிறது, பரமாத்மாவாகிய மற்றொருபக்ஷி அநுபவிக்கிறதில்லை, செவ்வையாய் விளங்குகிறது என்று சொல்லியிருக்கிறது. கடஸ்ருதியில், "ருதம்பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே | சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி பஞ்சாக்நயோ யே ச த்ரிணாசிகேதா:" என்று ஜீவனைச்சாயையாகவும் ப்ரஹ்மத்தை வெய்யிலாகவும் சொல்லி, இவ்விருவரும் கர்மபலத்தையநுபவிக்கிறார்களென்று சொல்லியிருக்கிறது. இவ்விரண்டும் ஒருவித்யையா, அல்லது வெவ்வேறு என்று ஸம்சயம்—ஸ்வேதாஸ்வதரத்தில் ஜீவன் புஜிக்கிறான் பரமாத்மா புஜிக்கிறதில்லை யென்று சொல்லிற்று. கடத்தில் இருவரும் புஜிக்கிறார்களென்று சொல்லிற்று; இப்படித்யாநிக்கவேண்டியக்ரமம்வேறுபட்டபடியால் இரண்டும் வெவ்வேறென்று பூர்வபக்ஷம்.—ஸ்வேதாஸ்வதரத்தில், ஒருவன் புஜியாமல் விளங்குகிறானென்று பரமாத்மாவைச்சொல்லி, மேல்வாக்ய சேஷத்தில் "ஜுஷ்டம் யதா பஸ்யத்யந்யமீஸம்" என்று அவனையேசொல்லிற்று; கடத்திலும், "அந்யத்ர தர்மாத்" என்று பரமாத்மாவை முதலில் சொல்லத் தொடங்கி, கடைசியில், "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச" என்று பரமாத்ம விஷயமாகவே கொண்டுபோய் முடித்தபடியால் நடுவிலுள்ள "ருதம்பிபந்தௌ" என்றவாக்யமும் பரமாத்ம விஷயமே. இருவரும் புஜிக்கிறார்களென்று பரமாத்மாவையும் சேர்த்துச் சொன்னபோதிலும், சத்ரிந்யாயேந. அதாவது - குடைபிடித்துக்கொண்டு போகிற சிலரோடு கூடப்போகிற குடையில்லாதவர்களையும் சேர்த்து குடைக்காரர் போகிறார்கள் என்பதுபோல், புஜிக்கிறஜீவனோடு இருக்கையால் இவனையும் புஜிக்கிறானென்று சொல்லிற்று. மேலும் ஜீவன் ஸாக்ஷாத்தாக புஜிக்கிறான், பரமாத்மா அவனை புஜிப்பிக்கிறான். சமயல் பண்ணுகிறவனையும் பண்ணுவிக்கிறவனையும் சமையல் காரனென்று சொல்லுவதுபோல் சொல்லிற்று. ஸாக்ஷாத்தாக பரமாத்மாபுஜிக்கிறானென்று கடத்திலும் சொல்லவில்லையாகையால் இரண்டிடத்திலுமொரே வித்யை யென்று ஸித்தாந்தம் ௧௮௮.

(ரா-ஹா.) பரமாத்மகுணங்களையெல்லாம் பரமாத்மாவை யநுஸந்திக்கிற எல்லா இடங்களிலு மநுஸந்திக்கவேண்டுமாகில், "ஸர்வகந்த: ஸர்வரஸ:" ஸமஸ்தமான ஸுகந்தங்களையுடையவன், ஸகலமான ரஸங்களையுடையவன் என்று தொடங்கி சொல்லப்பட்ட மற்றுமுள்ள எல்லா குணங்களையு மநுஸந்திக்க வேணுமேயென்னில், கீழ்ச்சொன்ன அஸ்த்தூலத்வம் அநணுத்வம் முதலியவற்றோடு கூடிய ஆநந்தாதி குணங்களைவிட்டு பரமாத்ம ஸ்வரூபத்தைத்யாநிக்க முடியாதாகையால் இவைகளைமாத்திர மநுஸந்திக்கவேணும்; ஸத்யகாமத்வாதி மற்றகுணங்கள் பரமாத்மஸ்வரூபத்துக்கு நிரூபகங்கள் அல்லாமையால் அவற்றையெல்லா மநுஸந்திக்க வேண்டியதில்லை. எந்த வித்யையிற் சொல்லியிருக்கிறதோ, அங்கு மாத்ரமே யநுஸந்திக்கவேணும். ௧௮௮

௩௰ - ௩௭ - ஸூ - ௧௮௯-ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத் | ௩௰ - ௩௮ - ஸூ - ௧௯௦-அந்வயாதிதி சேத்ஸ்யாதவதாரணாத் ||

இது சங்கரபாஷ்யத்துக்கு "ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத்" என்றொருஸூத்ரமும், "அந்வயாதிதி சேத்ஸ்யாதவதாரணாத்" என்றொருஸூத்ரமுமாயிருக்கும். ௧௮௯.

(ஶ-வ்ய) ஸ்வாத்மந: - தன்னுடைய ஆத்மாவுக்கு, ஸர்வபூதஸ்யேவ. ஸர்வபூதாந்தராத்மத்வம்போலே, அந்தரா - அந்தராத்மத்வம் உண்டு. ௩௮.

(ஶ-பா.) ப்ருஹதாரண்யத்தில் "யத்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம" "ய ஆத்மா ஸர்வாந்தர:" என்று உஷஸ்திகேட்டதற்கும் கஹோளர் கேட்டதற்கும், ஏகரூபமாக இரண்டுதரம் உத்தரம்சொல்லியிருக்கிறது. இவ்விரண்டிடத்திலும் ஒரு வித்யையா இரண்டு வித்யையா சொல்லப்பட்டதென்னில்,—இரண்டும் ஒரே வித்யையாமாகில், இரண்டுப்ரஶ்நமும் இரண்டு உத்தரமும்வேண்டியதில்லை. ஒருதரம் சொன்னதே அமையும் ஆகையால், ப்ரஶ்நப்ரதிவசநங்கள் ஏகரூபமாயிருந்தபோதிலும் வெவ்வேறு வித்யைகளென்று பூர்வபக்ஷம்— ஸாக்ஷாத் ப்ரத்யக்ஷ விஷயமான ப்ரஹ்மம் எதுவோ, ஸர்வத்துக்கும் உள்ளேயிருக்கிற ஆத்மா எதுவோ அதையெனக்குச் சொல்லென்ற இரண்டு ப்ரஶ்நம் ஸமாநமாயிருக்கிறது; இது இரண்டு வித்யையாகில் அங்குச்சொன்ன ஸர்வாந்தராத்மா ஒருவனென்றும் இங்குச் சொன்ன ஸர்வாந்தராத்மா மற்றொருவனென்று ஏற்படும்; ஸர்வாந்தராத்மா ஒருவனேயாக வேண்டுமென்று இருவாதிகள்; ஆகையால், "ஏகோ தேவஸ்ஸர்வபூதேஷு கூடஃ" என்ற விடத்தில் ஸர்வபூதங்களுக்கும் ப்ரஹ்மத்தையே அந்தராத்மாவாகச் சொன்னதுபோல் இங்கும் இரண்டிடத்திலும் ப்ரஹ்மமொன்றுக்கே ஸர்வாந்தராத்மத்வம் சொல்லிற்று. இதனால் இவ்விரண்டிடத்திலும் ஒரே வித்யையென்று ஸித்தாந்தம். ௩௮.

(ஶ-வ்ய) அந்யதா - ஒரேவித்யையாகில், அபேதாநுபபத்தி: - இரண்டு தரம்சொன்னது சரியன்று, இதிசேத் - என்றால், உபதேஶாந்தரவத் - ஸத்வித்யையில் பண்ணின உபதேசம்போலே (இரண்டுதரம் சொல்லலாம்).

௩௯.

(ஶ-பா.) ஒரு வித்யையாகில் இரண்டுதரம் சொல்லுவானேனென்றுகேட்டதற்கு ஸமாதாநம் — தாண்டிகளுடைய உபநிஷத்தில் ஆறுவது ப்ரஶ்நத்தில் "தத்த்வமஸி ஶ்வேதகேதோ" என்று ஒன்பது தரம் உபதேசித்திருந்த போதிலும் "பூய ஏவ மா பகவாந்விஜ்ஞாபயது" மறுபடியும் பரமாத்மஸ்வரூபத்தையெனக்குச்சொல்லென்று உபக்ரமத்தில் ப்ரஶ்நமும் "தத்த்வமஸி" இந்த ப்ரஹ்மரூபமே ஜீவாத்மஸ்வரூபமென்று உபஸம்ஹாரத்தில் உத்தரமும் ஒரேவிதமாயிருக்கையாலே அவையெல்லா விடங்களிலும் வித்யையொன்றுதான், வேறு வேறு ஸம்சயங்களைப் போக்கிக்கொள்ளுகைக்காக ஒன்பதுதரம் ப்ரஶ்நம் பண்ணிற்றென்று சொல்லுவதுபோல், இங்கும் ப்ரஶ்நம் ஒரேவிதமாய், உபஸம்ஹாரத்திலும் "அதோऽந்யதார்த்தம்" இந்தப்ரஹ்மஸ்வரூபம்தவிர மற்றது அஸத்யமென்று இரண்டித்திலு முத்தரமொன்றாகையாலும் வித்யையொன்றாகக்கடவது. ௩௯.

(ரா-வ்ய) அந்தரா - அந்தராத்மவிஷயகமான (உஷஸ்தியின்) ப்ரஶ்நம், ஸர்வபூதக்ராமவத்ஸ்வாத்மந:-பஞ்சபூதாத்மகமான சரீராதி ஸம்பந்தத்தையுடைய ஜீவாத்மாவினுடைய ஸம்பந்தியானது, அந்யதா - இல்லாவிடில், பேதாநுபபத்தி: - இரண்டுதரம் சொல்லுகைக்கு ப்ரயோஜநம் ஸம்பவியாதாகையால், இதிசேத் - என்றால், ந-அப்படி ஜீவாத்மவிஷயகப்ரஶ்நமன்று உபதேஶவத் - (ஸத்வித்யையில்) உபதேசம்போலே. (இங்கும் புநருக்திபரிஹாரம்செய்யவேண்டும்.) ௩௯.

(ஶா - ஹா) ப்ருஹதாரண்யத்தில், உஷஸ்தியென்பவர், "யஸ்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம" எல்லாவற்றுக்கு முன்னேயிருக்கிற ஆத்மாவை எனக்கு உபதேசியுமென்று கேட்டதற்கு, யாஜ்ஞவல்க்யர், "ய: ப்ராணேந ப்ராணிதி ஸ த ஆத்மா ஸர்வாந்தர:" என்றுதொடங்கி, உச்வாஸ நிஶ்வாஸாதிகளுக்கு ஹேதுவானவனே உன்னுடைய ஸர்வாந்தராத்மா என்றுசொன்னார் பின்புஉஷஸ்திகேட்டப்ரகாரமே கஹோளர்ப்ரஶ்னம்பண்ண, "யோऽஶநாயாபிபாஸே ஶோகம் மோஹம் ஜராம் ம்ருத்யுமத்யேதி" என்றுதொடங்கி, பசிதாகம் துக்கம் அஜ்ஞானம் கிழத்தனம்-மரணம் முதலிய விகாரங்களற்றவன் ஸர்வாந்தராத்மா அவனை யறியவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இவ்விரண்டிடத்திலும் சொல்லப்பட்ட வித்யை ஒன்றோ வேறோ என்று விசாரிக்கில்,—முதலில் உச்வாஸ நிஶ்வாஸங்களுக்கு ஹேதுவானவன் அந்தராத்மாவென்கையாலே அத்தொழில் பரமாத்மாவுக்கு இல்லையாகையால் அதையுடைய ஜீவனே அங்குசொல்லப்பட்டான். அவனுக்கு மந்தராத்மாவாகப் பரமாத்மாவிருக்க ஜீவன் ஸர்வாந்தராத்மாவானபடி யெங்ஙனே யென்னில், இங்கு ஸர்வாந்தராத்மா வென்பதற்கு சரீரேந்த்ரியமந: ப்ராணாதிகளைக்காட்டிலும் உள்ளேயிருக்கப்பட்டவனென்றே யர்த்தமாகையால், இவ்விசேஷணம் ஜீவனுக்கும் கூடும். பின்பு, பசிதாகம் முதலிய தோஷங்க ளற்றவனே யாத்மாவென்று முன் சொன்ன ரீதியைக்காட்டிலும் வேறுவிதமாகச சொல்லுகையாலே, இங்கு முன் சொன்னவனைக்காட்டிலும் வேறான பரமாத்மாவைச் சொல்லுகிறது. இரண்டிடத்திலு மொருவனேசொல்லப்பட்டானாகில் இருவர்க்குமொரேவிதமான உத்தரமே சொல்லப்பட்டிருக்கும் என்றான் பூர்வபக்ஷி.—இரண்டிடத்திலு முத்தரம் பரமாத்மவிஷயகமாயேயிருக்கும். அதெப்படியெனில்; முதல் உச்வாஸாதிகளுக்குக் காரணபூதனே ஆத்மாவென்று சொன்னபின், "ய: ப்ராணேந ப்ராணிதி" என்று உச்வாஸாதிகளுக்குக் காரணபூதன் பரமாத்மாவென்று சொல்லியிருந்தபோதிலும், "யஸ்ஸாக்ஷாத்" இத்யாதியினால் ஆத்மாவென்பது பரமாத்மாவுக்கே அஸாதாரணச்சொல்லாயினும் இவ்விரண்டும் ஜீவனுக்கு முண்டாகைவால், யாஜ்ஞவல்க்யர்நமக்கு இப்படி பரமாத்மாவை உபதேசித்தாரென்றறியாமல் உஷஸ்தியென்பவர் மறுபடியும்பரமாத்ம ஸ்வரூபத்தைக்கேட்க, "ந த்ருஷ்டேர் த்ரஷ்டாரம் பஶ்யே:" என்றுதொடங்கி தாம் கீழுபதேசித்ததெல்லாம் பரமாத்மவிஷயமென்று இன்னும் அநேகமான அஸாதாரண தர்மங்களைச்சொல்லி முடித்தார், இரண்டாவது பரமாத்மவிஷயமென்பதற்கு ஸம்சயமேயில்லை. இப்படி இரண்டிடத்திலும் ப்ரதிவசநம் பரமாத்மவிஷயகமா யிருக்கையாலும், "யஸ்ஸாக்ஷாதபரோக்ஷாத்" என்று ஆரம்பமும், "அதோऽந்யதார்த்தம்" என்று முடிவும் இரண்டிடத்திலும் ஏகரூபமாகக் காண்கையாலும் இதுபரமாத்மவிஷயமே. ஓரிடத்தில் சொன்னபடியே மற்றோரிடத்தில் சொல்லாதொழிந்தது.—ஸத்வித்யையில் பலதடவைகள்கேட்டதற்கு ஒவ்வொருதடவையிலும் ஒவ்வொருவிதமாக உத்தரம்சொன்னதுபோல், இங்கும், முன்புபரமாத்மாவுக்குச் சிலகுணங்களைச்சொல்லி, மற்ற குணங்களையும் சொல்லுகைக்காக மற்றோரிடத்தில் மற்றொருவிதமாகச் சொல்லியிருக்கிறதாகையால் அது வேறுவித்யையென்பதற்குக் காரணமாகமாட்டாது. ஆகையால் இரண்டும் ஒரே வித்யையென்று ஸித்தாந்தம். ௩௮.

ஸூ - ௩௯. வ்யதிஹாரோ விஶிம்ஷந்தி ஹீதரவத்.

(ஶ - ப்ர) உதராவத் - மற்றகுணங்களைப்போல், வ்யதிஹார: -

ஒன்றுக்கொன்று விசேஷண விசேஷ்யங்களாக த்யாநிக்கவேண்டும். விசிஂஷந்தி - விவரிக்கிறதன்று. ௩௯௦.

(ரா - வ்ரு) உ தரவத் - இதரமான ஸத்வித்யையிற்போலே, (இரண்டிடத்திலும் ஒன்றே உபாஸ்யமாகச் சொல்லப்படுகிறது ஆகையால்), வ்ருதிஹாரஃ - இங்குச்சொன்ன குணங்களையு மங்கும், அங்குச்சொன்ன குணங்களையு மிங்கும்வைத்துக் கொள்ளவேண்டியது. விசிஂஷந்தி - ப்ரதிவசந வாக்யங்கள் இதைவிவரிக்கிறது களன்று ௩௯௦.

(ஶ்ரு - ஹா) ஐதரேயத்தில் " தத்யோஹம் ஸோஸௌ யோஸௌ ஸோஹம்" என்றும், ஜாபாலத்தில், " த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி பகவோ தேவதே" என்றும் நானேப்ரஹ்மம், ப்ரஹ்மமேநான், நானேநீ, நீயேநான் என்று சொல்லப்பட்டது. இங்குசொன்னபடியே ஜீவனை ப்ரஹ்மமாகவும் ப்ரஹ்மத்தை ஜீவனாகவும் இரண்டுவிதமாக அநுஸந்திக்கவேணுமா, அல்லது ஜீவனை ப்ரஹ்மமாக அநுஸந்தித்தால் போருமாவென்னில், ஜீவனையே ப்ரஹ்மமாக த்யாநிக்கவேண்டும். இப்படி த்யாநித்தால்தான் உத்கர்ஷம்தோற்றும். ப்ரஹ்மத்தைஜீவனாக அநுஸந்திப்பது நிகர்ஷம் தோற்றியிருக்கு மாகையாலப்படி த்யாநிக்ககூடாது, ஶ்ருதியில் இரண்டுவிதமாகச்சொன்னது—அத்வைதம் மாநஸ விலேகைக்காக என்றுன் பூர்வபக்ஷி.—இப்படி ஒன்றையே த்யாநிக்கவேண்டுமோ கில் இரண்டுதரம் சொல்லவேண்டுவதில்லை. உத்க்ருஷ்டத்தை நிக்ருஷ்டமாக த்யாநிப்பதைக் காட்டிலும் நிக்ருஷ்டத்தை உத்க்ருஷ்டமாக த்யாநிப்பதே நலமென்பது, எங்கு அர்த்தம் ஸந்தேஹ விஷயமாயிருக்கிறதோ, அங்கே, இங்கு அர்த்தம் ஸ்பஷ்டமாயிருக்கையால் இரண்டும் செய்யவேண்டியதுதான். ப்ரஹ்மத்தினிடத்தில் ஜீவத்வமில்லாம லிருக்கச்செய்தேயும் ஜீவத்வமுள்ளதாக த்யாநிக்கை நிகர்ஷத்தைத் தோற்றுவியாதாகையால் அந்த தோஷமும் கிடையாது. என்று ஸித்தாந்தம். ௩௯௦.

(ரா - ஹா) இரண்டிடத்திலும் பரமாத்மாவே உபாஸ்யனென்று சொன்னபோதிலும் ஒரிடத்தில் ஸர்வாஸாதிகாரணத்வம், மற்றோரிடத்தில் பசிதாகமில்லாமை என்று வெவ்வேறு குணங்களை உபாஸ்யமாகச் சொல்லுகையாலே வெவ்வேறு வித்யையே யாகவேணுமென்னில்,—உஷஸ்தி 'யத்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம" என்று கேட்டார். பின்பு கஹோளர் "யதேவஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம" என்று கேட்கும்போது 'யதஸாக்ஷாத்" என்னாதே "யதேவஸாக்ஷாத்" என்கையாலே, உஷஸ்தி எந்த ப்ரஹ்மத்தைக் கேட்டாரோ, ஸர்வாந்தராத்மாவான அந்த ப்ரஹ்மத்தையே எனக்குத் தெரியச்சொல்லுமென்று அர்த்தமாய், இரண்டு வித்யையு மொன்றென்பதை ஸ்பஷ்டமாக அறிவிக்கிறது. மேலும் முதலில் இதைச் செய்யென்று விதிக்கவில்லை, பின்புள்ள உத்தரத்திலேயே, 'பால்யேந திஷ்டாஸேத்" இப்படி' ப்ரஹ்மத்தை யறிந்தவன் பாலனைப்போலே இருக்கக்கடவன் என்று சொல்லியிருக்கிறது. இப்படி ஒரிடத்திலே சொல்வதும் இரண்டுமொன்றென்பதற்குக்காரணம். இப்படி யிரண்டுமொன்றான பின்பு, அவ்விடத்திற் சொன்ன குணங்களை இவ்விடத்திலும் இவ்விடத்திற் சொன்ன குணங்களை அவ்விடத்திலும் அநுஸந்திக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்படும். இந்த வித்யையில் உபாஸிக்க வேண்டிய குணம் ஸர்வாந்தராத்மத்வம். கீழ்ச்சொன்ன இவ்விரண்டு குணங்களுமுபா

ஸ்யங்களன்று; ஆயினும் பரமாத்மா ஸர்வப்ரகாரத்தாலும் ஜீவனைக்காட்டிலும், விலக்ஷணனென்றறிகைக்காக இக்குணங்களை யநுஸந்திக்க வேணுமென்று சொல்லிற்று. ஸத்யவித்யையில் அடிக்கடி ப்ரஶ்நமும் அதுக்குத்தரமும் சொன்னபோதிலும் முன்சொன்ன குணங்களை விடவேயில்லை. அதுபோலிங்கும் கண்டுகொள்வது என்று ஸித்தாந்தம்.

ஸூ-௩௯. ஸைவ ஹிஸத்யாதய꞉.

(ஸ-வ்) ஸாவைவ - அந்த ஸத்யவித்யையே, (பின்னும் சொல்லப்பட்டது ஆகையால்) ஸ்த்யாதய꞉ - ஸத்யம் முதலிய குணங்கள் (இரண்டிடங்களிலும் அநுஸந்திக்கத்தக்கவைகள்.) ௩௯.

(பர-வ்) ஸத்யாதய꞉ - (முதல்சொன்ன) ஸத்யம்முதலிய குணங்கள் (எல்லாவிடங்களிலும் சொல்லப்படுகையாலே), ஸாவைவ - அந்தபரதேவதையே (பின்புள்ள பர்யாயங்களிலு மநுவர்த்திக்கிறது (என்று நிஶ்சயிக்கப்படுகிறது. ௩௯.

(ஸ-ஸா.) வாஜஸநேயத்தில், "ஸயோஹைதந்மஹத்யக்ஷம் ப்ரதமஜம் வேத ஸத்யம் ப்ரஹ்ம" யாவனொருவன், ஸர்வவ்யாபியாய் பூஜ்யமாய் முதலிலேயுண்டான்தான இந்த ஸத்யமென்கிற சதுர்முக ப்ரஹ்மாவை யறிகிறானோவென்று ஸத்யவித்யை சொல்லப்பட்டது. பின்பும், "தத்யத்தத்ஸத்யமஸௌஸ ஆதித்ய ய ஏஷ ஏதஸ்மிந்மண்டலே புருஷோ யஶ்சாயம் தக்ஷிணேக்ஷந் புருஷ꞉" அந்த முன் சொலப்பட்ட ஸத்யமே முன்கூறிய பூஜ்யத்வம்முதலிய குணங்களோடுகூடியதாய் ஸூர்யமண்டல மத்யத்திலும் வலதுகண்ணிலுள்ள புருஷனுமாகிறது என்று ஸத்யவித்யை சொல்லப்பட்டது. இவ்விரண்டு மொன்றா வேறாவென்னில்:— முற்கூறிய ஸத்யவித்யைக்கு "ஜயதீமாம்லோகாந்" இந்த லோகங்களை யெல்லாம் ஜயிக்கிறானென்றும், இரண்டாவதுக்கு, "ஹந்தி பாப்மாநம்" பாபங்களை நசிப்பிக்கிறானென்றும் வெவ்வேறாக பலம் சொல்லப்பட்டது. ஆகையால் இரண்டும் வெவ்வேறுதான். இரண்டாந்தடவையில் "அந்த முற்கூறிய ஸத்யமே" என்று முன் சொன்னதையே சொன்னதுக்குக் காரணம்-குணங்கள் வேறாயினும் ப்ரஹ்மமொன்றென்பதாயிருக்கும் என்று பூர்வபக்ஷம்,— இந்த வித்யையை ஸ்துதிக்கைக்காக இரண்டிடத்தில் பலம் சொல்லப்பட்டது. அது வித்யாபேதத்துக்குக் காரணமாகாது. எந்தவிடத்தில் வித்யாபேதம் ஸ்பஷ்டமாயிருக்கிறதோ, அங்குமாத்ரமே முற்கூறிய உபாஸ்யவஸ்துவைத் திரும்பிச்சொல்லுகை வித்யாபேதத்துக்குக் காரணமாகும். இங்கு இது இரண்டு வித்யையென்கிற ஸம்சயமேயில்லை, இவ்விடத்தி லப்படி சொல்லுகை வித்யாபேதத்தைத் தோற்றுவியாதாகையால் இரண்டிடத்திற் சொன்ன ஸத்யவித்யையு மொன்றேயென்று ஸித்தாந்தம். ௩௯.

(பர-ஸா) "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்ற ஸத்வித்யையிலும் வெவ்வேறு ப்ரஶ்நமும் வெவ்வேறு ப்ரதிவசநமு மிருக்கையால், அங்குத்தான் ஓரே வித்யையென்று எப்படி யொப்புக்கொள்ளலாமென்னில்,—"ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம்ஸ ஆத்மா" என்று முதல் ப்ரதிவசநத்திற்சொன்ன ஸத்யாதிகுணங்களையே எல்லாப்ரதிவசநங்களிலும் சொல்லுகையால், "ஸேயம்தேவதைக்ஷத" என்று ஆரம்பித்த பரதேவதையே "யதாஸோம்ய யயோக்தா".

நிவஸிஷ்டி" இத்யாதியாகச் சொல்லப்பட்ட மேல் ப்ரதிவசனங்களிலும் ப்ரதிபா திக்கப்பட்டதென்று நிஶ்சயிக்கப்படுகிறது என்று ஸமாதாநம். ௧௧௧.

அ-௩-பா-௩-ஸூ-௧௧௨ காமாதீதர த்ர தத்ர சாயதநாதிப்ய:.

(ஸ-ரா-வ்ரு) ஆயதநாதிப்ய: - ஸ்தாநம் முதலான குணங்கள், ஸமாநமாகக்காண்கையால், காமாதி - ஸத்யகாமத்வம் முதலிய குணங்கள், இதரத்ர - வாஜிஸநேயத்திலும், தத்ர ச - சாந்தோக்யத்திலும் (அநுஸந் திக்கவேண்டியது.) ௧௧௨.

(ஸ-ரா-ஹா.) சாந்தோக்யத்தில், "அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே" என்று தொடங்கி, "ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோபிபாஸ ஸத்யகாம ஸத்யஸங்கல்ப:" இத்யாதி தகரவித்யை சொல்லப்பட்டது. வாஜிஸநேயத்திலும், "ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா யோயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ... ஸர்வஸ்ய வஶீ" இத்யாதி தகரவித்யை சொல்லப்பட்டது. இவ் விரண்டும் ஒன்று வேறுவென்னில்,—சாந்தோக்யத்தில் "தஹரோஸ்மிந்நந்தர ஆகாஶஸ்தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம்" ஹ்ருதய கமலத்தினுள்ளே யிருக்கிற ஆகாசத்தை உபாஸிக்கவேண்டுமென்றும், வாஜிஸநேயத்தில், ஹ்ருதயாகாசத்தில் படுத்துக்கொண்டிருக்கிறவனை உபாஸிக்கவேணுமென்றும் உபாஸ்யவஸ்து வெவ் வேறாகச் சொல்லப்படுகையாலே இரண்டு வித்யையும் வெவ்வேறென்று பூர்வபக்ஷி. இரண்டிடத்திலும் உபாஸ்யவஸ்துவுக்கு ஹ்ருதயம் ஸ்தாநமாகவும், அதுக்கு லோக மர்யாதா வ்யவஸ்த்தாபகத்வம் லோகதாரணம் முதலியவற்றை குணங்களாகவும் இப்படி அநேக குணங்கள் ஏகரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறதாகையால் இர ண்டுமொருவித்யையே யாகவேணும், இரண்டிடத்திலும் ப்ரஹ்மப்ராப்தியே பல மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாந்தோக்யத்தில் ஆகாசத்தை உபாஸிக்கச்சொ ன்னபோதிலும், அங்கு ஆகாசமென்று சொல்லப்பட்டவன் பரமாத்மா வென்று தஹராதி கரணத்தில் சொன்னோம். வாஜிஸநேயத்தில் ஆகாசத்தில் படுத்திருக்கிற வனாகச சொல்லப்பட்டவன் பரமாத்மா, அவனுக்கு ஆதாரமாகிய ஆகாசம், ஹ்ரு தயகமலமத்யவர்த்தியான பூதாகாசமென்று கண்டுகொள்வது. இப்படி உபாஸ்ய வஸ்துவும் பலமும் ஒன்றாகையால் ஒரேவித்யையென்று நிஶ்சயித்தபின்பு, சாந் தோக்யத்திற் சொன்ன ஸத்யகாமத்வாதி குணங்களை இரண்டிடத்திலு மநுஸந்தி க்கவேண்டுமென்று ஸித்தாந்தம்—சங்கரபாஷ்யத்தில் விசேஷம்—கீழ்ச்சொன்ன விஷயங்களெல்லாமொன்றே, ஆயினும் சாந்தோக்யத்தில் ஸகுணப்ரஹ்மோபாஸந மும் வாஜஸநேயத்தில் நிர்குணப்ரஹ்மோபாஸநமும் சொல்லப்பட்டது. நிர்குண ப்ரஹ்மத்துக்கு, "ஸர்வஸ்ய வஶீ" என்று வசித்வாதி குணஙகள் ஸ்துதிசெய்கைக் காகச சொல்லிற்று. ப்ரஹ்மம் நிர்க்குணமாயினும் அதினுடைய விபூதியைச் சொல் லுகைக்காக சாந்தோக்யத்திற் சொல்லிய குணங்களையு மநுஸந்திக்கச் சொல் லிற்றென்று. ௧௧௨.

ஸூ-௧௧௩. ஆதராதலோப:.

(ஸ-வ்ரு) ஆதராத் - ஆதரமாகச் சொல்லுகையாலே, அலோப: (அக்நிஹோத்ரத்துக்கு) லோபமில்லை. ௧௧௩.

(ரா-வ்ரு) ஆதராத் - ஆதரமாகச் சொல்லுகையாலே, அலோப:- (குணங்களுக்கு) விலோபமில்லை. ௧௧௪.

(ஶ்ரு-பா.) சாந்தோக்யத்தில் வைஶ்வாநரவித்யையில் "தத்யத்பக்தம் ப்ரதமமாகச்சேத் தத்தோமீயம் ஸயாம் ப்ரதமாமாஹுதிம் ஜுஹுயாத் தாம் ஜுஹுயாத்ப்ராணாய ஸ்வாஹேதி" புருஷனுக்கு எந்த அந்நம் முதலிலகப்படுகிறதோ, அத்தை ஹோமத்ரவ்யமாக்கி. அதையே முதலில் "ப்ராணாய ஸ்வாஹா" என்றமந்த்ரத்தைச்சொல்லி ஹோமம் செய்யவேணும் இத்யாதியாகச்சொல்லிற்று. மேலே இதை"ய ஏவம்வித்வாநக்நிஹோத்ரம் ஜுஹோதி" என்றுஇதையேஅக்நிஹோத்ரமாகச்சொல்லிற்று. போஜநம்செய்கிற காலத்தில்இந்தஅக்நிஹோத்ரத்தை அவஶ்யம்செய்தபோதிலும், போஜநமில்லாததிநங்களில்வேறு எந்தத்ரவ்யத்தினுலாவது செய்ய வேணுமா விட்டுவிடலாமா வென்று விசாரிக்கில்,—மேலே "பூர்வோऽதிதிப்யோऽச்நீயாத்" அதிதிகளுக்கு முன்னே இந்த யஜமானன் சாப்பிடவேணுமென்று இந்த அக்நிஹோத்ரத்தை பகு ஆதரமாகச் சொல்லுகையாலே, அந்நம் நேரிடாத காலத்தில் வேறு ஜலம் நெய் முதலிய எந்த த்ரவ்யத்தினுலாவது இதைச்செய்யவேணுமென்றுன் பூர்வபக்ஷி. ௩௧௩.

(ஶ்ரா-பா) ஶாண்டில்யவித்யையில் ப்ரஹ்மத்துக்குச் சொல்லப்பட்ட குணங்கள் ஸத்யமென்பது சரியன்று, அங்கே கீழ்வாக்யங்களில்,"நேஹ நாநாஸ்தி கிஞ்சந| ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி" ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுவஸ்து கிடையாது, அப்படி யுண்டென்றறிந்தவன் மோக்ஷத்தையடையான், ஸம்ஸாரியாயே யிருப்பனென்கையாலும், மேலே "நேதி நேதி" என்று - ப்ரஹ்மவ்யதிரிக்தவஸ்து வொன்றுமில்லை யென்கையாலும், ஸத்யகாமத்வாதி குணங்களை உபாஸநம் செய்கிறவனுக்கு மோக்ஷமெப்படிவரும், அதை எப்படி தானுபாஸநம் செய்யலாம், ஆகையால் அக்குணங்கள் வாஸ்தவங்களன்று, கல்பிதங்கள் என்று சொல்லில் —ஸத்யகாமத்வாதி குணங்கள் எந்த ப்ரமாணத்திற்கும் விஷயமன்றுகையால் ஜீவன் இந்த ஶ்ருதிசொல்வதற்குமுன் அக்குணங்களையறியான். முன்பே ஸம்ஸாரியாயிருக்கிற இவனை, பின்னும் அக்குணங்களைக் கற்பித்து ஸம்ஸாரத்தில், ஆப்ததமமான வேதம் மூழ்த்தப்பாராது. அக்குணங்களைப் பலவாருகப் பலவிடங்களிலும் பகு ஆதரத்துடன் வேதம் சொல்லுகையாலே, மேலும் கீழுமுள்ள, "குணமில்லை" யென்கிற வாக்யங்களுக்கு இப்படி ஶ்ருதிப்ரஸித்தமான குணங்கள்தவிர மற்றகுணங்களில்லை யென்றும், வேறொரு வஸ்துவில்லை யென்பதற்கு, ப்ரஹ்மாத்மக மாகாத வேறொருவஸ்து வில்லையென்றும் அர்த்தம் சொல்லவேண்டும் ஆகையால், ப்ரஹ்மத்துக்கு ஸத்யகாமத்வாதி குணங்கள் ஸ்வாபாவிகங்களே, அவற்றை உபாஸநம் செய்தவனுக்கு மோக்ஷமுண்டு, ஆகையால் அக்குணங்களை வித்யையி லவஶ்யமநுஸந்திக்கவேண்டுமென்று ஸித்தாந்தம். ௩௧௩

ஸூ-௩௯. உபஸ்திதேऽதஸ்தத்வசநாத்.

(ஶ்ரு-வ) தத்வசநாத்—அந்நத்தைச்சொல்லுகையாலே, உபஸ்திதே-(போஜநம்) ப்ராப்தமானவளவில், அத: - இந்த அந்நத்தினுலேயே ப்ராணாக்நிஹோத்ரம் செய்யவேண்டும்). ௩௧௪.

(ஶ்ரா-வ) உபஸ்திதே - பரமாத்மாவையடைந்த வளவில், அத: - இந்த பரமாத்ம ப்ராப்தியினுலே, தத்வசநாத் - பித்ருலோகாதி ப்ராப்தியைச் சொல்லுகையாலே, (அவை ஸாம்ஸாரிகபலமன்று). ௩௧௪.

(ஶ்ரு-பா.) கீழ்ச்சொன்ன பூர்வபக்ஷத்தை நிரஸநம் செய்கிருர்—முதலில் எந்த அந்நம் கிடைக்கிறதோ, அதினுல் ப்ராணுக்நிஹோத்ரம் செய்யச்சொல்லிற்று.

இந்த வசநம், போஜநம் செய்தால் அந்த அங்கத்தினால் முதலில் ப்ராணாஹுதி செய்யவேண்டுமென்ற அர்த்தத்தையே கொடுக்கும். போஜநம் செய்யாவிடிலும் எதினாலாவது இதை நிறைவேற்ற வேணுமென்கிற அர்த்தத்தைக்கொடாது. ஆதரபூர்வகமாகச்சொன்னது - போஜநம் செய்யவேண்டுமானால் இதை முதலில் செய்யவேண்டு மென்கைக்காக. ஆகையால் போஜநமில்லாத காலத்தில் இந்தப்ராணாக்நிஹோத்ரம் செய்யவேண்டுவதில்லை என்று ஸித்தாந்தம். ௧௪௪.

(ஶ்ரீ-பா.) "[illegible]" இத்யாதியினால், இந்த ஸத்யகாமாதிகுணங்களையுடைய பரமாத்மாவை உபாஸநம்செய்தவனுக்கு ஸர்வலோகங்களிலும் ஸஞ்சாரமும், இச்சையுண்டாகில் தனக்கிஷ்டமான பந்துக்களோடுகூடியிருக்கையும் பலமாகச் சொல்லப்பட்டது. இவையெல்லாம் ஸம்ஸாரிகளநுபவிக்க வேண்டிய பலங்களாகையால், ஸகுணப்ரஹ்மத்தை யுபாஸிக்கிறவனுக்கு மோக்ஷமில்லையென்று ஸித்தித்ததென்கிற சங்கைக்கு ஸமாதாநம்—"[illegible]" இத்யாதியினால், இந்த உபாஸநத்தினால் பரமாத்மாவை யடைந்தவனுக்கு, அந்த பரமாத்மப்ராப்தியாகிற பலத்தினால் ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவத்தை யடைந்து ஸ்த்ரீகள் வாஹநங்கள்முதலிய தனக்கிஷ்டமானவற்றோடு விளையாடி ஆமோதிக்கிறானென்றும் இஷ்டமான இடங்களுக்குப் போகிறானென்றும் இஷ்டமான பந்துக்களைப் பார்க்கிறானென்றும் சொல்லுகையாலே இவையெல்லாம் ஸம்ஸாரியநுபவிக்க வேண்டும் பலமன்று, முக்தனநுபவிக்க வேண்டியவைகளாயேயிருக்கும். ஆகையால் அக்குணங்களையுடைய பரமாத்மாவை உபாஸநம் செய்யவேண்டு மென்கிறார். ௧௪௪.

௩-௩-௪௦-௧௪௫. [illegible]

(ஶ-பா-வ்) [illegible] - அந்த நியமம் காணாமையாலே, [illegible] - உத்கீதோபாஸநம் எல்லாவிடங்களிலும் செய்யவேணுமென்கிற நியமமில்லை. [illegible] - (கர்மபலம்) விலம்பமின்றியுண்டாகையாகிற, [illegible] - பலமானது, [illegible] - (உத்கீதோபாஸநத்துக்கு) தனியே காண்கிறது. ௧௪௫.

(ஶ-பா-ஸா.) "[illegible]" என்று கர்மாங்கமான உத்கீதோபாஸநம் சொல்லியிருக்கிறது. இந்த உத்கீதோபாஸநம் எல்லாவிடங்களிலும் செய்யவேண்டுமா, சிலவிடங்களில் செய்து சிலவிடங்களில் தவிரலாமாவென்னில், "[illegible]" என்று ஓரிடத்தில் சொன்னபோதிலும் அதையெல்லாவிடங்களிலும் வைத்துக்கொள்வதுபோல், இந்த உத்கீதோபாஸநத்தையும் எல்லாவிடங்களிலும் செய்யவேண்டுமென்று பூர்வபக்ஷம்—"[illegible]" இந்த உத்கீதோபாஸநத்தையாரறிந்தவனோ, யாரறியாதவனோ, அவர்களிருவரும் இக்கர்மத்தைப்பண்ணக்கடவர்களென்று இவ்வுபாஸநத்தையறியாதவனையும்கூட இக்கர்மத்தைச்செய்யச்சொல்லுகையாலேஎல்லாவிடங்களிலும் இவ்வுபாஸநம் செய்யவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. இதுக்கு வேறே பலம் சொல்லாவிடில் இவ்வுபாஸநம் கர்மத்துக்கு நியமேந

அங்கமாகலாம் "தடிவவீாூவதூஈஃஹவதி" உத்கீதோபாஸநத்தைக் கர்மத்து க்கு ஸஹகாரியாகச்செய்தால், அதினால், அக்கர்மத்தினாலுண்டாகவேண்டிய பலம் வேறு சிலபூாபவிசேஷங்களினால் தடைப்பட்டு நிற்குமாகில், இவ்வுபாஸநம் அத்த டையைப்போக்கி அக்கர்மத்தின்பலத்தை சீக்கிரத்திலுண்டுபண்ணுமென்று ப்ரதி பந்தக நிவ்ருத்தியை இவ்வுபாஸநத்துக்குப் பலமாகச்சொல்லியிருக்கையாலே இது நியமேந கர்மாங்கமாய் எல்லாவிடங்களிலும் த்யாநிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந் தத்தையுடையதாகாது என்று ஸித்தாந்தம். ௩௯.

ஊயி-௪௦௦-ஸூ,௩-௩-௪௦. வு௯ா நவடிவ தடி-ஷுூ,

(ஶ்ரு-பா-வு.) வு௯ா நவஃவஷவ - ஹவிர்தாநம்போலேயே (தனித்த னியேசெய்யவேண்டும்,) தக் - அப்படி வெவ்வேறாகச் செய்யவேணுமென் பது, உக்ஷு - (ஸங்கர்ஷாத்யாயத்தில்) சொல்லப்பட்டது. ௩௩௪.

(ஶ்ரு-ஹா.) வாஜஸநேயத்தில், "வதிஷ்௯ாதெ௯ா ஹ௦" என்று தொடங்கி அத்யாத்மத்தில் வாக்கு முதலானவற்றுக்கெல்லாம் முக்யப்ராணன் ஶ்ரேஷ்ட மென்றும் அதிதைவதத்தில் அக்நி முதலானவற்றுக்கெல்லாம் வாயுஶ்ரேஷ்டமெ ன்றும் சொல்லப்பட்டது. சாந்தோக்யத்திலும் இம்மாதிரியாயே சொல்லப்பட் டது. இவ்விடத்தில், ப்ராணன் வாயு என்று இரண்டு தத்வங்களை த்யாநிக்கவேணு மென்கிறதா, அல்லது இரண்டையும் ஒன்றாக த்யாநிக்க வேணுமென்கிறதாவென் னில்,—ப்ராணனென்பது வாயுதத்வத்தைக்காட்டிலும் வேறன்று; "யஃவ௯ாண ஷுவாயுஃ" என்று ப்ராணனும் வாயுவும் ஒரேதத்வமென்று ஶ்ருதியிலும் சொல் லப்பட்டிருக்கிறது, ப்ராணன் அத்யாத்மமாய், வாயு அதிதைவமானபோதிலும், "ஊமிவ௯ாஹூஃஊாவெஃவு௯ாவிஶக" இத்யாதியினால் அதிதைவமான அக்நி அத்யாத்மமான வாக்காக ஆய் முகத்தில் ப்ரவேசித்ததென்று இரண்டையும் ஒன் றாகச் சொல்லியிருக்கிறது. இப்படி தத்வம் ஒன்றானபின்பு இரண்டையும் ஒன்றா கச்சேர்த்து ஒருவிதமான த்யாநமே சொல்லப்பட்டதென்று பூர்வபக்ஷம்—தத்வ மொன்றானபோதிலும் ப்ராணனென்றும் வாயுவென்றும் இங்கு இரண்டாகச்சொ ன்னது - இரண்டுவிதமாக த்யாநம் செய்யவேணுமென்கைக்காக; அப்படியில்லா விடில், இரண்டையும் சொல்லுகைக்கு வேறு ப்ரயோஜநம் காணவில்லை. கர்மகா ண்டத்தில் இந்த்ரனொருவனாயிருந்தபோதிலும், "ஊ௯ாயராஜெ—ஊ௯ாயா யிராஜாய - ஊ௯ாயஷுராஜெ" என்று வெவ்வேறு ரூபபேதங்களை முன்னிட் டுச் சொல்லியிருக்கையாலே ஒரு இந்த்ரனை உத்தேசித்தே அம்மந்த்ரப்ரகாரம் வெ வ்வேறாஹுதி பண்ணுவதுபோல், இங்கும் தத்வமொன்றாயிருந்தபோதிலும் ப்ரா ணனென்றும் வாயுவென்றும் வெவ்வேறு ரூபங்களை முன்னிட்டுச் சொல்லியிருக் கையாலே அந்தந்த ரூபங்களை முன்னிட்டு இரண்டுவிதமாகவே த்யாநம் செய்ய வேண்டும். இவ்வர்த்தத்தையே "நாநாவாடிவ தாவு௯யஜாநாக" என்று ஸங்கர்ஷாத்யாயத்திலும் சொல்லியிருக்கிறது என்று ஸித்தாந்தம். ௪௩௪.

(ரா-ஹா.) தஹரவித்யையில் "தடி௯ஊஹகூதாநிநீவிஷ௯ாவு௯ஜஷெ௯ தாஶுஷ௯ாநுகாரோது" என்று தொடங்கி, தஹராகாசஸ்வரூபியாகிய பரமாத் மாவை உபாஸநம் செய்யச்சொல்லி, பின்பு, அவனுடைய அபஹதபாப்மத்வாதி குணங்களையும் தனியே த்யாநிக்கச்சொல்லிற்று. இங்கு குணங்களை த்யாநிக்கும் போது ஒவ்வொரு குணத்தையும் த்யாநிக்கும்போதும் பரமாத்மாவை ஆஶ்ரயமா கத் தனித்தனியே த்யாநிக்கவேணுமா, அல்லது, எல்லா குணங்களுக்கு மாஶ்ரய

மாக ஒரேதரம் த்யாநிக்கவேணுமா வென்னில்,—குணங்கள் வேறாயினும் அவற்றுக்கு ஆஶ்ரயமான பரமாத்மா ஒருவனே யாகையால் குணந்தோறும் தனித்தனியே த்யாநிக்க வேண்டாம். எல்லாவற்றுக்கு மாஶ்ரயமாக ஒருதரம் த்யாநித்தால் போருமென்றான் பூர்வபக்ஷி—முன்பு ஸ்வரூபத்தை உபாஸநம் செய்யச்சொல்லிப் பின்பு குணங்களை உபாஸநம் செய்யச்சொல்லுகையாலே கேவலஸ்வரூபத்தைக்காட்டிலும் அந்தந்த குணங்களையுடைய ஆகாரம் வெவ்வேறாகையால் அந்தந்த குணங்களுக்குத் தனித்தனியே யாஶ்ரயமாகவே பரமாத்மாவை அநுஸந்திக்கவேணும். இதற்கு த்ருஷ்டாந்தம் — கர்மகாண்டத்தில் இந்த்ரனொருவனையேபோதிலும் "இந்த்ராய ராஜ்ஞே - இந்த்ராயாதிராஜாய - இந்த்ராய ஸ்வராஜ்ஞே" என்று நாநா விசேஷணங்களை முன்னிட்டுச் சொல்லுகையாலே ஒருவனுக்கே எப்படி நாநா ஆஹுதிகொடுக்கப்படுகிறதோ, அதுபோலிங்கும் காண்க. இப்படி வெவ்வேறாக த்யாநிக்கவேணுமென்பதை ஸங்கர்ஷாத்யாயத்தில் "நாநா வா தேவதா ப்ருதக்ஜ்ஞாநாத்" என்று ஜைமிநியும் சொல்லியிருக்கிறார் என்று ஸித்தாந்தம். ௪௩.

௩-௩-ஸூ-௪௪. லிங்கபூயஸ்த்வாத் தத்தி பலீயஸ்ததபி.

(ஸூ-வ்ரு) லிங்கபூயஸ்த்வாத் - (இவ்வக்நிகள் வித்யாத்மகங்களென்பதற்கு) - அநேக ஹேதுக்களுண்டாகையாலே, (இவ்வக்நிகள் வித்யாமயங்கள்) தத் - அந்தலிங்கம், பலீய: - ப்ரகரணத்தைக் காட்டிலும் பலிமானது, தததபி - அதுவும் மீமாம்ஸையில் சொல்லப்பட்டது

(ஸா-வ்ரு) லிங்கபூயஸ்த்வாத் - (இவ்வாக்யங்கள் ஸர்வபரவித்யோபாஸ்யநிர்த்தாரண பரங்களென்பதற்கு) அநேக அடையாளங்களுண்டாகையாலே, (இவை ஸர்வவித்யோபாஸ்ய நிர்ணயபரங்கள, தத்-அந்தலிங்கம்,) பலீய: - ப்ரகரணத்தைக் காட்டிலும் பலமானது, தததபி - அதுவும், (பூர்வமீமாம்ஸையில சொல்லப்பட்டது.) ௪௪.

(ஸு-ஹா.) வாஜஸநேயகத்தில் அக்நிரஹஸ்யத்தில. "நைவ வா இதமக்ரே ஸதாஸீத்" என்று தொடங்கி. ஸ்ருஷ்டிக்குமுன்பு இவையொன்றுமில்லை. பின்பு ஆதியில் மநஸ்ஸு உண்டாயிற்று. அது தன்னுடைய ஸம்பத்திகளான முப்பத்தாறாயிர மக்நிகளைப்பார்த்து, அவற்றுக்கு மநஶ்சித்துக்களென்று பெயர்; அதாவது - மநஸ்ஸினால் கல்பிக்கப்பட்டது என்று சொல்லிற்று. இங்கு. இவ்வக்நிகள் யஜ்ஞாதிக்ரியைகளுக்கு அங்கமாகச்சொல்லிற்று. இங்கு, இவ்வக்நிகள் யஜ்ஞாதிக்ரியைகளுக்கு அங்கமாகச்சொல்லப்பட்டதா, க்ரியைகளுக்கு அங்கமாகாமல் உபாஸநார்த்தமாகச் சொல்லப்பட்டதாவென்னில், இவ்வாக்யங்கள் க்ரியையைச் சொல்லுகிற ப்ரகரணத்திலிருக்கையாலே க்ரியாங்கங்களாகச் சொல்லப்பட்டதென்று பூர்வபக்ஷம்—"ஸர்வதா ஸர்வேஷு பூதேஷு ஸர்வதா" இத்யாதியினால் இவ்வக்நிகள் உறங்கும்போதும் விழித்திருக்கும்போதும் எல்லாக்காலங்களிலும உள்ளதாகக் காண்கையாலே யஜ்ஞத்திலுள்ள அக்நியாகில் உறக்கத்திலிராதாகையால், இவை க்ரியாங்கமாகச் சொல்லப்பட்டவையன்று. உபாஸநார்த்தமாகச் சொல்லப்பட்டவை. மநுஷ்யனுக்கு நூறுவயஸ்ஸான ஆயுஸ்ஸுக்கு நாள்முப்பத்தாறாயிரமாய், ஒவ்வொருதினத்திலுண்டான மநோவ்யாபாரத்தை ஒவ்வொரு அக்நியாகச்சொல்லப்பட்டிருக்கிறது. க்ரியாப்ரகரணத்தி லிருந்தபோதிலும் ப்ரகரணத்தைக்காட்டிலும் வாக்யம் பலமாகையால் இப்படியே அர்த்தம் சொல்லவேண்டும். கர்மகாண்ட விசாரத்தில் வாக்யம் பலமென்பது சொல்லியிருக்கிறது என்று ஸித்தாந்தம். ௪௪.

'(ஙா-ஹா.) தைத்திரீயத்தில், "தஹ்ராவிதி ஹ்ருமஹ நம்விஶோகஃ" என்றுதகரவித்யையைச்சொல்லி,பின்பு,"ஸஹஸ்ரஶீர்ஷம்தேவம்" என்றுதொடங்கி 'ஸோக்ஷர பரமஸ்வராட்" என்னுமளவும் வாக்யங்களிருக்கிறது. இவ்வாக்யங்களினால் நாராயணனே உபாஸ்யதேவதையென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது இப்படி நாராயணனை கீழ்ச்சொன்ன தகரவித்யையில்மாத்திரம் உபாஸ்யனென்று நிர்ணயித்ததா, அல்லது, ஸகல வித்யைகளிலும் அவனே உபாஸ்யனென்று நிர்ணயித்ததாவென்னில், தகரவித்யையைச்சொல்லி உடனே இதைச்சொல்லுகையாலே தகரவித்யையில்மாத்திரம்தான் நாராயணனை உபாஸ்யனாக இங்குச்சொல்லிற்று. என்று பூர்வபக்ஷம்—"ஸர்வே ஹாஸ்மை தேவா பலிமாவஹந்தி" என்று தொடங்கி, எந்தெந்தவித்யைகளில் எந்தெந்த நாமங்களைக்கொண்டு உபாஸ்யவஸ்துவைச் சொல்லிற்றோ, அந்தந்த நாமங்களை இங்கு அநுவதித்து, இப்படி யெல்லாம் சொல்லப்பட்டவன் நாராயணன்தான் என்று சொல்லுகையாலே ஸகலவித்யைகளிலும் நாராயணனே ஆநந்தாதிகுணங்களை யுடையனும் அஸ்தூலத்வாதிகளையுடையனும் உபாஸ்யனென்பதையே நிர்ணயித்துச் சொல்லிற்றென்று அங்கீகரிக்க வேண்டும். "ஶாஶ்வதம்ஶிவமச்யுதம்," என்று இரண்டாம்வேற்றுமையையிட்டுச் சொல்லியிருக்கையால், அதினர்த்தமான "அவனை" என்பது வேறோரிடத்திலந்வயிக்கமுடியாதாகையால் கீழ்ச்சொன்ன தகரவித்யையிலேயே, அவனை தகராகாசமாக உபாஸிக்கவேணுமென்று அந்வயிக்கவேண்டு மாகையால், இது தகரவித்யோபாஸ்யபரமே யாகவேணுமென்னில், மேல் "தத்வம் நாராயணஃபரஃ" என்று தொடங்கி முதல் வேற்றுமையாகச் சொல்லுகையாலே, அதுக்கநுகுணமாக இரண்டாம் வேற்றுமைக்கெல்லாம் முதல்வேற்றுமையி னர்த்தமே சொல்லவேண்டும். மேலும் "தஸ்மிந்யதந்தஸ்தது பாஸிதவ்யம்" அதற்குள் எதிருக்கிறதோ அதை உபாஸிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கையாலே, அங்கு இரண்டாம்வேற்றுமையந்வயியாதாகையால் முதல் வேற்றுமையினர்த்தமே எல்வாரும் சொல்லவேணும். "ஶ்ருதிலிங்கவாக்ய" என்று தடங்கி பூர்வமீமாம்ஸையில் வாக்யத்தைக் காட்டிலும் லிங்கம் ப்ரபலமென்று சொல்லியிருக்கையால், இங்கு வாக்யத்தினால், இவ்வாக்யம் தகரவித்யாசேஷமென்று தோற்றினபோதிலும், கீழ்ச்சொன்ன அடையாளங்களினால் ஸர்வவித்யாஶேஷமென்றே நிர்ணயிக்கவேண்டுமென்று ஸித்தாந்தம்.

௩௰-க௦௨. ஸூ·௩-௩-௪௪, பூர்வவிகல்பஃ ப்ரகரணாத்

ஸ்யாத்க்ரியா மாநஸவத்.

(ஶ-பா-ப்ர.) ப்ரகரணாத் - (அக்நி) ப்ரகரணத்தினாலே, பூர்வ விகல்பஃ - முன்சொன்ன இஷ்டகசிதாக்நியோடு விகல்பிக்கப்பட்டதாய், க்ரியா - (மநஸ்சிதாதியான அக்நியும்) க்ரியாங்கமாக, ஸ்யாத் - ஆகக்கடவது, (இதற்கு த்ருஷ்டாந்தம்) மாநஸவத் - மநஸ்ஸினால் கல்பிக்கப்பட்ட பாத்ராதிகள் (த்வாதசாஹமென்கிற யாகத்தில் அங்கமாகிறாற்) போலே.

(ஶ-ஹா.) இங்கு பூர்வபக்ஷி சொல்லுகிறான்—இந்த மநஸ்சிதாதியான அக்நிகள் க்ரியாப்ரகரணத்தில் சொல்லியிருக்கையால் இவை க்ரியாங்கமேயாகவேண்டும், வித்யாங்கமாகமாட்டாது. ப்ரகரணத்தைக்காட்டிலும் வாக்யம் ப்ரபலமான போதிலும், அந்த வாக்யம் விதிவாக்யத்திலிருந்தால் ப்ரகரணத்தைக்காட்டிலும் ப்ரபலமாகுமொழிய அர்த்தவாதத்திலிருந்தால் ப்ரகரணத்தைக்காட்டிலும் ப்ரபல

மாகமாட்டாது. (விதிவாக்யமாவது-இவற்றைச்செய்யவேண்டும் என்கிற ஏவலோடு கூடின வாக்யம். அர்த்தவாதவாக்யமாவது - ஏவலின்றிக்கே கீழ்ச்சொன்ன விஷயத்தைப்பற்றி ஸ்துதிசெய்கிறவாக்யம்.) கீழ்க்ரியையில் இஷ்டகசிதாக்நியை அங்கமாகச் சொல்லியிருக்க மநஸ்சிதாக்நிக்கு இடமில்லையே யென்னில்; அந்தக்ரியைக்கு இஷ்டகசிதாக்நியாவது மநஸ்சிதாக்நியாவது அங்கமாகக்கடவது. மநஸ்ஸினால் அக்நிரூபமாகக்கல்பிக்கப்பட்ட மாநஸிகக்ரியை யாகத்தில் அங்கமாகமாட்டாதே யென்னில்; த்வாதசாஹமென்கிற யஜ்ஞத்தில் மநஸ்ஸினால் கல்பிக்கப்பட்ட பாத்ராதிகளை அங்கமாகக்கொள்வதுபோல் இங்கும் மாநஸிகக்ரியை யாகத்துக்கு அங்கமாகலாம் ஆகையால் இவை வித்யாங்கமன்று. க்ரியாங்கமேயென்று பூர்வபக்ஷிமதம். ௪௪.

(ஶ்ரீ-பா.) வாஜஸநேயகத்தில் அக்நிரஹஸ்யத்தில் "தே மநஶ்சித: வாக்சித: ப்ராணசித: சக்ஷுஶ்சித: ஶ்ரோத்ரசித: கர்மசித:" என்று மநஸ்ஸுவாக்கு ப்ராணம் சக்ஷுஸ்ஸு ஶ்ரோத்ரம் முதலியவற்றின் வ்யாபாரங்களை அக்நிகளாகத்யாநம்செய்ய சொல்லியிருக்கிறது. இப்படி அவ்வவ வ்யாபாரங்களை அக்நிகளாகத்யாநிப்பதினால் பகவத்பக்த்யுத்பத்திக்கு ப்ரதிபந்தகங்களான பாபங்கள் நசித்து மோக்ஷஹேதுவான பக்தி நிர்விக்நமாக உண்டாகுமாகையால் இப்படி த்யாநிக்கப்பட்ட அவ்வவவ்யாபாரங்களாகிற (மநஸ்சிதாதியான) அக்நிகள் வித்யாங்கங்களென்று ஸூத்ரகாரருடைய தாத்பர்யம் - இவ்விஷயத்தில் பூர்வபக்ஷி சொல்லுகிறான் —இங்கு இவ் வ்யாபாரங்களை அக்நிகளாகச சொல்லிற்று. இவ்வக்நிகள் ஏதோ ஒரு யாகாதிகளில் உபயோகிக்கவேணும்; இவ்வாக்யத்தில் யாகாதிகளொன்றும் சொல்லப்படவில்லை. இதற்குமுன் வாக்யத்தில் இஷ்டகசிதாக்நி சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வக்நி ஒரு யாகத்துக்கு அங்கமாக இருப்பதினால் இவ்வக்நியும் அந்த யாகத்துக்கே அங்கமென்று அங்கீகரிக்கவேண்டும். ஒருயாகத்தில் இரண்டக்நி கூடுமோவென்னில், இதுவாவது அதுவாவது என்று விகல்பமாகச சொல்லவேணும். இது க்ரியாப்ரகரணமாகையால் இவ்வக்நி க்ரியாங்கமாகவேணுமே யல்லது வித்யாங்கமாகாது. யாகத்துக்கு புரோடாசாதிகளைப்போலுள்ள வஸ்துக்களே யங்கமாகவேணுமொழிய மாநஸிகமான த்யாநம் அங்கமாகுமோவென்னில்; த்வாதசாஹமென்கிற க்ரியைக்கு, ப்ருதிவீஸமுத்ரம் முதலானவற்றைபாத்ரம் ஸோமரஸம் முதலான யஜ்ஞாங்கவஸ்துக்களாகத் சொல்லியிருக்கிறது. அதுபோல் இங்கும் த்யாநமேக்ரியாங்கமாகலாமென்று பூர்வபக்ஷி சொன்னான். ௪௪.

ஸூ-௩.௩.௪௫. அதிதேஶாச்ச.

(ஶ-ரா-வ்.) அதிதேஶாச்ச - (அக்நிகளுடைய மஹிமையை மநஸ்சிதாதியான அக்நிகளில்) அதிதேசம் செய்திருக்கையாலும், (இவைக்ரியாங்கங்களாகக் கடவன்.)

(ஶ-ரா-பா.) "தேஷாமேகைக ஏவ தாவாந் யாவாநஸௌ பூர்வ:" முன்சொல்லப்பட்ட இஷ்டகசிதாக்நிக்குண்டான ஸாமர்த்யம் இந்தமநஸ்சிதாதிகளுக்குமுண்டு. அதாவது-அதினால் எந்த யாகம் நிறைவேறுமோ, அது இவற்றினாலும் நிறைவேறும் என்று சொல்லியிருக்கையாலும் இந்தமநஸ்சிதாதியான அக்நிகள் இஷ்டகசிதாக்நியைப்போல் யாகத்துக்கே அங்கமாகக்கடவது வித்யாங்கமாகமாட்டாது என்று பூர்வபக்ஷிமதம். ௪௫.

ஸூ-௪௭. வித்யைவ து நிர்த்தாரணாத் தர்ஶநாச்ச

(ஶ-வ்யா) நிர்த்தாரணாத்-நிர்த்தாரணம் செய்கையாலே, வித்யைவ து (இவ்வாக்யங்கள்) வித்யைக்கே அங்கங்கள், க்ரியாங்கமன்று.

(ஶ-வ்யா) தர்ஶநாச்ச-வித்யாங்கமென்பதற்கு (அநேக லிங்கங்கள்) காண்பதினாலும், (இவை வித்யாங்கங்கள்.) ௪௭.

(ரா-வ்யா) நிர்த்தாரணாத் . நிர்த்தாரணம் செய்கையாலும், தர்ஶநாச்ச-(இப்ப்ரகரணத்தில் வித்யாரூபமான யஜ்ஞம்) காண்கையாலும், வித்யைவ து-(இவை) வித்யாங்கங்களே, க்ரியாங்கங்களன்று. ௪௭.

(ஶ-ஹா.) இந்த பாஷ்யத்துக்கு "வித்யைவ து நிர்த்தாரணாத்" என்னுமளவாக ஒரு ஸூத்ரமும், "தர்ஶநாச்ச" என்று வேறுஸூத்ரமுமாக இருக்கும். இதில் பூர்வபக்ஷியின் மதத்தை நிரஸிக்கிறார் "தே ஹைதே வித்யாசித ஏவ" என்று இவைகளை வித்யாரூபங்களாக நிர்த்தாரணம் செய்கையாலே இவை வித்யாங்கங்களேயாகவேணும். இதனால் ப்ரகரணத்தைக்காட்டிலும் ஶ்ருதிப்ரபலமென்று சொல்லப்பட்டது.

(ஶ-ஹா) இவை வித்யாங்கங்களென்பதற்கு அநேக லிங்கங்களுமுண்டு. அவை "ஶ்ருத்யாதிபலீயஸ்த்வாச்ச" என்ற ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ப்ரகரணத்தைக்காட்டிலும் லிங்கம் ப்ரபலமென்று சொல்லப்பட்டது. ௪௭.

(ரா-ஹா.) இனி ஸித்தாந்தம் சொல்லுகிறார்— "தே ஹைதே வித்யாசித ஏவ" அந்த மநஶ்சிதாதியான அக்நிகள் வித்யாஸ்வரூபங்களே என்று அவதாரணம் பண்ணிச்சொல்லுகையாலே இவை வித்யாங்கங்களேயாகவேணும், கர்மாங்கங்களாகமாட்டா. மநஶ்சித் வாக்சித் சக்ஷுஶ்சித் என்றபோதே மநஸ்ஸு வாக்கு முதலிய வ்யாபாரங்களை அக்நியாக த்யாநிக்கவேண்டுமென்று ஏற்படுகையாலே இவை ஜ்ஞாநஸ்வரூபங்களென்பது ஸித்தமாயிருக்க, திரும்பியும் "இவை ஜ்ஞாநஸ்வரூபங்களே" என்றது - இவை ஜ்ஞாநஸ்வரூபங்களாய்க்கொண்டு ஜ்ஞாநத்துக்கே, அதாவது - வித்யைக்கே அங்கங்கள், மற்றொன்றுக்கு அங்கங்களாகமாட்டா வென்கைக்காகவே இப்படி நிர்த்தாரணம் செய்திருக்கிறது. இவ்வாக்யத்தில் யாகத்தைச் சொல்லாமையால் கீழ்வாக்யத்தோடே அந்வயித்து க்ரியாங்கமேயாக வேண்டுமென்று பூர்வபக்ஷி சொன்னதுக்கு ஸமாதாநம்— இவ்வாக்யத்திலேயே, "[illegible]" என்று தொடங்கி, இஷ்டகசிதாக்நியில் எந்தெந்த ஸோமபாநபாத்ராதிகளும் உத்காத்ருஸ்தோத்ராதிக்ரியைகளுமுளவோ, அவையெல்லாம், இந்த மநஶ்சிதாத்யக்நிகளில் மாநஸிகமாகச் செய்ய வேணுமென்று ஜ்ஞாநரூபமான (வித்யாரூபமான) யஜ்ஞத்தை விதித்திருக்கையாலே இதைக் கீழ்வாக்யத்தோடு அந்வயிக்கவேண்டியதில்லை, அதினால் க்ரியாங்கமாகக்கொள்ளவேண்டியது மில்லை. ௪௭.

ஸூ ௪௮. ஶ்ருத்யாதிபலீயஸ்த்வாச்ச ந பாத:.

(ஶ.ரா.வ்யா) ஶ்ருத்யாதிபலீயஸ்த்வாத்-ஶ்ருதி முதலானவைகள் (ப்ரகரணத்தைக் காட்டிலும் ப்ரபலங்களாகையாலே, பாத:ந-ப்ரகரணத்தினால் ஶ்ருத்யாதிகளுக்கு பாதையில்லை. ௪௮.

(ஸ-ரா-ஹ.) இவ்வாக்யத்தில் வித்யாமயமான யாகத்தை விதிக்கவில்லை, யாகத்தை விதியாவிடினும் பலம் சொல்லியிருந்ததாகில் அந்தபலத்துக்கநுகுணமாக யாகம் கல்பித்துக்கொள்ளலாம், அப்படி பலமும் சொல்லவில்லை. ஆகையால் இவ்வாக்யம் கீழ்வாக்யத்தோடே அந்வயித்து க்ரியாரூபமான யாகத்துக்கே மநஸ்சிதாதிகள் அங்கமாகக்கடவது என்கிற சங்கைக்கு ஸமாதாநம்—இது க்ரியாப்ரகரணமாகையால் இந்த மநஸ்சிதாதிகள் க்ரியாமயமான யாகத்துக்கு அங்கங்களென்று சொல்லவேணுமென்கிறீர்கள். ஸ்ருதி லிங்கம் வாக்யம் ஆகிய இவைகளில்லாவிடில் அப்போது ப்ரகரணம் அர்த்த நிஸ்சாயகமாகும். அங்கு அம்மூன்று மிருக்கையால் ப்ரகரணம் துர்ப்பலமாய், அவற்றுக்கு விரோதமான அர்த்தத்தை நிஸ்சயிக்கைக்குக் காரணமாகமாட்டாது. ஸ்ருதியாவது-"வித்யாசித ஏவ" இந்த மநஸ்சிதாதிகள் வித்யாஸ்வரூபங்களே என்று நிர்த்தாரணம் செய்கை. லிங்கமாவது "ஸர்வதா ஹாஸ்மை" என்று தொடங்கி, இந்த வித்யாமயமான யாகத்தை யுடையவனுக்கு ஸர்வபூதங்களும் உறங்கும்போதும் விழித்திருக்கும்போதும் ஸர்வகாலங்களிலும் மநஸ்சிதாதியான அக்நிகளை உண்டுபண்ணுகிறதென்கிறது. க்ரியாமயமானயாகம் ஒருகாலே ஒருவனாலே செய்யத்தக்கது. இது இப்படியன்றிக்கே ஸர்வகாலமும் ஸர்வபூதங்களினாலும் செய்யத்தக்கதாகையால் இது க்ரியாமய யஜ்ஞாங்கமன்று என்று நிஸ்சயிக்கப்படுகிறது. வாக்யமாவது - ஸமபிவ்யாஹாரம். இங்கு வித்யாமயமான யாகத்தை யுடையவனோடுகூட இவ்வக்நிகளைச் சொல்லியிருக்கையால் வாக்யமும் இவ்வக்நிகள் வித்யாமய யாகத்துக்கே அங்கங்களென்று நிஸ்சயிக்கைக்குக் காரணமாகிறது. ௪0௧.

ஸூ-௪0௨. அநுபந்தாதிப்ய: ப்ரஜ்ஞாந்தரப்ருதக்த்வவத் த்ருஷ்டஸ்ச ததுக்தம்.

(ஸ-ரா-வ்ய.) அநுபந்தாதிப்ய: யஜ்ஞஸம்பந்தியான பாத்ராதிகளினால், ப்ரஜ்ஞாந்தரப்ருதக்த்வவத் - வித்யாந்தரங்கள் வேறுபட்டிருப்பது போல், (இதுவும் க்ரியாமய யஜ்ஞத்தைக்காட்டிலும் வேறுபட்டிருக்கும்) த்ருஷ்டஸ்ச - அநுவாதவாக்யத்தில் விதிகல்பிக்கப்பட்டிருக்கிறது. ததுக்தம் - அது பூர்வமீமாம்ஸையிலும் சொல்லப்பட்டது. ௪0௨.

(ஸ-ரா-ஹ) இஷ்டகசிதாக்நியினுடைய யாகத்துக்கு யாதொருபாத்ரமோ, யாதொரு ஸ்தோத்ரம் முதலானவையோ, அவையொன்றும் இந்த மநஸ்சிதாக்நியினுடைய யாகத்துக்குச் சொல்லவில்லை. வேறுவிதமான பாத்ர ஸ்தோத்ராதிகளே சொல்லியிருக்கின்றன. ஆகையால் இந்த மநஸ்சிதாக்நி இஷ்டகசிதாக்நியைப்போல் க்ரியாரூபமானக்ரதுவுக்கு அங்கமன்று, வித்யாமய க்ரதுவுக்கே அங்கமாகக்கடவது. ஸ்ருதிலிங்காதிகளினாலும் பாத்ர ஸ்தோத்ராதி அநுபந்தாதிகளினாலும் தகரவித்யை சாண்டில்ய வித்யை முதலானவை க்ரியாமயக்ரதுவைக் காட்டிலும் வேறுபட்டிருப்பதுபோல், இங்கும் கண்டுகொள்வது, விதிவாக்ய மன்றிக்கே அநுவாத வாக்யத்திலும் விதிகல்பிப்பதுண்டு. பூர்வமீமாம்ஸையில் "வசநாநி த்வபூர்வத்வாத்" என்று அர்த்தம் அபூர்வமாகில் விதியில்லாவிடினும் கல்பித்துக் கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறது. "தேஷாமேகைக ஏவ தாவாந் யாவாநஸௌ பூர்வ:" இத்யாதியினால், முன்சொல்லப்பட்ட இஷ்டகசிதாக்நிக்கு யாதொருபலமோ, இந்த மநஸ்சிதாக்நிக்கும் அதுவேபலமென்று சொல்லியிருக்கிறது. ஆக, விதியும் பலமும் இவ்வாக்யத்திலே யுண்டாகையால், இது

முன்வாக்யத்திற் சொன்னதைக்காட்டிலும் வேறாகவேண்டுமென்கிறார். சங்கர பாஷ்யத்துக்கும் தாத்பர்யமிதுவே. ௫௰

ஸூ-௫௰௧. ந ஸாமாந்யாதப்யுபலப்தேர்ம்ருத்யுவந்ந ஹி லோகாபத்தி:.

(ஸூ-ரா-வ்ரு.) ஸாமாந்யாதபி - இரண்டிடத்திலுமுள்ள ஏதோ ஒரு தர்மத்தைப்பற்றியும், உபலப்தே: - (இது அதுபோன்றது என்கிற) அதிதேசம் காண்கையாலே, ந - இஷ்டகசிதாக்நியைப்போல் க்ரியாமய க்ரது சேஷமென்கிறநியமமில்லை. (இதற்குதாஹரணம்) ம்ருத்யுவத்-ஸூர்ய மண்டலவர்த்தி புருஷனுக்கு ம்ருத்யுவினதிதேசம்போல், லோகாபத்தி:- ம்ருத்யுலோகப்ராப்தி, ந - கிடையாது. ௫௰௧.

(ஸூ-ரா-பா.) "[illegible]" இத்யாதியினால், மநஸ்சிதாக்நி இஷ்டகசிதாக்நி போன்றது என்கையாலே இதுவும் அதைப்போல் க்ரியாங்கமே யாகவேண்டுமென்னில்; இது அதைப்போன்றதென்றால் அதுக்குள்ள குணங்களெல்லாம் இதுக்குவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஏதோ ஒரு விதத்தினால் ஸாத்ருஶ்ய முண்டான போதிலும் அப்படி சொல்லலாம். மநஸ்சிதாக்நிக்கும் இஷ்டகசிதாக்நிக்கும் பலமொன்றாகையால் இது அதைப்போன்றதென்று சொல்விற்றொழிய, அதைப்போல் க்ரியாங்கமென்பதில் தாத்பர்யமில்லை. இதற்குதாஹரணமென்னென்னில்; 'ஸ ஏஷ ஏவ ம்ருத்யுர்ய ஏஷ ஏதஸ்மிந் மண்டலே புருஷ:' ஸூர்யமண்டலமத்ய வர்த்தியான புருஷன் ம்ருத்யுவென்று சொல்விற்று. அப்புருஷன் ம்ருத்யுவைப்போல் ஸம்ஹரிக்கிறானென்றே அதுக்குப்பொருள். அவ்வளவேயன்றி, ம்ருத்யுவைப்போல் அப்புருஷன் ம்ருத்யு லோகத்திலே வாஸம் செய்கிறானென்பதில் தாத்பர்யமில்லை. அதுபோலிங்கும் கண்டுகொள்வது (சங்கரபாஷ்யத்திலும் தாத்பர்ய பேதமில்லை.) ௫௰௧.

ஸூ - ௫௰௨. பரேண ச ஶப்தஸ்ய தாத்வித்யம் பூயஸ்த்வாத்த்வநுபந்த:.

(ஸூ-ரா-வ்ரு.) பரேண ச - மேலுள்ள ப்ராஹ்மணத்தினாலும், ஶப்தஸ்ய - மநஸ்சித் என்கிற சப்தத்துக்கு, தாத்வித்யம் - வித்யாமயக்ரதுவுக்கங்கமென்கை (நிஸ்சயிக்கப்படுகிறது). பூயஸ்த்வாத்து - (அக்நயவயவங்கள் இப்ப்ரகரணத்தில்) அதிகமாயிருக்கையாலே, அநுபந்த: - (இவ்வக்நியும் இங்கே) சொல்லப்பட்டது. ௫௰௨.

(ஸூ-ரா-பா) "அயம் வாவ லோக: ஏஷோ(அ)க்நிசித:" என்று மேல் வாக்யத்தில் மநஸ்சிதாக்நியில் லோகத்ருஷ்டிபண்ணச்சொல்லி, இப்படி பண்ணுகிறவன் ஸத்கதியையடைகிறான். அக்கதி கேவல கர்மம்செய்தவனுக்கு சேரிடாது என்று கர்மத்தைநிந்தித்து வித்யையை ஸ்துதித்தது. மேலும் "வித்யயா ததாரோஹந்தி" என்றுதுடங்கி வித்யையைஸ்துதித்தது. இப்படிமேலும் மேலுமுள்ள ப்ராஹ்

மணங்கள் வித்யாவிஷயமாயிருக்க நடுவிலுள்ள இந்த வாக்யம் மாத்திரம் க்ரியா விஷய மென்பது அநுசிதமாகையால் இவ்வாக்யமும் வித்யா மயமான க்ரது வையே சொல்லுகிறதென்னவேணும். ஆகில், இதை வித்யா ப்ரகரணமாகிய ப்ருஹ தாரண்யத்தில் சொல்லவேண்டியிருக்க, அப்படி சொல்லாமல் க்ரியா ப்ரகரண மாகிய இங்கு சொல்லுவா னென்னென்னில்; மாநஸிகாதி சில வ்யாபாரங்களை அங்கிகளாகவும் சிலவற்றை அவற்றினுடைய அங்கங்களாகவும் த்யாகிக்கவேணு மென்று சொல்லுகையாலே, பாத்ரம் ஸ்தோத்ரம் முதலிய அக்ர்யவயவங்கள் இந்த ப்ரகரணத்தில் அதிகமாகச சொல்லி யிருக்கையாலே, இதையும் இங்கே சொன் னால் கேட்கிறவர்களுக்கு சீக்கிரமாகத் தெரியுமென்கைக்காக இங்கே சொல் லிற்று. ஆகையால இது வித்யாங்கமேயென்று ஸித்தாந்தம. ௩௦௪.

௩ய் ௧௦௧. ஸூ. ௩௦௫. ஏகஆத்மநஶ்ஶரீரேபாவாத்.

(ஶ - வ்யா) ஏகே - சிலர், ஶரீரேபாவாத் - சரீரத்திலேயே (ஜ்ஞானாதிகள்) இருக்கையாலே, ஆத்மந: - ஆத்மாவுக்கு (தேஹத்தைக்கா ட்டிலும் பேதம் கிடையாது.) என்றார்கள். ௩௦௫.

(ரா - வ்யா.) ஶரீரே-சரீரத்தில் (இருக்கிற ஆத்மாவுக்கு), பாவாத்- (கர்த்ருத்வாதிதர்மங்களை) உண்டாகைபாலே, ஆத்மந: - (கர்த்ருத்வாதி தர்மங்களையுடைய) ஆத்மாவினுடைய (உபாஸநமே செய்யவேண்டும்) என்று, ஏகே - சிலர் (சொன்னார்கள்) ௩௦௫.

(ஶ-ஹா.) இதில், ஆத்மாவென்பது தேஹத்தைககாட்டிலும வேறுபட்டதா அல்லது தேஹமேயா என்று விசாரிக்கப்படுகிறது.—தேஹமே ஆத்மா, இதைக் காட்டிலும் வேறு ஆத்மா கிடையாது உண்டாகில் ஏன்காணப்படவில்லை. "நான் மநுஷ்யன், நான் செய்கிறேன், நான அறிகிறேன்" என்ற ஜ்ஞானம் சரீரத்தைப் பற்றியே யுண்டாகிறது. சரீரமாவது - ப்ருதிவீ ஜலம் தேஜஸ்ஸு வாயு ஆகியநாலு தத்வங்கள் சேர்ந்துண்டான ஒருவடிவு, அந்நாலிலும் சைதந்யமில்லாவிடிலும், தனித்தனியே வெற்றிலையிலும ‥ கிலுமில்லாத சிகப்பு மூன்றும் சேர்ந்தாலுண் டாவதுபோல்,நாலுபூதங்களினுடையசேர்த்தியில் சைதந்ய முண்டாகிறது.மேலும், நீங்கள் ஆத்மாவுக்கு சைதந்யம் ஸ்ம்ருதி முதலியகுணங்கள் சொல்லுகிறீர்கள். அவைகள் சரீரத்துக்குள்ளே காண்கிறதொழிய வெளிப்பட்டுக் காணவில்லை ஆகை யால் சரீரமே ஆத்மா என்றான் லோகாயதிகன். ௩௦௫

(ரா-ஹா.) கீழே விஙகபூயஸ்த்வாதி கரணத்தில் ஸர்வபர வித்யைகளிலும் பரமாத்மாவே உபாஸ்யனென்றார், இதில், பகவத்சேஷமாய் ஸம்ஸார ஸம்பந்த மற்ற ஆத்மஸ்வரூபமும் ஸர்வவித்யைகளிலு முபாஸ்யமென்கிறார்—ஜீவாத்மாவுக்கு அந்தராத்மாவாக பரமாத்மாவை உபாஸிக்க வேணுமென்று "ஆத்மேதி தூபகச்சந்தி" என்ற ஸூத்ரத்தில் மேலேசொல்லப்போகிறார். அங்கு பரமாத்மாவுக்கு சரீரமான ஜீவனை, கர்த்ருத்வம் போக்த்ருத்வம் முதலிய ஸம்ஸார தசையிலுள்ள குணங்களை யுடையவனாக அநுஸந்திக்கவேணுமா, அல்லது ஸம்ஸார ஸம்பந்தமற்ற

போதுள்ள அபஹதபாப்மத்வாதி குணங்களை யுடையவனாக அநுஸந்திக்கவேணுமா என்று வினில்;—ஸம்ஸாரத்திலிருக்கும்போது பண்ணவேண்டிய உபாஸநத்தில் ஸம்ஸாரதசையிலுள்ள கர்த்ருத்வாதி குணங்களை யுடையவனாகவே ஜீவனை உபாஸநம் செய்யவேணும். யாகாதிகளைச் செய்யும்போது ஆத்மாவைக்கர்த்தாவாக நினைத்தே செய்கிறார்களல்லது, அது பின்பு ஸ்வர்க்கத்துக்குப்போய் யாதொரு குணத்தை யடைகிறதோ, அக்குணத்தையுடையதாக அறிந்து செய்கிறதில்லை. அதுபோலவே இங்கும் கண்டுகொள்வதென்று பூர்வபக்ஷம். ௫௦௫

ஸூ-௫௦௬. வ்யதிரேகஸ்தத்பாவபாவித்வாந்நதூபலப்திவத்.

(ஶ்ரீ-வ்யா.) ந து - அப்படி சொல்லுவது சரியன்று; தத்பாவபாவித்வாத் - தேஹதர்மத்தைக்காட்டிலும் ஆத்மதர்மம் வேறுபட்டுக் காண்கையாலே, வ்யதிரேக: - ஆத்மாதேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவன்; உபலப்திவத் - வஸ்து ஸாக்ஷாத்காரம் (தீபதர்மமாகாதது) போல் (ஜ்ஞானம் சரீரதர்மமாகாது.) ௫௦௬

(ஶ்ரீ-வ்யா.) ந து - அப்படி சொல்வது உசிதமன்று. தத்பாவபாவித்வாத் - அந்த அபஹத பாப்மத்வாதி ஸ்வரூபமே ப்ராப்யமாகையாலே, உபலப்திவத் - பரமாத்மோபாஸநம்போலே, வ்யதிரேக: - (ஸம்ஸாராவஸ்தையைக் காட்டிலும்) விலக்ஷணமான அவஸ்தையோடுகூடின ஜீவாத்மஸ்வரூபமே (உபாஸ்யமாகக்கடவது.) ௫௦௬

(ஶ்ரீ-பா.) இந்த பாஷ்யத்துக்கு "தத்பாவாபாவித்வாத்" என்று ஸூத்ரபாடம். இதில் அப்பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்—ஜ்ஞாநாதிகள் தேஹ தர்மங்களன்று. அப்படியாகில் ரூபாதிகளைப்போல் எப்போதும் தோற்றவேணும், எதிரே நிற்கிறவனுக்கும் தோற்றவேணும். ஜ்ஞாநாதிகள் தேஹமுள்ளபோது சில காலம் தோற்றி சில காலம் தோற்றாமலிருக்கும். பிறருக்குக் காணாது. ஆகையாலே தேஹத்தைக்காட்டிலும் வேறான ஆத்மாவுக்கே குணங்களாகவேணும். தேஹமுள்ளபோதே ஜ்ஞாநாதிகள் தோற்றுகையாலே அவை தேஹதர்மமென்று சொல்லுமேயென்னில்; விளக்குள்ளபோதே எதிரேயுள்ள வஸ்துக்கள் தோற்றினாலும் அத்தோற்றம் ஆத்மகுணமாகுமல்லது விளக்கின் குணமாகாததுபோல் சரீரமுள்ளபோதே ஜ்ஞாநாதிகள் தோற்றினாலும் அவை சரீரகுணமாகமாட்டா. ஆகையால் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டு ஆத்மாவென்றொருவஸ்து உண்டென்று ஸித்தாந்தம். ௫௦௬

(ஶ்ரீ-ஹா) ஸம்ஸாரியான ஆத்மாவை உபாஸநம் செய்வது சரியன்று. "யதா க்ரதுரஸ்மிந்லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி" உபாஸகன் எவ்விதமான ஜீவாத்மஸ்வரூபத்தை பகவத்சரீரமாக உபாஸநம்செய்கிறானோ, பின்பு ஸம்ஸாரத்தைக்கடந்துபோய் அவ்விதமான ஆத்மஸ்வரூபத்தையே அடைவன் என்கையாலே, அங்குப்போய் அடையவேண்டியது அபஹதபாப்மத்வாதி ஸ்வரூபமாகையாலே அதையே இங்கும் உபாஸநம் செய்யவேணும். மோக்ஷதசை

யில் ப்ராப்யமான பரமாத்ம ஸ்வரூபத்தையே இங்கும் உபாஸிப்பதுபோல் ஜீவாத்மாவையும் அப்படியே உபாஸிக்கவேணுமென்று ஸித்தாந்தம். ௬௦௬.

அதி-௯௦௭. ஸூ-௬௦௭. [Grantha text] [Grantha text].

(ஶ்ரு-ப்ர-வ்யா.) [Grantha] - உத்கீதாவயவத்தை அவலம்பித்திருக்கிற உபாஸநங்கள், [Grantha] - அந்தந்த சாகைகளில் வ்யவஸ்திதங்களன்று, [Grantha] - எல்லாவேதங்களிலும், [Grantha] - எல்லாசாகைகளிலும், (அநுகதங்களாயிருக்கும்). ௬௦௭.

(ஶ்ரு-ப்ர-ஹா.) கீழ்ப்பரமாத்மோபாஸநம் சொன்ன விடங்களி லெல்லாம் ஜீவாத்மோபாஸநம் வருமென்றார். இதில் உத்கீதஸாமம் சொன்னவிடங்களிலெல்லாம் உத்கீதோபாஸநம் வருமா வாராதாவென்று விசாரிக்கிறார்—"[Grantha]" என்று சிலவிடங்களில் உத்கீதோபாஸநம் சொல்லியிருக்கிறது. உத்கீதஸாமம் மாத்திரம் எல்லாசாகையிலும் சொல்லியிருக்கிறது. ஒரு சாகையில் சொன்ன உத்கீதோபாஸநத்தை எல்லாசாகையாரும் செய்யவேணுமா, அல்லது எங்கே சொல்லியிருக்கிறதோ, அந்த சாகையார் மாத்திரம் செய்யவேணுமாவென்னில், ஒவ்வொரு சாகையில் வெவ்வேறு ஸ்வரமாகையாலே, ஒரு சாகையிற்சொன்ன உத்கீதஸாமம் மற்றொருசாகையி லில்லாமையால், எந்த உத்கீதஸாமத்துக்கு உபாஸநம் சொல்லியிருக்கிறதோ, அவர்கள் அதைச் செய்யவேணும், மற்றவர்கள் செய்யவேண்டியதில்லை என்பது பூர்வபக்ஷம்—ஸ்வரம் வெவ்வேறாயினும், ஸ்வரத்தைக்காட்டாமல் உத்கீதத்தை உபாஸநம் செய்யவேண்டுமென்று ஸாமாந்யமாகச் சொல்லுகையாலே எல்லா சாகையாரும் அவ்வுபாஸநம் செய்யவேண்டுமென்று ஸித்தாந்தம். ௬௦௭.

ஸூ-௬௦௮. [Grantha text].

(ஶ்ரு-ப்ர-வ்யா.) [Grantha] - மந்த்ரம் முதலானவற்றைப்போலேயும், [Grantha] - விரோதமில்லை. ௬௦௮.

(ஶ்ரு-ப்ர-ஹா.) ஒரு யஜ்ஞம் அநேகசாகைகளில் சொல்லி யிருந்தபோதிலும், அதுக்குவேண்டிய மந்த்ரம்பாத்ரம் முதலிய ஸாமக்ரிகள் ஓரிடத்திலேசொல்லி மற்ற விடங்களில் சொல்லாமலிருக்கும். ஆனபோதிலும், சொல்லாத இடங்களிலும்கூட மற்றோரிடத்திற்சொன்ன மந்த்ராதிகளைக்கொண்டு அந்த யஜ்ஞத்தை நடத்துகிறார்கள். அதுபோலவே இங்கும் கண்டுகொள்வது. ௬௦௮.

அதி-௯௦௮. ஸூ-௬௦௯. [Grantha text]

[Grantha text].

(ஶ்ரு-ப்ர-வ்யா.) [Grantha] (தர்சபூர்ணமாஸாதி) யாகம்போலே, [Grantha] - விபுலமான ஸமஸ்தோபாஸநத்துக்கே, [Grantha] - ப்ராமாணிகத்வமுண்டு; [Grantha] - அப்படியே, [Grantha] - ஶ்ருதிசொல்லுகிறது. ௬௦௯.

(ஶ்ரீ-பா-ஸா) வைஶ்வாநரவித்யையில் "தஸ்ய ஹ வா ஏதஸ்யாத்மநோ வைஶ்வாநரஸ்ய மூர்தைவ ஸுதேஜா:" என்று தொடங்கி ஆகாச ஆதித்யவாயுப்ருதிவீ முதலியவற்றை சிரஸ் ஸ்ரோத்ரம் முதலிய அங்கமாக உடைய பரமாத்மாவாகிய வைஶ்வாநரனை உபாஸநம் செய்யச்சொல்லிற்று. "ஏஷ வை ஸுதேஜா ஆத்மா வைஶ்வாநர:" என்று தொடங்கி ஒவ்வொரு அங்கத்தினுடைய உபாஸநமும் அததுக்கு பலமும் சொல்லிற்று. இங்கு ஒவ்வொரு அவயவங்களைத் தனித்தனியே உபாஸிக்கலாமா, எல்லா அவயவங்களோ கூடிய பரமாத்மாவையே ஸமஸ்தமாக உபாஸிக்கவேணுமாவென்னில், ஒவ்வொரு அவயவங்களையும் உபாஸிக்கவேணுமென்று தனித்தனியே சொல்லுகையாலும், அவ்வொன்றுக்கும் வெவ்வேறு பலங்கள் சொல்லியிருக்கையாலும் வெவ்வேறவயவங்களையும் உபாஸிக்கவேண்டுமென்று பூர்வபக்ஷிசொன்னான் - "ஆத்மாநமேவேமம் வைஶ்வாநரம் ஸம்ப்ரத்யத்யேஷி தமேவ நோ ப்ரூஹி" என்று துடங்கி, வைஶ்வாநராத்ம ஸ்வரூபத்தை யறியவேணுமென்று சென்று அதின் ஸ்வரூபத்தைக் கேட்டு, ஸ்வர்க்கலோகாதிகள் அவ்வாத்மாவுக்கு அவயவங்களென்று குருஉபதேசிக்க அறிந்து, அந்தவித்யைக்கு பலம் ஸகல லோகங்களிலும் பரமாத்மாநுபவமென்று சொல்லித்தலைக்காட்டுகையாலே, எல்லா அவயவங்களோடுகூடிய வைஶ்வாநரனே இங்கு உபாஸ்யனாகச் சொல்லப்பட்டான். ஒவ்வொரு அவயவங்களினுடைய உபாஸநத்தைத் தனித்தனியே சொன்னது - வைஶ்வாநரதேவதாகமான த்வாதசகபால யாகத்தைவிதித்து, பின்பு அதினுடைய ப்ரசம் ஸார்த்தமாக அதுக்குள்ளடங்கிய அஷ்டா கபாலம் நவகபாலம் முதலியவற்றைத் தனிததனியே சொன்னதுபோலிங்கும் கண்டுகொள்வது.. தனித்தனியே உபாஸித்தவனுக்கு "மூர்தா தே வ்யபதிஷ்யத்" என்று தனித்தனியே அவயவங்களை உபாஸிக்கில் தலைவெடித்துப்போகும் கண் குருடாய்விடும் என்று அநிஷ்டபலத்தைச் சொல்லுகையாலே தனித்தனி அவயவங்களை உபாஸிக்கக் கூடாதென்றும் ஸமஸ்தமான வைஶ்வாநரனையே உபாஸிக்க வேண்டுமென்றும் இந்த ஶ்ருதிக்குத் தாத்பர்யமென்று ஸித்தாந்தம். ௪0௧.

அதி-௧௦௬. ஸூ-௫௧௦. நாநா ஶப்தாதிபேதாத்.

(ஶ்ரீ-பா-வ்ய.) ஶப்தாதிபேதாத் - சப்தம் முதலியவை வெவ்வேறுகையாலே, நாநா - (வித்யைகள்) வெவ்வேறு. ௪௧0.

(ஶ்ரீ-பா-ஸா.) ஸத்வித்யா தஹரவித்யா ஶாண்டில்யவித்யா ஆநந்தவித்யா உபகோஸலவித்யா வைஶ்வாநரவித்யா என்றிப்படி சொல்லப்பட்ட வித்யைகளெல்லாம் ஒன்றேயா, அல்லது வெவ்வேறு என்னில், இவையெல்லாவற்றிலும் பரமாத்மாவே உபாஸ்யனாகையாலும், பரமாத்ம ப்ராப்தியே எல்லாவற்றுக்கும் பலமாகையாலும் இவைகளுக்கு பேதமிடையாதென்றான் பூர்வபக்ஷி. "ஜுஹோதி, யஜதி, ததாதி" என்கிற சப்தபேதத்தினால் யாகங்கள் பேதிக்கிறாப்போல், இங்கும், "வேத | உபாஸீத" இத்யாதி சப்தங்கள் வெவ்வேறாயிருக்கையாலும், ஒவ்வொன்றுக்கும், ஜகத்காரணத்வம், அபஹதபாப்மத்வம், என்கிற வெவ்வேறு குணங்களையே உபாஸ்யமாகச் சொல்லுகையாலும், "[illegible]" இத்யாதி நாமபேதங்களுண்டாகையாலும் இவ்வித்யைகளொன்றாகமாட்டா, வெவ்வேறு வித்யைகளென்று ஸித்தாந்தம். ௪௧௨.

அதி-௧௫௭. ஸூ-௪௧௧. விகல்போ(அ)விஶிஷ்டபலத்வாத்.

(ஸூ-பா-வ்ய) அவிஶிஷ்டபலத்வாத் - ஸமாநபலத்தை யுடைத்தாகை யாலே, விகல்ப: - ஒவ்வொன்றேயமையும். ௪௧௧.

(ஸூ-பா-ஸா) ஒருபுருஷனுக்கு மோக்ஷார்த்தமாக ஸத்வித்யை தஹரவித்யை என்றிப்படி சொல்லப்பட்ட வித்யைகளில் ஒவ்வொன்றே உபாஸித்தால் போருமா, அல்லது இரண்டு மூன்று நாலு உபாஸிக்கவேணுமா வென்னில், அக்நிஹோத்ரம் தர்சபூர்ணமாஸம் முதலான க்ரியைகளில் ஒவ்வொன்றே ஸ்வர்க்கத்தைக் கொடுக்க வற்றாயிருந்தபோதிலும், ஸ்வர்க்கத்தில் அதிக ஸுகத்தைக் கோரிய புருஷன் இரண்டு மூன்று யஜ்ஞங்களைச் செய்யலாமென்று சொன்னதுபோல், மோக்ஷத்தில் அதிக ஸுகத்தை யபேக்ஷித்தவன் இரண்டு மூன்று வித்யைகளையும் உபாஸிக்கவேணுமென்று பூர்வபக்ஷம்— அக்நிஹோத்ராதிகளினாலுண்டாகிற ஸ்வர்க்கஸுகம் அல்பமாகையால் அதை அதிகமாக வேண்டுமவன் இரண்டு மூன்று க்ரியைகளைச் செய்யவேண்டும். ஸத்வித்யாதிகளினாலுண்டாகிற மோக்ஷஸுகம் அப்படி அல்பமன்றிக்கே ஒவ்வொரு வித்யையினாலுண்டாகிற அபரிச்சிந்நப்ரஹ்மாநுவமாகிற மோக்ஷபலம் அதற்குமேலில்லை யென்னும்படி அநந்தமாகையாலே மேன்மேலபேக்ஷைக்கு இடமில்லையாகையால் இரண்டாவது வித்யையை உபாஸிக்கவேண்டாம் ஒரொன்றே போரும் என்று ஸித்தாந்தம். ௪௧௧.

அதி-௧௫௮. ஸூ-௪௧௨. காம்யாஸ்து யதாகாமம் ஸமுச்சீயேரந் நவா பூர்வஹேத்வபாவாத்.

(ஸூ-பா-வ்ய.) காம்யா: து - காம்யமான புத்ர பசு தந ஸ்வர்க்காதிகளை பலமாக உடையவித்யைகள், பூர்வஹேத்வபாவாத் முன்சொன்ன காரணமில்லாமையாலே. யதாகாமம் - இஷ்டப்படி, ஸமுச்சீயேரந் - சேர்த்தும் உபாஸிக்கவுமாம், நவா - தவிரவுமாம்; ௪௧௨.

(ஸூ-பா-ஸா) ப்ரஹ்மப்ராப்தியல்லாத மற்றகாம்ய புருஷார்த்தங்களைக் கொடுக்கவற்றான ப்ராணவித்யை நாமவித்யை முதலானவைகளில்; அதிக பலத்தை வேண்டுமவன் இரண்டு மூன்றையும் சேர்த்தும் உபாஸநம் செய்யலாம், அதிகபலத்திலபேக்ஷையில்லாமல் கிடைத்தவளவில் த்ருப்தியடைகிறவனுக்கு ஒருவித்யையே போரும். இவ்வித்யைகளுக்கு முன்னைப்போல் அபரிச்சிந்நபலம் கிடையாமையாலே இப்படி சொல்வது யுக்தம் என்று ஸித்தாந்தம். ௪௧௨

அதி-௧௫௯. ஸூ-௪௧௩. அங்கேஷு யதாஶ்ரயபாவ:.

(ஸூ-பா-வ்ய) அங்கேஷு - க்ரதுவுக்கங்கமான உத்கீதாதி ஸாமங்களிலே ஆஶ்ரிதங்களான, உபாஸநங்களுக்கு, யதாஶ்ரயபாவ: - உபாஸநத்துக்காஶ்ரயமான உத்கீதம்போலே க்ரத்வங்கத்வமுண்டு. ௪௧௩.

(ஸூ-பா-ஸா) இவ்வதிகரணத்தில், காம்யோபாஸநத்துக்குப்போலே, உத்கீதாத்யுபாஸநத்துக்கும், வித்யை வீர்யவத்தரமாகவேணுமென்றால் அநுஷ்டானமுண்டு,

இல்லையாகில் இல்லையென்கிறார்— “ உத்³கீ³த²மு³பாஸீத ” என்று சொன்ன உத்கீ³தோபாஸநம், க்ரதுவுக்கு அங்கமாக உத்கீ³தஸாமங்கள் சொல்லப்பட்ட எல்லா இடங்களிலும் செய்யவேணுமா, அல்லது இஷ்டமுண்டானால் செய்து இல்லையாகில் தவிரலாமா என்னில், உத்கீ³தஸாமம் க்ரதுவுக்கு அங்கமாகிறாப்போல் அதினுடைய உபாஸநமும் 'க்ரதுவுக்கு அங்கமாகிறதாகையால், அங்கமான உத்கீ³த உபாஸநத்தை நியமேந' எல்லா இடங்களிலும் செய்யவேண்டும் என்றான் பூர்வபக்ஷி. சகங.

ஸூ-சகச. ஶிஷ்டேஶ்ச.

(ஶ்ரு-ப்ர-வ்யா-ஸா) ஶிஷ்டேஶ்ச - (“உத்³கீ³த²மு³பாஸீத” உத்கீ³தோபாஸநத்தைச் செய்யவேணும் என்று) விதி (ப்ரத்யயாந்தமான சப்தம்) இருக்கையாலேயும், (அதை நியமேந செய்யவேண்டும்). சகச.

ஸூ-சகரு. ஸமாஹாராத்.

(ஶ்ரு ப்ர வ்யா-ஸா.) ஸமாஹாராத் - ஹோதாவானவன் உத்கீ³தோபாஸநத்தைச் செய்யாவிடிலும் யஜமாநன் அதைச்செய்யவேண்டும் என்று ஒருவன் செய்யாததை மற்றொருவன் செய்து தலைக்கட்டச் சொல்லுகையாலே, இதைநியமேந பண்ணவேணுமென்பது ஸித்தம். சகரு.

ஸூ சகசு. கு³ணஸாதா⁴ரண்யஶ்ருதேஶ்ச.

(ஶ்ரு ப்ர-வ்யா.) கு³ணஸாதா⁴ரண்யஶ்ருதேஶ்ச - (ப்ரணவத்தின்) குணமாகிய உபாஸநத்துக்கு எல்லா யஜ்ஞங்களிலும் ஸம்பந்தம் சொல்லுகையாலே அதைநியமேந செய்யவேண்டும் சகசு.

(ஶ்ரு-ப்ர-ஸா) “தேநேயம் த்ரயீவித்³யா வர்ததே ஓமித்யாஶ்ராவயதி ஓமிதி ஶம்ஸதி ஓமித்யுத்³கா³யதி” அந்த ப்ரணவத்தினாலே மூன்று வேதங்களிலும் சொல்லப்பட்ட கர்மங்கள் நடக்கிறது என்கிறவிடத்தில், “அந்தப்ரணவம்” என்று உபாஸநத்தோடு கூடிய ப்ரணவத்தைச் சொல்லி அதினாலே ஸகல கர்மங்களும் நடக்கிறதென்கையினாலே, உத்கீ³தம் சொன்னவிடங்களிலெல்லாம் உத்கீ³தோபாஸநமு முண்டென்று பூர்வபக்ஷம். சகசு.

ஸூ-சகஎ. ந வா தத்ஸஹபா⁴வாஶ்ருதே:.

(ஶ்ரு-ப்ர-வ்யா.) தத்ஸஹபா⁴வாஶ்ருதே: - (இந்த உபாஸநத்தை) க்ரதுவுக்கு அங்கமாகச் சொல்லாமையாலே, ந வா - உத்கீ³தோபாஸநம் நியமேந செய்யவேணுமென்பதில்லை. சகஎ.

(ஶ்ரு-ப்ர-ஸா) இனி அப்பூர்வபக்ஷத்தை நிரஸித்து ஸித்தாந்தம் சொல்லுகிறார்—“யதே³வ வித்³யயா கரோதி ததே³வ வீர்யவத்தரம்” என்று உத்கீ³தோபாஸநம் செய்தால் அந்த வித்யை நிர்விக்நமாக நிறைவேறி பலத்தையும் சீக்கிரத்தில் கொடுக்கும் என்று வித்யாபூர்த்தியிலும் சீக்ரபலப்ரதத்வத்திலும் இந்த உபாஸநத்

ுதை அங்கமாகச சொல்லிற்றொழிய க்ரதுவுக்கு அங்கமாகச் சொல்லாமையாலே இதைநியமேந செய்யவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஆரம்பித்த க்ரது நிர்விக்நமாக முடியவேணுமென்றுவது பலம் சீக்ரமாக உண்டாக வேணுமென்றுவது இச்சையுடையவனே அதைச் செய்யவேணும் என்று ஸித்தாந்தம். சுகஎ.

'ஸூ-சுகஅ. ஃஶ-ஃநாவு,

(ஶ-ரா-வ்ய.) ஃஶ-ஃநாகூவ (உத்கீதோபாஸநத்தை யறியாமை)காண்கையாலும், (அது க்ரத்வங்கயாகாது.) சுகஅ.

(ஶ-ரா-ஸா.) ,,வனவம்விஸவெவ ஷாயஜம்யஜஊாநம்ஸவஃராஶு ஜுகூஷிஜஃஸஹிரகூதி" இப்படி உத்கீதோபாஸநத்தை யறிந்த ப்ரஹ்மா என்கிற ருத்விக்கு யஜமாநனையும் யஜ்ஞத்தையும் மற்றருத்விக்குக்களையும் ரக்ஷிக்கிறுமெ கையாலே, உத்காதாவுக்கு உத்கீதோபாஸநமில்லை யென்று ஏற்படுகிறது. உத்கீதோபாஸநம் க்ரதுவுக்கு அஙகமாகில் உதகாதாவுக்கு அது 'அவஶ்யம்வேணும் அதில்லாமையால் அவ்வுபாஸநம் க்ரத்வங்கமன்றென்று ஏற்படுகிறது. ஆகையால் அவ்வுபாஸநம் நியமேந செய்யவேணுமென்பதில்லை என்று ஸித்தாந்தம். . சுகஅ

மூன்றும் அத்யாயத்தில் மூன்றும்பாதம்

முடிந்தது.

ப்ரஹ்மஸூத்ரபாஷ்யம்.

௩-வது அத்தியாயம், ௪-வது பாதம்.

அபி ௧௦௯. ஸூ || ௪௭௬. புருஷார்த்தோ(அ)த: ஶப்தாதிதி பாதராயண: ||

(ஶ்ரு- ரா- வ்ரு) அத:= இந்த உபாஸநத்திலே, புருஷார்த்த:= பலம் (உண்டாகிறது), இதி=என்று, பாதராயண:=வ்யாஸ பகவான், ஶப்தாத்=வேதவாக்யத்திலே, (நிர்ணயித்துச்சொல்லுகிறார்.) ௪௭௬.

(ஶ்ரு- ரா- வ்ர) கீழ்ப்பாதத்தில் வித்யாஸ்வரூபத்தை நிரூபித்தார், இதில் அதினுடைய அங்கஸ்வரூபத்தை நிரூபிக்கப்போகிறார். அதற்காக இந்த முதலதிகரணத்தில் வித்யையை (உபாஸநத்தை) அங்கியாக நிரூபிக்கிறார்.

பலத்தைக்கொடுக்குமது வித்யையா கர்மமாவென்னில்; "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" இத்யாதி வேதவாக்யங்கள், ப்ரஹ்மஸ்வரூபத்தை உபாஸநம்செய்தவன் மோக்ஷத்தை யடைகிறனென்று உபாஸநத்திலேயே பலமுண்டாவதாகச் சொல்லுகையாலே வித்யையே பலப்ரதமென்று வ்யாஸபகவானுடைய ஸித்தாந்தம். (வித்யையாவது-ப்ரஹ்மஜ்ஞாநமென்று சங்கரமதம்.)

ஸூ || ௪௭௭. ஶேஷத்வாத் புருஷார்த்தவாதோ யதா(அ)ந்யேஷ்விதி ஜைமினி: ||

(ஶ்ரு- ரா- வ்ரு) ஶேஷத்வாத்=(கர்ம)சேஷமாகையாலே, (வித்யைபலப்ரதமன்று, அந்யேஷு யதா=மற்றத்ரவ்யாதிகளிற்போலெ, புருஷார்த்தவாத:=வித்யைபலப்ரதமென்பது அர்த்தவாத (ஸ்துதி) மாத்ரம், இதி= என்று, ஜைமினி:=ஜைமினியானவர்(சொன்னர்) ௪௭௭.

(ஶ்ரு- ரா- ஸா) இனி பூர்வபக்ஷியான ஜைமினி சொல்லுகிறார். கரமத்தைச் செய்யுமவன், தான் காணப்படுகிற இந்த சரீரத்திற் காட்டில் வேறுபட்டவன் என்று தன்னுடைய ஸ்வரூபத்தையறிந்தே செய்யவேண்டும். இங்கு சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபமும் கர்த்தாவாகிய ஜீவஸ்வரூபமே, ஆகையால் இந்த ஆத்மவித்யை, கர்த்தாவுக்குக் கர்மாதிகாரத்தை யுண்டுபண்ணி அவ்வழியாலே கர்மத்துக்கு அங்கமாகிறதொழிய தான் நேரே பலப்ரதமாகிறதில்லை. வித்யை பலப்ரதமென்று சொன்னது "யஸ்ய பர்ணமயீ ஜுஹூர்பவதி ந ஸ பாபம் ஶ்லோகம் ஶ்ருணோதி" எவனுக்கு ஹோமஸாதநமாகிய ஜுஹூவென்பது இலையோ, அவனுக்குப்பாபபவாதம் உண்டாகாதென்று அந்த அங்கபூதமாகிய ஜுஹூவை ஸ்தோத்திரம் செய்வதுபோல் இங்கும் கர்மாங்கமாகிய வித்யையை ஸ்துதிக்கைக்காக இப்படி சொல்லிற்றென்றார் ஜைமினி. கீழ் பலவிடங்களிலும், வேதாந்தங்களில் சொல்லப்பட்ட புருஷன் ஜீவனென்று, ஸர்வேஸ்வரனென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும், வித்யை கர்மாங்கமென்று சொல்லுகிறசிலவேதாந்தவாக்யங்களைப் பராமர்சிக்கில், "தத்த்வமஸி" என்கிற வாக்யத்துக்கு ஜீவேஸ்வரர்களுக்கு அபேதமங்கீகரித்து, இங்குச் சொல்லப்பட்ட ஈஸ்வரனும் ஜீவஸ்வரூபியே யென்று கொள்ளவேணுமென்று பூர்வபக்ஷியின் அபிப்ராயம்.

ஸூ|| ௪௨௧. ஆசாரதர்ஶநாத்||

(ஶ்ரீ- பா- வ்யா-) ஆசாரதர்ஶநாத்= (ப்ரஹ்மவித்துக்களுக்கு) கர்மாநுஷ்டாநம்காண்கையாலே, (வித்யை கர்மாங்கம்). ௪௨௧.

(ஶ்ரீ- பா- ஸா) “யக்ஷ்யமாணோ வை பகவந்தோ(அ)ஹமஸ்மி” ப்ரஹ்மவித்தான கேகயபதி, தன்னை யாகம்செய்யப் போகிறவனாகச் சொல்லுகையாலும், “கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:” என்று ப்ரஹ்மவித்துக்களான ஜநகாதிகள் கர்மத்தினால் மோக்ஷமடைந்ததாகச் சொல்லுகையாலும் கர்மமே பலப்ரதம், வித்யை அதுக்கங்கம். ௪௨௧

ஸூ|| ௪௨௨. தச்ச்ருதே:||

(ஶ்ரீ- பா- வ்யா-ஸா) தச்ச்ருதே:= “யதேவ வித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம்” வித்யையை அங்கமாக்உடைய கர்மமே பலப்ரதமாகிறதென்று சொல்லுகையாலே வித்யை கர்மாங்கம். ௪௨௨.

ஸூ || ௪௨௩. ஸமந்வாரம்பணாத்.

(ஶ்ரீ- பா- வ்யா- ஸா) ஸமந்வாரம்பணாத் = “தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே” பரலோகம்போகிற புருஷனை வித்யையும் கர்மமும் பலத்தைக் கொடுக்கைக்காகப்பினசெல்லுகிறதுகள் என்கையாலே கேவலவித்யை மாத்திரம் பலப்ரதமன்று, இரண்டும் சேர்ந்தே பலப்ரதமாகிறது. ௪௨௩.

ஸூ || ௪௨௪. தத்வதோ விதாநாத்.

(ஶ்ரீ- பா- வ்யா- ஸா) தத்வத:= வேதாந்தவித்யையுள்ளவனுக்கு. விதாநாத்= “ஆசார்யகுலாத்வேதமதீத்ய” என்றுதொடங்கி, “குடும்பே ஶுசௌ தேஶே” இத்யாதியினால் ஸாங்கோபாங்கத்தில் வேதாத்யயநம் செய்தபின்பு ஒரு சுசியானஇடத்திலிருந்து க்ருஹஸ்ததர்மத்தை யநுஷ்டிக் கக்கடவனென்று கர்மத்தைவிதிக்கையாலே (வித்யை கர்மத்துக்கங்கமாகக்கடவது.)

ஸூ|| ௪௨௫. நியமாச்ச.

(ஶ்ரீ-பா-வ்யா-ஸா) நியமாச்ச= “குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா:” இந்ததேஹத்தில் இருந்து கர்மங்களை யநுஷ்டித்துக்கொண்டே நூறுவருஷம்பிழைக்க இச்சிக்கக்கடவனென்று யாவதாயுஷம்கர்மத்தைச்செய்யவேணுமென்கையாலே, (கர்மமேபலப்ரதம் என்று பூர்வபக்ஷிமதம். ௪௨௫.

ஸூ|| ௪௨௬. அதிகோபதேஶாத்து பாதராயணஸ்யைவம் தத்தர்ஶநாத்.

(ஶ்ரீ- பா- வ்யா-) அதிகோபதேஶாத்= ஜீவனைக்காட்டிலும் அதிகமானவனை (வேதாந்தத்தில்) உபதேசிக்கையாலே, தத்தர்ஶநாத்= அந்த பரமபுருஷோபதேசமே (ஸ்பஷ்டமாகக்) காண்கையாலே, பாதராயணஸ்ய= வ்யாஸபகவானுக்கு, ஏவம்= வித்யையேபலப்ரதமென்றேமதம்.

(ஶ்ரீ-பா-ஸா) இந்த பூர்வபக்ஷத்தை நிரஸநம்செய்கிறார். வேதாந்தத்தில் யா காதிகர்த்தாவாகிய ஜீவனைச்சொல்லவில்லை. "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" "ஸோகாமயத" "ததைக்ஷத" இத்யாதிகளினால், ஸர்வஜ்ஞனாய் தன்னுடைய இச்சா மாத்ரத்தினால் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறவனானவனைச் சொல்லி அவனுடைய உபாஸ நத்தை விதித்து அவ்வுபாஸநம் பலப்ரதமென்று சொல்லிற்று இவ்விதமான புருஷன் ஜீவனாகான், ஆகையால் பரமபுருஷோபாஸநமே ஸாக்ஷாத் பலப்ரதமென்ற வ்யாஸ பகவானுடைய ஸித்தாந்தமே சரியானது. ௪௨௯

ஸூ|| ௪௨௭. துல்யம் து தர்சநம்.

(ஶ்ரீ-பா-வ்ய) தர்சநம்=ஆசாரதர்சனமானது; துல்யம்=(வித்யை யேப்ரதாநமென்பதிலும்) ஸமாநம்.

(ஶ்ரீ - பா- ஸா-) ப்ரஹ்மவித்துகளும் கர்மாநுஷ்டாநம் செய்கை வித்யை கர் மாங்கமென்பதற்கு ப்ரமாண மென்றீர்கள். "ருஷயஸ்காவஷேயா: கிமர்த்தா வயமத்யேஷ்யாமஹே கிமர்த்தா வயம் யக்ஷ்யாமஹே" என்று ப்ரஹ்மவித்துக்களான சில ருஷிகள், கர்மத்தினால் ப்ரயோஜநமில்லையென்று விட்டுவிட்டதாகவும் சொல்லி யிருக்கையாலே, நீங்கள் சொன்னது, வித்யை கர்மாங்கமென்பதற்கு ப்ரமாணமாக மாட்டாது. ஆகில் கர்மத்தைச் சிலர் பண்ணுவதுக்கும் சிலர் விடுவதுக்கும் தாத்பர்ய மென்னென்னில், பலாபிஸந்திரஹிதமான கர்மம் வித்யாங்கமாகையாலே செய்ய வேணும். பலாபிஸந்தி ஸஹிதமான கர்மம் பந்தகமாகையாலே அதை விட்டுவிடவே ணுமென்று தாத்பர்யம். ௪௨௭

ஸூ|| ௪௨௮. அஸார்வத்ரிகீ.

(ஶ்ரீ-பா-வ்ய-ஸா) அஸார்வத்ரிகீ="யதேவ வித்யயா" இத்யாதியினால் வித்யை கர்மாங்கமென்று எல்லா வித்யையையும் சொல்லவில்லை. உத்கீதவித் யையை மாத்திரம் கர்மாங்கமாகச்சொல்லிற்று. ஆகையால் வித்யைக்ளெல் லாம் கர்மாங்கமென்பது அப்ராமாணிகம். ௪௨௮.

ஸூ|| ௪௨௯. விபாக ஶ்ஶதவத்.

(ஶ்ரீ-பா-வ்ய) ஶதவத்=நூற்றைப்போல், (விஷய பேதேந) விபாகம் (சொல்லவேணும்).

(ஶ்ரீ - பா- ஸா) "தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே" என்பதற்கு, பர லோகம் போகிறவனைக்குறித்து, வித்யை தன்னுடைய பலத்தைக் கொடுக்கைக்காக வும், கர்மம் தன்னுடைய பலத்தைக் கொடுக்கைக்காகவும் அநுஸரிக்கிறதுகள் என் றர்த்தம். இதனால் வித்யை கர்மத்துக்கு அங்கமென்று ஏற்படவில்லை. பூமியையும் ரத்நத்தையும் விற்றவனுக்கு இருநூறு ரூபாய் கொடு என்றால் பூமிக்காக நூறு ரூபா யும்ரத்நத்துக்காக நூறு ரூபாயும் கொடுப்பதாக ஏற்படுகிறாப்போலே இங்கும் கண்டு கொள்வது. ௪௨௯

ஸூ|| ௪௩௦. அத்யயநமாத்ரவத:.

(ஶ்ரீ-பா-வ்ய) அத்யயநமாத்ரவத:=(வேதத்தை) அத்யயநம்மாத்திரம் செய்தவனுக்கே, கர்மத்தைவிதித்திருக்கிறது. ௪௩௦.

(ஶ்ரு - ப்ர - ஸா) "குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத்" இத்யாதியில், வேதாந்தயயநம், அதாவது-அக்ஷரராசிக்ரஹணம் மாத்ரம் பண்ணினவனுக்கே கர்மத்தைப்பண்ணச்சொல்லிற்று, அர்த்தவிசாரம் செய்தவனைச் சொன்னபோதிலும், இங்கு வித்யையென்பது உபாஸநமாகையாலே அதைச் செய்கிறவனை அங்குச் சொல்லவேயில்லை.

ஸூ|| ௩௱௧௩. நாவிஶேஷாத்.

(ஶ்ரு - ப்ர - வ்ரு) அவிஶேஷாத் = விசேஷ்ஹேது வில்லாமையாலே, ந = அந்தநியமமில்லை. ௩௱௧௩.

(ஶ்ரு - ப்ர - ஸா) "குர்வன்னேவேஹ கர்மாணி" என்கிற ஶ்ருதி, ஆயுஸ்ஸையெல்லாம் கேவல கர்மத்திலேயே போக்கவேணுமென்கிறதென்பதற்கு ஒரு யுக்தியும் கிடையாது. அவ்வாக்யம், ஈசவித்யைக்கங்கமாக யாவதாயுஷம் கர்மாநுஷ்டாநம் பண்ணச்சொல்லிற்று. அதனால் வித்யை கர்மாங்கமென்று ஏற்படாது. ௩௱௧௩

ஸூ|| ௩௱௧௪. ஸ்துதயேऽநுமதிர்வா.

(ஶ்ரு - ப்ர - வ்ரு) ஸ்துதயே = ஸ்தோத்ரம் செய்கைக்காக, அநுமதிர்வா = (கர்மத்துக்கு) அநுமதியே பண்ணப்பட்டது. ௩௱௧௪.

(ஶ்ரு - ப்ர - ஸா) இதில் அந்த ஶ்ருதியின் வாஸ்தவமான அர்த்தத்தை வெளியிடுகிறார். அங்கு ஈசவித்யையைச்சொல்லி, இந்த உபாஸகன் கர்மாநுஷ்டாநம் செய்தபோதிலும் இந்த வித்யா மாஹாத்ம்யத்தினால், அக்கர்மங்களினாலுண்டான பலம் இவனையடைந்து இவனுக்கு ஸம்ஸாரத்தை விளைக்காதென்றே சொல்லிற்று. ௩௱௧௪

ஸூ|| ௩௱௧௫. காமகாரேண சைகே.

(ஶ்ரு - ப்ர - வ்ரு) ஏகே = சிலர், காமகாரேண = யதேச்சமாகவே, (கர்மத்யாகத்தைச்சொல்லுகிறார்கள்). ௩௱௧௫.

(ஶ்ரு - ப்ர - ஸா) "கிம் ப்ரஜயா கரிஷ்யாமோ யேஷாம் நோऽயமாத்மா" என்று தொடங்கி ஒரு சாகையில் ப்ரஹ்மவித்துக்கள் கர்மத்தை விட்டுவிட்டார்களென்று சொல்லியிருக்கின்றது. இதனால் வித்யையே முக்யமென்று ஏற்படுகிறது. ௩௱௧௫

ஸூ|| ௩௱௧௬. உபமர்தம் ச.

(ஶ்ரு - ப்ர - வ்ரு - ஸா) உபமர்தம் ச - "க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே" என்று ப்ரஹ்மவித்யையினால் இவனுடைய ஸகலகர்மங்களும் நசிக்கின்றனவென்று சொல்லியிருக்கிறது; வித்யை கர்மாங்கமானால் இதுகூடாது. ௩௱௧௬.

ஸூ|| ௩௱௧௭. ஊர்த்வரேதஸ்ஸு ச ஶப்தே ஹி.

(ஶ்ரு - ப்ர - வ்ரு - ஸா) ஊர்த்வரேதஸ்ஸு ச - (ஜநகாதிகளான) ஊர்த்வரேதஸ்ஸுக்களிடத்திலும், ப்ரஹ்மோபாஸகம் காண்கையாலே, அவர்களுக்கு அக்நிஹோத்ராதி கர்மங்களில்லாமையாலே வித்யை கர்மாங்கமென்னக்கூடாது. வித்யையே ப்ரதாநமாய் பலப்ரதமாகிறதென்று அங்கீகரிக்கவேணும். ப்ராஹ்மணாதிகள் ஓராஶ்ரமத்தைப்பற்றியிருக்கவேணும், ஊர்த்வரேதஸ்ஸென்று தனியேயோராஶ்ரமம் கிடையாதேயென்னில், "த்ரயோ தர்மஸ்கந்தா:" "அத ஏவ ப்ரவ்ராஜிநோ லோ

ககிஷுகஃ வ்ரவ்ரஜந்தி" என்றும் "யெமெஹொமெணெவ்ரு ஸ்ராதஸ்தவாஜாயா வஸெத" என்றும் இத்யாதியான ஸ்ரௌதவாக்ய - வேதசப்தத்திலேதானே. (ஸந்யா ஸாஸ்ரமமுண்டென் றேற்படுகிறது.) ஆகையால் வித்யையானது கர்மாங்கமன்று, தானே ப்ரதானமாய்க்கொண்டு பலப்ரதமாகிறதென்று ஸித்தாந்தம். ௪௩௫

ஸூ|| ௪௩௬. பராமர்சம் ஜைமினிரசோதநாசாபவததி ஹி.

(ஸ-ரா-வ்ர) அசோதநாத்=விதியாமையாலே, ஜைமினிஃ= ஜைமினியென்பவர், பராமர்சம்=(ஸந்யாஸாஸ்ரமத்துக்கு) அநுவாதத்தைதயே கல்பிக்கிறார். (கஸி)ஹி=மேலும், அபவததி ஹி= (வேதம் அவ்வாஸ்ரமத்தை) நிந்திக்கிற தன்று. ௪௩௬.

(ஸ - ரா- ஸா) இதில் அவ்வாஸ்ரம மில்லையென்று பூர்வபக்ஷி மதம் சொல்லுகிறது. ஊர்த்வரேதஸ்ஸென்கிற ஆஸ்ரமமொன் றுண்டென்பதற்கு "த்ரயோதர்மஸ்கந்தாஃ" தர்மத்துக்கு ஆதாரபூதமான ஆஸ்ரமங்கள் மூன்றென்பதை ப்ரமாணமாக எடுத்தார். இந்த வாக்யம், இம்மூவரும் மோக்ஷத்தையடையார்கள், ப்ரஹ்மோபாஸகனே மோக்ஷத்தையடைவான் என்று ப்ரஹ்மோபாஸநத்தை ஸ்துதிக்கைக்காகஸந்யாஸாஸ்ரமத்தை யெடுத்ததொழிய, அதை யநுஷ்டிக்க வேணுமென்று விதிக்கவில்லை. விதியில்லாமல் அநுவாதமாத்ரம் செய்யப்பட்ட அர்த்தம் ப்ரமாணமாகமாட்டாது. மேலும், "வீரஹாவா ஏஷதேவாநாம் யோக்நிமுத்வாஸயதெ" என்று அக்நிஹோத்ராதிகளைச் செய்யாதவனை தேவர்களுக்கு வீரஹத்யைப்பண்ணினனாக நிந்திக்கையாலே ஸந்யாஸமென்றோ ராஸ்ரமமில்லை யென்றார். ௪௩௬

ஸூ || ௪௩௭. அநுஷ்டேயம் பாதராயணஸ்ஸாம்யஸ்ருதெஃ.

(ஸ-ரா-வ்ர) ஸாம்யஸ்ருதெஃ= (நாலு ஆஸ்ரமங்களையும்) ஸமாநமாகச் சொல்லுகையாலே, அநுஷ்டேயம்=(ஸந்யாஸாஸ்ரமத்தை) அநுஷ்டிக்கத்தக்கதாக, பாதராயணஃ=பாதராயணர்(சொன்னார்) ௪௩௭.

(ஸ - ரா- ஸா) அம்மதத்தை நிரஸிக்கிறார். "த்ரயோதர்மஸ்கந்தாஃ" என்று க்ருஹஸ்த்தாஸ்ரமம் போலவே ஸந்யாஸாஸ்ரமத்தையும் ஸமாநமாக எடுத்திருக்கையாலே அதைப்போல் இவ்வாஸ்ரமத்தையும் அநுஷ்டிக்கவேணுமென்பது ப்ராமாணிகம். அநுவாதம் செய்யும்போது அதுக்கு வேறோரிடத்தில் விதியிருக்கவேணுமாகையால் இவ்வாக்யத்தில் ஸந்யாஸ விதியில்லாவிடிலும் இங்கு அநுவதிப்பதற்காக அதற்குரித்தாக மற்றோரிடத்தில் விதியை கல்பிக்கவேணுமென்று பாதராயண பகவான் சொன்னார். ௪௩௭

ஸூ|| ௪௩௮. விதிர்வா தாரணவத்.

(ஸ- ரா- வ்ர) தாரணவத்=(ஸமித்தினுடைய) தாரணத்தைப்போலே, விதிர்வா=ஸந்யாஸாஸ்ரமத்துக்கும் விதியேஉண்டு. ௪௩௮.

(ஸ - ரா- ஸா) "த்ரயோதர்மஸ்கந்தாஃ" என்கிற வாக்யத்திலேயே நாலு ஆஸ்ரமங்களுக்கும் விதி கல்பிக்கவேணும். "அதஸ்ஸமிதம் தாரயந் அநுத்ரவெத்" என்று ப்ரேதாக்நிஹோத்ரத்தில் ஸ்ருக்கு என்கிற பாத்ரத்துக்குக் கீழே ஸமித்தைவைத்து உபஸர்ப்பணம் பண்ணவேணும்; தேவதைகளைக் குறித்துச் செய்கி

ற நித்யாக்நிஹோத்ரத்திலன்றே ஸமித்தை ஸ்ருக்கின் மேலே வைத்து உபஸர்பணம் பண்ணுவது என்று சொல்லிற்று. இங்கு தைவிககார்யத்தில் ஸமித்தைமேலேவைக்க வேணுமென்பதற்கு விதிப்ரத்யயம் கிடையாது, ஆகிலும் இவ்வர்த்தம் வேறேரிடத்தில் சொல்லாமையாலே அதை இவ்வாக்யம் விதிக்கிறதென்றே ஜைமிநி அங்கீகரித்திருக்கிறார். அதுபோலவே இங்கும் விதிப்ரத்யய மில்லாவிடிலும் விதி கல்பிக்கவேணும். யாவதாயுஷம் கர்மத்தை விதித்த ஶ்ருதிகள் அவிரக்தவிஷயம் ஆஶ்ரமாந்தரவிஷயம் என்று அங்கீகரிக்கையால் அவை இதுக்கு பாதகமாகாது என்று ஸித்தாந்தம்.

ஈயி. சகூ. ஸூ. சருசு. ஸ்துதிமாத்ரமுபாதாநாதிதி சேந்நாபூர்வத்வாத்.

(ஶ்ரீ- ரா- ப்ர) உபாதாநாத்=(உத்கீதத்துக்குரஸதமத்வம்) சொல்லுகையாலே, ஸ்துதிமாத்ரம்=ஸ்தோத்ரமே, (விதியன்று), இதி சேத்=என்னில், அபூர்வத்வாத்=(இவ்வர்த்தம்) அபூர்வமாகை (எங்கும்சொல்லாமை) யாலே, ந=ஸ்துதிமாத்ரமன்று. சஉசு.

(ஶ்ரீ - ரா- ஸா) கீழ் ஸர்வாஶ்ரமங்களிலும் ப்ரஹ்மோபாஸகனே சிறந்தவனென்று துதித்தது; இவ்வதிகரணத்தில், அதைப்போல் சாந்தோக்யத்திலுள்ள உத்கீதாவயவ விஷயமான வாக்யம் ஸ்துதியா, அல்லது விதியாவென்று விசாரிக்கிறார். "ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத| ஓமிதி ஹ்யுத்காயதி| தஸ்யோபவ்யாக்யாநம்|ஏஷாம் பூதாநாம் ப்ருதிவீ ரஸ:| ப்ருதிவ்யா ஆபோ ரஸ:| அபாமோஷதயோ ரஸ:| ஓஷதீநாம் புருஷோ ரஸ:| புருஷஸ்ய வாக் ரஸ:| வாச ருக்ரஸ:| ருச: ஸாம ரஸ:| ஸாம்ந உத்கீதோ ரஸ:| ஸ ஏஷ ரஸாநாம் ரஸதம: பரம: பரார்த்ய: அஷ்டமோ யதுத்கீத:" உத்கீதாவயவமான ஓங்காரத்தை உபாஸநம் செய்யக்கடவன், ஓங்காரத்தை உத்காநம் செய்கிறான், அவ்வக்ஷரத்தினுடைய ப்ரபாவம் சொல்லப்படுகிறது. ஸர்வபூதங்களிலும் ஸாரமானது பூமி, அதிலும் ஸாரமானது ஜலம், அதிலும் ஸாரமானது ஓஷதி, அதிலும் ஸாரமானவன் புருஷன், அவனில் ஸாரமானது வாக்கு, அதில் ஸாரமானது ருக்கு, அதில் ஸாரமானது ஸாமம், அதில் ஸாரமானது உத்கீதம், இதுவே எல்லாவற்றிலும் ஸாரதமம், பரார்த்ய: பரமபுருஷனுடைய வாஸத்துக்கு யோக்யமானது என்று சாந்தோக்யத்தில் சொல்லியிருக்கிறது. இங்கு உத்கீதத்தை ஸாரதமமென்று ஸ்துதிக்கிறதா, அல்லது ரஸதமமாக த்யாநிக்கவேணுமென்று விதிக்கிறதாவென்னில், "இயமேவ ஜுஹூராதித்ய: கூர்ம: ஸ்வர்கோ லோக ஆஹவநீய:" யஜ்ஞத்தில் ஹோமஸாதநமான ஜுஹூ என்கிற பாத்ரம் ப்ருதிவி கூர்மமென்ற ஆஸநம் ஸூர்யன், ஆஹவநீயனென்ற அக்நி ஸ்வர்க்கலோகம் என்று ஜுஹூ முதலியவற்றை ஸ்துதித்தாற்போல், இங்கும், உத்கீதத்தை ரஸதமமாக ஸ்துதிக்கிறது, விதிப்ரத்யய மில்லாமையாலே இது விதியன்று என்று பூர்வபக்ஷம். முன்பு ஜுஹூ முதலியவற்றை யாகாங்கமாக விதித்துப்பின்பு "இயமேவஜுஹூ:" என்று சொல்லுகையாலே அவ்வாக்யம் ஸ்துதியாகலாம், அப்படி இங்கு இதற்கு முன்பு உத்கீதத்துக்கு ரஸதமத்வம் சொல்லாமையாலே, இது ரஸதமத்வ விதியேயாகவேணும். விதியாகில் ஒருபாஸநம் ஸித்திக்கிறது. ஸ்துதியாகில் அது நிரர்த்தகமாயிருக்கும். விதிவாக்யத்தையடுத்து ஸ்துதிவாக்ய மிருந்தால் அது ருசி ஜநகமாய் ஸ்பலமாம்; விதியில்லாத கேவலஸ்துதி நிஷ்ப்பலமாகையால் இது விதியென்று ஸித்தாந்தம்.

ஸூ|| ௪௬௦. ஸாவஶப்தாத்.

(ஶ-ரா-வ்ரு) ஸாவஶப்தாத்=விதிப்ரத்யயத்தோடுகூடினக்ரியாபதமிருக்கையாலும் (இதுவிதியே). ௪௬௦.

(ஶ்ரு- ரா- ஸா) கீழ், விதிப்ரத்யயமில்லை என்று பூர்வபக்ஷிசொன்னதை யங்கீகரித்து ஸமாதாநம் சொன்னார். இதில் " உத்கீதமுபாஸீத " என்று வாக்யத்திலுதியில் விதிப்ரத்யயாந்தமான க்ரியாபதமிருக்கையாலே இதுவிதியென்னக் குறையில்லை யென்கிறார். ௪௬௦

அதி. ௧௧௧. ஸூ|| ௪௬௧. பாரிப்லவார்தா இதிசேந்நவிசேஷிதத்வாத்||

(ஶ-ரா-வ்ரு) பாரிப்லவார்தா: = (உபாக்யாநங்கள்) ஸ்துத்யர்த்தங்கள், இதிசேத்=என்னில், விசேஷிதத்வாத்=அவ்வுபாக்யாநங்களை விசேஷித்துச்சொல்லுகையாலே, ந=எல்லா உபாக்யாநங்களும் ஸ்துத்யர்த்தமன்று.

(ஶ- ரா- ஸா) " ப்ரதர்தநோ ஹ தைவோதாஸிர் இந்த்ரஸ்ய ப்ரியம் தாமோபஜகாம " " ஜாநஶ்ருதிர்ஹ பௌத்ராயண: ஶ்ரத்தாதேயோ பஹுதாயீ பஹுபாக்ய ஆஸ " " ஶ்வேதகேதுர்ஹாருணேய: " இத்யாதியாக உபநிஷத்துக்களில் அநேகர்களுடைய கதைகளைச் சொல்லி யிருக்கிறது; அவைகளை யாகத்தில் யஜமானனைக் குறித்து ருத்விக்குக்கள் சொல்லவேண்டிய கதைகளாக அங்கீகரிக்கவேணுமா, அல்லது, மேல்சொல்லப்போகிற அவ்வவ ப்ரஹ்மோபாஸநத்தில் கேட்கிறவர்களுக்கு ருசி பிறக்கைக்காக அவ்வவ வித்யைகளை ஸ்துதிக்கிறவென்று கொள்ளவேணுமா வென்னில்; அஶ்வமேதத்தில் புத்ராதிகளோடு கூடியிருக்கிற யஜமாநனைப்பார்த்து ருத்விக்கு மநுவாதி கதைகளைச் சொல்லவேணுமென்று சொல்லி யிருக்கையாலே, இவைகளும் கதைகளாகையாலே அப்படி கதை சொல்லுகையிலேயே உபயோகிக்கவேணு மென்றான் பூர்வபக்ஷி. அஶ்வமேதத்தில் " மநுர்வைவஸ்வதோ ராஜா " இத்யாதி " ப்ரதமே ஹநி " என்று தொடங்கி, முதல் திநம் தொடங்கி கடைசிவரையில் இந்த இந்த திநங்களில் இந்த இந்த கதைகளைச் சொல்லவேணுமென்று அக்கதைகளைப் பிரித்துக் குறித்துச் சொல்லியிருக்கையாலே இவைகள் அதில் சேராமையாலே, இவைகள் வித்யாப்ரரோசநார்த்தங்களென்று ஸித்தாந்தி சொல்லுகிறார். ௪௬௧

ஸூ|| ௪௬௨. ததாசைகவாக்யதோபந்தாத்.

(ஶ-ரா-வ்ரு) ததாச=அப்படியே, ஏகவாக்யதோபந்தாத் (விதிவாக்யத்தோடு) ஏகவாக்யமாக அந்வயிக்கையாலே, (இவைவித்யாஸ்தாவகங்கள்),

(ஶ - ரா- ஸா) இப்படிசொல்லில் வித்யாவிதி வாக்யத்தோடு அந்வயித்து ஏகவாக்யமாயிருக்கும். இப்படி சொல்லில் இவ்வாக்யத்துக்கு, வித்யையில் ருசியை யுண்டு பண்ணுகையாகிற ப்ரயோஜநமும் ஸித்திக்கிறது. கேட்கிறவனும் அவ்வித்யையை ஸுகமாக அறிகிறான். ஆகையாலிதுவே யுக்தம். கர்மகாண்டத்தில் " ஸோரோதீத் " என்கிறவாக்யம் கர்மவிதி சேஷமானாற்போல் லிங்கும் கண்டுகொள்வது. ௪௬௨

அதி. ௧௧௬. ஸூ|| ௪௬௩. அக்நீந்தநாத்யநபேக்ஷா:

(ஸ-வ்யா-ஸா) அதஏவ=ப்ரஹ்மவித்யையேஸாக்ஷாத் மோக்ஷப்ரதமாகை யாலே, அக்நீந்தநாத்ய நபேக்ஷா=அக்நிஸமித்து இவைகளினுலுண்டான கர்மாபேக்ஷைகிடையாது. வித்யை மோக்ஷத்தைக் கொடுக்கும்போது கர்மத்தை ஸஹகாரியாக அபேக்ஷியாதென்றுகருத்து. • ௪௪௩.

(ரா-வ்யா) அதஃ ஏவ=ஊர்த்வ ரேதஸ்ஸுக்களுக்கு வித்யாதிகாரமுண்டாகையாலே, அக்நீந்தநாத்ய நபேக்ஷா=அக்ந்யாதாநம் அக்நிஹோத்ரம் முதலிய கர்மாபேக்ஷை அவர்களுக்குக்கிடையாது. ௪௪௩.

(ரா - ஸா) "யதிவேதரா ப்ரவ்ரஜேத் க்ருஹாத்வா வநாத்வா" இத்யாதிகளினுல் ஊர்த்வரேதஸ்ஸுக்களான ஸந்யாஸிகளுக்கும் ப்ரஹ்மோபாஸநம்செய்ய அதிகாரமுண்டென்று ஏற்படுகையாலே, அவர்கள் செய்யும் உபாஸநம் அக்நிஹோத்ராதி கர்மங்களை அங்கமாக அபேக்ஷியாது. அவ்வவ ஆஸ்ரமாநுகுணமான கர்மங்களே வித்யாங்கமாகையாலே, ஸந்யாஸிகளுக்கு அக்ந்யதிகாரமில்லாமல் போனபோதினும், அவர்களுடைய தர்மமாகிய தபஸ்ஸு ப்ரஹ்மசர்யம் முதலியவைகளினுலேயே அவர்களுடைய உபாஸநம் நிறைவேறுமென்று பாவம். ௪௪௩.

அபி. ௧௧௬. ஸூ|| ௪௪௪. ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதிஶ்ருதேரஶ்வவத்.

(ஸ-ரா-வ்யா) யஜ்ஞாதிஶ்ருதேஃ= "யஜ்ஞேந தாநேந" இத்யாதிவேதவாக்யத்தினுல், அஶ்வவத்=குதிரைபோல், ஸர்வாபேக்ஷா=(வித்யை)ஸகலகர்மங்களினுடைய அபேக்ஷையையுடையது. ௪௪௪.

(ஸ - ஸா) ஆனுல் ப்ரஹ்மவித்யைக்கு ஒரு கர்மமும் ஸஹகாரியாகவேண்டியதில்லையா, அல்லது, ஏதாவது சில கர்மங்கள்வேணுமா வென்னில், அவ்வவ ஆஸ்ரமங்களுக்குரிய ஸகல கர்மங்களையும் ப்ரஹ்மவித்யைக்கு ஸஹாயமாகச்செய்யவேண்டியதுதான். முன் ஸூத்ரத்தில் வேண்டாமென்று சொல்லிற்றே யென்னில், அங்கு வித்யையினுல் மோக்ஷமுண்டாம்போது கர்மத்தினுல் உபயோகமில்லை யென்றது; இங்கு, அநாதிவாஸனையினுல் மனம் கலங்கியிருப்பதினுல் அதில் ப்ரஹ்மவித்யை யுண்டாகாது, அதற்காகக் கர்மங்களைச் செய்தால் அவ்வாஸனைகழிந்து மநஸ்ஸு நிர்மலமாய்ப் பின்பு அதில் ப்ரஹ்மவித்யை யுண்டாகும் ஆகையால் வித்யோத்பத்திக்கு கர்மாபேக்ஷையுண்டென்று சொல்லுகிறது. ஆகையால் இரண்டுக்கும் விரோதமில்லை. இதற்கு உதாஹரணம். ஒரு குதிரை ஏர் உழ உபயோகியாது, அது தேரை இழுக்க உபயோகிக்கும். அதுபோல் கர்மமும் பலத்தில் உபயோகியாது. வித்யோத்பத்தியிலுபயோகிக்கும். ௪௪௪

(ரா - ஸா) க்ருஹஸ்த்தன் ப்ரஹ்மோபாஸநம் செய்யும்போது யஜ்ஞாதி கர்மம்வேணுமா வேண்டாமாவென்று விசாரிக்கில், ஸந்யாஸிக்குக் கர்மாநுஷ்டானமில்லாமலே உபாஸநம் நிறைவேறுகையாலே க்ருஹஸ்த்தனுக்கும் அவ்வபேக்ஷையில்லை. ஒருஸ்வர்க்கத்தைக் குறித்து இருவர் ஒருயாகத்தைச் செய்தார்களாகில் அவர்களில் ஒருவனுடைய யாகத்துக்கு இவ்வங்கங்களுண்டு, மற்றொருவனுக்குக் கிடையாதென்று பேதம்கிடையாது. அதுபோல் ஸந்யாஸியினுடையவும் க்ருஹஸ்த்தனுடையவும் உபாஸநத்துக்கு அங்கத்தில் பேதம் கிடையாது என்று பூர்வபக்ஷம். "யஜ்ஞேந தாநேந தபஸா நாஶகேந" இத்யாதி ஶ்ருதி க்ருஹஸ்த்தனுக்கு யஜ்ஞாதிகளை அங்கமாகக்கொண்டே ப்ரஹ்மோபாஸநம் செய்யச்சொல்லுகையாலே க்ருஹஸ்த்தனுக்கும் கர்மங்களை யநுஷ்டித்துக்கொண்டே உபாஸநம் செய்யவேண்டும்.

வேட்டைக்காகக் குதிரையேறும்போது அதைக்கடிவாளம்முதலியவற்றினால் பூட்டியே ஏறவேண்டுமோப்போலே இங்கும் கண்டுகொள்வது. ஆஸ்ரமபேதத்தாலே அங்கபே தம்சாஸ்த்ர ஸித்தமாகையாலே தோஷமன்று என்று ஸித்தாந்தம். ௪௪௪.

௩௰. ௧௧௪. ஸூ || ௪௪௫. ஶமதமாத்யுபேதஸ்யாத் ததாபி து தத்விதேஸ்ததங்கதயா தேஷாமவஶ்யாநுஷ்டேயத்வாத்.

(ஶ- ரா- ஞ) ததாபி= ஆனபோதிலும், ததங்கதயா= வித்யைக்கு அங்கமாக, தத்விதே:=சமாதிகளை விதிக்கையாலே, தேஷாம= அவைக ளையும், அவஶ்யாநுஷ்டேயத்வாத் = அவஶ்யம் அநுஷ்டிக்கவேண்டுகையா லே, ஶமதமாத்யுபேத:ஸ்யாத்=சமதமாதிகளோடே கூடினவனாகவே ஆகக் கடவன். ௪௪௫

(ஶ -ஸா-) "யஜ்ஞேந தாநேந" என்கிறஸ்ருதியில் "ப்ராஹ்மணா விவிதி ஷந்தி" யஜ்ஞாதிகளை ஸாதநமாகக்கொண்டு ப்ரஹ்மஸ்வரூபத்தை அறிய விரும்புகி றார்கள் என்றே சொல்லிற்று, "அறியவேண்டும்" என்று விதிக்கவில்லை, ஆகையால் இந்த அநுவாத வாக்யம், ப்ரஹ்ம வித்யைக்கு யஜ்ஞாதிக ளங்கமென்பதற்கு ப்ரமாண மாக மாட்டாதென்றுவரில், யஜ்ஞாதிகளை அங்கமாக விதியாவிடிலும், "ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வாத்மந்யேவாத்மாநம் பஶ்யேத்" என்கிற வாக்யத்தில் "பஶ்யேத்" என்று சமதமாதிகளையுடையவனா ய்க்கொண்டு ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத் கரிக்கக்கடவனென்று சமாதிகளை ஸாதநமாக விதிக்கையாலே, சாஸ்த்ரத்தில் விதித்தபடியே செய்யவேண்டுகையாலே ப்ரஹ்ம வித் யைக்குசமதமாதிகள் அங்கமாகக்கடவன. "விவிதிஷந்தி" என்கிறஸ்ருதியில் யஜ் ஞாதிகளை அங்கமாக விதியா விடிலும் இவ்வர்த்தம் மற்றோரிடத்தில் சொல்லப்படா மையாலே அதையும் விதியாகவே கொள்ளவேணும் என்று ஸித்தாந்தம். ௪௪௫

(ரா - ஸா) க்ருஹஸ்த்தன் ப்ரஹ்மோபாஸநம் செய்யும்போது சமதமாதி குணங்கள் வேணுமா வேண்டாமா வென்னில், யஜ்ஞாதிகளைச் செய்யும்போது மநஸ் ஸையும் சக்ஷுராதிபாஹ்யேந்த்ரியங்களையும் ப்ரவர்த்திக்கச்செய்யவேணும்;சமதமங்க ளாகிறன-அவ்விந்த்ரியங்களை எங்கும் ப்ரவர்த்திக்கவொட்டாமல் தடுக்கை. இவை யி ரண்டுமொருவனுக்குக் கூடாமையால் இவைக்ருஹஸ்த்தனுக்கு வேண்டியதில்லையெ ன்று பூர்வபக்ஷம் "ஶாந்தோ தாந்த:" என்று துடங்கி "ஆத்மாநம்பஶ்யேத்" என்று சமதமாதிகளோடே கூடினவனையே ப்ரஹ்மோபாஸநம் பண்ணக்கடவனென் று விதிக்கையாலும், ஏகாக்ரமாக த்யாநிக்கைக்கு மநஸ்ஸையும் மற்ற இந்த்ரியங்களை யும் எங்கும் போகவொட்டாமல் தடுக்கவேண்டுகையாலும் சமதமாதிகள் க்ருஹஸ்த்த னுக்கும் வேண்டியதுதான். இந்த்ரியங்களுக்கு ஒரேகாலத்தில் ப்ரவ்ருத்தியும் நிவ் ருத்தியும் கூடாதேயென்னில்; சாஸ்த்ர விஹிதகர்மங்களில் ப்ரவ்ருத்தியும் நிஷித்த கர்மங்களில் நிவ்ருத்தியும் சொல்லுகையாலே இரண்டும் கூடும். ஸத்கர்மத்தில் ப்ர வ்ருத்தியும் பாபத்தைப்போக்கி மநஸ்ஸை நிலைநிறுத்துகைக்கே காரண மாகிறது, ஆகையால் விரோதமில்லை என்று ஸித்தாந்தம். ௪௪௫

௩௰. ௧௧௫. ஸூ || ௪௪௬. ஸர்வாந்நாநுமதிஶ்ச ப்ராணாத்யயே தத்தர்ஶநாத்.

(ஶ- ரா- ஞ) தத்தர்ஶநாத்= அதையே ஸ்ருதிகளில் காண்கையாலே

ஸர்வாந்நாநுமதி = எல்லா அந்நத்தையும் புஜிக்க அநுமதியும், ப்ராணாத்யயே=ப்ராணநாசகாலத்தில் (சொல்லப்பட்டது). ௨௯

(ஶ்ரீ - ரா - பா) வாஜஸநேயத்திலும் சாந்தோக்யத்திலும் ப்ராணவித்யையில் "ந ஹவா அஸ்யாநந்நம் ஜக்தம் பவதி" இந்தப்ராணோபாஸகனுக்கு பக்ஷிக்கத் தகாததொன்றுமில்லையென்று ஸர்வாந்நத்தையும் பக்ஷிக்கும்படி அநுமதிகொடுத்தது. இது அவ்வுபாஸகன் எக்காலத்திலும் இப்படி செய்யலாமென்றதா அல்லது ஏதோ ஒரு ஆபத் காலத்தில் செய்தால் தோஷ மில்லை யென்றதா வென்னில்; அதில் காலவிசேஷம் சொல்லாமையாலே எப்போதும் செய்யலா மென்றான் பூர்வபக்ஷி. "உஷஸ்திர்ஹ சாக்ராயண:" என்றுதொடங்கி, உஷஸ்தரென்கிற ருஷி துர்ப்பிக்ஷத்தில் குருதேசத்தில் போகும்போது பசியினால் வருந்தி ப்ராணன் போமளவுமானபின்பு, அங்கோரானைக்காரன் தின்று மிகுந்த உச்சிஷ்டமான கொள்ளைத் தான் பக்ஷித்துப் பின்பு அவன் கொடுக்கவந்த நீரை வாங்காமல், "இது நீ குடித்து மிகுந்த உச்சிஷ்டமான ஜலம், இதை நான் குடிக்கக்கூடாது, இக்கொள்ளைத் தின்னுவிடில் ப்ராணன்போய்விடும், ஆகையாலதை பக்ஷித்தேன், இனி ப்ராணபயமில்லை" என்று சொல்லி வேறோரிடத்தில்போய் நீர்குடித்தாரென் றிருக்கிறது. அதிக சக்தியுடைய ப்ரஹ்மோபாஸகரான அவருக்கே உச்சிஷ்டபோஜநம் தோஷமாகில் அல்பசக்தியான ப்ராணோபாஸகனுக்குச் சொல்லவேண்டா. ஆகையால் அந்நமில்லாமல் ப்ராணநாசம் நேரிடும் காலத்தில் எந்த அந்நத்தையாவது பக்ஷிக்கலாமென்றே சொல்லிற்று. மற்ற காலங்களில் பக்ஷிக்கக்கூடாதென்பது ஸித்தாந்தம். ௨௯

ஸூ|| ௨௯. அபாதாச்ச.

(ஶ்ரீ- ரா- பா-ஸா) அபாதாச்ச= ("ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி: ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:") பரிசுத்தமான ஆஹாரத்தை புஜித்தால் ஜ்ஞாநம் நிர்மலமாயிருக்கும், அதினால் உபாஸநம் தலைக்கட்டுமென்று பரிசுத்தமான ஆஹாரத்தையே புஜிக்கச்சொல்லுகிற ப்ரமாணங்களோடும் இப்போது) விரோதமில்லாமையாலே (இதுவே ஸித்தாந்தம்). ௨௯

ஸூ|| ௩௰. அபி ஸ்மர்யதே.

(ஶ்ரீ-ரா-பா-ஸா) ஸ்மர்யதே அபி=" ப்ராணஸம்ஶயமாபந்நோ யோ அந்நமத்தி யதஸ்தத: | லிப்யதே ந ஸ பாபேந" ப்ராணஸங்கடம் நேரிடும்காலத்தில் எந்தஅந்நத்தை புஜித்தாலும் அவனுக்குப்பாபம் ஸம்பவியாது என்று, ஸ்ம்ருதியும் ப்ராணாபத்காலத்திலேயே ஸர்வாந்நபக்ஷணத்தைச் சொல்லுகிறது. ௩௰

ஸூ|| ௩௧. ஶப்தஶ்சாதோ அகாமகாரே.

(ஶ்ரீ-ரா-பா-ஸா) அத:=ஆபத்காலத்திலேயே ஸர்வாந்நாநுமதி பண்ணினதாகையாலே, அகாமகாரே= யதேச்சபக்ஷணமில்லாத விஷயத்தில், ஶப்த: ச=சப்தப்ரமாணமுமிருக்கிறது. கடத்தில் "தஸ்மாத் ப்ராஹ்மணோ ந ஸுராம் பிபேத்" இத்யாதிப்ரமாணங்கள் ஸுராபாநாதிகளை நிஷேதிக்கிறதென்று தாத்பர்யம். ௩௧

அதி. ௧௧. ஸூ|| ௩௨. விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி.

(ஶ- ரா- வ்ய) விஹிதத்வாச்ச = விதித்திருக்கையாலே, ஆஶ்ரமகர்மாபி= (அக்நிஹோத்ராதிகள்) ஆஶ்ரமத்துக்கு அங்கமான கர்மமாகிறது.

(ஶ -ரா- ஸா) கீழ் அக்நிஹோத்ராதிகளை வித்யாங்கமாகச் சொல்லிற்று. எவனுக்கு மோக்ஷேச்சை பிறக்கவில்லையோ, கேவலம் க்ருஹஸ்த்த தர்மத்திலேமாத்திரம் நிற்கிறானோ, அவனுக்கு அக்நிஹோத்ராதிகள் ஆஶ்ரமாங்கமாகச்செய்யவேணுமா, வேண்டாமாவென்னில்; அவை ஆஶ்ரமத்துக்கு மங்கமாகில், நித்யமான மோக்ஷத்துக்கு ஸாதநமாகியவித்யைக்குமங்கமாய் அநித்யமான ஸ்வர்க்கத்துக்கு ஸாதநமாகிய ஆஶ்ரமத்துக்கு மங்கமாகவேண்டி வரும். ஒன்றே நித்யபலத்துக்கும் அநித்ய பலத்துக்கும் ஸாதநமாகக் கூடாதாகையால் அவை ஆஶ்ரமாங்கமன் றென்று பூர்வபக்ஷம். "யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரம் ஜுஹுயாத்" என்று பிழைத்திருக்கு மளவும் அக்நிஹோத்ரம் செய்யக்கடவனென்று கேவலாஶ்ரம நிஷ்டனுக்கும் விதிக்கையாலே அவை ஆஶ்ரமகர்மங்களுமாகின்றன. விநியோகமொன்றாகில் அது நித்யா நித்யங்களிரண்டுக்கும் ஸாதநமாகக்கூடாது; இங்கு ஒன்றே விநியோகபேதத்தாலே இரண்டுக்கும் ஸாதநமாகலாம். ஒரு அக்நிஹோத்ரமே ஜீவநாதிகாரமாகவும் ஸ்வர்க்க காமநாதிகாரமாகவு மநுஷ்டிக்கப்படுகிறது; அதுபோ லிங்கும் கண்டுகொள்வது. ௩௰௧.

ஸூ|| ௩௰௨. ஸஹகாரித்வேந ச.

(ஶ- ரா- வ்ய- ஸா) ஸஹகாரித்வேந ச= ("யஜ்ஞேந தாநேந" ப்ராஹ்மணா விவிதிஷந்தி" என்று வித்யாங்கமாகவும் விதித்திருக்கையாலே), வித்யாங்கமாகவும் அநுஷ்டிக்கவேணும். ௩௰௨

ஸூ|| ௩௰௩. ஸர்வதாபி த ஏவோபயலிங்காத்.

(ஶ- ரா- வ்ய- ஸா) ஸர்வதாபி= இரண்டிடத்திலும் விநியோகமிருந்தபோதிலும், உபயலிங்காத்= இரண்டிடத்திலும் "அக்நிஹோத்ரம்" இத்யாதியான நாமாதிகள் ஒன்றாயிருக்கையாலே, த ஏவ=அந்த அக்நிஹோத்ராதிகளே, கர்மபேதமில்லையென்றுகருத்து. ௩௰௩

ஸூ|| ௩௰௪. அநபிபவம் ச தர்ஶயதி.

(ஶ-ரா-வ்ய-ஸா) அநபிபவம் ச=வித்யையை ஆரம்பித்துபாபத்தினால்நிறைவேறாமையாகிற வித்யைக்குண்டான யாதொரு அபிபவமுண்டு, அதாவது-ப்ரதிபந்தகம், அதில்லாமையை-ப்ரதிபந்தகநாசத்தை, தர்ஶயதி="யஜ்ஞேந ஹ வா ஏவ நஷ்டி" அக்நிஹோத்ராதிதர்மாநுஷ்டாநத்தினால் வித்யாவிரோதியானபாபத்தைப்போக்குகிறானென்று ஶ்ருதி சொல்லுகிறது. ஆக, கர்மமானது ப்ரதிபந்தகநிவ்ருத்தித்வாரா வித்யைக்கு ஸஹகாரியாகையாலே, ஆஶ்ரமவிஷயத்திலும் வித்யாவிஷயத்திலு முபயோகிக்கிறதென்று தாத்பர்யம். ௩௰௪

அதி. ௰௭. ஸூ|| ௩௰௫. அந்தரா சாபி து தத்த்ருஷ்டே:.

(ஶ- ரா- வ்ய) தத்த்ருஷ்டே: = ஆஶ்ரமமின்றியே யிருக்கிறவர்களுக்கும் ப்ரஹ்மவித்யாநுஷ்டாநம் உபநிஷதாதிகளில் காண்கையாலே, அந்தரா ச= ஆஶ்ரமங்களினுடைய இடையிலே வர்த்திக்கிறவர்களுக்கும் (ப்ரஹ்மவித்யாதிகாரமுண்டு). ௩௰௫

(ஶ்ரு - ரா- ஹா) இவ்வதிகரணத்தில் அநாஶ்ரமிகளுக்கும் ப்ரஹ்மவித்யாதிகாரமுண்டென்கிறார்.—பத்நி மரணமடைந்தபின்பு வேறு விவாகம் செய்துகொள்ளாமல் அப்படியே யிருக்கிறவனுக்கு விதுரனென்றுபெயர். இந்த விதுரனுக்கும்; ப்ரஹ்மசர்யவ்ரதத்தைமுடித்துவிட்டுப்பின்பு கலியாணமில்லாமல் அப்படியே இருக்கிறவனுக்கும் ஓராஶ்ரமமுங்கிடையாது. இவர்கள் நிராஶ்ரமிகளென்றுசொல்லப்படுவார்கள். இவர்களுக்கு அக்நிஹோத்ராதியான ஆஶ்ரமகர்மங்களில்லாமையாலே அக்கர்மங்களை அங்கமாகவுடைய ப்ரஹ்மோபாஸநம் அவர்கள் செய்யக்கூடாதென்று சிலர் சொல்வார்கள்.—ரைக்வன் பீஷ்மன் ஸம்வர்த்தகன் முதலிய நிராஶ்ரமிகள் ப்ரஹ்மோபாஸநநிரதராயிருந்தார்களென்று உபநிஷத்து முதலிய க்ரந்தங்களில் ப்ரஸித்தமாயிருக்கையாலே. "யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி" என்கிற ஶ்ருதியில் தாநம் தபஸ்ஸு உபவாஸங்களையும் ப்ரஹ்மவித்யாங்கமாகச் சொல்லுகையாலே இவைகள் விதுராதிகளுக்கும்கூடுமாகையால் இவற்றையே அங்கமாகக்கொண்டு அவர்களும் ப்ரஹ்மோபாஸநம் செய்யலாமென்று ஸித்தாந்தம். ௩௰௪

ஸூ|| ௩௰௫. அபி ஸ்மர்யதே.

(ஶ்ரு-ரா-வ்யா-ஹா) ஸ்மர்யதே அபி=("ஜப்யேநைவ து ஸம்ஸித்த்யேத் ப்ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய:" ஜபத்தை அங்கமாகக் கொண்டு ப்ரஹ்மோபாஸநம் செய்கிறவனும் ஸித்தியையடைகிறான் இதில் ஸம்சயமில்லையென்று) தர்மசாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது, (ஆகையால், அவற்றிலதிகாரமுள்ள விதுராதிகள் ப்ரஹ்மவித்யாதிகாரிகளாகலாம். ௩௰௫

ஸூ|| ௩௰௬. விஶேஷாநுக்ரஹஶ்ச.

(ஶ்ரு-ரா-வ்யா-ஹா) விஶேஷாநுக்ரஹ: ச= ("தபஸா ப்ரஹ்மசர்யேண ஶ்ரத்தயா வித்யயாऽऽத்மாநமந்விஷ்ய" தபஸ்ஸு ப்ரஹ்மசர்யம் ஶ்ரத்தை வித்யை முதலானவற்றினால் பரமாத்மாவையறியக்கடவனென்று) தபஸ்ஸு முதலானவைகளினால் வித்யாநுக்ரஹம் (அதாவது அவைகளினால் வித்யாநிஷ்பத்தியை ஶ்ருதியும்) சொல்லுகையாலே, (அவர்களுக்கு வித்யாதிகாரமுண்டு.)

ஸூ|| ௩௰௭. அதஸ்த்விதரஜ்ஜ்யாயோ லிங்காச்ச.

(ஶ்ரு- ரா- வ்யா) லிங்காச்ச=ஸ்ம்ருதியினாலே, அத:=இந்த அநாஶ்ரமியாயிருக்கையைக்காட்டிலும், இதரத்=வேறான ஆஶ்ரமியாயிருக்கை, ஜ்யாய:=ஶ்ரேஷ்டம். ௩௰௭

(ஶ்ரு - ரா- ஹா) ஆகில் ஆஶ்ரமம் வ்யர்த்தமாய் விடுமென்னில்; "அநாஶ்ரமீ ந திஷ்டேத்து திநமேகமபி த்விஜ:" இத்யாதியான தர்மசாஸ்த்ரவசநங்கள், ப்ராஹ்மணன் ஓராஶ்ரமமின்றியே யிருக்கக்கூடாது, அப்படி யொருவருஷ மிருந்தானாகில் மூன்று க்ருச்ரம் ப்ராயஶ்சித்தமாகச் செய்யவேணுமென்று சொல்லுகையாலே நிராஶ்ரமியா யிருப்பதைக் காட்டிலும் ஓராஶ்ரமத்தை அவலம்பித் திருப்பதே உத்தமம். நிராஶ்ரமிக்கு வித்யாதிகாரம் சொன்னது, விவாஹத்துக்கு வேண்டிய தநம் முதலிய உபபத்தியில்லாதவனுக்கு இவ்விதமான ஆபத்காலத்தில் வித்யாதிகாரம் சொல்லிற்றென்று கருத்து. ௩௰௭

ஙஶ. ௧௧௮. ஸூ|| ௪௫௮. தஜூ-தஸ்ய து நாதஜூாவொ ஜைமிநெ ர பி நியமாதஜூ-பாவெஷ்ய:.

(ஶ-வ்யா) நியமாதஜூ-பாவாஷாவெஷ்ய: = நியமங்களினுலும் பதநாபாவத்தினுலும், தஜூ-தஸ்ய = ஸங்யாஸியானவனுக்கு, தஜூாவ: = ஸங்யாஸாஶ்ரமபங்கமானது, ந = கிடையாது. ஜைமிநெ: அபி = ஜைமினிக்குமிதுவே மதம்.

(ரா-வ்யா) தஜூ-பாவாஷாவெஷ்ய:=நைஷ்டிகாத்யாஶ்ரம தர்மப்ரச்யுதிகளில்நின்றும், நியமாத்=நியமிக்கையாலே, தஜூ-தஸ்ய= நைஷ்டிகாத்யாஶ்ரமியாயிருக்கை, ந=கிடையாது. ஜைமிநெ: அபி=ஜைமினிக்கும்இதுவே மதம்.

(ஶ - பா) ஸங்யாஸி, மறுபடியும் அக்நிஹோத்ராதிகளை யநுஷ்டிக்க வேணுமென்கிற ஶ்ரத்தையினுலாவது, ஸ்த்ரீஸம்போகாதிகளி லாசையினுலாவது க்ருஹஸ்த்தனுகில் அவன் செய்கிற கர்மம் வித்யாங்கமாகுமா ஆகாதாவென்றுவரில்; “ந சாவர்த்தநம்” மறுபடியும் ஸங்யாஸாஶ்ரமத்தில் நின்றும் திரும்பக்கூடாதென்றுசொல்லுகையாலும் “ப்ரஹ்மசர்யம் ஸமாப்ய” இத்யாதிகளினுல் ப்ராஹ்மணம் ப்ரஹ்மசர்யம் தொடங்கி ஸங்யாஸாஶ்ரமம்வரையில் ஏறவேணுமென்று சொன்னுற்போல், அங்கு நின்றும் திரும்பி கீழே இறங்குகையைச் சொல்லாமையாலும், அவன் திருப்பி க்ருஹஸ்த்தனுகக் கூடாதாகையால், அவன் செய்கிற கர்மம் வித்யாங்கமாகமாட்டாது. இம்மதமே ஜைமினி முதலிய பெரியோர்களுக்கும் ஸம்மதமென்று ஸித்தாந்தம். ௪௫௮.

(ரா - பா) நைஷ்டிக ப்ரஹ்மசாரி வாநப்ரஸ்த்தன் ஸங்யாஸி இவர்கள் தங்களாஶ்ரமத்தில் நின்றும் தவறினுர்களாகில் இவர்களுக்கு ப்ரஹ்ம வித்யாதிகாரமுண்டா இல்லையா வென்று விசாரிக்கில்; ஆஶ்ரமத்தில் நின்றும் தவறினவர்களுக்கு ஆஶ்ரம தர்மமில்லாவிடினும், விதுராதிகளைப்போல் தபஸ்ஸு முதலிய ஸாமாந்ய தர்மமுண்டாகையாலே, அவற்றைக்கொண்டு ப்ரஹ்மவித்யையை யநுஷ்டிக்கலாமென்றுர்கள் சிலர்; “ப்ரஹ்மசார்யாசார்யகுலவாஸீ” இத்யாதி “த்ருதீய ஆசார்யகுலெ வஸந்” என்று நைஷ்டிக ப்ரஹ்மசாரியை, ஆசார்ய குலத்துக்ருப் பரிசர்யை பண்ணிக் கொண்டு அங்கேயே இருந்து கொண்டு தன் ஆயுஸ்ஸைக் கழிக்கக்கடவனென்றும், “அரண்யமியாத் ததோ ந புநரேயாத்” என்று வாநப்ரஸ்த்தனை, அவ்வாஶ்ரமத்தில் நின்றும் திரும்பக்கூடாதென்றும், “ஸந்ந்யஸ்ய அக்நிம் ந புநராவர்த்தயேத்” என்றுஸங்யாஸியை,மறுபடியும்க்ருஹஸ்த்தனுகக்கூடாதென்றும் நியமிக்கையாலே, அவர்கள் நிராஶ்ரமியா யிருப்பது அசாஸ்த்ரீயமாகையால் அவர்களுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் கிடையாதென்று ஸித்தாந்தம். ௪௫௮.

ஸூ- ௪௫௯. ந சாதிகாரிகமபி பதநாநுமாநாத் தத்யோகாத்.

(ஶ - ரா- வ்யா) பதநாநுமாநாத்=பாதித்யத்தைஸ்ம்ருதிசொல்லுகையாலே, தத்யோகாத் = ப்ராயஶ்சித்தம் கிடையாமையாலே, ஆதிகாரிகம் அபி=ப்ராயஶ்சித்தாதிகாரத்தில்சொன்ன ப்ராயஶ்சித்தமும், ந=கிடையாது.

(ஶ்ரு - ப்ர- பா) ப்ரஹ்மசாரிபதிதனால் "அவகீர்ணி ..." இத்யாதியினால் ப்ராயஸ்சித்தம் சொல்லியிருக்கையாலே நைஷ்டிக ப்ரஹ்மசாரியும் ப்ரஹ்மசாரி யாகையாலே இவன் பதிதனை போதிலும் ப்ராயஸ்சித்தம் பண்ணிக் கொண்டு ப்ரஹ்மவித்யையை அநுஷ்டிக்கலாமேயென்னில்; "ஆரூடோ நைஷ்டிகம் தர்மம் யஸ்து ப்ரச்யவதே புந: | ப்ராயஸ்சித்தம் ந பஶ்யாமி யேந ஶுத்த்யேத் ஸ ஆத்மஹா" நைஷ்டிகப்ரஹ்மசாரியாயிருந்து பதிதனானவனுக்கு, அவன் திரும்பி சுத்தனாகும்படியான ப்ராயஸ்சித்த மொன்றையும் காணேனென்று ஸ்ம்ருதியில் சொல்லுகையாலே அவனுக்கு ப்ராயஸ்சித்தம் கிடையாது. ஆகையால் ப்ரஹ்மசாரிக்குச்சொன்ன ப்ராயஸ்சித்தம் உபகுர்வாணனென்கிற ப்ரஹ்மசாரிக்கொழிய இவனுக்குச் சொல்லவில்லை. அவன் ப்ராயஸ்சித்தம் செய்துகொண்டாலும் பரலோக ஸாதகமாகுமேயொழிய ப்ரஹ்மவித்யா ஸாதகமாகாதென்று ஸித்தாந்தம். ௪௰௯.

ஸூ|| ௪௱. உபபூர்வமபி த்வேகே பாவமஶநவத்தது க்தம்.

(ஶ்ரு - ப்ர- ப்ர) உபபூர்வம்= நைஷ்டிகனுடைய பாபம் உபபாதகம் (ஆகையால்), அஶநவத்=போஜநத்திற்போல், பாவம் = ப்ராயஸ்சித்தமுண்டெனபதை, ஏகே=சிலர்சொன்னார்கள். தது க்தம்=அது, (தர்மசாஸ்திரத்திலும்) சொல்லப்பட்டது, ௪௱

(ஶ்ரு - ப்ர-பா) நைஷ்டிக ப்ரஹ்மசாரி செய்த பாபத்ஸத மஹாபாதகத்தில் சேர்க்காமையாலே அது உபபாதகம். உபகுர்வாணனுக்குச சில தர்மங்களையும் மத்ய பாநஸ்த்ரீஸம்போகாதிகளில் ப்ராயஸ்சித்தத்ஸதயும்விதிதது, "உத்தரேஷாம் சைத தவிரோதி" இவனுக்குச்சொன்ன தர்மங்களும் ப்ராயஸ்சித்தங்களும், அவ்வவ ஆஸ்ரமதர்மங்களுக்கு விரோதமல்லாவிடில் மேலுள்ள நைஷ்டிகன் க்ருஹஸ்தன் முதலியவர்களெல்லாருக்கும், ஸமாநமென்று சொல்லுகையாலே நைஷ்டிகனுக்கும் ப்ராயஸ்சித்த முண்டென்று சிலர் சொன்னார்கள். ௪௱.

ஸூ|| ௪௱௧. பஹிஸ்தூபயதாபி ஸ்ம்ருதேராசாராச்ச.

(ஶ்ரு- ப்ர- ப்ர- பா) ஸ்ம்ருதே:=(ஆரூடபதிதனை ப்ரஷ்டனென்றும் ப்ராயஸ்சித்தமில்லையென்றும்) ஸ்ம்ருதியில்சொல்லுகையாலும், ஆசாராச்ச=(அப்படியே) சிஷ்டாசாரம்காண்கையாலும், உபயதாபி= (அவன்செய்தபாபம்) உபபாதகமானாலும் மகாபாதகமானாலும், பஹிஸ்து= ப்ரஹ்மவித்யாதிகாரமுள்ளவர்களைக்காட்டிலும புறம்பானவர்களே (என்பதுஸித்தாந்தம்.) ௪௱௧

அதி. ௧௧௯. ஸூ|| ௪௱௨. ஸ்வாமிந: பலஶ்ருதேரித்யாத்ரேய:.

(ஶ்ரு- ப்ர- ப) பலஶ்ருதே:=(யஜமானனுக்கே) பலம் சொல்லுகையாலே, ஸ்வாமிந:=(உத்கீதோபாஸநம்) யஜமாநனுடைய க்ருத்யம், இதி=என்று, ஆத்ரேய:=ஆத்ரேயர், (சொன்னார்). ௪௱௨

(ஶ்ரு-ப்ர-பா) கர்மாங்கமான உத்கீதோபாஸநம் யஜமாநன் செய்யவேண்டியதா ருத்விக்கு செய்யவேண்டியதா வென்னில்; பலமடைகிறவனே ஸாதநத்தை யநுஷ்டிக்கவேணும, பலம் யஜமாநனதாகையால் அவனே உத்கீதோபாஸநம் செய்யவேண்டுமென்று ஆத்ரேயர் சொன்னார். ௪௱௨.

ஸூ|| ௪௰௩. 𑌆𑌰𑍍𑌤𑍍𑌵𑌿𑌜𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍌𑌡𑍁𑌲𑍋𑌮𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌹𑌿 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌯𑌤𑍇.

(ஶ-ரா-வ்ய) 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌹𑌿= அந்த யாகம் பண்ணுகையின்பொருட்டன்று, 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌯𑌤𑍇=(ருத்விக்கு) வரிக்கப்படுகிறான், (ஆகையால்) 𑌆𑌰𑍍𑌤𑍍𑌵𑌿𑌜𑍍𑌯𑌮𑍍= (உத்கீதோபாஸநம்) ருத்விக்கினால்செய்யவேண்டியது, 𑌇𑌤𑌿= என்று, 𑌔𑌡𑍁𑌲𑍋𑌮𑌿𑌃=ஔடுலோமியென்பவர்சொன்னார். ௪௰௩

(ஶ-ரீ-ஸா) யாகபலமும் யஜமாநனதாயிருக்க அதை ருத்விக்குசெய்கிறாப்போல் உத்கீதோபாஸநத்தையும் ருத்விக்கே செய்யவேண்டும். கர்மகாண்டத்தில் "𑌋𑌤𑍍𑌵𑌿𑌜𑍋 𑌵𑍃𑌣𑍀𑌤𑍇" இத்யாதியினால் ஸாங்கமான யாகத்தைச்செய்கைக்காகவே ருத்விக்கை வரிக்கிறானென்று சொல்லியிருக்கிறது. ருத்விக்குசெய்தபோதிலும் அதுக்காக அவன் தக்ஷிணை வாங்கிக்கொள்ளுகையால் அதுக்கு முக்யகர்த்தா யஜமாநனே யாகிறானென்று ஸித்தாந்தம். ௪௰௩.

ஸூ|| 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌶𑍍𑌚.

(ஶ-வ்ய) இந்தஸூத்ரம் இந்தபாஷ்யத்தில் அதிகமாகக் காண்கிறது.— 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌶𑍍𑌚="𑌯𑌾𑌂 𑌵𑍈 𑌕𑌾𑌂 𑌚 𑌯𑌜𑍍𑌞𑍇 𑌋𑌤𑍍𑌵𑌿𑌜 𑌆𑌶𑌿𑌷𑌮𑌾𑌶𑌾𑌸𑌤𑍇" என்றுதொடங்கிசாந்தோக்யத்தில் ருத்விக்கு செய்தவைகளினுடைய பலத்தை யஜமாநனடைகிறானென்று சொல்லுகையாலே ருத்விக்கே உத்கீதோபாஸனம்செய்யவேண்டும்.

அதி. ௧௨௦. ஸூ|| ௪௰௪. 𑌸𑌹𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 𑌪𑌕𑍍𑌷𑍇𑌣 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌤𑍋 𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍.

(ஶ-வ்ய) 𑌤𑌦𑍍𑌵𑌤𑌃=வித்யாவானுக்கு, 𑌤𑍃𑌤𑍀𑌯𑌮𑍍=மூன்றாவதானமௌநம், 𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍= அங்கவிதி முதலானவற்றைப்போல், 𑌪𑌕𑍍𑌷𑍇𑌣= பேததர்சநபக்ஷத்தாலே, 𑌸𑌹𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌧𑌿𑌃= வேறொருஸஹகாரியாகவிதிக்கப்படுகிறது

(ரா-வ்ய) 𑌤𑌦𑍍𑌵𑌤𑌃=உபாஸகனுக்கு, 𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍= யஜ்ஞாதிவிதிமுதலானவற்றைப்போலே, 𑌪𑌕𑍍𑌷𑍇𑌣=ப்ராஸித்தமாகையாலே, 𑌤𑍃𑌤𑍀𑌯𑌮𑍍=மூன்றாவதானமௌநமும், 𑌸𑌹𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌧𑌿𑌃= வேறொரு ஸஹகாரியாக விதிக்கப்படுகிறது. ௪௰௪

(ஶ-ஸா-) "𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯 𑌬𑌾𑌲𑍍𑌯𑍇𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌸𑍇𑌤𑍍 । 𑌬𑌾𑌲𑍍𑌯𑌂 𑌚 𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌥 𑌮𑍁𑌨𑌿𑌃" என்கிற ப்ருஹதாரண்யஶ்ருதியில் பால்யபாண்டித்யங்களைப்போல் மௌநமும் விதிக்கப்படுகிறதா, அல்லது அதுக்கு அநுவாதமாவென்னில், "𑌅𑌥 𑌮𑍁𑌨𑌿𑌃" என்கிறவிடத்தில் விதிப்ரத்யயமில்லாமையால் இது விதியன்று அநுவாதம் என்று பூர்வபக்ஷம்.—ஸந்யாஸிக்கு பால்யபாண்டித்யங்களைப்போல் மௌநமும் வித்யாஸாதநமாகையாலும், இதற்குமுன் மௌநத்தை விதியாமையாலே அபூர்வமாகையாலும் இது அநுவாதமன்று. விதிப்ரத்யயமில்லாவிடினும் கல்பித்துக்கொள்ளவேணும். மௌநமெதுக்காகவென்னில், யாதொருத்தனுக்கு பேதவாஸனையினால் அத்வைதஜ்ஞாந முண்டாகவில்லையோ, அவனுக்கு அவ்வாஸனை போகைக்காக மௌநம் விதிக்கப்பட்டது. ப்ரஹ்ம பரவாக்யத்தில் மௌநவிதி கூடுமோவென்னில், தர்சபௌர்ணமாஸவிதியில் அக்ந்யாதாநாதி கர்மாங்கங்களையும் விதித்திருப்பதுபோ லிதுவும் கூடுமென்று ஸித்தாந்தம். ௪௰௪.

(ரா-ஹா) தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டா ஸேத் | பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்யாத முநி: ” உபாஸகன் பாண்டித்யத்தையடைந்து பால்ய வ்ருத்தியோ டிருக்கக்கடவன், அவ்விரண்டையு முடைந்து பின்பு மௌநத்தையுடையவனாவான் என்கிற வாஜஸநேய வாக்யத்தில் பால்யத்தையும்பாண்டித்யத்தையும்வித்யாங்கமாக விதித்திருப்பது ஸ்பஷ்டம், அதுபோல்மௌநமும் விதித்திருக்கிறதா இல்லையாவென்று விசாரிக்கில், பாண்டித்யம் மௌநமென்கிற இரண்டு பதங்களும் ஜ்ஞாநவாசக மாகையால் கீழ்ச்சொன்ன பாண்டித்யத்தையேமேலே அநுவதித்தது என்றுபூர்வபக்ஷி மதம்.—உபாஸகன் “பாண்டித்ய” ச்ரவண மநநங்களினாலுண்டான பரமாத்மஜ்ஞாநத்தையடைந்து பின்பு தன்னுடைய வைபவத்தைப்ரகாசிப்பியாமலிருந்து, அதன்பின், “முநி:” மேல் த்யாநிக்கப்போகிற பரமாத்மாவினுடைய அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்தை மநநம் பண்ணக்கடவன் என்று அவ்வாக்யத்துக்கு அர்த்தம். அதில் பாண்டித்யபதத்தினால்சொல்லப்பட்ட ஜ்ஞாநத்தைக்காட்டிலும் மௌநபதத்தினால் சொல்லப்பட்ட ஜ்ஞாநம்வேறு — இது முன் சொல்லப்படவில்லை. ஆகையால் யஜ்ஞாதிகளைப்போலவும் சமதமாதிகளைப்போலவும் இதுவும் விதியென்றே சொல்லவேணும். இது பால்யபாண்டித்யங்களைப்போல் வித்யைக்கு அந்தரங்க ஸாதநமாயிருக்கும். முனியென்றால் இவ்வர்த்தத்தைச் சொல்லுமோவென்னில்; ப்ரக்ருஷ்ட மநந சீலர்களிடத்தில் வ்யாஸமுனியென்று ப்ரஸித்தியுண்டாகையாலே இப்பதம் இவ்வர்த்தத்தைச் சொல்லும் என்றுஸித்தாந்தம். ௪௬௪.

ஸூ|| ௪௬௫. க்ருத்ஸ்நபாவாத்து க்ருஹிணோபஸம்ஹார:.

(ஶ. ரா- வ்ய) க்ருத்ஸ்நபாவாத் = (ஶ) அநேக தர்மமுண்டாகையாலே, (ரா) எல்லாஆர்ரமிகளுக்கும் வித்யாதிகாரமுண்டாகையாலே, க்ருஹிணா = க்ருஹஸ்தனோடு, உபஸம்ஹார:=நிகமனம்செய்யப்பட்டது. ௪௬௫

(ஶ-ரா-ஹா) எல்லா ஆச்ரமிகளுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரமுண்டாகில், சாந்தோக்யத்தில், “ஸ கல்வேவம் வர்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே” இப்படியே ஆயுஸ்ஸுள்ள வரையில் க்ருஹஸ்தர்மத்தை அநுஷ்டித்துக் கொண்டிருந்து சரீராவஸாநத்தில் பரமாத்மாவை யடைகிறானென்று ஏன் சொல்லிற்றென்னில், (ரா) எல்லாருக்கும் ப்ரஹ்மவித்யாதிகாரமுண்டாகையாலே, அதில் க்ருஹஸ்தனும் சேர்ந்தவனாகையால் இவனைச்சொல்லி முடித்தது. இப்படி சொன்னது - எல்லா ஆச்ரமிகளும் தங்கள் தங்கள் தர்மத்தையாவதாயுஷம் அநுஷ்டித்துப் பின்பு பரமாத்மாவை யடைகிறார்களென்பதற்கு உபலக்ஷணமென்று ஸித்தாந்தம்.—எல்லா ஆச்ரமிகளைக்காட்டிலும் க்ருஹஸ்தனுக்கே பஹுப்ரயாஸஸாத்யமான அநேககர்மங்களுண்டாகையாலே, மற்றொருவர்க்கில்லாமையால் முடிவில் இவனைச்சொல்லிற்றென்று சங்கரபாஷ்ய ஸித்தாந்தம். ௪௬௫.

ஸூ|| ௪௬௬. மௌநவதிதரேஷாமப்யுபதேசாத்

(ஶ-வ்ய) மௌநவத்=ஸந்யாஸியைப்போல், இதரேஷாம் அபி= மற்ற ஆச்ரமிகளுக்கும், உபதேசாத்=(வித்யாதிகாரம்) சொல்லுகையாலே, (நால்வருமதிகாரிகள்), ௪௬௬

(ரா-வ்ய) மௌநவத்= மௌநத்தைப் போல், இதரேஷாம் அபி=மற்ற

ஆச்ரமிகளுடைய தர்மங்களையும், உபதேசாத்= சொல்லுகையாலே, (இது உபலக்ஷணம்) ௪௬௫.

(ஸு-பா) ஸூத்ரத்தில் ஸந்யாஸாச்ரமத்தையும் க்ருஹஸ்தாச்ரமத்தையுமே எடுத்து ப்ரஹ்மவித்யாதிகாரம் சொல்லிற்று. இதனால் ப்ரஹ்மசாரி வாநப்ரஸ்தரென்கிற மற்ற இருவர்க்கும் இல்லையென்கிற ப்ராந்தியைப் போக்குகிறார்—“தபஸா வஹ்நிதீப: ப்ரஹ்மசர்யாச்ரமக்ஷணவாஸீ” இத்யாதி வாக்யங்களினால் இதற்கு முன் ச்ருதியிலே அவ்விருவர்க்கும்கூட வித்யாதிகாரம் சொல்லியிருக்கிறது. ௪௬௬.

(ஸா-பா) “தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய” இத்யாதி வாக்யத்தில் பால்யபாண்டித்ய மௌநங்களை மாத்திரம் சொல்லியிருந்தபோதிலும், இது எல்லா ஆச்ரமதர்மங்களுக்கு முபலக்ஷணமாகக் கண்டுகொள்வது. இதற்குமுன்னமே “ப்ரஹ்மஸம்ஸ்தோ(அ)ம்ருதத்வமேதி” என்று எல்லா ஆச்ரமிகளுக்கும் வித்யாதிகாரம் சொல்லியிருக்கிறது. ௪௬௬.

ஸூ. ௩௨௧. ஸூ|| ௪௬௭. அநாவிஷ்குர்வந்நந்வயாத்.

(ஸு-பா-வ்ர) அந்வயாத்=(இதுவே) வித்யையோடு அந்வயிக்கயோக்யமாகையாலே, அநாவிஷ்குர்வந்=(பாண்டியத்தை) ப்ரகாசப்பண்ணாமலிருக்கிறான் (என்று “பால்யேந” என்பதற்கர்த்தம்).

(ஸு-பா-ஹா) “பால்யேந திஷ்டாஸேத்” என்கிறவிடத்தில் பால்யமாவதென்னென்னில்; பாலனுடைய கர்மம், அதாவது - யதேச்சமாகத் தின்பது திரிவது மொழிவது முதலானவையென்றான் பூர்வபக்ஷி.—யதேச்சமான ஆஹார விஹாராதிகள்கூடாதென்று சாஸ்த்ரம்சொல்லுகையாலே இங்கு பால்யபதத்திற்கு அது அர்த்தமன்று. பாலன் அஜ்ஞனாய்க்கொண்டு தன்னுடைய வைபவத்தை எப்படி ப்ரகாசிப்பியாமலிருக்கிறானோ, உபாஸகன் அப்படி யிருக்கவேணுமென்றர்த்தம். பூர்வபக்ஷிசொன்ன யதேச்சாசாரம் வித்யாவிரோதி, இது வித்யாநுகூலம். “நாவிரதோ துச்சரிதாத்” என்கிற ப்ரமாணமும் இவ்வர்த்தத்தையே சொல்லுகிற தாகையால் இதுவே ப்ராமாணிகம் என்று ஸித்தாந்தம். ௪௬௭.

ஸூ. ௩௨௨. ஸூ|| ௪௬௮. ஐஹிகமப்ரஸ்துதப்ரதிபந்தே தத்தர்சநாத்.

(ஸு-பா-வ்ர) அப்ரஸ்துதப்ரதிபந்தே= ப்ரதிபந்தகம் ஸமீபித்திராவிடில், ஐஹிகம்=(ஸு) இந்தஜந்மமே வித்யாவத்தாகிறது. (பா) இந்தஸம்ஸாரஸம்பந்தியானபலம் (விலம்பமின்றிக்கேயுண்டாகிறது). தத்தர்சநாத்=அவ்வர்த்தமே ச்ருதியில் காண்கையாலே, (இப்படியே அங்கீகரிக்கவேணும்).

(ஸு-பா) ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் இந்த ஜந்மத்திலே யுண்டாகிறதா, ஜந்மாந்தரத்திலுண்டாகிறதா வென்னில், இதற்கு ச்ரவணமநநாதிகளே காரணம், காரணமுள்ளபோது கார்யமவச்ய முண்டாகவேண்டு மாகையால் எந்த ஜந்மத்தில் ச்ரவணாதிகளுண்டோ, அதே ஜந்மத்தில் ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார முண்டாகிறதென்று பூர்வபக்ஷம்—ச்ரவணாதிகளிருந்தபோதிலும் வித்யோத்பத்திக்கு ப்ரதிபந்தக மொன்றுமில்லாவிட்டால் இந்த ஜந்மத்திலுண்டாகிறது, ப்ரதிபந்தகமிருந்தால் எந்த ஜந்மாந்தரத்தில் அது கழிகிறதோ, அப்போததா னுண்டாகும். “ச்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்ய:” இத்யாதிகள் இவ்வர்த்தத்தில் ப்ரமாணங்கள். ௪௬௮.

(ரா-ஸா) உபாஸநத்தினுலுண்டாகிற மோக்ஷாதிரிக்தமான ஐஹிகபலங்கள் உபாஸநம் செய்த உடனே உண்டாகிறதா, அல்லது காலாந்தரத்தி லுண்டாகிறதா வென்னில்; ப்ரதிபந்தகமில்லாமலிருந்தா லிப்போதுண்டாகிறது, இருந்தால் காலாந்தரத்தி லுண்டாகிறது. “ 𑌯𑌦𑍇𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌕𑌰𑍋𑌤𑌿 ” இத்யாதி ச்ருதிகள் இவ்வர்த்தத்தில் ப்ரமாண மென்கிறார். ௪௨௮.

கூஅ. க௨௫. ஸூ॥ ௪௪௯. 𑌏𑌵𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌾𑌨𑌿𑌯𑌮𑌸𑍍𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌧𑍃𑌤𑍇𑌸𑍍𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌧𑍃𑌤𑍇𑌃.

(ஶ-வ) 𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌧𑍃𑌤𑍇𑌃=அந்த (ஒரே) ஆகாரத்தையே நிர்சயித்துச் சொல்லுகையாலே, 𑌏𑌵𑌂=இப்படி, 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌾𑌨𑌿𑌯𑌮𑌃=மோக்ஷமாகியபலத்தில் விசேஷநியமம்கிடையாது. ௪௫௦.

(ரா-வ) 𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌧𑍃𑌤𑍇𑌃=அந்தப்ரதிபந்தகரூபமான அவஸ்த்தையினுடைய நிர்சயத்தாலே, 𑌏𑌵𑌂 = இப்படியே, 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌾𑌨𑌿𑌯𑌮𑌃 = மோக்ஷபலத்துக்கும் நியமமில்லை.

(ஶ-ஸா) கர்மத்தினுல் வித்யையுண்டாகும்போது ப்ரதிபந்தகமிருந்தால் விலம்பிக்கும், இல்லையாகில்சீக்ரமுண்டாகுமென்கிற விசேஷம்வித்யைக்குள்ளதுபோல் ப்ரதிபந்தக ததபாவங்களினுல் மோக்ஷத்திலும் விசேஷமுண்டோவென்னில், மோக்ஷமாவது ப்ரஹ்மஸ்வரூபம். அது நிர்விசேஷம். “ 𑌅𑌸𑍍𑌥𑌲𑌮𑌨𑌣𑍁 ” இத்யாதி வாக்யங்கள் ப்ரஹ்மத்துக்கு அந்த ஒரே ஆகாரத்தைச் சொல்லுகிறதொழிய மற்றோராகாரத்தை எங்கும் சொல்லவில்லை. ஆகையால் அதில் ஒரு ந்யூநாதிகபாவம் கிடையாது, ஏகரூபம் என்கிறார். ௪௫௧.

(ரா-ஸா) ப்ரதிபந்தக முண்டாகில் உபாஸநத்தினுல் ஐஹிகபலம் விலம்பித்துண்டாவதுபோல், எவ்விதமான உபாயத்தினுலும் நசியாத பாகவதாபசாரம் முதலிய ப்ரபல ப்ரதிபந்தகமுண்டாகில், உபாஸநம் செய்த உடனே மோக்ஷம் கிடைப்பதென்கிற நியமமும் கிடையாது. அவ்வபசாரம் பலித்துக்கழிந்த பின்புதான் மோக்ஷமுண்டாகும் என்று சொல்லுகிறார். “ 𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌧𑍃𑌤𑍇𑌃 ” என்கிற பதத்தை இரட்டித்துச்சொன்னது - அத்யாயம் முடிந்ததென் றறிக்கைக்காக. ௪௫௧.

மூன்றும் அத்யாயம் நாலாம்பாதம் முடிந்தது.

மூன்றும் அத்யாயம் முடிந்தது.

ப்ரஹ்மஸூத்ரபாஷ்யம்.

௪-வது அத்தியாயம்-௧-வது பாதம்.

ஊ௰. ௧௨௪: ஸூ|| ௪௭௦. ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்.

(ஶ-வ்ய), அஸக்ருதுபதேசாத் = அநேகம்தடவை சொல்லுகையாலே, ஆவ்ருத்தி: = ஆவ்ருத்திசெய்யவேண்டும். ௪௭௦.

(ரா வ்ய) உபதேசாத் = த்யாநஸ்த்தாநத்தில் உபாஸநாத்மக ஜ்ஞாநத்தைச்சொல்லுகையாலே, ஆவ்ருத்தி: ஆவ்ருத்தியானது, அஸக்ருத் = அடிக்கடிசெய்யவேண்டும். ௪௭௦.

(ஶ ரா-ஹா) மூன்றுமத்யாயத்தில் ஸாங்கமான உபாஸநம் சொல்லப்பட்டது இனி இதில் உபாஸந ஸ்வரூபம் நிர்ணயிக்கப்படுகிறது,—"ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி" இத்யாதி வாக்யங்களில் ப்ரஹ்மப்ராப்திக்கு ஸாதநமாகச்சொல்லப்பட்ட ப்ரஹ்மஜ்ஞாநம், அதாவது – உபாஸநம், (உபாஸந மென்றபோதே ஆவ்ருத்திசெய்ய வேணுமென்பது ஸித்தம்.) அது இரண்டு மூன்றுவ்ருத்தி செய்தால் போருமா, அடிக்கடி செய்யவேணுமாவென்னில்; இரண்டு மூன்றுதரம் செய்து விட்டபோதிலும் ஆவ்ருத்தியாய் விட்டபடியால் ஶாஸ்த்ரவிதி நடத்தப்பட்ட தாகையால், அடிக்கடி செய்யவேண்டுவதில்லை யென்று பூர்வபக்ஷம்; "ப்ரஹ்மவேத" என்கிறவிடத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மஜ்ஞாநம் த்யாநோபாஸந ஸ்த்தாநத்தில் சொல்லியிருக்கையால் த்யாநபதத்தினர்த்தத்தை யுடைத்தாயிருக்கிறது. த்யாநமாவது - இடைவிடாத ஸ்ம்ருதி பரம்பரை; அதாவது - அடிக்கடி செய்யப்பட்ட ஜ்ஞாநத்தினுடைய ஆவ்ருத்தி, ஆகையால் இங்குச்சொல்லப்பட்ட ப்ரஹ்மஜ்ஞாநமும் அடிக்கடி ஆவ்ருத்தி செய்யப்பட்டதாய்க்கொண்டே ப்ரஹ்மப்ராப்தி ஸாதநமாகிறதென்று ஸித்தாந்தம்—"யஸ்த்வேத" என்று ஆரம்பத்தில் ஸாமாந்யமாக ஜ்ஞாநவாசக சப்தத்தைச் சொல்லிற்று. முடிக்கும்போது "உபாஸ்வ" என்று உபாஸந சப்தத்தினால் முடித்தது. ஆரம்பித்ததையே முடிக்கவேண்டிய தாகையால் ஆரம்பத்திலும் உபாஸநமே சொல்லப்பட்டதென்றறிக. ௪௭௦.

ஸூ|| ௪௭௧. லிங்காச்ச.

(ஶ-ரா-வ்ய) லிங்காச்ச = (ரா) ஸ்ம்ருதியினாலும், (ஶ) லிங்கத்தினாலும், (ப்ரஹ்மஸ்மரணம் அடிக்கடி செய்யவேணுமென்றேற்படுகிறது.) ௪௭௧.

(ஶ - ஹா) உத்கீதோபாஸநத்தில், "ரஶ்மீம்ஸ்த்வம் பர்யாவர்த்தயாத்" ஆதித்யனுடைய அநேக கிரணங்களையும் ஆதித்யனையும் அடிக்கடி ஆவ்ருத்தி பண்ணக்கடவாய் என்று ஆவ்ருத்தி செய்யச்சொல்லுகை மற்ற உபாஸநங்களிலும் ஆவ்ருத்தி செய்யவேண்டு மென்பதற்கு லிங்கமாயிருக்கிறது. இரண்டும் உபாஸநமாகையால் ஓரிடத்தில் உபாஸநஸ்வரூபம் சொன்னால் மற்றோரிடத்திலும் அதையே சொல்லிற்றுமென்று கருத்து. ௪௭௧

(ரா-ஹா) “[illegible] த்⁴யாநம்” இடைவிடாத பரமாத்மவிஷயகமான ஸ்ம்ருதி பரம்பரையே த்யாநமெனப் படுமென்று ஸ்ம்ருதியிலும்சொல்லுகையாலே அடிக்கடி ஆவ்ருத்திசெய்யப்பட்ட ப்ராஹ்மோபாஸநமே மோக்ஷஸாதநமாகும். ௪௭௧.

௪அ. ௧௨௫. ஸூ|| ௪௭௨. ஆத்மேதி தூபக³ச்ச²ந்தி க்³ராஹயந்தி ச.

(ஸ-ரா-வ்ரு) ஆத்மேதி து = ஆத்மாஎன்றே, உபக³ச்ச²ந்தி = த்யாநிக்கிறார்கள், க்³ராஹயந்தி ச = (இவ்வர்த்தத்தையேசாஸ்திரம்) போதிக்கிறது.

(ஸ – ஹா) பரமாத்ம ஸ்வரூபத்தை த்யாநிக்கும்போது ஜீவனை தன்னைக் காட்டிலும் பரமாத்மாவை வேறாக த்யாநிக்கவேணுமா, அல்லது தன்னையே பரமாத்ம ஸ்வரூபமாக த்யாநிக்கவேணுமாவென்னில்; ஜீவன் புண்யபாபங்களோடுகூடினவன், பரமாத்மா அதில்லாதவன், இப்படி வஸ்து வெவ்வேறாயிருக்க ஜீவனையே பரமாத்மாவாக த்யாநிப்பது அஸங்கதமாகையால் வெவ்வேறாகவே த்யாநிக்க வேணுமென்றான் பூர்வபக்ஷி—ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பேதமில்லை. ஜீவனுக்குப் புண்யபாபங்கள் ஸ்வாபாவிகமன்று; அவித்யையினால் கல்பிக்கப்பட்டது. அது வாஸ்தவமன்று. ஆகையால் ஜீவனே ப்ராஹ்மம்; த்யாநிக்க வேண்டியதும் அப்படியே; “த்வம் வா அஹமஸ்மி ப⁴க³வோ தே³வதே அஹம் வை த்வமஸி ப⁴க³வோ தே³வதே” என்று ஜீவப்ராஹ்மங்களை அபேதமாகவே த்யாநிக்கிறார்கள். ஜாபாலர்கள், “தத்வமஸி” இத்யாதியான வேத வாக்யங்களும் அபேதத்தையே சொல்லுகிறது. ஆகையால், அபேதமாகவே த்யாநம் செய்யவேண்டுமென்று ஸித்தாந்தம். ௪௭௨.

(ரா – ஹா) பரமாத்மாவை ஜீவனைக்காட்டிலும் வேறாக த்யாநிக்க வேணுமா, அல்லது அபேதமாக “நான் ஆத்மா” என்று த்யாநிக்கவேணுமா வென்னில்; பரமாத்மாவைக்காட்டிலும் ஜீவன் வேறுபட்டவன், இவ்வர்த்தம் “அதி⁴கந்து பே⁴த³நிர்தே³ஶாத்” இத்யாதி ஸூத்ரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. வேறுபட்ட வஸ்துக்களை ஒன்றென்று த்யாநிப்பது அநுசிதமாகையால் வேறாகவே த்யாநிக்க வேணுமென்று பூர்வபக்ஷம்—பரமாத்மாவைத் தனக்காத்மாவாகவே உபாஸநம் செய்ய வேண்டும், இந்த சரீரத்துக்குத்தானாத்மாவாயதுபோல், ஜீவனாகிய தனக்குப்பரமாத்மா ஆத்மாவாகிறான். வெவ்வேறான சரீரத்தையும் ஆத்மாவையும் அபேதமாகவே “நான் தேவன், நான் மநுஷ்யன்” என்று வ்யவஹரிக்கிறார்கள். அதுக்குக்காரணம் சரீராத்ம ஸம்பந்தம். அது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்குங்கூட உண்டு. உபாஸநம் செய்கிற பூர்வபுருஷர்களும், “த்வம் வா அஹமஸ்மி-அஹம் வை த்வமஸி” என்று தன்னைப்பரமாத்மாவென்றே உபாஸநம் செய்கிறார்கள். “யஸ்யாத்மா ஶரீரம்” என்த பரமாத்மாவுக்கு ஜீவன் சரீரமோ என்ற ஶ்ருதியே இவ்வர்த்தத்தில் ப்ரமாணம். ஆகையால், பரமாத்மாவைத் தனக்கு ஆத்மாவாகவே உபாஸநம் செய்யவேணுமென்று ஸித்தாந்தம்.

௪அ. ௧௨௬. ஸூ|| ௪௭௩. ந ப்ரதீகே ந ஹி ஸ:.

(ஸ-ரா-வ்ரு) ப்ரதீகே = ப்ரதீகத்தில், ந = ஆத்மத்மபுத்திசெய்யக்கூடாது ஸ: = அந்தப்ரதீகமானது, ந ஹி = ஆத்மாவன்றன்றே. ௪௭௩

(ஸ-ரா-ஹா) பரமாத்மோபாஸநம் இப்படி செய்தபோதிலும் ப்ரதீகோபாஸநம் செய்யும்போது மநஸ்ஸு நாமம் முதலிய ப்ரதீகங்கள் (ஸ) பரமாத்மஸ்வரூபமன்றாகையால் (ரா) பரமாத்மாவைப்போல் தனக்கு ஆத்மாவன்றாகையால் அவைகளைத்

தனக்கார்த்மாவாக உபாஸநம் செய்யக்கூடாது. ப்ரதீகோபாஸநமாவது - பரமாத்மாவைக்காட்டிலும் வேறுபட்ட நாமம் மநஸ்ஸு முதலான தவற்றை பரமாத்மாவாக த்யாநிக்கை. ௪௭௩.

ஸூ|| ௪௭௪. ப்ரஹ்மத்ருஷ்டிருத்கர்ஷாத்.

(ஶ்ரீ-ரா-ப்ர) உத்கர்ஷாத் (ப்ரஹ்மம்) உயர்ந்ததாகையால், ப்ரஹ்மத்ருஷ்டி:= ப்ரதீகத்தில் ப்ரஹ்மத்ருஷ்டியேசெய்யவேண்டும்.

(ஶ்ரீ-ரா-ஸா) "நாம ப்ரஹ்மேத்யுபாஸீத" நாமத்தை ப்ரஹ்மமாக உபாஸநம் செய்யவேண்டும், "மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத" மநஸ்ஸை ப்ரஹ்மமாக உபாஸிக்கவேண்டும் என்று இத்யாதியான ப்ரதீகோபாஸநங்களில், ப்ரஹ்மத்தை நாமாதிகளாகவா, நாமாதிகளை ப்ரஹ்மமாகவா உபாஸநம் செய்யவேண்டுவதென்னில்,—ராஜாவை ஸேவகனாக நினைப்பது அநுசிதம், ஸேவகனை ராஜாவாக நினைத்தால் அவன் ஸந்தோஷித்து இவனுக்கு உபகாரம் செய்கிறான். இதனால், உயர்ந்தவனைத்தாழ்ந்தவனாக நினைக்கக்கூடாது, தாழ்ந்தவனை உயர்ந்தவனாக நினைக்கலாமென்றேற்படுகிற தாகையால், அசேதநங்களாகிய நாமாதிகளையே உயர்ந்தவனான பரமாத்மாவாக த்யாநம் செய்யவேணுமென்கிறார். ௪௭௪.

அதி. ௧௨௭. ஸூ|| ௪௭௫. ஆதித்யாதிமதயஶ்சாங்க உபபத்தே:.

(ஶ்ரீ-ரா-ப்ர) உபபத்தே:=சரியானதாகையாலே, அங்கே=உத்கீதாதிரூபமானஅங்கத்தில், ஆதித்யாதிமதய:= ஸூர்யன் முதலானவர்களுடையத்ருஷ்டி (செய்யவேண்டும்). ௪௭௫

(ஶ்ரீ-ரா-ஸா) "ய ஏவாஸௌ தபதி தமுத்கீதமுபாஸீத" என்கிற உத்கீதாத்யுபாஸநத்தில், கர்மாங்கமான உத்கீதத்தை ஸூர்யனாகவா, ஸூர்யனை உத்கீதமாகவா உபாஸநம் செய்யவேணுமென்னில், கர்மாங்கமாய் பலஸாதநமாகிய உத்கீதம் ஸூர்யனைக் காட்டிலும் ஶ்ரேஷ்டமாகையால் ஸூர்யனை உத்கீதமாகவே உபாஸநம் செய்யவேணுமென்றான் பூர்வபக்ஷி—உத்கீதாதிகளை அங்கமாக உடைய கர்மங்களினால் ஸூர்யாதி தேவதைகளே ஆராதிக்கப்படுகிறார்களாகையால் உத்கீதாதிகளைக் காட்டிலும் ஸூர்யாதிதேவதைகளே உயர்ந்தவர்கள். தாழ்ந்ததை உயர்ததாக நினைப்பது உசிதமாகையால் உத்கீதாதிகளை ஸூர்யாதி தேவதைகளாக த்யாநிப்பதே சரியானது என்று ஸித்தாந்தம். ௪௭௫.

அதி. ௧௨௮. ஸூ|| ஆஸீநஸ்ஸம்பவாத்.

(ஶ்ரீ-ரா-ப்ர) ஸம்பவாத்=(உட்கார்ந்திருக்கிறவனுக்கேசித்தஸ்தைர்யம்) உண்டாமாகையால், ஆஸீந:= உட்கார்ந்தவனாகவே (உபாஸநம்செய்யக்கடவான்). ௪௭௬

(ஶ்ரீ-ரா-ஸா) அநவரதஸ்ம்ருதி ஸந்ததிரூபமான உபாஸநம், நின்றுகொண்டா, நடந்துகொண்டா, உட்கார்ந்தா, படுத்துக்கொண்டா பண்ணவேண்டுவதென்னில், நிற்கும்போதும் நடக்கும்போதும் ப்ரயத்நத்தினால் மநஸ்ஸு நிலைநிற்காது. படுத்தால் நித்ரைவந்துவிடும் ஆகையால் உட்கார்ந்துகொண்டே செய்யவேண்டும். ௪௭௬.

ஸூ|| ௬௭௭. த்யாநாச்ச.

(ஸ-ரா-வ்ய-ஸா) த்யாநாச்ச= (உபாஸநமென்பது) த்யாந மாகையாலே, (த்யாநத்தை) இடையில்விடக்கூடாதாகையால், ஏகாக்ரசித்தனுகைக்கு உட்கார்ந்தே உபாஸநம்செய்யவேண்டியது. ௬௭௭

ஸூ|| ௬௭௮. அசலத்வஞ்சாபேக்ஷ்ய.

(ஸ-ரா-வ்ய-ஸா) அசலத்வம்= (பர்வதாதிகள்) சலியாமலிருக்கையை, அபேக்ஷ்ய=உட்கொண்டு, ("த்யாயதீவ ப்ருதிவீ த்யாயதீவாந்தரிக்ஷம்" இத்யாதிகளினுல் பூமி ஆகாசம் மலை முதலானவை த்யாநிக்கிறப்போலிருக்கிறதென்று சொல்லிற்று. இதனுல் த்யானத்துக்கு நிச்சலமாயிருக்கவேணுமென்றேற்படுகிறது. அது உட்கார்ந்தவனுக்கேபலிக்கும். ௬௭௮.

ஸூ|| ௬௭௯. ஸ்மரந்தி ச.

(ஸ-ரா-வ்ய-ஸா) ஸ்மரந்தி ச=("உபவிஶ்யாஸநே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிஶுத்தயே" உட்கார்ந்துயோகாப்யாஸம்செய்யக்கடவனென்று) தர்மசாஸ்திரக்காரர்களும் சொல்லுகிறார்கள். ௬௭௯.

ஸூ|| ௬௮௦. யத்ரைகாக்ரதா தத்ராவிஶேஷாத்.

(ஸ-ரா-வ்ய-ஸா) அவிஶேஷாத்= (சித்தஸ்தைர்யாநுகூலதேசகாலங்களைக்காட்டிலும் வேறாகதேசகால விசேஷங்களை விசேஷித்துச் சொல்லாமையாலே,யத்ர=எந்ததேசத்தில் எந்தகாலத்தில், ஏகாக்ரதா=சித்தஸ்த்தைர்யம் (உண்டாகிறதோ), தத்ர=அந்ததேசத்திலே அந்தகாலத்திலே (இருந்து உபாஸநம்செய்யவேண்டியது)."ஸமே ஶுசௌ ஶர்கராவஹ்நிவாலுகாவிவர்ஜிதே ஶப்தஜலாஶ்ரயாதிபி: மநோநுகூலே" பாதுக்கைகளில்லாமலும் மநஸ்ஸுக்குஅநுகூலமாயும் பரிசுத்தமாயுமிருக்கிற தேசத்திலே உபாஸநம்செய்யவேண்டுமென்று மாத்ரம்சொல்லிற்று. இதனுல் தேசகாலங்களுக்கு நியமமில்லையாகிலும் உட்கார்ந்தேசெய்யவேணுமென்கிற நியமம்மாத்ரமுண்டென்றுபாவம். ௬௮௦.

கூ௰. கஉகூ. ஸூ|| ௬௮௧. ஆப்ரயாணாத்தத்ராபி ஹி த்ருஷ்டம்.

(ஸ-ரா-வ்ய) ஆப்ரயாணாத்= மரணம் வரையில் (உபாஸநம்)செய்யவேண்டும். தத்ராபி=அக்காலத்திலும், த்ருஷ்டம்= உபாஸநம்காணப்பட்டது.

(ஸ-ரா-ஸா) இந்த உபாஸநம் ஒருநாள் செய்தால்போருமா, ஜீவித்காலம்வரையில் செய்யவேணுமா வென்னில்; ஒருநாள் செய்தாலும் "உபாஸீத" என்கிற விதியை அநுஷ்டித்தவனுகிறான். யாவத்காலமும் செய்யவேணுமென்கிற விதிகிடையாது. "ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம்" என்கிறவாக்யத்தில் யாவதாயுஷம் செய்யக்கடவன் என்கிற விதிப்ரத்யயமில்லாமையால் அது இதற்கு ப்ரமாணமாகமாட்டாது என்று பூர்வபக்ஷம்—"ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம்" என்கிற வாக்யத்தில் யாவதாயுஷம் இவ்வுபாஸநத்தைச் செய்தவனுப் பின்பு மோக்ஷத்

தை யடைகிருனென்று சொல்லியிருக்கிறது. அதில் விதிப்ரத்யயை மில்லாவிடினும் இவ்வர்த்தம் மற்றெங்கும் சொல்லாமையாலே அபூர்வமாகையால் அதை விதியென்றே அங்கீகரிக்கவேணும் என்றுஸித்தாந்தம்—ராமாநுஜபாஷ்யத்துக்கு, 'தத்ராபி' என்றதுக்கு, உபாஸநம் செய்யத்தொடங்கின நாள் முதல் மரணகாலம் வரையில் என்றர்த்தம். இதற்கு ப்ரமாணம் "ஸ க²ல்வேவம்" என்கிற வாக்யம்—சங்கரபாஷ்யத்தில், "தத்ராபி"—மரணகாலத்திலும் என்றர்த்தம். இதற்குப்ரமாணம், "யம் யம் வாபி ஸ்மரந் பா⁴வம் த்யஜத்யந்தே கலேவரம்" இத்யாதி வாக்யம். ச௮௧.

அதி. க௩௦. ஸூ|| ச௮௨. தத³தி⁴க³ம உத்தரபூர்வாக⁴யோரஶ்லேஷவிநாஶௌ தத்³வ்யபதே³ஶாத்.

(ஶ-ரா-வ்யா) தத்³வ்யபதே³ஶாத் = அதையே உபநிஷத்தில்சொல்லுகையாலே, தத³தி⁴க³மே = அந்தப்ரஹ்மவித்யை கைபுகுந்தவளவில், உத்தரபூர்வாக⁴யோ:=உபாஸநாநந்தரம் செய்தபாபத்துக்கும், அதற்குமுன்செய்த பாபத்துக்கும், அஶ்லேஷவிநாஶௌ=ஒட்டாமையும் நாசமும் (ஸம்பவிக்குங்கள்).

(ஶ-ரா ஸா) இதுவரையில் உபாஸநஸ்வரூபம் நிரூபித்தாய்விட்டது. இனி அதினுடைய பலத்தை நிரூபிக்கிருர்—உபாஸகனுக்கு வித்யாமாஹாத்ம்யத்தினுல் பாபம் நசிக்குமா நசியாதாவென்னில் 'நாபு⁴க்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி' அவனவன் செய்த கர்மம் எத்தனைகோடி கல்பமானுலும் அநுபவித்தே தீரவேண்டும், அநுபவியாமல் தீராதென்று பூர்வபக்ஷம்—"தத்³யதா² புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்த ஏவமேவம்விதி³ பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே" தாமரை இலையில் நீர் ஒட்டாதாப்போலே உபாஸகனிடத்தில் பாபம் ஒட்டாது என்கையாலும், "தத்³யதே²ஷீகதூலமக்³நௌ ப்ரோதம் ப்ரதூ³யேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூ³யந்தே" இஷீகமென்கிற கோரையின் பஞ்சு நெருப்பில் போட்டால் வெந்துபோவதுபோல், உபாசகனுடைய பாபம் உபாஸநா மாஹாத்ம்யத்தால் நசித்துப்போமென்கையாலும் "உபாஸகனுக்கு பாபம் ஸம்பவியாது. உபாஸநம் செய்ய ஆரம்பித்தபின் அபுத்தி பூர்வகமாகச் செய்த பாபம் ஒட்டாது. அதற்குமுன் செய்த பாபம் நசித்துவிடுமென்று ஸித்தாந்தியின் தாத்பர்யம். "நாபு⁴க்தம் க்ஷீயதே" என்று செய்ய பாபம் இவனுக்கு துக்காநுபவத்தை யுண்டுபண்ணத்தக்க சக்தியை யுடைத்தாமென்கிறது, "ஏவம்விதி³" இத்யாதி வாக்யம், நெருப்பிருக்கும்போது சீதமுண்டாகாததுபோல் உபாஸந மிருக்கும்போது பாபத்துக்கந்த சக்தியுண்டாகிறதில்லையென்கிறது; "ஏவம் ஹாஸ்ய" என்று, நெருப்பைக்கொண்டுவந்தால் முன்புள்ள குளிர் விட்டுப் போவதுபோல் பாபத்துக்குண்டான சக்தி உபாஸநமஹிமையினுல் நசிக்கிறதென்றது. ஆகையால் சாஸ்த்ரங்களுக்கு பரஸ்பரம் விரோதமில்லை. ச௮௨,

அதி. க௩க. ஸூ|| ச௮௩. இதரஸ்யாப்யேவமஸம்ஶ்லேஷ: பாதே து.

(ஶ-வ்யா) இதரஸ்யாபி=மற்றென்றுனபுண்யத்திற்கும், ஏவம்= இந்த பாபத்தைப்போலவே, அஸம்ஶ்லேஷ:=ஒட்டாமை(ஸித்தம். 'ஆகையால்'), பாதே து=சரீரம்விழுந்தஉடனே, (மோக்ஷம்ஸித்தம்).

(ரா-வ்யா) பாதே து=சரீரம்நசித்தவளவில், இதரஸ்யாபி=மற்றென்றுனபுண்யம்போலே, அஸம்ஶ்லேஷ:=ஒட்டாமை (ஸித்தம்). ச௮௩

(ஶ்ரு-பா-ஹா) சாஸ்த்ரத்துக்கும் பாபம் நிஷித்தமாகையாலே அநிஷ்டமான பாபம் நசிக்கலாம், சாஸ்த்ரவிஹித மாகையாலே இஷ்டமான புண்யம்செய்வதென்னென்னில்; மோக்ஷத்துக்கு பாபம்போல் புண்யமும் ப்ரதிபந்தக மாகையாலும் "தத ஸுக்ருதது்ஷ்க்ருதே விதூநுதே" என்று புண்ய பாபங்களிரண்டையும் உதறிவிட்டுப் போகிறானென்கையாலும், சரீரம் நசித்தபின், ஆயுராரோக்யாதிகளை விளைக்கத்தக்க புண்யமும் நசிக்கிறது என்று ஸித்தாந்தம். ௪அ௩.

௪பி. ௧௩உ. ஸூ॥ ௪அ௪. அநாரப்தகார்யே ஏவ து பூர்வே ததவதே:.

(ஶ்ரு-பா-வ்யா) ததவதே:=சரீரமுள்ளவரையும் கர்மமுண்டென்கையாலே அநாரப்தகார்யே=பலப்ரதாநத்தில் ஆரம்பியாத, பூர்வே=முன்செய்தகர்மங்களே, (நசிக்கின்றன). ௪அ௪.

(ஶ்ரு-பா-ஹா) உபாஸகனுக்கு புண்யபாபங்கள் நசிக்கிறதென்றது. அவற்றில் சில நசித்து சில இருக்குமா, எல்லாம் நசிக்குமாவென்னில், "ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" எல்லாக்கர்மங்களும் நசிக்கிறதென்கையாலே ஒன்றும் நிற்கிறதில்லையென்று பூர்வபக்ஷம்—உபாஸநம் பூர்த்தியாகிற வரையில் சரீரமிருக்க வேண்டுகையாலே அந்தசரீரஸ்திதிக்குக் கர்மந்தவிர மற்றொருஹேதுவில்லாமையாலும், "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே" என்றுசரீராவஸாநம்வரையில்கர்மமிருக்கிறதாகச் சொல்லுகையாலும், உபாஸநத்துக்குமுன்னே செய்யப்பட்ட ஸஞ்சிதமான கர்மங்களே நசிக்கின்றன, ப்ராரப்தம் நசியாது. என்று ஸித்தாந்தம். ப்ராரப்தமாவது செய்த கர்மங்களில், எந்த கர்மம் தன்னுடைய பலத்தை அநுபவிப்பிக்க ஆரம்பித்துவிட்டதோ அது. மற்றது ஸஞ்சிதம். ௪அ௪.

௪பி. ௧௩௩. ஸூ॥ ௪அ௫. அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்சநாத்.

(ஶ்ரு-பா-வ்யா) தத்தர்சநாத்=வித்யாங்கமாக, (ஶ்ரு) (வித்யாஸஹகாரியாக) க்காண்கையாலே, அக்நிஹோத்ராதி=அக்நிஹோத்ரம் முதலிய கர்மம், தத்கார்யாயைவ=உபாஸநரூப (ஶ்ரு) (மோக்ஷரூப) கார்யத்தின்பொருட்டே (ஆகிறது). ௪அ௫.

(ஶ்ரு-பா-ஹா) பாபம்போலும் புண்யமும் நசிக்குமாகில், அக்நிஹோத்ராதி கர்மங்களைச் செய்யவேண்டாவேயென்னில்;—"யஜ்ஞேந தாநேந தபஸா விவிதிஷந்தி" யஜ்ஞாதிகளை அங்கமாகக்கொண்டே உபாஸநம் செய்கிறார்களென்கையாலே அக்நிஹோத்ராதி கர்மம் செய்தால் மநஸ்ஸு நிர்மலமாய் உபாஸநம் மேல்மேல் நடக்கும், இல்லையாகில் பாபத்தினால் மநஸ்ஸு கலங்கி உபாஸநம்நிறைவேறாதாகையாலும், அவ்வுபாஸநம் யாவஜ்ஜீவம் செய்யவேண்டுகையாலும், அவற்றைச செய்தே தீரவேணுமென்கிறார். ௪அ௫.

ஸூ॥ ௪அ௬. அதோ(அ)ந்யாபி ஹ்யேகேஷாமுபயோ:.

(ஶ்ரு-பா-வ்யா) உபயோ:=பூர்வோத்தரகர்மங்களிரண்டிலும்; அத:=உபாஸநத்துக்குஸஹகாரியான கர்மத்தைத்தவிர, அந்யாபி= வேறு கர்மமும்(உண்டாகையால், அதைப்பற்றி), ஏகேஷாம்=சிலருடைய, (வசநங்கள் காண்கின்றன). ௪அ௬.

.(ஶ்ரு-ரா-ஸா) அக்நிஹோத்ராதி ஸத்கர்மங்களில் சிலவை வித்யாஸாதநங்கள், சிலவை அநுபவ விநாஶ்யங்களாகில், "தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ்ஸாது க்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்" உபாஸகனுடைய தநத்தைப்பிள்ளைகளும், புண்யத்தை ஸுஹ்ருத்துக்களும், பாபத்தை சத்ருக்களு மடைகிறார்களென்று எதைப்பற்றிச் சொல்லிற்றென்னில்; வித்யைக்கு அநுபயோகியாய் முன்செய்யப்பட்ட கர்மங்களில் எவை பலப்ரதாநத்துக்கு ஆரம்பியாமல் ஸஞ்சிதங்களா யிருக்கின்றனவோ, அவற்றை"ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம்" இத்யாதி வாக்யம் சொல்லிற்றென்கிறார். சுஅசு.

ஸூ|| சுஅஎ. யதேவவித்யயேதிஹி.

(ஶ்ரு- ரா- வ்யா- ஸா) யதேவ=எந்தகர்மமே, வித்யயா ("யதேவ வித்யயா கரோதி" என்று) வித்யையோடுகூடினதாக(ச்செய்யப்படுகிறதோ, அதுவே சீக்கிரத்தில் பலத்தைக் கொடுக்கிறது) இதிஹி=என்றன்றோ சொல்லப்பட்டது. இதனால், சில கர்மங்கள் ப்ரதிபந்தகத்தினால் அப்போதே பலத்தைக் கொடாமல் சில்காலம் கழித்து அப்ப்ரதிபந்தகம் போனவாறே பலத்தைக் கொடுக்குங்களென்று தோற்றுகையால் அந்த ஸஞ்சிதகர்மங்களே ஸுஹ்ருத்துக்களை யடைகிறதென்று சொல்லப்பட்டதென்கிறார். சுஅஎ.

அதி. கங-சு. ஸூ|| சுஅஅ. போகேநத்விதரே க்ஷபயித்வாऽத ஸம்பத்யதே.

(ஶ்ரு-ரா-வ்யா) இதரே=வேறான (ப்ராரப்தமான) புண்யபாபங்களை, போகேந=அநுபவத்தினால், க்ஷபயித்வா=நசிப்பித்து, அத=பிற்பாடு, ஸம்பத்யதே=(ப்ரஹ்மத்தை) அடைகிறான். சுஅஅ.

(ஶ்ரு-ரா-ஸா) ஸஞ்சித கர்மங்கள் நசிக்கிறதென்றது. ப்ராரப்த கர்மம் எந்த சரீரமிருக்கச்செய்தே உபாஸநம் செய்கிறானோ, அந்த சரீரம் நசிக்கிறபோதே நசிக்கிறதா, அல்லது இன்னும் சில ஜந்மங்கள் கழித்து நசிக்கிறதாவென்னில்; ப்ராரப்த கர்மம் எவ்வளவு பலத்தைக்கொடுக்குமோ: அவ்வளவு பலத்தையும் அநுபவித்தபின்பே அந்த கர்மங்கள் நசிக்கும். அது இந்த ஜந்மத்தில் முடிந்தாலும் முடியும், சில ஜந்மங்கள் கழித்து முடிந்தாலும் முடியும், "தஸ்ய தாவதேவ சிரம்" என்ற வாக்யமும், ப்ராரப்த கர்மம் நசிக்கும் வரையில் ஸம்ஸாரத்திலிருந்து பின்பு மோக்ஷத்தை யடைகிறானென்றே சொல்லுகிறது என்கிறார். சுஅஅ.

க-வதுபாதம் முடிந்தது.

உ-வதுபாதம்.

அதி. கஉ. ஸூ|| சுஅகூ. வாங்மநஸி தர்ஶநாச்சப்தாச்ச.

(ஶ்ரு-ரா-வ்யா) தர்ஶநாத்=ப்ரத்யக்ஷமாகக்காண்கையாலும், ஶப்தாச்ச=(வேத) சப்தத்தினாலும், வாக்=(ஶ்ரு) வாகிந்த்ரியத்தினுடைய வ்யாபாரமானது) (ரா) வாகிந்த்ரியமானது, மநஸி=மநஸ்ஸில் (சேருகிறது). சுஅகூ.

(ஶ்ரு - பா) இதில் உத்க்ராந்திப்ரகாரம் விசாரிக்கப்படுகிறது—"அஸ்ய ஸோம்ய புருஷஸ்ய ப்ரயதோ வாங்மநஸி ஸம்பத்யதே மந: ப்ராணே ப்ராணஸ்தேஜஸி தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்" இந்த புருஷன் மரிக்கப்போகும்போது வாக்கு மநஸ்ஸிலும், மநஸ்ஸு ப்ராணனிலும், ப்ராணன் தேஜஸ்ஸிலும், அது பரதேவதையிலும்போய்ச் சேருகிறதென்கிறது. இங்கு வாக்கு மநஸ்ஸோடு சேருகிறதென்பதற்கு, வாகிந்த்ரியமா, அல்லது அதினுடைய வ்யாபாரமா மநஸ்ஸில் சேருகிறதாகச் சொல்லப்படுகிறதென்னில்; வாக் என்றே சொல்லிற்று, வாக் வ்யாபாரமென்று சொல்லவில்லை யாகையால் வாகிந்த்ரியமே மநஸ்ஸில் சேருகிறதென்று பூர்வபக்ஷம்—மேலே ஸூத்ரகாரர் வாகிந்த்ரிய ஸ்வரூபத்துக்கு லயம் சொல்லப்போகிறார். அதையே இங்கும்சொன்னால் புநருக்தமாகும் ஆகையால்ஸூத்ரத்திலுள்ள வாக் என்றபதத்துக்கு வாகிந்த்ரியவ்யாபாரமென்றர்த்தம். ஒருவஸ்து லயிக்கும்போது, கடகம் ஸுவர்ணத்திலும், கடம் மண்ணிலும்போல் தன்னுடையஉபாதாநத்தில் லயிக்கவேணும், வாக்குக்கு மநஸ்ஸு உபாதாந காரணமன்று ஆகையால் அதின் வ்யாபாரமே மநஸ்ஸில்லயிக்கிறது.வாக்வ்யாபாரமாகிய வார்த்தை சொல்வது நின்றுபோன பின்பும் மநஸ்ஸு இருக்கிறதாக லோகத்தில் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறது. ஆனால்ஶ்ருதி 'வாக்' என்று இந்த்ரியத்தையே சொல்லுவானேனென்னில்; வார்த்தைசொல்லுகை வாக்கினுடைய வ்யாபார மாகையால் ஆஶ்ரயத்தைச் சொல்லுகிற பதத்தினால் அதின் தர்மத்தைச் சொல்லிற்றென்று ஸித்தாந்தம். ௪அ௧.

(ஶா-பா) உபாஸகனுடைய அர்ச்சிராதி கதியைச்சொல்வதாகக்கருதி முதல் உத்க்ராந்தி ப்ரகாரத்தை இதில் விசாரிக்கிறார்—"வாங்மநஸி ஸம்பத்யதே" என்கிற விடத்தில் புருஷன் மரிக்கும்போது முதலிலே வாக்கு மநஸ்ஸில் லயிக்கிறதென்று சொல்லிற்று. அதுக்கு வாகிந்த்ரியமே லயிக்கிறதென்றர்த்தமா, அதின் வ்யாபாரம் லயிக்கிறதென்றர்த்தமா வென்னில், வஸ்துக்களுக்கு லயம் தன்னுடைய உபாதாந காரணத்திலே யாகையாலே வாக்குக்கு மநஸ்ஸு உபாதாந மல்லாமையாலே அதில் வ்யாபாரமே லயிக்கிறதென்று பூர்வபக்ஷம்—லோகத்தில் மரிக்கிறவனுக்கு வாகிந்த்ரியம் போனபின் மநஸ்ஸிருப்பதாகக் காண்கையாலும், ஶ்ருதியில் வாகிந்த்ரியத்தைச் சொல்லுகிற "வாக்" என்ற பதத்துக்கு அதின் வ்யாபாரமென்பதற்கும் வாக்கினுடைய வ்யாபாரம் நசித்தபின் அவ்விந்த்ரியம் இருக்கிற தென்பதற்கும் ப்ரமாணம் காணாமையாலும், இங்குச்சொல்லுகிற லயமாவது, கடகம் ஸுவர்ணத்தில் லயிப்பது போலன்றிக்கே ஒருவன் மற்றொருவனோடு சேருவதுபோல் வாக்கு மநஸ்ஸில்போய்ச் சேருகிறதென் றர்த்தமாகையாலும், வாகிந்த்ரியமே மநஸ்ஸில் லயிக்கிற தென்று ஸித்தாந்தம். ௪அ௧.

ஸூ|| ௪௬௦. அத ஏவ ச ஸர்வாண்யநு.

(ஶ்ரு-ப்ர-பா) அத ஏவ=ஸர்வேந்த்ரியங்களுக்கும் மநஸ்ஸு உபாதாந காரண மல்லாமையாலேயே, ஸர்வாணி=ஸமஸ்தேந்த்ரியங்களும், அநு=(தங்கள் வ்யாபாரத்வாரா) மநஸ்ஸை யநுவர்த்திக்கிறதுகள் (என்று "இந்த்ரியைர்மநஸி ஸம்பத்யமாநை:" என்கிற விடத்திலு மர்த்தமாகக்கொள்ள வேணும்). ஸகலேந்த்ரியங்களும் மநஸ்ஸில் லயிக்கிறதென்று சொல்லுகிற இந்த ஶ்ருதிக்கும் இந்த்ரிய வ்யாபாரங்களே லயிக்கிறதென் றர்த்தமாமென்று தாத்பர்யம். ௪௬௦.

(ஶா-ப்ர-பா) அத ஏவ=("ஸம்பத்யதே" என்கிற பதத்துக்கு லயிக்கிறதென் றர்த்தமன்றிக்கே சேர்ந்திருக்கிறதென் றர்த்தமாகையினாலேயே, ஸ

ப்ராணிக ந (தஸ்யாத்³வாங்மநஸிஸம்பத்³யதேமந:ப்ராணேப்ராணஸ்தேஜஸி) என்கிற ஶ்ருதியில் சொல்லுகிற, "மநஸ்ஸில் ஸம்பந்நமான ஸகலேந்த்ரியங்களோடு கூட" என்ற அர்த்தமும் உபபந்நமாகிறது.) வாக்கைப்போலவே மற்ற இந்த்ரியங்களும் மநஸ்ஸில் போய்ச் சேருகிறதென்று தாத்பர்யம். ௪௬௦.

ஸூ. கஙு-கூ. ஸூ|| தந்மந: ப்ராண உத்தராத்.

(ஶ-ரா-வ்ய) தத்=அந்த, மந:=மநஸ்ஸு, உத்தராத்=மேல்வாக்யத்தினால், ப்ராணே=ப்ராணனிடத்தில் ஸம்பத்தமாகிறது. ௪௬க.

(ஶ-ர-பா) "மந: ப்ராணே" என்கிற மேல்வாக்யத்தில் (ரா) மநஸ்ஸுக்கு ப்ராணனில்லயமா, அல்லது முன்போல ஸம்யோகமேயாவென்னில் (ஶ) மநஸ்ஸுக்கா அதின்வ்யாபாரத்துக்கா ப்ராணனில்லயம்சொல்லிற்றென்னில், முன், வாக்குக்கு மநஸ்ஸுப்ரக்ருதியல்லாமையால் வாக்குக்கு மநஸ்ஸில் லயம்சொல்லசரிப்படவில்லை. "அந்நமயம் ஹி ஸோம்ய மந:" என்று மநஸ்ஸை அந்நவிகாரமாகச்சொல்லுகையாலும், "தா அந்நமஸ்ருஜந்த" என்று ஜலம் அந்நத்தைப் படைத்ததாகச் சொல்லுகையாலும், "ஆபோமய: ப்ராண:" என்று ப்ராணனை ஜலத்தின் விகாரமாகச்சொல்லுகையாலும் மநஸ்ஸுக்கும் ப்ராணனுக்கும் இவ்விதமான ஸம்பந்தத்தைப்பற்றி, முன்போலநுபபத்தி யில்லாமையாலே ப்ராணனில் மநஸ்ஸுக்கு லயம் சொல்வதே உசிதமென்று பூர்வபக்ஷம்—"அந்நமயம்-ஹி மந: ஆபோமய: ப்ராண:" இத்யாதி இடங்களில் மநஸ்ஸுக்கு அந்நத்தையும் ப்ராணனுக்கு ஜலத்தையும் உபாதாநமாகச் சொல்லவில்லை, அந்நத்தினால் மநஸ்ஸும் ஜலத்தினால் ப்ராணனும் ஸஹகரிக்கப்பட்டு பல முடையவைகளாகின்றனவென்றே சொல்லப்பட்டது, உன்வழியிலும், மநஸ்ஸுக்கு அந்நமும் அந்நத்துக்கு ஜலமும் காரணமாயினும் ஜலத்துக்கு ப்ராணன் காரணமன்றாகையால் "மந: ப்ராணே" என்ற விடத்தில் ப்ராணபதத்துக்கு ப்ராணகாரணமான ஜலமென்றர்த்தம் சொல்லவேணும், அப்போது ப்ராணபதம் லாக்ஷணிகமாம், ஆகையால் அந்த யுக்தி சரியன்று. முன்போலவே (ரா) மநஸ்ஸு ப்ராணனோடு கூடுகிறது (ஶ)(மநோவ்ருத்தியே ப்ராணனில்லயிக்கிறது) என்று சொல்வதே சரியானதென்று ஸித்தாந்தம். ௪௬௧.

ஸூ. கஙு-எ. ஸூ|| ஸோऽத்⁴யக்ஷே தது³பக³மாதி³ப்⁴ய:.

(ஶ-ரா-வ்ய) தது³பக³மாதி³ப்⁴ய:=அந்த ஜீவனுடைய ஸமீபத்தில் போவது முதலானவற்றினால், ஸ:=அந்த ப்ராணன், அத்⁴யக்ஷே=ஜீவனிடத்தில் சேருகிறது. ௪௬௨.

(ஶ-ர-பா) "ப்ராணஸ்தேஜஸி" என்கிற மேல்வாக்யத்திற்கு, ப்ராணன் தேஜஸ்ஸில் சேருகிறதென்றர்த்தமா, அல்லது தேஜஸ்ஸுமுதலிய பஞ்சபூதங்களோடு கூடின ஜீவனிடத்தில் சேருகிறதென்றர்த்தமாவென்னில், "தேஜஸி" என்று தேஜஸ்ஸிலே சேருவதாகச் சொல்லுகையாலே அதிலேயே சேருகிறதென்றான் பூர்வபக்ஷி— "ஏவமேவேமமாத்மாநமந்தகாலே ஸர்வே ப்ராணா அபி⁴ஸமாயந்தி" என்று மரணஸமயத்தில் ப்ராணன்களெல்லாம் ஜீவனைக்குறித்து அபிமுகமாக வருகிறன வென்கையாலும், "தமுத்க்ராமந்தம் ப்ராணோऽநூத்க்ராமதி" என்றும்,

ஜீவன் வெளிக்கிளம்பும்போது ப்ராணனும் கூடவே வெளிக்கிளம்புகிற தென்கையா லும், "தமுத்க்ராமந்தம் ப்ராணோऽநூத்க்ராமதி" என்று, ஜீவனிருந்தால்தா னிருப்பதாகவும் இப்படி ஸர்வகாலங்களிலும் ஜீவனோடே ப்ராணனுக்கு ஸம்பந்தம் சொல்லுகையாலே "ப்ராணஸ்தேஜஸி" என்ற வாக்யத்திலும் ப்ராணனுக்கு ஜீவ னோடு சேர்த்தியையே சொல்லுகிறது. ஆகில் தேஜஸ்ஸில் சேருவதாகச் சொல்லு வானென்னென்னில்; யமுனா கங்கையில்சேர்ந்து அவ்வழியாக ஸமுத்ரத்தில்சேர்ந்த போதிலும் "யமுனா ஸமுத்ரத்துக்குப்போய்ச் சேருகிறது" என்பதுபோல், ப்ராண னும் முன்பு ஜீவனோடு சேர்ந்து பின்பு அவனுடன்கூட தேஜஸ்ஸில் சேருகிற தென் றர்த்தம் சொல்லவேணு மென்று ஸித்தாந்தம். ௪௬௨.

அபி. ௪-அ. ஸூ|| ௪௬௩. ஸோऽத்யக்ஷே ததுபகமாதிப்ய:.

(ஸ-ரா-ப்ர-ஸா) ததுபகமாதிப்ய:=ஜீவன் ஸர்வபூதமயனென்று, ப்ருதிவீமய ஆபோமய தேஜோமய:=இத்யாதியாலே ஜீவனை பஞ்சபூதமயமாக, அதாவது - பஞ்சபூதமயமான சரீரயுக்தனைச் சொல்லுகையாலே, ஸோऽத்யக்ஷே= (ப்ரா ணனோடுகூடிய ஜீவன், தேஜஸ்ஸோடுகூடின) ஐந்து பூத ஸூக்ஷ்மங்களிலே (சேருகிறான் என்று "ப்ராணஸ்தேஜஸி" என்கிற வாக்யத்துக்குத் தாத் பர்யம். ௪௬௩.

ஸூ|| ௪௬௪. நைகஸ்மிந் தர்சயதோ ஹி.

(ஸ-ரா-ப்ர-ஸா) ஏகஸ்மிந்=(தேஜஸ்ஸு முதலிய ஒவ்வொரு தத்வம் தனித்தனியேயிருந்து சரீராதிகளாகப் பரிணமிக்கைக்கு யோக்யங்க ளல்லா மையால், கார்யகரமல்லாத தனியான தேஸ்ஸில், ந=(ஜீவன்) சேருகிறதில் லை. (தன்னுடைய சரீரத்துக்கு ஆரம்பகங்களான ஐந்து பூத ஸூக்ஷ்மங்க ளோடேயே சேருகிறான்). தர்சயத:ஹி - ("தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமே கைகாம் கரவாணி" ச்ருதிவ்யாதிகளை பாகப்படியே ஒன்றாகச் சேர்த்துப் பின்பு ஸ்ருஷ்டிக்கக்கடவேனென்று ச்ருதியும், "நாநாவீர்யா: ப்ருதக்பூதா: ததஸ்தே ஸம்ஹதிம் விநா | நாசக்நுவந்" இத்யாதியினால், பஞ்சபூத ங்களும் தனித்தனியே ஒன்றை ஸ்ருஷ்டிக்க ஸமர்த்தங்களல்லாமலிருந்து பி ன்பு ஒன்றோடொன்றுசேர்ந்து மஹதாதிகளை ஸ்ருஷ்டித்தனவென்று ஸ்ம்ரு தியும், பஞ்சபூதங்களும் தனித்தனியே கார்யயோக்யங்களன்றென்பதை ப்ர காசிப்பிக்கின்றன. ௪௬௪.

அபி. ௪-௩. ஸூ|| ௪௬௫. ஸமாநா சாஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வம் சாநுபோஷ்ய

(ஸ-ரா-ப்ர) ஆஸ்ருத்யுபக்ரமாத்=அர்ச்சிராதிகதியில் போகத்தொடங்கு வதற்கு முன்பு, ஸமாநா=உபாஸகனுக்கும் அநுபாஸகனுக்கும் உத்க்ராந்தி ஸமாநமாயிருக்கும், அநுபோஷ்ய=(சரீரஸம்பந்தத்தை) தஹியாமல், அம்ரு தத்வம்ச=(சொல்லப்பட்ட) மோக்ஷமாவது, (முக்யமன்று. கௌணம்.)

(ஸ-ரா-ஸா) மேல்சொன்ன உத்க்ராந்தி உபாஸகன் அநுபாஸகன் இருவருக் கும் ஸமாநமா, அன்றோவென்னில், "சதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய:" என்று உபாஸகன்

இங்கேயே ப்ரஹ்மாநுபவம் பண்ணுவதாகச் சொல்லுகையாலே அவனுக்கு வேறே போகவேண்டிய இடமில்லை, ஆகையால் உபாஸகனுக்கு உத்க்ராந்தி கிடையாது, இது அநுபாஸகனுக்குச் சொல்லிற்று என்று பூர்வபக்ஷம்—உபாஸகனுக்கும் இங்கே ப்ரஹ்மாநுபவம் கிடையாது, அர்ச்சிராதி வழியாக தேசாந்தரம்போய் அங்கே ப்ரஹ்மத்தை யநுபவிக்கவேணு மாகையால் அவனுக்கு முத்க்ராந்தியுண்டு, “ஶதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய:” என்று அர்ச்சிராதி வழியாகப்போகவேண்டியவன் முதலிலே மூர்த்தந்ய நாடிவழியாக வெளிக்கிளம்புகிறான். மற்றவன் வேறுவழியாகக் கிளம்புகிறான். அந்த மூர்த்தந்ய நாடியில் ப்ரவேசிக்கிற வரையில் கீழ்ச்சொன்ன உத்க்ராந்திகளெல்லாம் இருவர்க்கும் ஒன்றாயேயிருக்கும், “அத்ர ப்ரஹ்ம ஸமஶ்நுதே” இங்கே ப்ரஹ்மாநுபவம் பண்ணுகிறானென்றதுக்கு, உபாஸந காலத்தில் பரப்ரஹ்மத்தை த்யானிப்பதே அத்யந்த ஸுகரூபமா யிருக்கையாலே அதைச் சொல்லிற்றென்றும், “அம்ருதத்வமேதி” முக்தியை யடைகிறானென்பதற்கு, கீழ்ச்சொன்னபடியே புண்யபாபங்க ளிவனைக் கிட்டாதபடியைச் சொல்லிற்றென்றும் தாத்பர்யம். என்று ஸித்தாந்தம் (சங்கரபாஷ்யத்தில் இது ஸகுணப்ரஹ்ம முக்திவிஷயம்). ௪௯௫.

ஸூ|| ௫௯௯. ததாபீதே: ஸம்ஸாரவ்யபதேசாத்.

(பூ-வ்ய) ஸம்ஸாரவ்யபதேசாத்=ஸம்ஸாரமுண்டென்கையாலே, ஆபீதே:=ஆத்யந்திக ஸம்ஸார நாசம்வரையில், தத்=அந்த பூதஸூக்ஷ்மம் (இருக்கிறது.) ௪௯௬.

(ஸி-வ்ய) ஆபீதே:=ப்ரஹ்ம ப்ராப்திவரையில், ஸம்ஸாரவ்யபதேசாத்=ஸம்ஸார மிருப்பதாகச் சொல்லுகையாலே, தத்=“அம்ருதத்வம்” என்பதற்குக் கீழ்ச்சொன்ன அர்த்தமே உசிதமானது. ௪௯௭.

(பூ-பா) “தேஜ: பரஸ்யாம் தேவதாயாம் ஸம்பத்யதே” தேஜஸு முதலிய பூதஸூக்ஷ்மங்களோடுகூடிய ஜீவன் பரமாத்மாவினிடத்தில் லயிக்கிறானென்றவிடத்தில் சொல்லப்பட்ட லயமாவது எப்படிப்பட்டதென்னில்; பஞ்சபூதம் முதலிய ஸமஸ்த வஸ்துக்களுக்கும் பரமாத்மாவே உபாதாந மாகையால், கடாதிகள் தங்களுக்குபாதாநமான ம்ருத்பிண்டத்தில் லயிப்பதுபோல் லயித்துவிடுகிறதென்றர்த்தம், இதுக்கு ஆத்யந்திகலயமென்று பெயர். அதாவது பூதஸூக்ஷ்மமும் அவித்யாஸம்பந்தமும் வேரோடேயற்று இனி ஸம்ஸாரத்தில் திரும்பாமல்படி லயித்துவிடுகை என்று பூர்வபக்ஷம்—பூதஸூக்ஷ்மமும் அவித்யையும் தத்வஜ்ஞாநத்தினால் நசிக்கவேணும், அந்த ஜ்ஞாந முண்டாகாதபோது இவ்விரண்டும் நசியாது. மேலும், “யோநிமந்யே ப்ரபத்யந்தே ஶரீரத்வாய தேஹிந:” என்று துடங்கி கீதையில், மரித்தவன் மறுபடியும் தன்னுடைய கர்மாநுகுணமாகப் பிறக்கிறானென்று சொல்லுகிறது. ஆகையால் இது ஆத்யந்திகலயமன்று. ஸம்ஸார பீஜத்தோடுகூடினவனையே லயிப்பதைச் சொல்லுகிறதென்று ஸித்தாந்தம். ௪௯௮.

(ஸி-பா) “தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே” என்று, அர்ச்சிராதி வழியாகப்போய் பரமாத்மாவைப் பெறுமளவும் ஸம்ஸாரமுண்டென்கையாலே, “இங்கேயே அம்ருதத்வத்தை (மோக்ஷத்தை) யடைகிறான்” என்று கீழ்ச்சொன்ன வசநத்துக்கு, புண்யபாப ஸம்பந்தங்களைத் துலைக்கிறானென்றே அர்த்தம் சொல்லவேணுமென்கிறார். ௪௯௯.

ஸூ|| ௫௦௦. ஸூக்ஷ்மம் ப்ரமாணதஶ்ச ததோபலப்தே:.

(பூ-வ்ய) ததா=அப்படி.ஸூக்ஷ்மமென்று, உபலப்தே:=காண்கையா

லே; ப்ரமாணத:=பரிமாணத்தினாலும், ஸூக்ஷ்மம்=சிறிதாயிருக்கும் சரீரம்.

(ரா-ப்ர) ப்ரமாணத:=ப்ரமாணத்தினாலும், ததா=அப்படி ஸூக்ஷ்மசரீரமுண்டென்று, உபலப்தே:=காண்கையாலே, ஸூக்ஷ்மம்=ஸூக்ஷ்மசரீரம் (மோக்ஷம்போமளவு மிருக்கிறது) ௩௪௯.

(ஶ-ஹா) நாடி அதிஸூக்ஷ்ம மாகையால் அவ்வழியாக உபாஸகனுடைய லிங்க சரீர மெப்படி புறப்படுமென்னில்; அதிஸூக்ஷ்மமான நாடியின் வழியாகப் புறப்படுகையினாலேயே அதைக்காட்டிலும் லிங்கசரீரம் அதிஸூக்ஷ்ம பரிமாணமாயிருக்குமென்று ஏற்படுகிறது, அதினாலேயே மற்றொருவர்க்கும் காண்கிறதில்லை யென்கிறார்.

(ரா-ஹா) "தம் ப்ரதிப்ரூயாத் ஸத்யம் ப்ரூயாத்" இத்யாதிகளினால், உபாஸகன் அர்ச்சிராதிகதியில் போம்போது சந்த்ரன் முதலானவர்களோடு வார்த்தை சொல்வதாக உபநிஷத்தில் சொல்லுகையாலே, அது சரீரமில்லாவிடில் சரிப்படாதாகையாலே ஸூக்ஷ்ம சரீரமுண்டென்பது ஸித்தம். ௩௪௯.

ஸூ॥ ௩௫௦. நோபமர்தேநாத:.

(ஶ-ப்ர-ஹா) அத:=லிங்கசரீரம் அதிஸூக்ஷ்ம மாகையாலே, உபமர்தேந=ஸ்த்தூலசரீர நாசத்தினால், ந=நசியாது. ஸ்த்தூலசரீரம் தாஹநச்சேதநாதிகளினால் நசித்தபோதிலும் ஸூக்ஷ்மசரீரம் நசியாதென்று கருத்து.

(ரா-ப்ர-ஹா) அத:=கீழ்ச்சொன்ன ஹேதுக்களினாலே, உபமர்தேந=சரீரநாசத்தினால், ந=மோக்ஷத்தைச்சொல்லவில்லை. ஆகையால் மோக்ஷத்தை யநுபவிக்கிறானென்றதுக்கு புண்யபாப ஸம்பந்த மறுகையே அர்த்தம்.

ஸூ॥ ௩௫௧. அஸ்யைவ சோபபத்தேரூஷ்மா.

(ஶ-ப்ர-ஹா) உபபத்தே:=(மரித்தவனுடைய சரீரத்தில் உஷ்ணம் காணாமையும் பிழைத்திருக்குமவன் சரீரத்தில் உஷ்ணம் காண்கையும் உஷ்ணமானது லிங்கசரீரத்தினது என்பதே) உபபந்நமாகையாலே, ஊஷ்மா=உஷ்ணமானது, அஸ்யைவ=இந்த ஸூக்ஷ்ம சரீரத்தினதே, பிழைத்திருக்கும்போது லிங்கசரீர மிருக்கையால் உஷ்ணம் காண்கிறது. மரித்தபின் ஸ்த்தூலசரீர மிருந்தபோதிலும் லிங்கசரீர மில்லாமையால் உஷ்ணம் காண்கிறதில்லை. ஆகையாலது ஜீவனோடுகூடவே போகிறதென்று கருத்து. ௩௫௧.

(ரா-ப்ர-ஹா) அஸ்ய=இந்த ஸூக்ஷ்ம சரீரத்திற்கு, உபபத்தே: ஏவ=ஸ்த்தூலசரீரைகதேசத்தில்ஸ்த்தி உபபந்நமாகையாலே, ஊஷ்மா=உஷ்ணம் தோற்றுகிறது. ஸ்த்தூல சரீரத்தினுஷ்ணம் எங்கும் வ்யாபித்திருக்கும். மரிக்கும்போது ஒருபாகத்திலேயே உஷ்ணம் காண்கிறது. அந்த உஷ்ணமும் ஸ்த்தூலதேஹத்தினதானால் மற்றோரிடத்திலும் காணப்படும், அப்படி காணாமையால் அது ஸ்த்தூல தேஹத்தினதன்று. ஸூக்ஷ்ம தேஹத்தினது என்னவேண்டும். இதனால் மரிக்கும்போது ஸூக்ஷ்மசரீர முண்டென்றும் அத்துடனே வெளிக்கிளம்புகிறானென்றும் ஏற்படுகிற தென்கிறார். ௩௫௧.

ஸூ॥ ௫௦௦. வ்ருதிஷேத்ராதிதிசேந்ஶாரீராத்ஸ்பஷ்டோஹ்யேகேஷாம்.

(ஶ-வ்ரு) சங்கரபாஷ்யத்துக்கு "வ்ருதிஷேயாதிதிசேந்ஶாரீராத்" என்னுமளவுமொரு ஸூத்ரமாய் "ஸ்பஷ்டோஹ்யேகேஷாம்" என்றது மற்றொரு ஸூத்ரமாயிருக்கும். அதில்முதல் ஸூத்ரத்தினர்த்தமாவது - வ்ருதிஷேயாத்" - உத்க்ராந்தியை நிஷேதம்செய்கையாலே, (உபாஸகனுக்கு உத்க்ராந்தியில்லை, இதிசேத்=என்னில், ஶாரீராத் = ஜீவனிடத்திலிருந்து (ப்ராணனுக்கு உத்க்ராந்தியில்லையென்கையாலே) ந=அப்பக்ஷம் சரியன்று.

(ஶ — ஸா) இதற்கு பாஷ்யம்—பரவித்யையை, அதாவது-நிர்குண வித்யையை உபாஸநம் செய்கிறவனுக்கு, "ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி | ப்ரஹ்மைவ ஸந் ப்ரஹ்மாப்யேதி" அவனுடைய ப்ராணன்கள் உத்க்ரமிக்கிறதில்லை. இங்கேயே ப்ரஹ்மஸ்வரூபியாய்க்கொண்டுப்ரஹ்மத்தில் ஏகிபவிக்கிறனென்று உத்க்ராந்தியில்லையென்கையாலே, நிர்க்குண வித்யோபாஸகனுக்கு உத்க்ராந்தி கிடையாதே யென்னில்; இந்த வாக்யத்தில் சரீரத்தைவிட்டு ப்ராணன் வெளிக்கிளம்புகிற தில்லையென்று சொல்லவில்லை. ஜீவனிடத்தில் நின்றும் ப்ராணம் பிரிகிறதில்லையென்றே சொல்லிற்று. இப்படி சொல்லுவானேனென்னில்; வேறு உபநிஷத்தில், "ந தஸ்மாத்ப்ராணா உத்க்ராமந்தி" அந்த ஜீவனிடத்தில் நின்றும் ப்ராணன்பிரிகிறதில்லையென்று ஸ்பஷ்டமாகச்சொல்லுகையாலே அதையே இங்கும் கொள்ளவேணும். இதனால் நிர்குண வித்யோபாஸகன் மரிக்கும்போது ப்ராணனோடுகூடவே ஜீவன் வெளிக்கிளம்புகிறான். அப்போதும் ஜீவனை ப்ராணன் விடுகிறதில்லை கூடவே போகிறது என்று சொல்லிற்று என்று பூர்வபக்ஷம். ௫௱.

(ஶ-வ்ரு) இரண்டாம் ஸூத்ரத்துக்கர்த்தம்—ஏகேஷாம் = ஒருசாகிகளுடைய (வசநத்தில்), ஸ்பஷ்டோஹி=உத்க்ராந்தி யில்லையென்பது ஸ்பஷ்டமன்று. ௫௦௦.

(ஶ — ஸா) இதற்கு பாஷ்யம்—இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்—நிர்க்குணோபாஸகனுக்கு உத்க்ராந்தி யில்லை யென்பது மற்றொரு உபநிஷத்தில் அதிஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறது. அதாவது -"யத்ராயம்புருஷோம்ரியத உதஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்த்யாஹோ நேதி"என்று புருஷன்மரிக்கும்போதுஅவனுடைய ப்ராணன்கள் உத்க்ரமிக்கின்றனவா, இல்லையாவென்றுகேட்க, "நேதிஹோவாச யாஜ்ஞவல்க்ய:" உத்க்ரமிக்கிறதில்லையென்று யாஜ்ஞவல்க்யர் சொன்னாரென்றுசொல்லி, ஆகில் இச்சரீரத்தில் ப்ராணனிருக்கிறதென் றொப்புக்கொண்டதாம், அப்போது அவன் மரித்தவனுகானென்று சங்கித்துக்கொண்டு, இங்கே லயித்துப்போய்விடுகின்றனவென்று சொல்லிற்று. இப்படி அதிஸ்பஷ்டமாகச்சொன்ன அர்த்தத்தை மற்ற இடங்களிலும் அங்கீகரிக்க வேண்டுகையாலே, கீழ்ச்சொன்ன விடத்திலும் நிர்க்குணோபாஸகனுக்கு உத்க்ராந்தியில்லையென்பதிலேயே தாத்பர்யமென்று ஸித்தாந்தம்.

(ரா-வ்ரு) வ்ருதிஷேயாத்=(உபாஸகனுக்கு) உத்க்ராந்தியை நிஷேதிக்கையாலே, (உத்க்ரமணம்கிடையாது) இதிசேத்=என்னில், ஶாரீராத்=ஜீவனிடத்தில் நின்றும் உத்க்ராந்தி இல்லை யென்கையாலே) ந=உத்க்ராந்தி இல்

லை யென்பதில்லை. ஏகேஷாம்=ஒரு சாகையாருடைய மந்த்ரத்தில், ஸ்பஷ்டோ ஹி=(இவ்வர்த்தம்) ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ருOO.

(ஶ்ரீ-பா) "ஸ யதா³யமஸ்மாச்ச²ரீராது³த்க்ராமதி" என்று தொடங்கி அநுபாஸகனுக்கு ப்ராணன் வெளிக்கிளம்பிப்போகும் ப்ரகாரத்தையும் லோகாந்தர கமநத்தையும் சொல்லி, பின்பு "அகாமயமாந:" என்று தொடங்கி "ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி" உபாஸகனுடைய ப்ராணன் சரீரத்தில் நின்றும் வெளிக்கிளம்புகிறதில்லை யென்கையாலே உபாஸகனுக்கு உத்க்ராந்தி கிடையாதென்று பூர்வபக்ஷம்—"ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி" என்ற விடத்தில் உபாஸகனுடைய சரீரத்தில் நின்றும் ப்ராணன் வெளிக்கிளம்புகிறதில்லை என்றர்த்தமன்று. ஜீவனைவிட்டு ப்ராணன் பிரிகிறதில்லை. அர்ச்சிராதி மார்க்கத்தில் போம்போது கூடவே யிருக்கிறதென்றே அவ்வாக்யத்துக்கர்த்தம் இவ்விடத்தில் இவ்வர்த்தம் ஸ்பஷ்டமாக இராவிடிலும், மாத்யந்தின சாகையில், "யோகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாமோ ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்தி" என்று உபாஸகனை "அகாமோ நிஷ்காம:" இத்யாதியினால் சொல்லி, பின்பு, அவனிடத்தில் நின்றும் ப்ராணன்கள் வெளிக்கிளம்புகிற தில்லையென்று இவ்வர்த்தத்தையே ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று ஆகையால் அதையே இங்கும் அர்த்தமாகக் கண்டுகொள்வது. ஒருவாக்யம் இரண்டர்த்தத்தைக் கொடுக்குமாகில், வேறோரிடத்தில் இவ்விரண்டில் எவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறதோ, அதையே இங்கும் அங்கீகரிப்பது உசிதம் என்று ஸித்தாந்தம். ௬௱.

ஸூ|| ருO௧. ஸ்மர்யதே ச.

(ஶ்ரீ-பா-வ்) ஸ்மர்யதே ச=(இவ்வர்த்தம்)ஸ்ம்ருதியிலும்சொல்லப்படுகிறது.

(ஶ்ரீ-பா) மஹாபாரதத்தில் "ஸர்வபூதாத்மபூதஸ்ய ஸம்யக்பூதாநி பஶ்யத: | தேவா அபி மார்கே³ முஹ்யந்தி அபத³ஸ்ய பதை³ஷிண:" என்று ஸகலப்ராணிகளையும் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்க்கிறவனாய், போய் அடையத்தக்க வேறொரு ஸ்த்தாநத்தை யுடைத்தாகாதவனான நிர்க்குண வித்யோபாஸகனுடைய வழியை தேவர்களு மறிகிறார்களில்லை என்று சொல்லிற்று. இதனாலும் அவ்வுபாஸகனுக்கு தேசாந்தரம் போகைக்காக சரீரத்தில் நின்றும் ப்ராணோத்க்ரமணம் கிடையாதென்பது ஸித்திக்கிறது. ௬௱௧.

(ஶ்ரீ-பா) "ஊர்த்⁴வமேகஸ்ஸ்தி²தஸ்தேஷாம் யோ பி⁴த்வா ஸூர்யமண்ட³லம் | ப்³ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் க³திம்" என்றுகீழ்ச்சொன்னஅதிகாரிகளில் சிறந்தவனாய் ஸூர்யமண்டலத்தை பேதித்துக்கொண்டுபோய் ப்ரஹ்மலோகத்தையாக்ரமித்து அவ்வழியாலே பரமப்ராப்யமான மோக்ஷத்தை யடைகிறானென்று ஸ்ம்ருதியில் உபாஸகன் தேசாந்தரம்போவதாகச்சொல்லுகையாலே அவனுடைய ப்ராணன்கள் சரீரத்தில் நின்றும் உத்க்ரமிக்கிறதுகளென்பது ஸித்தமென்கிறார். ௬௱௧.

௧௦. ௧௪௦.ஸூ|| ருO௨. தாநி பரே ததா² ஹ்யாஹ.

(ஶ்ரீ-பா-வ்) தாநி=அந்த பூதஸூக்ஷ்மங்கள், பரே=பரமாத்மாவினிடத்தில் ஸம்பந்நங்களாகின்றன, ததா² ஹி=அப்படியன்றோ, ஆஹ=ஶ்ருதி சொல்லிற்று. ருO௨.

(ஶ்ரீ-பா) நிர்க்குண ப்ரஹ்மோபாஸகனுடைய இந்த்ரியங்களும் லிங்கசரீரமும் அவன் மரித்தபின் பரப்ரஹ்மத்தில் லயித்துவிடுகின்றன. இதற்கு ப்ரமாணம்—"ஏவ

"...ஜீவாத்மா ப்ராணே ப்ராணஸ்தேஜஸி தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்" உபாஸகனுடைய இந்த்ரியங்களும் சரீராரம்பகமான பூதஸூக்ஷ்மங்களும் ப்ரஹ்மத்தில் லயித்துவிடுகின்றன என்பது. ௫௦௨.

(ரா-ஸா) சரீரத்தில் நின்றும் வெளிக்கிளம்பினபின் ஜீவன் பூதஸூக்ஷ்மங்களோடுகூடி பரமாத்மாவினிடத்தில் லயிக்கிறனென்று "தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்" என்ற ஸ்ருதிசொல்கிறது ஆகையாலே இவன் செய்த கர்மாநுகுணமாகவும் உபாஸநாநுகுணமாகவும் துக்காநுபவம்பண்ண லோகாந்தரங்களுக்குப் போகிறதில்லையென்கிறார். நெடுநாள் ஸம்ஸாரதுக்காநுபவம்பண்ணின ஆயாஸம் தீருகைக்காகப் பரமாத்மாவினிடத்தில்போய்ச் சேருகிறனென்று கருத்து. ௫௦௨.

சூ. ௧௬௧. ஸூ|| ௫௦௩. அவிபாகோ வசநாத்.

(ஶ-ரா-வ்) வசநாத்=ஸ்ருதிவசநத்தினாலே, அவிபாக:=வேறுபட்டுத் தோற்றுவதில்லை (என்னவேணும்). ௫௦௩.

(ஶ-ஸா) நிர்குணோபாஸகனுடைய இந்த்ரியங்களும் பூதஸூக்ஷ்மங்களும் பரப்ரஹ்மத்தில் லயிக்கும்போது, திரும்பி ஸம்ஸாரோத்பத்தி ஹேதுவான சக்தியுங்கூட இல்லாமல் காரணமாகிய ப்ராஹ்மத்தில் அத்யந்தமாக லயித்துவிடுகிறது. இதற்கு ப்ரமாணம்—"பித்யேதே தாஸாம் நாமரூபே" என்கிற ஸ்ருதி. ௫௦௩.

(ரா-ஸா) பூதஸூக்ஷ்மங்களோடுகூடின ஜீவன் பரமாத்மாவில் லயிக்கையாவது-ஸுவர்ணத்தில் கடகம்போலன்று; வாக்கு மநஸ்ஸில் லயிப்பதுபோலவே நாமரூபங்களற்று இதொருவஸ்துவென்று வேறுபட்டுத் தோற்றாதபடி சேர்ந்துவிடுகிறன். "வாங்மநஸி ஸம்பத்யதே" என்ற விடத்திலுள்ள "ஸம்பத்யதே" என்ற பதத்தையே "தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்" என்ற விடத்திலும் ஸேர்த்துக்கொள்ளவேண்டுகையாலே, அங்கே அப்பதத்திற்கு என்ன அர்த்தமோ அவ்வர்த்தத்தையே இங்கும் சொல்லவேண்டுகையாலே இதுவே பொருளாம். ௫௦௩.

சூ. ௧௬௨. ஸூ|| ௫௦௪. ததோகோக்ரஜ்வலநம் தத்ப்ரகாசிததவாரோ வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்தாநுக்ருஹீத: சதாதிகயா.

(ஶ-வ்) ததோகோக்ரஜ்வலநம்=அந்த ஜீவனுடைய ஸ்தாநமாகிய ஹ்ருதயத்தினுடைய அக்ரத்துக்கு (ஹ்ருதயத்திலுள்ள நாடிக்கு) ப்ரகாசமுண்டாகிறது, தத்ப்ரகாசிததவார:=அப்ப்ரகாசத்தினால் ப்ரகாசிக்கிற வழியையுடையவனாகிறன், வித்யாஸாமர்த்யாத்=உபாஸநாமஹிமையினால், தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச=அந்த வித்யைக்கு சேஷமாகிய மார்க்கசிந்தநமுண்டாகையாலும், ஹார்தாநுக்ருஹீத:=ஹ்ருதயவர்த்தியான பரமபுருஷனால் அநுக்ரஹிக்கப் பட்டவனாய்க்கொண்டு, சதாதிகயா=நூற்றோராம் நாடியினால் (வெளிக்கிளம்புகிறன்). ௫௦௪

(ஸா-வ்ய) "வித்யாஸாமர்த்யாத்" உபாஸநத்தின் மஹிமையினாலும், "தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச" — அந்த வித்யைக்கு அங்கமான அர்ச்சிராதி கதி சிந்தநத்தாலும், "ஹார்தாநுக்ருஹீத:" ஹ்ருதயவர்த்தியான பரமாத்மாவினால் அநுக்ரஹிக்கப்பட்டவனாகிறான், (பின்பு), "ததோக:" — அந்த ஜீவனுடைய ஸ்த்தாநமாகிய ஹ்ருதயம், "அக்ரஜ்வலநம்" — அக்ரத்தில், (நாடீமுகத்தில்) ப்ரகாசிக்கிறது. "தத்ப்ரகாசிதத்வார:" — அதினால் ப்ரகாசிக்கப்பட்ட வழியையுடையவனாய்க்கொண்டு, "சதாதிகயா" நூற்றோராம் நாடியினால் (உபாஸகன் உத்க்ரமிக்கிறான்). ௫௦௪.

(ஸ-ஹா) இனி ஸகுணோபாஸகனுடைய கதியை விசாரிக்கிறார்—புருஷன் மரிக்கும்போது ஹ்ருதயத்திலுள்ள நாடி விளக்குப்போல் உஜ்வலமாகிறது, அதினால் வழி தெரிகிறது, பின்பு சிரஸ்ஸோ, கண்ணோ, காதோ ஏதோ ஒருவழியினால் வெளிக்கிளம்பிப்போகிறானென்று "தஸ்ய ஹைதஸ்ய ஹ்ருதயஸ்யாக்ரம்" இத்யாதிச்ருதி சொல்லுகிறது. இது உபாஸகனுக்கும் அநுபாஸகனுக்கும் ஸமாநமாகில், உபாஸகனுடைய உபாஸநத்துக்கும், அவ்வுபாஸகன் நித்யமாக அர்ச்சிராதிகதி சிந்தநம் பண்ணினதுக்கும் ஒரு விசேஷமில்லை ஆகையால் உபாஸகன் ஏதோ ஒருவழியினால் போகிறதில்லை. பரமாத்மாவினுடைய அநுக்ரஹம்பெற்று ஹ்ருதயத்தில் நின்றும் புறப்பட்டிருக்கிற நாடிகளில் சிரஸ்ஸில் போயிருக்கிற நூற்றோராவது நாடியின் வழியாகவே போகிறானென்கிறார். ௫௱௪.

(ஸா-ஹா) "சதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ்தாஸாம் மூர்த்தாநமபிநிஸ்ஸ்ருதைகா| தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி" என்ற ச்ருதி. ஹ்ருதயத்தில் நூற்றொரு நாடியுண்டு, அதிலொன்று சிரஸ்ஸுவழியாகப் புறப்பட்டிருக்கிறது, அந்த நாடிவழியாக மேலேகிளம்பிப்போனவன் முக்தியையடைகிறான் என்று சொல்லிற்று. அந்த நாடி அதி ஸூக்ஷ்மமாகையாலே அது ஜீவனால் கண்டுபிடிக்க முடியாதேயென்னில், பரமபுருஷாராதந ரூபயான உபாஸநத்தினாலும், அதுக்கங்கமாக ப்ரதிதிநம் செய்கிற அர்ச்சிராதி கதி சிந்தநத்தாலும் பரமபுருஷன் ப்ரீதனாகிறான், அவ்வநுக்ரஹத்தினால் ஜீவனுடைய ஹ்ருதயாக்ரம் தீபம்போல் ப்ரகாசிக்கிறது. அதினால் அந்த நாடி தெரிகிறது, அதைப்பற்றிக்கொண்டு சிரஸ்ஸுவழியாகவே உத்க்ரமிக்கிறானென்கிறார்.

கூயி. ௪௱௩. ஸூ॥ ௫௦௫. ரஶ்ம்யநுஸாரீ.

(ஸ-ஸா-வ்ய) ரஶ்ம்யநுஸாரீ=ஸூர்யகிரணங்களை யநுஸரித்தவனாய் (உபாஸகன் போகிறான்). ௫௦௫.

(ஸ-ஸா-ஹா) "அத யத்ரைதஸ்மாச்சரீராதுத்க்ராமத்யதைதைரேவ ரஶ்மிபிரூர்த்வமாக்ரமதே" என்று உபாஸகன் இச்சரீரத்தில் நின்றும் கிளம்பி ஸூர்யகிரணங்களின் வழியாகப் போவதாகச் சொல்லியிருக்கிறது. (ஸ) இந்த கதி இரவில் மரித்தாலும் பகலில் மரித்தாலும் அந்த கிரணங்களின் வழியாகவே போகிறானென்கிறார். (ஸா) பகலில் மரித்தால் ஸூர்யகிரணமுண்டு, இரவில் அதில்லையாகையால் அப்போது மரித்த உபாஸகன் எப்படி போகிறானென்னில்; இரவிலும் உஷ்ணம் காண்கையாலே அப்போதும் ஸூர்யகிரணங்களுண்டு. சீதகாலத்தில் காணாதிருப்பது — அதிக சீதத்தினால் அதினுடைய உஷ்ணம்குறைந்து விடுகிறதொழிய அதில்லையென்பதில்லை ஆகையால் இரவில்மரித்த உபாஸகனும் அவ்வழியாகவே போகிறானென்கிறார். ௫௦௬.

ஸூ॥ ௫௦௬. நிஶிநேதி சேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் தர்ஶயதி ச.

(ஶ-பா) நிஶி=ராத்ரியில், ந=ஸூர்யகிரணம் கிடையாது, இதி சேத்= என்னில், ஸம்பந்தஸ்ய=ஸூர்யகிரண ஸம்பந்தத்துக்கு, யாவத்தேஹபாவி த்வாத்=சரீரம் முழுமையும் ஸ்த்திதி யுண்டாகையாலே, ந=இல்லையென்பதி ல்லை, தர்ஶயதி ச=(இதை ஶ்ருதியும்) காண்பிக்கிறது. ௫௦௬.

(ரா-பா) நிஶி=ராத்ரியில் (மரித்தவனுக்கு) ந=மோக்ஷமில்லை, இதி சே த்=என்னில், ஸம்பந்தஸ்ய=கர்மஸம்பந்தத்துக்கு, யாவத்தேஹபாவித்வா த்=சரீரமுள்ளவரைக்குமே ஸித்தியுண்டாகையால், ந=மோக்ஷமில்லையென்ப தில்லை, தர்ஶயதி ச=ஶ்ருதியும் இதைச்சொல்லுகிறது. ௫௦௬.

* (ஶ-பா) ராத்ரியில் ஸூர்யகிரண மில்லாமையால் அப்போது மரித்த உபாஸ கன் அவ்வழியே போகமுடியாதென்னில்; "அமுஷ்மாதாதித்யாத் ப்ரதாயந்தே" இத்யாதி ஶ்ருதி, சரீரத்திலுள்ள நாடியோடு ஸம்பந்தித்த ஸூர்யகிரணங்கள் ஸூர்ய னால் ப்ரகாசித்து ஸூர்யனிடத்தில்போய் ஸம்பந்திக்கிறதுகளென்று சொல்லுகையா லே ஸூர்யகிரணத்துக்கும் சரீரத்துக்கும் ஸம்பந்தம் எப்போது முண்டென்று தோற் றுகையாலே ராத்ரியிலும் ஸூர்ய கிரணமுண்டு, அப்போது மரித்த உபாஸகனும் அவ்வழியாகவே போகிறானென்கிறார். ௫௦௬.

(ரா-பா) "திவா ச ஶுக்லபக்ஷஶ்ச உத்தராயணமேவ ச | மும்ரூ ணாம் ப்ரஶஸ்தாநி விபரீதம் து கர்ஹிதம்" பகல் சுக்ல பக்ஷம் உத்தராயணம் அதில்மரிப்பதே முமுக்ஷுவுக்குச்சிறந்தது. மற்றகாலத்தில்மரிப்பது நிந்த்யமாம், அதா வதுமோக்ஷஹேதுவாகாதென்கையாலே ராத்திரியில்மரித்த உபாஸகனுக்கு மோக்ஷமி ல்லையேயென்னில்; உபாஸகனுக்கு உபாஸநாபலத்தினால் ஸஞ்சிதகர்மங்கள் நசித்தன, ப்ராரப்தம் அந்த தேகத்தோடே முடிந்து விடுகிறது. ஆகாமி ஒட்டாது. இனி ஸம் ஸாரத்திலிருக்கைக்கு மற்றொரு ஹேதுவும் கிடையாதாகையால் அவனும் முக்தியை யே யடைகிறான். "தஸ்ய தாவதேவ சிரம்" என்பதே இதற்கு ப்ரமாணம், கீழ்ச் சொன்ன ப்ரமாணம் அநுபாஸகனைப் பற்றினதென்கிறார். ௫௦௬.

௬௰. ௩௫௫ ஸூ॥ ௫௦௭. அதஶ்சாயநேऽபி தக்ஷிணே.

(ஶ ரா-பா) அத ஏவ=ஆகையினாலேயே, தக்ஷிணே அயநே அபி=தக்ஷிணா யநத்தில் (மரித்தவனுக்கும் மோக்ஷமுண்டு). ௫௦௭.

(ஶ-ரா-பா) "அத யோ தக்ஷிணே ப்ரமீயதே பித்ருணாமேவ மஹிமாநம் கத்வா சந்த்ரமஸஸ்ஸாயுஜ்யம் கச்சதி" என்ற ஶ்ருதி, தக்ஷிணாயநத்தில் மரித்தவன் சந்த் ரனை அடைவதாகச் சொல்லுகையாலும், "தஸ்மிந் யாவத்ஸம்பாதமுஷித்வா அதைதமேவாத்வாநம் புநர்நிவர்த்தந்தே" என்ற ஶ்ருதி சந்த்ரலோகம்போனவர்கள் திரும்பி ஸம்ஸாரத்தையே வந் தடைகிறார்க ளென்கையாலும் பீஷ்மர் உத்தராயணம் வருமளவும் ப்ராணனைத் தரித் துக்கொண்டிருந்தபடியாலும் தக்ஷிணாயநத்தில் மரித்தவனுக்கு மோக்ஷமில்லையே யெ ன்னில்; கீழ்ச்சொன்னபடி ஸம்ஸார ஹேதுவான கர்மம் உபாஸகனுக் கில்லாமை யாலும், சந்த்ரலோகம்போன உபாஸகனும் அங்கே சிலகாலமிளைப்பாறிப் பின்பு

மோக்ஷம் போகிறனென்று “தஸ்மாத் ப்ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி” என்றமே ல்வாக்யத்தில் தோற்றுகையாலும், தக்ஷிணாயநத்தில் மரித்த உபாஸகனும் மோக்ஷம டைகிறான். தக்ஷிணாயநத்தில் மரணத்தை இகழ்வாகச்சொன்னது அநுபாஸகன்விஷ யம். பீஷ்மாசார்யரும் அந்தப்ராசஸ்த்யத்தையே அநுஷ்டித்துக் காண்பித்தாரென் கிறார். ௨௰௭.

ஸூ|| ௨௰௮. யோகிந: ப்ரதி ச ஸ்மர்யதே ஸ்மார்தே சைதே.

(ஶ - வ்யா) யோகிந: ப்ரதி=(ச்ருதியில் சொல்லப்பட்ட) உபாஸகர்களை க்குறித்து, ஸ்மர்யதே=அநாவ்ருத்தி சொல்லப்பட்டது, ஏதே=இவை, ஸ்மார்த்தே=ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டவைகள் சங்கரபாஷ்யத்துக்கு, ஸ்மர்யேதே= என்று பாடம். ௨௰௮.

(ரா-வ்யா) யோகிந: ப்ரதி = உபாஸகர்களைக்குறித்து, ஏதே=இவை, ஸ்மார்தே=ஸ்மரிக்கத்தக்கவைகளாக, ஸ்மர்யேதே=ஸ்ம்ருதியில் சொல்லப் பட்டன. ௨௰௮.

(ஶ-ரா-வ்யா) “யத்ர காலே த்வநாவ்ருத்திம்”=என்று தொடங்கி, “[illegible] த்ராஹஸ்ரூ:”=இத்யாதியினால்கீதையில் உத்தராயணத்தில்மரித்தவன்திரும்பி ஸம்ஸாரமடையான், தக்ஷிணாயநத்தில் மரித்தவன் திரும்பி ஸம்ஸாரத்தைய டைவானென்று ப்ரதாநமாக ஆரம்பித்துச் சொல்லியிருக்கிறதேயென்னில், (ந) (வேதத்தில் சொன்ன தஹராதிவித்யைகளை உபாஸிக்கிறவனுக்கு ஸம் ஸாரமில்லை யென்றோம். கீதையில், பகவதாராதந ரூபகர்மம் செய்கிற யோகி யையும், கர்த்ருத்வாநுஸந்தாநமில்லாமல் தாரணைசெய்கிற ஜ்ஞாநியையும் குறி த்துச்சொல்லிற்று, ஆகையால் விரோதமில்லை) (ப) அங்கு மரணகாலத்தைச் சொல்லவில்லை. தேவயாந பித்ருயாணங்களாகிற இரண்டு மார்க்கத்தையும் உபாஸகன் நித்யமாக அநுஸந்திக்க வேண்டியதைச் சொல்லிற்று. இப்படி அர்த்தம் சொல்வதற்கு ப்ரமாணம். “நைதே ஸ்ருதீ பார்த ஜாநந்” இத் யாதி மேல்வாக்யமென்கிறார். ௨௰௮.

௨-வது பாதம் முடிந்தது.

௩-வது பாதம்.

௧. ௧௪௬. ஸூ|| ௨௰௧. அர்சிராதிநா தத்ப்ரதிதே:.

(ஶ-ரா-வ்யா) தத்ப்ரதிதே:=அதுக்கே ப்ரஸித்தியுண்டாகையாலே, அ ர்சிராதிநா=(மரித்த உபாஸகன்) அர்ச்சிராதிவழியினால்போகிறான். ௨௰௧.

(ஶ-ரா-ஹா) இதில் உபாஸகன் போம்வழியை நிரூபிக்கிறார்—சாந்தோக்யம் உப கோஸலவித்யையில் ‘தேऽர்சிஷமேவாபிஸம்பவந்தி அர்சிஷோऽஹ: அஹ்ந ஆபூ ர்யமாணபக்ஷம் ஆபூர்யமாணபக்ஷாத்யாந் ஷடுதங்ஙேதி மாஸாம்ஸ்தாந்மாஸேப்ய

ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸராதாதித்யம் ஆதித்யாச்சந்த்ரமஸம் சந்த்ரமஸோ வித்யுதம் தத்புருஷோऽமானவஸ்ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி" என்று உபாஸகன் சரீரத்தில் நின்றும் வெளிக்கிளம்பி க்ரமமாக அக்நி திநம் சுக்லபக்ஷம் உத்தராயணம் வர்ஷம் ஸூர்யன் சந்த்ரன் மின்னல் ஆகிய இவைகளைக் கடந்துபோய், பின்பு அங்குநின்றும், அமாநவனால் பரமாத்மாவை அடைவிப்பிக்கப்படுகிறான் என்றது. கௌஷீதகியில் **"அக்நிலோகமாகச்சதி ஸவாயுலோகம் ஸவருணலோகம் ஸ ஆதித்யலோகம் ஸ இந்த்ரலோகம் ஸ ப்ரஜாபதிலோகம் ஸ ப்ரஹ்மலோகம்"** என்று, க்ரமமாக அக்நிலோக வாயுலோக வருணலோக ஆதித்யலோக இந்த்ரலோக ப்ரஹ்மலோகங்களைக்கடந்து பரமாத்மாவை யடைகிறானென்றது. இப்படி அநேக இடங்களில் அநேகவிதமாகச் சொல்லி யிருக்கையாலே ஒவ்வோரிடங்களிலும் வெவ்வேறு வழியே சொல்லி யிருக்கையாலே உபாஸகன் அவற்றில் ஏதோ ஒருவழியாகவே போகிறானென்கிறதா, அல்லது இவையெல்லாம் ஒரேவழியாய் அவ்வழியினாலேயே எல்லாரும் போகிறார்களென்கிறதாவென்னில்; எல்லா இடங்களிலும் ஸூர்யன் முதலான பெயர்களை அநுகதமாகச் சொல்லி யிருக்கையாலே அவையெல்லாம் ஒரே மார்கமென்றேயேற்படுகிறது. உபாஸநம் சொல்லுகிற ப்ரகரணங்களில் ஒவ்வோரிடத்தில் சில சில குணங்களைச் சொல்லியிருந்தபோதிலும் மற்றோரிடத்திற் சொல்லிய குணங்களையும் அவ்வவ இடங்களில் அநுஸந்திப்பதுபோல், இங்கும் அர்சிராதி மார்க்கத்திலுள்ளவைகளையெல்லாம் ஓரிடத்திலே சொல்லாவிடினும் மற்றோரிடத்தில் சொன்னவைகளையும் இங்கும் அநுஸந்தித்துக்கொள்ளவேணும் ஆகையால் அர்சிராதி மார்கமென்பதொன்றே, அதினாலேயே உபாஸகர்களெல்லாரும் போகிறார்களென்கிறார். ௫௦௯.

அதி. ௧௪௭. ஸூ|| ௫௧௦. வாயுமப்தாதவிசேஷவிசேஷாப்யாம்.

(ஶ்ரு-ப்ர-வ்யா) **அவிசேஷவிசேஷாப்யாம்=ஸாமாந்யமாகவும் விசேஷமாகவும் சொல்லுகையாலே, அப்தாத்=ஸம்வத்ஸரத்தைக் காட்டிலும் மேலே, வாயும்=வாயுவை,** (நிவேசிக்கவேணும்). ௫௧௦.

(ஶ்ரு-ப்ர-ஸா) சாந்தோக்யத்தில, அர்சிராதிவழியில், "மாஸேப்யஸ்ஸம்வத்ஸரம்" என்று உத்தராயணத்திற்குப்பிறகு ஸம்வத்ஸரத்தைச் சொல்லியிருக்கிறது. வாஜஸநேயத்தில், "மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யம்" என்று அவ்விரண்டுக்கும் நடுவில் தேவலோகத்தைச் சொல்லியிருக்கிறது. மற்றோரிடத்தில், "ஸ வாயுமாகச்சதி...ஸ ஆதித்யமாகச்சதி" என்று ஸூர்யனுக்கு முன்னே வாயுவைச் சொல்லியிருக்கிறது. இங்கு ஓரிடத்தில் சொன்னவற்றை மற்றோரிடத்திலும் வைத்துக்கொள்ள வேண்டுகையாலே, உத்தராயணத்துக்கும் ஸூர்யனுக்கும் நடுவில் வாயுவையும் தேவலோகத்தையும் அநுஸந்திக்கவேணும். இவ்விரண்டையும் ஓரிடத்தில் சொல்லவில்லை, ஒவ்வொன்றை ஒவ்வோரிடத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் இவ்விரண்டும் ஒன்று, அல்லது வேறுவென்று விசாரிக்கில், தேவலோகபதம் வாயுவுக்கும் ஸ்வர்க்கத்துக்குங்கூட வாசகமாகையால் ஸாமாந்யமா யிருக்கும். வாயுபதம் அதையொன்றையே சொல்லும், ஸாமாந்ய பதத்துக்கு விசேஷத்தில் பர்யவஸாநம் ந்யாயமாகையால் தேவலோக பதமும் வாயுவையே சொல்லிற்றும், இனி அவ்வாயுவை வருஷத்துக்குப் பின்னும் ஆதித்யனுக்கு முன்னும் நிவேசிக்கவேணுமென்கிறார்.

அதி. ௧௪௮. ஸூ|| ௫௧௧. தடிதோதிவருணஸ்ஸம்பந்தாத்.

(ஶ்ரு-ப்ர-வ்யா) **ஸம்பந்தாத்=வருணனுக்கும் மின்னலுக்கும் ஸம்பந்தமுண்**

டாகையால், வருண:=வருணன், தடித:=மின்னலுக்குமேலே (நிவே சிக்கப்படுவான்). ருகக.

[ஸ-ரா-ஸா] சாந்தோக்யத்தில், "சூர்யாச்சந்த்ரமஸம் சந்த்ரமஸோ வித்யுதம் தத்புருஷோ அமானவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி" என்று ஸூர்யனுக்கு மேல் சந்த்ரனையும், அதுக்குமேல் வித்யுத்தையும் சொல்லியிருக்கையாலே அந்தபரம் பரையையே அங்கீகரிக்கவேணும், கௌஷீதகியில், 'ஸவாயுலோகம் ஸவருணலோகம் ஸஆதித்யலோகம் ஸஇந்த்ரலோகம் ஸப்ரஜாபதிலோகம் ஸப்ரஹ்மலோகம்' என்று வாயுவுக்கும் ஸூர்யனுக்கும் மத்தியில் வருணனையும், 'ஸூர்யனுக்கு மேல் இந்த்ரனையும் ப்ரஹ்மாவையும் சொல்லியிருக்கிறது. இந்த வருணனை அவ்விடத்திலா, மற்றோரிடத்திலா நிவேசிக்கவேண்டுமென்னில்; வித்யுத் மேகத்தின் நடுவேயுண்டாகையாலும் வருணன் மேகவாஹநனாகையாலும் வித்யுத்துக்கும் வருணனுக்கும் இவ்விதமான ஸம்பந்த முண்டாகையாலே வருணனை வித்யுத்துக்கு மேலே சொல்லவேண்டும். இந்த்ரனையும் ப்ரஹ்மாவையும் அந்தவருணனுக்கு மேலே நிவேசிக்கவேணும். வித்யுத்துக்குப்பின் மூவரிருந்தால் "ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி" என்று அந்த வித்யுத்புருஷனே உபாஸகனை மோக்ஷத்தை அடைவிப்பிக்கிறான் என்கிறவாக்யம் விரோதியாதோ வென்னில், சந்த்ராதிஷ்டானமான தேவதைக்குப்பின், வித்யுததிஷ்டாந தேவதையான அமாநவனென்கிற நித்யஸூரியே உபாஸகர்களைப் பரமபதத்துக் கழைத்துக்கொண்டுபோகிறார். வருணன் முதலானவர்கள் அதுக்கு ஸஹாயம் செய்கையாலே அவர்களையும் ஆதிவாஹிகராகச் சொல்லுகிறது என்கிறார். ருகக.

சுய. கஅவ. ஸூ॥ ருகஉ. ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத்.

(ஸ-ரா-வ்ய) தல்லிங்காத்=ஆதிவாஹிகரென்பதற்கு ஹேது உண்டாகையாலே, ஆதிவாஹிகா:=(அக்நி முதலானவர்கள்) ஆதிவாஹிகர்கள். ருகஉ.

(ஸ-ரா-ஸா) அர்ச்சிராதி மார்க்கத்தில் சொல்லப்பட்ட அக்நி திநம் சுக்லபக்ஷம் முதலானவைகள். அவ்வழிக்கடையாளங்களா, அல்லது, போகபூமியா, அல்லது, உபாஸகரைக்கொண்டுவிடுகிற ஆதிவாஹிகராவென்னில்; ஒரு ஊருக்குப்போகிறவனைக்குறித்து, நீ இங்கு நின்றும்புறப்பட்டு இம்மலையையும் அதற்கப்புறமுள்ள இவ்வாற்றையும், அப்புறம் இன்னமரத்தையும், பின்பு இன்ன ஊரையும் கடந்துபோய் அப்புறம் இன்ன ஊரையடையக்கடவாய் என்று வழிக்கு அடையாளங்களைச்சொல்வதுபோல் பரமபதம் போகிறவனுக்கு வழியிலடையாளங்களைச் சொல்லிற்று, இவை அசேதநங்களாகையால் ஆதிவாஹிகராகமாட்டார். லோகத்தில் சேதநராகிய புருஷர்களையே வழிகளில் தூக்கிக்கொண்டுபோகிறவர்களாக நியமிக்கிறார்கள், என்றார் சிலர்—திநம்முதலிய காலங்கள் வழிக்கு அடையாளமாகமாட்டா வாகையால் இவைபோகபூமிகளாக வேணும், போகிற உபாஸகர் அங்கங்கே தங்கி இளைப்பாறிப் போகவேணுமென்றதென்றார் சிலர்—"ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி" என்று, உபாஸகரை அந்தவித்யுத்புருஷன் ப்ரஹ்மலோகத்தை அடைவிப்பிக்கிறானென்று சொல்லுகையாலே, அந்த வித்யுத்புருஷனுக்கு முன்னும் பின்னும் சொல்லப்பட்ட அக்நிமுதலானவர்களும் ஆதிவாஹிகரென்பது ஸித்தமென்கிறார் ஸூத்ரகாரர். ருகஉ.

ஸூ॥ உபயவ்யாமோஹாத் தத்ஸித்தே:.

(ஸ- வ்ய) உபயவ்யாமோஹாத்=இருவர்க்கு மஜ்ஞாந முண்டாகையால்,

த்தி³லை꞉=(அக்ந்யாதிகள்) ஆதிவாஹிகரென்பது ஸித்திக்கையாலே, (இது வே சரியானது).

(ஶ்ரீ - ஸா) இந்த பாஷ்யத்தில் இந்த ஸூத்ரம் அதிகமாகக்காண்கிறது. அர்ச்சிராதியான் வழியும் அசேதநமாகில், அவ்வழியில் போகிற உபாஸகனும் அப்போது கரணகளேபரங்கள் சுருங்கிக்கிடக்கையாலே ஸ்வதந்த்ரமாகப்போகச் சக்தியற்றவனாகையால்; இவனை யொருவன் தூக்கிக்கொண்டு போயேவிடவேண்டும், ஆகையால் அவ்வழியில் அக்நி முதலாகச் சொல்லப்பட்டவர்கள், அக்ந்யாதி தேவதைகளென்பது ஸித்தம். அவர்களால் உபாஸகன் அடைவிப்பிக்கப் படுகிறானென்கிறார். ௫௬௨.

ஸூ॥ ௫௬௩. வைத்³யுதேநைவ தத꞉ தச்ச்²ருதே꞉.

(ஶ்ரீ-பா-வ்ய-ஸா) தச்ச்²ருதே꞉-("ஸ ஏநாந் ப்³ரஹ்ம க³மயதி" அந்த வித்யுத்புருஷன் இந்த உபாஸகர்களை ப்ரஹ்மத்தை அடைவிப்பிக்கிறான் என்கிற) அந்த ஶ்ருதியினாலே, தத꞉=வித்யுத்துக்குப் பின்பு, வைத்³யுதேந ஏவ=வித்யுத்புருஷனாலேயே (உபாஸகன் ப்ரஹ்மத்தை யடைகிறான். அதற்கு மேலுள்ள வருணனும், இந்த்ரனும், ப்ரஹ்மாவும், அந்த வித்யுத்புருஷனுக்கு ஸஹாயம் செய்கிறார்களென்று கருத்து). ௫௬௩.

கபி- கரு௰. ஸூ॥ ௫௬௪. கார்யம் பா³த³ரிரஸ்ய க³த்யுபபத்தே꞉.

(ஶ்ரீ-பா-வ்ய) அஸ்ய=இந்த உபாஸகனுக்கு, க³த்யுபபத்தே꞉=கமநம் உபபந்நமாகையாலே, கார்யம்=கார்யமான (பா) சதுர்முகப்ரஹ்மாவை (ஶ்ரீ) (ஸகுணப்ரஹ்மத்தை), (உபாஸநம்செய்கிறவனையே ஆதிவாஹிகர்கள் அடைவிப்பிக்கிறார்கள் என்று), பா³த³ரி꞉=பாதரியென்பவர் (சொல்லுகிறார்).

(ஶ்ரீ - ஸா) ஸகுணப்ரஹ்மோ பாஸகரென்றும் நிர்குணப்ரஹ்மோ பாஸகரென்றும் உபாஸகரிருவர். ஸகுணவித்யா நிஷ்டர் ஸகுணப்ரஹ்மத்தையும், நிர்குணவித்யா நிஷ்டர் நிர்குணப்ரஹ்மத்தையு மடைகிறார்கள், கீழ் அக்ந்யாதி ஆதிவாஹிகர்கள், இவ்விரண்டில் எந்த ப்ரஹ்மத்தை யடைவிப்பிக்கிறார்கள் என்னில்; இரண்டாவனுக்கு ப்ராப்யம் நிர்குண ப்ரஹ்மம், அது எங்கும் நிறைந்ததாகையால் அதைத்தேசாந்தரம் போய் அடைவதென்பது அநுசிதம். ஆகையாலவனை அடைவிப்பிக்கிறதில்லை, முதல்வன் தனக்கு ப்ராப்யமான ஸகுணப்ரஹ்மத்தைத் தேசாந்தரத்திலே போயநுபவிக்க வேண்டியவனாகையால் இவனையே ஆதிவாஹிகர் ஸகுணப்ரஹ்மத்தை யடைவிப்பிக்கிறார்களென்று பாதரி சொன்னார். இதுவே ஸித்தாந்தியின் மதம். ௫௬௪.

(பா - ஸா) சதுர்முகப்ரஹ்மோபாஸகர் பரிசுத்த ஜீவாத்மஸ்வரூபோபாஸகர், பரமாத்மோபாஸகரென்று உபாஸகர்மூவர், இவர்களுக்குத் தாங்களுபாஸிக்கிற ஸ்வரூபமேதங்கள் தங்களுக்கு ப்ராப்யமாயிருக்கும். இவர்களில் யாரை ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறார்களென்று விசாரிக்கில்; பரமாத்மோபாஸகனுக்கு ப்ராப்யமான ஸ்வரூபம் எங்கும் நிறைந்திருக்கையாலே அதற்காக தேசாந்தரம் போகவேண்டுவதில்லை, அவனுக்கு அவித்யா நிவ்ருத்தி மாத்ரமே வேண்டுவது, முதல்வனுக்கு ப்ராப்யமான ஸ்வரூபம் தேசாந்தரத்திலே யிருக்கையால் அவனேபோகவேண்டியவன். அவனையே ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறார்களென்று பாதரிமதம் இது பூர்வபக்ஷிமதம். ௫௬௪.

ஸூ॥ ருகரு. விசேஷிதத்வாச்ச.

(ஸ-ரா-வ்ய) விசேஷிதத்வாச்ச = (பகுவசநங்களினுல் ப்ராப்யத்தை) வ்யாவர்த்திக்கையாலும், (இவ்வர்த்தமே உண்மை). ருகரு.

(ஸ-வ்ய) "ப்ரஹ்மலோகாநபிஸம்பத்யதே தேஷு ப்ரஹ்மலோகேஷு பரா: பராவதோ வஸந்தி" என்றவிடத்தில் "ப்ரஹ்மலோகேஷு" என்று ப்ராப்யவஸ்துவை லோகமென்கையாலும் "ப்ரஹ்மலோகங்களிலே" என்று பஹுவசனமாகச் சொல்லுகையாலும், அவற்றை ஆதாரமாகச்சொல்லுகையாலும், நிர்குணப்ரஹ்மம் லோகமன்றுகையாலும், அநேகமும் ஆதாரமுமன்றுகையா லும், முதல்வனுக்கு ஸகுணப்ரஹ்மம்போல் அதினுடைய லோகமும் ப்ராப்யமாய், அந்தலோக மநேகமாய் ஆதாரமா யிருக்கையினுலும் ஸகுணப்ரஹ்மத்தையே அடைவிப்பிக்கிறார்களென்கிறார். ருகரு.

(ரா-ஸா) "ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ரபத்யே" என்று அர்ச்சிராதிவழியாகப்போனவன், ப்ராஜாபத்தியின் ஸபையையடைகிறுனென்று ஹிரண்யகர்ப்பனுன ப்ரஹ்மாவை யடைவதாகத்தா னநுஸந்திக்கையாலும் ஆதிவாஹிகர் ஹிரண்யகர்ப்பனிடத்திலேயே அடைவிப்பிக்கிறார்களென்கிறார், ருகரு.

ஸூ॥ ருகசு. ஸாமீப்யாத்து தத்வ்யபதேஶ:-

(ஸ-ரா-வ்ய) ஸாமீப்யாத் = ஸமீபத்திலிருக்கையாலே, தத்வ்யபதேஶ: = "ப்ரஹ்ம" என்று சொல்லக்கூடும். ருகசு.

(ஸ ரா-ஸா.) "ப்ரஹ்மாபிஸம்பத்யதே" என்று ப்ரஹ்மபதம் நபும்ஸக லிங்கமாக இருக்கையால், அது பரப்ரஹ்மத்தைச் சொல்லுமொழிய மற்றென்றைச்சொல்லாது. அப்போது புல்லிங்கமாய் "ப்ரஹ்மாணமபியேதி" என்றிருக்கவேணுமேயென்னில்,(ஸ) நிர்குணப்ரஹ்மமே உபாதியோடுகூடி ஸகுணமாகையால் (ரா) "யோ ப்ரஹ்மாணம் விதயாதி பூர்வம்" என்று பரப்ரஹ்மத்துக்கு ஆதிஸ்ருஷ்டியாய், அதுக்கு அடுத்த கீழ்ப்படியில் இருக்கையாலே அந்த ஸாமீப்யத்தைப்பற்றி அதைச்சொல்லுகிற சப்தத்தினுல் இதைச்சொல்லிற் றென்கிறார். ருகசு.

ஸூ॥ ருகஎ. கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரமபிதாநாத்.

(ஸ-ரா-வ்ய) கார்யாத்யயே = கார்யமான ப்ரஹ்மலோகத்தினுடைய நாசகாலத்தில், ததத்யக்ஷேண ஸஹ = அதுக்கு ஸ்வாமியாகிய சதுர்முகனேடுகூட, அத: பரம் = இதைக்காட்டிலும் மேலான ப்ரஹ்மஸ்வரூபத்தை (அடைகிறார்கள் என்று) அபிதாநாத் = சொல்லுகையாலே (விரோதமில்லை). ருகஎ.

(ஸ-ரா-ஸா) அர்ச்சிராதி கதியினுல் போனவனுக்கு "தேஷாமிஹ ந புநராவ்ருத்தி:" என்று புநராவ்ருத்தி யில்லை யென்பதாகச் சொல்லிற்று. கார்ய ப்ரஹ்மலோகம் நித்யமன்று, சிலநாள் கழித்தபின் நசித்துவிடு மாகையால் கார்ய ப்ரஹ்மத்தை யடைவதாக அந்த ஶ்ருதி சொல்லுகிற தென்பது சரியன்றென்னில்; உபாஸ

கன் கார்யப்ரஹ்மலோகத்தில் போயிருந்து, அங்கே தத்வஜ்ஞானத்தைப்பெற்று அந்த லோகம் நசிக்கும்போது அதுக்கதிபதியான ப்ரஹ்மாவுடன்கூட ஸர்வோத்தமமாகிய விஷ்ணு ஸ்வரூபத்தை யடைகிறார்களென்கையாலே கீழ்ச்சொன்ன ஶ்ருதிக்கு விரோதமில்லை யென்கிறார். ("ஸமிய நாகு" புநராவ்ருத்தியில்லை யென்கையாலே, இவ்வர்த்தத்தை இப்படியே நிஶ்சயிக்க வேணுமென்று அப்பதத்தை ஹேது வாசகமாக சங்கரபாஷ்யத்தில் கண்டுகொள்வது). ௩௧௭.

ஸூ|| ௩௧௮. ஸ்ம்ருதேஶ்ச.

(ஶ-ரா-பா) ஸ்ம்ருதேஶ்ச - (ப்ரஹ்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே | பரஸ்யாந்தே க்ருதாத்மாந: ப்ரவிஶந்தி பரம் பதம்" என்கிற) ஸ்ம்ருதியினாலும், (கார்யப்ரஹ்மத்தை யடைந்தவர்கள் அந்த ப்ரஹ்மத்தின் அவஸாந காலத்தில் அந்த லோகம் நசிக்கும்போது, தத்வஜ்ஞானத்தைப்பெற்று அந்த ப்ரஹ்மாவுடன்கூட பரஸ்வரூபத்தை யடைகிறார்களென்பது ஸித்தம்) ஆகையால் ஆதிவாஹிகர் கார்ய ப்ரஹ்மத்தை அடைவிப்பிக்கிறார்களென்கிறார். ௩௧௮.

ஸூ|| ௩௧௯. பரம் ஜைமிநிர்முக்யத்வாத்.

(ஶ-ரா-பா) முக்யத்வாத்=(ப்ரஹ்மசப்தம்) முக்யமாகையாலே, பரம்=பரப்ரஹ்மத்தை (உபாஸிக்கிறவனையே ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறார்கள் என்று) ஜைமிநி:=ஜைமினி சொன்னார். ௩௧௯.

(ஶ-ரா-பா) சங்கரபாஷ்யத்துக்கு, கீழ் ஐந்து ஸூத்ரங்களும் ஸித்தாந்த ஸூத்ரங்கள். இனி மூன்று ஸூத்ரங்கள், அந்த ஸித்தாந்தத்துக்கு முன்னே சொல்ல வேண்டிய பூர்வபக்ஷத்தின் அர்த்தத்தைச் சொல்லுகின்றன. ராமாநுஜ பாஷ்யத்துக்கு இவ்வெட்டும் பூர்வபக்ஷ ஸூத்ரங்களென்று கண்டுகொள்க.—இனி ஜைமினி சொல்லுகிறார்—"ப்ரஹ்ம கமயதி" என்ற விடத்தில் நபும்ஸக லிங்கமான ப்ரஹ்ம சப்தம் பரப்ரஹ்மத்தில் முக்யமாகையாலும், அந்த பரப்ரஹ்மம் ஸர்வவ்யாபியாயினும், உபாஸகனுக்கு, யாகாதி ஸஹகாரிகளினால் உபாஸநோத்பத்திபோல், அவித்யா நிவ்ருத்தி ரூபமோக்ஷமும் பரமபதமென்கிற தேசாந்தரத்தில் போனபின்பே யுண்டாமென்பது சாஸ்த்ரஸித்தமாகையாலும், பரப்ரஹ்மம்போல் அதினுடைய மஹிமையினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட அத்யத்புதங்களாய் சாஸ்த்ரஸித்தங்களாயிருக்கிற அநேகலோகங்களும் ப்ராப்யமாகையாலே, "ப்ரஹ்மலோகாந்" என்கிற லோகசப்த பஹுவசநங்களுக்கு விரோத மில்லாமையாலும் பரப்ரஹ்மத்தை ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறார்களென்பதே உசிதமென்று ஜைமினி சொன்னார். ௩௧௯.

ஸூ|| ௩௨௦. தர்ஶநாச்ச.

(ஶ-ரா-பா) தர்ஶநாச்ச- ("ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே"- இந்த ஜீவன் சரீரத்தில் நின்றும் வெளிக்கிளம்பி பரமாத்மஸ்வரூபத்தையடைந்து அவித்யாவிநிர்முக்தனாய் ஸ்வஸ்வரூபத்தை யடைகிறானென்று) ஶ்ருதி சொல்லுகையாலும் (இதுவே உபபந்நம்). ௩௨௦.

ஸூ || ௫௨௧. ந ச கார்யே ப்ரதிபத்த்யபிஸந்தி:.

(ஶ-ரா-ப்ர) கார்யே=கார்யப்ரஹ்ம விஷயமான, ப்ரதிபத்த்யபிஸந்தி:=ப்ராப்ய பிஜ்ஞை, ந=கிடையாது. ௫௨௧.

(ஶ-ரா-ஸா) "ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ரபத்யே" என்று உபாஸகன் சதுர்முகப்ரஹ்மாநுஸந்தாநம்பண்ணுகையால் இது கார்யப்ரஹ்மவிஷயமென்பது சரியன்று. மேல்வாக்யத்தில், "யஶோஹம் பவாமி ப்ராஹ்மணாநாம்" என்று ஸகலாவித்யைகளும்நசித்து பின்பு, ஸர்வம்பரமாத்மஸ்வரூபமென் றநுஸந்திக்கையாலும், "அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம்" குதிரைமயிரை உதறுவதுபோல்பாபத்தை உதறி, ராகுவினால் விடப்பட்ட சந்திரன்போல் சரீரத்தைவிட்டு நித்யமான ப்ரஹ்மலோகத்தை யடைகிறானென்று ஸாக்ஷாத் அவித்யா நிவ்ருத்தியைச்சொல்லி ப்ராப்யதேசத்தைநித்யமாகவும் சொல்லுகையாலே அது பரமாத்மவிஷயம் ஆகையால் பரப்ரஹ்மப்ராப்தியையே சொல்லிற்றென்கிறார். ௫௨௧.

ஸூ || ௫௨௨. அப்ரதீகாலம்பநாந் நயதீதி பாதராயண உபயதா ச தோஷாத் தத்க்ரதுஶ்ச.

(ஶ-ரா-ப்ர) உபயதா ச=(கீழ்ச்சொன்ன)இரண்டுவிதத்திலும், தோஷாத்=தோஷமுண்டாகையாலே, (ச) (உபயதா ச=இரண்டுவிதமாகச்சொல்லிலும், அதோஷாத்=தோஷமில்லாமையாலே) தத்க்ரது:ச=உபாஸகன் உபாஸநாநுகுணமான பலத்தையடைகிறான், அப்ரதீகாலம்பநாந்=ப்ரதீகோபாஸகனன்றிக்கே மற்றஉபாஸகர்களை, நயதி=(ஆதிவாஹிகன்) அடைவிப்பிக்கிறான், இதி=என்று, பாதராயண:=பாதராயணர் சொல்லுகிறார். ௫௨௨.

(ஶ்ரு - ஸா) ஸகுணோபாஸகனையே ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறார்களென்று கீழ்சொல்லிற்று. இதில் ஸகுணோபாஸக ரெல்லாரையும் அடைவிப்பிக்கிறார்களா, அல்லது சிலரையாவென்னில்; எவ்விதமாக உபாஸிக்கிறானோ, அவ்விதமாகவே பலத்தை யடைகிறான், ப்ரதீகோபாஸநத்தில் மநஸ்ஸு நாமம் முதலிய ப்ரதீகமே உபாஸ்யமாகிறது. ப்ரஹ்மம் உபாஸ்யமாகிறதில்லை. ஆகையால் அதினால் ப்ரஹ்மப்ராப்தி கிடையாது. ப்ரஹ்மப்ராப்தியுள்ளவனுக்கே அர்ச்சிராதிகதியுண்டு, ஆகையால் ப்ரதீகோபாஸகனை ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறதில்லை. ஆகில் "அநியமஸ்ஸர்வேஷாம்" என்கிறத்தோடு விரோதியாதோவென்னில்; ப்ரதீகோபாஸகர்க்கு அர்ச்சிராதிகதியில்லை, மற்றவர்க்குண்டென்று இரண்டுவிதமாக ஒப்புக்கொண்டபோதிலும் அநியமத்தை மற்றவர்கள் விஷயமாகச்சொல்லில் தோஷம்வராதென்கிறார். ௫௨௨.

(ரா – ஸா) இவ்விரண்டு மதத்தையும் நிரஸிக்கிறார்,—அவ்விரண்டு மதமும் சரியன்று, சதுர்முக ப்ரஹ்மோபாஸகனைச் சொல்லும் பக்ஷத்தில் "ஏஷ ஸம்ப்ரஸாதோ அஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே" இந்த ஜீவன் இந்த சரீரத்தில் நின்றும் கிளம்பி ப்ரஹ்மத்தை யடைந்து ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவத்தை யடைகிறானென்ற வாக்யம் சரிப்படாது. சதுர்முகனை யடைந்தவனுக்கு ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவம் கிடையாது. பரமாத்மோபாஸகனைமாத்ரம் சொல்லில் "தேவ தேவோபாஸகானாம் தத்க்ரதுந்யாயேன ததநுஷ்டானவிரோத:"

என்று பஞ்சாக்நிவித்யோபாஸகனுக்கு அர்ச்சிராதிகதி சொல்வதுசரிப்படாது, ஆகையால், பரமாத்மோபாஸகனையும், கேவல ʻபரிசுத்த ஜீவாத்மஸ்வரூபோபாஸகனையும் இவ்விருவரையும் ஆதிவாஹிகர் அடைவிப்பிக்கிறார்கள். ப்ரதீகோபாஸகனை அடைவிப்பிக்கிறதில்லை, அர்ச்சிராதி கதியினால் போனவனுக்கு பரமாத்மஸ்வரூபமும் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மஸ்வரூபமுமே ப்ராப்யமாகிறது. ப்ரதீகோபாஸகனுக்கு இவ்விரண்டும் கிடையாது. "யதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேதஃ ப்ரேத்ய பவதி" இத்யாதி ஶ்ருதி இங்கே எதை எவ்விதமாக உபாஸிக்கிறானோ, அங்கேபோய் அதை அவ்விதமாகவே அநுஸந்திக்கிறானென்கிறது. பரமாத்மோபாஸகன் ஸ்வாத்மக ப்ரஹ்மத்தையும் பஞ்சாக்நிவித்யோபாஸகன் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாவையும் உபாஸிக்கையாலே அங்கே சென்று அவ்விதமான அநுபவத்தையே பண்ணுகிறார்கள். ப்ரதீகோபாஸகன் நாமாதிப்ரதீகத்தில் ப்ரஹ்மபுத்தி, அதாவது — அவற்றை ப்ரஹ்மமாக நினைத்து உபாஸநம்பண்ணுகிறான். அவ்வுபாஸநத்தில் விசேஷ்யமாயாவது விசேஷணமாயாவது ப்ரஹ்மம் தோற்றுகிறதில்லை யாகையால் அவனுக்கு ப்ரஹ்மாநுபவமும் அதுக்குக் காரணமாகிய அர்ச்சிராதி கதியும் கிடையாதென்று ஸித்தாந்தம். ௫௨௨.

ஸூ|| ௫௨௩. விஶேஷம் ச தர்ஶயதி.

(ஸூ-ரா-ஸா) விஶேஷம் ச=(இதரோபாஸநங்களைக்காட்டிலும்) வ்யாவ்ருத்தியையும், தர்ஶயதி=ஶ்ருதி காண்பிக்கிறது. ௫௨௩.

(ஸூ-ரா-ஸா) நாமம் வாக்கு மநஸ்ஸு முதலிய ப்ராண பர்யந்தமான ப்ரதீகோபாஸநங்களில், நாமோபாஸநத்தைக்காட்டிலும் வாகுபாஸநத்துக்கு, அதைக்காட்டிலும் மந உபாஸநத்துக்கு இப்படி மேலே போகப்போக ஒன்றைக்காட்டிலுமொன்றுக்கு பலமதிகமாகச் சொல்லியிருக்கிறது. ப்ரதீகங்க ளொன்றுக்கொன்று ந்யூநாதிகங்களாகையாலே பலத்திலும் பேதமிருக்கிறது. ப்ரஹ்மம் ஸர்வோத்ருஷ்டமாய் ஏகரூபமாயிருக்கையாலே அதில் பலபேதம் கிடையாது. இதுக்கு அர்ச்சிராதி கதியில்லாமலே பலாநுபவம் சொல்லியிருக்கிறது. (ஸா) ஆகையால் ப்ரதீகோபாஸகனுக்கு அர்ச்சிராதிகதியில்லை. பரமாத்மோபாஸகனுக்கும் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்குமே அர்ச்சிராதிகதி யுண்டென்று ஸித்தாந்தம். ௫௨௩.

ச — வது அத்யாயத்தில்

௩ - வது பாதம் முடிந்தது.

ச - வது பாதம்.

க௦. ௧அ. ஸூ|| ௫௨௪. ஸம்பத்யாவிர்பாவஃ ஸ்வேந ஶப்தாத்.

(ஸூ-ரா-வ்ய) ஸ்வேந ஶப்தாத்=ஸ்வேந என்கிற சப்தத்தினால் (விசேஷிக்கையாலே), ஸம்பத்ய=(பரமாத்மாவைக்) கிட்டி, ஆவிர்பாவஃ=ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவம் (ப்ரதிபாதிக்கப்படுகிறது). ௫௨௪.

(ஸூ-ரா-ஸா) இப்பாதத்தில் முக்தைஶ்வர்யத்தை நிரூபிப்பதாக, முன்பு இவ்வதிகரணத்தில் முக்தஸ்வரூபத்தை நிரூபிக்கிறார்-"பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே" இச்சரீரத்தை விட்டுப்போய் பரமாத்மாவை யடைந்து ஸ்வஸ்வரூபத்தோடு கூடினவனாகிறானென்ற விடத்தில், ஸ்வர்க்க மடைந்தவனுக்கு தேவாதிரூப முண்டாவதுபோல் முக்தனுக்கு அங்கொரு ரூபமுண்டாகிறதென்றதா, தனக்குஸ்வாபாவிகமாக உள்ள ஸ்வரூபமே ப்ரகடமாயிற்றென்றதாவென்னில்;

மோக்ஷமும் பலமாகையாலே அங்கே வேறொரு ரூபம் வருகிறதென்றே சொல்லவே ணும், என்றான் பூர்வபக்ஷி—அங்கு வேறொரு ரூபமுண்டாகும் பக்ஷத்தில் "ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே" ரூபத்தோடுகூடினவனாகிறான் என்பதே பொருளாயிருக்க, "ஸ்வேந" தன்னுடைய ஸ்வாபாவிகமான ரூபத்தோடே என்பதற்கு ப்ரயோஜநமி ல்லை. ஆகையால் முக்தன் ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவத்தை யடைகிறானென்றே அந்த ஶ்ருதி சொல்லுகிறதென்று ஸித்தாந்தம். ௪௨௪.

ஸூ|| ௪௨௫. முக்த: ப்ரதிஜ்ஞாநாத்.

(ஶ்ரீ-பா-வ்ய) ப்ரதிஜ்ஞாநாத்=(முக்தநிரூபணத்தையே) ப்ரதிஜ்ஞைபண் ணுகையாலே, முக்த:=ஸம்ஸாரத்தில் நின்றும் விடுபட்டவனே (இங்கு ப்ர திபாதிக்கப்படுகிறான். ௪௨௫.

(ஶ்ரீ-பா-ஸா) ஸ்வாபாவிகமான ரூபம் எப்போது முள்ளதாகையால் அது பலமா காது. "அபிநிஷ்பத்யதே" என்பதற்கு உண்டாகிறானென் றர்த்தமாகையால் அது வும் ஸ்வரூபாவிர்ப்பாவ பக்ஷத்தில் சரிப்படாது. என்னில்; ரோகம் போனபின் "அரோகோ பிநிஷ்பத்யதே" ரோக மற்றவனாக ஆகிறானென்று உத்பத்தி யில்லாத இடத்திலும் கூட ப்ரயோகிக்கையாலே இங்கு அவித்யா நிவ்ருத்தியைச் சொல் லக்கூடு மாகையால் அதுக்கு விரோத மில்லை. "இது ஸித்தித்தது" என்ன வேண்டிய இடத்தில் "இது நிஷ்பந்நமாயிற்று" என்கையாலே, நிஷ்பத்தி யெ ன்று ஸித்திக்கும் பேராய், ஸ்வஸ்வரூபம் ஸித்தித்த தென்றர்த்தம். "ஏதம் த்வேவ தே பூயோநுவ்யாக்யாஸ்யாமி" என்று ஜாகரிதஸ்வப்ந ஸுஷுப்தி என்றமூன்றவஸ்த்தையில் நின்றும் விடுபட்டவனாய், ஸம்ஸாரஹேதுவான கர்மம் சரீர ஸம்பந்தம் முதலியவற்றினால் விடப்பட்டவனான ஜீவஸ்வரூபத்தைச் சொல்லுவதாக ஆதியில் ப்ரதிஜ்ஞை பண்ணுகையாலே, இங்கு அநாதியான ஸம்ஸாரத்தில் நின்றும் விடுபட்டு ஸ்வஸ்வரூபத்தோடிருக்கிறவனையே இங்குச்சொல்லிற்றென்கிறார். ௪௨௫.

ஸூ|| ௪௨௬. ஆத்மா ப்ரகரணாத்.

(ஶ்ரீ-வ்ய) ப்ரகரணாத்=ஆத்மப்ரகரணமாகையாலே, ஆத்மா=(ஜ்யோதிஶ் ஶப்தத்தினால்) ஆத்மா (சொல்லப்படுகிறான்). ௪௨௬.

(பா-வ்ய) ப்ரகரணாத்=ஆத்மப்ரகரணமாகையாலே, ஆத்மா=(பரமபுரு ஷார்த்தரூபமான) ஆத்மா (ப்ரதிபாதிக்கப்படுகிறான். ௪௨௬.

(ஶ்ரீ-ஸா) "பரம்ஜ்யோதிருபஸம்பத்ய" ஜ்யோதிஸ்ஸை யடைந்து என் கையாலே, ஜ்யோதிஸ்ஸாவது பஞ்சபூதங்களிலொன்றானதேஜஸ்ஸாகையாலே, இவ னுக்கு ப்ரக்ருதி ஸம்பந்த முண்டென்று தோற்றுகிறது. ஆகையால் இங்கு முக்த னைச் சொல்லவில்லையேயென்னில்; "தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" என்று பரமாத்மாவையும் ஜ்யோதிஸ்ஸென்று சொல்லுகையாலும், "ய ஆத்மாபஹத பாப்மா" என்று ஆத்மாவைச் சொல்லுகிற ப்ரகரணமாகையாலே நடுவில் பௌதிக மான தேஜஸ்ஸைச்சொல்வ தநுசிதமாகையாலும் "பரம்ஜ்யோதி:" என்று ப்ரமா த்மாவைச் சொல்லிற்றாகையால் அவனை யடைந்த முக்தனையே இங்குச்சொல்லுகிற தென்கிறார். ௪௨௬.

(ரா—ஹா) ஸ்வஸ்வரூபம் ஸுஷுப்தியிலு முண்டாகையால் அப்போது புருஷார்த்தமாகக் காணமையால், ஸ்வரூபாவிர்ப்பாவம் மோக்ஷமென்ற சாஸ்த்ரம் 'புருஷார்த்த' ப்ரதிபாதகமாகாதேயென்னில்; ஆத்மஸ்வரூபம் அபஹதபாப்மத்வாதி குணங்களையுடையதாய் நிரதிசயாநந்த ரூபமாயிருக்கும். அந்த ஸ்வரூபம் அநாதியான அவித்யையினால் மறைந்திருக்கிகையால் ஸுஷுப்த்யாதிகளில் தோற்றாது. பரமாத்மாவை யடைந்தபின் அவித்யை கழிகையாலே ஸ்வாபாவிகமான ரூபம் ப்ரகாசிக்கிறது. இவனுக்கு இதுவேஸ்வரூபமென்பது-"யஆத்மாஅபஹதபாப்மாவிஜர:" இத்யாதி வாக்யங்களினால் ஸித்திக்கிறது. இவ்விதமான ஸ்வரூபம் நிரதிசயபுருஷார்த்தரூபமாகையால், சாஸ்த்ரம் புருஷார்த்த ப்ரதிபாதகமாகக் குறையில்லை யென்கிறார். ௫௨௬.

௬௰. ௬௫௨. ஸூ॥ ௫௨௭. அவிபாகேந த்ருஷ்டத்வாத்.

(ஸூ-ரா-வ்யா) த்ருஷ்டத்வாத்=(ஸ்வ ஸ்வரூபம்) காணப்பட்ட தாகையாலே, அவிபாகேந=விபாகமின்றியே (அநுஸந்திக்கிறான்). ௫௨௭.

(ஸூ-ரா-ஹா) ஜீவன் முக்தனானபின் தன்னை எவ்விதமாக அநுஸந்திக்கிறானென்னில்; "ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந்ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" ப்ரஹ்மத்தோடேகூடினவனாய்க்கொண்டு ஸமஸ்தகாமங்களையும் அநுபவிக்கிறானென்கையாலும். "பரம்ஸாம்யமுபைதி" என்று இவனைப்பரமாத்மாவோடு ஸமானனாகச் சொல்லுகையாலும் பரமாத்மாவைப்போல் தன்னையு மொருவனாக வேறாக அநுஸந்திக்கிறான் என்று பூர்வபக்ஷம்—(ரா) ஆத்மா பரமாத்மாவுக்குச் சரீரமாய் எப்போதும் அவனோடு சேர்ந்தேயிருக்கும். இதுஸம்ஸாரதசையில் அஜ்ஞாநத்தினால் காண்கிறதில்லை. அதினால் தன்னையும் பரமாத்மாவையும் வெவ்வேறாகப் பார்க்கிறான். பரமாத்மோபாஸநத்தினால் அவ்வஜ்ஞாநம் நசித்தபின் யதாவஸ்த்திதமான ரூபம் காண்கையாலே பரமாத்மாவையும் தன்னையும் வெவ்வேறாகக்காண்கிறதில்லை. அவனுக்குச் சரீரமான தன்னை அவனோடொன்றாக்கியே அநுஸந்திக்கிறான், (ஹ) (அநாதியான அஜ்ஞாநத்தினால் கல்பிதமான பரமாத்மாவுக்கும் தனக்குமுண்டான பேதம் தத்வஜ்ஞாநத்தினால் நசித்தபின் ஸ்வாபாவிகமான அபேதமே காண்கையாலே தன்னைப் பரமாத்மஸ்வரூபமாகவே அநுஸந்திக்கிறான்) "ஸோஶ்நுதே" என்ற ஶ்ருதிக்கு, பரமாத்மாவோடேகூட, அதாவது பரமாத்மாவையும் அவனுடைய குணங்களையும் அநுபவிக்கிறானென்றர்த்தம், பரமாத்மாவோடு ஸமாநமாக இருக்கிறானென்பதற்கு, ஸிம்ஹம் போன்ற புருஷன் ஸிம்ஹத்தைக்காட்டிலும் வேறுபட்டிருப்பதுபோ லிருக்கிறானென்றர்த்தமன்று, பரமாத்மாவுக்குள்ள அபஹதபாப்மத்வாதி குணங்களும் இவனுக்குண்டென்றர்த்தம் ஆகையா லதுக்குவிரோத மில்லையென்று ஸித்தாந்தம். ௫௨௭.

௬௰. ௬௫௩. ஸூ॥ ௫௨௮. ப்ராஹ்மேண ஜைமிநிருபந்யாஸாதிப்ய:.

(ஸூ-ரா-வ்யா) உபந்யாஸாதிப்ய:=உபந்யாஸம் (சொல்லுகை) முதலானவற்றினால், ப்ராஹ்மேண=ப்ரஹ்ம ஸம்பந்தியான குணத்தோடு, (முக்தியில் ஆவிர்ப்பவிக்கிறான்). ௫௨௮.

(ஸூ-ரா-ஹா) முக்தியில் ஜீவனுக்கு அபஹதபாப்மத்வாதி குணங்களா, அல்லது சைதந்ய ஸ்வரூபம்மாத்ரமா, இரண்டுமா ஆவிர்ப்பவிக்கிறதென்னில்; ப்ரஜாபதிவாக்யத்தில் ஜீவனுக்கு "அபஹதபாப்மா" என்று துடங்கி "ஸத்யஸங்கல்ப:" என்னுமளவாக, ப்ரஹ்மத்துக்குண்டான அபஹதபாப்மத்வம் ஜ்ஞாநம் ஸத்யகாமத்வம் முதலிய குணங்களைச்சொல்லுகையாலே அக்குணங்களே ஆவிர்ப்பவிக்கின்றன. ஜ்ஞாநம்

ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்று, ஆகில் அதில் குணங்களிருக்கமாட்டா, இதனால் அது ஜடம் என்னவேண்டுமாகையால் ஜ்ஞாநஸ்வரூபத்துக்கு ஆவிர்ப்பாவம் கிடையாதென்றார் ஜைமிநி. ௫௨௮.

ஸூ|| ௫௨௯. சிதிதந்மாத்ரேண ததாத்மகத்வாதித்யௌடுலோமி:.

(ஶ்ரு-ப்ர-வ்ய) ததாத்மகத்வாத்=சைதந்யமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே, சிதிதந்மாத்ரேண=சைதந்யமாத்ர ஸ்வரூபத்தோடு (ஆவிர்ப்பவிக்கிறான், இதி=என்று, ஔடுலோமி:=ஔடுலோமி சொல்லுகிறார். ௫௨௯.

(ஶ்ரு-ப்ர-ஸா) "ஸயதா ஸைந்தவகந:" என்று தொடங்கி, "விஜ்ஞாநகந ஏவ" என்னுமளவாக, உப்புக்கட்டி உள்ளும்புறம்பும் எங்குமொக்க வேறொரு ரஸம் கலப்பின்றிக்கே உப்பாகவே இருப்பதுபோல், ஆத்மாவும் உள்ளும் வெளியுமெங்கும் வேறொரு குணமின்றிக்கே ஜ்ஞாநமயமாகவே யிருக்கிறானென்கையாலே ஜ்ஞாநமே அவனுக்கு ஸ்வரூபம், அதுவே முக்தியில் ஆவிர்ப்பவிக்கிறது. அபஹதபாப்மத்வாதிகள் ஸ்வரூபமன்று என்று ஔடுலோமிமதம். ௫௨௯.

ஸூ|| ௫௩0. ஏவமப்யுபந்யாஸாத்பூர்வபாவாதவிரோதம் பாதராயண:.

(ஶ்ரு-ப்ர-வ்ய) ஏவமபி=இப்படி ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனாயிருந்தாலும், உபந்யாஸாத்=(மற்றகுணங்களையும்) சொல்லுகையாலே, பூர்வபாவாத்=முன்சொன்னவற்றுக்கும் ஸத்தியுண்டாகையாலே, அவிரோதம்=விரோதமில்லாமையை, பாதராயண:=பாதராயணர் சொல்லுகிறார். ௫௩0.

(ஶ்ரு-ஸா) ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனே, அதில் வாஸ்தவமாக மற்றகுணங்கள் கிடையாது, ஆயினும், வ்யாவஹாரிக தசையைப்பற்றி ச்ருதி மற்றகுணங்களையும் சொல்லுகையாலே, கால்பநிகமான அக்குணங்களை ஒப்புக்கொள்வதில்விரோதமில்லையென்று பாதராயணர் சொல்லுகிறார். ௫௩0.

(ப்ர-ஸா) ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனாயினும், "ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:" இத்யாதி ச்ருதி மற்ற குணங்களையும் சொல்லுகையாலே அவற்றையுமொப்புக்கொள்ளவேணும், இரண்டு ச்ருதிகளில் ஒன்றை ப்ரமாணமாக்கி, மற்றொன்றை அப்ரமாணமாக்கவொண்ணாது. ஆத்மாவினுடைய ஸ்வரூபம் ஜ்ஞாநமாய், அதுக்கு அபஹதபாப்மத்வாதிகுணங்களாயிருக்கும். உப்புக்கட்டி லவணரஸமயமே என்றால் அதில் காடிந்யம் வெண்மை முதலிய குணங்களில்லையென்றர்த்தமன்று, வேறொரு ரஸமில்லையென்றே அர்த்தமாம், அதுபோல், ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபனேயென்றால் மற்ற குணங்களில்லையென்னவொண்ணாது. ஜ்ஞாநமாவது — ஸ்வயம் ப்ரகாசம், அதில் ப்ரகாசியாத இடம் கிடையாதென்றே அதற்கர்த்தம். ஆகையால் முக்தியில் இரண்டு ஸ்வரூபமுமாவிர்ப்பவிக்கிறதென்பதில் விரோதமில்லையென்று வ்யாஸபகவான் தன் கருத்தை வெளியிட்டார். ௫௩0.

௬. ஸங்க. ஸூ|| ௫௩௧. ஸங்கல்பாதேவ து தச்ச்ருதே:.

(ஶ்ரு-ப்ர-வ்ய) தச்ச்ருதே: அவ்வர்த்தத்தை ச்ருதி சொல்லுகையாலே, ஸங்கல்பாதேவ=ஸங்கல்பத்தினாலேயே (உண்டாகின்றன). ௫௩௧.

(ஶ்ரு-ப்ர-ஸா) "ஸயதி பித்ருலோககாமோ பவதி ஸங்கல்பாதேவாஸ்ய பித

ர்வஸ்மிந்லோகேஷு காமசாரோ பவதி" என்றும், "ஸ ஸ்வராட்பவதி" என்றும், முக்தன் தன்னுடைய பித்ருக்களோடு கலந்திருக்க இச்சித்தானாகில், தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே அவர்கள் எழுந்து வருகிறார்கள், இச்சையுண்டாகில் ஸ்த்ரீகளோடும் வாஹநங்களோடும் யதேச்சமாக க்ரீடிக்கிறானென்று சொல்லிற்று. அவைகளைப் பெறுகைக்கு ஸங்கல்பமே போருமா, இன்னும் சில ப்ரயத்நம் செய்யவேணுமா வென்னில்; ராஜா ஸத்யஸங்கல்பனா யிருந்தபோதிலும் ஒன்றை யடையவேண்டுமாகில் சில ப்ரயத்நம் செய்யவேண்டி யிருப்பதுபோல் முக்தனுக்கும் சில ப்ரயத்நங்கள் வேண்டியிருக்குமென்று பூர்வபக்ஷம்.— "ஸங்கல்பாதேவ" ஸங்கல்பத்தினாலேயே அவர்களையடைவதாக அவதாரணம்பண்ணிச் சொல்லுகையினாலே வேறொருகாரண மில்லையென்று ஏற்படுகிறது, வேறொருகாரண முண்டென்பதற்கு ப்ரமாணமுமில்லை, ஸம்ஸாரிகளுக்கு ஸத்யஸங்கல்பம் கிடையாதாகையால் ராஜாவை த்ருஷ்டாந்தமாகச் சொல்லவொண்ணாது. ஆகையால், ஸங்கல்ப மாத்ரத்தினாலேயே முக்தன் ஸமஸ்த வஸ்துக்களையு மடைகிறானென்று ஸித்தாந்தம். ருகூக.

ஸூ॥ ருகூஉ. அதஏவசாநந்யாதிபதி:.

(ஸ-ரா-வ்-ஸா) அதஏவ=முக்தன் ஸத்யஸங்கல்ப னாகையினாலேயே, அநந்யாதிபதி:=வேறொன்றை நியாமகமாக உடையவனன்று. (அநந்யாதிபதியாவது - சாஸ்த்ரத்திற்சொல்லிய விதிநிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கை. அப்படி கட்டுப்பட்டால் இவன் ஸத்யஸங்கல்பனாகான். அதாவது நினைத்தபடி செய்யமாட்டான். இவனை ஸத்யஸங்கல்ப னென்பதினாலே அநந்யாதிபதியென்பதும் ஸித்தமென்று கருத்து. ருகூஉ.

அபி. கருசீ. ஸூ॥ ருகூகூ. அபாவம்பாதரிராஹஹ்யேவம்.

(ஸ-ரா-வ்) (பாதரி:=பாதரியென்பவர், அபாவம்=(சரீரேந்த்ரியங்கள் முக்தனுக்கு) இல்லையென்பதை(ச்சொன்னார்) ஏவம்=இப்படியே, ஆஹஹி=ஸ்ருதிசொல்லிற்றன்றோ. ருகூகூ.

(ஸ-ரா-ஸா) முக்தனுக்கு சரீரேந்த்ரியங்கள் உண்டா இல்லையா வென்னில்; "நஹவைஸசரீரஸ்யஸத: ப்ரியாப்ரியயோரபஹதிரஸ்தி" சரீரமுள்ளவரையில் ஸுகதுக்கங்கள் விடாதென்றும், சரீரமில்லாவிடில் அவைகிட்டாவென்றும் சொல்லுகையாலே சரீரம் கிடையாதென்றார் பாதரி யென்பவர். ருகூகூ.

ஸூ॥ ருகூச. பாவம்ஜைமிநிர்விகல்பாமநநாத்.

(ஸ-ரா-வ்-ஸா). விகல்பாமநநாத்=அநேகவிதமான கல்பனை (அதாவது "ஸஏகதாபவதி த்ரிதாபவதி பஞ்சதாஸப்ததா" இத்யாதியினால், முக்தியில் ஒருவனாகிறான், மூன்றாகவாகிறான், ஐந்தாக ஆகிறான் ஏழாக ஆகிறானென்று இப்படி) சொல்லுகையாலே, பாவம்=சரீரமுண்டென்பதை, ஜைமிநி: ஜைமினி யென்பவர் சொன்னார். (ஆத்மஸ்வரூபம் அநேகமாக ஆகாது, சரீரத்வாராவே யாகவேணுமென்று கருத்து). ருகூச.

ஸூ॥ ருகூரு. த்வாதசாஹவதுபயவிதம்பாதராயணோத:.

(ஸ-ரா-வ்) த்வாதசாஹவத்=த்வாதசாஹமென்கிறயாகம்போலே, அத:

(ஸ) இரண்டுவிதமாக ஶ்ருதியிருக்கையாலே, (ரா) ஸத்யஸங்கல்பத்வத்தி ஞலே, உபயவிதம்=இரண்டுவிதத்தையும், பாதராயண:=வ்யாஸபகவான் (சொல்லுகிறார்). ௫௩௫.

(ஸ-ரா-ஸா) த்வாதசாஹமென்று ஒரு யாகமுண்டு, அது அநேகம்பெயர்சேர்ந்து செய்யவேண்டும், அப்போது அதுக்கு "ஸத்ரம்" என்று பெயர், அதையே ஒருவனு கவும் செய்யலாம், அப்போது "அஹீநம்" என்றுபெயர். இவ்விரண்டும் ஶ்ருதிஸித் தம். இந்த ஒரு யாகமே ஸங்கல்ப பேதத்தாலே இரண்டுவிதமாக ஆகிறாப்போல், ஒரு முக்தனே "நான் சரீரத்தை யடையக்கடவேன்" என்று ஸங்கல்பிக்கும்போது சரீரபரிக்ரஹம் பண்ணுகிறான் "சரீரம்வேண்டாம்" என்று ஸங்கல்பித்தானுகில் சரீர மில்லாமலிருக்கிறான் ஆகையால் இரண்டுக்கும்விரோதமில்லை என்று வ்யாஸபகவான் சொல்லுகிறார். ௫௩௫.

ஸூ॥ ௫௩௬. தந்வபாவே ஸந்த்யவது பபத்தே:.

(ஸ-ரா-வ்) தந்வபாவே=சரீரமில்லாதபோது, ஸந்த்யவத்=ஸ்வப்நத்திற் போலே, உபபத்தே:=(அநுபவம்) உபபந்நமாகையாலே, ஜீவன் ஸ்ருஷ் டிக்கிறதில்லை). ௫௩௬.

(ஸ-ரா-ஸா) முக்தன் ஸத்யஸங்கல்பனுயிருந்தபோதிலும் தன்னுடைய சரீரோப கரணாதிகளைத் தானே ஸ்ருஷ்டிக்கிறானென்ற நியமமில்லை, தான் ஸ்ருஷ்டியாதபோ து, ஸ்வப்நத்தில் ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டித்த சரீரோபகரணாதிகளைக்கொண்டு அநு பவிக்கிறாப்போலே முக்தியிலும் ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டித்த சரீரோபகரணாதிகளைக் கொண்டே அவன் ஸ்ருஷ்டித்த பித்ருலோகாதிகளை யநுபவிக்கிறானென்கிறார். "தந்வபாவே" தான் ஸ்ருஷ்டித்த சரீரமில்லாதபோது என்றர்த்தம். ௫௩௬.

ஸூ॥ ௫௩௭. பாவே ஜாக்ரத்வத்.

(ஸ-ரா-வ்) பாவே=சரீரமுண்டாகில், ஜாக்ரத்வத்=ஜாக்ரதவஸ்தையிற் போலே (அநுபவிக்கிறான்). ௫௩௭.

(ஸ-ரா-ஸா) முக்தியில் ஜீவன், தானே, பகவானுக்கு லீலாரஸஹேதுவான ஸ்வ சரீராதிகளையும் லீலோபகரணாதிகளையும் ஸ்ருஷ்டித்தானுகில், இப்பொழுது அரசர் கள் தங்கள் ஸாமர்த்யத்தினுல் உபகரணங்களைச் சேர்த்துக்கொண்டு அநுபவிக்கிறாப் போல் அநுபவிக்கிறான், அவையெல்லாம் பகவல்லீலாரஸ ஜநகமாகையாலே இவனு டைய பகவதநுபவத்துக்குக் குறைவில்லை என்கிறார், "பாவே" தான் ஸ்ருஷ்டித்த சரீரோபகரணாதிகளுண்டாகி லென்றர்த்தம். ௫௩௭.

ஸூ॥ ௫௩௮. ப்ரதீபவதாவேஶஸ்ததா ஹி தர்ஶயதி.

(ஸ-ரா-வ்) ப்ரதீபவத்=தீபம்போலே, ஆவேஶ:= (முக்தனுக்கு அ நேக சரீரங்களில்) ப்ரவேசம் (உண்டு), ததா=அப்படியே, தர்ஶயதி ஹி= சாஸ்த்ரம்சொல்லுகிறதின்று. ௫௩௮.

(ஸ - ஸா) லிங்கசரீரத்தோடுகூடிய ப்ரஹ்மப்ரதேசத்துக்கு ஜீவனென்று பெ யர், அது அணுவாகையால் ஜீவனும் அணுஸ்வரூபியாகிறான். இவன் ஒரேகாலத்தில் அநேக சரீரங்களை எப்படி எடுக்கலாம், ஒரு சரீரத்திலிருக்கும்போது மற்றொரு சரீர த்திலிருக்க முடியாதேயென்னில்; ஒரே தீபம் தன்னுடைய ஜ்வாலை வழியாக அநேக

வர்த்திகளில் ப்ரவேசித்து அநேக தீப்மாகிறுப்போலே, இவனும், தன்னுடைய வித்யாபலத்தினுல் ஒரேகாலத்தில் அநேக சரீரங்களை வ்யாபிக்கிறுனைகையால் அநேக சரீரபரிக்ரஹமுபபந்நம், ருஷிகளும்கூட யோகபலத்தினுல் அநேகசரீரத்தில் ஒருபொழுதே வ்யாபிப்பதாக சாஸ்த்ரங்களில் காண்கிறேம். இப்படி சொல்லுகைக்கு ப்ரமாணம் "ஸஏகதா பவதி த்ரிதா பவதி" இத்யாதி ஸ்ருதியென்கிறுர். ௰௫-அ.

(ஙா ஸா) அணுவான ஜீவனுக்கு ஒரே காலத்தில் அநேக சரீரங்களில் ஸம்பந்தம் கூடாமையாலே ஒரே காலத்தில் அநேக சரீர பரிக்ரஹம் எப்படி பண்ணுகிறுனென்னில்; ஒரு தீபம் ஓரிடத்திலிருந்தே தன் ப்ரபையினுல் எங்கும் வ்யாபிக்கிறுப்போலே முக்தனும் ஜ்ஞாநத்தினுல் ஸ்வேச்சையாக அநேக சரீரங்களில் வ்யாபிக்கக்கூடும், யோகிகளும் அப்படியே வ்யாபித்து அநேக சரீரபரிக்ரஹம் பண்ணக்கண்டிருக்கிறேம். ஜீவன் அணுவென்பதற்கும் அவனுக்கு அநேக சரீரமுண்டென்பதற்கும் ப்ரமாணம், "வாலாக்ர சத பாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச। பாகோ ஜீவஸ்ஸ விஜ்ஞேயஸ்ஸ சாநந்த்யாய கல்பதே" நெல்லின் வால் நுனியில் பதினுயிரம்பங்கி லொருபாகம்போன்றவன் ஜீவன், அவன் அநேக சரீரங்களை யெடுக்கிறுனென்ற ஸ்ருதியே இதற்கு பரமாணம். ௰௫-அ.

ஸூ ‖ ௰௬. ஸ்வாப்யயஸம்பத்த்யோரந்யதராபேக்ஷமாவிஷ்க்ருதம் ஹி.

(ஸ்ரா-வ்ய) ஸ்வாப்யயஸம்பத்த்யோ:=ஸுஷுப்தி (ஙா) மரணம் (ஸ) (மோக்ஷம்) ஆகிய இரண்டவஸ்தைகளில், அந்யதராபேக்ஷம்=ஓரவஸ்தையைச் சொல்லுகிறது. ஆவிஷ்க்ருதம் ஹி=(ஸ்ருதியினுலே இது) ப்ரகாசிப்பிக்கப்பட்டதன்று. ௰௬.

(ஸ-ஸா) "நைவ கிஞ்சந வேதயதே கிஞ்சந" என்றும், "நதத் த்விதீயமஸ்தி" என்று முக்தனுக்கு இரண்டாவது வஸ்துவில்லையென்று ஸ்ருதி சொல்லியிருக்க, அநேக சரீரமுண்டென்னலாமோவென்னில்; இந்த ஸ்ருதிகள் நிர்க்குண ப்ரஹ்மத்தையடைந்து ப்ரஹ்மஸ்வரூபியாய்விட்ட முக்தன்விஷயம் என்ருவது, உறங்குகிறவன் விஷயமென்ருவது சொல்லவேணும். அவ்விருவர்க்குமே ஜ்ஞாநாதிகளொன்று மில்லையென்று ப்ரமாணங்கள் சொல்லுகின்றன, எங்ஙனே யென்னில், "ஏதேப்யோ பூதேப்யஸ் ஸமுத்தாய தாந்யேவாநுவிநச்யதி" இந்தசரீரத்தில் நின்றும் வெளிக்கிளம்பி பின்பு இதை அறியான் என்று மரித்தவனுக்கும் "யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத் கேந கம் பச்யேத்" எவனுக்கு எல்லாம் ப்ரஹ்ம ஸ்வரூபமாய்விட்டதோ, அவன் ஒன்றையும் காணுன் கேளான் என்று நிர்க்குண முக்தியையடைந்தவனுக்கும் ஜ்ஞாநமில்லையென்றே சொல்லுகின்றன. இங்கு சொல்லப்பட்டவன் ஸகுணமுக்தியை யடைந்தவன். இவனுக்கு ஜ்ஞாநமும் சரீராதிகளுமுண்டு, ஆகையால் விரோதமில்லை யென்கிறுர். ௰௬.

(ஙா - ஸா) "ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத நாந்தரம்" என்று பரமாத்மாவை யடைந்தவனுக்கு எவ்விதமான ஜ்ஞாநமும்கிடையாதென்கையாலே முக்தனுக்கு ஜ்ஞாநவ்யாப்தி எப்படி கூடுமென்னில்; இந்த ஸ்ருதி உறங்குகிறவன் விஷயமென்னவொண்ணுது, "நாஹ கல்வயமேவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாத்யயமஹமஸ்மீதி நோ ஏவேமாநி பூதாநி விநாசமேவாபீதோ பவதி" இந்த மரித்தவன் தன்னையும் பிறரையும் அறிகிறுனில்லை, இவனுக்கு

ஜ்ஞாநம்நசித்துவிட்டதென்று உறங்குகிறவனைக்குறித்தும், "ஏதேப்யோ பூதேப்ய: ஸமுத்தாய தாந்யேவாநுவிநஶ்யதி" என்று இந்த பாஞ்சபௌதிகமான சரீரத்தைவிட்டு வெளிக்கிளம்பின பின்பு இவற்றிலொன்றையுமறிகிறானில்லையென்று மரித்தவனைக்குறித்தும் ஜ்ஞாநமில்லையென்று சில ஶ்ருதிகள் சொல்லுகின்றன. "ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி ஸர்வமாப்நோதி ஸர்வஶ:" என்று முக்தன் எல்லாவற்றையும் பார்க்கிறானென்றும், "மநஸைதாந் காமாந் பஶ்யந் ரமதே" முக்தன் ஸங்கல்பமாத்ரத்தினாலே ஸகலபோக்யவஸ்துக்களையும் பார்க்கிறானென்று முக்தனை ஸர்வஜ்ஞனென்று சில ஶ்ருதிகள் சொல்லுகின்றன. ஆகையால் அவற்றுக்கு விரோதமில்லாதபடி "ப்ராஜ்ஞேந" என்ற ஶ்ருதி முக்தன் விஷயமன்று. அவ்விருவரிலொருவர் விஷயமென்னவேணும், ஆகையால் முக்தன் ஜ்ஞாந வ்யாப்தியினால் அநேக சரீரபரிக்ரஹம் பண்ணக்குறையில்லை என்கிறார். ௫௩௯

அதி. ௧௫௬. ஸூ|| ௫௪௦. ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸந்நிஹிதத்வாச்ச.

(ஸ-ரா-ப்ர) ப்ரகரணாத்=பரமாத்ம ப்ரகரணத்தினாலும், அஸந்நிஹிதத்வாச்ச=(அப்ப்ரகரணங்களில் முக்தன்) ஸாந்நித்யமில்லாமையாலும், ஜகத்வ்யாபாரவர்ஜம்=ஜகத் ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரம்தவிர, (முக்தனுக்குபரமாத்மாவோடு ஸாம்யமுண்டு) ௫௪௦.

(ஸ-ஸா) ஸகுணப்ரஹ்மத்தை யுபாஸித்து ஸகுணமுக்தியை யடைந்தவனுடைய ஐஶ்வர்யம் நிரவதிகமா ஸாவதிகமாவென்னில்; "ஆப்நோதி ஸ்வாராஜ்யம்" ஸ்வாராஜ்யத்தை யடைகிறானென்கையாலே அவனுடைய ஐஶ்வர்யம் பரமாத்மாவுக்குப் போல் நிரவதிகமாயிருக்கும் என்று பூர்வபக்ஷிமதம்—ஜகத்ஸ்ருஷ்ட்யாதிப்ரகரணங்களில் பரமாத்மாவையே சொல்லுகையாலே, முக்தனைச்சொல்லாமையாலே ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்கள் தவிர மற்ற ஐஶ்வர்யமே முக்தனுக்குண்டென்று ஸித்தாந்திமதம். ௫௪௦.

(ரா - ஸா) முக்தனுக்கு ஸர்வேஶ்வரனைப்போல் ஜகத்ஸ்ருஷ்டி ஸகல ஜகந்நியமநம்முதலிய ஐஶ்வர்யமுண்டா, இல்லையாவென்னில்; "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று பரமாத்மாவோடு அத்யந்த ஸாம்யத்தையடைகிறானென்று சொல்லுகையாலே, அவையில்லாவிடில் அத்யந்த ஸாம்யமுண்டென்று சொல்லக்கூடாதாகையாலே அவையு முண்டென்கிறான் பூர்வபக்ஷி—"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்" இத்யாதிகளான ஜகத்காரணத்வம் சொல்லுகிற ப்ரகரணங்களிலே பரமபுருஷனையே சொல்லுகிறது, முக்தபுருஷனை எங்கும் சொல்லவில்லை; மேலும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள் பரமபுருஷனுக்கு அஸாதாரண லக்ஷணமாகச் சொல்லியிருக்கிறது. அதுமுக்தனுக்குமுண்டாகில், அது பரமபுருஷ லக்ஷண மாகாது, ஆகையால் முக்தனுக்கு ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகள் கிடையாது. மற்ற ஆநந்தாநுபவாதிகளிலே பரமாத்மாவோடு அத்யந்த ஸாம்யத்தை யடைகிறானென்று ஸித்தாந்தம். ௫௪௦.

ஸூ|| ௫௪௧. ப்ரத்யக்ஷோபதேஶாதிதி சேந்நாதிகாரிகமண்டலஸ்தோக்தே:.

(ஸ-ரா-ப்ர) ப்ரத்யக்ஷேண=ஶ்ருதியினாலே, உபதேஶாத்=சொல்லப்

படுகையாலே, (ஸ்ருஷ்ட்யதிகாரமும், முக்தனுக்குண்டு) உ திவெஷ= என்னில், ஆதிகாரிகர்ண்டுவெஷாக்ஷ= அதிகாரத்தில் நியமிக்கப்பட்டவர்களுடைய மண்டலத்திலுள்ள (பரா)போகத்தை (அங்குச்) சொல்லுகையாலே (புருஷார்த்தமானவைஸ்வர்யமென்கையாலே), ந=முக்தனுக்குஸம்பவியாது.

(ஸ - ஸா) ஆப்நோதி ஸ்வாராஜ்யம்'' என்று முக்தனுக்குச்சொல்லிற்றேயென்னில்; மேல்வாக்யத்தில், ஆப்நோதி மநஸஸ்பதிம்'' ஸகல மநஸ்ஸுக்களுக்கும் பதியான பரமபுருஷனை அடைகிறானென்று இந்த ஸாம்ராஜ்யமாகிற ஸம்பத்து பரமபுருஷார்த்தமென்கையாலே அது முக்தனுக்குக் கிடையாது. ருசக.

(ரா - ஸா) ''தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி'' எல்லாலோகங்களிலும் யதேச்சமாக ஸஞ்சரிக்கிறானென்றும், ''காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்'' இஷ்டமானவைகளை யநுபவிக்கிறான், இஷ்டமான ரூபமெடுக்கிறானென்கையாலும், இவன்ஸகலலோகாதிபதியன்றாகில் இதெல்லாம்கூடாதாகையாலும், முக்தனும் லோகங்களுக்கு நியந்தாவாகிறானென்றங்கீகரிக்கவேண்டுமென்னில்; அவ்வாக்யத்தில், ப்ரஹ்மலோகாதி ஸகல லோகங்களிலுமுள்ள ஸமஸ்தமான போகத்தையும் இஷ்டமுண்டாகி லநுபவிக்கிறானென்றே சொல்லுகிறது. அவற்றை நியமிக்கிறானென்னவில்லை; ஆகையால்லோகநியமநாதிகள்முக்தனுக்குக்கிடையாது.

ஸூ॥ ருசஉ. விகாராவர்த்தி ச ததாஹி ஸ்திதிமாஹ.

(ஸ-ரா-வ்யா) விகாராவர்த்தி (ப்ரஹ்மம்) விகாரத்திலில்லாமலுமிருக்கிறது. ததா = அப்படிப்பட்ட, ஸ்திதிம்=இருப்பை, ஆஹ = (வேதம்) சொல்லிற்றன்று. ருசஉ.

(ரா-வ்யா) விகாராவர்த்தி=விகாரத்திலில்லாத ப்ரஹ்மஸ்வரூபமே, (முக்தபோக்யமாகச் சொல்லப்பட்டது.) ததாஹி ஸ்திதிம்=அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தில் இருப்பை, ஆஹ=சொல்லிற்றன்று. ருசஉ.

(ஸ - ஸா) உபாஸகன், உபாஸ்யனான பரமாத்மாவினுடைய ஸத்யஸங்கல்பத்வம் ஸர்வஜ்ஞத்வம்முதலிய குணங்களையடைவதுபோல் ஸர்வேஸ்வரத்வத்தையு மடையவேணுமென்னில்; உபாஸ்யமான பரமாத்மாவுக்கு நிர்க்குண ஸ்வரூபமுண்டு, அதை ஸகுணோபாஸகன் அடைகிறதில்லை, இதனால் உபாஸ்யனுடைய எல்லாகுணங்களும் உபாஸகனுக்கு வருமென்கிற நியமமில்லை. ஆகையால், நிர்க்குண ஸ்வரூபம்போல் ஸர்வேஸ்வரத்வமும் ஸகுண முக்தியை யடைந்தவனுக்குக் கிடையாது. ருசஉ.

(ரா - ஸா) உத்பத்தி முதலிய விகாரங்களையுடைய ப்ரஹ்மலோகாதிகளிலுள்ள போகங்களை முக்தனநுபவிக்கலாமோ வென்னில்; உத்பத்யாதி விகார சூந்யமாய் அநந்த கல்யாண குணாகரமாய் ஸமஸ்த விபூதிகளோடுகூடிய பரமாத்மஸ்வரூபமே முக்தனுக்கு போக்யமாயிருக்கும்; இவ்விதமான பரமாத்மஸ்வரூபத்தில் குணங்களைப்போல் ப்ரஹ்மலோகாதி விபூதிகளும் அந்தர்க்கதங்களாகையால் பரமாத்மஸ்வரூபத்தில் சேர்ந்ததென்று கல்யாண குணங்களைப்போல் விபூதியையு மநுபவிக்கலாம். விபூதியோடுகூடின ப்ரஹ்மத்தை யநுபவிக்கும்போது அவ்விபூதியில்சேர்ந்த ப்ரஹ்மலோகாதிகளில் யதேச்ச ஸஞ்சாரமுமாக்கும். ''யதா லோகேஷ்வேவைதல்லிங்கு

[illegible]

ஸம்பத்யாவிர்பாவ:" இத்யாதி ஶ்ருதிகளே 'முக்தன் ஸவிபூதிக ப்ரஹ்மாநுபவம் பண்ணுகிறானென்பதற்கு ப்ரமாணமென்கிறார். ருசஉ

ஸூ|| ருசங. ப்ரத்யக்ஷாநுமாநே ச.

(ஶ்-வ்யா-ஸா) ப்ரத்யக்ஷாநுமாநே=("ந தத்ர ஸூர்யோ பாதி" அந்த நிர்க்குண ஸ்வரூபத்தில் உத்பத்யாதி விகாரமுள்ள ஸூர்ய சந்த்ர நக்ஷத்ராதி ப்ரகாச ஸம்பந்தம் கிடையாதென்று) ஶ்ருதியும், ("ந தத்பாஸயதே ஸூர்ய:" = ஸூர்யாதிகள் அந்த நிர்க்குண ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிப்பதில்லையென்ற) ஸ்ம்ருதியும், ஜகத்=இவ்விதமான நிர்க்குண ஸ்வரூபத்துக்கு விகாரஸம்பந்த மில்லையென்று, தர்ஶயத:=காண்பிக்கின்றன. இந்த ஶ்ருதி ஸ்ம்ருதிகளினால் நிர்க்குண ப்ரஹ்மம் ஸித்திக்கிறதென்று கருத்து. ருசங.

(ரா-வ்யா-ஸா) ப்ரத்யக்ஷாநுமாநே ச - (பீஷாஸ்மாத்வாத: பவதே" பரமாத்மாவினிடத்தில் நின்றும் பயத்தினால் வாயு ஸூர்யன் அக்நி இந்த்ரன் யமன் முதலானவர்கள் தங்கள் தங்கள் கார்யத்தைத் தவறாமல் செய்கிறார்கள் இத்யாதி) ஶ்ருதிகளும், "(அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ: ப்ரலயஸ்ததா" நானே ஜகத்திலுடைய உத்பத்திஸ்த்திதி ப்ரளயங்களுக்குக் காரணமென்று பரமபுருஷன் சொல்லுகிற கீதை முதலிய) ஸ்ம்ருதிகளும், ஜகத்=இப்படி பரமாத்மாவே ஜகத்காரணன் ஸர்வேஶ்வரனென்ற அர்த்தத்தை, தர்ஶயத:= காண்பிக்கின்றன. பரமாத்மாவே ஜகத்காரணனென்பதற்கு ஶ்ருதி ஸ்ம்ருதிகளே ப்ரமாணமென்று கருத்து. ருசங.

ஸூ|| ருசச. போகமாத்ரஸாம்யலிங்காச்ச.

(ஶ்-வ்யா-ஸா) போகமாத்ரஸாம்யலிங்காச்ச - ("அஹமேவ ஸோமமம்ருதம் போக்ஷ்யாமி" நான் இந்த ஜலத்தை அம்ருதமாகப் பாநம் செய்கிறேன், நீங்களுமிதைப் பாநம் செய்யுங்கோள் என்று) அநுபவமாத்ரத்திலே, (பரமாத்மாவுக்கும் முக்தனுக்கும்) ஸாம்யம் சொல்லுகிற ஹேதுவினாலேயும் (முக்தனுக்கு ஜகத்வ்யாபாரம் கிடையாது). ருசச.

(ரா-வ்யா-ஸா) போகமாத்ரஸாம்யலிங்காச்ச=("ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" அந்த முக்தன், பரமாத்மாவும் தானுமாய் பரமாத்ம ஸ்வரூபத்தையும் கல்யாணகுணங்களையு மநுபவிக்கிறானென்று) அநுபவமாத்ரத்திலே (பரமாத்மாவோடு முக்தனுக்கு ஸாம்யம் சொல்லுகிற ஹேதுவினாலும் (முக்தனுக்கு ஜகத்வ்யாபாரம் கிடையாது). பரமாத்மா ஆநந்தஸ்வரூபி யாகையால் தனக்கும் பிறர்க்குங்கூட அநுபாவ்யனாவான்.

ஸூ|| ருசரு. அநாவ்ருத்தி: ஶப்தாதநாவ்ருத்தி: ஶப்தாத்.

(ஶ்-ரா-வ்யா) ஶப்தாத்=ஶ்ருதிவாக்யத்தினால், அநாவ்ருத்தி:=திரும்பி(ஸம்ஸாரத்தில்) வாராமலிருக்கை, (ஸித்திக்கிறது). ருசரு.

• (ஶ்ரு — ஸா) ஸகுணப்ரஹ்மோபாஸகன் ஸகுணப்ரஹ்மத்தையடைந்தபோதிலும், "ந ச புநராவர்த்ததே" மறுபடியும் திரும்புகிறதில்லை யென்றும், "தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி" ப்ரஹ்மவித்யா மஹிமையினால் மேலேசென்று அங்கு நின்றும் அக்ஷயமான முக்தியையடைகிறானென்றும், "இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே" இந்த மநுஷ்யலோகத்துக்குத் திரும்புகிறதில்லையென்றும் ஶ்ருதி சொல்லுகையாலே, அங்கு பரமாத்மாநுக்ரஹத்தினால் தத்வஜ்ஞாநத்தைப்பெற்று அங்கு நின்றும் நிர்க்குண முக்தியையடைகிறான். ஸ்வர்க்காதிகளை யடைந்தவன்போல் திரும்பி ஸம்ஸாரத்தில் வரமாட்டானென்று நிஶ்சயிக்கப்படுகிறதென்கிறார். ௫௪௩.

(ரா — ஸா) கீழ் ஸகலைஶ்வர்யமும் பரமாத்மாதீந மாகையால் முக்தனுடைய ஸத்யஸங்கல்பத்வாதியான ஐஶ்வர்யங்களும் பரமாத்மாதீநமென்றது. இப்படியாகில் ஸர்வேஶ்வரன் ஸ்வதந்த்ரனாகையால், தன்னுடைய இச்சையினால் முதல் இவனுக்கு முக்தியைக்கொடுத்தாற்போல் ஒருகால் தன்னுடைய ஸ்வாதந்த்ர்யத்தினால் அங்கு நின்றும் ஸம்ஸாரத்தில் தள்ளிவிடுவனோவென்னில்; "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதி ஶ்ருதிகளினால் ஸர்வேஶ்வரனே ஜகத்காரணபூதன், ஸர்வநியந்தா என்று நிஶ்சயிக்கப்படுகிறதோ, அப்படியே "ந ச புநராவர்த்ததே" "இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே" "மாமுபேத்ய புநர்ஜந்ம துःகாலயமஶாஶ்வதம் | நாப்நுவந்தி மஹாத்மாநஸ்ஸம்ஸித்திம் பரமாம் கதாः" இத்யாதி ப்ரமாணங்களினால் பரமபுருஷனை யுபாஸித்து அவனுடைய அநுக்ரஹத்தினால் மோக்ஷத்தை யடைந்தவன் மறுபடியும் ஸம்ஸாரத்தையடையானென்று நிஶ்சயிக்கப்படுகிறது. மேலும், 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' எனக்கு ஜ்ஞாநியானவன் ப்ராணபூதன் என்று ஜ்ஞாநியைத் தனக்கு அத்யந்த ப்ரியனாகப் பரமாத்மாவே சொல்லுகையால் அப்படிப்பட்டவனை ஒருகாலும் ஸம்ஸாரத்தில் தள்ளமாட்டான். இதனாலும் முக்தனுக்கு ஒருகாலும் ஸம்ஸார ப்ராப்தியில்லை. பரமபதத்திலிருந்தே, ஹேயப்ரத்யநீகனாய், அநந்த கல்யாண குணாகரனாய், அநந்த கருடவிஷ்வக்ஸேநாதி ஸகலஸூரி ஜநஸம்ஸேவ்யனால் ஸ்ரீபூநீளாதிமஹிஷீ ஸமேதனாய் உபயவிபூதிநாதனாய்க்கொண்டு ஸ்ரீவைகுண்ட திவ்யநகரத்தில் திருமாமணிமண்டபத்தில் அநந்தன்மேல் வீற்றிருக்கிற பரமபுருஷனான ஸ்ரீமந்நாராயணனை அநவரதமநுபவித்து அவனுக்கு ஸகல கைங்கர்யங்களையும் செய்து அபரிச்சிந்ந ப்ரஹ்மாநந்த பரிபூர்ணனாய் வாழப்பெறுவனென்கிறார். சாஸ்த்ரம் முடிந்ததென்றறிவிக்கைக்காக. "அநாவ்ருத்திஶ்ஶப்தாத்" என்ற ஸூத்ரத்தை இரண்டாவ்ருத்தி சொன்னது. ௫௪௩.

௪ - வது அத்யாயம்

௪ - வது பாதம் முற்றிற்று.

சாஸ்த்ரம் முடிந்தது.

ஓம்.

ஸ்ரீ நீலகண்டாசார்ய பாஷ்யம்.

அவதாரிகை.

ஸ்ரீவேதவ்யாஸபகவான், மோக்ஷகாமிகளுக்குப் ப்ரஹ்மஸ்வரூபத்தை யுணர்த்துவதாகக்கருதி, வேதாந்தமாகிய உபநிஷத்தினர்த்தங்களைத் திரட்டி ப்ரஹ்மஸூத்ரங்களைச் செய்தனர். அதற்கு முன்புள்ள ஆசார்யர்களனைவரும் வ்யாக்யானம் செய்வதாக முயன்று அதின் உண்மையான பொருளையுணராமல் தங்கள் தங்கள் மதிபோனவழியே சென்று தங்களுக்குத் தோற்றின அர்த்தங்களை யெழுதி இம்மஹார்த்தத்தைக் கலக்கிவிட்டார்கள். ஸ்ரீநீலகண்டாசார்யரென்பவர் அதைத்தெளிவித்து, பரப்ரஹ்மமாகிய ஸதாசிவனிடத்தில் நிஷ்டையுடைய முமுக்ஷுக்களுக்கு ப்ரஹ்மஸூத்ரத்தின் வாஸ்தவார்த்தத்தை வெளியிடுகைக்காக இந்த பாஷ்யத்தைச் செய்கிறதாக ஆரம்பித்தனர்.

இந்த ஶாஸ்த்ரத்திற்கு ப்ரஹ்மமீமாம்ஸை யென்றபெயர். அதாவது—ப்ரஹ்மவிஷயகமான விசாரம். வேதாந்தவாக்யங்கள் ப்ரஹ்மத்தைச்சொல்லுகிறதா, அல்லது மற்றொன்றையே ஜகத்காரணமாகவும் மோக்ஷோபாயமாக த்யானிக்கத்தக்கதாகவும் சொல்லுகிறதா என்பதை யுக்திகளைக்கொண்டு விசாரம்செய்து ப்ரஹ்மத்தையே சொல்லுகிறதென்று அறுதியிடுகை.

இந்தபாஷ்யகாரருக்கு விசிஷ்டாத்வைதமே உண்மையென்று ஸித்தாந்தம். விசிஷ்டாத்வைதமாவது-தத்வங்கள், சித்து-ஜீவன், அசித்து-ஜடம், ஈஶ்வரன்-ப்ரஹ்மம், என்று மூன்று வகையாயிருக்கும். அதில் ஜடமாவது - தனக்கொரு ப்ரயோஜனமின்றியிலே ஜீவர்களுக்கு அவர்களுடைய புண்யபாபரூபமான ஸுகதுக்கங்களை யநுபவிக்கைக்கு ஸாதநமான, சரீரக்ருஹ க்ஷேத்ர ஆராம வஸ்த்ர ஆபரண சந்தந குஸும தாம்பூல பாத்ர சய்யாதி போக்ய போகோபகரண போகஸ்தாநரூபமாய்ஜ்ஞாநமும்ப்ரகாசமுமற்றதாய் இருக்கும். இது இருபத்துநாலுவிதமாயிருக்கும். அவற்றின் ஆதியான ஸ்வரூபத்துக்கு மூலப்ரக்ருதி யென்றும், அதினுடைய விகாரத்துக்கு மஹத்து என்றும் அதினுடைய விகாரத்துக்கு அஹங்காரமென்றும் பெயர். அவ்வஹங்காரம்- ஸாத்விகாஹங்காரம், ராஜஸாஹங்காரம், தாமஸாஹங்காரமென்று மூன்றுவிதம். அதில் தாமஸாஹங்காரத்தில் நின்றும், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற தந்மாத்ரைகளும், அவற்றில் நின்று ப்ருதிவீ, ஜலம், தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்சபூதங்களு முண்டாகின்றன. ஸாத்விகாஹங்காரத்திலிருந்து, த்வக், சக்ஷுஸ்ஸு, ஶ்ரோத்ரம், ஜிஹ்வை, க்ராணம், என்கிற ஐந்து ஜ்ஞாநேந்திரியங்களும், வாக்கு, பாதம் பாணி, பாயு, உபஸ்த்தம், என்கிற ஐந்து கர்மேந்திரியங்களும், மநஸ்ஸு என்கிற அந்தரிந்திரியமும் உண்டாகின்றன. ராஜஸாஹங்காரம் மற்ற இரண்டஹங்காரத்துக்கும் உதவியாயிருக்கும்.

ஜீவனென்பது-அணுரூபியாய், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியாய், ஸ்வயம்ப்ரகாசமாய் கர்த்தாவாய், போக்தாவாய், ஸம்ஸாரியென்றும் முமுக்ஷுவென்றும் முக்தனென்றும் பலவகைப்பட்டிருக்கும். ஸம்ஸாரியாவது-தேவன், நரன், புழு, ஆண், பெண், என்றிவ்வாறாகப் பலவகைப்பட்ட சரீரங்களையடைந்து, அக்கர்மம் நடத்தும் வழியே நடந்துகொண்டு, இப்ப்ரக்ருதி விகாரத்துக்குட்பட்ட ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்களிலும் பூலோகத்திலும் பாதாளாதி கீழ்லோகங்களிலும் திரிந்துகொண்டு

அக்ருள்ள ஸுகதுக்கங்களை யநுபவித்து அவ்வளவிலே த்ருப்தியடைந்திருப்பவன். முமுக்ஷுவாவது-இவ்விதமான இருப்பில் வைராக்யத்தையடைந்து இஸ்ஸம்ஸாரத்தைவிட்டு நீங்கி மோக்ஷமடைய விரும்புமவன். முக்தனாவது-பரமகாரண பூதனான பரமசிவனுடைய அருள் பெற்று இஸ்ஸம்ஸாரத்தில் நின்றும் நீங்கி முக்தியடைந்தவன்.

ஈஶ்வரனாவது-கீழ்ச்சொன்ன இரண்டுதத்வங்களையும் ஸாதநமாகக்கொண்டு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவும் பரிபாலிக்கவும் ஸம்ஹரிக்கவும்வல்லனாய், ஜீவனைப்போல் கர்மவஶ்யனன்றிக்கே ஸ்வதந்த்ரனாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய், அபரிமித ஜ்ஞாநாநந்தாதி மஹாகுணங்களை யுடையனாய், ஸத்யஸங்கல்பனாய், ஜ்யோதிஸ்வரூபியாய், தனக்கொத்தாரையும் மிக்காரையு மற்றவனாயிருக்கும் ஸதாசிவன். இவனுக்கு மற்ற இரண்டு தத்வங்களும் சரீரமாயிருக்கும். இதில் அறியவேண்டும் மற்றவிஷயங்களையெல்லாம் ராமாநுஜபாஷ்யத்தி னவதாரிகையில் விசதமாகக் காண்க.

ராமாநுஜபாஷ்யத்துக்கும் இந்தபாஷ்யத்துக்கும் அநேகமாகப்பொருளொத்திருக்கும், ராமாநுஜபாஷ்யத்தில் நாராயணனைப்பரதேவதையாகவும், இதில ஸதாசிவனைப் பரதேவதையாகவும் சொல்வதே பேதம். ஆகையினால் இதுக்கு சைவவிசிஷ்டாத்வைதமென்று பெயர். சிலவிடங்களில் ஸூத்ரார்த்தங்களில் பேதமிருந்தபோதிலும் அதுமுக்யதாத்பர்யத்துக்கு விரோதமாகாது. ஆகையால் ராமாநுஜபாஷ்யத்தைக்காட்டிலும் இந்தபாஷ்யத்துக்கு எங்கு அர்த்தம் வேறுபடுகிறதோ அதை இங்கு காட்டப்படுகிறது.

ஜிஜ்ஞாஸாதிகரணம்:—இந்த ஶாஸ்த்ரத்தில், ஆதியில் ப்ரஹ்மமென்பது ஜீவனா, அல்லது ஜீவனைக்காட்டிலும் வேறான மற்றொரு வஸ்துவாவென்று விசாரம் செய்யப்படுகிறது. அவ்விசாரம் கூடுமோகூடாதாவென்று இவ்வதிகரணத்தில் விசாரிக்கப்படுகிறது. ஸந்தேஹமுள்ள விடயங்களில் தான்விசாரம் செய்து, அவற்றில் எவ்வர்த்தம் யுக்திக்கு இணைந்திருக்குமோ அதை அங்கீகரிப்பது லோகஸித்தமாயிருக்கிறது. இங்கு வேதாந்த வாக்யங்களில், "அஹம் ப்ரஹ்மாஸ்மி" இத்யாதி வாக்யங்கள், நாம் காண்கிற ஜீவனே ப்ரஹ்மமெனப்படும் என்று ஸம்சயமறச்சொல்லி யிருக்கையால், விசாரத்துக்குக் காரணமாகிய ஸம்சயமில்லாமையால் ப்ரஹ்ம விசாரம் செய்வதில்பயனில்லை யென்று பூர்வபக்ஷம்.—உபநிஷத்துக்களில் ஜீவனை, அணுவாகவும், கர்மவஶ்யனாகவும், அல்பஜ்ஞனாகவும், அல்பசக்தியாகவும், பரதந்த்ரனாகவும் சொல்லி, ப்ரஹ்மத்தை, ஸர்வவ்யாபியாகவும், புண்யபாபங்களற்றவனாகவும் ஸர்வஜ்ஞனாகவும், ஸர்வசக்தியாகவும், ஸ்வதந்த்ரனாகவும் சொல்லியிருக்கிறது. இவ்விரண்டையும் பார்த்தால் இருளுமொளியும்போல் இணக்கமற்றிருக்கிறது. இப்படியிருக்க ஜீவனை ப்ரஹ்மமாகச்சொல்லுகிற வாக்யங்களுக்குத் தாத்பர்யமென்னவென்று ஸம்சயமுண்டாகிறது. அதைப்போக்கிக் கொள்ளுகைக்காக யுக்திகளைக்கொண்டு வேதாந்த விசாரம் செய்து ஓரர்த்தத்தை நிஶ்சயிக்க வேண்டுமாகையால் வேதாந்தவிசாரம் அவஶ்யம் செய்யவேண்டுமென்று ஸித்தாந்தம். க.

உ. ஜந்மாத்யதிகரணம்— ஜகத்காரணமான வஸ்துவே ப்ரஹ்மமெனப்படும். உபநிஷத்துகளில் ஓரிடத்தில் ஆகாசம் ஜகத்காரணமென்றும் மற்றோரிடத்தில் ஜ்ஞாநம், வேறிடத்தில், ஆத்மா, இன்னுமோரிடத்தில் ஸத்து, வேறோரிடத்தில் சிவன் ஜகத்காரணமென்றும் பலவற்றையும் காரணமாகச்சொல்லியிருக்கிறது. இவற்றில் ஏதோ ஒன்றே ப்ரஹ்மமாகவேணுமன்றி பலவும் ப்ரஹ்மமாகமாட்டா. இவற்றில் ஒன்றையே ப்ரஹ்மமாகநிஶ்சயிக்கைக்குக் காரணமும் கிடையாது. ஜகத்

காரணவஸ்துவை இன்னதென்று நிச்சயிக்க உபாயமில்லாவிடில் ப்ரஹ்மஸ்வரூபத்தையறிய வேறுவழியில்லையாகையால், ப்ரஹ்மவிசாரம் செய்யமுடியாதென்று பூர்வபக்ஷம்— ஆநந்தம், ஜ்ஞாநம், ஆத்மா, ஸத்து, சிவன் முதலிய பதங்கள் வெவ்வேறு வ்யக்திகளைச் சொல்லுமாகில் ப்ரஹ்மவிசாரம் செய்ய முடியாதுதான். அப்படியன்றிக்கே இப்பதங்களெல்லாம் ஒரேவ்யக்தியைச் சொல்லுகிறது. அதில் ஆநந்தபதம் அளவற்ற ஆநந்தத்தையுடைய ப்ரஹ்மத்தையும், ஜ்ஞாநபதம் எக்காலத்திலும் எத்தேசத்திலுமுள்ள எல்லாவிஷயங்களையும் எல்லாப்படியாலும் எப்போதுமறியத்தக்க ப்ரஹ்மத்தையும், ஆத்மபதம்-எங்கும் வ்யாபித்த ப்ரஹ்மத்தையும் ஸத்தென்பது அழிவற்ற ப்ரஹ்மத்தையும், சிவபதம் மங்களகரமான ப்ரஹ்மத்தையும் இப்படியே மற்றுபதங்களும் அவ்வவகுணங்களையுடைய இந்த ப்ரஹ்மத்தையே சொல்லுகிறது. அப்பதங்களுக்கு விசேஷணமாகிய குணங்கள், வெவ்வேறாயினும் ப்ரஹ்மமென்கிற ஒரு வ்யக்தியே அர்த்தமாகக்கடவது ஆகையால் ப்ரஹ்மவிசாரம் செய்யமுடியுமென்று ஸித்தாந்தம். ௨.

௯. ஸர்வநபாயிகரணம்—ராமாநுஜபாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் சொன்னதாத்பர்யத்தை இந்தபாஷ்யகாரர் இந்த ஸூத்ரத்துக்குத் தாத்பர்யமாகக்கொண்டார். மற்றது ஸமாநம். ௯.

௧௬. ஆநந்தமயாதிகரணம்—"ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா" என்று ஆநந்தமயத்துக்கும் ஆதாரம் ப்ரஹ்மம் என்று சொல்லுகையாலே ஆநந்தமயமென்பது ப்ரஹ்மமன்று ஜீவனே யாகவேணுமென்று பூர்வபக்ஷம்—அங்குள்ள ப்ரஹ்மபதத்துக்கு பரப்ரஹ்மம் அர்த்தமன்று, ப்ரஹ்மமென்றால் ப்ரணவமென்கிற அக்ஷரத்துக்குப்பெயர். அவ்வக்ஷரம், ப்ரஹ்மமாகிய ஆநந்தமயனுக்கு ஆதாரம், அதாவது ஆநந்தமயனுக்கு வாசகமாகிறது என்று அவ்வாக்யத்திற்கு அர்த்தம். ஆகையால் ஆநந்தமயத்தைக்காட்டிலும் ப்ரஹ்மம் வேறுபட்டதன்று என்று ஸித்தாந்தம். ௧௬.

௧௭. இதராநுபபத்த்யதிகரணம்—மஹோபநிஷத்தில், "யதஸ்ஸர்வாஸூர்ய ஜம தஸ்ஸர்வாஸூதிஃ" என்று தொடங்கி, ப்ரஜாபதியென்பவன் ஆதியில் ஸர்வாந்தர்யாமியாயிருந்து ஸ்ருஷ்டிக்கிறானென்றும், அந்ததாதாவென்பவனே சந்த்ரன் ஸூர்யன் ஆகாசம் பூமி முதலானவற்றைப் படைப்பவனென்றும் சொல்லிற்று. ப்ரஜாபதியென்றும், தாதாவென்றும் சதுர்முக ப்ரஹ்மாவுக்குப்பெயர். ஆகையால் அவனே அவ்வுபநிஷத்தில் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்டான், பரமேஶ்வரன் ஜகத்காரணமாகச் சொல்லப்படவில்லையென்று பூர்வபக்ஷம்—ப்ரஜாபதியென்றும் தாதாவென்றும் சொல்லப்பட்டவன் எல்லோரிலுமுயர்ந்தவன், இந்த ப்ரஹ்மாண்டத்துக்கு வெளிப்பட்டவன். அவனைத்யாநித்தவர்கள் மோக்ஷத்தை யடைவார்கள் என்று அவ்வுபநிஷத்திலேயே சொல்லியிருக்கிறது. இவ்விதமான குணங்கள் பரமேஶ்வரனால் படைக்கப்பட்டு இவ்வண்டத்துக்குள்ளே வாஸம்செய்கிற ஸம்ஸாரியாகிய சதுர்முக ப்ரஹ்மாவுக்குச் சேராவாகையால், அவ்விரண்டு பதங்களும் பரமேஶ்வரனையே சொல்லுகிறது. இதனாலும் பரமேஶ்வரனே ஜகத்காரணமென்பது ஸித்தம் என்று ஸித்தாந்தம். ௧௭.

20 அவ்வுபநிஷத்திலேயே இவ்விரண்டு பதங்களினால் சொல்லப்பட்டவனை "ப்ரஹ்மணோபிபதிஃ" என்று சதுர்முக ப்ரஹ்மாவுக்கும் ஸ்வாமியாகச் சொல்லியிருக்கிறது. ஆகையாலும் அங்குச் சொல்லப்பட்டவன் பரமேஶ்வரனேயாகவேணும். ௨0.

௨௧. அந்தராதிகரணம்—சாந்தோக்யத்தில்ஸூர்யமண்டல மத்யவர்த்தியாகச் சொல்லப்பட்ட புருஷன் ஸூர்யனென்கிறஜீவனா, அல்லது பரமேஶ்வரனாவென்று

விசாரிக்கில், அப்புருஷனுக்கு சரீரமுண்டென்றும் தாமரைப்பூப்போல் இரண்டு கண்களுண்டென்றும் சொல்லியிருக்கிறது. சரீர முண்டானவனுக்குத் துன்பம் விடாது. நெருப்புக்கு ஒன்றைச் சுடுகையே ஸ்வபாவமாவதுபோல் சரீரத்துக்குத் துயரத்தை விளைக்கை ஸ்வபாவமாயிருக்கும். இதுபாமேஸ்வரனிடத்திில்சோாது. அப்பரமேஸ்வானுக்குக் கண்கள் மூன்றாயிருக்க, இரண்டுகண்களுண்டென்றுசொல்வதும் சேராது. ஆகையால் இவன் ஜீவனேயாகவேணுமென்று பூர்வபக்ஷம்—அக்கி மரம் முதலானவற்றைக் கொளுத்தினாலும் ஜலம் வாயுமுதலியவற்றையும் சில ஔஷதிகளைப் பூசிக்கொண்டிருக்கிறவனையும் கொளுத்தவல்லமை யற்றிருப்பது போல், சரீரம் ஜீவனுக்குத் துன்பத்தை விளைத்தபோதிலும் பரமேஸ்வானுக்கு அதை விளைக்கச் சக்தியற்றதா யிருக்குமாகையால், சரீரமுடையவன் துயா முள்ள ஜீவனேயாகவேணு மென்கிற நியமமில்லை. அவனுக்கு இரண்டு கண்களுண் டென்றதுக்கு மூன்றாவது கண்ணில்லையென்று பொருளன்று. மூன்றாவது கண் எப்போதும் மூடிக்கொண்டே யிருக்குமாகையால் இரண்டு கண்களே தாமரைப் பூப்போல் மலர்ந்திருக்கிறதென்று சொல்லிற்று. இதனாலும் அவன் பரமேஸ்வர னன்றென்று ஏற்படாது. மேலும் அப்புருஷன் பாபமற்றவன், ஸகல லோகங்க ளுக்கும் ஸ்வாமி, இஃடப்படி செய்யவல்லவன் என்று சொன்ன குணங்கள் பரமே ஸ்வானுக்கொழிய மற்றொருவனுக்குக் கிடையாதாகையால், அப்புருஷன் பர மேஸ்வரனே யாகவேணும் என்று ஸித்தாந்தம், உக.

க-ம் அத்யாயம் உ-ம் பாதம்.

க. அநுபபத்யதிகரணம்—மஹோபநிஷத்தில், "நாராயணம் மஹாஜ்ஞேயம்" என்று சொல்லப்பட்ட நாராயணபதத்துக்கு, லக்ஷ்மீபதியான நாராயணனா, அல்லது பரமேஸ்வானா அர்த்தமென்று விசாரிக்கில்; நாராயணபதம் லக்ஷ்மீபதி யான நாராயணனிடத்திலேயே அதிகமாக வழங்குகையாலும், "ஸமுத்ரசயநம்" என்று ஸமுத்திரத்தில் படுத்துக்கொண் டிருக்கிறானென்பதும் அவனுக்கே சேரு மாகையாலும் நாராயணனே சொல்லப்பட்டானென்று பூர்வபக்ஷம்—அவ்வாக்யத் தில் நாராயணனை ஜகத்துக்கெல்லாம் ஸ்வாமியென்று சொல்லிற்று. ஜகத்துக் கெல்லாம் ஸ்வாமி பரமேஸ்வரனொருவனேயென்றும், மற்றொருவனப்படியாகா னென்றும் உபநிஷத்துக்களிலனேக இடங்களில் சொல்லி யிருக்கையாலே அவன் பரமேஸ்வரனேயாகவேணு மல்லது நாராயணனாகான் என்று ஸித்தாந்தம். க.

உ. "நாராயணபரம்ப்ரஹ்ம" என்று நாராயணனையே பரப்ரஹ்ம மாகவும் உபாஸ்யனாகவும் சொல்லுகையாலே அங்குச் சொல்லப்பட்டவன் நாரா யணனேயாக வேணுமென்று பூர்வபக்ஷம்—அந்தகட்டத்தில், நாராயணன் பரமேஸ் வரனை த்யானிக்கிறானென்று சொல்லிற்று ஆகையால் அவன் நாராணனன்று, பர மேஸ்வரனேயென்று ஸித்தாந்தம். உ.

ங. நாராயணனைக்காட்டிலும் மேலானபரமேஸ்வரனே பரப்ரஹ்மமென்று அர்த்தம். ஆகையால் அங்கு பரப்ரஹ்மமாகச் சொல்லப்பட்டவன் பரமேஸ்வரனே.

ச. கீதையிலும் க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு, தன்னைக்காட்டிலும் உயர்ந்த பரமேஸ்வரனுடையரூபத்தைக்காண்பித்ததாக "பரமம் ரூபமைஸ்வரம்" என்ற ஸ்லோகத்தில் சொல்வதினாலும் பரமேஸ்வரனே பரப்ரஹ்மம். ச

ரு. "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச" என்று தொடங்கி ஜகத்தை ஸம்ஹாரம் செய்கிறானென்று சொல்லப்பட்டவன் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரர்களாகிய த்ரிமூர்த்தி

யிலொருவனான ருத்ரனா, அல்லது இவர்களைக்காட்டிலும் மேலான பரமேஶ்வரனா வென்னில்; ஸம்ஹாரமாவது-அழிக்கை. கோபம்முதலிய தமோகுணத்தினால் செய்ய்வேண்டிய வ்யாபாரம். இவ்விதமானதுர்க்குணம் பரமேஶ்வரனுக்கில்லையாகையால், இவன் பரமேஶ்வரனன்று என்று பூர்வபக்ஷம்—த்ரிமூர்த்திகளி லொருவனான ருத்ரனுக்கு இந்த ஜகத்தையெல்லா மழிக்கும்படியான ஸாமர்த்தியமில்லையாகையால் இவன் பரமேஶ்வரனேயாகவேண்டும் அவனுக்குத்தமோ குணமில்லையென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே த்ரிமூர்த்தியிலொருவனான ருத்ரன் அங்கு ஸம்ஹார கர்த்தாவாகச்சொல்லப்படவில்லை.பராத்பரனான பரமேஶ்வரனே ஸகல ஜகத் ஸம்ஹாரகனாகச் சொல்லப்பட்டான். அவன் ஸம்ஹாரம் செய்வதற்குக் கோபம் முதலியவை காரணமன்று. ப்ராணிகளுடைய கர்மமே காரணம். அதையநுஸரித்து அவன் ஸம்ஹாரம் செய்கிறானென்று ஸித்தாந்தம். க.

கஎ. ‘‘அங்குஷ்டமாத்ர: புருஷ:’’ என்று மஹோபநிஷத்தில் சொல்லப்பட்ட கட்டைவிரலளவான புருஷன் யாரெனில்; இதுப்ராணனுக்கிஹோத்ரப்ரகரணமாகையாலும், சிறிய அளவுள்ளதாகையாலும் ப்ராணவாயுவாக வேணுமென்று பூர்வபக்ஷம்—இப்புருஷன் ஜகத்துக்கெல்லாம் காரணமானவன் என்று மேல் சொல்லப்போகிற இம்மாதிரி குணங்கள் ப்ராணவாயுவுக்காவது மற்றொன்றுக்காவது கிடையாது. இவை பரமேஶ்வரனுக்கேயுள்ளவை ஆகையால் இவன் பரமேஶ்வரவென்று ஸித்தாந்தம்.

சஉ. ஜ்யோதிரதிகரணம்—சாந்தோக்யத்தில் ‘‘பரஞ்ஜ்யோதிரூபஸம்பத்ய’’ என்ற வாக்யத்தில், ஜீவனுக்கு முக்திதசையில் ப்ராப்யமாகச் சொல்லப்பட்ட ஜ்யோதிஸ்ஸென்பவன் யாராகலாமென்னில்;—அவ்வாக்யத்தில் அந்த ஜ்யோதிஸ்ஸை ‘‘ஸ உத்தம: புருஷ:’’ என்று புருஷோத்தமனைச் சொல்லியிருக்கிறது. புருஷோத்தமனென்று நாராயணனுக்குப் பெயராகையால் அவனே இங்கு ஜ்யோதிஸ்ஸெனப் படுவானென்று பூர்வபக்ஷம்—இந்த ஜ்யோதிஸ்ஸை முக்தனுக்கு ப்ராப்யமாகச் சொல்லியிருக்கையால், அவன் பரமசிவனன்றி மற்றொருவனாகான். இங்குள்ள புருஷோத்தமபதம் - எல்லாப் புருஷர்களைக்காட்டிலும் உயர்ந்தவனென்று அந்த பரமசிவனையே சொல்லுகிறது. ஆகையால், இங்குச் சொல்லப்பட்டவனும் பரமசிவனே யென்று ஸித்தாந்தம். சஉ.

க-ம் அத்யாயம் ச-ம் பாதம்.

கக. வாக்யாந்வயாதிகரணம்—இவ்வதிகரணத்தில், மைத்ரேயீ ப்ராஹ்மணத்தில், ஜீவன்பரமேஶ்வரன் ஆகிய இருவரையும் சொல்லியிருக்கையாலே அவ்விருவரில் அவ்வாக்யத்துக்கு முக்யதாத்பர்ய விஷயம் யாராகலாமென்று விசாரித்து ஸமாதாநம் சொல்லப்படுகிறது—‘‘ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி’’ என்ற இவ்வாக்யத்தில் ஸாம்ஸாரிக போகத்தினாலுண்டான ப்ரீதியுடையவனைச்சொல்லி, அப்படிப்பட்டவனையே ஆராயவேணுமென்றது. பரமேஶ்வரனுக்கு ஸாம்ஸாரிகபோகமில்லாமையால் அந்த போகமுடையவன் ஜீவனே அங்கு சொல்லப்பட்டானென்று பூர்வபக்ஷி சொன்னான்.—ஜீவனையாராயில்மோக்ஷமுண்டாகுமோ, அவன்விஷயமாகவேஅந்தப்ரகரணத்தில் ஆதிதொடங்கி கடைசிவரையில் லக்ஷணங்கள் காண்கையாலே அப்படிப்பட்டவன் பரமேஶ்வரனே யாகவேணும், ஸம்ஸாரபோக முடையவனென்று ஜீவ

னைச், சொன்னது-இப்படிப்பட்ட ஜீவனைக்காட்டிலும் மேலானவனிருக்கிறான். அவனே பரமேச்வரனென்கைக்காகவென்று விஸ்தாரம். ௧௧.

௨௨. அந்த மைத்ரேயிப்ராஹ்மணத்தில், ஜீவனைச் சொல்லுகிற சப்தத்தினால் பரமேச்வரனைச் சொன்னதுக்குக் காரணமென்னென்னில், ஜீவனுக்கும் பரமேச்வரனுக்கும் எப்போதும் எவ்விதத்திலும் பேதமில்லாமையால் இப்படி சொல்லிற்றென்று ஒருவர் சொன்னதாகவும், ஜீவன் ஸம்ஸாரத்தைவிட்டு முக்தியையடையும் போது பரமேச்வரனாய் விடுகையாலே அப்படி சொல்லிற்றென்று மற்றொருவர் சொன்னதாகவும்கீழேசொல்லி இதில்தன்மதத்தைச்சொல்லுகிறார். பரமேச்வரன் ஜீவனுக்கு அந்தர்யாமியாய்க்கொண்டு ஆத்மாவாயிருக்கையாலே, சரீரத்தைச் சொல்லுகிற தேவாதிசப்தம் அதற்குள்ளே யிருக்கிற ஆத்மாவைச் சொல்வதாக உலகத்தில் காண்கையாலே, பரமேச்வரனுக்குச் சரீரமாகிய ஜீவனைச்சொல்லுகிற சப்தத்தினால் பரமேச்வரனைச் சொல்லிற்று. பரமேச்வரன் அந்தர்யாமி யென்பதும் "ஜ்ஞ ஆத்மநி திஷ்டந்" என்று தொடங்கி முதல் கண்டத்தில் சொன்னவாக்யங்களினாலும் "ஸோऽயமாத்மா" இத்யாதியான இரண்டாவது கண்டத்திலுள்ள வாக்யங்களினாலும், ஸ்பஷ்டம். கீழ்சொன்ன இரண்டுமதங்களுக்கும் விருத்தமான இம்மதத்தைச்சொல்லி, இதற்குமேல் வேறொரு மதம் சொல்லாமையால் இதுவே ஸூத்ரகாருடைய அபிப்ராயமென்று நிச்சயிக்கப்படும். இம்மதமே காசக்ருத்ஸ்நர் முதலிய பெரியோர்களுக்கும் ஸம்மதமென்கைக்காக அவர்சொன்னதாகச் சொன்னார். ௨௨.

௨௩. ஸர்வவ்யாபாராதிகரணம். கர்மகாண்டத்தில் இருக்கிற புருஷஸூக்தம் சதருத்ரீ முதலான வேதமந்த்ரங்களும், இதிஹாஸம் புராணம் முதலியவைகளும், கீழ்ச்சொன்னவாக்யங்களைப்போலே பரமேச்வரனுக்கே காரணத்வத்தைச் சொல்லுகிறதுகளென்று நிச்சயிக்கமுடியுமா முடியாதாவென்று விசாரிக்கில்,—புருஷஸூக்தம் சதருத்ரீமுதலானவை கர்மகாண்டத்திலிருக்கிறபடியால் அக்காண்டத்திற் சொல்லுகிற கர்மங்களை யநுஷ்டிக்கிற ஜீவனுடைய ஸ்வரூபத்தைப்பற்றியே அவ்வாக்யங்கள் சொல்லுகின்றன. அப்ப்ரகரணத்தில் எங்கும் சொல்லப்படாதவனாய், அக்கர்மங்களோடு தானொரு ஸம்பந்தமுமில்லாதவனான பரமேச்வரனைச்சொல்லமாட்டா. இதிஹாஸபுராணங்களில், சிலவிடங்களில், ருத்ரனையும் சிலவிடங்களில், விஷ்ணுவையும், சிலவிடங்களில் ப்ரஹ்மாவையும், சிலவிடங்களில் கணபதி துர்க்கை முதலானவர்களையும் ஜகத்காரணமாகவும் மோக்ஷத்தை யளிக்கத்தக்க பரதேவதையாகவும், இப்படி பலவிடங்களில் பலவரைச்சொல்லுகையாலேயும், அப்புராணங்களில் இது உண்மை இது பொய்யென்று அறியமுடியாமையாலும், எல்லாவற்றையு முண்மையாக அங்கீகரிக்கில் பரதேவதை பலவாக இருக்கக்கூடாதாகையாலும் அவற்றைக்கொண்டு ஓரர்த்தம் நிச்சயிக்கமுடியாது என்று பூர்வபக்ஷம்—புருஷஸூக்தத்தில், ஜீவனுக்கு எவ்விதத்திலும் சேராத ஜகத்காரணத்வம் முதலிய குணங்களைச்சொல்லுகையாலே, அப்ப்ரகரணம் ப்ரஹ்மப்ரகரணமன்றியே கர்மப்ரகரணமாயிருந்தபோதிலும் இவ்விதமான லிங்கங்களைக்கொண்டு அங்குச்சொல்லப்பட்டவன் பரமேச்வரனே யென்று நிச்சயிக்கக்கூடும். சதருத்ரியில் முதலிலேயே, "நமஸ்தே ருத்ர மந்யவே" என்று சாஸ்த்ரங்களினாலும் பெரியோர்களினாலும் கழிக்கப்படுகிற ஹேயமாய கோபத்தையுடையவனைச் சொல்லுகையாலே, பரமேச்வரனுக்குக் கோபமில்லாமையாலே, அங்குச்சொல்லப்பட்டவன் பரமேச்வரனைக்காட்டிலும் வேறான ஜீவனே யாகவேண்டுமென்று சங்கிக்கவேண்டா. அங்கு "மந்யு" என்று கோபத்தைச் சொல்லுகிறதன்று, யஜ்ஞத்

தைச் சொல்லுகிறது. அப்படியே கோபத்தைச்சொன்னபோதிலும் துஷ்டஜநநிக்ரஹார்த்தமாகத் தன்னுடைய இச்சையினால் ஏற்றுக்கொண்டப்ரக்ருதியின் குணமான அக்கோபம் பரமேஸ்வரனிடத்தில் ஒட்டாததாகையால் அவ்வாக்யங்களும் பரமேஸ்வரனையே சொல்லக்குறையில்லை. இதிஹாஸ புராணங்களில் பலவிடங்களில் பலதேவதைகளைப் பரதேவதையாகச் சொல்லியிருந்தபோதிலும், அங்கங்குச்சொன்னகுணங்களெல்லாம் அவ்வவதேவதைகளுக்குச்சேராது. பரமேஸ்வரனுக்கே அக்குணங்களுள்ளவையாகையால், அவ்வவ் இடங்களில் ப்ரஹ்மவிஷ்ண்வாதிதேவதைகளைச்சொல்லுகிற சப்தங்களுக்கெல்லாம் அந்தந்ததேவதைகளுக்கு அந்தர்யாமியாயிருக்கிற பரமேஸ்வரனையே சொல்லிற்றென்றங்கீகரிக்க வேண்டுமாகையால் இப்படி ஸகலமான இதிஹாஸபுராணங்களும் ஜகத்காரணத்வ மோக்ஷப்ரதத்வம் முதலிய குணங்களையுடைய பரமேஸ்வரனையே சொல்லுகையாலே, அவைகளுக்குப் பரஸ்பரவிரோதமில்லையாகையால் அவற்றைக்கொண்டும் பரமேஸ்வரனே ஜகத்காரணமென்கிற அர்த்தத்தை நிஸ்சயிக்கக்கூடும். இப்படி சிலவிடங்களில் ஜீவனுக்கும், சிலவிடங்களில் ஜடத்துக்கும், சிலவிடங்களில் மற்றதேவதைகளுக்கும் காரணத்வம் சொல்லியிருந்தபோதிலும், அவ்வாக்யங்களுக்கெல்லாம் இவ்வத்யாயத்திற் சொல்லிய ந்யாயப்படியே அவற்றுக்கெல்லா மந்தர்யாமியான பரமேஸ்வரனிடத்தில் தாத்பர்யம் கல்பிக்கவேணுமென்று ஸித்தாந்தம். ௨௧.

முதல் அத்யாயம் முடிந்தது.

௨-ம் அத்யாயம் - ௧-ம் பாதம்.

௧௫. ஸுகது:கவ்யவஸ்தாதிகரணம் — இம் ஹேதுகாவதூயதிகரணத்தில், விசிஷ்டாத்வைதமாகிய இம்மதத்தில் பரமேஸ்வரனுக்கு மற்றவை சரீரமென்கையாலே, அப்படி பரமேஸ்வரனுக்குச் சரீரமொப்புக்கொள்ளில், சரீரமுள்ள ஜீவனுக்கு அந்தசரீரமடியாக ஸுகதுக்கங்களேற்படுகிறாப்போலே பரமேஸ்வரனுக்கும் ஸுகதுக்கங்கள் சரீரமடியாக ஒப்புக்கொள்ளவேணும். அப்போது ஜீவனென்றும் பரமேஸ்வரனென்றும் பேதம் கிடையாது என்று சங்கித்துக்கொண்டு, ஸுகதுக்கங்களுக்குச் சரீரம்காரணமன்று, அவனவனுடைய புண்ய பாபங்களே காரணமாம், பரமேஸ்வரனுக்கு அவையில்லாமையால் ஸுகதுக்கங்கள் கிடையாது என்று ஜீவனுக்கும் பரமேஸ்வரனுக்கும் பேதம் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வதிகரணத்தில், கார்யமும் காரணமும் ஒன்றேயென்று ஒப்புக்கொள்ளுகிற இம்மதத்தில் அசேதநமாகிய ஜகத்தும் பரமசேதநனாகிய பரமேஸ்வரனும் ஒன்றென்று ஒப்புக்கொள்ளவேணும், அப்போது பரமேஸ்வரனை ஜடமென்றாவது, ஜடமான ஜகத்தை அஜடமென்றாவது ஒப்புக்கொள்ளவேணும் என்று சங்கித்துப் பரிஹரிக்கிறார். ௧௬.

௧௭. ஸ்ரீமாவைகவஸ்யாதிகரணம்—ஸமஸ்தகாமபரிபூர்ணனான பரமேஸ்வரனுக்கு இந்த ஜகத்தைப்படைத்து இதனாலடையவேண்டிய ப்ரயோஜனமொன்றுமில்லாமையாலும், நிஷ்ப்ரயோஜநமான வ்யாபாரம் ஒருவனும் செய்யானாகையாலும், பரமேஸ்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்பது சரியன்றென்ற சங்கைக்கு ஸமாதாநமாவது - லோகத்தில் அதிக துன்பமடைந்தவன் அழுகிறான். அவ்வழுகையினால் ஒருப்ரயோஜநமும் கிடையாது, அதுபோலவே பரமேஸ்வரன் அபரிமிதாநந்தமுடையவனாய் அவ்வாநந்தத்துக்குப் போக்குவழியாக அநேக விசித்ரமான இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான். மேலும் ஜநங்கள் நிஷ்ப்ரயோஜநமாகவே கண்ணில் இமைகொட்டுகிறார்கள். ஒருவன் பாடும்போதும் ஒரு அர்த்தவிசேஷம்

களைச்சொல்லும்போதும் சிலர் தலையை யசைக்கிருர்கள், சிலர் கைகளையும் விரல்களையுமாட்டுகிருர்கள். அவற்றினுல் ஒருப்ரயோஜநமுமில்லை. ஆயினும் அது ஜனங்களுக்கு ஸ்வபாவமாக உள்ளது. அதுபோலவே பரமேஸ்வரனுக்கும் ஸ்ருஷ்டிக்க ஸ்வபாவமாயிருக்குமென்று. ௩௩.

(௩௪) பரமேஸ்வரன் பரிபூர்ணனுகையால்ராகத்வேஷாதிகளற்றவனும் ஸகல ப்ராணிகளையும் ஸமமாகப் பார்க்கவேண்டியிருக்க, அப்படியன்றிக்கே, சிலரிடத்தில் ப்ரீதியையும் சிலரிடத்தில் கோபத்தையும்வைத்து அவ்வவர்களை உயர்ந்த ஸுகமுடைய தேவாதி ஜாதியிலும் மஹாகோரதுக்கமுடைய பசு பக்ஷிமுதலிய ஜாதியிலும் ஸ்ருஷ்டிப்பது அநுசிதம். அனைவரையுமொரேகாலத்தில் ஸம்ஹாரம் செய்வது தயையுள்ளவனுக்குச் சேராதாகையால் பரமேஸ்வரன் ஸ்ருஷ்டிக்கிருனென்பது அநுசிதம் மேலும், அனைவரையு மொரேகாலத்தில் ஸம்ஹாரம்செய்வது தயையுள்ளவனுக்குச் சேராது ஆகையால், இதனுல் பரமேஸ்வரன் நிர்த்தயனென்றும் ஏற்படுவான். இவ்விதமான தோஷங்களுண்டாகையால் பரமேஸ்வரன் ஸ்ருஷ்டிக்கிருனென்பது அநுசிதம். என்று பூர்வபக்ஷம்—ஜீவர்களுக்கு இந்தஸம்ஸாரத்தில் பிறப்பிறப்புகள் அவரவர்களுடைய கர்மாநுகுணமாயிருக்கும். பரமேஸ்வரன், எவனெவனுக்கு எந்தெந்தகாலங்களில் எவ்விதமான ஸுகதுக்கங்களை யநுபவிக்கைக்குத் தக்க புண்யபாபங்களிருக்குமோ,அதையெல்லாமாராய்ந்து அதுக்குஅநுகுணமான ஜன்மத்தைக்கொடுக்கிருன்.—ஆகில், கர்மமே ஸம்ஸாரத்துக்கு ஹேதுவாயிருக்க ஈஸ்வரனை யொப்புக்கொள்ள ப்ரயோஜநமென்னென்னில்; கர்மமென்பது அசேதனமாகையால்,ஜ்ஞாநவானுகிய ஒருவனிருந்து நடப்பியாவிடில் அதுநடவாது ஆகையால் அதற்காகவே ஈஸ்வரனை யங்கீகரிக்கவேணும். ஆகில் இதனுல், கர்மத்தினுல் ஒன்றும்செய்யமுடியாதென்றும் ஈஸ்வரனே ஸ்ருஷ்டிக்கிருனென்றும்ஏற்பட்டது. இப்போது முன்சொன்ன தோஷங்களுக்கு என்னஸமாதாநமென்னில்; கர்மங்கள் ஜகத்ஸ்ருஷ்டிக்குரிய சக்தியையுடையவைகளாகின்றன. அவற்றையே ஈஸ்வரன் அவ்வவ காலதேசங்களுக் கநுகுணமாக்கிவைக்கிருன். இவ்வளவு மாத்ரத்தினுல் அவன் பக்ஷபாதியாகமாட்டானென்றது— இப்படி அக்கர்மங்களை ஈஸ்வரன் நடத்தாவிடில் ஸ்ருஷ்டி உண்டாகப்போகிறதில்லை. அப்போது ஜீவர்கள் சரீரசூன்யராய் அதடியாக நேரிடும் துன்பமுமின்றியே ஸ்வாபாவிகமான ஆநந்தையநுபவித்து கொண்டிருப்பார்கள். அப்படியிருக்குங்காலத்தில், ஈஸ்வரன்தானே அவரவர்களுடைய கர்மங்களை நடத்தி ஸம்ஸாரத்தையுண்டுபண்ணுகிருன். இப்படியாயிருக்க ஈஸ்வரனுக்கு முன்சொன்ன தோஷங்கள் கழியும்வகை யென்னென்னில்; ஜீவர்களுக்குப் புண்யபாப ரூபமான கர்மம் அநாதியாயிருக்கிறது. அக்கர்மமுள்ளவரையில் தத்வஜ்ஞாநமும் அம்மூலமான மோக்ஷமுமுண்டாகமாட்டாது. அக்கர்மங்களும் அநுபவித்தே கழியவேணுமன்றி மற்றொருபடி கழியவகையில்லை. இதைக் கண்டுபரமகாருணிகனுன பரமேஸ்வரன் ஜீவன்களுக்கு சீக்கிரத்தில் அக்கர்மங்களைக் கழித்து மஹாநந்தரூபமான மோக்ஷத்தை யளிக்கக்கருதி அவ்வவகர்மாநுபவாநுகுணமாக சரீரங்களைக் கொடுக்கிருன். அதைக்கொண்டு ஜீவன்கள் அக்கர்மங்களை யநுபவித்துக்கழித்தபின் அவர்களுக்கு தத்வஜ்ஞாநத்தையுண்டாக்கி மோக்ஷத்தையடைவிப்பிக்கிருன் ஆகையால் அவன் பரமகாருணிகனென்னத்தட்டில்லை—

ஆகில், அனைவர்க்கும் ஒரேகாலத்தில் அக்கங்களையநுபவிப்பித்து அப்போதே என் மோக்ஷத்தை யடைவிப்பிக்கக் கூடாதென்னில்; அவன் எல்லாரிடத்திலும் ஒரே விதமான அநுக்ரஹத்தைப்பண்ணி ஜன்மத்தைக்கொடுக்கிருன். அதில் சிலருடைய கர்மம் சீக்கிரத்தில் கழிந்துவிடுகிறது, சிலருடைய கர்மம் சிலகால் கழித்துக் கழிகிறது. இதற்கு த்ருஷ்டாந்தம் - ஸூர்யன் தன்கிரணங்களை எல்லாவிடங்களிலும்

ஒரேமாதிரியாகப் பரவச்செய்தபோதிலும் அதினால், பக்வமான சிலதாமரைப் பூக்கள் உடனே மலர்ந்துவிடுகின்றன. காயாயிருக்கிற தாமரைப்பூக்கள் அப்போதே மலராமல் க்ரமக்ரமமாகப் பக்வமாய் சில காலம் கழிந்து மலருகின்றன. இதனால் ஸூர்யனுக்கு ஒருபக்ஷபாதமும் ஏற்படமாட்டாது. அதுபோலவே ஈஸ்வரனும் பக்ஷபாதமின்றியே பரமகாருணிகனாய்க்கொண்டே ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்பது ஸித்தம். கடைசியில் ஸம்ஹாரம்செய்வது, ஜீவன்கள் பஹுகாலம் ஸம்ஸாரதுக்கத்தை யநுபவித்து வருந்தியிருக்கும் காலத்தில் இவர்கள் வருத்தத்தை மட்டப்படுத்து கைக்காகத் தன்கருணையால் ஸம்ஹாரம்செய்கிறான். இந்தஸம்ஹாரமானது பகலெல்லாம் வேலைசெய்து வருந்தினவன் அவ்வருத்தமற இரவில் உறங்குவது போலாயிருக்கும். ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களின் தத்வமிவ்விதமாகையால், பரமேஸ்வரனுக்குப் பக்ஷபாதமும் நிர்த்தயத்வமுமாகிற துர்க்குணங்கள் ஏற்படமாட்டாதென்று ஸித்தாந்தம். ௩௮.

௧௯-வது ஸூத்ரமான "நகஉூரவிஹாமாதி திவெவஹோவஹுஹ)வெதவஸ வூ)ஃவெவஸ)வெதவ" என்கிற ஸூத்ரம் மற்ற எல்லா பாஷ்யங்களுக்குமுண்டு. இந்தபாஷ்யத்தில் அச்சிட்ட புஸ்தகத்தில் அந்த ஸூத்ரமும் அதினுடைய பாஷ்யமும் காணவில்லை. இதை அச்சிட்டவர், இந்த ஸூத்ரம் பழைய ஓலைப்புத்தகங்களிலெங்கும் காணவில்லையென்றெழுதியிருக்கிறார். அந்த ஸூத்ரத்திற் சொல்லுகிற சங்கையும் ஸமாதானமும் இந்த பாஷ்யத்துக்கும் அவஸ்யம் வேண்டியதாயேயிருக்கிறதாகையால் இதற்கு பாஷ்யமும் செய்தேயிருக்கவேண்டும். மற்று எவ்விடங்களிலும் அவ்வர்த்தங்களைச் சொல்லவுமில்லை. ஆகையால் புத்தகம் எழுதினவர்களுடைய அஜாக்கிரதையினால் அந்த ஸூத்ரமும் பாஷ்யமும் விட்டுப்போயிருக்கலாமென்று தோற்றுகிறது.

௨-ம் அத்யாயம் ௧-ம் பாதம் முடிந்தது.

௨-ம் பாதம்.

௧௫. வாஸுஷவதாயிகஸணு—இந்த ஜகத்துக்கு உபாதாநகாரணமும் நிமித்தகாரணமுமாகிய இரண்டும் பரமேஸ்வரனே யென்று ஸ்ருதியில் சொல்லியிருக்க, அதின் தாத்பர்யத்தை யறியாத சிலபாசுபதாகமநிஷ்டர்கள், பரமேஸ்வரன் ஜகத்துக்கு நிமித்தகாரணமேயாகிறானல்லது உபாதாநகாரணமாகான்என்று சொல்லுகிறார்கள். அந்தபாசுபதாகமைகதேசிகளுடைய மதத்தை இவ்வதிகரணத்தில் நிரஸநம் செய்கிறார்—பரமேஸ்வரனை ஜகத்துக்கு உபாதாநகாரணமாக ஒப்புக்கொள்ளில், கடத்துக்கு உபாதாநகாரணமாகிய மண் தன்னுடைய பிண்டாகாரமான உருவமழிந்து கடமாவதுபோல், பரமேஸ்வரனும் தன்னுருவத்தை யழித்துக்கொண்டே ஜகத்ரூபியாகப் பரிணமிக்கவேணும். அப்பொழுது, பரமேஸ்வரன் அவிகாரி அழிவற்றவன் என்கிற ஸ்ருதி ஸ்ம்ருதிமுதலிய ப்ரமாணங்களோடு விரோதிக்கும் ஆகையால் பரமேஸ்வரன் ஜகத்துக்கு உபாதாநகாரணமாகமாட்டான், நிமித்தகாரணமாத்ரமேயாகிறானென்று பூர்வபக்ஷம்—பரமேஸ்வரனை அவிகாரியென்றும்அழிவற்றவனென்றும் எந்தஸ்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றனவோ, அவையே, ஜகத்துக்கு உபாதாநகாரணமும் பரமேஸ்வரனே யென்று சொல்லுகிறது. ஆகையால் அந்த ஸ்ருதிஸ்ம்ருதிகளுக்கு விரோதமின்றியே அதில் சொன்னப்ரகாரம் பரமேஸ்வரனை ஜகத்துக்கு இருவகையான காரணமாகவு மங்கீகரிப்பதே உசி

தம். இவ்வர்த்தத்தையே சிவாகமத்தில் வாயுஸம்ஹிதை முதலான க்ரந்தங்களில் சொல்லுகிறது, இப்படி பகுச்ருத ஸம்மதமான அர்த்தத்தைவிட்டு சிவாகம கிரந்தங்களில் அவ்வாகமத்தின்அபிப்பிராயமறியாதசிலர் சொன்னபூர்வபக்ஷார்த்தத்தை உண்மையென்றுகொள்வது சரியன்று என்று சிலர்வாக்யானம் செய்தார்கள். அதுவும் சரியன்று. ஏனென்னில்; வேதத்துக்கும் சிவாகமத்துக்கும் பேதமிடையாது. இரண்டையும் செய்தவன் பரமசிவனே. ஆகையினால்தான் வேதத்தையும் சிவாகமமென்றே பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அதில் வேதமென்கிற சிவாகமத்துக்கு அதிகாரிகள் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்யர்களே யாவர்கள், மற்றொருஜாதியார் அதிகாரிகளன்றென்றும், மற்றொரு சிவாகமத்துக்கு எல்லாஜாதிகளும் அதிகாரிகளென்றும் இவ்வளவே பேதமுள்ளது. அர்த்தங்களில் பேதமில்லை. வேதம் சிவாகமம் என்கிற இரண்டு க்ரந்தங்களிலும். சிவபஞ்சாக்ஷரி முதலிய மந்த்ரங்களையும், பசு பாசம் முதலிய பதார்த்தங்களையும், பஸ்மத்தை உடம்பெங்கும் பூசிக்கொள்ளுகை, த்ரிபுண்ட்ரம்தரிக்கை, லிங்கபூஜநம் செய்கை, ருத்ராக்ஷமணிகை முதலிய ஆசாரங்களையும் ஒரேவிதமாகவே சொல்லியிருக்கிறது. ஆகையால் சிவாகமத்தில் வேதவிருத்தார்த்தங்களைச் சொல்லவேயில்லை. ஆனால் இவ்வதிகரணத்தில் எந்தமதம் நிரஸநம் செய்யப்படுகிற தென்னில்; ஹிரண்யகர்ப்பனாகிய ப்ரஹ்மா ஆதியில் ப்ரவர்த்திப்பித்த யோகசாஸ்த்ரத்தியில் பரமேச்வரனை ஜகத்துக்கு உபாதாந காரணமன்றென்றும் நிமித்தகாரண மாத்ரமேயாகிறானென்றும் சொல்லியிருக்கிறது. அம்மதத்தை இவ்வதிகரணத்தில் நிரஸநம் செய்கிறார் என்று நீலகண்டாசார்யர் வ்யாக்யாநம் செய்கிறார். ௪௰.

௪௧. உத்பத்த்யதிகரணம்— பாஞ்சராத்ராகமம் வாஸுதேவனால் செய்யப்பட்டது. அதில் ஜீவன் உண்டாகிறானென்று சொல்லியிருக்கிறது. அது சரியா அன்றா என்று விசாரிக்கில்; வாஸுதேவனென்பவர் ப்ரஹ்மா முதலிய மற்ற தேவதைகளைக்காட்டிலும் சிறந்தவர். அவர்சொன்ன அர்த்தம் பொய்யாயிராது. ஆகையால் அதைப்ரமாணமாக ஒப்புககொண்டு அதில் சொன்ன ஜீவோத்பத்தியை சரியன்றே அங்கீகரிக்கவேணுமென்று பூர்வபக்ஷி சொன்னான்— ஜீவனுக்கு உத்பத்தியொப்புக் கொள்வது சரியன்று. ஜீவன் உண்டாகிறானென்று ஒப்புக்கொள்ளில்; அவன் உண்டான உடனே ஒரு ஜந்மத்தையெடுத்து அந்த ஜன்மத்தில் ஸுகதுக்கங்களை யநுபவிக்கும்போது அந்த ஸுகதுக்கங்களுக்குக் காரணமாகிய புண்ய பாபங்களை இதற்கு முன்பு இவன் செய்யாமையால், அப்படி புண்யபாபங்களாகிய காரணமின்றிக்கே ஸுகதுக்கங்களுண்டாகிற தென்றும் ஒப்புக்கொள்ளவேண்டிவரும். அப்போது காரணமின்றியே கார்யமுண்டாயிற்றதாம். அதையுமொப்புக் கொள்ளில், ஒருவனைப்போலவே மற்றவர்களும் ஸுகிகளாகவாவது துக்கிகளாகவாவது இருக்கவேணுமேயல்லது, ஒருவன் ஸுகியாகவும் மற்றவன் துக்கியாகவும் இருக்கைக்கு ஒருயுக்தியையும் காண்கிறோமில்லை. மேலும் எது உண்டாகிறதோ, அதுக்கு நாசமுமுண்டு, ஜீவன் உண்டானால் அவன் நாசத்தையடைகிறானென்றும் சொல்லவேணும் அவன் நாசத்தை யடைவதற்கு முன் ஜந்மத்தில் பண்ணின புண்ய பாபங்களை அவன் நசித்தபின் யார் அநுபவிப்பார்? அப்புண்ய பாபங்கள் நிஷ்பலமாயே யொழியும், மேலும், வேதத்திலும் மற்ற ஸ்ம்ருத்யாதிகளிலும் ஜீவாத்மாவை நித்யமாகச் சொல்லியிருக்கிறது. அவற்றோடும் விரோதம் ப்ரஸங்கிக்கும் இவ்விதமான தோஷங்களுண்டாகையால் பாஞ்சராத்ராகமத்தை ப்ரமாணமாக்கிக் கொள்ளக்கூடாதென்கிறார். ௪௧.

௪௨. ஜீவனுண்டாகிறானென்கிற வாக்யத்துக்குவேறு ஏதாவதொரு அர்த்தம் கல்பித்து பாஞ்சராத்ரத்தில் ஜீவோத்பத்தி சொல்லவில்லை யென்று மேற்சொன்ன

தோஷங்களைப் பரிஹரித்தபோதிலும், அதில் வேதவிருத்தமான மற்றும் அனேகமர்த்தமுண்டு. அதாவது—வேதத்தில் பரமேஸ்வரனைக் காரணமாகச் சொல்லிற்று. பாஞ்சராத்ராகமத்தில் வாஸுதேவனை ஜகத்காரணமாகச் சொல்லிற்று. மேலும் மோக்ஷத்தைக் கொடுப்பவன் பரமசிவனென்று வேதத்தில் சொல்லியிருக்க, அதற்குநேர் விருத்தமாக வாஸுதேவனை மோக்ஷப்ரதனாகச் சொல்லிற்று. வேதவிருத்தமான தப்தமுத்ராதாரணத்தையும் சொல்லிற்று. இப்படி இவ்வாகமம் நேராக் வேதவிருத்தமாகையால் இதில் சொல்லுகிற வர்த்தத்தை உண்மையாகக் கொள்ளக்கூடாது. மேலும் "வாஸுரா தெத்ரு வவேளவெ" என்று தடங்கி, "ஷவ தஸுாா ஹணாயபோ:" என்னுமனவாயுள்ள ஸ்லோகத்தில், பாஞ்சராத்ராகமத்திலும் பௌத்த மதத்திலும் ப்ரவேசித்து நீங்கள் தீக்ஷைபெற்றிருக்கிற படியினால், நீங்கள் ப்ராஹ்மண ஜன்மத்தையிழந்து நீசராகப் போகக்கடவீர் என்று அநேக இடங்களில் பாஞ்சராத்ரத்தில் தீக்ஷை பெற்றவனை நிந்தித்திருக்கையாலும் அவ்வாகமம் அப்ரமாணமாகிறது.

இரண்டாம் அத்யாயம். இரண்டாம் பாதம் முடிந்தது.

௩-ம் பாதம்.

கூ. ஜ்ஞாதிகரணம்—கீழ் அதிகரணத்தில் ஜீவன் பிறப்பு இறப்புகளற்றவனாய் நித்யமாயுள்ளவனென்று சொல்லப்பட்டது. இவ்வதிகரணத்தில், அவனுக்குள்ள ஜ்ஞானமென்கிற குணம் ஸ்வாபாவிகமா. அல்லது வந்தேறியாவென்று விசாரிக்கப்படுகிறது. "ஜ்ஞாஜ்ஞள" என்ற ஸ்ருதி, ஈஸ்வரனை "அஜ்ஞ" என்று ஜ்ஞானமுள்ளவனாகவும், ஜீவனை, "அஜ்ஞ" என்று ஜ்ஞானமற்றவனாகவும் சொல்லுகையாலே ஜீவனுக்கு ஸ்வாபாவிகமான ஜ்ஞானம் கிடையாது. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால், தானல்லாத தேவ மநுஷ்யாதி சரீரங்களில் தானென்ற புத்தியைப்பண்ணி அஹங்காரத்தையடைந்து அஜ்ஞனாய் ஸம்ஸாரியாய்க்கிடக்கிறானாகையால் ஸம்ஸாரதசையில் இவனுக்குஜ்ஞானமில்லை. எப்போதும் ஜ்ஞானமிருந்ததாகில் ஸம்ஸாரதசையென்றும் முக்திதசையென்றும் இரண்டுதசையில்லாமல் போய்விடும். அதற்காக ஸம்ஸாரதசையில் ஜ்ஞானங்கிடையாதென்றும் முக்திதசையில் ஜ்ஞானமுண்டாகிறதென்றும் ஒப்புக்கொள்ளவேணும். இதனால் இவனுக்கு ஜ்ஞானம் ஸ்வாபாவிகமன்றென்று நிஸ்சயிக்கப்படுகிறதென்று பூர்வபக்ஷம்—வேதங்களில் ஜீவனை நிரூபித்துச் சொல்லுகிற இடங்களிலெல்லாம் "எவனொருவன் இந்த சரீரத்திற்குள்ளிருந்து தன்னுடைய இந்த்ரியங்களினால் விஷயங்களை யறிகிறானோ, அவனே ஜீவன் என்று ஜீவனுக்கு ஜ்ஞானமென்பது ஸ்வாபாவிகமான குணமென்றே சொல்லிற்று. ஸம்ஸாரதசையில் ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் உள்ளுள்ள ஆத்மஸ்வரூபத்தை யறியாமல் மேலுள்ள சரீராதிகளையே அறிகிறான். ப்ரஹ்மோபாஸனத்தினால் தனக்குப்ரக்ருதி ஸம்பந்தம் கழிந்து. பின்பு, தன்னிடத்தில் ஸ்வாபாவிகமாயுள்ள ஜ்ஞானமென்ற குணம் ப்ரகாசிக்கிறது. அவ்வளவே யல்லது அப்போது புதிதாக உண்டாகிறதில்லை. ஸ்ருதியிற் "அஜ்ஞ" என்றபதம் ஜீவனுக்கு ஜ்ஞானமில்லையென்று சொல்லவில்லை. ஈஸ்வரன் ஸர்வஜ்ஞனென்றும், ஜீவன் ஸம்ஸாரதசையில் சிலவற்றையே யறிகிறான் எல்லாவஸ்துக்களையும் அறிகிறதில்லையென்றுமே சொல்லிற்று. ஜ்ஞானத்தினுடைய விகாஸந்தான் முக்தியெனப்படும் ஆகையால் ஜீவனுக்கு ஜ்ஞானமென்பது ஸ்வாபாவிகமாக குணமேயென்று வித்தாந்தம். ௧௧.

௪-ம் பாதம்.

ககூ. ஸம்ஜ்ஞாமூர்த்திக்ல்ருப்த்யதிகரணம் — கீழ், ஆகாசாதி பூதங்களும் இந்த்ரியங்களும் அவற்றுக்கு அதிஷ்டாந தேவதைகளும் பரமேஸ்வரனிடத்தில் நின்று முண்டாயிற்றென்று சொல்லப்பட்டது. இதில், தேவமநுஷ்ய பசுபக்ஷி கடபடாத்யாகாரங்களும் அவ்வநாமங்களும் ஆகிய இவற்றுக்குப் பரமேஸ்வரனே காரணமா, அல்லது மற்றொரு ப்ரஹ்மவிஷ்ணுவாதிகளிலொருவராவென்று விசாரிக்கப்படுகிறது.—"[illegible]" இத்யாதி ஸ்ருதிகள், ஆதியில் தேஜஸ்தத்வத்துக்கபிமாநியான பரமேஸ்வரன் ஜலத்தை ஸ்ருஷ்டித்தான், பின்பு அந்த ஜல தத்வத்துக்கபிமாநியான நாராயணன் ப்ருதிவியை ஸ்ருஷ்டித்தான். அதன்பின் ப்ருதிவீதத்வாபிமாநியான ப்ரஹ்மா, இவ்வண்டத்துக்குட்பட்ட வஸ்துக்களையும் அவற்றின் நாமதேயங்களையும் படைத்தான் என்று சொல்லுகின்றன. விஷ்ணுவுக்கு நாராயணனென்று பெயர் வருகைக்கும் கீழ்ச்சொன்னதேஹேது. அதாவது—நரனென்று பரமேஸ்வரனுக்குப் பெயர், அவனால் படைக்கப்பட்டவை நாரங்கள், அவையாவன— ஜலங்கள். அந்த ஜலத்தை ஸ்தானமாகக்கொண்டு அதற்கு அபிமாநி தேவதையா யிருக்கையால் விஷ்ணுவுக்கு நாராயணனென்று பெயராயிற்று. "[illegible]" இத்யாதியான மற்றொருஸ்ருதி நாராயணனிடத்திலிருந்தே இந்தப்ரஹ்மாண்டத்துக் குள்ளடங்கிய வஸ்துக்களெல்லா முண்டாயிற்றென்று சொல்லுகிறது. ஆகையால், ப்ரஹ்மவிஷ்ணுக்களிலொருவரே இவ்வஸ்துக்களின்நாமரூபங்களுக்குக் கர்த்தாவாகிறதாக நிஸ்சயிக்கவேணுமென்று பூர்வபக்ஷம்— "[illegible]" என்று தொடங்கி பஞ்சபூதங்களுக்கும் பரமேஸ்வரனே காரணமென்றும், அவனே ஆதியில் பஞ்சபூதங்களையும் ஸ்ருஷ்டித்து அவற்றைத்தானே பஞ்சீகரணம் பண்ணி, பின்பு அதைக்கொண்டு தானே இவ்வண்டத்தையும் இதற்குள்ளுள்ள வஸ்துக்களுடைய நாமரூபங்களையும் படைத்தானென்று சொல்லுகிறது. இதனால் பஞ்சீகரணம் பண்ணினவனே நாமரூபங்களைப் பண்ணினனென்று தோற்றுகிறது. ஆதியில் பஞ்சீகரணம்பண்ணி, அதைக்கொண்டு அண்டத்தை ஸ்ருஷ்டித்தபின் அவ்வண்டத்துக்குள் ப்ரஹ்ம விஷ்ணுக்களுண்டானவர்களாகையால் அதற்கு முன்செய்யப்பட்ட பஞ்சீகரணமென்பது ப்ரஹ்ம விஷ்ணுக்களால் செய்யமுடியாது. ஆகையால் நாமரூபங்களுக்குக் கர்த்தா பரமேஸ்வரனே யென்பது ஸித்தாந்தம். கக

ங-ம் அத்யாயம். க-ம் பாதம்.

ங-ம் அத்யாயம் ங-ம் பாதம்.

உகூ. [illegible]— இந்த பாஷ்யத்துக்கு "[illegible]" என்ற ஸூத்ரத்திற்குப்பிறகு "[illegible]" என்ற ஸூத்ரமும், இதற்குப்பின்; உ௦. "[illegible]" என்ற ஸூத்ரமு பாடமாயிருக்கும். இதில் முதல் ஸூத்ரத்தின் தாத்பர்யம் - இந்த சரீரத்தினின்றும் ஜீவன் வெளிக்கிளம்பும் பொழுதே, அவனுக்கு ஸம்பந்தமான புண்ய பாப ரூபகர்மங்கள் நசித்துவிடுகின்றன. அதன்பின் ஸூக்ஷ்ம சரீரம் மாத்

ரம் இருக்கிறது. சரீரமில்லாமல் தேசாந்தரம்போக முடியாதாகையால் முக்தியை யடைகிற ஜீவன் இங்கிருந்தும் புறப்பட்டு விரஜையென்கிற ஆறுவரையில் போய்ச் சேருகைக்காக அந்த சரீரம் ஒப்புக்கொள்ளவேணும். புண்யபாபங்கள் நசித்தபின், அப்புண்யபாபங்கள் மூலமாகவந்த ஸூக்ஷ்ம சரீரந்தானெப்படி யிருக்குமென்னில்; முதல் பிடித்து இவ்வளவு காலம் அந்த ஸூக்ஷ்மசரீரம் புண்ய பாப மூலமாக இருந்தபோதிலும்; ப்ரஹ்மோபாஸநம் செய்தவன் மரித்தபின் அவனுடைய ஸூக்ஷ்மசரீரம் அந்த ப்ரஹ்மோபாஸநத்தின் மஹிமையினாலேயே இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளவேணும். வேதத்திலும் "ஸஸ்வராட்பவதி" என்று தொடங்கி, ஜீவன் முக்தியை யடைந்தானாகில் அவனுக்கு ஸகலகர்மங்களும் விட்டுபோகிறது, அவன் யதேச்சமாக எல்லா லோகங்களிலும் போய்ஸஞ்சரிக்கிறான் என்று. கர்மமழிந்த பின்பும் சரீரமெடுத்துக்கொண்டு வித்யாமாஹாத்மயத்தினால் ஸஞ்சரிக்கிறானென்று சொல்லிருக்கிறது. அதுபோலவே, இச்சரீரம் கழிந்தபின்வித்யாமாஹாத்ம்யத்தினால் ஸூக்ஷ்ம சரீரத்தை மாத்திரம் நிறுத்திக்கொண்டு அதுமூலமாக சிவலோகம் போய்ச் சேருகிறான் என்று ஏற்படுகிறது. லோகத்திலும், ஒருமஹாராஜனை யாச்ரயித்தவன், அம்மஹாராஜனுடைய அநுக்ரஹபலத்தினால், மற்றொருவர்களுக்குப் பெறத்தகாத நாநாவிதமான போகங்களை யநுபவிக்கிறான். அதுபோலவும், இந்த ஜீவனுக்கு பரமேச்வரனுடைய அநுக்ரஹ பலத்தினால் ஸூக்ஷ்மசரீர மிருக்கிறதென்று கண்டு கொள்க என்று பூர்வபக்ஷம். ௨௧.

௩௦. இரண்டாவது ஸூத்ரத்தின் தாத்பர்யம்—சரீரவியோக காலத்திலேயே ஸகலகர்மங்களும் நசிக்கிறதென்பது சரியன்று. அப்படிநசிக்குமாகில் அந்த ஜீவனுக்கு இங்கேயே முக்தி சேரிட்டிருக்க அர்ச்சிராதிவழியாகப்போய் சிவலோகம்சேரவேண்டியது அநாவச்யகம். வேதத்தில், "பரம்ஜ்யோதி ரூபஸம்பத்ய" என்றுதொடங்கி, ஜீவன் அர்ச்சிராதி வழியாகப்போய் பரம்ஜ்யோதி ஸ்வரூபியாகிய பரமசிவனையடைந்து கர்மத்தைக்கழித்து ஸ்வஸ்வரூபத்தை யடைகிறானென்று சொல்லியிருக்கிறது. இங்கே கர்மங்கழிந்ததாகில் அந்த ச்ருதியிற்சொன்னது சரிப்படாது. ஸ்வஸ்வரூபத்தை யடைகையாவது - அநாதிகாலமாக அவித்யையினால் மறைந்து கிடந்த புத்தி, ஜீவன் முக்தியையடைந்தபின் அவ்வவித்யை கழிந்து அதினால் மறைவற்று எல்லா வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றுகிறது. இதுக்கே விகாஸமென்று பெயர். இவ்விதமானபுத்தி விகாசமாகிறஸ்வஸ்வரூபத்தை யடைகை விரஜாநதிக்கப்புறம் சென்று சிவலோகத்தை யடைந்தபின் சேருகிறதென்று ச்ருதி சொல்லுகையாலே அதுவரையில் அக்கர்மமிருக்கிறதென்றே அங்கீகரிக்கவேண்டும். பரமேச்வர ஸங்கல்பத்தினாலேயே அவ்வவித்யை இந்தசரீரம் கழிந்த உடனே கழியாமல் விரஜைக்குப்போகும்வரையில் இருக்கிறதென்று சொல்லி புண்யபாபங்கள் மாத்திரம் இங்கே நசிக்கிறதாக ஒப்புக்கொள்ளலாமேயென்னில்; பரமேச்வர ஸங்கல்பமும் புண்யபாபாதி கமேயேயிருக்கும். அவைகழிந்தபின் தத்பரயுக்தமான பரமேச்வர ஸங்கல்பந்தான் எப்படியிருக்கும். ஆகையால் விரஜாநதிக்குப்போகும்வரையில் புண்யபாபங்களிருக்கிறதென்றே ஒப்புக்கொள்ளவேணும். இழ் பரமசிவனையடைந்தபின் கர்மங்கழிந்து ஸ்வஸ்வரூபத்தை யடைவதாகச் சொல்லிற்று; இங்கே விரஜைக்குப் போகும்வரையில்தான் கர்மமிருக்கிறது. பின்பு கழிந்துவிடுகிறதென்றுசொல்லிற்று. இவ்விரண்டும் எப்படி சேருமென்னில் விரஜையென்பது இந்த ஸம்ஸார மண்டலத்துக்கும், பரமாகாசமென்று சொல்லப்படுகிற சிவலோகத்துக்கும் நடுவிலிருக்கிறது. அதையடைந்தால் ஸம்ஸாரம் கழிந்துவிடுகிறது. மேலுள்ளது சிவலோகமாயிருக்கும். ஆகையால் இரண்டுக்கும் விரோதமில்லை. விரஜையென்பது விஷ்ணு ஸம்பந்தியானநதி. யோகிகள் அதில் முழுகி அதினால் ஸகல

கர்மங்களையும்விட்டு அதின் மேலுள்ள சில் லோகத்தை யடைகிறார்கள் என்று விஸ்தாரம். ௧௦.

௪-ம் அத்யாயம் ௧-பாதம்.

௧௦. ஆவ்ருத்யதிகரணம். இதில் ப்ரஹ்மோபாஸநம் ஒருகால் செய்தால் போருமா, அல்லது ஜீவித்திருக்குமளவும் செய்யவேணுமாவென்று விசாரிக்கப்படுகிறது— "பாஹி தாங் ஞ் ஸ்ரிவ தநம்" என்று தொடங்கிவேதங்களில் பலவிடங்களிலும், ஓ ருத்ரனே! உன்னுடைய நிரதிசயாநந்தரூபமான சரீரத்தினால் எங்களுடைய ஸம்ஸார பீஜமான புண்ய பாபங்களைப்போக்கி எனக்கு மிகவும் ப்ரகாசிக்கக்கடவாய் என்று உபாஸகர்கள் ப்ரார்த்திப்பதாகச் சொல்லுகிறது. இப்படி மிகவும் ப்ரகாசிக்கை, அல்பகால முபாஸநத்தினால் ஸித்தியாது ஆகையால் யாவதாயுஷம் செய்யவேணுமென்று விஸ்தாரம். ௧௨.

௧௩. அக்நிஹோத்ராத்யதிகரணம்— இதில், அக்நிஹோத்ராதி கர்மங்கள் சரீரமிருக்குமளவும் செய்யவேணுமா, சில நாள் செய்தால் போருமாவென்று விசாரிக்கப்படுகிறது. அக்நிஹோத்ராதி கர்மங்களெல்லாம் சிலநாள் செய்தால் போரும். அவ்வளவிலேயே மநஸ்ஸு நிர்மலமாய் உபாஸநம் உண்டாய்விடும். "பகுகாலம் செய்தாலும் அதினாலுண்டாகிற புண்யம் அழிந்துவிடுகிறதென்று சொல்லுகையால் செய்தும் உபயோகமில்லை உபயோகமில்லாததை ஒருவனும் செய்ய விரும்பான் என்று பூர்வபக்ஷம்— வேதத்தில் " தமேதம் வேதாநுவசநேந " என்றுதொடங்கி,வேதபாடம் யஜ்ஞம் தாநம் தபஸ்ஸு அநசநம் முதலியவை யாவதாயுஷம் செய்யவேணுமென்கையாலே கர்மங்களெல்லாம் சரீரமுள்ளவரையில் செய்ய வேணுமென்று விஸ்தாரம். வேதபாடமாவது - பரமேஸ்வர ப்ராப்தி ஸாதநமான ப்ரம்ஜ்ஞாநத்துக்குஹேதுவாய், அத்யாத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிற வேதமந்த்ரங்களை ஆவ்ருத்திசெய்கை. சதருத்ரீ, கைவல்யோபநிஷத்து, முண்டகோபநிஷத்து முதலானவற்றில் பரமேஸ்வரனான ஸதாசிவனுடைய நாமங்களைச் சொல்லவே பாபங்கள் கழியுமென்கையாலும், வேத மந்த்ரங்களெல்லாம் பரமேஸ்வர ப்ரதிபாதகங்களாகையாலும், அவற்றை ஜபம்செய்கை முக்தி ஹேதுவாயிருக்கும் இப்படியே யாகாதிகளையும் கண்டுகொள்க. ௧௧.

இவ்வழியாகவே மற்ற ஸூத்ரங்களுக்கும் அர்த்தம் கண்டுகொள்ளவேணும்.

இம்மதப்ரக்ரியையாவது—ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் என்று மூன்று தேவர்களே இந்த ப்ரஹ்மாண்டத்தில் இந்த்ராதி மற்றதேவர்களைக்காட்டிலும் சிறந்தவர்கள். அம்மூவரில் கடைசியில் சொல்லப்பட்ட ருத்ரனென்பவன் "த்ருஹிணஸூநு பாணீ ஸ்தோஜாயத" சூலமென்கிற ஆயுதத்தைக்கையிலுடைய முக்கண்ணனான ருத்ரனென்கிற புருஷன் ப்ரஹ்மாவினிடத்தில்நின்று முண்டானானென்ற வேதவசநத்தின்படியே உத்பத்திவிநாசங்களையுடையவனாய், ப்ரஹ்மாவுக்குப் பிள்ளையாயிருப்பவன். ப்ரஹ்மாவென்பவன் பரமேஸ்வரனால் படைக்கப்பட்ட இவ்வண்டத்துக்குள்ளே உண்டானவனாய், ஸ்ருஷ்ட்யதிகாரத்தைப்பெற்று பரமேஸ்வரனுக்குப் பரதந்த்ரனாய் அவனுடைய கட்டளைப்படி இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்துக்கொண்டிருக்குமவன். விஷ்ணுவென்பவன்; இவ்விருவரைக்காட்டிலும் சிறந்தவனாய் ஜ்ஞாநாதிகனாய் இந்தப்ராக்ருதமண்டலத்துக்குள் உயர்ந்த ஸ்தாநத்திலிரு

க்கிறவன். இம்மூவரும் பரமேஶ்வரனால் படைக்கப்பட்டவர்களாய், ஸம்ஸாரிகளாயுள்ள ஜீவர்கள். இம்மூவரைக்காட்டிலும் வேறுபட்டவனும், இவர்களையுங்கூடப் படைத்துத் தன்வசத்தில் வைத்துக்கொண்டு நடத்தவல்லவனும், ஸம்ஸாரஸம்பந்தமற்றவனுமாய்? இந்தப்ரக்ருதிமண்டலத்துக்கு எல்லையாய் நாராயணஸ்வரூபியாயிருக்கிற விரஜையென்கிற ஆற்றுக்குமப்புறத்திலுள்ள பரமாகாசமென்கிற மோக்ஷஸ்தானத்திலுள்ளவனும், ஸத், ப்ரஹ்மம், பரமாத்மா, ஸதாசிவன் முதலிய சப்தங்களினால் சொல்லப்பட்டவனுமாயிருக்குமவனே பரமேஶ்வரனெனப்படுவான். இவனே ஸகலஜகத்துக்கும் காரணபூதன், மோக்ஷப்ரதன். இவனையே வேதங்களும் ஸ்ம்ருதிஇதிஹாஸபுராணங்களும் ப்ரதிபாதிக்கின்றன. வேதம்போலே பாசுபதாகமமும் முக்யப்ரமாணம். இவ்வாகமத்தில் சொல்லப்பட்ட பஸ்மதாரணம், ருத்ராக்ஷதாரணம், முத்ரிகாஷட்கதாரணம், பகாஸகஸ்த்த ஆத்மத்யாநம், முதலியவைகளை யனுஷ்டிக்கிறவனே மோக்ஷத்தை யடைவான். இவ்வாகமத்துக்கு நேர்விருத்தமாய், தப்தமுத்ராதாரணம், ஊர்த்வபுண்ட்ரதாரணம், விஷ்ணுபரத்வம், துளஸீநளிநாக்ஷமாலாதாரணம், விஷ்ணுபூஜநம், அவ்விஷ்ணுவே மோக்ஷப்ரதனென்கை, த்ரிமூர்த்திகளைக்காட்டிலும் மேலான ஸதாசிவனென்கிற ப்ரஹ்மமான்றில்லை யென்கை, மற்ற ப்ரஹ்மருத்ராதிகளோடு சேர்த்துச்சொல்லப்பட்ட விஷ்ணுவுக்கும் ப்ரஹ்மத்துக்கும் பேதமில்லை யென்கை. ருத்ராதி தேவதாபூஜநம் மோக்ஷவிரோதியென்கை என்றிவ்விதமான அர்த்தங்களைச் சொல்லுகிற பாஞ்சராத்ராகமம் அப்ரமாணம். வேதங்களில் பலவிடங்களில் விஷ்ணு என்பவனைப் பரதத்வமாகச்சொல்லியிருந்தபோதிலும், அங்குச் சொல்லப்பட்ட விஷ்ணு பதத்துக்கு ஸர்வவ்யாபியான ஸதாசிவனே அர்த்தமென்றாவது. அல்லது - விஷ்ணுவுக்கு அதர்யாமியான ஸதாசிவனைச் சொல்லுகிறதென்றாவது அங்கீகரிக்கப்படும். மற்றவாக்யங்களை யெல்லாம் சதருத்ரீ, அதர்வசிகை முதலானவற்றிற் சொன்ன பரமசிவபரத்வ ப்ரதிபாதகமான வாக்யாநுகுணமாகவே அந்வயித்துக்கொள்ளவேணும். என்று இம்மாதிரியான சில முக்யார்த்தங்களை அங்கீகரித்து, மற்றும் ராமாநுஜபாஷ்யத்திற் சொல்லியபடியே தத்வங்கள் மூன்றென்றும், ஜீவர்களும் அவர்களுடைய கர்மங்களும் அம்மூலமான ஸம்ஸாரமும் அநாதியென்றும், ஜகத்துக்கு நிமித்தோபாதாநங்களாகிய இருவகையான காரணமும் பரப்ரஹ்மமேயென்றும், சங்கராதி அத்வைத மதம்போலன்றிக்கே, முக்தியென்பது பரமாகாசமென்கிற தேசவிசேஷத்திற் போயடையத்தக்கதென்றும், இம்மாதிரியான மற்ற அர்த்தங்களையும் அங்கீகரித்தார்கள். இதினுடைய விஸ்தாரங்களையெல்லாம் பாசுபதாகமங்களிலும், அவ்வாகமத்தை யநுஸரித்துப் பின்புள்ளவர்களினால் செய்யப்பட்ட சைவமதக்ரந்தங்களிலும் காண்க.

நீலகண்டாசார்ய பாஷ்யாநுஸாரமாக எழுதப்பட்ட

ஸூத்ரார்த்தங்களும் மதப்ரக்ரியையும்

முடிந்து பெற்றது.